
கல்கி

KALKI 2.6.91 ரூ. 2.50





கல்கி

1991 ஜூன் 2
மலர் : 49 இதழ் : 44
பிரஜோத்பத்தி வைகாசி 19



ராஜீவ்

தாமரை என்று பெயர் பூண்ட ராஜீவ் இன்று கோடிக்கணக்கான இந்திய மக்களின் இதயத் தாமரையாகி விட்டார்.

'வெற்றி பெறுவேன்; ஆட்சி அமைப்பேன்' என்று உறுதியாகச் சொன்னவர் இன்று அவரது அரசியல் எதிரிகளின் உள்ளங்களையும் வென்று ஆள்கிறார்.

தோல்வி கண்டு அஞ்சாத மாவீரர் ராஜீவ், மீண்டும் பாடுபட்டு உழைத்து முன்னேறி, வெற்றியின் விளிம்பில் நிற்கும் போது, கோழைகளின் கொலை வெறியில் சிக்கி விழ்த்தப்பட்டுச் சரிந்தார். அவரது உடல் அவர் உயிரினும் நேசித்த பாரத மண்ணைத் தழுவியது. உயிரோ, விண்ணுக்குச் செல்லாமல், குப்புற விழுந்து கிடந்த அவர் இதயத்திலிருந்து புறப்பட்டு மண்ணை ஊடுருவி நாடெங்கும் வியாபித்தது.

தோல்வி கண்டு ராஜீவ் அஞ்சாதது போல், நாமும் பயங்கரவாதம் அவ்வப்போது அடையும் வெற்றி கண்டு பயப்படாது எதிர்க்கத்தான் வேண்டும். முடிவில் சூது ஒழிந்து தர்மமே நிலைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அதே சமயம் பயங்கரவாதத்தை எதிர்க்கும் ஆயுதம் ஏ. கே. 47 மட்டுமல்ல; அரசியல் தீர்வு என்பதே சரியான, சக்திவாய்ந்த ஆயுதம் என்ற யதார்த்த அறிவும் நமக்கு இருக்க வேண்டும். 'ஆயிரம் உண்டிங்கு கட்சி; எனில் அந்நியர் இங்கு ஊடுருவல் என்ன நீதி' என்று நமது தலைவர்கள் ஒருமித்து நின்று கேட்க வேண்டும். இதே போன்ற ஒற்றுமை மனப்பான்மையை நாட்டின் அடிப்படைப் பிரச்னைகளையும் தீர்ப்பதில் சர்வ கட்சித் தலைவர்களும் காட்டினாலன்றி ஜனநாயகம் இங்கே ஆடிப் போகும்.

ராஜீவின் பரிதாப முடிவு தமிழகத்துக்குத் தலைகுனிவுதான் என்பதை மறுக்க முடியாது. 'இது நாட்டின் எந்தப் பகுதியிலும் நடந்திருக்க வேண்டாம்' என்று கூறும் அதே நேரத்தில், 'எந்தப் பகுதியிலும் நடந்திருக்கக் கூடும்' என்று சொல்லுமளவில்தான் நாட்டின் நிலைமை இன்று இருக்கிறது. திரும்பின பக்கமெல்லாம் வன்முறை தலைதூக்கி நிற்கிறது. ஆனால், 'சட்ட ஒழுங்கு சரியில்லை; விடுதலைப் புலிகளை அடக்கத் தெரியவில்லை' என்று கூறி தமிழகத்தில்தான் மக்களாட்சியைக்கலைத்தார்கள். அப்படி கலைத்தவர்கள் என்ன சாதித்தார்கள்? முன்னாள் பிரதமரையே விடுதலைப் புலிகளிடம் பலி கொடுப்பதில்தான் வெற்றி கண்டார்கள். இதற்கு யார் பொறுப்பேற்பது? எந்த ஆட்சியைக் கலைப்பது? இந்தக் குற்ற உணர்வையும் கையாலாகாத்தனத்தையும் மறைக்க,'இந்தப் படுகொலையானது தி. மு. க. - விடுதலைப் புலிகளின் கூட்டுச் சதி' என்பதாக ஒரு புரளியைக் கிளப்புகிறார் தமிழக காங்கிரஸ் தலைவர். எவ்வளவு கேவலம் இது? இத்தகைய அவதூறு மேலும் துவேஷத்தை, வன்முறையை வளர்க்கும் என்பதை எண்ணிப்பார்க்கும் பொறுப்புணர்வு அவரிடம் இல்லை.

ராஜீவ் செய்து கொண்ட ஸ்ரீலங்கா ஒப்பந்தமும், அமைதிப் படைகளை அனுப்பியதும், அப்படை விடுதலைப் புலிகளை அடக்க நேர்ந்ததும் சமீப சரித்திரம். ராஜீவ் மீண்டும் இந்தியப் பிரதமரானால் தமிழீழ விடுதலை இயக்கத்துக்குப் பின்னடைவு ஏற்படும் என்ற கருத்தில் செய்யப்பட்ட பயங்கரக் கொலை இது. விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் செய்த காரியம்.

ராஜீவ் ஆட்சியில் இருந்த போது அவரிடம் குற்றம் குறைகள் பல கண்டவர்கள் கூட அவரது ஜனநாயகப் பற்று, சுதந்திரப் பொருளாதாரத்தின் மூலம் நாட்டை உயர்த்த வேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஆர்வம், பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர், ஸ்ரீலங்கா போன்ற பிரச்னைகளுக்கு முடிவு கட்ட அவர் மனப்பூர்வமாக எடுத்துக் கொண்ட முயற்சிகள், அமைதி மிக்க நிலையான ஆட்சியை வழங்கி, பாரதம் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதில் அவருக்கிருந்த அக்கறை முதலியவற்றைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ராஜீவின் பிரகாசமான எதிர்காலம், நாட்டின் வளமான எதிர்காலமாக மலர்ந்திருக்க முடியும். நமக்குக் கொடுத்து வைக்கவில்லை.

ராஜீவின் பரிதாப மரணத்தை விடப் பெரிய சோகம் ஒன்று உண்டு என்றால் அது பாரம்பரியப் பெருமைமிக்க காங்கிரஸ், ஒரு தலைவனின்றித் தத்தளித்து, அரசியல் அனுபவமோ ஆர்வமோ சிறிதும் இல்லாத சோனியா காந்தியைத் தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுத்ததுதான். இவர்களுக்கு நாட்டைவிட வோட்டு முக்கியமாகி விட்டது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ராஜீவ் - சில நினைவுகள்


* திருப்பதியில்... பொன்னாடையும் பிரசாதமும்.



* தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் செய்த போது...

* தாயுடன் இளைஞர்கள் ராஜீவ், சஞ்சய்.






✱ விமானத்தில் பறந்தபடி கல்கிக்குப் பிரத்தியேகப் பேட்டி... (பேட்டி காண்பவர் வாஸந்தி)





✱ எம். ஜி. ஆருடன்.

✱ நேருவின் பேரன்கள்... (குதிரை மேல் ராஜீவ்)





அட்டை வண்ணப்படம் உதவி :

பி. ஐ. பி.



★ 8.30 க்கு இப்படி......

ராஜீவின் பாதுகாப்பு :

கடமையில்

பர்னாலா பஞ்சாப் தீவிரவாதிகளின் ஹிட் லிஸ்ட்டில் இருப்பவர். சமீபத்தில் தேர்தல் பிரசாரத்துக்காக அவர் சென்னை வந்திருந்த போது பாதுகாப்புக்காக ஒரு கான்ஸ்டபிள் மட்டும்தான் உடன் சென்றார். ஒரு பைலட் கார் கூடக் கிடையாது! சிக்னல்களில் பர்னாலாவின் கார் நின்று தான் போக வேண்டி இருந்தது. முன்னாள் ஆளுனருக்கு நமது தமிழக போலீஸ் கொடுத்த பா து கா ப் பு இவ்வளவுதான். இதை ஒரு கூட்டத்தில் டி. ஆர். பாலு சொன்ன போது, குழுமியிருந்த அத்தனை பேரும் அதிர்ச்சி அடைந்தனர்.

தமிழக போலீஸின் செயல்பாடுகள் சமீப காலமாகச் சரிந்து கொண்டே போகிறது. சட்டம் ஒழுங்கு ஆகட்டும், வி. ஐ. பிக்களின் பாதுகாப்பு ஆகட்டும், எல்லாவற்றிலும் ஒரு அலட்சியம். இதற்கு அடிப்படைக் காரணம், 'நீ பெரியவனா, நான் பெரியவனா?' என்ற மனப்பான்மை அதிகாரிகளுக்கு இருந்ததால், அவர்களுக்குக் கீழ் பணியாற்றியவர்களின் கடமை உணர்வு சிதைந்து கொண்டு வந்தது. இதைக் கூறி மனம் புழுங்கினார், பாதுகாப்புப் பணியில் பல வருடங்களாக ஈடுபட்டிருக்கும் ஒரு இன்ஸ்பெக்டர்.

''ஒரு வி. ஐ. பி. வருகிறார் என்றால், பாதுகாப்புக்கென்று பல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மத்திய அரசு 'நீலப் புத்தகம்' என்ற ஒன்றை வெளியிட்டு இருக்கிறது. அந்தப் புத்தகத்தில் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று பட்டியலிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அதிமுக்கிய மானவர்கள் என்பதால் 'Z' பிரிவு வி. ஐ. பிக்கள் என்று கருதப்படுகிறார்கள். இதுபோல, X, Y பிரிவுகள் உண்டு. மறைந்து போன நமது முன்னாள் பிரதமர் ராஜீவும், 'Z' பிரிவில்தான் இடம் பெற்றிருக்கிறார். ஆனால் அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு முழு அளவு பாதுகாப்புக் கொடுத்தார்களா என்றால் கேள்விக்குறிதான்'' என்கிறார் தமிழக அரசு அதிகாரி ஒருவர்.

''சமீப காலமாகத் தேர்தலை உத்தேசித்து - தலைவர்கள் மக்களிடையே கலந்து பழகுவதாகக் காண்பித்துக் கொள்வதில் மிகுந்த விருப்பத்துடன் இருக்கிறார்கள். சீருடை போட்ட போலீஸ்காரர்கள் சுற்றிலும் இருந்தால் வெறுப்பைக் காண்பிக்கிறார்கள். ராஜீவ் காந்தியும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கூட்டத்தினரிடையே மேடையிலிருந்து குதிப்பது, மலர் மாலைகளைப் பெற்றுக் கொள்ளக் கழுத்தை நீட்டுவது என்று மக்களைத் திருப்திப்படுத்தும் பணியில் இ றங் கி, போலீஸ்காரர்களை ஒதுங்குமாறு வெளிப்படையாகவே கூடக் கூறினார். இந்தச் செயல்கள் 'பாம்பும் சாகணும்: கொம்பும் உடையக் கூடாது' என்ற நிலைக்குப் போலீஸ்காரர்களைத் தள்ளி விட்டது'' என்று வருத்தப்பட்டார் ஒரு போலீஸ் அதிகாரி.



★ ...10.30 க்கு இப்படி.....!

தவறியது யார்

இது ஒருபுறமிருந்தாலும் ராஜீவின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றித் தமிழக போலீஸார் போதிய அளவு சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்பது இப்போது தெளிவாகி விட்டது.

- கூட்டம் நடக்கும் இடத்தை 24 மணி நேரத்துக்கு முன்பே போலீஸ்காரர்கள் தங்கள் வசம் எடுத்துக் கொண்டு, காவல் புரிய வேண்டும்.

- யார் யார் மேடையில் வி. ஐ. பி. யுடன் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

- யார் யார் மாலை போட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.

- அவர்கள் போட இருக்கும் மாலைகளை மட்டுமல்ல: அந்த நபர்களையும் மெடல் டிடெக்டரால் சோதிக்க வேண்டும்.

மேற்கண்ட எதுவும் நடக்கவில்லை என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.

''இந்திரா காந்தி சிலைக்கு ராஜீவ் மாலையிட்ட பின், பொதுக் கூட்ட மேடையை நோக்கிச் சுமார் இருநூறு அடி தூரம் அவர் நடத்தியே அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். இது ராஜீவை ஆபத்துக்கு உட்படுத்திய செயல்'' என்கிறார் ஒரு உயர் போலீஸ் அதிகாரி.

ஸ்ரீபெரும்புதூரில் கூட்டம் நடப்பதைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை விரும்ப வில்லை. காரணம், கூட்டம் நடத்த ஏற் பாடு செய்யப்பட்ட இடம் ஊருக்கு வெளியே உள்ளது என்பதுடன் அங்கு கூட்டம் சேராது. ''மரகதம் சந்திரசேகரின் வற்புறுத்தலால்தான் அந்தக் கூட்டமே ஏற்பாடானது,'' என்கிறார் சத்தியமூர்த்தி பவன் பிரமுகர் ஒருவர். ''தேர்தலில் என் நிலை கொஞ்சம் மோசமாக இருக்கிறது. ராஜீவ் மீட்டிங் ஒன்று போட்டால்தான் காங்கிரஸுக்கு வோட்டுக்கள் அதிகரிக் கும்'' என்று திருமதி மரகதம் காங்கிரஸ் தலைமையிடம் கேட்டுக் கொண்டாராம். அவரது பிடிவாதம் கிடக்கட்டும், கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட இடம், பாது காப்புக்கு ஏற்ற இடமா, இல்லையா என்பதைப் போலீஸ் சொல்லவேயில் லையே! ராஜீவின் வருகையையொட்டி, பாதுகாப்பு அளிப்பது குறித்துத் தமிழக அரசின் உள்துறை, உயர் மட்டக் கூட்டம் நடத்தியதா? யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு என்பது நிர்ணயிக்கப்பட்டதா?

'தமிழ்நாட்டில் ஆயுதக் கலாசாரம் பரவி விட்டது. ஏ. கே. 47 உடன் விடு தலைப் புலிகள் சுற்றுகிறார்கள்' என்றெல் லாம் கூறி, தி. மு. க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பினார்கள். சரி, அதன் பிறகு தமிழக போலீஸார் விடுதலைப் புலிகளைக் கட்டுப் படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன? எத் தனை இடங்களில் ஆயுதங்களைக் கைப் பற்றினார்கள்? எத்தனை நபர்களைக் கைது செய்திருக்கிறார்கள்? ஒரு மாதத்துக்கு முன் பரங்கிமலை ரயில் நிலையத்தில் ஒரு போலீஸ்காரரைச் சுட்ட விடுதலைப்புலி யைக் கண்டுபிடிக்க எடுத்த நடவ டிக்கை என்ன? ஏதோ ஆட்சி கலைத்த இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஒருமுறை பத்திரிகைகளில், ஒயர்லெஸ் ஸெட், துப் பாக்கிக் குவியலின் படங்கள் வெளி வந்ததே தவிர அப்புறம் ஒன்றையும் காணோம். ''உண்மையில் அந்தத் துப் பாக்கிகளும், முன்பே பறிமுதல் செய்யப் பட்டவைதான்'' என்று குட்டை உடைக் கிறார் விஷயமறிந்த ஒருவர்.

''விடுதலைப் புலிகள் தேர்தல் சம யத்தில் எந்தக் காரியத்திலும் இறங்க முடி யாது; அந்த அளவுக்கு அவர்களை முடக்கி

✱ இறுதிச் சடங்கு



நினைவுபடுத்துகிறோம் ...

★ அமரர் கல்கி நினைவாக பொன் விழா சிறுகதை ; நாடகம் ; கவிதைப் போட்டிகளின் முடிவு தேதி : ஜூன் 15.

★★★

விட்டோம்'' என்று பகிரங்கமாக மார் தட்டிக் கொண்டாரே தேவாரம். ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன?

இடுப்பில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு, நடமாடும் ஆயுதக் கிடங்காகவே ஒரு பெண் புலி ராஜீவை நெருங்கியும் அவளைச் சோதனையிடாமல் கோட்டை விட்டு விட்டார்கள் காவல் துறையினர். ஒரே நாளில் ஒருவரே, திட்டமிட்டுச் செய்த செயல் அல்ல இது. பல பேர் சேர்ந்து பல நாள் திட்டமிட்டு நடத்திய கூட்டுச் சதித் திட்டம். நமது மாநில உளவுத் துறை என்ன செய்து கொண்டிருந்தது?

''counter espionage என்கிற கலையே நமது போலீஸுக்குத் தெரியாது'' என்ற அதிர்ச்சியான தகவலைத் தருகிறார் பழைய டி. ஜி. பி. ஒருவர்.

மேடை வேலைகள் நடந்து கொண்டிருந்த போது சந்தேகத்துக்குரிய மூன்று பேர்கள் (சர்ச்சைக்குரிய பெண் உட்பட) ஒரு அம்பாஸிடர் காரில் வந்து மேடை, சுற்றுப்புறங்களைப் பார்த்து விட்டுப் போனதாக ஒரு தகவல் கூறுகிறது. அப்போது போலீஸார் அங்கு இருந்திருந்தால், அவர்களை மடக்கியிருக்கலாமே! அல்லது எச்சரிக்கை அடைந்திருக்கலாமே?

''ஒரு வி. வி. ஐ. பிக்குப் பாதுகாப்புப் பணி என்றால், அவர் குடிக்கிற தண்ணீர், சாப்பிடுகிற சாப்பாடு போன்றவைகளைச் சோதனை செய்வது உட்பட ஆயிரத்தெட்டு சமாசாரங்கள் இருக்கின்றன. அவர் தங்கப் போகும் அறை (டாய்லெட் உட்பட) சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அந்த முக்கிய நபருடன் யார் காரில் போகிறார்கள் என்ற தகவலைப் பெற்று, அந்த நபரின் பூர்வோத்தரத்தை அலச வேண்டும். காரை ஓட்டும் டிரைவரை 24 மணி நேரத்துக்கு முன்பிருந்தே கண்காணிக்க வேண்டும். வி. ஐ. பி. போகும் வழிகளில் உள்ள பாலங்கள் உறுதியாக இருக்கின்றனவா என்று சோதனை செய்து 24 மணி நேரத்துக்கு முன்பே காவல் போட வேண்டும். இப்படிப் பல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் நாங்கள் இவற்றையெல்லாம் கடமை உணர்வோடு செயல்படுத்தினால் எங்கள் மீது வெறுப்புதான் வரும்'' என்கிறார் பாதுகாப்புப் பணியில் நிபுணரான ஒரு போலீஸ் அதிகாரி. ஆனால் இப்போது நடந்திருக்கும் கொடூரத்தைப் பார்த்தால், தலைவருக்கு வெறுப்பு ஏற்பட்டாலும், பாதகமில்லை; போலீஸார் தங்கள் கடமைகளைச் செய்வதுதான் உசிதம் என்று புரிகிறது.

மெரினாவில் பல பெரிய தலைவர்களின் கூட்டங்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த ஒரு அதிகாரி, ''கடலில் படகுகளும், கட்டுமரங்களும் போகாமல் பார்த்துக் கொள்வது மட்டுமல்ல, விமானங்களைக் கூட மேடைக்கு மேல் பறக்க விடாமல் திசை திருப்பி விட்டிருக்கிறேன்'' என்று சொன்னார்.

''அனைத்திந்தியப் பெருந்தலைவர்கள் பலர் விமானம் மூலம் தமிழகத்துக்கு வந்து போய்க் கொண்டிருப்பதால் சென்னை, செங்கல்பட்டு போன்ற நகர்களில் காவல் துறையில் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்கள், கூடிய மட்டும் தமிழர்களாக இருப்பதே நல்லது'' என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார் ஒரு அனுபவம் மிக்க



சோம்பேறி யார்? எந்த வேலையையும் செய்யாமல் உண்டு உறங்கி வாழ்பவன் மட்டும் சோம்பேறி அல்ல. தற்போது செய்து கொண்டிருக்கும் வேலையை இன்னும் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குத் தன்னிடம் திறமை இருந்தும், வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அதனைச் செய்யாமல் இருக்கிறானே, அவனும் சோம்பேறிதான்.

- சாக்ரடீஸ்.

- வயலூர் பார்த்திபன்

போலீஸ் அதிகாரி. ''அப்போதுதான் மக்களோடு மக்களாகப் பழகி விஷயங்களைக் கிரகிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்'' என்கிறார் அவர்.

சம்பவம் நடப்பதைத் தடுக்கத்தான் போலீஸாரால் முடியவில்லை. நடந்து விட்ட பிறகாவது சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? ''காயம் பட்டவர்களை அழைத்துப் போக வாகன வசதி கிடையாது. அரை மணி நேரத்துக்குப் போலீஸ்காரர்களையே பார்க்க முடியவில்லை. எங்கே போனார்கள் என்றே தெரியவில்லை. ப ய ந் து ஓடி விட்டார்கள். ராகவன் என்கிற ஒரே ஒரு ஐ. ஜி. மாத்திரம்தான் தைரியமாக மக்களின் கோபத்தையும் சகித்துக் கொண்டு ஸ்பாட்டில் இருந்தார். அவரும் இல்லையென்றால் போலீஸாருக்கு இப்போது கிடைத்த தடயங்கள் கூடக் கிடைக்காமல் போயிருக்கலாம்'' என்று சொல்கிறார் சம்பவத்தை நேரில் கண்ட ஒரு பத்திரிகை நிருபர்.

10.20 க்குச் சென்னைக்கு ஐம்பது கி. மீ. தொலைவில் நடந்த சம்பவம், சென்னையில் உள்ள பல உயர் அதிகாரிகளுக்குத் தெரியவர, சுமார் மூன்று மணி நேரம் ஆகியிருக்கிறது! நமது புது கவர்னர் கொஞ்சம் கோபக்காரர் ஆதலால் அவரை எழுப்புவதா, வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்தியிருக்கிறார்கள்!

ஏதாவது ஒரு கொலை நடந்தால், கொலைகாரன் தப்பிவிடாமல் இருப்பதற்கு மாநில எல்லைகளில் கார்களை மடக்கிச் சோதனை செய்வார்கள். ஸ்ரீபெரும்புதூர் சம்பவத்திற்குப் பின் இந்தக் கடமையைக் கூட மாநில போலீஸ் செய்யவில்லை என்கிறது ஒரு தகவல். அந்தப் பெண் புலிக்கு உடந்தையாக இருந்த ஆண் புலிகள் இத்தனை நேரம் இலங்கை போய்ச் சேர்ந்திருப்பார்கள். இன்னும் சில காலம் சென்று இங்குள்ள இரண்டு மூன்று இலங்கைத் தமிழர்களைச் சதிகாரர்கள் என்று சந்தேகிப்பதாகக் கைது செய்து நாளிதழ்களில் செய்தி வந்த பிறகு ஓரிரு தினங்களில் ஓசைப்படாமல் விடுவித்து விட்டால் வியப்பதற்கில்லை!

நடந்துவிட்ட சம்பவங்களுக்கு யார் பொறுப்பு? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடந்து கொண்டிருந்தால் ''முதல்வரே ராஜினாமா செய்'' என்ற கோஷம் வானைப் பிளந்திருக்கும். இப்போது ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள் கவர்னரும், அவரது ஆலோசகர்களும்தான். வி. வி. ஐ. பி. யின் பாதுகாப்பிற்கு நேரடியாகப் பொறுப்பாக இல்லாவிட்டாலும், ஒட்டுமொத்தமாகப் பொறுப்பானவர் டி. ஜி. பி. இவர்களுடைய மனச்சாட்சி உறுத்துமா? தார்மீக ரீதியாகப் பதவி விலகுவார்களா? தமிழ் நாட்டு மக்கள் கேட்கும் கேள்வி இதுதான்!

– கௌசல்யா

படங்கள்: நன்றி: தினமலர்

"என்னைக் கவர்ந்த ராஜீவ்"

எந்த ஓர் அரசியல்வாதியுமே எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியான நன்மதிப்பைப் பெற்றுவிட முடியாது. ராஜீவும் விதிவிலக்கல்ல. ஆனால் ராஜீவைச் சில காரணங்களுக்காக விரும்பாதவர்கள் கூட அவரிடம் பல சிறப்பியல்புகளை நிச்சயம் கண்டிருப்பார்கள். எந்த எந்த அம்சங்களில் ராஜீவ் உங்களைக் கவர்ந்தார்? சிறந்த ஒரு பக்கக் கட்டுரைக்குப் பரிசு ரூ. 50/-. பிரசுரமாகும் இதர சிந்தனைகளுக்கு ஆறுதல் பரிசு. உறை மீது ''என்னைக் கவர்ந்த ராஜீவ்'' என்று குறிப்பிடவும். கல்லூரி, வீட்டு விலாசங்களுடன் கட்டுரைகள் வந்து சேரக் கடைசித் தேதி : 8.6.91. நினைவிருக்கட்டும்: மிக அதிகமான முதல் பரிசு பெற்ற மாணவர் பொன் விழா மேடையில் சிறப்புப் பரிசு ரூ. 2500/- வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம் | 50 | **கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி**

எட்டு ரூபாய்க்கு ஸ்பெஷல் தண்ணீர்!

பார்த்தால் சாதாரணக் குடி தண்ணீர் போல்தான் இருக்கிறது. ஆனால் ஒரு பாட்டிலின் விலை எட்டு ரூபாய்! 'மினரல் வாட்டர்' என்ற பெயருடன் உடையாத பிளாஸ்டிக் பாட்டில்களில் விற்கப்படும் இந்தத் திரவத்தின் சிறப்பு என்ன...?



பிஸ்லேரி மினரல் வாட்டரைச் சென்னை நகரத்தில் வினியோகம் செய்யும் ஹெக்டர் டேவிட் அண்ட் கோ நிறுவனத் தின் மேனேஜிங் பார்ட்னர் ஜே. ஏ. பாலச் சந்திரனிடம் கேட்டோம்:

''தூய தண்ணீருக்குச் சில பிரத்யேகக் குணங்கள் அமைந்திருக்க வேண்டும். அதிலுள்ள கனிமங்களின் சேர்க்கை ஒரு குறிப்பிட்ட அளவில் அமையப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலும் அப்படி இருப்பதில்லை. ஊற்றுத் தண்ணீரை (Spring water) எடுத்து ஆராய்ந்து, அதில் சரியான விகிதத்தில் அமையப் பெறாத கனிமச் சேர்க்கையைக் கூட்டியோ குறைத்தோ சீர்செய்கிறார்கள். இதைத்தான் மினரல் வாட்டர் என்று அழைக்கிறார்கள். இதை மிகத் தூய்மையான முறையில் தயாரித்து, சுத்த மான பாட்டில்களில் நிரப்பி சீல் செய்து தான் எட்டு ரூபாய்க்கு விற்கிறார்கள்.

''பாட்டிலில் அடைக்கப்படும் முன் னர் தண்ணீர் இத்தாலிய முறைப்படி பெரிய பெரிய குழாய்களில் சுத்திகரிக்கப்படுகிறது. (Italian process of silver sterilization).

''சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரின் சாம்பிள்கள் பரிசோதிக்கப்பட்டு, தரம் உத்தரவாதமான பிறகே விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.


''இந்தத் தண்ணீரை அருந்துவதால் தண்ணீர் மூலம் பரவக்கூடிய நோய்களைத் தவிர்க்கலாம். குறிப்பாக, தூய தண்ணீருக்குப் பழகிய அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இது மிக உபயோகமாய் இருக்கும்.


''குளிர்ப்பதனப் பெட்டியில் ஆறு மாதங்கள் வரையும், வெளியே நான்கு மாதங்கள் வரையும் சீல் பிரிக்காத மினரல் வாட்டரை வைத்திருக்கலாம்.

''பிஸ்லேரி மினரல் வாட்டர் தயாரிக்கும் பார்லே பெவரெஜஸின் தலைமை அலுவலகம் பம்பாயில் உள்ளது. சென்னைக்குப் பெங்களூரிலிருந்து சப்ளை வருகிறது. கூடிய விரைவில் இங்கேயே உற்பத்தி தொடங்க இருக்கிறோம். அப்போது போக்குவரத்து செலவு குறைந்து மினரல் வாட்டரின் விலை குறையும் வாய்ப்பு இருக்கிறது.''


- பகவதி

வாசகர் யோசனை :
கீதா,
திருச்சி - 18.





★ பாலசந்திரன்



மாணவர் கட்டுரைப் போட்டி

என்னைக் கவர்ந்த ராஜீவ்

50

ரூ. 50 முதல் பரிசு பெறும் கட்டுரை

என்னைக் கவர்ந்தவர் ராஜீவ் என்பதை விட உலகில் எல்லோரையும் கவர்ந்தவர் என்பதே சாலப் பொருந்தும். கவர்ச்சியான முகமும், கருணை பொழியும் கண்களும், கள்ளமில்லாத குழந்தைச் சிரிப்பும் எல்லோரையும் காந்தம் போல் கவர்ந்ததில் என்ன வியப்பு!

உருவத்தில் மட்டும் அழகானவர் அல்ல, உள்ளத்திலும் அழகானவர்தான். விமானியாக எல்லையற்ற வானிலே சுதந்திரமாய்ப் பாடிப் பறந்தவர், தம்பி இறந்த துயரத்தினால் தவித்த தாய்க்கு ஆறுதலாய் அரசியலுக்கு வந்தார். அன்றே அவருடைய சுதந்திரம் பறிபோயிற்று. ஆனாலும் தாயன்பினால் ஒப்புக் கொண்டார். அந்த அன்புத் தாய் கயவனால் சுட்டு வீழ்த்தப்பட்ட போது, தாயைப் பிரிந்த துக்கத்தை ஆற்றக் கூட நேரமில்லாமல் கடமை அவரைக் கட்டிப் போட்டது. கட்சித் தலைமைப் பொறுப்பையும், பிரதமர் பதவியையும் ஏற்றார். அவர் உயிருக்கும் ஆபத்து நேரலாம் என்று அன்றே சோனியா அஞ்சினார். ஆனால் ராஜீவ் 'நாட்டுக்குக் கொடுக்க நமக்கு இருப்பது ஓர் உயிர்தானே' என்று மேனாட்டுக் கவிஞனை மேற்கோள் காட்டி, நாட்டுப் பற்றுடன் பதவியை ஏற்றார்.

அன்னை இந்திராவாவது தந்தையுடனே இருந்து அரசியலைக் கற்றவர். ராஜீவோ அரசியல் வாடையே இல்லாமல் வளர்ந்து, திடீரென்று அரசியலில் புகுந்தவர். ஆனாலும் விரைவிலேயே அரசியலில் தேர்ந்தவராகி விட்டார். அவருடைய அரசியல் நிர்வாகத் திறமை கண்டு உலக நாடுகளே வியந்தன. உண்மையிலேயே அவருக்கு நம் நாட்டு மக்களிடம் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரிடமும் இருந்த அன்பு - மனித நேயம்தான் - அணிசேரா நாடுகளின் பிரதிநிதியாக இருந்து உலக சமாதானம், ஒற்றுமைக்குப் பாடுபட வைத்தது. அந்த மனித நேயம்தான் அண்டை நாடான பங்களா தேஷ் புயலில் அவதியுற்ற போது நேரில் சென்று ஆறுதல் கூறி, உதவிக் கரம் நீட்டியது. இலங்கைத் தமிழர்களுக்கு அமைதிப் படையை அனுப்பியது. பூகம்பத்தால் அவதியுற்ற ஆர்மீனிய மக்களுக்குப் பொருளுதவி செய்தது. அவருடைய இந்த இரக்க குணம் என்னை மிகவும்





கவர்ந்தது.

தமது ஆட்சி தோல்வியுற்ற போதும் அவர் துவளவில்லை. மேலும் கட்சி முன்னேறப் பாடுபட்டார். அடுத்த முறை கட்டாயம் வெற்றி கிடைக்கும் என்ற தன்னம்பிக்கையுடன் இருந்தார். '21-ம் நூற்றாண்டில் இந்தியாவை உலக அரங்கில் முன்னணிக்குக் கொண்டு வருவேன்' என்று கூறினார். அவருடைய தன்னம்பிக்கை என்னை வியக்க வைத்தது.

எத்தனை உயர்ந்த பதவியில் இருந்தாலும் எளியவரிடமும் அன்பு கொண்டவர். பழைய நண்பர்களையும் மறக்காதவர். தமிழ் நாட்டுக்கு வந்த போது ஏழைகளின் குடிசைகளுக்கெல்லாம் சென்று நலன் விசாரித்தாரே! அதில் நடிப்போ, செயற்கைத் தன்மையோ இல்லை. உள்ளார்ந்த அன்புடன் மக்களோடு மக்களாகக் கலந்து கொள்ளும் துடிப்புதான் தெரிந்தது.

இளைஞர்களாகிய நாம், நம் நாட்டுக்காக நம்மால் முயன்ற தொண்டினைச் செய்வதே, நாட்டுக்காக அல்லும் பகலும் உழைத்து உதிரம் சிந்திய நமது தலைவர் ராஜீவ் அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

– வ. செந்தில்குமார்,
இரண்டாம் ஆண்டு,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.

டாக்டரின் புன்னகை

டாக்டரின் புன்னகைதான் நோயாளிக்கு நம்பிக்கை தரும் மருந்து. அதுபோல, நலிந்த நம் இந்தியர்களின் நாளைய வாழ்வு நலமுடன் விளங்கும் என்ற நம்பிக்கையை ஊட்டும் ராஜீவின் காந்தப் புன்னகை என்னைக் கவர்ந்தது. சிறு வயதில் இறுக்கமுள்ள சிறுவனாக வளர்ந்த போதும் - அன்னை இந்திரா கூட ''சுத்த உம்மணா மூஞ்சியாய் இருக்கிறாயே?'' என்று கேட்குமளவுக்கு இருந்தவர் - பிற்பாடு அவ்விறுக்கம் தளர்ந்து, நிரந்தரமாக அணிந்து கொண்ட அம் மந்திரப் புன்னகை இறுதியாக அவர் ஸ்ரீபெரும்புதூரில் தன்னை அர்ப்பணிக்கும் வரை நிலைத்து இருந்தது.

கல்லூரி நாட்களில் தான் ஒரு பிரதமரின் பேரன் - மகன் என்பதையெல்லாம் காட்டிக் கொள்ளவே விரும்பாது - தன் காதலி சோனியாவுக்கே கூட தவிர்க்க முடியாத ஒரு கட்டத்தில் மட்டுமே வெளிப்படுத்திய அந்தத் தன்னடக்கம் - பெரிய குடும்பத்துப் பிள்ளைகளிடம் அரிதே காணப்படும் குணம் - என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. அது மட்டுமா? படிக்குங் காலத்தில் தன் சொந்தச் செலவுகளுக்காக ஐஸ்கிரீம் பார்லரிலும், ரொட்டிக் கடையிலும் பகுதி நேர வேலை செய்து சம்பாதித்த உயர்ந்த குணத்தில் என் நெஞ்சத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறார் அமரர் ராஜீவ்.

– சௌ. மோகன வெங்கடாசலபதி,
எம். பி. பி. எஸ். இரண்டாம் ஆண்டு,
சேலம் அரசு மோகன் குமாரமங்கலம்
மருத்துவக் கல்லூரி,
சேலம் – 636 001.

எல்லோரும் நண்பர்களே!

வெளிநாடுகளுடனான இவரது நல்லிணக்கமே இவரைத் தலைசிறந்த மனிதராக்கியது. சமயோஜிதமாக எல்லோரையும் தம் நண்பர்களாக்கும் முயற்சியில் சைனா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான இவரது பயணம் குறிப்பிடத்தக்கது. 'சார்க்' என்ற அமைப்பைக் கூட்டி சிறு நாடுகளின் பாதுகாப்பையும், கலாசார பரிவர்த்தனைகளையும் செய்ததோடு அல்லாமல், மாலத் தீவுகள் புரட்சிக்காரர்களால் கைப்பற்றப்பட்ட போது அந்தத் தீவை அவர்களிடம் இருந்து மீட்டுத் தந்தார். இதே அடிப்படையில் பாலஸ்தீன புரட்சியாளர்களுக்கும், தென் ஆப்பிரிக்க மக்களுக்கும் உரிமைக் குரல் எழுப்பி, அவர்களின் அல்லலுறும் நிலையை உல

கிற்குத் தெளிவாக விளக்கினார். ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் நட்புறவை வலுப்படுத்தி, பொருளாதார உதவி பெறும் முயற்சிகள் எடுத்தார். ராஜீவ் என்ற இளைய பாரதத்திடம் நான் கண்டதெல்லாம் இனிப் பான ஸ்நேகத்தன்மைதான்.


- எஸ். கிருஷ்ணன்,
அறை எண்: 27, நியூ ஹாஸ்டல்,
முதுகலை முதலாமாண்டு ஆங்கில இலக்கியம்,
சரஸ்வதி நாராயணன் கல்லூரி,
மதுரை - 22.

நாடு உயர விஞ்ஞானம்

ராஜீவ் ஒரு சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக இருந்தாலும் தனித்தன்மை வாய்ந்த தலைவர் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இன்றைய நிலையிலிருந்து பாரதத்தை உலகத்தின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உயர்த்த வேண்டுமென்றால் அதற்கான மார்க்கம் விஞ்ஞானம்தான் என்ற தீர்க்கதரிசனம் அவருக்குப் பரிபூரணமாக இருந்தது. அதனால்தான் அவரது மறைவை இந்திய விஞ்ஞானத்துக்கு ஏற்பட்ட இழப்பாகக் கூறி ஒரு பிரபல விஞ்ஞானி வருந்தினார்.

அவரது விஞ்ஞான ஆர்வத்துக்கு உதாரணமாகப் பல நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

> முஸ்லிம் மகா கவிஞரான இக்பால் சிறு வயதில் வகுப்பறைக்குத் தாமதமாகச் சென்றார்.
>
> ''ஏன் இவ்வளவு தாமதம்?'' என்று கேட்டார் வகுப்பாசிரியர்.
>
> ''இக்பால் காலதாமதமாகத்தான் வரும்'' என்று பளிச்சென்று பதில் பிறந்தது. 'இக்பால்' என்ற வார்த்தைக்குப் 'புகழ்' என்று பொருள் உண்டு.
>
> - இராம. பார்த்திபன்.



உதாரணமாக எலக்ட்ரானிக் தேர்தல் இயந்திரத்தைப் பார்வையிட்ட போது அதன் செயல் முறை குறித்து அவர் எழுப்பிய தொழில்நுட்ப ரீதியான கேள்விகள் அசாதாரணமாக இருந்தன என்று முன்பொரு முறை வியந்து போய் எழுதியுள்ளார் சுஜாதா. அவருக்கு FORTRAN என்னும் கம்ப்யூட்டர் மொழியில் கூடப் பரிச்சயம் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் கம்ப்யூட்டர் software industry இன்று உலகத் தரத்திற்கு உயர்ந்துள்ளதற்கு அவர் ஆட்சியில் அமல்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் காரணம்.

HAM எனப்படும் அமெச்சூர் ரேடியோ நிலையங்களிலும் அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்தது. குவைத் தேசத்தை ஈராக் ஆக்கிரமித்திருந்த போது குவைத் விடுதலை வீரர்கள் வெளியுலகுடன் இந்த நிலையங்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ள முடிந்தது. இதன் மூலம் தகவல் தொடர்பில் இதன் முக்கியத்துவத்தை உணரலாம். ராஜீவ் ஓர் உற்சாகமான HAM உறுப்பினர்.

தகவல் தொடர்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் நிலத்தடி நீர் உள்ளிட்ட ஐந்து Technology Missions ஐ அவர் தொடங்கினார். இவை மிகவும் தொலை நோக்குள்ள திட்டங்கள். பரபரப்பாக ஏதாவது செய்து மக்களது உடனடிக் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற ரீதியில் செயல்படும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் அவர் குன்றிலிட்ட விளக்காய் மிளிர்ந்ததற்கு இதுதான் காரணம். 'அக்னி' ஏவுகணைப் பரிசோதனைக்கு அனுமதியளித்து இந்திய விஞ்ஞானிகளின் திறனை உலகறியச் செய்தது அவரது மற்றொரு சாதனை.

விஞ்ஞானக் கொள்கைகளினால் நமது தேசத்தை இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி வெற்றிப் பயணம் அழைத்துச் செல்லப் போகிறார் ராஜீவ் என்று நாம் எதிர்நோக்கியிருந்த வேளையில் அவரது வாழ்க்கைப் பயணமே கொடூரமாக முடிக்கப்பட்டது. தரக்குறைவான ஏசல்கள் சகஜமாகி விட்ட இன்றைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் பொறுப்பான முறையில் பேசிய அரசியல்வாதி ராஜீவ். அவருக்கா இந்த கதி?

- மு. செந்தில்,
இறுதியாண்டு, கம்ப்யூட்டர் சைன்ஸ்,
மெப்கோ பொறியியற் கல்லூரி,
அர்னாத்தூர் போஸ்ட்,
சிவகாசி - 626 005.



அவன் கேட்ட கேள்வி

கே. கந்தவேல்

பங்களாவின் போர்டிகோவில் டாக்ஸி நிற்க, அசோக் அம்மாவுடன் இறங்கிக் கொண்டான்.

''வாங்க! வாங்க!'' — பெண்ணின் அப்பா நமஸ்கரித்து வரவேற்றார்.

அசோக் உதடுகளில் வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் உள்ளே நுழைந்தான். குனிந்த தலைநிமிராது அம்மாவும் உள்ளே நுழைந்தாள்.

சோபாக்களில் அமர்ந்து கொண்டார்கள். அசோக் பங்களாவை ஆராய்ந்தான். நல்ல வசதியான இடம்தான். இந்த மாதிரியான பங்களாக்களை அவன் சினிமாக்களில்தான் பார்த்திருக்கிறான். இப்படி ஒரு பெரிய இடத்துக்கு மாப்பிள்ளையாக வருவதென்றால்....?

காரணம் அவனது உத்தியோகம்! பேங்கில் அவன் பார்க்கும் மானேஜர் உத்தியோகம்! மாதம் பிறந்தால் சுளையாய் நாலாயிரம் கொடுக்கும் உத்தியோகம்!

''பொண்ணை வரச் சொல்லுங்களேன்.'' அம்மாதான் சொன்னாள்.

அசோக் கவனம் கலைந்தான்.

அடுத்த சில வினாடிகளில் அவள் வந்தாள். பிரமிக்க வைக்கும் அழகு. தலை குனிந்து நடந்து வந்தவள் எதிர்ச் சோபாவில் தயக்கமாய் அமர்ந்து கொண்டாள்.

''பேரு மாலதி. பொண்ணைப் பிடிச்சிருக்கா?'' — பெண்ணின் அப்பா கேட்டார்.

அம்மா பூரிப்பாய்த் தலையாட்டினாள்.

''மாப்பிள்ளை ஏதும் சொல்லலையே!''

''ம்,'' என்று ஒற்றை எழுத்தில் சம்மதம் சொன்னான்.

''அப்ப... மற்ற விஷயங்களைப் பேசிடலாமா...?'' பெண்ணின் அப்பா ஒரு மாதிரியாய் இழுத்தார்.

''இதோ பாருங்க. வரதட்சணைங்கிற பேச்சே வேணாம். நிறைஞ்ச புன்னகையோட உங்க பொண்ணு மகாலட்சுமி மாதிரி எங்க வீட்டுக்கு மருமகளா வந்தாப் போதும்.''

''நீ சும்மாயிரும்மா.'' அசோக் இடைமறித்தான்.

''இதோ பாருங்க சார். கல்யாணம்னு வந்தாச்சு. பேச வேண்டியதை இப்பவே தீர்மானமாப் பேசிடறது நல்லது. வெளிப்படையா கேட்கறேன். உங்க பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா எனக்கு எவ்வளவு கிடைக்கும்?''

அவருக்குக் கொஞ்சம் திகைப்பாயிருந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு சொன்னார்.

''அறுபது பவுன் நகை போடறதா இருக்கேன். ரொக்கம் ஐம்பதாயிரம் கொடுத்துடறேன். மற்றபடி சீர்வரிசை எல்லாம் நீங்க எதிர்பார்க்கிறதை விடச் சிறப்பாவே செய்வேன்.''

''போதாதே!''

''நீங்க எவ்வளவு எதிர்பார்க்கிறீங்க?'' அதிர்ச்சியுடன் கேட்டார்.

''நகை நூறு பவுனாவது வேணும். தவிர, பணம் ஒரு லட்சம்!''

''அ.... அவ்வளவுக்கு எனக்கு வசதியில்லையே...''

''அப்ப விடுங்க. வேற இடம் பாருங்க.''

''அப்படிச் சொல்லக் கூடாது. கொஞ்சம் தயவு பண்ணணும்.''

''முடியாது. எழுந்திரும்மா. போலாம்.''

அசோக் சோபாவை விட்டு எழுந்து கொள்ள, அதுவரை வாய் மூடி மௌனியாய்த் தலைகுனிந்து அமர்ந்திருந்த மாலதி கோபம் வந்து நிமிர்ந்தாள். அசோக்கை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

''மிஸ்டர்! ஒரு நிமிஷம்!''

''என்ன?'' அசோக் அலட்சியமாய்க் கேட்டான்.

''உங்களுக்கு வெட்கமாயில்லை?''

''ஏன் வெட்கப்படணும்?''

''உத்தியோகத்தைக் காரணமா வச்சுக்கிட்டு, உங்களை நீங்களே விலை பேசிக்க உங்களுக்கு வெட்கமாயில்லை?''

அசோக் சிரித்தான்.

''மிஸ் மாலதி! உங்க பங்குக்கு நீங்க பேசிட்டீங்க. இனி என் பங்குக்கு நான் பேச வேணாமா? இதோ இருக்காரே உங்கப்பா... இவர் வேணா என்னை மறந்திருக்கலாம். ஆனா என்னால் இவரை மறக்க முடியாது. மூணு வருஷத்துக்கு முன்னாலே நான் வேலை தேடி நாயா அலைஞ்சப்ப, உங்கப்பா ஜெனரல் மானேஜரா இருக்கிற அதே கம்பெனியில் எனக்கு ஒரு வேலைக்கு இண்டர்வியூ வந்திச்சு. இண்டர்வியூ பண்ணினது வேறு யாருமில்லை. உங்கப்பா தான். வேலை கொடுக்கணும்னா பத்தாயிரம் லஞ்சம் கேட்டார். அத்தனை பணத்துக்கு நான் எங்கே போறது? பணம் கொடுக்காத ஒரே காரணத்துக்காக தகுதி இருந்தும் என்னை நிராகரிச்சுட்டுத் தகுதியே இல்லாத ஒருத்தனுக்கு உங்கப்பா வேலை போட்டுக் கொடுத்தார். அதுக்கப்புறம் நானே கஷ்டப் பட்டுப் படிச்சுத் தேர்வு எழுதி இந்த பேங்க் வேலை கிடைச்சுது. இப்பச் சொல்லுங்க. உங்கப்பாகிட்ட நான் பேரம் பேசினது தப்பா? யூ நோ... ஒரு பைசா வரதட்சணை வாங்கிக்காம ஓர் ஏழைப் பெண்ணைக் கட்டிக்க நான் தயார். ஆனா லட்சம் லட்சமாக் கொட்டிக் கொடுத்தாலும் இந்த மாதிரி ஒரு பெரிய மனுஷன் வீட்டுப் பொண்ணைக் கட்டிக்க மாட்டேன். குட் பை! வாம்மா போலாம்,'' ஆக்ரோஷமாய்ச் சொல்லி விட்டு நடந்தான் அசோக்.

டாக்டர் பதில்கள்:

வழுக்கை விழுவதற்கு என்ன காரணம்?

● சி. கார்த்திகேயன், நெய்விளக்கு:

வழுக்கை விழுவதற்கு என்ன காரணம்? பெண்களுக்கு மட்டும் வழுக்கை விழுவதில்லையே, ஏன்?

●● மிஸஸ். ஜெயஸ்ரீ சங்கர், சென்னை — 28.

ஆண்களுக்கு வழுக்கை என்பது செக்ஸ் ஜீன் தாக்கத்தினால் ஏற்படும் குறை. ஆண்களுக்கு குரோமோசோம்களில் ஒரு வகை ஜீன் இருந்தால் போதும், மற்ற ஆன்ட்ரோஜென்களுடன் சேர்ந்து வழுக்கையாகி விடுவதற்கு. அதுவே, பெண்களுக்கு என்றால் இரண்டு வகை ஜீன்கள் இருந்தால்தான் வழுக்கை விழும். இது மிக மிக அபூர்வம். அதனால்தான் பெண்களுக்கு, ஆண்களைப் போல் வழுக்கை விழுவதில்லை. ஆனால், ஆண்களும் கூட வம்ச வாரிசாக் விழும் வழுக்கையைத் தவிர்க்க முடியாது.


● பி. முனுசாமி, பெங்களூர் — 21.

ஆஸ்துமா என்பது எப்படி வருகிறது? இதன் அறிகுறிகள் என்ன? இதை ஆரம்பத்திலேயே மீண்டும் வராமல் தடுக்க முடியாதா?

●● டாக்டர். சந்திரசேகர சாண்டில்யா, சென்னை — 28.

ஆஸ்துமா என்பது, ஒரு வகை அலர்ஜியினால் மூச்சுக் குழாய்கள் தாற்காலிகமாகக் குறுகி விடுவதால் தாக்கும் நோய். அந்த மூச்சுக் குழாய்க்குள் உள்ள ஜவ்வுத் தோல் வீங்கி விடுவதாலும், நெஞ்சில் சளி இறுகி விடுவதாலும், மூச்சுக் காற்றைக் கொண்டு செல்லும் சிறிய குழாய்கள் **(Bronchioles)** போதிய அளவு பிராண வாயுவை நுரையீரலுக்குச் செலுத்த முடியாது போகிறது. இதனால் ஏற்படும் தாற்காலிகமான உபாதையே ஆஸ்துமா. மூச்சு முட்டுதல், அல்லு மாந்தம் (குழந்தைகளுக்கு) போன்றவைதான் அறிகுறிகள். மீண்டும் வராமல் ஆரம்பத்திலேயே தடுக்க, ஈஸனோஃபீலியா, மற்றும் பாக்டீரியா கிருமிகளின் தொற்று போன்றவற்றை அகற்ற வேண்டும். பல நாட்கள் ஆஸ்துமா உடலில் இருந்தால், முற்றிலும் குணப்படுத்த முடியாது. மூச்சு முட்டுதலைக் குறைத்து ஓரளவு நிவாரணம் தர பலவித மருந்துகள் உள்ளன.

தொகுப்பு: எஸ். வி. என்.



லஞ்ச ஊழல் காரணமாகவே பதவி இழந்த காங்கிரஸ், இந்தத் தேர்தல் பிரசாரத்தின் போது அது பற்றிப் பேசவேயில்லை என்றாலும் அது ஒரு பாடம் கற்றுக் கொண்டி ருப்பதாகவே கருதலாம். ராஜீவ் பிரசாரத்தின் போது அடக்கமாகத் தெரிந்தார். மக்களில் ஒருவராகக் காணப்பட்டார். இடஒதுக்கீடு விஷயத்திலும்; சுதந்திரப் பொருளாதாரம், தொழில்; சுதந்திரமான டீ. வி. ரேடியோ முதலிய அம்சங்களிலும் சிந்தனைத் தெளிவு காணப்பட்டது. ''நிலையான ஆட்சி'' என்ற காங்கிரஸின் கோஷம், பாக்கில் பயின்ற காஷ்மீர் போராளிகளின் ஊடுருவல் காரணமாகக் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. என்றாலும் பிரும்மாண்ட ஊழல்களின்கறை முற்றிலும் நீங்காததால் ''காங்கிரஸுக்கு வாக்களியுங்கள்'' என்று எழுதவோ, கூறவோ கூசுகிறது.

ஜனதா தளம் - தேசிய முன்னணி - உட்கட்சிப் பூசல்களால் உடைந்து நமது எதிர் பார்ப்புக்களை நாசமாக்கிய கட்சி. இன்று யாருடைய வோட்டுக்களைப் பிரித்து, யார் ஆட்சிக்கு வர உதவப் போகிறது என்ற நிலைக்குத் தாழ்ந்து போயிற்று.

சமாஜவாடி ஜனதா ப்ற்றியோ கூறவே வேண்டாம். சந்திரசேகர் கட்சியைக் கலைத்து விட்டுச் சன்னியாசம் வாங்கிக் கொள்வதே மேல்!

வேட்பாளர்களைத் தனித்தனியே எடை போட்டு வோட்டுப் போடுவது சாலச் சிறந்ததுதான். ஆனால் அதற்குரிய அறிவாற்றலை நமது மக்கள் பெற்றிருக்கிறார்களா? அல்லது தனித்தனி வேட்பாளர்களின் தகுதிகள்தாம் நமக்கு முற்றிலும் தெரியவருகிறதா? இரண்டும் இல்லை!

ஆக மொத்தம், இன்று நமக்கு இருப்பதெல்லாம் ஒரே ஒரு நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்புத்தான். காங்கிரஸோ, பி. ஜே. பி. யோ, எது ஆட்சிக்கு வந்தாலும் நிலையான அரசு அமைக்கும் அளவுக்கு 50 – 52 சதம் இடங்களை நாடாளுமன்றத்தில் பெற வேண்டும். ஆனால் அபரிமித மெஜாரிடி கூடாது. அது மீண்டும் ஆணவத்துக்கே வழிவகுக்கும். கிட்டத்தட்ட சரி சமம் என்றால் எதிர்க்கட்சிக்கு, 'நாளை நாமும் ஆட்சிக்கு வர வாய்ப் பிருக்கிறது' என்ற எண்ணம் ஏற்படும். எனவே, விழிப்புடன் செயலாற்றி, ஆட்சியில் இருப்போரின் குற்றம் குறைகளை அம்பலப்படுத்தி, கண்டித்து, மக்களின் கவனத்தைக் கவர முயலும். ஆட்சியில் இருப்போரும் பயந்து செயல்படுவார்கள். இத்தகைய சமபல ஜனநாயகமே நாட்டுக்கு நல்லது.

தமிழகத்திலும் இத்தகைய நிலைதான் லட்சிய ஜனநாயகமாக இருக்கக்கூடும். இருதரப்பினரும் தேர்தல் சர்ச்சைகளையும் துவேஷங்களையும் மறந்து, ஒத்துழைக்க வேண்டிய சமயம் ஒத்துழைத்தும், எதிர்க்க வேண்டிய தருணத்தில் எதிர்த்தும் சிறப்பாகப் பணியாற்றி, மக்களுக்கு நல்வாழ்வு கிட்ட உதவட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

உள் மனிதர்கள்

அபர்ணா நாயுடு

தெரு வெறிச்சோடிக் கிடந்தது. பரு மனான் அந்த மரத்தின் பின்னேயிருந்து தலையை மட்டும் வெளிப்படுத்தி, பார் வையைக் கூர்மையாக்கினான் குணா.

அதே வரிசையில் நாலு கட்டிடம் தாண்டி அந்த அலுவலகம் இருந்தது. அதன் காம்ப வுண்டு சுவரின் கம்பிக் கதவுகள் சாத்தப் பட்டு, பூட்டப்பட்டு, அதனருகில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்த காவலாளி தெரிந் தான்.

பார்வையைத் திருப்பினான் குணா.

எதிர் வரிசையில் இருந்த டீக்கடையை மூடுவதற்கான ஆயத்தங்கள் தெரிந்தன. இரவு ஆட்டம் முடிந்து, பார்த்த சினி மாவைப் பற்றிய விமர்சனப் பேச்சுக் களுடன் சிறு சிறு குழுவாக ஆணும் பெண்ணுமாக மக்கள் கூட்டம் கடந்து சென்று மறைந்து அரைமணி நேரம் ஆன வுடன் அந்த ஏற்பாடுகள் தொடங்கும்.

கடந்த ஒரு வாரமாக ஒவ்வொரு இரவும் அந்த மரத்தின் பின்னே ஒளிந்து நின்று கவனித்து இதைத் தெரிந்து கொண்டிருந் தான் குணா.

ஆயிற்று. இன்னும் சில நொடிகளில், கடை மூடுவதற்குள் ஒரு முறை டீ குடித்து விட்டு வந்து விடுவதற்காக அந்தக் காவலாளி இருக்கையிலிருந்து எழுந்து சாலையின் குறுக்கே நடந்து செல்வான். நிதானமாக உறிஞ்சிக் குடித்து விட்டு, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு, சுவாரஸ்யமாக இழுத்துப் புகையை வெளி யேற்றியவாறு திரும்பி வந்து தன் இருக்கையில் அ ம ர் ந் து கொள்வான். அதற்கு அவன் எடுத்துக் கொள்ளும் நேரம் பத்து நிமிடங்கள்.

இதையும் கடந்த ஒரு வாரத்தில் கவனித்துத் தெரிந்து கொண்டிருந்தான் குணா.

அந்தப் பத்து நிமிடங்கள்தான் அவனுக் குக் கிடைக்கும் நேரம். அதற்குள் அவன் அந்த அலுவலகச் சுவர் ஏறிக் குதித்து, உள்ளே விரைந்து ஓடி, பிரதான கதவின் பூட்டை நெம்பித் திறந்து, கட்டிடத்தின் உள்ளே புகுந்து, பீரோவை உடைத்து, உள்ளே இருக்கும் ரூபாய்க் கட்டுகளை அள்ளித் தன் ப்ரீஃப்கேஸினுள் அடைத்துக் கொண்டு வெளியே வந்து விட வேண்டும்.

முடியுமா? முடியும். முடிய வேண்டும்.

அவன் சார்ந்திருந்த அந்தப் போராளி இயக்கத்தினர் எதையும் திட்டமிட்டுச் செய் தனர். தீவிரமாகக் கவனித்து, காலம் நேரம் கணக்கிட்டு, வாய்ப்புக்களை மதிப்பிட்டுச் செயல்பட்டு வந்தனர். எனவே அவனால் அதை நிச்சயமாகச் செய்து விட முடியும்.

அதன் பின்?

அங்கேதான் அவர்களுடைய திட்டத்திற் கும் அவன் செய்திருந்த முடிவிற்கும் இடையே பெருத்த வேறுபாடு இருந்தது.

சட்டெனச் சிந்தனைகள் அறுந்தன.

அதோ... அந்தக் காவலாளி இருக்கையை விட்டு எழுந்து, சாலையின் குறுக்கே அந்த டீக்கடையை நோக்கி நடக்கிறான்...

மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான் குணா.

கடந்த ஒரு வாரமாகக் குணாவின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்தான் பிரதாப். போட்டி இயக்கத்துக் காரன். குணா திட்டப்படி வேலையை முடித்துக் கொண்டு, கையில் பெட்டியுடன் சுவரேறிக் குதித்து, தன்னை யாரும் பார்க்க வில்லை என்று சர்வ நிச்சயத்துடன் நடப்பதைக் கண்டான். தனக்குள் பலமாகச் சிரித்துக் கொண்டான்.

வேணி அவனுக்காகக் காத்திருந்தாள். தூங்காமல் காத்திருந்தாள். அவளுக்கு மிகவும் பிரியமான குணாவுக்காகக் காத் திருந்தாள். அவனுடைய லட்சிய வெறி அவளுக்குப் பிடித்திருந்தது. அவனுடைய துணிச்சலான செயல்கள் அவளுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தன. அவ னிடம் அவள் ஈடுபாடு கொண்டதற்கு அந்த இரண்டு மட்டுமே காரணமாக இருந்தன. அவனுடன் இணைந்து பணியாற்றுவதில் அவளுக்கு ஒரு பெருமிதம் கூட இருந் தது....

வாசல் கதவு தட்டப்படும் ஒலி.

சடக்கென்று படுக்கையிலிருந்து எழுந்தாள் வேணி. கதவையடைந்தவள் ஒரு கணம் தயங்கினாள். கேட்டாள்.

''யாரு?''

''நான்தான் குணா... கதவைத் திற...''

தாழ் நீக்கி, அவனை உள்ளே அனு

மதித்து, கதவைச் சாத்தித் தாழிட்டாள். திரும்பி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''என்ன ஆயிற்று?''

''எல்லாமே திட்டமிட்டபடி முடிஞ் சுடுச்சு...''

சொல்லி விட்டு ப்ரீஃப்கேஸை உயர்த்திப் பிடித்தான். அவள் கையை நீட்டினாள்.

அவளிடம் அதைக் கொடுத்த போது அவனுக்குள் ஒளிந்திருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சினுள் தலையைத் தூக்கினான். சொன்னான்: ''அசட்டுப் பெண்ணே! நம்பிக்கையோடு இதை வாங்குகிறாய். ஏமாறப் போவது நீ மட்டுமல்ல. நம்முடைய இயக்கமும் தான்...''

அந்த ப்ரீஃப்கேஸை வாங்கியவள் படுக்கை அறைக்குச் சென்றாள். கட்டிலின் அடியில் அதைத் தள்ளினாள்.

ஹாலின் விளக்கை அணைத்து விட்டு அவளைப் பின்தொடர்ந்து வந்த குணா அந்தக் கட்டிலின் மீது உட்கார்ந்து, அவளைப் பார்த்துச் சிரித்தான். சொன் னான்.

''என் வேலை முடிஞ்சிருச்சு. நாளைக்குக் காலையில இதைக் கொண்டு போய்த் தலைவர்கிட்டே சேர்க்கறது உன் பொறுப்பு.''

''நீ உள்ளே போனதையோ, இதைக் கிளப்பிக்கிட்டு வெளியே வந்ததையோ யாரும் பார்க்கலையே?''

''மூச்! ஒரு ஈ காக்காய்க்குத் தெரியாது. காம்பவுண்ட் கேட் பூட்டினது பூட்டினபடி. அது பக்கத்துல சேர் போட்டு உட்கார்ந் திருக்கற காவலாளி உட்கார்ந்தபடி. நாளைக்கு அந்த அலுவலகத்தைத் திறந்த பின்னாடிதான் விஷயமே வெளியாகும்...''

உள்ளுக்குள் இருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சுக்குள் சிரித்தான். சொன் னான். ''அப்போது இன்னொரு உண்மை யும் வெளியாகும். தலைவரின் இடத்துக்கு நீ பெட்டியைக் கொண்டு போய்க் கொடுத்து, அவர் அதைத் திறந்து பார்க்கும் போது அதனுள் பணம் இருக்காது. ஒரு வெடிகுண்டுதான் இருக்கும். பெட்டியைத் திறந்தவுடன் வெடிக்கும் ஏற்பாட்டுடன்...''

அவள் சொன்னாள்.

''சீக்கிரம் தூங்கலாம் குணா. நாளைக்குக் காலையில பணம் கொள்ளை யடிக்கப்பட்ட செய்தி வெளியில வரதுக்கு முந்தி இந்த ப்ரீஃப்கேஸைத் தலை வர்கிட்டே நான் கொண்டு போய்ச் சேர்த்துடணும்.''

''ஆமாம். அதை மறந்தே போயிட்டேன். காரியம் வெற்றிகரமா முடியற சந்தோஷத் துல அது நினைவுக்கு வராமலே போயிடுச்சு. ம்... ம்... விளக்கை அணைச் சுட்டுப் படுத்துத் தூங்கு.''

சொல்லி விட்டுக் கட்டிலில் சாய்ந்து படுத்துக் கண்களை மூடிக் கொண்டான். அவள் ஸ்விட்சைத் தட்ட, அறையில் இருள் சூழ்ந்தது. கட்டிலில் சாய்ந்த அவளுக்கு இடம் விட்டுச் சற்று ஒதுங்கித் திரும்பி னான்.



உள்ளுக்குள் இருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சுக்குள் சொன்னான். ''சீக்கிரம் தூங்கித் தொலை. அப்போதுதான் பெட்டியை மாற்ற எனக்கு வசதியாக இருக்கும்.''

அவர்கள் தூங்கிப் போனார்கள்.

அவனைத் தட்டியெழுப்பினாள் வேணி.

''குணா! எழுந்திரு. மணி ஏழாயிடுச்சு.''

''என்ன நீ... அசந்து தூங்கறவனைத் தட்டி எழுப்பிக்கிட்டு?''

கண் விழித்தவன் சோர்வோடு சொல்ல, அவன் தோள்களைப் பற்றியெழுப்பி உட்காரச் செய்தாள். சொன்னாள்.

''நான் பெட்டியை எடுத்துக்கிட்டுப் போறேன். நீ வாசல் கதவைத் தாழ் போட்டுட்டு வந்து எவ்வளவு நேரம் வேணாலும் தூங்கு.''

குனிந்து கட்டிலுக்கடியிலிருந்து அந்த ப்ரீஃப்கேஸை இழுத்து எடுத்தாள். அவன் அவசரமாகச் சொன்னான்.

''பணம் சரியா இருக்கான்னு பார்க்க ணும்னு பெட்டியைத் திறந்து திறந்து நேரத்தைக் கடத்தாதே. கொள்ளையடிச்ச சமாசாரம் வெளியே தெரியறதுக்கு முந்தி நீ தலைவர்கிட்டே இதைக் கொண்டு போய்ச் சேர்த்துடணும்.''

சொன்ன அவனை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தாள். ஏதோ சொல்ல நினைத்து, அதை அடக்கிக் கொண்டு விருட்டென்று திரும்பி வாசலை நோக்கி நடந்தாள்.

அவள் பின்னால் வந்த குணா, கதவைத் தாழிடாமல், ப்ரீஃப்கேஸுடன் தெருவில் நடந்து செல்லும் அவளையே பார்த்தான்.

உள்ளுக்குள் இருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சுக்குள் சொன்னான். ''பெண்ணே! தலைவரும் நீயும் மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் போது நான் இந்த இடத்திலேயே இருக்க மாட்டேன். இந்த ஊரை விட்டே வெளியேறிக் கொண்டிருப்பேன். பெட்டியினுள் எவ்வளவு பணம் இருக்கும்? எண்ணிப் பார்க்க வேண்டும்...''

அவசரமாகக் கதவைத் தாழிட்டுக் கொண்டு ஆர்வத்தோடு உள்ளே சென்றான்.

நடந்தது நடந்தபடி...

★ ராஜஸ்தானில் பிரதமர் சந்திரசேகர் சுற்றுப் பயணம் செய்த போது, பிற்பகல் முழுதும் காரின் பின் ஸீட்டில் அமர்ந்திருந்தவர், எங்கே சாலையில் உள்ள மக்கள் தம்மைப் பார்க்க மாட்டார்களோ என்று, டிரைவர் அருகே முன் ஸீட்டுக்கு வந்து உட்கார்ந்தார். சாலையில் போகிற, வருகிறவர்களுக்கெல்லாம் கை அசைத்தார். யார் என்றே புரிந்து கொள்ளாமல் அவர்களும் பதிலுக்குக் கையை அசைத்தனர். இருட்டத் தொடங்கவே காரில் இருக்கிற தன்னைக் கண்டுகொள்ள மாட்டார்களோ என்று, கார் ஹெட் லைட் விளக்குகளின் வெளிச்சத்தில் முன்னால் நடக்க ஆரம்பித்தார். ஊஹூம்; அப்போதும் பயன் இருக்கவில்லை. ராஜஸ்தானத்து மக்கள் அசுவாரசியமாக, அவர் ஆர்வத்துடன் சொல்லும் 'நமஸ்தே'க்கு வெறுமே தலையை மட்டும் அசைத்தார்கள்!

★ வீட்டுக்குப் போக மூட்டை முடிச்செல்லாம் தயாராக இருக்கிற போதும், தேவிலால் வேண்டப்பட்டவர்களுக்கு உதவப் பின்வாங்குவதில்லை. சமீபத்தில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில், தமது ஹரியானா நண்பர் ஒருவரை டைரக்டராக நியமிக்குமாறு, அதன் நிர்வாக இயக்குநருக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். நிர்வாக இயக்குநருக்கு, அதைப் படித்ததும் சொல்ல முடியாத கோபம். 'இயக்குநர் பதவி என்ன கிள்ளுக்கீரையா? நியமனக் குழு கூடிப் பரிசிலனை செய்ய வேண்டும். போய் வாருங்கள்!' என்று சொல்லிப் பார்த்தார். தாவுவின் ஆளா சும்மா விடுவார்? 'ஒரு பங்களாவும் பென்ஸ் காரும் முதலில் எனக்கு ஒதுக்கி விடுங்கள். நியமனம் எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்!' என்றார்!

சொன்னது சொன்னபடி...

★ தேவிலாலும், சௌதாலாவும் கட்சிக்குப் பெரிய சுமை என்று சொல்லுவது அப்பட்டமான நகர்ப்புற, நடுத்தர மக்கள் மனோபாவம். இதை நான் ஏற்கவில்லை. இவர்கள் இருவரும்தான் எங்கள் கட்சியின் பெரும் சொத்து! – சுப்பிரமணியம் சுவாமி.

★ எம். ஜி. ஆர். உடல் வைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்து என்னை இழுத்துக் கீழே தள்ளியவரைத் தேர்தலில் தோல்வியுறச் செய்யுங்கள்.

– ஜெயலலிதா.

★ செருப்புக் காலோடு அந்த வாகனத்தில் ஜெயலலிதா ஏறியதால்தான் கீழே இறக்கினேன். அதற்கு வீரப்பன் என்னை அன்று பாராட்டினார்!

–கே.பி. ராமலிங்கம்.

தொகுப்பு: எஸ். வி. எஸ்.



யார் இவர்?

படத்தில் இருப்பவர் யார் தெரிகிறதா? பிரதமர் சந்திரசேகரேதான்!


தகவல் : சம் பத் குமாரி
ஆதாரம் : வீக் லி



''உங்க வெற்றி வாய்ப்புதான் 'உறுதி' ஆச்சே! அப்புறம், என்ன கவலை?''

''ஒரு ஜோர்ல 'இந்தத் தொகுதியை ஒரு 'குட்டி சிங்கப்பூர்' ஆக மாற்று வேன்'னுல்லே சொல்லித் தொலைச் சிட்டேன்!''

- ஆர். அப்துல் சலாம்.



''அதோ போறாங்களே ரெண்டு எழுத்தாளர்கள்; அவங்களிலே ஒருத்தர் விடாக்கண்டர். இன்னொருத்தர் கொடாக்கண்டர்!''

''எப்படிச் சொல்றே?''

''விடாக்கண்டர் 'எலக்‌ஷனில் வெற்றி பெறுவது எப்படி?' என்ற புத்தகம் எழுதினார். உடனே கொடாக்கண்டர், 'எலெக்‌ஷனில் வெற்றி பெறுவது எப்படி? என்ற புத்தகம் எழுதுவது எப்படி?'ன்னு ஒரு புத்தகம் எழுதிட் டார்!''

- க. வேங்கடேசன்.

வேணி முனைப்போடு நடந்தாள். பின்னால் கேட்ட மோட்டார் சைக்கிளின் ஒலி அவளைத் தன்னிச்சையாக இன்னும் ஓரத்தில் ஒதுங்க வைத்தது. மோட்டார் சைக்கிள் இன்னும் நெருங்கி வந்தது. இடது பக்கம் இனி ஒதுங்க இடமில்லாமல் உயரமான காம்பவுண்டு சுவர். இயக்கப் பயிற்சியால் கூர்மைப்பட்டிருந்த வேணி யின் உள்ளுணர்வு உந்த, அவள் பெட்டியை வலது கையிலிருந்து இடது கைக்கு மாற்ற முற்பட்டாள்.

அதே கணத்தில் பெட்டி அவள் கையிலிருந்து பறிக்கப்பட்டது. பறித்தவன், மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த பிரதாப். பெட்டியைப் பிடுங்கிய வேகத்தில், அவன் அணிந்திருந்த முகமூடி சைஸ் கறுப்புக் கண்ணாடி ஒரு கணம் இடம் பெயர, வேணி போட்டி இயக்கத்துக் காரனைப் பளிச்சென்று அடையாளம் கண்டு கொண்டாள். பறித்தவன் மின்னல் வேகத்தில் சென்று மறைந்தான்.

வேணி யோசிக்கவில்லை. நேரே தலை வரின் இருப்பிடம் நோக்கிச் சென்றாள். நடந்ததை ஒன்று விடாமல் சொன்னாள்.

அவள் உள்ளுக்குள் இருந்த இன்னொரு வேணி அழுதாள். ''குணா... என் கடமையைச் செய்து விட்டேன்... போட்டி இயக்கத்துக்காரனுக்கு நம் திட்டம் தெரிந்து போகும் அளவுக்கு அசிரத்தையாக இருந்ததற்காக நீ தலைவரின் தண்ட னையை ஏற்றே ஆக வேண்டும்.''

மறுநாள் செய்திப் பத்திரிகையில் ஒரு பிரபல நிதி நிறுவனத்தின் அலுவலக பீரோ உடைக்கப்பட்டுப் பணம் கொள்ளை போன விவரம் வெளியாகியிருந்தது. புரட்டிய போது, அடுத்த பக்கத்தில் இன்னொரு செய்தியும் இடம்பெற் றிருந்தது.

''புறநகர்ப் பகுதியில் அமைந்திருந்த ஒரு தனி வீட்டில் வெடிகுண்டு வெடித்ததில் ஒருவர் பலி. இவர் போராளி இயக்கத்தைச் சேர்ந்த பிரதாப் என்ற இளைஞர் என நம்ப இடமிருக்கிறது. போட்டி இயக்கத்தின் சதியாக...''

படித்த வேணி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

உள்ளுக்குள் இருந்த இன்னொரு வேணி அவள் நெஞ்சுக்குள் சொன்னாள். ''குணா! நீ இவ்வளவு பெரிய துரோகம் செய் வேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. நான் உயிருக்குயிராய் உன்னை எத்தனை நேசிச்சேன்! நீ எங்கு போனா லும் தலைவர் உனக்கு ஏற்கெனவே விரித்து விட்ட வலையில் தான் விழு வாய். உலகின் எந்த மூலையிலும் உனக்கினி மரணம்தான் முடிவு...''

THIS JUNE, LET YOUR CHILD LEARN A LESSON WITH BABY RABBIT...



...READ WHAT OTHER CHILDREN HAVE TO SAY ABOUT WAR...

... AND DISCOVER WHAT HAPPENS IN THE SECOND PART OF THE MYSTERY SERIAL !



GOKULAM

THE MAGAZINE FOR CHILDREN

96 pages for just Rs. 3/-

GOKULAM, GUINDY, MADRAS - 600 032.

முக்கியத் தொகுதிகள் 3


மணியின் பாக்கெட்டில் மயிலாடுதுறை!

கொள்ளிடத்தை ஒட்டி உள்ள கடற்கரையோர மீனவக் கிராமம் கோட்டமேடு. மணி இரவு எட்டரை. ஃபோகஸ் லைட் வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டு ஜீப் விரைந்து வந்து கிராமத்து மத்தியில் நிற்கிறது. சீர்காழி தொகுதி சட்டமன்ற அ.தி.மு.க. வேட்பாளர் மூர்த்தி பேசுகிறார்:

''பாராளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிற்கும் அண்ணன் மணி சங்கர் அய்யர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பர். ஜெயித்தால் நிச்சயம் மந்திரி. அவரை ஜெயிக்க வைத்தால் நம் மாயவரம் பகுதி வளம் கொழிக்கும், காவிரித் தண்ணீருக்குக் கவலையிருக்காது...''

''அது சரி தம்பி. எங்க கிராமத்துக்குக் கரண்டே இல்லையே!'' - கூட்டத்திலிருந்து ஒரு பெரியவர் குரல் கொடுக்கிறார்.

மூர்த்தி ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்க்கிறார். கூட இருக்கும் மணிசங்கர் அய்யர் மைக்கைப் பிடித்து ''என்னைத் தேர்ந்தெடுத்தால் நிச்சயம் கரண்ட் கொண்டு வருவேன்'' என்று உறுதிமொழி கொடுக்கிறார். இப்போது கூட்டமே கோரஸாக, கிராமத்தில் மின் வசதிக்காகக் குரல் கொடுக்கிறது. எப்படியோ சமாளித்துக் கிராமத்தை விட்டு வெளிவரும் போது மணி சங்கர் அய்யர் நம்மிடம், ''பாருங்க... பஞ்சாயத்து செய்ய வேண்டிய வேலையைப் பாராளுமன்ற



✱ மயிலாடுதுறை வாக்காளர்களுக்கு மணியின் கடிதங்கள்



✱ மணி சங்கர் அய்யர்: காவிரியில் தண்ணீர் வருமா?



✽ பண்ருட்டியில் பா. ம. க. அலுவலகம்

✽ பலமான ஆதரவு, பண்ருட்டிக்கு



உறுப்பினர்தான் செய்யணும் போலிருக்கு!'' என்று அங்கலாய்த்துக் கொள்கிறார். பயணம் அடுத்த கிராமம், அடுத்த கிராமம் என்று குறுகலான வயல்களுக்கிடையே வளையும் சாலைகள் வழியாக இரவு இரண்டு மணி வரையில் தொடர்கிறது.

கிட்டத்தட்ட பத்து லட்சம் வாக்காளர்களைக் கொண்ட மயிலாடுதுறை பாராளுமன்றத் தொகுதியில் இ. காங் தலைமைக்கு நெருக்கமாயுள்ள மணிசங்கர் அய்யரை எதிர்த்து, தி. மு. க. சார்பில் கல்யாணம்; பா. ம. க. ஆதரவுடன் முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் சமது ஆகியோர் நிற்கிறார்கள் - பேருக்கு. தொகுதி எங்கும் மணிசங்கர் வியாபித்துக் கொண்டிருக்கிறார். இந்தத் தொகுதியில் உறுப்பினர் காலஞ்சென்ற பக்கிர் முகமது பெற்ற நல்ல பெயர் மணிசங்கருக்கும் உதவும் எனினும் சில நெருடல்கள் இல்லாமல் இல்லை.

தஞ்சை மாவட்டத்தில் கொஞ்சம் பலம் வாய்ந்த மூப்பனார் கோஷ்டிக்காரர்கள், மணிக்கு 'ஷோக்கு' காட்டுகிறார்கள். இதைப் பற்றி மணி கவலைப்படவில்லை. ஜெ. யின் செல்வாக்கும், காங்கிரஸின் 'நிலையான ஆட்சி' கோஷமும் தம்மைக் கரை சேர்த்து விடும் என்று நம்புகிறார்.

''இத்தனை நாள் வடக்கே அதிகாரியாய்ப் பணியாற்றி வந்த இவர் திடீரென்று இந்தத் தொகுதியில் குதிக்கிறார். ஆனால் கல்யாணம் இதே தொகுதியைச் சேர்ந்தவர். மண்ணின் மைந்தர். அவர் வெற்றி பெற்றால், மக்கள் சுலபமாக அணுகக்கூடியவராய் இருப்பார்'' என்கிறார் சீர்காழி தி. மு. க. ஊழியர் வாசு.

''மணிசங்கர் அய்யருக்குச் சொந்த ஊரே திருவையாறுக்கு அருகே உள்ள காருகுடிதான். மேலும், மயிலாடுதுறையில் ஒரு வீடே வாங்கி விட்டார். எனவே, அய்யரும் மண்ணின் மைந்தர்தான்'' என்று எதிர்வாதம் செய்கிறார்கள் காங்கிரஸ் காரர்கள்.


தொகுதியில் உள்ள சுமார் இரண்டு லட்சம், முஸ்லீம் - வன்னியர், வோட்டுக்களைப் பெற அப்துல் சமது முயன்றாலும், பெருவாரியான முஸ்லீம்கள் அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. பொதுவாகத் தி. மு. க. மேல் மக்களுக்கு உள்ள வெறுப்பால் கல்யாணத்துக்கும் வெற்றி வாய்ப்பு எட்டாக் கனிதான். ஆனால் கும்பகோணம், குத்தாலம், சட்டமன்றத் தொகுதிகளில் கொஞ்சம் கடுமையான போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மணிக்கு 'மணி'யைப் (பணம்) பற்றித் துளியும் கவலையில்லை. ''ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஐந்து கார்கள் வீதம், ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு முப்பது கார்கள் தேர்தல் பிரசாரம் செய்கின்றன. ஒரு காருக்கு ஒரு நாள் வாடகை சுமார் எழுநூறு ரூபாய். ஆக காருக்கே சுமார் 20,000 ரூபாய் தினமும் செலவாகிறது. இது தவிர ஆட்களுக்குச் சாப்பாடு, போஸ்டர், பேனர் என்று தடபுடல் செய்கிறார் மணி'' என்கிறார் பா. ம. க. தொண்டர். இது தவிர, தொகுதியிலுள்ள இரண்டரை லட்சம் பேர்களுக்கு, இன்லேண்ட் லெட்டரில் கடிதம் எழுதி வாக்கு கேட்கிறார் மணி! இதற்கே சுமார் இரண்டு லட்ச ரூபாய் செலவாகும்!

ஜெயித்து வந்தால் குடிநீர், தொழில் வளர்ச்சி, காவிரியில் தண்ணீர் என்று வரு



✽ டி. ராமச்சந்திரன்.



✽ சண்முகம்.

டத்துக்கொரு திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கூறுகிறார் மணி: ''டெல்லியில் கோப்புகளைச் சரியான பாதையில் எடுத்துச் சென்றாலே பாதித் திட்டங்கள் நிறைவேறி விடும்'' என்கிறார். மணியிடம் மயிலாடுதுறை நிறையவே எதிர்பார்க்கிறது!

பண்ருட்டிக்குப் பயமில்லை!

விறுவிறுப்பான ஒரு போட்டியை எதிர்பார்த்த பண்ருட்டி வாக்காளர்கள் இன்று ஏமாந்து நிற்கிறார்கள். ''பண்ருட்டி ராமச்சந்திரனுக்கும் நந்தகோபால கிருஷ்ணனுக்கும் போட்டி என்றால் அது போட்டி. அந்த ந. கோ. கிருஷ்ணனே, பண்ருட்டி சைடில் சாய்ந்த பிறகு பண்ருட்டிக்கு ஏது எதிர்ப்பு? எல்லாம் இந்த மாஜி மந்திரி பொன்முடியின் 'கைங்கர்யம்'தான் என்கிறார் தி. மு. க.வைச் சேர்ந்த சீதாபதி.''

நகரச் செயலாளர் மணியை ஆதரித்த பொன்முடி, தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் ந. கோ. கிருஷ்ணனை ஓரம் கட்டி இந்தத் தேர்தலில் டிக்கெட் கிடைக்காமல் செய்து விட, ந. கோ. கி. பா. ம. க. வில் ஒதுங்கி விட்டார். நகரச் செயலாளர் மணிதான் தி. மு. க. வேட்பாளர். அ. தி. மு. க. சார்பில் டாக்டர் தேவ சுந்தரம் நிற்கிறார்.

1,40,000 வாக்காளர்களைக் கொண்ட தொகுதி பண்ருட்டி. இதில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வன்னியர்கள். நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட தொகுதி. நான்கு முறை இதே தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து மந்திரியாகவும் இருந்த ராமச்சந்திரன், தொகுதிக்குச் சாலை வசதி, பஸ் வசதி என்று நிறையவே செய்திருக்கிறார். சென்ற '89ம் ஆண்டு தேர்தலில் அ. தி. மு. க. ஜெ. ஜா என்று பிளவுபட்டதால், பண்ருட்டி எந்த அணியின் சார்பிலும் நிற்கவில்லை. இந்த முறை யானைச் சின்னத்தில் நிற்கும் பண்ருட்டிக்குப் பா. ம. க. தொண்டர்கள் பம்பரமாகச் சுற்றி வேலை செய்கிறார்கள்.

இந்தப் பகுதியில் பிரபலமான தி. மு. க. பிரமுகர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி வேறு, கட்சியிலிருந்து விலகி பா. ம. க. வில் சேர்ந்து விட்டதால், பண்ருட்டிக்குக் கூடுதல் பலம் கிடைத்திருக்கிறது. கடலூர் பாராளுமன்ற ஸீட் கிடைக்காததால் கடலூர் காங்கிரஸ்காரர் வெங்கடேசன், பண்ருட்டிக்கு ரகசியமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதும் ஒரு செய்தி!

''பண்ருட்டிக்கு என்று தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறது. இது தவிர சென்ற பாராளுமன்றத் தேர்தலில், இந்த சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், பா.ம.க. 32,000 வாக்குகள் வாங்கியது. எனவே வெற்றி உறுதி என்கிறார் பா. ம. க. வைச் சேர்ந்த சேகர்.

பாண்டியில் நிலவும்கேள்விக் குறிகள்

தமிழ்நாட்டில் வாழப்பாடி - மூப்பனார் கோஷ்டிப்பூசல் எப்படி ஜகப் பிரசித்தமோ, அது போல் பாண்டியில் சண்முகம் - பரூக் கோஷ்டித் தகராறும் பிரசித்தம். தேர்தல் முடிவடையும் வரை கோஷ்டிப் பூசலை ஓரம் கட்டி வைத்து விட்டுக் கருமமே கண்ணாக இருக்க முயன்று வருகிறது காங்கிரஸ். ஆனாலும் புகைச்சல் தெரிகிறது.

''அரசியலையும் வியாபாரத்தையும் ஒன்றாகச் செய்யும் சிலரால்தான் பாண்டியில் காங்கிரஸ் கோஷ்டிப் பூசல் வெடிக்கிறது'' என்கிறார் சண்முகத்தின் ஆதரவாளர் ஒருவர்.

பரூக் முதல்வராக இருந்த போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார் சண்முகம். அப்போது டெல்லியில் இருந்து பல சங்கடங்களை பரூக்கிற்குக் கொடுத்தார். ''என்ன செய்வது அவருடைய யோக்யதை அவ்வளவுதான்'' என்கிறார் பரூக்கின் ஆதரவாளர்!

சண்முகத்திற்கு உள்ள பெரிய பலம் கஷ்டமோ, நஷ்டமோ தொடர்ந்து காங்கிரஸில் இருந்து வருவதுதான். கிட்டத்தட்ட பதினெட்டு வருடங்களாக மாநிலத் தலைவர் பதவியில் இருக்கிறார் அவர். ஆனால் பரூக் தி. மு. க. விலிருந்து கட்சி மாறியவர். இந்த நிலையில் சட்டமன்றத் தொகுதியில் சண்முகமும், பாராளுமன்றத் தொகுதியில் பரூக்கும் போட்டியிடுகிறார்கள்!

முப்பது உறுப்பினர் கொண்ட பாண்டி சட்டசபைக்கு, இருபது இடங்களில் காங்கிரஸும் பத்து இடங்களில் அ. தி. மு. க. வும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. தி. மு. க. 19 இடங்களில் போட்டியிடுகிறது. மீதி இடங்களை ஜனதா தளத்துக்கும், இடதுசாரி கட்சிகளுக்கும் பகிர்ந்தளித்திருக்கிறது.

இது தவிர, பா. ம. க. கூட்டணி. முன்னாள் முதல்வர் ராமசாமி, புதுவை மக்கள் முன்னணி என்ற கட்சியை ஆரம் பித்துப் போட்டியிடுகிறார். ஏ. வி. ராமகிருஷ்ணன், ஜனதா தளம் (பாண்டிச்சேரி) என்ற கட்சியைத் துவங்கியிருக்கிறார்.

பொதுவாகவே வீசும் காங்கிரஸ், அ. தி. மு. க. அலை இந்த மாநிலத்திலும் வீசினாலும், காங்கிரஸ் தனித்து ஆட்சியைக் கைப்பற்றுமா என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. முதலியார் பேட்டை, பாகூர், திருநள்ளார், மண்ணாடிபட்டு போன்ற தொகுதிகளில் போட்டி கடுமையாக இருக்கிறது.

''ஜெ.யின் கவர்ச்சி இங்கு எடுபடாது'' என்கிறார் டி. ராமச்சந்திரன். சென்ற தேர்தலில் தெருத் தெருவாகப் பிரசாரம் செய்தும்,

மூன்று இடங்களைத்தான் ஜெ. பெற முடிந்தது. பாண்டியைப் பொறுத்தமட்டில் கட்சி ஒரு பக்கம் இருந்தாலும், வேட்பாளர்கள் அந்தந்த தொகுதிகளில் நன்கு அறிமுகமாகியிருந்தால் வெற்றி நிச்சயம். காரணம் சட்டமன்றத் தொகுதிகளின் பரப்பளவு சிறியதாக இருப்பதால் பரஸ்பரம் அறிமுகங்கள சுலபம்.

ராஜினாமா செய்த தி. மு. க. ஜனதா தள அரசுக்கு நல்ல பெயர் இல்லை. ஆக்ட்ராய் வரி போட்டதும் குடிதண்ணீருக்கு வரியை அதிகப்படுத்தியதும் மக்களுக்கு எரிச்சலை உண்டாக்கி இருக்கிறது. ஆனால் டி. ராமச்சந்திரனோ, ''எங்களுக்கு முன்பு முதல்வராக இருந்த பரூக் மத்திய அரசுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படிதான் ஆக்ட்ராய் வரி போடப்பட்டது. இன்னமும் சொல்லப் போனால், பரூக் அரசு தயாரித்து வைத்திருந்த பட்ஜெட்டைத்தான் நாங்கள் சட்டசபையில் வைத்தோம்'' என்கிறார்.

''பாண்டி மக்கள் ஒரு நிலையான ஆட்சியை விரும்புகிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பல்கலைக் கழகம், விவசாயக் கல்லூரி போன்றவற்றைக் கொண்டு வந்திருக்கிறோம். துறைமுக அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த இருக்கிறோம். கடந்த சில வருடங்களில் பாண்டிச்சேரி நகரத்தைச் சுற்றி ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக்குக் காங்கிரஸே காரணம். இதெல்லாம் மக்களுக்குத் தெரியும். வெற்றி எங்களுக்குத்தான்.'' என்கி றார் சண்முகம்.

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கும் பட்சத்தில் 'யார் முதல்வர்' என்பதிலும் சர்ச்சை இருக்கிறது. 'கண்ணன்தான் முதல்வர்' என்று பரூக் பேசி வருவது சண்முகத்தின் ஆதரவாளர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது.

பரூக்கிடம் நேரடியாக இது பற்றிக் கேட்டால் ''இதெல்லாம் பெரிய விஷயமல்ல'' என்று கூறி நழுவுகிறார்!

– ப்ரியன்.

படங்கள்: ராஜன்



மேற்கு வங்கத்தில் இரயில்வே டிவிஷனல் மானேஜரின் அலுவலகத்தைச் சூழ்ந்து கொண்டு, பயணிகள் அவரை 'கேரோ' செய்தனர். காரணம் விசாரித்த போது, பல ஆண்டுகளாக மிகத் தாமதமாக வரும் சக்ரதார்பூர் பாசஞ்சர் கடந்த சில தினங்களாக சரியான நேரத்துக்கு வந்து சென்று விடுவதாகவும், அதனால் தாங்கள் அலுவலகம் செல்ல முடியவில்லையென்றும், வழக்கம் போல் அந்த ரயில் ஒரு மணி நேரமாவது தாமதமாக வர வேண்டும் என்பதுமே அவர்களுடைய கோரிக்கை என்று தெரிந்தது.

– அ. ஷண்முகசுந்தரம்.

இருப்பிடம்

எப்படிச் சண்டை ஆரம்பித்தது என்று இப்போது நினைவில் இல்லை. ஆனால் புனிதா தன் சூட்கேசில் துணிகளை அடுக்குவது மட்டும் நிஜம்.

மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். எரிமலை மௌனம். உள்ளூர, எழுந்து அவளை அறைய வேண்டும், அல்லது இன்னும் கோபமாக நாலைந்து கேள்விகள் கேட்க வேண்டும் என்ற உணர்வு!

ஆனால் எதுவும் செய்யவில்லை. அவளுக்கு மட்டும் அவ்வளவு ரோஷமா! போய் விடுவாளா?

''உங்களுக்குத் தானாவும் புரியாது. எடுத்துச் சொன்னாலும் கேட்டுக்கிற பொறுமை இல்லை. அவசரத்துல எதையாவது செஞ்சுட்டு, அப்புறம் நஷ்டப்பட்டதும் வந்து குதிப்பீங்க. இத்தனை நாளா அதைத் தானே பார்க்கிறேன்..''

''என்ன உளர்றே நீ. அவன் தெரிஞ்சவன்னுதானே பணத்தைக் கொடுத்தேன்.''

''தெரிஞ்சவனா? நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. உங்க ஃப்ரெண்டு என்ன சொன்னாரு? அவன் ஆளு ஒரு மா தி ரி. வேலைய வாங்கற சாமர்த்தியம் நமக்கு இருக்கணும். அ லை ய விட்டுருவான்னு சொல்லலே ?''

''அவரு வீ ட் டு க் கு ம் அவன்தானே செஞ்சு கொடுத்தான்.''

''அவன் கடைசில அலைய விட்டதையும்தானே சொன்னாரு.''

''இப்ப என்னை என்ன மடையன்கிறியா? வேற எவனையாவது.. உனக்குத் தெரிஞ்சவனாக் காட்ட வேண்டியது தானே.''

''என்ன உளர்றீங்க. ஆளு நம்பகம் இல்லை. வேற ஆளு விசாரிச்சுப் பாருங்கன்னு சொன்னா.. என்னமோ அசிங்கமாப் பேசறீங்களே...'' என்றாள் எரிச்சலாகி.

ரிஷபன்

அவளையே முறைத்தான்.

''எங்க ஃபேமிலியே அசிங்கம்.. ஏன் தேடி வந்து சம்பந்தம் வச்சுக்கிட்டீங்க?''

''சரி.. சரி... இன்னைக்கு உங்களுக்கு ஏதோ வெறி.. நான்தான் கிடைச்சேன் போலிருக்கு.''

''வெறி.. அசிங்கம்.. அப்புறம் ஏண்டி என்கூட வாழணும். போயேன் உங்க வீட்டுக்கே...'' திடீரென உரத்த குரலில் அலறினான்.

''எதுக்கு?''

''அப்படித்தான். பிடிக்காமே என்கூட என்னையே விமர்சனம் பண்ணிக்கிட்டு வாழ வேண்டிய அவசியம் என்ன? போ உங்க வீட்டுக்கு!''

''கல்யாணம் இதுக்குத்தான் செஞ்சு கொடுத்தாங்களா? எங்க வீட்டுக்குப் போகணுமாமே!''

''இஷ்டம் இல்லாமே போலி வாழ்க்கை அனாவசியம்!''

''நீங்க செஞ்சது தப்புன்னு சொல்லக் கூடாதா?''

''அவசியம் இல்லே. என் செயலை விமர்சிச்சா என்னையே விமர்சிக்கிற மாதிரி தான். இதுல மட்டும் இல்லே. நான் எது செஞ்சாலும். எங்க வீட்டுல இப்படிச் செஞ்சிருப்பாங்கன்னு கம்பாரிசன் வேற. போயேன் உங்க வீட்டுக்கே....''

''மறுபடி மறுபடி அந்த வார்த்தையச் சொல்லாதீங்க. அநாகரிகமா இருக்கு..''

''வெறி.. அசிங்கம்.. அநாகரிகம்! பேஷ்! திரும்பத் திரும்பச் சொல்றேன். என்னோட முடிவு இதுதான். போ. உங்க வீட்டுக்கு. எனக்கு உன் முகத்தையே பார்க்கப் பிடிக்கலே!''

அவ்வளவுதான். உள்ளே போனாள். பீரோ மேலிருந்த சூட்கேஸைக் கீழிறக்கி, தூசி தட்டினாள். துணிகளை வரிசையாய் அடுக்கினாள். வெளியில் வந்தாள்.

ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். பேசவில்லை. அவன் இருந்த

திசைகூடத் திரும்பவில்லை. வெளியேறி விட்டாள்.

மூன்று நாட்கள் எப்படிக் கழிந்தனவோ! வீட்டின் தனிமை இரவு திரும்பியதும் பளாரென்று அறைந்தது. நிலைப்படி சிப்பி மாலை. காஸ்கட்டில் செய்த ஒயர் கிளி களின் வரிசை. ஹேப்பி ஹோமில் அவர்க ளின் கறுப்பு வெள்ளைப் புகைப்படம். இரவு விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் ஸ்பரிச நினைவுகள். டைனிங் டேபிளில் ஹாட் பேக்கைத் திறந்தால் வெறுமை.

ஏதோ ஒன்று அவனை விடாமல் உறுத்தி யது. யோசித்ததில் தவறு புலப்பட்டது. ஏன் அப்படி இரைந்தேன்.

''உனக்குத்தான் தெரியுமில்லே. நான் கொஞ்சம் முன்கோபி. நீதான் அந்த நேரத் துல என்னை அனுசரிச்சுப் போகணும்னு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்..''

என்னவோ அவள் எதிரில் இருப்பது போல் தன்னிச்சையாய்ப் புலம்பினான் மன சுக்குள். அன்று எந்த அளவு ஆங்காரம் மனத்தில் அழுத்தமாய் இருந்ததோ, அதே அளவு இன்று வருத்தம் அப்பி இருந்தது.

தூக்கம் வராமல் புரண்டான். நாளை ஞாயிறு. இந்த வீட்டில் அவளின்றி.. ஏன் எந்தத் தகவலும் இல்லை...? அவள் வீட்டில் என்ன நினைத்திருப்பார்கள். மிகக் கேவலமானவனாக.. ச்சே! படித்த பெண்ணை அநாகரிகமாய்ப் பிறந்த வீட் டுக்கு விரட்டி... எண்ணங்களில் மனசு திமி றியது.

அம்மாவைப் போய்ப் பார்க்கணும்.. ஏனோ அப்படித் தோன்றியது. இதுவரை அம்மாதான் அவன் கோபத்தைத் தாங்கி இருக்கிறாள்... சகித்துக் கொண்டு இருந்தி



ருக்கிறாள். வெளிப்பட எதுவும் சொன்ன தில்லை. எவ்வளவு தடவை வார்த்தைக ளால் சுட்டிருப்பாள். அம்மா.. ஒரு தடவை கூட என்னை நீ விரட்டவில்லை. வெறுத்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை.

அம்மாவைப் பார்க்கணும். நாளைக்குக் காலையில் முதல் பஸ்ஸைப் பிடித்து.. அம்மா கையால் காலை காப்பி.. சுருங்கிப் போன அந்த உடம்பு.. அம்மா...

கதவைத் தட்ட வேண்டிய அவசியம் இல்லாத வீடு. வாசலில் 'பளிச்'சென்று கோலம்- தெருவை அடைத்து. வீட்டுக்குள் ஊதுபத்தி வாசனை.

''வாடா...'' என்றாள் அம்மா. ''சொன்ன மாதிரியே வந்துட்டியே...''

''சொன்ன மாதிரியேவா? யார் சொன்னது?''

கேள்விக்கு விடை அவசியமாய் இருக்க வில்லை. ஈரத் தலையில் டவலை முடிந்து.. கையில் கோலப் பொடி டப்பாவுடன் புனிதா வந்தாள்.

எலிக்கும் கொசுவுக்கும் குடும்பக் கட்டுப்பாடு!

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எம். செல்வ ராஜ் (சுயேச்சை) வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:

* அரசு அதிகாரிகளுக்குத் தற்காப்புக்குத் துப்பாக்கி வழங்கப் படும்.
* கணவன் மனைவிக்கு அலுவலகத்தில் ஒரே மேஜையில் வேலை கொடுக்கப்படும்.
* இந்தியக் குடிமக்களுக்குக் கட்டாய ராணுவப் பயிற்சி. கட்டாயக் கல்வி கொடுக்கப்படும்.
* கல்வித் திட்டத்தில் ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து தொழில் நுட்பம் பெற, ஆசிரியர்களுக்குக் குடும் பத்துடன் சென்று பயிற்சி பெற அனுமதி தரப்படும்.
* அரசு ஊழியர் இறந்தால் கோவில் நிலங்களிலிருந்து ஐந்து ஏக்கர் வழங்கப்படும்.
* விவசாயிகளுக்கு போர்வெல், பைப், ஆயில் இஞ்சின், மின்சார மோட்டார் இனாமாக வழங்கப்படும்.
* சினிமா தியேட்டர்களில் பகல் பொழுதில் கல்வி போதிக்கப்படும். இரவில் சினிமா காண்பிக்கப்படும்.
* ஒரே மதத்தில் திருமணம் செய்து கொள்ளத் தடை கொண்டு வரப்படும். படித்த ஆண் - படிக்காத பெண்ணையும், படித்த பெண் படிக்காத ஆணையும்தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதைச் சட்டம் ஆக்குவோம்.
* எலிக்கும் கொசுவிற்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படும். மனிதனுக்குக் குடும்பக் கட்டுப்பாடு ரத்து செய்யப்படும்.

எப்படி வாக்குறுதிகள்...? முக்கியக் கட்சிகளின் வாக்குறுதிகளைத் தூக்கிச் சாப்பிடவில்லை!

கணவன்- மனைவிக்கு ஒரே மேஜையில் வேலை!

தொகுப்பு: எஸ். சுவாமிநாதன்.



''என்ன சார், இதுவரைக்கும் எண்பது ரூபாய்க்குச் சாப்பிட்டிருக்கீங்க?''

''கையிலயோ காசு இல்லை; இதுல, ஏன் குறைச்சு சாப்பிடுவானேன்னுதான்...''

- ஆர். வசந்தகுமார்.

''துளசி மாடத்துக்குக் கோலம் போட்டு...''

இவனைப் பார்த்ததும் பேசாமல் சமையல் அறைக்குள் போனாள்.

''வாடா... காப்பி சாப்பிடலாம்...'' சொல்லி விட்டு, அம்மா வாசல் பக்கம் கீரைக்காரியின் குரல் கேட்டுப் போனாள்.

''என்னது இது!''என்று அடிக்குரலில் அவளிடம் சீறினான் சமையலறைக்குள் நுழைந்து.

''எது?''

''இதுதான் உங்க வீடா?'' அவன் கேள்வி அவனுக்கே அபத்தமாய்த் தொனித்தது.

''பின்னே?'' என்றாள் அழுத்தமாய்.

''சொல்லிட்டியா.. உங்க பையன் இப்படி அநாகரிகம்னு...''

''எதுக்குச் சொல்லணும்?''

''பரவாயில்லையே...!''

இடைமறித்தாள். ''அவங்களுக்குத் தெரிஞ்சதுதானே. நான் எதுக்குப் புதுசாச் சொல்லணும்..''

''திமிர்! போக வேண்டியதுதானே.. உங்க வீட்டுக்கே!''

''இதுதான் எங்க வீடு. வந்தேன். உங்க பையன் ரெண்டு நாள்ல வருவார்னு சொன்னேன். நிம்மதியா இருக்கேன். மாமியார் உபசரிப்புல...''

''நம்ம சண்டை எதுவுமே சொல்லலியா?'' என்றான் குழப்பத்துடன்.

''அது என் பிரச்னை. என்னால அதைத் தீர்த்துக்க முடியும். அதை ஏன் அவங்க கிட்டே சொல்லி.. அவங்களோட மன அமைதியைக் கெடுக்கணும்...'' என்றாள் தீர்க்கமாய்.

என்ன பெண் இவள்! நினைத்ததைச் சாதிக்கிற திடம் உண்டு என்பது போல.. தைரியமாய் நிமிர்ந்து .. உறுதியாய்ப் பேசி..

சொன்னான்.

''ஐயாம் ஸாரி..''

''காப்பி சாப்பிடறீங்களா?''

வெளியில் அவன் அம்மா நின்றிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

அம்மா நினைத்துக் கொண்டாள்.

'இதுவே என் காலமானால்... அழுது கொண்டு அம்மா வீட்டுக்குப் போயிருப்பேன். இப்ப.. இந்தப் பெண்ணுக்கு.. எத்தனை நெஞ்சழுத்தம்.. துளிக்கூட கலையாமல்.. இருப்பிடத்தைத் தக்க வைத்துக் கொண்டு விட்டாளே.. தேவைதான் இந்தச் சாமர்த்தியம்.'

அவர்கள் கவனிக்குமுன் விலகி, கொல்லைப்பக்கம் போனாள் அம்மா.

நம்பிக்கை

தார் உருகி ஓடும் மதிய வெம்மையில் தூரத்தில் வசுமதி வருவது ஜன்னல் கம்பி கள் வழியே துண்டுத் துண்டாய்த் தெரிந் தது. விஸ்வனாதன் திரும்பிப் படுத்துக் கொண்டான். கொஞ்ச நாளாய் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து வந்தான். 'அவள் வேறெங்காவது செல்லக் கூடாதா? நேராய் இங்குதான் வர வேண்டுமா?'

''என்னங்க! வசுமதி... வசுமதி...!'' - கிசு கிசுப்பாய் அவன் மனைவி.

இப்பொழுதுதான் புதிதாய்த் தெரிந்து கொள்பவன் போல் எழுந்து லுங்கியைக் கட்டிக் கொண்டு, அவசரமாய்ச் சட்டை தேடி அணிந்து...

கதவு தட்டுகிறாள்.

''வாங்க!''

சந்தோஷமாய் அழைக்க முடியாமல் எதுவோ தடுக்கிக் கொண்டு தொண் டைக்குள் மீன் முள்ளாய் உறுத்திக் கொண்டு இருந்தது. பளீரென்று வழித்துப் போட்டது போல் முகம். வெறுமையாய் நெற்றி. சலனமில்லாமல், எதையும் வெளிக் காட்டாத கண்கள். இழுத்துப் போர்த்திய புடைவை.

மூன்று மாதத்துக்கு முன் வசுமதிக்கும், அன்பழகனுக்கும் திருமணமான புதிதில் மின்னலாய் இருந்தவள்.

''நண்பா! அ ச த் த ல ா பொண்டாட்டி கிடைச்சிட்டா மட்டும் போதாது. ஒழுங்கா வச்சுக் காப்பாத்து. உன் முன்கோபத்தை அங்க காட்டாதே! அதெல்லாம் எங்க ளோட நிறுத்திக்கோ!''

-- கிண்டலாய் விஸ்வனாதன் சொன்ன தற்குச் சிரித்தான் அன்பழகன்.

மூன்று மாதமும் சுத்தமான சந்தோஷ தினங்கள்.

'டிக்கேட் டிக்கேட்' என்று ஜனசமுத்தி ரத்தில், வியர்வை நாற்றத்தில், உரசல் கச கசப்பில், கண்டக்டர் தொழில் செய்வது தெரியாமலே அன்பழகனுக்கு ஆகாசத்தில் மிதப்பாய்க் கழிந்த அந்த தினங்கள். புதிய உலகில் சஞ்சரிப்பதாக உணர்ந்த அன்ப ழகன், விஸ்வநாதனிடம் வசுமதி பற்றியும், அவள் நற்குணம் பற்றியும் அந்த விபத் துக்கு முதல் நாள்தான் இந்த வெள்ளை நாடாக் கட்டிலில் உட்கார்ந்தபடி 'ம்கும் ம்கும்' என்று கனைத்துச் சிரித்தபடி சொன் னான்.

மறுநாள் மயங்கித் தூங்கி, கனவு கொண் டிருந்த இதே போன்ற ஒரு மதியத்தில் விஸ்வனாதன் உலுக்கப்பட்டான்.

''நம்ம அன்புக்கு ஆக்ஸிடெண்ட் ஆயி ருச்சி. மேம்பாலம் இறக்கத்துல... ஸ்பாட்லேயே...''

அலறித் துடித்து ஓடிய போது அன்பு சாலையோரம் வெள்ளை விரிப்பால் மூடப் பட்டுக் கிடந்தான்.

புதுக் கனவுகளோடும், புது அனுபவங்க ளோடும் புருஷன் வீட்டிலிருந்து முதன் முறையாய் அம்மா வீட்டிற்குச் சென்றிருந்த வசுமதியை மயக்கமாய்த் தூக்கி வந்து போட்டார்கள்.

மூன்று மாதங்களாகி விட்டன.

''உட்காருங்க!''

நாடாக் கட்டிலைக் காட்டினான். தயங் கித் தயங்கித் தரையில் உட்கார்ந்தாள்.

''பசங்கள்ளாம் எங்கே?''

''ஸ்கூலுக்கு!'' என்றான் விஸ்வனாதன்.

''ம்!''

எதுவும் பேச முடியாமல் அன்பழகன் இறப்பு மட்டுமே திரும்பத் திரும்ப மனத்தில் சூறாவளியாய்ச் சுழன்றது. இந்த மூன்று மாதத்தில் எத்தனை மாற்றம்! அவளிடம் ஏதோ துறவி போல ஒரு சாந்தம் வந்து விட்டது. எங்கே போயிற்று அந்த 'பளிச் பளிச்'சென்ற பேச்சும் நடையும்? இறுக்கமாய் இவன் கால் நகத்தையும், வசுமதி சுவர்க் கடிகாரத்தையும் வெறித்துக் கொண்டிருந்தார்கள்.

விஸ்வனாதன் மனைவி மெல்ல வசுமதி அருகில் தரையில் அமர்ந்து கேட்டாள்.

''பணமெல்லாம் சரியா வந்துருச் சில்லே...?''

'என்னதான் அடக்கினாலும். அதட்டினா லும் இவளுக்கு ஏன் இந்த புத்தி போக மாட்டேனென்கிறது? கண்ணுக்கு நேராய் வசுமதியைப் பார்த்தபின்னும் கேள்வி மட் டும் 'பணம்'. அன்பழகன் பணி செய்த போதே இறந்து விட்டதால் அவளுக்கு வந்த பணம்!

''பத்து நாளாச்சி!'' என்றாள் வசுமதி.

''பத்திரமா பேங்க்ல போட்டு வச்சிக் கங்க. ஏதாச்சும் உதவி வேணுமானா இவ ரைக் கேளுங்க!'' என்று விஸ்வனாதனைக் காட்டினாள் அவன் மனைவி.

''ம்ஹூம்!'' என்று விரக்தியாய்ச் சிரித்து விட்டுச் சொன்னாள்.

''எங்க.. அம்பதாயிரம் போல புடுங் கிட்டாங்க!''

''யாரு?'' அதிர்ச்சியில் கத்தி விட்டான்

திருவையாறு பாலுசாமி



விஸ்வனாதன்.

''மாமனார் வீட்ல...''

''ஓ!''

வேலியாக இருக்க வேண்டியவர்களே மேய்ந்திருக்கிறார்கள். ஆ த ர வு காட்ட வேண்டியவர்களே அநியாயம் பண்ணியிருக்கிறார்கள். விஸ்வனாதனுக்கு இதில் என்ன செய்வது என்று தெரியவில்லை.

''எப்படி விட்டீங்க நீங்க!''

விஸ்வனாதனுக்குக் கை இலேசாக நடுங்கியது.

''பச்ச துரோகங்க இது!''

''விடுங்க!'' அமைதியாய்ச் சொன்னாள்.

''போறாங்க விடுங்க! பிள்ளை வளத்ததுக்குக் கூலின்னு வச்சிக்க வேண்டியதுதான்...''

''அதெப்படிங்க! கோர்ட்டுக்கு இழுத்துடலாமே! அந்தாளைக் கோர்ட்டுக்கு இழுத்து ஊரைக் கூட்டி நாறடிக்கணும்....''

''நல்லாருக்கட்டும் விடுங்க... போனது போக மிச்சம்னு நானே கை கழுவிட்டேன்...''

இல்லங்க! நம்ம சங்க வக்கீல் இருக்காரு. ஒரு வார்த்தை சொன்னா போதும். கிழி கிழின்னு கிழிச்சுருவாரு. நீங்க நாளைக்கு வீட்டுக்கு வாங்க. ரெண்டு பேருமா போயி அவரப் பாப்போம்... நிலமை தெரிஞ்சுக்கிட்டு நோட்டீஸுக்கு ஏற்பாடு பண்ணிரலாம்....''

''ஐயோ அதெல்லாம் வேண்டாம்...''

''எதுக்குப் பயப்படறீங்க? யாரும் ஒன்ணும் பண்ணிட மு டி ய ா து. தைரியமா வாங்க...''

''பயத்துக்கில்ல... எனக்குப் பிடிக்கலே...''

''அப்ப பணம் போனா போகட்டுங்கிறீங்களா?''

''ஆமாம்...'' குரலில் அழுத்தம்.

'கண்ணெதிரே ஒரு பச்சைப் பரிதாபம். எப்படி சும்மா கைகட்டி வேடிக்கை பார்ப்பது? ஏதேனும் செய்தே ஆக வேண்டும்.'

''அப்ப நீங்க வர வேணாம். நான் மட்டும் போயி பாத்து...''

''இதோட விட்டுடுங்க இத....''

''இல்லங்க... எனக்குக் காரணம் புரியல...''

''எனக்குச் சொந்தம்னு சொல்லிக்க இங்க அவங்க மட்டுந்தான். அவங்களையும் பகைச்சுக்க நான் விரும்பல. இன்னிக்கில்லேன்னாலும் ஒரு நாள் அவங்க எங்கிட்ட வருவாங்க...''

''பிடுங்கிட்டாங்கன்றீங்க. அப்புறம் வருவாங்கன்றீங்க....''

''நிச்சயம் வருவாங்க....''

''நீங்க உங்க அப்பா அம்மா வீட்டுக்குப் போயிடலாமே....?''

''அங்க சூழ்நிலை சரியில்லே. எனக்குப் பின்னால் இரண்டு தங்கச்சிங்க இருக்காங்க. என்னால யாருக்கும் கஷ்டமோ, சுமையோ வந்துடக் கூடாது. அதுக்கும் மேல அவர் வாழ்ந்த இடம், பழகின இடம்.... அவர் வீடு... இதான் நல்லதுன்னு எனக்குப் படுது....''

விஸ்வனாதனின் மனைவி ஆற்றமாட்டாமல் கூறினாள்.

''என்னமோ போங்க. பணத்தப் பிடுங்கிட்டுப் போயிட்டாங்கன்னு சொல்றீங்க. அப்புறம் வந்துடுவாங்கங்கிறீங்க. போன பணம் நாளைக்கு வந்துருமா?''

திடீரென்று குரலில் ஆவேசம் ஏறக் கேட்டாள் வசுமதி.

''நாளைக்கு எனக்கொண்ணுன்னா அவங்க உடனே வருவாங்க. அவங்க உரிமை அது. நீங்க வருவீங்களா? பத்து நிமிஷம் யோசிச்ச பின்னாலதான் நீங்க வருவீங்க. எத்தனை நாளைக்குத்தான் நண்பனோட மனைவின்னு பார்க்க முடி யும். எல்லாத்துக்கும் ஒரு எல்லை இருக்கு. அதை மீறி உங்களால உள்ள வர முடியமா, சொல்லுங்க!''

பயந்து போனான் விஸ்வனாதன்.

''சரி! விடுங்க! கோவம் வேணாம்!''



கொஞ்சம் புழுக்கமாக ஆகி விட்டது. தேவையின்றி மூக்கு நீட்டி விட்டோமோ என்ற கூச்சம்...

''காப்பி கொண்டா!''

கூச்சம் மறைக்க மனைவியை விரட்டினான்.

காப்பி குடித்து விட்டுக் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தார்கள்.

''தப்பா ஏதும் பேசியிருந்தா மன்னிச்சுக்குங்க. நான் இங்க வந்ததே அவர் ஃபோட்டோ ஒண்ணு வாங்கிப் போவலாம்னுதான். ஆனா ஏதேதோ பேசி...''

''பரவாயில்லை. மனசு விட்டுப் பேசிடறது நல்லதில்லையா?''

தலைகுனிந்து மௌனமாய் அமர்ந்திருந்தாள் வசுமதி.

''அவன் ஃபோட்டோ நிறைய இருந்திச்சே வீட்ல?''

''அள்ளிட்டுப் போயிட்டாங்க! அவர் சட்டையும், செருப்பும் தவிர....''

''அப்படியென்ன வன்மம் உங்க மேல...?''

''அவங்க பிள்ளையைக் கல்யாணம் முடிஞ்சவுடனே சாகடிச்சது என் ஜாதகக் கோளாறாம். ஜாதகம், ஜோஸ்யம்னு ஜென்ம விரோதியாக்கிட்டாங்க என்ன...''

பழைய டிரங்க் பெட்டிகளைத் தும்மல் நெடியுடன் கிளறிக் கிளறிப் பார்த்தான் விஸ்வனாதன். எப்போதோ கபடி விளையாடப் போன போது பூதலூரில் எடுத்தது. நடுநாயகமாக உதடு விரியச் சிரித்துக் கொண்டு அன்பழகன். போட்டோவைக் கொடுத்தான். விஸ்வனாதனுக்குச் சிரிப்புடன் அன்பழகனைப் பார்த்ததுமே மனசு பிசைய ஆரம்பித்து விட்டது.

''குரூப் போட்டோத்தான் இருக்கு. பரவாயில்லையா?''

சலனமில்லாமல் 'அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''போதும்!'' என்றாள்.

அன்பழகன் மறைவால் அவள் நொறுங்கிய நொறுங்கலின் மொத்த பரிமாணத்தையும் ஒரு சிறு கீழுதட்டுக் கடிப்பினால் மென்று விழுங்கி விட்டு நீர் படர்ந்த கண்களுடன் சொன்னாள்.

''வயித்துல வளர்ற அவர் குழந்தை நாளைக்கு அப்பா யார்னு கேட்டா காட்டறதுக்கு அவரோட நிழலாவது வேணுமே?''

உங்களது உயரம், உள்ளத்தின் உயரம்!

திருவள்ளுவர் ஒரு பள்ளிக்கூட இலக்கிய மன்ற விழாவுக்குப் பேசப் போனார்... ஒரு கற்பனைதான்! மாணவர்களை ஒரு கேள்வி கேட்டார்:

''தாமரைப் பூவின் உயரம் என்ன?''

ஒருவன் மற்றவனைப் பார்த்தான். அவன் அடுத்தவனைப் பார்த்தான். இது மாணவர்கள் டெக்னிக். அடுத்தவனைப் பார்த்து விட்டால் கேள்வியைத் தூக்கி அவன் தலை மேல் போட்டதாக அர்த்தம்!

ஒரு மாணவன் உத்தேசமாகச் சொன்னான்: ''தாமரையின் உயரம் இரண்டரை அடி.''

திருவள்ளுவர் கேட்டார்: ''ஏன் நாலடி இருக்காதோ?''

பளிச்சென்று பையன் சொன்னான்: ''வைச்சுக்குங்க... எனக்கென்ன? அது என்ன எங்க வீட்டுத் தாமரையா? உங்க வீட்டுத் தாமரையா?''

மாணவர்களோடு சேர்ந்து வள்ளுவரும் சிரித்தார். ஆனால், ''ஒருவருக்கும் உண்மை தெரியவில்லையா?'' என்று வருத்தத்தோடு வினவினார்.

ஒரு புத்திசாலிப் பையன் எழுந்து சொன்னான்: ''ஐயா, உங்கள் கேள்வி தவறு. தாமரைக்கு என்று ஏது உயரம்? தண்ணீரின் உயரம், தாமரையின் உயரம். தண்ணீர் மேலே போகப் போகத் தாமரை மேலே போகும். தண்ணீருக்கு மேலே இருப்பதுதான் தாமரையின் இலட்சியம்.''

திருவள்ளுவர் மகிழ்ந்து போனார்: ''சபாஷ்... வாழ்க்கையில் உன்னுடைய உயரம் என்ன?''

மாணவன் சொன்னான்: ''என்னுடைய உயரம் என் எண்ணத்தின் உயரம்.''

''வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.'' என்று உற்சாகமாகக் குறள் உரைத்தார் திருவள்ளுவர்.

என்னைச் செயற்கையாக யாரும் உயர்த்தி விட முடியாது. என் உயரம் என் எண்ணத்தைப் பொறுத்தது. இது சத்தியம்.

பெரிய இடங்களில் தகுதி அற்றவர்களை உட்கார வைத்தாலும் நல்ல எண்ணங்கள் இல்லை என்றால், அங்கே அவர்களால் நீடிக்க முடியாது. பெரிய தலைவர்களாகச் சிலரைப் போஸ்டர்களாலும் கட் அவுட்டுகளாலும் தூக்கி நிறுத்தினாலும் வலுவான எண்ணங்கள் இல்லாதவர்கள், தலைமை நிலைகளை இழப்பது உறுதி.

அந்த எண்ணங்களின் பிறப்பிடம், இருப்பிடம், ஏன் இறப்பிடம் எல்லாமே மனம்தான். அதைப் பொறுத்தே உயர்வு. உள்ளத்தனையது உயர்வு.

உலகில் உருவான எண்ணங்களிலேயே உயர்வான எண்ணம், கடவுள் என்ற எண்ணம். அதன் தூய்மை, ஆற்றல், பெருமை எல்லாமே எல்லையற்றவை. காலத்துக்கும் பரிமாணங்களுக்கும் சொற்களுக்கும் அப்பாற்பட்ட, எல்லையற்ற ஒன்றை, நமது உள்ளத்தில் அடக்கி வைக்கலாம் என்ற சிந்தனையே எவ்வளவு உயர்வானது! உள்ளம்தான் கடவுள் குடியிருக்கும் இடம் என்ற கருத்தில், 'மனத்தகத்தான் தலைமேலான்,' 'நினைப்பவர் நெஞ்சமே கோயிலாகக் கொண்டான்,' 'உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்' என்றெல்லாம் ஞானிகள் மொழிந்தனர்.

இதயத்தில் எதைத்தான் வைப்பது என்பதில் இளைஞர்கள் தெளிவுடன் இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து, அப்பா இரும்பு பீரோ வாங்கி வந்து வீட்டில் வைத்தார். ஏதோ காரியமாகச் சென்றவர், மாலை வீடு திரும்பி பீரோவைத் திறந்தார். பழைய செருப்பு, தேய்ந்த விளக்குமாறு, வண்ண ஜாலம் காட்டும் எண்ணெய்ப் பிசுக்கடைந்த சட்டிப் பிடித் துணி, உடைந்த அலுமினியக் கிண்ணம் என்று உள்ளே வைத்திருந்தால் அந்தப் பெற்றவன் வயிறு எப்படி எரியும்?

விலை மதிப்பில்லாத இந்த இதயத்தைக் கடவுள் கொடுத்தார். அதில் ஒழுக்கம் கெட்ட ஒரு சிலரை உள்ளே வைத்திருப்பது

சுகிசிவம்

தகுமா? களவு, பொய், காமம் இவற்றைக் கடைப்பிடித்து வாழும் சில தலைவர்களை இதயத்தில் வைத்துப் பூசிக்கிறேன் என்றால், இரும்பு பீரோவைத் திறந்த, பெற்றவன் வயிறு எரிந்தது போல், படைத்தவன் மனதும் பற்றி எரியாதா?

அரசியல் அழுகல்களையும், சினிமாச் சொத்தைகளையும் இதயத்தில் இருந்து அப்புறப்படுத்துங்கள். 'இறைமை, இறைவன்' என்ற தூய எண்ணத்தை இதயம் முழுவதும் நிரப்புங்கள். உள்ளத்தின் உயரமே உங்கள் உயரம் -- மறவாதீர்கள்.

உள்ளத்தை வைத்தே உங்களை உலகம் மதிப்பிடுகிறது. நாள்தோறும் சிவபெருமான் மீது, ஒரு கல்லை விடாமல் எறிந்தார் சாக்கியர். அவர் நாயனார் என்று மதிக்கப்பட்டார். சிவ பெருமான் மீது ஐந்து மலர்களை வீசினான் மன்மதன். அவன் எரிக்கப்பட்டான். ஏன்? காரணம், இரண்டுக்கும் பின்னால் இருந்த மனம்.

சிவ பெருமானை வணங்க நினைத்துக் கல்லை எறிந்தார் சாக்கியர். அந்தச் சிவனைக் காம வயப்படுத்தமலர்களை வீசினான் மன்மதன். செயல்களின் பின்னால் உள்ள மனம்தான் அளக்கப்படுகிறது.

ஓர் ஆற்றங்கரை வழியே இரண்டு பிஞ்சுத் துறவிகள் நடந்து போனார்கள். அப்போது ''வயது பதினாறு இருக்கும்'' என்ற பாரதியின் வாக்குப் போலச் சதையால் எழுதப்பட்ட கவிதை ஒன்று, தண்ணீரில் தவறி விழுந்து விட்டது. ''உதவி! உதவி!'' என்று அலறியபடி தண்ணீரில் மூழ்கினாள் அவள்.

முதல் துறவி யோசித்தார்: 'ஓடிப் போய்க் காப்பாற்றலாம். ஆனால் அவளைத் தொட வேண்டி வருமே...? காவி கொடுக்கும் போதே திருமடத்தின் தலைவர், 'பெண்களைக் கனவிலும் நினைக்காதே... எப்போதும், எந்த நிலையிலும் தொடாதே' என்று எச்சரித்தாரே!' என்று சிந்தித்துத் தயங்கினார்.

அடுத்தவர் இதையெல்லாம் நினைக்கவே இல்லை. ஆற்றில் பாய்ந்து, இளம் பெண்ணைக் கரைக்குக் கொண்டு வந்து, முதல் உதவி அளித்துக் கண் திறக்க வைத்தார். கண் விழித்தவள், ''நன்றி'' என்றாள். ''நல்லது தாயே, வருகிறேன்'' என்று புறப்பட்டார்.

இதையெல்லாம் பார்த்த முதல் துறவி, திடுக்கிட்டார். ''இளம் பெண்ணை எப்படித் தொடலாம்? தொட்ட போது ஒரு



மாதிரியாக இருந்திருக்குமே? ஐயய்யோ! தப்பு! தப்பு!'' என்றார்.

இரண்டாமவர் பேசவில்லை. 'ராம் ராம்' என்றபடி நடந்து கொண்டே இருந்தார். முதல் துறவி விடுவதாக இல்லை. ஆசிரமத்தை நோக்கி நடந்த மூன்று மைல் தூரமும் இதைப் பற்றியே புலம்பினார்.

ஆசிரமம் வந்த பிறகும் புலம்பல் நிற்கவில்லை. குரு தேவரிடம், ''பெண்ணைத் தொட்டான்; தோளில் தூக்கினான்; தலைக்கு மேலே சுழற்றினான்'' என்றெல்லாம் புகார் செய்தார்.

'ஆசிரமத்தை விட்டு வெளியே போ' என்று முதல் துறவிக்கு உத்தரவு வந்தது. ''ஐயய்யோ, அவனல்லவா அவளைத் தொட்டுத் தூக்கினான்? நான் என்ன தவறு செய்தேன்?' என்று கதறினார் அவர்.

குரு சொன்னார்: ''அவன் அந்தப் பெண்ணைத் தொட்டுத் தூக்கியது உண்மை. ஆனால் ஆற்றங்கரையிலேயே இறக்கி விட்டு விட்டான். நீதான் அவளை ஒரு மணி நேரம் - மூன்று மைல் தூரம் - சுமந்து ஆசிரமத்துக்குள் கொண்டு வந்திருக்கிறாய். அவன் உடம்பால் சுமந்தான். நீதான் உள்ளத்தால் நீண்ட நேரம் சுமந்த பாவி.''

உள்ளத்தின் உயரம்தான் உங்கள் உயரம் என்று வள்ளுவர் சொன்னது சரிதானே!

(இன்னும் சொல்வேன்)


விரக்தி
மருத்துவமனைச்
செலவுகளுக் குப்
பணம்
எங்கிருந்து கிடைக்கப்
போகிறது என
புரியாமல் இருக்கும் நிலை



உமக்கே தந்தேன்'' என்றான்.

செய்யப் போகிற புண்ணியம் ஏது? அந்தணருக்குப் புண்ணியங்களைத் தருவ தால் வரும் எதிர்காலப் புண்ணியம் உட்பட 'எல்லாம் தந்தேன்' என்று தருகிறான்.

தன்னைப் பலவீனப்படுத்த, கொல்ல, கண்ணன் யாசகம் கேட்கிறான் என்று வருத் தப்படவில்லை அவன் மனம். 'கடவுளே தன்னிடம் கையேந்துகிறார்! அவருக்குத் தானம் தருவது எத்தனை உயர்ந்த வாய்ப்பு!' என்று மகிழ்கிறது! இன்ப துன்பங்களுக்கு மனம்தானே காரணம். மனம் எப்படி அர்த்தம் செய்து கொள்கிறதோ அதுதான் வாழ்க்கைக்கு அர்த்தம்.

புண்ணியங்களைத் தாரை வார்த்துக் கொடுக்கத் தண்ணீர் வேண்டுமே! தானம் கொடுப்பதானால் மனைவி ஒரு உத்தரணி தண்ணீர் தெளிப்பது மரபல்லவா? ஒவ் வொரு மனிதனின் இடதுபாகமும் மனை விக்கு உரியது. எனவே இடது பகுதியில் இதயத்தில் பதிந்திருந்த அம்பை அசைத் தான் கர்ணன்.. குருதி வழிந்தது... இரத்தத்தைக் கையில் வாங்கி, கண்ண பெருமான் கைகளில் தாரை வார்த்தபடி புண்ணியங்களைத் தானம் கொடுத்தான்.

கடவுள் கை தாழ்ந்தது. மனிதன் கை உயர்ந்தது. மனசுதான் காரணம். கொடுக் கிற எண்ணம் உயர்ந்தது. வாங்குகிற எண்ணம் தாழ்ந்தது. சொட்டுச் சொட்டாகக் குருதி கண்ணபெருமான் கைகளில் பட்டதும் தாமரைக் கண்ணன் இதழ்களைப் போலவே இதயமும் சிவந்தது. குறுநகை தவழக் கேட்டான்:

''கர்ணா... உனக்கு வேண்டிய வரங்களைச் சொல்... என்ன என்ன வேண்டுமோ கேள்'' என்றான் உற்சாகமாக. வாங்க வந்தவன் கொடுப்பதாகச் சொல்வது விந்தை அல்லவா! கொடுத்துப் பழகிய கர்ணன் இரத்தம் கையில் பட்டதும், வாங்க வந்தவனுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது! வலிமையான எண் ணங்கள் எதிரே இருப்பவர்களையும் ஊடுருவும். அவர்களையும் தூண்டும்.

கர்ணன் கேட்டான்:

''இறைவா... இனிமேல் பிறவி வேண் டாம்.. இன்னொரு பிறப்பு உண்டு என்பது விதி என்றால் அப்போதும், இல்லை என்று சொல்லாது கொடுக்கிற மனம் எனக்கு வேண்டும்.''

கொடுப்பதற்குத் தேவையான பணம் கேட்கவில்லை; மனம்தான் கேட்டான்! மனசுதான் எல்லாம்!

(இன்னும் சொல்வேன்)

மாறும் முடிவுகள்

மோட்டார் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு, தலையை 'ரியர் வியூ' கண்ணாடியில் சரிபார்த்தபடி வங்கியினுள் நுழைந்தான் சந்தர்.

நாளை ஊருக்குச் செல்ல வேண்டும்.

அப்பா அவசரமாக மூவாயிரம் ரூபாய் கேட்டு எழுதியிருந்தார்.

வங்கி பதினோரு மணியின் சுறுசுறுப்பில் இயங்கிக் கொண்டிருந்தது.

கணக்குப் புத்தகத்தையும், பணம் எடுக்கும் 'வித் ட்ராயல்' ஸ்லிப்பையும் கவுண்டரில் கொடுத்து டோக்கன் பெற்றுக் கொண்டான்.

யதேச்சையாக வங்கியின் இடதுபுறம் திரும்பினான்.

''ஹேய், பானு!'' - தன்னையுமறியாமல் கூவிவிட்டான்.

அதே நேரத்தில் பானுவும் திரும்பிப் பார்க்க அவள் கண்களிலும் வியப்பும், மலர்ச்சியும்.

அவசரமாய் வங்கியின் உட்புறத்திலிருந்து வெளியே வந்தாள்.

''சந்தர்... நீயா?''

''நான் கேட்க வேண்டிய கேள்வி இது. என்ன அதிசயம்? நீ எப்படி இங்கே? கடந்த மூணு வருஷமா நான் இந்த வங்கிக்கு வரேன். உன்னைப் பார்த்ததே இல்லையே?''

''போன வாரம்தான் இந்தக் கிளையிலே சேர்ந்தேன். முதல் போஸ்டிங்கே இங்கேதான்.''

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த சந்தோஷத்தில் சில வினாடிகள் திளைத்தனர்.

''நான் பிரைவேட் கம்பெனியில் அக்கவுன்ட்ஸ் மானேஜரா இருக்கேன். லாட்ஜ் அறை வாசம். ஹோட்டல் சாப்பாடு.''

''நான் கூட வேலைக்குப் போகும் பெண்கள் விடுதியிலேதான் தங்கியிருக்கேன். பீமநகரில்....''

''அப்பா, அம்மால்லாம்.....'' என்று இழுத்தான்.

''நல்லா இருக்காங்க. மாமா, மாமி சௌக்கியமா?''

''ம்! அப்பா கேட்டார்னுதான் பணம் எடுக்க வந்தேன்.... எத்தனை வருஷமாச்சு உன்னைப் பார்த்து!''

''எனக்குக் கூட சந்தோஷமா இருக்கு சந்தர். தேவையில்லாத ஒரு குழப்பத்துல பிரிஞ்சுட்டோம்.''

சில கணங்கள் பழைய நினைவுகளில் ஆழ்ந்தனர். சட்டென்று வேலை நினைவுக்கு வர, ''நான் வரேன் சந்தர்; அப்புறம் பார்க்கலாம்'' என்றாள்.

எங்கே, எப்போ என்று உறுதிப்படுத்திக் கொண்டுதான் விடை பெற்றான் சந்தர்.

அது ஒரு ஸ்டோர் மாதிரியான குடியிருப்புப் பகுதி.

பசுபதியின் வீடும், கந்தசாமியின் வீடும் அடுத்தடுத்து இருந்தன.

பத்து வருடங்களாக இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் நட்பு ஆல்போலத் தழைத்து வளர்ந்திருந்தது.

ஒருவர் வீட்டுக்குத் தெரியாமல் மற்றொருவர் வீட்டில் எந்த ஒரு நிகழ்ச்சியும் நடந்ததில்லை.

ஆனால் இதெல்லாம் அந்த ஒரு சம்பவம் வரைதான்....

''டேய் சந்தர், எங்கேடா கிளம்பிட்ட?''

''மணி வீட்டுக்குப்பா.''

''சீக்கிரம் திரும்பிடு. நானும், கந்தசாமியும் வெளியிலே போறோம். அம்மாவும், மாமியும் கூட வராங்க. பானு தனியா இருப்பா.''

''சரிப்பா.''

''அவ கூட உன்னிடம் பாடத்துல ஏதோ சந்தேகம் கேட்கணும்னா. பரீட்சை வேற வருது. நீயும் ஊரைச் சுத்தாமப் படி. என்ன?''

தலையாட்டினான். சந்தர் பி.காம் மூன்றாம் ஆண்டு படிக்கிறான். பானுமதி பி.காம் முதல் வருடம்.

முக்கியமான நோட்ஸ் ஒன்றை வாங்கிக் கொண்டு திரும்பினான் சந்தர்.

''ஏய், என்ன படிக்காமல் டீ.வி பார்க்கறே?'' - பானுவை அதட்டியபடி அவள் போர்ஷனுக்குள் நுழைந்தான்.

''உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன். அக்கவுண்டன்சியிலே ஒரு ப்ராப்ளம் தெரியலே. சொல்லிக் கொடேன்.''

''முதல்ல டீ.வியை அணை. இப்படி வந்து உட்காரு'' என்று அருகிலிருந்த இருக்கையைக் காட்டினான்.

நோட்டில் அவன் அந்த ப்ராப்ளத்தைப்

கிருஷ்ணா

போடப்போட பாடத்தில் கவனமாய் ஆழ்ந் தனர் இருவரும்.

''மக்கு, இப்படியா சொன்னேன்'' என்று தலையில் உரிமையுடன் குட்டினான் சந்தர்.

''ஏய், என்ன அடிக்கற? வாத்தியார் அடிச்ச காலமெல்லாம் போச்சு. இப்ப மாணவர்கள் அடிக்கற காலம்,'' என்று முறைத்தாள்.

அப்போது மின் இணைப்பு துண்டிக்கப் பட்டு இருட்டாகியது.

''அடச்சே!'' என்றான் சந்தர். ''சரி, நான் வீட்டுக்குப் போயிட்டு லைட் வந்தப்புறம் வரேன்.''

சட்டென்று அவன் கரத்தைப் பற்றினாள். ''என்னைத் தனியா விட்டுட்டுப் போகாதே சந்தர்... ஊரே கெட்டுகிடக்கு.''

''பயந்தாங்குளி'' என்று சிரித்தான். சற்று விலகி அமர்ந்தான்.

அந்தச் சமயம் பார்த்துத்தானா கிச்சாமி யும் அவர் மனைவியும் வர வேண்டும்?'' ஹலோ! வீட்டில யாரு?'' என்றார் கிச்சாமி.

''நானும் பானுவும்தான் மாமா. பாடம் படிச்சிட்டிருந்தோம். சமயம் பார்த்து கரண்ட் கட்.''

''ஓ! பாடமா! ஆமாம் பரீட்சை கிட் டத்துல வரதுல்ல!''

''எங்க, அம்மா, அப்பா எல்லாம்...?'' என்றாள் கிச்சாமியின் மனைவி வைதேகி.

''அவங்கள்ளாம் வெளியில போயிருக் காங்க... வர ஒரு மணி நேரமாகும். உக்காருங்களேன்'' என்றாள் பானு. ''மோடா, நாற்காலி எங்க இருக்குன்னு தான் தெரியலே!''

''வெளியில போயிருக்காளா...? வர ஒரு மணி நேரம் ஆகுமா... ரொம்ப சௌகரி யமாப் போச்சு...'' என்று மறுபடி கிண்ட லடித்தார் கிச்சாமி.

''அப்பா அம்மா வந்தா நாங்க வந்து போனோம்னு சொல்லுங்க'' என்றாள் வைதேகி. இருவரும் வெளியேறினர்.


இந்தத் தற்செயலான நிகழ்வு தங்கள் வாழ்க்கையில் ஒரு புயலையே உருவாக்கும் என்று பானுவோ சந்தரோ நினைக்கவேயில்லை. மூன்றாம் நாள் மாலை இருவரது பெற்றோரும் அவர் களைக் கூப்பிட்டு வைத்து ''உங்களுக்குக் கல்யாண ஏற்பாடு பண்ணலாம்னு இருக்கோம்'' என்றதும் திகைத்தார்கள்.

''ஏன் இந்தத் திடீர் முடிவு?'' - சந்தர்தான் முதலில் சுயநிலைக்கு வந்து கேட்டான்.

''ஏன்னா -- ஊரெல்லாம் உங்களைப்



அருள்வாக்கு



பல தெய்வங்கள் ஏன்?

ஜன ஸமூஹத்துக்குப் பொதுவாக அநுபவங்களை நானா விதமான ருசி பேதங்களில் நுகர்வதுதான் இயற்கை குணம். ஆகாரம் பல சுவைகளில் இருக்கணும். ஒன்றே இருந்தால் திகட்டிப் போகிறது. கதை, நாடகம் என்றாலும் பல ரஸங்கள் இருக்கணும். பாட்டு என்றால் பல ராகங்களில் தாளங்களில் இருக்கணும். விறுவிறுப்பாகவும் வேணும்; விளம்ப மாகவும் வேணும். உபாஸனை என்று வரும் போது இப்படி நானா தினுஸாக உள்ள வைசித்ரியம் (விசித்ரத் தன்மை) வேண்டும். முடிவிலே ஸமாதி யோகம், வேறே கலப்பேயில்லாமல் ஒரே ஒரு உணர்வாக— 'ஏகப் பேருணர்வாக' என் பார்கள்– அப்படி மனஸின் ஆட்டமே இல்லாமல் ஆக வேண்டும் என்றாலும், அது எங்கேயோ, எப்போதோ, எவ ருக்கோதான் ல பிக்கிற ஸ்திதி. அந்த ஸ்திதிக்குப் போவதற்கே, அலை பாய்கிற இந்த மனஸை வைத்துக் கொண்டுதான் உபாஸனையை ஆரம்பிக்கும் போது, அலை அலையாகப் பாய்ந்தாலும், பாய்கிறதெல்லாம் நம்மை ஸம்ஸாரத்தில் மூழ்கடிக்கிற அலைகளாக இல்லாமல், ஏதோ ஒரு தினுசில், ஏதோ ஒரு அளவில் ஈச்வர ஸ்மரணத்தில் நனைப்பதாக இருக்கட்டும் என்றுதான் வைசித்ரிய ருசி கொண்ட மனஸுக்குப் பிடித்த மாதிரியே ஏக பரமேச்வரன் பல திவ்ய ரூபங்கள் எடுத்துக் கொண்டு பலவிதமான பலன் தருவது. பூஜா பத்ததியையும் பலவிதமாகக் கொடுத்து, ஒன்றுக்கு (ஒரு தெய்வத்துக்கு) வில்வம், ஒன்றுக்குத் துளஸி, ஒன்றுக்கு வெல்லச் சீடை, ஒன்றுக்குக் கொழுக்கட்டை என்று வைத்திருப்பதெல்லாம். இதுதான் பெரும் பாலான ஜனங் களுக்கு அதாவது 'வழக்கு' என்பது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சார்ய ஸ்வாமிகள்.

பத்திப் பேச ஆரம்பிச்சாச்சு...''

கிச்சாமி மாமா வைதேகி மாமியின் பேச்சில் தொனித்த எகத்தாளத்துக்கு இப் போது அர்த்தம் புரிந்தது.

''இது அநியாயம்'' என்றான் சந்தர். ''கிச்சாமி என்ற ஒரு விகார மனம் கொண்டவனுக்குப் பயந்து, அவன் வதந்தி களைப் பரப்புகிறான் என்பதற்காக, நான் ஒரு காரியம் பண்ண முடியாது. ரெண் டாவது நான் ஸி.ஏ. முடிக்கிறவரை கல்யா ணம் செய்துக்கறதா இல்லே...''

சந்தர் உறுதியாய் மறுக்க, பானு ரெண் டுங்கெட்டான் வயதாய் விழிக்க, அவர்கள் பெற்றோர்களுக்குள் விரிசல் விழத் தொடங் கியது.

அடுத்த ஒரு மாதத்தில் இரண்டு குடும் பங்களும் வேறு, வேறு திசைகளில் இடம் பெயர்ந்தன.

ஐந்து, ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. சந்தர் தான் எண்ணிய படியே ஸி.ஏ. படித்து இதோ அக்கவுண்ட்ஸ் மானேஜராய் இருக்கி றான்.

மறுபடி சந்தித்தார்கள்.

''பானு, நான் கல்யாணத்தை அப்போ மறுத்தது சரிதானே. உனக்கு ஒண்ணும் கோபமோ, பாதிப்போ இல்லையே?''

''சேச்சே! கல்யாணத்தைப் பற்றிய எண்ணமே என் மனசுல அப்போ இல்லை. நீ மறுத்தது எனக்கு எவ்வளவு பெரிய நிம்மதியைக் கொடுத்தது தெரியுமா?''

''நல்லவேளை, எனக்கு உன்னைப் பற்றித்தான் கவலையா இருந்தது, பானு. இந்த அதிர்ச்சியில உன் வாழ்க்கை பாழாயிடப் போகுதேன்னு.''

''அன்றைக்கு நீ உறுதியா இருந்ததாலேதான் இப்ப நாம ரெண்டு

பேருமே சொந்தக் காலில் தன்னம்பிக்கையோடு நிக்கறோம்.''

கோயிலின் வெளிப் பிராகாரத்தில் இருவரும் அமர்ந்திருந்தனர். ''ஆனால் இத்தனை வருஷங்களிலே, உன்னை நான் ஒரு நாள் கூட மறந்ததில்லே பானு'' அவள் கண்களை ஊடுருவினான்.

இருவர் பார்வையும் கவ்வி நின்று பிரிந்தன.

''இதுக்கு என்ன அர்த்தம் சந்தர்?''

''இது, எப்போ எப்படி ஏற்பட்டதுன்னு தெரியலே பானு. ஒருவேளை சிறு வயதிலிருந்தே மனசுக்குள்ளே பதிஞ்சு நாம் பிரிய நேர்ந்தபோது வெளிப்பட்டதா... புரியலே. ஏன் பானு, நம்ம பெற்றோர் அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஆசைப் பட்டதை நாம ஏன் இப்ப யோசிக்கக் கூடாது?''

பானு தலை குனிந்தாள்.

''என்ன பானு?''

''பெண்கள் எல்லாவற்றையும் வாய் விட்டுச் சொல்லுவாங்கன்னு எதிர்பார்க்காதே சந்தர்.''

''யா...!'' என்று சந்தோஷக் கூச்சலிட்டான். ''நாளைக்கே நாம ரெண்டு பேரும் நம்ம வீட்டுக்கு, இதைப் பற்றி எழுதிடுவோம், என்ன?''

ஆமோதித்தாள் பானு. ''ஆனால்....''

''ஆனால் என்ன பானு?''

''ஒருவேளை அவங்க இப்ப நம்ம யோசனைக்குச் சம்மதிக்கலேன்னா....? இப்ப சூழ்நிலையே மாறிடிச்சே சந்தர்?''

''அன்னிக்கு அவங்களை எதிர்த்த மாதிரியே இப்பவும் எதிர்ப்போம். அன்று போலவே இப்பவும் அந்த எதிர்ப்பில் உறுதியா இருப்போம்!''

''நல்ல வேடிக்கை; சிரிக்கிறதா அழறதான்னே புரியலை!''

''அன்னிக்கு நான் பெற்றோரை எதிர்த்ததிலே ஒரு நியாயம் இருந்தது பானு. இன்னைக்கு மறுபடி எதிர்க்க நேர்ந்தால் அதிலும் நியாயம் உண்டு'' என்றான் சந்தர். கோயில் மணி ஒலித்தது. சிலிர்த்தனர்.

நல்ல வேளையாகப் பானுவோ சந்தரோ வாதாடி எதிர்க்கத் தேவையில்லாமல் பெற்றோர் இரு தரப்பிலுமே சம்மதம் தெரிவித்து விட்டனர்!

''இந்தப் பயலுக்குப் பானு பேரிலே ஒரு கண்ணுன்னு எனக்கு ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னாடியே தெரியும்! அன்னிக்கே நான் சொன்னேனா இல்லையா, கேட்டுப் பாருங்க! இந்தப் பெண்ணுக்கும் அப்பவே சந்தர்கிட்ட ஒரு இதுதான்!'' என்று அட்டகாசமாக ஆர்ப்ப ரித்துக் கொண்டு கல்யாண மண்டபத் துக்குள் நுழைந்தார் கிச்சாமி. ஒரு வித்தி யாசம். இப்போது பானுவுக்கும் சந்தருக் கும் அவர் மீது கோபம் வரவில்லை. சிரித்து மகிழ்ந் தார்கள்!

மதிப்பிற்குரிய மனைவி



சாருப்ரபா சுந்தர்

கதவைத் திறந்ததும் தென்பட்ட மனிதர்கள் கை குவித்தார்கள்: ''வணக்கம் புரொபஸர் சார்.''

'வணக்கம்' என்றேன் நான். சொல்லும் போது என் புருவங்களுக்கு மத்தியில் ஒரு மானசீகக் கேள்விக்குறி அமைந்து, அடுத்தடுத்த வினாடிகளில் அழிரப்பரால் அந்த கேள்விக் குறி அழிக்கப்பட்டு, நினைவுக்கு வந்து விட்டது - அவர்கள் எதிர்வீட்டு மணவாளன் சாரின் உறவுக்காரர்கள். மற்ற இருவர்...

''வாருங்கள்.''

உள்ளே வந்து அவர்கள் அமர்ந்ததும், நடுவில் எதிரில் நான். ஐஸ் பெட்டி திறந்து, வெளிச்சம், நெளியும் பனி வளையங்களுக்கு மத்தியில் இருந்து குளிர்ப்பதனம்.

''வெகு நாட்கள் ஆயிற்றில்லையா நீங்கள் வந்து போய்?''

''இருக்கும்'' - என்றார் ஒருவர்.

''ஆமாம். மணவாளன் சம்சாரம் இறந்த போது வந்து பார்த்தது. அந்த இரண்டு மூன்று நாட்கள் கூட்டம் அதிகம் என்று உங்கள் வீட்டில்தானே தங்கிக் கொண்டோம்? தாராள மனசு சார் உங்களுக்கு'' என்றார்கள் குளிர்ப்பதன கண்ணாடி டம்ளரை மோடாவில் வைத்தபடி.

''அதில் என்ன பெரிசாய்? மனிதாபிமானம். அவ்வளவுதான்.''

''அதற்கும் மனசு இருக்க வேண்டுமே.''

அவர்களின் புகழ்ச்சி அட்சதையைச் சுகமாய்ச் சூடிக் கொண்டு கேட்டேன், ''என்ன திடீர் வருகை?''

எதிரில் இருந்த மீசைக்காரரின் ஆதாம் ஆப்பிள் அசைந்தது.

''ஆமாம் ஐயா. மண வாளன் சம்சாரம் இறந்து கிட்டத்தட்ட ஏழு மாசம் ஆயாச்சு. அவருக்கும் வயசு நாப்பது தொடலை. வாழ்க்கையின் இன் னும் எத்தனையோ மிச்ச வருடங்கள். துணை வேண்டாமா?'' அதற்காகத்தான் பேச வந்திருக்கோம். நீங்களும் உடன் வந்தால் நன்றாக, உதவி யாக இருக்கும்.''

''அது, அது வந்து..'' - தடுமாறினேன் நான். ''அவர் மனைவி இறந்து இன்னும் ஒரு வருஷம் கூட முடியலை. அதற்குள் கல்யாணப் பேச்சு... இங்கிதமாக இருக் குமா? அதுவும் இல்லாம...''

''துக்க நாட்களுக்குள்ள சுபகாரியம் பேசினா நல்லதுன்னு ஒரு நம்பிக்கை உண்டு. இப்ப ஆரம்பிச்சா, சம்மதிக்க வச்சு, பெண் தேடி, எளிமையாக் கல்யாணம்னு நாலைஞ்சு மாசம் ஓடிடாதா? அதுக்குள்ள முதல் வருஷ துக்கம் முடிஞ்சிடுமே!''

''இருக்கலாம். ஆனா நான்...''

''என்ன சார் தயங்கறீங்க? உங்க வீட்டில் ஆட்சேபணை எதுவும் சொல்லுவாங் கன்னா? பட்டணத்து ஆட்கள் அக்கம்பக்க விவகாரங்கள்ல அதிகம் தலையிட மாட் டாங்கதான். ஆனா உங்க நல்ல மனசு, உத வும் சுபாவம்னு.. மறுக்க மாட்டீங்க. அவங் களைக் கூப்பிடுங்களேன். நாங்களும் ஒரு வார்த்தை கேட்டுக்கறோம்.''

''பள்ளிக்கூட விடுமுறை. உறவுக்காரங்க வீட்டுக்குப் போயிருக்காப்பல. நாளை மறு நாள் வந்திடுவாங்க. இருந்தாலும் அவங்க தடுக்க மாட்டாங்க. அது இல்லை பிரச்னை. பேசறதுக்கு மணவாளன் பிடிகொடுப் பாரா?''

''ஓஹோ. அதை யோசிக்கறீங்களா? வாஸ்தவம்தான். மணவாளன் சம்சாரத்து மேல உயிரையே வச்சிருந்தவர்தான். லவ் மேரேஜ் ஆச்சே! பேசினா பிடிகொடுக்கறது சிரமம்தான். ஆனா அந்த விலாங்கு மீனை பிடிச்சு வழிக்குக் கொண்டு வர்றது படிச்ச மனுஷர் உங்களால் முடியும். எந்த வழி யிலும் சாக்கு போக்கு சொல்லக் கூடா துன்னு மணவாளன் பக்கம், அவர் சம்சாரம் பக்கம்னு எல்லா உறவு ஜனத்துலயும் ஒரொரு பிரதிநிதியா வந்திருக்கோம்.''

நான் யோசித்தேன்.

மணவாளனைப் பார்த்தே நாளாயிற்று. நான் காலேஜ், கமிட்டி, மிகுந்த நேரங்களில் மேடை, பட்டிமன்றம் என்று நேரம் போறாத மனிதன். அவரும் பிஸினெஸ், பிஸினெஸ் என்று ஈடுபடுத்திக் கொள்கிற மனிதர். சந்திப்பதே அபூர்வமாயிற்று இப் போது. பக்கத்து நகர நண்பர், வானொலி நிலைய அதிகாரி ஒரு நிகழ்ச்சிக்குத் தொடர்ந்து கேட்டுக் கொண்டார்: 'உதா ரணத்துக்கு இந்த தம்பதிகள்' - என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை படிக்க. அதற்கு மணவாளனை வைத்துக் குறிப்பிட்டு ஸ்கிரிப்ட் எழுதி அனுப்பியாயிற்று. ஒரு மரியாதை நிமித்தம் தெரிவிக்கக்கூட சந் திக்க முடியாமல்.

''அது சரி, நீங்க வந்தீங்க. நானும் தயார். பேச, மணவாளன் ஊர்ல இருக்கணுமே.''

''அதிருஷ்டவசமா இருக்கார். வெளியில போயிருக்கார். ரெண்டு மணி நேரத்துல வந்திடுவேன்னு வாசல்ல சீட்டு எழுதி வச் சிருக்கார். நாங்களும் ஒரு சின்ன வேலையை முடிச்சிட்டு வந்திடறோம்.''

மணவாளனைக் கிட்டத்தட்ட எட்டு வரு டங்களாகப் பழக்கம். அந்தப் பகுதிக்குச் சொந்த வீடு கட்டிக் கொண்டு முதலில், வந்தவர்கள் என்கிற ரீதியில் அறிமுகமாகி, நெருங்கி... குறிப்பாகப் பெண்களுக்குள்.

எங்கள் பகுதியில் அவருக்கு நிறைய புனைபெயர்கள் உண்டு. இளம் பெண்க ளுக்கு... மணவாளன் பெயரில்தான் பழமை. பார்க்க புதிய அழகுடன், முரட்டு புஜம், கண்களை நிமிர்த்தி கண்களைப் பார்க்கும் உயரத்துடன், நிறம், நடை என்று வசீகர சிகரம். ஆனால் மணவாளன் அநாவசிய பார்வை இல்லாமல் மிக நாக



- கரம்.

ரீகமாகக் கடந்து போய் விடுவார். மிஸ்டர் ஜென்டில்மேன்!

கல்யாணமான பெண்களுக்கு, அதற்கு முந்தைய அம்மா, பாட்டிமார் வகைய றாக்களுக்கு வரலட்சுமி புருஷன்!

மணவாளன் வாரத்தில் மூன்று நாள் பிஸினஸ் நிமித்தம் வெளியூர்ப் பயணம். அங்கிருந்து துவக்கத்தில் எங்கள் வீட்டுத் தொலைபேசியில் அழைத்து மனைவி யிடம் பேசிக் கொண்டிருப்பார். அவ்வளவு செலவழித்து, அதுவும் அரைமணி. முக் கால் மணி என்று பேச என்னதான் விஷயம் இருக்கிறதோ!

என் மனைவிக்குக் கூட இதில் ஆதங்கம் உண்டு.

''நீங்களும் இருக்கீங்களே, காலையில் முழுக்க இண்டு. சாயங்காலம் வந்ததும் வாரப் பத்திரிகைகள். கொஞ்சம் பேசு வம்னு இருக்குமா, பேப்பர்தான உங்கள் பெண்டாட்டி. ஹூம்ம்...''

இப்படிப் பல ஆண்கள், அந்தத் தெரு வில் மனைவிமார்களால் பற்பல விஷயங்க ளுக்கு வரலட்சுமி புருஷனால் இடிபட் டிருக்கிறோம். மனுஷன் அந்த அளவுக்கு உதாரண புருஷன்!

அதற்குத் திருஷ்டியாய் அமைந்தது மண வாளன் தம்பதிக்குக் குழந்தை இல்லை யென்பதுதான்.

வரலட்சுமி இந்தக் குறையை என் மனைவியிடம் தனியில் சொல்லி அழு திருக்கிறாள். தான் அழும் போது அணைத்து, சலிக்காமல் சமாதானப்படுத்தி, வார்த்தை சொல்லி... '' உனக்கு நான் குழந்தை. எனக்கு நீ குழந்தை. லீவ் இட்!'' என்று மணவாளன் சமாதானப்படுத்தி யதையும் வர்ணித்திருக்கிறாள்.

திடீர் விபத்தில் வரலட்சுமி மரணம்! நாங்கள்தான் தேடி வெளியூரில் இருந்த கணவனிடம், ஜுரம் என்று பொய் சொல்லி வரவழைத்து... வந்து சேர்ந்து, நிலைமை புரிந்து கதறின மணவாளனைப் பார்த்துக் கல்மனசும் உருகிப் போயிற்று.

மணவாளனுக்கு முன்பே அதிகம் பேசாத சுபாவம். இதற்குப் பிறகு அவர் மேலும் தன் கூட்டுக்குள் சுருக்கிக் கொண்டு, ஊருக்குப் போகையில் அல்லது மனைவி படத்திற்கு மலர்ச்சரம் வாங்க என வெளிப் படுகிற சமயத்தில் மட்டுமே மூன்று செகண்டு புன்னகை. பேசினால் பிடி கொடுப்பாரா?

தயங்கித் தயங்கிப் பேச்சை ஆரம் பித்தோம். அவர் இதை எதிர்பார்க்க வில்லை மாதிரி புரிந்தது. வெறும் உறவுக் காரர்கள் மட்டும் வந்திருந்தால் முகத்தில் அடித்த பதிலுடன் திருப்பி அனுப்பியிருக்க லாம். நான் என்பதால் உப்புக்குச் சப்பாணியாய் ஒரு பதிலாவது தெரிவிக்க முற்பட்டார்.

''வேண்டுகோள் தர்மசங்கடமானது தான். ஆனாலும் உங்க உறவுக்காரங்க ஆவ லும் நியாயமானதுதான். நாப்பது வயசு கூட ஆகலை உங்களுக்கு. மிச்ச வருடங் களில் உங்களுக்கு ஒரு பிடிப்பு வேண் டாமா?''

விரக்தியாய்ச் சிக்கன சிரிப்பு சிரித்தார் மணவாளன்.

''இருந்தது ஒரே பிடிப்பு. அதுவும் போயாச்சு. கல்யாணம், குழந்தைன்னு யோசிக்கக்கூட எனக்கு இஷ்டமில்லை. அந்த அளவுக்கா நாங்க வாழ்ந்திருக்கோம்? எட்டு வருஷத்தில நூறு வருஷ தாம் பத்தியம் சார். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சி, மனம் நோகாம, தோல்விகளைத் தாங்கி நம்பிக்கையூட்டி, ஒவ்வொரு கட்டத்தில யும் மேலும் நெருங்கி....''

''நிஜம் சார். மறுக்கலை. ஆனா யதார்த்தத்தில...''

''பிராக்டிகலா சொல்றேன் சார். தலையசைச்சுச் சம்மதம் சொல்ல அரை விநாடி ஆகுமா? ஆனா அது எங்க தாம்பத்திய வாழ்க்கையை, அந்த அன்னியோன்னியத்தை அர்த்தமில்லாம பண்ணிடுமே? என்னைப் பொறுத்தவரை பிடிப்புன்னா என் மனைவியோட நான் வாழ்ந்த நாட்களின் பசுமையான நினைவுகள் அப்படியே இருக்கு. அது போதும். அவள் சுவடுகள் மிச்சமிருக்கற இந்த வீட்டில், அவள் சுவாசிச்சு மிச்சமிருக்கற இந்த வீட்டுக் காற்றை சுவாசிச்சு... அது போதும் சார் எனக்கு...

எங்கள் முயற்சி தோல்வியாகி இரண்டு வாரங்களுக்குப் பிறகு பக்கத்து நகர வானொலி நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. அவர்கள் கேட்டு, முன்பு அனுப்பி இருந்த, 'உதாரணத்துக்கு இந்த தம்பதிகள்' - அப்ரூவ் ஆகி, நேரடி ஒலிபரப்புக்குப் படிக்க அழைத்திருந்தார்கள். அனுப்பி இருந்த பிரதியில் மேலும் சில அழுத்தமான வார்த்தைகளை அனுமதியுடன் சேர்த்து எழுதி, மனம் உருகப் படித்து முடித்தேன்.

பக்கத்தில் இருந்த ரெஸ்டாரண்டின் குளிர்ப்பதன டைனிங் அறை.

''ரொம்ப பிரமாதம் புரொபசர், உங்கள் கட்டுரை. நிஜத்தில் இப்படியெல்லாம் மனுஷங்க இருப்பாங்களான்னு நம்பவே முடியலை.''

பெருமூச்சுடன் பிரமித்தார் வானொலி நிலைய நண்பர்.

உணவு.

''ரெண்டு பக்கத்து உறவுக்காரர்கள், நீங்கள்னு எல்லோரும் வற்புறுத்தியும், வசதியும் இருந்தும் இன்னொரு கல்யாணத்துக்குச் சம்மதிக்காம தாக்குபிடிச்சு பதில் சொல்லி இருக்காரே. இறந்து போன மனைவியின் நினைவுகளுக்கு எவ்வளவு கம்பீரமா கௌரவம் செய்கிறார்?''

''கிட்டத்தட்ட எட்டு வருட தாம்பத்திய வாழ்க்கை. அணுஅணுவாப் புரிஞ்சு நெருங்கின அன்னியோன்யம். நானும் துணைக்குப் போய் மணவாளன்கிட்ட மற்றொரு கல்யாணத்துக்குக் கேட்டுக் கிட்டதை இப்போ அவமானமா உணர்றேன் சார்.''

எழுந்து கொண்டோம்.

''இப்படிச் சிலரைப் பார்க்கறப்ப நிஜ வாழ்க்கைத் தவறுகள் நமக்குள் உறைக்க... நிஜமா என்கிட்ட இருக்கற சில குறைகளை, கோபத்தை, மாற்றி விட்டுக் கொடுத்து வாழணும்னு ஒரு வேகமே வருது புரொபசர் சார்.'' - வானொலி நிலைய நண்பர், நிஜ உணர்ச்சியுடன் தெரிவித்தார்.

கை அலம்பும் பகுதி. கூட்டம். முன்பே சாப்பிட்டுச் சிலர் கை அலம்பிக் கொண்டிருந்தனர். இருந்த இரண்டு வாஷ் பேசின்களையும் அவர்கள் முற்றுகை இட்டிருந்தனர். எட்டு வயதில். ஏழு வயதில் என்று இரண்டு பெண் குழந்தைகள். மனைவி ஈரக்கை துடைக்கத் தடுமாறிய போது மிக அன்பும் ஆதுரமுமாகக் கணவன், தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து கர்சீப் எடுத்துக் கொடுக்கையில் நெற்றிச் சுருங்கினேன்.

திரும்பினார்கள்.

என் வாழ்க்கையின் மிக மோசமான கட்டம் அது. அந்த மனிதரும் பார்த்து அதிர, மனைவி அவர் தோளிலும், இரண்டு வளர்ந்த குழந்தைகளும் அப்பாவென கைகளைப் பிடித்து ஊஞ்சலாட, நான் அந்த மனிதரை என் வானொலி நிலைய நண்பருக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தாயிற்று.

''மீட் மிஸ்டர் மணவாளன்.''



-நவநீதப்ரியா.

மறுபாதியைத் தாய் உட்பட ஐவர் உண்ணுவது வழக்கம். அந்த நிலையில் அவர்கள் தங்கி இருந்த வீட்டில் அழுகை ஒலி...

பகாசுரனுக்கு வண்டி நிறைய உணவு தயாரித்து, அந்த வீட்டில் இருந்து யாரேனும் ஒருவர் கொண்டு போய்க் கொடுத்து, தாங்களும் அவனுக்கே சாப்பாடாக ஆக வேண்டும். அதாவது பகாசுரனால் சாக வேண்டும். அதற்குத்தான் அழுகை.

கஷ்டத்தில் இருக்கும் குந்தி அவர்கள் கஷ்டத்தை நீக்க முன்வந்தாள். பகாசுரனுக்கு உணவாக, உணவு வண்டியில் தன் பிள்ளையை அனுப்ப ஒப்புக் கொண்டாள்.

பகாசுரனுக்கு உணவாகப் பிள்ளையை அனுப்புகிறாள் என்று பொருள் அல்ல! பீமனுடைய பலத்திலும் வீரத்திலும் ஆற்றலிலும் அவளுக்கு அத்தனை நம்பிக்கை. ஒரு நாளாவது பீமன் வயிறார உண்ணட்டுமே என்ற சுயநலமும் காரணம்!

பீமனது பலம் ஒருபோதும் தவறாகப் பயன்பட்டது இல்லை. பிறர் துயர் தீர்க்கவே பயன்பட்டது! பகாசுரனைக் கொல்ல, கிசகனன் என்ற காமுகனைக் கொல்ல, மனித மாமிசப் பிரியன் இடும்பனை வெல்ல என்று உறுதியான உடல் உலக நன்மைக்காகவே பயன்பட்டது. உறுதியான உடல் உயர்வான உள்ளத்தால் ஆளப்பட்டு வந்தது.



இனி நான் சொல்லப் போவது கதையல்ல. வரலாறு.

எதிரியை வெற்றி கொண்டு, அவனது செல்வங்களை அள்ளி வந்து தர்பாரில் குவித்திருந்தான் தளபதி. அந்த ரத்தினக் குவியலை இரு கையாலும் அள்ளிப் பார்த்த வீர சிவாஜியின் விழிகள் பவழக் கற்களாய்ப் பளபளத்தன. வைர நெஞ்சத் தின் முத்துப் புன்னகை தளபதிக்குப் பரிசுப் பத்திரமாய்த் தென்பட்டது. சிவாஜி ஒரு ரத்தினப் பிரியன். செருப்புகளில் கூட ரத்தினங்களைத் தைத்துக் கொள்வது அவனது செருக்கல்ல.. கிறுக்கு.

தளபதி வாய் திறந்தான். ''மகராஜ் இந்தப் பரிசுகளை வெல்லும் உன்னதப் பரிசு அதோ!'' திரும்பிய திசையில் ஒரு முத்துப் பல்லக்கு. ''என்ன அது?'' சிவாஜியின் சிம்ம கர்ஜனை!

''உயிருள்ள வைரம்... நடமாடும் நவரத்னம்.. மங்கையாய் மலர்ந்த மாணிக்கம். பருவம் கனிந்த பவளம்'' தளபதி பேசிக் கொண்டே போனான்.

பல்லக்கின் திரைச் சீலை சிவாஜியின் வாள் முனையால் வாய் பிளந்தது. உள்ளிருந்து நடுங்கியபடி ஒரு பேரழகி வெளிப்பட்டாள். 'யார் இவள்?' கேள்வி அம்பு தளபதியைத் தாக்கியது.

''நாம் வெற்றி பெற்ற சுல்தானின் இளம் மனைவி! பேரழகி என்பதால் உங்களுக்கான உயர்ந்த பரிசாகக் கொண்டு வந்தேன்.''

''பெண்ணே நீ நிசமாகவே அழகாக இருக்கிறாய்; இப்படி ஒரு அழகியை என் வாழ்நாளில் நான் கண்டது இல்லை!''

சிவாஜியின் வார்த்தைகளால் நடுங்கினாள் அந்த நங்கை. வார்த்தைகள் தொடர்ந்தன:

''பெண்ணே! உன் அழகைப் பார்க்கும் போது எனக்கு ஒரு ஆசை தோன்றுகிறது.'' சொல்லி விட்டு நிறுத்தினான் சிவாஜி.

சபை அந்த ஆசைக்கு அர்த்தம் தேடியது. அவனே தொடர்ந்தான்.

''நீ பேரழகி. உன்னைப் போல் என் அம்மா அழகாக இருந்திருக்கக் கூடாதா? அதுதான் இல்லை. உன் வயிற்றில் நான் பிள்ளையாகப் பிறந்திருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருப்பேன் தெரியுமா?''

சபை ஸ்தம்பித்தது. பால் ஊட்டும் போதே பண்பாட்டையும் ஊட்டியிருந்தாள் தாய் ஜீஜிபாய். உறுதியான உடம்பில் உயர்வான உள்ளம்!

(இன்னும் சொல்வேன்)





எதற்காக அழுதான்?

அம்மா...

எழுபது வயதிலேயும் இரண்டு கண்ணுக்கும் பார்வை வேண்டும் என்று ஆசைப்பட்ட அம்மா.

''வேண்டாம் அம்மா, வேண்டாம். இருக்கிறது போதும்'' என்று விஸ்வேஸ்வரன் எவ்வளவோ பன்னிப் பன்னிச் சொன்னதைக் காதில் வாங்காத அம்மா.

''போதாதுடா. ஒரு கண்ணிலே இருக்கிற வெளிச்சம் இப்பவே கொஞ்சம் கொஞ்சமா மங்கலாயிட்டே வர்றது. நாளைக்கு ஒரேயடியாய் இருட்டாயிடும். அப்புறம் சாமி படம் எது... சாப்பாட்டுத் தட்டு எதுன்னு தெரியாமல் தவிப்பண்டா. பாத்ரூமுக்கு நீதான் கைபிடிச்சு இழுத்துண்டு போகணும்.''

''போறேனே.''

''போவேடா. எத்தனை நாளைக்குப் போவே? ஒரு மாசம்... ரெண்டு மாசம்... ஒரு வருஷம் போவே. அப்புறம்? 'கர்மம்... கர்மம்'னு தலையிலே அடிச்சுக்குவே. லோகத்திலே நடக்கிறதைத்தான் நான் பார்த்துண்டு வர்றேனே. அக்கம் பக்கத்திலே கிழடு கட்டைகளோடு பிள்ளைங்க படற அவஸ்தை எனக்குத் தெரியாமலா இருக்கிறது.''

''நானும் அப்படி அலுத்துக்குவேன்; வெறுத்துப் பேசுவேன்னு பயப்படறீயா?''

''நீ வெறுப்பாயோ... மாட்டாயோ. அது எனக்குத் தெரியாது. ஆனால் இன்னொரு மனுஷாள் துணையோடு பாத்ரூமுக்குப் போகும் அவஸ்தை எனக்கு வேண்டாண்டா, விசு.''

''அதுக்கு?''

''கண்ணை ஆபரேஷன் பண்ணிடு. பார்வை கிடைச்சுடும்.''

''டாக்டர் வேண்டாங்கறாரே, அம்மா.''

''ஏற்கெனவே அட்டாக் வந்த கேசு. வயசாயிடுத்து. ஆபரேஷன் தாங்க முடியாதுன்னு பயப்படறார், அவர்.''

''ஆமாம்.''

''என்னுடைய சிரமம்.. இம்சை... இதெல்லாம் டாக்டருக்கு என்னடா தெரியும். அவர், டாக்டர். நோயாளியின் உயிரைத் தக்கவைக்கிறதிலேதான் குறியாய் இருப்பார். நோயாளியோட மனசு அவருக்குப் புரியாதே.''

''இப்ப என்ன பண்ணனுங்கறே.''

''உடனே கண் ஆபரேஷன் பண்ணச் சொல்றேன்.''

நாளைக்கு ஆபரேஷன்.

விஸ்வேஸ்வரனுக்கு மனசே சரியில்லை. அரசு கம்பெனி ஒன்றில், பர்சனல் ஆபீசர், அவன். பணியாளர்களின் குறை தீர்ப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட நலத் துறையைச் சார்ந்தவன். அப் பணியில் வெற்றியும் கண்டவன்.

ஆனால், அம்மாவின் குறையை - குறை என்று தெரிந்தும், அதை நிவர்த்திக்க வேண்டிய வசதிகள் இருந்தும், நிவர்த்திக்க முடியாத திரிசங்கு சிரமத்தில் ஊசலாடினான் அவன்.

அம்மாவை வழக்கமாய்ப் பார்க்கும் டாக்டர் சர்மா, ''ஆபரேஷன் வேண்டாம். ஹை ரிஸ்க்'' என்று ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறார்.

''இரண்டு முறை 'அட்டாக்' வந்திருக்கிறது. சர்க்கரை உபத்திரவம் வேறே. எந்த வகையில் பார்த்தாலும், ஆபரேஷன் தொண்ணூறு சதவிகிதம் அறிவீனமாய்த் தோணுது. இருக்கிற பார்வை, அவங்க இருக்கற காலம் வரை போதுமானது'' என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இன்னும் இருக்கிறார்.

ஆனால், அம்மா....

தமிழினியன்



''மணமேடையிலே நடிகைக்கு என்ன சிந்தனை?''

''விவாகரத்து செய்ய, காரணங் களை யோசிக்கிறாரோ,என்னமோ?''

- ஆர். வசந்த குமார்.

பயந்தாள்.

மரணத்துக்காகவோ அல்லது தற்போதைய பார்வையும் கொஞ்ச நாளில் அஸ்தமித்து விடுமென்றோ அவள் பயப்படவில்லை.

அடுத்தவருக்கு, தான் சிரமமாகி விடக்கூடுமோ என்பதற்காகப் பயந்தாள். தன்னால் இன்னொரு ஜீவன் அல்லலுற நேரிடுமே என்பதை எண்ணி அச்சமுற்றாள். மற்றவர்கள் தனக்குச் செய்யும் சிசுருட்சைகள் எல்லாம் அவர்களுக்கு மனக் கசப்பை உண்டாக்கும் என்பதில் தீர்க்கமாக இருந்தாள், அவள்.

''இங்கே பாருடா, விசு. உன் அப்பா சாகும் போது யாருக்காவது தொந்தரவு வைச்சாரா?''

''இல்லை.''

''அன்னிக்கு ராத்திரி பாலகணபதி கோயில் வரை வாக்கிங் போறேன்னு போனார். போயிட்டு வந்தவர், 'பாகி... குடிக்க கொஞ்சம் ஜலம் கொடேன்'னுட்டு வாசலில் கிடந்த ஈஸிச்சேரில் அப்படியே சாய்ஞ்சுட்டார். நான் ஏதோ களைச்சுப் போயிருப்பார்னு நினைச்சேன். ஆனால்.... ஜலம் கொண்டு வர்றதுக்குள்ளே பேச்சு மூச்சு இல்லாமல் போயிட்டாரே. ஒரு ஈ எறும்புக்குக் கூட இம்சை வைக்காமல் கண்ணை மூடிட்டாரே. அதுதாண்டா விசு, ஆனந்தமான சாவு. அதே மாதிரி நானும் போகணும்பா.''

அலுவல் முடிந்து வீட்டுக்குள் நுழையும் போதெல்லாம் அம்மா கெஞ்சினாள்.

பாவமாய் இருந்தது. அவளுக்கு ஆபரேஷன் பண்ணா விட்டால், 'அம்மாவின் அந்திம காலத்து ஆசையை நிறைவேற்றாத மகன்' என்ற பழி வந்து சேருமோ?

அச்சம் அலைக்கழித்தது.

முடிவுக்கு வந்தான், விஸ்வேஸ்வரன்.

நகரில் பிரபலமான கண் டாக்டர், அம்மாவுக்கு ஆபரேஷன் செய்தார்.

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது.

ஒரு வாரம் கழித்துக் கட்டவிழ்த்தார்கள்.

''விசு... இரண்டு கண்ணும் நன்னாத் தெரியறது'' என்று குழந்தை மாதிரி குதூகலித்தாள், அம்மா.

அம்மகிழ்ச்சியைப் பார்த்த போது, 'அம்மாவின் சந்தோஷத்துக்கு இத்தனை நாள், தான் தடையாக இருந்து விட்டோமே' என்று கூட நினைத்தான், விசு.

ஆனால்...

டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தார்கள்.

''வீடே பளிச்சுன்னு இருக்கு'' என்று ஆனந்தப் பிரவாகத்துடன் தன் அறைக்குள் போய் உட்கார்ந்து கொண்டாள், அம்மா.

ஆனந்தியிடம், அம்மாவுக்கு ஜூஸ் கொடுக்கச் சொல்லி விட்டு, ''நான் கோயிலுக்குப் போயிட்டு வர்றேன்'' என்று வெளியேறினான், விசு.

அம்மா பெயரில் அர்ச்சனை பண்ணி விட்டு முப்பதே நிமிடம்....

திரும்பும் போது, வீட்டில் சந்தடியாக இருந்தது. புருவத்தை உயர்த்திக் கொண்டு ஓடினான் விசு.

ஆம்.

அம்மா அடங்கிப் போய் இருந்தாள்.

''ஜூஸ் கொண்டு வருவதற்குள் இப்படி ஆயிடுச்சே'' என்று அழுதாள், ஆனந்தி. குழந்தைகள் இருவரும் சுற்றி நின்று ''பாட்டி... பாட்டி'' என்று கூக்குரலிட்டார்கள்.

அப்பா, அன்று ஜலம் கொண்டு வருவதற்குள் -

அம்மா, இன்று ஜூஸ் கொண்டு வருவதற்குள்...

கட்டிலில் படுத்தவள்தான்.

''பார்வை தெரிகிறது'' என்று பரவசத்துடன் படுத்த அம்மா.

யாரையும் கூப்பிடவில்லை. எதையும் கேட்கவில்லை. படுக்கையிலேயே பகவானைச் சரணடைந்து விட்டாள். 'மூன்றாவது அட்டாக்' அவளை முழுமையாக்கி விட்டது.

அம்மா பிரியப்பட்டது போலவே, அவள் பிராணன் காலாவதியாகி விட்டது.

முதுமைக் காலத்தில் பிள்ளைகள் தனக்கு ஒத்தாசையாய் இருக்க மாட்டார்கள். இந்த அவநம்பிக்கைதான் அம்மாவின் ஆயுளுக்கு சத்ருவாகி விட்டது.

விஸ்வேஸ்வரனின் கண்கள் அருவியாய்ப் பொழிந்தன.

''அம்மா... உன் மறைவு கூட எனக்குச் சோகமாக இல்லை. உ ன து கண்கள் பார்வையிழக்கிற போது, நாங்கள் உன்னையொரு பாரமாகத்தான் கருதுவோம் என்கிற அச்சத்திலிருந்து உன்னை மீள வைக்க முடியவில்லையே. அந்த ஆற்றாமைக்காக நான் அழுகிறேன், அம்மா...''

சிங்கப்பூர் செல்லுங்கள் !

சினிமாவில் பாட்டுக்கள் குறைந்தது ஏன்?





''என்ன ஓட்டல்ப்பா, இது... இட்லி ஒரே அரிசி மயமாக இருக்கு! ஒழுங்கா அரைச்சிருக்கக் கூடாதா?''

'' 'உங்களை மாதிரி சாப்பிட' வர்றவங்க அரைச்சதுதானே, சார்? அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க!''

- ஏ. ஆர் . சலீமா, பள் ளப் பட் டி.

★ ★ ★ ★ ★

O மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ்வாக வேலை பார்க்கும் என் நண்பன், சமீபத்தில் ஒரு டாக்டரைப் பார்க்கச் சென்றான். நோயாளிகள் யாரும் இல்லாமல் ஈ ஓட்டிக் கொண்டிருந்த டாக்டர், இவன் கொடுத்த கார்டைக் கண்ட பின்பும் நீண்ட நேரம் கூப்பிடவில்லை.

எரிச்சல் அடைந்த என் நண்பன், டாக்டரின் உதவியாளரைக் கூப்பிட்டு, ''எங்கள் கம்பெனி ஒரு கார்டுக்கு இருபத்தைந்து பைசா செலவு செய்கிறது! இஷ்டம் இருந்தால் கூப்பிடச் சொல்லு. இல்லாட்டி கார்டைத் திருப்பிக் கொண்டு வா'' என்றான்.

டாக்டர் கோபமடைந்து, உதவியாள ரிடம் ஒரு ரூபாய் கொடுத்து, என் நண்ப னிடம் கொடுக்கச் சொன்னார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட என் நண்பன் மேலும் மூன்று கார்டுகளைக் கொடுத்து, ''சில்லறை என்னிடம் இல்லை. கார்டுகளை டாக்டரிடம் கொடு'' என்றான்.

டாக்டர் இதைக் கேட்டுச் சிரித்து விட்டு நேரில் வந்து என் நண்பனை உள்ளே அழைத்துச் சென்றார்!

- ஆர் . ராமரத் தினம் , சாளபுரம் .

★ ★ ★ ★ ★


இன்ஸ்பெக்டர்: என்னது! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி இந்த ஐந்நூறு ரூபாயைச் சம்பாதிச்சயா? அதெப்படி?

திருடன்: திருடப் போன இடத்தில் கூச்சல் போடாமல் இருக்கிறதுக்காகச் சில பேர் வாயைக் கட்ட வேண்டியிருந்தது; சிலரைத் தூணோடு சேர்த்துக் கட்டும் போது அவங்க வயிற்றைச் சுற்றிக் கட்ட வேண்டியிருந்தது.

- எஸ் . நீலா ஈஸ் வரி, பந் தல் குடி.

★ ★ ★ ★ ★

O ஆசிரியர் ''பெண் சுதந்திரம்'' என் னும் தலைப்பில் விளக்கிக் கொண்டி ருக்கும் போது, ''பெண்கள் நெருப்புப் போன்றவர்கள்'' என்று குறிப்பிட்டார்.



உடனே ஒரு மாணவன், ''அதனாலதான் ஆண்கள் அடிக்கடி 'அணை'க்கிறார்கள் போலிருக்கிறது!'' என்றதும், சிரிப்பு மத்தாப்பு வகுப்பறை எங்கும் மின்னியது!

- கணேசன் , கடையநல் லூர் .

★ ★ ★ ★ ★

''அந்தக் கால சினிமாக்களில் 30, 35 பாட்டுகள் இருக்கும். இந்தக் கால சினிமாவிலோ ஐந்தாறு பாட்டுகள் மட்டுமே இருக்கின்றன. இதிலிருந்து என்ன தெரியுது?''

''அந்தக் காலத்தில் சினிமா ரசிகர்கள் நிறையப் புகை பிடிப்பார்கள் என்று தெரியுது!''

- ரா. ரகோத் தமன் , சென் னை - 33.

அம்மா சம்மதிப்பாளா?

மாதவன் அன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் ஆபீஸிலிருந்து திரும்பி விட்டான். எப்போதும் அவன் தன் நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்து விட்டு, ஏதாவது ஆங்கிலப் படத்தைப் பார்த்து விட்டு, வீடு திரும்பும் போது, மணி ஒன்பதைத் தொட்டு விடும்.

''என்னடா இத்தனை சீக்கிரம்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே!'' - என அக்கறையுடன் விசாரித்தார் அவன் அப்பா கேதாரி.

''இல்லையப்பா... இ ன் றை க் கு வெள்ளிக்கிழமை இல்லையா? மீனாட்சி கோவிலுக்குப் போகலாம்னு கொஞ்சம் சீக்கிரமா...''

கேதாரி அசந்து போனார்.

''நீயா? கோவிலுக்கா? விசாலம், மாடியில் ஏதாவது காயப் போட்டிருந்தால் உள்ளே எடுத்து வை. உன் பிள்ளை கோவிலுக்குப் போகப் போகிறானாம்... நிச்சயம் மழை கொட்டோகொட்டென்று கொட்டப் போகிறது'' எனக் கேலி செய்தார்.

''அப்படியா? ஏண்டா, நிஜமா கோவிலுக்குத்தான் போகப் போறியா?'' எனக் கேட்டாள் விசாலம்.

மாதவனுக்குத் தெய்வ நம்பிக்கை உண்டு. எங்கே போனாலும் விபூதிக் கீற்று இட்டுக் கொண்டு, விநாயகனை வணங்காமல் வெளியில் கால் வைக்க மாட்டான்.

அவனுக்குக் கூட்டம், நெரிசல் என்பது பிடிக்காத விஷயம். ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொண்டு வியர்வையில் குளித்து, எம்பி எம்பிப் பார்த்துத் தெரிந்தும் தெரியாமலும் கன்னத்தில் போட்டுக் கொள்வது எல்லாம் கட்டோடு பிடிக்காதவை.

''ஆமாம்.. நீ என்ன பெரிய பண்டார சந்நிதியோ! உன்னைப் பார்த்ததும் அத்தனை பேரும் விலகி வழி விடுவார்களோ'' எனக் கேலி செய்வார்.

மாதவன் தன் அப்பாவின் கிண்டலை லட்சியம் செய்யவில்லை.

''ஆமாம் அம்மா! எனக்கு என்னமோ இன்னிக்குக் கோவிலுக்குப் போகலாமேன்னு மனசிலே பட்டுது. ஆமாம்.. அப்பா! நீங்களும்தான் என்னுடன் வாருங்களேன்'' என அவரையும் கூப்பிட்டான் மாதவன்.

''விசாலம்! என்னாலே இன்னும் நம்ப முடியவில்லை. இவன் நம்ம பையன் தானா? என்னவெல்லாமோ பேசுகிறானே!'' எனப் பயந்த மாதிரி நடித்தார்.

''சின்னப் பிள்ளை மாதிரி என்ன விளையாட்டு? அ வ ன் தா ன் கூப்பிடுகிறானே.. போய் விட்டுத்தான் வாருங்களேன்!'' என்றாள் விசாலம் தனக்கே உரிய கண்டிப்புடன்.

இருவரும் கோவிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். மீனாட்சி மரகதப் பச்சையில் பளபளத்தாள். துர்க்கையை நேரே பார்ப்பது போல, அத்தனை நேர்த்தியாகச் சந்தனக் காப்புச் சார்த்தப்பட்டிருந்தது.

மாதவன் எ ல் லா ச் சந்நிதிகளிலும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்கரித்தான். தரிசனம் முடிந்தது.

''இங்கே நல்ல காற்று வருகிறது. கொஞ்ச நே ர ம் உட்கார்ந்திருக்கலாமா, அப்பா?'' எனக் கேட்டான் மாதவன்.

கேதாரிக்குப் புரிந்தது. பையன் ஏதோ பெரிய திட்டத்துடன்தான் அவரை இங்கே கூட்டி வந்திருக்கிறான்.

அவனுக்கு அவரிடம் எப்போதுமே சலுகை உண்டு. அம்மா விசாலம் ரொம்பக் கண்டிப்பு. பள்ளிக்கூடத்திற்குத் தலைமை ஆசிரியையாக இருந்து எல்லோரையும் அதட்டி அதட்டி - அந்தத் துளைத்தெடுக்கும் பார்வையும், கடுகடுத்த முகமும் நிலைத்து விட்டன.

''அப்பா! உங்களிடம் தனியாக ஒரு விஷயம்'' எனத் தயங்கியபடி ஆரம்பித்தான் மாதவன்.

''புரிகிறதுடா மகனே! அந்தப் பெண் யார்?'' எனக் கேட்டார் கேதாரி.

மாதவன் அசந்து போனான். ''எப்படி அப்பா நீங்கள்... நான் ஏதும் சொல்லாமலேயே...?''

''இந்த அறுபதும் ஒரு நாள் இருபத்தைந்தைக் கடந்துதானே வந்திருக்கிறதுடா மடையா!''

மாதவன் எல்லா விவரங்களும் சொன்னான்.

ஒரு வருஷம் முன் அவள் வேலைக்குச்

ஜனனி

சேர்ந்தாள். பெயர் சாந்தா. பாவம், கல்யாணமான ஒரு வருடத்திற்குள் தன் கணவனை ஒரு விபத்தில் பறிகொடுத்து விட்டாள். அவள் கணவன் பார்த்த வேலை, சலுகை அடிப்படையில் அவளுக்குக் கிடைத்தது.

சொந்த ஊரான தஞ்சாவூரில் இருந்தால் தன் மன வேதனை அதிகமாகும் என மதுரைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு, தன் பெற்றோருடன் வந்து விட்டாள். வயது இருபத்தைந்து. பட்டதாரி. பார்க்க நன்றாக இருப்பாள்.

ஆரம்பத்தில் அவனுக்கு அவள் மேல் ஏற்பட்டது வெறும் அனுதாபம் மட்டுமே. எதிர் எதிர் இ ரு க் கை க ளி ல் அமர்ந்து வேலை செய்ய நேர்ந்த சமயம், ஒரு நட்பு தொடங்கியது. சமீபத்தில் தேக்கடிக்குச் சுற்றுப்பயணம் செய்த போது, அவளோடு தன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும் எண்ணம் உதித்தது. இப்போது கொஞ்ச நாட்களாக...

கேதாரி இடைமறித்தார்.

''அவள் இல்லாவிட்டால் வாழ்க்கையே சூன்யமாகத் தெரியுமே. மணந்தால் சாந்தா! இல்லாவிட்டால்...''

''விளையாடாதீர்கள் அப்பா... உங்கள் சம்மதம் கிடைத்த பிறகுதான் அவளிடம் இது பற்றிப் பேச வேண்டும் என்றுதான் இருந்தேன். ஆனால், ஒரு நாள் என் மனத்தை அடக்க முடியாமல் எல்லா வற்றையம் அவளிடம் கொட்டி விட்டேன். அவளும் இப்படி ஓர் எண்ணத்தை வளர்த்துக் கொண்டு இருப்பாள் என எனக்குத் தெரிய வந்தது. அவர்கள் வீட்டில் ரொம்பவும் திருப்தி. தன் மகள் வாழ்க் கையில் மீண்டும் வசந்தம் ஏற்படாதா என ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.''

கேதாரி அவனை இடைமறித்தார்.

''இவ்வளவுதானே. நேராகப் போய் உன் அம்மாவிடம் போய்ச் சொல்ல வேண்டியது தானே... அவள் சொன்னால் சரிதான். நேராக என்னிடம் வந்தால் எப்படி?'' எனக் கேட்டார் கேதாரி.

''ப்ளீஸ் அப்பா. எனக்கு ரொம்பத் தயக்க மாக இருக்கிறது. அம்மா ரொம்பப் பழைய காலத்து மனுஷி. இந்த முற்போக்கான திருமணத்தைச் சரியான கோணத்தில் பார்ப் பாளோ எனச் சந்தேகமாக இருக்கிறது. முடி யாது எனச் சொல்லி விட்டால் அப்புறம் என்னால் ஒன்றும் செய்ய முடியாது.''

''அது சரி... நான் சொன்னால் உன் அம்மா கேட்பாள் என்பது மட்டும் என்ன நிச்சயம்?''

''ஒரு நம்பிக்கைதான். அம்மா உங்க பேச்சுக்குக் கொடுக்கிற மரியாதை எனக்குத் தெரியாதா?''

''பயப்படாதே. சாந்தா உனக்குத்தான். உன் அம்மா மனம் பஞ்சு மாதிரி. நீ அவ ளிடம் நீயாகச் சொல்லவில்லை என்றால் நொறுங்கிப் போவாள். அவள் மறுத்தால் அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்!''

''ரொம்ப தாங்க்ஸ் அப்பா!'' என்றான்





" இண்டர்வியூ நடத்தினவங்க அசந்து போகிற மாதிரி பதில் சொன்னி யாமே...?"

"லஞ்சம் கேட்டாங்க; மாசா மாசம் கொஞ்ச நாளைக்குச் சம்பளத்துல பிடிச் சுக்குங்கன்னு சொன்னேன்!"

- சீர்காழி வி. ரேவதி

மாதவன்.

அன்றிரவு.

சாப்பாடு முடிந்த பிறகு, விசாலம் பரீட்சை பேப்பர்களைத் திருத்திக் கொண்டி ருந்தாள்.

''அம்மா'' என மெதுவாக அழைத்தான் மாதவன்.

''என்ன?'' எனக் கேட்டாள் விசாலம்.

மாதவன் தன் தொண்டையைக் கனைத் துக் கொ ண் டு, கடகடவென்று வாய்ப் பாடு ஒப்பிப்பது போல் சொல்ல வேண்டி யதையெல்லாம் சொல்லி முடித்தான்.

''நல்ல பெண் அம்மா! நீ பார்த்தால் நிச்சயம் உனக்கும் பிடித்துப் போகும்!''

விசாலம் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு கேட்டாள்.

''ஆமாம் மாதவா.. நீ என்னிடம் என்ன பதிலை எதிர்பார்க்கிறாய்?''

''மறுக்க மாட்டாய் என்ற நம்பிக்கை தான் அம்மா.''

''நான் எப்படி முடிவு எடுக்க முடியும்? உன் அப்பாவிடம் சொன்னாயா?''

''சொன்னேன். உன்னிடம் முதலில் சொல்லச் சொன்னார்.''

விசாலம் கண்களில் நீர் துளித்தது. தன் அம்மா கலங்கி இதுவரை பார்த்திராத மாதவன் பதறிப் போனான்.

''அம்மா... நான் சொன்னது...''

''எனக்கு இது புதிது இல்லை மாதவா. உன் அப்பா என்னைப் பெண் கேட்ட போது நான் ஒரு விதவைதான்!'' என்றாள்.

மாதவன் அதிர்ந்து போனான்.

''என்ன அம்மா சொல்கிறீர்கள்?''

''ஆமாம். எங்கள் கல்யாணத்திற்கு எத்த னையோ எதிர்ப்புகள். பல லட்சம் ரூபாய்ச் சொத்தை உதறி விட்டு, தன் உத்தி யோகத்தை மட்டும் நம்பி, என்னைக் கைப்பிடித்தார்.''

''இதெல்லாம் ஏன் என்னிடம் இதுவரை சொல்லவில்லை?''

''சொல்லக் கூ ட ா து ன் னு அவர் கட்டளை. ஆனால் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. நீ ஒரு விதவையை மட்டும்தான் வீட்டுக்கு கூட்டி வருவதாகச் சொல்கிறாய். அவர் ஒரு குழந்தையையும் சேர்த்துக் கூட்டி வந்தார்.''

''அம்மா!''

''ஆமாம் அப்பா! அந்தக் குழந்தை நீதான்! உனக்கு ஒரு வயது அப்போது!'' என்றாள் விசாலம்.

மாதவன் மனத்தில் அதிர்ச்சி, ஆச்சரியம்.

கேதாரி அவன் அப்பா இல்லையா? அப்படியானால்... அப்பா என்ன பெரிய அப்பா! எந்த அப்பா கேதாரியைப் போல் இத்தனை உயர்ந்த உள்ளம் படைத்திருக்க முடியும்!

கேதாரி அவன் மனத்தில் விசுவரூப மெடுத்து நின்றார்.

ஃப்ரிஜ் பரிசு: கூப்பன் நெ. 8

''நேற்று வரை நந்தவனம்'' தொடர்கதையில் இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள தவறு என்ன? கவனமாகப் படித்துக் கண்டுபிடித்து இந்தக் கூப்பனில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறே வாரா வாரம் கூப்பன்களைப் பூர்த்தி செய்து சேகரியுங்கள். கதை முடியும் கடைசி வாரம் 5 - 10 வரி விமர்சனத்துடன் நீங்கள் சேகரித்துள்ள எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். மிக அதிகமான அளவில் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தியிருப்பவருக்கு ஃப்ரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் உண்டு!

தவறு : ______________ திருத்தம் : ______________

தை சமாளியுங்கள். உங்களுக்கோ, அல்லது உங்கள் உறவினருக்கோ எப்பொழுதேனும் மருத்துவமனையில் கிச்சை பெறவோ, மருத்துவ சிகிச்சை பெறவோ ல் இத்தகைய செலவுகள், உங்கள் சக்திக்கு மீறி ல்கூட அவற்றை தள்ளிப்போட முடியாது.

ிரச்சினைக்கு சரியான தீர்வு அளிக்கிறது மெடிக்ளெயிம்.

ளெயிம் — தக்க சமயத்தில் உதவுகிறது.

டாந்திர ப்ரீமியமாக ஒரு தொகையை செலுத்தினால் நக்கென, மருத்துவமனையிலோ வீட்டிலேயோ தங்கி ச பெற, இன்டென்ஸிவ் கேர், அறுவை சிகிச்சை மற்றும் வ சம்பந்தமான இதர செலவுகளை சமாளிக்க உதவுகிறது ளெயிம் இன்ஷ்யூரன்ஸ்.

கள் தேர்வுக்கென இரண்டு திட்டங்களை வழங்குகிறது ளெயிம். திட்டம் 'ஏ', ரெகுலர் மெடிக்ளெயிம் மற்றும் ல் ஆக்ஸிடென்ட் ஆதாயங்களை வழங்குகிறது. திட்டம் மடிக்ளெயிம் ஆதாயங்களை மட்டும் வழங்குகிறது.

கள் தேர்வுக்கென் ஆறு நிலை ஆதாயங்கள் மற்றும் ுக்கான ப்ரீமியம் தொகை விவரங்கள் கிடைக்கின்றன.

ியம் ரூ. 200 முதல் ரூ. 1,500 வரை உள்ளது.

ளெயிம் ஆதாயத்தின் உச்ச வரம்பு ரூ. 96,500. பர்ஸனல் டெண்ட் ஆதாயத்தின் உச்ச வரம்பு ரூ. 1,50,000. வணையைப் பார்க்கவும்).

ளெயிம் — இப்போது மேலும் சிறந்த ங்களுடன்

ல் 1, 1991 முதல் மேலும் சிறந்த ஆதாயங்களை பதற்கென மெடிக்ளெயிம் இன்ஷ்யூரன்ஸ் மாற்றி கப்பட்டுள்ளது — ப்ரீமியம் தொகையில் கூடுதல் ாறி.

31, 1991 வரை க்ளெயிம் எதுவும் செய்யாத க்ளெயிம் பாலிஸிதாரர்கள் மாற்றியமைக்கப்பட்ட தனைகளை தேர்ந்தெடுக்கலாம்.

ுதுவமனை அறை வாடகைகளுக்கான அதிகரிக்கப்பட்ட பு.

டென்ஸிவ் கேர் மற்றும் வீட்டிலேயே தங்கி சிகிச்சை ம் ஆதாயங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ாயங்களைப் பெற முன்பை விட சுலபமான பிரிவுகள்.

ுதுவப் பரிசோதனை செலவுகளில் 75% வரை ஈடு தல்.

ஆதாயங்கள் மற்றும் வருடாந்திர ப்ரீமியம் அட்டவணை (ரூபாயில்)

விவரம்	பிரிவுகள்					
	I	II	III	IV	V	VI
பிரதி நபருக்கான ஆதாயங்கள்						
I மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் ஆதாயங்கள்						
i. நாளொன்றுக்கு இதற்கு மேற்படாமல்: அ) அறை, சாப்பாடு, நர்ஸிங்,	750	550	350	250	150	100
ஆ) இண்டன்ஸிவ் கேர், சாப்பாடு, நர்ஸிங்	1500	1100	700	500	300	200
அ) & ஆ) இரண்டிற்கும் மொத்த வரம்பு	33000	24000	15500	11000	6600	4500
ii சர்ஜன், அனெஸ்தடிஸ்ட் மருத்துவத் தொழில் புரிவோர். கன்ஸல்டன்ட், ஸ்பெஷலிஸ்ட்	22000	13200	9200	7000	3000	2600
அனெஸ்தீஷியா, இரத்தம், ஓ.டி. மருந்துகள், போதை மருந்துகள் ரேடியோ தெரபி முதலியன	28000	16800	12800	9000	5000	3400
II வீட்டில் தங்கி சிகிச்சை பெறுதல்: (அறுவை சிகிச்சை யல்லாதவை மட்டும்) மருத்துவ தொழில் புரிவோர், கன்ஸல்டன்ட்ஸ், ஸ்பெஷலிஸ்ட்ஸ்	6000	3500	2500	1600	1400	1400
இரத்தம், ஆக்ஸிஜன், டயக்னோஸ்டிக் சாதனம், நர்ஸுகள் மற்றும் இதர செலவுகள்	7500	4500	3000	2000	1700	1700
III பர்ஸனல் ஆக்ஸிடெண்ட்: மரணம் அல்லது அங்கஹீனம் அடைதல்	150000	100000	75000			
செலுத்த வேண்டிய வருடாந்திர ப்ரீமியம்						
திட்டம் 'ஏ' மெடிக்ளெயிம் மற்றும் பர்ஸனல் ஆக்ஸிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ்	1500	950	700			
திட்டம் 'பி' மெடிக்ளெயிம்	1300	840	600	350	250	200

குறிப்பு: 1. மேற்கூறிய அட்டவணையில் உள்ளவை வெறும் தகவல்கள்தான். முழு விவரங்களையும் அறிய மெடிக்ளெயிம் பாலிஸியைப் பார்க்கவும்.

2. இன்ஷ்யூர் செய்பவருக்கு முன்கூட்டி தமக்கு இருக்கும் வியாதிகள் பற்றி தெரிந்திருந்தால் பாலிஸி எடுக்கையில் அவை குறிப்பாக சேர்க்கப்படாது.

வரிச் சலுகை: வருமான வரிச் சட்டம் பிரிவு 80 D யின் கீழ் காசோலை மூலம் வழங்கிய ரூ. 3000 வரையிலான ப்ரீமியம் தொகைக்கு வரிக்குட்பட்ட வருமானத்தில் தள்ளுபடி உண்டு

உங்களுக்கான இதர ஹவுஸ்ஹோல்டு/பர்ஸனல் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

• பவிஷ்ய ஆரோக்யா • ஓவர்ஸீஸ் மெடிக்ளெயிம் • ஹவுஸ் ஹோல்டர்ஸ் காம்பிரெஹென்ஸிவ் • பிரொஃபஷனல் இன்டெம்னிடி • பர்ஸனல் ஆக்ஸிடெண்ட்

முன்னதைக் காட்டிலும் சிறப்பு!

மெடி + க்ளெயிம்

சுலபமானது. அவசியமானது

आपत्काले रक्षिष्यामि

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

கூடுதல் விவரங்களுக்கு இம் முகவரிக்கு எழுதவும்: ஜிஐசி, த.பை. எண் 10032, ஜிபிஓ, பம்பாய்-400 001 அல்லது உமது பகுதியில் இயங்கும் எமது கம்பெனியின் எந்த அலுவலகத்திலும் தொடர்பு கொள்ளவும்.

ல் இன்ஷ்யூரன்ஸ் னி லிமிடெட் | தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் | தி ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் | யுனைட்டட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

R K SWAMY/BBDO GIC 783 A TM

பொய் முகங்கள்

எஸ்.லக்ஷ்மிகாந்தன்

பெண் பார்க்க அம்மா, அப்பாவுடன் வந்த முரளிக்கு, சுப்ரஜாவை முதற் பார்வையிலேயே பிடித்து விட்டது. ஒரு தரம் பார்த்து விட்டால் மீண்டும் பார்க்கத் தோன்றும் அழகு முகம். அதில் தவழுகின்ற தெய்வீக அமைதி. அற்புதமான மெல்லிய புன்னகை. அதுவும் அந்த ரோஸ் கலர் புடைவையில் எடுப்பான பளீர்!

''என்னடா... என்ன சொல்றே? இன்னும் நல்லாப் பார்க்கணுமா?'' என்றாள் அம்மா. 'இவள்தான் எனக்கு மருமகள்' என்று மனசுக்குள் முடிவும் செய்து விட்டாள்.

முரளி ஓரக்கண்ணால் பார்த்தான். ஆர்வம் கலந்த அவன் புன்னகைக்கு, சுப்ரஜா பதில் தந்தாள்.

''எனக்குச் சம்மதம்!'' என்றான் முரளி.

முரளி இருபத்தெட்டைத் தொட்டு விட்டவன். வசீகரமான முகம். பாங்கில் நல்ல வேலை. கூடவே பத்திரிகைகளில் அவ்வப்போது சிறுகதைகள் எழுதுபவன்.

சுப்ரஜா அருகில் வந்து, காலி செய்த தட்டுக்களையும், தம்ளர்களையும் எடுத்துச் சென்றாள்.

''எங்க சம்மதத்தை நாங்க நேரிடையாகவே சொல்லியாச்சு... இனி நீங்கதான் முடிவு பண்ணணும். உங்க பொண்ணையும் கன்சல்ட் பண்ணிட்டுச் சொல்லுங்கோ.''

''ஆமாம் ஆமாம். அதுதான் சரி. சுப்ரஜா, கொஞ்சம் இப்படி வாம்மா. உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா சொல்லும்மா?'' என்றார் மீனாட்சி சுந்தரம் - சுப்ரஜாவின் அப்பா.

சுப்ரஜாவின் மௌனம் சம்மதமாயிற்று.

''அப்புறம் என்ன! இனி லக்னபத்திரிகை எழுதிட வேண்டியதுதான்.''

அறையில் சந்தோஷம் பரவியது. முரளிக்கு மனசெல்லாம் சிறகடித்துப் பறந்தது. சத்தமாய்ப் பாட வேண்டும் போல் தோன்றியது. இத்தனை அருமையான, அழகான சுப்ரஜா எனக்கு மனைவியா..? என்னுடையவளாகப் போகிறாளா?

மீனாட்சி சுந்தரத்திற்கும் நல்ல மாப்பிள்ளை அமைந்த சந்தோஷம்.

மீனாட்சி சுந்தரம், சுப்ரஜாவிடம் ''மாப்பிள்ளைக்கு நம்ம வீட்டைச் சுற்றிக் காண்பிச்சுட்டு வா'' என்றார்.

மீனாட்சி சுந்தரம் புத்திசாலி. முரளியும் சுப்ரஜாவும் ஏதாவது தனியாகப் பேச வேண்டுமென்று, அதற்குரிய வாய்ப்பை வலிய ஏற்படுத்திக் கொடுத்தார்.

பளீரென்று தாக்கியது காற்று. மொட்டை மாடியில் மாலைச் சூரியனின் மஞ்சள் நிறம் இன்னும் கொஞ்சம் மீதி இருந்தது. ஏற்காட்டின் தூரத்து கரும்பசுமையில் கவிதை கலந்திருந்தது.

முரளியும் சுப்ரஜாவும் மொட்டை மாடியிலிருந்த அந்த விசாலமான அறைக்கு வந்தார்கள்.

''சுப்ரஜா, நீங்க எல். ஐ. சி. யில் எந்த பிராஞ்சில இருக்கீங்க?''

சொன்னாள்.

''ரொம்பத் தூரமா இருக்கே. ட்ராவல் கஷ்டமா இல்லையா? சீக்கிரம் ட்ரான்ஸ்பர் வாங்கிக்கலாமே. அப்புறம் உங்க ஸ்டடீஸ் எல்லாம் எங்கே?''

முரளி தன்னைப் பற்றிய விவரங்களைச் சொன்னான். அவளைப் பற்றி இன்னும் தெரிந்து கொண்டான்.

''உங்க ஹாபிஸ் என்ன சுப்ரஜா?''

''ரீடிங்தான். தமிழ்ல சுந்தரராமசாமி, வண்ண நிலவன்ல இருந்து சுஜாதா, பாலகுமாரன் வரை எல்லாம் படிப்பேன்.''

''அட, அப்படியா! நான்கூட பத்திரிகைகளில் கதை எழுதுவேன், அப்பப்போ. சமீபத்தில் கூட என் கதை ஒன்று வந்திருந்தது. 'அபீதா' என்கிற புனைபெயர்ல... நீங்க படிச்சும் இருக்கலாம்.''

''அட அந்தக் கதையா? நான் படிச்சேன். எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது. தான் கல்யாணம் பண்ணிக்கப் போற ஒரு பொண்ணு, ஏற்கெனவே ஒருத்தனைக் காதலிச்சுத் தோத்துப் போயிருந்தால் - அதுக்காக அவ ஃபீல் பண்ணியிருந்தா - அதைக் காரணமாகக்காட்டி, அவளைக்கல்யாணம் செய்துக்க மறுக்கறது தப்புன்னு சொல்ற மாதிரி கருத்தை மையமா வைச்சு எழுதியிருந்தீங்க, இல்லையா?''



''ஆமாம். அந்தக் கதையை நிறையப் பேர் பாராட்டியும் இருந்தாங்க..'' - முரளி மிகப் பெருமையாகத் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டான்.

''நீங்க சொன்ன அந்தக் கருத்து எனக்கும் பிடிச்சிருந்தது. இதுவே ஓர் ஆண் காதலிச்சுத் தோத்துப் போயிருந்தா ரொம்ப ஈஸியாக எடுத்துக்கிடறாங்க. அதைப் பெருமையாக்கூட நினைக்கறாங்க. ஆனா ஒரு பொண்ணுக்கு நடக்கறதே வேறே... தோல்விங்கறது இயல்பு. மனிதர் எவரும் தவறு செய்யலாம். எவர் கணக்கும் தப்பாகப் போகலாம். இப்படி இருக்கறச்சே பெண்ணோட காதல் தோல்விங்கறது மட்டும் கேவலமாப் பேசப்படுது.''





''இந்தாப்பா பியூன்! நான் ஒரு முக்கியமான ஃபைலைப் பார்க்கப் போறேன். இரண்டு மணி நேரம் யாரையும் உள்ளே விடாதே!''

''ராத்திரி டீ. வி. யில் லேட் நைட் படம் பார்த்தீங்களா சார்?''

- ஞா. ஞானமுத்து

சுப்ரஜா பேசிக் கொண்டே இருந்தாள்.

முரளிக்கு மனசுக்குள் சந்தோஷம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. 'இத்தனை புத்தி சாலித்தனமும் யோசிக்கும் திறனும் கொண்டவள் எனக்கு மனைவியாகப் போகிறாள்... உண்மையில் எனக்கு இது அதிர்ஷ்டம்தான்!'

''கடைசியாய் ஒரு சின்ன விஷயம். உங்ககிட்டச் சொல்லலாம்.... தப்பில்லைன்னு தோணுது. நீங்க பரந்த மனசுள்ளவர். உங்களை நான் ஏமாத்றவோ, பொய் சொல்லவோ விரும்பலை. அதாவது....''

என்ன இது? எதற்கு இத்தனை பலமான அஸ்திவாரப் பேச்சு? ஒருவேளை...

''நானும் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னே காதல் செய்திருக்கேன். எங்க வீட்டிற்கு எதிர்த்த பிளாட்ல இருந்த கண்ணன்ங்கறவரும் நானும் ஒருத்தரையொருத்தர் மனசார நேசிச்சோம். பழகினோம். கொஞ்சம் கொஞ்சமா அக்கம் பக்கத்தார் மூலம் எங்க பெற்றோருக்குத் தெரியவந்தது. வேறே சாதி, தகுதி, வேறுபாடுகள். சண்டை கிளம்பிப் பெரிசானது. வருத்தம், வேதனை, ஏமாற்றம். இடையில் கண்ணனும் மெட்ராசுக்கு சொந்தத் தொழில் செய்யறேன்னு போயிட்டார். எனவே எங்க இடைவெளி அதிகமாகிக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தொடர்பு கொள்ளக்கூடிய வழிமுறைகள் அடைபட்டுப் போக, அந்தக் காதல் அப்படியே முடிஞ்சு போச்சு. அந்த வருத்தம் இப்பவும் சில சமயங்களில் எனக்கு ஏற்படுது மிஸ்டர் முரளி...''

நினைத்தது சரிதான். இவள் காதலித்துத் தோற்றுப் போனவள். காதல் தோல்வி என்னும் நரக வேதனையில் புழுங்கியவள்.

''ஒரு பெண்ணோட காதல் தோல்வியையும், அது அவளோட தப்பு இல்லைங்கறமாதிரியும் கதை எழுதற நீங்களே எனக்குப் புருஷனா வர்றது எனக்குச் சந்தோஷம். நான், நீங்க கதையில் எழுதின பெண் மாதிரிதான். உங்க கதை ஹீரோ மாதிரியே நீங்களும் என்னை மனசார ஏத்துக்கப் போறீங்க. நம்ம வாழ்க்கை நிஜமாகவே ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லா இருக்கும்னு நினைக்கறேன்.''

முரளியின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது. நாம் ஏதோ கதை எழுதப் போய், அது அப்படியே நிஜத்திலும் நடக்க இருக்கிறதே! யோசித்தான் முரளி.

''என்ன யோசிக்கிறீங்க? நம்ம கல்யாணத்தை எந்த மண்டபத்தில் வைச்சுக்கலாம்னா?''

''வெய்ட் எ மினிட் சுப்ரஜா'' என்று இடைமறித்தான் முரளி.

''நீங்க சொல்றபடி நம்ம கல்யாணம் நடக்காது. உங்க அடிமனசுல இருக்கற அந்த வேதனை, ஏமாற்றம் தோல்வியின் வடு, அவ்வளவு சுலபத்தில் மாறாது. அது என் மனசையும் வாழ்க்கையையும் பாதிக்கும். மேலும் ஏற்கெனவே யாரோ ஒருத்தரை மனசாரக் காதலிச்ச ஒருத்தி, என் மனைவி ஆவதில் எனக்கு விருப்பம் இல்லை... ஸாரி சுப்ரஜா.''

''கதையில் மட்டும் அந்த மாதிரி எழுதியிருக்கீங்களே!''

''கதை வேறு. வாழ்க்கை வேறு.''

''எழுதறது வியாபாரத்திற்காகவா? வெறும் காசுக்காகவா? எழுதற கொள்கையைக் கடைப்பிடிக்கும் உறுதி கிடையாதா உங்களுக்கு? இது கோழைத்தனம் இல்லையா? இப்ப நான் சொன்ன விஷயத்தையே நம்ம கல்யாணத்திற்கு அப்புறமாச் சொல்லியிருந்தா, அல்லது கடைசி வரை சொல்லாமலேயே இருந்திருந்தா என்ன செய்திருப்பீங்க?''

சுப்ரஜாவின் குரலிலும் ஆவேசம் கலந்து வந்தது.

''அது வந்து...'' முரளி தடுமாறினான்.

''மிஸ்டர் முரளி, நம்மால எதை முடியுமோ அதைத்தான் அடுத்தவங்களுக்குச் சொல்லலாம். தன்னால் கொஞ்சம் கூடக் கடைப்பிடிக்க முடியாத வழிமுறைகளை - கொள்கைகளை எல்லாம் மற்றவர்களுக்கு மட்டும் அறிவுரையா எடுத்துச் சொல்றது என்னைப் பொறுத்தவரை சுத்த அயோக்யத்தனம். திருட்டுத்தனம்.''

''என்ன இது இவ்வளவு ரஃபா பேசறீங்க? உங்களைக் கல்யாணம் பண்ணிண்டு எப்படி நான் குடித்தனம் நடத்தறது? அதனால்....''

''நீங்க என்ன சொல்வீங்கன்னு தெரியும். பொண்ணுப் பிடிக்கலைன்னு சொல்

லிட்டுப் போய்டுவீங்க. உங்களால் அது தான் முடியும்.. அவ்வளவுதான் முடியும். முகத்துக்கு நேராக் கைநீட்டி, பொய் முகங்களை உரிச்சுக் காட்டினா, அவங்க மேலே கோபம் வர்றது இயல்புதான். உடனே நகர்ந்திடுவீங்க. இதுவும் உங்களோட பலவீனத்தைத்தான் காட்டுது. இப்படி தப்பித்து ஓடப் பார்க்கறதும் உண்மையை எதிர்த்து நிற்கத் தைரியமில்லாத கோழைத்தனத்தைத்தான் வெளிப்படுத்துது....''

முரளிக்குக் கோபமும் எரிச்சலும் பொங்கியது. என்ன சொல்வது எனத் தெரியாமல், சடசடவெனப் படிகளில் இறங்கிச் சென்றான்.

அவன் இறங்கி வந்ததைப் பார்த்ததும் மீனாட்சி சுந்தரம் மேலே வந்தார்.

''சுப்ரஜா... சுப்ரஜா''

''என்னப்பா?'' என்றபடி சுப்ரஜா திரும்பினாள்.

''என்னம்மா ஆச்சு... ரெண்டு பேரும் பேசினீங்களா? சந்தோஷம்தானே?''

''பேசினோம்பா. முடிவுதான் வேறே மாதிரி.''

''என்னம்மா சொல்றே?''

''ஆமாம்பா இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்!''

''ஏன்? காரணம் என்ன? எதனால் இந்த முடிவு?''

''நான் ஒரு சின்னப் பொய் சொன்னேன். அதிலேயே அவரோட சாயம் வெளுத்துப் போச்சு.''

''பொய்யா. என்ன சொல்லறே சுப்ரஜா?''

தங்களுக்குள் நடந்த பேச்சுக்களைச் சொன்னாள் சுப்ரஜா.

''அவரோட போலித்தனத்தைச் சுட்டிக் காட்டினேன். எழுதறதுக்கும் நடந்துக்கறதுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டினேன். அவருக்குக் கோபம் வந்து போய்ட்டார். இனி அவர் சம்மதம் தெரிவிச்சாக்கூட எனக்கு வேண்டாம். இவ்வளவு போலித்தனமும் வேஷமும் உள்ள ஒருத்தரைக் கல்யாணம் செஞ்சுண்டா எனக்குக் கஷ்டம்தானேப்பா. எனவே, இந்த மாப்பிள்ளை கிடைக்கலைன்னு வருத்தப்படக் கூடாது. சந்தோஷம்தான் படணும். அதிக படிப்போ, அந்தஸ்தோ, அழகோ இல்லாவிட்டாலும் போலித்தனம் காட்டாத, பொய் வேஷம் போடாத ஒரு நல்ல மாப்பிள்ளை எனக்கு நிச்சயம் கிடைப்பார்ப்பா.''

தோளில் சாய்ந்து கொண்ட தம் மகளை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தார் மீனாட்சி சுந்தரம்.

நேரத்தில் கொடுத்த நெத்தியடி!

O தலையங்கமும் கார்டூனும் பிரமாதம்! சரியான நேரத்தில் கொடுத்த நெத்தியடி. நானும் ஏதாவது பத்திரிகை கண்டித்து எழுதுமா என்று பார்த்தேன். நீங்களாவது எழுதினீர்களே.
திருச்சி - 18, தி.மா. குருசாமி.

என்ன அர்த்தம்...?

O தி. மு. க. வின் இரண்டு ஆண்டு கால ஆட்சியின் போது பரவி விட்ட வெடிகுண்டு கலாசாரத்தை நான்கு மாதத்தில் கவர்னர் ஆட்சியினால் தீர்க்க முடியவில்லை என்றால் என்ன அர்த்தம்? தி. மு. க. ஆட்சியில் அந்தத் தீமை அந்த அளவுக்கு ஆழமாகவும், பரவலாகவும் இங்கே ஊடுருவி இருக்கிறது என்றுதானே அர்த்தம்.
கோவை - 23, ஷரீபா ஜெஸியா ராணி.

கறை படிந்து விட்டது!

O 'வதந்தி பரப்பும் வாழப்பாடியார்' தலையங்கத்தை அப்படியே நான் ஏற்றுக் கொள்கிறேன்; அதே சமயம் தி. மு. க. ஆட்சியில்தான் விடுதலைப் புலிகளுக்கு இவ்வளவு தைரியம் வந்தது. ராஜீவ் கொலையில் தி. மு. க.வுக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு ஆதரவு கொடுத்த ஒரே காரணத்தால் இன்று அந்தக் கட்சி பொது மக்களின் பார்வையில் 'கறை' படிந்து காணப்படுகிறது.
பொள்ளாச்சி, ஏ. சி. பிரபு.

வீண் முயற்சி!

O தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பலவும் தங்கள் விருப்பம் போல எண்ணற்ற வதந்திகளைத் தினந்தோறும் புதிய புதிய தலைப்புக்களில் வெளியிட்டு வருவதைக் கண்டிக்கத் துணிவில்லாத 'கல்கி' வாழப்பாடியாரை மட்டும் கண்டிப்பது என்பது வீண்!
கோவில்பத்து, பூவை கிருட்டிணன்.

உணர்ச்சி பூர்வமான படைப்பு!

O அழகிய முகம் எங்கே? அறிவொளிக் கண்கள் எங்கே? என்ற தில்லி ரிப்போர்ட்டும், படங்களும், ராஜீவின் மரணம் குறித்துச் சோகத்தில் மூழ்கியிருக்கும் நாட்டு மக்களை, மேன் மேலும் துயரமடையச் செய்யும் வகையில் உணர்ச்சி பூர்வமாகப் படைக்கப்பட்டிருந்தன.
தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

உள்ளத்தைத் தொட்டது!

O அடக்குமுறைகளுக்கு எதிரான அமைப்பு என்ற சிறுகட்டுரை உள்ளத்தைத் தொட்டது! மனித உரிமை மீறப்படும் நிகழ்ச்சி இந்தியா உட்பட பல நாடுகளில் தினசரி நடக்கிறது. அம்னஸ்டி இன்டர் நேஷனல் போன்ற அமைப்புகள் மிக மிகத் தேவையாக இருக்கின்றன.
ஈரோடு, ஈ.டி. விஜயகுமார்.

நீங்களும் முன் கூட்டியே அறிவித்திருக்கலாம்!

O 'முன் கூட்டி அறிவிப்பதில் முந்நூறு நன்மைகள்' கட்டுரையைப் பற்றி முன் கூட்டியே அறிவித்திருக்கலாமே! அறிவித்திருந்தால், 'அதுதான் முன்னாலேயே சொல்லி விட்டார்களே. சிரித்துச் சிரித்து வயிற்று வலி வந்தால் நாங்கள் பொறுப்பல்ல என்று....' என நாங்கள் சமாதானமாகியிருப்போமே!
அரூர், மு. மதிவாணன்.

நல்ல மனிதர்களைக் கண்டேன்!

O மணவாழ்வில் எதிர்பாராத நஷ்டங்களைச் சந்தித்துத் தடுமாறி நிற்கும் ஜீவன்களுக்கு மறுமண வாழ்வுச் சிறப்பு தர மனமுள்ள நல்ல மனிதர்களை 'அம்மா சம்மதிப்பாளா' என்ற கதையில் கண்டேன்.
தஞ்சாவூர், ஏ.ஆர். லலிதா.

பழமொழியும் கவிஞர் மொழியும்.

O எலும்பில்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் வளையும் என்ற பழமொழியையும், வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் என்ற கவிஞர் மொழியையும் ஒரு சேர நிரூபித்து, மனிதர்களின் யதார்த்த மனநிலையைப் பிரதிபலித்த கதை வேலாயுதனின் 'ஊர் வாய்'.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

ஆதங்கத்தை அறிவுறுத்தினீர்!

O 'உலக சாம்பியன்ஷிப், ஆசிய தடகளப் போட்டிகள், சார்க் விளையாட்டுப் போட்டிகள் இவையனைத்திலுமே நான் பங்கேற்க விரும்புகிறேன். ஆனால், இவற்றில் எத்தனைக்கு நம் அரசாங்கம் என்னை அனுப்புமோ?' என்ற அச்வினியின் ஆதங்கத்தை அப்படியே வெளியிட்டு அரசுக்கு அறிவுறுத்திய எங்கள் 'கல்கி'க்கு மனமார்ந்த பாராட்டுக்கள் பல!
கும்பகோணம், சிவ. சீனிவாசன்.

நாராயண குரு – ஒரு விளக்கம்

O கல்கி 2.6.91 இதழில் (அலுவலகத்தில் தம்பதியாக) ஸ்ரீ நாராயண குருவைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் பெரியாரைப் போன்று பகுத்தறிவுவாதி என்று கூறப்பட்டிருக்கிறது. பெரியார் கடவுள் இல்லை என்றார். நாராயணகுரு 'ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம்' என்ற கொள்கையைக் கடைபிடித்துப் பரப்பியவர்.
சென்னை - 28, பவானி மணி.

லட்சம் அல்ல; ஆயிரம்!

O கல்கி 9.6.91 இதழில் (நோய்களைக் குணப்படுத்தும் ராகங்கள்) சிந்தஸைசர் ஒன்றின் விலை 67 லட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறது. இறக்குமதி வரியையும் சேர்த்து, இந்தியாவில் இதன் மதிப்பு 60 முதல் 70 ஆயிரம் வரை இருக்கலாம். அவ்வளவே.
சென்னை - 17, எம். நாகராஜன்.

மறக்கு விடிவில்லை...

''இதான் சார்! வாங்க... தைரியமா வாங்க; பயமில்லை...'' என்று கூட்டி வந்தான் அந்த ஆள். அவன்கிட்ட நெருங்கிய போதே ஒருவித பழவாசனையும், பீடி வாசனையும் சேர்ந்து குடலைப் புரட்டியது.

கதவைத் தட்டினான் - ''சரசு... சரசு...''

கதவைத் திறந்து ''என்ன...?'' என்று கேட்ட பெண்ணுக்கு முப்பது வயதிருக்கலாம்.''

''பார்ட்டி வந்திருக்குது. கூட்டியாந்தேன். ஃப்ரீயா... நீ? உள்ள உட்காரச் சொல்லட்டுமா...?'' என இளித்தான்.

அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள். ''உள்ள வாங்க...'' என்றாள்.

''ரேட் பேசியாச்சு... கரெக்டா வாங்கிக்க... நீ எனக்குக் கொடு சார்!'' என்று என்னிடம் பிடுங்காத குறையாய்ப் பணம் கேட்டான். கொடுத்ததும் போனான்.

அவளிடம் பேசிய பணம் கொடுத்தேன். வாங்கிக் கொண்டாள். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். சின்னக் குடிசை.

அந்தப் பக்கமாய்த் தூளியில் குழந்தை. மூலையில் சமையல் நடந்ததற்கான அறிகுறி. ஒரே ஒரு காடா விளக்கு வெளிச்சத்திற்கு.

''எதுனாச்சும் சாப்பிடறீங்களா...?''

''வேண்டாம்...!''

''தண்ணி?''

''இல்லை... தாங்க்ஸ்...''

''சித்த நாழி இருங்க முகம் கழுவிட்டு வந்திடறேன்'' என்று போனாள்.

எனக்குப் பாவமாய் இருந்தது. ஏனெனில் இன்னும் சிறிது நேரத்தில் இவள் போலீஸில் பிடிபடப் போகிறாள். நான் ஒரு திகாய் (Decoy). போலீஸாரால், மீன் மாட்ட இரை போல் உபயோகிக்கப்படுபவன். இதில் எனக்கு ஒருவித சேவை சந்தோஷமும் ஒரு சிறு தொகையும் கிடைக்கும். ரொம்ப நாளாகவே போலீஸாருக்கு இந்த இடத்தின் மீது சந்தேகம். அதை உறுதிப்படுத்துவதற்காக இன்று நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

வந்து விட்டாள்..

கொஞ்ச நேரத்திற்கு முன் பார்த்த பெண் இவள்தானா...? என்று சந்தேகம் வந்தது. பவுடர் பூசி, பொட்டு வைத்து, சேலையை ஒருவிதமாக மாற்றிக் கட்டியிருந்தாள்.

''வாங்க...'' என் கையைப் பிடித்தாள்.

நான் கையை உதறி விட்டு நின்றேன்.

''புதுசா?'' சிரிப்பு...

இவர்கள் ஏன் பிழைக்கிறார்கள்?

சட்டென்று ஒரு கிழிந்த பாயைத் தரையில் விரித்து ஒரு தலைகாணியை எடுத்துப் போட்டாள்.

இந்தச் செய்கைகள் எனக்கு அருவருப்பாக இருந்தன. நான் மணி பார்த்தேன். இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. வந்து விடுவார்கள். வரட்டும்.

''கொஞ்சம் பேசலாம்!''

அவள் என்னை ஒரு முறை பார்த்து விட்டு, ''பயப்படறீங்க... சரி...'' எனச் சிரித்தாள்.

அந்தப் பாயில் உட்கார்ந்தோம்.

''உன் பெயர் என்ன?''

மீண்டும் சி ரி த் த ா ள். ''சரஸ்வதி... சரசு...'' என்றாள்.

''ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தே...?''

சட்டென்று அவள் முகம் வாடியது.

''விதி...'' என்று அவள் முணுமுணுத்த போதே தூளியில் இருந்த குழந்தை சிணுங்கியது.

எழுந்திருந்து போனாள்.

இவளுக்குக் குழந்தை இருக்கிறது. கணவன்...? சிரிப்பு வந்தது. ஒரு நாளைக்கு ஒரு கணவன்!

திரும்பி வந்தாள்.

''சாரி!'' என்றாள்.

ஆச்சரியமாக இருந்தது. சாரி... சொல்கிறாள்!

''படிச்சிருக்கியா...?''

''ம்... பத்தாம் கிளாஸ்...''

''பத்தாம் கிளாஸ்...! அப்புறம் ஏன் இந்தத் தொழில்?''


''அதான் விதி!''

''விதின்னா... சு ம் ம ா யி ரு ந் து டு றதா? இந்தத் தொழில் உனக்குப் புடிச்சிருக்கா?''

''யாருக்குப் பிடிக்கும்...?''

''பின்ன, வேற ஏதாவது செய்யறது...?''

எஸ்.ஜி.ஆர்



''ஆ சை த ா ன் பட்டேன். யாரு விட்டா...?''

நான் மணி பார்த்தேன். இன்னும் இரு பது நிமிடங்கள் இருந்தன.

''எப்படி இங்கே வந்தே...?'' என்றேன்.

''பெரிய கதை...! சொன்னா காசு வேஸ்டா போயிடும்!'' எனச் சிரித்தாள்.

''பரவாயில்லை சொல்லு...'' என்றேன்.

''வேண்டாங்க... என் கதை கே ட் டு என்னவாகப் போகுது!''

நெருங்க முயன்றவளை விலக்கினேன். இன்னும் பதினைந்து நிமிடங்கள் பாக்கி யிருந்தன.

''சொல்!'' என்றேன். ''எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தே?''

''எங்கே வந்தேன். பிறந்ததிலிருந்தே இங்கதான்!''

''பிறந்ததிலிருந்தா...?''

''ம்...! எங்கம்மாவுக்கும் இந்தத் தொழிலுதான்!''

''ம்...?''

''என்னையாச்சும் நல்லா வளக்க ணும்ன்னு பிரியப்பட்டு படிக்க வச்சாங்க. 'என்னோட இந்தத் தொழில் முடிஞ்சு ரட்டும்'ன்னு அழுவாங்க''

''அப்புறமும் ஏன்..?''

''ஏன்னா...? தலையெழுத்து...! ஒரு கட் டத்துல... நான் வயசுக்கு வந்த பொழுது... அம்மாவுக்கு வயசு போயிடுச்சு. சாப்பாட் டுக்கு... ரொம்பக் கஷ்டம்...''

''சாப்பாட்டுக்கு இல்லைன்னா.. இப் படிச் செய்யறதா...?''

''நீங்க பசியோட இருந்திருக்கீங் களா...?''

''ம்...'' என்றேன்.

''பசின்னா... அடுத்த வேளைச் சாப்பாடு நிச்சயம் என்கிற நிலையில் இருந்திருப் பீங்க... ஆனா கையில காசில்லாம.. அடுத்த வேளை சாப்பாடு எப்ப கிடைக்கும்ங்கறது தெரியாம இருந்திருக்க மாட்டீங்க...''

நான் மௌனம் சாதித்தேன்.

''இருந்திருக்கோம். நாலு நாள் சாப் பாடே இல்லாமக் கழிச்சிருக்கோம். அப்ப வும் தொழிலுக்கு வரலையே... இதைச் செய்யவே கூடாதுன்னு வெறி...!''

''அப்புறமும் ஏன்...?''

''அதாங்க... விதி! எனக்கு ஒரு கல்யா ணம் பண்ணி வைக்கணும்ன்னு அம்மாவுக்கு ஆசை.. பண்ணி வச்சாங்க...''

''கல்யாணம் ஆயிருச்சா...?''

''ஆச்சு! அது கூட ஒரு மாதிரி காதல் கல்யாணம். நான் ரொம்பப் பிடிவாதமாய் இருந்தேன்.''

''கல்யாணத்துக்கு அப்புறம்...?''

''எங்க வாழ்க்கையே மாறிடும். எங்க பழைய வாழக்கையே மறந்துடும்ன்னு நினைச்சோம். ஆனா... எங்க பழைய வாழ்க்கையை நாங்கதான் மறந்திருந்தோம் மத்தவங்க... நினைச்சுக்கிட்டே இருந்திருக் காங்க...''

''அடடா...!''

''சந்தேகம்! நான் தெருவில வந்து நின்னா, சிரிச்சா, எல்லாத்துக்கும் சந்தேகம். தோ இந்தக் கொழந்தை பொறந்துச்சு.. அது பொறந்ததும் சந்தேகம் அதிகமாயிடுச்சு... தினம் கணவனிடம் அடி உதை. யாருக்குப்

பொறந்ததுன்னு கேள்வி... ''

''........''

''அப்புறம் எல்லோரும் என்னைக் குழந்தையோட வெளியே அடிச்சுத் தொறத்திட்டாங்க. நிறையப் பேர் வேடிக்கை பாத்தாங்க... ஒருத்தர் கூட ஏன்னு கேட்கலியே...''

''அவ்வளவு கொடுமைக்காரனா.... உன் புருஷன் !''

''புருஷன் மட்டுமில்லீங்க... எல்லோரும்தான். இங்கேயிருந்து வந்தவள்னு எல்லாருக்கும் எளக்காரம். எத்தனையோ பேர் இவ படிஞ்சுருவான்னு முயற்சி செய்தாங்க.. முடியலைன்னதும் அவரு மனசைக் கலைச்சுட்டாங்க...''

இன்னும் எட்டு நிமிடங்களிருந்தன...

அவள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

''அப்புறம் பசி தாங்க முடியலைங்க... நானும் அம்மாவும்னா பரவாயில்லை. குழந்தையோட பசியைப் பார்க்க முடியலை. அதான் வந்துட்டோம். ஒரு வகை புதை குழி மாதிரி வெளியே போகவும் முடியாம முழுகவும் முடியாம... ''

''அம்மா...?''

''இத்தனைக்கு அப்புறம் ரொம்ப நாள் உயிரோட இருக்க முடியுமா...? செத்துப் போயிட்டாங்க...''

குழந்தை மீண்டும் சிணுங்க... அவள் எழுந்து போய்த் தட்டினாள்.

எனது நிலை தர்மசங்கடமாகியது. இவளை மாட்டி வைப்பது பாவம் என்று நினைத்தேன். மணி பார்த்தேன். இன்னும்

> "மோசமான இந்தப் படத்தைப் பார்த்துட்டு எல்லாரும் எரிச்சலோட போறாங்க. ஒருத்தர் மட்டும் சந்தோஷமாப் போறாரே! யாருங்க அவர்?"
>
> "டீ.வி. நிலையத்தில் வேலை செய்யறவர். வர்ற வாரம் என்ன படம் போடறதுன்னு தடுமாறிட்டு இருந்தாராம்."
>
> இரா. வசந்தராசன்.



ஐந்து நிமிடங்கள் இருந்தன.

''சரசு...'' என்றேன்.

தூளி ஆட்டிக் கொண்டிருந்தவள் திரும்பினாள்.

''வரவா...?'' என்றாள்.

''வராதே! போயிடு...!''

''போகவா..? என்ன சொல்றீங்க...?''

''ஆமா... போயிடு... பின்வாசலால் ஓடிடு...''

''ஏன்?''

''ரெய்டு வருது.. போலீஸ் புடிக்கப் போறாங்க. நான் போலீஸ் ஆள்...'' என்றேன்.

ஒருவித வெடவெடப்புடன் நின்றாள். அவள் வாழ்க்கையில் இன்னொரு சோதனை ஆரம்பமாகப் போகிறது...

என்னை ஒரு மாதிரி பார்த்தாள்.

நான் பரபரப்பானேன்.

''ஓடிடு...! நான் சமாளிச்சுக்கறேன்...'' என்றேன்.

அவள் பேசவில்லை.

நான் குழந்தையை எடுத்து அவளிடம் கொடுத்து அவளைத் தள்ளிக் கொண்டு வர...

கதவைத் திறந்து கொண்டு போலீஸ் வந்தனர்.

இன்ஸ்பெக்டர் வந்து கையைப் பிடித்துக் கொண்டு...

''தாங்க்ஸ்'' என்றார்.

''சார் இவங்க வந்து...!''

''தெரியும். எல்லாம் தெரியும். நீங்க ஒரு கன்பர்மேஷனுக்குத்தான். பணம் வாங்கிட்டாங்க இல்ல... போதும் கேஸ் முடிஞ்சுது'' என்றார்.

அவளிடமிருந்த குழந்தையை யாரோ பிடுங்கித் தரையில் உட்கார வைத்தனர்.

திடீரென்று நேர்ந்த அதிர்ச்சியில் அது அழ ஆரம்பித்தது.

அவளை ஜீப்பில் ஏற்றப் போன சமயம்.

''அய்யா, கொழந்தை...! கொழந்தையைக் கொடுங்க'' எனக் கத்தினாள்.

''உன் கொழந்தையா...? ஆணா? பொண்ணா...?''

''பொண்ணுங்க... தனியா தவிக்குங்க... நான் இல்லைன்னா தாங்காதுங்க...''

''உன் கொழந்தைதானே? பொண் கொழந்தைதானே? பிழைச்சுக்கும்!'' எனக் கிண்டல் தொனியில் சிரிப்புடன் சொன்னார் அந்தப் போலீஸ்காரர்.

அந்த ஜீப் தெரு முனை திரும்பும் வரை அவள் அழும் ஒலி கேட்டது...

தரையில் அனாதையாய் அழுது கொண்டிருந்த அந்தக் குழந்தையின் மேல் என் பரிவுப் பார்வை விழ, இனி திகாயாக வேலை செய்வதில்லை எனத் தீர்மானித்தேன்.



மாயா

பஸ் நின்றதும் கடைசியாக அவனும் மாயாவும் இறங்கினார்கள்.

''உன் பாட்டிக்கு என்ன வாங்கிண்டு போகலாம்?''

மாயாவிடம் கேட்டான். மாயா அவன் கைவிரலைப் பிடித்துக் கொண்டே நடந்தாள்.

''அதோ பலாப்பழம். வாங்கிண்டு போலாம்பா பாட்டிக்கு!''

''பலாப்பழம் பாட்டிக்குப் புடிக்குமா இல்லே ஒனக்கு இப்ப வேண்டியிருக்கா?''

கேட்டுக் கொண்டே அவள் கன்னத்தை இலேசாகக் கிள்ளினான் அவன்.

''எனக்கு வேணும், பாட்டிக்கும் பிடிக்கும்!''

ஒரு கிழவிதான் தரையில் உட்கார்ந்து கொண்டு பலாப்பழம் விற்றுக் கொண்டிருந்தாள்.

''வா சாமி, இது ரூபாய்க்கு அஞ்சு, இது ரூபாய்க்கு நாலு.''

பேரம் பேசி, இரண்டு ரூபாய்க்குத் தரும்படி கேட்டான். கிழவி பலாச்சுளைகளைக் காகிதத்தில் பொட்டலமாகக் கட்டிக் கொடுத்தாள். அவன் பாக்கெட்டிலிருந்து இரண்டு ரூபாயை எடுத்துக் கிழவியிடம் கொடுத்தான்.

கிழவி நல்ல சுளையாகத் தேடி எடுத்து, கொட்டையை நீக்கி மாயாவின் சின்னக் கையில் வைத்தாள்.

மாயா தன் அப்பாவின் முகத்தைப் பார்த்தாள். அதில் ஒரு தயக்கம்.

''வாங்கிக்கோ. பரவாயில்லை. இவங்களும் பாட்டி மாதிரிதான்!''

ஜெயபாரதி

மாயா கிழவி கொடுத்த பலாச் சுளை யைத் தின்று கொண்டே அப்பாவின் கை யைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

''அதோ அத்தை வீடு!''

சற்றுத் தொலைவில் அவன் அக்காவின் வீடு தெரிந்தது.

அவன் தன் கையிலிருந்த பலாச்சுளைப் பொட்டலத்தை அவள் கையில் கொடுத் தான்.

''பலாப் பழத்தைப் பாட்டிகிட்டே நீயே குடு.''

இரண்டு பேரும் வீட்டிற்குள் போனார் கள். எதிரே அவன் அக்கா மீனா வந்தாள்.

''வாடா, வாடி மாயா!''

''பாட்டி எங்கே அத்தே?''

''என்னடி, வந்ததும் பாட்டியைத் தேடறே? அதோ அந்த ரூம்ல படுத்துண்டு இருக்கா உம் பாட்டி!''

அவனும் மாயாவும் அந்த அறைக்குள் போனார்கள். வெறும் தரையில் ஒரு தலை காணியைப் போட்டுக் கொண்டு படுத்தி ருந்தாள் பாட்டி. மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. அவர்கள் வந்த சப்தம் கேட்டுக் கண்களை இலேசாகத் திறந்து அவர்களைப் பார்த்தாள்.

''இந்தா, பாட்டி பலாப்பழம்!''

மாயா தன் கையிலிருந்த பொட்டலத்தை நீட்டினாள்.

''அதை அங்கே வை!''

சட்டென்று அதட்டலான குரலில் கூறினாள் பாட்டி.

''சரி பாட்டி!''

பக்கத்தில் இருந்த டீபாயின் மீது பொட் டலத்தை வைத்து விட்டு மாயா உடனே அந்த இடத்தை விட்டு வெளியே ஓடினாள்.

''என்னம்மா, ஒடம்பு சரியில்லையா?''

கேட்டுக் கொண்டே அவன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண் டான்.

''குழந்தை ஆசையாக் கொண்டு வந்து குடுத்தா இப்படியாம்மா அதட்டறது?''

''என்ன பெரிய குழந்தை, ஊர்ல ஒலகத்திலே இல்லாத குழந்தையை நீங்க பெத்துட்டீங்க?''

தரையில் படுத்தபடியே மீண்டும் கோப மாகப் பாட்டி பேசினாள். குரல் சற்று தூக்க லாக இருக்கவே அவன் தன் மகள் மாயா அங்கு வந்து விடப் போகிறாளே என்ற தயக்கத்துடன் அறைக்கு வெளியே பார்த் தான்.

அவன் அக்கா காப்பியை ஆற்றிக் கொண்டே அங்கு வந்தாள்.

''மாயா எங்கே மீனா?''

தன் அக்காவிடம் கேட்டான் அவன்.

''கொல்லைப் பக்கத்துல நாய் குட்டிப் போட்டிருக்கு. அதை வேடிக்கைப் பாத் துண்டு இருக்கா!''

அவன் மனம் சற்று அமைதி அடைந்தது. மாயாவுக்குத் தன் அம்மாவின் கோபம் தெரியாமல் இருப்பதே நல்லது. இத்தனைச் சின்ன வயதில் இவற்றையெல்லாம் புரிந்து கொண்டால் அவை ஆழமாக அவளின் மனத்தில் பதிந்து விடும். தன் மகளின் மீது கொண்டிருந்த அக்கறையால் இதை அவன் விரும்பவில்லை.

மீனா கொடுத்த காப்பியைக் குடிக்க ஆரம்பித்தான்.

''ஒடம்பு இப்ப எப்படி இருக்கும்மா, டாக்டர் என்ன சொன்னார்?''

''ஏண்டா வந்ததிலிருந்து என் ஒடம் பைப் பத்தியே கேக்கறே? இன்னும் எத் தனை நாளைக்கு நான் இருப்பேன்னு பாத் துண்டு வரச் சொல்லி ஒம் பெண்டாட்டி அனுப்பி வச்சாளா?''

சட்டென்று மாயா அந்த அறைக்குள் ஓடி வந்தாள். அவன் இதை எதிர்பார்க்க வில்லை.

''அப்பா, நாலு நாய்க் குட்டிப்பா...''

''முதல்லே ஒன் பொண்ணை அழைச் சுண்டு இந்த இடத்தை விட்டு வெளியில போ!''

பாட்டி உரக்க கூறினாள்.

அவன் மாயாவின் முகத்தைப் பார்த் தான். அவளும் அவன் முகத்தைப் பார்த் தாள்.

''நாலு நாய்க் குட்டிப்பா... ரெண்டு கருப்பு, ஒண்ணு வெள்ளை. இன் னொண்ணு மஞ்சள்...''

''அது மஞ்சள் இல்லேம்மா, ப்ரவுன், நீ மறுபடியும் போய்ச் சரியாப் பாரு!''

மாயாவை அங்கிருந்து போகச் சொன்னான். அவளும் உடனே 'சரிப்பா' என்று கூறிவிட்டு வெளியே ஓடினாள்.

அவன் மௌனமாக உட்கார்ந்திருந் தான். சற்று நேரத்துக்கு முன் தன் அம்மா கூறியதைத் தன் மகள் புரிந்து கொண்டி ருந்தால் தன்னைப் பற்றி அவள் என்ன நினைத்துக் கொள்வாள் என்று மனத் துக்குள் வருத்தம் அடைந்தான்.

''என்ன போஸ்ட்மேன், என்னுடைய ஜோக்கெல்லாம் போன வேகத்திலே திரும்பி வர்றது என்னவோ வாஸ்த வம்தான். அதுக்காக 'சார்... நோஸ் கட்'டுன்னு சொல்லிக் கொடுக்கணுமா என்ன!?''

– கவிட் ரவி.

''அப்பா வீட்டுலதானே இருக்கார்?''

மறுபடியும் அவனே அம்மாவிடம் கேட்டான். அவள் எந்த பதிலும் சொல்லாமல் மேலே சுழலும் மின்விசிறியைப் பார்த்த படி படுத்திருந்தாள்.

அவன் மிகுந்த தயக்கத்தோடு மறுபடியும் பேசினான்.

''நான் இங்கேயிருந்து போறச்சே வீட்டுக்குப் போய் அப்பாவைப் பாக்கறேன்!''

''பாத்து என்ன பண்ணப் போறே?''

சட்டென்று கேட்டாள் அவள்.

''நீயும் அம்மாவும் எங்க கூட வந்து இருந்துடுங்கோன்னு கேக்கறேன்.''

அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். முதுமை உடம்பு பூராவும் பளிச்சென்று தெரிந்தது.

''மச்சினனுக்குச் சோறு போட மாட்டேன்னு சொன்னவ ஒம் பொண்டாட்டி! நாளைக்கு எங்களுக்கும் ஏன் போடணும்னு கேக்க மாட்டாங்கறது என்ன நிச்சயம்?''

- உரக்கக் கூறினாள் அவள். இலேசாக மூச்சிரைத்தது.

''ஒடம்பு சரியில்லாத போது ஏன் இப்படி கத்திப் பேசறே?''


''யார்டா இப்ப கத்தறது? எதுக்குடா ஈ மொச்ச பலாப் பழத்தை வாங்கிண்டு வந்து குடுத்திட்டு ஒங்க கூட இருக்கக் கூப்பிடறே?''

''அம்மா, சும்மா ஒனக்குத்தான் பேசத் தெரியும்னு பேசாதே! நானும் வந்ததுலேருந்து பாக்கறேன். நீ பண்றது, பேசறது எதுவும் சரியாயில்லே!''

முதன் முறையாக அவன் தன் குரலைச் சற்று உயர்த்திப் பேசினான்.

''யாரை அதட்டற! போய் ஒம் பொண்டாட்டியை அதட்டு. முடியலேன்னா அம்மா அப்பான்னு ஒரவு கொண்டாடிண்டு வராதே!''

அவள் முடித்தவுடன் அதைத் தொடர்ந்து மிகச் சன்னமான குரல் கேட்க ஆரம்பித்தது.



அவன் திரும்பிப் பார்த்தான்.

''அப்பா அந்த நாய்க்குட்டி மஞ்சள்தாம்பா!''

''சரி வா, அத்தைகிட்டே சொல்லிண்டு நாம கிளம்பலாம்.''

மாயாவுடன் ஹாலுக்கு வந்தான். மீனா அவனுக்காகவே காத்திருப்பதைப் போல நின்றிருந்தாள்.

''மாயா, நாய்க் குட்டிக்கெல்லாம் கண் திறந்துட்டுதான்னு பாத்துட்டு வா...''

மாயா அப்பா சொன்னதைப் பார்க்கக் கொல்லைப்புறம் ஓடினாள்.

''பாத்தியாக்கா அம்மா பேசறதை!''

''விடுடா, வயசாறது. ஒடம்புக்கு வேற முடியலே!''

''வயசானா ஒடம்புக்கு முடியாமப் போயிடறதே ஆனா, வார்த்தைகளுக்கு மட்டும் ஏன் இன்னும் பலம் கூடிண்டே போறது?''

சட்டென்று தன் அருகில் நிற்கும் மாயாவைப் பார்த்தான்.

''கண்ணு தொறந்திருக்கா...? போய் நாய்க் குட்டிக்கு எத்தனை கால்னு பாத்துட்டு வா.. ஓடு!''

''சரிப்பா!''

மாயா மீண்டும் ஓடினாள்.

''பாவம் அதை ஏன் இப்படி விரட்டறே காலை வலிக்கப் போறது குழந்தைக்கு!''

''தெரியாத்தனமா அவளையும் கூட்டிண்டு வந்தது தப்பாப் போச்சு. எதுக்கு இந்தச் சின்ன வயசுல இந்தச் சண்டை சச்சரவையெல்லாம் புரிஞ்சுக்கணும்?''

அவன் வருத்தத்துடன் பேசினான்.

''அக்கா, அம்மா இப்படி மாசத்துல ஒரு வாரம் பத்து நாள்னு இங்கே வந்து தங்கறதுல அவருக்கு ஒண்ணும்...''

''சே, சே அப்படியெல்லாம் நினைக்கறவர் இல்லேடா அவர்!''

''எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு. பெரிய புள்ளை நான் இங்கேயே இருக்கறச்சே இப்படி பொண்ணு வீட்டுல வந்து தங்கறது...''

தன் அம்மா மாப்பிள்ளை வீட்டில் வந்து தங்குவது தனக்கு உடன்பாடான விஷயமில்லை என்பதை அக்காவிடம் தெரிவித்து விட்டதில் அவன் மனம் சற்று இலேசானது.

''அங்க வீட்டுல அப்பாவுக்குச் சாப்பாடு...?''

''அதான் நம்ம தம்பி ஒருத்தன் இருக்கானே. ஓட்டல்லே தான் சாப்பிட்டுட்டு அப்பாவுக்குக் காரியர்லே கொண்டு வரான்... அம்மாவால முன்ன மாதிரி அடுப்புகிட்டே நின்னு சமைக்க முடியலே... அதான் அடிக்கடி இங்க வந்து தங்கிடுறா!''



✱✱ உலகில் மிகக் குறைந்த வயதில் வோட்டுரிமை 'வழங்கும் நாடு பிலிப்பைன்ஸ். இங்கு வோட்டுரிமை பதினைந்து வயதிலேயே உண்டு. அதே போல் அங்கோலா நாட்டில்தான் வோட்டுரிமை மிகத் தாமதமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த நாட்டில் வோட்டுப் போடக் கூடக் குறைந்தபட்ச வயது 25.

ஆதாரம்: 'பொது அறிவுக் குறிப்புகள்.

- ஸி. பன்னீர் செல்வன்.

''இவதான் அவனைக் கெடுத்தா. இன்னும் அவன் ஒரு பைசா சம்பாதிக்கலே. வயசு முப்பத்தி நாலு ஆறது. இதக் கேட்டா தப்பு!''

இதை அவன் கேட்கவில்லை. அவன் மனைவி பூர்ணிமாதான் தன் மாமியாரிடம் கேட்டாள். முதலில் தன் மைத்துனன் எதிர்காலம் குறித்துக் கவலைப்படுவது போல் பேச்சை ஆரம்பித்து பின் அவன் தன் கணவனின் சம்பாத்தியத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்று முடித்த போது வீடு இரண்டாகப் பிளந்தது.

அவனும் பூர்ணிமாவும் தங்கள் குழந்தை மாயாவை அழைத்துக் கொண்டு திருவல்லிக்கேணியில் குடியேறினார்கள்.

''ஏம்பா நாம இந்த வீட்டுக்கு வந்திருக்கோம்?''

- மாயா புரியாமல் கேட்டாள்.

''ஒன்னை அடிக்கடி பீச்சுக்குக் கூட்டிண்டு போகத்தான்!''

ஆனால் திருவல்லிக்கேணிக்குத் தனிக் குடித்தனம் வந்த பிறகு மாயாவை ஒரு தடவை கூட பீச்சுக்கு அழைத்துப் போக முடியவில்லை.

அதனால்தான் இன்று அவளைச் சமாதானப்படுத்த வேறு வழியில்லாமல் இங்கு அழைத்து வந்தான்.

அக்காவிடம் சொல்லிக் கொண்டு மாயாவுடன் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தான்.

கூடவே நடந்து வரும் மாயாவைப் பார்த்தான். அவளும் சட்டென்று என்னவோ சொல்வதற்காகத் தலையை மேலே உயர்த்தினாள்.

''பாட்டிக்குப் பலாப்பழம் புடிக்காதாப்பா?''

''புடிக்காதுன்னுதான் தோணறது!''

''அப்போ எதுக்கு நான் பலாப்பழம் வாங்கலாம்னு சொன்னப்போ நீ சரின்னு சொன்னே... வேற ஏதாவது வாங்கியிருக்கலாம் இல்லியா?''

''பாட்டிக்குப் பலாப்பழம் புடிக்காதுங்கற விஷயம் எனக்கு இன்னிக்குத் தாம்மா தெரிஞ்சுது!''

மாயாவின் முகத்தைப் பார்க்காமல் பேசிக் கொண்டே நடந்தான். அம்மாவுக்கும் தனக்கும் நடந்த சண்டை பற்றி ஏதாவது கேட்டு விடப் போகிறாளே என்று இலேசாகப் பயந்தான்.

''அப்பா!''

''ம்''

''வீட்டுக்குப் போனதும் நான் நந்தினி வீட்டுக்குப் போய் விளையாடிட்டு வரட்டுமா?''

சற்று தயக்கத்துடன் கேட்டாள் மாயா.

''இப்பவே மணி நாலாறது. பஸ் புடிச்சு வீட்டுக்குப் போறச்சே அஞ்சு அஞ்சரை ஆயிடும். அதுக்கப்புறம் என்ன விளையாட்டு, நாளைக்குப் பாத்துக்கலாம்.''

அவள் மௌனமாக அவன் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

குழந்தை சற்று கோபமாக இருப்பதைப் புரிந்து கொண்டான.

பஸ் வந்தது. இருவரும் ஏறி அமர்ந்து கொண்டார்கள். இரண்டு டிக்கெட் வாங்கினான். அதை அவளிடம் கொடுத்த போது அவள் அதை வாங்க மறுத்தாள். யார் பஸ்ஸில் போய் விட்டு வந்தாலும் பஸ் டிக்கெட்டுகளை அவளிடம் தர வேண்டும். ஆனால் இன்று அது அவளுக்குப் பிடிக்காமல் போனது.

பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

''அப்பா''

''என்ன?''

''வீட்டுக்குப் போனதும் நான் நந்தினி வீட்டுக்குப் போய் விளையாடிட்டு வரேன்!''

''நாளைக்குத்தான் விளையாட்டெல்லாம். வீட்டுக்குப் போய், கொஞ்சம் ஹோம் ஒர்க் பண்ணிட்டுச் சாப்பிட்டுத் தூங்கணும்!''

''போப்பா. நான் நந்தினி வீட்டுக்குப் போய் விளையாடினா என்ன, ஏன் அனுப்ப மாட்டேங்கறே! அதனாலதான் ஒன்னைக் கண்டா யாருக்கும் புடிக்க மாட்டேங்கறது!''


சட்டென்று அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் கோபமாக இருப்பதை அவள் முகம் காட்டியது.

''யாருக்கு என்னைப் புடிக்கலே. உன் ஃபிரண்டு நந்தினிக்கா?''

''இல்லே, பாட்டிக்குத்தான்!''

என்னருகில் நீ இருந்தால்

புவனேஸ்வரி தியேட்டரின் மதியக் காட்சி முடிந்து வெளிவந்த சிலரைக் குறுக்கிட்டு கிடைத்த பேட்டியின் அநியாயச் சுருக்கம் இது.




''கதை இல்லாமல் கதை பண்ணுவது சினிமாவின் ஒரு உத்தி. தைரியம் தேவைப்படும் உத்தி! நல்ல கலைஞர்கள், சிறந்த தொழில் நுட்பம், அழகான வசனம் இவைகளுடன் கூடவே உயிர்க் கருவின் ஒளி மையம் போல உருப்படியான கதை அமைந்திருப்பது முக்கியம். இவர்கள் ஏழு அடி விட்டமுள்ள கிணற்றில் நாலேகால் அடி தாண்டி இருக்கிறார்கள்.'' – **மோகன் குமார்**



''படத்துல ஈரோ யார்ரான்னா எளையராஜாதாம்பா. இன்னவோ சொல்லுவாங்களே 'ரீரிகார்டிங்'ன்னு... மனுஷன் கமகமக்கறார். வழக்கமா பாட்டுங்கன்னா தம்மடிக்க ஓடுவாங்க. இதில ஒண்ணு ரெண்டு பேர்தான்...'' – **சேசு வடிவம்மாள்**



''ஃபைட்டு இருக்குது. மயில்சாமி, சி. ஜெயந்த் காமெடி இருக்குது. பார்த்து நல்லா சிரிச்சேன் அங்கிள். ஹீரோயின் பிரியங்கா இன்னும் கொஞ்சம் அம்சமா, யங்கா இருந்திருக்கலாம். லவ் ஸீன் என்னவோ, ஸ்வீட் இல்லாத ஐஸ்க்ரீம் சாப்பிட்ட மாதிரி இருந்துச்சு...'' – **வெங்கிட்டு**




"என்னய்யா படம் எடுக்கிறாங்க? காலேஜ் பசங்கன்னா குடி, கும்மாளம், பொண்ணுங்களைத் துரத்தறதுன்னு சொல்லி மத்தவங்களையும் கெடுத்துருவாங்க போலிருக்கே! தண்டமா ஒரு கதை, அதையும் சரியா தீர்மானிக்காம, படம் நெடுக அதிகப் பிரசங்கித்தனம்தான் மிச்சம்.'' – **எம். கே. அமிர்தலிங்கம்**



''எடுத்துக்கிட்ட ஐடியா இறக்குமதி சரக்கு மாதிரி, எப்படியோ இருக்கு.. இசைக் குழு சகிதமாய் நாலு இளைஞர்கள், ஜிப்ஸி வேன், மலைக்கிராமப் பயணம், கார் பழுது, வழியில் யுவதி, கண்டதும் காதல், நிறைவேற முயற்சிகள், கிசுகிசு, சோகம், சுபம்! இதைப் படமாக்கறதுக்கு முன்னால உருப்படியா இன்னும் யோசிச்சிருக்கணும். பிரிச்ச கூடாரத்தை மறுபடியும் அடிக்கற இடைவேளை பீஸ் நல்லா இருக்கு. குரு 'லாங்ஷாட்ல' ரசிக்கத் தோண்றார். புது இடங்களைத் தேடிப் பிடித்த கேமிரா ரம்மியம். அர்ச்சகரின் காதல் அர்ச்சனை; மயில்சாமியின் குரங்கு சேஷ்டையும், மூக்கில் சொல்லும் அய்யய்யோவும்; நாலைந்து முறை ரிபீட் ஆனாலும் சின்னி ஜெயந்தின் 'ஜேக் அண்ட் ஜில்' எல்லாம் வற்றாத புன்னகை நதி. ஆனா, ஒட்டுமொத்தமா சொல்லணும்னா டைரக்டர் சார், பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்!'' – **மிஸ். புவனா**

கார்ட்டூன் : **அரஸ்** – **சுந்தர்ஜி**



சாபக் காசு!

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. வானமே பிய்ந்து போனது போல மழை கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. கூடவே கண்ணைப் பறிக்கும் மின்னல்களும் நடுங்க வைக்கும் இடி முழக்கங்களும்!

தங்கம்மையின் தனிமை என்றுமில்லாத வண்ணம் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. தொட்டிலில் ஏதேதோ, அரற்றிக் கொண்டிருந்த குழந்தை ஓமனாவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அது அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அவன் வர வேண்டிய நாள். அவள் லாந்தர் விளக்கை எடுத்துக் கொண்டு வாசல்புறம் வந்து பார்த்தாள். அவனைக் காணோம். அவளுக்குத் தெரியும். அவன் இப்போதெல்லாம் வர மாட்டான். விடியும் வேளையில்தான் வருவான். வாரக் கூலியாக அவன் வாங்கி வந்திருக்கும் காசு முழுதும் தோற்றுவிட்டால் ஒருவேளை சீக்கிரமாக வந்து விடலாம். அப்படியும் சில நாட்களில், உடன் ஆடுபவர்கள் கடன்கொடுத்துக் கூட அவனைத் தொடர்ந்து ஆட வைப்பதுண்டு! அடுத்த வாரம் கூலி கிடைத்ததும் திருப்பிக் கொடுத்தால் போதும் என்பார்கள். அப்படிப்பட்ட நாட்களில் விடிந்த பின்புதான் வருவான்.

அவள் ஒரு காதலியாய் அவனுடன் சுற்றித் திரிந்த நாட்களில், திருட்டுத்தனமாய் அவனுடன் கைகோத்து மகிழ்ந்த நாட்களில், ஏன் அவன் மனைவியாகி அவள் வயிற்றில் ஓமனா உண்டாகும் வரை கூட அவனுக்கு இந்தக் கெட்ட பழக்கம் இருப்பது அவளுக்குத் தெரியாது. தெரிந்ததும் அவள் அதிர்ச்சி அடைந்தாள். எனினும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவனிடம் அன்பாய்ப் பேசினாள். சூதாடிச் சீரழிந்தோர் பற்றி நயமாய் எடுத்துரைத்தாள். அவை எடுபடாமல் போகவே பேயாய்ச் சீறினாள். 'ஓ...' என்று கத்தி ரகளை செய்தாள். அதுவும் பயனளிக்காமல் போகவே, 'ஓமனா' பிறந்து விட்டால், அவன் திருந்தி விடுவான் என நம்பினாள். 'ஓமனா'வும் பிறந்தாள். அவளது பிஞ்சுக் கால்களும் கொஞ்சும் மழலையும் கூட அவனைத் திருத்த இயலாமல் போகவே அவள் மனமுடைந்து போனாள்.

அவள் தன் தந்தையிடம் முறையிடலானாள். அவரும் அவனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப் பார்த்தார். எந்தப் பயனும் ஏற்படவில்லை. மாறாக, ஆரம்ப நாட்களில் முன்னிரவு முடியுமுன் வீடு திரும்பிக் கொண்டிருந்த அவன், அவருக்கும் அவளுக்கும் விவரம் தெரிந்த பின்பு, இரவு முழுதும் கூட அமர்ந்து ஆடத் தொடங்கினான்.

மகளின் அழுகையும் புலம்பலும் அதிகரிக்கவே, அவர் அவளிடம் கூறினார், ''தோ பாரு தங்கா... நீ வருத்தப்படுறதிலே நியாயம் இருக்கு. ஆனா இப்படி ஆத்திரப்படுறதிலே அர்த்தம் இல்லே! உன் புருஷன் வயசில் உள்ள எத்தனை எத்தனை ஆண்கள் குடிச்சிட்டு அர்த்த ராத்திரியில் வந்து கதவைத் தட்டுறாங்க... மனைவியைக் கன்னாபின்னாவென்று கெட்ட வார்த்தை சொலித் திட்டுறாங்க... கண் மண் தெரியாம அடிச்சு இம்சிக்கிறாங்க? உன் புருஷன் இப்படி எல்லாமா செய்யறான்? அவன் ஒரு குடிகாரனாய் இருந்தான்னு வச்சுக்கோ... காசோடு சேர்த்துத் தன் குடலையும் வயிற்றையும் அல்லவா அழிச்சுக்குவான்? இப்ப என்ன... அவன் சீட்டாடுறான்... அவ்வளவுதானே? அவன் திருந்திடுவான்... இல்லேன்னாலும் திருத்திடலாம்! நீ கொஞ்சம் பொறுமையாய் இரு!''

''ஆமாப்பா... வாரம் ஆறு நாட்களும் மலைக் காட்டில் மரம் சுமந்து, லோடு ஏற்றி முதுகெலும்பு ஒடியப் பாடுபடும் புருஷனைக் காண ஞாயிற்றுக் கிழமை எப்போ வருமோன்னு நான் காத்திருப்பேன். இவர் வந்ததும் வராததுமாய் அந்தச் சீட்டாட்டக் கும்பலோடு போய் உட்கார்ந்து, சூதாடப் போயிடுவாரு! வாரக் கூலி முழுதும் அந்தப் பாவிகள்கிட்டே தாரை வார்த்துட்டு, விடியும் பொழுது பல்லைக் காட்டிக்கிட்டு என் எதிரில் வந்து நிற்பாரு. நான் இதை எல்லாம் பார்த்துக்கிட்டுப் பொறுமையாய் இருக்கணும்... அப்படித்தானே?''

''நமக்கு மேல் ஒருவன் இருக்கிறான் தங்கா... அவன் நிச்சயம் நம்மைக் கைவிட மாட்டான்!''

ஆண்ட்நேஸ்

கடவுளை நம்பிக் கொண்டு சும்மா இருக்க அவளால் முடியவில்லை. எப்பாடு பட்டும் அவனைத் திருத்த வேண்டியது தன் கடமை என எண்ணினாள். கடைசி முயற்சியாக அவள் ஒரு நாள் அவன் சீட்டாடிக் கொண்டிருந்த இடத்துக்கே சென்றாள். அவனது நண்பர்களிடம் தன் கணவனை இப்படிச் சூதாடியாக்கித் தன் குடும்பத்தையே நாசமாக்குவது என்ன நியாயம் என அங்கலாய்த்தாள். அவ்வளவுதான். அவன் வெகுண்டெழுந்தான். ''தோ பார் தங்கா... இந்த விளையாட்டு என் உடலோடும் உயிரோடும் ஒட்டிப் போச்சு! நான் வேறே அது வேறே இல்லே! இதைப் பிரியறதை விட நான் உன்னையே பிரிஞ்சுடத் தயாரா இருக்கேன்! இனிமேல் இப்படி எல்லாம் வந்து கலாட்டா பண்ணினால், அதுதான் நடக்கும்... சத்தியமா!'' என்றான்.

அன்று முதல் அவள் விதியை நம்பினாள். அவன் விஷயத்தில் தலையிடுவதை விட்டு விட்டாள்.

மழையின் வேகம் சற்றும் குறைவதாக இல்லை. வெளியே அட்டைக் கரியாய் இருள் மண்டிக் கிடந்தது. குழந்தையின் காய்ச்சலோ அதிகரித்து வந்தது. அவளும் தனக்குத் தெரிந்த அத்தனை கை வைத்தியங்களையும் செய்து பார்த்து விட்டாள். எதுவும் பலனளிக்கவில்லை.

அது ஒரு சின்னஞ்சிறிய குக்கிராமம். வைத்திய வசதி வேண்டுமானால் பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் மூணார் போக வேண்டும்.





அந்த இரவு நேரத்தில் கொட்டும் மழையில் எந்தவிதமான பயண வசதியும் இல்லாத நிலையில் என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. அன்றைக்குப் பார்த்து அவள் அப்பா கூட ஏதோ வேலையாகப் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றுவிட்டிருந்தார். கையிலோ சல்லிக் காசு கூட இல்லை!

சட்டென ஏதோ முடிவுக்கு வந்தவளாய், தூளியில் இருந்து குழந்தையை அள்ளி, மழை நீர் படாதவாறு மார்போடு அணைத்துக் கொண்டு வாசலை நெருங்கியவள், ''தங்கா...'' என்னும் குரல் கேட்டு எதிரே பார்த்தாள்.

லாந்தர் ஒளியில் அவன் அருகில் நிற்பது தெரிந்தது.

அவன் சட்டெனக் குழந்தையோடு சேர்த்து அவளை இறுகப் பற்றிக் கொண்டான். ''நான் சொன்னேனில்ல... விட்டதை எல்லாம் எடுக்காமல் விட மாட்டேன்னு...! தோ பாரு.. எவ்வளவு இருக்குன்னு... எல்லாம் உனக்குத்தான்... வச்சுக்கோ!'' என்றவாறே, ஐம்பது, பத்து, நூறு என்று சில நோட்டுக்களை அவள் கைகளில் திணித்தான்!

தங்கம்மை வெறி கொண்டவளாய் அவனை உதறித் தள்ளினாள். நோட்டுக்களைத் தூக்கி எறிந்தாள்!

''தங்கா.. நான் எவ்வளவு சிரமப்பட்டு ஆடி...''

தங்கம்மை அவனை முடிக்க விட

''பேசாதீங்க...'' என்று இரைந்தாள். ''என்னமோ ரொம்பத்தான் சிரமப்பட்டு இதைச் சம்பாதிச்சது போல பேசுறீங்களே...? நீங்க உழைச்சு சம்பாதிச்ச காசை அனுபவிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைக்கலே! இந்தக் கறை படிஞ்ச காசை என் கையில் திணிக்கிறீங்க! 'என் புருஷன் பாடுபட்டுத் தேடி வரும் பணத்தை எல்லாம் இந்த விளங்காத பாவிகள் பறிச்சிட்டுப் போயிடுறானுங்களே, 'இவனுங்க குடும்பம் உருப்படுமான்னு நான் எத்தனை முறை சாபம் கொடுத்திருக்கேன்... அது போல எத்தனை பெண்களின் சாபங்களை ஏற்ற காசோ இது...! இதை என் கையால தொட மாட்டேன். என்கிட்டே சல்லிக்காசு இல்லே. நம்ம குழந்தைக்கு வைத்தியம் பண்ண டாக்டர்கிட்டே கடன் சொல்லிட்டுத்தான் வரணும். ஆனாலும் இந்தக் காசை நான் தொட மாட்டேன்....''

அவள் குழந்தையுடன் கொட்டும் மழையில் வேகமாய் நடக்கலானாள். அவள் காலடியில் மிதிபட்ட நோட்டுக்கள் அவளைப் பார்த்துச் சிரித்தன.

ஒரு வினாடி தன்னை மறந்து நின்ற அவன், ''தங்கம்மை... நில்லு... நானும் வரேன்'' என்று அவள் பின்னே ஓடிச் சென்றான். குழந்தையை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு, மேல் துண்டால் போர்த்தி அணைத்தபடி அவளுடன் நடந்தான்.

மின்னல் கீற்றுகள் இருளைக் கிழித்துக் கொண்டு அவனுக்குப் பாதை காட்டின!

கொஞ்சம் சிக்கனம் வேண்டாமோ?

மின்னல் வேகத்தில் தன் முகவாயை இரண்டு தோள்களிலும் இடித்துக் கொண்டாள் பாமா.

அப்படி அவள் தன்னெதிரே இடித்துக் கொண்டதில், தான் ஏதோ முட்டாள் தனமாகப் பேசி விட்டதாகப் பாமா நினைக்கிறாள் என்பது ராகவனுக்குப் புரிந்தது. ''பக்கத்திலே இருக்கிற மார்க்கெட்டிலே போய் வாராந்திரக் காய்கறிகளை வாங்கிட்டு வரேன்'' என்று தான் சொன்னதில் என்ன முட்டாள்தனம் இருக்க முடியும் என்று தலையைப் பிய்த்துக் கொண்டான்.

''பக்கத்து மார்க்கெட்டிலே காய்கறிங்க எல்லாம் ரங்கநாதன் தெரு மார்க்கெட்டிலே விற்கிறதைப் போல ரெண்டு பங்கு விலை... தெரியுமா?'' என்றாள்.

''பாமா, முன்னே நாம மாம்பலத்திலே இருந்தோம். அதனாலே அந்த மார்க்கெட்டிலே சல்லிசாகக் காய்கறி வாங்க முடிஞ்சது. இப்போ நாம சொந்த வீடு கட்டிக்கிட்டு, பல்லாவரத்துக்கு வந்தாச்சு. இன்னமுமா மாம்பலத்துக்குப் போய் காய்கறி வாங்க முடியும்?'' என்று அவன் கேட்டான்.

சசின் டெண்டுல்கர் டென்னிஸ் மேட்சில் எவ்வளவு கோல் போட்டார் என்று கேட்பவனை, தீவிர விளையாட்டு ரசிகர் எப்படிப் பார்ப்பாரோ அதே போல் ஓர் ஏளனப் பார்வையைப் பாமா தன் கணவன் மீது வீசினாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாக, ''பேசாம சொல்றதைக் கேளுங்க. நாளைக்கு ஆபீஸ் முடிஞ்சதும் மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனிலே வெயிட் பண்ணுங்க. நான் அங்கே வரேன். என்ன பார்க்கறீங்க? நான் வந்துதான் ஆகணும். உங்களுக்கு எதையுமே சரியா செலக்ட் செய்யத் தெரியாது'' என்றாள்.

'உன்னை மனைவியாகத் தேர்ந்தெடுத்த ஒரே விஷயத்தை வச்சி மொத்தமாக ஒரு முடிவுக்கு வராதே' என்று முணுமுணுத்த ராகவன் வெளிப்படையாக ''நீதான் பார்த்து வாங்கப் போறியே, அப்போ நான் எதற்கு?'' என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு.

''என்னாலே வெயிட்டெல்லாம் தூக்க முடியாது!'' என்று ராகவன் வரத் தேவைப்பட்ட ஒரே காரணத்தை ரத்தினச் சுருக்கமாகத் தெரிவித்தாள் பாமா.

ராகவனும், பாமாவும் திட்டமிட்டபடி சந்தித்துக் கொண்டனர். ஸ்டேஷனை ஒட்டியிருந்த தெருவில் நடந்தனர். திடீரென்று பாமாவுடைய நடையின் வேகம் குறைந்தது. அருகே ஒரு காய்கறிக்கடை. அதில் ராகவனுக்குப் பிடித்த பீன்ஸும், பாமாவுக்குப் பிடித்த வெண்டைக்காயும் கொட்டிக் கிடந்தன. எதை வாங்கப் போகிறாள்? என்ற ஆவலுடன் ராகவன் காத்திருந்தபோது அவனுக்கு ஓர் அதிர்ச்சி. காய்கறிக் கடையை அலட்சியம் செய்துவிட்டு அருகிலிருந்த ஒரு கவரிங் நகைக் கடைக்குள் நுழைந்தாள் பாமா.

''என்னங்க! நான் கவரிங்கிலே புது மோஸ்தரிலே நாலு வளையல் வாங்கிக்கலாம்னு இருக்கேன்.''

''எதுக்கும்மா கவரிங்?'' என்று ஆரம்

அருண் சரண்யா

பித்த ராகவன் ''ஏன், தங்க நகைகளே வாங்கித் தரேன்னு சொல்றீங்களா?'' என்று அவளிடமிருந்து பாய்ந்து வந்த பதில் கேள்வியில் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனான்.

அடுத்த முப்பது நிமிடங்களில், அரை குறைத் திருப்தியோடு நாலு வளையல்களை வாங்கி பேக் செய்து கொண்டு வந்தாள் பாமா.

''ஏங்க, கோன்-ஐஸ்னால் என் அம்மாவுக்கு உயிர்'' என்ற பாமாவை, ''விழுப்புரத்திலே இருக்கிற உங்க அம்மாவுக்கு இங்கேயிருந்து கோன் ஐஸ்க்ரீமையெல்லாம் பேக் செய்து அனுப்ப முடியுமா?'' என்று ராகவன் கேட்டது மிகவும் அதிருப்திப்படுத்தியது.

''நீங்க ஆனாலும் ஜடம்ங்க. அம்மாவுக்குப் பிடிச்ச ஐட்டமெல்லாம் எனக்கும் பிடிக்கும்னு ஒரு தடவை உங்களுக்குச் சொல்லியிருக்கேனா இல்லையா?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டவாறு கோன்-ஐஸ் கடையருகே ப்ரேக் போட்டது போல் நின்றாள்.

பத்து நிமிடம் கழித்து வாயைக் கைக்



குட்டையால் துடைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பியவள், அருகிலிருந்த காய்கறிக் கடைக்குச் சென்று பேரம் பேசினாள். விலை விசாரித்ததும் ''என்னவோ மாம்பலத்திலே காய்கறி ரொம்ப விலை மலிவுன்னு சொன்னீங்களே. இங்கேயும் யானை விலை குதிரை விலைதான்'' என்று ராகவன் மீது அடாத பழி சுமத்தினாள்.



''நான் எழுதற தொடர்கதையில் இன்னும் பாதி கதை கூட முடியலை. அதுக்குள்ளேயே கடைசி அத்தியாயத்தைப் பிரசுரிச்சுட்டீங்களே, ஏன்?''

''ஹி... ஹி... கதையோட முடிவைத் தெரிஞ்சுக்க ரொம்ப ஆர்வமாயிருக்குன்னு நிறைய வாசகர்கள் கடிதம் எழுதியிருந்தாங்க... அதான்!''

- ஞா. ஞானமுத்து.

காய்கறிகள் வாங்கிய பிறகு அந்த ஏரியாவில் உள்ள பல பொருள்கள் வாங்கப் பட்டன. இரண்டு வாசல் மிதிகள் (''சுந்தரி வீட்டிலே இந்த மாதிரி மிதியடிதான் போட்டிருக்காங்க''), இரண்டு கோலமாவுக் குழல்கள் (''யாராலே காலை வேளையிலே புள்ளி வச்சிக் கோலம் போட முடியுது?''), தன் அக்காவுக்காக மூன்று டஜன் ஹேர் பின்கள் (''பாவம் ரொம்ப நாளா சொல்லிக்கிட்டிருக்கா. வாங்கக் கை வரல்லியாம்''), ஒரு ஜோடி செருப்பு (''மழை நாளைக்கு இந்த மாதிரி சாண்டல்தான் நல்லது''), நான்கு டபரா டம்ளர்கள் (''எவ்வளவு இருந்தாலும்தான் வீட்டுக்குத் தேவையாயிருக்கு''), ஒரு பேன் சீப்பு (''வீட்டிலே எத்தனை ஷாம்பூ வாங்கினாலென்ன, உங்கம்மாவுக்கு இதுதான் வேண்டியிருக்கு''), ப்ளாஸ்டிக் மாவிலைத் தோரணம் (''வாசலிலே பார்வையா இருக்கும்''), ஒரு சின்ன பர்ஸ் (''எல்லாரும் இது மாதிரி ஒண்ணை வச்சிருக்காங்க''), ஒரு கைப்பை (''யார்கிட்டேயும் இந்த மாதிரி இல்லையாக்கும்'') இப்படி ஒவ்வொரு சமாதானத்துடன் ஒவ்வொரு பொருளும் வாங்கப்பட்டு ராகவன் தூக்க வேண்டிய எடை கூடிக் கொண்டே போனது.



அப்போதுதான் ராகவனுக்கு ஞாபகம் வந்தது. ''பாமா, வீட்டிலே ஷேவிங் க்ரீம் ஆயிடுச்சு. வாங்கணும்'' என்றான்.

''ஏங்க, சொந்தமா வீடு கட்டிக்கிட்டு இருக்கோம். கொஞ்சம் கட்டுப்பாடு வேணுங்க. சாதாரண சோப்பிலே ப்ரஷ்ஷை வைச்சித் தேய்ச்சா தானா நுரை வந்துட்டுப் போகுது. இல்லேன்னா கொஞ்ச நாளிலே நாம வாங்குற வார இதழோடு இலவச இணைப்பாக ஷேவிங் க்ரீம் கொடுத்தாலும் கொடுப்பாங்க. பொறுத்திருந்து பார்ப்போமே.'' என்ற பாமா ''என்னாலே ரொம்ப முடியல்லீங்க. பல்லாவரம் ஸ்டேஷனிலேயிருந்து வீட்டுக்கு, ஆட்டோவிலே தான் போயாகணும்'' என்று கண்டிஷனாகச் சொன்னாள்.

இன்று மாம்பலத்தில் காய்கறி வாங்க வந்ததில் எவ்வளவு காசு மிச்சம் என்று மனத்திலேயே கணக்குப் போட்டுப் பார்த்ததில் மயக்கம் வரும்போலிருந்த ராகவனுக்கும் ஆட்டோ தேவைதான் என்று பட்டது.



ஃபௌண்டேஷன்'' என்கிற அமைப்பு. இந்தப் பள்ளிக்கூடத்தை இந்த அம்சத் துக்காக மட்டும் சுவீகாரம் எடுத்துக் கொண்டுள்ளது. அண்மையில் சென்னை யில் எம். ஏ. எம். ராமசாமியின் தலை மையில் ஆரம்பிக்கப்பட்டது இவ் வமைப்பு.

கிரிக்கெட், ஹாக்கி, கால்பந்து, டேபிள் டென்னிஸ், கூடைப்பந்து, பாட்மிண்டன், செஸ், கேரம் போன்ற பல விளை யாட்டுகளிலும் சிறிதளவு திறமையும், ஆர்வமும் கொண்ட சுமார் நூற்றுப் பத்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, பிற்கா லத்தில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரியும் விதத்தில் அவர்களுக்குத் திட்டமிட்ட, தீவிரமான பயிற்சியளிக்கப் போகிறார்கள்.

இது விளையாட்டான பிரச்னை அல்ல!

முத்தையால் பேட்டை உயர்நிலைப் பள்ளி - சுமார் மூவாயிரம் மாணவர்கள் படிக்கும் இந்தப் பள்ளிக்கூடம், ஜனசந்தடி மிகுந்த வடசென்னையில் உள்ளது. பத்தாம் வகுப்பிலும் சரி, 'பிளஸ் டூ'விலும் சரி, ஓரளவுக்கு நல்ல 'ரிசல்ட்' பெற்று வரும் இந்தப் பள்ளியின் பெரிய குறை, மாண வர்களுக்கு, விளையாட்டு மைதான வசதி இல்லை என்பதுதான்.

உடற்பயிற்சி பீரியட் என்றால் ஒன்று வகுப்பறைக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். இல்லை யெனில் உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள சட்டக் கல்லூரி விளையாட்டு மைதா னத்துக்குப் போக வேண்டும். (பள்ளிக் கூடம், சட்டக் கல்லூரியின் மைதானத்தைத் தினமும் மாலை இரண்டு மணி நேரம் பயன்படுத்திக் கொள்ளக் கட்டணம் செலுத்துகிறது.)

இத்தகைய காரணங்களால், பள்ளிக் கூடத்தின் பெரும்பாலான மாணவர் களுக்கு விளையாட்டிலே ஆர்வமில்லை. அப்படியே ஆர்வம் இருந்தாலும் திற மையை மேலும் வளர்த்துக் கொண்டு மாநில அளவிலோ, தேசிய அளவிலோ பிரகாசிக்க வாய்ப்புக்கள் இல்லை. இந்த விளையாட்டுப் பிரச்னையை 'சீரியஸ்' ஆக எடுத்துக் கொண்டுள்ளது ''ஸ்போர்ட்ஸ்

''நாங்கள் தேர்ந்தெடுத்துள்ள அனை வருமே ஏழாம் வகுப்பு மாணவர்கள்தான். இந்தப் பருவத்தில் பயிற்சியை ஆரம் பித்தால், பத்தாம் வகுப்பு படிக்கையில், மாணவன் நன்கு தேர்ச்சி பெற்றவனாய் விளங்குவான்'' என்கிறார் ஸ்போர்ட்ஸ் ஃபௌண்டேஷனைச் சேர்ந்த மோகன் ராமலிங்கம்.

இதற்கெனச் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு 'பட்ஜெட்' போடப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பயிற்சி நேரம் போக, மற்ற நேரங்களில், ஸ்போர்ட்ஸ் ஃபௌண்டேஷன் உபயத் தில், பள்ளிக்கூடத்துக்குக் கிடைத்துள்ள விளையாட்டு உபகரணங்களை மற்ற மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படவிருக்கிறார்கள்.

''இன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நூற்றுப் பத்துப் பேரில், ஒரு சிலராவது, எதிர்காலத்தில் நம் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சிறந்து விளங்கு வார்கள்'' என்று பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் சந்திரசேகரன் நம்பிக்கையோடு கூறுகிறார்.

- எஸ். சந்திரமௌலி

படம்: ஜனனி

மாணவடம் உருவாகும்போது...

நாராயணன் மாஸ்டரைத் தேடிக் கொண்டு அவர் அறைக்குப் போகிற அனேக பையன்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. அவருக்கு மாற்றல் உத்தரவு வந்திருந்தது. ராமநாதபுரம் மாவட்டத்துக்கு. நிர்வாகக் காரணம் முன்னிட்டு.

மிகவும் பாதிக்கப்பட்டது நாராயணன் மாஸ்டர் அல்ல; சிதம்பரம் தான். அவன் ப்ளஸ்டு படிக்கிறவன். மாஸ்டருக்குப் பிரதம சிடன்.

''சார்... இதை நாங்க விடப் போற தில்லே... இன்னிக்கு ஸ்ட்ரைக் பண்ணப் போறோம். பள்ளிக் கூடமே கொதிச் சிட்டிருக்கு.''

நாராயணன் அவன் அன்பை மெச்சுவது போல சின்ன சிரிப்பு ஒன்றை வெளிப்படுத்தி னார்.

''இது எச்.எம். சூழ்ச்சி சார்! பி.கே. எம்மை விட்டு அவர் தான் பெட்டிஷன் தட்டிவிட்டுட்டு, பின்னாலேயே போய் உங்க ளுக்கு ட்ரான்ஸ்ஃபர் ஏற்பாடு பண்ணி யிருக்கார்.''

நாராயணன் மாஸ்டருக்கு அவன் தேவை யில்லாமல் பெரிய பேச்சுப் பேசுவ தாகத் தோன்றியது.

சிதம்பரம் குமுறுகிறான். புரிந்தது. இன்று வெறும் குமுறலோடு நிற்கிற இவ னைப் பத்தாவதில் நாராயணன் மாஸ்டர் கலகக் காரனாகச் சந்தித்திருந்தார்.

அவனுக்கு மூக்கணாங்கயிறு போட்டு மடக்கி, படிமானத்துக்குக் கொண்டுவர இரண்டு ஆண்டு பிடித்திருக்கிறது அவருக்கு.

''சரி, அப்படியே வச்சுக்க! ஸ்ட்ரைக் பண்ணி என்ன சாதிக்கப் போறே?''

''இப்படியே மகாத்மா காந்தி மாதிரி பேசிப்பேசியே எங்களைக் கோழையாக்கிட் டீங்க சார்!''

சிதம்பரம் இன்னும் கூட ஒவராக அவருடன் பேசுவான்; பேசியிருக்கிறான். இதற்கெல்லாம் பாதிக்கப்படுகிறவர் அல்ல நாராயணன் மாஸ்டர்.

''நான்தான் நாளைக்குப் போயிடப் போறேனே!''

நாளையிலிருந்து நீ வீரன். விடுதலை பெற்ற வீரன் என்று நினைவுறுத்துகிற தோர ணையில் அவர் சொன்னார்.

''சார்!'' அவன் கலங்கிவிட்டான். கொடுத்த அடியை அவர் மௌனமாக வாங்கிக் கொண்டது மட்டுமின்றி இனி உங்க ளுக்கு நிர்ப்பந்தமில்லை, நான் போகச் சித்தமாகிவிட்டேன், இரண்டு ஆண்டுகளாக என் மீது நீங்கள் காட்டிய மரியாதைத் தொல் லைக்கு நன்றி. இப்படி என்னென்ன அர்த்த மெல்லாமோ தென்படுகிற மாதிரி ஒரு பார்வை. ஒரு சிரிப்பு.

''சார்...'' என்று மறுபடியும் சொன்னான் சிதம்பரம். குரல் கம்மியிருந்தது. தலை கவிழ்ந்தான். நிமிரும் போது கண்கள் கலங்கி யிருந்தன.

''சரி... கிளாஸுக்குப்போ! எனக்கு ரிலீ விங் ஆர்டர் ரெடியாயிட்டிருக்கு. நான் ஆபீஸ் ரூம் போறேன்!''

''இன்னிக்குப் பௌர்ணமி சார்!''

''ஹைக்கிங் தானே? உண்டு. அஞ்சரை மணிக்குப் பசங்களை ரெடி பண்ணி ரூமுக்குக் கூட்டிட்டு வந்துடு. அஞ்சே முக்காலுக்கு மலை அடிவாரம். கடைசி ஹைக்கிங். விட் டுடக் கூடாது.''

விட்டால் சிதம்பரம் அங்கேயே அழுது விடுவான் போலிருந்தது. முதுகில் ஓங்கி ஒரு தட்டு தட்டினார்.

''இதுதான் கோழைத்தனம்!''

''சார்....'' என்று தடுமாறினான் சிதம்பரம்.

''கிளாஸுக்குப் போ.''

அதற்கு மேல் நாராயணன் மாஸ்டர் அங்கே நிற்கவில்லை. அலுவலக அறை நோக்கி விறுவிறு வென்று நடந்தார்.

ஒவ்வொரு பௌர்ணமியிலும் பக்கத்தி லிருந்த மலைக்குப் பையன்களோடு ஹைகிங் போகிற மாதிரி அன்றும் அவர்

காத்திருந்தார். முதலில் வருகிற சிதம்பரம் வரவில்லை.

ரகுபதி தான் வந்தான்.

பர்ஸைத்திறந்து ஒரு இருபது ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார். பேசவில்லை.

பொரிகடலை, மிக்சர், பக்கோடா எல்லாம் வாங்கிவா வழக்கம் போல் என்று அதற்குப் பொருள்... ரகுபதிக்குப் புரிந்தது.

ஆனால் அவன் நோட்டை வாங்கவில்லை.

''இல்லே சார்..... இன்னிக்கு நாங்க தான் வாங்கப்போறோம்.''

நோட்டை வைத்துக் கொண்டே ஒரு கணம் யோசித்தார்.

''ஓகே! இதுக்கு வாழைப் பழம் வாங்கி வா.''

மீண்டும் அவன் தயங்கினான்.

''சொல்றேன் இல்லே'' என்று அவர் புருவத்தை நெறித்தார். அவன் மறுபேச்சின்றி நோட்டை வாங்கிக் கொண்டு வெளியேறினான்.

ஐந்தரை வரை சிதம்பரம் வரவில்லை.

வருத்தத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் நாராயணன் மாஸ்டர் புறப்பட்டார். பையன்கள் பின் தொடர்ந்தனர்.

வழக்கமாக வழியெல்லாம் பாட்டும் பேச்சும் சிரிப்புமாக ஒரே கலகலப்பாக இருக்கும். இன்று நிசப்தம். மௌன ஊர்வலம் போல.

வையவன்



''கோபி, ஒரு பாட்டு பாடேண்டா!''

''மூடில்லே சார்.''

''ஜெகன், என்னடா பேஸ்த் அடிச்ச மாதிரி வர்றான்?''

''சார் நாங்க எல்லாம் நொந்து போயி ருக்கோம்!''

''டேய்... இதை என்னை நம்பச் சொல் றீங்களா?''

''நம்பாட்டா விட்டுருங்க!''

நாராயணன் மாஸ்டருக்கு நெஞ்சு விம்மியது. ஒரு கணம் தான். அவரும் சாதாரண மனிதன்தான் என்று நினைவூட்டுவது போல். அவர் சமாளித்துக் கொண்டார்.

அன்பு ஓர் உரம்தான். பலவீனப்படுத்தும் சக்தி அல்ல. புரிந்து கொண்டிருந்த அவருக்கே இது சிரமமாக இருந்தது.

மலையடிவாரத்தில், மொட்டைப் பாறை மீது எதிரில் ஒரு குட்டையில் கல்லெறிந்து கொண்டிருந்த சிதம்பரம் தென்பட்டான்.

''சிதம்பரத்துக்கு ரூமுக்கு வரப்பிடிக்கலேடா கோபி!'' என்று கிண்டல் செய்தார் மாஸ்டர்.

அவன் எழுந்து கொண்டான்.

தன் குரல் தனியாக ஒற்றை ஒதுக்கத்தில் விலகி நிற்பதை உணர்ந்தவாறு மலையேறிக் கொண்டே நாராயணன் மாஸ்டர் பேசிக் கொண்டு போனார்.

''சிதம்பரம் இன்னிக்கு என்ன சொன்னான் தெரியுமா? நான் மகாத்மா காந்தி மாதிரி பேசிப் பேசியே ஒங்களையெல்லாம் கோழையாக் கிட்டேனாம்!''

யாரும் பதில் தரவில்லை.

''அவன் சொன்ன உதாரணம் தப்பு! நான் காந்திஜி மாதிரி பேசலே. காந்திஜி பேசி யாரும் கோழை ஆகலை.''

''சார்....'' என்று இடைமறித்து என்னவோ சொல்லப் போனான் சிதம்பரம்.

''இரு நான் முடிச்சுடறேன்! எனக்கு ட்ரான்ஸ்ஃபர் வந்திருக்கு. நான் அரசு ஊழியன். கிளம்புனா கிளம்பியாகணும். இவன் ஸ்ட்ரைக் பண்றேன்றான். அதுக்கெல்லாம் மசிந்து என் ட்ரான்ஸ்ஃபர் உத்தரவு ரத்து ஆயிடாது. என்ன சாதிக்கப் போறீங்கன்னு கேட்டதுக்கு இந்த பதில் சொல்றான்...''

மலைப்பாதை நெட்டுக் குத்தாக வளர்ந்து கொண்டு போயிற்று. அரை மணி நடந்தால் ஒரு மைதானத்தில் மேடை போட்ட மாதிரி ஒரு பாறை அடுக்கு வரும். நிலா வெளிச்சம். நல்ல காற்று. மூலிகை மணம் கமழும் காற்று, அங்கேதான் போய்க் கொண்டிருந்தார்கள்.

''ஜெகனுக்கும் சிதம்பரத்துக்கும் தாண்டா ஒங்கள்ளே எல்லாரையும் விட என் மேலே அதிக கோபம் இருக்கும்.''



ஏன் எதற்கு என்று யாரும் கேட்கவில்லை.

''டென்த்லே அவங்க பெஞ்சை ஒடச்சுக்கிட்டு இருந்தப்போ நான் தான் கையைக் கட்டிக்கிட்டு அவங்களை வேடிக்கை பார்த்தேன்!''

பிறகு அவர்கள் எதிரிலேயே ஓர் ஆசாரியைக் கூப்பிட்டு ரிப்பேர் செய்வித்து, அந்தக் கூலியைத் தன் கையிலிருந்து கொடுத்ததை அவர் சொல்ல வில்லை.

''ஐ திங்க்.... அவங்களுக்கு எது எது மேலயோ ஆத்திரம்! அதையெல்லாம் தீர்த்துக்கணும்னா, இந்த நாராயணன் மாஸ்டர் வேற பேசிப்பேசி அறுக்கறார்னு ஒரு பொறுமல்... இல்லே ஜெகன்?''

ஜெகன் முகம் உர்ரென்றிருந்தது. திரும்பிப் பார்க்காமலேயே அவருக்கு அது அப்படித்தான் இருக்கும் என்று தெரியும்.

''சார்.... நீங்க எது வேணும்னாலும் பேசுங்க!''

எல்லோரும் சூம்பிப் போயிருந்தனர். இன்று ஹைக்கிங் இருந்திருக்க வேண்டாம் என்று நினைப்பது போல. ஆனால் நாராயணன் மாஸ்டருக்கு அது அவசியப்பட்டது. இவர்கள் தன்னைப் பிரிவது போல தான் இவர்களைப் பிரிவதும் வருத்தமான விஷயம்.

அந்த வருத்தம் கொண்டாடிக் கொள்கிற கண்ணீர்க் காட்சியாக இருப்பதில் அவருக்குச் சம்மதமில்லை. அது ஒரு மகிழ்ச்சியின் முத்திரையோடு முடிவுற வேண்டும். அதற்கும் மேல்... அதற்கும் மேல்...

அதைப் பாறை அடுக்கின் மேல் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டியவராக அவர் நடந்தார்.

''ரகுபதிக்கு அவங்க பெற்றோர் அவன் டாக்டரோ இஞ்சினீயரோ ஆயிடணும்னு கொடயறதிலே ஆத்திரம். லோகுவுக்கு அவன் இஷ்டப்படி சினிமா வீடியோ பார்க்க விட மாட்டேங்கறாங்கன்னு ஆத்திரம். கணபதிக்கு அவன் ரசிகர் மன்றத்திலே தலையிடக் கூடாதுன்னு தடுக்கறாங்களேன்னு ஆத்திரம். பொதுவா எல்லாருக்கும் படிங்கடா படிங்கடான்னு எப்பப்பார்த்தாலும்

தயாரிப்பாளர் : நம்ம அடுத்த படத்திலே ஸ்டண்ட் காட்சி புதுமையாக இருக்கணும். இதுவரை எந்தப் படத்திலேயும் வராத காட்சியாகவும் இருக்கணும்.

டைரக்டர்: அதற்கென்ன? காரிலே தப்பித்துப் போகிற வில்லனை, கதாநாயகன் ரோடு எஞ்சினில் துரத்திப் போய்ப் பிடிக்கிற மாதிரி எடுத்துடலாம்!

-வெள்ளகால். இரா. கந்தையா.

எல்லாரும் கழுத்தை அறுக்கிறாங்களேன்னு பெரிய ஆத்திரம் இல்லையா?

எல்லோரும் மௌனமாக நடந்தனர். லோகு மட்டும் தாள முடியாமல் பேசினான்.

''இப்பிடிப் பேசிட்டே இருந்துட்டு நீங்க எங்களையெல்லாம் விட்டுட்டு நாளைக்குக் கெளம்பிடுவீங்க.''

''நானாவா போறேன்?''

பாதை ஒரு பாம்பு வளைசல் வளைந்தது.

''நீங்களா அனுப்புறீங்க?''

''நாங்க எங்க எதிர்ப்பைக் காட்டறோம் சார். எங்களை விடுங்க.''

''காட்டினா அதுக்கு என்ன அர்த்தம் வரும் தெரியுமா?''

''நீங்க எதிர்க்கச் சொன்னீங்கன்னு யாராவது சொல்வாங்க.''

''அது தான் ஈஸியாச் சொல்லிடலாமே! அதுக்கு மேல ஒண்ணு இருக்கே அதை யாராவது யோசிங்க.

''இப்பவே வேணாம். மேடைப்பாறையிலே சொன்னாப் போதும். அட என்னாங்கடா... என்னமோ மௌன ஊர்வலம் வந்துகிட்டிருக்கீங்க... ஜெகன் நீ பாடப் போற தில்லே.... இல்லே?''

ஜெகன், சர்ர் என்று மாஸ்டருக்குக் கோபம் வந்து விட்டது என்று புரிந்து கொண்டு நெளிந் தான்.

''சரி போங்கடா... நானே பாடறேன்.'' என்று சற்றும் தயங்காமல் நாராயணன் மாஸ்டர் பாடத் தொடங்கினார். பாரதி பாட்டு.

''காலமாம் வனத்தில் அண்டக் கோல மாமரத்தின் மீது காளி சக்தி என்ற பெயர் கொண்டு ரீங்காரமிட்டு உலவி வரும் வண்டு....''

கணீரென்ற குரல். மலை ஏற்றத்தையோ மூச்சிரைப்பையோ காட்டாத குரல். 'ஸாரே ஜஹான்ஸே அச்சா'வையும் 'கேன் யூ கெட் மீ எ லாஃபிங் வீடை'யும் பாடுகிற அதே ஈடுபாடு தோய்வு.

கொஞ்ச தூரம் போனதும் பையன்களுக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டது. ஒருவர் மாற்றி ஒருவர் என்று சினிமாப் பாட்டுகளைப் பாட ஆரம்பித்து விட்டார்கள். சிதம்பரம் தவிர.

மேடைப் பாறை வரும் போது நிலா உதித்து விட்டது. வெளிச்சம் பாறையைக் கழுவி மெழுகிக் கொண்டிருந்தது.

நாராயணன் மாஸ்டரைச் சுற்றிப் பையன்கள் உட்கார்ந்தனர். ரகுபதி பொட்டலங்களைப் பிரித்து ஆளுக்குக் கொஞ்சம் அள்ளிக் கொடுத்துக் கொண்டு வந்தான். அதற்கு அடுத்து ஜெகன் வாழைப் பழத்தை ஒவ்வொன்றாகக் கொடுத் தான்.

அது முடிந்ததும் வாட்டர் பாட்டில் தண்ணீர் எல்லாருக்கும் ஒரு வலம் வந்தது.

எல்லாம் முடிந்து காற்று மெல்ல வீசத் தொடங்கிய போது நாராயணன் மாஸ்டர் பேச ஆரம்பித்தார்.

''சிதம்பரத்துக்கு இப்ப எது மேலேடா ரொம்ப ஆத்திரம்... சொல்லு?''

''எது மேலேயும் இல்லே சார்!'' என்று சிதம்பரம் சொன்னான்.

''நிஜம்மா?''

''நிஜமா சார்.''

''ஸ்ட்ரைக் பண்றேன்னியே.''

''இப்ப இல்லே சார்.''

''ஏன்?''

''தப்புன்னு தோணிப்போச்சு.''

''எப்படி?''

மேடைப் பாறை வரையில் ஒத்திப் போட்டிருந்த செய்திக்காக அவர் தூண்டில் போட்டார்.

சிதம்பரம் பதிலளிக்கவில்லை.

''வேற யாராவது?''

கூட்டத்தில் ஒரு யோசனை மேகம் கவிந்தது.

''நீங்க என்னவெல்லாம் சொல்லிட்டு இருந்தீங்களோ அதுக்கு மரியாதை இல்லாம போயி டும் சார்!'' ஜெகன் சொன்னான்.

''கிட்டத்தட்ட சரி! தெளிவா யாராவது சொன்னா நல்லா இருக்கும்.''

மீண்டும் யோசித்தார்கள்.

அவர்களுக்கு வாய்ப்பளிக்கிற மாதிரி இரண்டு நிமிடம் விட்டுப் பின்னர் நாராயணன் மாஸ்டர் சொன்னார்.

''உங்களை எல்லாம் நான் ஏன் நேசிச்சேன், நேசிக்கறேன்னு ஒங்க எல்லாருக்கும் தெரியுமா?''

''சொல்லுங்க சார்!''

''ஜஸ்ட் உங்களுக்காகத்தான். வேற பிரதி பலன் எதிர்பார்த்து இல்லே.''

''.....''

''வழியிலே வர்றப்ப சொன்னேனே... நீங்க எல்லாம் எது எதுமேலயோ ஆத்திரமாயிருக்கீங்க... ஒங்களை எல்லாரும் புடிச்சு ஜெயில்லே தள்ளிட்டாப்பிலே சங்கிலியிலே மாட்டிட்டாப்பிலே ஒரு கோபம் இருக்கு இல்லே.''

''ஆமாம் சார்!'' ஒரு கோரஸ் வந்தது.

''இதுக்கெல்லாம் பேஸிக்கா இருக்கறது ஒங்க மேல உண்மையான அன்பு யாருக்கும் இல்லேன்ற ஏக்கம் தான். அதான் என்னை அட்ராக்ட் பண்ணியது! ஆனா உண்மை என்ன தெரியுமா?''

''.......''

''உங்களை நீங்களே போதுமான அளவு நேசிக்கலே.''

''புரியலே சார்...''

''இப்ப புரியாட்டி பரவால்லே. நிதானமா யோசிச்சா... நாள் கணக்கிலே மாசக் கணக்கிலே நெனச்சுக்கிட்டே இருந்தா புரிஞ்சுடும். எங்கிட்ட நீங்க பிரியமா இருக்கிங்களே... இது தான் நீங்க ஒங்களோடயே நேசமா இருக்கறதுக்கு சாம்பிள். இதை நான் மிஸ்யூஸ் பண்ணிட்டா ரொம்ப ரொம்ப சீப் ஆயிடுவேன்.''

அவர்களுக்கு மூடுபனியின் ஊடே ஓர் உருவம் புலப்படுவது போல் என்னமோ புரிந்தது.

''எனக்கு என்னமோ இந்த ட்ரான்ஸ்பர்லே எந்த வருத்தமும் இல்லாத மாதிரியும், ஒங்களை எல்லாம் விட்டுட்டுப் போறதிலே கவலையே இல்லாத மாதிரியும் தோணலாம். எனக்கும் வருத்தமா இருக்கு. வெறுப்பா இருக்கு. கோவமாக் கூட இருக்கு...''

கூட்டம் அவரையே வெறித்துப் பார்த்தது.

''எல்லாத்துக்கும் ஒரு தொடக்கம்னா ஒரு முடிவு உண்டு. இங்கே வந்தேன். ஒங்களையெல்லாம் பார்த்தேன். பழகினேன். இப்போ ஒரு முடிவு வந்திருக்கு. ''இதை ஏன் எதிர்க்கணும்... நானோ எனக்காக நீங்களோ தாறுமாறா ஏதாவது செஞ்சா என்ன பலன்?''

அவர் தோள்களை உலுக்கிக் கொண்டார். ஒரு பெருமூச்சு விட்டார். கைகளை விரித்தார்.

''ஒரு பலனும் வராது. எனக்குக் கெட்ட பேர் வர்றதை விட எதையோ என்னத்துக்காகவோ இழந்துட்ட வருத்தம் தான் எனக்கு மிஞ்சும்.'' நாராயணன் மாஸ்டர் அந்த 'எனக்கு'வை அழுத்திச் சொன்னார்.

சிதம்பரம் குறுக்கிட்டான்.

''நீங்க ரொம்ப அடக்கி வாசிக்கறீங்க சார்.''

''என்ன தப்பு? பெருக்கி வாசிக்கறதை விட அடக்கி வாசிக்கிறது மேல் இல்லே.''

எல்லோரும் சிரித்தனர்.

''இன்னும் கூட ஒங்களுக்கு நான் சரியா எக்ஸ்ப்ளெய்ன் பண்ணேனான்னு தெரியலே'' என்று தயங்கினார்.

''சார்.... சார்.... க்ளாஸ் எடுக்கறீங்க சார்!'' என்று ஜெகன் குறுக்கே கத்தினான்.

''ஆமாம்... லெட் இட் பீ..... கடைசி கிளாஸ்...''

மௌனம் நிலவிற்று.

''நீங்க டாக்டர் ஆகிறதோ இஞ்சினீயர் ஆக றதோ அமைச்சர் ஆகறதோ கலெக்டர் ஆகிறதோ எனக்கு ரொம்ப சந்தோஷம் தந்துவிடாது. நீங்க அதெல்லாமே ஆகணும்னு நான் எதிர்பார்க்கலே. ஆய்ட்டீங்கன்னா அதனாலே வருத்தப்பட்டுற மாட்டேன். நீங்க அதுக்கும் மேலே மேன்மையான மனுஷங்களானீங்க; அதுக்கு எங்கியோ நான் ஒரு சின்னத் தூண்டுதலா இருந்திருக்கேன்னா அப்ப தான் என் சந்தோஷம் உண்மையா இருக்கும்.''

கூட்டத்தில் உணர்ச்சிகளை மீறி எதுவோ ஒரு கனம் வந்து அழுத்திற்று.

மறுநாள் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நாராயணன் மாஸ்டரை வழியனுப்ப சிறு கூட்டம் நின்றிருந்தது. எல்லாரும் பையன்கள். சிதம்பரம் நடுவில் நின்றிருந்தான்.

ரயில் வந்தது. சாமான்களை ஏற்றி அவர் ஸீட் பிடித்து உட்கார்ந்தார். வெளியே பல கரங்கள் ஆடின. இரண்டு கைகள் மட்டும் கூப்பியிருந்தன. அது சிதம்பரம். ரயில் புறப்படுகிற வரை கூட கும்பிட்ட கை கும்பிட்ட மாதிரியே நின்றான்.

நாராயணன் மாஸ்டரும் கும்பிட்டார். மானுடம் உருவாகும்போது அதை வணங்கித் தானே ஆகவேண்டும்?

---

34 ஆம் பக்க விடைகள்...

1. டிரை-ஐஸ் என்ற உலர்ந்த பனிக்கட்டியை வெந்நீரில் போட்டால், 'குபுகுபு'வெனப் புகை வரும்.

2. பி. யு. சின்னப்பா. படம் - உத்தமபுத்திரன்.





3. எஸ். டி. சுதர்சனம்

4. 'கலங்காதிரு மனமே!' கன்னியின் காதலி, என்ற படத்தில்.

5. ஹரிச்சந்திரா - கன்னடத்திலிருந்து டப்பிங் செய்யப்பட்டது.

6. ஜெனோவா

7. ஜெயலலிதா

8. புன்னகை மன்னன்

9. எம். ஆர். ராதா குடும்பம். (எம். ஆர். ராதா, எம். ஆர். வாசு, ராதா ரவி, ராதிகா, நிரோஷா)

- மௌஷ்மி.

டாக்டர் பதில்கள்:

பாமாயில் உடம்புக்கு நல்லதுதானா?

★ எஸ். நாரம்புநாதன், சுரண்டை.

கைவிரல்களை மடக்கிச் சொடக்குப் போடுவதால் விரல்களுக்குப் பாதிப்பு ஏதேனும் ஏற்படுமா?

★★ டாக்டர். வ. நம்பி, சென்னை – 4.

அப்படி ஒன்றும் பாதிப்பு ஏற்படாது. ஆனால் விரல்களைச் சொடக்குப் போடுவதால் பயனும் கிடையாது. ஆனால் அது போல் கழுத்து எலும்புகளை நெட்டி முறிப்பது மிகவும் ஆபத்தானது. கை – கால் நரம்புகளைப் பாதிக்கும்.

பாமாயில் மனித உபயோகத்துக்கு ஏற்றதே அல்ல. அது இயந்திரங்களுக்கே ஏற்றது என்கிறார்களே – உண்மையா?

கொழுப்புச் சத்து அதிகம் உள்ளவர்களுக்கு, பாமாயில் மேலும் தீங்கு விளைவிக்கும். அதனால் தவிர்ப்பது நல்லது.

★ பி. முனுசாமி, பெங்களூர் – 21.

ஆஸ்த்துமா என்பது எப்படி வருகிறது? இதன் அறிகுறிகள் என்ன? இதை ஆரம்பத்திலேயே மீண்டும் வராமல் தடுக்க முடியாதா?

ஆஸ்த்துமாவில் பல வகைகள் உண்டு. அலர்ஜியால் வரலாம். அல்லது சிலருக்குப் பரம்பரையாகவும் வரலாம். ஆஸ்த்துமா அதிகமாக வராமல் பார்த்துக் கொள்ளலாம்; அடியோடு போய் விடும் என்று சொல்லுவதற்கில்லை. சில மருந்துகள் ஆஸ்த்துமாவை அடியோடு போக்கி விட்டது போல் தோன்றச் செய்யும். ஆனால் அம் மருந்துகள் உடலுக்கு நல்லவை அல்ல. அதனால் வியாதியை விட, வைத்தியம் மோசமாகி விடும் அபாயம் உண்டு. எனவே ஆஸ்த்துமாவை முழுவதுமாகக் குணப்படுத்த முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, அதன் கடுமையைக் குறைக்க மட்டுமே டாக்டரை அணுகவும்.


★ எம். கண்ணன், பெங்களூர் – 48.


சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகள், நார்மல் டெலிவரி ஆகும் குழந்தைகளை விடப் புத்திசாலிகளாக இருப்பதாக ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. இயற்கையான பிரசவத்தின் போது குழந்தையின் தலை அழுத்தத்துக்கு உள்ளாவதே காரணம் என்று இச் செய்தி சொல்லுகிறது. இது உண்மையா?

★★ டாக்டர் ரேவதி அனந்த் – சென்னை – 18

இது உண்மையே அல்ல. இயற்கைப் பிரசவத்தினால் மூளைப் பாதிப்பு குழந்தைக்கு நிச்சயம் உண்டாகாது. கர்ப்பவாசம் முழுமை அடைந்து பிரசவ நேரத்தின் போது தேவைப்படுமானால் மட்டுமே சில சமயம் குழந்தை எளிதாக வெளியே வர அவுட்லெட் ஃபோர்செப்ஸ் கருவியை உபயோகிக்கிறோம். இதனாலும் ஆபத்து ஏதும் இல்லை. சரியாகக் கவனிக்கப்படாத பிரசவமாக, குழந்தையின் தலை அளவுக்கும் தாயின் கூபக எலும்புக்கும் அதிக அளவு வித்தியாசம் இருந்து, குழந்தை அடைபட்டு அவதியுறும் போது மட்டுமே பிரெயின் டேமேஜ் ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்நாளில் இதை முன் கூட்டியே டாக்டர்கள் உணர்ந்து முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வசதி இருக்கிறது. இயற்கை ரீதியாக, நன்றாக வலி எடுத்துப் பிறக்கும் குழந்தைகள் புத்திசாலிகளாகவே இருக்கின்றன. சிசேரியன் குழந்தைகள் மட்டுமே சிறந்த புத்திசாலியாக இருக்க முடியும் என்ற எண்ணமே அபத்தமானது. தாய்க்கோ சேய்க்கோ மருத்துவ ரீதியாகத் தேவைப்பட்டால் மட்டுமே சிசேரியன் செய்ய வேண்டும்.

தொகுப்பு : எஸ். வி. என்.





மாமியார் என்னும் பதவி

லட்சுமி அம்மாளுக்கு ஒரே டென்ஷனாய் இருந்தது. இருக்காதா பின்னே? முதல் முதலாக மாமியாராகப் போகிறாள் அல்லவா?

பார்க்கப் போனால் 'மாமியார்' பதவி கிடைத்து, பத்து வருடங்களுக்கு மேலாகப் போகிறது. ஆனால் அதெல்லாம் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்து, மாப்பிள்ளைகள் வந்ததால் கிடைத்த உப்புச் சப்பில்லாத மாமியார் பதவி! இப்போது கிட்டப் போவதுதான் உண்மையான மாமியார் ஸ்தானம்! அதாவது, மாட்டுப் பெண்ணை ஆளப் போகும் மாமியார் பதவி!

சீதா, ராதா, கீதா என்ற மூன்று பெண்களுக்குப் பின் லட்சுமி அம்மாள் தவமிருந்து பெற்ற பிள்ளை கிருஷ்ணனுக்குத் தான் இப்போது திருமணம்!

திருமணத்துக்கு இன்னும் இரண்டே வாரங்கள்தான் இருந்தன. வீடு கல்யாணக் களை கட்டி விட்டது. பெண்களும் மற்ற உறவினர்களும் ஒவ்வொருவராகக் குடும்பத்துடன் வரத் தொடங்கி விட்டனர். அப்படி, இப்படி என்று ஒவ்வொருவராக, 'மாமியாராக நடந்து கொள்வது எப்படி?' என்பது பற்றி ஒரு புத்தகம் போடுமளவுக்கு லட்சுமி அம்மாளுக்குப் புத்திமதிகளை வாரி வழங்க ஆரம்பித்து விட்டனர்.



''நீ ரொம்ப ஸாஃப்டும்மா; இப்படியிருந்தா வர்ற மருமக உன்னை மதிக்க மாட்டா...'' என்றாள் பெரிய பெண் சீதா...

''நீ ரொம்ப ஸாஃப்டும்மா; இப்படி எல்லாம் இருந்தா வர்றவ உன்னை மதிக்க மாட்டா... மாமியாரா, லட்சணமா , நம்ம சீதா மாமியாராட்டம் கொஞ்சம் அதிகாரத் தோரணையோடு இரு...'' பெரிய பெண் சீதா பிள்ளையார் சுழி போட்டாள்.

அவள் திருமணமாகி முதல் மூன்று மாதங்கள் மாமியாருடன் கூட்டுக் குடும்பமாய் வசித்து விட்டு, அப்புறம் ட்ரான்ஸ்ஃபர் என்ற போர்வையில் கணவனுடன் பெங்களூருக்குப் பறந்தவள்தான்! இப்போது மூன்று வருடத்துக்கொருமுறை மாமியார் வீட்டுக்கு வந்தாலே பெரிய விஷயம்!

''ஆமாம்! அதுவும் இந்தப் பொண்ணு வேலைக்கு வேற போறாளாமே! நீ கிச்சன்ல புகுந்தியானா அவ்வளவுதான். உன்னை முழு நேரச் சமையல்காரி ஆக்கிடுவா....''

டில்லியிலிருந்து வந்திருந்த இரண்டாவது பெண் ராதா சேர்ந்து கொண்டாள். டில்லி வெயிலும் குளிரும் ஒத்துக் கொள்ளாது என்று மாமியார் மாமனாரைச் சீர்காழியிலேயே வைத்திருப்பவள் அவள்!

''அதெல்லாம் சீதா மாமியாராட்டம் முதல்லேயே கறாராய்ப் பேசிண்டுடு... சமையல் வேலை முழுதும் அவதான் செய்யணும்னு! இத்தனை நாள் உழைச்சது போதும்... இனிமேலாவது ஹாய்யா ரெஸ்ட் எடுத்துக்கோ!'' சிக்மகளூர் சித்தி சிறிய லெக்சரடித்தாள்.

''குழந்தை குட்டின்னு பொறந்தா ஆயா உத்யோகம் வேறு சேர்ந்துக்கும்; இப்ப நான் இல்லையா, சம்பளம் இல்லாத ஆயாவா...'' அகமதாபாத்திலிருந்து வந்திருந்த அத்தை அங்கலாய்த்தாள்.

'பாங்க்' வேலைக்குப் போகும் மருமகள் அவளுக்கு! ''உங்க சீதா மாமியார் மாதிரி 'குழந்தைகளை எல்லாம் ஓடி ஆடிப் பாத்துக்கற வயசில்ல எனக்கு. அதுக்கு ஒரு ஆயாவைப் போடு'ன்னு கண்டிஷனாச் சொல்லிடு...''

''உடம்பு சரியில்லைன்னு அவ சொன்னா, உருகிடாதே! நிஜமா ஜுரமடிக்கறதான்னு பாத்துட்டு, அப்புறம் வேலை செய்... சும்மா தலைவலி, கால் வலி, கை வலின்னா நம்பிடாதே! பெரும்பாலும் மாய்மாலமாத்தானிருக்கும்! என்னவோ முதுகுவலி முதுகுவலின்றாளேன்னு பரிதாபப்பட்டு நான் சமைக்கப் போக, இப்போ மாசத்துல முப்பது நாளும் அவளுக்கு முதுகுவலிதான்...'' - பெரியம்மா பெருமூச்செறிந்தாள்.

''பேசாம, நம்ம சீதா மாமியார் மாதிரி, அவளுக்கு உடம்புன்னா உடனே உனக்கும் உடம்புன்னு போர்வையை இழுத்துப் போத்திண்டு படுத்துடு! அப்ப வேற வழியில்லாம அவளே எழுந்து சமைப்பா; இல்லை உன் பிள்ளை பாத்துக்கறான்...'' சீதா அறிவுரையைத் தொடர்ந்தாள்.

''ஆனா அவனுக்குச் சமையல்னா என்னன்னே தெரியாதேடீ...'' லட்சுமி அம்மாள், உண்மையிலேயே அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்று விசனப்பட்டாள்.

''அதெல்லாம் அம்மாவுக்குச் செய்யிறதுன்னா எந்தப் பிள்ளைக்கும் வணங்காது; பெண்டாட்டிக்கு உடம்பு முடியலைன்னா விழுந்தடிச்சுண்டு செய்வான்கள்...'' ராதா நொடித்தாள்.

''அப்புறம் இதையும் முதல்லியே சொல்லிடு... என் பொண்கள்ளாம் லீவுக்கு இங்கே வருவா; அப்போ நீ பாட்டுக்குப் பொறந்தாத்துக்குக் கிளம்பிடக் கூடாது, இங்கே இருந்து எல்லாரையும் ஒழுங்காக் கவனிக்கணும்னு...'' பாட்டி இடைச்செருகலாய்ச் சொல்லி வைத்தாள்.

''ஆமாமாம், அப்பப்ப எங்களைப் பத்தி எல்லாம் ஏதாவது பெருமையாச் சொல்லிண்டிரு.. அப்பத்தான் எங்களை மதிப்பா; இல்லைன்னா தனக்கு நிகர் யாருமில்லைன்ற நினைப்பாயிருக்கும்...'' சீதா கொசுறாக உபதேசித்தாள். இப்பவும் சீர்காழி போனால் என் நாத்தனார் புராணந்தான் கேக்கணும்... எனக்கானா வருஷத்துல ஒரு மாசம்; சீதாவுக்குப் பாவம் தெனம் இந்த ரோதனைதான்...''

''பக்கத்துலேயே பொறந்தகம்னு சும்மா சும்மா வீட்டுக்குக் கிளம்பிடப் போறா! சீதா மாமியாரைப் பாரு... கல்யாணம்னாக் கூட இரண்டு நாள் முன்னாடிதான் அனுப்பறா..'' - இது சீதா.

''அடிக்கடி சினிமா, டிராமா, ஃப்ரெண்ட்ஸுன்னு அவா ஜாலியாக் கிளம்பிண்டு உன்னை வீட்டுல 'வாட்ச்மேன்' வேலை பார்க்கச் சொல்லப் போறா. உஷாரா இரு; நீயும் கூடுமானவரை 'இந்த டிராமா எனக்குப் பிடிக்கும், அந்த ஃப்ரெண்டு எனக்குத் தெரிஞ்சவன்னு கூடவே கிளம்பிடு; இல்லைன்னா என்னை மாதிரித்தான் ஆகணும். சிவா விஷ்ணு

ஜெயஸ்ரீராஜ்



''ஜோசியரே... என் காதல் கைகூடுமான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன்...''

''எதிர்ப்பே இருக்காது... பெண் வீட்டில் இருந்து முழு ஒத்துழைப்புக் கிடைக்கும்.''

''ரொம்ப தாங்க்ஸ் மாமா... நீங்களே ஒரு முகூர்த்த நாளும் பார்த்துச் சொல்லிடுங்களேன்.''

- திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.

ஆலயத்தைத் தவிர எனக்குப் போக்கிடம் கிடையாது; மாட்டுப் பெண் மெட்றாஸையே ஒரு சுத்துச் சுத்துவா...'' - மாம்பலத்திலிருந்து வந்திருந்த மாமி, தன் வாழ்க்கை அனுபவத்திலிருந்து கற்ற பாடத்தைப் போதித்தாள்.

ஆளுக்கொரு உபதேசம் செய்து, இயற்கையிலேயே தணிந்த சுபாவம் கொண்டுள்ள லட்சுமி அம்மாளை, கொஞ்சமேனும் மாமியார்த்தனத்துடன் நடந்து கொள்ளத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

''நாங்க ஏதோ கொஞ்சம் சொல்றோம்; நாளைக்கு கீதா வந்தா நன்னாச் சொல்லிக் கொடுப்பா; வருஷக்கணக்கா படகாமணி மாமியாரோட குப்பை கொட்றாளே...''

ஒருவழியாக இந்தப் பேச்சு முற்றுப் பெற்று கல்யாண ஜவுளியில் திசை திரும்பியது.

மறுநாள் கீதா வந்து சேர்ந்தாள். அவளைச் சுற்றி, மாமியார் கொடுமைகளைக் கேட்கும் ஆர்வத்துடன் ஒரு கூட்டம் கூடியது.

'ரொம்ப டயர்டா இருக்கு; கொஞ்சம் படுத்துண்டு ரெஸ்ட் எடுத்துக்கறேன். அப்புறமாப் பேசலாம்'' என்று கீதா சொல்லவும் மற்றவர்கள் ஷாப்பிங் கிளம்பிச் சென்றனர்.

எதிர்பார்த்தது போல, தூங்கி எழுந்ததும் கீதா, லட்சுமி அம்மாளிடம் சென்றாள். ''கங்கிராட்ஸ்மா... மாட்டுப் பெண் வரப் போறா... மாமியாராகத் தயாராயிட்டியா?'' என்று ஆரம்பித்தாள்.

இவளிடமிருந்து பெரிய உபதேசத்தை எதிர்பார்த்த லட்சுமி அம்மாள், தயாராக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து விட்டாள்.

''இதோ பாரும்மா... அவ உனக்கு ஒரே மாட்டுப் பொண்ணு... அவகிட்ட அன்பா ஆதரவா நடந்துக்க; எங்களைப் பத்தின பெருமை எல்லாம் அனாவசியமாப் பீத்தாதே! முடிஞ்சவரைக்கும் அவளுக்கு உதவி செய்; உடம்பு சரியில்லைன்னா பரிவாக் கஞ்சி வெச்சுக் குடு; ஆபீஸிலிருந்து வந்தா ஒரு காப்பி போட்டுக் குடு; ஏதாவது சினிமா, டிராமான்னு நீயே அனுப்பி வை; மாசத்துல ஒரு நாளோ ரெண்டு நாளோ, வெளியில சாப்பிடச் சொல்லு; அவ அம்மா வீட்டுக்கு மாசத்துல ஒன்னு ரெண்டு வாட்டி அனுப்பி வை...''

அவள் சொல்லச் சொல்ல, லட்சுமி அம்மாளுக்கு மயக்கம் வரும்போலிருந்தது. தனிக் குடித்தனம் எனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பவர்கள் எல்லாம் தன்னைச் சர்வாதிகாரியாக மாறச் சொல்கிறார்கள். ஒரு சர்வாதிகாரி மாமியாரிடம் மாட்டிக் கொண்டு ஆயிரம் அல்லல்படும் இந்தப் பெண், தன்னை அன்புருவாக மாறச் சொல்கிறாளே!

''என்னம்மா? நான் சொல்றது ஆச்சரியமா இருக்கா? தினமும் நான் ஆபீஸிலிருந்து களைப்பா வீடு திரும்பும் போது, யாராவது ஒரு வாய் காப்பி தர மாட்டாளான்னு தோணும்; அத்தனை வேலையும் தனியாச் செய்யிறச்ச 'கல்லுப் பிள்ளையாராட்டம் உக்காந்திருக்காளே! இவ கூட மாட உதவி செய்யக்கூடாதான்னு இருக்கும்; என்னிக்கானா சினிமா டிராமான்னு கிளம்பினா நானும் வரேன்னு ஒட்டிக்கிறவளைப் பார்த்தா எரிச்சல் வரும்; அவ பெண்ணின் பெருமைகளை அடிக்கடி பீத்திக்கறச்ச, இவ ஊமையாயிடக் கூடாதான்னு தோணும்; குழந்தை எத்தனை அழுதாலும் நானோ ஆயாவோதான் தூக்கணும்னு, தன்பாட்டுக்குப் புத்தகம் படிச்சுண்டிருக்கறவளைக் கண்டா 'சீ'ன்னு போயிடும்; நீ இப்படி எல்லாம் நடந்துண்டா, வர்ற பொண்ணும் உன்னைப் பத்தி இப்படித்தானே நினைப்பா? தலைவிதியேன்னு ரெண்டு பேரும் சேர்ந்திருக்கறதை விட, அன்போடயும் பாசத்தோடயும் இணைஞ்சிருந்தா அது அழகு...''

கீதா இப்படிச் சொல்லச் சொல்ல லட்சுமி அம்மாள் நெகிழ்ந்து போனாள்.



முடிவுக்கு வந்தார்.

''சுவாமி... மண்ணுலகில் வாழும் மகான்கள் பலரும் சம்சார சாகரம், பாச வலை போன்றவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று உங்களை நோக்கிக் கதறுகிறார்களே, சம்சார பந்தம் என்பது என்ன, அவ்வளவு சங்கடமானதா? ஒரே சமயத்தில் பல காரியங்கள் ஆற்றக் கூடிய பலம் பொருந்திய மனிதனால் பகவானை அனுபவித்துக் கொண்டே இல்லறத்திலும் இருக்க முடியாதா?

''நாரதா... முடியாது என்று இல்லை... ஆனால் அது அவ்வளவு எளிது இல்லை, பலராலும் முடிவதில்லை என்பது யதார்த்தம்...''

''அப்படியா...! சம்சார பந்தம் என்பது இவ்வளவு சிக்கல் என்பதை என்னால் நம்ப முடியவில்லையே...'' என்று இழுத்தார் நாரதர்.

நாராயணர் பேச்சை மாற்றினார். ''நாரதா... ஒரு சிறிய உதவி தேவைப்படுகிறது. எனக்குத் தாகமாக இருக்கிறது; பூமிக்குப் போய் கங்கை நீரை இந்தக் குடம் நிறையக் கொண்டு வர முடியுமா...?'' என்று கேட்டவாறே வெள்ளிக் குடம் ஒன்றை எடுத்து நீட்டினார்.

பூமிக்கு வந்த நாரதர், வெள்ளிக் குடத்தைக் கங்கை வெள்ளத்தில் அமிழ்த்தினார். நிமிர்ந்தவருக்கு ஓர் அதிர்ச்சி! எதிர்க்கரையில் ஒரு மானுட மின்னல். மலர் சூடிய மலர்... வெளிச்சமான விழிகளில் நாணத்தின் நளினமான நாட்டியம். ஆற்று வெள்ளத்தில் வெள்ளிக் குடம் அடித்துப் போவது கூட நாரதருக்குத் தெரியவில்லை.

இல்லறம் தொடங்கிப் பிள்ளைகள் பிறந்து, அவர்கள் வாழ்க்கை வளர்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் பரபரப்பாகத் திருமதி நாரதர் ஓடி வந்தாள். ''ஆற்றில் வெள்ளம் அதிகமாகிப் பாய்கிறது. இந்தக் கரை பள்ளமானது.. நாம் மறுகரை போவது நல்லது. அது மேடு.. வாருங்கள்...'' என்று அவசரப்படுத்தினாள்.

கையில் கிடைத்த பொருட்களை அள்ளிக் கொண்டு, குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு, மனைவியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, வெள்ளத்தில் போராடி அயர்ந்தார் நாரதர். வெள்ளத்தின் வேகத்தில் சேகரித்து வைத்த பொன்னும் பொருளும் நழுவிப் போயின. மனைவியும் பிள்ளைகளும் முழுகத் தொடங்கினர். ஒரே கூச்சல் குழப்பம். யாரைக் காப்பாற்றுவது என்று புரியாமல் தவித்துப் போனார் நாரதர். அடுத்த விநாடி ஒரு பெரிய அலை அவரையே சுழற்றி எடுத்தது. 'ஐயோ என்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்வேன்?' என்று தத்தளித்தார்.

அப்போது ஒரு குரல் கேட்டது. ''நாரதா.. நலம்தானா?''

திடுக்கிட்டுத் திரும்பினார். வெள்ளத்தின் மேலே திருமாலின் திருஉருவம்!

சுவாமி சிரித்தார். ''நாரதா, குடிக்கத் தண்ணீர் கேட்டேன். இவ்வளவு வெள்ளம் போகிறது.. இன்னுமா எடுக்க முடியவில்லை...?''

மாயவன் நிகழ்த்திய மாயா லீலையில் சம்சார சாகரத்தின் ஆழம் நாரதருக்குப் புரிந்து விட்டது. ''ஆளை விடுங்கள் சுவாமி... நாராயணா... நாராயணா...'' என்று ஓட ஆரம்பித்தார் நாரதர்!

(இன்னும் சொல்வேன்)

மிச்சமிருப்பது ஒரு தோட்டா

ஒரு முன்னுரை

துப்பாக்கியில் ஒரு தோட்டாதான் பாக்கியிருந்தது.

கார்த்திகேயனின் நெஞ்சு விரிந்து அடங்கிய போது, ஒரு பெருமூச்சு விடுதலையானது.

ஒரு தோட்டா. ஒரே தோட்டா. இன்றைக்கும் அவன் தவற விட்டால், அப்புறம் இந்தத் துப்பாக்கியைத் தொடுவதற்கு அவனுக்கு அருகதையே இல்லை. வெட்கமும், கசப்பும் அவன் நெஞ்சில் மேகமிட்டன.

கனத்த பூட்ஸ்களால் இருட்டை மிதித்துக் கொண்டு, அவன் ரகசியமாக முன்னேறினான். தைலக் காற்று அவன் நாசிகளை வருடியது. பிடிவாதப் பூச்சிகள் சட்டைக் காலருக்குள் பறந்து வந்து அமர்ந்தன. மரங்களின் கிளைகளில் சொடக்கு விழுந்தன.

பூமி சற்று மேடிட்டுச் சரேலெனச் சரிந்த பகுதியை அடைந்ததும் அவன் நின்றான். குழந்தை விட்டெறிந்த பொம்மை போல, பரந்த பிரதேசத்தில் ஒற்றைக் கல் மட்டும் உயரமாக நின்றது. அதன் நிழலில் சென்று மண்டியிட்டு அமர்ந்தான். இந்த கோணத்திலிருந்து மலையின் விளிம்பிற்குள் யார் பிரவேசித்தாலும் அவனால் பார்த்து விட முடியும். ஆனால் அவனையும், இரக்கமில்லாத அவன் துப்பாக்கி முனையையும் யாரும் பார்த்து விட முடியாது.

தன் ஒளிவிடத்தில் சௌகரியமாக அமர்ந்து கார்த்திகேயன், தன் எதிரிக்காகக் காத்திருந்தான்.

சத்தார் பாறையில் ஒருக்களித்துப் படுத்திருந்தான்.

ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பு வந்து, அவன் அந்தப் பாறையில் உடம்பைச் சரித்த போது, அது இவ்வளவு வெப்பத்தை உமிழும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. போலீஸிடமிருந்து ஓடி ஓடிக் களைத்திருந்த கால்களுக்கு ஓய்வு கொடுத்தால் போதும் என்றுதான் அப்போது தோன்றியது.

பார்வையை மட்டும் உயர்த்திப் பார்த்தான்.

நல்ல வெளிச்சத்தில் இந்த இடம் ஓர் அற்புத இயற்கைக் காட்சியாய் அசத்தும் என்று தோன்றியது. வயிற்றை உள்ளே இழுத்து, முழங்கால்களில் கையூன்றி நிற்கும் இளம் பெண்ணைப் போல் மலை அங்கே செங்குத்தாக உள்வாங்கியிருந்தது. அதன் மடிப்பில் படுத்திருந்த அவனை மேலேயிருந்து யாராலும் பார்த்து விட முடியாது. அவனிருந்த இடத்திலிருந்து பத்தடி கீழே, சதா சர்வகாலமும் முணுமுணுத்துக் கொண்டு பாயும் சிற்றோடை.

சத்தார் கைகளை தலைக்குப் பின்னே ஆதரவாக்கி மல்லாந்து படுத்தான். மே...லே... மலைப் பாதையில் அவ்வப்போது விரையும் வாகனங்களின் இரட்டைக் கண் வெளிச்சங்கள் இருள் வானத்தில் டார்ச் அடித்து எதையோ தேடின, விலகின. நரைத்த புருவத்திலிருந்து உதிர்ந்த முடி போல் மெல்லிய நிலா.

சத்தார் கண்களை மூடினான். மூடிய இமைகளை நனைத்து, விழிகளுக்குள் திடீரென வெளிச்சம் வழிந்ததும் திடுக்கிட்டு விழித்தான். விறைத்தான்.

நிஜமா?

எழுந்து உட்கார்ந்தான். அவன் பார்வையின் நேர்க் கோட்டிலிருந்த உயரமான உச்சியில் இருந்த பாறையின் விளிம்பில் இரண்டு வெளிச்சங்கள் தொங்கின. அபாயகரமான உச்சியில் யார் அது?

வெளிச்சங்களின் சிதறலிலிருந்து அவை ஒரு காரின் முன் விளக்குகள் என்று

அஞ்சனா மைக்கேல்ராஜ்

அவனுக்கு உறைத்த போது, அதிர்ந்து எழுந்து உட்கார்ந்தான்.

அந்த வெளிச்சங்கள் சற்றே ஊசலாடின. திடீரெனச் செங்குத்தாக இறங்கின. மின்னலை இணையாக இழுத்துக் கிழித்தது போல், பாறைகளை வெளிச்சமிட்டுக் கொண்டு வீழ்ந்தன. கிட்டத்தட்ட முந்நூறு அடி ஆழத்தை நொடிகளின் பின்ன நேரத்திற்குள் பயணம் செய்து -

வலுத்த பாறையின் மீது உலோகம் மோதியது. தீப்பொறி பறந்தது. இரண்டு வெளிச்சக் கண்களும் கண்ணாடிகளாகச் சிதறின. குருடாயின.

அமானுஷ்யமான கூச்சல் ஒன்று காருக்குள்ளிருந்து எழுந்தது.

கார் மூக்காலேயே இன்னொரு பாறைக்குத் தத்தியது. ஒருக்களித்தது. மல்லாந்தது. புரண்டது. குட்டிக்கரணமிட்டது. குப்புற அடங்கியது.

சற்று முன் வெளிச்சங்கள் லாந்தர்கள் போல் தொங்கிய அந்த உச்சியின் மீதிருந்து, டயர்கள் கிறிச்சிடும் சப்தம் கேட்டது. நிறுத்தப்பட்ட வாகனங்களின் வெளிச்சத்தின் பின்னணியில் பொம்மை பொம்மையாய் மனித உருவங்கள் அங்கு கூடின. எட்டிப் பார்த்தன.

அத்தனை தூரத்திலிருந்தும் சத்தாரால் அவர்களின் சீருடைகளை உடனே அடையாளம் புரிந்து கொள்ள முடிந்தது.

போலீஸ்!

அப்படியானால் கீழே உதிர்ந்த அந்தக் கார் போலீஸால் துரத்தப்பட்டு, பாதையிலிருந்து கட்டுப்பாடில்லாமல் விலகி, உச்சியிலிருந்து வீழ்ந்திருக்க வேண்டும். போலீஸ் உச்சியிலிருந்து குதித்து விட முடியாது. பாதை பிடித்து நடந்துதான் இறங்கி வந்தாக வேண்டும். அந்தப் பள்ளத்தை அடைய அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை.

வாகனங்களின் வெளிச்சம், டார்ச்களின் பிரகாசம், நிலவின் ஒளி எதுவோ எங்கோ பிரதிபலித்து, மிக மிக மங்கலான வெளிச்சம் அங்கே தென்பட்டது.

சத்தார் பார்த்தான். கார் விழுந்து



நொறுங்கிக் கிடந்த இடத்தை அவன் வெகு துரிதமாக அடைந்து விட முடியும். போலீஸ் இறங்கி வருவதற்கான சரியான வழியைத் தேர்வு செய்வதற்குள் அவன் காரை அடைந்து, ஆராய்ந்து, அவசியமென்றால் வெகு உன்னதமாய்ப் பின் வாங்கி விடலாம்.

ஆர்வம் அவனை உந்தித் தள்ளியது.

பாறைகளின் நிழல்களில் அவன் நீரைப் போல் வழிந்து வழிந்து இறங்கினான். சிற்றோடையைக் கடந்து ஒரு கல்லின் விளிம்பில் தொங்கிக் குதித்தான். காலடியில் கண்ணாடித் துண்டங்கள் நொறுங்கின.

கார் முதலில் மோதிய இடம்!

இரண்டு நிமிடங்களுக்கும் குறைவான அவகாசத்தில் அவன் காரை நெருங்கி விட்டான்.

மூன்று பாறைகளின் நடுவே குழிந்த பகுதியில் - லாரிச் சக்கரத்தில் சிக்கிய தகர டப்பா போல - கார் நசுங்கிச் சிக்கியிருந்தது.

''ம்ஹ்... ம்ஹ்.... ம்ஹ்..''

சத்தார் திடுக்கிட்டான். மனித முனகல். நசுங்கிக் கிடந்த காருக்குள்ளிருந்து. இத்தனை உயரத்தில் இருந்து விழுந்த காரில் யாரும் உயிருடன் மிச்சமிருக்க முடியும் என்பதே அவனுக்குத் திகைப்பாய் இருந்தது.

சௌகர்யமான கோணத்தில் காரை நெருங்கினான். தயங்கி விட்டு, அவனுடைய சிறிய டார்ச்சை எடுத்தான். அதன் வெளிச்சத்தை நசுங்கிய தகரங்களுக்கு நடுவில் பாய்ச்சினான்.

காட்சி நெஞ்சைத் தாக்கியது.

காரின் நசுங்கிய கூரைக்கும், ஸ்டியரிங் வீலிற்கும் இடையில் அவனுடைய பெரும் பகுதி சிக்கியிருக்க, தலை தொய்ந்து தொங்கிக் கொண்டிருந்தவன் வெளிச்சத்தால் கவரப்பட்டு நிமிர்ந்தான்.

'ஹ... ஹ... ஹ...' என்று அவன் மூச்சு இறுதி பயத்தில் ஒலித்தது. தோளருகே சட்டை கிழிந்து, இரும்பு பிரவேசித்து ரத்தமும் சதையுமாகத் தீற்றப்பட்ட ஓர் இடம் தவிர, அவன் அதிக சேதமில்லாமல் உயிருடன் இருந்தான்.

''த..ண்...ணீ..ர்... தண்ணீர்...'' என்று ரகசியமாகக் கெஞ்சியது அவன் குரல்.

காற்றில் பெட்ரோல் வாசம் சேரத் துவங்கியிருந்தது.

''இங்கே ஏது தண்ணீர்? யார் நீ?'' சத்தார் டார்ச்சை அவன் கண்களுக்குள் அடித்துக் கூசச் செய்தான்.

''என்னைக் .காப்பாற்று... உனக்கு லட்ச ரூபாய் தருகிறேன்.. என்னைக் காப் பாற்று...'' அவன் தொடங்கிய நிலையில், சத்தாரைப் பார்ப்பதற்காகத் தலையை மிக வும் வளைத்து வேதனைக்குள்ளானான்.

சத்தார் சிரித்தான். இரக்கமில்லாத சிரிப்பு.

''லட்ச ரூபாய்! இந்தப் பொட்டல் காட் டில் எங்கே வைத்திருக்கிறாய் உன் லட்ச ரூபாயை!''

''என்னைக் காப்பாற்று. என் அம்மா வின் மேல் ஆணை - ஒன்றென்ன, உனக்கு இரண்டு லட்சம் கூடத் தருகிறேன்!''

சத்தார் மறுபடியும் சிரித்தான். ''அம்மாவின் மேல் ஆணை! உன்னையே யார் என்று எனக்குத் தெரியாது. உன் அம்மாவை வேறு தெரிந்து கொள்ள வேண்டுமா?''

''என் பெயர் சுகுமார். என்னைப் போலீஸ்...'' அவனுக்குத் தொண்டையில் சின்ன இருமல் உருவானது. வாயோரம் மெல்லிய ரத்தக் கோடு வழிந்தது.

சத்தார் ஓடினான். இரண்டே எட்டில் சிற்றோடையை அடைந்தான். தன் கைக் குட்டையை நனைத்து எடுத்து வந்தான். சுகுமார் செத்து விடக் கூடாது. லட்ச ரூபாய் என்று ஏதோ சொன்னானே. அது என்ன என்று தெரிந்து கொள்வதற்குள் அவன் செத்து விடக் கூடாது!

சுகுமாரின் தாகமிக்க நாக்கில் கைக் குட்டையைப் பி ழி ந் த ா ன். காரில் சுகுமாரைத் தவிர வேறு யாரும் பயணம் செய்யவில்லை என்பது தெரிந்தது.

சுகுமாரின் மு க த் தி ல் வலியின் வேதனை உச்சத்திலிருந்தது.

''கால் எலும்பு முறிந்து விட்டது என்று நினைக்கிறேன்...'' என்று சொல்வதற்குள் அவன் நாக்கு பலமுறை புரண்டு விட்டது. ''என்னை வெளியே எடுத்து விட மாட்டாயா?''

இப்போது இன்னும் பிரகாசமான வெளிச்சம் அந்தப் பகுதியில் வீசப்பட்டது. போலீஸின் சக்திவாய்ந்த பைனாகுலர் களின் கண்காணிப்பில் தன் பிம்பம் விழுவதைச் சத்தார் விரும்பவில்லை. முகத் தைத் திருப்பிக் குனிந்து கொண்டான்.

''இதோ பார்... என் பெயர் சத்தார். ஒரு கொலை வழக்கில் என்னைப் போலீஸ் கைது செய்திருந்தது. நான் லாக்கப்பி லிருந்து தப்பி விட்டேன். என்னையும் போலீஸ் தேடுகிறது...''

''அப்படியானால் நிச்சயம் நீ எனக்கு உதவி செய்வாய்!''

''செய்வேன்... ஆனால் உன்னை ஏன் போலீஸ் துரத்துகிறது என்று சொல்...'' சத்தார் ரகசியமாகக் கேட்டான்.



'''பத்தாயிரம் ஒரு தரம்... பத்தாயிரம் இரண்டாம்தரம்...' என்று சப்தம் கேட்குதே.. அந்த ஆபீஸ்ல ஏலம் போடறாங்களா?''

''இல்லே... கம்பெனியில் இண்டர் வியூ நடந்துக்கிட்டிருக்கு. அதுதான்.''

- திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.

''இன்று காலை ஒரு பாங்க்கிலிருந்து நாலரை லட்ச ரூபாயைத் துப்பாக்கி முனை யில் கொள்ளை அடித்தேன். புத்திசாலித்தன மாக நடந்து கொள்ள முயன்ற மானேஜ ரைக் காயப்படுத்த வேண்டி வந்தது. முக மூடி அணிந்து தான் போனேன்... ஆனால் போலீஸ் எப்படியோ மோப்பம் பிடித்து வந்து விட்டது. பணத்தை ஒளித்து வைத்த இடத்திலிருந்து அள்ளிப் போட்டுக் கொண்டு, நான் காரில் தப்பித்த போது துரத்த ஆரம்பித்து விட்டது....''

''பணம் இப்போது காரில்தான் இருக் கிறதா?''

''இரண்டு பெட்டிகளில் பின் சீட்டில் வைத்... ஹம்மாவ்...'' சுகுமார் அதிகம் பேசியதாலோ என்னவோ ஏதோ அவன் தொண்டைக் குழியில் அடைத்தது.

சத்தார் சுகுமாரிடமிருந்து கவனத்தைத் திருப்பினான். காரின் பின்பகுதியைக் கவ னித்தான். பாறைகளில் மோதியதில் அந்தப் பகுதியும் நசுங்கியிருந்தது. ஆனால் நேரடி யாக முத்தமிட்ட முன்பகுதியைப் போல அவ்வளவு நஷ்டமில்லை. பிளந்திருந்த ஜன்னல் வழியே கை விட்டான். இருட்டில் துழாவினான்.

அதோ....

மிகவும் எக்கி முயன்ற போது, முதல் பெட்டி, இன்னும் சற்று சிரமப்படுத்திக் கொண்டதில் இரண்டாவது பெட்டி... ஒன் றன் பின் ஒன்றாக வெளியே எடுத்தான்.

''உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் எனக்கு ஆசை, சுகுமார்.. ஆனால் உன்னை நசுக்கியிருக்கும் காரின் இரும்பை என்னால் தனியாக நகர்த்த முடி யாது...''

''பணம்... என் பணம்...''

''சாகப் போகிறவனுக்குப் பணம் எதற்கு? போலீஸ் வரும் போது நீ அநா

வசியமாக என்னைப் பற்றி அடை யாளம் சொல்லி உன் உடம்பை வருத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காக...''

சத்தார் சற்றுத் தள்ளி நின்று தீக்குச்சி யை உரசிக் காருக்குள் எறிந்தான். ஒழுகிச் சேர ஆரம்பித்திருந்த பெட்ரோல் பசியுடன் பற்றிக் கொண்டது.

முழங்கைகளில், முழங்கால்களில், அங்கங்கே துணி கிழிந்து, சிராய்ப்பு. இரண்டு புஜங்களிலும் அபரிமிதமான வலி. இரண்டு பெட்டிகளையும் சுமந்து கொண்டு, கரடுமுரடான மலையின் செங் குத்தான சரிவுகளில் ஏறுவது என்பது, எத்தனை வேதனையான விஷயம் என்பது பற்றி விரிவான வியாசம் எழுதும் அள வுக்குச் சத்தார் அறிந்திருந்தான்.

போலீஸைப் பொறுத்தவரை அத்தனை பணமும் எரிந்து போய் விட்டதாக நினைத் திருப்பார்கள். போலி பாஸ்போர்ட் டிற்கும், தப்பித்து வெகு தூரம் செல்வ தற்கும் தேவையான பணத்தை அவனுக் காகவே கொள்ளையடித்துச் சுகுமார் கொண்டு வந்தது போல் இருந்தது.

சத்தாரின் ரத்தத்தில் புது உற்சாகம் வந்தது.

இன்னும் பத்துப் பதினைந்தடிகள் தாம். ஏறி விட்டால் மலையின் விளிம்பை எட்டி விடலாம். இருள் மிக உக்கிரமாய் இருந்தது.

நெளிந்து நெளிந்து தான் ஏறி வந்த பாதையைக் குனிந்து பார்த்த சத்தாருக்கு ஆச்சரியமாயிருந்தது. இவ்வளவு தூரமா வந்து விட்டோம்!

மிச்சமிருந்த பகுதியை ஏறியதும் ஒவ்வொரு பெட்டியாக மேலே வைத்தான். பின், அந்தப் பாறை விளிம்பை இரு கைக ளாலும் பற்றி எம்பி ஏறினான். முழங்கா லிட்டு அமர்ந்தான். அவன் அமர்ந்திருந்த இடத்தை ஒரு எதேச்சையான புதர் மறைத்தது. மெல்லத் தலையை உயர்த்தி னான். சுதந்திரம் கைக்கெட்டும் தூரத்தில்!

தைல வாசம் காற்றில் இருந்தது. இரு ளும், புதரும் விளிம்பிட்ட அந்தப் பகுதி யில் ஒரேயொரு உயரமான பாறை மட்டும் தெரிந்தது. அதன் பின்னே ஒரு சின்ன அசைவு தெரிந்தாற்போல் இல்லை? பிர மையா?

இருந்தபோதிலும் எந்தவித ரிஸ்க்கும் எடுக்க அவன் விரும்பவில்லை. பெட்டி களை அங்கேயே விட்டு விட்டு முழங்கால் களில், புதரின் நிழலிலேயே நகர்ந்து, அந்தப் பாறையை முதலில் நோட்டமிட முடிவு செய்தான்.

ஒரு முடிவுரை

கார்த்திகேயன் விறைத்தான்.

ஒரு வார காலமாக அவனுடைய கிராமத்திற்குள் இரவுகளில் வந்து துவம்சம் பண்ணி விட்டுப் போகும் கரடியை இனியும் விட்டு வைத்தால், அபாரமான வேட்டைக்காரன் என்ற அவனுடைய பெயர் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடும்.

மலை விளிம்பில் இருந்த புதரின் பின்னே சிறு அசைவு, அவன் கவனத்தை ஈர்த்தது. நாலு கால்களில் ஓர் உருவம் மறைந்து மறைந்து முன்னேறி வருவது அவன் ரத்தத்தில் சிலிர்ப்பு ஓட்டியது.

மிக உன்னதமாகக் குறி வைக்க வேண் டும். தப்பிக்க எந்த வாய்ப்பும் தந்து விடக் கூடாது என்று முடிவு செய்தான். ஏனென்றால்...

அவன் துப்பாக்கியில் ஒரே தோட்டா தான் பாக்கியிருந்தது.

ஃபிரிஜ் பரிசு கூப்பன் நெ: 13

சுலபமாகப் பரிசைத் தட்டிச் செல்ல ஒரு வாய்ப்பு! 'நேற்று வரை நந்தவனம்' தொடர் கதையைக் கவனமாகப் படித்தால் இந்த வாரம் நாங்கள் அதில் வேண்டுமென்றே செய்துள்ள ஒரு தவறு சட்டெனத் தெரிந்து விடும்! இப்படி ஒவ்வொரு வாரமும் வெளியாகும் ஒரு தவறை அந்தந்த வாரக் கூப்பனில் எழுதிப் பத்திரமாக வைத்திருங்கள். தொடர் முடிவுறும் வாரத்தில் திருத்தம் எழுதப்பட்ட எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புவதோடு, கதை பற்றிய 5 - 10 வரி விமர்சனத்தையும் எழுதியனுப்புங்கள். யார் அதிக அளவில் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தியிருக்கிறாரோ அவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் உண்டு.

தவறு : ____________

திருத்தம் : ____________

வாலிபனே அவளை மணந்து கொள்ள முன்வருகிறான். ஆனால் மணமேடையில் அவள் எழுந்து விடுகிறாள். ''என்றாவது ஒரு நாள், ''நீ தாசியாகத்தானே இருந்தாய்'' என்று நீங்கள் கேட்டு விட்டால் அந்த வார்த்தையைத் தாங்க முடியாது'' என்று சொல்லிக் கல்யாணத்தை நிறுத்தி விடுகிறாள். படம் நன்றாகத்தான் ஓடியது.

சில நாட்கள் கழித்து, ஒரு நர்சிங் ஹோமுக்கு ஒரு நோயாளியைப் பார்க்கப் போனேன். ஏண்டா போனோம் என்றாகி விட்டது! ஒரு நர்ஸ் என்னைப் பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கி விட்டார். ''ஒரு ஸ்கேன் எடுக்கிறேன் சார்! உங்களுக்கு முதுகு எலும்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்!'' என்றார். ''அந்த ஆடவனும் தவறுதலான பாதையில் போனவன். அந்தப் பெண்ணும் தவறுதலான பாதையில் போனவள். இரண்டு சமூகக் குற்றவாளிகளை இணைக்கக் கூட உங்கள் 'ஆண்' என்ற அகம்பாவம் ஒப்புக் கொள்ளவில்லை அல்லவா? தண்டனை அவளுக்கு மட்டும்தானா? அவள் வறுமைக்காகத் தவறு செய்தாள். அது பரிதாபம். அவன் உடல் கொழுப்பு எடுத்துத் தவறு செய்தான். அது அகம்பாவம். அவனுக்கு என்ன சார் தண்டனை கொடுத்தீர்கள்?''

இதெல்லாம் கூடப் பரவாயில்லை. என்னுடைய இரண்டு படங்களை ஒப்பிட்டு ஒரு பெண்மணி என்னை மடக்கினார் பாருங்கள்....!

படம் : சம்சாரம் - அது - மின்சாரம் : ஹாஜா ஷெரீப் கதாபாத்திரத்துக்குத் திடீரெனப் பொறுப்பு வந்து, படித்துப் பாஸாக வேண்டும் என்று வெறி வந்து, தன் அண்ணி மாதுரியிடம் இரவு - பகல் பாராமல் பாடம் கற்றுக் கொள்கிறான். அதனால் சந்திரசேகர் - மாதுரி தாம்பத்ய வாழ்க்கையில் ஒரு இடைவெளி ஏற்படுகிறது. தனக்குத் தன் கணவரிடம் இருந்து கிடைக்க வேண்டிய உடல் உரிமைகள் கிடைக்கவில்லையே என்ற காரணத்தினால் அவள் வீட்டை விட்டே வெளியேறி, கணவன் மனைவிக்கு இடையே பெரிய பிளவு ஏற்படுகிறது.



கடைசியில் தவறை உணர்கிறாள்.

படம் : சகல - கலா - சம்பந்தி : அருணா கதாபாத்திரம், சந்திரசேகர் கதாபாத்திரம் இருவரும் கல்யாணத்துக்கு முன் ஓர் ஒப்பந்தத்துக்கு வருகிறார்கள். திருமணத்துக்குப் பிறகும் தன்னை வேலைக்குப் போக அனுமதிக்க வேண்டு எனவும், தனது கடமைகள் சில முடியும் வரை தன்னைக் குழந்தைகள் பெற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தக் கூடாது எனவும் அருணா கூறுகிறாள். சந்திரசேகரும் அதற்குச் சம்மதிக்கிறான்.

கல்யாணத்துக்குப் பிறகோ, சராசரி வாலிபனான சந்திரசேகருக்குச் சபலம் ஏற்படுகிறது. அவள் மறுக்கிறாள். இடைவெளி ஏற்படுகிறது. பிரிகிறார்கள். விஷயத்தை மோப்பம் பிடித்த சம்பந்தி கதாபாத்திரம் (அடியேன்தான்) வார்த்தைகளால் குத்திக் கிழிகிழி என்று கிழிக்கிறார். ''கணவனோட ஜீவாதார உரிமையைப் பறிக்க உனக்கு யார் உரிமை கொடுத்தது? நடக்காத உன் தங்கைங்க கல்யாணத்துக்காகப் போராடறியே - நடந்த உன் கல்யாணம் மூளியா இருக்கே, இதுக்கு என்ன பதில் சொல்லப் போறே...?'' அட்டகாசமாக, ஆர்ப்பாட்டமாக நான் வசனம் பேச, தியேட்டரே அதிரும்! படம் நன்றாகவே ஓடி விட்டது.

சில நாள் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

''ஏன் சார்! 'சம்சாரம் - அது - மின்சாரம்' படத்தில் மாதுரி உடல் உறவுக்காக அலைந்தால், அது அவள் தவறு. 'சகல - கலா - சம்பந்தி' படத்தில் சந்திரசேகர் உடல் உறவுக்காக அலைந்தால், அது அவன் தவறு அல்ல, அதைக் கொடுக்காத அருணாவின் தவறு. எப்போதும் பெண்தான் தவறு செய்பவளா? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்?

''உங்களைப் போய், படிக்காத பாமரத் தாய்க்குலம் 'தாய்க் குலத்தின் இயக்குனர்' என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடும் கொடுமையை யாரிடம் சொல்லி அழுவது? You are a male Chauvinist!''

டிக்ஷனரியைப் புரட்டினேன்! Chauvinist என்றால் வெறியனாமே! நான் ஆண் ஆதிக்க வெறியனா? அய்யய்யோ!

கதை எழுதுவது, வசனம் எழுதுவது, காட்சிகள் அமைப்பது என்பதெல்லாம் 'நிழல்'தான். அதற்குப் பின்னே சமுதாயப் பொறுப்பு, தார்மீகப் பொறுப்பு என்ற 'நிஜம்' ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

உப்புத் தின்னவன் தண்ணி குடிக்கணும்!

(நிழல்கள் தொடரும்)

ஆத்மசாந்தி

பெரியவர் திருஞானம் திண்ணையில் ஈஸிசேர் போட்டு அமர்ந்திருந்தார். அவருடைய மடியில் தங்க நிறத்தில் வெற்றிலைப் பெட்டி, இருந்தது. அவர் தம் வெண் மீசையைத் தடவி விட்டுக் கொண்டு, காப்பி தம்ளரைக் காலி செய்த போது வாசலில் ''ஐயா'' என்று ஒரு குரல்.

நிமிந்து பார்த்தார், ''வாய்யா தங்கராஜ்! நல்லாருக்கியா... இப்படி வந்து உட்கார்!'' என்று எதிர்த்த திண்ணையைக் காட்டினார்.

''பரவாயில்லைய்யா,'' என்று தங்கராஜ் தயங்கித் தயங்கி உட்கார்ந்த போது, அவருக்கு நீர்மோர் வழங்கப்பட்டது.

''சாப்பிடு. என்ன விஷயம்...?''

''ஐயா! என் குடிசை ஒழுகுது. வேயணும்!''

''பணம் வேணுமா...?''

''இல்லைங்கய்யா. வைக்கோல் நாலு கட்டு இருந்தால்.''

''வைக்கோல் தானே.... பண்ணையாள்ட்ட சொல்லிட்டு எடுத்துக்கோ!''

''ரொம்ப நன்றிங்கய்யா'' என்று அவர் கிளம்பின போது, இளைஞன் ஒருவன் வந்தான். அவனுக்கும் வரவேற்பு, நீர்மோர்.

''உனக்கு என்னப்பா வேணும்....?''

''யூனியன் ஆபீசுல வேலைக்கு ஆள் எடுக்கறாங்களாம். நீங்க ஒரு லட்டர் தந்தால்...''

''என் லட்டருக்கு அவ்ளோ வேல்யூவா... இந்தா!'' என்று எழுதிக் கொடுத்தார். அவர் குளிக்க எழுந்த போது, ''ஐயா!''

வாசலில் இடுகாட்டு வெட்டியான் இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டு பணிவாய் நின்றிருந்தான். ''என்னப்பா விசேஷம்....?'' என்று அவனிடம் போனார்.

''அன்னைக்குச் சொன்னது தாங்க. என்னோட பொட்டைப் புள்ளைக்கு இருதயத்துல ஓட்டையாம்...'' இருசன் விசனப் பட்டான்.

''ஓட்டையா... சே! தராதரம் பார்க்காம நோய் வந்திருக்கு போல. நான் என்ன செய்யணும்னு சொல்லு!''

''நோவைப் போக்கணும்னா பெரிய நோட்டு பத்துப் பதினைஞ்சு ஆகும்ங்களாம். கவர்மென்ட் ஆஸ்பத்ரிலன்னா அஞ்சு ரூபாயில முடிஞ்சிரலாம்னு சொல்றாங்க. ஐயாதான் உதவணும்!''

''ஐயாயிரமா....?'' என்று ஒரு நொடி யோசித்தார். ''ரெண்டு நாள் கழிச்சுப் போதுமா...?''

''போதுங்கய்யா.''

''சரி, ரெண்டு நாள் கழிச்சு வந்து வாங்கிக்கோ. இரு, நீர்மோர் குடிச்சுட்டுப் போ!''

பெரியவருக்கு இளகின மனது. அவருடைய மனத்தைப் போலவே வசதிகள் பெற்றிருந்தார். அவருக்கு விவசாயத்திலும், மண்டியிலும் நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது.

அவர் குளித்துவிட்டு வந்த போது, சிவகாமி, ''குணா போன் பண்ணினா....'' என்றாள்.

''குணா என்ன பேசினா...?''

''பணம் ஐயாயிரம் வேணுமாம். அவ புருஷனுக்கு....''

அவர் அதைக் கேட்க விரும்பாதது போல இடைவெட்டி, ''ராஜாட்ட சொல்லி அனுப்ப ஏற்பாடு பண்ணிரு!'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பினார்.

குணா அவர்களது மூத்த மகள். பெங்களூரில் இருக்கிறாள். கல்லூரியில் படிக்கிற இரண்டு பசங்கள் அவளுக்கு. ஆனால் இன்னும் கூட மருமகனுக்குப் பொறுப்பில்லை. வேண்டாத சிநேகத்துடன் பிசினஸ் பண்ணிச் சொத்தையெல்லாம் அழித்துவிட்டார். டௌரியாகக் கொடுத்த நகைகள், பணம் எல்லாமே காலி.

குணாவும் ஒன்றும் கண்டு கொள்வதில்லை. கணவனைக் கண்டிப்பதுமில்லை. அவ்வப்போது கூசாமல் பிறந்த வீட்டில்

என். சி. மோகன்தாஸ்

பண்மும் பொருளுமாக சு ர ண் டி க் கொண்டேயிருக்கிறாள். இவர்களும் மகளா யிற்றே என்று கொடுத்துக் கொண்டே யிருந்தார்கள்.

குணாதான் அப்படியென்றால் அவளு டைய தங்கை லலிதாவின் மாப்பிள்ளை அதற்குமேல். ஆரம்பத்தில் நல்ல வேலையி லிருந்தார். பிறகு யாருடைய உபதேசத் தையோ கேட்டு, வேலையை விட்டுவிட்டு அரசியலுக்குப் போனார். அவர்கள் வேண்டாம் வேண்டாம் என்று எவ்வ ளவோ சொல்லிப் பார்த்தார்கள். கேட்க வில்லை. தேர்தலில் நிற்கிறேன் என்று ஊரெல்லாம் கடன் வாங்கிச் செலவழித் தார்.

அவருடைய பித்தலாட்டம் அறிந்தி ருந்த மக்கள் டெபாசிட் இழக்க வைத் தார்கள். அந்தக் கோபத்தில் அவர் பொதுச் சொத்துக்களை நாசம் பண்ண, போலீஸ் உள்ளே கொண்டு போய் வைத்தது. அவரை வெளியே கொண்டுவரவும் கேஸ் நடத்த வும் பெரும் பாடாயிற்று. கடனும் நஷ்ட ஈடும் பெரும் சுமையாயின.

இத்தனை நல்லவருக்கு இப்படி ஒரு மருமகனா என்று ஊர் வருந்திற்று. பெரி யவருக்கு மருமகன்களையும் மகள்களின் எதிர் காலத்தையும் நினைத்து ப்ரஷர் ஏறிற்று. ஹார்ட் அட்டாக் வரை கொண்டு போயிற்று.

மூன்றாம் நாள்.

இருசன் குடிசைக் காலண்டரில் தொங் கின சாமி படத்தை விழுந்து கும்பிட்டு விட்டு, ''நான் போயிட்டு வரேண்டி'' என்று மகளுக்கு முத்தம் கொடுத்தான். ''நீ எதுக்கும் கவலைப்படாத தாயி. பெரி யவர்ட்ட பணம் வாங்கி வ ந் த து ம் நாளைக்கே டவுன் ஆஸ்பத்திரிக்குப் போயி டலாம்.''

''பணம் பத்திரம்ய்யா. இந்தா பை!'' என்று துணிக்கடைப் பையை நீட்டினாள்.

''வேணான்டி. அன்டிராயர் ஜேபில வச்சுக்குவேன்'' என்று ஆர்வத்துடன் கிளம்பினான்.

நாம் போகும் போது பெரியவர் வீட்டில் இருக்க வேண்டும், அவருடைய



கையாலயே வாங்கிக் கொள்ள வேண்டும். அவர் பணம் தயார் பண்ணி வைத்திருப் பாரா இல்லை, மறந்திருப்பாரா? சே-சே! மறக்கவெல்லாம் மாட்டார்.....

'மகளுக்குக் குணமானதும் தலையை அடமானம் வைத்தாவது சிறுகச் சிறுக அவருடைய பணத்தைத் திருப்பித் தந்து விட வேண்டும். ஆப்பத்துக்கு உதவுகிற மவராசன் என்றைக்கும் நல்லாருக்கோ ணும்!'

வாழ்த்திக் கொண்டே அவருடைய வீட்டை அடைந்தவனுக்கு அதிர்ச்சி. அங்கே ஒரே கூட்டமாயிருந்தது. எல்லோ ருடைய முகத்திலும் விசனம். அக்கம் பக்கம் விசாரித்ததில் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

பெரியவர் ராத்திரி மாடிப்படியில் தடுக்கி விழுந்து விட்டாராம். உடன் பிரஷர் ஏறி, ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியி லேயே....

இருசன், ''ஐயா!'' என்று அலறிக் கொண்டு உள்ளே ஓடினான்.

விஷயம் கேள்விப்பட்டுப் பெரியவ ரிடம் உதவி பெற்றவர்கள், உதவி பெற நினைத்தவர்கள், நட்பு, சொந்தபந்தம் எனக் குழும ஆரம்பித்தது. குணாவுக்கும், அவ ளது தங்கை லலிதாவிற்கும் போன் போயிற்று. மகன் ராஜா இடிந்து போய் அமர்ந்திருந்தான். சிவகாமி மூர்ச்சையாகிக் கிடந்தாள்.

பெரியவர் ஹாலில் கிடத்தப்பட்டி ருந்தார். அவரது மூக்கில் பஞ்சு அடைக்கப் பட்டு, நெற்றியில் திலகமிடப்பட்டு, வெள்ளை மீசையுடன் போட்டியிடும் வெள்ளைப் பற்கள் சற்றே தெரியக் கிடந் தார். அவரது முகத்தில் இப்போதும் கூடப் புன்னகை.

அதைப் பார்க்கப் பார்க்க துக்கம் அதிக மாயிற்று. பெண்கள் கட்டுப்படுத்த முடியா மல் வாய்விட்டு அழுதனர். இருசன், ''ஐயோ... தரும துரை! உங்களுக்கு இப்படி ஒரு கொடுமையா...?'' என்று கதறினான்.

மதியம் இரண்டு மணிக்குக் குணாவும் அவளது கணவன் சேகரும் டாக்ஸியில் வந்திறங்கினர். இறங்குகிறவரை நன்றாக இருந்த குணா, வாசல்படியை மிதித்ததும் 'கோ'வென அழ ஆரம்பித்தாள். அழுகைக் கிடையே ராஜாவின் மனைவி சாந்தியை அழைத்து, ''டாக்ஸிக்கு கணக்குத் தீர்த்துரச் சொல்லு!'' என்று தந்தையைப் பார்க்கப் போனாள்.

கொஞ்ச நேரத்தில் லலிதாவும் வேறொரு டாக்ஸியில் குடும்ப சகிதம் வந்திறங்கினாள்.

பெரியவரின் இறுதிச் சடங்குக்கான காரியங்கள் நடந்து கொண்டிருந்தன.

மூத்த மருமகன் சேகர் ஒரு லிஸ்ட் தயாரித்துக் கொண்டு வந்து ராஜாவிடம், ''பணம் பத்தாயிரம் கொடு மாப்பிள்ளே!'' என்றான்.


''எதுக்கு?''

''பல்லக்கு ஜோடிக்கணும். தாரை தப்பட்டை, சீரியல் விளக்குகள், கூத்து, பூக்கள், வெடி, வாண வேடிக்கை, இறுதி ஊர்வலத்தில் காசு இறைக்கணும். எல்லாத்துக்கும் சேர்த்துத்தான்.''

''இதெல்லாம் தேவையா மாமா?''

''என்ன மாப்பிள்ளே அப்படி கேட் டுட்டே? அப்பா என்ன சாதாரண ஆளா....

மாத்திரை அளவில் மனித இயந்திரம்!



ரோபாட் என்னும் மனித இயந்திரம் ஒரு மாத்திரை அளவில் உருவாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை. ரோபாட் மாத்திரையை நோயாளி விழுங்கலாம். அதன் உள்ளே இருக்கும் காமிரா, உடலுக்குள் உண்டாகும் அதிர்ச்சிகளை, மானிட்டரைப் பார்த்துக் கொண்டு இருக்கும் டாக்டருக்கு எடுத்துச் சொல்லும். டாக்டர்கள் உத்தரவு தர, ரோபாட் சின்னஞ்சிறு கையொன்றை வெளியில் நீட்டி, சின்ன பிளேடால், சதையில் சிறிது பகுதியை அறுத்துப் பரிசோதனைக்கு வெளியில் அனுப்பி வைக்கும்.

இன்னும் சில காலம் சென்று, மிக நுண்ணிய ரோபாட்டை ரத்தத்தில் அல்லது ஜீரணச் சுரப்பிகளில் செலுத்தி, உடலைப் பரி சோதிக்க முடியும் என்றும் அதனால் சிறிய ஆபரேஷன்களைக் கூடச் செய்ய முடியும் என்றும் மருத்துவ விஞ்ஞானிகள் நம்பு கின்றனர். செயற்கையாகப் பொருத்தப் பட்டுள்ள உறுப்புக்களை மாற்றவும் இந்த நுண்ணிய ரோபாட்டுகளைப் பயன்படுத்த லாம்.

— ஹிண்டுவிலிருந்து.
— சி. சண்முகசுந்தரம்.

ஊரே மெச்சும்படி அவருடைய சடங்கை நடத்த வேண்டாம்?''

''சாவில் போய் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் தேவையா மாமா...?''

''எல்லாம் அவருடைய ஆத்மா சாந்தியடையத்தானே மாப்பிள்ளை. சரி, நேரமாகறது பணம் கொடு.''

''எல்லாம் நான் பார்த்துக்கிறேன் மாமா'' என்றதும் அவனுடைய முகம் வாடிப் போயிற்று. அவன் உள்ளே போனதும் குணா ஆவேசத்துடன் வந்தாள்.

''ஏய்... ராஜா! உன் மனசுல என்ன நினைச்சுகிட்டிருக்கே நீ? பெரிய இவன்னு நினைப்பா...?''

''என்னக்கா சொல்றே?''

''பின்ன என்னடா மாமா பணம் கேட்டதுக்குத் தரலியாமே நீ? அவமானப் படுத்திட்டாயாமே? அவர் வயசென்ன, உன் வயசென்ன? வேறு எதுவும் இல்லேன்னாலும் அவர் இந்த வீட்டு மாப்பிள்ளைடா! அதை மறந்திர வேணாம். ஒரு பத்தாயிரத்துக்கு அவரை உன்னால நம்ப முடியலியா...?''

ராஜா எதிர்த்து எதுவும் பேசவில்லை. அவளுடைய வார்த்தைகளையெல்லாம் தாங்கிக் கொண்டான்.

இரண்டாம் மருமகன் வேலுவும் தன் பங்குக்குச் ''சுற்றுப்பக்க அரசியல் பெரும் புள்ளிகளையெல்லாம் அ ழை க் க வேண்டும். பேப்பர்காரர்களுக்குத் தகவல் போட வேண்டும்'' என்றான்.

''எதுக்கு மாமா?''

''அப்பத்தானே பேப்பரில் நியூஸ் வரும்! அவருடைய புகழ் பரவும்!''

''மாமா! அவரே போயிட்டார். இனி புகழ் பரவி எதற்காகிறது. வேண்டாம் விட்டுவிடுங்கள்!'' என்று சொல்ல, அவனும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனான்.

பெரியவரின் இறுதிச் சடங்கு சலசலப்புடனும் ராஜாவின் பேரில் மனஸ்தாபத்துடனும் நடந்து முடிந்தது.

தாயின் நகைகள் மகள்களின் கழுத்தில் அரங்கேறின. அதில் கூட ஒருவருக்கொருவர் போட்டாப் போட்டி. அவர்களைப் பார்க்கப் பார்க்க ராஜாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவர்கள் நகைகளை மட்டும் அழிக்கவில்லை. அப்பாவையே அழித்துத் தங்கள் கழுத்தில் போட்டிருப்பதாக நினைத்தான். அவர்களை நேருக்கு நேர் பார்ப்பதையே தவிர்த்தான்.

இருசனும் அவனது மனைவியும் குடிசைக்குள் இடிந்து போய் அமர்ந்திருந்தனர். பெரியவரின் மறைவு அவர்களைப் பெரிதாய்ப் பாதித்திருந்தது.

> எப்போதும் புன்சிரிப்புடன் காட்சி தருவதைப் பழக்கமாகக் கொள்ளுங்கள். அப்படிச் சிரிப்பதற்குக் காரணம் எதுவும் அவசியமில்லை. புன்முறுவல் செய்யத் தெரியாதவனுடைய முகம் மலராமல் கருகி விடும் மொட்டைப் போன்றது.
>
> - ஹென்றிவார்ட்.
>
> தகவல் : அ. ராஜா ரஹ்மான்.

''பெரியவருக்கு இப்படித் தான் காலம் முடிஞ்சு போகணுமா...? நமக்குத் தெய்வமா உதவ முன் வந்தார்... தெய்வமாப் போயிட்டாரே! இனி நம்மோட குழந்தையோட கதி என்னய்யா?''

''செத்தாச் சாகட்டும்டி. எல்லாம் நம் நேரம்டி. மவராசன் அவரே போனதுக்கப்புறம் இனி, நம் குழந்தை இருந்தால் என்ன, செத்தாத்தான் என்ன...?''

''சொல்லிவிட்டு வெளியே வந்த இருசன் அங்கே ராஜா நிற்பதைக் கண்டதும் வியர்த்துப் போனான். ''தம்பி... நீங்க எப்படி இங்கே...?''

''எல்லாம் காரியமாத்தான்'' என்று ஒரு கவரை நீட்டினான். ''இந்தா வாங்கிக்கோ.''

''என்னங்க தம்பி...?''

''பணம். ஐயாயிரம்!''

''ஐயாயிரமா...?''

''ஆமாம். உன் பெண்ணோட ஆபரேசனுக்காக அப்பாட்ட ஐயாயிரம் கேட்டிருந்ததாகவும் நீ வந்து கேட்டால் கொடுக்கச் சொல்லியும் என்கிட்ட சாகும் முன்பு சொன்னார்.

''தம்பி! நீங்க தெய்வம்!'' இருசன் மனம் உருகினான்.

ராஜாவிற்கு அங்கிருந்து திரும்பும் போது மனபாரம் குறைந்த மாதிரி இருந்தது.

'இந்தமாதிரி ஏழைகளுக்கு உதவுவது அப்பா ஏற்றுக் கொண்ட ஒன்று. இறந்தவருக்குச் சாஸ்திரம் சும்பிரதாயம், வேடிக்கை, வெடி என்று செலவு பண்ணுவதால் யாருக்கு என்ன பிரயோஜனம்? அப்பா ஆசைப்பட்டபடி இந்தப் பிஞ்சின் உயிரைக் காப்பாற்ற உதவிவிட்டோம். இதுதான் நாம் அவருக்குச் செய்யும் பெரிய அஞ்சலி. இனி அவருடைய ஆத்மா நிச்சயமாய்ச் சாந்தியடையும். ஊரார் என்ன பேசினாலும் கவலையில்லை....'

ராஜா வேக வேகமாய் வீட்டை நோக்கி நடந்தான்.

நடத்தும் கம்பெனியின் கணக்கு வழக்கு களைச் சோதனை போட ஒரு வணிக வரி அலுவலக குமாஸ்தா உள்ளே நுழைந்து விட்டார், நாவில் நீருடன்.

தாம் யாரென்று அவர் கம்பீரமாய் அறிமுகப்படுத்திக் கொண்டதுதான் தாமதம், அந்தப் பையனின் தகப்பனார் விடுவிடு என்று உள்ளே போய் அத்தனை கணக்குப் புத்தகங்களையும் எடுத்து வந்து அவர் முன்னால் போட்டு, ''சார் ஐம்பதாயிரம் பணம் போட்டேன். எங்கே போச்சுன்னே தெரியலை. பாவிப்பய தொலைச்சிட்டான். அவன் அதை எப்படித் தொலைச்சான், எங்கே தொலைச்சான் அப்படின்னு இந்த நோட்டுப் புத்தகங்கள்லே கணக்குப் பார்த்துச் சாயந்தரத்துக்குள்ளே சொல்லுங்க. உங்களுக்குப் புண்ணியமா போகும்'' என்று சொன்னதுதான் தாமதம்....

எனக்கு நினைவு தெரிந்தவரை ஒரு வணிக வரி அலுவலக குமாஸ்தா, 'துண்டைக் காணோம் துணியைக் காணோம்' என்று ஓடியதை அதற்கு முன்னும் கண்டதில்லை. அதற்குப் பின்னும் கண்டதில்லை. ஆக, சில மனிதர்கள் சீரியஸ் விஷயத்தையும் நகைச்சுவை வரும்படி அணுகுகிறார்கள் என்பதைப் புரிந்த கொண்டிருப்பீர்களே!



மொத்தத்தில் சினிமாவில் நான் எழுதும் வசனங்கள் 'நிழல்'தான். ஆனால் அதற்குக் கிடைக்கும் மரியாதைக்குக் காரணம் - அந்த நிழலுக்கு முன்னே அரங்கேறும் நிஜங்களை நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதுதான்.

(நிழல்கள் தொடரும்)



- சீர்காழி. வி. ரேவதி.

பயம்

பயத்தில் அவன் கண்கள் பெரிதாகிப் பளபளத்தன.

ஜன நெரிசலில் நிரம்பி வழிந்த பஸ் வட்டமடித்துத் திரும்பிய சமயம், கடைசிப் படி ரோட்டில் உரசியது. சரவணனின் கைப்பிடி வழுக்கி இருதயம் தொண்டை வரை அடித்தது. விழப் போகிறேனா? விழுந்து, பின்டயர் மேலே ஏறி...

கை பிசுபிசுத்தது. ஸ்டீல் கைப்பிடி வழுக்க ஆரம்பிக்க, அடுத்த கையில் வைத்திருந்த புத்தகங்கள் இடுப்பின் மீது நழுவின.

''கொஞ்சம் உள்ளே போங்களேன்.''

அந்த விடலைப் பையன் முறைத்தான். ''இங்கே எங்க இடம் இருக்கு?''

உண்மைதான். அடுத்த பஸ் வரும் வரை நின்றிருக்கலாம். சரியாய் ஆறு மணிக்குக் கௌரியைப் பெண் பார்க்க வருகிறார்கள். இந்த பஸ்ஸைப் பிடித்தால் தான் ஐந்தரைக்குப் போக முடியும். அடுத்த பஸ் என்றால் ஆறே கால் ஆகி விடும். மாப்பிள்ளை வீட்டார் ''பொண்ணுக்கு அண்ணன் எங்கே?'' என்று கேட்பார்கள்.

அம்மா திகைத்து நிற்பாள். அப்பா போன வருஷம் மணலி பஸ் ஆக்ஸிடெண்டில் போன பிறகு இப்போதெல்லாம் அடிக்கடி அம்மா திகைத்து நிற்கிறாள். ''நீதான் சரவணா கௌரிக்கு எல்லாம். அண்ணா, அம்மா... அப்பா எல்லாமே'' கடைசி வார்த்தையைச் சொல்லும் போது அழுவாள்.

அவளால் எதுவும் தனியாகச் செய்ய முடியாது. சீக்கிரம் போனால்தான் சரியாயிருக்கும். அவர்களை வரவேற்க, உட்கார வைக்க, பேச... நல்ல வேளை, காலையிலேயே பலகாரம் வாங்கியாகி விட்டது. பூ அம்மா வாங்கியிருப்பாள். ஆபீஸுக்கும் லீவ் போட முடியாமல் போய் விட்டது. லோன் சாங்ஷன் ஆகிற நாள்.

சரவணன் பஸ்ஸினுள் பார்வையால் துழாவினான். முதல் சீட்டில் அந்தப் பெண் உட்கார்ந்திருந்தாள். தலை நிறைய மல்லிகைப் பூவும், புதுத் தாலியுமாய்க் கல்யாணக் களை முகத்தில் தெரிந்தது. பஸ் நேர் ரோட்டில் போனதால் அதிக அசைவில்லை. அவள் கண்ணாடி ஜன்னல் வழியாய்த் தூரத்தில் பார்த்தாள். ரோட்டில் போகும் மனிதர்களைப் பார்த்தாள். திடும் திடுமென்று பின்னால் திரும்பிக் கூட்டத்துக்குள் பார்த்தாள்.

கௌரியும் கல்யாணமானால் கிட்டத்தட்ட இப்படித்தான் இருப்பாள். கௌரிக்குக் கல்யாணமானால் சியாமளா நிறையச் சந்தோஷப்படுவாள்.

''அப்பா...! நம்ம லைன் கிளியர்'' என்பாள்.''

நிமிஷத்தில் கல்யாணமாகி, குழந்தை பெற்று, ஸ்கூலுக்குக் கொண்டு போய் விடும் கனவுகள் அவளுக்கு.

பஸ் பிரேக் அடித்து நின்றது. குறுக்கே மாடு மெதுவாக அசைந்து கடந்தது. இந்தப் புத்தகங்களை யாராவது வைத்துக் கொள்வார்களா? இந்தப் பெண் வைத்துக் கொள்வாளா?

சரவணன் அவளை யோசனையோடு பார்த்தான். அவள் முகத்தில் வெயிலடிக்காமல் இருக்க, கையை நெற்றியில் குடை மாதிரி வைத்துக் கொண்டாள். ம்ஹூம். வாங்க மாட்டாள்.

கௌரி கல்யாணத்தை எங்கே நடத்த? எப்படியும் ஒரு மாசம் லீவ் போட வேண்டும். மண்டபம் தேடி, பத்திரிகை அடித்து, எல்லோருக்கும் கொடுத்து... நல்லவேளை லோன் சாங்ஷன் ஆகிவிட்டது. இந்த இடம் நிச்சயம் முடிந்து விடும். அப்பா இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இப்படித்தான் ஒரு சாயங்காலம் அந்தச் செய்தி வந்தது. ''பஸ் பாலத்துக்குள்ள விழுந்திடுச்சாம். ஆட்களுக்கெல்லாம் அடி எக்கச்சக்கம் போல.'' ''ஐயையோ'' என்று அம்மா பரிதாபப்பட்டு உள்ளே வரும் போதுதான் பக்கத்து வீட்டுக்கு ஃபோன் வந்தது.

''திரு சண்முகநாதன் என்பவர் ஜி.ஹெச்.சில் இருக்கிறார்.''

ஆஸ்பத்திரியில் அப்பா போராடிக் கொண்டிருந்தார். முக்கால்வாசி உடல்

தமயந்தி

நசுங்கிப் போய் மீதி கால் பாகமும் மெஷின்களோடு இணைக்கப்பட்டிருந்தது. 'கர்..கர்' என்று சிரமமாய் மூச்சு வெளியேறிற்று

''ப்...பா...''

ம்ஹூம்.. அப்பா பேச மாட்டார்... அழ மாட்டார். சிரிக்க மாட்டார்.

கோமா...

உயிர் எத்தனை முக்கியம் என்று தெரிந்தது. அது மட்டும் போதும் ஸ்வாமி. அப்பாவுக்குக் கொடு என்று வேண்டிக் கொள்ள வைத்தது. ஆனால் முடியவில்லை. அப்பா நடுராத்திரி கோமாவிலேயே இறந்து போனார். ஆக்ஸிடெண்ட் கேஸ் என்று நார் நாராய் அப்பாவைக் கிழித்து போஸ்ட்மார்ட்டம் செய்து கொடுத்தார்கள்.

பஸ் மறுபடியும் வலது பக்கமாய்ச் சரிந்து திரும்பியது. அந்த விடலைப் பையனும் வெளிப்புறமாய்ச் சாய, சரவணன் பாரம் தாங்காமல் வளைந்தான். புத்தகங்களில் ஒன்று தொப்பென்று ரோட்டில் விழ, சரவணன் சரிந்தான். பஸ் முழுக்க ஸ்தம்பித்தது. 'என்னாச்சு என்னாச்சு' என்று பின்பக்கம் கேள்வி எழுந்தது.

அந்தப் பெண் சட்டென்று எம்பி அவன் கையைப் பிடித்தாள். இலேசாய் அழுத்தி உள்பக்கமாய் இழுத்தாள். எல்லாப் புத்தகமும் கீழே விழ, சரவணன் மட்டும் மேலே வந்தான். அந்த விடலைப் பையன் பயத்தில் அலற பஸ் நின்றது.

சரவணன் இறங்கிப் புத்தகங்களைப் பொறுக்கினான். கண்டக்டர், ''படியில் நிற்காதீர்கள்'' என்று கத்த, பஸ் மறுபடி புறப்பட்டது. பக்கவாட்டில் உட்கார்ந்திருந்தவர் புத்தகங்களை வாங்கிக் கொண்டார். சரவணன் அந்தப் பெண்ணிடம் நன்றி



சொல்லத் திரும்பினான். அவள் அவனைக் கண்டுகொள்ளாத தினுசில் மறுபடியும் வெளியே பார்த்தாள். கையை வைத்து வெயிலையும் முகத்தையும் மறைத்தாள்.

''நல்லவேளை அந்தப் பொண்ணு பிடிச்சுது. உங்க நல்ல யோகம் தம்பி.'' பஸ் முழுக்க அந்த நிமிஷம் பற்றிப் பேசினார்கள். சரவணனுக்குக் கை விரல் நுனி வரை சிலிர்த்தது. கடவுளே! நன்றி. இந்தப் பெண்ணுக்கு நன்றி.

கண்ணில் நீர் பரவிற்று. அவள் அவனைப் பார்க்காமல், பக்கத்தில் இருந்தவள் கையில் அடிக்கடி மணி பார்த்தாள். அடுத்த ஸ்டாப்பில் அவசரமாக இறங்கி நின்றாள்.

பின்னாலிருந்து அவன் இறங்கினான். புது மல்வேஷ்டியும் சட்டையும் முரட்டுத்தனமாய்த் தெரிந்தன.

''என்ன கூட்டம் செண்பகம்..ப்பா...''

''ம்...''

''எங்க உட்கார்ந்திருந்தே?''

''முன்னால.''

அவன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான்.

''அப்ப நீதான் எவனோ ஒருத்தன் கையைப் பிடிச்சு ஏத்தி விட்டியா?''

அவள் திணறினாள். ''நான் இல்லை..., பக்கத்து சீட் பொண்ணு.''

பஸ்ஸிலிருந்து இன்னும் ஆட்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். சரவணன் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

பயத்தில் அவள் கண்கள் பெரிதாகிப் பளபளத்தன!

மார்டினாவுக்கு முதுமை இல்லை!



டென்னிஸ் வீராங்கனை மார்டினா நவ்ராடிலோவா கம்ப்யூட்டரால் உருவாக்கப்பட்ட உணவுத் திட்டப்படிதான் சாப்பிடுகிறார். டாக்டர் ராபர்ட் ஹாஸ், மார்டினாவுக்கு வேண்டிய உணவுத் திட்டத்தைக் கம்ப்யூட்டர் மூலம் அமைத்தார்.

கம்ப்யூட்டர் புரோகிராமில் மார்டினாவின் இரத்தப் பரிசோதனை பற்றிய விவரங்கள் அவருடைய பயிற்சியின் தன்மை முதலிய எல்லாமே அடங்கியுள்ளன. அவர் எந்த இடத்தில் விளையாடினாலும் சீதோஷ்ண நிலை பற்றிய விவரங்கள் கம்ப்யூட்டரில் செலுத்தப்பட்டு மற்ற விவரங்களுடன் ஒப்புநோக்கி அலசப்படுகிறது. அடுத்த சில நாட்களுக்கான அவரது உணவுத் திட்டத்தைக் கம்ப்யூட்டர் அளித்து விடுகிறது. இதை அவர் ஒழுங்காகப் பின்பற்றுவதால் அவருடைய சக்தி, திறமை, ஆகியவை அதிகரித்துள்ளன. மேலும், அவர் முதுமை அடையும் வேகமும் குறைந்து கொண்டே வருவதாகக் கருதப்படுகிறது.

ஆதாரம் :
''அண்டர்ஸ்டான்டிங் கம்ப்யூட்டர்''

தகவல் : வி. நந்தகுமார்.



பரிசு ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/–
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/–
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/–
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/–

முடிவு தேதி: ஆகஸ்டு 31, 1991

- இதற்கடுத்த பத்து மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து கல்கி பொன்விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.
- நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.
- கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.
- பிரதி வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 – 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.
- அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன்விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

— ஆசிரியர், கல்கி, சென்னை – 600 032.

சரியில்லையா?'' பங்கஜம் கேட்டாள்.

''இல்லே...'' மெல்ல சமாளிக்கப் பார்த்தான் அர்ஜுன்.

''சும்மா சொல்லுப்பா...'' நடேசன் மறுபடியும் கேட்க...

''ஒண்ணுமில்லேப்பா... நிர்மலாவுக்கு நம்ம தஞ்சாவூர் டவுன் கூட கிராமமாப் படுது. ச்சே... அங்கெல்லாம் யார் வருவான்னு எடுத்தெறிஞ்சு பேசிட்டா.. நானும் கோபமாக் கூப்பிடாம வந்துட்டேன்.''

நடேசனுக்குப் புரிந்தது. நிர்மலாவும்... பங்கஜமாய் மாறியிருக்கிறாள். அர்ஜுன் தன்னைப் போலவே இருக்கிறான் என்பது புரிந்தது.

''சரி விடு... சின்ன வயசிலே இருந்து மெட்ராசிலேயே வளர்ந்துட்டவ... இங்கே என்ன இருக்கு... இந்தப் பெரிய கோவிலை விட்டா வேறு என்ன இருக்கு...'' மகனுக்கு ஆறுதலாய் இருக்கட்டுமே என்று சமாளித்தார் நடேசன்.

குளித்து, சாப்பிட்டு விட்டு வந்த அர்ஜுன் மொட்டை மாடியில் உட்கார்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நடேசனிடம் வந்து....


''அப்புறம் என்னப்பா முடிவு செய்தீங்க... உங்களுக்கும் அம்மாவுக்கும் பென்ஷன் பணமே போதும்... உங்க பணம் முழுதும் கொடுத்துடுங்க... இப்போ பிசினஸ் வளர்ந்துட்டு இருக்கு... ஹெல்ப்பா இருக்கும்...''

அர்ஜுன் கேட்டது காதில் விழாத மாதிரி வானத்தில் தெரிந்த ஒற்றை நட்சத்திரத்தையே பார்த்துக் கொண்டு மௌனமாய் இருந்தார் நடேசன்.

''என்னப்பா...?'' அர்ஜுன் மறுபடியும் கேட்க...

''இல்லே அர்ஜுன்... எனக்கு டவுன் வாழ்க்கையே அலுத்துப் போச்சு... ஊரோட கிராமத்துக்குப் போய்க் கொஞ்சம் நிலம் வாங்கிட்டு இருக்கலாம்னு இருக்கேன். அப்பாவுக்கும் இப்போ ரொம்ப முடியலே...'' நடேசன் தன் புதிய முடிவைச் சொன்ன போது, அதில் திடமான உறுதியும் திருப்தியும் கலந்திருந்தன.

அருள்வாக்கு



முந்நாட்களில் ஒரு கோயிலை ஜீர்ணோத்தாரணம் பண்ணினால் ஒரு பாடசாலை ஏற்படுத்துவது என்று வைத்துக் கொண்டிருந்தார்கள்.

'பாடசாலையில் கற்றதனால் ஆய பயன் இதுதான்' என்று வாலறிவன் நற்றாளைக் காட்டிக் கொடுக்கும்படியாக ஆலயங்களை எழுப்புவது பூர்விகர் வழக்கமாயிருந்தது.

கல்வி கற்பதைச் சொல்லும் இடத்தில் ஈச்வரனுக்கு 'வாலறிவன்' என்ற பெயரைத் திருவள்ளுவர் கொடுத்திருப்பது அர்த்தபுஷ்டி வாய்ந்தது. எல்லாம் அறிந்த ஸர்வஜ்ஞனே ''வாலறிவன்.'' எத்தனை கற்றாலும் அதனால் அஹங்கரிக்காமல் அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தில் அது துளி மாத்திரமே என்ற அடக்கத்தோடு அவனுடைய நற்றாள் தொழ வேண்டுமென்றுதான் இந்த வார்த்தையைப் போட்டிருக்கிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கடவுளையே பதறவைத்த கண்ணப்பன்!

'உடம்பு வேறு நான் வேறு' என்பர் ஞானிகள். 'அதெப்படி?' என்கிறீர்களா? சொல்கிறேன் :

திருவண்ணாமலையில் உயிர் விளக்கேற்றிய ரமண முனிவர், உடல் பற்றிய சிந்தனையே இல்லாமல் பல காலம் தவம் செய்தவர். ஒரு சமயம் அவர் உடம்பில் ஒரு ரண சிகிச்சை. மயக்க மருந்து கொடுக்காமல் வைத்தியம் செய்ய மருத்துவர் தயங்கினர். ஆனால் ரமணரோ மயக்க மருந்து தேவையில்லை என்றார்.

வலியின் கொடுமை தெரியாதவராக ரமணர் விளங்கினார். ரணத்தைத் தொட்டு, அறுத்து, சிகிச்சை செய்த போது துடிக்கவும் இல்லை; வருந்தவும் இல்லை! வலிக்கவில்லையா என்று கேட்ட போது, ''வலி உடம்புக்குத்தான். எனக்கல்ல'' என்றார். மேலும் வினவியதும், ''நான் வேறு என் உடம்பு வேறு'' என்றார். உடம்பில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டு உணரும் தெளிவு ரமணரின் அநுபவம்.

எல்லோராலும் இது முடியும். முயற்சி செய்ய நாம் தயங்குகிறோம். எப்படி? பள்ளிக்குப் போகும் பையனுக்குத் திங்கட்கிழமை காலையில் அப்படி ஒரு வயிற்று வலி. புழுவாகத் துடிக்கிறான். 'ஐயோ அம்மா' என்று கூச்சல் வேறு. ரேடியோவில் அவனுக்குப் பிடித்த சினிமாப் பாடல் ஒலி பரப்பானது. அவன் மனம் பாட்டுக்குத் தாவியது. தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறான். பாட்டு முடிந்து விளம்பரம் வந்ததும் வயிற்று வலி மறுபடி தெரிந்தது!

உடம்பிலிருந்து மனத்தை விலக்கி, வேறு ஒன்றின் மேல் வைத்து விட்டால் உடம்பின் உபாதைகள் தெரிவதில்லை. ஞானிகள் பிரம்மத்தில் லயித்து உடம்பில் இருந்து விலகுகிறார்கள்.

படிப்பு, பயிற்சி, குரு உபதேசம் இவற்றின் மூலம் இந்த ஞானம் பெறுவதுதான் முறையான வழி. ஆனால் இவற்றுள் எந்த ஒன்றின் தொடர்பும் இல்லாமல் ஞானம் பெற்ற உயிர்களும் உண்டு.

காட்டில் பிறந்து, இரக்கமற்ற வேடுவர்களோடு வளர்ந்து, வேடர் தலைவனாகி வேட்டைக்குப் போனான் திண்ணன். இவர்கள் விரித்த வலையில் சிக்கிய கொழுத்த காட்டுப் பன்றி திடீரென்று தப்பி ஓடியது. வேட்டை நாய்கள் அதைத் துரத்திக் கொண்டு ஓடின. காடன், நாணன் என்ற நண்பர்கள் உடன் வரத் திண்ணனும் ஓடிப் போய்ப் பன்றியைக் கொன்றான்.

காடன் தீ மூட்டி பன்றிக் கறி சமைத்தான். தண்ணீர் தாகத்தால் பக்கத்தில் இருந்த பொன்முகலி ஆற்றின் கரை சென்றான் திண்ணன். முகத்தைக் கழுவி நிமிர்ந்து பார்த்தால் எதிரில் காளத்தி மலை!

நல்ல காலம் பிறந்து விட்டது. 'மலைக்கு மேலே என்ன இருக்கும்?' என்று அறிவு ஆராய்ந்தது. உடன் வந்த நாணனைக் கேட்டான். ''மேலே உள்ளவர் சிவபெருமான். குடுமித் தேவர் அவர் பெயர். கும்பிடலாம்'' என்று நாணன் அழைக்க, மலைக்கு மேல் பாய்ந்தான் திண்ணன். மலையேறுதல் என்றால்...? பஞ்சபூதங்கள், ஐம்பொறிகள், புலன் உணர்ச்சி போன்ற படிகளைக் கடந்து இறைவனை நோக்கி ஆன்மா பயணப்படுகிறது என்று அர்த்தம்!

கோவிலுக்குள் இருந்த சிவலிங்க மூர்த்தியை ஆர்வத்துடன், ஆச்சர்யத்துடன் பார்த்தான் திண்ணன். ஓடிப் போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதான். முற்றிய நல்லன்பு வெளிப்பட்டது. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற திருவாசக வரிகள் தெரியாமலேயே அழுதான்.. அழுதான்... அப்படி அழுதான்.

'காட்டில் இவர் தனியாக இருக்கிறாரே' என்ற அதிசயமான கவலை அவனுக்கு. 'இவருக்குப் பசிக்குமே' என்று தாய் மனம் கொண்டு தட்டழிந்தான். கீழே போய் உணவு கொண்டு வர முடிவெடுத்தான்.

காடன் சுட்டு வைத்திருந்த பன்றிக் கறியை ஒரு கையிலும் வில்லை மறு கையிலும் எடுத்துக் கொண்டு மீண்டும் மலை ஏறினான் திண்ணன். பூவும் தண்ணீரும் அவருக்கு இட்டு வழிபடும் வழக்கத்தை நண்பன் நாணன் சொல்லி இருந்தான். பூவும் தண்ணீரும் எப்படிச் சுமப்பது? சடை விழுந்த பிசுக்குத் தலையில்

சுகி சிவம்

பூக்களைச் செருகி, எச்சில் வாய்க்குள் தண்ணீர் சுமந்து வந்தான். சிவபெருமான் தலையில் இருந்த பழைய பூவை எப்படி எடுப்பது? செருப்புக் காலால் தள்ளியபடி, தன் தலையில் இருந்த பூக்களை உதிர்த்தான். இதற்கு நடுவில் எச்சில் நீரால் அபிஷேகம்!

பதம் பார்த்துச் சுட்ட பன்றிக் கறியை ருசி பார்த்து எடுத்து வைத்து, பிள்ளைக்குச் சோறூட்டும் தாயாக உணவூட்டி நின்றான் அவன். மாமிசத்தை மறைத்தார் சிவபெருமான். ரொம்பப் பசி என்று நினைத்து மறுபடி கொண்டு வரக் கீழே சென்றான்.

மறையாலும் முறையாலும் பூசிக்கும் பண்பாளர் சிவகோசாரியார் கோவில் பூசைக்கு வந்த போது செருப்படியும், நாயடியும் கோவிலுக்குள் தெரிந்தன. நெஞ்சு நொந்தார். மாமிசமும் தெரிந்தது. உயிரோடு வெந்தார்.


ஆறு நாட்கள் அவனுக்கும் இவருக்கும் இந்த ஞானக் கண்ணாமூச்சி நடந்து கொண்டிருந்தது. அழுது முறையிட்டார் சிவகோசாரியார். 'அடுக்குமா?' என்று அரற்றினார். ஆண்டவனோ அவனைக் 'கை கால் முளைத்த அன்பு' என்று கோடி காட்டினார்.

எச்சில், கடவுளுக்கு ஆகாது என்போம். அன்பு முற்றினால் எச்சில் பார்க்கும் வழக்கம் இல்லை என்பதும் உண்மை தானே! திண்ணன் காலையில் உணவு கொண்டு வரும்போதெல்லாம் உடம்பு இளைத்து மெலிதாகத் தெரிவார் சிவபெருமான். இளைத்தனர் நாயனார் என்று கட்டித் தழுவிக் கொண்டு கண்ணீர் விடுவான் திண்ணன்.

அன்புப் பரீட்சைக்கு அன்று முழுப் பரீட்சை. சிவகோசாரியார் சிலைக்குப் பின்னால். வந்தான் திண்ணன். சிவபெருமான் கண்ணில் இருந்து ரத்தம்! பாமர அறிவு படபடத்தது. 'யார் செய்தார்கள் இந்த அநியாயத்தை?' என்று சண்டை போட ஆள் தேடியது அந்த வேட்டுவ புத்தி!

அடுத்த விநாடி அன்பு விழித்தது. மருந்து தேடி, பச்சிலைகளைப் பறித்துப் பிழிந்து பார்த்தான். ரத்தம் நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் என்று தன் கண்ணை அம்பால் பெயர்த்து, அந்தக் கண்ணில் அப்பினான். ரத்தம் நின்றது. ஆனந்தக் கூத்தாடினான். தான் என்ற தன் முனைப்பு அழிந்தது. சரீரப் பிரக்ஞை செத்தது. ஆனந்தம்தானே மிச்சம்!

அடுத்த விநாடி அடுத்த கண்ணில் ரத்தம். கவலை இல்லை திண்ணனுக்கு. வைத்தியம்தான் தெரிந்து விட்டதே!



அடுத்த கண்ணைத் தோண்ட அம்பை எடுத்துக் கண்ணில் வைத்தான். பிறகு பார்வை தெரியாமல் போய் விடுமே என்பதால் அடையாளம் தெரிய, சிவபெருமான் முகத்திலேயே காலை வைத்துக் கொண்டான்.

''நில்லு கண்ணப்ப... நில்லு கண்ணப்ப'' என்று அலறினார் சிவபெருமான். முதல் கண்ணைத் தோண்டும் போது இதே பரபரப்பு - பதற்றம் - அல்லது இரக்கம் சிவனுக்கு இல்லையே! இப்போது மட்டும் எப்படி வந்தது?

முதல் கண்ணைத் திண்ணன் தோண்டும் போது பார்த்துக் கொண்டிருந்த கண், சிவனுடைய கண். இப்போது பார்ப்பது கண்ணப்பன் கண்ணல்லவா? பிறர் துயர் தெரிந்த கண்ணோட்டம் உள்ள கண்ணப்பன் கண், கடவுளையே பதற வைத்தது!

சிவஞான போதமும் சிவஞானசித்தி யாரும் படிக்காமல் சிவஞானம் பெற்றான் கண்ணப்பன். எப்படி? தன்னை இழக்கத் தெரிந்தது. கடவுளை அடையத் தடையாக இருந்த 'தன் மீது தான் வைக்கும் பற்று' என்பதை அறவே இழந்திருந்தான்.

(இன்னும் சொல்வேன்)

'ஹிட்லிஸ்ட்'

ஞாயிற்றுக் கிழமை மதியம். உண்ட மயக்கத்தில், கையிலிருந்த அன்றைய நியூஸ் பேப்பரில் இண்டு இடுக்குகளை அலசிக், கொண்டிருந்த போது அந்த ஹிட்லிஸ்ட் செய்தி என்னைச் சுறுசுறுப்பாக்கியது. தீவிரவாதிகளான 'தறுதலை எலிகளி'ன் தாக்குப்பட்டியலில் எவனெவன் அடிபடப் போகிறானென்று அறிய முற்பட்ட போது தூக்கிவாரிப் போட்டது. மிகவும் மூத்த முன்னாள் மத்திய அமைச்சர், சற்றே பருத்த இன்றைய ஆளும் கட்சித் தலைவர், நாளை ஆளப் போகும் கழகப் பொருளாளர் என ஊருக்குத் தெரிந்த நாலு மனிதர்கள் பெயர்களோடு என் பெயர் எப்படி வரச் சாத்யம்? வந்திருந்தது! 'இந்தத் தலைவர்களுடன் 'பக்கிரி பத்மநாபன்' பெயரும் போராளிகளின் பட்டியலில் இருப்பதாக வ. வா. வ. கழகச் (வதந்தி வாரி வழங்கும் கழகம்) செயலாளர் அறிவித்தார்' எனக் கண்டிருந்தது.

எனக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. பக்கிரி பத்மநாபன் என்ற பெயரில் நான் பத்திரிகையில் எழுதுவது உண்டு. அந்த ரகசியம் எனக்கும் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கும் மட்டும்தானே தெரியும்! ஏதோ அடிக்கடி தொல்லை செய்கிறானே என்று, வருடம் ஒருமுறை நான் எழுதிய துணுக்கைப் பிரசுரம் செய்து இனாமாகப் பத்து ரூபாய் அனுப்புவார். அப்படிப் பிரசுரமான துணுக்கில் ஏதாவது எக்குதப்பாய்த் தறுதலை எலிகளைப் பற்றி எழுதி விட்டேனோ...? இருக்கலாம் அதற்காக ஹிட்லிஸ்ட் தண்டனையா!

''பத்மநாபன்! கொஞ்சம் பேப்பரைத் தரேளா'' - பக்கத்து வீட்டு வெங்கி கையிலிருந்த பேப்பரைப் பிடுங்காத குறையாக இழுத்து எடுத்துக் கொண்டு போனார். ஒரு வேளை இந்த வெங்கியால் வந்த வினையா? நானும் அவரும் அடிக்கடி அரசியல் அரட்டை அடிப்பது வழக்கம். வெங்கி எப்போதும் நாலு வீடு கேட்கும்படி கத்திதான் பேசித் தொலைப்பார். அப்படி எப்போதாவது பேசும் போது அந்த இயக்கத்தைப் பற்றி நான் உளறியிருப்பேனா? வெங்கியை நம்ப முடியாது. அவரே கூட நான் இப்படிப் பேசியதை நாலு பேரிடம் சொல்லி மாட்டி விட்டிருப்பார். ஆறு மாதம் முன்பு அவர் வாங்கிய ஐம்பது பைசாவைத் திருப்பிக் கேட்டதில் அவருக்கு என் மேல் கோபமாயிருக்கலாம்.

எது எப்படியோ...! இப்போது வசமாய் மாட்டிக் கொண்டோமே என நினைத்த போது உடல் இலேசாய் நடுங்க ஆரம்பித்தது. எப்படி என்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறேன்.

பெரிய அரசியல் புள்ளிகள் மாதிரி கறுப்புப் பூனை படைக்குச் சொல்லித் தருவித்துக் கொள்ளலாமா?

''சே... வீட்டிலே கொசுப்படை... தொல்லை தாங்க முடியலே. நூறு ரூபாய் போட்டு ஒரு மிஷின் வாங்கத் துப்பில்லை இந்த மனுஷனுக்கு'' உள்ளே என் துப்பைத் துலக்கிக் கொண்டிருந்தாள் ஜானு. இந்த அழகில் பூனைப் படை ஒரு கேடா எனப் பானை உடைப்பது போல் ஜானு உணர்த்தி விட்டாள்.

ஜானுவிடம் இதைப் பற்றி கூறி விடலாமோ? வேண்டாம். 'ஐயோ உங்களுக்கு இப்படி ஒரு நிலையா?' என அவள் கலவரப்படும் நிலவரம் வர வாய்ப்பில்லை. மாறாக 'நான் அப்பவே சொன்னேன்... அசடாட்டம் பேசாதிங்க. அச்சுபிச்சாட்டம் எழுதாதீங்கன்னு... இப்ப மாட்டிட்டு முழிங்க' எனத் தன் பங்கிற்கு வேறு இடிப்பாள். சொல்ல வேண்டாம். அப்படி ஏதாவது அசம்பாவிதம் எனக்கு நேர்ந்து விட்டால்... ஜானு உன் நிலைமை என்ன ஆகும்? பாவம் நீயே சமைத்து, நீயே துணிகளைத் துவைத்து.. படு நன்றாகப் படு...

மறுநாள் படுக்கையை விட்டு எழும் போதே பீதியும் பயமும் என் கைகோத்து எழுந்து கொண்டன. ஆபீஸ் போயாக வேண்டும். போய் விட்டு உருப்படியாகத் திரும்புவோமா எந்த உருவில் எப்படி ஆபத்து வருமோ' எனப் பலவிதமாய்ப் பயந்தபடி பல் துலக்கினேன். கலங்கிய முகத்தோடு காப்பி குடித்தேன்.

''அம்மா... பூ...'' வாசலில் பூக்காரி! எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது! எப்போதும் வருபவளாய்த் தெரியவில்லை; புதியவள்!

''உங்களைத்தான்... கொஞ்சம் பூ வாங்குங்களேன்'' நான் உள்ளே வேலையாய் இருக்கேன்'' - ஜானு குரல் கொடுத்தாள். குரலில் எமனை ஏற்றி அனுப்புகிறாளே.. தயங்கியபடி அந்தப் பூக்காரியைப்

அகிலா கார்த்திகேயன்

ார்த்தேன்.

''பூ வேண்டாம் போயிட்டு வாம்மா'' ன்றதும் முறைத்தாள்.

''ஏன் வேண்டாம்னு அனுப்பறேங்க... இரண்டு முழம் வாங்கறதுதானே? நான் பூஜை பண்ணனும்...'' ஜானு வேறு அவஸ்தைப்படுத்தினாள்.

''பூ ஒரே வாடிக் கிடக்கு'' என்று நான் சொன்னதும்,

''அட... காலீல சுத்த சாவுகிராக்கி'' எனக் கழுத்தை ஒடித்துக் கொண்டு விடுவிடுவென நகர்ந்தாள் பூக்காரி. எனக்குப் படபடவென அடித்துக் கொண்டது. காலையில் எழுந்தவுடன் 'சாவு கிராக்கி' என்று காதில் விழ வேண்டுமா.. துணிந்து ஒரு முழம் பூ வாங்கி அனுப்பியிருக்கலாமே? வேண்டாம். பூவில் பூகம்பம் அனுப்புவார்களே அவர்கள்.

ஆபீஸ் கிளம்பும் பேது ''ஜானு'' என ஆவலுடன் அழைத்தேன்.

''என்ன ஜானு வேண்டிக் கிடக்கு'' அலுப்புடன் வாசலுக்கு வந்து நின்றாள்.

'போகும் முன் ஒருமுறை உன்னை உற்றுப் பார்க்கிறேன் ஜானு' என்பதாய் அவளைப் பார்த்தேன்.

''இப்ப என்ன திடீர்னு பிரியாவிடை வேண்டிக் கிடக்கு...? நேரமாகலே...? போய்ச் சேருங்க!'' என்றாள்.

நாசமாய்ப் போக. அபசகுனமாய்ப் பேசுகிறாளே...! ஆபத்துக்கு அச்சாரமா? என்னுள் கிலி களிநடனம் புரிய, புறப்பட்டேன்.

வழிநெடுக எங்கே கண்ணி வெடியிருக்குமோ என எண்ணியபடி அடியெடுத்து வைத்து நடந்தேன். சாலையின் ஓரங்களான மண் பகுதியைத் தவிர்த்து, தார்ச் சாலையில் நடந்தேன். விர்ரென்று ஒரு பல்லவன் என்னை உரசாத குறையாக வந்து நின்றது.

''சார் வூட்டிலே சொல்லிட்டு வந்துட்டயா...!'' பஸ் டிரைவர் எரிச்சலாகக் கத்தி விட்டு பஸ்ஸை நகர்த்தினார். கீழே தரை நகர்வது போல என் உடல் சற்று ஆடி விட்டு, பிறகு பிரேக் போட்டு நின்றது.

'வூட்டிலே சொல்லிட்டு வந்துட்டேனா?' என்ன ஒரு வார்த்தையால் வாட்டி விட்டுப் போகிறான்.. என்ன வரப் போகிறதோ... என் மனம் திகிலால் திமிலோகப்பட்டது.

பஸ் டெர்மினஸ். காலியாய் இருந்த பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். சூடிதார் தரித்த, கரேலென்ற காரிகை ஒருத்தி உள்ளே ஏறினாள். பஸ்ஸை ஒரு முறை இங்குமங்குமாய்ப் பார்வையால் அலசி விட்டு, என்னை நோக்கி வந்தாள். உதறல் என்னைக் குதற என் கால்கள் இஞ்சின் பிஸ்டனாய்ப் படபடத்தன. அருகில்... நெருங்கியவள் குனிந்து என் காலைத் தொட்டு நிமிர்ந்து தன் கையிலிருந்த எதையோ பொத்தென்று மடியில் போட, நான் வியர்வையில் தொப்பலாய் நனைந்தேன்.



''ப்பே.. ப்பே...'' என்றாள் அந்த சூடிதார் பெண். மடியில் விழுந்திருந்த அட்டையைப் பார்த்தேன். 'ஊமைப் பெண் உதவி செய்யுங்கள்' என்பது போன்ற வாசகங்கள் இருந்தன... வெடவெடத்துப் போன நான் இப்போது வெட்கத்தால் கூசினேன். ஒரு ரூபாய் நோட்டைத் தாராளமாய்த் தந்து விரட்டினேன்.

ஆபீஸில் நுழைந்தவுடன் எல்லோரும் என்னை மொய்த்துக் கொண்டார்கள்.

''லிஸ்ட் வந்தாச்சு தெரியுமா பத்மநாபன்?'' வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார் வரதராஜன்.

''எப்ப பார்ட்டி வைச்சுக்கலாம்?'' ஜெயராமன் கூசாமல் கேட்டார். எல்லோருக்கும் தெரிந்திருக்கிறதே...! அது எப்படி? நான் பக்கிரி பத்மநாபன் என்ற புனை பெயரில் எழுதுவது இவர்களுக்குத் தெரிய நியாயமில்லையே... அப்படியிருக்க, பேப்பரில் வந்த பக்கிரி பத்மநாபன் என்பது நான்தான் என எப்படி இவர்களுக்குத் தெரிந்தது... அப்படியே தெரிந்திருக்கட்டுமே 'ஐயோ பாவம்' என நினைக்காமல் வாழ்த்துகிறார்களே பாவிகள்...! இது நியாயமா என எண்ணியபடி ஒரு விளக்கெண்ணெய் பார்வையை அவர்கள் மேல் வீசினேன்.

''என்ன சார் 'பிரமோஷன் பேனல்' அப்ரூவ் ஆயிடுச்சி... உங்க பேர் லிஸ்ட்டில் இருக்குன்னு சொல்றோம்... முகத்திலே ரியாக்ஷனே இல்லையே!'' என்று கனக சபை சொன்ன போது வலுக்கட்டாயமாக ஒரு அசட்டுப் புன்னகையை வரழைத்துக் கொண்டு ''ஹி... ஹி... தேங்க்ஸ்!'' என்று வழிந்தேன்.

வெகு நாட்களாக எதிர்பார்த்த பிரமோஷன் லிஸ்ட் வெந்து போன சமயத்தில் வந்திருக்கிறது...

''பிரமோஷன் வந்துகிது ஐயா 'உம்' முணுகிறாரே'' எனச் செல்வராஜ் ஏத்திவிட, ஏகாம்பரம் ''நம்ப பார்ட்டி கேட்டோமில்லே பயந்துட்டாரு போலகிது. என்னா எல்லாருக்கும் ஒரு டீ வாங்கித் தருவாருன்னு பார்த்தோம். அதுக்கே உசுரை வுட்டுடுவாரு போலகிதே!'' என இடக்காகப் பேசியதும் என் மனம் மடக்கென மறுபடியும் உடைந்தது. இது ஏதடா ஆளுக்கு ஆள் அபசகுனமாய்ப் பேசுகிறார்களே!

இன்னும் ஒரு வாரமா, ஒரு மாதமா ஒரு வருடமா தெரியவில்லை. லிஸ்ட்டில் உள்ளவர்களை சீனியாரிடி வரிசையில் வீழ்த்துவார்களா அல்லது அகப்பட்டவர்களை அவ்வப்போது வீழ்த்துவார்களா? எதற்கும் இந்த லிஸ்ட்டைப் பற்றி அறிவித்த வ.வா.வ. கழகச் செயலாளரைத் தொடர்பு கொண்டால் ஏதாவது செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. விலாசத்தை ஆபீஸில் சிலரிடம் விசாரித்தேன். கே. கே. நகரில் இருந்த வ. வா. வ. கழகத்துக்குப் போக, பர்மிஷன் போட்டு விட்டுக் கிளம்பினேன்.

பஸ் ஸ்டாப்பில் தன்னந்தனியாக கே. கே. நகர் பஸ்ஸுக்காக நின்றிருந்தேன். இப்படி ஒரு துப்பாக்கி கலாசாரத்தில் மாட்டிக் கொண்டு துணை இல்லாமல் நிற்கும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதை எண்ணி எரிச்சலடைந்தபோதே... பக்கத்தில் ஒரு பைஜாமா ஜிப்பா ஆசாமி மிகப் பெரிய ஜோல்னா பை சகிதம் வந்து நிற்கவே, வெடவெடத்தேன். ஆசாமி உற்றுப் பார்த்தபடி என்னை நெருங்கினான். ஜோல்னா பையில் கையை விட்டு எதையோ வெளியில் எடுத்தான்.

''சார் ஏ. கே. 47...'' என்று அவன் ஆரம்பிக்கவும் நான் ஆடிப் போனேன். சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று. ஆசாமி துப்பாக்கியை எடுத்து என்னை வீழ்த்தப் போவது நிச்சயம். ஆண்டவா ஒரு குண்டிலேயே என்னைக் கொண்டு போய் விடுவாயா இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. தெரிந்திருந்தால் இட்லி பானையையோ, 'டிரே'யையோ ஏழைக்கேற்ற புல்லட் புரூஃப்பாக அணிந்து வந்திருக்கலாம். இட்லி பானையில் ஓட்டை விழுந்தால் ஜானு ஒப்புக் கொள்வாளோ?

பயமும் யோசனைகளும் மனத்தில் சடுகுடு ஆட, பற்கள் தாமாக எதையோ தந்தியடிக்க, ஒரு தடுமாற்றத்தில் இருந்

''அம்மா! இன்னிக்கு நான் கொஞ்சம் சீக்கிரம் போகணும்!''

''சரி.. சரி.. பத்துப் பாத்திரங்களையெல்லாம் நானே தேய்ச்சுக்கிறேன். அக்கம் பக்கத்து வம்புகளை மட்டும் சொல்லிட்டு நீ கிளம்பு!''

- ஞா. ஞானமுத்து.



தேன்.

''சார் கேட்கிறேனே ஏ. கே. 47, கே. கே. நகருக்குப் போகுமா?'' என ஜிப்பா, ஜோல்னா பையிலிருந்து எடுத்து ஒரு வெள்ளைத் தாளைப் பார்த்தபடி கேட்டான். எனக்கு உயிர் வந்தது.

''ஏ. 47ன்னு கேட்டுத் தொலையேன்யா.... சாரி.. கேட்டுத் தொலைங்க சார்... அது கே. கே. நகர் போகாது. நானும் கே. கே. நகர்தான் போறேன்'' என்று பெருமூச்சு விட்டேன். ஆசாமி கே. கே. நகரையும் ஏ. 47 யும் கலந்து ஏ. கே. 47 ஆக்கி ஒரு நிமிடம் கலக்கி விட்டாரே என்று இருந்தது.

''சாரி, பழக்கதோஷம் அதான் ஏ. கே. 47ன்னு சொல்லிட்டேன்'' ஆசாமி திரும்பவும் குண்டைப் போட்டார்.

''பழக்கதோஷமா?'' பேய் முழி முழித்தேன்.

''ஆமாம் எப்பவும் ஏ. கே. 47னோட விளையாடறவன் நான். அதான் அப்படிக் கேட்டுட்டேன்.... யாரோ வதந்திநாதனாம் எங்க லிஸ்ட்டில் இல்லாதவங்க பேரையெல்லாம் சொல்லி எங்களையே அவமானப்படுத்தியிருக்கான். அவனைத் துப்பாக்கி முனையிலே விசாரிக்கலாம்னுதான்... இப்ப கே. கே. நகர் போறேன்!''

''அப்ப... ப... நீ... நீங்க...'' குழறினேன்.

''தறுதலை எலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன். எவனோ பக்கிரி பத்மநாபனாம் அவனும் எங்க லிஸ்ட்டில் இருக்கானாம். பேத்தலாய்ப் பேத்தியிருக்காரு வதந்திநாதன். உதவாக்கரைங்களையெல்லாம் ஹிட்லிஸ்ட்டில் சேர்க்க எங்களுக்கு என்ன பைத்தியமா?'' நீங்களே சொல்லுங்க... கோபமாக ஆசாமி பேசினார்.

''அப்ப பக்கிரி பத்மநாபன் பேரு உங்க லிஸ்ட்டில் இல்லையா?'' ஆவலோடு கேட்டேன்.

''கண்ட தறுதலைப் பசங்களை அந்த லிஸ்ட்டில் சேர்ப்போமாய்யா! சந்தேகமா, இருந்தா இதோ பாரு, எங்க தலைவர் தயாரித்த 'அப்ரூவ்ட் லிஸ்ட்' என்று, டைப் செய்த பேப்பரை சரசரவென்று என்முன் நீட்டினான்.


லிஸ்டை வாங்கிப் பார்த்தேன்.

அதில் நிஜமாகவே என் பெயர் இல்லை.

''பக்கிரி பத்மநாபனாம்! கண்ட பரதேசிப் பயல்களைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை...!'' குர்த்தா ஆசாமி! மீண்டும் குமுறினார்.

தலை தப்பியது தம்புரான்.. இல்லை தறுதலை எலிகள் புண்ணியம்... என அங்கிருந்து விரைந்தேன்.

மன நிம்மதி அடையும் மகிழ்ச்சி



இந்த் மோத்தியில் முதலீடு செய்யுங்கள். மன நிம்மதி அடைவீர்கள். இந்த் மோத்தி, 5 வருடங்களுக்கு மேலும் ஒவ்வொரு வருடமும் டிவிடெண்ட் வழங்குகிறது. முழுத் தொகைக்கான டிவிடெண்ட் பெற்றுக் கொண்டு வந்தாலும், முதலீட்டின் 75 சதவீதத்தை பயன்படுத்தும் வசதியை நீங்கள் பெறுகிறீர்கள்.

அல்லது மூலதன லாபத்திட்டமான இந்த் ஸாகரில் முதலீடு செய்து உங்களுக்கு வந்து சேரும் லாபத் தொகைக்கு வரிச்சலுகை பெறலாம்.

மேலும் என்ன! இரண்டு திட்டங்களும் உங்களுக்கு அளிப்பவை — நிச்சயமான அலாட்மெண்ட், எளிதான முறையில் மற்றவர் பெயருக்கு மாற்றும் வசதி, வரிச்சலுகை மற்றும் பங்கு மார்க்கெட்டில் விற்கும் வசதி. ஆகவே, தாமதிக்காமல், மன நிம்மதி அடையும் திட்டத்தில் உடனே முதலீடு செய்யுங்கள்.

IND MOTI

EQUITY GROWTH SCHEME

இந்த் மோத்தி

பங்கீட்டு வளர்ச்சித் திட்டம்

வழங்கீடு துவங்கிவிட்டது

இந்தியன் பாங்க்

பரஸ்பர நிதி

முக்கிய பொறுப்பாளர் : இந்தியன் பாங்க்


உங்கள் செல்வச் செழிப்பின் சிற்பி

கார்பரேட் அலுவலகம் : 1 வது மாடி, நானக் மோட்வானி மார்க், டி,ஜி. சேம்பர்ஸ், ஃபோர்ட், பம்பாய்-400 023.

பரஸ்பர நிதி முதலீடுகள் மார்க்கெட் ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டது. கடந்த கால செயலாற்றம் எதிர்கால செயலாற்ற முடிவுகளை எடுத்துக் காட்டும் என்பதில்லை.

07:1810:TM





சபாநாயகர் : "ஆளும் கட்சி எம். எல். ஏ. எதிர்க்கட்சி எம். எல். ஏ. முதுகில் தட்டியது தாக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்லவென்றும் முதுகில் அமர்ந்திருந்த கொசுவை அடிப்பதற்கு அவ்வாறு செய்தார் என்றும் விளக்கம் அளித்தி ருப்பதால், நடவடிக்கை சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது!"

- பாளையங்கோட்டை,
எஸ். சுந்தரராஜ்.

OOOOO

O என் மகளும், அவள் தோழியும், நானும் ஒரு தியேட்டருக்குச் சென்றிருந்தோம். கௌண்ட்டரில் 'கரண்ட் புக்கிங்' என்று எழுதியிருந்தது. என் மகள், "அப்பா, அது கரண்ட்டிலேயே வேலை செய்யுமா?" என்று கேட்டாள். அவள் தோழி, "அது ஒண்ணும் கரண்ட்ல வேலை செய்யாது. இப்போதைய காட்சிக்கு டிக்கெட் கொடுக்கப்படும் இடத்திலே 'கரண்ட்-புக்கிங்' என்று போடு வார்கள்," என்றாள்

பக்கத்திலிருந்த பெரியவர் என் மகளிடம், "ஏம்மா பார்த்தா இரண்டு பேரும் ஒரே வகுப்புப் படிக்கிறவங்க போல இருக்கு. ஆனா அந்தப் பாப்பாவுக்குத் தெரிஞ்சிருக்கு, உனக்குத் தெரி யலையே?" என்றார்.

உடனே என் மகள், "அவள் படிப்பது கான்வென்ட்டில், நான் படிப்பது கவர்ன் மென்ட்டில். அதுதான் காரணம்," என்றாள். அதைக் கேட்டுக் கியூ மொத்தமும் கலகல!

சென்னை - 17, பா. விஜயலட்சுமி.

OOOOO

O ஒரு விஞ்ஞானி தாம் கண்டுபிடித்த தியரியை எல்லா ஊர்களுக்கும் சென்று கூறி வந்தார். கேட்டுக் கேட்டு அலுத்துப் போன அவரது கார் டிரைவர், "உங்கள் தியரி எனக்கே மனப்பாடம் ஆகி விட்டது. அதனால் நானே உங்களுக்குப் பதில் ஒரு கூட்டத்தில் இதைக் கூறுகிறேன். நீங்கள் என்னைப் போல் வேடமிட்டுக் கொள்ளுங்கள்" என்றான். அவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

மறுநாள் ஒரு கூட்டத்தில் விஞ்ஞானியாக நடித்த கார் டிரைவர், அந்தத் தியரியைக் கூறி னான். அப்பொழுது கூட்டத்திலிருந்து ஒருவர் ஒரு கடினமான வினாவை எழுப்பினார். டிரைவர் சற்றும் சளைக்காமல் "இந்த எளிமையான வினா விற்கு நான் என்ன, என் கார் டிரைவரே கூட விடையளிப்பார்! அவரை அழைக்கிறேன்!" என்றார்.

திருச்சி, குருவாயூரப்பன்.

O நான்காம் வகுப்பு படிக்கும் தம்பியிடம் தாத்தா கேட்டார் : "நீ சம்பா ரிச்சு யாருக்குக் கொடுப்பே?"

அதற்குத் தம்பி, "நானே வைச்சுப்பேன்" என்றான்.

"அப்பா அம்மாவுக்குக் கொடுக்கமாட்டியா?"

உடனே தம்பி, "தாத்தா! மாடு, கன்னுக்குட்டிக்குப் பால் கொடுக்குது. கன்னுக்குட்டி மாட்டுக்கு என்ன கொடுக்குது?" என்று திருப்பிக் கேட்க, தாத்தா கப்சிப்!-

தஞ்சாவூர் - 6,
எஸ்.கல்யாணகுமாரி.





• ''இன்டர்வியூவில் கேட்ட எல்லாப் பொது அறிவுக் கேள்விகளுக்கும் கரெக்டா பதில் சொன்னேன். ஒரே கேள்வில என்னை மடக்கிட்டாங்க!''

''அப்படி என்ன கேட்டாங்க?''

''கே. கே. எஸ். ஆர். இராமச்சந்திரன் இனிஷியலோட முழு அர்த்தம் என்னன்னு கேட்டாங்க!''

- வி. ஜி. மகேஷ்.



- சீர்காழி. வி. ரேவதி.

பூவுனால பொம்ம செஞ்சு,
'புதல்வி' யின்னு சொன்னாலும்
பூவுமது பேசலையே,
புதல்வி ஆசை போகலையே.

ஒழக்கு மல்லியப்பூ,
ஒதறி வச்ச தாழம்பூ
ஒங்கி வளர்ந்த மக;
மறக்க முடியலயே.

தென்னை யொண்ணு வளர்த்து
வந்தேன்;
பொதிய மலை ஒரத்திலே,
மலையுமது சரிஞ்சிடுச்சு,
மரமுமது கருகிருச்சே.

சின்னானுக்கு இறப்பின் அனைத்துப் பரிமாணங்களும் புரிகிற வயதில்லை. இருப்பினும் மனத்தில் ஒரு துயரமொட்டு விட்டிருந்தது. 'அக்காள இனிமேட்டுக்குப் பாக்க முடியாது' என்று துயரத்துடன் நினைத்துக் கொண்டான். இரண்டு, மூன்று கிழவிகள் அவனைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைக்க, விலக்கி விட்டு வெளியே வந்தான்.

வெளியே சன்னாசிக் கிழவர் குத்துக் காலிட்டு உட்கார்ந்து பாடை செய்து கொண்டிருந்தார். இரண்டு பக்கமும் மூங்கில் வைத்து, குறுக்கில் சிறு குச்சி களைப் பொருத்தி, மேலே தென்னந் தட்டியைப் போட்டு, வேலை ஏறக்குறைய முடிந்துவிட்டது.

''எலேய் சின்னா, இங்கிட்டு வா'' என் றார் சன்னாசிக் கிழவர். சின்னான் அருகில் வந்தான்.

''நொப்பன் பறையடிக்கிறவனுங்க ளுக்குச் சொல்லலியா?''

''தெரியலை.''

சின்னானின் அப்பா கேட்டுக் கொண்டு தான் இருந்தார். பறையடிப்பவர்களுக்குப் பணம் தரவேண்டும். குறைந்தது இரு நூறாவது தரவேண்டும். ஆனால் கையில் தம்பிடி இல்லை. கவர்மெண்டு ஆஸ் பத்திரியில் நிறையப் பிடுங்கிவிட்டார்கள். மச்சுவீட்டு அருணாசலத்திடம் கடன் வாங் கிய நூற்றைம்பது ரூபாயும் செலவாகி விட்டது. வெள்ளை உடை வைத்தியர் களை வரச் செய்வதற்காக, காக்கிக் கால் சட்டை போட்டவனுக்கும், ஐஸ்ரூமுக்குப் பிணத்தைக் கொண்டு போகாமல் தடுப்ப தற்காகவும், ஊதாப்புடைவைக் கிழவி களுக்கும், கொடுத்ததில் அனைத்துப் பண மும் செலவாகிவிட்டது. வரும்படி எதுவும் இல்லை. தொடர்ந்து வரும் பஞ்சங்களில் இருந்து தப்பிப்பிழைப்பதற்காக, கணவ

னும், மனைவியும் முறையே இரண்டு, மூன்று முறைகள் ஆபரேஷன் செய்து கொண்டுள்ளார்கள். சந்ததி இனிமேல் சின்னானின் மூலமே பெருகவேண்டும்.

சிறிது நேரங்கழித்து பறையடிப்பவர்கள் வந்தனர். மச்சுவீட்டு அருணாசலம் தன் செலவில் 'அரை நாள் சம்பளம்தான்' என்று பேசி பறையடிப்பவர்களை அனுப்பி வைத்திருக்கிறார். சுள்ளிகள் பொறுக்கி வர, சிறுவர்கள் அனுப்பப்பட்டனர். பறையடிப்பவர்கள் ஒரு முறை வீட்டிற்குள் வந்து, பிணத்தைப் பார்த்து விட்டுப் போனார்கள். பின், கலயத்தில் வெள்ளைத்திரவம் வர, ஆளுக்கு ஒரு மடக்கு குடித்தனர். இதற்குள் சுள்ளிகளும், நெருப்புப் பெட்டியும் வந்திருக்க, சிறிது நேரம் நெருப்பில் காய்ச்சியபின் பறையடிக்க ஆரம்பித்தனர்.

''இருட்டிக்கிட்டு வருது. சீக்கிரம் தூக்குங்க'', என்று யாரோ குரல் கொடுக்க, பறையடிப்போர் முன் செல்ல, அக்கா பாடையில் வைத்துத் தூக்கிச் செல்லப் பட்டாள்.

சின்னான் பயந்துவிடப் போகிறான் என்று அவனை வீட்டிலேயே இருக்கச் சொல்லிவிட்டார்கள்.

காரியங்களையெல்லாம் முடித்து விட்டு, அப்பா வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. அப்பா இலேசாகத் தள்ளாடிக் கொண்டிருந்தார். மகளின் இறப்புக்காக இன்று ஓசியில் சாராயம் கிடைத்திருக்கிறது. குடும்பத்துக்கு இன்று மிகப் பெரிய அவமானம் ஏற்பட்டு விட்டது. சாவுக்கு வந்தவர்களுக்கு ஒரு வாய்க்கஞ்சி கூட ஊற்ற முடியவில்லை. இப்போது யாரும் இதைப் பெரிதுபடுத்தா விட்டாலும், பிற்பாடு ஒருநாள் ஏதேனும் சண்டையில் இது குத்திக்காட்டப்படலாம்.


வீட்டினுள் இருள் கவிழ்ந்திருந்தது. அக்காவைக் கிடத்தியிருந்த இடத்தில் விளக்கேற்றப்பட்டிருந்தது. விளக்குக்கான எண்ணெய் பக்கத்து வீட்டில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்தது.

சின்னான் சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். எதிர்ச் சுவரில் மஞ்சள் வெங்கடாசலபதி பையில் தோசை இன்னும் இருக்கிறது. மெதுவாக எழுந்தான். அம்மா கவிழ்ந்து படுத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். தோளைத் தொட்டான்.


''ஆத்தோவ்!''

அம்மா திரும்பினாள்.

''அக்கா தான் செத்துப் போச்சில்ல. அந்தத் தோசைய நான் எடுத்துக்கவா?'' என்றான்.



★ பிடிவாதம்



★ அரசியல் வாழ்வு?



★ அமரம் கண்டோ?

கலைஞரின் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டதா?

O **மீ. தமிழ் ஷாஜஹான், கம்பம்.**

? **கலைஞர் சட்டமன்றம் சென்றிருப்பின் இன்று பண்ருட்டியாருக்கு நேர்ந்த கொடுமை நாளை கலைஞருக்கும் ஏற்பட லாமல்லவா? அதன் மூலம் தமிழகம் முழு வதும் தி. மு. க. தொண்டர்களால் பயங்கரங்கள் நிகழாது என்பது என்ன நிச்சயம்?**

! முன்பு ஜெயலலிதா தமக்குச் சட்டமன்றத்தில் கொடுமை இழைக்கப்பட்டதாகக் கூறித்தான் சட்டசபைக்குச் செல்லாமலே இருந்தார். அதை அன்று கிண்டல் செய்தவர்கள் இப்போது அதே போல் தங்களுக்குக் கொடுமை நேரலாம் அல்லது நேர்ந்தது என்று காரணம் கூறி சட்டமன்றம் செல்லாமல் இருப்பதை எப்படி நியாயப் படுத்த முடியும்? கல்கிக்கு அளித்த பேட்டியில் கலைஞரே கூறியிருக்கிறார்: ''நாங்கள் ஒருவேளை தோற்றாலும் சட்டமன்றத்துக்குப் போக மாட்டோம் என்று கூறிக் கொண்டிருக்க மாட்டோம்; சிறந்த எதிர்க்கட்சியாக விளங்கி ஜனநாயகப் பணியாற்றுவோம்'' என்று. தொண்டர்களால் பயங்கரங்கள் நிகழ்ந்தது அல்லது நிகழலாம் என்றால் அதற்குத் தலைவர்களே பொறுப்பு. தலைவர்கள் சரியான முறையில் அறிக்கைகள் விட்டால் அதை மீறித் தொண்டர்கள் ஏதும் செய்து விட மாட்டார்கள். தொண்டர்கள் நடந்து கொள்வதெல்லாம் தலைவர்கள் விருப்பத்தையொட்டித்தான்.

O **தங்க நாகேந்திரன், செம்போடை**

? **'இரண்டாயிரமாவது வருஷத்துக்குள் இரண்டாயிரமாவது நாவலை எழுதி விட வேண்டும்' என்கிறாரே ராஜேஷ்குமார்?**

! அவர் ஒரு நாவல் மிஷின். சாதித்து விடுவார். அவற்றுள் இரண்டாவது இரண்டாயிரமாவது ஆண்டுக்குப் பிறகும் பேசப் படுவது போல நிலைத்திருக்கும் விதமாக எழுத வேண்டும்.

O **ஆர். விஜயராஜ், பெரியகுளம்.**

? **கலைஞரின் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டதா?**

! என்றுமே உதயசூரியன்தானே. மேகங்கள் மறைத்திருப்பதால் அது அஸ்தமன சூரியனாகி விடாது.

O **குமரி. தா. சிந்துகுமார், திருவட்டார்.**

? **சாரே, பரதன்றே 'அமரம்' கண்டோ? அதிலே சூப்பர் ஸ்டார் மம்மூட்டியுடெ ஆக்ட் எங்ஙனயுண்டு?**

! கண்டு. அஸ்ஸலாயிட்டுண்ட.

O **ரேவதி சுந்தரராஜன், சென்னை.**

? **முன்னாள் மத்திய மந்திரி சிவசங்கர் போர்க்கொடி தூக்கி விட்டாரே?**

! மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பதும் இலாகா ஒதுக்குவதும் பிரதமரின் உரிமை; யாரும் அவரை நிர்ப்பந்திக்க முடியாது என்பதை அனுபவஸ்தரான சிவசங்கரே உணராமல் ஆட்டம் போடும் போது, புதுசுகள் சிலர், 'காபினெட் அந்தஸ்து, அது இது' என்று முணுமுணுப்பதில் வியப்பில்லை.

O **எஸ். இஸ்மாயீல், சிவகெங்கை.**

? **'இனி எல்லாத் தேர்தல்களிலும் இயந்திரம் மூலம் வோட்டுப் பதிவு நடைபெறும்' என்று சேஷன் கூறியுள்ளாரே?**

! 'சேஷனுக்குப் பதில் ஒரு ரோபோவைத் தலைமைத் தேர்தல் அதிகாரியாக்கினாலும் தேவலாம்' என்று இனி எதிர்க் கட்சிகள் கோரலாம்!

O **ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.**

? **'பாடும் பாட்டுக்கு பாவம் அல்லவா முக்கியம்? சங்கதிகளைப் போட்டு பாட்டைத் துவைத்து எடுப்பது ஏன்? இது**

? சோனியாவை அமேதியில் போட்டியிட வைக்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெறுவார்களா?

! அவர்கள் வெற்றி பெற்றால், இந்திய அரசியலில் தாம் புகுவதில்லை என்று சோனியா எடுத்த ஒரு சரியான முடிவு தோல்வி கண்டதாகும். அமேதியில் அவர் வெற்றி பெறுவது எளிது; ஆனால் தமது நிலையிலிருந்து வழுவியவராவார்.

O வேதபுருஷோத்தமன், செருவாமணி.

? நடிகை லட்சுமி சினிமாத் துறையில் பி.எச்.டி. ஆராய்ச்சி செய்கிறாராமே?

! நிறைய நேரம் இருக்கிறது போலும்! செய்யட்டும். அவர் எடுத்துக் கொள்ளும் தலைப்பு சராசரி சினிமா போல் அல்லாது, சமுதாயத்துக்குப் பயன்தரக் கூடியதாக அமையட்டும்!

O இராஜ சண்முகாநந்தம், செம்பராய நல்லூர்.

? கேப்ரியாட்டியிடம், மார்ட்டினா நவ்ரதிலோவா தோற்றுப் போய் விட்டாரே?

! இளமைக்கு வாய்ப்புக் கிடைக்க வேண்டும்தான், அந்த அளவில் மகிழ்ச்சிதான் என்றாலும் ஒன்பது முறை வென்று சாதனை புரிந்த மார்ட்டினா தேய்பிறை காணத் தொடங்குகிறாரோ என்ற எண்ணம் வருத்தத்தையும் அளிக்கத்தான் செய்கிறது!

O ப. இராம் முருகன், சிவகங்கை.

? திருநாவுக்கரசு சட்டசபையிலிருந்து காவலர்களால் அடிக்கடி வெளியேற்றப்படுவது பற்றி...?

! அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுமாறு அவர் நடந்து கொள்வது தவறுதான். அதே சமயம் சட்டசபையில் எதை வேணுமானாலும் பேசலாம், வழக்குத் தொடர முடியாது என்ற பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டு பேசுவோருக்குப் பதில் சொல்ல, அவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான உறுப்பினருக்குப் போதிய அளவு வாய்ப்புத் தரப்படாமல் இருப்பதும் சரியல்ல.

O எல். மாறன், மேல்பட்டி.


? பலமே பலவீனமாவது எப்போது?


! சல்மான் ரஷ்டி, தமது சைத்தானின் கவிதைகளை எழுதிய போது அதைத் தமது பலமாகத்தான் கருதியிருப்பார், நிச்சயம். ஆனால் இன்றும் பாதுகாப்புக்காக அவர் தமது மனைவியைப் பிரிந்து தலைமறைவாகவே வாழ்ந்து வருகிறார். இது, அவருடைய பலமே பலவீனமான கதைதான்.

போட்டியிடுவாரா?


...லைமறைவானார்


✱ வருத்தப்படுகிறார்!


✱ வாயைக் கட்டினார்!


✱ தோற்றுப் போனார்

அவர் நூலை ஜப்பானில் மொழிபெயர்த்த ஜப்பானியக் கவிஞர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதனை, முஸ்லீம் தீவிரவாதிகள் தங்கள் பலம் எனக் கருதலாம். பலவீனம் என்று பிற சமயத்தவர் எண்ணுவதற்கும் இடமுண்டு.

O ஆர். குமார், புதுச்சேரி.

? ராஜீவ் காந்தி படுகொலைக்கு நாங்கள்தான் காரணம் என்று புலிகள் திடீரென்று ஒப்புக் கொள்ளக் காரணம்?

! அந்த முழுப் பூசணிக்காய் விவகாரத்தை இனியும் சோற்றில் மறைக்க முடியாது என்ற நிலை தோன்றி விட்டது ஒரு காரணம். 'பாருங்கள், பிரதமரையே கொன்றோம்; பம்பன் பாலத்தைக் கூடத் தகர்ப்போம்! ஜாக்கிரதை!' என்று மிரட்டுவது இரண்டாவது நோக்கம்.

✱ ரூ. 20 பரிசு பெறுபவர் :
எம். குணசேகரன்,
பண்ணை ரைஸ்மில் தெரு,
வேலாயுதம்பாளையம் - 639 117.

பிள்ளை மரம்



'விஸ்வநாதன்...'

பெயர்ப் பலகையைப் பார்த்து முனகிக் கொண்டே காலிங் பெல்லின் ஸ்விட்ச்சில் கை வைத்து அழுத்தினான்.

சிறிது நேரக் காத்திருத்தலுக்குப் பின் இளம் வயதில் ஒரு பெண் கதவு திறந்தாள்.

''என்ன...?''

விஸ்வநாதன். வயதான பெரியவரா, இளமையான வாலிபனா யூகிக்க முடியா மல் ஒரு கணம் யோசனையாய்...

''சாரு... மிஸ்டர் [redacted]தன்...''

''எங்க மாமாதான், கும்பகோணம் போயிருக்காரு.''

''அவருகிட்டே கொஞ்சம் பேசணும், எப்ப வருவாரு?''

''கல்யாணம் ஒண்ணு... சாயந்திரம் வரதாச் சொல்லிட்டுப் போயிருக்காரு. என்ன விஷயம் சொல்லுங்க, நான் சொல் லிடறேன்.''

''அப்படி ஒண்ணும் முக்கியமா... சாயந்திரம் வரேன், கட்டாயம் சாயந்திரம் வருவாருல்ல?''

''அதான்... வரேன்னு சொன்னாங்க. கட்டாயமா வருவாரான்னு... எனக்குத் தெரியாது.. ஏன் நிக்கறீங்க உட்காருங்க...''

நீளமாய்க் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தான். பேச வந்த விஷயம் தவிர எதுவும் பேசத் தோணாத நிலை. உட்கார்ந்து வேறு ஆகி விட்டது. சுவரிலிருந்த காந்தி போட்டோ, பழங்காலத்து நாற்காலி, டேபிள் இவற்றையெல்லாம் சின்ன அவகாச நேரத்திற்குள் கண்கள் சுழற்றிப் பார்த்து லேசாய் உடம்பு நெளித்தான்.

''உங்க கொல்லையை ஒட்டி டி. என். சி. எஸ். சி. கொடெளன் கட்டறாங்கல்ல...''

''ஆமாம்... ஏதோ தூண் தூணா எழுப்பியிருக்காங்க...''

''அதோட ஒரு பக்கச் சுவரு உங்க கொல்லையிலிருந்து அஞ்சடி தள்ளி வருது. இப்ப கருங்கல்லுல பேஸ்மெண்ட் வரை கட்டியாச்சு. அடுத்து ரேட் கார்டு, அதுக்கப்புறம் பிரிக் வொர்க் ஆரம்பமாயிடும்.

திருவையாறு மகேந்திரவர்மன்

பிரிக் வொர்க்க... அதான்... செங்கல் வேலை ஆரம்பிச்சாச்சுன்னா அதுக்கு இடைஞ்சலா உங்க தென்னை மரம் இருக்கு. கட்டிடம் மேல போயிடுச்சின்னா அதுக்கப்புறம் ரூஃப் டெரஸ், ஆஸ்பெஸ்டாஸ் சீட் போடணும். அதனால இடைஞ்சலா இருக்கற அந்த தென்னை மரத்தை வெட்டணும். இதை மிஸ்டர் விஸ்வநாதன் கிட்ட ஏற்கெனவே டிபார்ட்மெண்ட் மூலமாவும், காண்ட்ராக்டர் மூலமாவும் தெரிவிச்சிருக்காங்க. அதுக்கு அவர் வெட்ட முடியாதுன்னு மறுப்பு சொல்லியிருக்கார். நான் அங்க இப்ப சைட் என்ஜினியரா வொர்க் பண்றேன். வேற வழி இல்லை அந்த மரத்தை வெட்டுறதைத் தவிர.''

இதுவரை அவனைப் பார்த்த பார்வைப் ப்ரிமாறல்கள் அவளிடம் இல்லை. கண்களில் வெறுப்பு படர்ந்திருக்க, பேசாமல் நின்றிருந்தாள். சூழ்நிலை கருதி அவன் தரை பார்த்தான். திடீரென்று உள்ளே சென்றாள். திரும்பி வந்தவளின் கையில் பேப்பர் இருந்தது. விரைவாக அவனிடம் நீட்டினாள்.

'என்ன?' என்ற பார்வை அவனிடம்.

''நீங்க என்ன சொன்னீங்களோ எழுதிக் கொடுத்துட்டுப் போங்க!'' வார்த்தையில் உஷ்ணம்.

'ஏன்? நான் சொன்னதைச் சொல்ல வேண்டியதுதானே...' அவனும் கேட்காமல் எழுதத் தொடங்கினான்.

ரேட் கார்ட் மெஷர்மெண்ட் எடுத்துக் கொண்டிருந்தவன் 'சார்' என்ற அழைப்பால் திரும்பினான். ஒரு சிறுவன்.

''சார், உங்களை அந்தக் கொல்லையிலிருந்து கூப்பிடுறாங்க.''

நடந்தான்.

கருங்கல் சுவர். இரண்டடி தள்ளி கையில் பேப்பருடன் விஸ்வநாதன்.

'விஸ்வநாதர்.'

வயது அவனுக்குப் புரிந்தது.

முகம் அத்துமீறிய கோபத்துடன்...

அவனாக எதுவும் பேசவில்லை.

''என்னய்யா! ஆளு இல்லாத வீட்டுல வந்து என் வீட்டுப் பொண்ணை மிரட்டிட்டுப் போயிருக்கே... உன்னால முடியுமாய்யா மரத்தை வெட்ட,..? நான் நினைச்சேன்னா எது வேணாலும் பண்ணுவேன்... இப்படி மொட்டைக் கடுதாசி எழுதிக் கொடுத்துட்டுப் போனா என்னய்யா அர்த்தம்? கையெழுத்துப் போடறதில்லே? இதை வெச்சி உன்னை என்னால போலீசுல புகார் கொடுக்க முடியும் தெரிஞ்சுக்கோ... புகார் கொடுத்து உள்ள தள்ள முடியும்...''

''என்ன மிரட்டலா? முடிஞ்சதைப் பாருங்க!''

''முடியும்! என்னால செய்ய முடியும்.... இப்பவே போலீஸ் ஸ்டேஷன் போறேன், இந்த மொட்டைக் கடுதாசியைக் காண்பிக்கறேன். நான் யாருன்னு நினைச்சே! டிஃபென்ஸ்ல வேலை பார்த்தவன்... ரிடையர்ட் மேன்..''

''எது மொட்டைக் கடுதாசி? ஆரம்பத்துல 'சூப்பர் பில்டர்ஸ்' அப்படின்னு போட்டுத்தான் எழுதியிருக்கேன்.''

''அது யாரு வேணாலும் எதை வேணாலும் போடலாம் தெரிஞ்சுக்கோ. எழுதுன நீ கையெழுத்துதானே போடணும்?''

''இது ஒரு பெரிய பிரச்னை இல்லைன்னு விஷயத்தை மட்டும் எழுதுனேன்.''

''எது பெரிய பிரச்னை இல்லை? 'நீங்க மரத்தை வெட்டாட்டி நாங்க மரத்தை வெட்டி வைத்துக் கொள்வோம்' இப்படித்தான் எழுதறதா?''

''அப்பத்தான் இந்த விஷயத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க முடியும்னு எழுதுனேன்...''

''நான் நெனைச்சேன்னா எதுவும் செய்ய முடியும். உன்னால முடிஞ்சா வெட்டிப் பாருய்யா.. இந்த ஒரு தென்னை மரத்துக்காக ஃபாரஸ்ட் ஆஃபீஸ் வரை போறதுக்கு எனக்கு தில்லு இருக்கு!''

''எங்க வேணாலும் போங்க... ஆனா சீக்கிரம் போங்க. இல்லாட்டி நாங்க வெட்டிடுவோம்.''

''என்னய்யா விதண்டாவாதமா பேசுறியா?''

''எது விதண்டாவாதம்? பதிலுக்கு நான் சொல்லட்டுமா... உங்க கொல்லை கடைசியிலிருந்து அ ஞ் ச டி தள்ளி கொடெளன் சுவரு வருது... ஆக்சுவலா உங்க மரம் உங்க கொல்லைக்குள்ளேயே வளர்ந்திருக்கணும்... அஞ்சடி த ள் ளி வளைஞ்சி ஏன் சுவருக்கு உள்ள வரணும்? இப்படியெல்லாம் கேக்க முடியும்.''

''எது எப்படியோய்யா. வெட்ட முடியாது! வெட்டவும் வுட மாட்டேன்.''

''ஃபர்ஸ்ட் மரியாதையாப் பேசுங்க! வாயா போயான்றீங்க! ஏதோ வயசுக்கு மரியாதை கொடுத்தா ரொம்பத்தான் பேசிக்கிட்டு... நான் இங்க என்ன மாடு மேய்க்கிறேன்னு நினைக்கறியா? சைட் என்ஜினியரா வொர்க் பண்றேன்... தெரிஞ்சுக்க!''

திடீரென்று அவன் வேகப் பேச்சில் விஸ்வநாதன் மௌனமானார்.

அவன் கண்கள் கனலாய்....

தென்னை மரத்தில் கை வைத்தான்.

தலை உயர்த்திப் பார்க்க, மூங்கில் மர இலைகளினூடே புகுந்து வளைந்து செல்லும் அந்த மரம்.. பெரிய பூகம்பமாய்... தற்போது.

''உங்க பேரு என்ன?''

''சாமிநாதன்.''

''மிஸ்டர் சாமிநாதன், கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க... இனிமே ஒரு தென்னை மரம் என்னால வளர்க்க முடியுமா... அப்படியே வளர்த்தாலும் என்னோட அடுத்த தலைமுறைதான் அதை அனுபவிக்கும்... இல்லியா?''

விஸ்வநாதன் பேச்சில் திடீரென்ற இறக்கம், எங்கே போயிற்று அந்த எரிமலைப் பேச்சு...? குரலில் ஏனிந்த இறக்கம்...?

வன்மப் பேச்சின் நிழல் கூடத் தெரியாமல் எப்படி இந்த மென்மை...? இப்பொழுது சாமிநாதனும் அவரைப் பார்வையில் மென்மையாய்க் கலந்தான். எதிர் நோக்கலில் அவரின் பார்வையும் மென்மையாய்...''

''சொல்லுங்க, என்னால அனுபவிக்க முடியுமா? இந்த மரத்தை வெட்டணும்னு சொல்லும் போதே என் உயிர் பிரியற மாதிரி இருக்கு. அம்பது வருஷமா இந்த மரம் என் வாழ்க்கையில சேர்ந்திருக்கு... இதை வெட்டணும்னா முடியுங்களா...?''

''சுத்தமா வேற வழியில்லை சார்... எனக்கும் உண்மையா இந்த மரத்தை வெட்டறதுல வேதனைதான்... என்ன செய்ய முடியும் சொல்லுங்க.''

''இதை வெட்டாம பில்டிங் தள்ளி கட்ட முடியாதுங்களா?''

''சான்ஸே இல்ல சார். பேஸ்மெண்ட் வரை வந்துடுச்சி. ரெண்டு கேபிள் காலத்தையும் ரெய்ஸ் பண்ணிட்டா, செங்கல்

சத்தியாக்கிரகம்



''ஆரம்பத்தில் 'சாத்விக எதிர்ப்பு' என்னும் சொற்றொடர்தான் இருந்தது. எவ்வளவோ முயன்றும் இதை விட அர்த்த புஷ்டியுள்ள ஒரு புதிய பெயரைக் கண்டுபிடிக்க என்னால் முடியவில்லை. எனவே நல்ல யோசனை கூறுபவருக்கு ஒரு சிறு பரிசு அளிப்பதாய் 'இந்தியன் ஒப்பினியன்' பத்திரிகையில் அறிவித்தேன். மகன்லால் காந்தி 'சதாக்கிரகம்' (சத் - உண்மை; ஆக்கிரகம் - உறுதி) என்ற சொல்லை சிருஷ்டித்துப் பரிசு பெற்றார். ஆனால் அது இன்னும் தெளிவாக விளங்கட்டும் என்று சத்தியாக்கிரகம் என்று மாற்றினேன்.''

- சத்திய சோதனை நூலில் மகாத்மா காந்தி.

தகவல் : கற்பகவல்லி ராஜா

வேலை ஆரம்பம்...''

விஸ்வநாதன் பெருமூச்சு விட்டு, தலை உயர்த்திப் பார்த்தார்.

''எப்படியெல்லாம் நான் இந்த மரத்தை வளர்த்தேன். சின்ன அரிவாள் வெட்டு கூட பட அனுமதிக்க மாட்டேன் சாமிநாதன்... தினமும் என்னோட வேலைகளைக் கூட தள்ளிப் போடுவேனே தவிர, இந்த மரத்துக்குத் தண்ணி ஊத்தறதை நிறுத்த மாட்டேன்... சத்தியமா சாமிநாதன்! இந்த மரம் என்னோட உயிர். அதை இழக்கணும்ங்கறதை நினைக்கும் போது...''

சாமிநாதன் பேசவில்லை.

பறிகொடுத்தலின் ஆற்றாமை அவர் நெஞ்சுக்குள்.

அவரின் கோபமான பேச்சிற்குக் காரணம் இதோ சொல்லி விட்டார்...

என்ன பேசுவது? எப்படித் தேற்றுவது...

''சார்...''

''சாமிநாதன். நீங்களும் ஃபீல் பண்ணீங்கன்னு தெரியுது.. வேற வழி? நான் உயிரா வளர்த்த இந்த மரத்தை வெட்ட என்னால முடியாது. அதனால நீங்களே ஆள் கொண்டு வந்து வெட்டி வித்துடுங்க... இதை என்னோட மகன் ஸ்தானத்துல இருந்து நீங்க செய்யணும்.''

வாள் பட்டறையிலிருந்து ஆட்களை அழைத்து வந்திருந்தான் சாமிநாதன். முகத்தில் சலனங்களே இல்லாமல் தென்னை மரத்தை வெட்டும் வேலையில் அவர்கள் ஈடுபட்டனர். விஸ்வநாதனின் வேதனை அவர்களுக்குத் தெரியப் போவதில்லை. சர்வ சாதாரணமாகத் தோளில் கயிறை வளையமாக மாட்டிக் கொண்டு மேலே ஏறினான் ஒருவன்.

சிறிது நேரத்திற்குள் 'கரகர' என்ற அறுக்கும் சப்தம். விஸ்வநாதன் கலங்குவது மூக்குக் கண்ணாடிக்குள் 'பளபள' என்று தெரிந்தது.

அகலமான குழிக்குள் அந்தத் தென்னம் பிள்ளையை வைத்தான் சாமிநாதன்.

விஸ்வநாதன் முகத்தில் மின்னலைகள்.

''என்ன சாமிநாதன்!''

''வேற வழி தெரியலை சார். இந்தத் தென்னம்பிள்ளை இந்தத் தலைமுறைக்கு இல்லாட்டியும், உங்களோட அடுத்த தலைமுறைக்காவது... இதை உங்க மகன் ஸ்தானத்தில் இருந்து செய்யறேன்.''



கான்ஸ்டபிள் : ''நாம ரொம்ப நாளாத் தேடிக்கிட்டு இருக்கிற கேடி ரங்கன் மாதிரியே ஒரு ஆள் சைக்களில் போனான் சார்...''

இன்ஸ்பெக்டர் : ''பிடிச்சுக்கிட்டு வர வேண்டியதுதானேய்யா...''

கான்ஸ்டபிள் : ''சைக்கிளில் பிரேக், லைட், பெல் எல்லாம் சரியா இருந்ததால் விட்டுட்டேன் சார்...''

- வி. சி. குமார்.



ஒருவர் : கின்னஸ் புக்ல அந்த அரசியல்வாதி பேர் வந்துடும்!

நண்பர் : எப்படிச் சொல்றீங்க?

முதல் ஆசாமி : தலைவர் கால்ல விழுந்தவர் மறுநாள்தான் எழுந்தாராம்!

- எஸ். முகம்மது யூசுப்.



''எங்க ஆபீஸில் லஞ்சம், மாமூல் வேணும்னு யாரும் கேட்கிறதில்லை!''

''ஆச்சரியமா இருக்கே... உண்மையாகவா?''

''ஆமா; 'விண்ணப்பத்து மேலே 'வெயிட்' வைங்க. இல்லேன்னா உங்க விண்ணப்பம் காற்றிலே பறந்துடும்'னு தான் சொல்லுவோம்...!''

- அ. தெய்வசிகாமணி.



இருமுடி சுமப்பது எதற்கு?

சரீரம், அதனால் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள், இவையாவும் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்டவை என்பது கீழைநாடுகளின் விதிக் கொள்கை.

செயலின் பின்விளைவுகள் மனிதனை மட்டும் அல்ல... சரீரம் எடுத்தால் கடவுளையும் கட்டுப்படுத்தும் என்பது நமது சமய நாதம். எப்படி?

முற்பிறவியில் சூரியன் ம க ன ா ன சுக்ரீவனுக்காக இந்திரன் மகனான வாலியை இராமன் கொல்கிறான். அதே இராமன், கிருஷ்ணனாக அவதரிக்கையில் கதை திரும்புகிறது. எப்படி? இப்போது இந்திரன் மகனான அர்ஜுனனுக்காகச் சூரியன் மகனான கர்ணனைக் கொல்கிறான்.

அது மட்டுமா? இலக்குவன் இராமனை அண்ணா அண்ணா என்று அழைத்து ஊழியம் செய்தது முற்பிறவி. அடுத்த பிறவியில் கண்ணனாக அவதரித்த இராமன், பலராமனை அண்ணா அண்ணா என்று அழைத்து ஊழியம் செய்து பிறவிக் கடனை அடைக்கிறான். மேலும் பல உதாரணங்கள் தர முடியும்.

விதிக் கொள்கை வலிமையானது. அது முதலாளித்துவ சமுதாய அமைப்பைக் காப்பாற்ற பௌராணிகர்கள் வகுத்த சூழ்ச்சி என்ற வாதம் தவறானது. மனிதனை நல்வழிப்படுத்த பெரியோர்கள் கண்ட பேருண்மை விதிக் கொள்கை.

ஒரு தவறு செய்தவன், சட்டத்தை, போலீஸை, நீதிமன்றத்தை ஏமாற்றினாலும் அடுத்த பிறவியில் தண்டனை உண்டு என்ற நம்பிக்கை உலகை ஒழுங்கான பாதையில் செலுத்தும். மறுபிறவியில் தண்டனை உண்டு என்ற கருத்து மனிதனை நியாயமாக நடக்கத் தூண்டியது. நடந்தார்கள்.

'பிறவி', 'மறுபிறவி' என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதை என்ற வாதம் மேலோங்கியதும் குற்றம் செய்யப் பலரும் தயங்குவது இல்லை. இந்தப் பிறவி ஒன்றுதான். சாமர்த்தியமாக நம் குற்றங்களை மறைத்து விட்டால், போலீஸ் நீதிமன்றங்களைச் சரிக்கட்டி விட்டால் நமது குற்றங்கள் குற்றங்களே அல்ல என்ற அசட்டு மனோபாவம் விளைகிறது!

'பணக்காரர்கள் கோவில் கும்பாபிஷேகம் என்று புண்ணியமான செயல்களைச் செய்து கடவுளைச் சரிக்கட்டுகிறார்கள்; தங்கள் செல்வம் பூர்வ ஜன்ம புண்ணியம் என்று நம்ப வைத்து மக்கள் எழுச்சியைத் தடை செய்கிறார்கள்' என்பது கம்யூனிஸ்டுகள் கருத்து.

கடவுளை யாரும் சரிக்கட்ட முடியாது. நல்லது செய்தால் புண்ணியம் வரும். தீயது செய்தால் பாவம் வரும். புண்ணியத்தைப் பாவத்திலோ - பாவத்தைப் புண்ணியத்திலோ கழிக்க முடியாது. பாவமும் புண்ணியமும் தனித் தனியாகச் சேர்ந்து பின்வரும் பிறவிகளில் இன்ப துன்பங்களைத் தரும்

என்பதே நம் சமயக் கொள்கை.

சபரி மலைக்குப் போகிறவர்கள் இரு முடி சுமப்பதன் பொருள் இதுதான்.

நமது வினை மூட்டைக்கு சஞ்சிதம் என்று பெயர். அது இரண்டு முடிச்சு. ஒன்று பாவ மூட்டை. மற்றொன்று புண்ணிய மூட்டை. இந்த இருமுடி சுமப்பதை வெளிப்படையாகக் காட்டத்தான் இருமுடி சுமக்கின்றனர் ஐயப்ப பக்தர்கள்.

அமைச்சரவை கூடியது. அயோத்தி அரசன் தசரதன் தலைமை தாங்குகிறான். நீண்ட பெருமூச்சு, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, அமைச்சர்கள் முகத்தை உற்றுப் பார்த்தபடி தன் தீர்மானத்தை அறிவிக்கின்றான்.

''இராமனை அரசனாக்குவேன். நான் காட்டில் போய்த் தவம் செய்து முக்தி பெறுவேன்.''

இரண்டு கன்றுக்கிடையில் தாய்ப் பசு போல் அயோத்தி நிலை. இராமனுக்குப் பட்டம் என்று மகிழ்வதா? தசரதன் காடு போகிறானே என்று கவல்வதா? இன்ப துன்பம் என்பது நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

எப்படியோ இராமனைப் பிரிவது - காடு போய்ச் சேருவது என்பது அறிவு பூர்வமான தசரதன் முடிவு. ஓர் இரவுக் குள்ளாகக் கைகேயி வரத்தால் கதை மாறி விட்டது.

அவள் பரதனுக்கு நாடு, இராமனுக்குக் காடு என்ற போது தடுமாறுகிறான். 'பரதனுக்கு நாடு தருகிறேன். ஆனால் இராமனை என்னால் பிரிய முடியாது. எனவே காடு போகாத வரம் தருக' எனக் கைகேயியிடம் கை ஏந்துகிறான்.

ஏன் இந்த முரண்பாடு? தான் காடு போவதாக முன்னரே தீர்மானித்தவன், இராமனும் காடு போவதென்றால் பிரிய வேண்டிய அவசியம் இல்லையே. சேர்ந்தே போகலாமே! இந்த எண்ணம் அமைதியாக யோசிக்கும் நமக்குத் தோன்றுகிற போது தசரதனுக்கு ஏன் தோன்றவில்லை?

மதியை விதி வென்றது! கண்ணில்லாத தம்பதிகள். அவர்களைக் காவடியில் கட்டிச் சுமக்கும் மகன். பெற்றோர் தண்ணீர் கேட்க, நதியில் கமண்டலத்தால் நீர் முகர்ந்த சப்தம் யானை நீர் குடிப்பது போல் கேட்டது!

எங்கோ இருந்த தசரதன் யானை என்றெண்ணி சப்தம் வந்த திசை நோக்கி அம்பு எய்தான். 'ஆ' என அலறி அந்தணச் சிறுவன் விழுந்தான். பதறினான் மன்னன். ஓடி வந்து வாரி எடுத்தான். உண்மை புரிந்தது.

சாகப் போகும் சிறுவன் கை குவித்து வேண்டினான். ''கண்ணில்லாத பெற்றோருக்குத் தண்ணீர் கொடுங்கள். குடித்தபின் என் மரணத்தைச் சொல்லுங்கள்.''

குவளை நீரை, கண்ணற்ற அவன் தகப்பன் வாயில் வலிந்து ஊட்டினான் தசரதன். 'து' என்று உமிழ்ந்து கையைத் தள்ளி ''நீ என் மகனா? உன் கையில் சந்தன மணம் வீசுகிறதே! எங்கு சென்றாய்? விருந்து உண்டு தாம்பூலம் தரித்து, சந்தனம் பூசி வந்தாயா? நீயும் ஒரு மகனா?'' தந்தை கோபித்தான்.

இறந்த பிள்ளை மேல் பழிவரக் கூடாதே என்று தசரதன் உண்மையைச் சொல்ல, வயிறு பதைத்துச் சாபமிட்டான் அந்தணன். ''என்னைப் போலே பிள்ளைப் பிரிவால் நீயும் மரணம் அடைவாய்'' - விழுந்து இறந்தான். மனைவியும் மாண்டாள்.

தசரதனுக்கு அந்தச் சாபம் அப்போது வரமாகத் தெரிந்தது. காரணம் அப்போது அவனுக்குப் பிள்ளை இல்லை. பிறக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. 'பிள்ளைப் பிரிவால் மரணம்' என்ற சாபம் உண்மை யாக வேண்டும் என்றால் பிள்ளை பிறக்கும் என்ற மகிழ்ச்சி கூடத் தோன்றியது!

இப்போது கைகேயி இராமனைப்

சுகி சிவம்

பிரியும் வரம் கேட்ட போது இந்த அதிர்ச்சி யான நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. மரணம் தன் தெருவுக்கு வந்து வீட்டு எண்ணை விசாரித்துக் கொண்டிருப்பது புரிந்து விட்டது. இராமனுடன் நாமும் காட்டுக்குப் போகலாம் என்ற கோணமே அவனுக்குத் தோன்றவில்லை! மதியை விதி வென்றது.

விதியை வற்புறுத்துவதன் காரணமே அதை வெல்ல வேண்டும் என்று புரிய வைப்பதற்காகத்தான். ஒருவன் எட்டாம் வகுப்பு படிப்பதே அதைத் தாண்டிப் போவதற்காகத்தான். விதிக்கப்பட்ட விதியை முயற்சியால் மாற்ற முடியுமா? மாற்ற முடியுமோ இல்லையோ முயற்சி செய்வது நமது கடமை.

உயிர் முயற்சி. உடம்பு விதி. உடம்புக் குள் உயிர் அடங்கி இருப்பது உண்மை. ஆனால் உயிர் உடம்பை இயக்கும் வலிமை உடையது என்பது பேருண்மை. உடம்பு வழிப்பட்ட சிந்தனைகளில் சிக்கி விதிக்குப் பலியாகி விடாமல் உயிர் வழிப்பட்ட சிந்தனைகளை மேற்கொண்டு விதியிலிருந்து விலக முயற்சி செய்வதே ஞானம்.

இப்போது யோசியுங்கள். விதிக் கொள்கை நமது சாபமா? வரமா?

(இன்னும் சொல்வேன்)

நான் போகும் பாதை



திரைப்படத் துறையில் அடியெடுத்து வைத்திருக்கும் கதை - வசன - இயக்குனர் வெற்றிவேந்தன் அவர்களுக்கு,

உங்கள் தமிழ்ப்பற்று, கவிதைப் பேரார்வம், சமதர்ம நோக்கு, மூடச் சம்பிரதாயங்களில் கொண்டுள்ள நம்பிக்கையின்மை... இவற்றுக் கெல்லாம் உருவகம் கொடுத்து ஒரு கதாநாயகனைப் படைத்திருக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல. ஒரு கதாநாயகன் என்பவன் மசாலாப் பொழுதுபோக்கின் பிரதிநிதியாக, அழகும் ஆண்மையும் புஜபல பராக்கிரமும் நிறைந்தவனாக, நடனமாடி டூயட் பாடுபவனாக மட்டுமே இருந்தாக வேண்டும் என்கிற இலக்கணத்தை உடைத்தெறிந்திருக்கிறீர்கள்.

அந்த வகையில் மகா துணிச்சல்காரர் நீங்கள்.

நடைமுறை வாழ்க்கையில் அவன் பலவீனப் பிரிவினரின் ஓர் அங்கமாக இருந்தாலும் கொண்ட நம்பிக்கைகளில் உறுதியோடு விளங்குவதால் சம்பவங்களை விடச் சம்பாஷணைகளையே நீங்கள் அதிகம் சார்ந்திருக்க வேண்டியதாகி விட்டது. உங்கள் படத்தின் பலமும் அதுதான். பலவீனமும் அதுதான்.

அன்றாடச் சம்பவங்களிலிருந்து எந்தவகையிலும் மாறுபடாத நிகழ்ச்சிகள். நல்ல தமிழ். நளினமான கவிதைகள். படம் முழுதும். என்றாலும் -

விவாத மேடைகளையும் கவிதைப் போட்டிகளையும் சற்றுக் குறைத்திருந்தால் பட்டிமன்றத்தில் அமர்ந்திருக்கும் உணர்வு தோன்றுவதைத் தவிர்த்திருக்க முடியும்.

பணச்செருக்கும் ஆடம்பரப் போக்கும் நிறைந்த கதாநாயகியாக அஞ்சு.

பழிவாங்கும் உணர்வோடு தொடங்கி, பின்னர் பாசத்துக்கும் பரிவுக்கும் இடமளித்து முடிவில் காதல் வயப்படுவது மிக மிக இயல்பு. அந்த உறவை உதறித் தள்ளி விட்டுத் தன் லட்சியத்தை நோக்கிக் கதாநாயகன் புறப்பட்டுப் போய் விடுவது எதிர்பாராத முடிவு.

பொழுதுபோக்கு அம்சங்களிலேயே முழுக்க முழுக்கப் பழக்கப்படுத்தப்பட்டுப் போய் விட்ட ரசிகர்களுக்கு உங்கள் படத்தை ஜீரணித்துக் கொள்வது சற்று சிரமமான காரியமாகவே இருக்கும். என்றாலும், புதிய அணுகுமுறை என்கிற அந்தவொரு காரணத்துக்காகவே உங்கள் முயற்சி ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்று.

- சி. ஆர். கே.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சிதா ரவி. முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.


ஒவ்வொரு தாயும் அறிந்தது:
குழந்தையின் உணவிலே
பருப்பு மிக அவசியமாகும்.
ஃபாரெக்ஸ்-வெஜ்
மட்டுமே பருப்பின்
நற்பயன்கள் அடங்கியதாகும்.
புரதச்சத்து நிரம்பிய
ஃபாரெக்ஸ்-வெஜ்,
தானிய வகைகள்,
பாசிப்பருப்பு, தக்காளி,
காரட் ஆகியவை
அடங்கியதாகும்; எளிதில்
ஜீரணிக்கக் கூடிய
உணவாகும்.
பருப்-
புடன்
Farex-veg
ITH CEREAL VEGETABLES, DAL AND MILK
ஃபாரெக்ஸ்-வெஜ்
சுவையுடன் வளரும் வழி.

அந்தக் காலை வேளையில் எழுபதாவது தடவையாக அம்மாவின் பெயரையும், அம்மாவின் பெயரால் அம்மாவின் உருவத்தையும் நடேசன் நினைவு படுத்திக் கொண்டான்.

ஹோட்டல் அன்னபூர்ணா என்று ஒவ்வொரு தம்ளரிலும் பெயர் அடிக்க வேண்டியிருந்தது. அப்படி அன்னபூர்ணா என்று பெயர் அடிக்கும் போதெல்லாம் அம்மாவின் உருவம் நினைவுக்கு வந்தது. அம்மாவின் பெயர் ஹோட்டல் அன்னபூர்ணா இல்லை. அன்னபூர்ணேஸ்வரி. ஆனாலும் பொழப்பைக் கெடுக்க வேணாமேன்னு பார்க்கறேன்!' தாக்குதல் வரும். பதில் பேசாது கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஒரு முதலாளி, ஒரு கடையாய் இருந்தால் பேசி, அழுது சமாதானம் சொல்லலாம். பதினெட்டு முதலாளி, பதினெட்டுக் கடை.

மலையடிவாரத்தில் கோயில். கோயில் எதிரே கோடு போட்டாற் போலக் கடைகள். அத்தனையும் பாத்திரக் கடைகள். எல்லாப் பாத்திரக்கடையும் நடேசனிடம் தான், பெயர் அடிக்க அனுப்பும். எப்போது அனுப்பும் என்று சொல்ல முடியாது.

ஒன்றுமில்லாதவர்கள்

'அ' என்று சிறு உளியைச் சுத்தி அடியோடு நகர்த்தும் போது, அம்மாவின் நினைவு வந்தது.

கிழவி தீபத்துக்கு வருகிறேன் என்று ஆள் அனுப்பியிருந்தது. காத்திருந்தான். வரவில்லை. தீபம் முடிந்த பிறகு யாரோ வந்து 'உடம்புக்குச் சுகமில்லை; அத்தினி கூட்டத்துல வரமுடியாது' என்று சொல்லி விட்டதாய்ச் செய்தி வந்தது.

''என்னவாம் உடம்புக்கு?''

''தள்ளாமை தான்.''

ஜுரம், தலைவலி, வயிற்றுப் போக்கு என்றால் சரியாகிவிடும். எங்கேயாவது மாத்திரை, மருந்து வாங்கி அனுப்பலாம். தள்ளாமைக்கு என்ன மருந்து.... சாப்பாடு தான். ஊட்டமான உணவு தான். ஒரு சிறிய ஹார்லிக்ஸ் பாட்டில் வாங்கிச் செய்தி சொன்னவன் மூலம் அனுப்பினான். 'பால் இல்லாட்டியும் வெந்நீர்ல கரைச்சுக் குடிக்கச் சொல்லு' என்று தெரிவித்தான்.

கிழவி குடித்ததோ இல்லையோ தெரியவில்லை..... போய் ஒரு நடை பார்த்துவிட்டு வரமுடியவில்லை. தீபத்தை ஒட்டி எல்லாப் பாத்திரக் கடையும் இரவு, பகலாய் ஒருநாள் கூட விடுமுறை இல்லாமல் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. 'நீ பாட்டுக்கு ஊரைப் பாக்கப் போயிட்ட. இங்க பேர் அடிக்க ஆள் இல்லை. நேத்திக்கு மட்டும் நாப்பது தவலை போச்சு தெரியுமா?' என்று பேச்சு வரும்.

'உன்னைய வுட்டா ஆள் இல்லைன்னு போவாதே. நடேசா... நானே எலக்டிரிக் மிஷின்ல பேர் அடிச்சுடுவேன். உன்

பாலகுமாரன்

எப்போது வேணுமானாலும் அனுப்பும். வியாபாரம் ஆக ஆகப் பாத்திரம் நடேசனிடம் வந்து கொண்டே இருக்கும்.

ஓர் எழுத்து இருபது பைசா என்று ரேட். சில சமயம் இருபது. சில சமயம் எழுபது ரூபாயும் கிடைக்கும்.

ஹோட்டல் அன்னபூர்ணா, ஜெயராஜ் நாடாரிடம் நூறு தம்ளர்கள் வாங்கி நாடார் மூலமாகவே இவனிடம் தம்ளர்களை அனுப்பியிருந்தது. சிறு உளியும், மெல்லிய சுத்தியலும் சமநேரத்தில் இயங்க எல்லாத் தம்ளர்களிலும் ஹோட்டல் அன்னபூர்ணா, அன்னபூர்ணா என்று பெயர் அடிக்கிற போதுதான் அம்மா நினைவு வந்தது. கிழவி எப்படியிருக்கிறதோ தெரியவில்லை.

'அக்காளைக் கொண்ட இடத்தில் இந்த ஜாதகன் உக்காந்து சாப்பிடுவான்' என்று சின்ன வயசிலேயே நடேசனைப் பற்றி ஜோஸ்யம் சொன்னார்கள்.

'அட கிரகச்சாரமே.... இப்படியா உன் தலையெடுத்து இருக்கணும்?' அம்மா நொந்து கொண்டாள்.

'அவனவன் பத்துப் பைசாக் காசுக்கு நாயா, பேயா அலையறான்... அக்கா வூட்ல உட்கார்ந்து சாப்படறது என்ன தப்பு. அண்ணன், தம்பி உறவை விட மாமன், மச்சான் உறவு உசத்தி. ஒண்ணும் தப்பில்லை.' யாரோ சமாதானம் சொன்னார்கள்.

கிழவிக்கு உடன்பாடில்லை. 'அக்கா வூட்டுக்குப் போனமா..... பார்த்தமா வந்தமான்னு இருக்கணும். அங்க கை நனைச்சதாத் தெரிஞ்சா நெஞ்சுல ஏறி மெதிப்பேன். தின்ற சோறை விட, மனுஷாளுக்கு மானம், மரியாதை தான் முக்கியம்.'

ஆனால் அவன் அக்காளைக் கொடுத்த இடத்தில், உட்கார்ந்து சாப்பிடுவதாய்த் தான் வாழ்க்கை அமைந்தது. அதற்கு அக்

காள் கையால் சோறு என்று அர்த்தமில்லை. அம்மா சொல்லிடுச்சு என்று கை நனைக்காமல் இருக்கிற பதினாறு வயசுப் பையனைக் கண்டு அதிசயப்பட்ட அத்தான் அவனுக்குப் பாத்திரக் கடையில் சொல்லி வேலை வாங்கிக் கொடுக்க, உளியும், சின்னச் சுத்தியலுமாய் உட்கார்ந்து காலில் பாத்திரம் இடுக்கிப் பேர் அடிக்கிற வேலை கிடைத்து விட்டது. இது உட்கார்ந்து செய்கிற வேலை. உட்கார்ந்து சாப்பிடுகிற வேலை!

நேர் எதிரே கோயில் கோபுரம். அதற்குப் பின்னே பெரிய மலை. கோடு கிழித்தது போலப் பாத்திரக் கடை வரிசையின் கடைசிக் கடையில் ஆஸ்பெஸ்டாஸ் நிழலில் நடேசன் பேர் அடித்துக் கொண்டிருப்பான். தலை தூக்க மலை தெரியும். கோபுரம் தெரியும். பெரிய கொடுப்பினை. அதை விடக் கொடுப்பனை இடது பக்கம் ஐம்பதடி தூரத்தில் உள்ள பழைய வீடு. வெண் தாடியும், சுடர் முகமுமாய் இருக்கிற விசிறிச் சாமியார் வீடு. உன்னிப்பாய்க் காது கொடுத்துக் கேட்க விசிறிச் சாமியின் கூர்மையான குரல் அவ்வப்போது கேட்கும்.

''கோ.... கோ..... கம் பை டென் ஓ க்ளாக்.'' இப்போதும் கூட யாரையோ சாமி விரட்டிக் கொண்டிருந்தது. வாசலில் நின்றவர்கள் மெல்லத் திரும்பிக் கோயில் பக்கம் போனார்கள். நடேசனைப் போல விசிறிச் சாமிக்கும் இந்த ஊர் சொந்தம் இல்லை. வடக்கே காசி தேசமாம். விசிறியும், தேங்காய்ச் சிரட்டையுமாய் ஊர் சுற்றிக் கொண்டிருந்த இவரைச் சிலர் காசு போட்டு வீடு வாங்கி





"எனக்கு இங்கிலீஷ் பார்த்டே, டமில் பார்த்டே இரண்டும் வருதே, இந்தி பார்த்டே ஏம்மா வரலே...?"

இங்கே உட்கார வைத்து விட்டார்கள். தினம், தினம் நிறையப் பேர் மாலை மரியாதை சகிதம் தேடி வருகிறார்கள். அவர் காலில் முட்டி முட்டி அழுது ஆசீர்வாதம் வாங்கிப் போகிறார்கள். சாமி ஆங்கிலத்தில் பேசும். கொச்சையாய்த் தமிழ் பேசும். செக்கச் செவேர் என்கிற உள்ளங்காலும், சில சமயம் வலது உள்ளங்கையும் அழிக்கம்பிகளுக்கு அப்பால் உற்றுப் பார்க்கும் போது தெரியும். வந்து சுத்தியும் உளியுமாய் உட்கார்ந்து மலையை ஒரு தடவையும், விசிறிச் சாமியை ஒரு தடவையும் பார்த்துக் கும்பிட்ட பிறகுதான் தொழில் துவங்குவது இவனுக்கு வழக்கம்.

அம்மாவுக்குத் தள்ளாமை என்று விசிறிச் சாமியிடம் சொல்லலாமா? யார் யாரோ வந்து என்னென்னவோ குறை சொல்கிறார்கள். அது நிமிர்ந்து பார்த்த மாத்திரத்திலேயே எல்லாப் பாவமும் பொடிப் பொடியாயிடும் என்று பேசுகிறார்கள். போய்ப் பார்த்துப் பேசுவோமா?

நூறாவது தம்ளர் அன்னபூர்ணா என்று அடித்து நிமிர்ந்த போது இடுப்பும், முதுகும் கைகளும் வலித்தன. எழுந்து நின்று உடம்பு மு றி க் க ப் படபடவென்று சொடுக்கு விழுந்தது.

"டேய்.... நூறு தட்டுக்கு ஆர்டர் கொடுத்திருக்கான் ஹோட்டல்காரன். எப்ப செய்யறே?"

"எப்ப தர்றியோ அப்ப...."

"நாலு தட்டு ஸாம்பிள் அனுப்பியிருக்கேன். எது சரின்றாங்களோ அது அனுப்பணும். போயிடாதே."

ஒரு நடை கோவிலுக்குப் போய் விட்டு வரலாம். அத்தான் கோவில் மண்டபத்தில் புத்தகக் கடை வைத்திருக்கிறார். பெரிய நான்மணி மாலை, ஞான வெட்டியான், கை ரேகைக் களஞ்சியம், மலைக் கோயில் மகிமை, மஸ்தான்சாகிப் துதிப்பாடல்கள் என்று புத்தகங்கள் விற்கிறார். கடையில் உட்கார்ந்து உட்கார்ந்து அவருக்கும் உடம்புக் கடுப்பு வந்துவிடும். இரு என்று அவனைக் கடையில் உட்கார வைத்து விட்டு ஒரு ரவுண்டு நடந்து விட்டு வருவார். இல்லை.... டீ சொல்லிவிட்டு ஊர்க் கதை பேசுவார்.

இப்போது அவனாகப் போய் மாட்டினால் ஒருமணிநேரம் அசைய முடியாது போகும். அதே சமயம் உட்காரவும் முடியவில்லை. போய் விசிறிச் சாமியாரைப் பார்த்துப் பேசுவோமா?

இதற்கு முன் இரண்டு தடவை பேசியிருக்கிறான். குறை ஏதும் கேட்கவில்லை. கும்பிட மட்டும் போயிருக்கிறான்.

மறுபடி போய் விசிறி சாமியைப் பார்க்கலாமா? உள்ளே எட்டிப் பார்த்தான்.

அழிக்கம்பிகளுக்கு உள்ளே சாமி உட்கார்ந்திருந்தது.

"யார் அது?" குரல் கொடுத்தது.

"நா நடேசனுங்க."

ஒரு பையன் கதவு திறந்து விட, உள்ளே போனான்.

கும்பிட்டான்.

"என்ன பண்றே நீ?" சகலமும் மறந்து போய்க் கேட்டது.

"இங்கதான் பாத்திரம் பேர் அடிக்கிறேனுங்க."

"என்ன?"

"பாத்திரத்துல பேர் அடிக்கிறேன் சாமி... வாங்கறவங்க பேரு...."

"பேர்ல என்ன இருக்கு?"

"சாமி....?"

"பேர்ல என்னாடா இருக்கு?"

"புரியலை சாமி."

"உம் பேரு நடேசன்னு யார் சொன்னா?"

யார் சொன்னா... யோசித்தான்.

"பேரு முக்கியமா? நீ முக்கியமா?"

"தெரிலை சாமி. எங்கம்மாளுக்கு உடம்பு முடியலை.... அதான்...."

"அம்மான்றது யாரு?"

"என்னையப் பெத்தவ சாமி."

"யாரு சொன்னது?"

"எல்லாரும் சொன்னாங்க."

"நான் சொல்றேன், அதோ ரோட்ல போறவதான் உங்கம்மான்னு. கேப்பியா?"

அது எப்படி என்பது போல் நின்றான்.

"மத்தவங்க சொன்னது நெஜம். நான் சொல்றது பொய்யா, ஊர் சொன்னது நம்புவே. என் பேச்சு நம்பமாட்டியா?"

"இல்லை சாமி. நீங்க பொய் சொல்ல மாட்டீங்க...."

"அப்போ அம்மான்றது பேரா? ஆளா?"

"தெரியலையே சாமி."

"தெரிஞ்சுக்கிட்டு வா. போ."

பேசாது நின்றான்.

"போடா..." அதட்டியது.

வெளியே வந்து கையெடுத்துக் கும்பிட்டான். குழப்பமாய் இருந்தது. சாமி ஏதோ கோவமாயிருக்கு என்று நினைத்துக் கொண்டான்.

"எங்கேடா போயிட்ட?" ஜெபராஜ்

நாடார் கத்தினார்.

''வந்துட்டேன்.''

''பேர் அடிக்கணுமாம். எதிரே தவலையுடன் நின்றிருந்த கிழவியைக் காட்டினார். போணும், போணும்னு பறக்குது. கிழவி சுற்றுப்பக்கக் கிராமத்திலிருந்து வந்திருப்பாள் போலத் தெரிந்தது. ரவிக்கையின்றிப் பழம் புடைவை மட்டும் போர்த்திச் சுவரோரம் நின்றிருந்தாள்.

''தட்டு வாங்கலையா?'' உட்கார்ந்தான்.

''சாயந்தரம் வருதாம். நீ இத முடி.''

''என்னாம்மா உன் பேரு?''

''பொன்னியம்மாள்.''

''உட்காரு.'' கிழவி உட்கார, தவலையை இடுக்கிக் கொண்டு சுத்தியலால் புள்ளி போட்டான். 'பொன்னியம்மாள்' என்று அடித்து முடித்தான். கிழவி நடுங்கும் கைகளால் தவலை வாங்கியது, பேர் அடித்த இடம் தடவியது, படிக்கத் தெரியாது என்பதால் வியப்புடன் பார்த்தது.

''என்ன எழுதியிருக்கு?''

''பொன்னியம்மாள்.''

''ஐய்ய... அது எம்பேராச்சே. அத ஏன் எழுதின?''

''நீதான சொன்ன?''

''நீ எம் பேரு கேட்ட.... சொன்னேன். அதுவா அடிக்கிறது?''

''ஏ கிழவி விளையாடறியா?''

''இது எம் பொண்ணு வாங்கினது. அவ பேர்ல போடணும். இத அழிச்சிடு.''

''அழிக்கிறதா.... தவலை பொத்துக்கிடும்.''

''ஐயோ... எம் பேர் போட்டா வந்து மொலு மொலுன்னு பிடிச்சுக்குவாளே....''

''என்ன செய்யச் சொல்றே?''

''மாப்பிளை கோவக்காரன். நீதானடி துட்டுக் குடுத்த. உங்க ஆத்தா பேர் ஏன் போட்டேன்னு என் பொண்ணைப் போட்டு அடிப்பான். என் பொண்ணு பேரைப் போட்டுரு ராசா....''

''பொண்ணு பேரு என்னா?''

''மணிமேகலை.''

நடேசன் யோசித்தான். பொன்னியம்மாள் என்று எழுதியாகிவிட்டது. இப்போது மணிமேகலை என்று அடிப்பதா? பொன்னியம்மாள் மகள் மணிமேகலை என்று அடித்தால் என்ன! ஊரில் நாலைந்து மணிமேகலை இருக்கலாம். பொன்னியம்மாள் மகள் மணிமேகலை ஒருவர்தான் இருக்க முடியும்.

அடித்து முடித்த போது கிழவியிடம் யாரோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஏன் தவலை வாங்கின? தூக்குத் தானே வாங்கச் சொன்னேன்.''

''அவங்க தவலை தானே கொடுத்தாங்க. பதிலுக்குத் தவலை கொடுக்காம தூக்குக் கொடுத்தா மரியாதையா? என் கிட்ட இருபது ரூபா இருந்தது. உன் துட்டோட என் துட்டையும் போட்டு வாங்கினேன்.''

''தவலை எங்கே?''

''பேர் அடிக்கிறான்.''

''என்ன பேரு?''

''உம் பேருதான்.''

''நாசமாப் போவ... என் பேர் எதுக்கு?''

''உம் புருஷன் திட்டப்போறானேன்னு தான் உம்பேரை அடிக்கச் சொன்னேன். இந்தாளு முதல்ல எம் பேரு அடிச்சுட்டான்....''

''உம் பேர் வேறயா? அட கஷ்ட காலமே.''

''உம் பேரு என்னான்னான். சொன்னேன். உடனே தவலைல அடிச்சிட்டான். நான் என்னாடி பண்ணுவேன்?''

''ஐயோ... ஐயோ.... ஏம்ப்பா, தவலையைக் குடு.''

'பொன்னியம்மாள் மகள் மணிமேகலை' என்று சுத்தமாய்ப் பொறிக்கப் பட்டிருந்தது.

''அட கூறு கெட்ட முண்டமே...'' மகள் கிழவியை நோக்கிக் கத்தினாள்.

''என்னாடி...?'' கிழவிக்குக் குரல் நடுங்கிற்று.

''இதப் போய் எப்படிக் கல்யாணத்துக்குக் குடுக்கறது?''

''ஏன்?''

''உம் பேரு, எம்பேரு போட்டா இன்னொருத்தருக்குத் தருவாங்க. கல்யாணப் பொண்ணு பேரு போடவேணாமா? போட்டாக் கல்யாணப் பொண்ணு பேரு போடணும். இல்லியா சும்மா குடுக்கணும் தவலைய...''

''புதுசு தானே... நம்ம ஞாபகமா நம்மபேரு போட்டு....''

''ஆமா... நம்ப பேரு போட்டு.... நம்ம ஆண்டுக்கிட்டிருந்ததைத் தூக்கி குடுத்ததால்ல ஆயிடும்.... அவ என் கல்யாணத்துக்கு இந்த மாதிரி பேர் போட்டுக் குடுத்ததையே திருப்பி அவளுக்கு வச்சிட்டம்னுல நினைப்பா.. இத அழிக்க வேற முடியாது....''

''என்னம்மா?''

''காயமே இது பொய்யடான்னு ஹெட்கிளார்க் பாடறாரே ஏன்?''

''வெங்காயம் நறுக்கும் போது விரலை நறுக்கிட்டதாச் சொல்லி டைப்பிஸ்ட் போட்டிட்டு வந்திருக்கும் கட்டைப் பற்றிய தன் சந்தேகத்தை இப்படி வெளியிடறார்!''

- கரம்.



''பேரு தப்பு.''

''பேரு... தப்பா... இது ரெண்டாந்தடவ.

''ஏம்மா தவலை குடுக்கச் சொல்ல பேர் கரெக்டா சொல்ல மாட்டீங்களா?''

''ஆமாய்யா... இது கூறு கெட்ட மாதிரி இது பேரையும் எம் பேரையும் சொல்லி வச்சிருக்கு. கல்யாணப் பொண்ணு பேரு போடணும்.''

''இதுவே மூணு ரூபா எண்பது பைசா.''

''பேர் அடிக்கிறதுக்கா அத்தினி... அப்படியே குடுக்கறத வுட்டுட்டு எதுக்குப் பேரு, புண்ணாக்கு எல்லாம். இந்தப் பீடை பண்ற கூத்து.....'' மகள் கத்தினாள். கிழவி வெறிக்க உட்கார்ந்திருந்தது.

''நீ பஸ்ல வராதே. நடந்து வா. அப்பத்தான் உனக்குப் புத்தி வரும்.''

கிழவி தலை குனிந்து கொண்டாள். அவள் கண்களில் நீர் திரண்டது. முணு முணுப்பாய் ஏதோ பேசினாள்.

''குறைச்சுக்க முடியாதா?''

''முடியாதும்மா.''

''கல்யாணப் பொண்ணு பேரு போடலாமா?''

''போடலாம்.''

''மொய் எழுதினாமாதிரி போடலாமா?''

''போடலாம்.''

''அப்ப போட்டுரு. தூக்கு வாங்கினாப் போதும்னேன். கோயிலுக்குப் போயிட்டு வரதுக்குள்ள தவலைய வாங்கி.....''

''அவங்க தவலைதானடி நமக்குச் சீரு வச்சாங்க. நாமளும் பதிலுக்குத் தவலை தான வைக்கணும். அதான் என் துட்டுப் போட்டு....''

இப்ப நாலு ரூபா கூட செலவு இருக்கே. இந்த துட்டு யார் தரது? நீ தரியா?''

''என் கிட்ட பஸ்ஸுக்குக் கூட துட்டு இல்லை.''

''நீ நடந்து வா. அப்பத்தான் புத்தி வரும்.''

''உன்னாண்ட இருந்தாக் குடேன். ஊருக்கு வந்து தரேன்.'' யாரிடமோ கிழவி கடன் கேட்டாள். அங்கே ஏழைமை தெளிவாய்த் தெரிந்தது.

நடேசன் தவலையை இடுக்கினான். கல்யாணப் பெண் பெயர் கேட்டான்.

'பொன்னியம்மாள் மகள் மணி மேகலை, செல்வி வனஜாட்சிக்குத் திருமணப் பரிசு' என்று வெட்டினான்.

''எதுக்குச் செல்வி, திருமணம் எல்லாம்... அதுக்கு வேற அனாவசியத் துட்டு புடுங்கவா?''

''எனக்குத் துட்டு வேணாம்.''

''ஏன்?''

''அந்தத் துட்டுல கிழவிக்குக் காப்பி வாங்கிக் குடுத்து, பஸ்ல கூட்டிட்டுப் போ. நடக்க வுடாத... பாவம்.''

''கிழவி அழுதவுடன பாசம் பொங்கிடுச்சாக்கும்.''

''ஆமா. எங்காத்தா இப்பிடித்தான். தூக்குக் குடுத்தா பதிலுக்குத் தூக்குத் தான் சீர் தரணும். தவலைன்னா தவலைதான் தரும். வாங்கினது என்னவோ அதுதான் தரும். அளவு கூடப் பாத்துச் சரியா வாங்கும். இத எடுத்துக்கிட்டு போ. நாடார்..... தட்டு வந்துருக்கா?'' குரல் கொடுத்தான்.

மகளும், கிழவியும் சிறிதுநேரம் அங்கேயே நின்றார்கள். மகள் நகர, கிழவி திரும்பி நடந்தாள். நாலடி நடந்து விட்டு ஓடி வந்தாள்.

''உங்க ஆத்தா இருக்குதா?''

''இருக்குது.''

''அவளுக்கு ஒரு குறையும் வராது.'' அவன் முகம் வழித்து நெட்டி முறித்தாள். அவள் கண்களிலிருந்து நீர் வழிந்து கோடாய் விழுந்தது.

நடந்து போகும் கிழவியை நடேசன் பார்த்தபடி இருந்தான். தேரடிக் கும்பலில் இருவரும் நடந்து மறைந்தார்கள்.

'அம்மான்றது ஒரு பேரா... ஒரு ஆளா? அதோ ரோட்ல போவுதே, அவதான் உன் அம்மான்னு சொல்றேன். மத்தவங்க சொல்றது நிஜம். நான் சொல்றது பொய்யா?'

விசிறிச் சாமியின் குரல் காதில் ஒலித்தது. நடேசன் உடம்பு உதறிப்போட்டது.

''சாமி....'' ஓடிப்போய் அழிக்கதவுக் கருகே நின்றான்.

''என்னாடா?'' சாமி அதட்டியது.

என்ன சொல்வது... எல்லாவற்றையும் எப்படிச் சொல்வது. நடேசனுக்குத் தொண்டை அடைத்தது.

''ஒண்ணுமில்லை சாமி.''

விசிறிச் சாமி இடி போன்ற குரலில் சிரித்தது.

''அங்கேர்ந்து ஓடிவந்து ஒண்ணு மில்லை சாமின்றான். ஒண்ணுமே யில்லையாம்....'' மறுபடி வாய் விட்டுச் சிரித்தது.

நடேசனும் சிரித்தான்.

''இப்ப இருக்கிற கல்வித் திட்டத்தை மாத்தியாகணும்... புஸ்தகப் படிப்பை வெச்சுக்கிட்டுப் பொழைக்க முடியுமா, சொல்லுங்க...''

''நிச்சயமா மூட்டை தூக்கிப் பொழைக்கலாம்...!''





மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினல், அவ்வகை உணவுடன் நெஸ்டததை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம், போஷாக்கு நிறைந்த ஸிரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110016

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸிரிய

நெஸ்டம்

காவல்



முதலமைச்சர் குளியலறைக்குப் போனார். வெளியே போக்குவரத்து நிறுத்தப்பட்டது. சூழல் அமைதியாகி விட்டது. முன்னதாக ஒரு ஜீப்பில் காவல் அதிகாரி புறப்பட்டார். காலம் இருக்கிற இருப்பில் ஏற்பாடுகள், மேற் பார்வை... கையில் மைக் பிடித்துக் கரகரப்பான உத்தரவுகள். கேட்டதும் பதறிச் செய்யத் தெருவின் இரண்டு பக்கங்களிலும் போலீஸ்காரர்கள்.

''யோவ், அந்த மாட்டை விரட்டுய்யா.''

ஓரத்தில் மேய்ந்த மாடு போலீஸ்காரர் விசில் ஊதியதை லட்சியமே செய்ய வில்லை. ஆத்திரத்தில் குனிந்து போலீஸ் காரர் கல்லெடுத்தார். பட்ட இடத்தை ஆட்டி விட்டு மாடு தொடர்ந்து மேய்ந்தது. ''தே, தே'' என்று குரல் கொடுத்துப் போலீஸ்காரர் மாட்டைத் துரத்தினார்.



இன்றைக்கு ரயிலைப் பல்லாவரத்தில் கொஞ்சம் நேரம் போட்டு விட்டான். கை யில் சாவியுடன் தாமதமான அந்தச் சில நிமி டங்களில் நாகராஜனிடம் ஏற்பட்டு அடங் கிய படபடப்பிற்கு ஈடாக எத்தனை பண மும் போதாது. அலுவலகத்துக்கு நேரமாகி விடுமேயென்று அப்போதுதான் சாப்பிட்ட வயிற்றில் சைக்கிள் மிதித்துப் படியேறி ரயில் பிடித்து, இதோ பஸ்ஸைப் பிடிக்க நாகராஜன் ஓடினான். ஸ்டேஷனுக்கு வெளியே போக்குவரத்து நிறுத்தப் பட்டி ருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் மாநில முதலமைச்சர் அந்த வழியாகப் போகவிருக் கிறார்.

ரவுண்டானா தாண்டி ஏலத்தில் மலி வாய் எடுத்த ஏரோப்பிளேன் நிற்கிற கட்டடம். அலுமினியப் பெயிண்ட் அடித்த அசையாத விசைக்காற்றாடி. முதலில் துவக் கம் அப்படித்தான். ஓய்வு பெற்ற பேராசிரி யர்கள் சல்லிசாய்க் கிடைத்தார்கள். 'பொறி யியல் கல்லூரி' என்று போர்டு மாட்டப் பட்டது. வெளியூர்ப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வந்தன. அசாம், நாகா லாந்து என்று நம்பி வந்த பெற்றோர்கள் வாசல் ஏரோப்பிளேனில் ஏமாந்து, கேட்ட பீஸ் கட்டினார்கள். கூடாரங்கள் வகுப் பறைகள் ஆயின. சீக்கிரமே கடன் வாங்கி ஒரு கட்டடம் வந்தது. வாடகையில் கடனைக் கழிக்க முன்பக்கம் வங்கியே வந்து விட்டது. காலை மணி பத்தை நெருங்க, வாடிக்கையாளர்கள் காத்திருந் தார்கள். வெளியே போக்குவரத்து நிறுத்தப் பட்டிருந்தது. வழக்கமாய் இந்த நேரத்தில் வந்து விடுகிற கேஷியர் நாகராஜனை இன்னமும் காணவில்லை!

முஹம்மத் இஸ்மாயில் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். நல்ல வலுவான ஆப்ரிக்கத் தோள்கள். குள்ள உருவம், தடித்த உதடுகள், தலையில் ஸ்பிரிங்க் சுருள், கறுத்த முகத்தில் வெள்ளைச் சிரிப்பு. பார்க்கிற யாருக்கும் இஸ்மாயிலைப் பிடிக்கும். ஒரு குறும்புக்கார சிம்பன்ஸி யைப் போல. அந்த ஊர்ப் பத்திரிகையில் ஏரோப்பிளேன் விளம்பரத்தைப் பார்த்து விட்டு அவனுடன், அவன் தாத்தாவும் வந்தார். வர்ணத் தொப்பியும், வெள்ளை அங்கியுமாய் எல்லோரும் அவரை விசித்திர மாய்ப் பார்த்தார்கள். அங்கே அவர் ஒரு பழங்குடிகளின் தலைவர் என்று இங்கே யாரும் ஊகித்திருக்க மாட்டார்கள். காபா,

ம.வே.சிவகுமார்

தீபா என்று அவர்களுக்குள்ளே ஒரு பாஷை. அப்பா இல்லாத இஸ்மாயிலை அவர் அன்புடன் வளர்த்து வந்தார். இங்கே நங்கநல்லூரில் அவனுக்குத் துணையாக நான்கு பேரை அங்கிருந்து அழைத்து வந்து, வீடெடுத்துப் படிக்க வைத்தார். மூன்று வருடங்களுக்கு மேலாகிறது அவரைப் பார்த்து. அவர் கூடவே வந்து துவக்கி வைத்த வங்கிக் கணக்கில் எப்போதும் பணம் இருக்கிறது. இன்னமும் அந்தக் கேஷியரைத்தான் காணவில்லை.

''யோவ் கௌவா, ஓரமாப் போ.''

நீலக்கலர் ஜீப்பில் காக்கிக் கலர் அதிகாரம். தள்ளாத கிழவன், நடையில் வேகம் பெற்றான். மனிதன் என்றும் பார்க்க முடியாது. மாடு தானேயென்று விட்டு விடவும் முடியாது. அதன் வயிற்றில் பாம் வெடிக்கலாம். இன்ஸ்பெக்டர் தன் மாமூல் தொப்பையைத் தடவிக் கொண்டார்.

''யோவ் கண்ணாடி, பிளாட்பாரத்துலே ஏறு.''

நாகராஜன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். நீலக்கலர் ஜீப் ரவுண்டாணாவை வட்ட மடித்துப் போனது. ஒரு கணம் அவனுக்குக் கெட்ட வார்த்தைகளுடன் அதைத் துரத்தவேண்டும் போல இருந்தது. கோபத்தில் முகம் சிவந்து விட்டது. யாரும் அவனைக் கிண்டலாய் அழைத்து எவ்வளவோ வருடங்கள் ஆகிவிட்டன. நாகராஜன் சட்டைப் பையை ஒரு தரம் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வங்கியின் பணச் சாவி அங்கே பத்திரமாய் இருந்தது.

முஹம்மத் இஸ்மாயில் கடிகாரம் பார்த்தான். பத்து அடித்துப் பத்து நிமிடங்கள். இன்னமும் அந்தக் கேஷியரைக் காணவில்லை. தெருவைக் கடந்து ஒரு டீ குடிக்கலாம் என்று சோம்பல் முறித்தான். ஜுபேர் அஹம்மத் வரவில்லை. ஓர் இந்தியப் பெண்ணை மணக்கப் போவதாய்ச் சொல்லி, வங்கியிலிருந்த பெண்களைப் பார்த்து நின்றான்.

தடித்த உதடுகளைப் பிதுக்கி, இஸ்மாயில் தோளைக் குலுக்கிப் புறப்பட்டான். வெளியே ஏன் இவ்வளவு அமைதியாக இருக்கிறது? முஹம்மத் இஸ்மாயில் தெருவில் கால் வைத்த போது, தொலைவில் முதல்வரின் கார் வந்து கொண்டிருந்தது. பின் பக்கம் ஓடி வந்து போலீஸ்காரர் அவனைப் பிடித்துக் கொண்டார். விவரம் புரியாமல் அவன் உதறிய உதறலில் பத்தடி தூரம் போய் விழுந்தார். சர், சர் என்று வாகனங்கள் அவனைக் கடந்தன. எதிர்ப் பக்கத்திலிருந்து, ஒரு போலீஸ்காரர் அவனை நோக்கி ஓடி வந்தார். அவர் வந்த வேகத்திலேயே இலாவகமாய் இடுப்பைப் பிடித்து இஸ்மாயில் வீசினான்.

முஹம்மத் இஸ்மாயில் பழங்குடிகளின் இளவரசன். அவனுக்குக் கோபம் வந்தால் கானகமே நடுங்கும். எங்கேயோ விசில் சப்தம் கேட்டது. தட தடவென்று பலதிசைகளிலிருந்தும் அவர்கள் ஓடி வந்தார்கள்.

வங்கியின் படிக்கட்டில் வந்து சேர்ந்த படபடப்பு அடங்காமல், வாய் பிளந்து, கேஷியர் நாகராஜன் பார்த்து நின்றான். சப்தம் கேட்டு, மற்றவர்களும் வெளியே வந்து அவனைச் சுற்றி நின்றார்கள். தெருவில் பதினைந்து போலீஸ்காரர்கள் வெவ்வேறு நிலைகளில் தூக்கியெறியப்பட்டுக் கை, கால் அசைத்துக் கிடந்தார்கள். நடுவே முஹம்மத் இஸ்மாயில் இன்னமும் குதித்துக் கொண்டிருந்தான். மேலும் இருவர் தயங்கி, நெருங்கி, தூரப் போய் விழுந்தார்கள்.

நீலக்கலர் ஜீப் வந்தது. முஹம்மத் இஸ்மாயில் பெல்ட்டை அவிழ்த்துக் கையில் எடுத்துக் கொண்டான். லாரியிலிருந்து போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். சற்றுத் தூரத்தில் பைக் சப்தம் கேட்டது. இஸ்மாயில் ஓரக் கண்ணில் பார்த்தான்.

ஜுபேர் அஹம்மத். 'ரைய்ன், ரைய்ன்' என்று ஆக்சிலேட்டர் உயர்கிற சப்தம். இஸ்மாயில் பெல்ட்டை சுழற்றிக் கொண்டே



''இதோ பாருங்க சார், இது லோ பட்ஜெட் படமா இருக்கலாம்; அதுக்காக எல்லாருக்கும் கம்மங்கூழும், கேழ்வரகுக் கஞ்சியும் சாப்பிடக் கொடுக்கிறதெல்லாம் நல்லா யில்லை!''

- குடந்தை எல். ராம்பிரபு.



பக்கவாட்டில் ஓடித் தாவி ஏறிக் கொண்டான். வெறும் புகையை மட்டும் போலீஸுக்கு விட்டு விட்டு வண்டி எங்கேயோ பறந்து போனது!

ரவுண்டானாவைச் சுற்றிக் கொண்டு, வெள்ளை நிறத்தில் ஜன்னலில் வலையடித்த போலீஸ் வேன்கள் கல்லூரியை முற்றுகையிட்டு நின்றன. உதட்டில் புண் வந்த வாட்ச்மேன் முனுசாமி வேனில் ஏறுகிற சமயம் 'அய்யோ அய்யோ'வென்று தமிழில் கத்தியதால் தப்பித்தான். போலீஸ், ஹாஸ்டலில் புகுந்து சட்டை கிழித்து விசாரித்தார்கள். வங்கியில் அவ்வப்போது பியூன் செல்வராஜின் விசேஷ செய்தி மடல். ''வேஸ்ட்டு. அவனுங்க இந்நேரம் எங்கனாச்சும் பறந்திட்டிருப்பானுங்க.'' ''தே கெனாட் அரெஸ்ட் ஃபாரின் ஸ்டுடண்ட்ஸ். முதல்லே எம்பஸியிலே பர்மிஷன் வாங்கணும்....'' என்று அக்கவுண்டண்ட் சந்துரு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

மதியம் மூன்று மணிக்கு மேல் நங்கநல்லூர் வீட்டில் முஹம்மத் இஸ்மாயில் பிடிபட்டு விட்டதாகச் செய்தி வந்தது. வங்கியின் சொச்சநேரமும் அன்றைய சம்பவத்தைப் பற்றிய பேச்சிலேயே போய் விட்டது.

கேஷியர் நாகராஜன் தூக்கம் வராமல் புரண்டு படுத்தான். தலையணையருகில் மூக்குக் கண்ணாடி கழற்றி வைக்கப்பட்டிருந்தது.

முஹம்மத் இஸ்மாயில். அவனைப் போலீஸ்காரர்கள் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? வங்கியில் பணம் கொடுக்கிற சதுரத்தில் குனிந்து சிரித்துப் போகிற அவனுடைய கறுத்த முகம், மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தது. ஆனால் முகம் இப்போது இரத்த மயமாக இருந்தது. மேலும் மேலும் பூட்ஸ் கால்கள் அவன் முகத்தில் இறங்கின...

காலை மணி பத்து. அலாரம் வைத்து எழுந்து நாகராஜன் சீக்கிரமே வந்து விட்டான். முஹம்மத் இஸ்மாயில். அவனை என்ன செய்திருப்பார்கள்? பியூன் செல்வராஜிடம் மேற்கொண்டு தகவல்கள் இல்லை. ரவுண்டானா பகுதியில் போலீஸ் நடமாட்டம் இல்லை.

'டிட்டாங், டிட்டாங்...' நாகராஜன் டோக்கன் நம்பரை அமுத்தினான்.

''யா கமிங்...'' சப்தமாய் ஒலித்த குரலில் நாகராஜன் நிமிர்ந்து பார்த்தான். உடலில் ஒரு கீறல் இல்லாமல் முஹம்மத் இஸ்மாயில்! நாகராஜன் இன்னொரு முறை சரி பார்த்தான்.

பணத்தைக் கொடுத்து விட்டு, கவுண்டரில் குனிந்து இஸ்மாயிலைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கேட்டான்:

''வாட் ஹாப்பண்ட்?''

''வாட்?''

''யெஸ்டர் டே?''

''ஓ!''

முஹம்மத் இஸ்மாயில் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''வெல்! அது சமரசமாகி விட்டது.''


''எப்படி?''

''ரெண்டாயிரம் ரூபாய் கேட்டார்கள்.''

''நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

முஹம்மத் இஸ்மாயில் கறுத்த முகத்தில் வெள்ளைச் சிரிப்புடன் கண்களைச் சிமிட்டித் தொடர்ந்தான்.

''நான் சொன்னேன்... நாலாயிரம் ரூபாய் தருகிறேன். இன்னும் கொஞ்சம் போலீஸ்காரர்களை அனுப்புங்கள்!''



மக்கள் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றார்கள்!

கேள்வி : அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் சுமாராக மார்க் வாங்கியவர்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியாக இருந்தால் இட ஒதுக்கீட்டின் மூலம் இடம் கிடைத்து விடுகிறது. பணக்காரர்களாக இருந்தால் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள மானேஜ்மெண்ட் கோட்டா மூலம் பணம் கொடுத்து இடம் வாங்கி விடுகிறார்கள். ஆக, திறமை பின்னுக்குப் போய் விடுகிறது. அதனால் திறமையற்ற டாக்டர்களும் அதிகரித்து விடுகிறார்கள்...

உதய : இதைத் தடுப்பதில் கஷ்டமொன்றும் இல்லை. அமெரிக்காவில் 'மெடிகல் போர்டு' ஒன்று உண்டு. எந்தக் கல்லூரியில் படித்து டாக்டர் பட்டம் வாங்கிய மாணவனையும் அது இறுதியில் அவன் தகுதியைச் சோதித்துப் பார்க்கும். அந்தச் சோதனையில் வெற்றி பெற்றால்தான் யாரும் அங்கே டாக்டர் தொழில் செய்ய முடியும். அது போல் இங்கும் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு அறிஞர் குழுவை நியமிக்க வேண்டுமென்று நாம்தான் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்று மக்களாகிய நாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டு ஒதுங்கியிருக்கக் கூடாது.

கேள்வி : ஒரே வேட்பாளர் இரண்டு மூன்று இடத்தில் போட்டியிடுகிறார். வென்றால் ஓரிடத்தை வைத்துக் கொண்டு மற்ற இடங்களில் ராஜிநாமா செய்து விடுகிறார். இதனால் இடைத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கிறது. இந்தச் செலவுகளெல்லாம் வீண்தானே?

உதய : நமது தேர்தலில் முதலில் ஆட்களைத் தேர்வு செய்து வேட்பாளர்களாக நிறுத்துகிறோம். இதை விடுத்துக் கட்சிக்கு வாக்களிக்கும் முறையைக் கொண்டு வந்து விட்டால், ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளின் சதவிகிதத்தைப் பொறுத்து அந்தந்தக் கட்சிகள் கடைசியில் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கலாம். இப்படிச் செய்தால் இடைத் தேர்தல்களைத் தவிர்த்து விடலாம். அதோடு மக்களும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் நிலை போய், வாரிசுகளுக்கு வாக்களிக்கும் நிலை மாறிக் கட்சிகளுக்கும் கட்சிகளின் கொள்கைகளுக்கும் வாக்களிக்கும் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும்.

தொகுப்பு : பிரின்ஸ்
படங்கள் : யோகா

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - '91 ரூ. 2,000 முதல் பரிசுக் கதை

எல்லைகளில்லா உலகம்

எஸ். அருண்மொழி நங்கை

சமுத்திரம் அவளது கால்களைத்தான் பார்த்தான். நிமிர்ந்து பெண்களைப் பார்க்கும் துணிவு அவனுக்கு ஏற்பட்டதில்லை. ஆனால் அவனைப் பார்க்கும் பெண்கள் எல்லோருமே அவனை திரும்பத் திரும்பப் பார்க்கிறார்கள் என அவன் அறிவான். அதிலும் அழகான பெண்கள் பார்த்தபடியே இருப்பார்கள். உள்ளுணர்வால் அந்தப் பார்வையின் வருடலை அனுபவிப்பான். கண்களைத் தூக்கவே மாட்டான். அவனுக்குத் தீராத வியப்பு இது. சாதாரண முகங்களைத்தான் மனிதர்களால் அலட்சியப்படுத்த முடிகிறது. அதீத அழகும் சரி, அதீத கோரமும் சரி, கவனத்தை விடாது பிடுங்கிக் கொள்பவை போலும்! பெண்களின் கண்களில் தன் முகம் ஏற்படுத்தும் துணுக்குறலையும், அருவருப்பையும், பரபரப்பையும் பார்க்க அவன் விரும்பவில்லை. அவமானங்கள் அவனை அடித்துக் குறுக்கி, ஓட்டுக்குள் சுருங்கும் நத்தை போல ஆக்கி விட்டிருந்தன. மௌனம்தான் ஓடு.

ரயில் கிளம்பியது. சமுத்திரம் ஆரஞ்சுப் பழத் தோல்கள் சிதறிக் கிடந்த தரையையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவன் பார்வை அவள் புடைவையின் கீழ் நுனியின் அலைபாய்தல்களைக் கவனித்தது. அவனுக்குப் பெண்கள் என்றால் கால்கள் தாம். பதினைந்து வருடங்களாகத் தினம் பெண்களின் கால்களை மட்டுமே பார்த்து வருகிறான். கால்களை முகங்கள் போல எங்கு கண்டாலும் அடையாளம் காணவும் அவனால் முடியும்.

அந்தப் பெண்ணின் பாதங்கள் மிக வெண்மையாக இருந்தன. இல்லை, ஏதோ உறை போட்டிருக்கிறாளா? ஆனால் விரல்களும் நகங்களும் தெரிகின்றன! ஒருவேளை வெள்ளைக்காரப் பெண்ணா...? நிமிர்ந்து முகத்தைப் பார்ப்பதா, வேண்டாமா?

நீண்ட நேர யோசனைக்குப் பிறகு சமுத்திரம் கண்களைச் சற்றே தூக்கி, ஜாடையாகப் பார்த்தான். அவன் மனம் அதிர்வடைந்தது.

அந்தப் பெண்ணின் முகம், மாநிறத் தோலில் வெள்ளைத்திட்டுகள் கலந்து மிக விகாரமாக இருந்தது.

ஒரு வினாடி சமுத்திரம் குழம்பினான். பிறகு அவன் மனம் மெல்லத் தெளிந்தது. அவளை உற்றுப் பார்த்தான். உடம்பெங்கும் வெண்குஷ்டத் தழும்புகள் பரவியிருந்தன அவளுக்கு. மெலிந்த கச்சிதமான உடம்பு. இருபத்தைந்து வயதுக்குள் இருப்பாள். சமுத்திரம் அவளை நிதானமாகப் பார்த்தவாறிருந்தான்.

திடீரென்று அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. தனக்குள் புன்னகை செய்து கொண்டான். அவன் நினைவு தெரிந்த நாளுக்குப் பிறகு அத்தனை விஸ்தாரமாக எந்தப் பெண்ணையும் பார்த்ததில்லை. அவன் மனம் ததும்பியது.

மனம் புன்னகையாக முகத்தில் தெரிந்திருக்க வேண்டும். அவள் அவனைப் பார்த்தாள். மறுகணம் அவள் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது. அவளுடைய முகச் சதைகள் இறுகின. பதறிய கண்களைப் பிடுங்கிக் கொண்டாள்.

சமுத்திரம் தன் மனசுக்குள் சுரீரென்று தீயின் தொடுகையை உணர்ந்தான். அவன் பார்வை தழைந்தது. அவள் கண்களில் தெரிந்த அதிர்ச்சியும், வெறுப்பும் அவன் எத்தனையோ முறை கண்டவைதாம். அவன் மனம் பொங்கியது. 'வேண்டும் உனக்கு' என்று தன்னையே சபித்துக் கொண்டான். எந்தத் துணிச்சலில் அவளை அப்படிப் பார்த்தாய்? அவளுடையது நோய். குணமாக வாய்ப்பு உண்டு. நீ பிறவிக் கோரம்...

தன்னிரக்கம் அவனை நிறைத்தது. பிறகு அவன் தலைநிமிரவேயில்லை. அவளுடைய பார்வை தன் மீது பட்டுப் பட்டு விலகுவதை உணர்ந்தபடி இருந்தான்.

''சேலத்தில் இந்த ரயில் நிக்குமா?''

அவள் யாரிடமோ விசாரிப்பது கேட்டது.

''உங்களைத்தான்...'' என்றாள் அவள்.

சட்டென்று சமுத்திரத்தின் உடல் நடுங்

கியது. என்னிடமா? சந்தேகத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் புன்னகை செய்தாள். அவளுடைய உதடுகளும் பற்களும் மிக வசீகரமாக இருந்தன. ஒரு கணத்தில் அவளை அழகியாக ஆக்கிவிட்டிருந்தது அப் புன்னகை.

''என்ன கேட்டீங்க?'' தன் குரல்தானா என்று சந்தேகம் ஏற்பட்டது சமுத்திரத்திற்கு.

''இந்த ரயில் சேலத்தில நிக்குமா?''

சமுத்திரம் ''ரயிலா?'' என்றான். அடக் கடவுளே இதென்ன என்று உடனே மனம் கூவியது. அவசரமாய் ''சேலத்துல எல்லா ரயிலும் நிக்கும்'' என்றான்.

''நீங்க எங்கே போகணும்?'' அவள் கேட்டாள்.

''சமுத்திரம்'' என்றான்.

அவள் குழம்பி, ''என்னது?'' என்றாள்.

சமுத்திரம் தான் கூறியது என்ன என்று அறியவில்லை. ஒரு பெண்ணிடம் பேசிய படி இருக்கிறோம் என்பதே அவனால் நம்ப முடியாதபடி இருந்தது. ''ஆபீஸ் வேலையாப் போறேன். மூணு நாள் டிரெய்னிங்'' என்றான்.

அவள் புன்னகை மாறாமல், ''சமுத்திரம்கிறது உங்க பெயரா?'' என்றாள்.

சமுத்திரம், ''மெட்ராஸ்'' என்றான். ''டெலிபோன்ஸ்ல வேலை பார்க்கிறேன்.''

அவள் அதற்கு மேல் தாங்க முடியாதவளாய் வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள். சமுத்திரம் தன் உடல் வியர்வையில் ஊறியிருப்பதை அறிந்தான். திக்பிரமை பிடித்தவன் போல அவளுடைய சிரிப்பையே பார்த்தான்.

அவள் ''என் பெயர் கனகம்'' என்றாள். ''நானும் மெட்ராஸ்தான் போறேன்.''



சமுத்திரத்தின் உடல் அடங்கிக் கொண்டிருந்தது. வியர்வை உலரவே, உடல் குளிர்ந்தது.

''சேலத்தில எறங்கணுமா?'' என்றான் சமுத்திரம்.

''இல்லியே மெட்ராஸ்தான் போகணும்?''

''அப்ப சேலத்தில எறங்கணும்னீங்க?''

அவள் குழம்பி, பிறகு சுதாரித்துக் கொண்டு, ''சேலத்தில நிக்குமான்னுதான் கேட்டேன்'' என்றாள்.

''எதுக்கு?'' என்றான் சமுத்திரம்.

''பசிக்குது. பழம் ஏதாவது வாங்கலாமே...''

நான் வாங்கித் தரேன் என்று மனசுக்குள் சொன்னான் சமுத்திரம். இல்லை அதை வாய் விட்டே சொல்லி விட்டோமா என்று அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

''டெலிபோன்ஸ்லதான் வேலையா?'' என்றாள் அவள்.

''ஆமாம்'' என்றான் சமுத்திரம். ''ஆபரேட்டர்.''

''ஹலோ ஹலோ?''

சமுத்திரம் உரக்கச் சிரித்தான். அவன் மனம் பொங்கிப் பொங்கி வந்தது. சட்டென்று தன் சிரிப்பு அவன் காதிலேயே விழுந்தது. குழம்பிப் போய் நிறுத்திக் கொண்டான். அவன் அதற்கு முன் அப்படிச் சிரித்ததே இல்லை. சிரிக்கும்படி என்ன நிகழ்ந்தது என்றும் புரியவில்லை.

''மெட்ராஸ்ல யார் இருக்கா?'' என்றான் சமுத்திரம்.

''அக்கா. அவளுக்கும் ஹஸ்பெண்டுக்கும் வேலை இருக்கு. நான்தான் குழந்தைகளைப் பார்த்துக்கறது.''

''இப்ப எங்க போயிட்டு வர்றீங்க?''

''கோயமுத்தூர்ல எங்கம்மா இருக்கா. அண்ணா கூட. அடிக்கடி போய்ப் பார்த்துட்டு வருவேன்.''

''தனியாகவா?''

அவள் சிரித்தாள். ''எனக்கென்ன பயம்? ரவுடிகள்லாம் என்னைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக்கறான்.''

சமுத்திரத்திற்குச் சட்டென்று அவள் மீது இரக்கம் ஏற்பட்டது. என்ன இருந்தாலும் அவள் சோகம் பெரியதுதான். அவள் பெண்ணல்லவா!

''எப்ப இது ஆரம்பிச்சது?'' என்றான்.

''என்னது, இந்த நோயா?''

''ஆமா.''

''பத்தாவது படிக்கிறப்ப. அதோட படிப்பும் போச்சு. மருந்து மந்திரம்னு அலைஞ்சதுக்குப் படிப்பையாவது முடிச்சிருக்கலாம். எங்கயாவது வேலைக்குப் போனால் வயிற்றுக்கு யாரையும் நம்பியிருக்கிற கதி வந்திருக்காது.''

சமுத்திரம் தயங்கி, ''உங்கக்கா?'' என்றான்.

அவள் ஜன்னல் வழியாகப் பார்த்தபடி, ''கொஞ்ச நாள் பழகியாச்சுன்னா அன்பு, இரக்கம் எல்லாமே போயிடறது'' என்றாள்.

நீண்ட மௌனம் நிலவியது.

அவள் சட்டென்று சிரித்தபடி, ''எங்கக்கா என்னை எப்படிக் கூப்பிடுவா தெரியுமா?'' என்றவள், குரலை மாற்றி, ''ஏய் செம்பட்டை'' என்றாள்.

அவன் முகம் கருமையடைந்தது. அவள் சிரிப்பிற்குப் பின்னால் அந்த மனம் கொதிப்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனாலும் அவன் சிரித்தபடி, ''எங்க ஆபீஸ்ல எம் பேரு என்ன தெரியுமா? சிம்பன்ஸி.''

அவள் சிரித்தாள். ''பொருத்தமான பேரு.''

அவனும் சிரித்தான். அவள் முகத்தைப் பார்த்தபடி அப்படிச் சிரிப்பது அவனுள் உற்சாகம் குமிழியிடச் செய்தது.

''ஆபீஸ்ல ரொம்பக் கிண்டல் பண்ணுவாங்களா?'' என்றாள் அவள்.

''கிண்டலா? நான்தான் எங்க ஆபீஸ் சர்க்கஸ்ல பபூன். ஆனா அடிக்க மாட்டாங்க. ஜீவகாருண்யம் உள்ள ஆசாமிகள் எல்லாரும்.''

''இந்த ஜீவகாருண்யம்தான் பெரிய பிரச்னை'' என்றாள் அவள். ''அது இல்லாட்டி நாமெல்லாம் இப்படி வளர்ந்திருக்க மாட்டோம். அப்பப்ப தீர்த்துக் கட்டியிருப்பாங்க.''

''உண்மைதான்'' என்றான் அவன்.

''நான் சில சமயம் யோசிக்கிற துண்டு... இந்த பூமியே அழகா இருக்கிறவங்களுக்குச் சொந்தம் அப்படீன்னு. நம்மைப் பார்க்கிற ஒவ்வொருத்தனும் இந்தச் சனியன் ஏன் உயிர் வாழணும்னுதான் நெனைக்கிறான். சட்டமும் தர்மமும் அனுமதிச்சா தீத்துக்கட்ட யாருமே தயங்க மாட்டாங்க...'' அவள் பெருமூச்சு விட்டாள்.

அவன் சற்று வியப்புடன், ''இதே மாதிரி நானும் ரொம்பத் தடவை நினைச்சிருக்கேன்... எல்லாமே ஒரு பெரிய விளையாட்டு மாதிரி இருக்கு; பெரிய காலரியில நான் மட்டும் தன்னந்தனியா உட்கார்ந்து விளையாட்டை வேடிக்கை பார்க்கிறேன்; என்னை யாரும் சேர்த்துக்க மாட்டாங்க; அவங்களுக்கு நாம பார்க்கிறது கூடத் தெரியலைன்னு...''

''இப்ப காலரியில இன்னொருத்தர் கூட... இல்லையா?'' என்றாள் அவள்.

அவன் மனசில் ஒரு குளிர்ந்த அதிர்ச்சி ஓடியது. அவள் கண்களைச் சந்தித்தான். அவளும் அவ் வார்த்தைகளைச் சொன்ன பின் தடுமாறிப் போய் விட்டிருந்தாள்.

மறுபடியும் பேச்சைத் தொடர அவனால் முடியவில்லை. அவள் சற்று தீவிர மான குரலில், ''முடம், குருபி இது மாதிரி ஜென்மங்களையெல்லாம் அப்பப்ப கொன்னுடணும் - என்ன சொல்றீங்க?'' என்றாள்.

அவன் அவளை உற்றுப் பார்த்தான்.

''உண்மையாத்தான் சொல்றேன்... ஏதோ பெரிய கருணையைச் செய்யறாப்ல அவங்களை வாழ விடுறதுங்கறது பெரிய கொடுமை. அணுஅணுவாச் செத்துட்டிருக் கிறதை விட ஆரம்பத்திலேயே கதை முடி யறது ரொம்ப நல்ல விஷயம்.''

அவள் முகத்தில் ரத்தம் குழம்பி நின்றது. அவன் அவளையே பார்த்தான். பிறகு, ''உண்மைதான்'' என்றான். அவன் மனசுக் குள் புகை சூழ்ந்தது. பிறகு இருவரும் பேச வேயில்லை.

சேலம் வந்தது. அவன் இறங்கிப் போய்ப் பழங்கள் வாங்கி வந்தான். ''சாப்பி டுங்க'' என்றான்.

''அய்யோ வேணாம்'' என்றாள்.

''சாப்பிடுங்க. கேட்டீங்களே அப் பவே...''

''நீங்களும் சாப்பிடுங்க'' என்றாள்.

ஒரு பழத்தைத் தின்று விட்டு அவள் சொன்னாள், ''போதும்.''

''ஏன், பசிக்குதுன்னீங்க?''

''சும்மா சொன்னேன்.''

''சும்மாவா?''

''ஆமாம். உங்ககிட்டே பேசணும்னு தான் சேலம் பத்திக் கேட்டேன்.''

சமுத்திரம் தன்னையறியாமலே புன்ன கை செய்தான். அவளும் சிரித்தாள். ''என் னவோ, நான் முகத்தைத் திருப்பிக்கிட்டது உங்களை ரொம்பப் புண்படுத்திச்சின்னு தோணிச்சு. உண்மைதானே?''

''அப்படியெல்லாம் இல்லை.''

''பொய்.''

''எனக்குப் பழக்கம்தான்.''

அவள் முகம் கூம்பியது. ''எனக் கும்...'' என்றாள்.

''நான் இப்படிப் பேசற முதல் ஆண் நீங்கதான்.''

சமுத்திரத்தின் மனம் அசைந்தது. அவன் தொண்டை வறண்டது. நாவால் உதடுகளைத் தடவிக் கொண்டான். பிறகு, ''நானும் இப்பத்தான்'' என்றான்.

அவள் சட்டென்று வெளியே பார்க்க ஆரம்பித்தாள். பனைமரங்கள் நிறைந்த வெளி ஓடிக் கொண்டிருந்தது.

''மெட்ராஸ்ல எங்கே?'' என்றான் சமுத்திரம்.

அவள் திடுக்கிட்டு, அவனைப் பார்த்து ஒருகணம் விழித்தாள். பிறகு, ''சேத்துப் பட்டு,'' என்றாள்.

''எங்கள் டிரெயினிங் பெரம்பூர்ல.''

''மூணு நாள்தானே?''

''ஆமா.''

''அப்புறம் கிளம்பிடுவீங்க?''

''ஆமா.''

இதென்ன உரையாடல் என்றான் சமுத் திரம் தனக்குள். இப்போது பேசுவது எதை யும் சொல்வதற்கு அல்ல. எதையோ மறைப்பதற்காக. பாஷைக்கு இரண்டு



''அய்யா... சாமி... பிச்சை போடுங்கய்யா!''

''யோவ் இது தியேட்டர்ய்யா. வேற இடம் பாருய்யா...!''

''பரவாயில்லை... ஒரு 'பால்கனி' டிக்கெட்டாவது கொடுங்கய்யா!''

– சுவீட் ரவி.

முகங்கள்.

மீண்டும் மௌனம். அவள் ஜன்ன லுக்கு வெளியே பார்த்தபடி பெருமூச்சு விட்டாள்.

இரவு கவிந்தது. பெட்டிக்குள் விளக்கு கள் எரிந்தன. சோர்வான, மயக்கம் தரும், மஞ்சள் ஒளி.

''ஜோலார்ப்பேட்டைலதான் சாப்பாடு வரும்,'' என்றான் சமுத்திரம்.

அவள், ''அப்படியா?'' என்றாள்.

''நான்வெஜிடேரியன் நல்லாவேயிருக் காது.''

''உம்.''

''அலுமினியப் பாக்கெட்ல குடுக்கி றான் பாருங்க; அநியாயம்.''

அவள், ''என்னைப் பார்த்தப்ப என்ன நினைச்சீங்க?'' என்றாள் திடீரென்று.

சமுத்திரம் திடுக்கிட்டான், ''என் னது?''

''என்னை முதன் முதலாப் பார்த்தப்ப என்ன நினைச்சீங்க?''

சமுத்திரம் ''அது இனிமே முக்கிய மில்லை. இப்ப என்ன நினைக்கிறேன்னு தான் முக்கியமாப் பாக்கணும்'' என்றான்.

இப்படிக் கச்சிதமாகப் பேசவும் தன் னால் முடியும் என்பதை அவன் அப்போது தான் உணர்ந்தான்.

அவள் புன்னகையுடன், ''என்ன நினைக்கறீங்க?''

''அஜந்தா போயிருக்கீங்களா?''

''இல்லை.''

அவன் உணர்ச்சி மிகுந்த குரலில், ''அஜந்தாவில ஒரு தேவகன்னிகையோட ஓவியம் இருக்கு. அது மாதிரி இருக்கீங்க.''

''கிண்டலா?'' என்றாள். ஆனால் முகம் பூரித்து விட்டது.

''உண்மையா. அந்த ஓவியம் ரொம்பச் சிதிலமா உதிர்ந்து போய் இருக்கு. முதல் பார்வையில நாம ஓவியத்தை ரசிக்கவே முடியாது. அப்புறம் உதிர்ந்ததையெல்லாம் மனசிலேருந்து விலக்கி, மெல்ல ஓவியத்தை மட்டுமே பார்க்க ஆரம்பிச்சா அற்புதமான அழகு தெரிய ஆரம்பிக்கும்.''

அவள் ''அய்யோ...'' என்றபடி தலை



''உங்க மாதிரியேதான் உங்க மகனும்... சபாநாயகர் வெளியே போகச் சொல்லிட்டார்னு நீங்க தினம் பன்னண்டு மணிக்கெல்லாம் வந்துட றீங்க. இவனும் டீச்சர் கிளாசை விட்டுத் துரத்திட்டார்னு வந்து நிக்கறான்...!''

யை மடி மீது வைத்து வெட்கினாள்.

அவனுள் உல்லாசம் நிரம்பியது. கை விரல்கள் வெடவெடக்குமளவு பரபரப்பு அலைமோதியது.

அவள் நிமிர்ந்த போது முகத்தைக் கடு கடுவென்று வைத்துக் கொண்டாள். ஆயி னும் கண்களில் ஒளியாகத் தெறித்தது.

முழு நிலா விரிந்த வயல் வெளிகள் ஜன்னல் வழியாக ஓடின.

''நல்ல நிலா இல்லை?'' என்றான்.

''எனக்கு நிலா பிடிக்காது.''

''ஏன்?''

''ஏனோ... இருட்டா இருந்தாத்தான் பிடிக்கும். கூடுமானவரை ராத்திரில லைட்டே போட மாட்டேன்.''

''எனக்கு நிலா ரொம்பப் பிடிக்கும். நிலா நாளை நிறைய வரைஞ்சிருக்கிறேன்'' என்றான்.

''வரைவீங்களா?''

''நிறைய வரைஞ்சிருக்கேன்.''

''என்ன வரைவீங்க?''

''ஆயில் பெயிண்டிங்; வாஷ் டிராயிங்...''

''என்னென்னமோ சொல்றீங்க... எதை வரைவீங்க? மனுஷங்களையா?''

''மனுஷங்களையும் வரைவேன். அதி கமா மிருகங்கள்தான்.''

''ஏன்?''

''ஏன்னா மிருகங்கள்லதான் அழகில் லாத மிருகமே இல்லை. எல்லா மிருகமும் இயற்கையா இருக்கிறப்ப அழகுதான்.''

''பன்றி?''

''பன்றி ஓடறப்பப் பாத்திருக்கீங்களா? அதன் வால் சுழற்றலும், தொந்தி அசைய றதும்! எவ்வளவு குழந்தைத்தனம் அதன் உடம்பிலே! ரொம்ப நளினமான மிருகம் அது. நீங்கள் அதைச் சாக்கடையோட சேர்த் துப் பார்த்தா அது உங்க தப்பு. அதுக்குச் சாக்கடை என்ன சந்தனம் என்ன?''

''என்னமோ.... ரொம்ப வித்தியாச மாப் பேசறீங்க...''

''நான் இப்படியெல்லாம் யார்ட்டயும் பேசறதே இல்லை தெரியுமா?''

அவன் ஓவியங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். பேசப் பேசப் பேசுவதற்குத் தனக்குள் இவ்வளவு விஷயங்கள் இருப் பதை அவன் உணர்ந்தான். அவள் கண்கள் மின்ன, அவனையே கவனித்திருந்தாள். பேச்சின் நடுவே மெல்ல மௌனம். ஓரளவு தூக்கம். பின் விழித்துப் பரஸ்பரம் பார்த்துக் கொள்ளல். பிறகு மேலும் பேச்சு. அவள் அவளுடைய வீட்டைப் பற்றிச் சொன் னாள். பாட்டுக் கற்றுக் கொண்டதைப் பற்றிச் சொன்னாள்.

விடியும் போது, ''பெரம்பூர் வரப் போறது!'' என்றாள் அவள்.

சட்டென்று அவன் ஒரு அடி தன் மீது விழுந்ததைப் போல உணர்ந்தான். மறு கணம் மனம் சூனியத்தில் தெறித்தது.

'அவ்வளவுதான்' என்றது ஒரு குரல் அவனுள். 'அவ்வளவுதானா?' என வீறிட் டது இன்னொரு குரல். 'அவ்வளவேதான்' என அடக்கியது ஓர் உறுமல்.

அவன் மார்பு அடைத்தது. கண்களின் ஈரம் காற்றில் குளிர்ந்தது.

திடீரென்று ஓர் எண்ணம் அவனுள் எழுந்தது. அவளிடம் கேட்க ஒரு கேள்வி அவனுள் முளைத்தது.

மறுகணம் அவன் மனம் கூசியது. அவ னுடைய புலன்கள் சிறுத்துக் கூம்பின. ஒரு நொடியில் பழைய சமுத்திரமாக அவன் ஆனான். ஓர் இரவு அவனுக்கு அளித்த அத் தனை நெகிழ்வுகளும் தன்னம்பிக்கையும் அவனை விட்டு விலகின.

அவளிடம் எப்படி அவன் கேட்க முடி யும்? அவளிடமல்ல, உலகின் மோசமான குரூபியிடம் கூட தன்னால் தன்னை விரும் பும்படி கோர முடியாது என்று அவனுக்குப் பட்டது. ஒருவேளை அவன் அன்பு ஏற்கப் படலாம். ஆனால் மறுக்கப்படுமெனில் பிறகு அவனால் உயிர் வாழ முடியாது.

கனகம் என்ன செய்வாள்? ஏற்பாள் என்று தோன்றியது. மனம் நம்பிக்கையில் துடித்து எழுந்தது. பரவசத்துடன், உள நடுக் கத்துடன், சொல்ல வேண்டிய சொற்றொ டரைக் கோத்துக் கோத்து உருவாக்கினான். அடிவயிற்றிலிருந்து அதை உதடுகளுக்குக் கொண்டு வந்தான். மறுகணம் அவன் நம் பிக்கை சிதைந்தது. கூச்சத்தில் உடம்பு விறைத்துக் கொண்டது. அப்படியே கூனிக் குறுகிப் போனான். மீண்டும் நம்பிக்கை முளைத்தெழுந்தது. உதிர்ந்தது. அலைக்க ழிப்பின் கணங்கள் யுகங்களாக நீண்டு... நீண்டு... நீண்டு. ரயிலின் தடக் தடக் மண்டை மீது அறைந்தது.

ரயில் பெரம்பூர் வந்த போது அவ னுக்குள் சட்டென்று ஒருவிதமான நிம்மதி தான் ஏற்பட்டது. அந்த அலைக்கழிப்பின் இம்சையிலிருந்து தப்பினால் போதும் என்று மனம் தவித்தது.

ரயில் கூவியபடி நின்றது. அவன் பெட் டியை எடுத்துக் கொண்டான். அவள் கண்க ளைச் சந்திக்கத் தயங்கித் திணறினான். அவ

ளுடைய பார்வை தன் மீது ஊன்றியிருப்பதை உணர்ந்தான்.

விடைபெறும் முகமாக அவளைப் பார்த்தான். அவள் மிக இயல்பாக இருந்தாள்! சிரித்தபடி, ''அப்போ, பார்ப்போம்,'' என்றாள்.

அவனுடைய தவிப்பு அடங்கியது. ஏமாற்றமும் வெறுமையும் ஏற்பட்டது. அவன் வெற்றுப் புன்னகையுடன், ''ரொம்பப் பேசிட்டோம் இல்லை?'' என்றான்.

அவளும் சிரித்தபடி, ''ஆமா. ரொம்ப நல்லாப் போது போனது ராத்திரி...'' என்றாள்.

அவன் இறங்கிக் கொண்டான். மனம் எரிந்தது. எத்தனை அலட்சியமாக விடை தருகிறாள்! நல்லவேளை, சொல்லாமலிருந்தோம்! ஆனால்... கடவுளே அவ்வளவு தானா... அவ்வளவுதானா... மார்பை அடைத்தது. கண்ணீர் வந்து முட்டியது. நடக்க முடியவில்லை.

ரயில் கூவியது. அவன் உயிரைப் பிளந்தபடி ஒலித்தது அது. அதன் முதல் தடக் அவன் மார்பின் மீது விழுந்தது. தடக் தடக்...

ரயில் நகர்வதைக் கண்டான். அவனுள் ஏதோ உடைந்தது. இல்லை, இப்படி இது முடியலாகாது. அவளிடம் கூறி விட வேண்டும். அவள் நிராகரித்தால் கூடப் பரவாயில்லை. கூறிவிட வேண்டும். இந்த நிச்சயமற்ற நிலையில் தவிக்க முடியாது. அவள் வெறுக்கட்டும்; புறக்கணிக்கட்டும். ஆனால் அவளிடம் சொல்லியே ஆக வேண்டும். இல்லையேல் நெஞ்சு வெடித்து விடும்!

அவன் ஓடும் ரயிலில் பாய்ந்து ஏறினான். ஜன்னலோரம் கம்பிகளில் சாய்ந்து கைகளில் முகம் புதைத்தவளாக அவள். அவள் தோள்கள் குலுங்கின. அழுகிறாளா?

அவன் மனம் ஜிவ்வென்று எழுந்தது. ஆம். அவள் ஓசையின்றிக் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள்! என்ன முட்டாள் நான்! இது எப்படி எனக்குப் புரியாமல் போயிற்று!

மெதுவாக அவளருகே அமர்ந்தான். முதலில் அவள் கவனிக்கவில்லை. பிறகு மெல்ல அவள் அழுகை நின்றது.

அவன் பேசாமல் அமர்ந்திருந்தான்.

அவள் சேலையால் முகத்தைத் துடைத்தாள். பிறகு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

ஜ்வலித்த முகத்துடன் சமுத்திரம் பார்த்தவாறிருந்தான். அவள் கண்களைத் தாழ்த்தியபடி, புன்னகை புரிந்தாள். சமுத்திரமும் சிரித்தான்.

எதையும் சொல்ல வேண்டியதில்லை என்று அவனுக்குத் தெரிந்தது. அவன் கை மெல்ல அவள் கையைத் தொட்டது. அவள் விரல்களில் இணக்கம் தெரிந்தது. விரல்கள் பின்னிக் கொண்டன. அவன் பேச விரும்பவில்லை. மௌனம் தித்தித்தது. ஸ்பரிசம் மூலம் எதையெதையோ அவளிடம் கொட்டிக் கொண்டிருந்தான். ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

சட்டென்று ஒரு கனவிலிருந்து விழிப்பவன் போல சமுத்திரம் தன்னினைவு கொண்டான்.

அவள் கண்கள் பாதி மூடியிருந்தன. உதடுகள் ஈரமாக இருந்தன. முகத்தில் கனவு தெரிந்தது.

''ஏய்'' என்றான் சமுத்திரம் அந்தரங்கமாய். ''என்ன யோசனை?''

அவள் நிமிர்ந்து பார்த்தாள். குப் பென்று அவள் முகம் சிவந்தது. புன்னகை யுடன் தலைகுனிந்தாள்.

''என்ன?''

''ம்ஹூம்.''

''என்ன யோசனை? சொல்லேன்.''

''ஒரு விஷயம் யோசித்தேன்.''

''எதைப் பத்தி?''

''நம்ப பையனைப் பத்தி.''

சமுத்திரம் சிரித்தான். ''நம்ப பையனா? அதுக்குள்ளாகவா? அடி சக்கைன்னானாம்.''

அவள் குலுங்கிச் சிரித்தாள்.

''ஆமா, அவன் என்னை மாதிரி இருந்தா?''

''உங்களை மாதிரிதான் இருக்கணும்.''

''நேத்து நீதான் சொன்னே, கொன்னுடணும்னு.''

''அது அப்ப.''

''இப்ப மனசு மாறிடுச்சா?''

''ம்ம்'' என்றாள். ''நேத்துச் சொன்னீங்களே, அழகில்லாத மிருகம் இல்லைன்னு?''

''ஆமா.''


''அழகில்லாத மனுஷங்களும் இல்லை.'' அவள் அவன் கைகளை இறுக்கினாள்.

''பிள்ளையார் கோவிலுக்குப் போனியே... என்ன வேண்டிக்கிட்டே?''

''அடுத்த பிறவியிலேயும் நீங்கதான் எனக்குக் கணவரா வரணும்னு வேண்டிக்கிட்டேன்.''

''அடிபாவி! இவ்வளவு பெரிய தண்டனை தர்ற மாதிரி நான் என்ன தப்புச் செய்தேன்!''

- கபிஸ்தலம் ஏ. கே. ஆனந்தப்ரியா.



ஒண்ணுதான் செய்ய முடியும். அரிசி வியாபாரம் பண்றவன் எண்ணெய் வியாபாரம் பண்ணால் நஷ்டமாயிடும். ஏன்னா, ஒவ்வொரு வியாபாரத்திலயும் ஆயிரம் நெளிவு, சுளிவு இருக்கு.''

''ஐயோ ஐயோ... பிரமாதமாகச் சொன்னீங்க அத்திம்பேர்.. இந்த மூளை, இந்த யோசனை எல்லாம் யாருக்கு வரும்?... அக்கா, இரண்டு கப் காப்பி கொண்டு வா... எனக்குச் சர்க்கரை போடாதே'' என்றான், சந்தடிசாக்கில் கந்தகப் பொடி வைக்கும் தொச்சு!

''அத்திம்பேரே... உங்க பலம் எழுத்து. அதை வெச்சுண்டே பணம் குவிக்கலாம், இராப்பகலாக் கண்முழிச்சு எழுதாமலேயே! அதுக்குப் பிரமாதமான ஐடியா தோணித்து, நேத்து ராத்திரி அச்சாபீஸ்ல உட்கார்ந்திருந்தப்ப'' என்றான்.

''என்ன அச்சாபீஸ்...? என்ன ஐடியா?'' என்றேன்.

அந்தச் சமயம் கமலா இரண்டு கப் காப்பியுடன் வந்து, ''தொச்சு.. ஒரு அச்சாபீஸை பார்ட்னர் ஷிப்ல எடுத்திருக்கான். போன வாரம் உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிண்டு போகலாம்னு வந்தான். நீங்க இல்லை. நான் 'அத்திம்பேர் ஆசீர்வாதமாக ஐந்நூறு போய் வெச்சுக்கடா' என்று கொடுத்தேன். ஒரு வாரமாகச் சொல்லணும் சொல்லணும்னு பாக்கறேன். நீங்க நாவல் எழுதற மும்முரத்தில் இருக்கிறப்பத் தொந்தரவு பண்ண வேண்டாம்னு இருந்துட்டேன்'' என்றாள்.

என் அக்காவிற்கு எப்போதோ கொடுத்த இருபத்தைந்து ரூபாய் கைமாற்று இன்னும் திரும்பி வரவில்லை என்று 250-லிருந்து 257வது தடவையாக (தினமும் ஒரு தடவை) குத்திக்காட்ட மட்டும் அது என்னைத் தொந்தரவு செய்வதாகாது! ஆனால் அவளுக்கு நேரம் இருந்தது. தொச்சுவுக்கு ஐந்நூறு ரூபாயைக் கொடுத்ததைச் சொல்ல மட்டும் என்னைத் தொந்தரவு செய்யக் கூடாதே என்ற கரிசனம்! நான் ''அப்படியா'' என்று கூறுவதோடு நிறுத்திக் கொண்டேன். மேலே ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும் மகாபாரதம் - பாகம் இரண்டு ஆரம்பமாகியிருக்கும்!

''சரி, என்ன ஐடியா, அதைச் சொல்லு!'' என்று கேட்டேன்.

''அத்திம்பேரே.. உங்க லைன்லேயே நீங்க பணம் பண்ணலாம். எப்படின்னு கேட்கறீங்களா? 'கதை எழுதுவது எப்படி', அல்லது 'எழுத நினைத்தால் எழுதலாம்' என்கிற மாதிரி ஒரு தபால் பயிற்சிப் பள்ளியை ஆரம்பியுங்க...''

''சரிதான் தொச்சு.. ஆனால் கதை எழுதறது ஒரு வித்தை; கதை எழுதறது எப்படின்னு எழுதறது வேற மாதிரி வித்தை...''

''அத்திம்பேரே... கரெக்ட்டுதான். அதுக்கும் ஒரு ஐடியா வெச்சிருக்கேன். இப்படி போனைத் தள்ளுங்க...'' என்று சொல்லிய தொச்சு, ஒரு அழுக்கு டைரியை



எடுத்து, ஏதோ டெலிபோன் நம்பரைப் பார்த்து, போனில் மளமளவென்று பட்டன்களை அழுத்தினான். சுமார் பத்துப் பதினைந்து பட்டன்களை அவன் அழுத்த அழுத்த, என் ரத்த அழுத்தம் அதிகமாகி விட்டது! எங்கேயோ வெளிநாட்டுக்குப் போன் பண்ணுகிறான். பில் எவ்வளவு ஏறப் போகிறதோ! கடவுளே!

''ஹலோ.. ஹலோ... யாரு ஸ்ரீதரா... என்ன எப்படி இருக்கே... எங்களையெல்லாம் ஞாபகம் வைச்சிருக்கியா? அமெரிக்கா போய்ட்டால் பெரிய மனுஷனாயிடுவே... போகட்டும்; போன வருஷம் ஜானா மூலமா சுண்டைக்காய் வற்றல் கொடுத்து அனுப்பினேனே, எப்படி இருந்தது? ஒரு கால் போட்டு, 'தாங்க்ஸ்' கூடச் சொல்லலையே... சரி, போகட்டும். ஒரு ஹெல்ப் வேண்டும்.. அத்திம்பேர் இல்லை, அகஸ்தியன்... ஒரு கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் ஆரம்பிக்கிறார். எழுதுவது எப்படின்னு... அங்க அமெரிக்காவில் 'ஹௌ டு ரைட்' அப்படின்னு நிறைய புக்ஸ் இருக்குமே... அந்த மாதிரி புஸ்தகங்களை பத்து, இருபதை ஒரே அமுக்கா அமுக்கி அனுப்பிடு. அப்புறம் இந்த மாதிரி கதை எழுதறதுக்கு ஸ்கூல் நடத்தறவங்களைப் பாத்து பாடங்கள் ஒரு செட் வாங்கி அனுப்பு... என்ன? அப்புறம் அங்கச்சிக்கு முத்து வாங்கி அனுப்பறேன்னு சொன்னியே, என்ன ஆச்சு? உனக்காக வேப்பம்பூ திரட்டி உலர்த்தி வெச்சிருக்கா... ரஸம் பண்ணினால் தூக்கி அடிக்கும்... இங்கே எல்லாரும் சௌக்கியம்... ஒரு வாரத்தில் புஸ்தகம் வந்து சேரணும்...'' என்று சொல்லி போனை வைத்தான். நான் பெருமூச்சு விட்டேன்.

''அத்திம்பேர் இந்த ஸ்ரீதர் சரியான தொணதொணப்பு ஆசாமி... சட்னு விஷயத்தைக் கேட்டுக்க வேண்டியதுதானே.. அத்திம்பேர், அவன் அனுப்புற புஸ்தகத்தை எல்லாம் படிச்சு 20, 25 பாடம் தமிழில் எழுதுங்க. பாடமாவே வர்றதை அப்படியே மொழிபெயர்த்துடுங்க... மத்ததை நான் பாத்துக்கறேன்... வர்றேன் அக்கா.. என்னது இன்னொரு அடையா, வேண்டாம்! இப்ப டயம் இல்லை.. சரி, உன் மனசு எதுக்குக் கஷ்டப்படணும், ஒரு டப்பாவில போட்டுக் கொடு. ஏகப்பட்டதை வெச்சுடாதே. அஞ்சோ, ஆறோ வை போதும்.. என்று சொல்லி விட்டுப் பறந்தான் - டப்பாவை வாங்கிக் கொண்டுதான்!

தொச்சுவின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து ஸ்ரீதரும் ஒரு பெரிய புஸ்தகக் கட்டை பார்சலில் அனுப்பியிருந்தான். (அடுத்த தடவை அவன் பெண்டாட்டி பசங்களுடன் வரும் போது எவ்வளவு செலவை என் தலைமேல் வைக்கப் போகிறானோ!)

புஸ்தகங்களில் லட்டு லட்டாகக் கட்டுரைகள் இருந்தன. பாடங்கள் ரொம்பப்



பிரமாதமாக இருந்தன. ஒருகணம் தொச்சுவை மனத்திற்குள் பாராட்டினேன்.

பரீட்சைக்குப் படிப்பது போல் இராப் பகலாகப் படித்தேன். (''இப்படி விடிய விடியப் படித்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்... பாலைச் சுண்டக் காய்ச்சியிருக்கேன். ஒரு தம்ளர் சாப்பிடுங்கோ''– என் மனைவி.)

படித்த சூட்டோடு இருபது பாடங்களையும் எழுதி முடித்தேன்.

நடுநடுவே இந்தப் பிரயாசையெல்லாம் ஏதாவது பலன் தருமா என்ற சந்தேகம் தலையைத் தூக்கிக் கொண்டிருந்தது.

''அத்திம்பேர்... பாடம் எல்லாம் தயார் பண்ணிட்டீங்கன்னு கேள்விப்பட்டேன். நான் நாலு நாளைக்கு ஒரு தரம் வந்து அக்காகிட்ட விசாரித்துக் கொண்டு தான் இருந்தேன். உங்களைத் தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு உங்க ரூம் பக்கமே வரவில்லை... எப்படி வந்திருக்கு பாடம் எல்லாம்?''

''நல்லாத்தான் வந்திருக்கு தொச்சு.. ஆனால் இதில் ஆதாயம் இருக்குமான்னுதான் தெரியலை.,..''

''பேசப்படாது அத்திம்பேர். நானும்

ஒரு மாசம் சும்மாவா இருந்தேன்? நிறைய சர்வே செய்தேன். விளம்பர டிசைன் கூடத் தயார் பண்ணிட்டேன். நாலு பத்திரிகையில் விளம்பரம் பண்ணினால் குறைஞ்சது ஆயிரம் பேராவது சேருவாங்க. ஐந்நூறு ரூபாய் பீஸ்.

''ஐந்நூறு ரொம்ப ஜாஸ்தியா இருக்கே.''

''பாருங்களேன், நீங்க மணியார்டர் கையெழுத்துப் போடறதுக்கே ஒரு ஆளை வேலைக்கு வெச்சுக்கணும்.''

''தொச்சு.. இவ்வளவு நீ சிரமம் எடுத்துக்கறே... இதில் உனக்கு எவ்வளவு பங்குன்னு இப்பவே நிச்சயம் பண்ணிட்டால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்...''

''அத்திம்பேர்... இன்னிக்குத் தொச்சுன்னு ஒருத்தன் இருக்கான் என்றால் அது உங்களுடைய ஆதரவால்தான். ஆசீர்வாதத்தால்தான். உங்ககிட்ட நான் சாப்பிட்டதற்கு ஏழு ஜன்மத்திற்கு உழைக்கணும்.. இதில வர்ற லாபம் மொத்தம் உங்களுடையதுதான். நீங்களே இஷ்டப்பட்டு எது கொடுத்தாலும் சரி... என் பிரஸ்ஸில் பாடங்களை அச்சடித்தால் பிஸினஸ் வருதே, அதுவே போதும்..'' என்றான் தொச்சு.

முதன் முதலாக எனக்குத் தொச்சுவின் மீது ஒரு அலாதிப் பாசம் பிறந்தது. பாவம். நல்லவன்தான். ஏதோ ஒரு சமயம் 5, 10 வாங்கிக் கொண்டு திருப்பித் தராமல் இருந்திருப்பான். தொச்சுவுக்கு நல்ல மனசு.

தொச்சு தடபுடலாக விளம்பர டிசைன் தயார் பண்ணிக் கொண்டு வந்தான்.

''அத்திம்பேர், பாடங்கள் எல்லாம் கம்போஸ் ஆயிட்டுது. - புரூஃப் பார்த்துக் கொடுத்துடுங்கோ.. ஒரு மூச்சிலே அடிச்சுக் கொடுத்துடறேன். முதல்ல ஐயாயிரம் காப்பி அடிச்சுடறேன், ஒவ்வொரு பாடத்தையும்'' என்றான்.

''ஐயாயிரமா... ரொம்ப ஜாஸ்தியாக இருக்கும் போல இருக்குதே.. அவ்வளவு ஸ்டுடண்ட்ஸ் சேருவாங்களா?''

''அத்திம்பேர்... அச்சடிக்கும் போது ஒரு வருஷத்துக்கு வர்ற மாதிரி பிரிண்ட் பண்ணிக்கறது லாபம்... ஏன்னா கம்போஸிங் செலவுதான் எப்பவும் அதிகம். பிரிண்டிங் சார்ஜ் எப்பவுமே கம்மிதான்.''

''சரிப்பா... தொச்சு.. செய்.. ஆமாம்... இது அச்சடிக்கறதுக்குப் பணம்...''

''பேப்பருக்குப் பணம் கொடுத்துடுங்கோ. பிரிண்டிங் சார்ஜ் பின்னால வாங்கிக்கறேன். பல்லார்பூர் வாங்கட்டுமா, சேஷசாயி வாங்கட்டுமா?'' என்று கேட்டான்.

''இதெல்லாம் உன் டிபார்ட்மெண்ட்.. உன் இஷ்டப்படி வாங்கு.. சரி, பேப்பருக்கு எவ்வளவு பணம் வேணும்?''

''நாலு விளம்பரம் போடணும். அதுக்குப் பத்தாயிரம் ரூபாய்... பேப்பருக்கு.. ஒரு 'லாட்'டாக வாங்கிட்டால் சீப்பாயிடும். அதுக்கு ஒரு பத்தாயிரம் கொடுங்க. பாடங்களை அனுப்ப கவர் தயார் பண்ணணும். அதுக்கு ஒரு இரண்டாயிரம். பிளாக் செலவு 2000...'' ஒரு குத்து மதிப்பாக 25,000 கொடுங்க'' என்றான்.

குத்து மதிப்பைக் கேட்டதும் என் அடி வயிற்றில் குத்து விட்டது போலிருந்தது.

''என்ன தொச்சு... ரொம்ப ஜாஸ்தியாக இருக்குதே...''

''அத்திம்பேர் மூணே மாசத்தில் வசூல் ஆயிடும்.. என்ன அக்கா காப்பியா... வேண்டாம். வெறும் மோர் கொடு.. காப்பி கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கிறார். கொஞ்சம் பி.பி. இருக்கு'' என்றான் தொச்சு.

''இப்படி பேயா அலைஞ்சு நாயா ஓடினால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? ஊருக்கு உழைக்கிறதே உன் ராசி'' என்று அக்காக்காரி அன்புடன் அலுத்துக் கொண்டாள்.''

நான் பாங்க் அக்கவுண்டிலிருந்து வழித்து எடுத்து 25,000 ரூபாயைத் தொச்சுவிடம் கொடுத்தேன்.

''என்ன கமலா தொச்சுவைக் காணமே... பணம் வாங்கிக் கொண்டு போய் இருபது நாளாச்சு.. பாடத்தையும் காணோம். விளம்பரத்தையும் காணோம்.''

''தொச்சு, உங்க பணத்தை ஒண்ணும் முழுங்கிட மாட்டான். உங்க வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் வீட்டில் சோறு பொங்கிடுமா...? பத்து இடம் போய் பிஸினஸ் பிடிச்சால் தானே...''

இந்தச் சமயம் தொச்சு பிரத்யட்சமா



- சுவீட் ரவி.

னான். ''என்ன அத்திம்பேர்... தொச்சு பணத்தைச் சுருட்டிண்டு அப்ஸ்காண்ட் ஆயிட்டான்னு நெனைச்சுட்டீங் களா? பாருங்க, பாடங்களை. ஒரு செட் கொண்டு வந்திருக்கிறேன்,'' என்று கூறி ரஜினி ஸ்டைலில் ஒரு பேக்கட்டை மேஜை மேல் போட்டான்! பிரித்தேன் -

எதிரே கட்டுக் கட்டாகப் பாடங்கள். ஒருகணம் அவை யாவும் ரூபாய் நோட் டுக்களாகத் தோற்றமளித்தன.

''தொச்சு... மன்னன்பா நீ... சரி எப்ப பேப்பர்ல விளம்பரம் போடப் போறே?''

''வர்ற வாரம். அதுக்குப் பணம் தேவை. இப்ப ஒரு த்ரீ கொடுங்க'' என் றான்.

கொடுத்தேன்.

இரண்டு நாள் கழித்து பேப்பரைப் பார்த்த போது அதில் எனக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. பிரபல எழுத்தாளர் ஒருவர் 'கதை எழுதுவது எப்படி' என்ற தபால் பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்திருப்பதாகச் செய்தி. தவிர அரைப் பக்க விளம்பரம் வேறு. அந்த எழுத்தாளர் (என்னை விடப் பிரபலமானவர்) எல்லாப் பாடங்களுக்கும் சேர்த்துக் கட்டணம் நூறு ரூபாய்தான் வைத் திருந்தார். விளம்பரத்தில் அவர் இதுவரை எழுதியுள்ள பத்து நாவல்களின் பெயர்க ளையும் பிரசுரமான புத்தகங்களின் பட்டிய லையும் வெளியிட்டிருந்தார்கள். போதாத தற்கு அவர் இதுவரை பெற்ற விருதுகள், பட்டங்கள், பரிசுகள் ஆகியவற்றின் விவ ரங்களையும் தடபுடலாகப் போட்டிருந் தார்கள்.

படிக்கப் படிக்க என் காலின் கீழ் தரை சரசரவென்று கீழே போய்க் கொண்டி ருந்தது.

அந்தச் சமயம் தொச்சு, ''அத்திம்பேர் மோசம் போய்ட்டோம்... இந்தப் பாவி மனுஷன் இப்பவா ஸ்கூலை ஆரம்பிக்க ணும்? பீஸைக் கூட அடிமட்டத்திலே வெச் சிருக்கான்...'' என்று கூறிக் கொண்டே வந்தான்.

''தொச்சு. அவர் பிரபல எழுத்தாளர். நானே அவர் ஸ்கூலில் சேர்ந்தால் நிறையக் கத்துக்கலாம்.. போகட்டும். பாடங்கள் அச்சடிச்ச செலவோட போகட்டும். விளம் பரம், கிளம்பரம் வேண்டாம். நீ பிரிண்ட் பண்ணின சார்ஜுக்கு இந்தப் பாடத்தை எல்லாம் பழைய பேப்பருக்குப் போட்டு எடுத்துக்க. மீதியை நான் கொடுத்துட றேன்... இனிமேல் உனக்கு ஏதாவது ஐடியா வந்தால் என் எதிரிகிட்ட போய்ச் சொல்லு'' என்று பாதி கேலியாகவும் பாதி கோபமாகவும் சொன்னேன்.

முதன் முறையாக என் மாமியார், என் மனைவி கமலா, தொச்சு மூவரும் என் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசாமல் 'கம்'மென்று இருந்தார்கள்!

பட்ஜெட் விருது; கீரையைப் பதுக்கு!

**சிரிக்க வையுங்கள்
சிங்கப்பூர் செல்லுங்கள்**



''சாப்பாட்டுல தக்காளி சேர்த்துக் காதீங்க!''


''ஏன் டாக்டர்?''

''என்னோட ஃபீஸை ஒழுங்காக் கொடுக்கணும்ல... அதனால்தான்!''

- அ. அப்துல் பரீது, திருப்பத்தூர்.

O O O O

பட்டிமன்றப் பேச்சாளர், ''புத்தி சாலியான நடுவர் அவர்களே!'' என்று தன் பேச்சைத் துவக்கினார். நடுவர், ''நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று



தெரிந்திருந்தால் என் மனைவியையும் அழைத்து வந்திருப்பேன்'' என்றார்.

உடனே, அப் பேச்சாளர், ''ஐயா, என்னுடையது ஒரு மணி நேர அனுபவம். உங்கள் துணைவியாருக்கோ ஆயுள் கால அனுபவம். நான் சொல்வதை வைத்தா அவர் தம்முடைய கருத்தை மாற்றிக் கொள்ளப் போகிறார்?'' என்றதும் பலத்த சிரிப்பு.

- அ. ஷண்முகசுந்தரம்,
சிட்லபாக்கம்.

O O O O



''டாக்டரைக் காதலிச்சது தப்பாப் போச்சுடி...''

''ஏன்?''

''என் கையைப் பிடிக்கும் போதெல்லாம், 'பத்து ரூபா' பீஸ் தர வேண்டியிருக்கு...''

- ஆர். வசந்தகுமார்,
கும்பகோணம்- 1.

O O O O

ஒரு வயதான பெண்மணி கீரை விற்றுக் கொண்டிருந்தாள். வெளியில் வைத் திருந்த கீரை நன்றாய் இல்லை. அதனால் அவள் அருகிலிருந்த சாக்குப் பையிலிருந்து எடுத்துத் தருமாறு நான் சொன்னேன். அவள் கொஞ்சம் தயங்கினாள்.

உடனிருந்த என் மருமகன், ''பாட்டி! கீரையை எல்லாம் பதுக்கி வைக்க வேணாம்! பட்ஜெட்ல கீரைக் கெல்லாம் வரி போட மாட்டாங்க'' என்று சொன்னவுடன், சுற்றியிருந்த எல்லோரும் சிரித்து விட்டார்கள். பாட்டியும்தான்.

- பி. ஜி. பி. இசக்கி, சிவசைலம்.

போதும் இந்தத் தண்டனை!

விசுவநாதனும், அவன் அம்மாவும் ஹீரோ ஹோண்டாவில் மரவனேரி வழியாகப் போய் அம்மாபேட்டை பிள்ளையார் கோயில் சந்தில் திரும்பி, கீதா வீட்டுக் கதவைத் தட்டினார்கள்... கீதாவைப் பெண் பார்க்க.

சப்தம் கேட்டு - விஸ்வநாதன் - இருபத்தொன்பது, அஸ்வினி நட்சத்திரம், கோடு மாதிரி மீசை, பிரபல கம்பெனி வேலை - மாப்பிள்ளை என்ற வார்த்தை போலவே இனிமைத் தோற்றம்... மெல்லிய புன்சிரிப்பு...

எழுந்து வந்து - அம்மா. ஐம்பத்திரண்டு வயதுக்குரிய சற்றே தடித்த உடல்வாகு, ப்ளாக்கிஷ், ஒயிட் தலைமுடி. ஏகப்பட்ட பொறுப்புணர்ச்சி - முகத்திலோ - பாசமும், அன்பும் தெரியும் தாய்க் களை....

கதவைத் திறந்தது - கீதாவேதான்! அவளையும் வர்ணித்து விடலாம். கடைசிச் சொட்டுச் சாயமும் போன ஒரு புடைவை! கலைந்த ஷாம்புக் குளியல் தலை. பவுடர் கூட போடாத முகம், கையில் ஏதோ ஒரு வாரப் பத்திரிகை. வெரி காஷுவல். ஞாயிற்றுக் கிழமை நாலு மணிக்கே உரியதொரு சோம்பேறித்தனம்.

''வாங்கோ... யாரைப் பார்க்கணும்?'' என்றாள் கீதா.

''அப்பாவைப் பார்க்கலாம்னு....'' என்று தயங்கும்போதே கீதாவின் அம்மா வந்து விட்டாள். உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்தார்கள். தண்ணீர் வைத்தார்கள்.

''அவர் இல்லை... என்ன விஷயம் சொல்லுங்கோ...''

''மெட்ராஸ்ல இருக்கற உங்க உறவுக்காரா மூலமா உங்க பெண்ணோட ஜாதகம் வந்தது. பொருத்தம் எல்லாம் பார்த்தாச்சு. பொண்ணை நேர்ல பார்த்துட்டுப் போலாம்னு வந்திருக்கோம்.''

''இப்படி திடீர்னு வந்திருக்கேளே... ஆச்சரியமா இருக்கு. இந்தச் சமயம் பார்த்து இந்த மனுஷர் வேற எங்கேயோ போய்ட்டாரே....!''

''பரவாயில்லை. இவனுக்கு முன் கூட்டியே சொல்லிட்டு, கும்பலா போய், டிபன் சாப்பிடறது. பாட்டு பாடறது, நமஸ்காரம் பண்றது. இந்த மாதிரி ஃபார்மாலிட்டிஸ் எல்லாம் பிடிக்காது. அதனால் ரொம்ப கேஷுவலா ஒரு ப்ரெண்டு ஆத்துக்குப் போறா மாதிரி வந்திருக்கோம்...'' என்றாள் விஸ்வநாதனின் அம்மா.

விஸ்வநாதனின் கண்கள் உள்ளே போய் விட்ட கீதாவைத் தேடின. அப்போதே மனசுக்குள் சந்தோஷ ஆச்சர்யம். இவளா எனக்கு மனைவியாக வரப் போகிறவள்? என் கனவுத் தேவதையையே கைப்பிடிக்கப் போகிறேனா?

''உங்க பூர்வீகம் எல்லாம் எங்கே?'' என்று கேட்டாள் விஸ்வநாதனின் அம்மா.

''நாங்கள்ளாம் மதுரை பக்கம். சேலத்தில் செட்டிலாகிப் பதினெட்டு வருஷமாச்சு....''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, உள்ளே போன கீதா பிஸ்கெட் கம் காப்பியுடன் வந்தாள்.

''இவதான் என் பொண்ணு கீதா. எல். ஐ. சி. யில் வொர்க் பண்றா...'' அறிமுகப் படலம் ஆயிற்று. விஸ்வநாதனுக்குள் ஒரு பொறி ஆரம்பமாகியது. இவளே என் மனைவி....

''உட்காரும்மா'' என்று அம்மா சொன்ன உடன் விஸ்வநாதனுக்கு எதிரில் இருந்த சேரில் உட்கார்ந்தாள்.

கீதாவே பேச்சையும் ஆரம்பித்தாள்.

''நீங்க எந்த ஸ்கூல்ல இருக்கீங்க?''

''குமாரபாளையத்தில் இருக்கேன்...''

''தெனம் அவ்வளோ தூரம் போய்ட்டு வர்றீங்களா...?'' பொதுவாகக் கொஞ்ச நேரம் பேசினார்கள். தயக்கமின்றிப் பேசினார்கள்.

கீதா பேசியவிதமும், இயல்பான பழகுதலும் விஸ்வநாதனை வெகுவாகக் கவர்ந்து

எஸ். லக்ஷ்மிகாந்தன்

விட்டன.

இவள்தான் மனைவி. நான் இத்தனை நாள் தேடிய பொக்கிஷம் இவளேதான், என் வாழ்க்கையில் ஒரு பகுதியாக வேண்டும். இந்தத் தங்கமீன் எனக்குக் கிடைத்தால் அது என் மகத்தான அதிர்ஷ்டம்தான்...

கிடைப்பாள். நிச்சயம் கிடைக்கப் போகிறாள்.

விஸ்வநாதன் பலமான நம்பிக்கையுடன் பேசிக் கொண்டிருந்த போதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டாள் கீதா.

''நீங்க ரெகுலரா எத்தனை மணிக்குக் கிளம்புவேள்? எந்த பஸ்ஸில்?''

''எட்டு பத்து. ஷண்முகம் டிரான்ஸ் போர்ட்ஸ்...''

''ரெண்டு வருஷமா அதிலேயே போய்ட்டு இருக்கீங்களா?''

''ஆமாம்... ஏன்?''

கீதா விஸ்வநாதனை நிமிர்ந்து பார்த்தாள். மனத்தை ஊடுருவிச் செல்லும் வெப்பப் பார்வை.



கொஞ்சம் தயக்கத்துடன் நிதானமாகக் கேட்டாள்.

''உங்களுக்குச் சுப்ரஜாவைத் தெரியுமா?''

விஸ்வநாதன் இலேசான அதிர்ச்சியுடன் கீதாவைப் பார்த்தான்.

அர்த்தங்கள் பொதிந்த அதே அம்புப் பார்வை.

சுப்ரஜா அவள் ஒரு பொன் கனவு. மகத்தான அற்புதக் கவிதை. அது கலைந்து போனது என்னாலதான். அந்தக் கொடுமையைச் செய்தவனும் நானேதான்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, ஒரு பனிச் தினத்தில் தற்செயலான அறிமுகச் சந்திப்பு.

பார்த்ததும் மறக்கவே முடியாத அதிரடி அழகு. வட்ட முகத்தின் புன்சிரிப்பைக் கொண்டே வாழ்க்கையை ஓட்டி விடலாம்.

அழகு மாதிரியே அறிவும் புத்திசாலித்தனமும். அதிகமாகவே...

பஸ் அறிமுகம். துளிர் செடி போல சந்தோஷமாய்ப் புத்துணர்வோடு முளைத்து வளர்ந்தது.

ஒருவரையொருவர் புரிந்து கொள்ள நிறையப் பேசினோம்.

''இவ்வளவு சிறுகதைகள் படிக்க நீங்களே, ரிஸர்ச் ஏதாவது செய்றீங்களா?'' என்பாள் - இலக்கிய ஆர்வம்.

''அப்பா சௌக்யமா? தம்பிக்கு உடம்பு எப்படி உள்ளது?'' குடும்பப் பாசப் பொறுப்பு. எனக்கு அவளைப் பிடித்திருந்தது. அவளுக்கும் என்னைப் பிடித்துத்தான் இருந்தது. பிரியமாய் நேசமாய் இருந்தோம்.

பழக்கம் வளர்ந்தது. மனத்தின் நெருக்கமும் தொடர்ந்தது. அவளில்லாமல் என் வாழ்க்கையை நடத்தவே முடியாது எனத் தோன்றியது. அதுதான் காதலா? என்று தெரியவில்லை.

இருவீட்டாருக்கும் தெரிந்தே பழகினோம். அடிக்கடி ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் செல்வோம்.

எம்.காம் முடித்தவுடன் அவளுக்கும் பாங்கில் வேலை கிடைத்தது. மனசுப் பொருத்தம் இருந்தது. பிடித்திருந்தது. காதல் என்று கூடச் சொல்லலாம்.

நாங்களே பெற்றோர்கள் மூலம் கல்யாண ஏற்பாடுகள் பேச ஆரம்பிக்கலாம் என முடிவு செய்தோம்.

வீட்டில் எடுத்துச் சொல்லிக் கல்யா

ணம் பேசச் செய்தோம்.

ஜாதகப் பரிமாற்றம் செய்யப்படும் நேரத்தில்தான் எனக்குப் புத்தி மாறிப் போனது.

பல சராசரி ஆண்களுக்கு இருக்கும் சந்தேகக் குணம் எனக்கும் இருந்தது.

சுப்ரஜாவின் ஆபீசில் வேலை செய்யும் கௌதம் என்பவனைப் பற்றி அவள் அடிக்கடி சொன்னாள். அவனுடன் பழகினாள்.

என் கெட்ட புத்தி வேறுவிதமாய்த் தப்புக் கணக்குப் போட்டது. சுப்ரஜா என்னை விட்டு விலகிப் போகிறாள். கௌதமுக்கு என்னை விடப் பெரிய வேலை. சில விஷயங்களில் என்னை விட அதிக தகுதியே அவனுக்கு. எனவே அவனை விரும்புகிறாள் என நினைத்துக் கொண்டேன்.

சுப்ரஜாவுக்கும் கௌதமுக்கும் இருந்தது, ஒரு நல்ல ப்ரெண்ட்ஷிப் மட்டும்தான் என அப்புறமாய்த்தான் தெரிந்தது.

அதற்குள் நான் ஆட்டத்தைக் கலைத்து விட்டிருந்தேன். ஏக ரகளை செய்து, சுப்ரஜாவைக் கதறி அழவைத்து அவள் சொன்ன எந்த விளக்கத்தையும் கேட்காமல், பேச வந்த பெரியவர்களையும் மதிக்காமல், அத்தனைப் பிடிவாதமாக, குரூரமாக, கொடூரமாக இன்னும் மோசமாக சுப்ரஜாவை மௌன சித்திரவதைக்குள்ளாக்கினேன்.

'சரிதான் போடி' என்று அவளைப் பிரிந்தேன். தவிர்த்தேன். வந்தவளை விரட்டினேன். மிரட்டினேன்.

கடைசியில் அவள் அமைதியாக யாருடனோ எப்படியோ வாழ்க்கையை அமைத்துக் கொண்டாள்.

என் கோணல் புத்தியால் சுப்ரஜா என்னும் பொன் கனலை, மகத்தான அற்புதக் கவிதையைக் கலைத்து விட்டேன்.

"உங்களுக்கு சுப்ரஜாவைத் தெரியுமா?"


கீதா மறுபடியும் கேட்டாள்.

இருவரின் அம்மாக்களும் சமையல் அறையில் இருக்க இவர்கள் இருவர் மட்டுமே.

விஸ்வநாதன் குழம்பினான். 'தெரியும் எனச் சொல்வதா, தெரியாது எனச் சொல்வதா? இவளுக்கு ஒருவேளை சுப்ரஜாவைத் தெரியுமோ? நான் அவளுக்கு இழைத்த துரோகமெல்லாம் இவளுக்குத் தெரிந்திருக்குமோ? இல்லை என்று சொன்னால் இந்த கீதா என்னைச் சத்தியமாக ஏற்க மாட்டாள். எழுந்து வெளியே போடா என்று கூடச் சொல்லலாம். இந்த கீதாவையும் இழப்பதா? என்ன சொல்வது?'

கடைசியில் விஸ்வநாதன் "தெரியும்" என்றான் தலையைக் குனிந்தபடி.

கீதா நிமிர்ந்து நோக்கினாள்.



"மிஸ்டர் விஸ்வநாதன் சுப்ரஜாவும், நானும் கொஞ்ச நாள் ஒண்ணா திருச்செங்கோடுல வொர்க் பண்ணினோம். அவளைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அப்போ நீங்கதான் அந்த...."

"ஆமாம். நானேதான்."

விஸ்வநாதனுக்குக் கீதாவின் கேள்வி புரிந்து விட்டது. எல்லாம் தெரிந்துதான் கேட்கிறாள். போச்சு. இந்த கீதாவும் அவ்வளவுதான்... கட்டாயமாய்க் கல்யாணத்திற்குச் சம்மதிக்க மாட்டார்கள்...

கீதாவின் முகபாவம் மாறிக் கொண்டே இருந்தது. புன்னகைக் கீற்றுகள் மறைந்து போயின.

"ஏன் அப்படிச் செய்தீர்கள்? இப்படி அநியாயமாய்...?"

''வேண்டாம்... ஸ்டாப் இட் கீதா. ஏதாவது சொல்லி என்னை இன்னும் வேதனைப்படுத்தாதே. சுப்ரஜாவுக்கு நான் செய்தது தப்புதான், என் குற்றம்தான். ஏற்கெனவே நான் செய்த அந்தத் தப்புக்கு இன்னும் ஃபீல் பண்ணிண்டுதான் இருக்கேன். சுப்ரஜாவைப் பார்த்து மன்னிப்புக் கேட்கணும் போல இருக்கு... என் விதி என் தலையெழுத்து என் சந்தேகப் புத்தியால் சகலமும் மாறிப் போச்சு. என் தப்புக்கு மனசால நானா தெனம் தெனம் வேதனைப்படறேன்...

''சுப்ரஜாவுக்குத் துரோகம் பண்ணினதுக்கு இதோ இப்பக்கூட ஒரு தண்டனை கிடைக்கிறது. நீ நிச்சயமா என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டாய். இதுவே கூட எனக்கு இழப்புத்தான்.''

கீதா பேசாமல் ஒரு நிமிடம் நின்றிருந்தாள்.

''சரி கீதா... நான் கிளம்பட்டுமா? உன்னைச் சந்திச்சதில் எனக்குச் சந்தோஷம், வருத்தம் இரண்டுமே உண்டு. என் வாழ்த்துக்கள்...''

விஸ்வநாதன் முகம் வாடிப் போயிருந்தது. நெஞ்சு முழுக்க ஏதோ வேதனை படர்ந்து வலித்தது.

தலைகுனிந்தபடி எழுந்து நின்று, அம்மாவைக் கூப்பிட்டு மெளனமாய் அவர்களிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

ஹாலைக் கடக்கும் போது, திரும்பி ஒருமுறை கீதாவைப் பார்க்க யத்தனித்தான். அவளைக் காணோம்.

வாசலுக்குச் சென்று தன் சிவப்பு ஹீரோ ஹோண்டாவைத் திருப்பி, ஸ்டார்ட் செய்யும் போது கீதா வெளியே வந்தாள்.

''ஒரு நிமிடம் உள்ளே வருகிறீர்களா?''

ஆச்சர்யக் குறிகளுடன் விசுவநாதனும் அம்மாவும் திரும்பி வந்தார்கள்.

''என்ன ஆச்சு? என்ன விஷயம்?'' என்றான் விசுவநாதன்.

கீதா உறுதியான பார்வையுடன் திரும்பினாள்.

''எல்லா மனிதர்களுமே எத்தனையோ தவறுகளைத் தினம் தினம் செய்தவண்ணம் இருக்கிறார்கள். ஆனாலும் தான் செய்த தவறைத் தவறு என ஒப்புக் கொள்பவர் கொஞ்சம்தான். அதற்கு நிறையத் தைரியமும் பெருந்தன்மையும் வேணும்.

''நீங்க சுப்ரஜாவுக்குச் செய்தது துரோகம்தான், நியாயமில்லைதான்! ஆனால் முன்பின் தெரியாத, பெண் பார்க்க வந்த இடத்தில் கூட அதற்கென வருத்தப்பட்டு, மன்னிப்பு கேட்டது உங்களோட போலித்தனமில்லாத உண்மை மனசைக் காட்டுகிறது. செய்த தப்புக்கு மனசார ஃபீல் பண்றதே கூட ஒரு தண்டனை மாதிரிதான். உங்களுக்கு இது போதும்.... அந்தப் பழைய குற்ற உணர்வுகள் நமக்குள் வராம அட்ஜட்ஸ்ட் பண்ணிக் கொண்டா சந்தோஷமாய் நாம் வாழலாம் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. இனி உங்களுக்குச் சம்மதம்னா எனக்கும் நம் கல்யாணத்திற்குச் சம்மதமே.''

''நிஜமாகவேவா?''

நம்ப முடியாமல் பொம்மை போல் விஸ்வநாதன் நின்றிருந்தான்.

''சத்தியமாகத்தான்.''


''சொல்லப் போனா உன்னைக் கட்டிக்கிறதே கூட ஒரு தண்டனை மாதிரிதான்'' என்றான் கிண்டலாய்.

''என்ன சொன்னீங்க?'' என்றபடி பொய்க் கோபத்துடன் கையை ஓங்கினாள் கீதா.

''அதுக்குள்ளே அ வ ச ர ப் ப டா தேம்மா!'' எ ன் ற ா ள் விஸ்வநாதனின் அம்மா.

குழந்தை மேதை குஞ்சப்பா

'யோ'



பரிசு

ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/-
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/-
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-

முடிவு தேதி : அக்டோபர் 31, 1991

O இதற்கடுத்த ஒன்பது மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து, கல்கி பொன் விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.

O நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

O கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

O ஒவ்வொரு வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 - 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.

O கடிதப் போக்குவரத்து கிடையாது.

O சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெற போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

O அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன் விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

இன்று முதல் தேதி. சம்பள நாள். மாதாந்திர அவஸ்தை தினம். கணேசனுக்கு அறவே பிடிக்காத நாள். தூங்கி எழுந்திருக்கும்பொழுதே மனக்கண் முன்னால் வந்து பயமுறுத்தினார்கள் கடன்காரர்கள்.

மற்ற நாட்களில் இவனைக் கண்டாலே 'கல் விழுந்த காக்காய்க் கூட்டம்' மாதிரி பயந்து ஓடுபவர்களுக்குச் சம்பள நாளன்று பயம் அற்றுப் போகும். இடைத் தேர்தல் தொகுதி மாதிரி இவனையே சுற்றிச் சுற்றி வருவார்கள். கையில் கிடைக்கும் சொற்ப சம்பளத்தில் யார் யாருக்கு எவ்வளவு கொடுப்பது என்று புரியாமல், தொகுதிப் பங்கீட்டுப் பிரச்னையில் சிக்கிக் கொண்ட தலைவர் மாதிரி தலையைப் பிய்த்துக் கொள்வான் இவன்.

கணேசனின் கடன் இடம், பொருள், ஏவல் பார்ப்பதில்லை; கௌரவம் பார்ப்பதில்லை; 'ஜாதி, மதம், ஆள்,' நேரம், காலம், அளவு எதையும் பார்ப்பதில்லை. பியூன் முதல் மானேஜர் வரை எல்லாரிடமும், கடன் வாங்குவான் கணேசன். வட்டியில்லா 'கைமாத்து'க் கடனிலிருந்து ஆளையே அமுக்கி விடும் 'அஞ்சு வட்டி' கடன் வரை வாங்குவான்.

காப்பி குடிப்பதற்குக் கூட கால் மணி நேரம் யோசனை செய்து, பின் கைவிட்டு விடும் ரகம்தான் கணேசன். இருப்பினும் செலவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வாங்கும் சம்பளத்தில் பெரும் பகுதியை மனைவி, குழந்தைகளின் மருத்துவச்



செலவே சாப்பிட்டு விட, எஞ்சிய பணத்தில் குடும்பத்தைச் சமாளிக்க முடியாமல், கடன், கைமாற்று என்று திண்டாடிக் கொண்டிருக்கிறான்.

''ஏங்க... இன்னிக்குச் ச ம் ப ள நாள்...'' என்றபடி வந்தாள் மனைவி கௌரி.

''ம்... ம்...'' என்றான் கணேசன்.

''இந்த மாசமாவது கிரைண்டர் வாங்கித் தாங்க...'' என்று கொஞ்சம் கெஞ்சல், கொஞ்சம் தயக்கம், கொஞ்சம் ஆவல் எல்லாம் கலந்த குரலில் கேட்டாள் அவள்.

''ம்.. வாங்கிடலாம்... வாங்கிடலாம்...'' என்று அவனும் நம்பிக்கை, சந்தேகம், பயம் எல்லாவற்றையும் சம விகிதத்தில் கலந்து 'பட்டும்' படாமலும் பதிலளித்தான்.

''நானும் ஒரு வருஷமாக் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீங்களும் சரி... சரின்னு சொல்லி ஏமாத்திக்கிட்டே இருக்கீங்க...'' என்றாள் அவள் குற்றம் சாட்டும் தொனியில்.

வாஸ்தவம்தான். அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போவதால் ஆட்டுக்கல்லில் மாவாட்ட முடியவில்லை அ வ ள ா ல். வெளியில், காசு கொடுத்து 'மாவு மிஷினில்' அரைத்து வரும் மாவு அவளுக்குப் பிடிப்பதில்லை. எனவே, எப்படியாவது

ப.ஜீவானந்தம்

கிரைண்டர் வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறாள். வாங்கித் தர அவனுக்கும் ஆசைதான். ஆனால், முடியர்மல் போய்க் கொண்டிருக்கிறது.

''பேசாமலே இருந்தீங்கன்னா எப்படி? நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. இந்தத் தடவை கிரைண்டர் வாங்கித் தந்தே ஆகணும்... ஆமாம்.... சொல்லிட்டேன்...!'' என்றாள் கௌரி.

இந்த முறை எப்படியும் கிரைண்டர் வாங்கித் தந்து விடுவது என்று நேற்றே முடிவு செய்து விட்டிருந்தான் கணேசன். காரணங்கள் இரண்டு. கௌரி சொன்னது போல், கடந்த ஒரு வருடமாகவே 'இதோ!... அதோ!' என்று கூறிக் கொண்டிருக்கிறான்; இனிமேலும் இப்படியே இழுத்

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டி - '91
ரூ. 500/-
மூன்றாவது பரிசுக்
கதை - 1





''டி.வி. டைரக்டர் பதவிக்குப் பல பேர் போட்டியிட்டுக் கடைசியில் 'தொல் பொருள்' ஆராய்ச்சியாளருக்குத்தான் சான்ஸ் கிடைச்சுதாமே!''

''ஞாயிற்றுக்கிழமை சினிமா செலக்ட் பண்றதுக்காகத் தேர்ந்தெடுத்திருப்பாங்க!''

- குரு கிருஷ்ணா

தடிப்பது முறையல்ல.

இரண்டாவது காரணம் : 'பயம்'. இவ்வளவு நாட்களாக அவளும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். 'ரேடியோ விளம்பரப் பெண்களை'ப் போல் எப்பொழுது சப்தம் போடப் போகிறாளோ தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் ரேடியோ வைக்கவே பயமாக இருக்கிறது கணேசனுக்கு. ஒவ்வொருத்தியும் புருஷனை என்ன விரட்டு விரட்டுகிறார்கள். 'கிரைண்டர் வந்தால்தான் இட்லி, இல்லையென்றால் பட்டினி' என்று மிரட்டுகிறாள் ஒருத்தி; கௌரி இது வரை இப்படியெல்லாம் பேசவில்லை. எனினும் எந்தக் கணமும் அவள் 'மிரட்டல் பேர்வழி'யாக மாறக்கூடிய அபாயம் இருப்பதை உணர்ந்ததால் உடனடியாக கிரைண்டர் வாங்கித் தர முடிவு செய்து விட்டிருந்தான் கணேசன்.

அதைச் சொல்லவும் செய்தான்; ''இந்தத் தடவை கண்டிப்பா வாங்கித் தர்றேன் கௌரி.. போதுமா?'' என்று. ஆனால் கௌரிக்கு நம்பிக்கை வரவில்லை. எத்தனை முறை ஏமாந்திருக்கிறாள் அவள்! எனவே சந்தேகம் விலகாத குரலில் கேட்டாள். ''அதெப்படி அவ்ளோ நிச்சயமாச் சொல்றீங்க?''

''ஆபீஸ்ல இரண்டாயிரம் ரூபா சீட்டு கட்டிக்கிட்டு வர்றம் இல்ல. இன்னிக்குச் சீட்டு ஏல நாள். எப்படியாவது அந்தச் சீட்டை எடுத்துடறேன். கிரைண்டர் வாங்கிடலாம்...''

''நிச்சயமாத்தானே சொல்றீங்க? ஏமாத்த மாட்டீங்களே?''

''நீ கவலையே படாதே. சாயந்திரம் வரும்போது கிரைண்டரோட வர்றேன். போதுமா?''

கௌரியின் கண்களில் மெல்ல மெல்ல நம்பிக்கை படர, இப்பொழுதே கிரைண்டர் வீட்டுக்கு வந்து விட்டாற்போன்ற சந்தோஷம் முகத்தில் பூத்தது.

கிரைண்டர் பற்றிய ஞானம் ஏதும் இல்லாத காரணத்தால், எந்த பிராண்ட் வாங்குவது, எந்தக் கடையில் வாங்குவது என்பதையெல்லாம் ஆபீஸ் நண்பர்களிடம் கேட்டறிந்தான் கணேசன். மதியம் உணவு இடைவேளையின் போது கடைக்கு ஃபோன் செய்து விலை விவரம் விசாரித்தான். ''எப்பப் பார்த்தாலும் 'இல்லை...' பாட்டுப் பாடறவன் கிரைண்டர் வாங்கப் போறானா?'' என்று பார்த்த ஆச்சரியப் பார்வைகளை 'ஹி... ஹி...' என்று அசடு வழிந்து சமாளித்தான்.

சாயந்திரம் ஐந்து மணிக்குச் சம்பளக் கவர் கைக்கு வந்து விடும். கடன்காரர்கள் மதியம் மூன்று மணிக்கே முற்றுகையைத் தொடங்கி விட்டார்கள். இப்போது விட்டு விட்டால் இவனை அடுத்த மாதம்தான் பிடிக்க முடியும் என்பது எல்லோருக்குமே தெரியுமாதலால், கசாப்புக் கடை காக்கை மாதிரி ரொம்பவும் நெருங்கியும் வராமல், ரொம்பவும் விலகியும் போகாமல் இவன் பக்கமே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

சம்பளக் கவர் கைக்கு வந்தது. குறுநில மன்னர்களுக்கு மானியம் அளிக்கும் மகாராஜாவைப் போல், அவரவர்க்குச் சேர வேண்டியதைக் கொடுத்து விட்டு, தன்னைச் சுற்றியிருந்த வியூகத்தை உடைத்துக் கொண்டு வெற்றிகரமாக வெளியே வந்த கணேசன், அவசர அவசரமாக லஞ்ச் ரூமை நோக்கி ஓடினான்.

ஏற்கெனவே தொடங்கிச் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்த ஏலத்தில் இவனும் போய்ச் சேர்ந்து கொண்டான். இவனைப் போலவே 'பணமுடை'க்காரர்கள் பலர் இருந்திருக்க வேண்டும். ஏலத் தொகை கன்னாபின்னாவென்று போய்க் கொண்டிருக்க, போட்டி போட முடியாமல் பின் தங்கிப் போனான் கணேசன். இறுதியாக, ஏகப்பட்ட தொகை தள்ளி எவனோ ஒருத்தன் சீட்டை எடுத்துக் கொள்ள, இவன் வெறுத்துப் போய் வெளியே வந்தான்.

கிரைண்டர் இல்லாமல் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதை நினைத்த போதே வேதனையாய் இருந்தது. வெறுங் கையோடு போய், கௌரியின் முகத்தில் எப்படி விழிப்பது என்ற குழப்பத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். ''சரி... எப்படியும் சமாளித்துத்தானே ஆக வேண்டும்'' என்ற எண்ணத்தில் வீட்டை

நோக்கி நடந்தவனுக்கு, 'பிள்ளைகளுக் காவது ஏதாவது வாங்கிப் போகலாம்' என்ற எண்ணம் தோன்ற, ஏதோ ஒரு கடைக் குள் நுழைந்தான்.

பிஸ்கெட், கேக், சாக்லேட் என்று வகை வகையாய்க் குவிந்து கிடக்க, எதை வாங்குவது என்று புரியாமல் திணறிப் போன கணேசனின் பார்வையில் பட்டது அந்த பிஸ்கெட் பாக்கெட். யார் வீட்டிலோ ஓசியில் டீ.வி. பார்த்த போது, அதில் இந்த பிஸ்கெட்டைப் பார்த்ததாக ஞாபகம். ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரும் கணவன் கையில் பிஸ்கெட்டைத் தூக்கிப் பிடித்தபடி வீட்டுக்குள் நுழைய, 'கழுக்... மொழுக்...' குழந்தைகளும் கவர்ச்சியான மனைவியும் சந்தோஷக் கூச்சல் போட, பிஸ்கெட் தின்பதே பிறவிப் பயன் என்பது போல் எல்லோரும் 'இந்த' பிஸ்கெட்டைத்தான் தின்று கொண்டிருந்தார்கள். எனவே, கணேசனும் இந்த பிஸ்கெட்டையே வாங்கி னான்.

போகும் வழியில் இரண்டு ரூபாய்க்கு மல்லிகைப் பூ வாங்கிக் கொண்ட கணேசன், கௌரியை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று சிந்தனையி லேயே வீட்டை அடைந்தான். கதவைத் திறந்த கௌரியின் பார்வை அவனைத் தாண்டித் தெருவைத் துழாவியது. வெறும் தெருவைப் பார்த்தவளின் கண்களில் ஏமாற் றம் இருளாய்க் கவிய, உள்ளே செல்லத் திரும்பினாள்.

என்ன சொல்வது என்பது புரியாமல் தடுமாறிய கணேசன் ''கௌரி, இந்தா பூ'' என்று பூவை அவளிடம் கொடுத்தான். அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் பூவை வாங்கியவள் அப்படியே மேஜை மேல் வைத்து விட்டு உள்ளே போய் விட்டாள். படித்துக் கொண்டிருந்த பிள்ளை களிடம் பிஸ்கெட்டைக் கொடுத்தான் கணேசன். வாங்கிக் கொண்ட பிள்ளைகள் உடனடியாக அதைப் பிரித்துத் தின்னாமல், ஒரு ஓரமாக வைத்து விட்டு, பிஸ்கெட்டில் ஒரு கண்ணும் புத்தகத்தில் ஒரு கண்ணு மாய்ப் படிப்பைத் தொடர்ந்தார்கள். என்ன செய்வது என்பது புரியாத கணேசன் படுக் கையில் சாய்ந்தான்.

மணி ஒன்பதுக்கு மேல் ஆகி விட்டது. சாப்பிட்டு முடித்தாயிற்று. பிள்ளைகள் தூங்கியும் விட்டார்கள். கௌரி கிரைண்டர் பற்றி இன்னமும் எதுவும் கேட்கவில்லை. சாப்பாடு பரிமாறும் போது கூட எதுவும் பேசவில்லை. அவளின் இந்த மௌனம் தான் அவனுக்கு வேதனையாய் இருந்தது. நெடுநேரம் தவித்துக் கொண்டிருந்தவன் அதற்கு மேலும் இந்த இறுக்கத்தைத் தாங்க இயலாதவனாய்த் தயங்கித் தயங்கி அடுக்களைக்குள் சென்றான்.

பாத்திரங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்த கௌரி இவன் வந்ததை உணர்ந்தாள். எனினும் தெரிந்த மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை.

''கௌரி...'' என்றான் கணேசன்.

''ம்...''

''ம்.. வந்து... நீ சரியாச் சாப்பிடல போலருக்கே. உடம்புக்கு ஏதாவது...?'' என்று இழுத்தான்.

தலைநிமிர்ந்த கௌரி அவனை ஒரு வெற்றுப் பார்வை பார்த்தாள். மீண்டும் தலையைக் குனிந்து கொண்டு பாத்திரம் தேய்ப்பதில் மும்முரமானாள்.

''ம்... கௌரி... இந்தத் தடவை சீட்டு ரொம்ப ஜாஸ்தியா தள்ளிப் போயிடிச்சி. எடுக்க முடியல. அடுத்த மாசம் எப்படி யாவது எடுத்து கிரைண்டர்...''

''நான் கிரைண்டர் பத்தி ஒண்ணுமே கேக்கலியே...'' என்றாள் அவள் 'பட்' டென்று.

''அது... வந்து... கௌரி...''

''தோ பாருங்க.. கிரைண்டர் பேச்சை விட்டுடுங்க. நான் அதையெல்லாம் மறந் தாச்சு. அதைத் தவிர வேற ஏதாவது இருந்தா பேசுங்க...'' என்றாள் அவள் அழுத்தமாக.

கணேசன் இப்போது மறுபடியும் தடு மாறினான். ''அதில்லை கௌரி... அது... வந்து...'' என்று ஏதேதோ உளறிக் கொட்டி யவன், ''பூவை டேபிள் மேலேயே வச்சிட்டு வந்துட்டியே. அதைக் கொடுக்க லாம்னுதான் வந்தேன்'' என்று கையில் இருந்த பூவை அவளிடம் கொடுத்தான்.

''பூவுதானே... அங்கேயே வச்சிடுங்க. அது ஒண்ணுதான் எனக்குக் கொறச்சல்...''

முகத்திலறைந்தாற்போல் உணர்ந்த கணேசன் திரும்பி நடந்தான். பூவை மேஜை மேல் போட்டு விட்டுப் படுக்கையில் போய் உட்கார்ந்தான். ''உன் பூவுமாச்சு... நீயுமாச்சு... போய்யா...'' என்பது போல் அவள் பேசி விட்டதில் கோபம் கிளர்ந் தெழுந்தது. அடுத்த கணமே அடங்கியும் போனது. அவளைக் கோபித்து என்ன

''லிப்ட் தர்றதப் பத்தியில்லே.... இடையில் பாலம் வருதே... அதான் யோசிக் கறேன்...''

''லிப்ட்டுக்கும் பாலத்துக்கும் என்ன சம்பந்தம்...?''



பயன்? ஒரு கிரைண்டர் கூட வாங்கித் தர இயலாத தன்னுடைய 'கையாலாகாத் தனம்'தானே இதற்கெல்லாம் காரணம்!

எனினும், கௌரியின் எல்லை மீறிய கோபம், என்னதான் நியாயமானது என்றாலும், அவனை வெகுவாகப் பாதிக்கவே செய்தது. ஏனெனில், இந்தப் பத்து வருடத் தாம்பத்தியத்தில் அவள் இப்படியெல்லாம் கோபப்பட்டோ அலட்சியப்படுத்தியோ அவன் பார்த்ததில்லை. இதுவரையிலும் அவள் ரொம்பவும் நல்ல மனைவியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறாள்.

இப்பொழுதுதான் முதல் முறையாகக் கேட்டிருக்கிறாள். அதுவும் என்ன கேட்கிறாள்? 'பட்டுப் புடவை வாங்கித் தா...! நகை நட்டு வாங்கித் தா...!' என்றா கேட்கிறாள்? இல்லையே! 'எனக்கு உடம்புக்கு முடியவில்லை. கிரைண்டர் வாங்கித் தா' என்கிறாள். 'அதைக் கூட வாங்கித் தர எனக்குத் துப்பில்லாமல் போனதே' என்று தன்னையே நொந்து கொண்டவன் 'என்னை மன்னிச்சுடு கௌரி' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். பின் பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்து அந்த மாதத்திற்கான பட்ஜெட்டில் மூழ்கிப் போனான்.

அடுக்களை வேலைகளை முடித்துக் கொண்டு வந்த கௌரி, துவைத்துக் காயப் போட்டு எடுத்து வைத்திருந்த துணிகளை மடித்து பீரோவில் வைக்கலாம் என்று போன போது கண்ணில் பட்டது அந்த போட்டோ. கல்யாணமான புதிதில் எடுத்துக் கொண்டது. சற்றே வெட்கத்துடன் கௌரி பக்கத்தில் நின்றிருக்க, 'பளீ'ரென்று சிரித்துக் கொண்டிருந்தான் கணேசன். போட்டோவில் இருக்கும் கணேசனுக்குத் துளியும் சம்பந்தமில்லாத 'இப்போதைய' கணேசனின் முகம் மனக்கண் முன் வந்து நிற்க, கௌரிக்கு உள்ளுக்குள் ஏதோ உடைந்து நொறுங்கியது.

''ஏன் இப்படி மாறிப் போனார் இவர்? முன் வழுக்கை விழுந்து... முதுமை தட்டிப் போய்... முகமெல்லாம் இருளடைந்து... பத்தே வருடத்தில் ஏன் இந்த மாறுதல்? வயதானால் முடி கொட்டிப் போகலாம். முகக் களையும் போய் விடுமா என்ன? கண்ணில் இருந்த கவர்ச்சி மறைந்து போய், சோர்வும் சோகமும் ஏன் வந்து கப்பின? டக்... டக்கென்ற கம்பீர நடை ஏன் இப்படித் தளர்ந்து போனது? ஏன்... ஏன்...? இதற்கெல்லாம் வயதா காரணம்? இல்லை...! நாங்கள்தான் காரணம்! ஆம்! நோயாளியான நானும் நோஞ்சானான என் பிள்ளைகளும்தான் காரணம்! எங்களுக்காக உழைத்து உழைத்துத்தானே இப்படி ஓடாய்ப் போனார் இவர்!

எந்த விஷயத்தில் குறை சொல்ல முடியும் இவரை? எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லை. எப்பொழுதாவது என்னை அடித்திருப்பாரா, இல்லை அதிர்ந்துதான் பேசியிருப்பாரா? அல்லது, 'அப்பன் வீட்டிலிருந்து அதைக் கொண்டு வா.. இதைக் கொண்டு வா...' என்று அதிகாரம்தான் செய்திருப்பாரா? எனக்கும் என் பிள்ளைகளுக்கும் கொட்டிக் கொட்டி, கடனாளியாய்ப் போனதைத் தவிர வேறு என்ன சுகத்தைக் கண்டார் இவர்? இவரைப் போய்க் கோபமாகப் பேசி விட்டேனே நான்! கிரைண்டர் இல்லாவிட்டால் போனால் போகிறது.. சனியன்... செத்தா போய் விடுவேன்? இப்படித் தாறுமாறாக நடந்து கொண்டேனே! இன்னைக்கின்னு பாத்து ஏன் என் புத்தி இப்படிப் போச்சு! ஐயோ!

- மனத்திலேயே புலம்பிக் கொண்டிருந்தவளுக்கு அடுக்களை நிகழ்ச்சி கண் முன் வந்து நின்றது. பூவைக் கொடுத்த போது தன்னுடைய அலட்சியமான பதிலினால் தாக்கப்பட்ட கணேசன், அடிபட்ட முகத்துடன் அங்கிருந்து நகர்ந்தது நினைவுக்கு வர நெஞ்சுக்குள் ஏதோ 'பகீ'ரென்றது. அடி வயிறு கலங்கியது. கை கால் வெலவெலத்துப் போனது. கணவன் மேல் பரிதாபமும் பச்சாதாபமும் ஒருசேர எழுந்தது. ஒரு குழந்தையைப் போல் அவனை ஆதரவாய் மார்போடணைத்துச் சமாதானப்படுத்தும் தாயன்பு பொங்கிப் பெருக, அந்தக் கணமே அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல் கையும் காலும் பரபரத்தன.

துணிகளையெல்லாம் அப்படியே வீசியெறிந்து விட்டு ஓடியவள், மல்லிகைப் பூவை அப்படியே அள்ளிக் கொத்தாகத் தலையில் செருகிக் கொண்டு மழலையை வாரியணைக்கும் தாயின் உத்வேகத்துடன் அவசர அவசரமாகப் படுக்கைக்கு ஓடி வந்த போது, மன உளைச்சலினாலும் மாதாந்திரப் பற்றாக்குறையினாலும் களைத்துப் போன கணேசன், கால்களை மடக்கி, கைகளைக் கழுத்துக்கடியில் இடுக்கிக் கொண்டு குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாய்த் தூங்கிப் போயிருந்தான்.

''அங்கேதான் ஓசியில் உட்கார்ந்திருப்பவரைப் பிடிச்சுத் தள்ளணும்கிற வெறி எனக்கு வரும்!''

- போத்தனூர் புலிச்சோழன்





ஜோடி நாயனம்

எதிர் வீட்டிலே ஏதோ இரைச்சல்!

தெருவை எட்டிப் பார்த்து வந்த கமலம், ''உங்க தம்பி வீட்டிலே ஒரே கூட்டமா இருக்கு. என்னன்னே புரியல்லே!'' என்றாள். ''பெரிய 'புள்ளிங்க' காரெல்லாம் வந்து வந்து போகுது! நமக்குத் தெரிஞ்சவங்க யாரானும் தென்பட்டா விசாரிக்கலாமேன்னு பார்த்தேன். யாருமில்லே.''

அவள் பேச்சிலிருந்த ஈடுபாட்டை உணர்ந்தேன்.

அங்கு போய் விசாரிக்க வேண்டும் என்ற ஆதங்கம் விஞ்சினாலும், இருபது வருஷத்திய அன்னியம் அவளைத் தடுத்திருக்க வேண்டும்!

அந்த நெருடலில் உள்ளே வந்தவள், ஊஞ்சலில் கண் அயரப் போன என்னை எப்படியோ உசுப்பி விட்டாள்!

இனியும் தூங்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை.

எழுந்து அமர்ந்து முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

''என்னன்னு விசாரியேன். அநேகமா உன் ஓரகத்தி பிள்ளையுண்டாகி இருப்பாள்!'' என்று கமலத்தைச் சீண்டினேன்.

''இதுக்கொண்ணும் குறைச்சல் இல்லே!'' எரிச்சல் அவள் கண்களில் தீப் பிடித்தது!''

அவளுக்கிருந்த ஆதங்கம் ஏனோ எனக்கில்லை.

ஊர் மெச்ச வாழும் கலைஞர்கள் வாழ்க்கையில், இந்த மாதிரியான பரபரப்பெல்லாம் சர்வ சாதாரணமில்லையோ?

''அட. என்னவா இருக்கும்? போன வருஷம் இந்த நாளையிலே உன் கொழுந்தன் 'பத்மஸ்ரீ' வாங்கினானில்லே? அது மாதிரி இந்த வருஷமும் ஏதானும் விசேஷமா கிடைச்சிருக்கும்!'' என்று அவளை அசுவாரஸ்யமாய் ஒரங்கட்டினேன். ''இது போல சமாசாரமெல்லாம் தந்தியிலேதான் வரும். அது வந்த ஜோருக்கு உண்டாகிற பரபரப்பு. இப்படித்தான் காரும் ஆட்டோவுமா தூள் கிளப்பும்!''

''அது சரஸ்வதி வாசம் பண்ற வீடாச்சே! இப்படித்தான் நாளுக்கு நாள் தேஜஸ் கூடிக்கிட்டே போகும்!'' - என்று பெருமூச்சு விட்டாள்.

''ஏண்டி வயறெரியிறே? எல்லாத்துக்கும் 'கொடுப்பினை' வேணும். சுயமாவே அவன் நல்ல உழைப்பாளி. பகிரதனுக்கு அப்பன்! எல்லாத்துலயும் சாதனை பண்ணணுங்கற பிடிவாதக்காரன். அவனாலே முடியுது.''

''எனக்கென்னங்க வயத்தெரிச்சல்? நீங்க இரண்டு பேருமே ஒரே வயத்து ஜன்யம்! ஒங்க அப்பாருகிட்டெதான் ரண்டு பேருமே ஒண்ணா பாலபாடம் படிச்சிருப்பீங்க! ஆனா நீங்க மடுவுன்னா, அவர் மலை! எங்க அப்பாரு உங்களை எனக்காகப் பார்க்க வந்தாரில்லே? அன்னெக்கி நீங்க எங்கேயோ வயக் காட்டுலே மாட்டைத் துரத்திக்கிட்டு ஓடினீங்களாமில்லே? ஆனா உங்க வூட்டுக்கு வந்து பார்த்தப்போ, உங்க தம்பி பாரி நாயனத்தெ வெச்சுக்கிட்டு அசுர சாதகம் பண்ணிக்கிட்டிருந்தாராமில்லே? சொல்லிச் சொல்லி ஆத்துப் போவாரு!''

எனக்குச் சிரிப்பு வந்தது.

''ஆமாடி! என்னிக்கு அவன் நாயனத்தைக் கையிலெடுத்தானோ, அன்னிலேர்ந்து மத்த வேலையை அவன் பார்த்ததே இல்லை! எல்லாமே என் தலை மேலே விடிஞ்சுது! ஒஞ்ச போது நிலத்தைப் பார்க்க ஆரம்பிச்சேன். அதன் தொடர்பா காடு கழனி, மாடு கன்னு, வீடு வாசல்னு எல்லாத்தையுமே என் தலையிலே கட்டினாரு, எங்க அப்பாரு! ஆனா, அவனோ? வாசிப்பு, வாசிப்பு, ஓயாத வாசிப்பு... அவனும் நானும் மூணு வருஷம் நீடாமங்கலத்தார்கிட்டே சின்ன வயசிலே 'சேவகஞ்' செஞ்சோம்! அந்த நாளையிலே கூட அவன் நாயனத்தையும் தவிலையும் மட்டுமே

திலீபன்

தொடுவானே தவிர, வீட்டுக் காரியங்கள் எல்லாத்தையும் என் தலையிலேதான் கட்டுவான்!

''ஆரம்ப நாளையிலே ரொம்ப சுவாரஸ்யமா வாசிச்சுக்கிட்டிருந்த நான் கூட, அவனோட இந்த வாசிப்பு வெறியைப் பார்த்தப்புறம்தான், என்னையே மாத்திக்கிட்டேன்!''

''ஆமா! நொண்டிக் குதிரைக்குச் சருக்கினது சாக்கு! ஊதாதே ஊதாதேன்னு சின்னவரு உங்க வாயைப் பொத்தினாராக்கும்?''

''சேச்சே! அதில்லேடி. அவனோட நான் ஒத்துப் போக முடியாதோன்னு பிடிவாதமா ஒதுங்கினேன்! நாங்க ரண்டு பேருமே ஜோடி நாயனம் வாசிக்கணுங்கிறதுதான் எங்க அப்பாரு கனவு!'' அவளிடம் சொன்னபடி நான் பழைய நினைவுகளில் கரைந்து போனேன்.

பரம்பரை சம்பிரதாயப்படி வைத்தீஸ்வரன் கோயில்லேதான் நானும் அவனும் முதல் ஜோடி நாயனம் வாசிச்சோம்! அப்ப எனக்குப் பதினேழு வயசு. அவன் ரெண்டு வருஷம் சின்னவன். அந்த வயசிலேயே அவனுக்கு மேளகர்த்தா, ஜன்யமெல்லாம் அத்துப்படி! வாசிப்பில் சுநாதம் ரம்யமாய்க் கை தூக்கும்! ஏதோ எங்க அப்பாரு பிடிவாதத்திலே, அவனுக்கு ஒத்தாசையா ஊதப் பழகி இருந்தேன். அந்த மட்டிலேதான் அன்றைக்கும் அவனோடு ஜோடி சேர்ந்தேன்! எப்பவுமே கூட வாசிக்கிறவன் 'தடுக்கி விழுந்தா', அவனுக்குக் கோபம் கோபமா வரும்! மூத்தவனான என்னையே அடிக்க வருவான். அதீதமான அவனோட வித்வாம்சம், எனக்கு அகம்பாவமாப் பட்டது! என்னை விட்டு அவன் மனத்தால் விலகிப் போனான்!

எனக்கு இருபது வயசாகும் போது, எங்க அப்பாரு பக்கவாதத்திலே படுத்தார். நான் அவர் பக்கத்திலே இருக்க வேண்டிய கட்டாயம். வீட்டுக் காரியம், ஏழு காணி வெள்ளாமை - எல்லாமே எனக்கு விடிஞ்



சுது!

அவன், தனிக் கச்சேரியாப் போய் வந்தான்.

எனக்குத் தோதான வேளையிலே மட்டும், கூட ஊதலானேன்!

இந்தச் சமயத்திலேதான் எனது கல்யாணப் பேச்சு வெகு முக்கியத்துவ மடைந்தது!

கொறநாடு ருத்ராபதி பிள்ளை வீட்டிலே பெண் பார்த்துக் கொண்டிருந் தனர்!

அதைச் சாக்கிட்டு, மாயவரத்தில் ஒரு கச்சேரிக்கு இரண்டு பேரும் ஒத்துக் கொண் டோம்.

கிளம்பும் போது எங்க அப்பாரு சொன்னார்: 'எலேய்! கொறநாடு முத்து வீருசாமி வூட்டுலே நீங்க இரண்டு பேரும் தங்கிக்குங்க. மாயவரம் கச்சேரிக்குப் பக்கமா இருக்கும். வீருசாமி வூட்டுக்கு எதிர்லதான் ருத்ராபதி பிள்ளை வீடு! அவர் பேத்தியைத்தான் நம்ம வூட்டு மருமகளாக்க நினைச்சிருக்கேன். அதுக்குத் தோதா அங்க நடந்துக்குங்க! இரண்டு பேரும் ஒத்துமையா இருந்து கச்சேரியை முடிச்சுக் கொடுத்துட்டு வாங்க!'' - என்றார்.

முத்து வீருசாமி எங்க அம்மா உறவுக் காரர். தொழில் முறையிலே எங்க அப்பா ருக்குத் தோழர். நாங்க மாமாம்போம்!

மாயவரம் ரயிலடிக்குப் பக்கமாதான் அவர் வீடு.

நடையாவே நம்ம செட்டோட, நானும் அவனும் அவர் வீட்டை நெருங்கினோம்.

எப்பவுமே என்னை விஞ்சி நடக் கிறவன்!

அன்னிக்கும் எனக்கு முன்னே போய்க் கிட்டிருந்தான்.

வீட்டுப் படி ஏறும் போது, உள்ளிருந்து வந்த ஒரு 'பெண்', அவன் மேலே மோதி, அவனை என் மேலே தள்ளியபடி எதிர் வீட்டுக்கு ஓடினாள்!

எனக்கு எரிச்சலான எரிச்சல்! ஆனால் அவனோ?

''யாருண்ணே இது?'' என்றான்.

வீருசாமி மாமாவுக்கு எல்லாமே பயல்கள்! அதாலே, ''எதிர் வீட்டுப் பொண்ணா இருக்குமோ; மாடு மாதிரி மோதராளே?'' என்றேன்.

படியில் நின்றபடியே, ''ஒரு 'நிகா' விலே மரகதம் தங்கை போல இல்லே?'' என்று வியந்தான்!

என் மண்டையில் 'சுருக்'கென்றது!

அந் நாளையில் கும்மாணம் சதிர்கார மரகதம் தங்கையின் அழகு, பிரசித்தம்! 'ரவி வர்மா பெயிண்டிங்' என்பார்கள்!

அதனால் 'இந்தப் பயலுக்கு இந்த நேரத்தில் இதென்ன லயிப்பு?' என்று



துணுக்குற்றேன்.

அதற்குள் வீருசாமி மாமாவே உள்ளி ருந்து வந்து விட்டார். ''வாங்க. வாங்க. தெருவிலே ஏதோ பேச்சுக் குரல் கேட்ட மாதிரி இருந்தது. எட்டிப் பார்த்தேன். நல்ல வேளை'' - என்றார்.

உள்ளே போனோம்.

அன்று மாலை. துளியும் எதிர்பாராத வகையில் கச்சேரி களைகட்டியது!

சபையே மெய்மறந்து போனது!

இத்தனை நேரமும் என் கண்ணில் படாத எதிர் வீட்டுப் பெண், முதல் வரிசை யில் இருந்தது!

என் மண்டைக்கு 'நறுக்'கென்று உறைத் தது!

மாயவரம் கச்சேரிக்குப் பிறகு அவன் ரொம்பவும் மாறி இருந்தான்!

யாரோடும் ஒட்டாமல் ஒதுங்கி ஒதுங்கிப் போவான்!

ருத்ராபதி பிள்ளை வீட்டிலிருந்து வாரம் ஒரு கடிதம் வரும். எங்கள் வீட்டுச் சம்பந்தத்தில், அவர் பேரன் அழகநம்பிப் பிள்ளைக்குப் பரமதிருப்தி! அவர் மாமா வெங்குப் பிள்ளை கும்மாணத்துக்குப் பக் கத்திலேதான் இருந்தார். வாரம் ஒருமுறை வந்து, எங்க அப்பாரைப் பார்த்துப் பேசி விட்டுப் போவார்!

ஆனால் கல்யாண விஷயம் மட்டும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் நீண்டு கொண்டே போனது!

அதுவரை இந்த விஷயத்தில் அவ்வள வாக ஈடுபடாமல் இருந்த நான், மெல்லத் தலையை நுழைத்தேன்!

'பெண் வீட்டாருக்குப் பொதுப் படை யாய் எங்கள் சம்பந்தம் பிடித்திருந்தது. ஆனால் பெண்ணுக்கோ குறிப்பாகச் சின்ன வனைத்தான் பிடித்திருந்தது!'

இந்தக் குழப்பத்திலே, ஒருநாள் என் பேருக்கு ஒரு கடுதாசி வந்தது!

தபாலைப் பிரிச்சுத் தோப்பிலே கொண்டு வச்சுப் படிச்சேன்!

அதிலே என்னென்னவோ எழுதி இருந் தான்.

இருந்தாலும் நான்கைந்து வரிகள் என் வயிற்றைக் கலக்கின.

'எம் பேரிலே அவளுக்கிருக்கிற அபி மானம் தெரிஞ்சும், நீயும் அப்பாரும் பண்ற மௌடீகம், என்னை இந்த முடிவுக்கெல் லாமோ தள்ளுது! அவ இல்லேன்னா நான் இல்லேங்கிற நியாயத்தை நீ கூடவா உணரல்லே? இதுக்கு மேலெயும் உங்க பிடிவாதம் நீடிக்குமானா ஒண்ணுநான் இந்த ஊரை விட்டே ஓடணும். இல்லே, இந்த உலகத்தை விட்டே ஒழியணும்!'

சுக்கு நூறாய் அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்து விட்டு, பல மணி நேரம் சிந்தித்தேன்.

அந்த க்ஷணத்தில் என்னுள்ளே எத் தகைய வெறியுணர்வு மேலோங்கி இருந்தது என்பதை என்னால் யூகிக்க இயலவில்லை!

'சட்'டென எழுந்து, அருகில் கிடந்த வெட்டறிவாளால் என் வலக்கையைத் துண்டித்துக் கொள்ள முனைந்தேன்!

கண் விழித்துப் பார்த்த போது, என்னைச் சுற்றி ஒரு படையே திரண் டிருந்தது!

ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடந்த எனது வலக்கையில் பெரிய கட்டுப் போட்டி ருந்தனர்!

எனது தாயார் 'கோ'வென அழுது, ''ஒனக்கு ஏண்டா பாவி இந்த வேலை யெல்லாம்? வேலிப் புதரைக் கழிக்க ணும்னா வேலெக்காரன்ங்க கிட்டெ சொல் லப்படாதா? நீயா செய்யணுமா?'' - என்றெல்லாம் ஒப்பாரியிடலானாள்.


குற்ற உணர்வின் காரணமாகவோ, அன்றி என் மேல் கொண்ட குரோதத்தாலோ என்னைச் சின்னவன் சந்திக்கவே இல்லை!

இரண்டொரு மாதங்களில் எனது கைக்கட்டு அவிழ்க்கப்பட்டது.

நான் எதிர்பார்த்ததற்கும் மாறாக, எனது வலக்கையில் கட்டை விரல் மட்டுமே சேத முற்றிருந்தது!

எனினும் 'என்னால் இனி நாயனத்தைத் தொட முடியாது' என்கிற நிம்மதியில் மன ஆறுதலுற்றேன்! ஒரு வழியாக அந்த வருஷத் தின் முடிவுக்குள், எங்கள் கல்யாணம் குதிர்ந்தது! நான் எதிர்பார்த்தது போலவே சம்பூர்ணம் வீட்டார் என் கையைக் காரணம் காட்டி என்னை நிராகரித்து அவனை மாப் பிள்ளையாக்கிக் கொண்டனர்.

படுத்த கிடையாய்க் கிடந்த அப்பா ரைக் காண, அவனும் அவளும் வந்தனர்.



தியோடர் என்ற ஒரு எழுத்தாளர் ஒரு நூலை எழுதினார். அந்த நூலைப் படித்த டென்மார்க் நாட்டின் ஆறாம் கிரிஸ்டின் என்ற

அவருக்கு அருகில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை!

தம்பதிகளை ஆசீர்வதித்து அனுப்பிய எங்க அப்பாரு, அவனை மட்டும் தம் அருகில் அழைத்தார்.

''எலே! நீ ரொம்ப அதிர்ஷ்டக் காரன்டா! ஆசைப்பட்ட மாதிரியே ரொம்ப வசதியான எடத்துக்குப் போறே. லட்ச லட்சமா சம்பாதிக்கக்கூடிய தொழில் திறமையும் இருக்கு. ஆனா, உன் அண்ணன் தலையெழுத்து? - பாவம்டா அவன்!... அதனால எனக்குப் பின்னாலெ, நம்ம சொத்து சுகத்தைப் பராமரிக்கிற பொறுப் பில அவனுக்கு முழுச் சுதந்திரம் கொடுத் திருக்கேன். அவனெ உன் எதிராளியா பார்க் காமே, கொஞ்சம் அனுசரிச்சுப் போ!...

அவர் பேச்சை அவன் துளியும் சட்டை செய்யவில்லை! மாறாக,

''...சுபாவத்திலே அவன் சோம்பேறிப் பய! தொழில்லெ வெளங்கணுங்கிற அக்கறை இல்லெ! போதாக்குறைக்கு விரல் போனதும் ஒரு சாக்காய்ப் போச்சு! - இன்னம் எவ்வளோ நாளைக்குத்தான் அவனெ மடீலெயே தூக்கி வச்சுக்கப் போறீங்களோ? பார்க்கிறேன்!'' என்று பொரிந்து தள்ளி விட்டு என்னைக் கண்க ளால் சுட்டெரித்தபடி விருட்டென வெளி யேறினான்!

எனக்குத் தர்மசங்கடமானது! ''என் னப்பா இது? மறு வழிக்குப் போறவங் கிட்டெ பேசற பேச்சா இது?'' - என்று கடிந்தேன்.

''பேசணுங்கிற கட்டாயம் வந்தப்புறம், அதை எப்பப் பேசினா என்ன; எப்படிப் பேசினா என்ன? - பாவிப் பய! எப்படித் தணலள்ளிக் கொட்டிட்டுப் போறான் பார்த்தியா...? எலே பெரிய தம்பி! இப்ப வானும் மறைக்காமெ சொல்லுடா. உன் கட்டை விரல் போனதுக்கு, அவங்கூடப் போறவதானே காரணம்?''

னனுக்கு எழுத்தாளர் மீது கோபம் வந்து
ட்டது. உடனே மரண தண்டனை என்று
றிவித்தான். மரண தண்டனைக்கு மாற்றாக
றொரு தண்டனையும் வழங்கப்பட்டது.
தாவது எழுத்தாளர் எழுதிய புத்தகத்தின்
5 பிரதி முழுவதையும் அவரே சாப்பிட
வண்டும். அப்படி சாப்பிட்டு விட்டால் மரண
ண்டனையிலிருந்து தப்பலாம் என்று
றிவித்தான் மன்னன்! வேறு வழியின்றி, தன்
த்தகத்தின் ஒரு பிரதி முழுவதையும் தின்று,
யிர் பிழைத்தார், அந்த எழுத்தாளர்!

- ஆதாரம் : அறிஞர்கள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சி
தகவல் : ஆ. வளையாபதி

சொத்துப் பிரிவினையில், அவரும் நானும் சேர்ந்து சூதாடி செய்து விட்டதாக, அவனும் அவளும் ஊர் பூராவும் பரப்பினர்!

வீடு இரண்டுபட்டது! பேச்சு வார்த்தை முறிந்தது.

அவன், மாமனார் பேருக்கிருந்த எதிர் வீட்டில் குடியேறினான்! அந்த வீட்டில்தான் இன்று கூட்டம். கூட்டத்துக்குக் காரணம் மறுநாள்தான் தெரிந்தது. பத்திரிகையில் அவனைப் பற்றிய விரிவான செய்திகள் வந்திருந்தன!

கும்மாணத்தில் முடியாமல், அவனை மெட்ராசுக்குக் கொண்டு போயிருப்பதாக பேப்பரில் இருந்தது!

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

பகல் வண்டியிலேயே நானும் கமலமும் கிளம்பினோம்.

எக்மோரில் இறங்கி, ஆட்டோவில் ஏறிய போது, என் உடம்பெல்லாம் ஆடியது!

ஆஸ்பத்திரியில் அவனிருந்த அறையை அடைவதற்குள் என் உணர்வுகளே இற்றுப் போய் விட்டன!

வாசலில் சம்பூர்ணத்தைப் பார்த்தேன்.

என்னைப் பார்த்த க்ஷணமே 'ஓ'வென ஒப்பாரி வைக்கத் தலைப்பட்டாள்!

அவள் அருகிலிருந்த பிள்ளைகள் அழுத படியே கமலத்தைக் கட்டிக் கொண்டன!

சம்பூர்ணத்தின் கடைசித் தம்பி ஓடி வந்து, என்னை எதிர்கொண்டு அழைத்துச் சென்றான்.

அறையினுள்ளே நுழைந்து, அவன் படுத்திருந்த கட்டிலைப் பார்த்த போது... சுடு நெருப்பால், யாரோ என் நாபியைச் சுட்டார்கள்!

மூளி நாயனம் போல் கிடந்த கிடையில், அவன் மூக்கிலும் வாயிலும் குழல்கள் செருகியிருந்தன!

சீவாளியில் வைத்த இதழ் பிரியாமல், மூச்சு முட்ட வாசிக்கும் நாயனக்காரன், இரவல் மூச்சை இழுத்துக் கொண்டிருந் தான்!

அவன் உடம்பைச் சுற்றி இருந்த வித விதமான குழாய்களைப் பார்த்த போது? எனது குடல் சுருண்டு மேலேறியது!

என் தலையில் 'மடேர்' என அடித்துக் கொண்டு, அவன் மேல் விழ இருந்தேன்.

சின்ன மைத்துனன் என்னைத் தாங்கிப் பிடித்து வெளியே கொண்டு வந்தான்.

''பொறுமையா இருங்க அத்தான்! எப்படியும் காப்பாத்திடுவாங்க. ஒரு ஆப ரேஷன் பண்ணா எல்லாம் சரியாப் போகும்னு பெரிய டாக்டர் சொன்னார்.''

''அவனே நாராய்ட்டான்! இன்னும் என்னத்தை அறுத்துப் பார்க்கப் போறான்க? - அப்படி அவனுக்கு என்னன்னு சொல் றாங்க?''

சின்ன அத்தானோட கிட்னி ரெண்டும் கெட்டுப் போச்சாம்! அதனால வேறே ஒருத் தருதை எடுத்து வெச்சுத் தச்சா, நல்லாயிடு வார்னு சொல்றாங்க!''

''ரெண்டு நாளா சொல்லிக்கிட்டே இருந்தா எப்படி? - செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டியதுதானே!'' - என்று பரபரத் தேன்.

அப்போது அங்கே வந்த டாக்டர், ''அதுக்குத்தான் முயற்சி செய்துக்கிட்டிருக் கோம். அவருக்குப் பொருத்தற மாதிரி கிடைச்சுட்டா, இப்பவே செய்துடலாம்!'' என்றார்.

''என்னுது பொருந்துங்களா, டாக்டர்? - அப்படி ஒண்ணு நடந்தா அதில அவனை விட நான்தான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணி யிருக்கணும்!''

''பேஷா முயற்சி பண்ணலாம்! நீங்க ரெடின்னா?''

''ரெடி என்ன, ரெடி? - எங்க குடும் பத்திலே பரம்பரை பரம்பரையா சாகாத அந்த வித்வாம்சத்தை, சாகாமெ காப்பாத்த நான் சாகவும் தயார்!''

''யாரும் சாக வேண்டியதில்லே! உங்க ளது அவருக்குப் பொருந்தினா போதும்!''


''என்னுது எல்லாமே அவனுக்குப் பொருந்தும்! இதுவரை அப்படித்தான் பொருந்தி இருக்கு. அவன் எப்பவுமே யோக்கியக்காரன்!''

அந்த ஆஸ்பத்திரிப் படுக்கையில் நானும் அவனும் அருகருகே கிடந்தோம்!

எங்க அப்பாரின் ஆசைப்படி நாங்க ஜோடி நாயனம் வாசிக்கவில்லை என்றால் என்ன? அவன் இனி வாசிக்கும் வாசிப் பில் என் அங்கம் பங்கு கொள்ளுமல் லவோ!

அப்பாடா! இப்பவானும் ஜோடி சேர்ந் தோமே!

என் காதுகளில் தேனாய், அவன் ஊதும் மத்திமாவதி புல்லரிக்க வைத்தது!



விடியற்காலை ஆவின் விற்பனை நிலையங்களுக்கு விசிட் செய்து தில்லுமுல்லு செய்பவர்களைப் பிடித்து சஸ்பெண்ட் பண்ணுவது, ஜவ்வாது மலைக்கு முன்னறிவிப்பு இல்லாமல் சென்று சந்தனக் கட்டை கடத்தலுக்கு உதவியாக இருக்கும் வனத்துறை அதிகாரிகளைக் கையும், களவுமாகப் பிடிப்பது என்று படு சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் அமைச்சர் ஜெயகுமார்.

சென்னை ராயபுரம் தொகுதியில் நின்று ஜெயித்த, இந்த இளைஞரை நம்பி, மீன்வளத் துறை, கால்நடைத் துறை,

அமைச்சர் ஜெயகுமார்:—

"முடிவெடுக்கும் உரிமையை முதல்வர் கொடுத்திருக்கிறார்"

பால்வளத் துறை, வனத்துறை என்று முக்கியமான பொறுப்புகளைக் கொடுத்து அமைச்சராக்கி இருக்கிறார் ஜெயலலிதா.

கிரீன்வேஸ் சாலையில் சற்று உள்ளடக்கமான பங்களா ஒதுக்கப்பட்டிருக்கிறது இவருக்கு. காலை ஏழு மணி முதலே, கட்சித் தொண்டர்கள், பொது மக்கள் என்று அமைச்சர் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரையும் தனித்தனியே சந்திக்காமல், பொதுவாகவே நின்று மனுக்களை வாங்கிக் கொள்கிறார். வேலை வாய்ப்பு, பால் கார்டு என்று பலதரப்பட்ட மனுக்கள்.

''ஏம்பா, நான் ராயபுரத்துக்கு மட்டும் அமைச்சரல்ல; தமிழ்நாடு முழுவதும் கவனிக்க வேண்டும்'' என்று ஒரு தொண்டரிடம் சிரித்தவாறு சொல்கிறார்.

அதற்குள் உதவியாளர் ஒருவர் அமைச்சரின் காதைக் கடிக்கிறார்.

அமைச்சரின் முகம் மாறுகிறது.

''இந்த போலீஸ் ஸ்டேஷன் விவகாரத்தில் எல்லாம் நான் தலையிட மாட்டேன். இனிமேல் இதுபோன்ற விஷயங்களை என்னிடம் சொல்லாதீர்கள்'' - என்று கடுகடுப்பாகப் பேசுகிறார்.

அமைச்சருக்குச் சொந்த ஊர் ராயபுரம்தான். மீனவக் குடும்பம். அப்பா துரைராஜ் (தி.மு.க.) கவுன்ஸிலராக இருந்தவர். அப்படி இருந்து கொண்டே, தியேட்டரில் டிக்கெட் கொடுக்கும் வேலையும் செய்து வந்தாராம். அமைச்சரின் குடும்பத்தினர் பலர் இன்னமும் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுக் கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

''நான் மிக எளிய குடும்பத்தில் பிறந்தவன்; அதனால் எனக்கு ஏழை மக்களின் பிரச்னைகள் நன்கு தெரியும் என்பதால்தான் என்னை, முதல்வர் அமைச்சராக்கி இருக்கிறார் போலிருக்கிறது'' என்று சொல்கிறார் ஜெயகுமார்.

அமைச்சர் குடும்பத்தில் ஜெ. கோஷம் ஓங்கி ஒலிக்கிறது! அம்மா பெயர் ஜெயலட்சுமி, மனைவி பெயர் ஜெயக்குமாரி. குழந்தைகள் மூன்று பேரின் பெயர்களும் ஜெ.வில்தான் ஆரம்பிக்கின்றன.

''என்னுடைய நெருங்கிய உறவினர்களில் ஒன்பது பேர் பெயர்கள் ஜெ. என்ற எழுத்தில்தான் ஆரம்பிக்கின்றன. இது திட்டமிட்ட விஷயமல்ல, இயல்பாக நேர்ந்தது'' என்று சொல்லிப்

பெருமைப்படுகிறார் அமைச்சர்.

''1972-ல் தலைவர் கட்சி ஆரம்பித்த போது நான் ஏழாம் வகுப்புதான் படித்துக் கொண்டிருந்தேன். சட்டக் கல்லூரியில் படிக்கும் போதுதான் தீவிரமான அரசியலுக்கு வந்தேன்'' என்று சொல்லும் ஜெயகுமார், ஜெ. வெளியூர் சுற்றுப் பயணம் செய்தால், நண்பர்களுடன் அவர் பின்னால் பாதுகாப்புக்காகச் செல்வாராம். கட்சியின் எல்லா போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார். ஜெ பிறந்த நாளின் போது ரத்ததானம், கண்தானம் முகாம் நடத்தியிருக்கிறார்.

''மக்களிடம் இறைச்சி உண்ணும் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும்; அதனால் உணவுப் பஞ்சம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று சமீபத்தில் நீங்கள் பேசியதாகக் கேள்விப்பட்டோமே!''

''அதை ஒரு யோசனையாகத்தான் சொன்னேன். நிர்ப்பந்தப்படுத்தும் நோக்கில் அல்ல. அசைவ உணவில் பல சத்துக்கள் இருக்கின்றன. உதாரணமாக மீன் அதிகமாகச் சாப்பிட்டால் கண்ணுக்கு நல்லது. எங்கள் குலத்தில் கண்ணாடி போட்டிருப்பவர்கள் மிகவும் குறைவு. இறைச்சியில் புரதச் சத்து அதிகம். இவற்றைச் சாப்பிடும் பழக்கம் அதிகமானால், தேவை அதிகரிக்கும். அதனால் கிராமப்புறங்களில் மக்கள் இவற்றை நிறைய வளர்ப்பார்கள். கிராமப் பொருளாதாரம் உயரும். இந்த அடிப்படையில்தான், இறைச்சி சாப்பிடுவதைப் பற்றிப் பேசினேன்.''

''உங்களுக்கு முடிவுகள் எடுக்கும் சுதந்திரத்தை முதல்வர் வழங்கியிருக்கிறாரா?''

''கொள்கை சம்பந்தப்பட்ட முடிவுகள் பிரச்னையான விஷயங்கள் தவிர, வேறு விவகாரங்களில் எங்களுக்கு முடிவெடுக்கும் உரிமையை முதல்வர் கொடுத்திருக்கிறார். அவர் எங்களுக்குச் சொன்ன ஆலோசனை, ''பொது மக்களின் நன்மையைக் கருதித்தான் முடிவெடுக்க வேண்டும்; கட்சி நலன், சொந்த ஆதாயம் இவற்றைப் பார்க்கக் கூடாது என்பதுதான்.''

அமைச்சர், மூன்று முக்கிய விஷயங்களில் இப்போது மிகவும் மும்முரமாகி இருக்கிறார். 1. சந்தனக் கட்டை திருட்டைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் காட்டிலாகா அதிகாரிகளுக்கு நவீன ஆயுதங்கள் வழங்குவது, 2. சோளிங்கநல்லூரில் மூன்றாவது பால் பண்ணையை விரைவில் செயல்பட வைப்பது, 3. ராயபுரத்தையும் வடசென்னையையும் இணைக்கும் பாலத்தை அகலப்படுத்திக் கட்டுவது.

''காட்டு வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் முதல்வர் மிகவும் உறுதியாக இருக்கிறார். 'அதற்காக குண்டர்கள் சட்டத்தையும் பயன்படுத்தலாம் என்பது அவரது அபிப்ராயம். அவருடைய வழிகாட்டுதலில் எடுத்த காரியம் அனைத்தையும் நன்கு முடிப்பேன்'' என்று நம்பிக்கையுடன், விடைகொடுத்தனுப்புகிறார் அமைச்சர் ஜெயகுமார்.

சந்திப்பு : ப்ரியன்
படம் : ஆர். கே. ஸ்டூடியோ



கேள்விக்குறியா

தந்தியை ஸ்கூலுக்கே அனுப்பியிருந் தார்கள். அனுப்பியவர் பெயர் தெரிய வில்லை. தியாகராஜனும் பார்க்கவில்லை.

நேராய் ஹெச். எம். ரூமுக்கு சென்றான். விஷயம் சொன்னான். ஹெச்.எம்.,

''அடாடா!'' என்றார். ''போங்க... போங்க! முதல்ல போய் அதப் பாருங்க. இருந்து எல்லாம் முடிஞ்சப்புறம் மொள்ள வாங்க. ஒண்ணும் அவசரமில்லை.....''

கிளாஸை அமுதா டீச்சரிடம் விட்டு விட்டு அவசரமாய் வீடுவர. வத்சலா கிரைண்டரில் மாவுக் கையுடன்...

''என்ன அதுக்குள்ள...? ஸ்ட்ரைக்கா?''

''உள்ளே வா சொல்றேன்...''

விஷயத்தின் விபரீதம் ஓரளவு புரிந்து கொண்டாள்.

''என்ன?''

''அப்பா....''

''அப்பா?''

''செத்துட்டாராம். தந்தி வந்துச்சு.''

''ஐயோ...'' என்று போட்டது போட்ட படி உட்கார்ந்துவிட்டாள்.

''நாலு நாள் முன்ன கூட லெட்டர் வந்துச்சே...!''

''சரி... பேசிப் பிரயோஜனமில்லை.... கிளம்பு...''

''பசங்க?''

''என்ன செய்யலாம்?''

''நீங்க முன்னாடி போங்க. சாயங்காலம் பசங்க வந்ததும் வீட்டைப்பூட்டி, சாவி யைப் பக்கத்தில குடுத்திட்டுக் காலைல பத்துக்குள்ள வந்துர்றோம். இப்ப ஸ்கூலுக்கு ஆள் விட்டு கலாட்டா வேணாம்... கிரிஜா காலையில கேட்டா... 'தாத்தாவப் பாக்க ணும்... போலாமா'ன்னு....''

உடைமாற்றாமல், ஒன்றும் செய் யாமல் வியர்வை முகத்துடன் அப்படியே போய் பஸ்ஸில் உட் கார்ந்தவுடன் காற்று குளிர்ச்சியாய் அலையடித்தது.

பஸ் புறப்பட்டு வேகம் பிடித் தது.


மனசின் ஓர் ஓரத்தில் மெல்ல அந்த வலி ஆரம்பித்தது. மெல்ல நெஞ்சுக் கூட்டுக்குள் பரவுவது போல் இருந்தது. கிராமத்துக்குப் போய் நாலு வரு ஷமோ என்னவோ, கணக்கு சரியாக நினைவில்லை. அம்மா செத்து தந்தி வந்த போது போனது. அதற்குப் பின் இப்போதுதான் போகிறான். கிராமம் என்றாலே துக்கத்துக்குத்தான் செல்வது என்று ஆகிவிட்ட மாதிரி ஒரு தவிப்பு. போன முறை வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்பா கத்தியது நினைவுக்கு வந்தது.

'இத மட்டும் நீ செய்யலேன்னா என் கட்டை ஒழுங்கா வேகாதுடா....''

அன்று எவ்வாறெல்லாம் அலட்சியப் படுத்தினோம் அப்பாவை என்று நினை வுக்கு வந்து வேதனைப்படுத்தியது.

அப்பா ஒரு எக்ஸ்-சர்வீஸ் மேன். 'காஷ்மீர், அஸ்ஸாம் என்று மலையிலும், காட்டிலும் கஷ்டப்பட்டோம், உருண்டோம் புரண்டோம்' என்று மிலிட்டரிக் கதை பேசி 'போர'டிக்காதவர். ராணுவத்திலிருந்து வந்ததுமே வேறு வேலை தேடாமல் 'நிலம் நீச்சு' என்று பார்த்துக் கொண்டு நிம்மதி யாய்க் கழிக்க நினைத்தார். அப்படியே செயல் படுத்தினார்.

பல ஆண்களுக்கும் உள்ள பலவீனம். இளமைக் காலத்தில் டாங்கி, துப்பாக்கி



ர் உறவு...

திருவையாறு பாலுசாமி

என்று அங்கே விட்டதை இங்கே பிடிக்க நினைத்து....

ராணுவத்தில் சேரும்முன் காதலர்களாய் இருந்தவர்களாம். வீட்டில் திருமண ஏற்பாடு நடக்க, காதலைப் பற்றி மூச்சு விட தைரியமில்லாமல் 'கட்றா தாலிய' பாணியில் கல்யாணம். சர்வீஸ் முடிந்து திரும்ப, 'இன்னும் காத்துக்கிட்டிருக்கேன்' என்று முப்பத்தெட்டு வயதுப் பெண்' உட்கார்ந்திருக்க... வேறு வழியில்லாமல் போயிற்றோ....?

இதெல்லாம் தியாகராஜனுக்குப் பத்தாவது படிக்கும் போதுதான் தெரியும். பள்ளி விட்டு வந்து கொண்டிருக்க....

''அங்க பார்றா உன் தங்கச்சி!'' என்றான் ஒருவன்.





''அரசே! பக்கத்து நாட்டு அரசன் நம் நாட்டின் மீது போர் தொடுக்க வரு கிறானாம். புதுமையான முறையில் ஓலை அனுப்பியிருக்கிறான்!''

''எப்படி?''

''பலம். பலமறிய ஆவல்!''

- கே.எல். கணேசன்

கையில் சிலேட்டுடன் முழங்கால் வரை பாவாடை... ரெட்டை ஜடை போட்டுக் கொண்டு 'விசுக் விசுக்'கென்று திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தது ஒரு சிறு பெண்.

''எனக்குத் தெரியாம ஏதுடா தங்கச்சி! எங்க வீட்டுக்கு நான் ஒரே பிள்ளை....'' என்று அப்பாவியாய்ச் சொல்ல,

''வீட்ல போய் உங்கப்பாவக் கேளு. விலாவாரியாச் சொல்வாரு'' என்றான் அவன்.

அப்பாவை அணுக தைரியமில்லை. அம்மாவைக் கேட்க, அவர் மூக்கைச் சிந்தி, கண்ணீர்ப் பெருக்கி ஒப்பாரி வைத்து 'அந்தக் கேடு கெட்ட மனுஷன்' என்று சொல்லவில்லை. அமைதியாய் விவரம் சொன்னாள். 'எல்லாம் உனக்குப் புரியட் டும்' என்று ரகசியமில்லாமல் பேசினாள்.

'ஊர்ல இல்லாதத ஒண்ணும் அவர் பண்ணிடலை. ஒவ்வொருத்தன் மாதிரி கொல்லைப்பக்கமா போயி வாசப் பக்கமா வர்லையே....''

தியாகராஜனுக்கு அதிர்ச்சி.

''அவ பாவம். கல்யாணத்துக்கு முன்னாடி உயிருக்குயிராப் பழகியிருக்கா. என்ன பண்ணுவா?'' என்று சர்வசாதாரண மாய்ச் சொன்னாள் அம்மா.

ஆனால் தியாகராஜனுக்கு அருவருப்பு தான் வந்தது. கடைசி வரை இவ்விஷயத்தை ஜீரணம் பண்ணவே முடியவில்லை. செய லைச் சாக்கடையாய்ச் செய்துவிட்டு அதற்கு நியாயம் கற்பிக்க அவன் அம்மாவே பேசுவது ஒரு மாதிரியாய் இருந்தது.

'அந்தப் பொண்ணு பெரிய மனுஷி யாயிட்டாளாம்' என்று அம்மா பட்டும், பழமும், பூவும் தூக்கிக் கொண்டு ஓட, தியாகராஜன் அன்று முழுவதும் ஊரில் இருப்பதையே தவிர்த்தான்.

அதன் பின் 'ஆசிரியப்பணி அறப்பணி' - என்று அதன் மேல் விருப்பப்பட்டுப் படித்து முடித்து, வேலை வாங்கி, 'இன்னா செய்தாரை ஒறுத்தல்...' என்று திருக் குறளும், சாக்பீசும் கையுமாய் அழகாய்க் குடும்பம் அமைத்தான். சொந்த ஊரின் வாசனையே வேண்டாமென்று தாமரை இலைத் தண்ணீராய் இருந்தான். அம்மா இறந்ததாக ஒரு நாள் செய்தி வந்தது. குடும்பத்துடன் போனான்.

சுத்தமாய்த் தளர்ந்திருந்த அப்பா அன்று தான் அந்தப் பிரச்னையைக் கிளப்பினார்.

அம்மாவுக்கு எரியூட்டிவிட்டு வந்து இரவு பத்துமணிக்குத் திண்ணையோரம் தூணில் சாய்ந்து உட்கார்ந்தான். அப்பாவை யாரோ இலேசாய்த் தாங்கி வந்து பக்கத்தில் உட்காரவைத்தார்கள். நேராய் விஷயத்திற்கு வந்தார். நடுங்கும் குரலில் சொன்னார்.

''மைதிலியோட அம்மா செத்து மூணு வருஷமாயிடுச்சு....''

''யாரு மைதிலி?''

வேதனையாய்ச் சிரித்தார்.

''உன் தங்கச்சி!''

புரிந்து விட்டது.

''சரி..... அதுக்கென்ன?''

''உங்கம்மாவையும் இன்னிக்குக் கொண்டு போய் வச்சிட்டோம். எனக்கும் வயசாய்டுச்சு... நாலு நாளோ, நாலு மாசமோ.....என் ஆயுசு....''

''..........''

''நான் சாகறதுக்குள்ளே அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வச்சிடுப்பா...... அதப் பாத்துட்டேன்னா நிம்மதியாப் போய்ச் சேர்ந்துடுவேன்....''

''எல்லாம் பின்னாடி பாத்துக்க லாம்....''

''அப்படின்னா?''

''தமிழ்லதானே சொன்னேன். பின் னாடி பாத்துக்கலாம்....''

- அழுத்திச் சொன்னான்.

''அப்படிச் சொல்லாதடா தியாகு.... எப்படியாவது நான் இருக்கறப்பவே....''

''எவன் இருக்கான் மாப்பிள்ளை?... வந்தான்னா, 'பொண்ணுயாரு அம்மா யாரு பரம்பரை பாரம்பரியம்' கேக்க மாட்டான்? நீங்க வந்து சொல்வீங்களா?''

''என் பொண்ணுடா.... அவ என் பொண்ணுடா... எவன்டா சொல்லணும்?''

கையைப் பிடித்தவரை உதறினான். தள்ளாடித் தள்ளாடி விழ இருந்தவரை வந்து தாங்கியது பச்சை தாவணி போட்டுக் கொண்டு ஒரு பெண். அப்பா மாதிரியே மூக்கு நீளமாய் இருந்தது.

''டேய்!'' அப்பா கத்தினார். வீடு எதி ரொலித்தது.

''இந்தக் கல்யாணம் மட்டும் நீ செய்ய லேன்னா என் கட்டை ஒழுங்கா வேகா துடா... சொல்லிட்டேன்....''

கண்ணீர் விட்டவரைத் தாங்கிப் பிடித் துக் கொண்டு 'உள்ள வாப்பா' என்று

அழைத்துக் கொண்டு போனது அந்தப் பெண்.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்பா மீண்டும் கத்தினார்.

''செத்தாலும் சும்மா விட மாட் டேன்டா.... உன்ன....''

அன்று புறப்பட்டு வந்தவன்தான். அதன்பின் எப்போதாவது கிராமத்தை நினைத்தால் மனசோரம் துளி ஈரம் கசியும்.

கடிதம் மாதத்துக்கொன்று வரும்.... 'புறப்பட்டு வா....' போக மாட்டான். போனால் என்ன நடக்குமென்று தெரி யாதா?

இடையில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு எப்போதாவது வத்சலா போய் வருவாள். வந்து 'அந்தப் பொண்ணு....' என்று ஏதாவது முனகுவாள். அதட்டி அடக்கி விடுவான்.

பஸ் ஏதோ பேர் தெரியாத ஊரில் புழுதி மண்ணில் இறங்கி நின்றது. தியாக ராஜன் இறங்கவில்லை. பசித்தாலும் மனசு மட்டும் என்னவோ போல் சுற்றிக் கொண்டே இருந்தது.

'அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைத்திருந்தால் நிம்மதியாய்ச் செத்திருப்பார். சாகும்போது என்ன நினைத்துக் கொண்டாரோ? 'பாவி' என்று சபித்திருப்பாரோ? 'மகாபாவி... இப்படி என்னைத் தவிக்க விட்டுச் சாகடிச்சியே.... கட்டை வேகாதுடா....'

தலையை உலுக்கிக் கொண்டான்.

'இப்போது என்ன ஆகும்? அந்தப் பெண் அனாதையா? 'அண்ணன் நீங்க இருக்கையிலே எப்படி அனாதையாகும்?' என்று எவனாவது சொல்லிக் கொண்டிருப் பான். யாருக்கு யார் அண்ணன்? என்ன உறவு முறை இது?'

'ச்சீ! என்ன நினைவு இது? அப்பா செத்துக்கிடக்கும்போது யாரைப்பற்றி நினைப்பது?' - என்னதான் முயன்றாலும் கடைசி கடைசியாய்க் கத்திய கத்தல்தான் ஞாபகம் வந்தது.

'இனியாவது அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். .... யார் மாப்பிள்ளை பார்ப்பது?... பார்க்க வேண்டும்.... எப்படியாவது... இதைச் செய்ய வேண்டும். பாவம்... யாரோ செய்த பாவத்துக்கு அந்தப் பெண் படாதபாடு படுகிறது...'

உறுதியாய் நினைத்துக் கொண்டான்.

பஸ் விடியற்காலை ஊரை அடைந்தபோது கிராமத்தில் எந்த மாற்றமு மில்லை.

வீட்டுக்கு முன் பந்தலில்லை. நாலு பேர் இல்லை. துக்க வீடாகத் தெரிய வில்லை... மரணம் நேற்றா இல்லை முன்பேவா? தந்தி லேட்டோ?

கதவு சாத்தியிருந்தது. தட்ட, வந்து திறந்தது அந்தப் பெண். ''அப்பா! அண்ணன்....'' என்று உள்ளே ஓடியது.

தியாகராஜனுக்கு உடம்பு ஜில்லிட்டது.

'அப்பா சாகவில்லையா? உயிருடன் இருக்கிறாரா? எனில் யார் வேலை இது? பொய் தந்தியா....?'

''வாடா தியாகு!'' என்று நான்கைந்து வருடத்திற்கு முந்தைய மூப்பு மாறாமல் அதே தளர்ச்சியுடன் அப்பா படுத்திருந்தார்.

ஒருபுறம் சந்தோஷம் புரண்டது. 'அப்பா சாகவில்லை'.

''யார் வேலை இது?'' தந்தியைக் காட்டினான்.

''பொறுமையா இரு! நான்தான் குடுத் தேன்....''

துக்கமும், சோகமும் பறந்தோட, கோபம் மேலோங்கியது.

''என்ன வேலை இது? மடத்தனமா...!''

''மடத்தனந்தான்... நாலு வருஷமா மாசம் தவறாம லெட்டர் போட்டேன்... வருவ வருவன்னு பார்த்தேன். வரல்லை. எனக்கு வேற வழி தெரியலைடா....''

இவன் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க, அந்தப்பெண்ணைக் காட்டி னார்.


''பார்றா! இந்தப் பொண்ணு என்ன பாவம் பண்ணிச்சு? இனியும் அது இப்படியே இருக்கணுமா? சொல்லு.... இப்பவாவது செய்.... அதுக்குத்தான் தந்தி குடுத்தேன்... செய்றியா?''

அந்தப் பெண் நிலைப்படியோரம் ஒண்டிக் கொண்டது.

தியாகராஜன் திரும்பி வாசல்படிக்கு நடந்தான். வாசல் கதவு மேல் கை வைத்துக் கொண்டான். சாலையை வெறித்துப் பார்த் துக் கொண்டு சொன்னான்.

''எல்லாம் பின்னாடி பாத்துக்க லாம்...''





வரலக்ஷ்மி வருவாள்

கைலாசத்தில், பரமசிவனிடம் அன்னை பார்வதி கேட்டாள் : ''நாதா! பூலோகத்தில் மக்கள் வறுமையில் வாடுகிறார்களே... அவர்களுடைய நலனுக்காக, தன, தான்ய, ஐஸ்வர்யங்களைத் தரக்கூடிய விரதமாக எதைச் செய்யலாம்...?''

பரமசிவன் கூறினார் : ''தேவி! அத்தகைய விரதம் வரலக்ஷ்மி நோன்புதான். இந்த நோன்பு செய்த ஒரு பெண்ணின் கதையைக் கேள் :- 'குண்டினம்' என்ற பட்டினத்தில் சாருமதி என்ற பெண்மணி இருந்தாள். சாஸ்திரங்கள் படித்தவள்; இனிமையாகப் பேசும் இயல்பினள்; நிர்மலமான ம்னத்தை உடையவள். ஒரு நாள் இவள் கனவில் மஹாலக்ஷ்மி தோன்றி,


'உன்னை நானே நாடி வந்தேன். சிராவண மாசம், பௌர்ணமிக்கு முன் வெள்ளிக் கிழமை என்னை நினைத்துப் பூஜை செய்தால் கேட்ட வரம் அனைத்தும் தருவேன்' என்றாள்.


சாருமதி சிலிர்த்துப் போய்க் கண் விழித்தாள். தூங்கிக் கொண்டிருந்த உற்றார் உறவினரையெல்லாம் எழுப்பித் தன் கனவை விவரித்தாள். அவளைப் போலவே அனைவரும் மகிழ்ந்து நோன்பு தினத்தை எதிர்நோக்கலாயினர்.

நோன்பு தினமும் வந்தது. அரிசியைப் பரப்பி அதன் மேல் பூரண கும்பம் வைத்து, வரலக்ஷ்மி அம்மனின் பிம்பத்தை அதில் பொருத்தி, சாருமதி பூஜை செய்தாள். நெய்யில் செய்த பலகாரங்களை நைவேத்தியம் செய்தாள். அவள் மிகவும் சிரத்தையாகச் செய்த இவ் விரதத்தின் பயனாக எல்லா நலங்களும் அவளுக்கு உண்டாயின. அவள் பரம்பரையில் எல்லோருமே இந்த நோன்பைச் செய்யலாயினர்.

''வரலக்ஷ்மி நோன்பின் வரலாற்றை இவ்வாறு பரமசிவனே பார்வதிக்கு எடுத்

✱ உஷா :
ஆசைப்பட்டு...





✱ விஜயலக்ஷ்மி :
தெலுங்கு தேசு



✱ சங்கரி : சுவரில் வரைந்து...

துச் சொன்னதாகக் கதை'' - என்று விவரித்தவர் விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம். ''தெலுங்கு தேசத்திலும் இந் நோன்பு மிகவும் விசேஷம்'' என்றார்.

வரலக்ஷ்மி நோன்பின் தனிச் சிறப்பு அது முற்றிலும் பெண்களாலேயே செய்யப் படும் பூஜை என்பதுதான். ஏனைய பூஜைகளில் ஆண்கள் செய்வது போல் இதில் பெண்களே மணையில் அமர்ந்து மஞ்சள் பொடியில் பிள்ளையார் பிடிப்பதில் ஆரம்பித்து நைவேத்தியம், தூப தீப ஆராதனை வரை அனைத்தையும் மந்திரம் ஓதிக் கொண்டு செய்ய வேண்டும்.

எல்லாப் பண்டிகைகளையும் போல் வரலக்ஷ்மி நோன்பும் பக்தியோடு கலைநயமும் அழகுணர்ச்சியும் வெளிப்படச் செய்கின்றது. சுமார் ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே நோன்புக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகி விடும். கலசத்தில் (பூர்ண கும்பம்) நிறைக்கவும் வாழை இலையில் பரப்பவும் அரிசியைக் கல்லின்றிச் சுத்தமாக்குவது முதல் கொழுக்கட்டைக்கு மாவும் விதவிதமான பூரணங்களும் தயாரிப்பது வரை சிறிதும் பெரிதுமான பல வேலைகள். இவை தவிர, வீட்டை விசேஷமாகச் சுத்தம் செய்து, தோரணங்களால் அலங்கரித்து, செம்மண் கரை கட்டிய மாக்கோலமிட்டு, அம்மனைப் பிரதிஷ்டை செய்யப் போகும் இடத்தில் வாழைக் கன்றும், மலர்ச் சரமும் கட்டி, மண்டபம் போன்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அம்மன் பிம்பத்துக்குப் பாவாடை சார்த்தி, பொன்னாபரணம் அணிவித்துப் பூக்களால் அழகாக, விதம் விதமாக அலங்காரங்கள் செய்யலாம்.

பார்த்துப் பார்த்து அலங்கரித்த அம்மனை முதலில் வீட்டு வாசலில், கோலமிட்ட இடத்தில் வைத்து, தீபமேற்றி, கற்பூர ஆரத்தி காட்டி வணங்கி விட்டு, வீட்டுப் பெண்கள் எல்லோருமாகத் தூக்கி, 'லக்ஷ்மி ராவே மா இன்டிக்கி' (லக்ஷ்மி! எனது இல்லத்துக்கு வந்தருள்வாய்) என்று பாடியபடி வீட்டின் உள்ளே அழைப்பார்கள். (அட்டைப் படம்).

அம்மனை அழைத்து வந்து, தயாராய் அலங்கரித்துள்ள மண்டபத்தினுள் அரிசியின் மேல் வைத்துப் பூஜை செய்வார்கள். அம்பாளைப் பாதாதி கேசமாக வர்ணித்து, ஒவ்வொரு அங்கத்துக்கும் ஒரு மலரை அர்ச்சிப்பார்கள். புது வஸ்திரம் சார்த்தி, பொன்னாபரணம் அணிவிப்பார்கள். ஆராதனைகளும் நைவேத்தியமும் முடிந்த பின் மையத்தில் மலர் தொடுக்கப்பட்ட மஞ்சள் கயிறுக்குத் தனியே பூஜை செய்து, அக் கயிறை வயதில் மூத்தவர்கள், சிறியவர்களுக்கு வலது கையில் கட்டி விடுவார்கள். நோன்புச் சரடு கட்டப்படும் போது கையில் வெற்றிலை, பாக்கு, தேங்காய் ஏந்திய தட்டுடன் அமர்ந்திருக்க வேண்டும்.

நோன்பு இத்துடன் முடியும். வழக்கமாக இது காலை வேளையில்தான்



✱ மாலதி - சித்ரா : காஸெட் போட்டு...

நடைபெறும். மாலையில், அக்கம்பக்கத்துப் பெண்களையும் உறவினர்களையும் அழைத்து, பாடச் சொல்லி மகிழ்ந்து தாம்பூலம் கொடுத்து அனுப்ப வேண்டும்.

சில குடும்பங்களில் வழி வழியாகவே நோன்பு செய்யும் வழக்கம் இல்லை. புகுந்த வீட்டில் வழக்கம் இல்லாவிட்டாலும் தம் பிறந்த வீட்டில் இதைச் செய்து அனுபவப்பட்டுப் போன உஷா கிருஷ்ணமூர்த்தி திருமணத்துக்குப்பின் தொடர்ந்து வரலக்ஷ்மி விரதம் செய்ய விரும்பினார். பெரியோரின் ஆசிகளும் சம்மதமும் பெற்று நோன்பை எடுத்துக் கொண்டு செய்து வருகிறார்.

வரமெல்லாம் தருவாள்

புகுந்த வீட்டில் நோன்பு செய்யும் வழக்கம் இருந்தால் மணமான பெண்கள் அந்த நோன்பை 'எடுத்துக்' கொள்ள வேண்டும். இதைத் தலை நோன்பு என்று குறிப்பிடுவார்கள். எடுத்துக் கொண்ட நோன்பைத் தவறாமல் ஆண்டுதோறும் செய்து வர வேண்டும். அநேகம் பெண்கள் வேலைக்குப் போகிற இந்த அவசர யுகத்தில் முன்பு போல் விஸ்தாரமாக வரலக்ஷ்மி விரதத்தைச் செய்ய முடிகிறதா...?

''அலுவலகத்துக்கு 'லீவ்' போடா விட்டாலும், இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே தேவையான பொருட்களைச் சேகரித்து, நைவேத்யத்துக்கான மாவு போன்றவற்றைத் தயாரித்து ஃப்ரிஜ்ஜில் வைத்து எப்படியோ சமாளித்து விடுகிறோம்'' என்று நாம் சந்தித்த பல பெண்கள் கூறினார்கள்.

''என் பிறந்த வீட்டில், கலசத்தில் அம்மன் முகம் வைப்பதோடு சுவரில் பெரிதாக அம்மன் முகத்தை எழுதி, பூஜை செய்வது வழக்கம்'' என்று கூறிய திருமதி சங்கரி இன்னொரு அரிய தகவலும் கொடுத்தார் :

''இப்போதெல்லாம் வெள்ளியில் செய்த அம்மன் முகத்தைப் பயன்படுத்துகிறோம். பண்டைய காலத்தில், தேங்காயில் மஞ்சளால் மூக்கு வைத்து, மையால் கண் வரைந்து, தேங்காயின் இருபுறமும் கருகமணியுடன் கூடிய காதோலையைக் கட்டி அலங்கரித்துதான் அம்மனாக வழிபடுவார்களாம்.''

இன்றைய நாகரிகத்துக்கு ஏற்ப அம்மன் வடிவம் சிறிது மாற்றம் அடைந்துள்ளதோடு, பூஜை செய்யும் முறையிலும் தவிர்க்க முடியாத மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. நோன்பு செய்யப்படும் வெள்ளிக்கிழமையன்று காலை 10.30 - 12.00 ராகு காலம் ஆதலால் எல்லோருமே 10.30-க்கு முன் நோன்பை முடித்து விட முயற்சி செய்வார்கள். இதன் காரணமாக நோன்பு மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்துச் செய்விக்க வேண்டிய வைதிகர்களுக்கு ஏக 'டிமாண்ட்'. விளைவு : அனேகர் வீட்டில் காஸட்டில் பதிவு செய்த மந்திரங்களின் உதவியுடன் நோன்பு நடந்தேறுகிறது!

இருபது வருடங்களாக வரலக்ஷ்மி நோன்பு செய்து வரும் திருமதி மாலதிக்கு இந்த காஸெட்டை அறிமுகப்படுத்தியது, சிங்கப்பூரிலிருந்து அதை வாங்கி வந்த சினேகிதி! மாலதியும் அவரது ஓர்ப்படி சித்ராவும் முதன் முதலில், வைதிகர் நேரத்துக்கு வராத காரணத்தால், தயங்கியபடி தான் காஸெட்டை உபயோகித்தார்கள். ''ஆனால் அதுவே பழகிப் போய் விட்டது. இம் முறையில் இன்னும் நிறுத்தி, நிதானமாகப் பூஜை செய்ய முடிகிறது'' என்கிறார் மாலதி.

காஸெட், ஃப்ரிஜ், மிக்ஸி போன்ற நவீன வசதிகளின் துணையுடன் ஒரு பழைமையான, அழகிய பாரம்பரியம் காப்பாற்றப்பட்டு வருகிறது. எவ்வளவுதான் பொன்னும் பட்டும் கொண்டு அலங்கரித்தாலும் புதுப் பருத்தியைத் திரித்து, நடு நடுவே மஞ்சள் குங்குமம் தடவிச் செய்யப்படும் பருத்தி மாலையும், அதே பருத்தியை வட்டமாக வடிவமைத்து அதன் மையத்தில் குங்குமம் இட்டுச் செய்யும் தாடங்கமும் (காதுத் தோடு) இன்றி வரலக்ஷ்மி விரதம் பூர்த்தி ஆகாது. கேட்கும் வரங்களையெல்லாம் தரும் லக்ஷ்மி, எளிய அலங்காரங்களில் திருப்தி அடைந்து விடுவாள் என்பதை உணர்த்தத்தான் இந்தப் பருத்தி மாலையும் தோடும் அணிவிக்கும் பழக்கம் உருவாகியிருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் குடும்பத்தின் ஆரோக்கியத்தையும் வளத்தையும் வேண்டிச் செய்யப்படும் இந் நோன்பினை இவ்வாண்டு ஒரு விசேஷ வேண்டுதலுடன் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். சுபிட்சமும் சௌக்கியமும் நம் இல்லத்தில் மட்டுமின்றி நம் இந்திய தேசமாகிய மிகப் பெரிய குடும்பத்தையும் வந்தடைய வேண்டும் என்ற வேண்டுதல்தான் அது.

- பானுமதி ராமச்சந்திரன்.

அட்டையில் : சுசீலா சுப்ரமண்யம், உமா முரளிகிருஷ்ணா, ஸ்வேதா மோஹன்

வண்ணப்படம், படங்கள் : உத்ரா

கல்கி பொன் விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அம்மாவுக்கு எம். ஓ.

ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த தியாகுவுக்கு, அம்மா பணம் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. மேஜையின் முன் அமர்ந்து மணியார்டர் ஃபாரம் ஒன்றை எடுத்து எழுத ஆரம்பித்தபோது, சமையல் கட்டிலிருந்து அவன் மனைவி சுசிலா வந்தாள்.

''என்னங்க, டிபன் ரெடி. சாப்பிட வரவில்லையா?'' என்றவளின் பார்வையில் மணியார்டர் ஃபாரம் பட்டுவிட்டது. ''என்ன இது?'' அருகில் வந்து பார்த்ததும் அவள் முகம் சுருங்கியது.

''நல்லாயிருக்கே. உங்க அம்மாவுக்கு மறுபடியும் இருநூறு ரூபாயா? போன மாசம்தானே சுளையாய் இருநூறு ரூபாய் அனுப்புனீங்க?''

தியாகு சங்கடத்துடன் நிமிர்ந்தான். ''என்ன சொல்கிறாய் சுசிலா. நான் பணம் அனுப்பாவிட்டால் அம்மா சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாள்?''

''தாம்பரத்திலே இருக்காரே உங்க தம்பி, அவர் அனுப்பட்டுமே?''

''அவன் என்ன, என்னைப் போல் கவர்மெண்ட் எம்ப்ளாயியா? பாவம், ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியில் கணக்கு எழுதிக் காலத்தை ஓட்டுகிறான்.''

''நீங்கள் மட்டும் கலெக்டர் உத்யோகம் பார்ப்பதாய் நினைப்போ? பி.டபிள்யூ.டியில் கிளார்க் வேலை. மாசக் கடைசியிலே உன்னைப் பிடி என்னைப் பிடி என்று இருக்கிறோம். இந்த லட்சணத்தில் உங்கம்மாவுக்கு எம். ஓ. பண்ணுவது ஒன்றுதான் குறைச்சல். முதலில் அதைக் கிழித்துப் போடுங்க!''

மனைவியின் கட்டளைக்கு மறுபேச்சில்லாமல் பணிந்தான் தியாகு.

டிபன் முடிந்ததும், முன்



பசு தனபாலன்



"இது 'லோ' பட்ஜெட் படமா...?"
"ஆமா... எப்படிக் கண்டுபிடிச் சீங்க...?"
"கிளிசரினுக்குப் பதிலா வெங்கா யத்தை உரிக்கச் சொல்றாங்களே!"
- மயிலாடுதுறை ஸ்வாமி.

னறையில் உட்கார்ந்து சிக ரெட் பற்ற வைத்தான் தியாகு. சுசீலா சாப்பாட்டுப் பொட்டலத்தைக் கொண்டு வந்து வைத்தாள்.

''மத்தியானம் சாப்பாட் டுக்குத் தயிர்சாதமும், ஊறு காயும் வைத்திருக்கிறேன்.''

''சரி.''

''முதல்லே இந்த சிக ரெட் பிடிக்கிற பழக்கத்தை நிறுத்தித் தொலையுங்க. நாற்றம் சகிக்கலை. உடம் புக்குக் கேடு. காசும் கரி யாகப் போகிறது.''

''சாப்பிட்டதும் சிகரெட் பற்ற வைக்கவில்லை யென்றால் எனக்கு மண் டையே வெடித்து விடும். நீ சும்மா வளவளத்துக் கொண்டே இருக்காதே.''

தியாகு ஆபீஸ் புறப் பட்டு விட்டான்.

லஞ்ச் அவரில் தியாகு தயிர்சாதத்தைப் பிரித்துக் கொண்டிருந்தபோது அவன் ஆபீஸ் சகாக்கள் மகேஷூம் துரையும் வந்தார்கள்.

''தியாகு, வருகிற சண்டே மகாபலிபுரம் பிக் னிக் போகலாமென்று ஐடியா. நீ என்ன சொல் கிறாய்?''

பிக்னிக் என்றால் இவர் கள் பிரியாணி, விஸ்கி என்று அமர்க்களப்படுத்தி விடு வார்கள். ரொம்ப உற்சாக மாய்ப் பொழுது போகும். செலவுதான் ஒரு நூறைத் தாண்டும்.

போனதடவை பிக்னிக் போய் வந்ததற்காக சுசீலா கோபித்துக் கொண்டு ஒரு நாள் பூராவும் பேசாமல் இருந்தது நினைவுக்கு வந் தது. ஆனால் வருஷம் ஒருமுறையேனும் இந்த மாதிரி கேளிக்கைகளில் ஈடுபடாவிட்டால் வாழ்க் கையே இயந்திர கதியாகி விடாதோ?

''என்னப்பா யோசிக்கி றாய்?'' மகேஷ் விலாவில் இடித்தான்.

தியாகு ''ஜமாய்த்து விடு வோம்'' என்றான் புன்ன கைத்தபடி.

மாலையில் தியாகு வீட்டுக்குத் திரும்பியபோது சுசீலா, கோவிலுக்குக் கிளம் பத் தயாராகிக் கொண்டி ருந்தாள்.

''சீக்கிரம் குளித்து விட்டு வாங்க. வடபழனி கோவி லுக்குப் போய்விட்டு வரு வோம்.''

தியாகு பேண்ட் சர்ட்டி லிருந்து லுங்கிக்கு மாறிய படி அலுப்புடன் சொன் னான். ''கோவிலில் நச நச வென்று ஒரே கூட்டமாக இருக்கும். நீயே போய் விட்டு வா.''

''என்னுடன் கோவி லுக்கு வருவதென்றாலே உங்களுக்கு வேப்பங்கா யாச்சே,'' என்ற சுசீலா காப்பி தம்ளரைக் கொண்டு வந்து 'ணங்'கென்று வைத்து விட்டுக் கிளம்பினாள்.

தியாகு நாற்காலியில் அமர்ந்து காப்பியைப் பருக ஆரம்பித்தான். இடையில், அவன் பார்வை அறை மூலையில் பெருக்கித் தள் ளப்பட்டிருந்த காகிதத்துண் டுகள் மீது படிந்தது. என்ன அது?

எழுந்து அருகே சென்று எடுத்துப் பார்த்தான். காலை யில் அவன் கிழித்துப் போட்ட மணியார்டர் ஃபாரம் தான் அது.

காலையிலிருந்து நடந்த நிகழ்ச்சிகள் அவன் மனத் திரையில் ஓடின.

'மனைவியின் விருப்பத் திற்கு மாறாக சிகரெட் பிடிக்கிறேன். அவள் எதிர்ப் புக்கு பயப்படாமல் பிக்னிக் போகத் தயாராகிறேன். மனைவி கோவிலுக்கு அழைத்தால் போக மறுக்கி றேன். இப்படி மனைவியின் நியாயமான வற்புறுத்தல் களைக்கூட எதேச்சாதிகார மாகக் கருதி மறுத்துவிடும் நான், பெற்ற தாய்க்குப் பணம் அனுப்பக்கூடாது என்று அவள் குறுகிய மனத் துடன் கூறியதற்கு மட்டும் உடனே பணிந்து விட் டேனே? இது சுயநலமில் லையா?'

தியாகுவின் மனத்தைக் குற்ற உணர்வு உறுத்த, மேஜை டிராயரிலிருந்து இன் னொரு மணியார்டர் ஃபாரத் தைத் தேடி எடுத்தான். நாளை காலை அம்மா வுக்குப் பணம் அனுப்பி விடுவது என்ற தீர்க்கமான முடிவுடன், எம். ஓ. ஃபாரத் தைப் பூர்த்தி செய்ய ஆரம் பித்தான்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக
வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு
அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.



மங்களா சாதனம்

டீ. வி. யில் அனேகமாக மாலை நேரத்தில் ஏதாவது ஒரு ஒப்பாரி அல்லது அழுகைக் காட்சி எந்த ரூபத்திலாவது இடம் பெற்று விடுவதை மாற்ற, இஞ்சினீயர் மங்களா என்பவர் ஒரு சாதனம் கண்டு பிடித்திருக்கிறார்.

இதற்கு 'மங்களா சாதனம்' என்று பெயர். ஒரு பாட்டரி ஸெல்லின் அமைப்பில் இது இருக்கும்.

இதை டீ. வி. யுடன் செருகுவதற்கு வசதி உண்டு.

மாலையில் இந்த ஸெல்லை வீட்டிலுள்ள டீ.வி. பெட்டியோடு இணைத்துவிட்டால், எந்த இழவுப் பாட்டோ, அழுகையோ டீ. வி. யில் வந்தாலும் இந்த அமைப்பு தானியங்கு முறையில் அதை உடனே நிறுத்திவிட்டு, ஸெல்லில் பதிவாகியுள்ள இனிய நாதசுர இசையை ஒலிபரப்பும். (முக்கியமாகச் சுபகாரியங்கள் பற்றிப் பேசும் போது பலரும் டீ. வி. யை அணைத்துவிட்டுத் தான் பேசுவார்கள். மங்களாவின் சாதனம் பொருத்தி விட்டால் பயமின்றிப் பேசலாம்.)

நாலாவது மாடி நரசிம்மன்

ஸி.கே. அபார்ட்மெண்ட்ஸ் என்ற ஒன்பது அடுக்கு மாடிக் கட்டடத்தில் ஏழாவது அடுக்கில் குடியிருக்கும் கிருஷ்ணராவ் தமக்கு வேண்டிய நீரைத் (குழாயில் வராததால்) தரையில் ஒரு டிரம் வைத்து நிரப்பி, மேலேயிருந்து வாளி மூலம் இழுத்துக் கொள்ளும் போது — இடையே நாலாவது பிளாட்டிலுள்ள நரசிம்மன் ஒவ்வொரு தரமும் நாலு தம்ளர் தண்ணீரை ஒரு சொட்டுத் தண்ணீர் கீழே சிந்தாமலும் மேலே இழுப்பவர் அறியாமலும் அபேஸ் பண்ணி ஒரு வாரத்தில் தன் வீட்டில் ஒரு டிரம் தண்ணீர் ஓசியில் சேர்த்துவிட்டார்.



கற்பனை:
விஜய நிகில்

லாட்டரி லட்சுமணன்

பதினாறு வருஷ காலமாகத் தாம் வாங்கி வந்த (பரிசு பெறாத) அத்தனை லாட்டரிச் சீட்டுக்களையும் ஒன்றைக் கூடக் கிழித்துப் போடாமல் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறார் பரமபத்ரி என்பவர்.

அவற்றைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதற்காக, மாதம் ஆயிரம் ரூபாய் வாடகைக்கு விருகம்பாக்கத்தில் ஒரு கோடவுன் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர் தமது இரு மனைவிகள், பெற்றோர், ஆறு குழந்தைகள், மூன்று கோழி, இரண்டு ஆடு இவற்றுடன் கோடம்பாக்கத்தில் நூற்றைம்பது ரூபாய் வாடகையில் ஒரு சின்னக் குடிசையில்தான் வசிக்கிறார். பழைய சீட்டுகளின் பயன் என்ன என்று கேட்ட போது அவர் சொன்ன பதில். ''பிற்காலத்தில் எந்த ஒரு நேர்மையான அரசாங்கமாவது ஆட்சிக்கு வருமானால், இதுவரை பரிசு விழாத லாட்டரிச் சீட்டுகளுக்கெல்லாம்பணம்திருப்பித்தந்துவிடுவோம்' என்றுசொல்லக் கூடும். அப்போது இத்தனையும் எனக்குப் பணம் தானே?''



நேற்றுவரை நந்தவனம்

1

மீராவுக்குச் சிரிப்பு வருகிறது. இருந்தாலும் சிரமப்பட்டு அடக்கிக் கொள்கிறாள்.

அது என்னவோ தெரியவில்லை. கல்யாணமான இந்த ஒரு வாரத்துக்குள் — பல விஷயங்கள் அவளுள் சிரிப்பைப் பொங்கச் செய்வதாய்...

சென்னையில் — மாம்பலத்தில் ஏதோ ஒரு நடுத்தர வர்க்கத்துக் கல்யாண மண்டபத்தில் — கீர்த்தியின் கைத்தலம் பற்றினாள். சரியாய் ஏழே நாட்கள்... கொஞ்சமும் பரிச்சயமில்லாத மனிதர்களை நம்பிப் புறப்பட்டு வந்தாயிற்று.

இத்தனைக்கும் கீர்த்திக்கு உத்தியோகம் என்னவோ சென்னையில்தான்.

ஆனாலும் கீர்த்தியின் தாய் கண்டிப்பான தோரணையில் சொல்லி விட்டாள்.

"தஞ்சாவூர்லே எங்க சொந்த வீட்டுல வச்சுதான் சாந்தி முகூர்த்தம் செய்யணும், அதெல்லாம் மேளத்தோட மேளம்; பூவோடப் பூவு. கொட்டோடக் கொட்டுன்னு கல்யாணச் சத்திரத்துலேயே முடிச்சுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லே.."

"முதல்லே கோவில் பிரார்த்தனை எல்லாத்தையும் நல்லபடியா முடிக்க வேண்டாமா? அதெல்லாம் முடிய்ட்டும். அப்புறம் ஒரு நல்ல நாள் பார்த்து..."

கீர்த்தியின் தாய் மாமனான நாகு, பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு, ஒரு நாற்காலி பார்த்து, வசதியாய் அமர, கீர்த்தி, அந்தக் கணமே 'பட்'டென வெடித்தான்:

"மாமா... என்னோட ஃபர்ஸ்ட் நைட்டுக்கு நீங்க முகூர்த்தம் தேடினா என்னோட இந்த ஜென்மத்துக்குள்ளே கிடைக்காது. ஆயுசு முழுக்க நான் பிரும்மச்சாரியாவே இருக்க வேண்டியதுதான்..."

இவனது வார்த்தைகள் எந்த விதத்தில் நாகு மாமாவைத் தாக்கியது என்று மீராவுக்கு அப்பொழுது புரியவில்லை.

அவர், பஞ்சாங்கத்தை விசிறி எறிந்து விட்டுக் கல்யாணச் சத்திரத்தின் வாசலுக்குப் போய், வாழை மரத்தோடு மரமாய் நின்று விட்டார்.

"எப்பவுமே உனக்கு வாய் பொல்லாததுடா கீர்த்தி..."

கீர்த்தியின் தாய், மகனிடம் கடுப்படித்து விட்டுத் தம்பியைச் சமாதானப்படுத்த, வாசலைப் பார்க்க ஓடினாள்.

மாமாவின் கோபமும், கீர்த்தியின் சீண்டலும் எதற்காக என்று புரியா விட்டாலும் மீராவுக்குள் சிரிப்பை விசிறி விடுகிறது.

நல்லவேளை...

மீராவின் தாய் பக்கத்தில் இருந்தாள். மகளின் புறங்கையில் 'நறுக்'கெனக் கிள்ளினாள்.

"உஷ்... 'பகபக'ன்னு சிரிக்காதே."

மீராவுக்கு எல்லாமே புதுசாக இருந்தது.

கீர்த்தியின் தாய் — முகூர்த்தம் முடிவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன் வரையில் ஒன்றுமில்லாத அற்ப விஷயங்களுக்கெல்லாம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, இடுப்பில் செருகியிருந்த கைக் குட்டையை அடிக்கடி எடுத்துக் கண்ணையும் மூக்கையும் ஒரு சேரத் துடைத்துக் கொண்டிருந்தவள் —

மீராவின் கழுத்தில், மகன் தாலியைக் கட்டியதும் பூசணிப் பூ கணக்காய் மலர்ந்து போனாள்.

ஜானவாசத்தின் போது சாப்பிடக் கூட வராமல் மாப்பிள்ளை வீட்டார் இறங்கியிருந்த பகுதியில் ஏக அமர்க்களம்...

பத்தாவது தடவையாய்ச் சாப்பிட அழைக்கப் போன மீராவின் தம்பி, உதட்டைப் பிதுக்கியபடி வெளியே வந்தான்...

"என்னடா தகராறு?"

"மாப்பிள்ளையோட மாமாவாம்... அவரோட பொண்ணைத்தான் முதல்லே பையனுக்குப் பேசி வச்சிருந்தாங்களாம்... ஆனா, பையனுக்குப் பிடிக்கலே போல இருக்கு.. வேண்டாம்னா விட வேண்டியதுதானே. மாமா வந்திருக்கார். பெட்டி படுக்கையைக் கூட இன்னும் கீழே வைக்கலை. 'தை தை'யின்னு குதிச்சுண்டிருக்கார். இந்தக் கல்யாணம் எப்படி நடக்கிறது பாருன்னு அரசியல்வாதி கணக்காச் சவால் விட்டுண்டிருக்கார்.."

மீராவின் தாய் அந்த க்ஷணமே, ஒரு வெள்ளைத் துணியை மஞ்சளில் நனைத்து, அதில் ஒரு ரூபாய்க் காசை முடிந்து வைத்தாள்.

"பகவானே. கல்யாணம் நல்லபடியா முடியட்டும். மீரா அப்பாவை திருப்பதி

அனுராதா ரமணன்



மலைக்கு நடந்து வரச் சொல்றேன்..''

மீராவின் அப்பா, மனைவியைக் கேலி செய்தார்.

''உன்னால முடியாத பிரார்த்தனை எல்லாத்தையும் என் பக்கம் தள்ளி விட்டுடு...''

''பேசாம இருங்கோ. அந்த மனுஷன் — அதான் மாப்பிள்ளையோட மாமா — எதையாவது சொல்லி, நல்ல காரியத்தை நிறுத்திடக் கூடாதேன்னு என் மனசு கிடந்து தவிக்கிறது...''

''இதெல்லாம் சகஜம்டீ. ஒருத்தன் பெண் டாட்டியை இன்னொருத்தன் கட்ட முடியுமா.. உன் பொண்ணுக்கு இப்படி மஞ்ச மசேல்னு ஆறடி உசரத்துக்கு சந்தனக் காப்புச் சாத்தின வெங்கடேசப் பெருமாள் மாதிரி புருஷன் கிடைக்கணும்னு எழுதி யிருக்கு. நடுவுல மாமாவும், அத்தானும் அடிச்சிட்டு அழறதுனால என்ன லாபம்?"

மீராவுக்கு அப்பாவை நினைத்தால் மட்டும், தொண்டைக்குள் முள் உறுத்த லாய்த் துக்கம் இம்சிக்கும்.

'அப்பா, பாவம்... எங்கேயெல்லாம் கடன் வாங்கியிருக்காரோ...'

'வரதட்சணை இல்லையின்னுதான் பேரு... ஆனா சின்னதும் பெரிசுமா எத்தனை செலவு...'

'அவர்கிட்டே கேட்கணும்... நான் வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சு, அப்பாவுக்குக் கொடுக்கலாமான்னு...'

கல்யாணமானதிலிருந்து நேற்றிரவு வரையில் மீராவுக்கு, கீர்த்தியுடன் தனியா கப் பேச வாய்ப்பே கிடைக்கவில்லை.

எங்கே... கல்யாணச் சத்திரத்தை விடவும், தஞ்சாவூர் வீட்டில் நெருக்கடி அதிகம்.

கீர்த்தியின் அப்பாவுக்குச் சொந்த ஊரை விட்டு விலகி வர விருப்பமில்லை.. அம்மாவுக்கு, பிள்ளையுடன் வந்து இருக்க ஆசைதான்.

ஆனால், குடும்ப பாரம் இன்னும் விட வில்லை. பெரிய வீடு. நிறைய மனிதர்கள். கீர்த்தியின் அப்பாவைப் பெற்ற பாட்டி

ஒருத்தி — திண்ணையோடு ஜடாயு மாதிரி உட்கார்ந்திருக்கிறாள்.

கல்யாணத்துக்குத் தன்னால் வர முடியவில்லையே என்கிற குறை கழுத்து மட்டும். எழுந்து நடக்க முடியாது. உட்கார்ந்தபடியே தரையைத் தேய்த்துத் தேய்த்து நகர்ந்தபடி — வீடு முழுக்க வலம் வந்து விடுவாள்.

மீரா, கீர்த்தியுடன் சேர்ந்து வந்து வணங்கியபோதே தனது இடுங்கிய கண்களை மேலும் இடுக்கிக் கொண்டு கேட்டாள்:

''ஏண்டியம்மா... காதுல போட்டிருக்கிறது வைரம்தானே?''

''ஆமா பாட்டி...''

''எத்தனை காரட்?''

''ஒரு காரட்...''

பாட்டி, ஏதோ அதிசயத்தைக் கேட்டாற் போல, 'சட்'டென வலக் கையால், மணி பர்ஸ் வாயைப் பொத்திக் கொண்டாள்.

''ஒரு காரட்டுக்குக் கூட தோடு கிடைக்கிறதா... அதுதான் இப்படிப் பொத்தான் கல்லு மாதிரி...''

கூடவே ஒரு பெருமூச்சுடன் சொன்னாள்:

''நம்ம நாகு பொண்ணுக்கே ரெண்டு காரட்டுல தோடு போடறதாச் சொன்னான். உம்.. யார், யாருக்கு எது பிராப்தமோ — அதுதானே கிடைக்கும்...''

மீரா, இதையுமே புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள்.

மற்ற பெண்கள் மாதிரி — நினைத்தால் கண்ணீர் உகுக்கிற ரகமில்லை அவள்.

கல்லூரியில் படித்திருக்கிறாள். வரதட்சிணை பற்றியும், பெண் விடுதலை பற்றியும் மணிக்கணக்கில் பேசி, மெடல்களும், கோப்பைகளும் பெற்றிருக்கிறாள்.

பெண் பார்க்க வந்தபோதே கீர்த்தி சொன்னான்தான்:

''எங்க வீட்டுல மெம்பர்ஸ் அதிகம். எனக்குக் கீழே ரெண்டு தம்பிங்க... ஒரு தங்கை.. அப்பாவோட கடைசித் தங்கைக்கே போன வருஷம்தான் கல்யாணமாச்சு. அப்பாவைப் பெத்த அம்மா செத்துப் போயாச்சு. ஆனா, அம்மாவுக்கு அம்மா — அதாவது எனக்குக் கொள்ளுப் பாட்டி இருக்கா. தொண்ணூத்தி ரெண்டு வயசுன்னு தோராயமாக் கணக்குப் போட்டுச் சொல்லுவா.. என்ன நீயா சிரிச்சுக்கறே..''

''ஒண்ணுமில்லே. சொல்லுங்க..''

''அப்பாவுக்குக் கூடப் பொறந்தவங்க ஆறு பேர். அதுல மூணு பிரதர்ஸ் ஃபேமிலியோட எங்க கூடத்தான் இருக்காப்பல... நீ என் கூட மெட்ராஸ்லேதான் இருக்கப் போறே. ஆனாலும் தஞ்சாவூர் போற சமயத்துல — இவங்களை எல்லாம் அனுசரிச்சுப் போகணும்..''

''எனக்குப் பிடிக்கும்...''

அவள் சின்னக் குரலில் சொன்னது, அவனுக்கு மிகவும் பிடித்திருந்ததாம். திருமணமாகி நாலு நாட்கள் கழித்துச் சொன்னான்.

மொத்தமாய் — ஒரு வேன் வைத்துக் கொண்டு, சமயபுரமும், சுவாமி மலையுமாய்ப் போய் வரும் போதெல்லாம் ஒற்றை மலரெடுத்து, அவளது கன்னத்தில் தட்டுவது போல — மிருதுவாய்ச் சொல்லியிருக்கிறான்.

''உன்னைப் பார்த்ததுமே தீர்மானிச்சுட்டேன். நமக்கு இவதான்னு.. நீ..''

அவள் இதற்கு என்ன சொல்வது என்றே தெரியாமல், புகுந்த வீட்டுக் குழந்தைப் பட்டாளங்களில் எதையாவது ஒன்றைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, கொஞ்சுவாள்.

அவளுக்குக் கல்யாணமாகி ஏழு நாளாகியும் கூட 'இவன்தான் நமக்கு' என்கிற நினைப்பு இன்னும் பதியவில்லை..

அநேக சமயங்களில் திருமணமானதே— மறந்து போய் விடுகிறது..

யாரோ உறவினர் வீட்டில் வந்து தங்கியிருப்பது போன்ற பிரமை.

கீர்த்தியின் தாயும் — அவளை வேற்று மனுஷியாக நினைக்கவே இல்லை. என்னமோ, காலம் காலமாய் அவளிடம் கேட்டுத்தான் எல்லாவற்றையும் செய்வது போல, சமையல் கட்டுப் பெண்கள் கூட்டத்தில் அவளையும் இழுத்து இழுத்து வைத்துக் கலந்து பேசினாள்.

''மீரா... எப்பவும் அஞ்சு லிட்டர் குக்கர்லே சாதம் வைக்கறது வழக்கம். இப்ப இன்னும் அஞ்சாறு பேர் எக்ஸ்டிராவா இருக்காப்பல இருக்கே... ரெண்டு தடவையா அரிசி களைஞ்சு வைக்கட்டுமா?''

மீரா மலைத்துப் போவாள்..

அவள் வீட்டில் மொத்தமே நாலு பேர்... அப்பா, அம்மா, அவள், அவள் தம்பி...

இரண்டு ஆழாக்கு அரிசி போட்டால் நாள் முழுக்கச் சிரிபடும். அதிலும் அப்பாவுக்கு அளவு சாப்பாடு.

இங்கே எல்லாமே அதிசயமாய் இருக்கிறது...

கீர்த்தியின் பாட்டியே குழம்பு சாதத்துக்கு மட்டும் கால்படி சாதம் போட்டுக் கொண்டாள்.

நாகு மாமா — விறைத்த மூங்கில் மாதிரி இருந்து கொண்டு, குழம்பு, ரசம் எல்லாவற்றுக்கும் இரண்டு தடவை சாதம் போட்டுக் கொண்டார்..

கீர்த்தியே கூட....

அவள் முதல் தடவை பரிமாறிய போது, அவன் அவளையே வைத்த கண் வாங்காமல் குறுகுறுவெனப் பார்த்தான்...

இரண்டு கரண்டி அன்னத்தை, இலையில் போட்டு விட்டு அவள் தயங்க, அவனோ போதுமென்றே சொல்லாமல் அவளையே பார்க்க...

பாதத்துக்கு அடியில் கட்டெறும்பு ஊர்வது போல நெளிந்தாள் மீரா.

பந்தியில் உட்கார்ந்திருந்த கீர்த்தியின் சித்தப்பா இதை ஓரக் கண்ணால் பார்த்த

படியே குரல் கொடுத்தார்.

''இலையைப் பாருடா. அவளுக்கு இன்னும் உன்னோட சாப்பாட்டு அளவு தெரியாது இல்லையா... மெட்ராஸ் பொண்ணு... ரெண்டு கரண்டிக்கு மேல் சாப்பிடத் தெரியாது... அம்மா மீரா... அவனுக்கு இதெல்லாம் போதாது... தட்டுல இருக்கிறதை அப்படியே சாய்ச்சிரு...''

மீராவுக்கு அப்போதும் கூட அடக்க மாட்டாத சிரிப்புத்தான் வந்தது... அம்மாவை நினைத்துக் கொண்டாள்.

''புகுந்த வீட்டுலப் போய்ச் சத்தம் போட்டுச் சிரிக்காதேடி...''

''சரிம்மா...''

முதல் நாளிரவு... அவர்களுக்குப் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட முதலிரவு..

அந்த வீட்டின் மாடிப் பகுதியில், பத்தடிக்குப் பத்தடியே அமைந்த சிறு அறையில்...

மீராவுக்கு அப்பா வாங்கித் தந்த கட்டிலும், மெத்தையும் சென்னையிலேயே...

''இந்த ஒரு நாள் கூத்துக்காக, கட்டிலும் மெத்தையும் இங்கே வரணுமா... ஏன், அந்த வீட்டுல இல்லாத கட்டிலா..., மெத்தையா...''

சித்தப்பாக்கள் அனைவரும் கட்டில் மெத்தையை விட்டிறங்கி, பத்தமடைப் பாய்க்கு வந்து வெகு காலமாயிற்றாம்.

பரணில் கிடந்த கட்டில்களில் பாதிக்கு மேல் கறையான் அரித்துப் போய்...

கடைசியில் இரவல் கட்டில்.. இரவல் மெத்தை...

அப்பொழுதுதான் கீர்த்தி, அந்த வார்த்தையைச் சொல்கிறான்.

''அப்பா, அம்மா இஷ்டத்துக்காகத்தான் இந்த அரேன்ஜ்மென்ட்ஸ் மீரா... யாரோ உபயோகப்படுத்தற கட்டில், மெத்தையில் நாம், வாழ்க்கையைத் தொடங்க வேண்டாம். மெட்ராசுக்குப் போய் – ஆபீஸ்லே எனக்கு ஒரு பார்ட்டி கொடுக்கறாங்க... அதை முடிச்சிட்டு நேரே பெங்களூர் தான்...''

''.....''

''எப்படியும் நம்ம முதலிரவு – பெங்களூர்லேதான். பெங்களூர்லே இருந்து மைசூர் போற வழியில – எங்க ஒண்ணு விட்ட அத்தானோட ஃபார்ம் இருக்கு... பத்து நாளைக்கு அந்த ஏரியாக்குள்ளே மனுஷ வாடையே கூடாதுன்னு சொல்லிட்டேன்...''

தான் சென்னையைக் கூட மிதிக்கப் போவதில்லை என்பதை அறிந்திருந்தால் கீர்த்தி இப்படி பெங்களூர் வரையில் தனது கனவுகளை வளர்த்துக் கொண்டிருக்கவே மாட்டான்.

மீராவும் – பெங்களூர் முதலிரவை எண்ணி இப்படி அநியாயத்துக்கு வெட்கப்பட்டுத் தலைகுனிந்திருக்க மாட்டாள்...

(தொடரும்)

ஜில்லென்று ஒரு ஃபிரிஜ் பரிசு!


தீபாவளிப் பரிசாக ஜில்லென்று ஒரு ஃபிரிஜ் பெற வேண்டுமா? விஷயம் ரொம்பச் சுலபம். ஆனால் சற்றுக் கவனமாக அனுராதா ரமணனின் இந்தத் தொடர்கதையைப் படித்துவர வேண்டும். இதில் ஒவ்வொரு வாரமும் நாங்கள் வேண்டுமென்றே செய்கிற ஒரு தவறைக் கண்டுபிடிக்க வேண்டும்! உதாரணமாக, இந்த இதழில், எதிர்ப் பக்கத்தின் (பக்கம் 40) வலது பத்தியில் கடைசி வரியில் இறுதி வார்த்தையைக் கவனியுங்கள். 'பார்த்த' என்பதற்குப்பதில் 'பார்தத்' என்று அச்சாகியிருக்கிறது. இது வேண்டுமென்றே நாங்கள் செய்த ஒரு எழுத்துப் பிழை. இதுபோல் கருத்துப் பிழை, இலக்கணப் பிழை அல்லது வேறு ஏதோ ஒரு பிழையினை வேண்டுமென்றே நாங்கள் இந்தக் கதையில் புகுத்தி விடுவோம். அதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் கல்கியில் இடம் பெறும் கூப்பனில் பிழையையும், திருத்தத்தையும் எழுத வேண்டும். கூப்பனைக் கத்திரித்துப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். தீபாவளி சமயத்தில் கதை முடியும் போது கூப்பன்களை வரிசையாக ஒரு தாளில் ஒட்டி, கடைசியில் 5 முதல் 10 வரிகளில் கதையின் விமர்சனம் ஒன்றும் எழுத வேண்டும். இந்தத் தாளை உங்கள் விலாசத்துடன் எங்களுக்குத் தபாலில் அனுப்பி வைத்தால், எல்லாத் தவறுகளையும் சரியாகக் கண்டுபிடித்து, சிறந்த விமர்சனமும் எழுதியவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் பத்துப் பேருக்குத் தலா ரூ. 25 உண்டு. இந்த வாரம்தான் தவறு தெரிந்து போய்விட்டதே. எனவே, அடுத்த வாரம் முதல் கூப்பனை எதிர்பாருங்கள்!



புறப்படுங்கள் — வளமான எதிர்காலம் நோக்கி.



1. ரூ 200 x 40 = 8,000	[illegible]
2. ரூ 250 x 40 = 10,000	[illegible]
3. ரூ 500 x 30 = 15,000	[illegible]
4. ரூ 625 x 40 = 25,000	[illegible]
5. ரூ 500 x 60 = 30,000	[illegible]
6. ரூ 1,000 x 50 = 50,000	[illegible]
7. ரூ 1,250 x 60 = 75,000	[illegible]
8. ரூ 1,000 x 100 = 1,00,000 ரூ 2,500 x 40 = 1,00,000	[illegible]
9. ரூ 4,000 x 50 = 2,00,000	[illegible]
10. ரூ 10,000 x 50 = 5,00,000	[illegible]
11. ரூ 20,000 x 50 = 10,00,000	[illegible]







நீ எங்கள் பட்டத்தை விட்டு விட்டு ரிக்ஷா இழுத்து பிழைக்கிறாயா?
நான் என்னுடைய தொழிலேயே நாகார்ஜுனா சிமிண்ட் வந்ததிலிருந்து மாற்றிக் கொண்டு விட்டேன். ஏன் என்றால் இப்பொழுது கன்னம் வைப்பது சாத்தியமே இல்லை.

சென்ற வாரம் —

கீர்த்தி — மீரா — புதுசாக் கல்யாணமானவங்க. மெட்ராஸ்லே கல்யாணம். தஞ்சாவூர்லே முதலிரவு. 'அது அப்படித்தான் எங்க வழக்கம்'னு கீர்த்தியோட அம்மாக்காரி சொல்லிட்டா. பெரிய குடும்பம். கீர்த்தியோட கொள்ளுப் பாட்டியில ஆரம்பிச்சு, தன் பெண்ணைக் கட்டலைன்னு — கல்யாணத்தையே நிறுத்திட்டற அளவுக்குச் சண்டை போடற நாகு மாமா வரைக்கும்... ரொம்பப் பெரிய குடும்பம்.

கீர்த்திக்கு உத்தியோகம் மெட்ராஸ்லே. ஆபீஸ் பார்ட்டியில கலந்துக்கிட்டு, அப்புறம் பெங்களூருக் ஹனிமூன் போய் அங்கேயே முதலிரவைக் கொண்டாடணும்னு அவனோட ஆசை. அதைச் சாந்தி முகூர்த்த அறையில அவன், மீரா கிட்டச் சொல்றான்.

இதாங்க போன வாரம்.

இனிமேல் —

2

நேற்றுவரை நந்தவனம்

"பார்க்கறதுக்குத்தான் வாட்டமும் சாட்டமுமா இருக்கானே தவிர, அவனுக்கு ஒண்ணுமே தெரியாது. வீட்டுல அவன் கண்ணுல ஒரு பொறுப்பும் காட்டின தில்லே... நீதான் எல்லாத்தையும் கவனிச்சுக்கணும்..."

கீர்த்தியின் தாய், மீராவின் தலைப் பின்னலில், மல்லிகைச் சரத்தையும் வைத்து, கூடவே இரண்டு வேப்பிலைகளையும் செருகுகிறாள்.

சித்தப்பாக்களில் ஒருத்தர், கீர்த்தியுடன் சேர்ந்து பெட்டியில் சாமான்களை பாங்காய் எடுத்து வைத்துக் கொண்டே அதட்டுகிறார்.

"அவளாவது சின்னவ. வளர்ந்தாச்சே தவிர, பொறுப்பு கிடையாதுன்னு என் காலத்துல இருந்து கீர்த்தி வரைக்கும் சொல்லிட்டே இருக்கீங்க. ஆனா, பொறுப்பு என்னன்னு பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்லிக் கொடுத்ததுண்டா..."

"ஆம்பிளைங்க பொறுப்பு — சம்பாதிச்சு, பெண்டாட்டி கையில கொண்டு வந்து தர வேண்டியதுதானே சித்தப்பா. இப்ப நீங்க எல்லாரும் செய்யலையா.. எல்லாம் எனக்குத் தெரியும்..."

கீர்த்தி, மீராவைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே சொல்கிறான்.

"என்னத்தைத் தெரியும்? அம்பது வயசாறது. எனக்கே இப்பத்தான் உங்க சித்தியோட சுபாவம் புரிய ஆரம்பிச்சிருக்கு. அப்பா கீர்த்தி, வெறுமே சம்பளத்தைக் கொண்டு வந்து தர்றதுனால மாத்திரம் இந்தப் பொம்பிளைங்களைத் திருப்தி செஞ்சிட முடியாது. ஒவ்வொண்ணுத்துக்கும் ஒவ்வொரு இடத்துல சூட்சுமம் இருக்கும். தினமும் ஏதாவது ஒரு விஷயத்துக்காக இவளுங்க' முதுகுல தட்டி சபாஷ் போட்டுண்டே இருக்கணும். இன்னிக்கு ரசம் ரொம்ப ஜோர்; இல்லையா. இன்னிக்கு என்ன உன் முகம் இத்தனை பிரகாசமாயிருக்கு. அட, அது வு இல்லையா — தலைய வலிக்கிறதா மீனா.. நீ இப்படி சோர்ந்து போய் நான் பார்த்ததே இல்லையே... இப்படி' ஏதாவது..."

சித்தப்பாவின் பேச்சைக் கேட்டு, பெண்கள் குபீரெனச் சிரிக்க — அவர், அத்தனை சிரிப்புச் சப்தத்திலும், தம் மனைவியின் சிரிப்பை இனம் கண்டு கொண்டு மேலும் உற்சாகமாய்ச் சொல்கிறார்.

"நீ சாப்பிட்டாச்சுன்னா சரிதான்னு ஏப்பம் விட்டுட்டு ஹாலுக்கு வந்துடக் கூடாது. பெண்டாட்டி சாப்பிட்டாளான்னு கவனி. முடிஞ்சா ரெண்டு பேருமாச் சாப்பிடுங்கோ. ரெண்டு மூணுல வெளியில இருந்து ஸ்வீட் காரம் வாங்கிட்டு வா. யாரும் இல்லையின்னா ஊட்டி விடு. தோஷமில்லே. சனி, ஞாயிறுல சினிமா — பீச்சுன்னு அழைச்சிட்டுப் போ... தினமும் தான் நீ அடுப்பங்கரையிலேயே இருக்கியே... இன்னிக்கு ஒரு நாளாவது ரெஸ்ட் எடுத்துக்கன்'னு சொல்லு... அட, அப்படிப் பார்க்காதேடா. நீ சொன்னதும் அவ சரியின்னு சொல்லிட மாட்டா. இதெல்லாம் அவளுக்கு ஒரு டானிக். 'சமைக்கறது ஒரு வேலையா'ன்னு இன்னும் கொஞ்சம் இழுத்துக் கட்டிண்டு செய்யும்..."

"சித்திய அப்படித்தான் —"

"ஓஹோஹோ.."

கூடம் முழுக்கச் சிரிப்பலைகள்...

சித்தப்பா, இன்னும் கூடப் பேசிக் கொண்டே இருப்பாராயிருக்கும். கூச்சம் தாங்க முடியாத சித்தி 'விருட்'டென எழுந்து போய் ஒரு தம்ளர் காப்பியைக் கலந்து கொண்டு வந்து அவரிடம் வைத்தாள்.

"இப்ப எனக்கு எதுக்கு காப்பி?"


"தொண்டை கம்மிப் போச்சு. குடியுங்கோ..."

"ஆகா... நீ சொன்னாச் சரிதான்.."

அவர், அடித் தொண்டையில் அருகிலிருந்த மீராவுக்கும் கீர்த்திக்கும் மட்டும் கேட்கிற குரலில் சொல்கிறார்.

"இதையும் கவனிச்சுக்கடா. பெண்டாட்டி எது சொன்னாலும் சரி, சரியின்னு தலையை ஆட்டிடு. எதிர்த்துக் குரல் கொடுத்தா நீதான் தோத்துப் போவே.

அனுராதா ரமணன்



அதுவே பேசும்; கட்டளையிடும்; சிணுங்கும்; அழும்; எரிஞ்சு விழும்; அப்புறம், என்னை மாதிரி ஒரு ராட்சஸி உண்டான்னு தன்னைத் தானே திட்டிக்கும்; அப்புறம் சிரிக்கும். விட்டுடு.. காட்டாறு மாதிரி தளும்பிக் குதிச்சுட்டுத் தானா அடங்கிடும்... அப்படி அடங்கலைய்யா... வருத்தப்படாதே. அவளுக்கு அடங்கிப் போக நாம கத்துண்டிருப்போம்...''

நாகு மாமா — இவர்களின் இடையே புகுந்து 'சுள்'ளென எரிந்து விழுகிறார்.

''ஏழே முக்காலுக்கு பஸ். மணி இப்பவே ஆறரை. ஆட்டோ பிடிச்சு, பஸ் ஸ்டாண்ட் போகவே முக்கால் மணி நேரமாயிடும். இப்ப இந்த அட்வைஸ் தேவைதானா?''

''ஏண்டா பஸ்லேயா போறே... சொல்லவே இல்லையே...''

— இது நேரம் வரையில் மீராவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த கிழவி — பேரனைப் பார்த்து அதட்டுகிறாள்.

''பேசாம ரயில்லே போறதை விட்டுட்டு, பஸ்ஸூம் கிஸ்ஸூம் எதுக்குடா?''

இது கீர்த்தியின் தந்தை.

''என்னடா ராஜா... டிரெயினை விட பஸ் வசதியோ... பேசாம ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் கூபே எடுத்திருக்கலாமேடா...'' என்கிறார் சித்தப்பா.

நாகு மாமா இதற்காகவே காத்திருந்தாற் போல 'வெடுக்'கெனச் சொல்கிறார்:

''எங்கே... நம்ம குடும்பத்துப் பொண் — புகுந்த வீட்டுக்குப் போயிட்டு பிறந்தகம் வரணும்னா — இன்னமும் நாமதான் ஃபர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட் எடுத்துக் கொடுக்கறோம்... இங்கே என்னடான்னா என்னமோ அவங்கதான் பிள்ளையைப் பெத்த சம்பந்தி மாதிரி வந்தாங்க... சாந்தி முகூர்த்தம் வரைக்கும் இருந்தாங்க... பகல் டிரெயின்லே புறப்பட்டுப் போயே போயிட்டாங்க. அதெல்லாம் மரியாதை தெரிஞ்—''

கீர்த்தியின் முகம் மாறி விட்டது. கையில்

எடுத்த துணிமணிகளை அப்படியே போட்டு விட்டு, நாகுவின் எதிரில் வந்து, இடுப்பில் கை வைத்து முறைக்கிறான்:

''பத்து நாள் முன்னாலேயே நான் — ரெண்டு ஃபர்ஸ்ட் கிளாஸ் ரிஸர்வ் பண்ணச் சொல்லி, உம்மகிட்ட பணத்தைக் கொடுத்தேனில்லே? நீங்க அப்ப எல்லாம், என்னைப் பழிவாங்கணும்னு உள்ளூரப் பொருமிட்டிருந்தீங்க... அது இப்பத்தானே தெரியறது.. இதுவே உம்ம பொண்ணை நான் கல்யாணம் செஞ்சிட்டிருந்தா — ரயில்வே ஸ்டேஷன்லேயே குடியிருந்தாவது ரெண்டு ஸீட் வாங்கி இருக்க மாட்டீங்களா.. மாமா, உங்க கோபத்தை இப்படிக் காமிச்சிட்டு அநாவசியமா எங்க மாமனார், மாமியாரைச் சொல்றீங்களா..''

''நாகு, அவனை அலட்சியமாய் ஒரு பார்வை பார்க்கிறார்.

''அட போடா... இப்படித்தான் நான் உன்னைப் பழிவாங்கணுமாக்கும். ஏதோ என் தங்கையோட பிள்ளையாச்சேயின்னு டிக்கெட் வ்ாங்க ஓடினேன். என் பொண்ணுக்கு என்னடா ராஜாத்தி... உன்னை விட, மணிப்பயலாப் பார்த்து நான் பிடிக்கிறேன்.. பாரு..''

மீராவுக்குத் தர்மசங்கடமாக இருக்கிறது. என்ன வீடு இது.... ஒரு நிமிஷம் பார்த்தால் கட்டிக் கொண்டுப் புரளாத குறையாய்... சித்தப்பா பிள்ளை என்கிற வயது வரம்பையெல்லாம் கடந்து சகலத்தையும் பொதுவில் வைத்துச் சிரிப்பாய்ச் சிரிக்கிறது.... அடுத்த நிமிஷமே — ஒருவர் சட்டையை மற்றவர் பிடித்துக் குலுக்காதக் குறையாய் அடித்துக் கொள்கிறது...

கீர்த்தியின் தாய்தான் குறுக்கே புகுந்து சமாளிக்கிறாள்.

''நேரமாச்சுடா.. கிளம்பேன். பாட்டிக்கு நமஸ்காரம் பண்ணு...''

கிழவி, தன் விபூதி சம்புடத்திலிருந்து துணுக்குப் பிரமாணம் விபூதியை எடுத்து கீர்த்தி — மீராவின் நெற்றியில் இட்டு விட்டு, பேரனையே உற்றுப் பார்க்கிறாள்.

''என்ன பாட்டி?''

''ஒண்ணுமில்லே... அடுத்த தடவை நீ வரச்சே நான் உயிரோட இருப்பேன்னு தோணலை. அதான்...''

மீரா, தலையைக் கவிழ்த்துக் கொள்கிறாள். அவனோ கலகலவெனச் சிரிக்கிறான்.

''உக்கும். எங்க அப்பாவுக்குக் கல்யாணமான காலத்துலே இருந்து நீங்க இப்படித்தான் சொல்லிட்டிருக்கறதாக் கேள்வி. அதெல்லாம் அத்தனை சுலபமாப் போக மாட்டீங்க. உலகத்துல அனுபவிக்க இன்னும் எத்தனை இருக்கு? இன்னும் எத்தனை விரதம்... எத்தனை கல்யாணம்... எத்தனை இட்லி... எத்தனை பொங்கல்..''

மீரா, கணவனின் கரத்தை 'வெடுக்' கெனக் கிள்ளுகிறாள்.

இதற்குள் வாசலில் ஆட்டோ சப்தமிட... தலைக்கு ஒரு சாமானாய்த் தூக்கிக்

கொண்டு, வண்டியைப் பார்க்க ஒவ்வொரு வரும் ஓட...

கீர்த்தி — செல்லமாய்க் கிழவியின் தோள் பட்டையில் தட்டி விட்டுக் கிளம்புகிறான்.

''கவலைப்படாதீங்க பாட்டி. அப்படியே கண்ணை மூடிட்டீங்கன்னாலும் ஒரு தந்தி அடிங்க.. ஓடி வந்திடுவேன். கொள்ளுப் பேரன்கள்லே மூத்தவன். நான் வந்து தோள் கொடுக்காம — நீங்க இந்த வீட்டை விட்டுக் கிளம்பிடுவீங்களா என்ன...''

மீராவுக்கு அந்தக் கணத்தில் கீர்த்தியின் மீது கோபம் கூட வந்தது...

'மனுஷருக்கு எந்த நேரத்துல ஜோக் அடிக்கறதுன்னு ஒரு விவஸ்தையே கிடையாதா?'

ஆட்டோவில் கீர்த்தியின் பக்கத்தில் நெருக்கி அடித்துக் கொண்டு அவனது அப்பாவும் ஏற முயற்சி செய்ய, நாகு, அவர் கையைப் பிடித்து இழுக்கிறார்.

''இந்தாங்க மாப்பிள்ளை... நீங்க எங்கே புறப்பட்டுட்டாப்பல?''

''நல்லாயிருக்கே. என் பிள்ளைய வழியனுப்ப நான் போக வேண்டாமா?''

''தெரியும். அதுக்காகத்தானே ரெண்டு ஆட்டோவாக் கொண்டு வந்தேன். அவங்க சின்னஞ் சிறுசுங்க... ஏதாவது பேசிட்டே போகலாம். நாம கழண்டுக்கணும் மாப்பிள்ளை... வாங்க... பின்னாடி நிக்கற வண்டியில போகலாம்.''

''ஹி... ஹி... அதுவும் சரிதான்..''

அசடு வழியும் அப்பாவை, ஒரு கையால் அணைத்தபடி செல்லும் நாகுவையே ஒரு கணம் இமைக்காமல் பார்க்கிறான் கீர்த்தி.

''நல்ல மனுஷன்தான். சமயத்துல முன் கோபம் வந்து ஆளையே கெடுத்துடறது...''

வாய் பேசினாலும் அவனது வலது கை மீராவின் இடுப்பைச் சுற்றி வளைக்காமல் இல்லை.

''ஷ்... என்னது இது.. நாம ஆட்டோவுல இருக்கோம்.. தெரியுமில்லே?''

மீரா — சின்னக் குரலில் உஷ்ணமாய்ச் சொல்கிறாள்.

வண்டி அதன் வழியில் ஓடினாலும், ஆட்டோ டிரைவர், தன் பக்கத்திலிருந்த சின்னக் கண்ணாடி வழியே தங்களையே கவனிப்பது போல — ஒருவித பிரமை.

கீர்த்தியோ அவளின் சீற்றத்தைக் கண்டு கொள்ளாமலேயே உற்சாகமான குரலில் சொல்கிறான்:

''இது ஆட்டோன்னு தெரிஞ்சுதான் சீண்டறேன். மீரூ... உனக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா? புருஷன் பெண்டாட்டிக்குள்ளே இருக்க வேண்டிய நெருக்கத்தைக் கூட இந்தப் பணம் பிரிச்சுடறது தெரியுமோ... நீ வேணா கவனி இனிமே. காருல போற தம்பதிகளை விட ஆட்டோவுல போற ஜோடி நெருக்கமா இருப்பாங்க... ஆட்டோவை விட சைக்கிள் ரிக்ஷா — பரம உத்தமம். அதே மாதிரிதான் ரயில்லே — எதிரும் புதிருமா — பெர்த் கிடைச்சிருந்தா தூங்கிட்டே போகணும்.. இதுவே பஸ்ஸுன்னா ராத்திரி முழுக்க — பக்கத்துப் பக்கத்துல... எப்படியும் பார்க்கப் போனா இருக்கறவனை விட — இல்லாதவன்தான் வாழ்க்கையை முழுசா அனுபவிக்கிறான். நீ என்ன சொல்றே?''

''முதல்லே கையை எடுங்க...''

''ஓ.கே... பெங்களூர் போனதும் முதல் காரியமா இருக்கறதுலேயே சின்னதா ஒரு சைக்கிள் ரிக்ஷா தேடணும்.. அதுல ஏறிட்டு எங்க அத்தானோட ஃபார்முக்கு''...

மீரா, அதற்கு மேல் பேச விடாமல் அவனது வாயை இறுகப் பொத்துகிறாள்.

வண்டி, பஸ் நிறுத்தத்தில் ஒரு குலுக்கலுடன் நிற்க, பின் வண்டியில் வந்த நாகு, வேகு வேகென்று ஓடி வருகிறார்.

(தொடரும்)

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!

கட்சித் தலைவர்: மாநாட்டில் ஏகப்பட்ட வேஷ்டி சட்டை கிழியும்னு எதிர்பார்க்கிறோம்.

— எஸ். சுந்தரராஜ், பாளையங்கோட்டை.

கட்சி மாநாட்டில் ஜவுளிக் கடை எதற்கு?



● எனது நண்பர் சிறுதொழில் கடனுக்கு மனுச் செய்திருந்தார். வங்கி மானேஜர் கடன் கொடுப்பதை இழுத்தடித்தார். நாங்களும் நடையாய் நடந்தோம். ஒருநாள் நண்பருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஆமா சார், இப்படித் திருப்பிக் கட்றேன்னு ஒழுங்காக் கேட்டாக் கொடுக்க மாட்டியதான். நான் பயங்கரவாதியா மாறி பாங்கைக் கொள்ளை அடிச்சு, அப்புறம் துப்பாக்கியெல்லாம் கீழே போட்டுவிட்டுச் சரணடைந்து திருந்தி வந்தா, அதை நீங்க விழாவா எடுத்து, லோன் கொடுப்பிய" என்றாரே, பார்க்கலாம்!


— ஆ. கோவில்குணா, ஆவுடையார்கோவில்.

o o o o

நிருபர்: உங்க கட்சி 'மாநாடு' நடைபெறும் இடத்தில் கேண்டீனோடு சேர்த்து ஜவுளிக் கடைக்கும் டெண்டர் கேட்டிருக்கீங்களே? ஏன்?




● பக்கத்து விட்டுக் குழந்தை, சாப்பிட அடம் பிடிக்கும் போது, விகாரத் தோற்றம் கொண்ட எதிர் விட்டு 'வாட்ச்மேன்' வலிய வந்து முகத்தை மேலும் விகாரமாக்கிக் கொண்டு பிராணிகள் போல் ஒலி எழுப்புவான். குழந்தை சாப்பிட்டுவிடும்!




ஒரு நாள் குழந்தையின் தாய் அவனை வேண்டாமென்று தடுத்து நிறுத்தினாள். "குழந்தை பயப்படுதா?" என்று அவன் கேட்க, குழந்தையின் தாய், "இல்லை, எனக்குப் பயமாக இருக்குது!" என்றாள் சிரித்தபடி.

— என். குணவதி, ஈரோடு.

o o o o




ரயிலில் டிக்கெட் பரிசோதகர்: என்ன சார், இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கிட்டு முதல் வகுப்பிலே டிராவல் பண்ணுறீங்களே!




* பாக்கியசாலி — 2



* ஐசா வாங்கினார்...!



* காங்கிரஸ் அனுதாபி?



* சந்தர்ப்பம் சரியில்லை

துணிச்சலான நடவடிக்கை பற்றி?

! விரைவில் நடத்தப்பட வேண்டியது தான். தயங்கித் தயங்கி ஒத்திப் போட்டுக் கொண்டிருப்பது தவறுதான். ஆனால் நாட்டின் பிற பகுதிகளில் தேர்தல் முடிந்து, பரபரப்பு ஓய்ந்த பிறகு, அந்த மாநிலங்களைக் கவனிப்பதுதான் புத்திசாலித்தனம். அப்போது வாக்காளர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியும்; கவனத்தைச் சிதற விடாமல் அம் மாநிலங்களைக் கண்காணிக்க முடியும்.

o கே. சோமசேகர், காவேரிப்பட்டினம்.

? **சிவாஜி தலைமையில் உள்ள ஜனதா தளம் என்ன ஆகும்?**

! வீர வசனம் பேசி முறைத்துக் கொண்டு போனாலும் வாலைக் குழைத்துக் கொண்டு திரும்ப வந்து ஒண்டிக் கொள்ளும்.

o எஸ். இளையவன், படுகை.

? **இந்தத் தேர்தல் எப்படி இருக்கும்?**

! பணத்தின் செல்வாக்கு வாக்காளரை மயக்கும்; அதிகார துஷ்பிரயோகம் நடக்கும்; வன்முறை ஆங்காங்கே எட்டிப் பார்க்கும்; சொற்பொழிவுகளில் ஆபாச வசை மொழிகள் தலைவிரித்தாடும்; சினிமா மோகம் சிந்தனையைக் குழப்பும்; வாக்குறுதி மழை பாமர உள்ளங்களைக் குளிர்விக்கும்; இத்தனையையும் தாங்கிக் கொண்டு ஜனநாயகம் உயிர் பிழைக்கும்; துளிர் விட்டு நாளடைவில் தழைக்கும்.

o கே. ரமேஷ்பாபு, சேலம்.

? **அரசியல்வாதிகள் தொகுதி மாறிப் போட்டியிடுவது ஏன்?**

! அதே தொகுதியில் மீண்டும் நின்றால் அடிக்க வர மாட்டார்களா!

o டி. கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்.

? **தகுதியுள்ளவர்களுக்கு வாக்களித்தால் வோட்டுக்கள் சிதறி ஒரு நிலையான ஆட்சி ஏற்படுவதைப் பாதிக்காதா?**

! தகுதியுள்ளவர்கள் மட்டுமே எம். எல். ஏ.க்களாகவோ அல்லது எம்.பி.க்களாகவோ தேர்ந்தெடுக்கப்படும் போது, அவர்களுக்கு ஒரு நிலையான ஆட்சி வழங்கும் தகுதி இல்லாமல் போய் விடுமா?

o சித. கருணாநிதி, மருதூர் தெற்கு.

? **தேர்தல் ஆரம்பமாகும் இந்த வேளையில் தூக்கம் வராமல் அவதிப்படுகிறவர்கள் தலைவர்களா? தொண்டர்களா?**

! வாக்காளர்களை மறந்து விட்டீர்களே!

o விஜயலக்ஷ்மி சுவாமிநாதன், திருச்சி.

? **நாட்டைப் பற்றிக் கவலைப்படாத நிலை எப்போது வரும்?**

! இப்போதே அந்த நிலைதானே!

o இரா. செல்வபாண்டியன், புத்தாம்பூர்.

? **தென் சென்னையில் வைஜெயந்தி மாலா பாலி இ. காங்கிரஸில் கைவிடப்பட்ட நிலையில், அவருக்கு வேறு ஏதேனும் தொகுதி கிடைக்குமா?**

! பம்பாயில் ஒரு பத்திரமான தொகுதி தருவதாக ராஜீவ் வாக்களித்திருக்கிறார். என்றாலும் தென் சென்னை போல் அவரால் அங்கே ஐஸ் மேல் நைஸாக நடக்க முடியாது!

o முஸ்தபா, தக்கோலம்.

? **இந்தியாவில் மிகவும் பாக்கியசாலிகளான இருவரைக் குறிப்பிடவும்?**

! 1. அறுபது கோடி கமிஷன் பெற்ற முன்னாள் பிரதமர், 2. 'அவர் அறுபது கோடி கமிஷன் பெற்றால் என்ன பெரிய பாவம்? நாட்டை அது எப்படி பெரிய அளவில் பாதிக்கப் போகிறது? நேரு காலத்திலிருந்தே கமிஷன்கள் வழங்கப்படுவது சகஜம்தானே?' என்று அதை நியாயப் படுத்துகிற இந் நாள் பிரதமர்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

பாலசுப்பிரமணியன்,
1/237, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
காந்தி நகர்,
சென்னை — 600 052.

நேற்றுவரை நந்தவனம்

3

"எங்கேடா உன் சூட்கேஸ்?"

நாகு, கையில் மஞ்சளில் நனைத்த புது வேஷ்டியை மடித்துச் சுருட்டி வைத்துக் கொண்டு இரைகிறார்.

"ஏன்... என்ன வேணும்?"

"எனக்கு ஒண்ணும் ஆக வேணாம். சித்தப்பாவும், பிள்ளையுமாய் நாள் முழுக்க உட்கார்ந்து 'பேக்' பண்ணினீங்களே.. முகூர்த்த வேஷ்டி, பாலிகைக் கிண்ணம் இதையெல்லாம் எடுத்து வச்சுக்க வேண் டாமா? நல்லவேளை, பாட்டி வாசலுக்கு வந்து ஞாபகப்படுத்தினா..."

கீர்த்தி — அவரது கையில், சணலில் கோத்துக் கட்டியிருக்கும் மண்ணாலான பாலிகைக் கலசங்களையும், மஞ்சளில் நனைத்த புது வேஷ்டியையும் பார்த்து விட்டு இரைந்து சிரிக்கிறான்.

நாகு மாமாவின் முகம் கடுக்காயாய்ச் சிறுக்கிறது.

"என்னடா சிரிப்பு?"

"இல்லே... இதுக்காகவா இத்தனை பதற்றம்.. நீங்க ஓடி வந்த வேகத்தைப் பார்த்தா என்னமோ பாட்டிக்குத்தான் ஏதோ ஆயிடுச்சுன்னு நினைச்சேன். மாமா, அல்ப விஷயத்துக்கெல்லாம் இப்படி டென்ஷனானா எப்படி?"

"அது என் பிறவிக் குணம். விட்டுத் தள்ளு. சூட்கேஸ் எங்கே..."

மீரா, சூட்கேஸை நாகுவிடம் தருகிறாள். கழுத்தில் தாலிச் சரட்டோடு பின்னிக் கிடந்த சங்கிலியில், சேஃப்டி பின்னில் மாட்டியிருந்த சாவியைக் கழற்றித் தர — கீர்த்தி, அவள் செய்கையையே வைத்த கண் வாங்காமல் பார்க்க, சித்தப்பாதான் அவனது கவனத்தைத் திருப்ப, தொண்டையைச் செருமுகிறார்.

"...க்கும். கீர்த்தி... ரொம்பவும் பின் ஸீட்டுக்குப் போகாதே... முன்னாலேயே இடம்பிடி..."

"பதினொண்ணு, பன்னெண்டாம் நம்பர் ஸீட் பிடிடா. முன்பக்க ஸீட்டுல உட்காராதே. யாரோ எம். எல். ஏ. வரப் போறதாப் பேசிட்டிருக்காங்க. அப்படி வந்தா நாம எழுந்திருக்க வேண்டியிருக் கும்."

நாகு, பெட்டியைத் திறப்பதில் முனைந் திருந்தாலும், சித்தப்பாவின் பேச்சுக்கும் பதிலளிக்கிறார்.

"என்ன சாவி இது... அரை வேக்காட்டு முறுக்கு மாதிரி வளையறது..."

கீர்த்தி, மீராவை பஸ்ஸில் ஏறச் சொல்லி, ஜன்னலோரமாய்ப் பார்த்து உட்கார வைக்கிறான்.

"மீரு... யார் வந்து எழுப்பினாலும் நகராதே!"

"உம்..."

"நான் போய்க் கொறிக்கறதுக்கு ஏதா வது வாங்கிட்டு வர்றேன்..."

மீரா, தனது கைக்கடியாரத்தைப் பார்க் கிறாள்.

மணி ஏழரை.

"இப்பத்தானே சாப்பிட்டோம்? அம்மா வேற முறுக்கு அதிரசம்னு கல்யாண பட்சணங்களா ஒரு பை நிறையக் கொடுத் திருக்கா..."

"இரைஞ்சு சொல்லாதே. நாகு மாமா காதுல விழுந்து வைக்கப் போறது. ஏற்கெனவே பட்சணமெல்லாம் சிக்கு நாத்தம் வர்றதுன்னு கத்திண்டிருக்கார்."

அவன் சொல்லி முடிப்பதற்குள் நாகு மாமா, ஒரு கையில் பெட்டியும், இன்னொரு கையில் சாவியுமாய் வந்து சேர்ந்து விட்டார்.

"டேய், உன் மாமனார் வாங்கித் தந்தப் பெட்டியைத் திறக்க அவர்தான் வரணும். இந்தா, இந்தப் பாலிகை கிண்ணத்தை எல்லாம் கூடையில் வை.."

"இப்பவே இதையும் எடுத்துட்டுப் போக ணுமா?"

"நீ ஸ்திரமா எங்கே இருக்கப் போறியோ அங்கேதாண்டா இதெல்லாம் இருக்கணும்.. சம்பிரதாயம்.."

நாகு இன்னும் ஏதோ சொல்ல, கீர்த்தி யின் அப்பாவும், சித்தப்பாவும் குறுக்கிட்டுத் தர்க்கம் செய்ய...

இதற்குள் நபநபவென வண்டிக்குள் கூட்டம் ஏற ஆரம்பிக்க —

மீரா, குழந்தை போல அவர்களை ஒரு வித சுவாரஸ்யத்துடன் கவனிக்கிறாள்.

'இந்த கும்பலில் நம்மைப் போல, புதுசாய்க் கல்யாணமான ஜோடி ஏதாவது இருக்கா...'

பஸ்ஸைச் சுற்றியுள்ள பிரயாணிகளில் வழியனுப்ப வந்தவர்கள் — பிரயாணிகள்

அனுராதா ரமணன்

என்று இனம் பிரித்துப் பார்க்க முடியாத நெரிசல்.

தனியார் பஸ்ஸானதினால் — டிரைவர் ஸீட்டுக்கு நேர் எதிரில் — மேலே வரிசையாய்ப் பிள்ளையார் லட்சுமி சரஸ்வதியிலிருந்து ஏசுநாதரும், குர்ரானின் புனித வாசகமும் வண்டியுள் ஏறுபவர்கள் எல்லாரையும் ஆசீர்வதிக்கும் பாவனையில் பார்த்துக் கொண்டிருக்க...

நெருக்கமாய்த் தொடுத்த மல்லிகைச் சரமும், ஊதுவத்தி மணமும், எல்லாவற்றையும் மீறி — 'மாமா உன் பொண்ணைக் கொடு' என்று டேப்பின் அலறலும் கொஞ்சம் புதுசாகவே இருக்கிறது மீராவுக்கு.

இத்தனை வயசுக்கும் அவள் — இது மாதிரி பஸ்ஸில் தொலை தூரப் பயணம் செய்ததில்லை.

கல்லூரியின் சார்பாக டில்லி வரையில் விமானத்தில் கூடப் பறந்திருக்கிறாள்.

அதையே அவள் அப்பா — சுமார் ஒரு மாதம் வரையில் வந்து போன மனிதர்களிடமெல்லாம் சொல்லிச் சொல்லித் தம்பட்டம் அடிக்காத குறைதான்.

''நம்ம மீரா பிளைட்டுல போயிட்டு வந்துட்டா தெரியுமோ? இன்னும் நானே போனதில்லே. ஒரு தரம் சான்ஸ் வந்தது. ஆபீஸ்லே போகச் சொன்னாங்க. என் ஒய்ஃபுக்கு பயம். வேண்டாம்னு பிடிவாதம் பிடிச்சு, அழுது ரகளை பண்ணிட்டா. மீராவையும் அனுப்ப மாட்டேன்னு ஒரே புலம்பல்தான். நான்தான் ஒரு அதட்டல் போட்டேன். இப்படியே பொத்திப் பொத்தி வச்சிட்டிருந்தா. நாளைக்கு மாப்பிள்ளை ஃபாரின்லேயிருந்து வந்தா — அவன் கூட அனுப்பி வைக்க வேண்டியதுதானே, அப்ப மாட்டேன்னு சொல்ல முடியுமான்னு... அனுப்பி வச்சா பாருங்கோ அவளுக்குச் சின்னதா, தலைசுத்தல் வயித்துப் புரட்டல் கூட இல்லையாம். அதெல்லாம் சில பேரோட தேக வாகுன்னு நினைக்கிறேன்..''

மீரா, டில்லி விமானப் பயணத்தின் போது கிடைத்த சின்னச் சின்ன ஜாம் பாக்கெட்டுகளையும், பிளாஸ்டிக் ஸ்பூன், சாக்லேட்டுகளையும் தன் தம்பிக்குக் கொண்டு வந்து கொடுத்ததையும் — அவன், அவற்றை வெகு நாள் வரை பத்திரமாய் வைத்திருந்ததையும் நினைத்துப் பார்க்கிறாள்.. சிரிப்பு வருகிறது.


''என்ன உனக்குள்ளேயே சிரிச்சுக்கறே?''

கீர்த்தி கேட்கிறான்.

''உம்? ஒண்ணுமில்லே... நீங்க பிளேன்லே போயிருக்கீங்களா?''

அவள், பஸ்ஸின் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி நிற்கும் கணவனைப் பார்த்துக் கேட்கிறாள்.

''அய்யாவுக்கு உள்ளூர் பிளேன் எல்லாம் வசதிப்படாதும்மா. போறதா இருந்தா அமெரிக்கா, லண்டன், ஜப்பான் மாதிரி தொலைதூரப் பயணம்தான். இருக்



கட்டும்; ஒரு சான்ஸ் அடிக்காமயா போயிடும்?''

''அய்யய்யே... அப்படியின்னா நீங்க பிளேன்லே போனதே இல்லையா?''

அவளின் ரகசியமான சீண்டலில், கொஞ்சம் முகம் சிவக்கிறான் அவன்.

''நீ மட்டும் போயிருக்கியோ?''

''உம்... டில்லி வரைக்கும்.''

''ப்பூ... இதுக்குத்தானா இந்த அலட்டல்? பாரு, நாம பெங்களூருக்குப் பிளேன்லே போறோம்..''

அவள் சிரிக்கிறாள்.

''குழந்தை மாதிரி இது என்ன போட்டி.. இங்கே இருக்கிற பெங்களூருக்கு இருக்கவே இருக்கு பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்.. அங்கே யிருந்து உங்க அத்தானோட ஃபார்முக்கு சைக்கிள் ரிக்ஷா...''

மீராவின் கண்கள், இதைச் சொல்லும் போது குறும்பில் 'பளிச்' சிடுகின்றன.

''இரு... உன்னை பஸ் புறப்பட்டதுக்கு அப்புறம் கவனிச்சுக்கறேன்.''

அவன், ஜன்னல் கம்பியில் பதிந்திருந்த அவளுடைய மருதோன்றிச் சிவப்பேறிய விரல்களை — தனது உள்ளங்கையால் பொத்த —

''இந்த ஸீட்டுக்கு யாராவது வர்றாங் களா?''

மீரா, வெடுக்கெனத் தன் விரல்களை உள் பக்கமாய் இழுத்துக் கொண்டு திரும் பிப் பார்க்கிறாள்.

சராசரி உயரத்துக்கும் சற்றே அதிகமாய், கஞ்சி மொட மொடப்பு சேலை கசங்காமல் ஒரு கையால் நளினமாய்ப் பிடித்தபடி ஒரு பெண்...

வசீகரமான நீண்ட கண்களிருந்தும், சிரிப்பில்லாத சிடுசிடுப்பான முகம்.

''வர்றாங்க...''

மீரா, கொஞ்சம் தயக்கத்துடன் சொல்ல, அவள் 'சட்'டென அதே வரிசையின் இன் னொரு பகுதிக்கு நகருகிறாள்.

''வர்றாங்க, வரல்லைங்கறதைப் பளிச் சுனு சொல்லக் கூட இத்தனை யோசனை..."

மெல்லிய குரலில் அந்தப் பெண் முனகினாலும் — வார்த்தைகள் மிகத் தெளி வாய்...

கீர்த்திக்குள் வழக்கமான கோபம் எகிறு கிறது.

''அது என்ன... இவ கேட்டா உடனே 'டக்'குனு எழுந்து பதில் சொல்லணும்னு ஏதாவது சட்டம் இருக்கா என்ன.. இரு... உள்ளே வந்து ரெண்டு தட்டு தட்டறேன்.''

''ஐயோ... வேண்டாம்...''

மீரா, அவனது விரல்களைச் சேர்த்துப் பிடித்துக் கொள்ள சமய சந்தர்ப்பம் தெரியாத நாகு — இருவருக்கிடையேயும் மூக்கை நுழைக்கிறார்.

''கீர்த்தி... அவங்க யாரு தெரியுமோ?''

''யாரா இருந்தா எனக்கென்ன?''

''என்னடா அப்படிச் சொல்லிட்டே? டாக்டர் தெய்வநாயகின்னு கேள்விப்பட்ட தில்லே? உங்க சித்திக்குக் கடைசி பிரசவம், அத்தையோட தலைச்சன் பிரசவம் — எல்லாம் இவங்கதான் பார்த்தாங்க. நல்ல கைராசிக்கார டாக்டரம்மான்னு ஊரே சொல்லும்...''

''.......''

''அது மட்டுமில்லே... எம். எல். ஏ. தருமராஜனோட மூத்த மருமக.. அதாண்டா.. உன்னோட காலேஜிலே ஒரு வருஷம் படிச்சானே குமரன்...''

''ஆமா...''

''அவனோட பெண்டாட்டி. ஒரு குழந்தை கூட இருக்கு. இந்த டாக்டரம்மா வுக்கும் அவனுக்கும் ஒத்து வரல்லே. இவங்க படிச்சவங்க... செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு.. எம். எல். ஏ. தருமராஜனைத் தெரியுமில்லே? மோசமான ஆளு. வீட்டுக்கு வந்த பொண்ணுகிட்டே எப்படி நடந்திட்டாரோ என்னமோ!''

''ஆனாலும் குமரன் நல்லவனாச்சே மாமா...''

''என்னத்தை நல்லவன்? காலேஜ்லே பரீட்சை சமயத்துல கேள்வித்தாளை அவுட்டாக்கினவன் நல்லவனா? இவனால காலேஜே சீரழிஞ்சுதுன்னுதானே — இவனைக் காலேஜை விட்டுத் தூக்கினாங்க. அப்பன் புத்தியில் பாதியாவது இவனுக்கும் இருக்காதா... மகாலட்சுமி மாதிரி டாக்டர் பெண்டாட்டி... அவளை டைவர்ஸ் பண்ணிட்டு, மோட்டார் சைக்கிள்லே ஊரைச் சுத்தறான்...''

என்னதான் நாகுமாமா சொன்னாலும் மீராவுக்கு அந்தப் பெண் மீது — பரிவோ, பச்சாதாபமோ பிறக்கவில்லை. அதற்குக் காரணம் — அவள் சொல்லி விட்டுப் போன வார்த்தைகளாகக் கூட இருக்கலாம்.

கீர்த்திக்கு எதுவுமே மூளையில் பதிய வில்லை. அவனது கவனமெல்லாம் — நாகுவையும், அப்பா, சித்தப்பாவையும் சீக்கிரமாய் அந்த இடத்தை விட்டுக் கிளப்பு வதிலேயே இருக்கிறது.

''சரி... சரி... இந்த மாதிரி பிரைவேட் பஸ் எல்லாம் சொன்னா — சொன்ன நேரத்துல கிளப்ப மாட்டாங்க. அப்பாவுக்கு எட்டு மணிக்கெல்லாம் சாப்பிட்டு, ஒம்பது மணிக்கெல்லாம் படுத்துப் பழக்கம். மணி இப்பவே ஏழே முக்கால்... வண்டி ஏத்தி யாச்சு இல்லே? கிளம்புங்களேன்...''

''போய்ச் சேர்ந்து லெட்டர் போடும்மா.

''அந்த ஸ்கூலில் பணம் பயங்கரமாப் பிடுங்கறாங்க.''

''அப்படியா?''

''ஆமாம்... பில்டிங் ஃபண்டோட மட்டுமில்லாம கட்டிடத்தை அவ்வப் போது ரிப்பேர் பண்ண ரிப்பேர் ஃபண்ட், வொயிட் வாஷிங் ஃபண்டெல் லாம் கூடக் கேட்கிறாங்க!''

— வி. கி. குமார்.

அவன் சோம்பேறி.. நீதான் போடணும்..."

இது அப்பா..

இத்தனை நேரம் வரையில், முதுகுக்குப் பின்னால் இரு கைகளையும் கட்டிக் கொண்டு, கிழக்கேயும், மேற்கேயும் பார்த்துக் கொண்டிருந்தவர், அவசரமாய்ச் சொல்கிறார்.

''கீர்த்தி... கையில இருக்கற பணம் போதுமா. ஹனிமூன் போறப்ப — கணக்கு பார்த்துச் செலவழிச்சிட்டிருக்க முடியாது. எதுக்கும் இந்தப் பணத்தை வச்சுக்க. நீ வச்சுக்காதே... மீராகிட்டே கொடுத்து வை...''

மீரா, கீர்த்தியின் தந்தையையே ஒரு கணம் இமைக்காமல் பார்க்கிறாள். 'சட்' டெனக் கண் கலங்குகிறது.

'எல்லா அப்பாக்களுமே இப்படித்தான் மேலே பாறையாகவும், உள்ளுக்குள் பஞ்சாகவும் இருப்பார்களோ..?'

நாகு இதற்குள் பஸ்ஸுக்குள் வந்து — எம். எல். ஏ. மருமகளிடம் இரண்டு வார்த்தை பேசி விட்டு, மீராவிடம் கீர்த்தியின் முகூர்த்த வேஷ்டியும், பாலிகை கிண்ணங்களும் அடங்கிய பிளாஸ்டிக் பையைத் தருகிறார்.

''உள்ளே வைக்க முடியலை..''

''பரவாயில்லே...''

''அந்தப் பாலிகைக் கிண்ணமெல்லாம் உடையக் கூடாது. குடித்தனம் நடத்தப் போற வீட்டுல — பரண் இருந்தா ஒரு பக்கமாப் போட்டு வை...''

''.........''

''மஞ்ச வேஷ்டி அப்படியே இருக்கட்டும். இன்னும் திருப்பதி பிரார்த்தனை ஒண்ணு இருக்கு. அப்ப முகூர்த்த வேஷ்டியோட அவனும், கூறைப் புடவையோட நீயுமாத் தான் போகணும்...''

''சரி மாமா...''

நாகு, அவசரமாய்த் தம் கண்களைத் துடைத்துக் கொண்டே சொல்கிறார்.

''அம்மா... ஏதோ கோபத்துல அப்பப்போ சீன வெடிச்சரம் மாதிரி வெடிக்கிறேனே தவிர — எனக்கு இந்தக் குழந்தை மேல அலாதிப் பிடிப்பு உண்டு... கொஞ்சம் பிடிவாதக்காரன் என்னை மாதிரி. நீதான் அனுசரிச்சிண்டு போகணும்.''

''......''



அவர், இவ்வளவு பேசியதே அதிகம் என்பது போல, பிளாஸ்டிக் பையை அவளிடம் கொடுத்து விட்டு பஸ்ஸை விட்டிறங்க...

கீர்த்தி, தனது சூட்கேஸை எடுத்து வந்து தலைக்கு மேலே உள்ள லக்கேஜ் வைக்கும் இடத்தில் வைத்து விட்டு, மீராவின் பக்கத்தில் அமருகிறான்.

''ஏய்.. வசதியா உட்கார்ந்துக்கோ..''

''நான் வசதியாத்தான் உட்கார்ந்திருக்கேன்...''

''நடுவுல இருக்கற கைப்பிடியைப் பின்னால தள்ளி விடட்டுமா...''

அவன், அவளைப் பார்த்து விஷமமாய்ச் சிரிக்கிறான்.

''ஏன்னா, கைப்பிடி இருக்கிறது எனக்கு வசதியா இல்லே...''

அவனது ஆர்வமும், கண்களில் மின்னும் காதலும் மீராவுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

ஒரு பெண்ணைத் தொடுவதிலும், அவளுடன் இப்படிப் பேசியே தன் வசம் இழுத்துக் கொள்வதிலும் ஆணுக்கு இத்தனை தீவிரமா...!

இதே ஆர்வமும், ஏக்கமும் கடைசி வரை இருக்குமா...?

எப்படி இருக்கும்? நாலு பேர் எதிரில் பஸ்ஸில் மனைவியை ரகசியமாய்ச் சீண்டுகிற புதுக் கணவன் — சரியாய் ஒரே வருஷத்தில் — இரண்டு படுக்கையறை கொண்ட ஃபிளாட்டில் கூடத் தன்னந்தனியனாய் — பெண்டாட்டியின் மூச்சுக் காற்றைக் கூட விரும்பாதவனாய் மாறுவதில்லையா என்ன...?

இதோ — இந்த டாக்டரம்மாவும் அவள் கணவனும் கூட கல்யாணமான புதுசில், இப்படியெல்லாம் அசடு வழிந்திருப்பார்கள் இல்லையா...?

கீர்த்தி — அவளது பஞ்சு போன்ற இடுப்பில் — மிருதுவாய்த் தடவுகிறான்..

''அதுக்குள்ள தூக்கமா?''

''உம்ஹூம்...''

''வீடியோவுல நல்ல லவ் சப்ஜெக்டா போட்டாத் தேவலை...''

''இல்லே... திருவிளையாடல் போடப் போறாங்க.. இப்பத்தான் ஒரு ஆள் கேசட்டைக் கொண்டு வந்து கண்டக்டர் கிட்ட கொடுத்துட்டுப் போனான்..''

''போச்சுடா...''

கீர்த்தி அலுத்துக் கொண்ட அதே நேரத்தில் — பஸ்ஸில் பயணிகள் ஏறுமிடத்தில் ஒரே பரபரப்பு...

கீர்த்தியும் ஆவலுடன் எட்டிப் பார்க்கிறான்.

''எம். எல். ஏ. தருமராஜன் தான் வி. ஐ. பி. ஸீட்டுக்கு வர்றாரு.. நான் அப்பவே சொல்லலே...''

பின்னால் யாரோ பேசிக் கொள்கிறார்கள்.

டாக்டர் தெய்வநாயகி, வண்டியை விட்டு இறங்க முயற்சி செய்கிறாள்.

தொடரும்


கிரெடிட் கார்ட்:

வசதியா? வேதனையா?

மாதத்தின் முதல் வாரம். விதான் டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸில் கலகலப்பாய்க் கூட்டம். கவர்ச்சியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள மளிகைப் பொருள்களைத் தேர்ந்தெடுத்து, தள்ளு வண்டியில் அல்லது கூடையில் நிரப்பிக் கொண்டு 'பில்' கவுண்டருக்கு வருகிறார்கள் வாடிக்கையாளர்கள். ''அம்மா! ப்ளீஸ், இது எனக்கு...'' என்றபடி பெரிய சாக்லேட் பொட்டலத்தை எடுத்துக் கூடைக்குள் போடுகிறான் ஒரு சிறுவன். அநேகமாக அத்தனை பேரும் பணத்துக்குப் பதிலாக நீட்டுவது கிரெடிட் கார்ட் என்கிற கையடக்கமான பிளாஸ்டிக் அட்டையைத்தான்!

கையை விட்டுப் பணம் கொடுக்காமல் கார்டைக் காட்டிப் பொருள்களை வாங்கிச் செல்வது ஒரு மிகப் பெரிய சௌகரியம் என்பதை மறுக்க முடியாது. பெரிய தொகையைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையின்றி 'ஷாப்பிங்' செய்யலாம்.

ஊர் ஊராகச் சென்று வர்த்தகம் வளர்க்கும் பெரிய அதிகாரிகள் அல்லது விற்பனைப் பிரிவைச் சேர்ந்தவர்கள், 'பணம் போதுமா? ஊர் திரும்ப டிக்கெட்டுக்குக் குறையுமா?' போன்ற சில்லறைக் கவலைகள் இன்றி முழு மூச்சுடன் வர்த்தக அபிவிருத்தியில் ஈடுபடலாம்.



டேவிட் — குடும்பத்துடன்

இல்லத்தரசிகள் அவசரமாக, அவசியமான பொருள்கள் வாங்க வேண்டி வந்தால் மாதக் கடைசியாயிற்றே என்று தயங்க வேண்டாம்!

ஆனால்....

கையை விட்டுப் பணம் கொடுக்க வேண்டாம் என்னும்போதே தேவைக்கதிகமாகப் பொருள்களை வாங்கும் அபாயமும் கிரெடிட் கார்டினால் உருவாகி விடுகிறதல்லவா...?

சில கிரெடிட் கார்ட் உரிமையாளர்களிடம் இக் கேள்வியைக் கேட்டோம்:

''எனக்குக் கிரெடிட் கார்ட் கிடைத்த புதிதில் ஒரு 'ஜோரில்' பல பொருள்களைச் சக்திக்கு மீறி வாங்கத்தான் செய்தேன். ஆனால் சில மாதங்கள் கழித்து என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு விட்டேன்'' என்கிறார் சுஜாதா.

'விதான்' கடையில் தள்ளு வண்டியுடன் ஷாப்பிங் செய்து கொண்டிருந்த டேவிட்,

''நான் மர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன். வியாபார நிமித்தமாக வெளியூர்களில் செலவுகள் நேரும்போதும் சரி, வீட்டுக்காகப் பொருள்கள் வாங்கும் போதும் சரி, செலவுக் கணக்கை எழுதி வைத்துக் கொள்ளும் தலைவலி கிரெடிட் கார்டினால் ஒழிகிறது. என்னென்ன செலவுகள் செய்தோமோ அவற்றுக்கான பில்களை ஒன்று சேர்த்துக் கிரெடிட் கார்ட் நிறுவனமே நமக்கு மாதா மாதம் அனுப்பி வைக்கும். போன மாதம் இன்னின்ன செலவுகள் செய்துள்ளோம் என்பது தெளிவாகத் தெரிவதால் அடுத்த மாதத்துக்கு பட்ஜெட் தயாரித்துக் கொள்ளலாம்'' என்கிறார்.

"**பெ**ரிய தொழிலதிபர்கள், செலவுக் கணக்கு வைத்துக் கொள்ள நேரமில்லாத

நேற்றுவரை நந்தவனம்

அனுராதா ரமணன்

"இந்த பஸ் வேண்டாம் ரவி..."

டாக்டர் தெய்வநாயகி, பஸ்ஸின் ஜன்னலருகில் நின்ற தனது சகோதரனிடம் குமுறும் குரலில் சொல்கிறாள்.

"உஷ்... சப்தமாப் பேசாதே. அந்த ஆள் காதுல விழுந்து தொலைக்கப் போகுது... இதைப் பாருக்கா, நீ இப்ப வண்டியை விட்டு இறங்கினா. அவருக்கு இன்னும் மண்டை கனம் ஏறிக்கும். நீ லட்சியமே செய்யாதே.."

தெய்வநாயகியின் தம்பி, தன் தமக்கையைப் பிடித்து உட்காீர்த்தி வைக்கிறான்.

"பேசாம, நீயும் வந்திடறியா?"

"நானா... என்னக்கா இப்படிப் பயந்து சா்கறே. குழந்தை இளவரசுவை அம்மா ஒருத்தியாலே கவனிக்க முடியுமா? ஆச்சு... பஸ் கிளம்பப் போகுது. இத்தனை பேரு இருக்கிறச்சே. அந்த மனுஷன் உன்னை என்ன செஞ்சிட முடியும்? மெட்ராஸ் போனவுடனே மாம்பலத்துல நம்ம வண்டி நிற்கும். ஏறிட்டு வீட்டைப் பார்க்கப் போவியா? இந்த மெடிகல் கான்ஃபரன்ஸ் உனக்கு எப்பேர்ப்பட்ட பேரை வாங்கிக் கொடுக்கப் போவுது பாரு... அப்ப, நான் வரட்டுமா?"

தெய்வநாயகி — முன் வரிசையைப் பார்க்கிறாள். மீசையை ஒரு கையால் நீவியபடியே தர்மராஜனும் ஓரப் பார்வையால் மருமகளை அளக்கிறார்.

"ஏண்டா கருப்பையா.. குமரனை எங்கேடா காணும்?"

"வந்திருவாருங்க... உங்களை வழியனுப்ப என்னிக்கு அவரு வரத் தவறியிருக்காரு?"

"அவன் வந்தா, டாக்டரம்மா தலை — அவுங்க கழுத்துல இருக்குமாடா.. ஏற்கெனவே சீவிப்பிடறதா சபதம் போட்டிருக்கான்!"

— தருமராஜன் சிரிக்கும் போது இருட்டுக் குகை போல் காவிப் பழுப்பேறிய வாயில் ஓரிரண்டு தங்கப் பற்கள் பளீரிடுகின்றன.. என்னதான் பட்டை பெல்ட்டைப் போட்டு அடக்கி வைத்திருந்தாலும் எக்காளமாய்ச் சிரிக்கும் போது — தொந்தி செல்லக் குழந்தை போல் குதிக்கிறது.

"தலைவருக்கு எல்லாமே டமாசு தான்..."

ஜால்ரா போடுவதற்கென்றே வந்துள்ள கூட்டம் — தாளம் தப்பாமல் பின்பாட்டுப் பாட...

தெய்வநாயகி வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு உதட்டுக்குள் முணுமுணுக்கிறாள்.

"என்னடா சொல்லுறா டாக்டரம்மா?"

"அதென்னவோ இங்கிலீசுல திட்டுறாங்க தலைவா..."

"வாயைப் பொத்திட்டு உட்காரச் சொல்லு. இல்லே — எம் மகனோட சபதம் நிஜமாவே நிறைவேறிடும்....!"

மீராவுக்கு இருந்தாற்போலிருந்து இந்தச் சூழ்நிலை பிடிக்கவில்லை. கண்களை மூடி, ஜன்னலோரமாய்ச் சாய்ந்து கொள்கிறாள்.

"என்ன மீரு... வண்டி கிளம்பவே இல்லையே.. அதுக்குள்ளே தூக்கமா?"

"தூக்கமில்லே."

"பின்னே?"

"அந்த எம். எல். ஏ. பேசறதைக் கேட்கவே பிடிக்கலே.. சம்பல் கொள்ளைக்காரன் மாதிரி மிரட்டறான்."

"அது அவரோட ரத்தத்தோட பொறந்த குணம்... இதைச் சொல்றியே... இவரு பையனை — காலேஜ்லே, பரீட்சை சமயத்துல பேப்பரை அவுட்டாக்கினதுக்காக காலேஜ் வாசலையே மிதிக்கக் கூடாதுன்னு பிரின்ஸ்பால் சொல்லிட்டாரு.. அவனும் சரிதான்னு டாட்டா காமிச்சிட்டுப் போயிட்டான். ஆனா, இவர் அந்த பிரின்ஸ்பாலைக் கதறக் கதற ஊரை விட்டு விரட்டியிருக்காரு பாரு.."

"ச்சே... சுத்த மோசம்.."

மீரா முகத்தைச் சுளிக்க, கீர்த்தி அவளுடைய கரத்தைப் பிடித்து, ஒவ்வொரு



"ராங் நம்பர்கிட்டே இவ்வளவு நேரம் என்ன பேசிக்கிட்டிருந்தே?"

"அடுத்த முதல்வர் கருணாநிதியா, ஜெயலலிதாவாங்கறதைப் பத்தித் தான்!"

— ஞா. ஞானமுத்து.

வளையலாய்ப் புரட்டிப் பார்க்கிறான்.

"எல்லாமே தங்கமில்லையா... நடு நடுவுல கண்ணாடி வளையலா.. நான் அத்தனையும் தங்கம்னு நினைச்சுட்டிருந்தேன்..."

மீரா சிரித்தபடி, கையை இழுத்துக் கொள்கிறாள்.

"ஒரு டஜன் தங்க வளையல் போடற அளவுக்கு வசதி இருந்திருந்தா — எங்க அப்பா, என்னை உங்களுக்குக் கொடுத்திருக்க மாட்டார்.."

அவன், அவளுடைய உள்ளங்கையில் கிள்ளுகிறான்.

"உனக்கு வாய் ஜாஸ்தி."

மீரா ஓரக் கண்ணால் அவனுடைய முகத்தை ஆராய்கிறாள்.

அதில் கோபமில்லை. குழந்தைத்தனமான உற்சாகம்தான் இருந்தது. அவள் சொன்ன வார்த்தைகளை அவன் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை என்று தெரிகிறது.

பஸ்ஸின் நீண்ட ஹாரனுக்கு இடையே மீராவுக்குத் தன் தாய் சொன்ன வார்த்தைகளும் ஒலிப்பது போல —

"இந்தா மீரா, பொதேல்னு கல்லைத் தூக்கிப் போட்டாப்பல எதையாவது பேசுவியே... அதையெல்லாம் தறைச்சுக்கோ. அதுவும் மாப்பிள்ளை ஒண்ணு சொன்னா, விளையாட்டாக் கூட, அதைக் கேலி செய்யற மாதிரி எதுவும் சொல்லாதே..."

"மனசுல இருக்கிறதைத் தாலி கட்டினவர்கிட்டே கூடவா மறைக்கணும்?"

"முக்கியமா தாலி கட்டினவர் கிட்டத் தாண்டி மறைக்கணும். ஆம்பிளை மனசு ஒரு சமயம் போல இன்னொரு சமயம் இருக்காது. பெண்டாட்டி எத்தனை இளக்காரமாப் பேசினாலும் — தனக்கு அவகிட்டே காரியம் ஆக வேண்டியிருந்தா அத்தனை பேச்சையும் சிரிச்சிட்டே தாங்கிக்கும். ஆனா, வேற எங்கேயாவது இடிபட்டுட்டு வீட்டுக்கு வந்து 'புருபுரு'ன்னு சில நேரங்கள்லே உட்கார்ந்திருக்கும். அப்பப் பார்த்து, விளையாட்டா நாம எதையாவது சொல்லப் போய், அதுவே பெரிய விஷயமாப் போய் ருத்ர தாண்டவமாடிடும்... எங்க அப்பா அடிக்கடி சொல்லுவார். ஒரு குதிரையை எங்கே தட்டினா காத்தாப் பறக்கும்னு தெரிஞ்சுக்கறதுக்கு முன்னாலே எங்கே தொட்டாக் குப்புறத் தள்ளும்கறதைத் தெரிஞ்சுப்பான் புத்திசாலியின்னு..."

அம்மா புத்திசாலிதான். இல்லாவிட்டால் அப்பா, சகலத்தையும் அவளிடம் ஒப்படைத்து விட்டு, நிம்மதியாய் இருப்பாரா?

வெளிப் பார்வைக்கு அந்த வீட்டில் அம்மாவுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை போலத்தான் தோன்றும். அப்பாதான் சத்தமாய்ப் பேசுவார்; தாம் தூம் என்று குதிப்பார்; விறைத்துக் கொண்டு உட்காருவார்.. அம்மா காப்பி தம்ளரும் கையுமாய்ப் புருஷன் பின்னாலேயே ஓடுவாள். அடிக்கடி 'எனக்கென்ன தெரியும்' என்பாள்... ஆனால் அப்பாவை இயக்குவதே அவள்தான் என்பது மீராவுக்கே சமீபத்தில் தானே தெரிந்தது...

அவளது எண்ண ஓட்டத்தை — முன் ஸீட்டில் அமர்ந்திருந்த பெண் கலைக்கிறாள்.

"டிரைவர்.. ஏழரைக்கு பஸ் புறப்படும்னு சொன்னீங்க.. மணி எட்டரை ஆகப் போறது. எப்பத்தான் கிளப்புவீங்க?"

"அவரைக் கேட்டு என்ன பிரயோசனம் பாமா. நம்ம எம். எல். ஏ. வண்டியில வர்றாரு இல்லே? அவர்கிட்டே இருந்து 'புறப்படு'ன்னு சிக்னல் வந்தாகணும்..."

பாமா என்று அழைக்கப்பட்ட அந்தப் பெண், தன்னை வழியனுப்ப வந்திருந்த தாயை அலட்சியமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, வேண்டுமென்றே குரலை உயர்த்தி, தருமராஜனிடம் இடக்காய்க் கேட்கிறாள்.

"என்ன எம். எல். ஏ. சார்.. பிளஷர்லே போக வேண்டியவரெல்லாம் பஸ்ஸுக்கு ஏன் வாரீங்க? இப்ப எங்க பாடில்ல திண்டாட்டமாப் போவுது?"

"யார்ரா அது?"

தர்மராஜன் எழுந்து நின்று, இரண்டாவது வரிசையைத் திரும்பிப் பார்த்த அதே கணத்தில் மீராவும் அவளைப் பார்க்கிறாள்.

இருபத்தைந்திலிருந்து முப்பது வரையில் எந்த வயசில் வேண்டுமானாலும் அவளை நிறுத்தி வைத்துப் பார்க்கலாம். ஆனால் அவளோ, தன்னைப் பதினெட்டு வயதுப் பெண் போல அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

அசப்பில் பார்த்தால் ஏதோ ஒரு சினிமா நடிகையை ஞாபகப்படுத்துவது போன்ற மேக்கப்...

"யாரு... சத்யபாமாவா?"

"ஆமாங்க..."

"என்ன திடுதிப்புனு... நீயும் நடிக்கப் போறியா..."

பாமா, அளவுக்குச் சற்று அதிகமாகவே தலையைக் குலுக்கி வெட்கப்பட்டாள்.

"அதுக்கெல்லாம் ஒரு ராசி வேணுங்க... என் ராசி — இந்த நொண்டிப் பொண்ணை

வளர்க்கிறதோட சரியாப் போயிடும்னு நினைக்கிறேங்க...''

பாமா,' ஜன்னலோரமாய்ச் சரிந்து உட்கார்ந்திருக்கும் சிறுமியை 'வெடுக்' கெனத் தூக்கிக் காண்பிக்க — சுமார் எட்டு வயது மதிக்கக்கூடிய அந்தப் பெண் குழந்தை — 'வீல்' என்று அலற...

''கத்தாதே சனியனே.. அய்யாவைப் பார்த்துக் கும்பிடு போடு...''

தர்மராஜன் அமர்த்தலாய்க் கையசைக்கிறார்.

''இருக்கட்டும்... உங்க அக்கா மக தானே..''

''ஆமாங்க. என் பிராணனை எடுக்கறதுக்காகவே இப்படி ஒண்ணைப் பெத்து, என் தலையிலக் கட்டிட்டுப் போயிருக்கா. நொண்டி முடமா இருந்தாலும் பரவாயில்லே. அநியாயத்துக்குப் பிடிவாதம். என்னாலே தாங்கவே முடியலே. அதான் கொண்டு விட்டுடலாம்னு...''

''நல்லாச் சொன்னே போ... பட்டணத்துல இப்ப உங்க அக்காதான் டாப் ஸ்டார்.. தெரியுமில்லே?''

''தெரியுமுங்க. அவ டாப்லே இருக்க ஜும்கறதுக்காக, என்னைப் பள்ளத்துல போட்டுத் தேய்க்கறது நியாயமா?''

''சினிமாவுக்கும் அரசியலுக்கும் நியாய அநியாயமே கிடையாதே பாமா... அது கிடக்கட்டும். பாக்கு வெட்டியில் வெட்டறாப்பல பேசுவியே.. பேசாம எங்க கட்சியில் சேர்ந்துடேன். ஒவ்வொரு மேடையிலேயும் புகுந்து விளையாடலாம்.. மேடைப் பேச்சுக்கு மட்டும் ஒரு மணி நேரத்துக்கு ஆயிரம் ரூபா தர்றேன்..''

தர்மலிங்கம் — பேச்சோடு பேச்சாய் — மட்டும் என்பதை அழுத்திச் சொன்ன விதத்தை, அவரது தொண்டர்கள் ரசித்துச் சிரிக்க — சத்யபாமாவுக்குப் புரிந்ததோ இல்லையோ 'களுக்'கெனச் சிரிக்கிறாள்.

''நான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேங்க...''

''அப்படி போடு... மாட்டினவன் யாரு...''

''பரமக்குடி மாப்பிள்ளைங்க...''

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே — காதைத் துளைக்கும்படியாக மோட்டார் சைக்கிள் சப்தம்.

''குமரன் வந்துட்டான்.''

கீர்த்தி, மீராவின் கன்னத்தில் முகத்தைத் தேய்த்தபடி சொல்கிறான்.

மீரா, ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறாள். ஏதோ டிடர்ஜெண்ட் சோப்பு விளம்பரம் மாதிரி — வெள்ளை வெளேர் மல் வேஷ்டி, ஜிப்பாவுடன் முப்பது வயது இளைஞன் மோட்டார் சைக்கிளில் மிடுக்காக... ஒரு கையில் புகையும் சிகரெட்.. இன்னொரு கையில் சுருட்டிய தினசரி...

மொத்தத்தில் ஐயனார் சிலை ஒன்று மாறுவேடம் போட்டு, குதிரைக்குப் பதிலாக, மோட்டார் சைக்கிளில் ஏறி வந்தாற் போல...

இமைக்கும் பொழுதில் அவன் பார்வை தெய்வநாயகியின் பக்கம் விசிறாமல் இல்லை... அவளோ — இவனைக் கண்டதும் தலையை, உட்பக்கமாய் இழுத்துக் கொள்கிறாள்.



''வாடா... எங்கேடா போயிட்டே...''

''ஃபாக்டரியில தகராறுப்பா.. பேசி முடிக்கிறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு... நீங்க ஆறரை மணிக்கு வைத்தியர் தெருவுல அந்த வீட்டுல இருப்பீங்கன்னும் பொட்டியைக் கரெக்டா ஆறரைக்குக் கொண்டு போய்க் கொடுத்திடுன்னும் அம்மா சொன்னாங்க... ஏழே காலுக்குத்தான் நீங்க கிளம்புவீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனாலும் என்னால லேட்டாயிடக் கூடாதுன்னுதான் சூட்கேஸை நம்ம கருப்பையாகிட்டே கொடுத்தனுப்பிட்டேனே...''

''பொட்டி வந்து சேர்ந்துடுச்சுப்பா... எப்ப எலக்சனுலே நின்னாலும் டெபாஸிட் பணம் உன் கையாலேதான் கட்டறது வழக்கம். அதே மாதிரி எப்ப ஊருக்குக் கிளம்பினாலும் நீ வந்து வழியனுப்பறது தானேடா பழக்கம்..''

''இவரு பெரிய்ய சக்ரவர்த்தி.. இவரை வழியனுப்ப இந்த ராஜகுமாரன் வரணுமாக்கும். வைத்தியர் தெருவுல புதுசா ஒருத்தியைப் பிடிச்சிருக்காரு. இவரை எல்லாம்...''

தெய்வநாயகி, தம்பியிடம் புலம்புகிறாள்.

''உனக்கு இத்தனை அவஸ்தைப்பட்டும் வாய் போகலை அக்கா...''

இப்பொழுது கீர்த்தி, மீராவின் தோள் பட்டையில் இடிக்கிறான்.

''எல்லாப் பொம்பிளைங்களையுமே வாய்தான் கெடுக்கிறது...''

குமரன் அப்பாவுடன் ஏதோ பேசிவிட்டு, அப்படியே கண்டக்டரின் தோள் மீது கை போட்டபடி இறங்குகிறான்.

''கிளம்பலாம்பா... ரைட்டு..''

கண்டக்டருக்குப் பதிலாக, குமரனே, டிரைவருக்கு உத்தரவு பிறப்பிக்க – டிரைவரும் – குமரனைப் பார்த்துச் சிநேகமாய்ச் சிரித்தபடி வண்டியைக் கிளப்ப –

பஸ் நிலையத்திலிருந்து கிளம்பி மெயின் ரோடுக்கு மெள்ள வர...

பஸ்ஸை ஒட்டியே மோட்டார் சைக்கிளில் வந்த குமரன் தெய்வநாயகி அமர்ந்திருந்த

''காலம் ரொம்பத்தான் முன்னேறிடிச்சு.''

''எப்படிச் சொல்றீங்க?''

''பாருங்களேன்... இந்த ஆபீஸ்ல, 'எக்காரணம் கொண்டும் கொடுத்த லஞ்சம் திருப்பித் தரப்பட மாட்டாது'ன்னு போர்டே வெச்சிருக்காங்க!''

— சீர்காழி வி. ரேவதி.



ஜன்னலை ஒட்டியே தன் வாகனத்தைச் செலுத்த –

அவளோ, கழுத்தை நொடித்துக் கொள்கிறாள்.

''ஹலோ டாக்டர்... எப்படியிருக்கீங்க?''

''.....''

''நீங்க எப்படி இருந்தா எனக்கென்ன... இளவரசு எப்படி இருக்கான்?''

''.......''

''எல்லாத்துக்கும் மௌனமா இருந்துட முடியாது டாக்டர்... என்னிக்காவது ஒரு நாள் – என் குழந்தையை என்கிட்டே ஒப்படைச்சுத்தான் தீரணும்...''

மீரா முகம் சுருக்குகிறாள்.

''என்ன ஊருப்பா... எப்பப் பாரு சண்டைய மடியில கட்டிட்டு அலையறது..''

''ஹ... மெட்ராஸ் அப்படியே சந்யாசிங்க ஊராக்கும். அம்மணி... இந்த மண்ணுக்குக் கொஞ்சம் சுரணை அதிகம். அது சண்டையானாலும் சரி, வேற சமாசாரமானாலும் சரி. மத்தவங்களை விட ஒரு டிகிரி கூடத்தான். பொறுத்துக்க. பெங்களூர்லே புரிஞ்சுப்பே...''

பஸ் முக்கி முனகி வேகமெடுத்த ஐந்தாவது நிமிஷத்திலேயே பெரிய குலுக்கலுடன் நிற்கிறது...

வெளியே –

பை, படுக்கையுடன் நாலு பேர் கொண்ட குடும்பமே அலையக் குலைய ஓடி வருகிறது.

''ஸ்டாப்... ஸ்டாப்!''

''மெட்ராஸ் வரைக்கும் ஒரேயொரு டிக்கட்தாங்க இருக்கு...''

''ஐயோ... எப்படியாவது நாங்க அட்ஜஸ்ட் பண்ணிக்கிறோம். எங்கப்பா சாகக் கிடக்கார்.. மருமகளையும், குழந்தைகளையும் பார்த்தே ஆகணும்னு...''

நாலு பேரில் – குடும்பத் தலைவன் – அழ மாட்டாத குறையாய்க் கெஞ்ச, கண்டக்டர் நிர்தாட்சண்யமாய் மறுக்கிறார்.

''யோவ்! ஓவர் லோடு ஏத்தி, என்னை மாட்டிக்கச் சொல்றியா.. வேணுமானா நீ ஒரு ஆள் ஏறு. மத்த பேரைப் பின்னாடி பஸ்லே வரச் சொல்லு. வழியில செக்கிங்லே மாட்டினா நாங்கதான் அவதிப்படுவோம்.''

கீர்த்தி, மீராவின் இடக்கை விரல்களைத் தன் வலக்கை விரல்களோடு பின்னிக் கொள்கிறான்.

கண்டக்டரோ நேரே கீர்த்தியிடம் வந்து நிற்கிறார்.

''சார், உங்க ஒய்ஃபை நாலு ஸீட் தள்ளி ஒரு பொம்பிளை மாத்திரம் உட்கார்ந்திருக்காங்க.. அங்கே போய் உட்காரச் சொல்லலாமா?''

''ஏன்?''

கீர்த்திக்கு, மூக்கு நுனியில் கோபம் வந்து நாற்காலி போட்டு உட்காருகிறது.

(தொடரும்)



அமரர் கல்கி நினைவாக— பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப் படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசிலித்துப் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

○ **கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.**

- உறையின் மேல் பொன் விழா சிறுகதை/நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற சுயவிலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

○ **போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4வ ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.**

○ **பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.**

○ **எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.**

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

நேற்றுவரை

நந்தவனம்

4

''என்னு கேட்டா எப்படி சார்... அங்கே ஒரு பொம்பிளை - கைக்குழந்தைக்காரி உட்கார்ந்திட்டிருக்காங்க. இல்லே, அந்தம்மாவை முன்னாலே வரச் சொல்றேன்... நீங்களும், இந்த சாருமா அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் பின்னாடி உட்காருங்க...''

''வேற யாரையாவது அட்ஜஸ்ட் பண்ணிக்கச் சொல்லுங்க... இவ தனியா வரப் பயப்படுவா...''

கீர்த்தி, தன் மனைவியின் கையைத் தன் பிடியிலிருந்து விடாமலேயே சொல்கிறான்.

எங்கே, கைப் பிடியைத் தளர்த்தினால், அவள் எழுந்து விடுவாளோ என்கிற பயம்...

''பார்க்கறதுக்குப் படிச்சவங்களா இருக்கீங்க... நீங்களே வேணுமானாலும் எழுந்து நின்னு பாருங்க.. வேற யாரையாவது நகர்த்த முடியுமான்னு... நீங்க ஒரு ஜோடி தான் மாத்தி உட்கார வசதியா இருக்கீங்க....''

கண்டக்டர் சொல்லி முடிப்பதற்குள் - முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்த தர்மராஜன், இடக்காகச் சொல்கிறார்.

''சார்தான் சொல்லிட்டாரில்லே... தனியா வர்றதுக்குப் பெண்டாட்டி பயப்படுவான்னு... வண்டியில முன் பக்கம் மாத்திரம் காலையில எட்டு மணிக்கு மெட்ராஸ் போகப் போவுது. பின் பக்கம் நிதானமா மதியம் ஒரு மணிக்கு வந்து சேரும் இல்லே... அதான், சம்சாரம் பயப்படறாங்க... இவங்களைச் சொல்லிக் குத்தமில்லைய்யா. நாடே அப்படித்தான் இருக்குது... படிச்சவனுக்குப் பஸ்லே வர பாஸஞ்சர் கூட கொஞ்சம் அனுசரிச்சுப் போக முடியலே.... அப்புறம் எப்படி அரசியல்லே மாத்திரம் ஒத்துமை நிலவணும்னு பார்க்கறீங்க...''

கீர்த்தி, அந்த ஒரு இமைப் பொழுதில் உஷ்ணத்தின் உச்சிக்கே போய் விட்டான்.

''யோவ்! எங்கேதான் அரசியல் பேசறதுன்னு ஒரு நியதி கிடையாதா? நான் நகர மாட்டேன்... நீர் வேணுமானா உங்க மருமகளை நகரச் சொல்லுங்க...''

''தாராளமா. நான் அழைச்சிட்டு வந்து என் பக்கத்துல இடம் கொடுப்பேன்... அவ பக்கத்துல ஒரு பாட்டி இப்பவே சாமியாடுதே... நீ தூக்கி மடியில வச்சுக்கறியா.. ஆ... ங்... மாட்டே... சின்னப் பொண்ணா இருந்தா வச்சுப்பே..''

இதற்குள் தெய்வ நாயகி, கீர்த்தியை பார்த்துப் பெண் புலியாய்ச் சீறுகிறாள்.

''மிஸ்டர், மைன்ட் யுவர் பிஸினஸ். உங்களாலே இடம் கொடுக்க முடியாதுன்ன முடியாதுன்னு சொல்லிட்டுப் போங்க அதை விட்டு, என் கிட்ட எதுக்கு வம்புக் வர்றீங்க... அந்தக் காட்டாளுக்கும் எனக்கு ஒரு சம்பந்தமும் இல்லே..''

மீராவுக்கே கூட கீர்த்தி அப்படிப் பேசிய பிடிக்கவில்லை.

'எதற்காக வீண் வம்பை விலைக்கு வாங் வேண்டும்?'

இத்தனைக்கும் நடுவில், பஸ்ஸில் இட கிடைத்ததே மெடிகல் காலேஜில் இட கிடைத்தது போன்ற நிம்மதியில், வெளியே பெட்டியும் கையுமாய் நின்ற மகனிடமு மனைவியிடமும் இரைந்து கத்துகிறார் புதுசாய் ஏறிய பயணி.

''அடேய்... அடுத்த பஸ் பிடிடா..''

''சரிப்பா... நீ உட்காரு...''

''பரவாயில்லே... போகப் போக இட கிடைச்சிடும்... அம்மாவைப் பார்த்துக்கே மாலுக் குட்டி... தூங்கிடாதே அம்மாவாலே தூக்க முடியா கண்ணம்மா...''

''நானும் உன் கூட வர்றேம்பா...''

ஏழு வயதுச் சிறுமி, தாயின் பிடியிலிருந் திமிறிப் பார்க்கிறாள். பெற்றவள், மகளை ஓர் அதட்டல் போட்டு விட்டு, ஜன்ன பக்கம் சிரமப்பட்டு எம்பிக் குதித்து குதித்துச் சொல்கிறாள்.

''பணம் போனாப் போகட்டும். அவருக்கு ஆஸ்பத்திரிதான் வசதிய இருக்குன்னா இருக்கட்டும். இத்தனை நா செலவழிச்சாச்சு. கடைசி காலத்துல போ கையச் சுருக்கி, கஞ்சப் பட்டம் வாங்கிக் வேண்டாம்.''

''நான் வாயைத் திறக்க மாட்டேன்...''

''உங்க பையில கங்கை செம் வச்சிருக்கேன். போய்ச் சேர்ந்ததும், அப்ப வாயில ரெண்டு ஸ்பூன் விட்டுடுங்கோ...''

அனுராதா ரமணன்

''ஆகட்டும். நீ ஜாக்கிறதை... பணம் போதுமா?''

''ஒரு ராத்திரிதானே . சமாளிச்சுப்பேன்...''

மீரா, கீர்த்திக்கு மட்டும் கேட்கும் தொனியில் ரகசியமாய்ச் சொல்கிறாள்.

''சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்கிறது கொஞ்சம் கூட நன்னாயில்லே..''

''எனக்கும் தெரியறது... சண்டைய ஆரம்பிச்சிட்டேன். எங்கே நிறுத்தறதுன்னு தெரியலையே...''

அவனும் அதே தொனியில் சொல்கிறான்.

மீராவுக்குச் சிரிப்பு அடக்க மாட்டாமல்...

''இந்த ஒரு விஷயத்துல மட்டும், நீங்க அச்சு அப்படியே நாகு மாமாதான். சரி... வழி விடுங்கோ...''

''என்ன மீரா இது...''

அவள் பதில் பேசாமல், கையில் எடுத்த





''வேறே ஒண்ணுமில்லே...
அவருக்குக்
குடைச் சின்னம்.''

பிளாஸ்டிக் கூடையுடன் எழுந்திருக்கிறாள்...

''இது என்னத்துக்கு?''

''உம். உங்க வேஷ்டி, பாலிகைக் கிண்ணம்... வாட்டர் பாட்டில்...''

''எனக்குத் தாகமெடுத்தா?''

''எழுந்து வந்து கேளுங்கோ...''

அவள், அவனை ஜன்னலோரத்திற்கு நகரச் சொல்லி விட்டு, தன் ஸீட்டை விட்டு வெளியே வர முயற்சி செய்ய, உட்கார்ந்த நிலையிலேயே கீர்த்தி, அவளின் சின்ன இடுப்பில் உதட்டால் உரசுகிறான்...

'குப்'பெனச் சிலிர்த்துப் போகிறாள் மீரா. அவனைப் பொய்யாய் முறைக்கிறாள். அவனோ, உதட்டைத் தேய்த்தபடி அப்பாவி யாய்க் கேட்கிறான்.

''கூடைய நான் கொண்டு வந்து வைக்கட்டுமா?''

''ஒண்ணும் வேண்டாம்...''

அவள், பின் ஸீட்டுக்குப் போகும் போது, இவர்களின் பிரிவுக்குக் காரணமாய் இருந்த மனிதர், வியர்வை வழிய, 'தாங்க்ஸ்' சொல்கிறார்.

தர்மராஜன் சிறிது நேரம் இவர்களை முறைத்துப் பார்த்து விட்டு, பேச்சை மாற்று கிறார்.

''என்னப்பா கண்டக்டர்...; திருவிளை யாடலைத் தவிர வேற எதுவும் போட மாட்டியா... உன் பஸ்ஸில ஏறி, ஏறி, எனக்குத் திருவிளையாடல் வசனம் பூரா மனப்பாடமாயிடுச்சேப்பா...''

''அய்யா வரப் போறீங்கன்னு வண்டி கிளம்பறப்பதானே சொன்னாங்க... முன்னாலேயே தெரிஞ்சிருந்தா வேற படம் கொண்டாந்திருப்பேன்...''

மீரா, பஸ்ஸின் கடைசி ஸீட்டுக்கு முன்னால் இருந்த காலி ஸீட்டில் போய் உட்காருகிறாள்.

ஜன்னலோரமாய்க் கைக்குழந்தையுடன் - கறுப்புச் சிலையாய் கிராமத்துப் பெண்.

தன்னை முன்னிட்டுத்தான் பஸ்ஸில் இத் தனை தகராறே ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாதவளாய் - முகம் முழுக்கச் சிரிப்பாய், டீ.வி. திரையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

''அதுல என்ன... சினிமாப் போடு வாங்களா?''

''ஆமா.''

''இங்கிட்டிருந்து பார்த்தா நல்லாத் தெரியுமா?''

''நல்லாவே தெரியும்.''

''ஆங்...''

அவள், மீண்டும் ஒரு முறை, முதுகை நிமிர்த்திப் பார்க்க, அது நேரம் வரையில் தாயின் மார்பில் தலை புதைத்திருந்த கறுப்புக் குழந்தை, தன் சொர்க்கம் பறி போன பதைப்பில் வீறிடுகிறது...

''ஜோ... ஜோ... அழாதே ராசா. அங்கிட்டுப் பார்த்தியா. படம் காட்டப் போறாங்க. அப்பாரு கிட்டச் சொல்லுவியா... நானும் ஆத்தாளும் பஸ்ஸில் படம் பார்த்தோமின்னு... என் கண்ணு... பொட்டித் தங்கம்... காராம் பசு...''

மீராவுக்குச் சினிமாவை விட, அருகிலிருப்பவளின் பேச்சே ரசனைக்குரியதாய் இருக்கிறது.

கையிலிருந்த பிளாஸ்டிக் கூடையை இன்னும் கிழே வைக்கவில்லை. அதிலிருந்து, இரண்டு முறுக்கையும், அதிரசத்தையும் எடுத்து, பக்கத்திலிருந்தவளிடம் கொடுக்கிறாள்.

''யாருக்குத் தாயீ?''

''உனக்குத்தான்.. குழந்தை சாப்பிடுமா?''

''அது இன்னும் பால் குடிதான் தாயீ. ஆறு மாசம்தான் ஆகுது. அதும் அப்பாரு பட்டணத்துல கப்பல் நிறுத்தற டேசன்லே வேலை பார்க்கறாரு.... இங்கிட்டு என் தங்கச்சிக்குப் பாக்கு வெத்தலை மாத்தினாங்க... அவரு வர முடியலே... என்னைய அனுப்பப் பிரியமே இல்லேதான். பச்சைப் புள்ளக்காரியின்னு... நான்தான் மூணு நாளு அழுது, ஆகாத்தியம் செஞ்சி புறப்பட்டுட்டேன். நீங்களும் கல்யாணத் துக்குத் தான் வந்தீங்களா?''

''இப்பத்தான் கல்யாணமே முடிஞ்சிருக்கு... இன்னும் பத்து நாள் கூட

ஆகல்லே...''

இதைச் சொல்லும் போதுதான் திடீரென மீராவுக்கு வெட்கம் பற்றிக் கொள்கிறது...

அந்தப் பெண் குறுகுறுவென மீராவையே பார்க்கிறாள்.

''அடுத்த வருசம், இது மாதிரி ஒண்ணு பெத்துக்க. சும்மா தள்ளிப் போடாதே... வயசாகிப் பிள்ளைப் பெத்தா, பிள்ளையும் ஆரோக்கியமா இருக்காது... எங்கே, பால் சுரப்பே வத்திடுமில்லே...''

பேசிக் கொண்டு போனவள் - ரொம்பவும் பழகியவள் மாதிரி, மீராவின் காதோடு கிசுகிசுக்கிறாள்:

''நீங்க எல்லாம் பட்டணத்துப் பொம்பிளைங்க... தாய்ப் பாலு கொடுப் பீங்களா?''

''......''

''அய்யே, கேட்கறேனில்லே... புள்ளை பொறந்து, பெத்தவ பால் கொடுக்கறதுல இருக்கற நிம்மதியும், சுகமும் வேற எதுலேயும் இல்லே ஆத்தா... பாருங்க... பாருங்க... கடிக்கறான் இப்பவே... எனக்கு இவன் பொறந்தப்ப மூணு நாளு பாலே இல்லே... 'ஓ'ன்னு அழுவேன்.... என் ஆத்தாதான்... வெள்ளைப்பூண்டும், சோம்பும் கசாயம் வச்சுக் கொடுத்துக் கொடுத்து...''

மீரா, சிரிப்பைக் கைக்குட்டையில் அடக்கிக் கொண்டாள்.

வீடியோவில் திருவிளையாடல்....

முத்துராமன், சாம்பிராணி புகை போட்ட தேவிகாவின் கூந்தலை முகர்ந்து பார்த்துக் கொண்டிருக்க....

மீரா, மஞ்சள் படர்ந்த புது வேஷ்டியை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறாள்.

ஒன்பது மணிக்கெல்லாம் தூங்குகிறவள் இல்லை... ஆனாலும் இந்தப் பத்து நாள் அலைச்சலில், கண்களும், உடம்பும் கெஞ்சு கின்றன.

தூக்கமுமில்லாத, விழிப்புமில்லாத இரண்டுங்கெட்டான் நிலையில் அவள் மிதக்கிறாள்.

பொதிகை மலையிலிருந்து புறப்பட்ட தென்றலையும் தாண்டி, பக்கத்து ஸீட் பெண்ணின் குழந்தை பால் குடிக்(கு)
ஓசை....

மீராவுக்கு நெஞ்சு குறுகுறுப்பது போ(ல)
ஒருவிதப் பிரமை...

அடுத்த வருஷம் இந்த நாளுல குழந்(தை)
பெத்துக்கப் போறேனா....?

'ஆமா.... எத்தனை பெத்துக்(க)
போறோம்..? பிள்ளையோ - பொண்ணோ
ஒண்ணு... ஸிஸேரியன் கூடாது
வலிக்கணும். இடுப்பு வலியின்(...)
என்னன்னு தெரிஞ்சுக்கணும். இவர், எ(...)
பின்னாலேயே கையைப் பிசைஞ்சிட்டு, 'மீ(...)
ரொம்ப வலிக்கிறதா'ன்னு கேட்டு, சுத்(...)
சுத்தி வரணும்...

'அப்புறம்... நானும் இவளை மாதி(ரி)
நானே என் குழந்தைக்கு...'

மீரா தூக்கத்தில் புன்னகை செய்கிறா(ள்)
நடுவே ஒரு முறை விழிப்பு வந்த போது
கையிலிருந்த முகூர்த்த வேட்டியி(ல்)
முகத்தில் துளிர்த்த வியர்வையை ஒற்(றி)
எடுக்கிறாள். கையை உயர்த்தி ம(...)
பார்க்கிறாள்.

மணி ஒன்பதே கால்தான்...

சின்ன ஒளிச் சதுரத்தில் சிவாஜ(...)
நாகேஷிடம் உறுமிக் கொண்டிருக்கிறார்:

''கேள்வியை நீ கேட்கிறாயா... அல்ல(து)
நான் கேட்கட்டுமா...''

அவ்வளவுதான்...

அடுத்த கணம் -

மொத்தமாய் ஏழெட்டு இடிகள் ஒ(...)
இடத்தில் ஒட்டுமொத்தமாய் விழுந்த(து)
போன்ற பெரிய முழக்கம்...

இமைப் பொழுதுக்குள் பெரிய நெருப்பு(ப்)
பந்துக்குள்ளிருந்து சின்னச் சின்ன தீ(...)
கோளங்களாய்ப் பயணிகள் வெடித்து(ச்)
சிதறுகிறார்கள்...

''ஐயோ!''

''அம்மா... ம்மா...''

''செத்தேன்...''

''ஓ...ஓ...ஓ...ஓ...''

பஸ் அந்த ராத்திரிப் பொழுதி(...)
நினைத்தாற்போலிருந்து தீபாவளி கொ(ண்)
டாடுகிறது!

(தொடரும்)



''கட் ஆன கரெண்ட் வரும்வரை பெடலை மிதிச்சுக்கிட்டே இருங்க! டைனமோ லைட்டாவது எரியட்டும்...''

50

பரிசு ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/–
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/–
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/–
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/–

முடிவு தேதி: ஆகஸ்டு 31, 1991

- இதற்கடுத்த பத்து மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து கல்கி பொன்விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.
- நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.
- கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.
- பிரதி வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 – 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.
- அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன்விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

— ஆசிரியர், கல்கி, சென்னை – 600 032.

6 நேற்றுவரை நந்தவனம்

'**தூ**க்கமா? மயக்கமா...?'

'இல்லை செத்துக் கொண்டிருக்கிறோமா...'

'ஐயோ.... இது என்ன... எங்கே அவர்...'

மீரா கண்களைத் திறந்து சுற்றிலும் பார்க்கிறாள்.

முன்னே பின்னே அறிமுகமில்லாத முகங்கள்; வெள்ளை உடை; டெட்டால் வாசனை; எங்கோ 'சரசர'வென விடாத ஓசை....

'படுவா... என்னா சப்தம் போடறே... பட்டணம் வரட்டும்.... உங்க அப்பாருகிட்ட சொல்லி....'

குழந்தை பால் குடிக்கும் ஓசையா இது... இல்லை. எங்கோ ஸ்டிரெச்சர் வண்டியில் நோயாளிகள் நகர்த்தப்படும் ஓசை...

''என் கண்ணே...''

இத்தனைக்கும் நடுவே, அம்மாவின் கலைந்த முகமும், கண்ணீர் பொங்கும் கண்களும் - மீராவின் மூளையில் இமைப் பொழுது பதிய..

அவள் மீண்டும் கண்களை மூடிக் கொள்கிறாள். உடம்பில் எங்கெங்கோ வலி... இடுப்புக்குக் கீழ் அசைக்க முடியவில்லை.

'அ...ம்...மா...'

அவள் வாய் விட்டு முனகியதும் - புறங்கையில் 'சுருக்'கென ஊசி போடப்படுகிறது.

மறுபடியும் விழிப்பில்லாத மோன நிலை...

அம்மாவின் அழுகுரலும், அப்பாவின் கரகரத்த குரலும் காதில் விழுந்தாலும் - இவளால் வாய் திறந்து எதுவும் பேச முடியாத நிலைமை...

''பெங்களூர் ஃபார்முக்கு டிக்கட் வாங்கிட்டேன். பி ே ள ன் ே ல போகப் போறோம்...''

கீர்த்தி, அவள் காதோடு சொல்கிறான்.

''நீ எங்கே போனாலும் மஞ்சள் வேஷ்டியையும், பாலிகைக் கிண்ணங்களையும் எடுத்துண்டு போகணும். ஆமா...''

- நடுவே நாகு மாமா கட்டளையிடுகிறார்.

அனுராதா ரமணன்

''இத்தனை பேருக்கு வாழைக்கா கறி மட்டும் போதுமா மீரா... இல்லே கொஞ்சம் பூசணிக்காய நறுக்கிக் கூட்டு பண்ணிடலாமா?''

கீர்த்தியின் தாய், அவளுடைய தோளைத் தொட்டுக் கேட்கிறாள்.

''உன் வைரத் தோட்டைக் கழற்றிக் கொடு... புளூ ஜாகரான்னு பார்க்கலாம்...''

கீர்த்தியின் கொள்ளுப் பாட்டி, இவள் காதைப் பிடித்து இழுக்கிறாள்.

இவள், பாட்டியின் கையைப் பிடித்துத் தள்ளி விடுகிறாள்...

இதற்குள் நர்ஸின் அதட்டல்...

''சும்மாயிருங்கம்மா.. பேஷண்ட் தூங்கறதே அபூர்வமா இருக்கு.. சார், இவங்களை வெளியில அழைச்சிட்டுப் போங்க...''

''நான் ஒண்ணும் செய்யலேம்மா... குழந்தை காதுப் பக்கம் ரத்தம் வழிஞ்சு காய்ஞ்சு கிடக்கு.. துடைச்சேன்..''

''அதெல்லாம் அப்படித்தான் இருக்கும்... ஹெட் இன்ஜுரி இல்லே... இந்த மட்டும் உங்க பொண்ணு பிழைச்சாளேன்னு சந்தோஷப் படுங்க...''

''சந்தோஷமா... எனக்கா... ஐயோ... கடவுளே, நாங்க உனக்கு என்ன கெடுதல் செஞ்சோம்...''

தொடர்ந்து 'மடேல் மடேல்' - என்று சப்தம்...

''இந்தா... நீ இப்படி வரப் போறியா இல்லையா?''

அப்பா, சப்தமான குரலில் அதட்டுகிறார்.

மீராவின் மூடிய கண்களுக்குள் வர்ணங்கள் சுழன்று, சுழன்று - கடைசியாய் பச்சையில் வந்து நிற்க...

மெத்தென்ற புல் தரையில் படுத்திருப்பது போன்ற பிரமை...

பக்கத்திலேயே - அவள் மீது தனது பாதி உடலைச் சாய்த்தபடி கீர்த்தி...

''ஐயோ... அப்படிப் பார்க்காதீங்கோ...''

''வேற எப்படிப் பார்க்க?''

''முதல்லே அந்த மூக்குக் கண்ணாடியக் கழட்டுங்கோ...''

''ஏன்?''

''கண்ணாடியில என் முகம் தெரியறது. வெட்கமா இருக்கு...''

''அப்ப இருக்கட்டும்....''

''......''

''நீ வெட்கப்படறதைப் பார்க்க எனக்குப் பிடிக் தம்...''

''இருங்க... யாரோ வர்ற மாதிரி இருக்கு...''

''ஃபார்முல ஒரு ஈ காக்கா கிடையாது....''

''இல்லே... 'கடகட'ன்னு மோட்டார் சைக்கிள் சப்தம் கேட்கலை... உங்க கிளாஸ் மேட்... அதான் எம். எல். ஏ. பிள்ளை...'

''மக்கு.. அ வ ன் எங்கே பெங்களூர் வந்தான்... ஆமா.. இந்த நெக்லஸ் புதுசா?''

மீரா, இருப்புக் கொள்ளா மல் நெளி கிறாள்...



''ஏய், பேஷண்ட் கை யை அசைச்சிட்டே இருக்கு பாரு... இந்த சாந்தி எங்கே... டிரிப்ஸ் ஏத்தற சமயத்துல பக்கத்துல இருக்க வேண் டாமா?''

கொஞ்சம் பலத்த குரலில் ஒலிக்கிறது. மீரா திரும்பிப் படுக்க முயற்சி செய்கிறாள்.

''எங்களையும் பக்கத்துல இருக்க விட மாட்டேங்கறீங்க; நீங்களும் ஒழுங்காக் கவ னிச்சுக்கறதில்லே... பேசாம என் செல் லத்தை என்கிட்டக் கொடுங்க... நான் மெட் ராஸுக்கு எடுத்திட்டுப் போறேன். இந்தக் கஷ்டத்தைப் பார்க்கச் சகிக்கலே!''

அம்மாவின் குரல், இப்பொழுது சற்றுத் தெளிவாகவே கேட்கிறது மீராவுக்கு.

தன் மீது சாய்ந்திருக்கும் கீர்த்தியை இடது கையால் நகர்த்த முயற்சி செய்கிறாள் அவள்.

''கொஞ்சம் இருங்க... அம்மா எதுக்காக அழறான்னு பார்த்துட்டு வந்துடறேன்...''

அவன், அவளைப் பிடித்துப் புல் தரையி லேயே தள்ளுகிறான்.

''அம்மாக்களுக்கு வேற வேலை என்ன? கட்டில் இல்லே, மெத்தை இல்லே... தலை காணி ஸாட்டின்லே தைக்கலே.. மெத் தைக்கு மேலே போடற விரிப்பு கலர் சுமார்னு ஏதாவது சொல்லிட்டேதான் இருப் பாங்க. நமக்கு, இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லைங்கறது பெரியவங்க ளுக்குத் தெரியாது... நீ பேசாம படு...''

''பாவமா இருக்கு அம்மாவைப் பார்த்தா... ப்ளீஸ்...''

இப்பொழுது அவள் நன்றாகவே விழி களைத் திறந்து பார்க்கிறாள்.

கடைசி கடைசியாய்... என்ன நடந்தது?

''கேள்வியை நீ கேட்கிறாயா... அல்லது நான் கேட்கட்டுமா...''

சிவாஜி கணேசன் விழிகளை உருட்டிக் கேட்கிறார்..

அடுத்த கணம் -

ஐயோ... அது என்ன இத்தனை சப்தம்.. புகை... நெருப்பு... கமறல்...

அவள் சிரமப்பட்டுத் தலையைத் திருப்பு கிறாள்...

அப்பா...

தஞ்சாவூரிலிருந்து அன்று காலையில் ரயிலுக்குப் புறப்பட்ட அப்பா - எத்தனை குஷியாய், எத்தனை ஸ்டைலாய் இருந்தார்?

மீராவுக்கு அவள் அப்பாவின் கம்பீரம் பிடிக்கும். எப்போதும் 'பளிச்'சென இருப் பார். நெஞ்சை சற்றே நிமிர்த்திக் கொண்டு நிற்பார்.

பெண்ணின் கல்யாணத்துக்குப் பிறகு - இந்த நிமிர்த்தல் இன்னும் கொஞ்சம் அதிகமாகியே இருப்பது போல பிரமை...

''என்னை மாதிரி யாராலே முடியும்?''

கண்களும், உதடுகளும் பெருமிதத்தில்

பொங்கிப் புன்னகையாய்ப் பெருகியது எங்கே...

இப்பொழுது -

திடீரெனப் பத்து வருஷம் வயசு கூடி விட்டாற்போல் தலை நரைத்து, முகத்தில் வெள்ளையும் கருப்புமாய் முள் படர்ந்து...

''என்ன ஆச்சுப்பா...''

அவள் அதற்கு மேல் பேசச் சக்தி இல்லா தவளாய்ப் பார்வையாலேயே வினவுகி றாள்.

''ஒண்ணுமில்லேம்மா.. ஒரு சின்ன ஆக் ஸிடென்ட்.''

இதற்குள் அம்மா, பதறியடித்துக் கொண்டு ஓடி வருகிறாள்.

''இதப் பாருங்கோ... டாக்டர் ஏதோ மருந்து எழுதித் தந்தார் இல்லையோ... முதல்லே அதை வாங்கிட்டு வாங்கோ.



''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அமைச்சர்களும், அதிகாரிகளும் லஞ்சம் வாங்குவதற்கு உச்ச வரம்பு கொண்டு வருவோம் என்று வாக்குறுதியளிக்கி றேன்!''

அப்புறம் பேசலாம்...''

''அலமு... நம்ம குழந்தை இப்பத்தான் கண்ணைத் திறந்து பார்த்துப் பேசறா...''

''தெரியும்.. அதனாலத்தான் சொல்றேன். முதல்லே போய் டானிக்கை வாங்கிட்டு வாங்கோ... அப்புறம் நிதானமாப் பேச லாம்னு...'

மீரா அம்மாவைப் பார்க்கிறாள்.

எங்கோ வெகு தொலைவிலிருந்து - வெயில் மழை பாராமல் நடந்து வந்தவள் போல இருக்கிறாள்.

நாற்பத்தியொன்பது வயசுக்கு, மீராவின் அம்மா, தன்னை நேர்த்தியாகவே அலங்க ரித்துக் கொண்டிருப்பாள். ஏனோ தானோ வென்று முகம் கழுவிப் பொட்டு வைக்க அலமுவுக்குப் பிடிக்காது.

உடம்பு வேறு சற்று பூசினாற் போல இருந்தாலும் - சொன்னபடி கேட்கும். இயல்பிலேயே அடர்ந்த, கருத்த கூந்தல்.. அதை சற்றுத் தூக்கி - இழைய வாரி, பன் போல கொண்டை போட்டிருப்பாள். நிறைய நகைகள் போடுவதை விரும்ப மாட்டாள். கலகலத்த மனுஷி என்பது முகத்தைப் பார்த்தாலே தெரிந்து விடும்.

அப்பேர்ப்பட்டவள் கசங்கிய புடைவை யும், அள்ளி முடிந்த கூந்தலும், அழுதழுது வீங்கிப் போன முகமுமாய்...

அம்மா, மீராவின் பக்கத்தில் வந்தமர்ந்து, கையைத் தடவிக் கொண்டே இருக்கிறாள்.

''அம்மா... தாகமா இருக்கு...''

''டாக்டரைக் கேட்காம எதுவும் கொடுக் கக் கூடாது குழந்தை... ஆச்சு. இப்ப டாக்டர் வந்துடுவார்...''

தண்ணீர் குடிக்கக் கூடவா டாக்டரைக் கேட்க வேண்டும்?

மீரா, கண்களைத் திறந்து வைத்துக் கொள்ளப் பிரயத்தனப்படுகிறாள்... நாக்கு உலர்ந்து போய் ஒட்டிக் கொள்கிறது.

''வாட்டர் பேக் எங்கே?''

''என்கிட்ட இருக்கு...''

''எனக்குத் தாகமெடுத்தா என்ன செய்ய?''

''எழுந்து வந்து கேளுங்களேன்.. நாலஞ்சு ஸீட் பின்னாலேதானே இருக்கேன்..''

அவள், அம்மாவிடம் சிரமப்பட்டுக் கேட்கிறாள்.

''அம்மா... அவர் எங்கே?''

''......''

''எங்கேம்மா...''

''வெளில போயிருக்கார்...''

மீராவின் உதட்டில் ஐஸ் கட்டிகளைக் கொண்டு வந்து தேய்க்கிறாள் ஒரு நர்ஸ்.

''ரொம்ப தாகமா இருக்குங்கறாளே...''

''தண்ணியெல்லாம் கொடுத்துடாதீங்க... ஸெப்டிக் ஆயிடும்... மெள்ள ஆறிட்டு வரு துன்னு இப்பத்தான் டாக்டர் சொன்னார்...''

நர்ஸ், இதைச் சொல்லி விட்டுக் குதியுயர்ந்த செருப்பின் மெல்லிய தாளத்துக்கேற்ப அசைந்து அசைந்து செல்ல, கொஞ்ச நேரம் அவள் போன திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டி ருக்கிறாள் மீரா.

'அன்று என்ன நடந்தது...'

மறுபடியும் மனசுக்குள் இதே கேள்வி, தண்ணீர்ப் பந்து போலக் குதிக்கிறது...

பஸ்ஸுக்கு ஏதோ ஆயிடுச்சு...

'டமால்னு எத்தனாம் பெரிய சப்தம்...'

'அடேயங்கப்பா... குப்புனு எவ்வளவு வெளிச்சம்...'

'ஐயோ, அப்ப இவர் என்ன ஆனார்?'



ஒரு தேர்தல் வியப்பு!

வால் காகித
வாக்குச் சீட்டில்
நான் போட்ட
வட்ட முத்திரை,
எப்படி,
என் நெற்றியிலேயே
நாமமாய்ப் பதிகிறது?
-- பால. சித்தார்த்தன்.

நெஞ்சு ஒருமுறை துடிப்பை நிறுத்தினாற்போலிருக்கிறது.

''அம்மா...''

''என்னடா...''

''அவர் எங்கே?''

''வெளில போயிருக்கார். இதோ வந்திடுவார்...''

''பெங்களூர் போறேம்மா....''

''சரி. நீ இப்பத் தூங்கு...''

இதற்குள் அறை வாசலில் அப்பாவும், அவர் கூட கையில் டிபன் கேரியருடன் நாகு மாமாவும்.

மீரா - நாகு மாமாவுக்குப் பின், கீர்த்தி நிற்கிறானோ என்கிற சபலத்தில் விழிகளை அகற்றிப் பார்க்கிறாள்.

அவன் அங்கு இல்லை என்பது புரிந்தவுடன், கண்கள் அவளையுமறியாமல் மூடிக் கொள்கிறது.

அதிகம் யோசிக்க முடியவில்லை.

எண்ணம் வளர்ந்தால், தலையை வலிக்கிறது. காதுக்குள் 'ஓ'வென இரைச்சல் கேட்கிறது...

''ராத்திரி தூங்கினாளா?''

நாகு மாமாவின் கணீரென்ற குரலை - எந்த ஆஸ்பத்திரி நர்ஸாலும் அடக்க முடியாது போலிருக்கிறது.

''எங்கே... வலி தாங்காம ஒரே அனத்தல்தான். காம்போஸ் ஊசி போட்டா அஞ்சு நிமிஷம் தூங்கறா...''

''நினைப்பு வந்து ஏதாவது கேட்டாளா?''

''இப்பத்தான் சித்த முந்தி... துண்டு துண்டா ஏதோ பேசினா.. 'அவர் எங்கே' யின்னு ரெண்டு மூணு தடவை கேட்டுட்டா.. நான் இவளை எப்படி தேற்றப் போறேன்னு தெரியலையே.. அம்பிகே... கல்யாணத்துக்கு முன்னாலே மாவிளக்கு, சுமங்கலி பிரார்த்தனை எல்லாம் தானே செஞ்சேன்... என்னை இப்படி மோசம் செஞ்சிட்டியே...''

''த்சொ... த்சொ.. அழப்படாது. நீங்க இப்படி கலங்கினா - சார் என்ன செய்வார்.. இந்த நேரத்துல நீங்கதான் அவருக்கும், மீராவுக்கும் பக்கபலமா... அங்கே பாருங்கோ... வீடே அல்லோலகல்லோலப் படறது... என் அக்கா, பச்சைத் தண்ணி பல்லுல படாமப் படுத்துக் கிடக்கா.. கீர்த்தி அப்பாவுக்கு நடுவுல ஒரு தடவை அட்டாக் வந்துடுத்து...''

''......''

''சொல்லவே சங்கடமாயிருக்கு. இன்னிக்குப் பத்தாம் நாள் காரியம்...''

''ஐயோ, சொல்லாதீங்கோ...''

அலமு, மெல்லிய குரலில் அவசரமாய்க் குறுக்கிட, மீராவின் தலைக்குள் ஏகப்பட்ட பூச்சிகள் ஊர்வது போல...

அவள் மெள்ளப் பேசுகிறாள்.

''அம்மா...''

''என்னடா கண்ணு...''

''பாட்டி போயிட்டாளா?''

''பாட்டியா?''

அம்மா, ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழிக்கிறாள்.

''நாகு மாமா... பத்தாம் நாள்... பாட்டி போயிட்டாளா...''

அது நேரம் வரையில் அடக்கி வைக்கப்பட்டிருந்த அலமுவின் துக்கமெல்லாம் - தண்ணீர்ப் பானையைக் கீழே போட்டுஉடைத்தாற்போல - 'பொட்'டென உடைந்து விட்டது...

''என் கண்ணே... தெய்வத்துக்குக் கண்ணில்லைடி. நடக்கக் கூட முடியாம, எப்ப எமன் வந்து கூப்பிடுவான்னு காத்திட்டிருக்கிற கிழங் கட்டையெல்லாத்தையும் விட்டுட்டுப் பூவையும் பிஞ்சையும் பறிச்சிட்டுப் போனானே.. என் தங்கமே... அவனோட முகூர்த்த வேஷ்டியப் பத்திரமா சுருட்டிக் கையோட வச்சிட்டிருந்தியே... அவனைத் தோத்துட்டியே,.. மலை மலையா நாங்க எல்லாரும் இருந்து - அவனோட திவசத்தைக் கொண்டாடறோமே... இதைக் கேட்பார் இல்லையா?''

மீரா, தன்னை மறந்து, கண்களை அழுத்தும் உறக்கத்தை விரட்டி, விருட்டென எழுந்து உட்கார முயற்சி செய்கிறாள்.

கையில் செருகியிருந்த ரப்பர் டியூப், ஊசியுடன் அறுந்து விழுகிறது..

''அம்மா...''

அதற்கு மேல் பேச முடியாதவளாய் மயங்கிச் சாய்கிறாள் அவள்...

(தொடரும்)

மகாராஷ்டிரம்:

சிவசேனாவின் செல்வாக்கு இ. காங்கிரஸைப் பாதிக்குமா?

இ. காங்கிரஸின் கோட்டைகளாகக் கருதப்பட்ட வட மாநிலங்களிலெல்லாம், கடந்த தேர்தலில், அதன் செல்வாக்கு, சரிந்து கொண்டே வந்தபோது, மகாராஷ்டிரத்தில் மட்டும் தலைநிமிர்ந்து நின்று, தன் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொண்டது. அதற்குக் காரணம் சரத் பவாரின் சாணக்கியமும் ராஜதந்திரமுமே என்று எல்லோரும் அன்று கூறினர்.

அதுபோலவே, இந்தத் தேர்தலிலும் பவாரால் தமது செல்வாக்கைக் காட்ட முடியுமா என்பதுதான் இன்றைய கேள்வி.

''இந்தத் தேர்தலில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போதே சரத் பவாரின் வெற்றி தெரிந்துவிட்டது! அரச பரம்பரையைச்சார்ந்த மராத்தியர்கள், சர்க்கரை ஆலை முதலாளிகள், மற்றும் பசை உள்ளவர்கள் என்று, வெல்லும் சாத்தியம் அறிந்து, வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்ததில் பவாரின் சாணக்கியம் தெரிகிறது'' என்று பலர் சொல்கிறார்கள். வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்ததில் மாத்திரமல்ல; உட்கட்சிப் பூசல்களைச் சமாளிப்பதிலும் பவார் கெட்டிக்காரர். அவரது மந்திரி சபையிலிருந்த சிலரும் வி. என். காட்கில் போன்ற கட்சியில் செல்வாக்கு மிகுந்தவர்களும் சேர்ந்து கொண்டு, அவரை உலுக்க முயன்றாலும், தஞ்சாவூர்த் தலையாட்டி பொம்மை போல், மீண்டும் தம் நிலைக்குத் திரும்பி, மேலும் பலம் பொருந்தியவராகக் காட்சி தருகிறார், அவர்! அதுவும் இங்கு நாடாளுமன்றத் தேர்தல் மட்டும்தான் நடக்கிறது என்பதால், தமது முழு கவனத்தையும் இந்தத் தேர்தலில் அவரால் செலுத்த முடியும் என்கிறார்கள். இது மட்டுமல்ல; இந்தியாவின் மிகப் பெரிய ஸ்டாக் மார்க்கெட்டான பம்பாய் தலால் தெருவில், மனு தாக்கல் செய்யும் கடைசி நாளன்றே இ.காங்கிரஸுக்குத்தான் வெற்றி வாய்ப்பு அதிகம் என்ற ஊகத்தில் பங்கு விலைகள், கிடுகிடுவென ஏறின.

மக்கள் வேண்டுவது மண்டலா, மந்திரா அல்லது மாற்றமற்ற ஸ்திரமான ஆட்சியா? இதை ஆராயப் புகுந்தால், கடந்த ஒன்றரை ஆண்டு அனுபவத்தில் மக்கள் மிதமிஞ்சிய வெறுப்பில் இருப்பதாகவே தெரிகிறது. பத்திரிகைகளில் கடிதங்கள் எழுதும் பலரும், 'நாம் மானம் ரோஷம் உள்ளவர்களாக இருந்தால், நம்மை இந்தக் கதிக்கு ஆளாக்கிய சென்ற லோக் சபா அங்கத்தினர் ஒருவருக்குமே இந்தத் தேர்தலில் வாக்களிக்கக் கூடாது' என்று எழுதுகின்றனர்! மிக அதிக அளவில் உயர்ந்துள்ள விலைவாசிக்கு ஸ்திரமற்ற ஆட்சியே காரணம் என்று நம்புகிறார்கள். இப்படி அடிக்கடி தேர்தல்கள் நடந்து, அரசுச் சார்பிலும் கட்சிகள் சார்பிலும் கோடி கோடியாகப் பணம் வாரி விடப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் என்ன ஆவது?' என்று பலரும் கேட்கின்றனர்.

வி. பி. சிங், தமது தேர்தல் பிரசாரத்தை மாநிலத்தின் பின்தங்கிய பகுதியான ஔரங்காபாதில் துவக்கியபோது, அவர் பேச்சைக் கேட்க, மக்கள் திரள் திரளாகக் கூடினர். ஆனால் 'கூட்டங்கள் வோட்டுக்களாக முடியாது' என்கின்றனர் எதிர்க்கட்சியினர். 'ஜாதி அடிப்படையில் இவர் நாட்டைத் துண்டாட முயல்வது கலப்படமற்ற சுயநலம்' என்பது அநேகரது கணிப்பு. 'ஒன்றரை ஆண்டில் இன்னொரு தேர்தல்

பவார் : சாணக்கியம்!



பழக்கத்துக்கு மாற்றுச் சிகிச்சை நாடினால் நிறையச் செலவாகும். அந்தச் செலவை ஏழைக் கிராம மக்களால் தாங்கவே முடியாது. அதனால் அரசு மருத்துவ மனைகளில் இந்த வசதி செய்துதரப்பட வேண்டும்,'' என்கிறார் நாராயணன்.

அரசே மதுவிலக்கை அமுல் படுத்தாமல் உள்ளதே என்று நாம் நினைவூட்ட, ''சாராயம் கிடைக்கிறது என்பதற்காகக் குடிக்க வேண்டுமா?'' என்று தார்மிகக் கோபத்துடன் கேட்கிறார் நாராயணன்.

இந்த வேகம்தான் அவரைப் பி. எச். டி. ஆராய்ச்சிக்கு, 'மனித செல் முதல் மனித சமுதாயம் வரையில் குடிப்பழக்கத்தால் அடையும் பாதிப்புகள்' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுக்கச் செய்துள்ளது.

''இந்த ஆராய்ச்சியின் போது நான் பல அதிர்ச்சி தரும் உண்மைகளைக் கண்டறிந்தேன்'' என்கிறார் நாராயணன்.

''தமிழ்நாட்டு மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளுள் இருபது சதவிகிதத்தினருக்கு மதுப் பழக்கமே நோய் முற்றுவதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. மத்திய சிறைச் சாலையிலுள்ள கைதிகளில் எண்பது சதவிகிதத்தினர் குடிப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள். சில தேர்ந்தெடுத்த சிறுவர் இல்லங்களில் உள்ள குழந்தைகளுள் இருபத்தேழு சதவிகிதத்தினரின் குடும்பங்கள் குடிப் பழக்கத்தால் பிளவுபட்டோ சிதறுண்டோ போனவை. இந்த நிலைமைகளைச் சீர் செய்ய அரசாங்கம் எந்த முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை. இதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவுமில்லை.''

சொல்லி முடித்த நாராயணனிடம் ''இத்தகைய நிலவரத்தில் உங்கள் முயற்சிகள் என்ன பலன் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள். 'குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு' என்று பழமொழியே இருக்கிறதே. உங்கள் அறிவுரைகள் பலன் தருமா?'' என்று கேட்டோம்.

''அந்த விஷயத்தில் நான் கர்ம யோகி, இந்தப் பணியை என் கடமையாக எண்ணிச் செய்து வருகிறேன். எனக்கு ஏற்படும் நிஜமான சங்கடம் என்ன தெரியுமா? எங்கள் திட்டத்தின் சிறப்புக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க, குடிப்பழக்கம் இல்லாத வி. ஐ. பி. கிடைப்பதேயில்லை என்பதுதான்!'' என்றார் நாராயணன்.

-- எஸ். ஆர்.

வாசகர் யோசனை:
நெல்லை குரலோன்,
பொட்டல்புதூர்.

கல்கி தொழில் மலர் '91 -வாசகர் கருத்து

✱ கல்கி தொழில் மலர் புதுப் பொலிவுடனும், ஏராளமான செய்தி களுடனும், கண்ணைக் கவரும் வண்ணப் புகைப்படங்களுடனும் தவழ்ந்து வந்தது அருமையாக இருந்தது.

மொரப்பூர், - ச. உமர்கான்.

✱ தொழில் சப்ஜெக்ட் என்றாலே படிக்க முகம் சுளிப்பவர் கூட ஆழ்ந்து படிக்கும் விதத்தில் சுவாரஸ்யமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. சிம்ஸன் பற்றிய கட்டுரை களும், சிவசைலம், அனந்தராம கிருஷ்ணனின் வாழ்க்கைக் குறிப்புகளும் எவரையும் உசுப்பி விடுவது நிச்சயம்.

தங்க நகைகளைப் பற்றிய கட்டுரை களைப் படிக்க ஆரம்பித்து எல்லா அம்சங் களையுமே படித்து விட்டார்கள் என் அம்மா.

சென்னை - 13, - எஸ், விஸ்வநாதன்.

✱ ''விலையை ஒரு பொருட்டாக எண்ணாது, இத் தொழில் மலரை நோக்கி னால், ஒரு பரிபூரண திருப்தி ஏற்படும்! ஒவ்வொரு பக்கமும், உங்களின் உழைப்பை பறைசாற்றும் வண்ணம் ஜொலிக்கிறது! கட்டுரைகளே - இம் மாபெரும் மலருக்குப் பெரிய, மிகப் பெரிய பலம்!''

சென்னை, - எஸ். பாலாஜி.

✱ திரு. ஆர். வி. போட்ட அஸ்திவாரத்துக்குக் கட்டடம் கட்டத் தவறி விட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மை. ஆனால் இன்றைய அரசியல் வாதிகள் அடிக்கல் நாட்டலுடனே நின்று விடுவது வேதனைப்பட வைக்கிறது.

எம். எஸ். ஜெயராமன் அவர்களுடைய காகிதமில்லாக் காரியாலயங்கள் திறன்மிக்க கட்டுரை. நல்லதொரு எழுத்தாளர் என்ப துடன் நகையுணர்வுடன் கூடிய சிந்தனை யாளர்!

உழைப்புக்குக் கிடைத்த வெற்றி என் பதை ஸிம்ஸன் குரூப் கட்டுரைகள் படம் பிடித்துக் காட்டின.

சோப்பு தயாரிப்பு, காரியாலயக் கருவிகள் என்று தனித்தனியாக வகை பிரித் துப் பாராட்டுவது என்றால் இன்லாண்டில் இடம் போதாது!

திருச்சி - 2, - ஆங்கரை ஆனந்.

✱ அல்ட்ராமரைன் புளூ சர்வதேச மார்க் கெட்டில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. லிக்விட் (திரவ) புளூதான் சமீபத்தில் தோன்றியது (10 ஆண்டுகள்). இதை நான் பேட்டியில் தெளிவாகக் குறிப்பிட்டேன். ஆனால் பேட்டி கண்டவர் இதைப் புரட்டிப் போட்டு எழுதி விட்டார்!

சென்னை, - சீனிவாசன் (நில்ஸின் தொழிலகம்).



நேற்றுவரை நந்தவனம்

7

''எல்லாவற்றையும் மற; உனக்கு வேற கல்யாணம் செஞ்சு வைக்கிறேன்...''

மீராவின் தந்தை இதுவரையில் - குறைந்தது லட்சம் தடவையாவது இந்த வார்த்தைகளைச் சொல்லி இருப்பார்.

போதாக்குறைக்கு மனைவியிடம் வேறு எரிந்து எரிந்து விழுந்தார்.

''எல்லாம் உன்னால்தான். மேலே படிக்கறேன்னு ஆசைப்பட்டவளை, என்னமோ கொள்ளை போற மாதிரி 'தர தர'ன்னு இழுத்துட்டு வந்து மணையில் உட்கார வச்சே... இப்ப சந்தோஷம் தானே?''

அம்மா, எல்லாவற்றுக்கும் மௌனமாய் அழுவாள்.

அன்றைக்கு மீ ரா வி ன் கேள்விக்குப் பொய்யாய் ஒரு பதிலைச் சொல்ல முடியாமல் உடைந்து அழுதவள்தான். அதற்குப் பின் இன்று வரையில் வாயைத் திறக்கவில்லை.

அப்பாவுக்குத் தன் மகளின் எதிர்காலத்தை நினைத்துப் பயம்.. அந்தப் பயம் எ ரி ச் ச ல ா க மாறும்பொழுதெல்லாம், பெண்டாட்டியைத்தான் சகட்டுமேனிக்குத் திட்டுவார்.

கீர்த்தி, விபத்திலேயே கருகினதை நாகு மாமாதான் மீராவிடம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சொல்ல, அவள் விக்கித்துப் போய் உட்கார்ந்திருக்கிறாள்.

ஆரம்பத்தில் அப்பா, நாகுவை மகளிடம் பேச விடாமல் தடுத்தார்.

''என்னவோ, அவ‌ன் தலையெழுத்து அப்படி இருந்திருக்கு. அந்த அத்தியாயம் முடிஞ்சதுன்னு நாங்க மெதுவா மறக்கப் பார்க்கறோம். தயவுசெஞ்சு இனிமே அந்தப் பேச்சே வேண்டாமே!''

''அதுவும் சரிதான்.. ஆனா நாளையப் பின்னாலே குழந்தை மனசுல ஆயிரம் கேள்வி எழாதா? எதையுமே மனசு விட்டுப் பேசிடணும். உள்ளேயே அமுத்தி வைக்கிறதுனாலதான் பிரச்னையே வர்றது. என்னையே எடுத்துக்குங்க.. கோபம் வந்தா - ஏன் அப்படி கதகளி ஆட்டக்காரன் மாதிரி ஆடறேன். அப்படி ஒரு தடவை ஆடிட்டா - மனசு பளிச்சுனு ஆயிடறது...''

வேற்று மனுஷரிடம் இதற்கு மேல் கடுப்பாய்ப் பேச முடியவில்லை மீராவின் அப்பாவினால்.

நாகு மாமா இல்லாவிட்டால் - மீராவும், கீர்த்தியோடு போய்ச் சேர்ந்திருக்க வேண்டியவள்தான்.

தஞ்சாவூரிலிருந்து சென்னைக்குக் கிளம்பிய பஸ் - தஞ்சாவூரின் எல்லைக்குள்ளேயே வெடித்துச் சிதறிய விஷயம் காற்றுவாக்கில் ஊருக்குள் பரவிய போது இரவு மணி பத்து முப்பது...

தூக்கம் வராமல் நாகு மாமா - பங்காரு காமாட்சி அம்மன் கோவிலில் நடந்த ராமாயணப் பிரவசனத்துக்குப் போய் விட்டு, பொடி நடையாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்பொழுதே தெருவில் ஒருவித பரபரப்பு... மனிதர்கள் கும்பல் கும்பலாய்க் கூடிப் பேசுவதும், திபுதிபுவென ஓடுவதுமாய் இருக்க -

நாகு, வெற்றிலைப் பாக்குக் கடையில் நின்று விசாரித்தார்.

''என்னப்பா கலாட்டா.. மறுபடியும் அடிதடியா...? இந்த எலக்ஷன் வந்தாலும் வந்தது.. அரைமணி நேரம் நிம்மதியா இருக்க முடியலையே....''

''கலாட்டா இல்லே சார்.. பஸ்ஸுக்குள்ளே வெடிகுண்டாம்...''

கடைக்காரரின் பதிலைக் கேட்டு நாகு 'கெக்கெக்' எனச் சிரித்திருக்கிறார்.

''வெடிகுண்டா... நல்லாப் பார்த்தாங்களா...? எவனாவது புரளி கிளப்பியிருப்பான். பஸ்லே உட்கார இடம் கிடைச்சிருக்காதா இருக்கும்..''

''அட இல்லே அய்யரே.... தஞ்சாவூர்லேயிருந்து மெட்ராஸ் போற தனியார் பஸ்... வெடிகுண்டு வெடிச்சு ஒரே நெருப்புக் கோளமா எரிஞ்சிட்டிருக்காம். அணைக்கறதுக்கு ரயில் என்ஜின் எல்லாம் போயிருக்கு...''

திக்கென்று நின்ற நாகு, அடுத்த கணமே தூங்கிக் கொண்டிருந்த ஆட்டோ டிரைவர் ஒருவனை எழுப்பி, ஏறி உட்கார்ந்து கொண்டு, கும்பல் சரிந்த திசைக்குப் பறந்திருக்கிறார்.

''நான் என்னத்தைச் சொல்வேன் மீரா... விடிகாலை நாலு மணி வரைக்கும் பஸ் எரிஞ்சிட்டுத்தான் இருந்தது... முதல்லே அந்த பஸ் நீங்க ஏறின பஸ்ஸா

அனுராதா ரமணன்

இருக்கக் கூடாதுன்னு ஊருல இருக்கற சாமிக்கு எல்லாம் வேண்டிண்டேன்.... ஆனா, ரெண்டு மணிக்கே - தெரிஞ்சு போச்சு... இந்த வண்டியிலதான் நீங்க இருக்கீங் கன்னு...

''முதல்லே கண்டுபிடிச்சது உன்னைத் தான் மீரா... கால் முழுக்க நெருப்பு காயத்துலேயும் கூட நீ, உன் கையில கீர்த்தியோட மஞ்சள் வேஷ்டிய இறுகப் பிடிச்சிட்டிருந்தே. பின் மண்டையில் இரும்புக் கம்பி அடிச்சு ரத்தச் சேறா இருந் தது...

''கீர்த்தி.. அவனைத்தான் நான் ரொம்ப வும் தேடினேன். ஸீட்டோட ரெண்டு உடம்பு கரிக்கட்டையா ஆகியிருந்தது.. அதுல ஜன்னலோரமா இருந்ததுதான் கீர்த் தியா இருக்கணும்... ஏன்னா அத்தனை நெருப்புலேயும் உங்கப்பா கல்யாணத் துக்குப் போட்ட வைர மோதிரம் அந்த விரல்லே...''

இந்த இடத்தில் மீரா காதைப் பொத்திக் கொண்டாள்.

''சொல்லாதீங்கோ மாமா... ப்ளீஸ்...''

நாகு வாயை மூடிக் கொண்டு சற்று நேரம் மூலையை வெறித்தபடி உட்கார்ந்திருப் பார்.

''உங்க அப்பாவுக்கு டெலிகிராம் கொடுத்திட்டு, உன்னையும், இன்னும் குத்துசுரும் குலை உசுருமாக் கிடந்த வங்களையும் ஆஸ்பத்திரியில கொண்டு வந்து சேர்த்துட்டுத்தான் நான் வீட்டுக்கு போன் பண்ணினேன். அதுக்குள்ளே கீர்த்தி யோட சித்தப்பாவுக்கு மட்டும் லேசுபாசா விஷயம் தெரிஞ்சிருக்கு. என்னை வேற காணுமா.. தவியாத் தவிச்சிட்டிருந்திருக் கான்...''

''விஷயத்தை மெதுவாத்தான் சொல்லச் சொன்னேன். அப்படியும் உன் மாமனா ருக்கு இதைக் கேட்டு ஹார்ட் அட்டாக் வந்துடுத்து...''

''வீடே நன்னாயில்லே குழந்தை. இன் னும் கல்யாணத்துக்குக் கட்டின மூட்டை முடிச்சைப் பிரிக்கலை. அதுக்குள்ளே இப் படி ஒரு இடி... கிழவி, ஜடாயு மாதிரி உட்கார்ந்துண்டிருக்கு. 'ஓ'ன்னு அதுங் குரல்தான் பெரீசா...''

ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்புகிற போதுதான் ஒருசில முகங்கள் அடையாளம் தெரிந்தன.

''என்ன தாயீ... இப்படி அம்புட்டையும் வாரிக் கொடுத்திட்டு நிக்கறியே... கடவு ளுக்கே இது அடுக்குமா.. அடியம்மாடீ.. என் உசிரை எடுத்திட்டு, உம் புருஷன் உசிரைக் கொடுத்திருக்கக் கூடாதா அந்த தர்மராசா...''



''தா புள்ளே கம்முனு கிட...''

மீரா, விழிகளை மலர்த்தி அவளைப் பார்த்தாள்.

அவள்தான்...

பஸ்ஸில் மீராவுக்குப் பக்கத்தில் ஜன்னலோரமாய் அமர்ந்து, குழந்தைக்குப் பால் கொடுத்த - அதே பெண்..!

பக்கத்தில் குழந்தை - நீலத்தாமரை போல...

''பிள்ளைக்கு ஒண்ணும் ஆகல்லீங்க... எனக்குத்தான் கால் எலும்பு முறிஞ்சு போச்சு... எங்க ஆத்தாவும் அப்பனும்தான் இம்புட்டு நாள் வரை... இவருக்கு எம் மேல ஒரே கோவம்... தான் சொல்லச் சொல்லக் கேட்காமப் புறப்பட்டேன்னு.. இனிமே அவுரு பேச்சை மீறவே மாட்டேன் ஆத்தா...''

மீராவின் இரண்டு கால்களும் இப்பொழுதுதான் கட்டுப் பிரித்திருந்தார்கள்.

புடைவையை விலக்கி காலைப் பார்த்த மீராவுக்கு அருவெறுப்பில் குமட்டிக் கொண்டு வர... அவள், அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறாள்.

''இப்படியாவது நான் இருக்கணுமாம்மா... என்னை ஏன் காப்பாத்தினீங்க? அவரோட போயிருக்கலாமே...''

''உளறாதே.. இது பரவாயில்லே... வெளிக்காயம்தான். பின் மண்டையில அடிபட்டு, நினைவு தப்பிக் கிடந்தியே... அந்த நிலை அப்படியே நீடிச்சு, கோமாவுல கொண்டு விட்டாலும் விடலாம்னு டாக்டர் சொல்லிட்டிருந்தார். அந்தக் கண்றாவி எல்லாம் இல்லே... அதே பஸ்லே ஒம்பது வயசுப் பொண் குழந்தை ஒண்ணு யாரோ நடிகையோட குழந்தைன்னு பேசிக்கிறாங்க... இப்படித்தான் கோமாவுல கிடக்கு... அவங்க நேத்துதான் கார் வச்சு, வேற நர்ஸிங் ஹோமுக்குக் கொண்டு போறாங்க.. குழந்தை கூட வந்த பொண்ணு - முகமெல்லாம் வெந்து போய் - இன்னமும் உசிருக்குப் போராடிட்டு இருக்கு...''

மீராவின் கண் முன் அந்தக் காட்சி...

பவுடர் பூச்சும், பளபளக்கும் உதட்டுச் சாயமுமாய் ஒரு பெண் - ஊனமுற்ற குழந்தையை 'வெடுக்'கெனத் தூக்கிப் பிடித்த காட்சி...

''கத்தாதே சனியனே... அய்யாவைப் பார்த்துக் கும்பிடு போடு..''

'அவ... அவ... பேரென்ன...'

மீரா மண்டையைக் குடைந்து பார்க்கிறாள்...

ஞாபகத்துக்கு வராதது மட்டுமில்லை. தலையும் வலிக்கிறது...

அந்த எம். எல். ஏ. யும், அவரது டாக்டர் மருமகளும் மூளையில் அச்சாய்ப் பதிந்திருக்கிறார்கள்.

அவள் அது பற்றி நாகுவிடம் விசாரிக்க - அவர் உதட்டைப் பிதுக்குகிறார்.

''வெடிகுண்டு வண்டியோட முன்பகுதியில் இருந்த லக்கேஜ்லேயிருந்துதான் வெடிச்சிருக்கு... அதுல - மாமனார் - மருமக எல்லாரும் அவுட். அநேகமா இந்த வெடிகுண்டே அந்த மாஜி எம். எல். ஏ. தர்மராஜனைக் குறிவச்சுத்தான் வச்சிருக்காங்கன்னு பேச்சு... அந்த ஆளையும், அவரோட சகாக்களையும் பூண்டோட அழிக்க - எதிர்க் கட்சிக்காரங்க தீட்டின திட்டம்னு பேப்பர்லே போட்டிருக்காங்க...''

மீரா, தலைகுனிந்து உட்கார்ந்திருக்கிறாள். அவளையுமறியாமல் கன்னத்தில் எப்போதும் ஈரக்கோடுகள்...

'யாரோ - யாரையோ பழிவாங்குவதற்காக - ஒன்றுமறியாத மற்ற பிரயாணிகள் ஏன் பலியாக வேண்டும்?'

'பஸ்ஸில் வெடிகுண்டு வைத்தவன் - கொஞ்சமாவது இதையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டாமா...?'

'ஐயோ... குண்டு வெடிச்ச சமயத்துல - அவர் என்ன பண்ணிட்டு இருந்திருப்பார்? பெங்களூர் ஃபார்மைப் பத்தி நினைச்சிட்டு இருந்திருப்பாரோ...?'

கீர்த்தியை நினைக்கும்போதெல்லாம், அவள் நெஞ்சு தவித்து, தவித்து அடங்குகிறது.

கல்யாணத்துக்கு முன்னால் - அவன் யாரோ, என்னவோ... பத்து நாளில் ஓர் உறவை உண்டுபண்ணி விட்டு, ஆயுசுக்கும் அதை மறக்க முடியாதபடி செய்து விட்டானே...


உடம்பு குணமாக ஆக - இரவில் தூக்கம் என்பதையே பறிகொடுத்து விட்டு, நிமிடத்துக்கு ஒருமுறை அம்மாவை அழைத்துக் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்கிறாள் அவள்.

''ஏம்மா... ஆயுசு முடிஞ்சு செத்தாத்தானேம்மா ஆத்மா சாந்தி அடையும்.. இப்படி, அசந்து மறந்திருக்கறப்ப - கழுத்துச் சங்கிலியைப் பிடிச்சு இழுத்துட்டு ஓடற திருடன் மாதிரி - இவரை அந்த எமன் இழுத்திட்டுப் போயிட்டானே.. அவரோட ஆத்மா, தன் உடம்பைத் தேடாதா...?''

"என்னங்க இது, உங்களுக்கு எங்கப்பா போட்ட மோதிரம் இப்படி தேய்ஞ்சு போயிடுச்சு...?"

"ஹி... ஹி... பூதம் வருமோன்னு ஒரு ஆசை; தேய்ச்சுப் பார்த்தேன்!"

- ஆர். வசந்தகுமார்.



''தூங்கு மீரா... அவனுக்கு இப்படி ஒரு முடிவுன்னு அவன் தலையில எழுதியிருக்கு. விதி முடியாம யாரும் போயிட முடியாது..''

''அப்படின்னா - அப்பா இவரோட ஜாதகத்தைத் தூக்கிண்டு ஒவ்வொரு ஜோஸியர்கிட்டேயும் பொருத்தம் பார்க்க ஓடினாரே... அப்பத் தெரியலையாம்மா... இவர் இப்படி பஸ்லேயே சொல்லாம கொள்ளாம பிராணனை விடுவார்னு...''

''ஏண்டி, அல்பாயுசு ஜாதகம்னு தெரிஞ்சா கல்யாணம் செஞ்சிருப்போமா? ஜாதகத்தை ஒழுங்கா கணிக்கலையோ என்னவோ?''

''ஒரு வேளை இப்படி இருக்குமோம்மா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவன் எப்பேர்ப்பட்ட தீர்க்காயுசுக்காரனா இருந்தாலும் - 'பொக்'குனு போயிடுவான்னு...''

''சீச்சீ... உன் ஜாதகத்துக்கு என்னடி குறை... அருமையான நட்சத்திரம். உன் ஜாதகத்தைப் பார்த்தவங்க அத்தனை பேரும் இது போல கோடியில ஒருத்தருக்குத்தான் அமையும்னு சொன்னாங்க...''

''அது எப்படிம்மா.. என் ஜாதகமும் ஒழுங்காத்தான் கணிக்கப்பட்டதுன்னு என்ன நிச்சயம்?''

மீராவின் தாய் அலுத்துப் போவாள்.

''ஷ்.. என்னதான் ஸ்பெஷல் வார்டுன்னாலும் அக்கம் பக்கத்துல இருக்கறவங்க எல்லாம் தூங்க வேண்டாமா.. கண்ணை இறுக மூடிண்டு தூங்கறதுக்கு பாரு...''

''தூக்கம் வரல்லைம்மா...''

''ராம ராமன்னு சொல்லு... தூக்கம் வரும்...''

''கீர்த்தி கீர்த்தியின்னு சொல்றேனே...''

''....''

அம்மா, கட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் ஜமுக்காளம் விரித்துப் படுத்தவள் - அப்படியே நொறுங்கிப் போய்த் தலையணையில் முகம் புதைத்து அழுவாள்..

அன்று -

மீராவைக் காரில் வைத்துச் சென்னைக்கு அழைத்துப் போகலாமென்றும், இன்னும் சில நாட்கள் ஓய்வில் இருந்தால், அவள் பழையபடி நடமாடலாம் என்றும் டாக்டர்கள் சொல்லி விட்டபடியால்...

அவள் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு விட்டாள்.

நாகு மாமாதான் வாடகைக் காருக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஆஸ்பத்திரி வாசலை விட்டுப் புறப்படும் முன் மீரா, அப்பாவை அழைக்கிறாள்.

''என்னம்மா?''

''எனக்கு அவரோட வீட்டுக்குப் போய், மறுபடியும் அந்த மனுஷங்க எல்லாரையும் பார்க்கணும் போல இருக்குப்பா..''



''கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் படிக்கட்டில் பயணம் செய்து இறந்தவர் களின் எண்ணிக்கை 51'' என்ற அறி விப்பை எழுதி ஒவ்வொரு டவுன் பஸ் ஸின் படிக்கட்டு அருகேயும் ஒட்டி வைத் துள்ளனர் மதுரையில்.

- சுகா ராஜ்.

''நோ, நோ... இதென்ன பைத்தியக்காரத்தனம்? ஏற்கெனவே அவங்க ரொம்பவும் நொந்து போயிருக்காங்க. நீ வேற இப்பப் போய், அவங்க துக்கத்தை அதிகமாக்க வேண்டாம்...''

''ஆமா மீரா... இந்த ரணம் கொஞ்சம் ஆறட்டும். அப்புறம் வரலாம்...''

- இது நாகு.

''இல்லேம்மா.. எனக்கு அவரோட அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு.. ப்ளீஸ்..''

''மீரா... உனக்கு உடம்பு குணமாற வரைக்கும் போய்க் கவனிச்சுக்கச் சொன்னதே உங்க மாமியார்தான். தினமும் நீ எப்படி இருக்கே, கொஞ்சமாவது தேறியிருக்கியான்னு கேட்டுண்டே இருப்பா. ஆனா - இப்போதைக்கு நீ அந்த வீட்டுக்கு வர்றதை - அவ மட்டுமில்லே.. அந்த வீட்டுல யாருமே விரும்ப மாட்டாங்க. பழைய சம்பிரதாயத்துல ஊறின குடும்பம் பாரு... புருஷன் போனா- அந்தப் பத்து நாளுக்குள்ளே வீட்டுக்கு வந்தாத்தான் அப்புறம் போக்குவரத்து வச்சுக்கலாம்.. இல்லைன்னா - ஒரு வருஷத்துக்கு வரப்படாது... கரிக்கால் அது - இதுன்னு பழங்காலத்து மனுஷி ஆயிரம் பேசுவா...''

மீரா - தாயின் மடியில் நீட்டியிருந்த தன்னிரு பாதங்களைப் பார்க்கிறாள்.

பாதம் வரையில் புறா போலதான்...

புடைவையின் விளிம்பு சற்று ஒதுங்கினாலும் - தசைகள் இழுபட்டு - உட்பக்கச் சிவப்பு மறையாத கால்களின் தோற்றம்..

'என்னைக் கரிக்கால் ஆக்கி, என் கணவனை முழுசாய்க் கரியாக்கிய அந்த வெடிகுண்டு விபத்துக்கு மூலகாரணம் யார்...?'

மீண்டும் நெஞ்சுக்குள் கேள்வி குதிக்க -

கார் கிளம்பும் நேரத்தில் திபுதிபுவென மோட்டார் சைக்கிள் சப்தம்....

(தொடரும்)

பர்னாலா தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்கிறாரே...?

★ ஆ. ஜீவா, பூண்டிநீர்த்தேக்கம்.

? கலைஞர் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருவாரா?

! அதை மத்தியில் அமரும் ஆட்சியைப் பொருத்து முடிவு செய்வார்!

★ அ. முஸ்தபா, தக்கோலம்.

? கள்ள வோட்டுப் போடுவதைத் தடுக்க ஒரு நல்ல யோசனை?

! கள்ள வோட்டுப் போடப்படுமுன்னரே அசல் வோட்டை ஒவ்வொருவரும் போட்டு விட்டு வந்து விடுவதுதான்.

★ எஸ். மனோகரன், சங்கமங்கலம் ★

? விளம்பரங்கள் வாக்குகளைச் சேகரித்துக் கொடுக்குமா?

! தீவிரக் கட்சிப் பற்று உடையவர்கள் எப்போதும் தங்கள் அபிமானக் கட்சி அல்லது தலைவரைக் கருதியே போடு வார்கள். ஆனால் மதில் மேல் பூனையாக ஏராளமான பேர் உண்டு. அவர்கள் ஒரு முடிவுக்கு வர விளம்பரங்கள் உதவும்.

★ குரு கிருஷ்ணா, திருச்சி.

? 'கருணாநிதி உருவில் எம். ஜி. ஆரைக் காண்கிறேன்' என்று சாத்தூர் ராமச்சந்திரன் பேசியிருக்கிறாரே?

! இவரைப் போன்றவர்கள் நாளை தேவைப்பட்டால் அத்வானி உருவில் கூட எம். ஜி. ஆரைக் காண்பார்கள்!

★ ஜி. கதிரேசன், சிறுமுகை.

? 'தமிழகத்தில் அ. இ. அ. தி. மு. க. தனிப் பெரும்பான்மை பெறாமல் போனால் ஜெயலலிதாவின் மந்திரி சபை யில் சேராமல் வெளியிலிருந்து கொண்டே ஆதரவு தருவோம்' என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறாரே?

! நிச்சயமாக ஜெக்குப் பிடிக்காத பேச்சு. அ. தி. மு. க. வுக்கு ஒருவேளை பெரும் பான்மை கிடைக்காமல் போகவும் கூடும் என்று வாழப்பாடியார் எண்ணலாமோ?

★ கே. ரவிச்சந்திரன், பனங்குடி.


? ராமராஜனை பாப்புலராக்கியது எது? ஊசலாட விட்டது எது? ஒதுக்கி வைத் திருப்பது எது?

எம். ஜி. ஆரைக் காண்கிறார்!



அப்படியும் இப்படியும்





தி. மு. க. வுக்கு ஆதரவாக...

! சினிமா; அரசியல்; ஜெ.

★ ஆர். சம்பத், திருச்சி.

? 'தோற்றால் இப்படி, ஜெயித்தால் அப்படி' என்றெல்லாம் கலைஞர் பேச ஆரம்பித்து விட்டாரே, அ.தி.மு.க. பதவிக்கு வந்துவிடும் என்று கருத ஆரம்பித்து விட்டாரா?

! அவரா! ஆட்சிக்கு அ. தி. மு. க. வந்து விட்டால், அப்படி வந்த பிறகும் புள்ளி விவரம்தான் சொல்வாரே தவிர தோல்வி என்று ஒப்புக் கொள்ள மாட்டார். 'ஜெயித் தால் அண்ணா வழி, தோற்றால் பெரியார் வழி' என்பதெல்லாம் வாக்காளரில் ஒரு சாராரை மிரட்டத்தான்!

★ வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.

? காலில் விழுந்து வணங்கப்படும் அரசியல்வாதிக்கும் ஆன்மீகவாதிக்கும் என்ன வேறுபாடு?

! ஆன்மீகவாதியை விழுந்து வணங்கு வதால் பலன் கிடைக்கிறதோ இல் லையோ, காலை வாரி விட மாட்டார் என்ற அளவுக்கு நிச்சயம் நம்பலாம்.

★ சித. கருணாநிதி, மருதூர் தெற்கு.

? 'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை'யாகச் சமீபத்திய அரசியலில் யாரைக்



தலைநகரை மாற்றுவாரா?

நாளிதழில் படித்த போது, 'இரண்டு கை போதாது தலையில் அடித்துக் கொள்ள' என்றுதான் தோன்றியது. நமது கோபம் அந்தப் பெண் மீது அல்ல. இப்படி தற்குறிகளாக நமது மக்களை வைத்திருக்கும் தலைவர்கள் மீது.

✱ ப. விஜயபாலன், சென்னை.

? எம். ஜி. ஆரின் வாரிசு ஆட்சிக்கு வந்தால் தலைநகர் மாற்றப்படுமோ?

! அத்துடன் தபால்கார்டு விலையும் குறையும்.

✱ கே. அருணாசலம், தென்காசி.

? அ. தி. மு. க. ஐந்து லட்ச ரூபாயை வங்கதேசப் புயல் நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்கியது பற்றி...?

! பணக்காரக் கட்சி.

✱ பி. கே. சங்கர், சென்னை.

? மாணவர் தலைவராக இருந்த போது சட்டசபைத் தேர்தலில் காமராஜரைப் படுதோல்வியுறச் செய்த சீனுவாசன் இன்று காங்கிரஸில் சேர்ந்திருக்கிறாரே?

! கட்சி மாறிகளால் எப்போதுமே பிறந்த வீட்டுக்கும் அவப்பெயர்; புகுந்த வீட்டுக்கும் கெட்ட பெயர்!

✱ ஆர். எஸ். இராஜ், காரைக்கால்.

? கவர்னர் ஆட்சியில் காவல் துறையின் போக்கு?


! 'சட்ட ஒழுங்கை நிலைநாட்டவில்லை; விடுதலைப் புலிகளை அடக்கவில்லை' என்ற காரணம் காட்டி தி. மு. க. ஆட்சியைக் கலைத்தார்கள். ஆனால் நடப்பது என்ன? கவர்னர் ஆட்சியில் நகரில் தினம் இரண்டு கொலை; நாலு கொள்ளை. புலிகளோ முன்னாள் பிரதமரின் உயிரையே முடித்து விட்டார்கள்! காவல் துறையானது பாதுகாப்புப் பிரிவு, சட்ட ஒழுங்கு பிரிவு, துப்பறியும் பிரிவு ஆகிய எல்லா அம்சங்களிலும் தரம் கெட்டுப் போனது. இதை விடக் கேவலம் இந்தச் சீர்குலைவுக்கு யாரும் தார்மீகப் பொறுப்பு ஏற்க முன்வராதது! மனச்சாட்சி என்று இருந்தால்தானே!

✱ வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.

? 'ஜெயலலிதா மலையாக இருந்தாலும் நான் உளியாக இருந்து தகர்ப்பேன்'



நாகரிகம் தெரிந்தவர்



புத்திசாலித்தனம்

என்கிறாரே டி. ராஜேந்தர்?

! டி. ஆருக்கு உதவுவதற்காகவே (அவரைப் பிடிக்காவிட்டாலும்) ஏதோ சாக்குப் போக்குக் கூறி தி. மு. க. வேட்பாளர் வாபஸ் பெற, தி. மு. க. தொண்டர்கள் முழுமையாக டி. ஆருக்கு இன்று உதவ, உளியால் மலையைத் தகர்க்க முடியாது போனாலும் ஒரு முத்திரையைச் செதுக்கி விடும்.

✱ சிவ. சீனிவாசன், கும்பகோணம் ✱

? இந்தியத் தேர்தலில் வன்முறையைக் குறைக்க ஒரு வழி சொல்லுங்களேன்?

! நடந்து முடிந்த முதல் கட்டத் தேர்தலைக் கவனியுங்கள். எல்லாக் கட்சிகளுமே வோட்டுச் சாவடிகளைக் கைப்பற்றியுள்ளன. எல்லாக் கட்சியினருமே வன்முறையில் இறங்கியிருக்கிறார்கள். கள்ள வோட்டுக்களைப் போட்டிருக்கிறார்கள். மக்கள் பயந்து போய் வோட்டுப் போடவே முன்வராமல் இருந்திருக்கிறார்கள். இவையெல்லாம் நமக்குத் தலைகுனிவு மட்டுமல்ல; ஜனநாயகத்திலேயே நம்பிக்கை இழக்கச் செய்து விடும். தீர்வு என்ன? எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேச வேண்டும். நாட்டு நலன் கருதி சில முடிவுகளை எடுக்க வேண்டும். 'குண்டர்களைக் கட்சியில் சேர்ப்பதில்லை; கம்பி எண்ணியவர்களை வேட்பாளர் ஆக்குவதில்லை; ஜாதி மதப் பூசல்களை வளர்ப்பதில்லை; கொள்கைப் பிரசாரம் மட்டுமே செய்வது, அவதூறுகளைச் சுமத்துவதில்லை' என்ற முடிவுக்கு வந்து அதில் உறுதியாக நின்றால் அப்புறம் வன்முறை எப்படி தலைகாட்டும்? ஆக, தவறு ஜனநாயகத்தில் அல்ல; மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டிய தலைவர்களே தவறான வழியில் செல்வதுதான் காரணம்.

✱ அ. சு. கிருஷ்ணன், சென்னை.

? நம்முடைய தேர்தல் முறையைப் பார்த்த பிறகும் நீங்கள் ஜனநாயக முறையை ஆதரிப்பது ஏன்?

! அதைவிடச் சிறந்த ஆட்சி முறை ஒன்று இல்லாத காரணத்தால்.

✱ ரூ. 20 பரிசு பெறுபவர்:
சிவ. சீனிவாசன்,
13 - ஏ வினைதீர்த்த தெரு,
கும்பகோணம் - 612 001.

நேற்றுவரை நந்தவனம்

8

'இவனை எங்கே பார்த்திருக்கிறோம்...'

மீரா, அதிகம் மூளையைக் கசக்கிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

நாகு மாமா, மிகவும் சகஜமாய்ப் பெயர் சொல்லி அழைக்கிறார்.

''வாப்பா குமரா... என்ன உன்னைக் காணுமேன்னு நினைச்சிட்டே இருந்தேன்...''

இதற்குள், காரில் ஏறிய மீராவின் தந்தை அவசரமாய் இறங்குகிறார்.

''உங்க கிட்ட சொல்லிக்காமப் போறோமேன்னு என் ஒய்ஃப் கிட்ட புலம்பிண்டே இருந்தேன். ஏதோ, நீங்க எல்லாம் சிரமத்தைப் பார்க்காம உதவினதுனாலே தான் என் பொண்ணை இந்த அளவுலே யாவது பார்க்க முடியறது...''

அப்பா, மீராவின் பக்கம் திரும்புகிறார்:

''அம்மா மீரா... பஸ் ஆக்ஸிடென்ட்டுல காயமடைஞ்சவங்களுக்கெல்லாம் சார்தான் உயிர் பிச்சைக் கொடுத்தது. அவரும், அவர் ஃபிரண்ட்ஸும் எப்பவும் ஹாஸ்பிடல் லேயேதான் இருப்பாங்க. ரத்தம் கொடுக்கறதுலேயிருந்து - அவசரத்துக்கு மருந்து வாங்க ஓடறது வரைக்கும்... இதுல என்ன துயரம்னா - இதே பஸ் ஆக்ஸிடென்ட்டுல சாரோட அப்பாவும், ஒய்ஃபும் இறந்துட்டாங்க.... அம்மாவுக்கு ஆறுதல் சொல்றதா, இல்லே - தன் அம்மாவைப் பறி கொடுத்த குழந்தையைச் சமாதானப் படுத்தறதான்னு புரியாம தவிச்சிட்டிருக்கார்.... இத்தனைக் கஷ்டத்துலேயும் மத்தவங்களுக்கு ஹெல்ப் பண்ணனும்னா - அதுக்கு ரொம்பப் பெரிய மனசு வேணும்.....''

மீரா - மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கவிருந்த இளைஞனைப் பார்க்கிறாள்.

இவள் பார்க்கிறாள் என்பது தெரிந்தவுடன் - அவன், தன் விரலிடுக்கில் அது நேரம் வரையில் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டு அவசரமாய்ச் செருப்புக் காலால் தேய்க்கிறான்.

மீரா, மெள்ள, கைகுவிக்கிறாள்.

''தாங்க்ஸ்....''

நாகு, இதற்குள் வழக்கம் போல குறுக்கிடுகிறார்.

''மீரா... குமரன் நம்ம கீர்த்தியோட கிளாஸ் மேட்...''

'இந்த விஷயம் இப்போது ரொம்பவும் அவசியம்தானா' - என்பது போல மீராவின் தாய் கடுப்புடன் பார்க்கிறாள்.

''புறப்படலாமே... ஆச்சு.... இப்பவே கிளம்பினாத்தான்... இன்னும் பத்து நிமிஷத்துல ராகு காலம் வந்துடும்....''

அப்பா, இது எதுவுமே காதில் விழாதவராய், முள் படர்ந்த தாடியைச் சொறிந்தபடி, கட்டை மாதிரி நிற்கிறார்.

குமரன்தான் மீராவைப் பார்த்துப் பேசுகிறான்.

''நடந்ததை எல்லாம் மறந்துடுங்க மேடம்...''

''அஃப்கோர்ஸ்... டிரை பண்ணறேன். ஆனா, என்னைச் சொல்றீங்களே, உங்களாலே முடியுமா... சண்டை போட்டு, டிவோர்ஸ் வாங்கிட்டு, அம்மா வீட்டுல போய் இருந்தாலும் - உங்க ஒய்ஃபை நினைக்காம, உங்களால் இருக்க முடியுமா. இல்லே, உங்க அம்மாவாலேதான் உங்க அப்பாவை மறந்துட்டு வாழ முடியுமா...''

''நிஜம்தான். கண்டிப்பா இந்த உறவெல்லாம் ஆயுசுக்கும் மனசை விட்டு நீங்காததுதான். ஆனா, ஒரு விதத்துல பார்க்கப் போனா - உங்களுக்குக் கீர்த்தி மரணத்தோட பாதிப்பு சீக்கிரம் மறைஞ்சிடும்... கல்யாணமாகி பத்து நாளுலேயே... இது ஜஸ்ட் லைக் டிரெயின் ஃபிரண்ட்ஷிப்....''

மீரா - இன்னமும் பிடிவாதமாய் விரல் நகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் மருதோன்றிச் சிவப்பையே வெறித்தபடி சொல்கிறாள்.

''நோ.... நீங்க நினைக்கற மாதிரி, இது அத்தனைச் சுலபமான விஷயமில்லே. உங்க அம்மா உங்க அப்பாவோட வாழ்ந்திருக்காங்க. சண்டையோ - சுகமோ அனுபவிச்சிருக்காங்க. நீங்களும்தான் - உங்களுக்குள்ளே ஆயிரம் இருந்தாலும் - உங்க மனைவிய நினைச்சுப்பார்க்கற சமயத்துல சந்தோஷமோ - துக்கமோ - நிறைய சம்பவங்கள் இருக்கு. அவ நினைவா ஒரு குழந்தை இருக்கு... எனக்கு அப்படி

அனுராதா ரமணன்

பில்லே. இலையில உட்கார்ந்து, முதல் கவளத்தை எடுத்து வாயில போடற துக்குள்ள கையைத் தட்டி விட்டாப்பல....''

''.........''

''எனக்கு அவரைப் பத்தி எதுவுமே தெரியாது... அவரோட ரசனை, விருப்பு, வெறுப்பு... சுபாவம்.... உங்களுக்காவது கிளாஸ்மேட்ங்கிற முறையில் அவரைப் பத்தி ஏதாவது தெரிஞ்சிருக்கலாம்.... யூ நோ... அவர் நன்னாச் சாப்பிடுவார்ங்கறது தெரியும்.... முதல் தடவை சாதம் போட றச்சே பயந்துட்டேன்... பேச்சுல கிண்டல் இருந்தது... என் மேல.. என் மேல நிறைய ஆசை வச்சிருந்தார்... ஆனா - கடைசியா என்ன சொல்ல நினைச்சார்.... செத்துப் போறப்ப என் பேரைச் சொல்லிக் கூப் பிட்டாரா... பயந்து போய் அலறி னாரா... அழுதாரா.. இல்லே தூங்கிட்டிருந்தாரா... இதுக்கெல்லாம் விடை தெரியாம - என் னால எப்படி நிம்மதியா இருக்க முடியும்? சொல்லுங்க!''

மீராவின் குரல் கம்ம, தாய், மகளைத் தன் மார்புடன் சேர்த்தணைத்துக் கொள் கிறாள்.

''போதும்டி. அவனைப் பத்தின எல்லா நினைப்பையும் இந்தத் தஞ்சாவூர் மண்ணோடவே உதறிட்டு வா...''

மீரா, தனது கால்களுக்கு இதமாய்த் தாயின் மடிமீது வைக்கப்பட்டிருந்த தலை யணையை ஆக்ரோஷத்துடன் எட்டி உதைக்க முயற்சி செய்கிறாள்.

அவளது எண்ணங்களில் இருந்த வேகம், இன்னமும் பாதங்களுக்கு வராததால், சின்னத் துடிப்புடன் - கால்கள் தலை யணையிலேயே துவள்கின்றன.

குமரன், அதட்டும் குரலில் சொல் கிறான்.

''மீரா... நீங்க ஒண்ணும் சின்னக் குழந் தையில்லே. படிச்சிருக்கீங்க. வயசான அப்பா, அம்மாவுக்கு மேலும் வருத்தத் தைக் கொடுக்காதீங்க. அரசியலும் திரு மணமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான். எலக்ஷனுக்குப் பயந்தோ, பிடிக்காமலோ வாபஸ் வாங்கினா டெபாஸிட்டோட போச்சு. வாழ்க்கையில இதே மாதிரி கல் யாணமான உடனே பிரிய நேர்ந்துதுன்னா ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்கற மரி யாதையோட போச்சு. எலக்ஷன்லே நின்னு தோற்கிறவங்களும், பிள்ளை குட்டியப் பெத்துட்டு தாம்பத்ய வாழ்க்கையில பிரி யறவங்களும் ஒண்ணு. பணச் செலவும், கசப்பும்தான் மிச்சம். அப்படியே ஜெயிச்சு வந்தவங்களானாலும் சரி..... வாழ்க்கை யில முப்பது நாற்பது வருஷம் சேர்ந்து வாழறவங்களானாலும் சரி... பிரமாதமா ஒண்ணும் சாதிச்சிடப் போறதில்லே. பிடிக்



குதோ பிடிக்கலையோ எப்படிக் காலப் போக்குல ஜனங்க இந்தத் தலைவனை ஏத் துக்கறாங்களோ - அப்படித்தான் ஃபேமி லியிலேயும்....''

''நான் டெபாஸிட்டை இழந்தாலும் அப்படி இழக்கறதுக்குக் காரணமா யிருந்தவங்களைச் சும்மா விடப் போற தில்லே...''

மீரா அழுத்தமாய்ச் சொல்கிறாள்.

குமரன், புருவத்தை உயர்த்துகிறான்.

''புரியலை...''

''தனி மனுஷ விரோதத்துக்காக ஒரு பஸ்ஸில இருந்த அம்பத்திரண்டு பாஸஞ்சர் ஸோட உயிருக்கும் விலை வச்ச அந்த விரோதிய - அவன் சமூக விரோதியோ இல்லையோ... என் வரைக்கும் அவன்தான் என் முதல் விரோதி... கண்டு பிடிச்சுத் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுத் தாத்தான் எனக்குத் தூக்கம் வரும்...''

குமரன் - வரிசைப் பற்கள் தெரிய - முதன் முறையாகச் சிரிக்கிறான்.

''உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? அதுக்குத்தான் நாங்க இருக்கோமே.... எப்படியும் ஒரு நாள் அந்த சமூக விரோதிய அடையாளம் தெரிஞ்சுக்காம எங்க ஆயுசு முடியப் போறதில்லே... அப்படி என் கையாலே பிடிபட்டான்னா - உங்களைத் தந்தியடிச்சு வரவழைக்கிறேன். உங்க பங்குக்கு என்ன தண்டனை தரணுமோ தந்துடுங்க....''

மீரா சிலையாய் அமர்ந்திருக்க - அம்மா தொண்டையைச் செருமுகிறாள்.

மனைவியின் சமிக்ஞையைப் புரிந்து கொண்ட அப்பா, 'லபக்'கென வண்டியில் ஏறி உட்காருகிறார்.

''கிளம்பலாமே...''

அவரது கட்டளைக்காகவே காத்திருந் தாற் போல கார் கிளம்ப -

''நான் இப்படியே உங்க கூட வந்து, வைத்தியர் தெரு முனையில் இறங்கிக் கறேன்...''

நாகு, முன் பக்கம், மீரா அப்பாவின் பக்கத்தில் தொத்திக் கொள்கிறார்.

'' 'சாப்பிட்டபின் மாவாட்டும் வசதி இங்கு இல்லை'ன்னு போர்டு வெச்சது தப்பாப் போச்சு.''

''ஏன்... என்னாச்சு?''

''வர்றவங்களெல்லாம், 'மாவாட் டிட்டுச் சாப்பிடலாமா'ன்னு கேட்டு உயிரை எடுக்கிறாங்க!''

- சீர்காழி. வி. ரேவதி.



குமரன் தனது ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு கா ரு ட ன் சிறிது தூரம் வரு கிறான்.

''சார்... உலகம் ரொம்ப மோச மாயிண்டு வர்றது. பணத்துக்காகவும், பத விக்காகவும் - அப்பனை பிள்ளை கொல்ற தும், தாலி கட்டின பொண்டாட்டி கழுத்தை நெரிக்க றதும் சகஜமாயிடுத்து...'' நாகு தன் பாட்டுக்குப் புலம்புகிறார்.

"அதுக்காக? மீரா சொல்ற மாதிரி அவங்க துவேஷத்தைத் தனிப்பட்ட முறையில வச்சுக்க வேண்டியதுதானே? பொது மக்க ளோட வாழ்க்கையே இதனாலே பாழாய்ப் போறது வயித்தெரிச்சல் இல்லையா...''

''கோபம்னு வந்தா இதெல்லாம் சகஜம் தான். சதாம் உசைன் செஞ்சதை விடவா? அந்தாளுக்கு என்ன... பச்சைக் குழந்தைகள் பேருலேயும், ஒண்ணும் அறியாத பொம்மனாட்டிகள் பேருலேயும் என்ன விரோதம்... ஒண்ணுமே இல்லே. 'தட தட'ன்னு குண்டை உதிர்த்துண்டே போறச்சே - குழந்தை - குட்டின்னு பார்த் துண்டிருக்க முடியுமா?''

நாகு, மீராவின் பக்கம் லேசாகக் கழுத்தைத் திருப்பிச் சொல்கிறார்.

''இப்ப நம்மை வழி அனுப்பி வைக்க வந்தானே... குமரன்.... எக்ஸ் எம். எல். ஏ. தர்மராஜன் பிள்ளை... இவனே கூட, பஸ்ஸுலே வெடிகுண்டை வச்சிருக்க லாம்னு ஜனங்க பேசிக்கறாங்க....''

''சேச்சே... சொல்றவங்களுக்கு நாக்கு அழுகிப் போயிடும். அந்தப் பிள்ளை - உசிருக்கு மன்றாடிட்டு இருந்த எத்தனைப் பேரைக் காப்பாத்தினான்...''

மீராவின் தாய் படபடக்கிறாள்.

கடந்த சில நாட்களாய் - ஆஸ்பத்தி ரிக்குள் அவள் சின்னதாய் ஒரு சிநேகிதப் பட்டாளத்தையே சேர்த்து விட்டாள். அதில் மிக முக்கியமானவன் குமரன்.

'பஸ் எரிந்து சாம்பல், ஸ்தலத்திலேயே இறந்தவர்களின் பட்டியல்....' - இப்படி ஏதாவது ஒரு செய்தியைக் காலனி வீட்டில், அமர்ந்து காப்பியைப் பருகியபடியே படிப் பதற்கும் - இங்கே நேரிட அனுப விப்பதற்கும் எத்தனை வித்தியாசம்!

யார், என்ன பெயர், எந்த ஊர் எதுவும் தெரியாது... ஆனாலும் சிகிச்சை பெறுப வர்களுக்கும், செய்தி கேட்டு அலறித் துடித்து ஓடி வரும் உறவினர்களுக்கும் - தனக்குமிடையே ஒரு உறவுப் பாலத்தை அமைத்துக் கொண்டு விட்டாள் அவள்...

தாங்களாவது - தங்களது உறவுக்காக வந்து அல்லல் படுகிறோம்... ஆனால் இருக்கிற சொந்தங்களையும் பறி கொடுத்து விட்டு ஒருவன் - உதவிக்கரம் நீட்டி ஓடி வருகிறான் என்றால்...



''தவணை முறையில் ஸ்கூட்டர் வாங்கித் தர்றேன்னு சொன்ன என் மாமனார் இப்படிச் செய்வார்னு நான் எதிர்பார்க்கலை...''
''என்ன பண்ணினார்?''
''மாசம் ஒரு ஸ்பேர் பார்ட்டா வாங்கிக் கொடுத்து அசெம்பிள் பண் ணிக்கச் சொல்றாரு...''
- வி. கி. குமார்

அவனைப் பாராட்டாவிட்டாலும் ஒழி கிறது. பழி சுமர்த்தாமலாவது இருக்க லாம் இல்லையோ....

இவளது மனத்தில் ஓடிய எண்ணத்தைப் படித்தாற் போல நாகு சொல்கிறார்.

''அம்மா... நாம எல்லாருமே அப்பாவி கள். கண்ணுக்கு நேரே ஒருவன் கொள்ளை யடிச்சிட்டுப் போனாலே தெரியாது. எதை யுமே மேலோட்டமாப் பார்த்தே பழக்கம். 'எனக்கு ஓட்டுப் போட்டவங்க அத்தனைப் பேருக்கும் தினமும் வடை பாயசத்தோட சாப்பாடு கிடைக்கச் செய்வேன்னு எவ னாவது சொன்னா - 'ஹா'ன்னு வாயைப் பொளந்துண்டு போய் விரல்லே மசி குத்திக்கத்தான் தெரியும். நாம என்னிக் குமே ஓட்டு போடத்தான் லாயக்கே தவிர - தட்டிக் கேட்கற சாமர்த்தியம் கிடையாது. ஆனா, இவங்க அப்படியில்லே!

''குமரனுக்கு அவனோட அப்பா கிட்ட பல விஷயங்கள் பிடிக்கலே.. அரசியல் போர்வையில அவர் அராஜகமா நிறைய விஷயங்களைச் செஞ்சிருக்காரு... இவனுக் கும் - இவன் பெண்டாட்டிக்கும் ஆக விடாம செஞ்சிருக்காரு. கள்ள வோட்டு சேர்த்தே ஜெயிச்சிருக்காரு... தன்னைப் பகைச்சிட்டவங்களைக் கொலை கூட செஞ்சிருக்காரு... இதெல்லாம் போதா துன்னு ஊரெல்லாம் சின்ன வீடுங்க... அப்படியும் இப்படியுமா எல்லாச் சின்ன வீடுகளுமாய்ச் சேர்ந்து, ஒரு காலனியே உருவாயிடும் போல இருக்கு... இதுக் கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா.. அதான், தீர்த்துட்டான்...''

''அதே வண்டியில பெண்டாட்டியும் இருந்திருக்கா... அ தை யு ம் கொஞ்சம் யோசிக்கணும்... பாலுக்கு அழற குழந்தைய விட்டுட்டு... எவனுக்கு மனசு வரும்...''

மீராவின் தாய் குமைந்தாள்.

''நாம அப்படி நினைக்கிறோம். ஒரே கல்லுல ரெண்டு மாங்காய்னு அவன் நினைச்சிருக்கலாம். இதான் இன்னிக்கு அரசியல். நாலு பேரைத் தீர்த்துக் கட்டு வாங்க... அந்த ரத்தம் உலர்றதுக்குள்ளே நானூறு பேருக்கு அன்னதானம் பண்ணு வாங்க... இங்கே, அவர் குடும்பத்துக்கு நிதி கொடுத்து பத்திரிகையில ஃபிளாஷ் பண்ணுவாங்க. குமரன் கூட இந்த ரகமா ஏனிருக்கக் கூ டா து ங் க றே ன் ? நீங்க வேணாப் பாருங்க; கூடிய சீக்கிரத்துல இவன் ஒரு மந்திரியா வந்தாலும் ஆச்சர்யப் படறதுக்கில்லே...''

மீராவின் தாயின் முகத்தில் குழப்பம்...

மீராவோ தஞ்சாவூரின் நெரிசலான போக்குவரத்தை - வெற்றுப் பார்வையால் அளந்தபடி மௌனமாய் இருக்கிறாள்.

''சொல்ல முடியாது. குமரன் மந்திரியா வந்து - இந்த பஸ் விபத்துல பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு லட்சக் கணக்குல வாரி வழங்கினாலும் வழங்குவான்... ஓ. கே... நான் இறங்க வேண்டிய இடம் வந்து டுத்து... வண்டிய ஓரம் கட்டுப்பா...''

நாகு, காரின் வேகம் குறைந்ததும் 'விசுக்'கென இறங்குகிறார்.

''ஊர் போய்ச் சேர்ந்ததும் லெட்டர் போடுங்கோ சம்பந்தி... மீரா, மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. மேலே படி...''

மீரா இலக்கில்லாமல் தலையாட்டு கிறாள்.

கார் நகரத் தொடங்கியதும் - அவள் தாய் எரிச்சலுடன் சொல்கிறாள்.

''இந்த நாகுவைக் கண்டாலே பிடிக் கலே! ஏதோ உதவி செஞ்சிருக்காரே தவிர - மனசுக்குள்ளே அத்தனையும் வினை....''

''சும்மாயிருடி...''

அப்பா அதட்டினாலும் அவள் ஓய வில்லை.


''அந்தப் பிள்ளையாண்டான் மேல அத்தனை பழி சொல்றாரே... அப்படிச் சொல்றதாயிருந்தா - நான் கூடத்தான் இவர் மேல ஆயிரம் பழி சொல்லுவேன்... தன் பொண்ணுக்குக் கிடைக்காத வாழ்வு - இன்னொருத்திக்கு கிடைக்கறதாவதுன்னு... இவர் ஏன் அந்த டைம்பாமை வச்சிருக்கக் கூடாதுங்கறேன்?''

''டைம் பாம்கறது என்ன ஓலைப் பட்டாசா? எதுக்கு இப்படி அநாவசியமா கற்பனைய வளர்த்துக்கறே? மீரா கொஞ்சம் தூங்கட்டும். நீ பேசாம வாயேன்...''

மீரா தூங்கவில்லை..... கண்ணை மூடி னால் - குமரன் வந்து நிற்கிறான்...

அவளது விழியோரத்தில் சின்னதாய் இரு முத்துக்கள்.

(தொடரும்)



அமரர் கல்கி நினைவாக— பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப் படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசீலித்துப் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

O கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் பொன் விழா சிறுகதை/நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற சுயவிலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4உ ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.

O பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.

O எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

இத்தனை வருடங்களாக இருந்த வீடு தான். ஆனாலும் மீராவுக்கு அன்னியமான இடம் போலத் தோன்றியது.

பழகின மனிதர்களே புதியவர்களாகக் காணப்பட்டார்கள்.

வீட்டில் அதிகம் பேச்சே இல்லை. அவரவர் தங்களது வேலைகளில் பம்பர மாய்ச் சுழன்றார்களே தவிர, மௌனம்தான் ஆட்சி செய்தது.

இத்தனைக்கும் அந்த வீட்டில் நாலே பேர்தான். என்றாலும் முன்பெல்லாம் சப்தமும், சிரிப்புமாய் வீடு அமர்க் களப்படும்.

அப்பாவுக்கு, அம்மாவை ஏதாவது சீண்டாவிட்டால் சாப்பாடே இறங்காது.

காலையில் வாசலில் தண்ணீர் லாரி வந்து நிற்கும். அப்பா கையில் ஒரு வாளி யும், தோளில் ஒரு குடமுமாய்த் 'திபு திபு'வென ஓடி ஓடித் தண்ணீர் பிடிப்பார்.

அண்டை அசலில் அவருடன் ஒரே தலைக்குத் தலை கிண்டல்... கூச்சல்... வயது வித்தியாசம் பாராமல் பளிச்சென வந்து விழும் விமர்சனங்கள்..

இத்தனையும் மீரா, அவள் தாய் - இன் னும் மற்ற குடும்பத்து மனைவி, மக்கள் சேர்ந்திருக்கும் சமயத்தில்தான்.

மீரா கையைக் கொட்டிச் சிரிப்பாள். அம்மாவுக்கும் சிரிப்பு வரும். ஆனாலும் பொய்யாய் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

இப்பொழுதெல்லாம் தண்ணீர் லாரி வந்தால் அப்பா, குடத்தையும் வாளியை யும் எடுத்துக் கொண்டு வாசற்பக்கம் ஓடு வதே இல்லை.

அக்கம் பக்கத்தினரே தலைக்கு நாலைந்து குடம் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு வந்து கொட்டி விட்டுப் போகின் றனர்.

''போதுமா சார்?''

''போதும்பா. தாங்க்ஸ்..''

அம்மா வெளியே வருவதே அபூர்வம்.

நேற்றுவரை நந்தவனம்

அலுவலகத்தில் வேலை பார்க்கும் சினேகிதர்கள்.

காலையில் தண்ணீர் பிடிப்பதில் ஆரம் பித்து, இரவு தூக்கம் வரும் வரையில், யார் வீட்டு போர்டிகோவிலாவது உட்கார்ந்து அரட்டை அடித்து விட்டு வந்தால்தான் நிம்மதி..

''என்ன சார்... மூணு பேர்தான் இருக் கீங்க... முப்பது வாளிக்குக் குறையாம தண்ணி பிடிக்கறீங்க... எப்படி ஸ்டோர் பண்ணி வைக்கறீங்க?''

''அதை ஏன் கேட்கறேடா... ஒரு நாளைக்குக் குறைஞ்சது முப்பது வாளி தண்ணி பிடிச்சாத்தான் என் ஒய்ஃப் ராத்திரி என்கூட முகம் கொடுத்துப் பேசுவா...''

'ஹோ, ஹோ'வெனக் கும்பல் சிரிப்பில் அலைமோதும்.

''ஏன் சார், இத்தனை வயசுக்கு அப்புற மாக் கூடவா - பெண்டாட்டி முகம் கொடுத் துப் பேசலைங்கறதுக்காக வருத்தப் படறீங்க...''

அனுராதா ரமணன்

அனேகமாய், சமைத்த நேரம் போக, மீதி நேரமெல்லாம் படுக்கைதான்... வெறுந் தரையில், சுவரைப் பார்க்க ஒருக்களித்து...

சிறுவன் மணி கூட - சப்தமில்லாமல் வந்து சாப்பிட்டு விட்டு வெளியே ஓடி விடு வான்.

ஒரு நாள் டெலிவிஷனில் ஒலியும் - ஒளியும் பார்க்க அவன் உட்கார, அம்மா வெறிபிடித்தவள் போலக் கத்தினாள்:

''முதல்லே அந்தச் சனியனை நிறுத் துடா...''

''ஏம்மா... நல்ல பாட்டும்மா...''

''எந்தப் பாட்டும் வேண்டாம். இப்ப நீ நிறுத்தப் போறியா... இல்லே., எழுந்து வந்து முதுகுல நாலு வைக்கட்டுமா?''

அன்றிரவு -

மீரா தூங்கி விட்டாள் என்கிற நினைப்பில் அப்பா, கூடத்தில் வைத்து அம்மாவிடம் கொஞ்சம் அதட்டினாற் போலச் சொன்னார்.

''அவன் பாட்டுக்கு ஏதோ பார்த்துட்டுப் போறான். அநாவசியமா அவனை எதுக் காக விரட்டினே.. அவனும் ஒண்ணும் சின்னக் குழந்தையில்லே... என்னடா,

இந்த வீட்டுல இருக்கறதை விட வெளியில சுத்தறதே மேல்னு நினைச்சுட்டா என்ன பண்ணுவே?''

''சுத்தட்டும். நான் கையப் பிடிச்சுத் தடுக்கறதுனால ஏதாவது நின்னுடப் போறதா.. மலையாட்டம் புருஷனைப் பறிகொடுத்துட்டு அந்தக் குழந்தை மலங்க மலங்க முழிச்சிண்டு உட்கார்ந்திருக்கு. இவனுக்கென்ன ஒலியும் - ஒளியும் கேட்கற துண்ணேன்.. ஹீரோவும், ஹீரோயினும் கொஞ்சறதும், கட்டிண்டு உருள்றதும்... பார்க்கச் சகிக்கலை. என் குழந்தைக்கு வாழ்க்கையில கிடைக்காத சுகம் அது.. அதைப் பார்க்கறச்சே என் வயிறு கொதிக்கறதே... கொதிக்கறதே...''

''ஷ்.. சப்தம் போட்டு அவளை எழுப்பிடாதே. நீ சொல்றதெல்லாம் சரி தான். அதுக்காக எத்தனை நாளைக்குத்தான் அவளை - பெட்ரூமுக்குள்ளேயே வச்சிருக்க முடியும்... வெளியே வரட்டும்... டீ.வி.யில நாலு விஷயம், பத்திரிகைகளிலே ரெண்டு துணுக்கு.. இப்படி படிச்சு மனசை மாத்திக்கட்டும். நீயே இப்படியிருந்தா...''

அம்மா நீளமாய்க் கேவினாள்.

''என் குழந்தையோட சிரிப்பெல்லாத்தையும் அநியாயமாப் பிடுங்கிண்டு, அவளை அலங்கோலப்படுத்திட்டானே அந்தக் கடங்காரன்.''

யாரை அவள் கடனகாரன் என்று திட்டுகிறாள் என்பது மீராவுக்குப் புரியவில்லை.

யாரை?

தாலி கட்டிய கீர்த்தியையா?

கொண்டு சென்ற எமனையா?


இல்லை. இத்தனைக்கும் காரணமான, அந்த விபத்துக்குக் காரண கர்த்தாவாக இருந்தவனையா?

அன்றைக்கு அப்பா சொன்னார் - அம்மாவிடம்.

''அவ கொஞ்சம் உடம்பு தேறி, பழையபடி நடமாடட்டும்... நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து, நானே முடிக்கறேன்.. கல்யாணச் சத்திரம், சம்பந்தி உபசாரம், பந்தி பந்தியாச் சாப்பாடு... எதுவும் வேண்டாம். கோவில்லே வச்சுக் கூட தாலி கட்டச் சொல்ல மாட்டேன்... நேரே ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு இழுத்துண்டு போய்த் தாலி கட்டச் சொல்றேன்.''

''சொல்றோமே தவிர - ரெண்டாம் கல்யாணம்னு போறப்ப - எத்தனை கேள்வி வரும்... முதல்லே கல்யாணமான பத்து நாள்லேயே புருஷனைப் பறிகொடுத்தவளைத் துரதிர்ஷ்டக்காரின்னு பேச மாட்டாளா...?''

''நான் சொல்றேன். அவ ஒண்ணும் அதிருஷ்டக் கட்டையில்லே... என்



குவிஸ் டைம்

தேர்தல் முடிந்து புதுப் பிரதமர் பதவி ஏற்கப் போகும் சூழ்நிலையில் 'பிரதமர்கள்' பற்றிய குவிஸ் இது.

1. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் நேரு என்பது தெரியும். அதற்கு முன் ஆட்சி மாற்றத்தின் போது நம் சுதந்திர தினம் வரையிலான இடைக்கால அரசில் பிரதமராய் இருந்தது யார்?

2. இரண்டு முறை 'ஆக்டிங்' பிரதமராய் இருந்தவர் யார்?

3. மிகக் குறைந்த காலம் பதவியிலிருந்த பிரதமர் யார்?

4. மிகக் குறைந்த வயதில் பிரதமரானவர் ராஜீவ். அவர் தம் எத்தனையாவது வயதில் பிரதமரானார்?

5. பாராளுமன்றத்தின் வரலாற்றிலேயே ஒரு பிரதமரின் பேச்சு, அவைக் குறிப்பிலிருந்து, சபாநாயகரால் நீக்கப்பட்டது. அது யாருடைய பேச்சு?

6. தேர்தலில் தோல்வியடைந்த பிரதமர் யார்?

7. பதவியிலிருக்கும் போது இறந்து போனவர் யார், யார்?

விடைகள் 50 - ம் பக்கம்...



''காப்பி ரொம்பப் பிரமாதமா இருக்கே. காப்பித் தூள் எங்கே வாங்கறீங்க?''

''பக்கத்து வீட்லதான் என் மனைவி கைமாத்து வாங்குவா!''

– எஸ். முகம்மது யூசுப்.

பொண்ணோட வாழ அவனுக்குக் கொடுத்து வைக்கலைடீ. கல்யாணப் பந்தல்லே - புடைவை கட்டின குத்து விளக்கு மாதிரி வந்து நின்னாளே.. இப்பேர்ப்பட்ட அழகைக் கண்டு, அவன் பயந்து போய் ஓடிட்டாண்டி...''

''மெதுவா... என்னைச் சொல்லிட்டு நீங்க இப்படி சப்தம் போடலாமா?''

இப்போது அம்மா, அவரை அடக்குகிறாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, படுக்கப் பிடிக்காதவளாய் மீரா - அறையை ஒட்டி உள்ள போர்டிகோ சுவரின் மீது வந்து உட்கார்ந்தாள்.

பகலில் இப்படி உட்கார முடிவதில்லை. பழகின முகங்கள். இவளைப் பார்த்தவுடனேயே சிரிப்பைக் கழற்றி வைத்துவிட்டுத் துக்க முகமூடியை எடுத்து மாட்டிக் கொள்கின்றன.

இரவில்தான் வெளிக் காற்றைச் சுவாசிக்க முடிகிறது. இருட்டோடு கலந்த கீர்த்தியிடம் மானசீகமாய்ப் பேச முடிகிறது.

'நீங்க பார்த்துட்டே இருங்கோ... இதுக்கெல்லாம் காரணம் யார்னு கண்டுபிடிக்காம விடப் போறதில்லே...'

இதற்குள் அம்மாவும் அப்பாவும் இவளைக் காணாமல் பதறிக் கொண்டு, தேடி வந்துவிட்டார்கள்.

''மீரா... இங்கே என்னம்மா பண்றே?''

''சும்மாத்தான்... தூக்கம் வரல்லே...''

''கால் வலிக்கிறதோ...!''

''ஊம்ஹூம்...''

''உள்ளே வா... ரொம்பவும் தூக்கம் வராமப் போனா ஒரு செடடிவ் மாத்திரை எடுத்துக்கலாம்னு டாக்டர் சொல்லியிருக்கார். தர்றேன். சாப்பிட் டுட்டுத் தூங்கு...''

''இல்லேம்மா...கொஞ்சம்யோசிச்சுட்டே இருந்தாத் தேவலை போல இருக்கு.''

''வேண்டாம்மா... ஏற்கெனவே ஹெட் இன்ஜுரி.. காயம் ஆறிட்டு வர்றதே பெரிசு... அநாவசியமா மூளையப் போட்டுக் குழப்-''

அவளால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. வெறி பிடித்தவள் போலக் கத்தினாள்.

''என்னை எதுக்காகப் பிழைக்க வச்சீங்க? மண்டை பொளந்து, கால் கருகி... இத்தனைக்கு அப்புறம் என்னை எதுக்காக.. தினமும் நீங்க கொடுக்கற தூக்க மாத்திரையத் தின்னுட்டு, கட்டில்லே கட்டையாக் கிடக்கவா... பிழைச்சிருக்கேன்னா அதுக்கு ஏதாவது காரணம் வேண்டாமா...? நான் அப்படித்தான் யோசிப்

பேன்.. என் மண்டைக்குள்ள புழு குடையற மாதிரி, ஆயிரம் கோடி சந்தேகம் இருக்கு...''

அப்பா, மீராவின் அருகில் வந்து தோளைத் தடவினார்.

''நீ நிறைய யோசி... ஆனா - உன்னை நீயே சித்திரவதை செஞ்சுக் காதே... இப்ப என்ன செய்யணும்.... சொல்லு..''

''போலீஸ் டிபார்ட் மென்ட்டுக்கு ஒரு லெட்டர்... கவர்னருக்கு ஒரு லெட்டர்... எழுதணும்...''

அப்பா, புருவத்தை உயர்த்த, அம்மாவோ - மகளுக்கு உண்மையிலேயே மூளை கலங்கி விட்டதோ என்று கையைப் பிசைய...

''என்னன்னு எழுதணும்?''

''அந்த விபத்து நடந்து மூணு மாசமாயிடுத்து. இன்னும் அது சம்பந்தமா ஒரு ஈ எறும்பைக் கூட போலீஸ் அரெஸ்ட் பண்ணலை. இதுதான் போலீஸ் டிபார்ட் மெண்ட்டோட லட்சணமான்னு நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி கேட்டு எழுதணும்...''

''.......''

''இல்லே, இது விஷயமா ஏதாவது தகவல் கிடைச்சும், பணம் வாங்கிட்டு, கேஸைத் தூக்கிப் பரண்லே போட்டுட் டாங்களான்னு தெரியணும்னு கவர்னருக்கு எழுதணும்..''

அப்பா, மகளைப் பார்த்து ஆதரவாய்ப் புன்னகை செய்தார்.

''சரி... இதுக்கெல்லாம் பதிலா - அவங்க, இன்னும் சரியான துப்புக் கிடைக் கலை; கிடைச்சதும் உங்களுக்குத் தெரியப்படுத்தறோம்னு எழுதிட்டாங்கன்னு வச்சுப்போம்... என்ன செய்யப் போறோம்?''

''நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம். என்னை மறுபடியும் தஞ்சாவூருக்கே ரயிலேத்தி விட்டுடுங்கோ!''

''அசடு.. சரியான அசடு... அங்கே போய் சம்பந்தமே இல்லாம - கீர்த்தி வீட்டுல போய் என்ன செய்யப் போறே... நாகு மாமா வேற அப்படிச் சொல்லியிருக் கார்...''

''நான் திருச்சி போறேன்னுதான் சொன்னேனே தவிர - அவர் வீட்டுக்குப் போறதாச் சொன்னேனா... நான் போறது. இந்தப் போலீஸ்ஸாலே கண்டுபிடிக்க முடியாத - அப்படியே கண்டுபிடிச்சிருந்தாலும் வெளியிடத் தயங்கற - குற்றவாளியை வெளிச் சத்துக்குக் கொண்டு வரத்தான்...''



அப்போதைக்கு அவளைத் தூங்க வைப்பதற்காக அவர்கள் மௌன விரதம் அனுஷ்டிக்க வேண்டியிருந்தது...

ஆனால் உடல்நிலை தேறத் தேற - மீராவின் மூச்சே - தஞ்சாவூர்ப் பயணம்தான் என்றாகி விட்டபோதோ...

பெற்றவர்கள் திணறிப் போனார்கள்.

(தொடரும்)

ஊர் வாய்

"எனக்கென்னவோ அங்கே வர்ற துக்குக் கா லே வர மாட்டேங்குது சுசிலா...!"

"உண்மைதான் அருக்காணி... பட்டுப் போகிற வயசா இந்த ரஞ்சிதாவுக்கு...? மல்லிகைப் பூ மாதிரி சுபாவம்... எல்லா ரையும் சுலபத்துல அட்டையா ஒட்ட வைக் கற அளவுக்கு அவளோட பேச்சு.. இப்ப அது எ ல் ல ா மே ம போயிருக்கும்ன்னு நினைச்சா மனசு தாங்கலைதான்...!"

"பாவம் அவ.. அந்தக் குடிகாரப் புருஷ னுக்கு வாழ்க்கைப்பட்ட இந்த ஆறேழு வரு ஷத்துல அப்படி என்ன சுகத்தைக் கண்டா..? ரெண்டு பிள்ளைகளைக் கொடுத் தது போக, அவ அவன்கிட்டே வாங்கின தெல்லாம் அடியும், உதையும் வசவு வார்த் தைகளும்தானே...? அவ்வளவு கஷ்டத்துல யும் அவளை வீட்டுக்கு வெளியே ஒரு நிமிஷம் முகஞ்சோர்ந்து நாமதான் பார்த் திருப்போமா...? பார்த்திருக்கத்தான் முடி யுமா...?"

"எல்லாம் அவ அப்பன் செஞ்ச தப்பு... பட்டணம் போய்ப் படிச்சிட்டிருந்த பொண்ணு யாரையோ வேத்து சாதிப் பையனை மனசார விரும்பினாங்கற பாவத் துக்காகப் படிப்பையம் பாதியில பிடுங்கி யெறிஞ்சுட்டு, இங்கே தறுதலையாத் திரிஞ்சுகிட்டிருந்த அவ தாய் மாமனுக்குப் போய்க் கட்டி வச்சான், அந்தப் பிடி வாதக்காரன்...! இப்ப என்னாச்சு.. சதா அடி யும் உதையும் வாங்கி வாங்கிக் குற்றுயிராக் கிடந்தவ இப்ப 'தாலிய அறுத்துக்கிட்டு' நிக்கிறா...! உண்மையிலேயே கடவுள் அவளை ரொம்பவும்தான் சோதிக்கிறான் போ....!"

"எனக்கென்னவோ அப்படித் தோணலை சுசிலா... தனக்குப் பிடிக்காத, அதுவும் ஒரு கொடுமைக்காரக் குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவ அப்படி நித்தம் நித்தம் அடிமைப்பட்டு - அடிபட்டுச் சாகறதை விட, இப்படி அவள் அல்பாயுசில 'அறுத்துட்டுப்' போனதே தேவலைன்னு எனக்குப் படுது!"

"அந்தப் பால் வடியற முகத்துல பூவையும், பொட்டையும் பறிச்சிருப்பாங்களே... எப்பவும் கலகலப்பா இருக்கிற அவ கை வளையல்களையெல்லாம் உடைச்சு மூளியாக்கியிருப்பாங்களே... அந்தக் கோலத்தோட அவளை நினைச்சுப் பார்த்தாலே நெஞ்சு கலங்குது... எப்படி நேரடியா அவளைப் பார்த்துத் துக்கம் கேட்பேனோ...!"

- நெஞ்சம் விம்மத் தணிந்த குரலில் சொன்ன அருக்காணியை சுசிலா ஒரு கணம் நின்று இமைகள் சுருங்கப் பார்த்து விட்டு, "அப்ப, இன்னேரம் அவ பூவையும் பொட்டையும் பறிச்சிருப்பாங்களா...? கருமாதிச் சடங்குகளெல்லாம் முடிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறியா..?"

- சந்தேகமாய்க் கேட்டாள்.

"பின்னே இன்னமுமா விட்டு வச்சிருப்பாங்க... வேற்று சாதிப் பையனை விரும்பின ஒரே காரணத்துக்காகத் தன் பொண்ணைப் பாழும் கிணத்துல தள்ளின அவ அப்பன், இன்னமுமா அவளை அதே கோலத்துல விட்டு வச்சிருப்பான்...?"

"அடப் பாவமே...! அவன்தான் போன வன் போயிட்டான்... அதுவும் அவன் நல்ல வனா இருந்தாலும் பரவாயில்லை... பரம அயோக்கியப் பயல்... அவன் கையால கட்டின அ ந் த த் 'தாலிக் கயித்தை' வேணும்னா அறுத்திட்டு போகட்டுமே... இவகிட்டேயிருந்து, நிரந்தரமான பூவை யும் பொட்டையும் பறிக்கிறது எந்த விதத்துல நியாயம்..? அது அவகிட்ட நிரந்த ரமாக் குடியிருக்கிற பூஞ்சிரிப்பையே பறிச்சிடுமே...!"

"பறிச்சிடுமே என்ன... பறிச்சிடும் தான்...! அவ சந்தோஷத்தை மட்டு மல்ல... அவளைப் பார்க்கிறவங்க ஒவ் வொருத்தரோட மனசுலயும் வலுக்கட்டா யமா சோகத்தை உண்டாக்குகிற சங்கதி தான்றதுல கொஞ்சமும் சந்தேகமே வேண் டாம், அது இந்த ஊராருக்குத்தான் புரி யலை... அவளைப் பெத்த அப்பனுக்குப் புரிய வேண்டாமா...?"

"இப்படிப்பட்ட அப்பன்களையெல் லாம் முதல் வேலையாக் கழுவுல ஏத்த

[illegible]

ணும். அப்பத்தான் நம்ப மாதிரி பொம்ப ளைங்களுக்கெல்லாம் ஒரு விடிவெள்ளி முளைக்கும்...!''

இவர்கள் பேசிக் கொண்டே ரஞ்சிதா வீட்டை அடையும் போது, அவளின் பெரிய வீட்டின் முன்னே சின்னதாகத் துக்கம் விசாரிக்க வந்தவர்களின் கூட்டம்...!

குழுமியிருந்த கூட்டத்தை நெருங்கின தும் இவர்கள் இருவருமே நாவடக்கிக் கொண்டு அமைதியாயினர். அப்போது தான் நினைவு வந்தவர்கள் போல், சேலைத் தலைப்பைத் தலைக்கு முக்காடாக இழுத்து விட்டுக் கொண்டவர்கள், நெஞ்சிலடித்துக் கொண்டு ஊரையே தூக்கும் விதமாய் ஏதோ ஒரு ஒப்பாரி பாடிக் கொண்டு உள்ளே நுழைய -

''ஏம்மா.. ஏம்மா.. வீணாச் சப்தம் போட்டு ஊரைத் தூக்கறீங்க...? துக்கம் விசாரிக்கிறதுன்னா உள்ளே போய் உட் கார்ந்து, அமைதியா ஆற அமர விசாரி யுங்க... ஒப்பாரி வச்சு அழுதா மட்டும் போனவன் திரும்பி வரவா போறான்...?''

- நுழை வாசலிலேயே ஒருவர் இவர் களை வழிமறித்துக் கொண்டு கனிவாகக் கூறினார். அதைக் கேட்டதுதான் தாமதம்... இவர்களின் மனசுக்குள் சுருக்கென்று எதுவோ தைத்தது போலிருந்தது. முகம் கூம்பிப் போக, தலையாட்டி விட்டு ஒரு வரையொருவர் ஏதோ ஒருவித அர்த்தத் துடன் பார்த்துக் கொண்டவர்கள், சிறிது தயக்கத்துடனேதான் இழவு வீட்டுக்குள் நுழைந்தனர்.

உள்ளே....



மூலைக்கொருவராய் ஆங்காங்கே சில பெண்கள்! கண்ணீரும் கம்பலையுமாய்... அவர்களுக்கெல்லாம் நடுநாயகமாய் ஒரு மூலையில் ரஞ்சிதாவின் அம்மா... அழு தழுது சிவந்த கண்கள்... கன்னங்களும் சிவந்து வீங்கின நிலையில்...!

அவளைப் பார்த்ததுமே இவ்விருவருக்கும் துக்கம் கரை புரண்டது, அடக்கி வைத்திருந்த ஒப்பாரியையெல்லாம் மிஞ்சும் விதமாய் ஓவெனப் புலம்பி அழுதனர்.

பதிலுக்கு ரஞ்சிதாவின் அம்மாவும் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

எல்லாம் சிறிது நேரம்தான்....

தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தனர் இருவரும்.

''ஆனாலும்... இந்த வயசுல ரஞ்சிதாவுக்கு இந்தக் கதி வந்திருக்கப்படாது... பூத்துக் குலுங்க வேண்டிய வயசுல பட்டுப் போய் நிற்கிறாளே...!''

- மூக்கைச் சிந்தினாள் அருக்காணி.

''பாவம்... வாழ்க்கையில் இந்தச் சின்னப் பொண்ணு இப்பவே இவ்வளவு கஷ்டப்படணும்ன்னு எழுதியிருக்கே...!''

- சுசீலாவும் தன் பங்குக்கு மூக்கைச் சிந்துவதில் சளைக்கவில்லை.

''ம்... மனுஷன் இருந்த வரைக்கும்தான் நிம்மதியக் கொடுக்கலை... போகும் போது கூட அவ பூவையும் பொட்டையும் பறிச்சிட்டுப் போயிட்டானே...!''

- அடுத்தவள் மறுபடி ஆரம்பிப்பதற்குள்ளாகவே,

''ரஞ்சிதா...!''

ரஞ்சிதாவினுடைய அ ப் ப ா வி ன் கட்டைக் குரல் கேட்டு, புலம்பி அழுவதை நிறுத்தி விட்டுத் திரும்பினர்.


மனிதன் ரொம்பவும்தான் ஆடிப் போய் விட்டார் என்பதைக் கறுத்து மெலிந்து போன அவரின் தேகத் தோற்றமே பறைசாற்றியது. துண்டைக் கையிலேந்தி, தலை கவிழ்ந்து சிறிது நேரம் நின்றவர், ஏதோ யோசித்தவராய் உள்புற அறைக்குச் சென்று, தம் மகளை அழைத்து வந்து, இவர்கள் முன் நிறுத்தி விட்டு லேசாய்த் தொண்டை விம்மச் செருமினார்.

ஆற அமர ரஞ்சிதாவை நிமிர்ந்து பார்த்த இருவருக்கும் ஒரே சமயத்தில் தூக்கி வாரிப் போட்டது. அவள் தோற்றத்தைக் கண்டு திகைத்துப் போய், தாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டே எழுந்து விட்டனர்.

புத்தம் புது பட்டுச் சேலை உடுத்தி, தலைநிறைய மல்லிகையும் கனகாம்பரமும் சூடி, நெற்றி நிறையக் குங்குமம் வைத்து, கழுத்தில் டாலர் செயின், கண்கள் மட்டுமே அழுது சிவந்து வீங்கின நிலையில்...

'பழைய ரஞ்சிதாவா இவள்...? இல்லை... இல்லை... அதைவிட ஒரு படி மேலாய்... எப்படிப்பட்ட சிரிப்புக்கும் பின்னே ஓடும் அந்த ஒரு துளிச் சோகம் கூட மறைந்து அமைதியே வடிவாய்...' இவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. கண்களை ஒன்றுக்கு இரண்டு முறை கசக்கி விட்டுக் கொண்டனர்.

''படுபாவிப் பய.. .ம்... அவன்தான்



நிருபர்: "போன வாரம் வரை கூட்டமே இல்லாம இருந்த உங்க படம், இந்த வாரம் ஹவுஸ்புல்லா ஓடுதே... எப்படி?''

டைரக்டர்: "என்னோட படம் வெற்றி அடைகிற வரைக்கும் தொடர்ந்து டைரக்ட் செய்வேன்னு அறிக்கை விட்டேன்!''

- செங்குன்றம் ரமேஷ்ராம்

''என்னைப் பெண் பார்க்க வந்த அன்னிக்கு நான் பாடின பாட்டைக் கேட்டுத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதாச் சொன்னீங்களாமே...?''

''ஆமா; இனி யாருமே உன் பாட்டைக் கேட்டு அவஸ்தைப்படக் கூடாதுங்கிற நல்லெண்ணத்துல தான்...''

- வி. கி. குமார்



குடிச்சுக் குடிச்சுத் தானும் நிம்மதியில்லாம, இவளையும் நிம்மதியா இருக்க விடாமப் போய்ச் சேர்ந்துட்டான்... ம்... மக ஆசைப் பட்ட வாழ்க்கையத்தான் இந்தப் பாவிக்கு அமைச்சுக் கொடுக்க வக்கில்லே...! மக வாழ்க்கையையே நிர்மூலமாக்கின கை யோட அவ பூவையும் பொட்டையும் பறிச்சு, இன்னமுமா நிம்மதியக் கெடுக்க ணும்...? அது... அதுதான்... நான் இந்தச் சடங்கு சம்பிரதாயங்களையெல்லாம் தூக்கியெறிஞ்சுட்டு...!''

- நாத் தழுதழுக்கக் கூறிய ரஞ்சிதாவின் அப்பா அதற்கு மேல் ஏதும் சொல்ல முடியாது குலுங்கிக் குலுங்கி அழுதது இவர்களின் காதுகளில் ஏதோ ஒரு அசரீரி போல் கேட்டது.

சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் இறுக்கிச் செருகிக் கொண்டு வந்த வழியே திரும்பி நடந்து கொண டிருந்தனர் அந்தப் பெண்கள் இருவரும்...!

''புள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டற கதையாவுல்ல இருக்கு... இவனோட செயல்...?!''

''ஆனாலும் ரொம்பவும்தான் அநியாயம் அருக்காணி... புருஷன் பொட்டுனு போன மறு நிமிஷமே பொண்ணு தலை நிறையப் பூவையும் பொட்டையும் சூட்டிக் காட்சிப் பொருளா வச்சிருக்கானே படுபாவி... புருஷனைத் தின்னவ அவ மனசு என்ன பாடுபடும்னு கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தானா...?''

''இன்னைக்கு மக வாழ்க்கையப் பாழாக் கிட்டேனேன்னு முண்டச்சிக்குப் போய் பூவும் பொட்டும் வச்சுப் பார்ப்பான். நாளைக்கி இதையே காரணம் காட்டி, அவ பழைய காதலனுக்கே கட்டிக் கொடுத்தாலும் கொடுப்பான்...! யார் கண்டா...?''

''அப்ப அவ குழந்தைக...?''

''குழந்தைகளாவது மண்ணாங்கட்டி யாவது... எங்காவது ஒரு 'காப்பகத்துல' விட்டுட்டாப் போச்சு... இல்லே, செஞ்ச பாவத்துக்குப் பரிகாரமா அவ அப்பனே வளர்த்துட்டாப் போச்சு...!''

''அடப் பாவமே... இப்படியும் நடக் குமா..?''

''இவன் இஷ்டப்படி எல்லாம் செய் திட்டான். பார்த்துட்டிருக்கிற பஞ்சாயத்துக் காரங்க எப்படித்தான் பொறுத்திட்டிருக் காங்களோ... நாளைக்குத் தெய்வக் குத்தம் வந்தா எல்லாமே எரிஞ்சுடும். ஊரே சுடுகாடாயிடும்...!''

- பேசிக் கொண்டே நடந்த அவர்களின் உரையாடலில் நிறைந்த ஏமாற்றமே தொனித்தது!

★ அ. அருண், சேலம்.

யார் பதவிக்கு வந்தாலும் அபரிமித மெஜாரிட்டி கூடாது என்கிறீர்கள். இந்தக் கட்சிக்கு இம்முறை வோட்டுப் போட்டால் அது 52% இடங்களைப் பெறும் என்று எப்படி கணிக்க முடியும்?

முடியாதுதான். 'ஒரு உத்தேசமாகத்தான் வாக்காளன் செயல்பட முடியும். நான் கூறியது, வாக்காளருக்கு அறிவுரை என்ற முறையில் அல்ல. எந்த சதவீதக் கணக்கில் கட்சிகள் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றால் நாட்டுக்கு நல்லது என்ற அளவில் தான். இது காரணமாகத்தான் ஏறத்தாழ சம பலமுள்ள இரு கட்சி ஜனநாயகங்கள் உலக நாடுகள் பலவற்றில் சிறப்பாக இயங்கு கின்றன.

★ அ. பரக்கத் அலி, மாப்பிள்ளைகுப்பம்.


? உங்களைக் கவர்ந்த நபர் யார்?

! சமீபத்தில் ஒரு தாயும் மகனும். ராஜீவின் சடலம் வந்த பெட்டி மீது ஏராள மாக மலர்கள் தூவப்பட்டிருக்க, மெய்க் காவலர் குப்தாவின் சவப்பெட்டி மீது எது வுமே இல்லாததைக் கண்ட சோனியா, ராஜீவின் பெட்டி மீது இருந்த மலர்களை அள்ளி குப்தாவின் பெட்டி மீது தூவினார். அப்பாவின் சிதைக்குத் தீ மூட்டிய அடுத்த ஒரு மணி நேரத்தில் குப்தாவின் வீட்டுக்கு ராகுல் சென்று ஆறுதல் அளித்தார்.

★ கா. கு. இலக்கியன், அரசூர்.

? வங்காள தேசம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது ஜெயலலிதா நிவாரண நிதி வழங்கியது போல் கருணாநிதி ஏன் வழங்கவில்லை?


! அ. தி. மு. க. தொடர்ந்து பத்திரிகை களில் முழுப் பக்க விளம்பரங்கள் வழங்கி



✱ மாலை வேண்டாம்.



✱ அதிகபட்ச விளம்பரம்



✱ தகுதியானவரா?



✱ நாகரிக...



✱ ....நடத்தை.

வந்திருப்பது போல் தி. மு. க. ஏன் செய்ய வில்லையோ, அதே காரணம்தான். நிதி வசதி பற்றாக்குறைதான். இந்தியக் கட்சிகள் அனைத்திலும் விளம்பரத்துக்காக மிக அதிகமாகச் செலவழித்திருப்பது அ. தி. மு. க. தான் என்பது நம்பகமான பத்தி ரிகைச் செய்தி.

★ எஸ். யோகலிங்கம், சென்னை - 82.

? வன்முறையால் பாதிக்கப்பட்ட வியா பாரிகளுக்கு நஷ்டஈடு கேட்டு வணிகர்கள் கடை அடைப்பு நடத்துவது பற்றி...?

! அதில் ஒரு நியாயம் இருக்கிறது. 'தமிழக அரசு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டி ருக்கிறது' என்று தலைமைச் செயலர் அறிக்கை விடும்போதே கடைகள் சூறை யாடப்படுகின்றன. 'அமைதி திரும்பி யதால் கைது செய்யப்பட்டவர்களை விடு விக்கிறோம்' என்று தமிழக அரசு கூறும் போதே கருணாநிதியின் கார், பிரசார வேன் கொளுத்தப்படுகிறது. வியாபாரிகளின் உடைமைகளுக்கு அரசு பாதுகாப்புத் தர முடியாத போது, நஷ்டஈடு கோரிக்கை வலுப்படுவதில் வியப்பென்ன?

★ ஏ. எஸ். மாரியப்பா, புதுக்கோட்டை.

? 'என் பிறந்த நாள் கொண்டாட யாரும் சென்னை வர வேண்டாம். மாலை வேண்டாம்' என்கிறாரே கருணாநிதி?

! ஒருபுறம் 'ராஜீவைக் கொல்லத் தி. மு. க. - புலிகள் கூட்டுச் சதி' என்கிறார்கள்; மறுபுறம் 'ராஜீவின் அஸ்திக் கலசத்துக்கு மலர் மரியாதை செய்ய வரவில்லை' என்கி றார்கள். வந்திருந்தால் அமைதியாக அனு மதித்திருப்பார்களா? இந்த லட்சணத்தில் மு. க. பிறந்த நாள் வேறு கொண்டாடி, மாலை போட்டுக் கொண்டால் அவ்வளவு தான்! ஒரு நாகரிகம் காரணமாக ஒரு புயல் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

✱ ரூ. 20 பரிசு பெறுபவர்:
ஏ. பி. ஸி. வி. ஷண்முகம்,
37, பிரெஞ்சு சாப்பல் ரோடு,
தூத்துக்குடி - 628 001.

நேற்றுவரை நந்தவனம்

10

''ந்தா...இளவரசு... கண்ணு இல்லே... பாட்டிகிட்ட வந்தா லட்டு, பணியாரம் தருவேன். வாம்மா...''

ஒரு கையில் சோற்றுப் பாத்திரமும், இன்னொரு கையில் ஸ்பூனுமாய் வேகு வேகென வெராந்தாவிலிருந்து வாசற் கேட்டுக்கு ஓடி வந்த அம்மாள் மூச்சிரைக்க நின்றாள்.

இதற்குள் இரண்டு வயசு இளவரசு, கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் மீராவின் புடைவைத் தலைப்பில் முகத்தைத் தேய்த்தான்.

''அட ராமா... அவுங்க புடைவை முழுக்க சோத்துப் பருக்கையாக்கிட்டியா.... இரு... அப்பாவைக் கூப்பிடறேன்.''

அந்த அம்மாள், மீராவைப் பார்த்துத் தயக்கத்துடன் சிரித்தாள்.

''வணக்கம்மா...''

பதில் வணக்கம் சொல்லக் கூடத் தெரியாத அளவுக்கு அப்பாவியான முகம்.... நெற்றியில் பொட்டு இல்லையே தவிர - மற்றபடி லட்சுமீகரமாகத்தான் இருந்தது. காரணம் - காது, மூக்கு, கழுத்து அனைத்திலும் வைரமும், தங்கமும் மின்னியதினாலும் இருக்கலாம். இயல்பாகவே சிலருக்குச் செல்வாக்கான பெரிய மனுஷத்தனமான முகம் அமைந்து விடுவதும் உண்டு.

இந்த அம்மாளுக்கு அப்படிப்பட்ட முகம் அமைந்திருப்பதினாலும் இருக்கலாம்.

முதல் பார்வையிலேயே மீரா புரிந்து கொண்டு விட்டாள்.

'இவங்கதான் எக்ஸ் எம். எல். ஏ. பெண்டாட்டியா இருக்கும்...'

அவள், தோளிலிருந்து ந ழு வி ய பையைச் சரி செய்வதற்காகக் கையிலிருந்த சூட்கேஸை ஒரு கணம் கீழே வைத்தாள்.

''இது... எம். எல். ஏ. தருமராஜன் வீடுதானே?''

''ஆமா... அவரு... உள்ளே வாங்க. வாசல்லேயே நிறுத்தி வச்சு விசாரிச்சா குமருத் தம்பி திட்டும்...''

மீரா, தயங்கியபடி அந்த அம்மாளின் பின் சென்றாள்.

முதல் நாள் ரயிலேறும் வரையில் கூட - தஞ்சாவூரில் எங்கே போய்த் தங்குவது என்பதை அவள் தீர்மானிக்கவில்லை.

அப்பா ஆயிரம் தடவை கேட்டார்.

''புது இடம்... தங்கறதுக்கு வீடு வாசல் கிடையாது. அப்படியாவது இந்த வீம்பு தேவையா மீரா?''

''இதை வீம்பா நீங்க ஏன் எடுத்துக்கணும்? இப்பப் போற ஊரு எனக்குப் புதுசு. என்னை யாருக்கும் தெரியாது. யாரும் என்னை, 'ஐயோ பாவம்'கற மாதிரி பார்க்க மாட்டாங்க...''

''நானும் உன் கூட வர்றேனே...''

''வேணாம்பா.''

விடிகாலையில் ஸ்டேஷனில் இறங்கியவள், அங்கிருந்த லேடீஸ் வெயிட்டிங் ரூமில் கொஞ்ச நேரம் தங்கினாள். வெயில் முகத்துக்கு எதிரே வந்து 'ஹாய், எப்படியிருக்கே?' என்று குசலம் விசாரித்த போது, அவள் குளித்து முடித்துப் புறப்பட்டு விட்டாள்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வரும்போதே - சுவரில், குவிந்த கையும், சிரித்த முகமுமாய்க் குமரனின் புகைப்படம் போட்ட சுவரொட்டிகள்...

நலிந்த மக்களைக் கைதூக்கி விடும் புரட்சி வீரன் டி. குமரனுக்கே நமது வோட்டு...

'ஒரே சமயத்தில் தந்தையையும், தாரத்தையும் அரசியல் வேள்வியில் பலி கொடுத்த டி. குமரன் அவர்களே வாழ்க...'

மீரா ஒரு கணம் அந்தப் புகைப்படத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''வண்டி வேணுமாம்மா...''

ஆட்டோ டிரைவரின் கேள்விக்குத் தலையசைத்தாள்...

''வாங்க... எங்கே போகணும்?''

மீரா, அந்தப் புகைப்படத்திலிருந்து பார்வையைத் துளியும் திசை திருப்பாமல் நின்றாள்.

''எங்கேம்மா போகணும்?''

''ம்... இதோ... இவர் வீட்டுக்கு.''

''அட, நம்ம தலைவரைப் பார்க்க வந்திருக்கீங்களா.. இதை முன்னாலேயே சொல்லக் கூடாது?''

அவன், அவளுடைய கையிலிருந்த பையைப் பிடுங்கி, வண்டிக்குள் வைத் தான்.

''ஏறுங்க...''

அடுத்த பதினைந்தாவது நிமிடம் - அவள் குமரனின் வீட்டு வாசலில்.

அனுராதா ரமணன்

பர்ஸிலிருந்து பணம் எடுக்கப் போன வளை ஆட்டோ டிரைவர் தடுத்தான்.

''வேண்டாம்மா. நானும் அவர் கட்சித் தொண்டன்தான். சாயந்திர நேரத்துல வண்டியில மைக் கட்டி, எலெக்ஷன் பிர சாரத்துக்குப் போவேன். அதுக்கு அய் யாவே வேண்டிய பணம் கொடுக்கிறாரு.. இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. ஆனா ஒரு உதவி மட்டும் செய்யுங்க. போதும்...''

அவள், டிரைவரின் முகத்தில் படர்ந்தி ருந்த பெருமிதத்தையே பார்த்தபடி நின் றாள்.

''நம்ம ஆட்டோவுலதான் வந்ததா ஒரு வார்த்தை சொல்லுங்க, போதும். என் பேர் ஞானப் பிரகாசம்..''

சோபாவில் உட்கார்ந்த மீரா, அந்த ஹாலை ஒருவித பிரமிப்புடன் பார்த்தாள்.

அவளுக்கு எத்தனையோ பணக்கார சினேகிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு இவள் சென்றுமிருக்கிறாள். செல்வச் செழிப்புடன் விளங்கும் பங்க ளாக்கள் அவளுக்கொன்றும் புதிதில்லை.

ஆனால், இது அனைத்திலும் வித்தி யாசமாக இருந்தது. ஹாலின் விஸ்தாரமும், உயரமும் - இது மிகப் பழைய காலத்து பங்களா என்பதைப் பறைசாற்றினால் - தரையில் பதித்திருந்த பளிங்குக் கற்களும், சுவரெல்லாம் இளம் பெண்ணின் கன்னம் போன்ற ஆயில் டிஸ்டெம்பரும், தலைக்கு மேல் காற்றில் சிலுசிலுக்கும் பெரிய கண்ணாடி லஸ்தரும், உட்கார்ந்தவுட னேயே கைதேர்ந்த மஸாஜ் நிபுணன் போல இதமாய் உடம்பை அமுக்கும் சோபாவும் - நவநாகரிகத்தைப் பறைசாற்றின.

மீரா - சோபாவில் ஒரு புறமாய் மல் லாந்து கிடந்த மிகப் பெரிய பொம்மை யைக் கையில் எடுத்துப் பார்த்தாள்.

அவள் மீது முகத்தைத் தேய்த்த குழந்தை, எதிர்ச் சோபாவின் பின்புறமாய் நின்று, இவளையே இமைக்காமல் பார்த்தது.

மீராவை வரவேற்று ஹாலில் அமர்த்திய குமரனின் தாய் - காப்பி டிரேயுடன், சிரித்த முகம் மாறாமல் வந்தமர்ந்தாள்.

''கட்சியில இருக்கீங்களா?''



அடுத்த இதழில்.....

வெற்றிலைச் செல்வம்
- சிறப்புக் கட்டுரை

டாக்டர்களுக்கும் உண்டு, பிரச்னைகள்!
- அலசல்

''இல்லே.''

''பின்னே.. ஓ.. நீங்கதான் சொன்னீங்க இல்லே, அந்த பஸ் பயங்கரத்தைப் பத்தி விசாரிக்கணும்னு.. வ ய சா யி ட் ட தா ? மறந்து, மறந்து போறேன். சித்த இருங்க. குமரு குளிச்சிட்டிருக்கான். இதோ வந்திருவான்...''

''....''

''காப்பி ஆறிடப் போகுது. உங்க பேரு?''

''மீரா...''

''பத்திரிகையில் இருந்து வர்றீங்களா?''

இந்தக் கேள்விக்குக் கொஞ்சம் யோசித்து, மீரா இல்லையெனத் தலையாட்டினாள்.

அந்த அம்மாள் பேரனை இழுத்து மடி மீது வைத்துக் கொண்டே தழதழத்த குரலில் சொன்னாள்:

''பத்திரிகைக்காரங்க எப்பவுமே வாலை விட்டுட்டுத் தும்பைப் பிடிப்பாங்க. எங்க வீட்டுல ரெண்டு பேர் இந்த விபத்துல போயிருக்காங்க. அட, அந்தத் துயரத்தை நாங்க எங்கிட்டும் போய்ச் சொல்லிக்க முடியலை. பத்திரிகையானா, கொஞ்சம் கூடக் கூசாம, எங்க குமரு மேலேயே பழி போட்டுது.. ஏந்தாயீ... நீங்கதான் சொல்லுங்க.. ஒரு மனுஷன் பெண்டாட்டி பிடிக்கலையின்னா அவளைத் தீர்த்துக் கட்டலாம். பெத்த அப்பனைக் கொன்னு - அம்மாக்காரி பூவையும் பொட்டையும் பறிப்பானா? இது தெரியலையே படிச்ச மனுஷங்களுக்கு...''

அந்த அம்மாள், விழிகளில் துளித்த நீரைப் பட்டுப் புடைவையின் தலைப்பினால் துடைத்துக் கொண்டாள்.

சம்பவம் நடந்து மூன்று மாதங்களாகியும் - அவள் பொட்டையும், மஞ்சளையும் ஒதுக்கியும் கூட - காலம் காலமாய்ப் புழங்கிய தடயம் மறையவில்லை. நரைத்த முன் நெற்றி வெள்ளியாய் மின்னுகிறது. பெரிய வட்ட வடிவக் குங்குமத்துக்குச் சொந்தக்காரியாக இருந்தவள் என்பதற்கு அடையாளமாய், இன்னமும் நெற்றியில் மங்கலான கறுப்பு நிலவாய் ஒரு திட்டு இருக்கிறது.

''என் பிள்ளைங்கறதுக்காக நான் சொல்லலை. இத்தனை வயசுக்கும் அவன் கிட்ட ஒரு தப்புத் தண்டா கிடையாது. என்ன.. சிகரெட்டுப் பழக்கம்தான். ஆரம்ப காலத்துல நான் கூட இதுக்காக இவனை ரொம்பத் திட்டியிருக்கேன். இப்ப அதிக மாக் கண்டுக்கறதில்லே. முப்பது வயசு ஆம்பிளைக்குப் பெண்டாட்டி சுகம் இல்லே. வேற எடம் தேடிப் போற புத்தியுமில்லே.. இவன் இருக்கற எடத்துல என் வீட்டுக்காரர் இருந்திருந்தாருன்னா... இந் நேரம் எத்தனை தப்புத் தண்டா பண்ணியிருப்பார்...''

அவள் இழுத்து மூச்சு விட்டாள்.

''எரிஞ்சுப் போனாளே.. என் மருமவ.. குணத்துல தங்கம்தான். ஆனா, பெரிய எடத்துப் பொண்ணு.. கொஞ்சம் வாய்த் துடுக்கு அதிகம். இத்தனைக்கும் என் மகன் அவ மனசு கோணாமத்தான் நடந்திட்டான். மெத்தப் படிச்சவ. அழகி. இங்கே, எங்க குடும்பத்துல அந்த அழகுமில்லே; படிப்புமில்லே; குணமுமில்லே. குமரன் அப்பா வீட்டைச் சேர்ந்தவங்களுக்கு மனுஷங்களோட தராதரமே தெரியாது.. எங்கே, என்னைக் கட்டிட்டப்ப இவரு எங்க அப்பாகிட்ட மேஸ்திரியா இருந்தவருதான். அப்ப எல்லாம் ரொம்ப உத்தமமான மனுஷராத்தான் இருந்தாரு. நல்ல உழைப்பாளி. அதை எல்லாம் வச்சுத்தான் எங்க அப்பா, அந்த நாளுல ரெண்டு ரைஸ் மில்லும், நானூறு ஏக்கரா நிலமும், மாந்தோப்பும், வச்சிருந்தாரு.. அந்த நாளு மிட்டாதார்.. நல்ல பையன், முன்னுக்கு வருவான்னு இவரைப் பிடிச்சாரு.. இவரும் முன்னுக்கு வந்தாருதான். ஆனா, ரொம்ப ஓவரா முன்னேறிட்டாரு. அதான் பிரச்னையாப் போச்சு. எதுக்குச் சொல்ல வந்தேன்.. என் மருமவளுக்கும் இவருக்கும்தான் ஆகாது.. எப்பவும் சண்டை. அவ இங்கிலீஷ்லேயே கத்துவா...''

அந்த அம்மாள் முன்னுக்குப் பின் தொடர்பில்லாமல் ஏ தே ா பேசிக் கொண்டே வந்தவள், முகமலர எழுந்து நின்றாள்.

''வா குமரு... உன்னைப் பார்க்கத்தான் இவங்க வந்திருக்காங்க. பட்டணமாம்...''

குமரன், டர்க்கி டவலால் முதுகைப் போர்த்தியவாறு மீராவின் எதிரில் வந்து நின்றான். ஈரத் தலை, சிலுப்பிக் கொண்டு நின்றது. கறுப்பிலும் குளித்து விட்டு வந்ததன் அடையாளமாய்ப் புத்துணர்ச்சி வளீரிட்டது.

''நீங்க...''

''ஞாபகமிருக்கா. மீரா... பஸ் ஆக்ஸிடெண்ட்டுல...''

மீரா, புடைவை விளிம்பைச் சற்று உயர்த்திக் காட்டிப் புன்னகை செய்ய -

அவன் புரிந்து கொண்ட பாவனையில் சிரித்தான்.

''அட, வாங்க. எப்படியிருக்கீங்க?''

''.....''

''நான் என்ன செய்யணும்...?''

''இங்கே தஞ்சாவூர்லே கொஞ்ச நாள் நான் தங்கணும். இடம் வேணும். லாட்ஜ் வேண்டாம். ஒரு ரூம்... அதுலேயே சமைச்சுச் சாப்பிட்டுப்பேன்...''

''ஏதாவது வேலை விஷயமா வந்திருக்கீங்களா?''

''ஆமா. இந்த விபத்து எப்படி நடந்துதுன்னு தெரிஞ்சுக்க வேண்டிய வேலை..''

இதற்குள் குமரனின் தாய், ஆச்சர்யத்துடன் இவளைப் பார்த்து, ''அம்மாடீ... நீயும் அந்த பஸ்லே...'' என்று முடிக்காமல் நிறுத்தினாள்.

''ஆமாம்மா...''

''உசிர் பிழைச்சதே பெரிய விஷயம்... பாவம், உன் புருஷன்தான்... எல்லாம் இவன் சொன்னான். என்கிட்ட எதையுமே மறைச்சதில்லே இவள்...''

அவள் தீர்மானத்துடன் கூறினாள்:

''நீ இங்கேயே தங்கு...''

(தொடரும்)

தலைதலையாம், தலைவர்கள்!

போட்டி முடிவு:

முடிவு தேதிக்குப் பின் வந்த கடிதங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சரியான விடைகள் எழுதியவர்கள் 122 பேர். குலுக்கல் முறையில் தலா ரூ. 25 பரிசு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து அதிர்ஷ்டசாலிகள்:

1. ஏ. ரவீந்திர பாரதி, 38, ஜீவா காலனி, பாக்கமுடையான் பேட்டை, பாண்டிச்சேரி - 8; 2. அ. இளங்கோ, மத்திய தந்தி அலுவலகம், ஈஸ்வரன் கோயில் வீதி, ஈரோடு - 638 001; 3. வி. மகாலிங்கம், அடிசன்பெயிண்ட்ஸ், செம்பியம், சென்னை - 11; 4. பெ. சின்னதம்பி, துடையூர் அஞ்சல், சிறுகாம்பூர் வழி, திருச்சி மாவட்டம் - 621 213; 5. குமாரி ஷோபா சாகர், 14, ஏ. பி. ரோடு, சூளை, சென்னை - 112; 6. எம். சத்தீஷ்குமார், 11, எல். எம். ஸி. பில்டிங், நாராயணநகர், ராமகிருஷ்ணா வித்யாலயா அருகே, விழுப்புரம் 605602; 7. திருமதி. பவானி சீனிவாசன், 7, ஏழாவது கிராஸ் தெரு, இந்திரா நகர், சென்னை - 20; 8. எஸ். வி. ராஜசேகர், 19, முதல் தளம், இரண்டாவது குறுக்குத் தெரு, மேற்கு சி. ஐ. டி. நகர், சென்னை - 35; 9. நீரஜா பாலசுப்பிரமணியன், 15, 'ஹெச்' பிளாக், டி. ஹெச். கியூ. போஸ்ட், புதுதில்லி - 110 011; 10. ம. சிவமணி, 6/71, ஆலை வீதி, குயவர்பாளையம், பாண்டிச்சேரி - 605 013.



சரியான விடைகள்:

1. சந்திராசுவாமி; 2. சுந்தர்ஜி; 3. சந்திரசேகர்; 4. முலாயம் சிங் யாதவ்; 5. எல். கே. அத்வானி; 6. வி. பி. சிங்; 7. ஜோதிபாசு; 8. அஜித்சிங்; 9. மதுதண்டவதே; 10. பங்காரப்பா; 11. முரளிமனோகர் ஜோஷி; 12. மூப்பனார்; 13. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட்; 14. தேவிலால்; 15. சல்மான் ருஷ்டி; 16. சதாம் ஹுசைன்; 17. பாரதிராஜா; 18. மேனகா காந்தி; 19. சுப்பிரமணிய சுவாமி; 20. கருணாநிதி.

கழுதை

அது சாகவில்லை. நடுநடுவே தலையை மட்டும் உயர்த்தி அசைத்தது. உடம்பில் ரத்தக் காயம் தெரியாத மாதிரி சடையாக ரோமம் படர்ந்திருந்தது.

சற்று ஓரமாக நடந்து போய்ப் பார்த்தான். ஒருக்களித்தாற்போல் படுத்திருந்தது. பின்னங்கால்களை அதனுடைய உடம்பின் ஒரு பகுதியே அழுத்திக் கொண்டிருந்தது. கால்கள் கோணலாக, அரைகுறையாய்ச் சாறு பிழிந்த கரும்பு மாதிரி சுவாதீனமற்று இருந்தன. எந்த லாரியாவது மோதியிருக்குமோ!

ரஸ்தாவில் அது படுத்திருந்த இடத்தின் புழுதி மண் மேலும் நைஸ் புழுதியாகியிருந்தது. இரண்டு நாளாக அதற்கு மலஜலக் கழிப்பு இருந்த இடத்திலேயே.

ஆனால் சேறு மாதிரி ஆகவில்லை. மாடோ, எருமையாகவோ இருந்தால் அந்த இடம் சகதியாகியிருக்கும்.

ஆகாரம் சாப்பிடாமலேயே எப்படி இரண்டு நாள் சமாளித்திருக்கிறது?

அது படுத்திருந்த இடத்திற்குப் பக்கத்திலே இருந்த பங்களாவுக்குள் நாலைந்து மாருதி கார்கள் பல வண்ணங்களில், பல கோணங்களில் நின்று கொண்டிருந்தன. அந்தப் பங்களாத் தோட்டக்காரன், அதற்கு ஏதாவது ஆகாரம் போட்டிருப்பானா?

ஒரு புல்லோ, பழைய சோறு வைத்த சுவடோ அருகில் காணப்படவில்லை. குறைந்த பட்சம் தண்ணீராவது யாராவது வைத்திருப்பார்களா?

முன்பு ஒரு நாள் ஒரு தெருக் கழுதைக்கு - இந்தக் கழுதைக்கு அல்ல - தண்ணீர் வைத்து, அது பிளாஸ்டிக் வாளியைக் கொஞ்சம் கடித்துத் தின்று விட்டது.

கழுதைக்கும் தனக்கும் ஏன் ஒருவித அன்னியோன்னியம்? நினைத்துக் கொண்டான்.

சித்தி அன்றைக்கு அவனைத் திட்டிய திட்டின் வலி அடங்க நீண்ட நேரமாயிற்று.

''ஏண்டா கழுதை, தண்டக் கழுதை, தடிக் கழுதை, அறிவுகெட்ட கழுதை, பிளாஸ்டிக் பக்கெட்டிலே கொண்டு போய்க் கழுதைக்குத் தண்ணீர் வெச்சாயாமே. பக்கத்து வீட்டுப் பாப்பா சொ[ன்]னாள்.''

பக்கத்து வீட்டுப் பாப்பா, வெள்ளி கிழமைகளில் தெருவைப் பரப்பிப் பெ[ரி]சாகக் கோலம் போடுகிற கெட்டிக்கா[ர] வேலைக்காரப் பெண். காலையில் அவ[ள்] குனிந்து கோலம் போடும் போது, பேப்ப[ர்] காரப் பையன் சைக்கிள் ஸ்டாண்டை ரிலீ[ஸ்] செய்யச் சிரமப்படுவது போல் தாமதித்[து] ரசிப்பதை இவன் பார்த்து உள்ளுக்கு[ள்] கோபப்பட்டிருக்கிறான்.

கழுதைக்குத் தண்ணீர் வைத்ததைச் சித்[தி]யிடம் அவள் சொல்லும்வரை ''புத்தம் பு[து] பிளாஸ்டிக் பக்கெட்டை இந்த அணில் ச[ல்]யன் வந்து எப்படிக் கடித்திருக்கிற[து] பாருங்கள்,'' என்று சித்தி சித்தப்பாவிட[ம்] அங்கலாய்த்துக் கொண்டிருந்ததை அவ[ன்] மனசுக்குள் ஒரு படபடப்போடு கேட்டு[க்] கொண்டிருக்கிறான்.

கருவேப்பிலை ஒடிக்க அந்தக் கறுப்ப[ன்] வந்து காட்டிக் கொடுத்து விட்டுப் போய் விட்டாள்.

இன்ஸ்டிட்யூட்டில் மாணிக்கம், ''ஓம[க்]குச்சி, இன்றைக்குக் கரெக்டாக வந்துட்டீங்க,'' என்று மலர வரவேற்றான்.

இவன்கிட்டே கழுதை பற்றிப் பே[ச]லாமா? அது இரண்டு நாளாகப் படுத்[த] இடத்திலேயே கிடக்கிறது.

அதைத் தாண்டி வாக்கிங் போகிற சேட் ஒரொரு திருப்புச் சந்திலும் நின்று இர[ண்டு] கைகளையும் உயரத் தூக்கி விரித்து, பட்சி சிறகை அடித்துக் கொள்வது போல இரண்டு தரம் அடித்துக் கொண்டு சுவாசப் பயிற்சி செய்பவர் - அவர் கண்ணுக்கு இதுபடவில்லையா?

சேட்டுகளுக்குக் கொஞ்சம் இரக்க மனசு என்பது அவன் அபிப்பிராயம். இன்னொரு சேட், தன் காம்பவுண்டில் நூறு, இருநூறு குப்பத்து ஆட்களை வட்டமாக, அழகாக உட்கார வைத்து, இலை போட்டு அத்தனை பேருக்கும் ஆட்களை விட்டுச் சாதம் பரி[மா]றியதை அவன் பார்த்திருக்கிறான்.

ஒருநாள் அவனுக்கு இருந்த பசியில் தானும் கூட உட்கார்ந்து விடலாமா என்று சபலப்பட்டான். ஆனால் கௌரவம் தடுத்து விட்டது.

வீட்டுக்கு வந்த போது சித்தி அவ[னை]

'வனமாலி'

ிடம் ஒரு தபால் உறையைத் தந்தாள். இண்டர்வியூ போலிருக்கு. திடுதிடுன்னு பாய் விடாம, உங்க சித்தப்பா வந்ததும் ங்கே யாரையாவது பிடிக்க முடியுமா ன்னாடின்னு பார்த்துக்கிட்டுப் போ... ந்தத் தடவையாவது!''

அவனுக்கு ஸ்டென்சில் காப்பியைப் ார்த்து உற்சாகம் ஏற்படவில்லை. சம்ப ம் தேவலை. அறுநூறிலிருந்து, அப்புறம் கோடு - முப்பது - அப்புறம் கோடு, ண்ணூற்று ஐந்து - டானிடியூ அண்ட் ாலிகாட் கம்பெனி.

திருவொற்றியூர் ரொம்பத் தூரம்தான். ாலையில் ஏழரைக்குக் கிளம்ப வேண்டி ிருக்கும். ராத்திரி எட்டு மணியாகலாம் ிரும்ப.

இப்போதே வேலை கிடைத்து விட்ட ாதிரி எதற்குப் பிரமை என்று பற்று இல் லாமல் இண்டர்வியூ காகிதத்தை, 'ஸ்டாப் ர்ரியிங் அண்ட் ஸ்டார்ட் லிவிங்'கில் வைத்து மூடி விட்டு பம்ப் அடிக்கச் சென் ்றான்.

மறுநாள் சித்தப்பா தன் ஆபீஸ் போகும் ோது, டானிடியூ அண்ட் பாலிகாட் டெலி ோன் நம்பரைக் குறித்துக் கொண்டு ோனார். ''பர்சனல் டிபார்ட்டெண்டில் அருணாசலம் இருந்தான். இப்ப இருக் ானோ, இல்லை வேலையை விட்டுட்டுப் ோய்ட்டானோ... நம்ம கழுதையோட அதிருஷ்டம் எப்படி இருக்குதோ பார்க்க லாம்!''

நிலை கொள்ளாமல் அன்று ூரா வீட்டிலேயே இருந்து, பழைய பேப்பர்களையும், சில ாம்பெடிஷன் சக்ஸஸ்களையும் ரட்டிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை சற்றுப் பட டப்புடனே விடிந்தது. இண்டர் வியூவில் என்ன கேட்பானோ சொல்ல முடியாது. கடைசியாக நியூ டில் லிக்கு வந்த அயல்நாட்டுப் பிரதமர் யார் என்று கேட்கலாம். கவர்னர் சிங் இதற்கு ுன் என்ன பதவி வகித்தார் என்று கேட்கக்கூடும்.

''படிச்சுக் கிழிச்சது போதும். போய் ிரண்டு ரூபாய்க்கு வெண்ணெய் வாங் ிட்டு வா. சாயந்தரம் விரதம் தெரியு ில்லே!'' மடித்த இரண்டு ரூபாய் நோட் டைச் சித்தி அவன் பக்கம் வீசினாள்.

''வெ ண் ணெ ய் - ஸால்ட்டா, ெய்னா?'' என்றான்.

''பூஜைக்குங்கறேனில்லே? உனக்குப் ரிஞ்சுக்குற மூளையே கிடையாது. அதான் ங்கே போனாலும் நாயாட்டம் துரத்தி யடிக்கிறான். உப்புப் போடாதது வாங் கிட்டு வா. பொட்டலத்துலே சுருட்டி வெச் சுருக்கிறதை ரொட்டிக் கடையிலிருந்து வாங்கிட்டுவந்து நிற்காதே.''

இரண்டு ரூபாயைக் கை மடிப் பில் செருகிக் கொண் டான்.

''வாடா இங்கே தடிக் கழுதை, முழு முண்டம்! நோட்டை ஸ்டைலா அங்கே போட்டு வைக் கிறே? கீழே விழுந்து தொலையப் போவுது.''





மைதானத்துக் கிழக்குச் சாலையில் திரும்பிய போது, அந்தக் கழுதை கிடப்பது தூரத்தில் வரும்போதே தெரிந்தது. காலில் ரொம்பத்தான் அடிபட்டு இருக்கும் போலி ருக்கிறது.

சுறுசுறுப்பான 'வாக்கிங் சேட்' தெலுங்கு நண்பர் ஒருத்தருடன் தெலுங்கில் பேசிய வாறு மைதானத்து முக்கில் நின்றிருந்தார். ஒருக்கால் கழுதையைப் பற்றி இருக்குமோ!

எப்படியாவது அது அந்த இடத்தில் இல்லாமலிருந்தால் பரவாயில்லை. ஒரே அடியாகச் செத்து விட்டாலும் தேவலை. இரண்டு நாளாக -- ஏன் நேற்றைக்கும் இன்றைக்கும் சேர்த்தால் நாலு நாள்--



''ஆபீஸ்ல ஜெனரேட்டர் இருந்தும் கூட நிம்மதியா இருக்க முடியலை.''

''ஏன் அப்படி...?''

''அது போடற சப்தத்துல எப்படி நிம்மதியாத் தூங்க முடியும், சொல்லுங்க?''

- சீர்காழி. வி. ரேவதி.

கிழக்கு ரோடில் நடந்த போது கழுதையை இன்னும் கொஞ்சம் கிட்டத்தில் பார்க்க முடிந்தது. முதுகில் ரத்தக் காயம் தெரிந்தது. அதைக் கொத்திக் கொண்டிருந்த காக்கை, அவன் அருகே வந்ததும் சற்றுப் பறந்து விட்டுத் திரும்ப விட்ட இடத்தைத் தொடர்ந்தது.

கழுதை சலனமற்றுப் படுத்திருந்தது. முடிந்து விட்டதா? இல்லை. காது அசைந்தது. ஒருதரம் கழுத்தைத் தூக்கியது.

சேட் மீதும், அது படுத்திருந்த இடத்தருகே இந்த பங்களாக்காரர் மீதும் வெறுப்பாக வந்தது. 'இவர்களெல்லாம் மனிதர்களே இல்லை. யாராவது ஒருத்தர் ப்ளூ கிராசுக்குப் போன் செய்யக் கூடாதா? ஒரு நாள் இரண்டு நாளா? நாலு நாள் அது சோறு தண்ணீர் இல்லாமல் காக்கைகளின் பிடுங்கல்களோடு...

வெண்ணெய்க் கடைக்குப் போனான். அங்கிருந்த டெலிபோன் டைரக்டரியைப் புரட்டி, ப்ளூ கிராஸ் சொசைட்டிக்குப் போன் செய்தான்.

பேசியவர் பொறுப்புடன் கேட்டுக் கொண்டது அவனுக்கு இதமாக இருந்தது. அவனுடைய பெயர் கேட்டுக் கொண்டார். 'எந்த விலாசத்திலிருந்து பேசுகிறீர்கள்?' என்ற கேள்விக்குச் சற்றுத் தயங்கி விட்டு, வேறு வழியில்லாமல் வீட்டு விலாசத்தையும் சொல்லி வைத்தான்.

ஒரு ரூபாய் டெலிபோனுக்கு. மீதி ஒரு ரூபாய்க்கு வெண்ணெய் வாங்கி விட்டுச் சித்தியிடம் இரண்டு ரூபாய்க்கு வாங்கினது என்று புளுக வேண்டியதுதான்.

கடைக்காரர் இரண்டு ரூபாய் நோட்டைக் கல்லாவில் வாங்கிப் போட்டுக் கொண்டு, மேஜையைத் துணியால் துடைத்தார். சில நிமிடங்கள் கழிந்து,

''நீங்க எவ்வளவு தந்தீங்க,'' என்றார்.

''ரெண்டு ரூபாய், மடித்த நோட்டு'' என்றான்.

''டெலிபோன் செஞ்சீங்களே?''

''ஆமாம். ஒரு கால்தான்'' என்றான்.

''ஒரு காலுக்கு ரெண்டு ரூபாய். சரியாயிருச்சி.''

இடிந்து போய் விட்டான்.

நோட்டு எங்கோ வழியில் விழுந்து விட்டது என்று சித்தியிடம் என்ன மாதிரியாகப் புளுகுவது?

இன்ஸ்டிட்யூட் போனான். ''வாய்யா ஓமக்குச்சி! என்ன இன்றைக்கு பிஃபோர் டைம்?''

நெடு நேரம் தயங்கின பிறகு, ''மார்க்கெட்டுக்கு வந்தேன். ரெண்டு ரூபா நோட்டு கை மடிப்பில் வெச்சிருந்தேனா, எங்கோ விழுந்துட்டுது. மறுபடியும் வீட்டுக்கு அத்தனை தூரம் போகணும். உங்க கிட்டே ரெண்டு ரூபாய் இருக்குமா? நாளைக்குத் தர்றேன்.''

மாணிக்கம் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ''பஸ்ஸுக்குத்தான் இருக்கு! மூர்த்திகிட்டே கேட்கலாம். இதோ வந்துடுவான்.''

முக்கால் மணி ஆகியும் மூர்த்தி வரவில்லை. வெறும் இரண்டு ரூபாய். அதைப் புரட்ட அவனால் முடியவில்லை.

சித்தியிடம் புளுக வேண்டியதுதான். இன்னும் கொஞ்சம் தாமதமாகப் போகலாம் என்றால் இண்டர்வியூ பதினொரு மணிக்கு என்ற விஷயம் உதைத்தது.

வீட்டு வாசலில் கம்பி போட்ட பெரிய வேன் நின்று கொண்டிருந்தது. கலவரத்துடன் வாசற்படியிலிருந்த சித்தியிடம் இரண்டு பேர் - சிப்பந்திகள் மாதிரி தோற்றமுள்ளவர்கள் - ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

வேனை நெருங்கியதும் ப்ளூ கிராஸ் வண்டிதான் என்று தெரிந்து விட்டது. மனசுக்குள் அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

அதைக் காட்டிக் கொள்ளாமல் வாசலை நெருங்கினான்.

''எழுதிக் கொடுங்கம்மா ஒரு வரி...''

''நான் ஏன் எழுதித் தரணும்?''

''ஒன்பதாம் நம்பர் சீதாபதி வீடு தானே?''

''ஆமாம்.''

''பின்னே போன் பண்ணிட்டு?''

''யாருய்யா திரும்பத் திரும்ப? நாங்க யாரும் போன் பண்ணலை.''

''உங்க வீட்டுக்காரரு பண்ணியிருப்பாரு. அதைப் பற்றி என்ன? இந்த மாதிரி

கழுதையைச் சிகிச்சைக்கு ஒப்படைக்கி றோம்னு ஒரு வரி எழுதுங்க.''

''ஏய்யா நீங்க என்ன பைத்தியமோ? கழுதை கிழுதைன்னு இங்கே வந்து பேசிக் கிட்டு.''

''பலான கழுதையை நாங்க பார்த் திட்டுக் கூட வந்துட்டோம். இதோ இப்பப் போய் வண்டியிலே தூக்கிப் போட்டுக் கிட்டுப் போய் சவுகரியம் பண்ணிடு வோம்.''

''நீங்க இப்போ இங்கிருந்து போக வில்லையானால் டேய், ஓமக்குச்சி! பாரு! என்னவோ வந்து கலாட்டா பண்றாங்க.''

''நாங்க ஏம்மா கலாட்டா பண்றோம். எழுதிக் கொடுக்க இஷ்டமில்லாட்டி விட்டு டுங்க. நாங்கள் வேற ஸ்டெப் எடுத்துக் கிறோம்.''

இவன் மென்று விழுங்கினான். ''என் னன்னு எழுதணும்?''

''கழுதையைச் சிகிச்சைக்கு ஒப்படைச் சிருக்கோம்னு ஒரு வரி. ஏன்னா நாங்களாக ஏதோ கிளப்பிக்கிட்டுப் போயிட்டோம்னு எவனாவது கம்ப்ளெய்ண்ட் கொடுக்கக் கூடாது பாருங்க.''

பனியனுக்குள் செருகியிருந்த பேனா வின் மூடியைத் திறந்தான்.

சித்தி படபடப்புடன், ''கழுதை, தடிக் கழுதை நீ ஏதாவது கையெழுத்துப் போட்டு வைக்காதே. உங்க சித்தப்பாகிட்டே கேட்டுக் கொண்டு...''

''அவ்வளவுதான் சார்'' அவனது கை யெழுத்தோடு திருப்தியுடன், ''ரொம்ப தாங்க்ஸ் சார்'' என்று சிப்பந்திகள் புறப் பட்டனர்.

''நான்தான் உங்களுக்குத் தாங்க்ஸ் சொல் லணும். டகார்னு வந்துட்டீங்களே இத் தனை சீக்கிரம்.''

மகிழ்ச்சியோடு அவர்களை வழி அனுப்பி விட்டு நிம்மதியான மனத்துடன் இந்தப் பக்கம் திரும்பினான். அவன் அவர் களிடம் சொன்னது சித்தியின் காதில் தெளி வாக விழுந்தது. அவள் கடுகடு விழிகள் அவனை உறுத்துப் பார்த்துக் கொண்டி ருந்தன. அவனுக்குப் புரிந்து விட்டது.

அந்த இரண்டு ரூபாய் தொலைந்து விட்டதாக அவனால் இனி அளக்க முடியாது.

சித்தி தன் சொந்த முறையில் என்ன நடவடிக்கை எடுப்பாளோ, சித்தப்பா வந்ததும் அவர் என்னவிதமாக நடத்து வாரோ. இண்டர்வியூவுக்குப் போக சித்தி யிடம் பஸ் காசு இன்றைக்குச் சத்தியமாக கிடைக்கப் போவது இல்லை.

சாயந்திரம் ஏழு மணிக்குச் சித்தப்பா வரும்போதே கேட்டுக் கொண்டு வந்தார். ''அருணாசலத்துகிட்டே சொல்லி விட் டேன். இண்டர்வியூவிலே சுமாராப் பண்ணியிருந்தாக் கூடப் போட்டுக் கொடுத் துடறேன்னார். இத்தனை நாளைக்கப்புறம் கழுதைக்கு அதிருஷ்டம் அடிச்சதுன்னுதான் சொல்லணும். என்ன கேட்டாங்களாம்?''

சித்தி கடுகடுவென்று நின்றாள். ''அவன் உருப்படாத கழுதைங்க. இன்டர்வியூ வுக்கே போகலை.''

''போகலையா? ஏன்? ஏன்? ஏன்?'' தாக் குண்டவர் போல் அதிர்ந்து, பின் கோபா வேசமானார். ''ஏன் போகலே?''

''அது என்னவோ? நீங்களே கேட்டுக் குங்க, உள்ளே தான் மொடங்கிக் கிடக் கிறான்.''

சித்தப்பா, ''ஏண்டா கழுதை, அவ னவன் யார் கையிலும் காலிலும் விழுந்து வேலைக்குச் சிபாரிசு பிடிச்சிருந்தால் நீ ஏண்டா இண்டர்வியூவுக்கே போகலே?'' என்று திட்டிக் கொண்டே கோபாவேசமாக உள்ளே நுழைந்தார்!


கழுதைக்கு இவ்வளவு நேரம் ஆகாரம் தண்ணீர் கொடுத்து, ஒடிந்த காலுக்கு மருந்து போட்டுக் கட்டுக் கட்டியிருப் பார்கள் என்று நினைக்க அவனுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

''சார் ஹெட் ஆபீஸிலிருந்து ஃபோன் வந்தது...''

''என்னவாம்...?''

''அங்கே தூங்கற டைப்பிஸ்ட் கனவிலே பசுமாடு வந்ததாம். 'என்ன பலன்'னு கேட்டாங்க...''

- சி. பன்னீர் செல்வன்



நெஞ்சக் கோயில்

உடம்பு என்பது இன்ப துன்பங்களை அனுபவிக்க உதவும் கருவி என்பது சிலரது கொள்கை.

உடம்பு கடவுளின் சந்நிதானம் என்பது ஞானிகளின் அனுபவம். அதனால்தான் நிறைநிலை எய்திய துறவியர் பெருமக்களை, சந்நிதானம், மகா சந்நிதானம் என்று வணங்குகிறோம்.

கோயிலுக்குப் போய் வருவது முதல் நிலை. நாமே கோயிலாவது நிறை நிலை. கடவுளைப் பாடுவது முன்னுரை. கடவுளாவது முடிவுரை.

கல்லையும் மண்ணையும் கலந்து கலந்து கோயில் சமைப்பது பள்ளிக் கூடப் படிப்பு. உடம்பு ராஜகோபுரம். உள்ளம் கர்ப்பக்கிருஹம் - உணர்வே பரம்பொருள் என்று! கோயிலாய்ச் சமைவது பல்கலைக் கழகம். ஆனால் பள்ளிக் கூடம் போகாமல் பல்கலைக் கழகம் போவது சாத்தியம் இல்லை. கோயிலைச் சமைப்பது. பிறகு கோயிலாய்ச் சமைவது. இதுதான் சரியான வழி!

நமது உடம்பும் ஒரு கோயில் என்பதற்குச் சிதம்பரம் ஒரு சிறந்த அடையாளம்.

சிதம்பரம் கோயிலுக்கு ஐந்து பிராகாரங்கள். உடம்புக்கும் ஐந்து சுற்றுக்கள் உண்டு. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம் என்று ஐந்து கோசங்களை (Layer) விளக்க ஐந்து சுற்றுக்கள். கர்ப்பக்கிரஹம், ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் கோயிலுக்கு நடுவில் இல்லை; இடப் பக்கம் சற்றுத் தள்ளி அமைந்துள்ளது, இருதயம் உடம்





ரக்ஸோனு

தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.



மென்பட்டு மேனி காக்க எளிய குறிப்புகள்

ர். பாரதி மாரு

5: என் சருமம், குறிப்பாக முகம் வும் வறண்டிருக்கிறது. வளவோ க்ரீம்கள், லோஷன்கள் ட்டும் பலனில்லை. இதற்கு ஓர் ாரணம் கூறவும்.

உங்கள் உணவைக் கவனிக்கவும். ழைப் பழங்கள், அத்திப் பழம், வாதுமை யவற்றை நிறைய உண்ண வேண்டும். லும், சத்துக்கூழும் மிக நல்லது. க்கடி முகத்தில் சோப் ன்படுத்துவதை தவிர்க்கவும்.

வாழைப் பழத்தை நசுக்கி, அத்துடன் அல்லது 4 சொட்டு க்ளிஸரினைக் ந்து முகத்திலும், கழுத்திலும் தடவவும். நிமிடங்களுக்குப் பின் கழுவி விடவும்.

க: என் முகத்திலும், நெற்றியிலும் ய பருக்கள் உள்ளன. இதை கற்றி இளமையான மேனி வண்ணம் ற என்ன செய்யலாம்?

: இனிப்பு மற்றும் எண்ணெய்ப் சயுள்ள பொருட்களை உண்ணாதீர்கள். த்தில் தலைமுடி பட விடாதீர்கள். ப்பாக, தலைப் பொடுகு இருக்கையில், முகத்தில் படவேக் கூடாது. க்கண்ட முறையில், குழைவைத் ாரிக்கவும்:

தேக்கரண்டி உவர் மண், ஒரு க்கரண்டி தூளாக்கப்பட்ட லவங்கம், தேக்கரண்டி சந்தனக் குழைவு யெவற்றைக் கலந்து, முகத்தில் சீராகத் வி, 15 நிமிடங்களுக்குப் பின் கழுவி வும். இது போல் தொடர்ந்து, தினசரி 8 ங்களுக்குச் செய்யவும்.

துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

கே: நான் சிகப்பாக விரும்புகிறேன். என் முகத்தை சிகப்பாக்கும் ஒரு க்ரீம் அல்லது அதை தயாரிக்கும் முறை பற்றி கூறவும்.

ப: ஊறுகாய், எலுமிச்சை, கிச்சிலிப் பழ வகைகளை தவிர்க்கவும். பப்பாளியை நசுக்கி அத்துடன் ஒரு தேக்கரண்டி புல்லரிசிக் கூழை சேர்த்து முகத்திலும், கழுத்திலும் தடவி 15 நிமிடங்கள் அப்படியே இருந்த பின் கழுவி விடவும். உங்கள் சருமத்திற்கு, இது சிறந்த குழைவாகும். தகுந்த பலன் கிடைக்கும் வரை இதைத் தொடரவும்.

கே: கோடையில், எனக்கு வேர்க்குரு அதிகம் ஏற்படுகிறது. இதற்கு நிவாரணம் என்ன?

ப: ஆரஞ்சு பழத் தோலை உலர்த்தி, தூளாக்கவும். பிறகு குளித்த பின், பன்னீரில் நனைக்கப்பட்ட பருத்திக்–கம்பளித் துணியை பாதிக்கப்பட்ட இடங்களில் தடவவும். அது சிறிது நேரம் உலர்ந்த பின், ஆரஞ்சுப் பழத் தோல் தூளை தடவி பின்பு சுத்தப்படுத்தவும்.

கே: தீப்புண் வடுக்களை அகற்ற என்ன நிவாரணம்?

ப: இதை இரண்டு கட்டமாக செய்யலாம். முதல் வாரத்தில் "ஆலோ வெரா" இதழ்களை நசுக்கி வடுக்கள் மீது தடவவும். இரண்டாவது கட்டமாக, வாதுமை எண்ணெய்யையும், வைட்டமின் 'ஈ' எண்ணெய்யையும் சமமாக கலந்து தினசரி மஸாஜ் செய்து வரவும். ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து இப்படி செய்யவும். இதனால், தீப்புண் பட்ட இடம் முழுவதுமாக மாறாவிட்டாலும், வடுக்கள் ஆறுவதற்கு இது உதவும். தீப்புண்கள் மிகவும் பாதித்த பகுதிகளை, சர்ஜரி மூலமாக மட்டுமே குணப்படுத்த முடியும்.

கே: எண்ணெய்ப் பசை இருப்பதால், சருமத்தை அடிக்கடி கழுவ வேண்டி உள்ளது. ஆனால், சோப் என்றாலே எனக்கு அலர்ஜி. சோப் இல்லாமல், என் முகத்தை எப்படிக் கழுவுவது?

ப: உங்கள் முகத்தை நீங்கள் சுரண்டி தேய்க்கலாம். புல்லரிசிக் கூழ், துளசி இலை, "விட்ச்ஹஸெல்" எனப்படும் ஒரு வகை வட அமெரிக்கச் செடி அல்லது பன்னீர், உப்பு படிமம் இவற்றைக் கலந்து முகத்தில் சுழற்சி முறையில் இதமாகத் தேய்க்கவும். ஐந்து நிமிடங்களுக்குப் பின் நிறைய நீர் கொண்டு கழுவவும்.

கே: என் கை சருமத்தில் வெடிப்ப ஏற்பட்டுள்ளது. இதற்கு நிவாரணம் என்ன?

ப: தேன், வாதுமை தலா ஒரு தேக்கரண்டி, புல்லரிசிக் கூழ், 4 வெண்டைக்காய் இவற்றைக் கலந்து ஒரு அம்மியில் அரைத்து தூளாக்கி, லேசாக சூடாக்கவும். இக்கலவையை கைகளில் தடவி 20-25 நிமிடங்களுக்குப் பின் கழுவவும்.

கே: என் கண் புருவத்தின் கீழ் உள்ள பகுதி தளர்ந்து, தொங்குவது போலிருப்பதால், மிகவும் வயதானவ போல் நான் காட்சி அளிக்கிறேன். இதற்கு என்ன வழி?

ப: குளிர்ந்த பசும்பாலில், சிறுசிறு பஞ்சுருண்டைகளை நனைத்துப் பிழிந்தபின், புருவத்தின் கீழ் இதமாக தடவவும். சிறிது ஓய்வுக்குப் பின், அப்படியே உறங்க முயற்சிக்கவும். நாளொன்றுக்கு இரு முறை வீதம் ஏழு நாட்களுக்கு இதுபோல் செய்தால் கணிசமான பலன் தென்படும்.

வாசகர்கள் இம்முகவரிக்கு கேள்விகளை அனுப்பலாம்:

Rexona
P.O. Box 758, Bombay-1.

பின் குறிப்பு: உங்களது எல்லா பிரச்சினைகளுக்கும் தனிப்பட்ட முறையி பதிலளிப்பது சாத்தியமில்லாமல் போகலாம். எனினும், வரும் இதழ்களில் உங்களது பிரச்சினைகள், கேள்விகளுக்கு நாங்கள் பதிலளிக்கிறோம்.

நேற்றுவரை நந்தவனம்

11

குமரன், அம்மாவைப் பார்த்த பார்வையில் கோபம் ஒரு க்ஷண நேரத்துக்குச் சுடர் விட்டது.

''அம்மா, உனக்கு எதுவும் புரியாது. இளவரசுவைத் தூக்கிட்டு உள்ளே போ. நான், இவங்க கூடப் பேசிட்டு வர்றேன்...''

அம்மாவின் முகம் சுண்டிப் போய் விட்டது. குழந்தையைத் தூக்கிக் கொண்டு, உள்ளே போகிற வேகத்திலேயே மீராவிடமும் சொல்லி விட்டுப் போகிறாள்.

''இதப் பாரும்மா.. அவன் என்ன சொன்னாலும் எதையும் மனசுல வச்சுக்காதே. ஏதுடா, புது ஊருலே பொம்பளைப் புள்ள, தன்னந்தனியா வந்து எங்கே தங்குவா - என்னத்தைச் சாப்பிடுவான்னு ஒண்ணும் தெரியாது இவனுக்கு. அதுவும் பொம்பளை மனசு - இவனுக்கும் புரியாது, இவங்க அப்பனுக்கும் புரியாது... வீட்டை விட்டுப் புறப்படறதுக்கு முன்னாடி என் கிட்ட ஒரு வார்த்தை சொல்லு...''

குமரன், தாயின் தலை மறையும் மட்டும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தழைந்த குரலில் சொல்கிறான்.

''இந்த ஆக்ஸிடண்ட்டுல அம்மா ரொம்பவும் பாதிக்கப் பட்டிருக்காங்க... யார் வீட்டுக்கு வந்தாலும், அவங்களை இங்கேயே தங்கிடுங்கன்னு வற்புறுத்த ஆரம்பிச்சிட்டாங்க. பேச்சுத் துணைக்கு ஆள் வேண்டியிருக்கு.... நான் ஃபாக்டரிக்குப் போயிட்டேன்னா - அப்புறம் நாள் முழுக்க இளவரசு கூடத்தான். அவனையும் ஒண்டியாச் சமாளிக்க முடியலை. வேலைக்காரங்க பொறுப்புல விடவும் மனசில்லே....''

மீரா, கொஞ்சம் கூடச் சலனமேயில்லாமல், அவனையே பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறாள்.

அவன் என்ன நினைத்தானோ, சுற்றி வளைக்காமல் 'சட்'டென விஷயத்துக்கு வருகிறான்.

''இங்கே பாருங்க மீரா... உங்களுக்கு, யார் இந்தச் சதிக்குக் காரணம்னு தெரிஞ்சுக்கறதுல எத்தனை ஆர்வம் இருக்கோ - அதுல எள்ளளவு கூட குறையாத வேகம் எனக்கும் இருக்கு. போலீஸ் டிபார்ட்மெண்ட்டையோ, சி.ஐ.டி. ஆளுங்களையோ மட்டும் நம்பிட்டு நான் சும்மா உட்கார்ந்திருக்கலை... ஒவ்வொரு நாளும் எனக்கும் அவங்களுக்கும் தகராறுதான். இன்னும் பார்க்கப் போனா - எதையாவது சாக்கு வச்சு, என்னை உள்ளே தள்ளி - நாலு சாத்து சாத்த - எதிர்க்கட்சிக்காரங்களை விட போலீஸ்தான் முனைப்பா இருக்கு.....''

''நேச்சுரலா உங்களுக்கு அந்த உணர்ச்சி இருக்கணும். இல்லாட்டி மீசை வச்ச ஆம்பிளைன்னு சொல்லிக்கறதுல அர்த்தமே இல்லை....''

குமரன், மீராவின் வார்த்தைகளால் சற்றுத் தடுமாறிப் போகிறான். ஆனாலும் வலிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சொல்கிறான்.

''உங்க வார்த்தையினாலே நான் கோபப்படலே. உங்க நிலையில் யார் இருந்தாலும் இப்படித்தான் பேசுவாங்க. ஆனாலும் மீரா... மெட்ராஸ்லேயிருந்து தன்னந்தனியா தஞ்சாவூர்லே வந்து உட்கார்ந்து என்ன சாதிக்கப் போறீங்க?''

''எந்தப் பொருளையும் தொலைச்ச இடத்துலதான் தேடணும்னு எங்கம்மா சொல்லுவா... நான், தஞ்சாவூர்லே தொலைச்சிட்டு, மெட்ராஸ்லே போய்த் தேடறதுல என்ன இருக்கு...''

''இங்கே தேடினா மட்டும் கிடைச்சிடப் போறதா?''

''பொருள் கிடைக்காது. குறைஞ்ச பட்சம் கொள்ளைக்காரனாவது சிக்க மாட்

அனுராதா ரமணன்

டானா...''

''அவனைப் பிடிக்கத்தான் நான் இருக்கேனே...'' மீரா அலட்சியமாய்ச் சிரிக்கிறாள்.

''சாதாரணமா சினிமாவுலதான் பார்த்திருக்கேன். வில்லனே போலீஸ் ஆபீசராகவும் பெத்த அப்பனாகவும், அண்ணன் தம்பியாகவும் இருப்பாங்க... இப்பத்தான் நேரில பார்க்கறேன்...''

''என்ன சொல்றீங்க !''

குமரனின் கறுத்த முகம் மேலும் கறுக்கிறது...

''தமிழ்லேதானே சொன்னேன்....''

''சேச்சே - விபத்துல உங்களுக்கு மூளை கலங்கிடுச்சுன்னு நினைக்கிறேன். இங்கே பாருங்க, நீங்க இப்படிச் சந்தேகப்பட ஆரம்பிச்சா - பஸ்ஸுல இருந்த முக்கால்வாசிப் பேருங்க மேல நீங்க சந்தேகப்பட வேண்டியிருக்கும்...''

'''மோடிவ்' இருந்தா சந்தேகப் படறதுல என்ன தப்பு?''

மீராவின் விதண்டாவாதமான பேச்சு, அவனுள் பயங்கர எரிச்சலைக் கிளப்புகிறது... சிகரெட் பாக்கெட்டிலிருந்து அவசரமாய் ஒரு சிகரெட்டை உருவியவன், உருவிய வேகத்திலேயே மறுபடியும் பாக்கெட்டுக்குள் போடுகிறான். தீக்குச்சியை எடுத்துப் பரபரவெனக் காது குடைகிறான். கொஞ்ச நேரம் மௌனம் சாதித்து விட்டு, வலிய வரவழைத்துக் கொண்ட பொறுமையான குரலில் அவளிடம் சொல்கிறான்.

''ஓ.கே. மீரா... நீங்க எப்படி என்னைச் சந்தேகப்படறீங்களோ, அது மாதிரி - நானும் சில பேருக்கு மோடிவ் இருக்கலாம்னு ஒரு லிஸ்ட் போட்டு வச்சிருக்கேன்....''

''அதுல என் பெயர் இருக்க முடியாது.''

மீராவின் குழந்தைத்தனமான அவசரத்தை - ஒரு கணம் ரசிக்கக் கூடச் செய்கிறான் அவன்.

''நோ... நீங்க என் மேல குற்றம் சுமத்தறதுனாலே - பதிலுக்கு நானும் உங்க மேல பழி சுமத்துவேனா என்ன? நாம என்ன சின்னக் குழந்தைங்களா...!''

இதற்குள் உள்ளேயிருந்து குமரனின் தாய் எட்டிப் பார்க்கிறாள்.



''அந்தப் பொண்ணு எங்கே வேணுமா னாலும் இருக்கட்டும்... வெறும் வயித் தோட அனுப்பிடாதே... பலகாரம் எடுத்து வச்சிருக்கேன். முதல்லே சாப்பிடட்டும்...''

குமரன் சலித்த குரலில் சொல்கிறான்.

''நீ வேற ஏம்மா.... அவங்களுக்கு இப்ப இருக்கற வெறுப்புல - பலகாரத்துல விஷம் கலந்து வச்சிட்டதாக் கூடச் சொல்லு வாங்க.''

அந்த அம்மாள் புன்சிரிப்புடன் தலையை மட்டும் வெளி நீட்டுகிறாள்.

''அம்மாடி... இந்த வீட்டுல தனிப்பட்ட முறையில பலகாரத்துல விஷம் கலக்க ணும்னு அவசியமே இல்லே. அப்பா, பிள்ளை, செத்துப் போனாளே... அந்த மகராசி... இவங்க எல்லாருக்கும் நாக்கு லேயே விஷமிருக்கு. அப்பனும், பிள்ளை யும் எலக்ஷன் நேரத்துல மேடை மேடை யாப் பிரசாரம் செய்வாங்க பாரு.... எதிர்க் கட்சிக்காரன் - மான ரோஷமுள்ளவனா யிருந்தா நாக்கைப் பிடுங்கிட்டுச் செத்திடு வான்....''

மீரா, குமரனைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் எழுந்து, அந்தம்மாளை நோக்கிச் செல்கிறாள்.

''கை கழுவுகிற இடம் எது...?''

அவளை முகமலர்ச்சியுடன் பார்க்கிறாள் குமரனின் தாய்....

''குமரு.... நீயும் வாயேன்...''

''எனக்குப் பசிக்கலை. அப்புறம் சாப்பி டறேன். அவங்களுக்குப் போடு...''

மீரா, 'வெடுக்'கெனத் திரும்பிப் பார்க் கிறாள்.

''பரவாயில்லை... குற்றம் நிரூபிக்கப் படற வரைக்கும் கோர்ட் கூட - குற்ற வாளின்னு நேரிடச் சொல்றதில்லே. குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்னுதான் சொல்லு வாங்க... உங்களையும் நான் அப்படித்தான் நினைக்கிறேன். என் கூட சாப்பிட வர லாம்.''

குமரனுக்கு அவளது நடத்தையும், பேச்சும் விசித்திரமாக இருந்த அதே நேரத்தில் - அவளை எடுத்தெறிந்து பேச வும் முடியவில்லை.

இயல்பிலேயே, அவன் அவசியமாய்ப் பேச நேர்ந்தாலொழிய வாயைத் திறக்க மாட்டான்.

தர்மராஜன் அடிக்கடி சொல்லுவார்:

''ஏண்டா, எப்படிடா இப்படி வாயைத் திறக்காம வளைய வர்றே... மேடையில கனல் பறக்கப் பேசறே. பெண்டாட்டிய எதிர்த்து ஒரு சொல் சொல்ல மாட் டேங்கறே.... அவ இங்கிலீஷ்லே கத்தினா - பதிலுக்கு நீயும் எகிறேன்டா... உன்னை யும்தானே இங்கிலீஷ் ஸ்கூல்லே போட் டேன்... என்னடா பிரயோசனம்...''

குமரன் வாயைத் திறக்க மாட்டான். இந்தப் பக்கமானால் பெற்ற தாய் இடிப் பாள்.

''இந்தா... ஒண்ணு உன் பெண்டாட்டிய அழைச்சிட்டுத் தனியாப் போ. இல்லே, உங்க அப்பா கிட்ட அவர் செய்யறது அத்த னையும் அக்கிரமம்னு எடுத்துச் சொல்லு...''

இத்தனைக்கும் சேர்த்து வைத்து, அவன் எப்போதாவது ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவான்.

''ஷ்... எதுக்காக இப்படி அடிச்சுக்க றீங்கப்பா... அவ இங்கிலீஷ்லே பேசறதை எல்லாம், தமிழ்லே மொழி பெயர்த்தா - உங்க பிளட் பிரஷர் ஏறிடும். சும்மா கிடங்க....''

''அம்மா, நீ செஞ்ச முதல் தப்பு - இந்த மனுஷனோட தரம் தெரியாம கழுத்தை நீட்டினது. ரெண்டாவது தப்பு - இவர் கிட்ட என்னைப் பெத்தது. மூணாவது தப்பு - பட்டணத்துல டாக்டருக்குப் படிச்ச பொண்ணைப் பார்த்து என் தலையில கட்டினது. அவதிப் படு!''

மீராவின் தட்டில் சுடச் சுட இட்லியை எடுத்து வைத்தபடியே ராஜேஸ்வரி கேட்கி றாள்,





ராஜீவ் காந்தியின் மகன் ராகுல், ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் மிகவும் விருப்பத்தோடு படித்து வரும் துறை: 'சர்வதேச அளவில் வன்முறை.'

- வி. ந. ஸ்ரீதரன்.

ஆதாரம்: 'சண்டே அப்சர்வர்'

''இங்கே என்ன விஷயமா வந்திருக்கேம்மா?''

அவளை முந்திக் கொண்டு, குமரன் பதில் சொல்கிறான்.

''அதான் சொன்னாளே.. இந்த விபத்துக்கு மூல காரணம் யாருன்னு கண்டு பிடிக்க வந்திருக்காங்களாம். துப்பறியும் பெண் புலி...!

மீராவின் முகம் சிவக்கிறது.

''மிஸ்டர் குமரன், நீங்க எப்படி இந்த விஷயத்துல அக்கறை எடுத்துட்டிருக்கீங்களோ, அப்படித்தான் நானும். மரியாதையோட பேசுங்க...''

ராஜேஸ்வரி பதறி விட்டாள்.

''அய்யய்யே... என்னம்மா நீ.... ஏதோ பேச்சு வாக்குல சொன்னதைப் போய் பெரிசா எடுத்துக்கிட்டு... இவன் எத்தனையோ விதத்துல ஒசத்திம்மா.... எங் குடும்பத்திலேயே மட்டு மரியாதை கொடுத்துப் பழகக் கூடியவன் குமரன் ஒருத்தன்தான்... நீ உட்காருவியா... இட்லிக்குத் தொட்டுக்க கொத்துமல்லி சட்னி வச்சுக்கறியா...? உங்க வீடுங்க மாதிரி மிளகாத் தூள் செய்ய நமக்கு வராது....''

அந்த அம்மாள், ஏதோ ஒரு குழந்தைக்குப் பராக்கு காட்டிப் பரிமாறுவது போல-பரிமாறுகிறாள்.

குமரன் மனத்துக்குள் ஏகமாய்க் குமைகிறான்.

இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் கூட, மீராவுக்கும் தனக்கும் சுமுகமான வாக்குவாதம் வந்து விடும் என்றே முடிவுக்கு வருகிறான்.

'இவளை உள்ளே விட்டதே தப்பு...'

'எல்லாம் இந்த அம்மாவாலேதான்....'

மீரா, இது எதைப் பற்றியும் சிந்திக்காமல் சாப்பிட்டு முடிக்கிறாள்.

''தாங்க்ஸ். நிஜமாவே நல்ல பசி...''

''உம் முகத்தைப் பார்த்தாலே தெரிஞ்சுதே... பகல் சாப்பாட்டையும் இங்கேயே வச்சுக்க... கறி சாப்பிட மாட்டே இல்லே?''

''ஐயோ! முட்டை கூட சாப்பிட மாட்டேன்!''

''பயப்படாதே. நானும் உன்னை மாதிரி தான்.... அது என்னமோ பன்னெண்டு வயசுலேயே தோணிப் போச்சு.. உசுரைக் கொன்னு, உடம்பை வளர்க்கறது பாவமில்லையான்னு... அத்தோட விட்டுட்டேன். என் பேரன் கூடப் பாரு.... வெறும் பருப்பு சோறுதான். குமரனுக்கும், அவன் அப்பாவுக்கும்தான் சிக்கனோ, மட்டனோ இல்லாம சாப்பாடு இறங்காது... அடேங்கப்பா.. ஒரு நாளைக்குப் பருப்பு சாம்பார் வச்சிட்டா, கத்தி ஊரைக் கூட்டுவாரு பாரு....!''

ராஜேஸ்வரி, மறுபடியும் கடந்த கால நினைவுகளில் மூழ்க - குமரன், மீராவைப் பார்த்து, கடுகளவும் சினேகமின்றிக் கேட்கிறான்.

''சரி. எங்கே தங்கப் போறீங்க?''

''அதான் சொன்னேனே.. சமைச்சு சாப்பிட, ராத்திரி படுக்க, பத்தடிக்குப் பத்தடி ஒரு ரூம்.... போதும்...''

''எனக்குத் தெரிஞ்சு அப்படி எதுவுமில்லே. மேலும் எனக்கு புரோக்கர் வேலை இல்லே... எனக்கு என் கட்சி, மக்கள், அவங்க தேவை, சமுதாயச் சீர்திருத்தம்னு நிறைய வேலை இருக்கு.... ஃபாக்டரி வேற இருக்கு... அங்கே யூனியன்லே ஆயிரம் பிராப்ளம்...''

மீரா, கழுத்தைச் சாய்த்து அவனைப் பார்க்கிறாள்.

''பாதுகாப்பு கேட்டு வந்த ஒரு பொண்ணுக்கு இட வசதி செஞ்சு தர முடியலை.... உங்களுக்கெல்லாம் எதுக்குக் கட்சிப் பணியும், கத்தரிக்காயும்!''

குமரன், கையிலிருந்த சிகரெட் பெட்டியை விட்டெறிகிறான்.

''காலங்கார்த்தாலே பிடிச்சுப் பார்க்கறேன்... தகராறு பண்ணறதுக் குன்னே வந்திருக்கியா நீ...! கட்சியப் பத்தி உனக்கு என்ன தெரியும்? என்னமோ, புருஷனைப் பறிகொடுத்த பொண்ணாச்சேன்னு இரக்கப் பட்டுப் பேசினா, மேல மேல போறியே.... எனக்கு இடம் எதுவும் தெரியாது. என்ன செய்யணுமோ செஞ்சுக்க!''

அவன், விடுவிடுவெனக் கூடத்தைக் கடந்து, தோட்டத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி அமர்ந்து, ஓங்கி உதைக்கிறான்.

அவனது கோபத்தைப் புரிந்து கொண்டாற் போல - மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறக்கிறது.

(தொடரும்)

கலிஃபோர்னியா பள்ளி ஒன்றில் 'Life Lab' என்ற திட்டத்தில் பயிலும் மாணவர்களை இங்கே காண்கிறீர்கள். இவர்கள் தோட்ட வேலை செய்தவண்ணம் விஞ்ஞான உண்மைகளை நடைமுறையில் தெரிந்து கொள்கிறார்கள்... தங்கள் ஒவ்வொரு செயலும் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்களை ஆராய்ந்து அறிவது இம்மாணவர்களுடைய பாடத் திட்டத்தின் முக்கிய அம்சம்.

விஞ்ஞான உண்மைகளைப் பாட நூல்களிலும் ஆய்வுக் கூடங்களிலும் மட்டும் தேடாமல் இப்படி நடைமுறையில் கற்பது எவ்வளவு சுவாரஸ்யமானது, உற்சாகமானது என்று இப்படங்கள் உணர்த்துகின்றன.

படங்கள் : ஜார்ஜ் ஆல்ஸன்

நன்றி : ஸ்பான்



✱ சுவாரஸ்யமான ஆராய்ச்சியில்... ஆசிரியருடன்...



✱ 'இவை நாங்கள் பயிரிட்ட பரங்கிக் காய்கள்!'



✱ செடி போடுவதற்கு நிலம் தயாராக்கப்படுகிறது...

"அம்மா, நான் வெளில போயிட்டு வர்றேன்..." மீரா குரல் கொடுக்க - ராஜேஸ்வரி புன்முறுவலுடன் வாசல் வரையில் வந்து அவளை வழியனுப்பி வைக்கிறாள்.

"பத்திரம்மா. வெய்யில்லே ரொம்ப அலையாதே. ஞானம்!"

அவள் கூப்பிட்ட குரலுக்கு ஆட்டோ டிரைவர், மீராவை முதன் முதலாய் இந்த வீட்டுக்கு அழைத்து வந்த அதே ஆட்டோ டிரைவர் ஞானப் பிரகாசம் - கை கட்டி வந்து நிற்கிறான்.

"இதப் பாரு ஞானம்... உன்னை நம்பித்தான் அனுப்பறேன். சாயந்திரம் அஞ்சு மணியாச்சுன்னா - வண்டி வீட்டு வாசல்லே இருக்கணும். என் வீட்டுல அடைக்கலம் கொடுத்திருக்கிறவரைக்கும் - இவளைப் பத்திரமாப் பார்த்துக்க வேண்டியது என் கடமை."

"சரிதாங்க. தலைவர் கேட்டா என்ன சொல்லட்டும்?"

"யாரு, குமரன் கேட்டாலா...? 'எனக்கு ஒரு விஷயமும் தெரியாதுங்க. அம்மா கூப்பிட்டனுப்பினாங்க; போனேன். 'பொறுப்பாப் பார்த்துக்கடா ஞானம்'னு சொன்னாங்க. அதும்படியே செய்யறேன். எதானாலும் அம்மாகிட்ட கேளுங்க,'ன்னு சொல்லு. என்னை வந்து கேட்கட்டும்; நான் பேசிக்கறேன்..."

மீராவுக்கு ராஜேஸ்வரியைப் பிடித்துப் போய் விட்டது. முதல் பார்வையிலேயே மனிதர்களுடன் ஒட்டிக் கொள்ளும் அவளின் சுபாவம்; மகனின் வார்த்தைகளை மீறி, மீராவைத் தன்னுடன் தங்க வைத்துக் கொண்ட அவளின் துணிச்சல்... எல்லாவற்றையும் விட - அன்றைக்கு பஸ்ஸில் என்ன நடந்தது என்பதை மீரா எத்தனை முறை கூறினாலும் அலுக்காமல் கேட்கும் அவளது பொறுமை...

குமரன், இவள் நிற்கும் பக்கம் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. இவளைத் தன் வீட்டில் தங்க வைத்ததற்காக, அம்மாவிடம் நாலைந்து நாட்கள் முகம் கொடுத்துப் பேசக் கூட இல்லை.

எந்த ஒரு விஷயத்திலும் மகனின் விருப்பத்துக்கு எதிராக எதுவும் செய்யாத ராஜேஸ்வரி, மீராவின் விஷயத்தில் மட்டும்



எப்படி - இப்படியொரு சுதந்திரமான முடிவெடுத்தாள் என்பதுதான் வீட்டில் உள்ள வேலைக்காரர்களுக்குக் கூடப் புரியாத புதிராய்....

இதை ஒரு நாள் குமரனே, தாயிடம் வாய் விட்டுச் சொல்லியும் கூட அவள் பொருட்படுத்தவே இல்லை.

"ஏண்டா, முருங்கைக்கா சாம்பார் வச்சிருக்கேன். உனக்கு சிக்கன் வறுத்து வைக்கட்டுமா?"

"ஆமா... இதுக்கெல்லாம் வந்து என்கிட்டே அபிப்பிராயம் கேளு. எதுக்குக் கேட்கணுமோ அதுக்குக் கேட்காதே!"

"குமரு, நீ எதைப் பத்திச் சொல்லுறன்னு எனக்கும் புரியுது. ஏதோ வந்த அன்னிக்கு உன்கிட்ட இடக்கு முடக்காப் பேசினாளே தவிர, நல்ல பொண்ணு. ரொம்ப அனுசரிச்சு நடந்துக்கறது. உனக்கும், எனக்கும் இருக்கற அதே துயரம்தான் அந்தப் பொண்ணுக்கும். என்னால அவளைப் புரிஞ்சுக்க முடியுது. இந்த ஒரு விஷயத்துல மட்டும் அம்மாவை நீ தடுக்காதே!"

இதற்கு மேல் குமரன், அவளிடம் இது பற்றிப் பேசுவதே இல்லை.

ஆனாலும் மீராவை நேருக்கு நேர் சந்திக்கும்படி நேர்ந்து விட்டால், முகம் சுருங்கிப் போவான்.

நேற்றுவரை நந்தவனம் 12



அதுவும், இளவரசு மீராவின் இடுப்பில் சவாரி செய்வதைப் பார்த்தால் எரிச்சலின் உச்சிக்கே போய் விடுவான்.

''டேய், கிழே இறங்குடா!''

''ஏண்டாப்பா, இப்பத்தான் கொஞ்ச நேரம் சோபாவுல வந்து உட்கார்ந்தேன். ஏதோ மீராகிட்டயாவது புள்ள ஒட்டிக்கறானேன்னு நான் சந்தோஷப்படறேன். நீ எதுக்கு அவனை இறங்கச் சொல்றே? இதோ பத்து நிமிஷத்துல நீ மோட்டார் சைக்கிளை உதைச்சு, புருபுருன்னு கிளம்பிடுவே... இவ இருக்கறது எனக்கு எத்தனை ஒத்தாசையா இருக்கு தெரியுமா?''

மீரா பேச மாட்டாள். குமரனை அவள் பார்க்கும் பார்வையிலேயே அலட்சியம் தெறிக்கும். அவன் பல்லைக் கடித்தபடியே நகருவான்.

அவனுடன் பேசுவதில்லையே தவிர அவனைப் பற்றியச் சகலமான விவரங்களையும் மீரா, ராஜேஸ்வரியிடமே கேட்டுத் தெரிந்து கொள்கிறாள்.

''ஏம்மா, உங்க பிள்ளை நிஜமாவே இந்த விபத்துக்குக் காரணம் யாருன்னு தேடறாரா?''

''பின்னே...அது ஒண்ணுதான் இப்ப அவனோட இலட்சியமே...''

''இதுவரைக்கும் யார் மேலயாவது சந்தேகப்பட்டிருக்காரா?''

''அதை ஏன் கேட்கறே? ஒரு லிஸ்ட்டே வச்சிருக்கான். அப்பப்ப சொல்லுவான். நான்தான் இதையெல்லாம் அதிகமாக் காது கொடுத்துக் கேட்கிறதில்லே. மொத்தமாய்ப் பறிகொடுத்தாச்சு. இனிமே குற்றவாளிகளைக் கண்டுபிடிச்சுத் தண்டனை கொடுக்கறதனாலே மட்டும் போனவங்க திரும்பி வந்திடவாப் போறாங்க?''

''அப்படி விட்டுட முடியுமா? அது சரி, அந்த லிஸ்ட்டுல யார் யார் இருக்காங்கன்னு சொல்லுங்களேன்...''


ராஜேஸ்வரி மிரண்டு விழித்தாள்.

''ஐயோ... எதுக்கு? நான் எதையாவது சொல்லப் போக, நீ, இதான் சாக்குன்னு, இவங்களை எல்லாம் தேடிட்டுக் கிளம்ப, குமரன் காதுக்கு இந்த விவகாரம் போச்சுன்னா அவ்வளவுதான்! வேற வினையே வேண்டாம்!''

இந்த இரண்டு நாட்களில், மீரா - ராஜேஸ்வரியின் சுபாவத்தை நன்கு புரிந்து கொண்டு விட்டாள். அதனால் - அவளை வற்புறுத்தவில்லை. ஒரு சில மணி நேரத்தில் ராஜேஸ்வரியே அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

''இந்தா, நான் உன்னோட நல்லதுக்காகத்தான் சொல்றேன். ரிஷிமூலம் - நதிமூலம் தேடறாப்பல - நீ இந்த வெடிகுண்டு விபத்துக்கு மூல காரணம் தேடிப் போய், கடைசியில உன் உசுருக்கு ஏதாவது சேதாரம் வந்துடப் போறதேங்கறதுனால தான் சொல்றேன். அதுக்காகக் கோவிச்சுக்காதே. நான் சொல்ற பேரை எல்லாம் குறிச்சுக்க....''

அனுராதா ரமணன்



வாசிப்பவர்: சென்ற வாரம் புதன் கிழமை ஒரு தடங்கலும் இல்லாமல் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி இருக்கிறதாக ஒரு நேயர் எழுதியிருக்கார்...''

அதிகாரி: ''தவறுதான்... இனிமே இது மாதிரி நடக்காமல் பார்த்துக்கறோம்.''

- வி. கி. குமார்.

மீரா, மிக அவசரமாய்ப் பேனாவை எடுத்தாள்.

''உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு...''

''இருந்து என்ன பிரயோசனம்? அப்பனும் சரி, பிள்ளையும் சரி, என்னைப் புரிஞ்சுக்கவே இல்லையே...''

''சரி... லிஸ்ட் சொல்றீங்களா?''

''என்ன லிஸ்ட்?''

மீரா அவளைப் பார்த்து முறைக்க, அவள் சிரித்தபடியே சொல்கிறாள்.

''அம்மாடி... குமரு முதல்லே சந்தேகப்படறது, அவனோட மச்சான் - அதான் தெய்வநாயகியோட தம்பீ... அவன் மேல சந்தேகம்.''

''அதெப்படி, சொந்த அக்காவைப் போய்...'' -

''என்கிட்ட அதெல்லாம் கேட்காதே. ''யார் யார் மேல குமரு தம்பிக்குச் சந்தேகம்னு மட்டும் கேளு; சொல்றேன். ஏன், எப்படின்னு கேட்டா - நான் என்ன இட்சிணியா?''

''சரி சொல்லுங்க. உங்க மருமகளோட தம்பி பேரென்ன?''

''ரவி. பொல்லாதவன். ஒரு நாளு எங்க வீட்டுக்காரரைச் சுடத் துப்பாக்கிய மடியில கட்டிட்டு வந்துட்டான்னா பார்த்துக்க..''

''உங்க வீட்டுக்காரர் மேல அவனுக்கு என்ன கோபம்?''

''நல்லாக் கேட்டியே? அவனோட அக்கா தெய்வநாயகிய - என் வீட்டுக்காரரு - அதான் எக்ஸ். எம். எல். ஏ. கை நீட்டி அடிச்சா...? கூடப் பொறந்த பொறப்பு சிலுத்துட்டு வராதா? வந்துட்டான் துப்பாக்கியோட.''

மீரா சிரிப்பை அடக்க மாட்டாமல் தவித்துக் கொண்டே கேட்டாள்:

''அப்படி அக்கா மேல அத்தனைக் கரிசனம் இருக்கற தம்பி, அக்கா போற பஸ்ஸில பாம் வைப்பானா?''

''இங்கேதான் நீ தப்பு பண்ணறே. பதவி ஆசையும், பண ஆசையும் என்ன வேணுமானாலும் பண்ணச் சொல்லும். இங்கே, அவன் துப்பாக்கியோட வந்தப்ப அவனிருந்த நிலை வேற. டைவர்ஸ் ஆனதுக்கு அப்புறம் - எப்ப தெய்வா பிறந்த வீட்டுக்குப் போனாளோ - அப்பவே அவ அப்பா, தன்னோட சொத்துல முக்கால் வாசியை வாழாவெட்டியா வந்து நின்ன தன் பொண்ணு பேருக்கே எழுதி வச்சிட்டாரு. நர்ஸிங் ஹோம் கட்டறதுக்கு வேற - ஏகமாச் செலவழிச்சிருக்காரு. இதெல்லாம் பையனுக்குப் பிடிக்கலே. அடிக்கடி, அக்காகிட்ட, 'குமரு ரொம்ப நல்லவன்; அவனைப் பகைச்சிட்டு வந்தது தப்பு'ன்னு சொல்லி, கடுப்படிச்சிருக்கான். இவ மசியலை. இப்ப தீர்த்துட்டான். ஒரே கல்லுல ரெண்டு மாங்கா அடிச்சிட்டான். ஜென்ம விரோதியான அக்கா மாமனாரையும் தீர்த்தாச்சு. சொத்துக்கு இடைஞ்சலா இருந்த அக்காவையும்...''

''இப்ப அந்த சொத்தை எல்லாம் யார் கவனிச்சுக்கறாங்க?''

''வேற யாரு? இந்தப் பிள்ளை ரவிதான். அக்கா குழந்தை இளவரசு மேஜராகற வரைக்கும், இத்தனைச் சொத்துக்கும் கார்டியன் தான்தான்னு வக்கீல் வைச்சு கோர்ட்டுல கேஸ் நடத்திட்டிருக்கான். நம்ம குமரன் அதுக்கெல்லாம் சளைச்சவனில்லே. அவன், சொத்துல சல்லிக் காசு கூட வேண்டாம். சட்டப்படி என் குழந்தை என்கிட்ட வளர வேண்டியதுங்கறான். கோர்ட்டுல, 'குழந்தையோட ஆறு வயசு வரைக்கும் அம்மா பாதுகாப்புலேயும், அதுக்கப்புறம் அப்பாவோட பராமரிப்புலேயும் இருக்க வேண்டியது'ன்னு எப்பவோ தீர்ப்பாயிடுச்சு. அம்மா இறந்தா பிள்ளை, அப்பன்கிட்ட வர வேண்டியது தானே நியாயம்?''

ராஜேஸ்வரிக்கு இதைச் சொல்லும் போதே முகம் சிவந்து, மூச்சு வாங்குகிறது.

மீராதான் அவளைச் சமாதானப்படுத்துகிறாள்.

''விடுங்கம்மா. இந்த அநியாயத்தை யார் செஞ்சிருந்தாலும் - கடவுள் அவங்களுக்குச் சரியான தண்டனை கொடுப்பாரு. அடுத்தாப்பல லிஸ்டுல யாரு?''

''அது ஒண்ணும் சரியாத் தெரியலை மீரா. எங்க வீட்டுக்காரருக்குச் சின்ன வீடுங்க நிறைய இருக்கு. இப்ப புதுசா ஒருத்தி வந்து சேர்ந்திருக்கா. அவளாலே தான் வீட்டுல தெய்வநாயகிக்கும் இவருக்கும் சண்டை ரசாபாசமாப் போயிடுச்சு.

அந்தப் பொண்ணு பேரு நிர்மலா. அவளுக்கு வயித்துல மூணு மாசம். அதைக் கலைக்கணும்னு தெய்வநாயகிய - மருந்துப் பெட்டிய எடுத்திட்டு, அவரோட கிளம்பி வரச் சொன்னாரு. முடியாதுன்னு சொல்லிட்டா. அந்தப் பொண்ணும் நேரும் கூறுமா இருக்கற ரகமில்லேன்னு வைச்சுக்கயேன். எப்பப் பாரு நகை, பணம்னு பிடுங்கிக்கிட்டே இருக்கும். இவருக்கே எப்படியாவது கழண்டு வந்தால் போதும்ன்னு ஆயிடுச்சு... அந்தப் பொண்ணு எப்பவும் போன் செஞ்சு, இவரை மிரட்டும்... 'என் வயித்தெரிச்சல் சும்மாப் போகாது; எல்லாத்துக்கும் சேர்த்து வச்சு அனுபவிக்கப் போறீங்கன்னு, சாபம் கொடுக்கற மாதிரி கத்தும்... இது அவ வேலையாவும் இருக்கலாம்...''

''ம்... அப்புறம்?''

''அன்னிக்கு பஸ்லே யாரோ சினிமாக்காரப் பொம்பளையோட குழந்தைய எடுத்திட்டு, அவ தங்கச்சி ஏறினாளாமே. பாமாவோ என்னமோ பேரு சொன்னான் குமரன். அந்தப் பொண்ணுக்கு வேண்டாதவங்க கூட இதை செஞ்சிருக்கலாம்னு... ஒண்ணும் நிச்சயமாச் சொல்றதுக்கில்லே...''

இப்போதைக்கு இது போதும் என்று நினைத்து விட்டாளோ என்னவோ... மீரா, மூன்று துண்டுக் காகிதங்களில் ரவி, நிர்மலா, பாமா என்று எழுதிச் சுருட்டிக் குலுக்கிப் போட்டாள்.

இளவரசுவை அழைத்து, அதில் ஒன்றை எடுத்துத் தரச் சொன்னாள். பிரித்தாள்.

'நிர்மலா.'

''சரிதான்... தாத்தாவுக்கேத்த பேத்திடா...''

மீரா, குழந்தையின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டி விட்டுக் கிளம்பி விட்டாள்.

''தெரியாத ஊரு. கண்டபடி அலையாதே. நான் வண்டி பார்த்து ஏற்பாடு செய்யறேன். அதுலேயே போயிட்டு அதுலேயே வந்து சேரு..''

ராஜேஸ்வரிதான் ஆட்டோ டிரைவர் ஞானப்பிரகாசத்தை அழைத்து, பொறுப்பை ஒப்படைத்தது.

''எங்கேம்மா போகணும்?''

''கமலா தியேட்டர் பக்கம்பா... ஆபிரஹாம் வைத்தியர் தெரு...''

கமலா தியேட்டருக்கு இந்தப் பக்கம் - பர்மா பஜார் போல வெளிநாட்டுப் பொருட்கள் நிரம்பிய கடைகள்.. அங்கு ஈயாய் மொய்க்கும் கூட்டம்.

மீரா, தெரு முனையிலேலேய வண்டியை நிறுத்தி இறங்குகிறாள்.

''ஞானம், நான் இப்படியே நடந்து ஒவ்வொரு வீடாப் பார்த்துட்டே போறேன். நீங்க இங்கேயே இருங்க...''

''ஜாக்கிரதைம்மா... ஏதாச்சும் விவகாரம்னா, அம்மா என்னைத்தான் திட்டுவாங்க...''

''கவலையே வேண்டாம்.''

மீரா, திரும்ப, அவளது கரத்தை ஓர் இளம் பெண் கெட்டியாய்ப் பிடிக்கிறாள்.

''நீங்க... மீராதானே?''

மீரா எதிரில் நின்றவளை உற்றுப் பார்க்கிறாள். 'சட்'டென அடையாளம் தெரியவில்லை.

''என்னை ஞாபகமிருக்காது உங்களுக்கு. கல்யாண களேபரத்துல எப்படி நினைவு வச்சுக்க முடியும்? நான் நாகு மாமா பொண்ணு மங்களா. அதாவது கீர்த்தியோட மாமா பொண்ணு... எனக்கும் கீர்த்திக்கும்தான் முதல்லே கல்யாணம் நிச்சயம் செய்யறதா இருந்து...''



மனைவி: ''பக்கத்து வீட்டுக்கு ஏன் நீங்க மளிகை சாமான் வாங்கிப் போடுறீங்க?''

கணவன்: ''அவங்ககிட்டேருந்து அவ்வப்போது கரண்டியில கைமாத்தா வாங்கினதையெல்லாம் திருப்பித் தர வேண்டாமா?''

- வி. கி. குமார்

''ஓ...!''

மீரா, வலிய ஒரு புன்னகையை வரவழைத்துக் கொள்கிறாள்.

அந்தப் பெண், இவளையே பரிவுடன் பார்க்கிறாள்.

''வாங்களேன். வீடு இங்கேதான்..''

''பரவாயில்லே.. நான், இப்ப வரக் கூடாது. இன்னும் ஒரு வருஷம் ஆகல்லே இல்லையா.. அதான்...''

அவள் திக்கி, திணறிச் சொல்ல - மங்களா பிடிவாதமாய் அவளது கரத்தைப் பிடித்திழுக்கிறாள்.

''நீங்க வாங்களேன். வீட்டுத் திண்ணையிலேயாவாது உட்கார்ந்து.. அப்பா கூட வீட்டுலதான் இருக்கார்...''

மீரா, செய்வதறியாமல் திகைத்து, அவளையே பின்தொடருகிறாள்.

(தொடரும்)

கோடை விடுமுறையில் பள்ளிக்கூடம் போகணுமா?



★ அக்ஷர வித்யா பீடத்தில்....

கடந்த சில வருடங்களாகச் சென்னையில் நடத்தப்படும் கோடைக்கால வகுப்புகளின் எண்ணிக்கை மெல்ல அதிகரித்து வருகிறது... சுமார் ஒரு மாத காலத்துக்கு நடக்கும் இவ் வகுப்புகளில் பள்ளிப் பாடங்களுக்குப் பதிலாகக் கலைகளும் கைத் தொழில்களும் அட்டவணைப்படி போதிக்கப்படுகின்றன. நாள்தோறும் மூன்று முதல் நான்கு மணி நேரம் வரை வகுப்புகள்.

கடைசித் தேர்வை எழுதி முடித்ததும் நம் முன் விரியும் இரண்டு மாத கால விடுமுறை சுதந்திரத்துக்காகக் காத்திருந்து அதன் ஒவ்வொரு நிமிடத்தையும் அனுபவித்து மகிழ்ந்த கடந்த தலைமுறையினருக்குக் கோடைப் பள்ளிகள் பற்றிச் சில நியாயமான சந்தேகங்கள் எழுகின்றன.

★ உடலும் மனமும் இலேசாகி, வீட்டுத் தோட்டத்தில் மா மரத்தையும் பட்டாம்பூச்சிகளையும் ரசித்த அனுபவம்;

★ அத்தை வீட்டிலும் பாட்டி வீட்டிலும் வாரக் கணக்கில் தங்கி உறவுக் குழந்தைகளுடன் விளையாடி மகிழ்ந்த அனுபவம்;

★ தினம் ஒரு புதிய எழுத்தாளருக்கு அறிமுகமாகி புத்தகங்களும் புதினங்களும் தரக்கூடிய ஒப்பற்ற இன்பத்தைத் துய்த்த அனுபவம்;

★ அம்மாவுக்கும் பாட்டிக்கும் சின்னச் சின்ன உதவிகள் செய்து அவர்களுடன் எப்போதையும் விட நெருக்கமாகி மகிழ்ந்த அனுபவம்.....

- இவ்வளவு அனுபவங்களையும் துறந்து, ஒரு குழந்தை 'சம்மர் ஸ்கூல்' என்ற பெயரில் மீண்டும் அட்டவணைப் பாடத் திட்ட வட்டத்துக்குள் சிக்கிக் கொள்ள வேண்டுமா...?

இத்தகைய சந்தேகத்துக்கு அவசியமில்லை என்பது சம்மர் ஸ்கூல் நடத்துவோரின் வாதம்:

அக்ஷர வித்யா பீட் என்ற அமைப்பின் நிர்வாகி பிரேமா ரங்காச்சாரி கூறுகிறார்:

''சென்ற தலைமுறைக்கு இருந்த பல சௌகரியங்கள் இந்தத் தலைமுறையினருக்குக் கிடையாது. கூட்டுக் குடும்ப அமைப்பு அழிந்து வருகிறது. பெற்றோர் இருவரும் வேலைக்குப் போகிறார்கள். குழந்தைகள், வீட்டில் தனியாக இருக்க முடியாதே! துணையுடன் இருந்தாலும், தோட்டத்துடன் கூடிய தனி வீடுகளுக்குப் பதில் கூண்டு போன்ற பிளாட்டுகளில் குழந்தைகள் அடைபட்டுக் கிடக்க வேண்டியுள்ளது. சுற்றுலாச் செல்வோர் அதிக பட்சம் ஒரு வாரம்தான் செல்ல முடியும். விலைவாசிகள் அப்படி! இதே காரணத்துக்காக உறவுக்காரர்கள் வீட்டில் போய்த் தங்குவது பற்றி இருமுறை யோசிக்க வேண்டிய நிலை. வாழ்க்கை முறைகள் மாறி விட்டதால் ஏற்பட்டுள்ள ஒரு புதிய

துரோகம்

அந்தச் செய்தியைக் கேள்விப் பட்டதும் மிகவும் அதிர்ச்சியாய் இருந்தது எனக்கு.

இவரா...? இவரா இப்படி?

ஆனால் செய்தியைச் சொன்னவள் என் தங்கை சுதா என்பதால் நம்பாமலும் இருக்க முடியவில்லை.

''அக்கா, என் கண்ணாலேயே பார்த் தேன். அத்தானும், அவளும் சினிமாவுக்கு வந்திருந்ததை. அவ கொஞ்சலும், சிணுங்க லும் அத்தான் அதுக்கு வழியறதும்... போ! நம்ம அத்தானா இப்படி, ப்ச்!''

சுதா சொல்வது உண்மையாய்த்தான் இருக்க வேண்டும்.

அன்று அவர் சட்டைப் பையில் இரண்டு சினிமா டிக்கெட்டுகள் இருந்தன.

தானும், தன் நண்பனும் போனதாய்க் காரணம் சொன்னார். அப்போது நம்பும்படி யாக இருந்தது.

ஆனால் இப்போது அது நண்பன் அல்ல, நண்பி; அதாவது தோழி என்பது புரிந்தது.

இருந்தாலும் நான் அவசரப்பட வில்லை.

விஷயத்தை உறுதிப்படுத்திக் கொள் ளத் தயாரானேன்.

அந்தத் தோழியின் பெயர் சசிகலா என்பதும், அவர் அலுவலகத்தில் கிளார்க் காய் வேலை பார்ப்பதும், வேவு பார்த் ததில் தெரிய வந்தது. கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றவள். இப்போது என் கணவனைச் சுற்றி வருவதும் புரிந்தது.

கல்லுக்குண்டாய் நான் ஒருத்தி இருக்க, இவருக்கு ஏன் இப்படி புத்தி அலை பாய்கிறது.

மனம் கொந்தளித்தது.

ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளா மல் இறுகினேன். என் சுபாவம் அப்படி!

சிறு வயதிலிருந்தே என் உணர்ச்சி களை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டேன்.

அம்மா கூடச் சொல்லுவாள்.

''இப்படி கடப்பாறையை முழுங்கின மாதிரி இருக்காதேடி. வாய் விட்டு அழு, இல்லை சொல்லு. உடம்புக்கு ஆகாது. பிர ஷர் ஏறிடும்!'' என்பாள்.

ஆனால் நான் மாற்றிக் கொள்ள வில்லை.

நம் சோகத்தை - துக்கத்தை அடுத்தவ ரிடம் கொட்டினால் சோகம் இல்லை யென்றா ஆகி விடும்.

ஓர் ஐந்து நிமிடம் வேண்டுமானால் குறையலாம். அந்த நபர் சென்ற பிறகு திரும்பி மனத்துக்குள் பிறாண்டுமே!

தேவையில்லாத அவலாகி விடும் ஊருக்கு.

ஒருநாள் வேண்டுமென்றே பின் தொடர்ந்து சென்று, நேரடியாகவே ஹோட்டலில் சந்தித்தேன்.

திகைத்துப் போனார். முகம் வெளிறி விட்டது.

நான் காப்பி குடித்து விட்டு, எதுவும் பேசாமல் பில்லைக் கொடுத்து விட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

சிறிது நேரத்தில் பின்னாலேயே வந்து விட்டார்.

''லதா... நான்... வந்து... அவ..'' என்று தடுமாறினார்.

நான் அவரை உறுத்துப் பார்த்தபடி நாற் காலியில் அமர்ந்திருந்தேன்.

''என்ன லதா பேச மாட்டேங்கறே?'' என்றார் மன உறுத்தலின் வலி தாங்காமல்.

அப்பா உள்ளே வந்தார். உள்ளூரி லேயே இருக்கிறார்.

''என்னம்மா லதா, போன் பண்ணி னியே வரச் சொல்லி...'' என்றபடியே உள்ளே நுழைந்தார்.

ஹோட்டலிலிருந்து அப்பாவை வரச் சொல்லிப் போன் செய்து விட்டுத்தான் வந்தேன்.

நான் முடிவு செய்து விட்டேன்.

''அப்பா, ஓர் ஆட்டோ பிடிச்சிட்டு வாங்க...'' என்றேன் இறுகிய குரலில்.

அப்பாவுக்கும் விஷயம் எட்டியிருந்தது போலும்.

காச், மூச்சென்று கத்தினார் அவரிடம்.

தலையைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருந்தார்.

''ஊரைக் கூட்டி அவமானப்படுத்த லேன்னா பாரு, உன்னை...'' என்று ஏகவசனத்தில் இறங்கினார் அப்பா.

''என்னய்யா பெரிய தப்புப்

இருஷ்ணா

பண்ணிட்டேன். ஊருல உலகத்துல யாரும் பண்ணாததையா செஞ்சிட்டேன். உன் பொண்ணை பட்டினி போட்டேனா இல்லை துணி, மணி வாங்கிக் கொடுக்காமல் பஞ்சை, பராரியா அலைய விட்டேனா?'' என்று தனது தவறை மறைக்கக் கோபமாய்க் கத்தினார்.

''அப்பா.. நான் போய் ஆட்டோ கூட்டி வரவா, இல்லை நீங்க போறீங்களா?'' என்றேன் நான் இடையில் புகுந்து.

இருவரும் திகைத்து நின்றனர் அவமானமாய்.

அப்பா விருட்டென்று வெளியே போனார்.

''லதா, வீட்டை விட்டுப் போறதுன்னு முடிவு பண்ணிட்டியா?''

நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

''வாழாவெட்டியா இருக்க உனக்கு ஆசைன்னா போயிக்கோ...'' என்றார் கோபத்துடன்.

தவறையும் செய்து விட்டு எனக்குத் தண்டனையாய்ப் பட்டத்தையும் கொடுக்கும் அவரது ஆண் என்ற ஈகோ என்னுள் கோபத்தை உண்டாக்கியது.

மௌனம்தான் என் பலம் என்பதால் அமைதி காத்தேன்.

அழுது, புலம்பி, சினிமா டயலாக் பேசுவதில் எனக்கு நம்பிக்கையில்லை.

அந்தப் பெண்ணுடன் அவருக்கு உள்ள தொடர்பை என் அழுகையால் நிறுத்த முடியாது என்பது புரிந்தது அவரது பேச்சு மூலம்.

சூட்கேசைப் பிடித்தபடி அப்பாவுடன் ஆட்டோவில் ஏறினேன்.

பிறந்த வீட்டுக்கு வந்து ஆறு மாதம் ஓடி விட்டது.

அவள் : வழுக்கைத் தலை மாப்பிள்ளையைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு என் பெண் சொல்றா.

இவள் : ஏன்?

அவள் : அவர்தான் இவளை 'எலிவால் சடை' அப்படீன்னு கிண்டல் பண்ண மாட்டாராம்!

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.



அப்பாவின் சிபாரிசு மூலமும், என் பட்டப் படிப்பினாலும் ஒரு வேலை தேடிக் கொண்டேன்.

ஊரார் கொஞ்ச நாட்கள் என்னை அரைத்து விட்டுப் புதுப்புது வம்புகளில் தாவி, என்னை மறந்து போயினர்.

என் கணவர் அலுவலகத்தில் வேலை செய்யும் டைப்பிஸ்ட் லாவண்யாதான் இன்று சொன்னாள். என் பள்ளித் தோழி அவள். சனிக்கிழமை இருவருக்கும் விடுமுறையானதால் வீட்டுக்கு வந்தாள்.

''ஹேய் லதா, விஷயம் தெரியுமா? அந்தச் சசிகலா இப்பப் புது பாய் ஃபிரண்டை பிடிச்சிட்டா. புளியங்கொம்பு அது. இப்ப உன் புருஷனை அவ சட்டையே பண்றதில்லை.''

நான் அசுவாரசியமாய் இருந்தேன்.

''அவ குணமே அப்படித்தான் தெரியுமா? ஒருத்தனைப் பிடிச்சிக்க வேண்டியது. அவனிடமிருந்து பணத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கறந்துட வேண்டியது. அப்புறம் அவனைக் கழட்டி விட்டுட்டு அடுத்த ஆளைப் பிடிச்சிப்பா. குரங்கு மாதிரி தாவிடுவா. த்தூ! இவ எல்லாம் ஒரு பொம்பளை. ஆபீசே நாறுது...''

''ஆம்பளைங்களுக்கு எங்கே போச்சு புத்தி?'' என்றேன் காட்டமாய்.

''கரெக்ட். அவ பிடிக்கற ஆளெல்லாம் கல்யாணம் ஆன ஆம்பளைங்களைத்தான். அவளால பல குடும்பத்துல ரகளை. உன் புருஷனிடமிருந்து கூட போனஸ், பி.எஃப். லோன் எல்லாத்தையும் கறந்துட்டாளாமே...''

''தெரியாது.''

''ஆமாம். உனக்கெப்படித் தெரியும். நீதான் இங்கே இருக்கியே. உன் புருஷன் சோகமா தாடி வளர்த்துக்கிட்டு அலையறார். அவ காட்டற அலட்சியத்துல கொஞ்ச நாள் அதிர்ச்சியாக் கூட இருந்தார்.''

லாவண்யா சொன்னதை உண்மையாக்கும் விதமாய் மாலை நேரம் வந்தது.

அப்பாவும், என் கணவரும் வீட்டுக்குள் வந்தனர்.

அம்மா எப்போதும் போல மாப்பிள்ளையை மரியாதையுடன் வரவேற்றாள்.

நான் விரித்த புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பவில்லை.

''லதா..'' என்றார் அப்பா தயக்கமாய்.

''என்ன?'' என்று பார்வையாலேயே கேட்டேன்.

''அவர் வந்திருக்காரும்மா.''



''எவர்?'' என்றேன் வேண்டுமென்றே.

''இதோ பாரு லதா. இவ்வளவு அலட்சியம் ஒரு பெண்ணுக்குக் கூடாது. மாப்பிள்ளை தப்பை உணர்ந்து திருந்தி வந்திருக்கார். தவறு செய்யறது சகஜம்.''

''நான் அப்படிச் செய்திருந்தால் இதே போல சகஜமா எடுத்துப்பாரா அப்பா?''

என் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

''அதான் தப்பை உணர்ந்து திருந் திட்டாரே அம்மா..''

''தப்பை உணர்ந்து திருந்தலே அப்பா. அந்தச் சசிகலா இவரை கைவிட்டதுனாலே திரும்பி வந்துட்டார்...'' என்றேன் அழுத்த மாய்.

''எது எப்படியோ, அம்மா...''

''அப்பா, இன்னிக்குச் சசிகலா மாதிரி நாளைக்கு ஒரு மேகலா கிடைச்சால் இவர் மறுபடி போக மாட்டார்ன்னு என்னப்பா நிச்சயம்?''

''லதா...'' என்று அப்பா அதட்டினார்.

''ஏனப்பா கோபம் வருது. அப்போ தும் இவர் தவறு செய்யறது சகஜம்னு மறுபடியும் இவருக்காக நான் காத்திருக்க ணுமா?''

''என்னம்மா இப்படியெல்லாம் பேசற? விட்டுக் கொடுத்துப் போறதுதா னம்மா பெண்களோட லட்சணம்.''

''அதுக்கும் ஒரு அளவு இருக்குப்பா. பெண்களான நாங்கள் விட்டுக் கொடுத் துக்கிட்டே இருக்கணும். ஆண்களான நீங்க தவறு செய்துக்கிட்டே போகணுமா?''

''முடிவா நீ என்னம்மா சொல்றே?''

''எதை வேண்டுமானாலும் மன்னிக்க லாம். ஆனால் சபையறியக் கைப்பிடிச்சு, அக்னி சாட்சியாத் தாலி கட்டி, சத்தியப் பிரமாணம் எடுத்துக்கிட்டு, அப்புறம் மனைவிக்குத் துரோகம் பண்றாங்களே அந்த ஆண்களை மட்டும் எந்த மனைவி யுமே மன்னிக்க முடியாதுப்பா. நீங்களும் ஓர் ஆண் என்பதால் உங்களுக்கு என்னோட மனசுல பட்ட அவமானமும், பொங்கிய சீற்றமும் புரியலே. இவரோட துரோகத்தை நான் மன்னிக்கத் தயாராயில்லை.''

நிறுத்தி நிதானமாக வார்த்தைகளை உதிர்த்து விட்டு, அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டேன்.

13

நேற்றுவரை

எத்தனை கும்பலில் இருந்தாலும் மங்களா பளிச்செனத் தெரிவாள். அப்படியிருக்கையில் கல்யாணத்தில், தான் எப்படி இவளைக் கவனிக்கத் தவறினோம் என்று மீரா யோசித்துப் பார்த்தாள்.

''என்ன பேசாம வர்றீங்க?''

''உம்... ஒண்ணுமில்லே. கல்யாணத்துல உன்னைப் பார்த்ததா ஞாபகமே இல்லே... அதான்...''

மங்களா மெள்ளச் சிரித்தாள்.

இதுநாள் வரையில் ஏற்படாத ஒருவிதமான பொறாமையுணர்வு மீராவினுள்...

மங்களா மஞ்சள் கலந்த வெளுப்பு. நடக்கும் போது புறாப் பாதங்கள் பார்வையைச் சுண்டியிழுப்பதாய்... சராசரிக்குச் சற்று அதிகமான உயரமானதால் புடைவையின் நுனி கணுக்காலுக்கு மேலேயே நின்றது.

பிஞ்சு மூங்கில் போன்ற கால்கள்...

கொலுசு போட்டால் அழகாக இருக்கும்...

மீரா, தன்னையறியாமலேயே தன் புடைவையைத் தழைத்து விட்டுக் கொண்டாள்.

இயல்பிலேயே மீராவுக்கு நகைகளின் மீது அத்தனை ஆசை இல்லை; ஆனாலும் கொலுசு பிடிக்கும். நாலைந்து ஜோடி வைத்திருக்கிறாள்.

கல்யாணம் நிச்சயமானதும் கூட, புதுசாய் ஒரு கொலுசு வாங்கினாள்.

இன்னமும் ஞாபகமிருக்கிறது.

முகூர்த்தத்தின் போது, அவளது பாதத்தைத் தூக்கி, அம்மி மீது வைத்த கீர்த்தி, கொலுசு பளபளத்த அவளது காலை ஒரு கையால் 'கப்'பெனப் பிடித்தான். இன்னொரு கையால் மெட்டி அணிவித்தான்.

அதன் பிறகு சுவாமி மலையில் படியேறும் போது ஒருமுறை கேட்டான்.

''உனக்குக் கொலுசு பிடிக்குமா?''

''உம். உங்களுக்கு?''

''பிடிக்காது. கொலுசு, கண்ணாடி வளையல்... இது மாதிரி, சப்தம் போடற சமாச்சாரம் எதுவுமே பிடிக்காது. இந்த மாதிரி நகைங்களை மாட்டிட்டு, லேடீஸ் என்னத்துக்காக இவ்வளவு சிரமப்படறாங்கன்னு கூட நினைச்சுப்பேன். ஆனா, நீ போட்டுட்டு இருக்கற கொலுசு அழகா இருக்கு. அது கொலுசோட வேலைப்பாட்டினாலா இல்லே காலோட மகத்துவமான்னு தெரியல்லே...''

அவன் பேசி முடிக்கவில்லை. அவர்கள் பின்னாலேயே படியேறி வந்த சித்தப்பா, கிண்டலாய்க் கேட்டார்.

''என்ன, வர்ணனை பாதத்துலேயிருந்து ஆரம்பமாறதாக்கும்...''

''......''

''நடத்துடாப்பா. பொம்மனாட்டிகள் எல்லாருமே ஸ்தோத்திரப்ரியாக்கள்தான். ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன் கேட்டுக்கோ. 'நீ பரபரன்னு பம்பரம் மாதிரி சுத்திச் சுழண்டு காரியம் செய்யறது நன்னாயிருக்குன்னு சொல்லு. உன் முன்னாலே அப்புறம் உட்காரவே மாட்டா. 'உன் சிரிப்புல மயங்கறேன்'னு சொல்லு... அதோட எஃபக்ட் தனிதான். ஆனா - 'நீ கோபத்துல கூட எத்தனை அழகா இருக்கே தெரியுமா'ன்னு மட்டும் புகழ்ந்துடாதே! அப்புறம் எப்பவும் கடுப்ஸ்தான்...''

அப்பொழுதும் கீர்த்தி விட்டுக் கொடுக்காமல் கூறினான் :

''நீங்க உடனே அட்வைஸ்ஸை ஆரம்பிச்சுடுவீங்களே... மீராவோட கொலுசு அழகா இருந்தது சித்தப்பா. அதைத்தான் சொல்லிட்டிருந்தேன்...''

''ட்டேய்... கொலுசைப் பத்தி உனக்கென்னடா தெரியும்? உன் ஆயுசுலேயே இப்பத்தான் ஒரு இளசைக் கொலுசோட பார்க்கறே.. அதுக்குள்ளே பல்டி அடிச்சா எப்படிடா.. என்னைச் சொல்லு... இது வரைக்கும் இருபத்தி நாலு விதமான கொலுசைப் பார்த்திருக்கேன்...''

இவரின் இந்த வார்த்தையினால் தாக்கப்பட்டவளாய்ச் சித்தி திரும்பிப் பார்க்க - அவர் 'கடகட'வெனச் சிரித்தார்.

''பாரு.. உங்க சித்திக்கு இத்தனை வருஷமாகியும் சந்தேகம் பாரு... இவளைக் கல்யாணம் செஞ்சிட்டு இருபது வருஷமாறது. வருஷா வருஷம் கொலுசு காலைப் பிடிக்கறது; சின்னதாய்ப் போச்சுன்னு சொல்லிச் சொல்லி இதுவரைக்கும் பதினெட்டு ஜோடி புதுக் கொலுசு வாங்கித் தந்திருக்கேன். மீதி அரை டஜன் - இவ பெத்த புத்திரிக்கு.. ஆரம்ப நாளுலே நான் கூட உன்னை மாதிரி - வர்ணனையைப் பாதத்துலேயிருந்துதான் ஆரம்பிச்சேன். கண்ட பலன் வெள்ளிக் கடை எத்திராஜுலுவுக்கு வருஷம் தவறாம மொய்...''

மீரா, தலையைக் குலுக்கி எண்ணங்களை உதறப் பார்த்தாள்.

நந்தவனம்

மங்களா, அவளுடைய எண்ண ஓட்டம் புரியாமல் பேசினாள்:

''கல்யாணத்துக்கு வந்திருந்தேன். ஆனா, அப்பா அங்கே வந்து, அத்தனை அசிங்கமாச் சண்டை போடுவார்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. எனக்கு ரொம்பவும் அவமானமாப் போச்சு. அதான் நான், அதிகமா வெளில தலை காட்டவே இல்லே...''

''உங்கம்மாவைக் கூட நான் பார்க் கலே.. இங்கே, இவரோட பத்து நாள் தங்கி யிருந்தப்பக் கூட நாகு மாமாதான் எங்க கூடவே எல்லா இடத்துக்கும் வந்தார். உன்னையோ, உங்க அம்மாவையோ நான் பார்க்கவே இல்லே!''

இதைக் கேட்டதும் மங்களா - 'தடக்' கென நின்றாள்.

''உங்களுக்கு விஷயமே தெரியாதா?''

''என்னது...''

''எனக்கு அம்மா கிடையாது. என் னோட அஞ்சாவது வயசுல எங்கம்மா ஒரு தீபாவளிக்கு பட்சணம் செய்யறப்ப, புடை வையில நெருப்புப் பிடிச்சு செத்துப் போயிட்டா. அந்த விபத்து எதேச்சையா ஏற்பட்டதுதான்னு அப்பாவும், அவரைச் சேர்ந்தவங்களும் சொல்லுவாங்க. இதே - என் அம்மாவோட தம்பி - அதாவது என் னோட மாமா, சித்தி, எல்லாரும் எங்கப்பா தான் ஏதோ மனக் கசப்புல எங்கம்மாவைக் கொன்னுட்டதாச் சொல்லுவாங்க. சில பேர் எங்க அப்பாவோட குடும்பம் நடத்த முடியாம, அம்மா தற்கொலை செஞ் சிட்டதாக் கூடச் சொல்லுவாங்க...''

மங்களா, விரக்தியுடன் சிரித்தாள்.


''எது எப்படியோ. என்னைப் பொறுத்தவரைக்கும் அவர் நல்ல மனுஷர்தான். சண்டையின்னு போயிட்டா, தன் பக்கம் ஜெயிக்காம திரும்பி வர மாட்டார். தெருக்காரங்க கூட - இவர்கிட்ட பேச்சு வார்த்தை வச்சுக்கப் பயப்படு வாங்க...''

மீரா, வியப்புடன் அவளைப் பார்த் தாள்.

''இந்த விபத்து நேர்ந்தப்ப, உங்க அப்பாதான் முதல்லே விஷயம் கேள்விப் பட்டு, ஓடி வந்தவர். அவராலேதான் நான் இன்னிக்கு எழுந்து நடமாடறேன். ஏதோ இசைகேடாப் பேசுவாரே தவிர, நல்ல மனுஷர்...''

மங்களா, எங்கோ தொலை தூரத்தில் பார்வையைச் செலுத்தியபடி சொன்னாள்:

''நான் மட்டும் இப்ப என்ன சொன் னேன்? நல்ல மனுஷர்தான். ஆனா, தனக்கு ஒண்ணு கிடைக்கலையின்னா அதைப்



ஆர்.ராதா ரமணன்

பிறத்தியாரும் அனுபவிக்கக் கூடாதுன்னு நினைக்கிற குணம் ஜாஸ்தி. ஒரு பேச்சுக்குச் சொல்றேனே.. எனக்கு எங்கம்மா வழிச் சொத்தா கொஞ்சம் நிலம் இருக்கு. ஆனா, எல்லாமே இன்னும் பாகம் போடாம பெரிய மாமா வசம்தான் இருக்கு. அவ ரானா... என் கல்யாண சமயத்துலதான் நிலத்தைத் தருவேன்னு பிடிவாதமாச் சொல்றார். எங்கப்பாவுக்கு இது ஆத்திரம்...''

''......''

''ஒவ்வொரு வருஷமும் அறுவடை சமயத்துல ஏதாவது தகராறு நடக்கும். களத்து மேட்டுல காயப்போட்டிருக்கற அத்தனை நெல்லையும் மொத்தமாக் கொளுத்தி, சூரசம்ஹாரம் செஞ்சார். நிலத்துல - ஏதோ தாமிரத் தகடு மந்திரிச்சுப் புதைச்சிட்டு வந்தார். பொழுது விடிஞ்சு பொழுது போனா - தினமும் வீட்டுல காளி பூஜை, மலையாள மாந்திரீகம், முட்டையில மந்திரிச்சு வைக்கிறது, மந்திரவாதிக்கு ஆயிரக்கணக்குல பணம் கொடுக்கறது...''

இந்த இடத்தில் சற்று நிறுத்தி, பெருமூச்சு விட்டாள் மங்களா.

''இதெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை. எனக்கு மட்டுமில்லே. அத்தை, கீர்த்தி, யாருக்குமே இவரோட இந்தப் போக்கு பிடிக்காது. ஒருத்தரைப் பிடிச்சா அவரைத் தலைமேல தூக்கி வச்சுட்டுக் கொண்டாடுவார். பிடிக்கலையின்னா ஒட்டுமொத்தமா அவங்களை அடக்கம் பண்ணிட்டுத்தான் அடுத்த வாய்த் தண்ணி குடிப்பார். இது ரொம்பவும் கேவலமான புத்தி இல்லையோ?''

மீரா, திகைப்பிலிருந்து விடுபட முடியாதவளாய் அவளையே பார்த்தாள்.

மங்களாவோ, இவள் மனத்தில் அலை பாயும் நினைவைப் புரிந்து கொள்ளாமலேயே அப்பாவியாய்ச் சொல்லிக் கொண்டே போனாள்.

''இவர் இப்படி இருந்தா - இவர் வீட்டுல சம்பந்தம் பேச, யாருக்குத்தான் தைரியம் வரும், சொல்லுங்க. கூடப் பொறந்த அக்காவே, தம்பியைக் கண்டு பயப்படறா. கீர்த்தி, எங்கப்பா முகத்துக்கு நேரேயே சொல்லிட்டார். 'உம்ம உடம்புல பழிவாங்கற ரத்தம்தான் மாமா ஓடறது.. சாதாரணக் குழாய் ரிப்பேர்க்காரன் கிட்டக் கூட வெட்டுப் பழி, குத்துப் பழியின்னு வேட்டியை வரிஞ்சு கட்டிண்டு ஓடறீங்க... உம்ம பொண்ணும் பின்னாலே இதே மாதிரி இருக்க மாட்டானு என்ன நிச்சயம்? அட, அவளாவது அவ அம்மாவைக் கொண்டு சாதுவா இருப்பான்னே வச்சுப் போம். நாளைக்குப் பிறக்கப் போற எங்க குழந்தை - தாத்தாவைக் கொண்டு பொறந்துன்னா? நமக்கு இந்த ரிஸ்க் எல்லாம் வேண்டாம் மாமா, மங்களாவுக்கு வேற எடம் பாருங்கோ'ன்னு முகத்தில அடிச்சாப்பல சொல்லிட்டார்...''

''என்கிட்ட ரொம்பப் பிரியமா...''

மீராவின் குரல், அவளுக்கே கேட்கவில்லை.

''ஆமா. உங்களைப் பத்தி நிறையச் சொல்லுவார். அவருக்குக் கீர்த்தியைக் கண்டாத்தான் ஆகாதே தவிர, உங்களைப் பிடிக்கும். அத்தனை சின்ன வயசுல இப்படியொரு கஷ்டம் வந்திருக்கக் கூடாதுன்னு சொல்லுவார். நான் கூட, இந்த ஆக்ஸிடென்ட்லே கீர்த்தி போயிட்டதா நியூஸ் வந்தவுடனே அப்பாவோட நெஞ்சுலேயும், முகத்துலேயும் குத்தி அழுதேன். 'உங்க சாபம்தான் இப்படி ஆயிடுச்சு'ன்னு புலம்பினேன். அதுக்கு இவர் கொஞ்சம் கூட அசையலையே.. கல் மனசு.. இருங்கோ. இதான் வீடு...''

மங்களா, மீராவைத் திண்ணையில் உட்கார வைத்து விட்டுத் 'தடதட'வென உள்ளே ஓடினாள்.

அடுத்த ஓரிரு நிமிஷங்களில் முகமெல்லாம் சிரிப்பாய் நாகு வெளியே ஓடி வந்தார்.

''வாம்மா மீரா... வா, வா.. வர்றதா ஒரு லெட்டர் போட்டிருக்கக் கூடாதோ.. இப்படியா திடீர்னு... அம்மா, அப்பா எப்படியிருக்காப்பல.. எப்ப வந்தே?''

மீரா, கையிலிருந்த சிறு கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டே, அவரைப் பார்த்துச் சின்னதாய்ச் சிரித்தாள்.

அவரோ, ஒரு தந்தைக்கே உரிய பாசத்துடன், தரையில் அரை மண்டி போட்டு அமர்ந்து, அவளுடைய பாதங்களைப் பரிவாய் தொட்டுப் பார்த்தார்.

ஒருவர் : உங்க ஆபீசுக்கு வர்றவங்க சந்தோஷமா லஞ்சம் கொடுக்கறாங்க ளாமே, எப்படி?

நண்பர் : லஞ்சம் தர்றவங்களுக் கெல்லாம் ஒரு நம்பர் கொடுத்து மாசத்துக்கு ஒரு தடவை குலுக்கல் முறையில் பத்துப் பேருக்கு பம்பர் பரிசு கொடுக்கறோம், அதான்!

- எஸ். முகம்மது யூசுப்.



''புண் முழுக்க ஆறிடுச்சாம்மா?''

''வெளில ஆறிடுச்சு...''

அவர், மீராவின் பதிலில் பொதிந் திருந்த அர்த்தத்தைக் கவனியாமல் அவருக்கே உரிய படபடப்புடன் பேசினார்.

''வெளிக் காயம் ஆறினதே பெரிய விஷயமில்லையோ? உனக்கு மட்டும் கால் சரியாகி, நல்லபடியா நடக்க வந்தா மாரி யம்மனுக்குப் பூப்பாவாடை வாங்கிச் சாத்தறேன்னு வேண்டிட்டிருக்கேன் தெரி யுமோ...''

மீரா, மங்களாவைப் பார்த்துப் புன் னகை செய்தாள்; எனினும் கண்களில் நீர் ததும்பியது...

'என் கால் சரியாப் போனா பூப் பாவாடை வாங்கிச் சாத்தறதா வேண்டிட்ட நீங்க, என் புருஷன் கரியாப் போனா - அம்மனுக்கு என்ன வாங்கிச் சாத்தறதா வேண்டிட்டீங்க மாமா?'

கேட்க வேண்டும் போல நெஞ்சும், நாவும் பரபரத்ததை அவள், மிகச் சிரமப் பட்டு, தன்னை அடக்கிக் கொண்டாள்.

நாகு, மகளை விரட்டினார்.

''மசமசன்னு நிக்கறியே... தாகத்துக்கு ஜில்லுனு மோர் - இல்லையின்னா எலு மிச்சம்பழ ஜூஸ் பிழிஞ்சு கொண்டாயேன். எலுமிச்சம்பழம் கூட, சுவாமி அலமாரியில வச்சிருக்கேன் பாரு..''

மீரா 'விருட்'டென எழுந்து விட்டாள்.

''அதெல்லாம் வேண்டாம் மாமா. நான் கிளம்பிண்டே இருக்கேன். இங்கே ஒரு விஷயமா வந்தேன். மங்களா பிடிச்சு, வீட்டுக்கு இழுத்துட்டு வந்துட்டா...''

''உள்ளே வாயேன்...''

''இருக்கட்டும் மாமா. இன்னும் நாலு மாசம் இருக்கு...''

''அதுவும் சரிதான். நீ எங்கே தங்கி யிருக்கேன்னு சொல்லு. நான், அக்காவை யும் அழைச்சிட்டு வர்றேன். அவளும் உன்னைப் பார்க்கணும்னு சொல்லிட்டே இருக்கா.. பாவம்..''

மீரா, மௌனமாய்ப் படியிறங்கியபடி, தனக்குள் தான் தங்கியுள்ள விலாசத்தைச் சொல்லலாமா - வேண்டாமா என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்தாள்.

பிறகு என்ன நினைத்தாளோ, வலிய ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, நாகுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தவாறே சொன்னாள்.

''நான் இங்கேதான் மாமா, குமரன் வீட்டுலதான் தங்கியிருக்கேன்..''

நாகுவின் புருவம் ஒருமுறை ஏறி யிறங்கியது.

''எந்தக் குமரன்?''

''அதான் மாமா.. ஆக்ஸிடன்ட்லே கீர்த்தியோட கூட செத்துப் போனாங் களே... எக்ஸ். எம். எல். ஏ. தருமராஜன், டாக்டர் தெய்வநாயகி.. இவங்களோட பிள்ளை- புருஷன் - இப்பக் கூட எலக் ஷன்லே நிக்கறாரே.. அதே குமரன் வீட்டுலதான். நீங்க எப்ப வேணுமானாலும் அங்கே வந்து பார்க்கலாம் மாமா... நான் வரட்டுமா..''

மங்களா, அவளை ஒட்டினாற் போல கடைசிப்படி வரை வந்தாள். நாகு, கல்லாக மாறுமாறு சபிக்கப்பட்டவர் மாதிரி நின் றார்.

மீரா, தன் கைப் பையைத் திறந்து, புதுக் கருக்கு அழியாத வெள்ளிக் கொலுசை எடுத்து, மங்களாவின் கையில் திணித்தாள்.

''எதுக்கு மீரா?''

''பரவாயில்லே. எனக்கு வேண்டாம். நீ வச்சுக்க...''

அவளது பதிலுக்குக் கூடக் காத்தி ராமல், அருகில் வந்து நின்ற ஞான மூர்த்தியின் ஆட்டோவில் ஏறினாள்.

''எங்கேம்மா?''

''வீட்டுக்குப் போ ஞானம்...''

மீரா, நெஞ்சின் மீது கல்லை வைத்து அழுத்தினாற் போல உணர்ந்தாள்.

(தொடரும்)

முதல் காதல்

ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது, வீட்டிற்கு அருகிலேயே பள்ளிக்கூடம் வந்து விட்டது. மணியடித்து ரீங்காரம் முடிவதற் குள்ளாகப் போய் விடலாம். விடுமுறை யில் அவசரமாய்க் கட்டிய புதிய பள்ளிக் கட்டடம். சென்னையில் என் மாமா வீட்டில் கொட்டங்கள் முடிந்து இன் றைக்குத் திறக்கிறது. காலரில் குங்குமம் தொட்டுப் புதுச் சீருடை. நீலநிற அரை டிராயர். மஞ்சள் வண்ணத்தில் சட்டை. வாசனைப் புத்தகங்களுடன் ஒரு புது வருடம் துவங்கவிருக்கிறது. அம்மா, தலை யை அழுந்த வாரி விட்டாள். புடைவைத் தலைப்பில் டிபன் பாக்ஸ் துடைத்துப் பை யில் திணித்தாள். சமையலறைக் குக்கர் பெரியதாகச் சப்தமிட்டது. பாத்ரூம் தாழ்ப்பாள் விலக்கி, அப்பா வெளிப் பட்டார். குக்கர் சப்தம் அதிகரித்தது.

பொதுவில் பிரஷர் இருப்பதால்
விட்டு விட்டுச் சப்தம் போடுவதால்
பாத்திரம் 'மூடி'யாக இருப்பதால்
தலையில் கொஞ்சம் வெயிட்
உடையதால்

அனைத்துக்கும் மேலே பிரஸ்டீஜ் கொண்டதால் அப்பாவும் குக்கரும் ஒன்று. அவர் இருக்கும் போது வேறு யாரும் சப்தம் போட்டு விட முடியாது. காற்றில் மைசூர்ச் சந்தனம். அலமாரியில் ஸ்நோ பாட்டில். ஜன்னல் வெளிச்சத்தில் பவுடர் பறந்தது. அப்பா சைக்கிள் ஓட்டினார். நான் பின் பக்கம் கேரியரில் சலனமில்லாமல் உட் கார்ந்திருந்தேன்.

மூன்றாம் பிளாக் பள்ளிக் கூடத்தில் சென்ற வருடம் சேர்ந்து படித்த செட் அப்ப டியே இங்கு வந்து விட்டது. ஸ்டான்லி, மணி, ராஜன், சுதாமன், சம்பத் என்று நிறையப் பழைய நண்பர்கள் தென் பட்டார்கள். சுண்ணாம்பு அடித்து, பெயிண்ட் மணக்கிற புதிய வகுப்பறையில் இருந்தேன். விசாலமான அறை. இரண்டு மின் விசிறிகள். மைதானத்தைப் பார்த்த மாதிரி பெரிய ஜன்னல்கள். மேலே காந்தி படம். கீழே சாக்பீஸில் 'வாய்மையே வெல்லும்.'

அறைக்குள் மேலும் பார்வையைச் சுழல விட்டேன். என் உள்ளம் ஒரு துள்ளுத் துள்ளியது. உமாஸ்ரீயும் இந்த வகுப்பி லேயே சேர்ந்திருக்கிறாள். நான் அவளைப் பார்த்த போது, அவளும் என்னைத் திரும்பிப் பார்த்தாள். கண்கள் கலந்து மெல்ல விடுவித்துக் கொண்டன. பின் பக்கம் யாரோ முறைக்கிற மாதிரியிருந்தது. சட்டென்று திரும்பிப் பார்த்தேன். இரண்டு வரிசைகள் தள்ளியமர்ந்து துரை என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நேர்த்தியான உடையில் உயரத்தின் கம்பீரம் வெளிப்பட வைதேகி டீச்சர் எங்கள் வகுப்பறையில் நுழைந்ததும் நாங்கள் சந்தோஷத்தில் கூச்சலிட்டோம். சென்ற வருடம் மூன்றாம் பிளாக்கில் அவர் தான் எங்கள் நான்காம் வகுப்பு டீச்சர். இப்போது அவரும் மாற்றலாகி இங்கேயே வந்து விட்டார். பாடம் நடத்துகிற போது, நான் வைதேகி டீச்சரையே பார்த்துக் கொண்டிருப்பேன். எனக்கு அவரை ரொம்பவும் பிடிக்கும்.



ம. வே. சிவகுமார்

பள்ளியில் சேர்ந்து படிக்கிறோம் என்று பெயரேயொழிய நாங்கள் யாரும், பெண்கள் யாருடனும் பேசியதில்லை. பார்க்கிற போதெல்லாம் பரஸ்பரம் முறைக்கிறதே எங்கள் தகவல் பரிமாற்றமாய் இருந்தது. வகுப்பின் இடது பக்கம் பெண்களுக்குரியது. வலது பக்கம் பெஞ்சுகளில் நாங்கள். புதிய பையன்களின் பெயர்களை வைதேகி டீச்சர் கேட்டுக் கொண்டிருந்தார். அத்தனை முகங்களில் நான் உமாஸ்ரீயை மட்டும் பார்த்தேன். சாதாரண ஒரு நீலப் பாவாடை, மஞ்கள் வண்ணச் சட்டை, இரட்டைப் பின்னலில் ரிப்பன் கட்டி, காதுகளில் வளையங்கள் ஆட அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது.

மணியடித்தது. டீச்சர் வெளியே போனார். துரை என்னை நோக்கி ஓடி வந்து விரல்களை முஷ்டியாக்கி என் தாடையில் வலுவாக அடித்தான்.

துரை எப்போதும் இப்படித்தான். வார்த்தைகள் இல்லாமல், பார்க்கிற போதெல்லாம் அடிக்கடி அவனுடன் இது போல் நடக்கிறது. அவன் உமாஸ்ரீயின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் குடிசை போட்டு வசிக்கிற வேலைக்காரியின் மகன். அந்த வீட்டுக்கு எப்போதும் ஏவல்கள் செய்து வளர்கிறவன்.

உமாஸ்ரீ அவனுக்கு ஒரு இளவரசியைப்



போல! தினமும் பள்ளிக்கூட வாசல் வரைக்கும் அவளுடைய புத்தகப் பை, வாட்டர் பேக் மூட்டைகளை அவன்தான் சுமந்து வருவான். பதிலுக்கு நான்கு வார்த்தைகள் வருகிற வழியில் அவள் பேசுவாளாய் இருக்கும்.

''துரை!''

கேட்டருகில் ஒயிலாய் நின்று ஆள் காட்டி விரலை அவள் வளைப்பாள். மூட்டைகளை ஓடி வந்து அவன், அவளிடம் கொடுத்து விட்டு அவள் பார்வை படுகிற இடங்களில் நாள் முழுவதும் நிற்பான். அவனுடைய யூனிபார்ம் அழுக்காய் இருக்கும். அதிலே ஓரிரு பித்தான்கள் இராது. காய்ந்த தலை. இதற்குள் உழைப்பில் வலுத்த உடல். அவள் வீட்டில் அவன் தோட்ட வேலையும் செய்கிறான். காலில் செருப்புக் கூட கிடையாது. எனினும் அவன், அவளுக்குப் பாதுகாவலன். அவனது எல்லையில், தாடையில் அடிபடாமல் யாரும் அவளை நெருங்கி விட முடியாது.

சென்ற வருடம் அந்த நாள் அப்படியே நினைவிருக்கிறது. கரும்பலகையில் எழுத்துக்களை வைதேகி டீச்சர் நிரப்பி, அழிப்பதற்கு டஸ்ட்டர் தேடினார். ஓர் ஏழெட்டுப் பேர் புறப்பட்டுப் பக்கத்து வகுப்புக்கு ஓடினோம். டஸ்ட்டர் எடுத்துத் திரும்புகிற வழியில், அதே கண் மண் தெரியாத வேகத்தில் உமாஸ்ரீ என் மீது மோதிக் கொண்டாள். டஸ்ட்டர் கட்டை எகிறிப் பறந்தது. பொறி கலங்கிய நிலையில் நாங்கள் அப்படியே நின்றி ருந்தோம். அவள் என் கண்களை ஒரு முறை பார்த்தாள். நான் அப்போதிலிருந்து அவளைப் பதிலுக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

பள்ளியின் பிரார்த்தனைக் கூட்டங்களில் உமாஸ்ரீயும், இன்னும் இரண்டு பெண்களும் மைக்கருகில் நின்று பாடுவார்கள்.

''தாயின் மணிக் கொடி பாரீர்....''

அவளின் ஈர உதடுகளை நான் முதல் வரிசையில் நின்று பார்த்துக் கொண்டிருப்பேன். என் உணர்வுகளுக்குப் பெயர் இன்னதென்று எனக்குத் தெரியாது. ஆனால் அதுதான் எவ்வளவு இன்பமாய் இருக்கிறது? கள்ளமில்லாத என் உள்ளத்தில் கள்ளம் புகுந்தது. யாருக்கும் தெரியாமல் நான் உமாஸ்ரீயை நினைத்துக் கொண்டிருந்தேன்.

என் விஷமம் குறைந்ததென்ற கவலையில் அம்மா என்னை வைத்தியரிடம் அழைத்துப் போனாள். அத்தனை தொலைவு வந்ததற்கு அவரும் பல நிறங்களில் மருந்துகள் கொடுத்தார். சமயம் கிடைக்கிற போதெல்லாம் அவளைப் பார்க்க வேண்டும் என்று ஏன் இப்படித் தோன்றுகிறது? மருந்துகளைக் குடித்து விட்டு நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

வகுப்பில் வைதேகி டீச்சர் ஓர் அறிவிப்புச் செய்தார். நகரின் பாதுகாவல் படை அதிகாரி கேப்டன் கோபாலன், வரும் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து அதிகாலை ஐந்து மணிக்கு மாணவர்களுக்குப் பள்ளி மைதானத்தில் உடற் பயிற்சிகள் சொல்லித்தர இசைந்திருக்கிறார். விருப்பமுள்ள மாணவர்கள் தங்கள் பெற்றோர்களின் அனுமதி பெற்று, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மனம் சந்தோஷத்தில் இன்னும் ஒரு துள்ளல் துள்ளியது. கேப்டன் கோபாலன், உமாஸ்ரீயின் தந்தை. நிச்சயம் உமாஸ்ரீயும் அவருடன் வருவாள். உமாஸ்ரீயின் வீடு எங்கள் தெருவிலேயே நிறைய வீடுகள் தள்ளியிருந்தது. வாசலில் ஜீப் நிற்கும். கஞ்சி விரைத்த காக்கியில் கேப்டன் கோபாலன் ஏறிக் கொள்வார். ஆர்டர்லி சல்யூட் அடித்து வழியனுப்புவான்.

அப்பா கொஞ்ச நாட்கள் நகரின் நிர்வாக அலுவலகத்தில் இருந்தார். அப்போது நிதானமாய் பேண்ட், சட்டை அணிந்து ஆபீஸ் செல்வார். அப்புறம் அவரை சுரங்கப் பிரிவுக்கு மாற்றி விட்டார்கள். மாறி வரும் மூன்று ஷிப்டுகளில் அவர் வாழ்க்கை முறையே தாறுமாறாகி விட்டது. நூலேணியில் எத்தனையோ அடி ஆழம் இறங்கிச் செய்கிற வேலை. தலையில் பாதுகாப்புக்குத் தொப்பி. காலில் முழங்கால் வரை சேற்றுக்குள் ரப்பர் பூட்ஸ். மைன்ஸ் உடை, ஆபீஸ் உடை என்று முற்றிலும் மாறுபட்ட இரண்டு வேடங்களில் அப்பா. தினம் ஐந்து மணிக்கு விழிப்பதென்பது அவருக்கு ஒத்து வராது. எனினும் சமையலறையில் நான் பிடிவாதமாக நின்றதில் தயங்கிக் கொண்டே அம்மா கேட்டாள். அப்பா என்னைக் கூப்பிடச் சொன்னார். காதில் விழுகிற மறைவிலிருந்து நான் வெளிப்பட்டேன். விஷயத்தை என் வாயில் ஒரு முறை கேட்டார்.

''அவ்வளவு சீக்கிரம் முழிச்சிப்பியா?''

''உம்.''

அப்பா என்னைக் கண்களில் பார்த்தார். மனதின் உமாஸ்ரீயை எங்கே அவர் பார்த்து விடுவாரோ என்ற பயத்தில் அவசரமாய் நான் தலை கவிழ்த்துக் கொண்டேன்.

ஞாயிற்றுக் கிழமை காலை ஐந்து மணி. கதவுக்கு வெளியே மார்கழி காத்தி

ருந்தது.

''பத்திரமாப் போவியா?''

முதல் நாள் எடுத்து வைத்த பாலில் காப்பி கொடுத்து அம்மா கேட்டாள். ஒட்டக் கூத்தர் தெருவில் நான் ஓடிக் கொண்டிருந்தேன்.

காலையிருட்டில் பள்ளியின் பரந்த மைதானம். கேப்டன் கோபாலனைத் தவிர இரண்டே பேர்தான் வந்திருந்தார்கள். உமாஸ்ரீ. அவள் கூடவே இருக்கிற துரை. 'கடவுளே, என்னை ஏன் நீ துரையாகப் படைக்கவில்லை?'

''கொஞ்சம் நேரம் பார்க்கலாம்....'' காதோரத்தில் நரைத்த கேப்டன் கோபாலன் சொன்னார்.

நான் உமாஸ்ரீயைப் பார்த்தேன். அவள் அந்த நேரத்தில் மலர்கிற மலர்களைப் போல் இருந்தாள். எங்கே கேப்டன் கவனித்து விடுவாரோ என்று பயந்து கொண்டே இன்னும் ஒரு முறை பார்த்தேன். துரை என்னை நோக்கி நகர்ந்தான், முந்திக் கொண்டு இந்தத் தடவை நான் அவன் தாடையில் பலமாய் அடித்தேன்.

''டேய், டேய்... என்னது இது?''

கேப்டன் கோபாலன் பதற்றமாய் ஓடி வந்து இருவரையும் பிரித்து விட்டார். துரையின் நைந்த துணிகள் கிழிந்து விட்டன. என் மூக்கில் ஒரு கோடாய் இரத்தம் இறங்கியது. கேப்டன் கோபாலன் உமாஸ்ரீ, துரை மூவரும் புறப்பட்டு விட்டார்கள். கடைசி வரைக்கும் உடற் பயிற்சி கற்றுக் கொள்ள வேறு யாரும் வரவில்லை.

திரும்பி வரும் வழியில் பாலத்தருகில் அலுமினியப் பெயிண்ட் அடித்த மின்சாரப் பெட்டி. வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை. 'அபாயம்'. சிவப்பு நிறத்தில் மண்டை ஓடு எச்சரித்தது. பெட்டியைச் சுற்றி உட்காருகிற அகலத்தில் சிமெண்ட் பலகையிருந்தது. கொஞ்சம் போல் கிடைத்த உள்ளடங்கிய முந்திரி மரத்தின் நிழல். உமாஸ்ரீ, உமாஸ்ரீ என்று எவ்வளவோ நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தேன். யாரோ கூப்பிடுகிற மாதிரியிருந்தது. அது வைதேகி டீச்சர் வீட்டுக் கொல்லைப் புறம். டீச்சர் என்னைப் பார்த்து விட்டார். நான் பயத்தில் கருங்கல் குத்த ஓடத் தொடங்கினேன்.

அனைத்தையும் மறந்து, அடுத்த நாள் பள்ளி முடிந்தது. துணிப்பையை சொக்கப் பனை கொளுத்தி இருட்டில் கங்கு சுற்றுவது போல் உற்சாகமாய்த் தலைக்கு மேல் சுற்றிக் கொண்டே ஓடி வந்தேன். வாசலில் இருந்த செருப்பைக் கண்டதும் திகைத்து நின்றேன். வைதேகி டீச்சர் செருப்பு.

முதல் நாள் நான் போன பிறகு டீச்சர் மின்சாரப் பெட்டியருகில் வந்து பார்த்திருக்

கிறார். அதன் ஒரு பக்கத்தில் கூர்மையான கல்லில் அலுமினியப் பெயிண்ட் உரித்து என்னை அறியாமல் உமாஸ்ரீ பெயரைப் பல முறை எழுதியிருக்கிறேன். கூடவே துரையின் பெயரையும் எழுதிக் குண்டன், தடியன் போன்ற என் வயதுக் கெட்ட வார்த்தைகள். அப்புறம் என் பெயர். உமாஸ்ரீயின் பெயருக்கு பக்கத்தில். டீச்சருக்குத் தூக்கி வாரிப் போட்டிருக்கிறது.

எனினும், "அதிகம் கண்டிக்க வேண்டாம். விவரம் தெரியாமல் விளையாட்டாய்ச் செய்திருப்பான். கோபிக்க வேண்டாம். பக்குவமாய் எடுத்துச் சொன்னால் போதும்."

"ஒரு நிமிஷம்..." என்று அம்மா, டீச்சருக்குக் குங்குமம் எடுத்து வந்தாள். தோட்டத்தில் செம்பருத்திக் கிளை உடைத்துக் கொடுத்தாள். வெயிலுக்குக் குடை விரித்து, உயரத்தின் கம்பீரம் வெளிப்பட, நேர்த்தியாய் உடையணிந்த வைதேகி டீச்சர் சிரித்துக் கொண்டே புறப்பட்டுப் போனார்.

"முளைச்சு மூணு இலை விடல்லே. அதுக்குள்ள மானத்தை வாங்கப் பொறந்திருக்கு, சனியன்."

பித்தளை மூடி உருண்டு விழுந்தது. நான் தலை குனிந்து அப்படியே நின்றிருந்தேன்.

"ஏன்டா கடங்காரா இப்படியெல்லாம் பண்றே? வரட்டும். எனக்குத் தெரியாது. உங்கப்பா கிட்டே சொல்லி நாலு செருப்படி விழுந்தாத்தான் உனக்குப் புத்தி வரும்."

அம்மா கோபமாய் உள்ளே போனாள். இரவு ஷிப்ட் முடிந்து அப்பா வரும் போது நெடுநேரமாகி விட்டது. இருட்டில் காதுகளைத் திறந்து வைத்துத் தூங்குபவன் போல் படுத்திருந்தேன்.

அன்றைக்கோ, அப்புறமோ அம்மா விஷயத்தை அப்பாவிடம் சொல்லியிருக்கத் தான் வேண்டும். ஆய்ந்து, ஓய்ந்து வருகிற மைன்ஸ் வேலையில் என்னிடம் அவர் எதுவும் கேட்கவில்லை.

ஐந்தாம் வகுப்பு வேகமாய் ஓடி விட்டது. தீபாவளி, பொங்கல் என்று திரும்பிப் பார்த்தால் முழுப் பரீட்சை. பயத்தில் துடித்துப் படித்து முடிந்தது. இனி ரிசல்ட் வரும் வரை கவலையில்லை. லீவிற்கு எங்களைக் கூப்பிடச் சொல்லி சென்னையிலுள்ள மாமா பையனுக்குக் கடிதம் போட்டேன். பதிலுக்கு மாமியின் கைப்பட ஒரு கடிதம் வந்தது.

பெட்டி, படுக்கைகளுடன் நாங்கள் வாசலில் காத்திருந்தோம். அப்பா, டாக்ஸிக்குச் சொல்லி வரப் போயிருந்தார். அம்மா ஒன்று, இரண்டு என்று மூட்டைகளை எண்ணிக் கொண்டிருந்தாள். கேட்டைத் திறந்து அப்பா உள்ளே வந்தார். முகம் என்னவோ போல் இருந்தது.

"என்ன?" என்றாள் அம்மா.

"கோபாலன் போயிட்டார்..."

"யாரு?"

"கேப்டன் கோபாலன்."

"அய்யய்யோ...."

"புறப்படறச்சே சொல்ல வேண்டாம்னு பார்த்தேன்."

"என்னவாம்?"

"ஹார்ட் அட்டாக்..."

"அய்யோ பாவம். அப்போ குவார்டர்ஸைக் காலி பண்ணனுமே?"

"உம். ஒரு மாசம் டைம் கொடுப்பா. அவா அண்ணாவோ யாரோ வந்திருக்கார். அவரோட போயிடுவாளோ என்னமோ. நாம லீவ் முடிஞ்சு வர்றதுக்குள்ள காலி பண்ணிடுவான்னு தான் தோணறது."

அப்பா என்னைப் பார்த்தார். நான் தலையைக் குனிந்து கொண்டேன்.

கேட்டுக்கு வெளியே டாக்ஸி வந்து நின்றது. அப்பாவும், அம்மாவும் இரண்டு, மூன்று நடைகளில் லக்கேஜ் அடுக்கினார்கள். மெல்ல நடந்து மூட்டைகளிடையே நான் ஜன்னல் அருகில் உட்கார்ந்து கொண்டேன். அப்பா, பூட்டை ஒரு தரம் இழுத்துப் பார்த்தார். பக்கத்து வீட்டில் அவ்வப்போது பார்த்துக் கொள்ளச் சொன்னார். டாக்ஸி சப்தமில்லாமல் புறப்பட்டது.

அதே தெருவில் நிறைய வீடுகள் தள்ளி வாசலில் ஜீப் நிற்கிற வீடு. கும்பலாய் ஆட்கள் வெளியே நின்றார்கள். டாக்ஸி வேகம் குறைந்தது. கடைசி முறை பார்ப்பதற்கு நான் ஒவ்வொரு முகமாய் உமாஸ்ரீயைத் தேடினேன். வெளிக்கதவின் அருகில் நின்று, டாக்ஸி திரும்புகிற வரைக்கும் துரைதான் என்னை முறைத்துக் கொண்டிருந்தான்.

போலீஸ் அதிகாரி: இந்த வீட்டிலே "ஒரு குண்டு" இருக்கிறதா போன்லே சொன்னாங்களே?

- மல்லிகை மன்னன்.





வித்தியாசங்களை முயன்றிருக்கும் இயக்குனர் உண்மையிலேயே துணிச்சல்காரர்தான்.

துணிச்சல் நம்பர் 1 : கதாநாயகியே இல்லாமல் படமெடுத்திருப்பது.

துணிச்சல் நம்பர் 2 : ஒரே ஒரு கதாநாயகனுக்குப் பதிலாக நாலு இளைஞர்களைச் சுற்றித் திரைக்கதையை அமைத்திருப்பது.

துணிச்சல் நம்பர் 3 : எல்லாரையுமே அறிமுக நடிகர்களாகப் புகுத்தியிருப்பது.

துணிச்சல் நம்பர் 4 : இந்தக் கதையைத் திரைப்படமாக ஆக்கியிருப்பது!

கதையைப் பற்றிக் குறிப்பிடும் போது, நெறி கெட்டுப்போனவர்களின், தரங்கெட்டு அலைந்தவர்களின் வாழ்க்கையைத்தான் 'வாக்குமூலம்' ஆக்கியிருப்பதாகவும், அவர்கள் வாழ்க்கைக்கும் ஒரு நெறியைச் சொல்லியிருப்பதாகவும் கூறுகிறார் இயக்குனர்.

யார் அந்த நெறிகெட்டுப் போனவர்கள்?

நாலு கல்லூரி மாணவர்கள். அவர்களில் ஒருவனது வீட்டு வேலைக்காரியிடம் அந்த நால்வரும் முறை கேடாக நடந்து கொள்ள முயல, அவள் இறந்து போய் விடுகிறாள். உடலை என்ன செய்வது என்று புரியாமல் தவித்து, முடிவில் வீட்டுத் தோட்டத்தில் புதைத்து விடுகிறார்கள். அதன் பின், அவளுடைய மரணத்துக்குத் தாங்கள் காரணமாகிவிட்டதை எண்ணித் தவித்து, பிரமை பிடித்து நடமாடி, அவர்களில் ஒருவன் அப்ரூவராக மாறிக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்று பயந்து, அவன் ஓடும் ரயிலிலிருந்து கீழே விழுந்து உயிரை விடும் சூழ்நிலையை மற்ற மூவரும் உண்டுபண்ணி, அதைத் தொடர்ந்து இன்னும் இருவர் லாரி மோதி உயிரிழக்க, நாலாமவன் தூக்குப் போட்டுக் கொண்டுவிடுகிறான். காலி.... சப்ஜாடா காலி!

இயல்பான வசனங்கள். பொருத்தமான படப் பிடிப்புக் கோணங்கள். விறுவிறுப்பான அறிமுக உத்திகள். புது முகங்களின் கடுமையான உழைப்பு. எல்லாவற்றுக்கும் மேலாக மிதக்க வைக்கும் இசையமைப்பு. இவ்வளவு இருந்தும் அடிப்படை அம்சத்தில் கோட்டை விட்டிருப்பதால், இயக்குனர் சுபாஷுக்கு சபாஷ் சொல்ல முடியவில்லை.

– சி. ஆர். கே.

செந்தூர தேவி

அய்யா இராம-நாராயணன் அவர்களே! தயவு செய்து இந்த ஃபார்முலாவை விட்டு விடுங்கள்....

தெய்வத்தின் அருள் + மிருகங்களின் சாகசம் + பேபி ஷாமிலி = வெற்றி என்பது முதல் முறை புதுமையாக இருக்கலாம். அடுத்த முறை சுவாரஸ்யமாக இருக்கலாம். ஆனால் மூன்றாவது முறை?

இரட்டைக் குழந்தைகள் - பிரிந்து வாழும் அவர்களுடைய பெற்றோர் - தாயுடன் ஒன்றும் தந்தையுடன் ஒன்றுமாக வளரும் அவர்களின் சந்திப்பு - பெற்றோரை ஒன்று சேர்க்க அந்த வீட்டில் இவள், இந்த வீட்டில் அவள் - அவர்கள் முயற்சிக்கு முடிவில் வெற்றி என்பது, ஏற்கெனவே 'குழந்தையும் தெய்வமும்' திரைப் படத்திலும் பின்னர் அதனையே டீ.வி.யிலும் பார்த்துப் பார்த்து ரசித்து விட்டதால் இப்போது ஏற்படுவது அலுப்பு.



ரிமோட் கன்ட்ரோல் கம்ப்யூட்டரின் துணை கொண்டு இடி, மின்னல், புயலை ஏற்படுத்திப் பிசாசுகளை ஊர் முழுதும் பறந்து திரிய விடும் விஞ்ஞான சாதனை யாருடைய கண்டுபிடிப்பு?

துடைத்து விட்டவுடன் அவை ஆற்றல் பெற்று மின்னலைச் செலுத்தி அந்தக் கம்ப்யூட்டரை அழித்து விடும் சாதனை ஒரு கேள்விக்குறியென்றால் -

அம்மனின் திருவிழிகளுக்குரிய ஆற்றலைத் தடுத்து நிறுத்தும் சக்தியை அதுவரை வெறும் தூசுப் படலம் பெற்றிருந்தது என்பது அதை விடப் பெரிய கேள்விக்குறி!

இப்படி எண்ணற்ற கேள்விக்குறிகள், இந்தக் கம்ப்யூட்டர் யுக - புராண காலக்கலவைப் படத்தில் பரவலாக எழுந்தாலும் மன நிறைவு அளிக்கும் அம்சம் - ஷாமிலியின் நடிப்பு. அவள் சிரிப்பும் துடிப்பும் நெஞ்சைச் கொள்ளை கொள்ளுகின்றன.

அடுத்தது, வளர்ந்து வரும் விவேக். இதில் கதாநாயக அந்தஸ்து பெறுகிறார். சிரிப்புக்குப் பஞ்சமில்லை. நந்தனாரை நினைவூட்டும் 'என்னப்பனல்லவா, என் தாயுமல்லவா' பாடல் காட்சி இதற்குகொரு சாம்பிள்.

யானையும், குதிரையும், நாயும், குரங்கும், கிளிகளும் பாராட்டை அள்ளிக் கொண்டு போவது நிஜம் என்றாலும், அவை ஒரு கூட்டத்தையே எதிர்த்துச் சண்டை போட்டு வெற்றி பெறுவதாகக் காட்டியிருப்பதை என்ன சொல்ல?

செந்தூர தேவி! ஏன் இப்படி சினிமா ரசிகர்களைச் சோதிக்கிறாய்?

– சி. ஆர். கே.

நேற்றுவரை
நந்தவனம்

14

அனுராதா ரமணன்

ராஜேஸ்வரி அவள் வந்ததை எதிர்பார்க்கவில்லை. உட்புறமுள்ள கூடத்தில் அமர்ந்து, வீடியோவில் குமரனின் திருமண வைபவத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மீரா வேகமாய் உள்ளே வந்து, தனக்கென ஒதுக்கப்பட்ட அறையில் போடப்பட்டிருந்த பெரிய கட்டிலில் வந்து விழுந்தாள்.

காலையில், தருமராஜனின் லேட்டஸ்ட் சின்ன வீடு என்று ராஜேஸ்வரியால் வர்ணிக்கப்பட்ட நிர்மலாவைப் பார்க்கப் போன மீரா, எதிர்பாராத விதமாய் நாகு மாமாவையும் அவரது மகள் மங்களாவையும் சந்தித்த பின், வெறுத்துப் போனவளாய் வீடு திரும்பி விட்டாள்.

''என்ன மீரா... என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லேம்மா... தலைவலிக்குது...''

''சித்த முந்தி நல்லாத்தானே கிளம்பினே? அதுக்குள்ளே... இதென்னடிம்மா அதிசயமா இருக்கு? டாக்டருக்கு போன் செய்யட்டுமா?''

''சேச்சே.. அதெல்லாம் வேண்டாம். கொஞ்ச நேரம் படுத்திருந்தாச் சரியாப் போயிடும்...''



ராஜேஸ்வரி அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நகர்ந்தாள். வாசலில் நின்று கொண்டிருந்த ஞானப் பிரகாசத்திடம் என்னவோ பேசினாள்.

என்ன நடந்தது என்று கேட்டிருப்பாள் போல இருக்கிறது. வீடியோவின் நாதசுர ஒலியில், மற்ற சப்தங்கள் அனைத்துமே மழுங்கிப் போய் விட்டன.

மீரா, இலக்கில்லாமல் கூடத்தில் ஓடும் வீடியோ படத்தைப் பார்த்தபடி படுத்திருந்தாள்.

குமரன், இதோ... இப்போது பார்க்கும் சிடுசிடுப்பான குமரனில்லை அதில். கல்யாணக் களையில் கறுப்பு முகம் அலாதி அழகாய்... அடிக்கடி சிரித்தான். கையில் கட்டியிருந்த கங்கணக் கயிற்றை நிமிஷத்துக்கு ஒருமுறை தளர்த்தி விட்டுக் கொண்டான். நலங்கு நிகழ்ச்சியில் அனேகமாய் மனைவிக்கே விட்டுக் கொடுத்தான். குடத்துக்குள் காசு போட்டுக் கணவனும் மனைவியுமாய் ஆளுக்கொரு சையை உபயோகித்துத் தேடும் போது, மனைவியைக் கிள்ளினானோ என்னவோ... அவள் முகத்தில் சின்னதாய் இமைப் பொழுதுக்கு வலி... அதற்கே அவன் பதறிப் போனது, முகத்தில் பளிச்செனத் தெரிந்தது.

நடு நடுவே முழ ஜரிகை போட்ட பட்டுப் புடைவையும், ஏகப்பட்ட நகைகளுமாய் ராஜேஸ்வரி அம்மாள். முகத்தில் மட்டும் இருட்டு... நிமிஷத்துக்கொரு தரம் கணவனைத் தேடி அவளது கண்கள் பரிதாபமாய் அலைந்தன.

தருமராஜனைத் தேடி வந்து பல பிரமுகர்கள் பேச, அவரோ ஓரிடத்தில் நிற்காமல், ஜரிகை அங்கவஸ்திரம் தரையில் புரள, இங்குமங்குமாய் அலைபாய்ந்து கொண்டிருந்தார்.

மாலை வரவேற்பு நிகழ்ச்சி படமாக்கப்பட்ட போது, சின்னதாய், மெழுகு பொம்மை போல ஒரு பெண் மேடையில் நடனமாடினாள். அடிக்கடி குமரனையும், தருமராஜனையும் பெரிய கண்களால்

அவள் சுண்டி இழுக்க முயற்சி செய்தது வெளிப்படையாகவே தெரிந்தது.

குமரனுக்கு இவளைப் பார்க்கவே நேர மில்லை போல, மாலையும் கழுத்துமாய்ப் பக்கத்தில் அமர்ந்திருந்த மனைவியுடன் சதா காலமும் கிசுகிசுவெனப் பேசிக் கொண்டிருந்தான்.

கூர்ந்து கவனித்ததில், குமரனுக்கு இருந்த உற்சாகத்தில், சரி பாதி கூட தெய்வ நாயகியின் முகத்தில் இல்லாதது புலப் பட்டது மீராவுக்கு. அது மட்டுமில்லை; இவன் பத்து வார்த்தை பேசினால், அவள் சின்னதாய் ஒரு தடவை உதட்டை அசைத் தாள்.

தரு'மராஜன், திடுதிடுவென ஒரு பெரிய ரோஜாப் பூமாலையைக் கொண்டு வந்து, நடனமாடிய பெண்ணின் கழுத்தில் போட் டது மட்டுமின்றிச் செல்லமாய் அவள் கன்னத்தில் தட்டியும் கொடுக்க -

அது நேரம் வரையில் வேறு வேலை யில் கவனமாய் இருந்த ராஜேஸ்வரி, வேக மாய் வந்து 'பொக்'கென டி.வி.யின் விசை யைத் தட்டி விட்டாள்.

''சனியன் பிடிச்சவ.. சாகசக்காரி.. இவ ளாலேதான் நான் ரொம்பவும் அவதிப் பட்டேன் மீரா. இப்பப் பார்த்தியே... இதுக்கு அடுத்த ஸீன் என்ன தெரியுமா.. வெத்தலை பாக்குத் தட்டுல பணத்தோட நான் பட்டுப் புடைவை வச்சுத் தரல்லை யின்னு இந்தப் பாவி மனுஷன் அத்தனை பேருக்கு மத்தியில என்னைக் கை நீட்டி அடிச்சதுதான்...''

''.....''

''குமரன் அப்பா புத்தி எனக்குத் தெரியாததில்லை. உரலுக்குப் புடைவை சுத்தி வச்சிருந்தாக் கூட, ஒரு தடவைக்கு நாலு தடவை திரும்பிப் பார்ப்பாரு.. தெரிஞ்சும் தெரியாமலுமா எத்தனையோ தொடுப்பு. ஆனா, எவ விவகாரத்துலேயும் நான் அடி வாங்கினதில்லே தாயி.. இவளாலே அன்னிக்கு நான் அவமானப் பட்டேன். அடுத்தாப்பல என் மருமக அவ மானப்பட்டா...''

மீரா இத்தனையையும் கேட்டபடி, கண்மூடிப் படுத்திருந்தாள்.

மனசுக்குள் இன்னமும் நாகு மாமா வும், மங்களாவுமே நின்றிருந்தனர்.

'எங்க அப்பா, சண்டையின்னு வந்தா, தன் பக்கம் ஜெயிக்காம விட மாட்டார்...'

ராஜேஸ்வரி, மீராவையே ஒருகணம்



பார்த்தாள்.

''என்ன, தூக்கமா?''

''உம்...''

''நல்லாத்தான் காலை நீட்டிப் படுத்துத் தூங்கேன். ஏன் இப்படி கோழிக் குஞ்சு மாதிரி முடங்கறே... நான் கதவை வெறுமே சாத்திட்டுப் போறேன்... இந்தப் பய இளவரசு வந்தா, உன்னை ஒரு நிமிஷம் கூடத் தூங்க விட மாட்டான்.''

ராஜேஸ்வரி அறைக் கதவை மெல்லச் சாத்தி விட்டுப் போனாள்.

மாலை நாலு மணி சுமாருக்குக் கையில் காப்பியுடன், மீராவைத் தேடி வந்தவள், படுக்கை காலியாக இருப்பது கண்டு அலட்டிக் கொள்ளவில்லை.

'எங்கே போயிருக்கப் போறா... இங்கே தான் எங்கேயாவது இளவரசுவோட தோட்டதைச் சுத்திட்டிருப்பா...'

ராஜேஸ்வரி மாடியையும், தோட்டத்தையும் ஒருமுறை வலம் வந்ததுதான் மிச்சம். வாசலில் ஆட்டோவுக்குள் முடங்கிக் கிடந்த ஞானம், ராஜேஸ்வரியின் முதல் அழைப்பிலேயே துள்ளி எழுந்தான்.

''ஞானம்...''

''அம்மா...''

''இந்தப் பொண்ணு உன்கிட்ட ஏதாச்சும் சொல்லிட்டுப் போச்சா?''

''இல்லையேம்மா...''

''என்னடா இப்படிச் சொல்றே? தூங்கப் போறேன்னு போய்ப் படுத்தவ, எங்கே போனான்னு தெரியலையே. தஞ்சாவூர்லே கிழக்கு மேற்கு கூடத் தெரியாதேடா அவளுக்கு...'',

''இங்கேதான் எங்கியாச்சும் காலாற நடந்து போயிருக்கும். வந்துடும்மா. பட்டணத்துப் பொண்ணு. எங்கே போனாலும் திரும்பி வர, வழி விசாரிச்சுக்கும்...''

என்னதான் ஞானம் சமாதானமாய்ச் சொன்னாலும் கூட, ராஜேஸ்வரி கவலை படர்ந்த முகத்துடன் வாசலுக்கும் உள்ளுக்குமாய் அலைந்து கொண்டிருந்தாள்.

மீராவைக் காணோம் என்பதை விடவும், குமரன் வந்தால் என்ன சொல்வது என்பதே அவளின் பதற்றத்துக்குக் காரணம்.

''இந்தப் பொண்ணு எங்கே போய்த் தொலைஞ்சாளோ தெரியலையே குமரு... காலையில பத்தரை மணிக்கு நம்ம ஞானத்தோட ஆட்டோவுல கிளம்பிப் போனா. திருப்பி பன்னெண்டு மணி சுமாருக்கெல்லாம் வீட்டுக்கு வந்துட்டா. தலைவலியின்னு படுத்தா. சரிதான் தூங்கட்டும்னு... சாயந்திரம் டீயோட போய்ப் பார்த்தா ஆளைக் காணோம்... ஞானத்தோட வண்டியிலேயும் போகலை...''

ராஜேஸ்வரி பயந்தபடி இழுத்தாள்.

ஏற்கெனவே குமரனுக்கு இந்தப் பெண்ணை வீட்டோடு தங்க வைத்திருப்பது பிடிக்கவில்லை.

இப்போது காணோம் என்றால்...

அவள் கலவரத்துடன் மகனைப் பார்க்க, அவனோ, கழற்றிய வேகத்தில் சட்டையை மாட்டிக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் தாவி ஏறினான்.

மீராவிடம் எத்தனையோ கடுமையான வார்த்தைகளை அவன் உபயோகித்திருந்தாலும், உள்ளூர அவளிடம் பரிவும், மதிப்பும் இருந்தது.

முதலில் அவள் எடுத்தெறிந்து பேசிய போது, 'படிச்ச திமிர்... புத்தியக் காமிக்கறா...' - இப்படி அவன் நினைத்தது நிஜம்.

பின்னால் இப்படி நினைத்ததற்காக அவன் மனத்துக்குள் வெட்கப்பட்டான். வேதனைப்பட்டான்.

மீரா - இளவரசுவைத் தூக்கிச் சுமப்பது மட்டுமில்லை...

ஒருநாள் இரவு, ராஜேஸ்வரியுடன் தூங்கப் போன குழந்தை, அரைத் தூக்கத்தில் மீராவை எழுப்பி இருக்கிறான்.

''என்னடா?''

''ஆச்சா...''

அவன் தனது பிஞ்சு விரல்களை உயர்த்திக் காட்டியிருக்கிறான்.

மீரா, அறையை ஒட்டியிருந்த பாத்ரூமிற்கு சிறுவனைத் தூக்கிச் செல்ல, அவனோ விடாப்பிடியாய் கையைக் காலை உதைத்துக் கொண்டு பிடிவாதம் பிடிக்க...

''இங்க வேணா அங்க... டாடி ரூம்லே...''

சிறுவனுக்கு ஆரம்பத்திலிருந்தே மேல் நாட்டுப் பாணி வளர்ப்பு...

''அப்பா ரூம் சாத்தியிருக்குமேடா...''

''அப்ப வேணா...''

சிறுவன் அவளது பிடியிலிருந்து நழுவி, படுக்கையில் குப்புற அடித்துப் படுத்தான்.

''முளைச்சு மூணு இலை விடலை. என்ன பிடிவாதம்டா. அப்பனைப் போல...''

அவள், குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மளமளவெனக் கீழே இறங்கி வந்து, குமரனின் அறைக் கதவைத் தட்டினாள்.

''என்ன?''

குமரன் கதவைத் திறந்ததும் நிலைமையை உணர்ந்து பிள்ளையை வாங்க இரு கைகளையும் நீட்டினான்.

''வேணா ஆன்ட்டிதான்...''

மீரா, படபடவெனப் பொரிந்தாள்.

''தள்ளுங்க. குழந்தைக்கு அவசரம்...''

''உட்கார வையுங்க. நான் வந்து வாஷ் பண்ணறேன்..''

''ஏன், நான் அலம்பி விட்டா மாட்டேன்னு சொல்லிடுவானோ... அட ஏன் சார், குழந்தை மனசுலயும் பேதத்தைத் திணிக்கப் பார்க்கறீங்க....''

அவள், சிறுவனுடன் உள்ளே போனதும், மறுபடி டர்க்கி டவலில் குழந்தையை ஒரு ரோஜாச் செண்டைச் சுற்றுவது போலச் சுற்றிக் கொண்டு வந்ததும்...

குமரனுள் எங்கோ ஒரு சின்ன இளக்கம்...

தெய்வநாயகிக்குப் பிறகு, இளவரசு ஒட்டிக் கொண்டிருப்பது மீராவிடம்தான்.

இதை நினைக்கும் போது, உள்ளுக்குள் ஒருவித பயமும் உண்டாகும்.

இந்த மீரா, தன் காரியம் முடிந்து கிளம்பி விட்டால் குழந்தை இன்னும் ஏங்கிப் போகாதோ...

இப்பொழுது அந்த பயத்தை மீறி - மீராவைக் காணோம் என்கிற நினைப்பு, நெஞ்சை உறைய வைத்தது.

தேர்தல் சமயமாதலால் ஊர் நிலைமை சரியில்லை.

கண்டிப்பாய்க் குமரன் வென்று விடுவான் என்கிற வயிற்றெரிச்சலில் எதிர்க் கட்சியினர் வாய்க்கு வந்தபடி மேடையில் முழங்கிக் கொண்டிருந்தனர்.

''தாய்க் குலத்தை மதிக்கிறாரே... எதிர்க் கட்சித் தலைவர்... இப்ப என்னா செஞ்சிருக்காரு... ஒரு வாரமா வீட்டோட ஒரு பொண்ணைக் கொண்டு வந்து சிறை வச்சிருக்காரு. எதுக்குக் கொண்டு வந்தாரு? எப்படிக் கொண்டு வந்தாரு? தானா வந்ததா... இவரு செட்டப் பண்ணினதா?''

ஒவ்வொரு கேள்விக்கும் மேஜையில் ஓங்கி ஒரு குத்து. கூடியிருந்த கூட்டம் கெக் கெக் என்று சிரித்தது...

இப்போதிருக்கிற நிலைமையில் மீராவை - யார், என்ன என்று கூட விசாரிக்காமல் கொன்று தெருவில் வீசி - கொலையைச் செய்தது குமரன்தான் என்று கூசாமல் எதிர்க்கட்சியினர் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தச் சமயத்தில் இவள் எங்கே போனாள்?

குமரனின் மோட்டார் சைக்கிள் கூட, தன் எஜமானனின் நிலை உணர்ந்து அம்பாய்ப் பாய்ந்தது.

(தொடரும்)



''தாத்தா, ஆசீர்வாதம் பண்ணுங்க! எனக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ் சேஞ்சிலிருந்து அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் வந்திருக்கு!''

''மண்டு! சரியாப் பாருடா; கடிதாசு என் பேருக்கு வந்திருக்கு!''

- வி. சுந்தரேசன்.



''சிஷ்யா நல்ல கண் டாக்டர் யாருன்னு விசாரி... என் கண்ணைப் பரிசோதனை செய்யணும்...''

''ஏன் குருவே? என்ன கோளாறு?''

''ஞானதிருஷ்டியில் தெரியும் காட்சியெல்லாம் மங்கலாத் தெரியுது. அதான்...''

- மோஸ்ஜே.

''காலம் ரொம்பத்தான் கெட்டுப் போச்சு.''

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க?''

''காயலாங்கடைக்குப் போக வேண்டிய என்னோட சைக்கிளையே எவனோ திருடிக்கிட்டுப் போயிட் டான்னாப் பாருங்களேன்!''

- சீர்காழி. வி. ரேவதி.



எக்ஸிக்யூடிவ் நாற்காலி

வெளியே புறப்பட்ட ஜனார்த்தனத்தை ஏற இறங்கப் பார்த்தாள் வனஜா.

''...என்னங்க இது தொளதொளன்னு க்ரீஸே இல்லாமே பாண்ட்.... கசங்கின சட்டை...! பாக்கறவங்க மட்டமா நெனச்சுரப் போறாங்க... நல்லதாப் போட்டுக்கிட்டுப் போங்க...''

அவளுக்குப் பதில் சொல்லும் முன், ஆக்ரோஷத்துடன் குறுக்கே பாய்ந்தாள் மகள் தேவகி. ப்ளஸ் டூவில் நுழைந்திருக்கிறாள். சல்வார் - கமீஸில் துள்ளுகிறாள். பாவாடை தாவணியையெல்லாம் இனி மியூசியத்தில்தான் பார்க்க முடியும் போலிருக்கிறது.

''ஒங்க பேண்டும் சட்டையும் சகிக்கலைப்பா... நல்லதாப் போட்டுக்கிட்டு வெளியே போறதானாப் போங்க. இல்லேன்னாப் போக வேண்டாம். ஆமா... அன்னிக்கு ஒருநா, சூப்பர் மார்க்கட்டுல என் ஃப்ரெண்ட் உங்களைப் பார்த்திருக்கா. மறுநா ஸ்கூல்லே என் ஃப்ரண்ட்ஸ் முன்னாடி, 'என்னடி இவளே, உங்கப்பா இப்படி வர்றாரு..? பெரிய எக்ஸிக்யூடிவ்ன்னே...? சரியாவே டிரஸ் பண்ணிக்காமே வர்றாரு?' அப்படின்னு கேட்டுட்டா... எனக்கு ஷேமாப் போயிடுச்சு...''

''கரெக்ட்க்கா...! என் ஃப்ரண்ட்ஸும் அப்படித்தான் சொன்னாங்க...''

குற்றம்சாட்டும் பார்வையுடன் இரண்டாம் பிள்ளை சுகுமார், அக்காவுக்கு ஆதரவளித்தான்.

''...சு ம் ம ா காஷுவலாத்தானே வெளிலே போறோம்னு கௌம்பினேன். இதுக்கெதுக்கு நல்ல டிரஸ்ஸுன்னு...''.

அவர் முடிக்கும் முன் மூன்று பேரும் ஏக காலத்தில் ''உங்களுக்காக இல்லாட்டாலும் உங்க பொஸிஷனுக்காகவா வது பண்ணித்தான் ஆகணும்'' என்று உரத்த குரலில் எதிர்ப்புத் தெரிவிக்க, வேறு வழியின்றி உள்ளே போனார் ஜனார்த்தனம்.

''டிரஸ் பண்ணிக்கிற போது, அப்படியே ஷேவ் பண்ணிக்கிட்டு, சோப் போட்டு நல்லா மொகத்தை வாஷ் பண்ணிட்டு வாங்க. அரும்பரும்பாத் தாடி, மூஞ்சி டல்லடிக்குது...''

மகள் கூறியது காதில் விழுந்தது. இன்றில்லை. இதற்கென்றில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் இப்படித்தான்.

அன்றொரு நாள் பக்கத்துத் தெரு வரை சென்று வரலாம் என்று கிளம்பியவர், அவசரத்தில் செருப்புப் போட்டுக் கொள்ளவில்லை. போட்டுக் கொள்ளவில்லையென்றால், போட்டுக் கொள்ள வேண்டாம் என்றில்லை. தேடிப் பார்த்த போது, உடனடியாகக் கிடைக்கவில்லை. சரி, அடுத்த தெருதானே என்று கிளம்பி விட்டார்.

அன்றைக்கென்று சத்ருவாய் அவரிடம் வேலை பார்ப்பவன் எதிரே வந்திருக்கிறான். செருப்பில்லாமல் வெற்றுக் கால்களுடன் அவர் நடந்து போவதைப் பார்த்திருக்கிறான் போலிருக்கிறது. மறுநாள் அலுவலகத்தில் ஒரே விசாரணைமயம்!

''சார்... நேத்திக்குச் சாயங்காலம் செருப்புக் கூட இல்லாமே அவசர அவசரமா எங்கேயோ போனீங்களாமே? எனிதிங் சீரியஸ்?''

அதற்கு விளக்கமளித்து, விதவிதமாய்ச் சால்ஜாப்புச் சொல்லி... ஏ, அப்பா! இந்த அவஸ்தைக்குச் சற்று நேரம் நிதானமாய்த் தேடிப் பார்த்துச் செருப்பை அணிந்து கொண்டு - நல்ல செருப்பாய்ப் போட்டுக் கொள்ள வேண்டும். பழஞ் செருப்பாய் இருந்தால் அதற்கும் ஏதாவது விமர்சனம் வந்து சேரும் - போகாதது மகத்தான தவறு என்று மனத்திற்குள் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

தளர்ச்சியுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார். வெளியே செல்லும் உத்தேசம் மாறிப் போயிற்று.

மனம் ஆயாசமாயிருந்தது.

நினைத்தபடி ஒரு சட்டையை, மனத்துக்குப் பிடித்த நிறத்தில் வாங்கக் கூட

ஜெயரதன்

யோசனையாய் இருக்கிறது.

ஒருமுறை சட்டை வாங்கக் கடைக்குப் போன போது, பளிச்சென்று ஊதா நிறத்தில் கருப்புக் கட்டம் போட்ட சட்டையை எடுத்தார் ஜனார்த்தனம். பார்க்கவே பரவசமாய் இருந்தது. 'பளிச் பளிச்'சென்று கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள் என்றால் கொள்ளை ஆசை அவருக்கு.

''...யாருக்கு சார்?'' என்றான் கடைக்காரன்.

''எனக்குத்தான்... ஏன்? அளவு சரியாத்தானே எடுத்தே?''

விநோதமாய்ப் பார்த்தான். ''இதெல்லாம் பசங்க போட்டுக்கிடறது சார்.. உங்க மாதிரி எக்ஸிக்யூடிவ்ங்களுக்குன்னே ஸ்பெஷலா ஷர்ட்ஸ் இருக்கு சார்...'' என்று வேறொரு பெட்டியைத் திறந்து நிறையச் சட்டைகளை எடுத்துப் போட்டான்.

எல்லாம் ஒரே மாதிரியாய் வெளிர் நிறம் அல்லது வெள்ளையை அடிப்படை யாகக் கொண்டவை. பட்டும் படாமலும் தயக்கத்துடன் தெரிந்த கோடுகள். கட்டங்கள். அல்லது லென்ஸ் வைத்துப் பார்த்தால் தெரிகிற பொடிப் பொடிப் புள்ளிகள்.

பார்க்கவே அலுப்பாயிருந்தது.

மனத்துக்குப் பிடிக்காமல், ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தது நினைவில் எழுந்தது. மனைவியும் மகளும் பாராட்டியதும் ஞாபகம் வந்தது.

சரி. டிரஸ் விஷயம்தான் இப்படியென்றால், வாய் விட்டுச் சிரித்து, மனம் விட்டுத் துக்கித்து உணர்வுகளையாவது இஷ்டம் போல் காட்டிக் கொள்ள முடிகிறதா? அதற்கும்தான் எவ்வளவு கட்டுப்பாடு?

அன்றொரு நாள் அலுவலகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி நினைவில் நெருடிற்று.

அலுவலக இலக்கியச் சங்கத்தின் விழா. அலுவலக மானேஜர் என்ற முறையில் இவர்தான் தலைமை வகித்தார். மேடையில் இவரும் பேச்சாளரும் அமர்ந்திருந்தனர். பேச்சாளர் மிகத் திறமையாகப் பேசுபவர் என்பதால், ஹாலில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பேச்சின் நடுவில், அருமையான நகைச்சுவை ஒன்றினை அவர் கூற, அது கேட்டு இவர் உணர்ச்சி வயப்பட்டுப் பெரிதாய்க் கைதட்டி, வாய் விட்டு உடல் குலுங்கிச் சிரித்து விட, எதிரில் அமர்ந்திருந்தவர்கள், ஒருகணம் தாம் சிரிப்பதை விட்டு, இவரைக் கவனிக்கலாயினர்.

அதை உணர்ந்ததும் இவர் சிரிப்பு



சட்டென்று எங்கோ போயிற்று. மனம் பேச்சில் லயிக்கவில்லை. தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சன்னமாய்ப் பார்ப்பதிலேயே பொழுது போயிற்று. பேச்சின் சுவையில் மனம் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தப் பெரிதும் கஷ்டப்பட்டார். மெலிதாய்ச் சிரித்து விட்டுத் தம்மை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்ப்பதிலேயே பொழுது போயிற்று. அசௌகர்யங்கள் மனத்தை உறுத்த வீடு வந்து சேர்ந்தார்.

இதென்ன அவஸ்தை, இயல்பாய் இயற்கையாய் இருக்க முடியாமல்?

'என்ன ஆச்சு?' என்ற வினா நாக்கு நுனியில் நர்த்தனமாடி வெளியே குதிக்கத் தவித்தாலும், மிகுந்த கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டு, வேறு வேலையாய் அங்கே வந்தது போன்ற பாவனையுடன் முதுகை விறைத்துக் கொண்டு நடந்ததும், விளைவு தெரிய மனம் து டி யா ய் த் துடித்ததும், 'இன்டியா ஹேஸ் வோன்' என்று யாரோ கூறியதைக் கேட்டதும் ஒரு துள்ளல் துள்ள வேண்டும் என்று மனம் தவித்ததை, பெரிய தவிப்புடன் அடக்கிக் கொண்டு தம் அறைக்கு வந்ததும் நினைவில் அலையலையாய் எழுந்தன.

ஜனார்த்தனத்திற்குக் கிரிக்கெட் என்றால் உயிர். விளையாடியதே இல்லையென்றாலும், கமென்ட்டரி கேட்டுக் கேட்டு ஆர்வம் கொப்புளித்தது.

ஒருமுறை இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையே நடந்த ஒரு நாள் கிரிக்கெட் பந்தயத்தின் முடிவு, 'இங்கா அங்கா' என்று இழுபறியாய் இருந்த போது, நாற்காலியில் அமர முடியாமல் தவியாய்த் தவித்தார். ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட அறையாதலால் டிரான்ஸிஸ்டர் சரியாக வேலை செய்யவில்லை. என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளும் ஆவலைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் அறைக்கு வெளியே வந்தார்.

வெளியே ஜன்னலோரம் சில ஊழியர்கள் ஒரு டிரான்சிஸ்டரை வைத்துக் கொண்டு கூட்டமாய் நிற்பதைக் கண்டதும், ஆவல் திமிறிக் கிளம்ப அவ்விடத்திற்கு விரைந்தார்.


கூட்டத்தில் ஒருவர் இவர் வருவதைக் கண்டு கிசுகிசுக்க, உடனே அனைவரும் புலியைக் கண்ட மான்களாய்த் தத்தம் இருப்பிடத்திற்குக் கலைந்து போயினர்.

தமது அறையில் உலாவினார் ஜனார்த்தனம். சுவரில் அவர் மானேஜராய்ப் பங்கேற்ற பல நிகழ்ச்சிகளின் புகைப் படங்கள் தொங்கின. பார்க்கவே எரிச்சலாய் இருந்தது.

இதுதான் இப்படி. பொது விஷயங்களில் தம் கருத்தை வெளிப்படையாகவாவது கூற முடிகிறதா? 'என்ன பேசுவது எப்போது பேசுவது?' என்று வன விலங்கின் எச்சரிக்கை உணர்வுடன் அல்லவா கருத்துத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது?

அன்றொரு நாள், அலுவலகத்தில் சாதாரணமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் போது, ஓர் அரசியல் கட்சிக்கு ஆதரவாய்ப் பேசி விட, சுற்றியிருப்பவர்கள் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒன்றும் தெரியவில்லை என்றாலும், அதுதான் பின்னால் எவ்வளவு பெரிதாய் விசுவரூபம் எடுத்து விட்டது?

சில நாட்கள் கழித்து, இவர் ஓர் ஊழியர் மீது கடுமையாய் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிட்டது. அந்த ஊழியர் இவர் ஆதரவாய்ப் பேசிய அரசியல்



கட்சியின் ஜன்மவிரோதக் கட்சியின் ஆதர வாளர் போலிருக்கிறது. அவ்வளவுதான். தன் கட்சிக்கு எதிர்க் கட்சியாளர் என்ற காழ்ப்புணர்ச்சியால்தான் இப்படி நடவடிக்கை எடுத்தார் என்ற புரளியைச் சிலர் கிளப்பிப் பொதுஜனக் கருத்து ஒன்றினை உருவாக்கி விட்டு, தலைமை யலுவலகத்திற்கு மொட்டைக் கடிதமும் போட்டிருக்கிறார்கள். அங்கிருந்து இவ ரிடம் விளக்கம் கோரிக் கடிதம் வந்ததுடன், அரசியல் சார்பு உணர்வுகளை அலுவல கத்தில் வெளியிடக் கூடாது என்று அறி வுரை வேறு வழங்கப்பட்டது.

ஒரு வாரம் சரியாய்ச் சாப்பிடக் கூட மனமில்லாமல் எவ்வளவு தவித்தார்?

இஷ்டப்படி ஆடை உடுத்த முடிய வில்லை. மனம் விரும்பியபடி பேச முடிய வில்லை. தம் கருத்தை உள்ளபடி வெளி யிட முடியவில்லை. ஏன் வாய்விட்டுச் சிரிக்கக் கூட முடியவில்லை.

சே!

நினைத்து நினைத்து மனம் கசந்து போயிற்று.

''...ஏங்க குளிக்கப் போகல்லே...? அப்புறம் ஆபீசுக்கு லேட்டாயிடப் போகுது.. நீங்க லேட்டாப் போனா நல்லா இருக்குமா...''

வனஜா எச்சரித்தாள்.

வாஸ்த்தவம். இயந்திரம் போல், எல்லோருக்கும் முன்னால் நாற்காலியில் அமர்ந்து கொள்ள வேண்டும். இல்லா விட்டால் இமேஜ் போய் விடும். நான்கு பேர், நான்கு விதமாய்ப் பேசுவார்கள்.

அவசர அவசரமாய்க் குளித்துச் சாப் பிட்டு விட்டு வெளியே வந்தார்.

ஹாலில் உறவினர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பழைய குடும்ப விஷயங்கள். கேட்கச் சுவாரஸ்யமாயிருக் கும். பேசத் துடித்த நாக்கைக் கஷ்டத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''இந்தாங்க பிளட் பிரஷர் மாத்திரை'' என்று மாத்திரையையும் ஒரு தம்ளர் தண்ணீரையும் நீட்டினாள் வனஜா.

சாப்பிட்டு விட்டு, உறவினர்களிடம் கூறிக் கொண்டு மிடுக்காய் நடந்து போனார். செயற்கையாய் மேற்கொண்ட இறுக்கத்தில் மென்னுணர்வுகள் வலித்தன.

''பெரிய எக்ஸிக்யூடிவ்... நாற்காலியில் ஒக்காந்துட்டார்னா இவர் வச்சதுதான் சட்டம்...'' என்று உறவினர் ஒருவர் மற்றவ ரிடம் கூறியதும், ''ஆமாமா... என்னிக் குமே ஜனார்த்தனம் அதிர்ஷ்டக்காரன்'' என்று மற்றவர் ஆமோதித்ததும் அவர் காது களில் மெலிதாய் விழுந்தன!



முரட்டுக் கைதி, போலீஸ் லாக்கப், தொடரும் கம்பிகள், பறவை பார்வையில் சிறை, ஆக்ரோஷ அடிதடிகள், தப்பிப்பு, எதிரியைப் பழிவாங்குதல் என வழக்கமான திரைப்படக் கல்லூரி மாணவர்களின் ஃபார்முலாவை இங்கு மணிரத்தினத்தின் முன்னாள் சகா சுபாஷ் கையாண்டிருக்கிறார்.

பலன்?

பத்து நிமிடத்திலேயே படத்தில் என்ன மிச்சம் என்று இலகுவாகப் புரிந்து, தட்டுப் படுவது ஆயாசம்.

முதல் கதாநாயகன் காமிரா! அட்டகாசமான கோணங்கள், புதுப்புது அழகுடன் நிலைக்களன்கள் என்று பிரமாதப்படுத்தி இருக்கிறது.

இரண்டாவது கதாநாயகன் (!?) பிரபுவுக்குப் பழகின வேடம். அனாயாசமாக வந்து நடிக்கிறார். ஆனால், மனுஷர் வில்லனை, அவருக்குத் துணை போகும் காவலதிகாரியை விட்டு விட்டு, ரேவதியைக் குறிவைப்பதுதான் பரிதாபம். கதையின் ஓட்டையால் பாவம்... சின்னதம்பி பிரபு சாண் ஏறி இரண்டு முழம் சறுக்கியிருக்கிறார்.


ரேவதி மன்னிக்க : இனி மூத்த மருமகள், குடும்பத்துக்கு உழைக்கும் அக்கா மாதிரி கேரக்டர்களில் மட்டுமே நடிப்பதை யோசித்துப் பார்ப்பது ரசிகமகா ஜனங்களுக்குப் பேருதவி.

'பாடுது பாடுது' - பாடல் 'சபாஷ்' ரகம். 'ஒரு ராக்கோழி' - பாடல் சுபாஷ் ரகம். மற்றபடி சங்கர்-கணேஷ் இசை நமக்கு வசையே. நிற்க. அழகாய்த் தெரிந்தாலும் ஐம்பது லட்ச ரூபாய்க்கு யாராவது ஒரு கண்ணாடி டம்ளரை வாங்க முனைவார்களா? நடந்திருக்கிறது. அதை 'கிளுங்'கென்று கீழே போட்டு உடைப்பார்களா? நடந்திருக்கிறது. விலை உயர்ந்த ஏமாற்றம்!

-சுந்தர்ஜி.



✱ வாடகைக்கு ஸ்கூட்டர்...



✱ வரதராஜன்

வாடகைக்கு:

வாக்குவம் கிளீனர் முதல் வாகனங்கள் வரை!


சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே உள்ள பிக்னிக் ஹோட்டலில் ஒரு புதுவிதமான வசதி... கார்கள், இரண்டு சக்கர வாகனங்களைத் தேவையான காலத்துக்கு வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். இந்த வசதியை வழங்குவது யூ-ரென்ட் என்ற நிறுவனம். இதன் ஒரு கிளையே பிக்னிக் ஹோட்டலில் உள்ளது. ஏராளமான பயணிகள் சென்னை வந்திறங்கியதுமே, தாங்கள் தங்கப் போகும் காலத்துக்கு வாகனங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறார்கள்.

இந் நிறுவனத்தை ஆரம்பித்த வரதராஜன் அமெரிக்காவில் எம். பி. ஏ. படித்து, பதினைந்து ஆண்டுகள் அங்கேயே தங்கியவர். இந்தியா திரும்பியதும், பல்வேறு பொருள்களை வாடகைக்குப் பெறக் கூடிய மேற்கத்திய நாடுகளின் வசதியை நம் நாட்டிலும் வழங்கினால் பொது மக்களுக்கு உபயோகமாக இருப்பதுடன் லாபகரமாகவும் இருக்கும் என்ற எண்ணத்தில் யூ-ரென்டைத் துவக்கினார்.

''இந்தியாவில் கார்களை விட இரண்டு சக்கர வாகனங்களுக்கு அதிகத் தேவை இருப்பதால் ஆரம்பத்தில் அவற்றை வாங்கி வாடகைக்குக் கொடுக்க எண்ணினேன். இப்போது எங்கள் நிறுவனம், வாக்குவம் க்ளீனர், வி. சி. பி., டீ.வி., வீடியோ காமெரா, கம்ப்யூட்டர்கள், ஃப்ரிட்ஜ், டிரான்ஸ்ஃபார்மர், ஸ்டெபிலைஸர், ஐஸ்க்ரீம் மேக்கர், பெட்ரோமாக்ஸ் காஸ் சிலிண்டர், பெரிய சைஸ் காஸ் அடுப்பு பர்னர்கள் போன்ற பலவிதமான பொருள்களை வாடகைக்குத் தருகிறது. இவற்றுக்கு நாளொன்றுக்கு இருபது முதல் இரு நூறு ரூபாய் வரையிலான வாடகை, பொருளுக்குத் தக்கபடி, வசூலிக்கப்படுகிறது...'' என்கி றார் வரதராஜன்.

''எந்தப் பொருள்கள் அதிகமாக வாடகைக்கு எடுக்கப்படுகின்றன...?''

''இரண்டு சக்கர வாகனங்கள் தவிர, கோடை விடுமுறையில் 'பாபுலராக' இருந்



தவை வி. சி. பி. யும் ஐஸ்க்ரீம் தயாரிக்கும் கருவியும். இவற்றுக்கு முறையே இருபது, பத்து ரூபாய் வாடகை... ஆட்டோவில் அவ சரத்துக்கு வெளியே போனால் பதினைந்து - இருபது ரூபாய் செலவாகும். எங்களிடம் ஒரு மணி நேரத்துக்கு ஐந்து ரூபாய் என்ற கட்டணத்துக்கு இரண்டு சக்கர வாகனங்கள் வாடகைக்குக் கிடைக்கின்றன. போக்கு வரத்து நெரிசல் இல்லாத நேரத்தில் பெண்கள் கூட இந்த வண்டிகளை வாட கைக்கு எடுத்துச் சென்று தங்கள் வேலை களை முடித்துக் கொள்கிறார்கள்.''

''யார் வேண்டுமானாலும் பொருள் களை வாடகைக்குப் பெற முடியுமா?''

''தனி நபர்கள், எழுபத்தைந்து ரூபாய் ஆண்டுக் கட்டணம் செலுத்தி, யூ ரென்ட் உறுப்பினராக வேண்டும். அவர்களுக்கு அடையாள அட்டை (போட்டோவுடன் கூடியது) தருவோம். அட்டையின் ஒரு பிரதி எங்களிடம் இருக்கும். ஒரு குடும்பம் முழுதும் உறுப்பினராக ரூ. 150 கட்டணம். நிறுவனங்கள் ரூ 250 செலுத்தினால், அவர்க ளுடைய ஊழியர்கள் எல்லோரும் எங்க ளிடம் பொருட்களை வாடகைக்குப் பெற லாம்... புதிய உறுப்பினர் சேரும் போது, 'இரண்டு வருடங்களுக்கு மேலாக அவரைத் தெரியும்' என்று குறிப்பிட்ட அறி முகக் கடிதத்தை வேறு இரண்டு நபர்கள் வழங்க வேண்டும்... தவிர, அவர் கொடுக் கும் விண்ணப்பத்தில், தமக்குத் தெரிந்த மேலும் இரு நபர்களின் பெயர், விலாசம் குறிப்பிடப்பட வேண்டும்...''

''ஏமாற்று வேலைகளைத் தவிர்க்கத் தானே இந்த முன்னெச்சரிக்கை...?''

''பெரும்பாலானவர்களுக்கு ஏமாற் றும் நோக்கம் இருப்பதில்லை. அபூர்வ மாய் ஒரு சம்பவம்: ஒரு வாடிக்கையாளர் எடுத்துச் சென்ற வண்டி விபத்தில் சிக்கி போலீஸ் கேஸ் ஆனது. அந்த நபர் எங்க ளுக்கு அளித்திருந்த விண்ணப்பப் படி வத்தில் தமக்குத் தெரிந்த நபர் என் ஒரு போலீஸ் அதிகாரியின் பெயரைக் குறிப் பிட்டிருந்தார். ஆனால் போலீஸுக்கு அவர் பேரில் சந்தேகம் ஏற்பட்டு விசாரித்த போது அவர் நீண்ட நாட்களாகக் காவல் துறையால் தேடப்பட்டு வரும் குற்றவாளி என்பது உறுதியாயிற்று! தம் மீது சந்தேகமே எழக் கூடாது என்பதற்காக விண்ணப் பத்தில் போலீஸ் அதிகாரியின் பெயரைக் கொடுத்திருக்கிறார்!.. வேறொரு நபர் குடித்து விட்டு எங்கள் வண்டியை எடுத்துப் போய் விபத்துக்குள்ளாகி இறந்ததும் மறக்க முடியாத அதிர்ச்சி....''

''பொருள்கள் திருப்பித் தரப்படாத பொழுதும், விபத்துகள் நிகழும் போதும் நஷ்டம் ஏற்படாதா?''

''இதுவரை திருப்பித் தரப்படாத அனு பவம் ஏற்படவில்லை. நாங்கள் எல்லாப் பொருள்களையும் இன்ஷுர் செய்திருக்கி றோம். விபத்தோ பழுதோ ஏற்பட்டால் ரூ 250 வரை, அங்கத்தினரிடம் ரிப்பேர் சார்ஜ் வாங்குகிறோம்.''

யூ - ரென்டுக்கு மூவாயிரம் அங்கத் தினர்கள். சென்னையில் ஐந்து கிளைகள். தவிர, மதுரை, பெங்களூர், ஈரோடு, கோவை, திருச்சி, சேலம், ஊட்டி ஆகிய ஊர்களிலும் கிளைகள் உண்டு. உறுப்பி னர்கள் எந்தக் கிளையிலும் வாடகைக்குப் பொருட்கள் பெற்றுக் கொண்டு, எந்தக் கிளையிலும் திருப்பிக் கொடுக்கலாம்!

புகார்களையும் புது யுக்திகளையும் எவரிடமிருந்தும் வரவேற்கும் வரதராஜன், கற்பனா சக்தி மிகுந்தவராகவும் இருக்கி றார். உதாரணமாக, 'வேலையில்லாத நபர் கள் தங்களிடம் வாக்குவம் க்ளீனர், வாஷிங் மெஷின் போன்றவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, ஒரு அடுக்கு மாடிக் கட்டடத்தில் உள்ள பல வீடுகளின் சலவை மற்றும் சுத்திகரிப்புப் பணிகளைச் செய்து லாபம் சம்பாதிக்கலாமே' என்று ஒரு யோசனை தெரிவித்தார்!

- நமது நிருபர்

நேற்றுவரை நந்தவனம்

15

காத்திருப்பதே கொடுமை. அதிலும் முன்பின் தெரியாதவர்கள் வீட்டில் மணிக் கணக்காகக் காத்திருப்பது மகா கொடுமை.

மீரா - எதிர் சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்தாள். அது மௌனமாய் நாலு என்று கை காட்டியது.

கடியாரத்துக்குச் சற்றுத் தள்ளி - தெய்வநாயகியின் புகைப்படம் பெரிதாய் என்லார்ஜ் செய்யப்பட்டு, நெற்றியில் அளவுக்குச் சற்று அதிகமாகவே குங்குமப் பொட்டு இடப்பட்டு, மாலை சூடி - பார்க்கிறவர் வயிற்றைக் கலக்குகிறாற் போல மாட்டப்பட்டிருந்தது.

தெய்வநாயகியின் தந்தை - மீராவைப் பார்த்தபடியே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாரே தவிர - ஒரு வார்த்தை பேசவில்லை. அவர் பேசியதெல்லாம் தம் மனைவியிடம்தான்.

''யாராம்?''

''நம்ம தெய்வா கூட ஸ்கூல்லே ஒண்ணா படிச்ச பொண்ணாம்...''

மீரா இடைமறித்தாள்.

''நான் அவங்க செட் இல்லீங்க. ஜூனியர். எங்க அக்காதான் அவங்களோட கிளாஸ்மேட். இந்த ஆக்ஸிடண்ட் நடக்கறதுக்குப் பத்து நாள் முன்னாலே எங்க அக்கா இங்கே பிரார்த்தனைக்காக வந்த இடத்துல பழைய சினேகிதியைச் சந்திச்சிருக்கா. அப்ப, என்னோட வேலை விஷயம் பத்திப் பேசியிருக்கா. நர்ஸிங்ஹோமை - நல்ல முறையில பராமரிக்கப் பொறுப்பான லேடி வேணும்னு உங்க மக சொல்லியிருக்காங்க. அப்புறம்தான் எத்தனையோ கோளாறெல்லாம் நிகழ்ந்து போச்சே.. இப்ப ஆஸ்பத்திரிய யார் கவனிச்சுக்கறாங்க. அந்த வேலை கிடைச்சா...''

''பொறுப்பெல்லாம் என் பிள்ளை கிட்டத்தான் இருக்கு. அவன் வெளியில போயிருக்கான்.''

அனுராதா ரமணன்

''எப்ப வருவாரு?''

''யாருக்குத் தெரியும்? ஏற்கெனவே - அவனுக்கு இருக்கிற பிஸினஸ்ஸை எல்லாம் பார்த்துக்கவே நேரம் பத்தலை. இதுல ஆஸ்பத்திரி வேற.. யாருக்காவது வித்துடலாம்னா - ராசியில்லே. கட்டின ஒரு வருஷத்துக்குள்ளே டாக்டரே போயிட்டாங்கன்னு பேரு வேற!''

அந்த அம்மாள் நாசூக்காய்ப் புடைவைத் தலைப்பில் கண்களை ஒற்றிக் கொள்ள - பெரியவர், இருந்த இடத்திலிருந்தபடியே குரல் கொடுத்தார்.

''ஏய்!''

''என்னங்க...''

''மணி ரெண்டாகுது. போய்ச் சாப்பிடு!''

''சாப்பிடறேன். சாப்பிடறதுக்காகத் தானே இந்த ஜென்மமே எடுத்திருக்கேன்.. ஏம்மா, உன் பேரென்ன?''

''மீரா...''

''போயிட்டு அப்புறமா வாயேன். போன் பண்ணிட்டு வந்தா - உனக்கும் வசதியாயிருக்கும்.''

''நான் இந்த ஒரு விஷயத்துக்காகத்தான் மெட்ராஸ்லேயிருந்து புறப்பட்டு இங்கே வந்தேன். உங்க வீட்டைத் தேடிக் கண்டுபிடிக்கவே இவ்வளவு நேரமாச்சு. ஊரை விட்டு ரொம்பவும் தள்ளி இருக்கே. திருப்பிப் போயிட்டு வர்றதுன்னா முடியாதுங்க. மேலும், இன்னிக்கு ராத்திரியே மெட்ராஸ் திரும்பறேன்.''

''வேலை தேடி வந்தா - அத்தனை 'நறுக்'காக் கிளம்ப முடியுமா? ஒரு நாள் - ரெண்டு நாள் தங்கத்தான் வேண்டியிருக்கும். ஏதோ செத்துப் போன என் மகளோட சினேகிதிக்குத் தங்கைன்னு சொல்றே.. அதனாலதான்..''

ஊஞ்சல் கிழவர் மறுபடி குரல் கொடுத்தார்.

''ஏய், என்ன பேச்சு! உள்ளே போ, சாப்பிடு..''

தெய்வாவின் தாய், மீராவைப் பார்த்து,

விரக்தியுடன் புன்னகைத்தாள்.

''இவரும், தெய்வாவும் ஒரே மாதிரி. எல்லாம் காலாகாலத்துல நடக்கணும். வேளைக்குச் சாப்பாடு; மருந்து; ராத்திரி எட்டரைக்கெல்லாம் படுக்கை... சொன்னா சொன்ன நேரத்துல ஒரு காரியத்தைச் செஞ்சு முடிக்கணும்.. போறச்சே ரெண்டே நாளுல திரும்பி வர்றேம்மான்னு சொல்லிட்டுப் போனாளே.. வரல்லையே... இதை நான், யார்கிட்டப் போய்ச் சொல்லுவேன்...''

மீரா சங்கடத்துடன் நெளிந்தாள்.

''நீங்க வேணா போய்ச் சாப்பிட்டுட்டு வாங்களேன்...''

அந்த அம்மாள் அரை மனசுடன் நகர, மீரா, டீபாயின் மீது கிடந்த ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டினாள். மனமோ தான் பார்த்த அந்த வீடியோ காட்சியையே சுற்றி வந்தது. மனசுக்குள் கிளர்ந்தெழும் சந்தேகங்கள்...

''எம். எல். ஏ. தருமராஜனைக் கொல்லத்தான் யாரோ அவரது உடைமைக்குள் டைம்பாம்மை வைத்திருக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். நாகு மாமாவின் மீதுள்ள சந்தேகத்தை - தற்காலிகத்துக்கு ஒதுக்கி வைப்போம். தருமராஜனைக் கொல்லத் திட்டமிட்டது யாராக இருக்கும்?''

''குமரன்...?''

''இருக்க முடியாது. என்னதான் பகை



இருந்தாலும் தன் குழந்தையைத் தாயில்லாமல் தவிக்க விட - அவன் முயற்சி செய்ய மாட்டான். மேலும், ராஜேஸ்வரி அம்மாள் சொல்வது போல, குமரன் அம்மா பிள்ளை! தன் அம்மாவுக்கு இஷ்டமில்லாதது எதையும் அவன் செய்ய மாட்டான்.''

''ரவி...?''

''தெரியலை. எத்தனை ச த வி கி த சான்ஸ் இருந்திருக்குன்னு புலப்படலை.''

''நிர்மலா...?''

''அவளுக்கு ஏற்கெனவே தருமராஜன் பேரில் கோபம் இருக்கு. ஆனா, ஒரு பொண்ணுக்கு அத்தனை துணிச்சல் வருமா?''

நிர்மலாவுக்குத் தாம்பூலத் தட்டில், புடைவை வைத்துத் தரவில்லை என்பதினால் தருமராஜன் வெகுண்டு நாலு பேர் சுற்றியிருப்பதைக் கூட மறந்து, மனைவியின் கன்னத்தில் பளீரென அறைந்த வீடியோ காட்சியை அடுத்து, வேறு சில காட்சிகள் : தருமராஜனை ஒருசிலர் சுற்றி வளைத்துச் சமாதானப்படுத்தும் காட்சிகள்..

தொடர்ந்து ராஜேஸ்வரி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் ஒரு தட்டில் பட்டுப் புடைவை ஒன்றை வைத்து நிர்மலாவிடம் நீட்ட, காட்சி அத்துடன் முடிந்தது. அதே கூடத்தில் திட்டுத் திட்டாய்ப் பளீரிடும் பட்டுப் புடைவைகளில் ஜொலிக்கும் பெண்கள் கூட்டத்தைக் காமிரா படம் பிடித்தது.

இ தோ நிர்மலா அனைவரிடமும் விடைபெறுகிறாள். சினேகிதர்களுடன் பேசிக் கொண்டிருந்த ரவி - தெய்வநாயகியின் தம்பியான ரவி - நிர்மலாவை வழியனுப்ப ஓடி வருகிறான்.

முன்னாலும் பின்னாலும் பக்கவாத்தியங்கள் மூட்டையைக் கட்டிக் கொண்டு நகர, தர்மராஜன் நெஞ்சை நிமிர்த்தியபடி நிர்மலாவை ஒட்டினாற்போல நடக்க - அவளுக்கு இன்னொரு புறத்தில் இருந்த ரவி ஏதோ சொல்ல - அவள் பளிச்செனச் சிரிக்கிறாள்.

அத்துடன் முடிந்திருந்தால் கூட - மீரா, இத்தனை அவசரமாய்க் கிளம்பி இங்கே வந்திருக்க மாட்டாள் - ரவியைக் காணும் நோக்கில்.

ரவி - யாருமே தங்களைக் கவனிக்கவில்லை என்கிற தைரியத்தில் 'சட்'டென நிர்மலாவின் பின் கழுத்தைத் தடவி - 'நறுக்'கெனக் கிள்ள - அவள் மெலிதாய்த் துள்ளி அவன் பக்கம் திரும்பி, போலிச் சிணுங்கலுடன் உதட்டைக் குவிக்க -

அவன் விஷமச் சிரிப்புடன் வேறு புறம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்.

இ த் த னை யு ம் கண்ணிமைக்கும்

பொழுதே வீடியோவில் பதிந்திருந்தாலும் - மீராவின் மனசுக்குள் பலப்பல கற்பனைகளைத் தோற்றுவித்து விட்டது.

ஆக, ரவிக்கும் நிர்மலாவுக்கும் பழக்கம் உண்டா? அவளின் பின் கழுத்தைக் கிள்ளும் அளவுக்கு அந்தப் பழக்கத்தில் நெருக்கம் உண்டா?

அப்படியானால் தர்மராஜனுக்கு இந்த விஷயம் தெரியாதா? இந்தக் காட்சியை அவர் கவனிக்காமல் இருந்திருப்பாரா? அப்படி கவனித்திருந்தால் - இருவருக்கிடையே மனஸ்தாபங்கள் வளர்ந்திருக்காதா?

அந்த மனஸ்தாபமே ஒருவரையொருவர் சாய்க்கும் அளவுக்குப் போயிருக்காதா?

ரவி விட்டுக்கு வந்த போது மணி நாலு. ஹாலில் அமர்ந்திருந்தவளை ஓரக் கண்ணால் பார்த்தபடியே மாடிப்படி ஏறினான்.

''சாப்பிடலையா?''

ஊஞ்சல் கிழவர், இதை விசாரிக்கவே தான் இந்த வீட்டில் உயிரோடு இருக்கிற மாதிரி கேட்டார்.

''ஆச்சு...''

இதற்குள் அவன் தாய் வேகமாய் ஓடி வந்தாள்.

''இந்தாடா.. அந்தப் பொண்ணு உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கா. பேசிட்டுப் போ.''

ரவி, மீராவை முழுசாய் ஒரு பார்வை பார்த்தான்.

''என்ன விஷயமானாலும் நாளைக்கு வாங்க...''

''நான் இன்னிக்கே ஊருக்குப் போகணும்..''

''போங்க. யார் வேண்டாம்கறாங்க?''

அவன் பேச்சில் தொனிந்த அலட்சியத்தைப் புரிந்து கொண்டும், மீரா அவனைப் பார்த்துச் சின்னதாய் - சினேகமாய்ச் சிரித்தாள்.

''போயிடலாம். இங்கே நான் வந்த விஷயம் நல்லபடியா முடிஞ்சிடுத்துன்னா... போற போக்குல இங்கே ஆபிரஹாம் பண்டிதர் தெருவுல ஒருத்தரைப் பார்த்துட்டுப் போகணும்... வழி தெரியாது.''

ரவி மெள்ள ஒரு படி இறங்கி வந்தான்.

''ஆபிரஹாம் பண்டிதர் தெருவா?''

''உம். எப்படி எங்க அக்காவுக்கு உங்க அக்கா சினேகிதியோ, அது மாதிரி எனக்கு ஒரு சினேகிதி அந்தத் தெருவுல இருக்கா. நானும், அவளும் ஒண்ணா கொஞ்ச நாள் டான்ஸ் கத்துண்டோம். நான் விட்டுட்



''என் மனைவி என்னைப் பணம் கேட்டு நச்சரிக்கிறாள்! போன வாரம் நூறு ரூபாய் கேட்டாள். நேற்று ஐம்பது கேட்டாள். இன்று காலை ஐந்நூறு!''

''இவ்வளவு பணத்தை என்ன செய்கிறாள்?''

''எனக்கென்ன தெரியும்? நான்தான் கொடுப்பதில்லையே!''

-பி. வி, சீனிவாசன்.

டேன். அவ இன்னமும்..''

ரவி, கலைந்து கிடந்த கிராப்பை ஒரு கையால் அழுத்தி விட்டபடி இறங்கி வந்தான்.

ஊஞ்சல் கிழவர் - தலையைச் சாய்த்து இவனையே கருடப் பார்வை பார்த்துக் கொண்டு உட்கார்ந்தார்.

''அம்மா, நான் இவங்களைக் கொண்டு போய்க் கமலா தியேட்டர் பக்கம் விட்டுட்டு வர்றேன். பை த பை... மிஸ்.. மிஸ்.. உங்க பேரு?''

''மீரா...''

''மிஸ் மீரா! நீங்க என்னை என்ன விஷயமாப் பார்க்க வந்தீங்க?''

''நான் கொஞ்சம் வித்தியாசமான 'ஜாப்' கிடைச்சா செய்யலாம்னு இருக்கேன் மிஸ்டர் ரவி. அதான் உங்க அக்காகிட்ட எங்க அக்கா பேசியிருக்கா. ஊருக்கு வந்து என்கிட்ட விஷயத்தைச் சொல்லி, நான் கிளம்பறதுக்குள்ளத்தான் இத்தனை அசம்பாவிதமாயிடுச்சு...''

''எஸ்... எஸ்... இப்ப நினைச்சாக் கூட ராத்திரி தூக்கம் வராது...''

அவள் ரவியுடன் நடந்து வந்து, வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் ஏறினாள்.

காரைக் கிளப்பியபடியே அவன் கேட்டான்.

''இங்கே கமலா தியேட்டர் கிட்ட...''

''என் ஃபிரண்டு நிர்மலான்னு. அவளுக்குக் கூட இந்த வேலை பத்தி எழுதிக் கேட்டேன். அவ எழுதியிருந்தா. 'டாக்டர் தெய்வநாயகிய மட்டும் எனக்கு நல்லாத் தெரியும். ஆனா எங்களுக்குள்ளே அத்தனை நல்ல முறையில நட்பு கிடையாது. அவங்க அப்பா, அம்மாவுக்கு என்னைக் கண்டாலே ஆகாது. இந்த லட்சணத்துல நான் எப்படி உனக்காக சிபாரிசு செய்வேன்னு வருத்தப்பட்டு எழுதியிருந்தா பாவம். அவளுக்கு என்ன பிரச்னையோ?''

ரவி, பாதையிலிருந்து பார்வையை அகற்றாமல் கூறினான் :

''பெரியவங்களோட பிடிவாத குணத்தாலேதான் பிராப்ளமே வருது. நிர்மலா இதுவரைக்கும் உங்களைப் பத்தி என்கிட்ட சொன்னதே இல்லையே.''

''அட, நிம்மிய உங்களுக்குத் தெரியுமா சார்?''

அவன் சற்றுத் தயங்கி, அவளைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

''உங்க சினேகிதிய நான்தான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன்.''

''அவளுக்கு ஏற்கெனவே...''

''கல்யாணமாகல்லே. இந்த ஊர் எக்ஸ் எம். எல். ஏ. என் அக்கா மாமனார் - அவளை, சீதையை ராவணன் சிறை வைக்கிற மாதிரி வச்சிருந்தார். இனிமே அந்தக் கவலை இல்லை. அந்த ஆளோட சரித்திரம் முடிஞ்சிடுத்து...''

மீரா பொய்யாய் வியப்பைக் காட்டினாள்.

''ஏற்கெனவே குழந்தை இருக்கற பொண்ணைக் கட்டிக்க முன்வந்தது பெரிய சாதனை மிஸ்டர் ரவி. ஆமா.. கேட்க மறந்துட்டேன். ஆஸ்பத்திரி தவிர உங்க பிஸினஸ் என்ன?''

''வெளிநாடுகளுக்கு கிரானைட் கல் - பாலீஷ் பண்ணி ஏற்றுமதி செய்யறது..''

''கிரானைட்னா?''

''ஒருவிதமான கறுப்பு கல்லு... இங்கே எனக்குச் சொந்தமான இடத்துல நிறைய இருக்கு. பாறை மாதிரி இருக்கும். அதை உடைச்சு, பாலீஷ் பண்ணி அனுப்புவோம்..''

''உடைச்சா..? எப்படி உடைப்பீங்க?''

''ஸிம்பிள். பாம் வச்சுத்தான் தகர்ப்போம்!''

கார் ஒரு சின்னக் குலுக்கலுடன் நின்றது.

''நிம்மி வீடு வரைக்கும் நான் வர்றதில்லே. நீ போய்ப் பார்த்து, அவ இருந்தா, கார்லே நான் வெயிட் பண்ணறதாச் சொல்லி அழைச்சிட்டு வாயேன்...''

மீரா - அவனையே இமைக்காமல் பார்த்தபடி இறங்கியவள் - நிர்மலா வீடிருக்கும் சந்தில் நுழைந்து வேகமாய் வேறு தெருவுக்குள் திரும்ப -

அவள் மீது மோதி விடுவது போல வந்த மோட்டார் சைக்கிளில் குமரன்.

(தொடரும்)

கண்டும் காணாமல்...

முகதி. சுபா

பஸ் சென்ட்ரலைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. வண்டியில் கூட்டம் வழக்கத்தை விட அதிகம். ஜங்ஷனிலேயே ஸ்டாண்டிங் ஆரம்பித்து விட்டது. இன்றைக்கு முகூர்த்த நாளோ?

நல்லவேளை! உட்கார இடம் கிடைத்து விட்டது. காலையில் முசிறியில்



கிளம்பியது. களைப்பாக இருந்தது. ஜன்னல் வழியே வந்த காற்று இதமாய் இருந்தது. வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினேன்.

பஸ் கோவில் வாசலைத் தாண்டு கையில் ஒரு குடிமகன் குறுக்கே வர, சடன் பிரேக் போட்ட டிரைவர் மதுவிலக்கை ஆதரித்து அறிக்கை விட்டார்.

சந்திப் பிள்ளையார் கோவில் முக்கில் ஐந்து பேர் ஏறினார்கள். படிக்கட்டைத் தாண்டி முண்டியடித்து ஏற முயல்வது -

கண்டிப்பாக கோமதி சங்கரன்சார்தான்.

என்னமாய்ப் பாடம் எடுப்பார்? கடைசி மாணவனுக்கும் புரிய வேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுவார்! எவ்வளவு சந்தேகம் கேட்டாலும் மனிதர் கொஞ்சமாவது சலித்துக் கொள்ள வேண்டுமே! ஊஹூம்! அதே மாறாத புன்னகைதான்! எந்த மாணவனையாவது அடித்தார் என்பது அவர் வரலாற்றிலேயே கிடையாது! எல்லா மாணவர்களுக்குமே அவர் மீது தனி மரியாதை உண்டு.

'வணக்கம் சார்!' - வாய் வரை வந்த வார்த்தைகளை மனம் அடக்கியது. 'வணக்கம் சொல்லப் போகிறாயே; எழுந்து இடம் கொடுக்கத் தயாராய் இருக்கியா?' எதிர்க்கட்சி வக்கீலாய்க் கேள்வி கேட்டது மனம்.

ஓரக் கண்ணால் மீண்டும் பார்த்தேன். அவர் படிக்கட்டைத் தாண்டி உள்ளே கொஞ்சம் முன்னேறியிருந்தார். ஆனால் எனக்கு முதுகு காட்டிக் கொண்டு எதிர்ப் பக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'நாம இடம் கொடுத்தாலும் அவர் இவ்வளவு கூட்டத்தையும் தாண்டி உள்ளே வரணுமே!' எனக்கு நானே நொண்டிச் சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

பேட்டை ரயில்வே லைன் தாண்டி விட்டது. அவர் என்னைப் பார்த்திருப்பாரோ? இருக்காது! பார்த்திருந்தால் கூப்பிட்டிருப்பாரே! படிக்கும் நாட்களில் அவருக்கு என் மீது அத்தனை பிரியம்!

சூத்தமல்லி இறக்கத்தில் இரண்டு பேர் இறங்கினார்கள். சார் எதிர்ப் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். எங்கே என்னைக் கவனித்து விடுவாரோ என்று நான் வெளியே பராக்கு பார்க்கத் தொடங்கினேன். பஸ் விரைந்தது.



பீர்பாலின் "ஒரு பெரிய நகரில் இருந்து இரவு பஸ் ஒன்று புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. திடீரென்று ஒரு கொள்ளைக்காரன் பஸ்ஸை நிறுத்தி, பயணிகளிடமிருந்த பணம், நகை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான்! பயணிகள் அனைவரும் நடுங்கிக் கொண்டிருந்த போது, கொள்ளைக்காரன் திடீரென்று தன் உதவியாளர்களிடம், ''எல்லாவற்றையும் அவரவர்களிடமே திருப்பிக் கொடு'' என்று உத்தரவிட்டான். பயணிகளால் நம்ப முடியவில்லை! கொள்ளைக்காரன் சொன்னான் : ''இதை நான் எடுத்துக் கொண்டு போனால் உடனே நீங்கள் போலீசில் புகார் செய்வீர்கள். போலீசார் பங்கு கேட்க என் வீட்டுக்கு வந்து விடுவார்கள். இவ்வளவு குறைவாகத்தான் கிடைத்தது என்றாலும் அவர்கள் நம்ப மாட்டார்கள். இதற்கு மேலேயே பங்கு கேட்பார்கள். அதனால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!''

தகவல் : சம்பத்குமாரி.

''நடுக் கல்லூர்'' - கண்டக்டர் குரல் கொடுக்க, நாலு பேர் இறங்கினார்கள்.

வண்டியில் கூட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. சார் இன்னமும் நின்று கொண்டுதான் இருந்தார்.

எழுந்து இடம் கொடுத்து விடலாமா? வேண்டாம்! இன்னும் கொஞ்ச தூரம் தானே!

சேர்மாதேவி விலக்கில் மூன்று பேர் இறங்க, முன்னால் காலியான சீட்டில் சார் அமர்ந்து கொண்டார்.

அப்பாடி! பஞ்சாப் பிரச்னையையே தீர்த்து விட்டது போல் பெருமூச்சு விட்டேன். இடையில் எப்போதாவது பார்த்திருப்பாரோ? பார்த்திருந்தால்தான் என்ன? நான் கவனிக்கவில்லை என்று சொல்லி விட்டால் போகிறது.

அரியநாயகிபுரத்தில் கோவில் வாசல் ஸ்டாப்பில் சார் இறங்கிக் கொண்டார். அங்கு இறங்கினால் எனக்கும் வீடு கிட்டத்தான். ஆனால் குற்ற மன குறுகுறுப்பால் அதை அடுத்த முருகன் கோவில் ஸ்டாப்பில் போய் இறங்கினேன்.

மறுநாள் ஆற்றுக்குக் குளிக்கச் செல்கையில் வாய்க்கால் பாலத்தில்... எதிரே...

சாட்சாத் கோமதி சங்கரன்சார்!

''வணக்கம் சார்!''

''வாப்பா! பாஸ்கர்! என்ன சௌகரியமா? இப்ப எங்கே இருக்கே?''

''முசிறில சர்ர்! நேத்துச் சாயந்தரம்தான் வந்தேன்!''

''நேத்து பஸ்ஸில பார்த்தேன்!''

''அப்படியா சார்? நான் உங்களைப் பார்க்கவே இல்லையே!'' - மனசாரப் புளுகினேன்.

''பேட்டை வரும்போதே உன்னைக் கவனிச்சுட்டேன். நீ என்னைக் கவனிக்கல. கூப்பிடலாம்னுதான் நினைச்சேன். ஆனா நீ ரொம்பக் களைப்பா இருந்தே! நான் கூப்பிட்டேன்னு வச்சுக்க; உடனே நீ எந்திரிச்சு எனக்கு இடம்கொடுத்துடுவே! அந்தக் களைப்போட நீ நின்னுக்கிட்டே வர வேண்டியிருக்கும். அதான்...''



தன்னடக்கம் மிக்க ஒருவரை நீதிபதியாக நியமிக்க அரசர் ஆசைப்பட்டார். அப்படிப்பட்ட ஒருவரைத் தேடி வருமாறு ஒரு குழுவினரை அனுப்பி வைத்தார். இந்தச் செய்தி முல்லாவுக்கு எட்டியது. ஒரு மீன் வலையைத் தோள் மீது போட்டுக் கொண்டு முல்லா, அரசரால் அனுப்பப்பட்ட குழுவினர் முன் சென்றார்.

அவர்களுள் ஒருவர், எதற்காகத் தோள் மீது வலையைப் போட்டிருக்கிறீர்கள்?'' என்று முல்லாவிடம் கேட்டார்.

''ஒரு காலத்தில் நான் மீன் பிடித்துக் கொண்டிருந்தேன். அந்தப் பழைய நினைவு மறந்து விடக் கூடாது என்பதற்காகத்தான்.''

இந்த தன்னடக்கத்தைக் கண்டு நீதிபதியாக அவரை அரசர் தேர்ந்தெடுத்தார்.

பின்னர் ஒருநாள், ''முல்லா, எங்கே வலை?'' என்றார்.

''மீன்தான் கிடைத்து விட்டதே, இனி மேல் எதற்கு வலை?'' என்றார் முல்லா!

ஆ. வளையாபதி.


Nestlé
Nestum
baby cereal
Rice
mix with milk

நேற்றுவரை

16

"ஏதோ படிச்சவ. புத்திசாலித்தனமா நடந்துப்பேன்னு நினைச்சேன். இத்தனை அபத்தமா - எவன்கிட்ட மாட்டக் கூடாதோ அங்கே போய் மாட்டுவேன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. இங்கே பாரு, இது என்ன பைத்தியம் மாதிரி... அட்டா... கண்ணைத் துடை..."

குமரன், சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை உருவி, மீராவின் அருகில் போட்டான்.

அவளோ - இருட்டில் நிழலோவியமாய்த் தெரியும் பெரிய கோவிலின் விமானத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

வெட்ட வெளியாய் ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தில் பரந்து கிடக்கும் கல் தரையில் - பக்கத்தில் ஒப்புக்கு எரிந்து கொண்டிருக்கும் விளக்கு வெளிச்சத்தில் அவள் அப்படி அமர்ந்திருப்பதே பரிதாபத்துக்குரியதாய்....

'இவள் இந்த மண்ணில் எதைத் தேடுகிறாள்?'

'தன் கணவனைப் பறித்த - அந்த விபத்துக்குக் காரணகர்த்தாவையா?'

'அது என்ன - இவள் ஒருத்தியால் முடிகிற விஷயமா... அப்படியே முடிந்தாலும் - அதனால் இனி ஆகப் போவதுதான் என்ன...?'

குமரன் - இவளிடம் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

"எதுக்கு அப்படி விழுந்தடிச்சுட்டு ஓடி வந்தே?"

"பின்னே... ரவியானா - நிர்மலாவை இங்கே அழைச்சிட்டு வான்னு சொல்லிட்டு காருல உட்கார்ந்திருக்கான். எனக்கு நிர்மலாவை முன்னே பின்னே தெரியாது. ஆனா, அவ ஃபிரண்டுன்னு பொய் சொல்லிட்டேன்."

"எதுக்காகப் பொய் சொல்லணும்?"

"ரவிக்கு நிர்மலாகிட்டப் பிரியம் இருக்குங்கறதை உங்க கல்யாண வீடியோ மூலமாத் தெரிஞ்சுக்கிட்டேன். எனக்கு எப்படியாவது அவன் கூடக் கொஞ்சம் பேச்சுக் கொடுக்கணும். இந்தக் குண்டு வெடிப்புக்கும் ரவிக்கும் சம்பந்தமிருக்கான்னு தெரிஞ்சுக்கணும். அதுக்கு வேற வழி தெரியலை..."

குமரன், தன் கைக் கடியாரத்தைப் பார்த்தான்.

"இத்தனை நேரம் - நீ சொன்னது அத்தனையும் பொய்னு அவனுக்குத் தெரிஞ்சிருக்கும். அநாவசியமா அந்த ஆள்கிட்டப் போய் வம்பை விலைக்கு வாங்கியிருக்கே."

"இல்லே. இன்னும் தெரிஞ்சிருக்காது. அவன், நிர்மலாவை அவளோட வீட்டுல சந்திக்கிறதில்லேன்னு தெரியறது. தெரு முனையில் வண்டிய நிறுத்திட்டு, என்னை அனுப்பி, அவளை அழைச்சிட்டு வரச் சொல்வானேன்? அங்கே போக முடியாம, அவனை ஏதோ தடுக்கறது.. அந்த எதிர்ப்பு இருக்கற மட்டும் போக மாட்டான்..."

குமரன் அத்திப் பூத்தாற் போலச் சிரித்தான்.

"வீட்டுல வச்சுப் பார்க்க முடியலைன்னாலும் தினமும் ராத்திரி எட்டு மணி சுமாருக்கு அவங்க ரெண்டு பேரும் - என் மனைவியோட நர்ஸிங்ஹோம்லே அவ உபயோகிச்சிட்டிருந்த அறையில சந்திக்கிறாங்க. இது ஊரறிஞ்ச உண்மை. இதைக் கண்டுபிடிக்கறதுக்காக நீ இத்தனை சிரமம் எடுத்திட்டிருக்க வேண்டாம்."

அவள், வெகுண்டு அவனைப் பார்த்தாள்.

"என்ன, அப்படிச் சொல்லிட்டீங்க? ரவியும், நிர்மலாவும் சேர்ந்துதான் இந்த விபரீதத்துக்குப் பிளான் போட்டிருக்காங்க. அவங்களோட திருமணத்துக்கு உங்க அப்பா தடையா இருந்திருக்கார். தொலைச்சிட்டாங்க. மோடிவ் இருக்கு இல்லே? போதாக்குறைக்கு - ரவியோட பிஸினஸ்லே கிரானைட் கல்லை பாலீஷ் பண்ணி, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யறதுதானாம்.. கல்லை உடைக்க டைனமைட் வெடி வைப்போம்னு சர்வ அலட்சியமாச் சொல்றான் அவன்.."

குமரன் இன்னமும் சிரித்தான்.

"ஆக வெடிகுண்டு வைக்கறதுக்கான காரணம் இருக்கு. கல் உடைக்கிற குவாரியில டைனமைட் நிறைய வச்சிருக்காங்க. வேணுங்கறப்ப, முட்டையை ஃபிரிஜ்லேயிருந்து எடுத்து, பொட்டுனு உடைச்சு தோசைக் கல்லுல ஊத்தற மாதிரி - குண்டைத் தூக்கி டைம் செட் பண்ணி

அனுராதா ரமணன்

நந்தவனம்

எங்கே வைக்கணுமோ வச்சிட்டுப் போயிட்டே இருக்கலாம்; இல்லையா...?''

மீரா இதற்கு உடனே பதில் சொல்ல வில்லை. அவனையே வெறித்துப் பார்த் தாள்.

அவன் - அவளை விட்டுச் சற்றுத் தள்ளி, தரையில் தூசு தட்டி உட்கார்ந்தான்.

''இந்த மர்மத்தை நீ வந்துதான் கண்டு பிடிக்கணுமா? எனக்குத் தெரியாதா? ஒரு விஷயம் சொல்றேன். கவனமாக் கேளு. என் கல்யாண ரிஸப்ஷனுக்கு நிர்மலா வோட பாட்டுக் கச்சேரிய ஏற்பாடு செஞ்சது என் மச்சான் ரவிதான். அவளுக்கும் அவ னுக்கும் ஏற்கெனவே சினேகம் இருந்தி ருக்கு. அப்ப எல்லாம் ரவி சுயமாச் சம்பா திக்கலை. ஒவ்வொரு பைசாவுக்கும் அப்பா வை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிர்ப் பந்தம். அப்படியும் எப்படியோ இவ சினேகம்...''

''..........''

''நிர்மலாவோட அம்மாவுக்கு இது பிடிக்கலை. பணமில்லாதவனோட என்னத் துக்கு மணிக்கணக்குல பேச்சுன்னு கத்துவா. ஏதோ - அக்காவோட கல்யாணத்துக்கு - நிர்மலாவைக் கச்சேரிக்கு ஏற்பாடு செஞ்சா அவளுக்கும் பண உதவி செஞ்ச மாதிரி இருக்கும்; அவ அம்மாவோட மதிப்புலே யும் உயருவோம்னு நினைச்சுத்தான் ரவி, அவளை ஒப்பந்தம் செஞ்சான்.''

''......''

''ஆனா, விதி வேற மாதிரி விளையாடி டுச்சு. எங்கப்பாவோட பார்வை - நிர்மலா மேல விழுந்திடுச்சு. நிர்மலாவோட அம்மா வும், இதைத்தான் ஆதரிச்சா. என் மாம னார்கிட்ட சொல்லி எங்க அப்பா, ரவியை இந்தப் பக்கமே வர விடாம செஞ்சார். அப் படியும் நிர்மலாவை ரவி திருட்டுத்தனமா சந்திக்காம இல்லை. உண்மையில இப்ப அவளுக்கு இருக்கற ஒரு குழந்தையும் ரவியோடதுதான்.. அந்தக் கருவை அழிக் கத்தான் எங்கப்பா, தெய்வாவை மிரட்டி னார்.. சொந்த தம்பிக் குழந்தையை, தன் கையாலே அழிக்க மனசு வராமத்தான் தெய்வா என்னையும், என் குடும்பத்தையும் கேவலமாப் பேசிட்டு விலகிப் போனா...''

''அப்படிப்பட்ட அக்காவையே தீர்த் துட்டானே ரவி...''

இப்பொழுது குமரன் கடகடவெனச்



சிரித்தான்.

''நேத்து வரைக்கும் என்னைக் கொலையாளின்னு சொன்னே.. இப்ப ரவியைச் சொல்றே...''

''ரவிதான்.. கண்டிப்பா ரவிதான்.. என் அப்பாவிப் புருஷனையும் சேர்த்துக் கொன்னுட்டான்..''

மீரா, கைகளால் தரையை ஓங்கிக் குத்தினாள். குமரன் 'சட்'டென அவள் கைகளை இறுக்கிப் பிடித்தான்.

''ஒரு விஷயத்தைப் பத்திச் சரிவரப் புரிஞ்சுக்காம, உணர்ச்சிவசப்படறது ரொம்பத் தப்பு. ரவிக்கு எங்க அப்பாவைக் கொல்ல மோடிவ் இருக்கலாம். என் பெண்டாட்டிய ஒழிச்சுக் கட்டினா, முழுச் சொத்தும் அவனுக்கு வருமாயிருக்கலாம். ஆனா, இந்த விபத்துக்குக் காரணம் அவனில்லே!''

மீரா திகைத்துப் போய் அவனையே பார்த்தாள்.

''பின்னே, உங்க சந்தேக லிஸ்ட்டுல இவங்க ரெண்டு பேரும்தான் முக்கியமானவங்கன்னு...''

''அம்மா சொன்னாங்களா?''

''.....''

''உனக்கு எப்படி உன் புருஷனைக் கொன்ற அந்த விபத்துக்குக் காரணம் யாருன்னு தெரிஞ்சுக்கறதுல ஒரு வெறி இருக்கோ, அதே வெறி எங்கம்மாவுக்கும் இருக்காதா? எனக்கு இருக்காதா? இவனாயிருக்குமா, அவனாயிருக்குமான்னு அம்மா கேட்கறப்ப ஏதோ அவ திருப்திக்காக இருக்கலாம்னு சொல்லுவேன். அவ்வளவு தான்.. இந்த விபத்துக்குக் காரணம் - கண்டிப்பா ரவி இல்லே. நிர்மலாவுமில்லே...''

''பின்னே யாரு? கண்டுபிடிச்சிட்டீங்களா?''

''இல்லே. சீக்கிரமா கண்டுபிடிச்சிடுவேன். அதுக்கு முன்னாலே எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும்...''

மீரா, 'என்ன' என்பது போல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''குற்றவாளி யார்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நீ என்ன செய்யப் போறே?''

''அவனை - இல்லே - அவளைக் கூண்டுலே ஏற்றித் தூக்கு தண்டனை வாங்கிக் கொடுத்துட்டுத்தான் மறு வேலை...''

''அதான்; அந்த மறு வேலை என்னன்னுதான் நான் உன்னைக் கேட்கறேன். கல்யாணமா, உத்தியோகமா, படிப்பா?''

''படிக்க வைக்க அப்பாவால் முடியாது. ஏற்கெனவே என் கல்யாணத்துக்காக நிறையக் கடன் வாங்கிச் செலவழிச்சிருக்கார். ஏதாவது வேலைக்குப் போய் - அவருக்கு என்னால ஏற்பட்டிருக்கற கடனை அடைக்கணும்...''

''ஏன் நீ கல்யாணம் செஞ்சிட்டு வேலைக்குப் போய் - உங்க அப்பாவோட கடனை அடைக்கக் கூடாது?''

இப்பொழுது மீரா புன்னகை செய்தாள்.

''ஆரம்பத்துல எல்லாப் புருஷர்களும், பெண்டாட்டி சம்பாதிக்கற காசுலே ஒரு பைசாக் கூட தனக்கு வேண்டாம்னுதான் சொல்லுவாங்க. போகப் போகத்தானே தெரியும். அவங்க குணமெல்லாம்...''

''நி ஜ ம ா வே நல்ல கணவன் கிடைச்சா?''

''ஹூக். அவன் நல்லவனா கெட்டவனான்னு பழகிப் பார்த்துட்டுக் கல்யாணம் செஞ்சுக்க முடியுமா?''

''வேண்டாம். ஏற்கெனவே பழகினவனை - அவன் வேத்து சாதியா இருந்தாக் கூட - நல்லவனா இருந்தா - அந்த ஒரு தகுதிக்காகவாவது அவனைக் கல்யாணம் செஞ்சுக்கக் கூடாதா மீரா?''

மீரா, 'விருட்'டெனத் த லை ஷ ய உயர்த்தி, அவனைப் பார்த்தாள்.



- குடந்தை எல். ராம்பிரபு.

அருள்வாக்கு

காலையில் லோகம் முழுக்கத் தூக்கத்திலிருந்து விடுபட்டு மலர்ச்சி அடைகிறது; சூரியன் பல பல என உதிக்கிறான்; உலக காரியங்கள் எல்லாம் தொடங்குகின்றன. எனவே குளிர்ந்த வைகறைப் பொழுதில் நீருண்ட மேகம் போல் குளிர்ந்த ஜகத் பரிபாலகரான விஷ்ணுவின் நாமங்களை உச்சரிக்க வேண்டும். மாலையில் அவரவரும் வேலை முடித்து வீடு திரும்புகிறார்கள்; மாடுகள் கொட்டிலுக்குத் திரும்புகின்றன. பட்சிகள் கூட கூட்டுக்குத் திரும்பி விடுகின்றன. சூரியனும் மலைவாயில் இறங்குகிறான். இப்படி லோக வியாபாரங்கள் ஒடுங்கத் தொடங்குகிற அந்திப் போதில் நம் ஆட்டங்களையெல்லாம் ஒடுக்கி அமைதி தருகிற ஞான மூர்த்தியான பரமேசுவரனின் நாமாவை உச்சரிக்க வேண்டும்.

அண்டம் பிண்டம் இரண்டும் அடிப்படையில் ஒரே சரக்கானதால் வெளி உலக நடப்புக்கும் நம் அக உணர்வுகளுக்கும் சம்பந்தம் இருக்கிறது. உலகில் அருணோதயத்துக்கு முன்பு பட்சி ஜாலங்கள் விழித்துக் கொண்டு கூவத் தொடங்குகிற வேளையில், 'லோகமெல்லாம் நன்றாக இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தை மனசில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டு, சாட்சாத் ஸ்ரீமந் நாராயணனைத் தியானிப்பது எளிதில் கைவரும். இதே போல் வெளியுலகம் ஒடுங்கித் தன்மயமாகி, இருள் கவிந்து வருகிற அந்தி வேளையில் இந்திரியங்களை ஒடுக்கிச் சாந்தமாக சிவபெருமானின் தியானத்தில் அமிழ்வது சகஜமாகவும் சுலபமாகவும் இருக்கும்.

நம்முடைய மனோ பாவத்தைப் பொறுத்து இப்படி இரண்டு விதத்தில் உபாசித்தாலும் இரண்டு மூர்த்திகளும் ஒன்றேதான் என்ற நினைப்பு போகக் கூடாது. காலையில் பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு சந்தியாவந்தனம் செய்த அதே மனிதர் பகலில் ஸூட் போட்டுக் கொண்டு ஆபீஸுக்குப் போகிறார். வெவ்வேறு காரியங்களுக்காக, வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக் கொண்டாலும் ஆசாமி ஒருத்தர்தான். ஸ்வாமியும் ஒருத்தர்தான்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அவனோ, நிழல் கோபுரத்தைப் பார்த்தபடி சொன்னான்.

''முன்னே பின்னே பழகாம நீ கீர்த்தியைக் கல்யாணம் செஞ்சிட்டே. நான் தெய்வாவைக் கட்டிட்டதும அப்படித்தான். நானாவது அவளோட குடும்பம் நடத்தி இருக்கேன். நீ அது கூட இல்லை. முகம் தான் பரிச்சயமே தவிர - மனம் எப்படின்னு வாழ்ந்து பார்த்திருந்தாத்தான் தெரியும்.''

''அதுக்குத்தான் கொடுத்து வைக்கலையே...''

''தெய்வமே தெரியாத்தனமா இந்த மாதிரி ஒரு தப்பு செஞ்சிட்டதா வச்சுப் போம். மறுபடி வாழறதுக்குக் கடவுளே ஒரு சான்ஸ் கொடுத்தா... நான் உன்னை வற்புறுத்தலை தாயே... உனக்குச் சம்மதமிருந்தாச் சொல்லு...''

மீரா, இளக்காரமாய்ச் சிரித்தாள்.

''ஒரு விதவைக்கு வாழ்வு தர்றேன்னு சொல்றீங்களாக்கும்...''

குமரன், அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்து விட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறினான்:

''ஏன் அப்படி நினைச்சுக்கறே? தர்றதும், எடுத்துக்கறதும்தான் வாழ்க்கை. புருஷனை இழந்த பொண்ணுக்கு விதவைன்னு பேரு இருக்காப்பல - பெண்டாட்டிய இழந்த கணவனுக்கு ஏன் தமிழிலே எந்தவொரு பேருமில்லே? சரி... நானே சொல்றேன். விதவைன்னு ஒண்ணு உண்டுன்னா - நான் விதவன். ஒரு தாயில்லாக் குழந்தைக்குத் தகப்பன். என்னைக் கல்யாணம் செஞ்சிட்டு, எனக்கும், என் குழந்தைக்கும் ஒரு புது வாழ்வு கொடேன்...''

மீரா மலைத்து உட்கார்ந்து விட்டாள்.

இவளது பதிலுக்காகக் குமரன் மட்டுமில்லை, பெரிய கோவிலின் பிரும்மாண்டமான நந்தி கூட மௌனமாய்க் காத்திருந்தது.

(தொடரும்)



GOKULAM, GUINDY, MADRAS - 600 032.



புதிய
வேப்பம் சக்தி பச்சைநிற ஜவான்
ஆரோக்கியத்தின் காவல் ஜவான்
JAVAN
NEEM GUARDS YOUR HEALTH
JAVAN
வேப்பம் சக்தி செறிந்த
குளியல் சோப் இது
ஆரோக்கியத்தின் பாதுகாவல்.
உழைத்த உடம்பின் அழுக்கு
பிசுக்குகளைக் கழுவிப்
போக்கி துர்நாற்றம்
அகற்றுகிறது.
குளித்துப் பாருங்கள்: சிக்கன
விலையிலே புதிய ஜவான்.
JAVAN
புதிய
ஜவான்
குளித்திடப் பச்சைநிற சோப்
டாட்டா தயாரிப்பு

நேற்றுவரை நந்தவனம்

மீராவுக்காகப் பரிந்து கொண்டு அவன் பேசுவது இதுவே முதல் தடவை.

''சாப்பிட நீங்களா...?''

''நீங்க படுங்க. இத்தனை நேரத்துக்கு மேல என்ன சாப்பாடு.. பால் இருந்தாக் காய்ச்சி ரெண்டு பேருமா எடுத்துக்கறோம். போதும்.''

- இது மீரா.

குமரன் அதற்கு மேல் அம்மாவின் எதிரில் நிற்க முடியாதவனாய் மெள்ள நகர்ந்தான்.

இன்னும் கூட, தோளில் அவள் பற்றியிருப்பது போன்ற பிரமை...

'அதெப்படி இத்தனை நாளுமில்லாமல் - இன்று இவளிடம் இத்தனை சகஜமாய்ப் பேசினோம்...'

'இவள்தானாகட்டும்; என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்... பேசாமல் இருந்த போது கூட மதிப்பாய் இருந்தோம் போலிருக்கிறதே... பேசி இப்படி 'சபல புத்திக்காரன்' என்று பெயர் சூட்டிக் கொள்ள வேண்டுமா...'

மீரா, மௌனமாய் பாலைக் காய்ச்சிக் கொண்டு வந்து வைத்து விட்டு, 'சட்'டென விலகினாள்.

''மீரா...''

''உம்?''

''நீ ரவி வீட்டுக்குப் போனதெல்லாம் அம்மாவுக்குத் தெரிய வேண்டாம். அநாவசியத்துக்குக் கவலைப்படுவா. ரவி பேரைச் சொன்னாலே அம்மாவுக்கு அலர்ஜி...''

''நான் எதுவுமே சொல்ல மாட்டேன்...''

''எதையும் சொல்லாம இருக்க வேண்டாம். நாம சித்த முந்திப் பேசின விஷயத்துல உனக்கு ஏதாவது அந்தரங்க ஆலோசனை நடத்தணும்னு தோணினா தாராளமா அம்மாகிட்ட கேட்கலாம். ஆனா ஒண்ணு, உன் மனசுல இந்தக் கல்யாணத்துல விருப்பம் இருந்தா மட்டும் அம்மாகிட்டப் பேசு. இல்லாட்டி வேண்

அனுராதா ரமணன்

இதுவரை....

மீரா - கீர்த்தி புதுமணத் தம்பதி. தஞ்சாவூரிலிருந்து தேனிலவுக்குப் பஸ்ஸில் புறப்படும் போது, பஸ்ஸில் குண்டு வெடித்து, கீர்த்தி இறந்து விடுகிறான். அதில் பயணம் செய்த எம்.எல்.ஏ.வுக்காகத்தான் யாரோ குண்டு வைத்திருக்கிறார்கள் என்று, அந்த விபத்தில் தப்பிப் பிழைத்த மீரா ஊகிக்கிறாள். யார் வைத்தது? கண்டுபிடிக்க மீரா முற்படுகிறாள். அதே பஸ் விபத்தில் தனது மனைவியையும் எம்.எல்.ஏ. வான தனது தந்தை யையும் பறிகொடுத்தவன் குமரன். அவன் வீட்டில் தங்கித் துப்புத் துலக்க ஆரம்பிக்கிறாள் மீரா. குமரனின் தாய் ராஜேஸ்வரி, மீராவுக்குத் தேவை யான சகல வசதிகளையும் செய்து தருகிறாள். இதற்கிடையில் குமரனின் குழந்தை இளவரசு மீராவுடன் ஒட்டிக் கொள்கிறான். மீராவுக்கும் குழந்தையைப் பிடித்துப் போகிறது.

ஒருநாள் குமரன், அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்கிற தனது ஆசையைத் தெரிவிக்கும் போது மீரா அதிர்ச்சியடைகிறாள்.

17

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஜோடியாய் வந்திறங்கிய மீராவையும், குமரனையும் கவலையுடன் பார்த்த ராஜேஸ்வரி, மீராவிடம் உரிமையுடன் கடிந்து கொண்டாள்.

''எங்கே போயிட்டே? நான்தான் உனக்காக ஆட்டோ ஏற்பாடு செஞ்சிருக்கேன் இல்லே? போறவ, ஞானத்தை எழுப்பி, அவன் வண்டியில போயிருக்கப்படாதா? எத்தனை நேரமானாலும் கவலையில்லாம இருப்பேனே...''

இதற்கு மீரா பதிலளிக்கும் முன் - குமரன் முந்திக் கொண்டு பதிலளித்தான்.

''அவ புகுந்த வீட்டு மாமா ஒருத்தர் இருக்காரில்லே.. அவரைப் பார்த்துட்டுப் பொடி நடையா நடந்து வந்திட்டிருந்தா. நான் போனேனா... வண்டியில ஏத்திட்டு வந்துட்டேன்...''

ராஜேஸ்வரி மகனை வியப்பு ததும்பப் பார்த்தாள்.

டாம். அவ பாவம். கனவுகளை மட்டும் சுமக்கற ஜாதி... அநாவசியமாக் கற்பனைய வளர்த்துட்டு, அப்புறம் திண்டாடுவா...''

மீரா இதற்குப் பதில் சொல்லவில்லை.

அவளால் இன்னமும் இந்த விஷயத்தை ஜீரணிக்க முடியவில்லை.

'குமரனை நாம் கல்யாணம் செய்து கொள்வதாவது...'

'அது எப்படி அவன் கேட்லாம்...'

'அவன் மனசுல ஒண்ணுமில்லே. கேட்டுட்டான். முடியும்னா 'சரிதான், சம்மதம்'னு சொல்லு. முடியாது போலத் தோணினா - அதையும் 'பட்'டுனு சொல்லிடலாமே!'

'ஒருவேளை இந்த வெடிகுண்டு விஷயத்தை இதுக்கு மேல நான் கிளறக் கூடாதுங்கறதுக்காகத்தான் இப்படியொரு கொக்கி போட்டானோ?...'

'எல்லாம் சரிதான். இதைப் போய் நீ, அப்பா அம்மாகிட்ட எப்படிச் சொல்லுவே. என்னதான் அப்பா, உனக்கு இன்னொரு கல்யாணம் செஞ்சு வைக்கிறதாச் சொன்னாலும் இப்படி ஜாதி விட்டு ஜாதி...'

'இத்தனை தூரம் - அவன் கேள்விக்கு மதிப்புக் கொடுத்து மண்டையக் குழப்பிக்கிறியே... அப்படின்னா - உனக்கு இதுல இஷ்டம்தானா...'

'மறுபடி ஒரு கல்யாணம்... புருஷன்... இவனுக்கு என்னென்ன பிடிக்கும், இவன் சுபாவம் என்னங்கறதுல எல்லாம் நான் அக்கறை எடுத்து... கடவுளே...'

மீரா புரண்டு படுத்தாள்.

குழந்தை இளவரசு, தூக்கத்தில் இவள் மீது கால் போட்டான். எத்தனை நேரம் அப்படியே கிடந்தாளோ - ராஜேஸ்வரியின் கை, தோளில் பட்டதும் 'விருட்'டெனத் திரும்பிப் பார்த்தாள்.

''நீங்க இன்னும் தூங்கலையா?''

''எப்படித் தூங்க முடியும்? இந்த வீட்டுல ரெண்டு சின்னஞ் சிறுசுங்க - சட்டைப் பைக்குள்ள வச்சிருந்த காசைத் தொலைச்சிட்டுத் தெருவெல்லாம் தேடற மாதிரி இங்கே தவிச்சிட்டிருக்குங்க. பெரியவ நான், கோட்டான் மாதிரி உட்கார்ந்திருக்கேன்... எப்படித் தூக்கம் வரும்?''

மீரா, இளவரசுவின் வெல்வெட் கிராப்பை மெள்ள விரலால் கோதி விட, ராஜேஸ்வரி அவளது கரத்தை அப்படியே பிடித்து, தன்னிரு கரங்களுக்குள் வைத்துக் கொண்டு சொன்னாள்:

''இங்கே பாரு.. இந்த வீட்டுக்குள்ள நீ வர்றப்ப, எங்களை மாதிரி, இந்த வெடி விபத்துல துணையைப் பறிகொடுத்தவங்கற ரீதியிலதான் உன்னை ஏத்துக்கிட்டேன். குமரு வேண்டாம்னு தலை தலையா அடிச்சிட்டும் கூட நான் கேட்கலை. புருஷனைப் பறிகொடுத்தவ நீ, பெண்டாட்டியப் பறிகொடுத்த குமரு, அம்மாவை இழந்த இளவரசு, இப்படி மூணு பேரோட இழப்பையும் - மூணு முடிச்சுல சரிக்கட்ட முடியும்னா... எத்தனை சந்தோஷமா இருக்கு? யோசிச்சுப் பாரு....



''நீ இப்பவே பதில் சொல்ல வேண்டாம். மனசு ஒத்துப்

போனாலும் பழக்க வழக்கம், சம்பிரதாயம் - வேற வேற ஜாதி - இப்படி எத்தனையோ முட்டுக்கட்டை இருக்கு.... என்னைக் கேட்டா - அன்புக்கு ஏங்கற நாம் எல்லோருமே ஒரே ஜாதியின்னுதான் சொல்வேன்...''

மீரா, கண்களை அழுந்த மூடி, மூடிய இமைக்குள் கீர்த்தியைக் கொண்டு வர முயற்சி செய்தாள்.

'இங்கே பாருங்கோ... நான், உங்களுக்கு நேர்ந்த கொடுமைக்கு யார் காரணம்னு தேடத்தான் இங்கே வந்தேன்... வந்த இடத்துல... தயவு செஞ்சு என்னை அப்படிப் பார்க்காதீங்கோ... நான் என்ன பண்ணுவேன். வாழ்க்கை முழுக்க இப்படியே.. இது சாத்தியமில்லே போல இருக்கே.. எனக்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்க.

'நான் ரொம்பச் சாதாரணமானவங்கறது இப்பத்தான் தெரியறது. என் மனசை அடக்கவே முடியலை. எது எல்லாம் கூடாதுன்னு எனக்கு நானே தீர்மானிக்கிறேனோ - உடனே அதை மீறுகிறேன். இதனாலேயே என் தரத்தை இழந்து, மதிப்பை இழந்து எல்லாருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாயிடுவேனோன்னு பயமா இருக்கு...

'நான், உங்களுக்குத் துரோகம் செய்யறேனோ...'

அவள், கெஞ்சக் கெஞ்ச - கீர்த்தி அவளிடமிருந்து உதறிக் கொண்டு கிளம்புவது போல உணர்ந்தாள்.

அவள் தூங்கி வெகுநேரமாகியும் ராஜேஸ்வரி விழித்திருந்தாள். அவளையுமறியாமல் மாலை மாலையாய்க் கண்ணீர்.

மறுநாள் -

விடியற்காலையிலேயே குளித்து முடித்துக் குமரன் காலை உணவுக்கு வருவதற்குள், வெளியே கிளம்பத் தயாராகி விட்டாள் மீரா.

ராஜேஸ்வரி பூஜையறையிலிருந்து வெளியே வரவில்லை. இளவரசுவை கூடத்தின் ஊஞ்சலில் உட்கார வைத்துத் தானும் அமர்ந்து, வீசி ஆடியபடியே ராஜேஸ்வரியின் வருகைக்காகக் காத்திருந்தாள் மீரா...

''இந்தா... தாத்தா, அப்பா மாதிரி எலக்ஷன்லே நிக்கப் போறியா.. இல்லே நல்லாப் படிச்சுப் புத்திசாலியின்னு பேர் வாங்கப் போறியா?''

மீரா, தனக்குப் பின்னால் குமரன் இருப்பதை அறிந்தும், கவனியாதவள் போல, குழந்தையிடம் பேசினாள்.

குழந்தை என்ன புரிந்து கொண்டானோ...

''...ப்பா... ப்பா...''

''ஓ... அப்பா மாதிரியா.. அப்ப இந்தா, கை ரெண்டையும் இப்படி கும்பிடற மாதிரி வச்சுக்க...''

சிறுவன் பிஞ்சுக் கரங்களைக் குவித்தபடி - வாய் கொள்ளாமல் சிரித்தான்.

''நான் சொல்றதை அப்படியே திருப்பிச் சொல்லு...''

''நா... என்னது?''

''தாய்க்குலமே...

''தாய்... களுக்...''

மீரா தலையில் நாசூக்காய் அடித்துக் கொண்டாள். நிக்கறேங்கறே... ஆனா, உங்க அப்பாவுக்கு நீ எவ்வளவோ தேவலை....''

குமரன் தனக்குள் சிரித்தபடி, குழந்தையைத் தூக்கி மார்புற அணைத்துக் கொண்டான். ''எதிராளி இல்லாத நேரத்துல அவங்களைப் பத்தி விமர்சிக்கக் கூடாது. அது நாகரிகமில்லே. ஹூம்... என்ன படிச்சிருந்து என்ன.. சில பேருக்கு இந்த அடிப்படை ஞானம் கூட இல்லாம போயிடறது...''

மீரா, மெள்ள ஊஞ்சலை விட்டு எழுந்தாள்.

''இருங்க... எங்கே காலையிலே அம்மன் ஊர்வலத்துக்குக் கிளம்பியாறது?''

''மறுபடியும் தேடல்தான்!''

- குமரன், இதைக் கேட்டுச் சிரித்தான்.

''கிட்டத்தட்ட முக்கியமானவங்களைத்தான் பார்த்துட்டியே... அப்புறமென்ன?''

''இல்லே... பஸ்லே வந்த அந்த சினிமா ஸ்டாருக்குச் சொந்தக் காரப்



''நேற்றைக்கு என் வீட்டுக்கு வந்த திருடன் தொழிலுக்குப் புதுசு போலிருக்கு...''
''எப்படிச் சொல்றே?''
''என் பெண்டாட்டி என்னை மிரட்டின போது அவன் பயந்து ஓடிட்டான்....''
- வி.கி. குமார்.

பொண்ணு.. அந்த ஸ்டா ரோட குழந்தை...''

''அவங்களுக்கும் இந்த விபத்துக்கும் சம்பந்தமிருக் கறதா யார் சொன்னாங்க?''

''உங்க அம்மாதான் சொன்னாங்க. உங்களோட சந்தேக லிஸ்ட்டுல அதே நடி கையைச் சேர்ந்தவங்களும் இருக்கறதா...''

''ஆமா போ... பெரிய்ய லிஸ்ட்.. சி. பி. ஐ. லிஸ்ட்... நானா சொல்லி வச்சேன். நடுவுல - இந்த நாலாந்தரப் பத்திரிகைங்க எல்லாம் - அந்த நடிகைய இந்த பஸ் விபத்தோட சம்பந்தப்படுத் திக்கன்னாபின்னான்னு எழுதியிருந்தாங்க.. அம்மா இதைப் படிச்சிட்டிருப்பாங்க. வீட்டுல பொழுது போகாமத்தானே உட்கார்ந் திருக்காங்க.''

"என்ன ஸார் இது, உயிரோடு இருக்கும் தலைவரை இறந்திட் டார்ன்னு, போட்டிருக் கீங்க?"

"நான்தான் அப் பவே சொன்னேனே, செய்திகளை முந்தித் தருவது, எங்க நாளி தழ்ன்னு...."

- ஆர். வசந்தகுமார்.



மீரா, அதை அதிகமாய் பொருட்படுத் தாதவளாய் டிபன் தட்டுக்களை மேசை மீது எடுத்து வைத்தாள்.

''சொல்றேனேயின்னு தப்பா எடுத்துக் காதே மீரா.. .எதையோ துருவிக் கண்டு பிடிக்கறதா நினைச்சிட்டு எதுலேயாவது சிக்கிக்காதே...''

''உம்...''

''உன் மேல அக்கறை இருக்கறதுனால சொல்றேன்...''

மீரா, ஞானத்தின் ஆட்டோவில் ஏறி யதிலிருந்து அவன் ஒரு பக்கம் புலம்பித் தீர்த்தான்.

''என்னம்மா, ராத்திரி எங்கே போயிட் டீங்க... அம்மா பாவம்... வாசலுக்கும் உள் ளுக்குமா எத்தனை நடை நடந்துட் டாங்க?''

மீராவுக்கே கஷ்டமாக இருந்தது.

'சே.. நம்மால எத்தனை கஷ்டம்...'

ஞானம், மேலும் தொடர்ந்தான்.

''தலைவர் அப்பத்தாம்மா வீட்டுக் குள்ளார நுழைஞ்சாரு.. அம்மா என்ன சொல்லி விரட்டி விட்டாங்களோ தெரி யலை. உடனே மோட்டார் சைக்கிள்லே பறந்துட்டாரே ... ஏம்மா, எங்கே போனாத் தான் என்ன... என்னை ஒரு அதட்டல் போட்டு எழுப்பக் கூடாதா?''

''இனிமே அப்படியே செய்யறேன் ஞானம்...''

''இப்ப எங்கேம்மா போகணும்?''

மீரா, தனது கைப்பையிலிருந்து எட் டாக மடித்து வைத்திருந்த ரோஜா நிறக் கல்யாணப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தாள்.

'சௌபாக்கியவதி மீரா என்கிற சீதா லட்சுமியை சிரஞ்சீவி கீர்த்தி என்கிற சீனு வாசனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய்ப் பெரியோர்களால் நிச்ச யிக்கப்பட்டு...'

பத்திரிகையின் வரிகள் அப்படியே நீண்டு கடைசியில் - 'யானும் அவ் வண்ணமே கேட்டுக் கொள்கிறேன். இப்ப டிக்கு தங்கள் விதேயன் விசுவநாதன் - ரிடையர்ட் டி. ஸி. டி. ஓ... நெம்பர் 6, பால கிருஷ்ண மேஸ்திரி தெரு, தஞ்சாவூர் ' - இந்த வரிகளை மட்டும் இரைந்து படித் தாள்.

''பாலகிருஷ்ண மேஸ்திரி தெரு போங்க ஞானம்...''

மனசுக்குள் 'திக்திக்'கென்று ஒருவிதப் பதைப்பு..

''அந்த வீட்டுக்கு... அந்த வீட்டுக்கு...''

'எதுக்கு?'

'எதுக்கா.. கீர்த்தியோட அம்மாவைப் பார்த்து நான் பேசணும்... இதைப் பத்தி.. நான் இன்னமும் இந்தப் புதிருக்கு விடை காணாம அலையறதைப் பத்தி.. நேத்து குமரன் என்கிட்ட கேட்டது பத்தி.. அந்த நிமிஷத்துலேயிருந்து நான் படற பாட் டைப் பத்தி...'

டாக்ஸி, ஆறாம் நம்பர் வீட்டு வாச லில் போய் நின்றதும் - இவள் இறங்க...

திண்ணையில் நின்றபடியே எச்சில் இலையைக் குப்பைத் தொட்டியில் வீச வந்த கீர்த்தியின் தாய், இவளைப் பார்த்து அப்படியே விக்கித்து நின்றாள்.

(தொடரும்)


ஆகஸ்ட் 15

கிருஷ்ணமூர்த்திக்குத் திடுமென விழிப்பு ஏற்பட்டது. சுவர்க் கடிகாரம் பதினொன்று இருபது என்றது. பத்து மணிக்குப் படுத்தான். அதற்குள் விழிப்புத் தட்டி விட்டது. பல யுகங்கள் தூங்கி எழுந்த தெளிவு உடம்பில் வந்து விட்டதாக அவன் உணர்ந்தான். ஜன்னலுக்கு வெளியே ஏதோ பற்றி எரிவது மாதிரி பிரகாசமாய் இருந்தது. எழுந்து ஜன்னலண்டை சென்று நின்று வெளியைப் பார்க்கையில் நிலா வீணே எரிவது தெரிந்தது. மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவருக்கும் ஆகாயத்துக்கும் இடையே காக்காய்ப் பொன் துகள்கள் காற்றில் பறந்தன. நிலவு வறிதே எரிவது கஷ்டமாகத்தான் இருந்தது. அறைக் கதவைத் திறந்து கொண்டு, கைப்பிடிச் சுவரை அணைந்து நின்றான்.

தெரு, ஆட்டம் முடிந்த சினிமாக் கொட்டகை மாதிரி வெறிச்சென்று கிடந்தது. மனிதர்களின் பரபரத்த ஆக்ரமிப்பு இன்றி, குளித்து விட்டு வந்து நிற்கிற குழந்தையைப் போல இப்படி மினுமினுத்துக் கொண்டு கிடக்கிற தெரு ஆச்சர்யம் தருவதாய் இருந்தது. அப்படியே அதைச் சுருட்டிப் பையில் வைத்துக் கொள்ள வேண்டும் போலவும் இருந்தது.

இப்படி அமுதமாய்ப் பொங்கி, நிலா, ஊருக்கு வார்த்துக் கொண்டிருக்கையில் படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக் கொள்வது என்பது மனுஷத்தனம் அல்லவே! அவன் கைலியை நன்கு சுருட்டிக் கொண்டு, கோட் ஸ்டாண்டில் தொங்கின ஜிப்பாவை எடுத்து அணிந்து, படி இறங்கி, தெருப்படிக் கதவைப் பூட்டிக் கொண்டு தெருவுக்கு வந்தான்.

காற்று கரையை உடைத்தேறும் அலையைப் போல அவனை மோதிக் கிறங்கச் செய்தது. என்றுமே சரியான நேரம் காட்டாத மணிக்கூண்டுக்குக் கீழே இருக்கும் டீக் கடையில் ஒரு டீ சொல்லிக் குடித்தான் மூர்த்தி. தேநீர் என்பது இரவுடன் பிறந்த பானம் போன்று, இரவோடு ஒத்திசைந்திருந்தது. உடம்புக்கும் மனசுக்கும் புதுத் தென்பு ஊறியது. டீக் கடையிலேயே ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டான். கைலியைத் தூக்கி மடித்துக் கொண்டான். கடற்கரையைப் பார்த்து நடந்தான்.

கடல் இரைச்சல் இட்டுக் கொண்டிருந்தது. சற்று நிதானித்தால் புரிந்து கொள்ளக்கூடிய பாஷைதான். எதைத்தான் புரிந்து கொள்ள முடியாது? ஒப்புக் கொடுத்தல் என்னும் சமர்ப்பணம் கை வந்தால் எதுவும் சாத்தியம்தான்.

கடல், மூர்த்தியை நல்வருகை சொல்லி வரவேற்றது.

ஏது எதனை ஆக்ரமிக்கிறது? கடல், மண்ணையா? உலகம் கடலையா? இந்த யுகாந்திர பலாத்காரம் எப்போது தொடங்கிற்று? ஹிம்சைகள் தவிர்க்க முடியாத ஓர் உலக நியதிதானா?

மூர்த்தி தன் முன் விரிந்திருக்கும் இந்த அகண்டாகாரத்தில் லயித்துப் போய், கரையை ஒட்டின சிமெண்ட்டுக் கட்டையில் அமர்ந்திருந்தான். தன்னை மறந்திருந்த அவனை ''யார்டா அது?'' என்னும் அண்மைக் குரல் பூமிக்கு அழைத்து வந்தது. அவன் திரும்பினான்.

பிரபஞ்சன்

இரண்டு போலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள். ஒருவர் பிரும்மாண்டமான பருமனும், அதனினும் பெரிய வயிற்றையும், கொண்டிருந்தார். சட்டை அந்தப் பருமனுக்குத் தாங்காது கவ்விக் கொண்டிருப்பது மாதிரி இருந்தது. அடுத்தவர் ஈர்க்குச்சி மாதிரி மெலிந்தும், நோயாளியைப் போல வெளுத்தும், வெம்பிப் போன மாங்காய் மாதிரியும் இருந்தார். ஏதோ உள் நோயினால் அவஸ்தைப்படுகிறவரைப் போலக் காணப்பட்டார். பருமனாக இருந்தவர் மூர்த்தியைப் பார்த்து, ''யார்ரா நீ... இந்த நேரத்துல இங்கே என்ன வேலை?'' என்றார். மூர்த்திக்கு அக் கேள்வி மிகுந்த ஆச்சர்யத்தைத் தந்தது. மதிலேறிக் குதித்தவனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டவர் மாதிரி அவர் பேசினார்.

''சும்மாதான். நல்ல நிலாக் காலம். ரசிக்கலாம்னு வந்தேன்'' என்றான் மூர்த்தி. அந்த இரண்டு காவலர்களும் இந்த பதிலைக் கேட்டு ஆச்சர்யமுற்றவர்களைப் போல ஓரடி பின்னிட்டனர். பருமனார் அவன் முகத்தையும் ஆடைகளையும் தீவிரமாகப் பரிசீலனை செய்து, பின் சொன்னார்.

''சந்தேகமா இருக்கு. தெளிவான பதிலாச் சொல்லலியே. பின்னயும், கைலி வேற உடுத்தியிருக்கே. ஊம்...?''

மூர்த்தி மேலும் ஆச்சர்யத்தில் முழுகிப் போனான். அவன் இதைக் காட்டிலும் தெளிவாக என்ன பதிலைச் சொல்ல முடியும்? தவிரவும் கைலி உடுத்தியிருப்பதும் எப்படி சட்டப் புறம்பான விஷயமாக இருக்க முடியும்?



''புது கிரைண்டரை என் அம்மாதான் முதலில் ஸ்டார்ட் பண்ணித் துவக்க விழா நடத்தணும் என்கிறாயே, அவ்வளவு மாமியார் பக்தியா?''

''உம்... தொட்டால் ஷாக் அடிக்குதா என்று எப்படித் தெரிஞ்சுக்கிறதாம்?''

– சுதர்ஸன்.

''என்ன வேலை பார்க்கிறே நீ...?''

''வாத்தியார்.''

''வாத்தியார்னு சொல்றே. அதுக்குத் தகுந்த நடை உடை இல்லியே. புள்ளைகளுக்கு நல்ல பாடம் சொல்லித் தர வேண்டிய நீயே பைத்தியம் மாதிரி இப்படி நடு ராத்திரியிலே கடற்கரையிலே வந்து உட்கார்ந்துக்கிட்டு இருக்கே. சந்தேகமா யில்லே இருக்கு. ஊம்...''

பருமர் ஒல்லியரைப் பார்த்தார். ஒல்லியர் மிகுந்த சிரமப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஆஸ்த்மா இருக்கும் போலத் தோன்றியது மூர்த்திக்கு. அந்த இரண்டு பேரும் இரண்டடி தள்ளிப் போய் என்னவோ தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். திரும்பி அவனை நெருங்கி நின்றார்கள். பருமர் சொன்னார்.

''நீ எதுக்கும் ஸ்டேஷன் வரைக்கும் வந்து ஐயாவைப் பார்த்துட்டு வந்துடு. வா போகலாம்''

''ஐயான்னா யார்?''

''சப் இன்ஸ்பெக்டர்'' என்று பருமர் எரிச்சலோடு சொன்னார்.

''அவரைப் பார்த்து நான் என்ன சொல்லணும்?''

''............''

பருமராகிய அந்த அரசு ஊழியர் எழுதத் தக்கதல்லாத ஓர் ஆபாச வார்த்தையைப் பிரயோகப்படுத்தினார். அப்புறம் ''நடடா டேசனுக்கு,'' என்றார்.

மூர்த்தி அவர்களுடன் நடக்கத் தொடங்கினான். நிலவு படிப்படியாக மஞ்சள் வர்ணத்தைக் கொட்டி உலகத்தைப் பொன் செய்து கொண்டிருந்தது. நிலவின் வாசனை அவனை நிரைத்து, அதன்பின் அவனைச் சுற்றி வியாபிப்பதாக அவனுக்குத் தோன்றியது. நிலவு ஒரு புஷ்பம். அதிலிருந்து சிந்தும் மகரந்தமே வெளிச்சச் சிதறல்கள். பூமி மேல் படிந்த பூச் சிதறல்களை மிதித்து விடக் கூடாது என்பது மாதிரி மூர்த்தி அவர்களுடன் நடந்தான்.

கடைத் தெருவை ஒட்டின காவல் நிலையத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். ஒரு பழங்கால மேசையின் முன் நடுவயதினராகக் காட்சி அளித்த ஒருவர் சப்தம் கேட்டு விழித்து எழுந்தார். உறக்கம் கெட்டதில் அவர் அமைதி குலைந்தது தெரிந்தது.

''என்னையா?'' என்று முகத்தைச் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

''ஒரு சந்தேகக் கேஸ்'' என்றார் பருமர். கடற்கரைச் சம்பவத்தை விளக்கினார். மேசைக்காரர் மூர்த்தியை அவதானித்தார். ''யார்டா நீ?'' என்றார். அவர் தன்னைக் காட்டிலும் பத்து வயதாவது குறைந்தவராக இருப்பார் என்று மூர்த்தி யோசித்து விட்டு, ''நான் ஒரு வாத்தியார்'' என்றான். அதைக் கேட்டு விட்டு அவர், ''என்ன... அர்த்த ராத்திரியில பீச்சுல உக்காந்திருக்கே? எவளையாவது வரச் சொல்லியிருக்கியா, அங்கே?'' என்றார். இவரும் ஆபாசமாகப் பேசினார்.

''அப்படியெல்லாம் இல்லை,'' என்றான் மூர்த்தி.

''எந்த ஸ்கூலில் வேலை பார்க்கிறே?''

அவன், தான் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தைச் சொன்னான்.

''என்ன... கைலி கட்டி இருக்கே?''

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் நின்றான் மூர்த்தி.

''குந்து அப்படி'' என்று சுவர் ஓரமாகப் போட்டிருந்த வாங்குப் பலகையைக் காட்டினார் அவர். மூர்த்தி அங்கு சென்று அமர்ந்தான். அவனுக்கு நேர் இடதுபுறம் அறை ஒன்று இருந்தது. அது அதிகாரியின் அறையாக இருக்க வேண்டும். அதை ஒட்டிக் கம்பிகளையே கதவாய்ப் போட்டிருந்த அறை ஒன்றையும் அவன் கண்டான். அந்த மேசைக்காரர் கையை மடக்கி, அதன் மேல் தலையை வைத்துக் கொண்டு, மீண்டும் உறங்கத் தொடங்கினார். பாவம், களைப்பாக இருக்கிறார் போலும் என நினைத்துக் கொண்டான் மூர்த்தி.

அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அழுக்கேறிய சுவர். ஒரு மகாத்மா காந்தி படம். கைப்பட்டு நைந்த அட்டை போட்ட நோட் புஸ்தகம். ஒரு வெறும் 'ரீபில்' அதன் அருகில் கிடந்தது.

பருமரும் ஒல்லியரும் உள்ளே வந்தார்கள். அந்த ஒல்லியர் அவன் பக்கத்தில் வந்து அமர்ந்தார். தொப்பியைக் கழற்றித் தலையைத் தடவியபடி அவன் காதுகளில்

சொன்னார்.

''ஐயா வர்ற நேரம் தெரியலை. அவர் வந்து பார்த்துத்தான் உன்னை விடணும். வந்தாலும் வரலாம். வராட்டாலும் இல்லை. ஏதாவது இருந்தா கொடுத்துட்டுப் போயிடு.''

மூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன கேட்கிறார் இவர். அவர் வேக வேகமாக மூச்சு விட்டுக் கொண்டு இருந்தார். ஆஸ்த்மாக்காரர்களே அனுதாபத்துக்கு உரியவர்கள்.

''பணம் எவ்வளவு வச்சிருக்கே? இருபது ரூபா கொடுத்திட்டுப் போயிடு'' என்றார் அவர் இரைத்துக் கொண்டே.

பகீர் என்றது மூர்த்திக்கு. அடடா! அவனிடம் பணம் இல்லை. சுமதி, அம்மா வீட்டுக்குப் போயிருந்தாள். அவளை ஊருக்கு அனுப்ப, ஐம்பது ரூபாய் அன்று காலையில்தான் நண்பரிடம் அவன் கடன் வாங்கியிருந்தான். நாற்பது ரூபாயை அவளிடம் கொடுத்து அனுப்பி விட்டுப் பத்து ரூபாயில் மதியச் சாப்பாடும், இரவு டிபனையும் முடித்திருந்தான். டீக்கும், சிகரெட்டுக்கும் கொடுத்தது போக என்ன சில்லறை இருக்கும்?

அவன் பாக்கெட்டைத் துழாவிச் சில்லறைகளை வெளியில் எடுத்தான். எண்ணினான். எண்பத்தைஞ்சு பைசாக்கள் இருந்தன.

''இவ்வளவுதான் இருக்கு'' என்று மூர்த்தி வெட்கத்துடன் அந்த மனிதரிடம் சொன்னான். தொடர்ந்து, ''காலைலேதான் யாரிட்டயும் கடன் வாங்க முடியும். அவசரம்னா, காலையிலே பத்து மணிக்குத் தரலாம்'' என்றான் அமர்ந்த குரலில்.

வெறுத்துப் போன முகமுடைய அந்த நோயாளி மனிதர் அவனை விசித்திரமாகப் பார்த்தார். திரும்பவும் தொப்பியை அணிந்து கொண்டு, நாலடி தள்ளி நின்றபடி ஒரு மாலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த பருமரைப் பார்த்தார். அதே சமயம் அவரும் இவரைப் பார்த்தார். ஒல்லியர் அவரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார். பருமர், அந்தப் பத்திரிகையைக் கசக்கியபடி மேசை மேல் விட்டெறிந்தார். இருவரும் வெளியேறினார்கள்.

மூர்த்திக்குப் புழுக்கமாகவும் அசதியாகவும் இருந்தது.

சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, சப்தம் கேட்டு மூர்த்தி விழித்துக் கொண்டான். திபுதிபுவென்று நாலு பெண்கள் உள்ளே நுழைந்தார்கள். அசாதாரணமான அளவுக்கு மல்லிகைப் பூச் சூடியிருந்தார்கள். கண்களில் செம்மை ஏறும்படிக்கு



''உன் அப்பா நம்ம கல்யாணப் பத்திரிகையைக் கூட ஓசியிலேயே அடிச்சிட்டார் போலிருக்கே?''

''உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?''

''பத்திரிகையின் பின்னாடி 'அன்பளிப்பு காமாட்சி ஸ்டோர்ஸ்'னு போட்டிருந்திச்சே!''

- வி.கி. குமார்.



நிருபர் : ஆட்சிக்கு.... வந்ததும் விலைவாசியைக் குறைப்பேன்னீங்க; கடைசில, ரூபாயின் மதிப்பைக் குறைச்சிட்டீங்களே?

அரசியல்வாதி : அதையாவது, குறைச்சிருக்கோமேனு.... சந்தோஷப்படுவீங்களா, அதை விட்டுட்டு.....

- ஆர். அப்துல் சலாம்.



ஒருத்தி : உன் கணவர் உன்னை வாடி, போடின்னு கூப்பிடுகிறாராமே... என் கணவர் சொன்னார்.

மற்றவள் : ஏமாந்துவிடாதே, அப்படிச் சொல்லி உன்னை வாடி, போடின்னு கூப்பிடப் பார்க்கிறார்!

– நல்லாலம் காசிதாசன்.

மை தீட்டியிருந்தார்கள். கண்ணைப் பறிக்கும் மினுமினுப்பான வர்ணங்களில் சேலை உடுத்தியிருந்தார்கள். வந்தவர்கள் ஏற்படுத்தின சப்தத்தில் மேசையாளர் விழித்துக் கொண்டார். அவர் எரிச்சலடைவார் என்று எதிர்பார்த்த மூர்த்தி ஏமாற்றத்துக்குள்ளானான். பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்ந்தாற்போல அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். அந்தப் பெண்களை அழைத்து வந்தவர்களைப் போன்று காணப்பட்ட சில காவலர்கள், அதிகாரியின் அறையை ஒட்டிய பகுதிக்குச் சென்று மறைந்தார்கள்.

அந்தப் பெண்கள் சுவரை ஒட்டி முதுகைச் சுவரில் சாய்த்துக் கொண்டு அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் மூர்த்தியைப் பார்த்து, தமக்குள் என்னவோ பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

நால்வரில் ஒருத்தி மிக இளமையானவள். இருவர் நடுவயதினர். ஒருத்தி என்ன வயதினள் என்பதையே அனுமானிக்க முடியாத விதத்தில் இருந்தாள். மேசையாளர் ''என்ன கிரிஜா, ஆளைப் பார்த்து ரொம்ப நாளாச்சே. எங்களையெல்லாம் மறந்தே போய்ட்டே...'' என்று அந்தப் பெண்களில் இளமையானவளைப் பார்த்துச் சொன்னார். இவ் வார்த்தைகளில் பெரிய நகைச்சுவை பொதிந்திருப்பது மாதிரி அவர்கள் சிரித்தார்கள்.

''நானா, நீங்களா? தேவையின்னாத் தான் தேடுவீங்க. அல்லாக்காட்டி சீந்தக் கூட மாட்டீங்களே..''

''தே. தே. அப்பிடியெல்லாம் சொல்லாதே.''

அந்த இளம் பெண்ணும் இன்னொருத்தியும் வெற்றிலை போட்டுக் கொண்டார்கள். அதற்குள் பருமர் உள்ளே நுழைந்தார். வயது கடந்தவள், ''இன்னா குண்டு மணி சௌக்யமா?'' என்றாள் அவரைப் பார்த்து.

''வாயிலே ஒண்ணு போட்டாத் தெரியும்'' என்றார் அவர். செல்லமாகத்தான் சொன்னார். எல்லோரும் இதற்குச் சிரித்தார்கள்.

மேசையாளர் எழுந்து நின்றார். மூர்த்திக்குத் திடுக்கிட்டது. அவர் கீழே சீருடை அணியாமல், கோடு போட்ட உள்ளாடை மட்டும் அணிந்திருந்தார்.

''இந்த ஆளைப் பாரு கிரிஜா. வாத்தியாராம். லூஸ் மாதிரி கைலி கட்டிக்கிட்டு ராத்திரி பன்னண்டு மணிக்கு பீச்சில உக்காந்திருக்கான்.''

அந்தப் பெண்கள் அவனைப் பார்த்தார்கள்.

''பீச்சுக்கு எதுக்குய்யா அந்த நேரத்துல.,.. என் வீட்டுக்கு வந்திருக்க வேண்டியதுதானே?'' என்றாள் கிரிஜா அவனைப் பார்த்து. மேசையாளர் உள்பட அத்தனை பேரும் உரக்கச் சிரித்தார்கள்.

மூர்த்தி மிகவும் குழம்பிப் போய் இருந்தான். விரும்பின இடத்துக்குப் போவது கூட எப்படித் தவறாக இருக்க முடியும்? ராத்திரியானால் என்ன? ஒருவன் ஒன்றை அவன் விரும்பும் நேரத்தில்தானே செய்ய முடியும்.

''ஐயா வர்ற நேரம். யூனிபார்மை மாட்டிக்கிடறேன்...'' மேசையாளர் மறைந்தார். சற்று நேரத்தில் சீருடை அணிந்து திரும்பினார்.

வாகனம் வந்து நிற்கிற சப்தம் கேட்டது. நிலையம் சுறுசுறுப்படைந்தாற் போல இருந்தது. மேசையாளர், பருமர், ஒல்லியர் மற்றும் இரண்டு பேரும் எழுந்து விறைத்துக் கொண்டு நின்றார்கள்.

பெண்கள் போய்ச் சேர்ந்திருந்தார்கள். அவர்களின் பூ வாசனை மட்டும் அங்கேயே சுழன்று கொண்டிருந்தது.

அதிகாரி எனப்பட்டவர் உள்ளே நுழைந்தார். எல்லோரும் சல்யூட் அடித்து நின்றார்கள். அதிகாரி மூர்த்தியைப் பார்த்துக் கொண்டே அவனைக் கடந்தார். அறை வாசலில் நின்று மீண்டும் அவனைப் பார்த்தார்.


''சார்... நீங்க கிருஷ்ணமூர்த்தி சார் தானே?'' என்றார் அந்த அதிகாரி.

மூர்த்தி எழுந்து நின்றான்.

''ஆமாம்.''

''சார். என்னைத் தெரியலையா? நான் தான் கேசவன். உங்க ஸ்டூடன்ட். எஸ். எஸ் எல்.சி.க்கு எனக்குத் தமிழ் எடுத்தது நீங்கதானே சார்... இங்க எப்படி சார்... இந்த நேரத்துல...''

''பீச்சுல உக்காந்திருந்தேன். இங்க இட்டுக்கிட்டு வந்துட்டாங்க.''



''இந்த டாக்டர் எதுல ஸ்பெஷலிஸ்ட்....?''
''வேற எதுல..... ஃபீஸ் கறக்கறதுலதான்!''
- சீர்காழி வி. ரேவதி.




சாவி
21.8.91 தேதியிட்ட சுதந்திர தினச் சிறப்பிதழில்
கவியரசு வைரமுத்து எழுதும் இதனால்
சகலமானவர்களுக்கும்...
கவிதை நனைந்த கட்டுரைகள்
மறந்து போ நெஞ்சமே!
அனுராதா ரமணன்
எழுதும்
புதிய தொடர்கதை


அழகு மிளிரும்
அடர்த்தியான கூந்தலுக்கு
நம்பகமான ஒரே கூந்தல் தைலம்
குணு
கூந்தல் தைலம்
தலைமயிர் உதிர்தல், செம்பட்டை நிறம், பருவத்திற்கு முன் ஏற்படும் பித்த நரைகள் மாறும். தினசரி கூந்தலுக்கு தடவி வந்தால் தலைமயிர் நீண்டு கருத்து அடர்த்தியாய் வளரும். தலை அரிப்பு, பொடுகு மண்டையில் சொரிந்தால் செதில் உரிதல் குணமாகும். பெண்கள் ஆண்கள் அனைவரும் விரும்பி உபயோகிக்கின்றனர்.
1 பாட்டில் விலை
ரூ. 16-25
VPP உண்டு.
தபால் செலவு தனி
நவசக்தி வைத்தியசாலை
தபால்பெட்டி எண். 7 சேலம் 636 001
எல்லா மருந்து, மளிகை மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கிறது



உதவி ஆசிரியர் : அந்த அரசியல்வாதி பேட்டியில் சொன்ன கருத்துப் பற்றி நீங்க 'மிகப் பெரிய ஜோக்' குன்னு எழுதியது தப்பாப் போச்சு....

பத்திரிகை ஆசிரியர் : ஏன்.... என்ன ஆச்சு?

உதவி ஆசிரியர் : சிரிப்புக்குரிய சன்மானம் பத்து ருபாயை உடனே அனுப்பவும்னு லெட்டர் போட்டிருக்கார்!

- எஸ். கந்தசாமி.

''எவன்டா இவரை அழைச்சுக்கிட்டு வந்தது?'' என்று அதிகாரி அந்தக் காவலர்களைப் பார்த்தார். பருமரும், ஒல்லியரும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''சார்... தெரியாமே...'' என்றார்கள். அவர்கள் முடிக்கும் முன்பே அதிகாரி, ''... தெரியுமா?.... தெரியுமா?'' என்று கத்தினார். விசித்திரமான பாஷையாக இருந்தது அது. மூர்த்தி நிச்சயமாக அந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொடுக்கவில்லை. முடித்து விட்டு, ''நீங்க வாங்க சார்'' என்று அறை உள்ளே நுழைந்தார். மூர்த்தி அவர் முன் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

''சௌக்யமா சார்?''

''இருக்கேன்.''

''அம்மா சௌக்யமா?''

''உம்.''

''பெரிய பையன் என்ன பண்றான்?''

''பத்தாவது போயிருக்கான்.''

''குழந்தையில் பார்த்தது. சின்னவன்?''

''ஆறாவது.''

''டீ சாப்பிடறீங்களா?''

''சாப்பிடலாம். ஒரு சிகரெட் இருந்தால் தேவலை.''

மூர்த்தி சில்லறைகளைத் தேடி எடுத்தான்.

''சும்மா வைங்க சார்.''

அவர், காவலரைப் பெயர் சொல்லி அழைத்தார். இவனைப் பார்த்து, ''என்ன பிராண்ட் சிகரெட் சார்?'' என்றார்.

சொன்னான்.

''டீயும், சார் சொன்ன சிகரெட் ஒரு பாக்கெட்டும் மறக்காம தீப்பெட்டியும் வாங்கியா.... யார் யோக்யர், எவன் அயோக்கியன்னு கூடத் தெரிஞ்சுக்காமே இன்னாடா உத்யோகம் பாக்கிறீங்க? சுத்தக் களிமண்ணா இருக்கு உங்க தலையிலே...''

''உங்க கதைகளையெல்லாம் நம்ம வீட்டிலே படிப்பா, சார்... எனக்குத்தான் நேரம் இல்லை. அடி, அவரு எங்க வாத்தி யாருடின்னு பெருமையாச் சொல்லிக்குவேன்.''

மூர்த்தி சிரித்து வைத்தான்.

''எப்போ இந்த வேலைக்கு வந்தே?''

''எண்பத்தி ஆறிலே வந்தேன், சார்...''

''எத்தனை குழந்தைகள்?''

''இனிமேல்தான். கல்யாணம் ஆகி எட்டு வருஷமாச்சு. இரண்டு பிறந்து செத்துப் போச்சு.''

''எல்லாம் சரியாப் போயிடும். கவலைப்படாதே. சின்ன வயசுதானே. எல்லாம் பொறக்கும்.''

''வீட்டுக்கு வாங்க சார். உங்களைப் பார்த்தா அவளுக்கும் சந்தோஷமா இருக்கும். ஆறுதலாவும் இருக்கும்.''

அவன் குரலும், அவன் முகமும் மிகவும் மாறிப் போய் தழுதழுத்ததாக மூர்த்திக்குத் தோன்றியது.

டீயும் சிகரெட்டும் வந்தன. இருவரும் டீ குடித்தார்கள். அவன் புகைத்தான்.

''அப்போ நான் புறப்படலாமா?''

''நான் உங்களை வீட்டுலே டிராப் பண்றேன் சார்.''

அவர் எழுந்தார்.

''மணி என்ன?''

''நாலே முக்கால்.''

''வேணாம். நடந்தே போயிடறேன். இன்னும் நிலா இருக்கும்.''

''என்ன சொன்னீங்க?''

''இல்லே. நிலா, சமயங்கள்லே ஆறு வரைக்கும் கூட இருக்கும்.''

''நான் வீட்டுலே விட்றேன் சார்.''

''எதுக்குப்பா... எனக்கு நடந்தாத்தான் சந்தோஷம். நீ இரு. நிலாவில நடக்கறது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

''உங்க இஷ்டம். மனசுக்குள்ளே ஒன்றும் வச்சுக்காதீங்க சார். தெரியாம நடந்து போயிடுச்சு.''

''அதனால என்ன?''

மூர்த்தி வெளியே வந்தான். ஒல்லியர் அவனைத் தொடர்ந்து வந்தார். அவருக்கு இரைத்துக் கொண்டிருந்தது.

''மருந்து எடுத்துக்கறீங்களா? இதுக்குச் சித்தவைத்தியத்திலே ரொம்ப நல்ல மருந்து இருக்கு.''

அவர் இருமினார்.

மூர்த்தி தெருவில் நடந்த போது நிலா இருந்தது. அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

மலைச்சாரல்

1. நட்சத்திரங்களே இல்லாமல் ஒரு திரைப்படம் எடுக்கும் போது அது எந்த வகையில் உதவுகிறது?

படத்தின் வெற்றிக்கு நட்சத்திரச் செல்வாக்கை நம்பியிராமல் இயங்கும்போது திரைக்கதையும் ஃபார்முலாவிலிருந்து விடுபட்டு விடுகிறது. செயற்கையான திருப்பங்கள் இல்லாமல், இயல்பாக மேற்கொள்ள வேண்டிய பாதையில் விவரித்துச் செல்ல முடிகிறது.

2. அதனால் ஏற்படும் இதர பலன்கள் என்ன?

இமேஜைக் கட்டிக் காக்க வேண்டிய 'முன்னணி முகம்' இல்லாததால் நிகழ்ச்சிகள், நடையுடை பாவனைகள் எல்லாமே நடைமுறை வாழ்வைப் பிரதிபலிப்பதாக அமைத்து விடுகின்றன.

3. 'மலைச்சாரல்' படத்தில் அவை எவ்வாறு இடம் பெற்றுள்ளன?

வெளியுலகிலிருந்து ஒதுங்கி ஒரு சிறிய கிராமத்தில் வாழும் மலைவாழ் இனத்தவர், அவர்களுடைய பழக்க வழக்கங்கள் - நம்பிக்கைகள் - கட்டுத்திட்டங்கள் ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அவற்றிலிருந்து சற்றும் விலகிச் செல்லாமல் திரைக்கதையை அமைத்துக் கொள்ள இயக்குனரால் முடிந்திருக்கிது.



4. அது மட்டும் போதுமா?

போதாதுதான். படப்பிடிப்பும் இதற்குத் துணை போயிருக்கிறது. 'க்ளோஸ்அப்' புகளைக் கூடியவரை தவிர்த்து, இயற்கையின் வனப்புக்கு முக்கியத்துவம் தந்து, படப்பிடிப்புக் கோணங்களை அமைத்திருப்பதால் பல ஃப்ரேம்கள் வண்ண ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. 'அட, நம் ஊரிலா இத்தகைய எழில் மிகு வனப்பிரதேசங்கள்!' என்று வியக்க வைக்கின்றன. இசை இன்னொரு பாராட்டுக்குரிய அம்சம். முராரிக்கு ஒரு ஷொட்டு.

5. நடிப்பெல்லாம் எப்படி?

நமக்குத் தெரிந்தவர்கள் நாலுபேர் - சரத் பாபு, கீதா, காந்திமதி, பூர்ணம். வரையறுக்கப்பட்ட வட்டத்துக்குள் கச்சிதம். கதாநாயகன் புதுமுகம். சில கோணங்களில் நாற்பது வருடங்களுக்கு முந்தைய ஜெமினி கணேஷ். இயக்குனரே ஒரு இதமான பாத்திரத்தில்.

6. முடிவாக?

அறிமுகக் காட்சிகளில் பச்சா.... அதன்பின் அச்சா!

- சி. ஆர். கே.

நேற்றுவரை

"சௌக்கியமா?"

இப்படிக் கேட்ட பிறகுதான், மீரா தனக்குத்தானே மானசிகமாய்க் குட்டிக் கொண்டாள்.

"இப்படியா கேட்கறது.. பிள்ளையைப் பறிகொடுத்துட்டு நிக்கறவளைப் பார்த்து..."

அவள், அதற்கு மேல் என்ன பேசுவது என்றே தெரியாமல், வாசற்படியிலேயே நிற்க, கீர்த்தியின் தாய் ஒரு கணத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, தலையசைத்து அவளை அழைத்தாள்.

"வா..."

"பரவாயில்லே... நான் இப்படியே உட்கார்றேன். உங்களைப் பார்த்துப் பேசணும் போல இருந்தது.. அதான்... கைய அலம்பிட்டு வாங்களேன்..."

"உள்ளே வரக் கூடாதுன்னு யார் சொன்னது? நானாவா... அவன்தான் உன்னைப் பார்த்ததாச் சொன்னான். அவனுக்குத்தான் இந்த மாதிரி அசட்டு நம்பிக்கை எல்லாம் உண்டு. கேட்டா என் பேருல பழியப் போடுவான். எதையும் தானாச் சொல்ற தைரியம் கிடையாது.. நீ உள்ளே வா..."

மீராவுக்கு அப்பொழுதும் தயக்கம்தான். அவள் கண்கள் சுற்று முற்றும் பாட்டியைத் தேட, கீர்த்தியின் தாய் புரிந்து கொண்டாற்போல விரக்தியாய்ப் புன்னகை செய்தாள்.

"யாரைத் தேடறே... பாட்டியையா?"

"உம்..."

"ஒரு மாசமா ஆஸ்பத்திரியில கிடக்கா. இங்கே இருந்த வரைக்கும், பச்சைக் குழந்தை மேல பட்டாக் கூட குளிக்க ஓடுவா.. இப்ப ஒரு மாசமாக் குளியலே இல்லே.. பூஜை இல்லே. மூக்குல குழாய் செருகி, கஞ்சியும், பாலும் ஊத்தறது..அதுவும் அந்த நேரத்துல யார் பக்கத்துல இருக்காங்களோ அவங்க ஊத்தறதுதான். எல்லாத்தையும் பார்த்தாச்சு. இன்னமும் எதுக்காக இப்படி அந்தப் பிராணன் அவஸ்தைப்படறதோ தெரியலை.. நீ உள்ளே வா.."

மீரா, நடுங்கும் பாதங்களை, மிகச் சிரமப்பட்டு நகர்த்தி, வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தாள். அவளுக்கு முன்னால், தளர்ந்து போன நிலையில் பரிதாபமாய்க் கீர்த்தியின் தாய்...

திருமணமாகி அந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த போது கூட, இப்படித்தான் கீர்த்தியின் தாயும், சித்தியுமாய் ஆரத்தி கரைத்துச் சுற்றி விட்டு அவர்களுக்கு முன்னால் போனார்கள்.

அப்பொழுது இந்த அம்மாள் பருத்து வளர்ந்த கண்ணாடி வாழை மாதிரி நிகுநிகுவென இருந்தாள். வெள்ளை ஃபுல் வாயில் ரவிக்கைக்கும், புடைவைக்கும் இடைப்பட்ட பின் முதுகு, மஞ்சள் பூச்சுடன் வெள்ளரிப் பழம் போல மின்னியது..

ஒரு வருஷத்துக்குள் இத்தனை மாற்றமா?

"எங்கள் வீட்டுக்குள் இன்னும் மெட்ராஸ் நாகரிகம் எட்டிப் பார்க்கலே மீரா... இந்த ஃபேமிலி லேடீஸ் எல்லாரையும் பாரு... தேவையான அளவு சதையோட ஆரோக்யமாகவே இருப்பாங்க.. சாப்பாட்டைக் குறைச்சிட்டு, ஹெல்த் கிளப்புக்குப் போற வழக்கம் எதுவும் இல்லே. நல்ல சாப்பாடு. நிறைய வேலை. மனசுல எந்தவிதக் கலக்கமும் இல்லே. எங்கம்மாவைப் பார்த்தே இல்லே... அம்பத்தியாறு வயசுக்கும் கன்னத்தைப் பாரு.. நறுக்கி வச்ச மாம்பழக் கதுப்பு மாதிரி... நீ கூட அப்படித்தான் இருக்கணும்..."

மீராவின் கண்களை நீர் திரையிட்டது.

ரேழி நடையைத் தாண்டி, உள் கூடம் இருளடைந்திருந்தது. வெளி வெளிச்சம் வருவதற்கு வழியாயிருந்த பெரிய ஜன்னல் மூடி வைக்கப்பட்டிருந்தது.

கூடத்து இருட்டில், கட்டிலோடு போர்வைச் சுருளுக்குள்.. யாரது...

கீர்த்தியின் அப்பா...

எதிரே டபரா தம்ளரில் ஈ மொய்த்துக்

அனுராதா ரமணன்

நந்தவனம் 18

கொண்டிருக்க, கலகலவெனப் பேசும் சித்தப்பாதான் இவளைப் பார்த்ததும் புருவத்தை உயர்த்தினார்.


''அட, வாம்மா...''

''யாருடா...''

போர்வைச் சுருள் வினவியது.. சித்தப்பா, தாம் இடுப்பில் சவாரி செய்து கொண்டிருந்த மூன்று வயசுச் சிறுமியைக் கீழே இறக்கி விட்டு விட்டுத் தலையைச் சொறிந்தார்.

''யாருடா...''

இதற்குள் கீர்த்தியின் தாயே குரல்





"எங்க ஆபீஸ்ல எனக்கு முன்னாடி இருந்தவர் கிணறே வெட்டாமல் ஐயாயிரம் சாப்பிட்டு விட்டார்!"

"அடடா... அப்புறம் எப்படிச் சரி செய்தீங்க?"

"'அது பொதுமக்களுக்கு இடையூறா இருக்கு. மூடிடணும்'னு ஐயாயிரம் எடுத்துட்டுத்தான் சரி செய்தேன்."

- எஸ். கந்தசாமி.

கொடுத்தாள்.

''வர வர உங்க பாட்டி மாதிரியே நச்சரிக்க ஆரம்பிச்சாச்சு நீங்களும். ரூமுக்குள்ள இருந்தா மனுஷாளைப் பார்க்க முடியலை. ஹால்லே கொண்டு வந்து கட்டிலைப் போடுன்னு சொன்னீங்க.. இருக்கற அரை குறைக் கண்ணால யாரைப் பார்க்க முடியறது...''

''குரலையாவது கேட்கலாம் இல்லையாடீ?''

''கேட்டு என்ன ஆகப் போறதுன்னேன். கை, கால் வரல்லே. வெளி வெளிச்சம் கண்ணை உறுத்தறது. ஜன்னலைச் சாத்தி, கூடத்தையே இருட்டாக்கியாச்சு. பெட்பான் வைக்க உங்க தம்பி பக்கத்துலேயே இருக்கார். பிடிவாதமாக் கட்டிலைப் பிடிச்சிண்டு நடந்து கொல்லைப் பக்கம் போவேன்னு அடம்பிடிச்சு, மண்டைய உடைச்சு.. தையல் போட்டாச்சு... டாக்டரானா, பிளட் பிரஷர் ஏறக் கூடாது. ஹார்ட்டுக்கு ஆகாதுங்கறார்... எதையாவது கேட்டாத்தானே.. ஹால்லே சந்தைக் கடை மாதிரி போக்குவரத்து... சித்த தூங்க முடியறதா.. யார் வந்தாலும் 'யாரு யாரு'ன்னு இதே ஸ்மரணை...''

மீரா, தன் மாமியாரையே கண் கொட்டாமல் பார்த்தாள்.

திருமணமான புதிதில் பத்து நாட்கள் கீர்த்தியுடன் அந்த வீட்டில் தங்கியிருந்த போது அவள் பார்த்த மாமியாரே வேறு.

அதிர்ந்து பேச மாட்டாள். கணவரிடம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றாலும், அங்குமிங்கும் ஓடும் மைத்துனர் குழந்தைகள் மூலமோ, நாத்தி மூலமோதான் சொல்லி அனுப்புவாள்.

'இந்தாடா கோபு, உங்க பெரியப்பா இப்ப சாப்பிட வர்றாரா... இல்லே, இன்னொரு டோஸ் காப்பி குடிக்கிறாரான்னு கேளு....'

அப்படிப்பட்டவள், கணவரை - அவர் கையாலாகாது போய் விட்டதினாலேயே இந்த விரட்டு விரட்டுகிறாளே...

மீரா ஏதோ பேச எண்ணி வாய் திறக்க, கீர்த்தியின் தாய் - 'எதுவும் பேசாதே' என்று ஜாடை காட்டினாள்.

மனிதர், மனைவி இத்தனை பேசியும் விடாமல் கேட்டார்.

''ஏண்டீ, யாரோ புதுசா வந்தாப்பல இருக்கே, யாருன்னுதானே கேட்டேன்; அதுக்கு இத்தனை பேசணுமா...''

''எதிர்வீட்டு நடேசன் பொண்ணு. பட்டணத்துல படிச்சிட்டிருந்தா. இல்லையா... லீவுக்கு வந்திருக்கா. 'மாமி, உங்க வீட்டுப் புழக்கடையில் மருதாணி இருக்குமே.. ப றி ச் சு க் க ட் டு மா ன்னு கேட்டா... ஆகா, வாயேன்னு சொன்னேன்.. வந்திருக்கா. போறுமா?''

''போறும்... போறும்...''

அவர், சுவரைப் பார்க்கத் திரும்பிப் படுத்தார். அந்த அம்மாள், மீராவின் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் அழைத்துக் கொண்டு, பின்கட்டுச் சமையலறைக்குப் போனாள்.

சமையற்கட்டில் தேங்காய் துருவிக் கொண்டிருந்த சித்தி, இவளைக் கண்டதும் பதைத்துப் போய் எழுந்தாள்.

அந்த ஒரு நிமிஷத்துக்குள் சின்னதும் பெரிசுமாய் அந்த வீட்டு அங்கத்தினர்கள் அத்தனை பேரும்...

சித்தப்பா கூட, மௌனமாய் இவர்களைப் பின் தொடர்ந்து வந்து, சமையலறை வாசற்படியில் இரு கைகளையும் ஊன்றியபடி அவளையே பார்த்தார்.


''நீ இங்கே வந்திருக்கறதா நாகு சொன்னான். ஏன், நேரே இங்கே வந்து தங்க... ஆனா முடியாது. பார்த்தியோ இல்லையோ.. கீர்த்தி விஷயம் கேட்டு அடி அறுத்த மரம் மாதிரி விழுந்தவர்தான். ஹார்ட் அட்டாக், பிளட் பிரஷர், ஸ்டிரோக்... என்னென்னமோ பேர் சொல்றா.. ஒண்ணும் புரிய மாட்டேங்கறது. படுத்த வாகிலேயே எல்லாம் நடக்கறது... கண்ணும் போச்சு.. பேசாம ரூமுக்குள்ள படுத்திருக்கலாம். அங்கே இருந்தா, அவன் நினைப்பு அதிகமாறதாம். ஹால்லே படுத்தாக் குழந்தைகள், பேச்சுப் பராக்குல கொஞ்சம் பொழுது போறது...''

இதற்குள் - சித்தப்பா இடைமறித்தார்.

''நான் கூட ஒரு நிமிஷம் ஆடிப்

நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். பள்ளியில் தமிழ் மீடியத்தில் படித்ததனால் இங்கிலீஷ் கிராமர் என்றால் எனக்கு கொஞ்சம் அலர்ஜி.

ஒவ்வொரு வருடமும் பரீட்சைக்குத் தேவையான இங்கிலீஷ் சம்மரிகளைப் படித்து, மனப்பாடம் செய்து, பரீட்சைகளில் எப்படியோ பாஸ் செய்து விட்டேன். ஆனால்...



படிப்பை முடித்து விட்டு, வேலைக்குச் சென்றபோதுதான் ஆங்கிலத்தின் அவசியத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

எங்களது ஹெட் ஆபீஸிலிருந்து வரும் அதிகாரிகள் ஆங்கிலத்தில் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் பேச முடியவில்லையே என்று பல சமயங்களில் வேதனைப்பட்ட துண்டு.

மேலும் அலுவலகத் தொடர்பான கடிதங்கள் எழுத அடுத்தவர்களது உதவியை நாடும் போது, இத்தனை வருஷம் சர்வீஸ் ஆகிறது இது கூடத் தெரியவில்லையே" என்று அவர்கள் ஏளனமாகப் பேசுவதைக் கேட்கும் போது, எனக்கு அழுகையே வந்துவிடும்.

என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாக விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது.

இது என்னை நாடி வந்துள்ள நல்ல வாய்ப்பு என்ற நம்பிக்கையுடன் விவேகானந்தா கல்வி நிலையம் நடத்தும் தபால் முறைப் பயிற்சியில் சேர்ந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. ஆம்...

ஆங்கில இலக்கணத்தை அனைவருக்கும் புரியும் வகையில் அறிமுகப்படுத்தி, வாக்கியங்களை அமைக்கும் முறை பற்றி எளிய முறையில் சொல்லிக் கொடுத்து, தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச பல பயிற்சிகளைத் தொகுத்து வழங்கி, ஓர் ஆசிரியர் நம்மிடம் நேரில் உரையாடுவதைப் போல பயிற்சி முறை மிகவும் எளிய முறையில் அமைக்கபபட்டுள்ளது.

ஆர்வமுடன் இப்பயிற்சியை மேற்கொண்டதன் பலனாய் இப்பொழுது

நாடி வந்த நல் வாய்ப்பு!..

என்னால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடிகிறது. இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமின்றி கடிதங்கள் எழுத முடிகிறது.

மிகக் குறுகிய காலத்தில் என்னை ஆங்கில மொழியில் புலமை பெறச் செய்த விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு நான் என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன்.

Mrs. S. விசாலாட்சி

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலப் பயிற்சி பெறலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் உடனே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண்: 4986
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

NAGA

போயிட்டேன் மன்னி. மீரா வாய் திறந்து பேசியிருந்தா அண்ணா, 'ஹோ'ன்னு கிளம்பியிருப்பார். பிழைக்க வச்ச பாட்டுல - மறுபடியும் விபரீதமா ஏதாவது ஆச்சுன்னா என்ன செய்யறது.. நல்ல வேளை... நீங்க, அவளைப் பேசவே விடல்லே... மேலே மேலே பேசிட்டே போய் உள்ளே அழைச்சிட்டு வந்துட்டீங்க...''

அந்த அம்மாள், பெருகிய கண்ணீரைப் புடைவைத் தலைப்பால் ஒற்றி எடுத்தாள்.

இதற்குள் யாரோ காப்பி கலந்து கொண்டு வந்து வைக்க, சித்தி, கொஞ்சமே தெரிந்த இவளுடைய கணுக்கால் பொசுங்கலை, புடைவை விளிம்பை, சற்றே விலக்கிப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள்.

''அப்புறம் சொல்லு மீரா... இங்கே என்ன விஷயமா...''

கீர்த்தியின் தாய், மீராவின் முன் நெற்றி கேசச் சுருளை ஒதுக்கி விட்டாள்.

மீரா, ஒருவித தர்மசங்கடத்துடன் சுற்றி நின்ற இரண்டுங்கெட்டான்களைப் பார்த்தாள்.

சித்தியின் பெரிய பெண், பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டு வந்த தோட்டக்காரனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் :

''புது மன்னி செல்லம்... கொஞ்ச நாள் முந்தி கல்யாணமாச்சு.. கீர்த்தி அண்ணா பெண்டாட்டி... நீ அப்ப, பிரசவத்துக்குப் போயிருந்தே...''

மீராவின் முகத்தைப் பார்த்தே, அவளது கஷ்டத்தை ஊகித்த சித்தி, குழந்தைகளை விரட்டினாள்.

''ஏய், என்ன வம்பு அங்கே? எல்லாருக்கும் ஸ்கூல் இருக்கு இல்லே? மளமளன்னு ரெண்டு வாய் அள்ளிப் போட்டுண்டு கிளம்புங்கோ... வாசப் பக்கம் போய் எதுவும் மூச்சு விடக் கூடாது. ஏற்கெனவே பெரியப்பாவுக்கு உடம்பு சரியில்லே... அங்கே போய், கிடைச்ச சரக்கை அவிழ்க்க வேண்டாம். தெரியறதா.. முதல்லே, பெரிசுகளுக்குத்தான் சொல்லணும்...''

அத்தனையும் சொல்லி வைத்தாற் போல - ரயில் பெட்டியின் அடுக்குத் தொடராய்ச் சமையலறையை ஒட்டிய முற்றத்து வராந்தாவில் தட்டைப் போட்டுக் கொண்டு உட்கார, சித்தியின் பெரிய பெண் பன்னிரண்டு வயசு நாராயணி மட்டும், மீராவின் காதருகே கிசுகிசுத்து விட்டுப் போனாள்.

''புது மன்னி, நீங்க இனிமே எங்க கூடத்தானே இருப்பீங்க?''

மீரா, சட்டெனத் தலை குனிந்தாள்.

இதே பெண்ணுக்குத் தலை பின்னி விடப் போய், கீர்த்தியிடம் செல்லமாய்த் திட்டு வாங்கியது நினைவுக்கு வந்தது.

'என்ன கரிசனம்? நீ வந்து தலை பின்னி விடற வரைக்கும் அவ, விரிச்ச தலையும், கையில் சீப்புமாக் காத்துட்டிருந்தாளா.. அட பின்னத்தான் பின்னினியே... சட்டுப் புட்டுனு ஒத்தைப் பின்னலா - முடிஞ்சு விட மாட்டே? பெரிய ஹேர் டிரஸ்ஸர் மாதிரி.. சரி.. இங்கே வா...'

'என்ன வேணும்.. இங்கேயே நிக்கறேன். சொல்லுங்களேன்...'

'என் கழுத்து மூணு அடி தூரத்துக்கு நீளாது...'

'புரியலை...'

'இன்னுமா புரியலை?'

'ச்சீ, போங்க...'


மீரா குலுங்கி நிமிர்ந்தாள்.

எதிரே, வற்றிப் போன கன்னமும், குழி விழுந்த கன்னங்களுமாய்க் கீர்த்தியின் தாய்.

இவளிடம், தான் வந்த விஷயத்தை எப்படிச் சொல்வது?

மீரா திகைத்துப் போய் நின்றாள்.

(தொடரும்)



போன கோழி பிரியாணி ஆகி விட்டது' என்று பி. பி. சி. வர்ணித்திருப்பது குறித்து?

! 'கமகமவென்று மணம் வீசுகிறது' என்று முன்பு பி.பி.சி. வர்ணித்ததா என்பதைக் கேளுங்கள்! திணறிப் போகும்!


O **ஐ. எஸ். வாசு, மாடம்பிள்ளைதர்மம்** ★

? **ஒவ்வொரு விவசாயியின் குமுறலுக்கும் காரணமான உர விலை ஏற்றம் பற்றி...?**

! இப்போது உர விலை உயர்வை பத்து சதம் குறைத்திருக்கிறார்கள். இதுவும் விவசாயிக்கு முழு திருப்தி அளிக்காது என்பது நிச்சயம். நிற்க, இந்த மானியம் நேரடியாக விவசாயிக்கு வழங்கப்படுவதல்ல. உர கம்பெனிகளுக்குத் தந்து, அதன் மூலம் உர விலை குறைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அடிப்படையில் தவறானவை. சுதந்திரமான மார்க்கெட் பொருளாதாரமே நல்லது. இந்த உர மான்யம் வழங்கி

முதல்வர் அறிவித்துள்ள திட்டம் எப்படி?

! செல்வந்தர்களிடமும் இதர பொது மக்களிடமும் நன்கொடை வசூலித்து எல்லாக் கோயில்களையும் பராமரிக்க முடியாது. சில கோயில்களுக்கு விமோசனம் பிறக்கலாம். அவ்வளவே. கோயில்களுக்கு - பெரிதோ, சிறிதோ - சொத்து எழுதி வைத்திருக்கிறார்கள் முன்னோர்கள். அந்தச் சொத்துக்கு உரிய வருவாய் ஒழுங்காகக் கோயில்களுக்குக் கிடைக்கச் செய்தால் போதும். பெருமளவு பிரச்னை தீர்ந்து போகும். கோயில் நிர்வாகிகள் கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதைத் தவிர்க்கவும் உரிய நடவடிக்கை தேவை. இவற்றைச் செய்தால், பணக்காரக் கோயில்களிலிருந்து உபரி வருமானம், ஏழை கோயில்களுக்குக் கிடைக்கவும் வழி ஏற்படும். அது சரி, நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியாரின் அறிக்கை என்ன ஆயிற்று? தூசு தட்டிப் பார்க்கலாமே?




✱ அறக்கட்டளைக்கு நன்கொடை?

✱ அறிக்கை என்ன ஆயிற்று?



✱ பெண்களே ஆசிரியர்கள்!





✱ தர்மசங்கடம் தவிர்த்தார்!

யதில் நூறு கோடிக்கு மேல் மோசடி நடந்திருப்பதாக அண்மையில் தெரிய வந்திருக்கிறது. உரக் கம்பெனிகள் என்று கற்பனைப் பெயர்கள் சூட்டி, மான்யங்களைக் கொள்ளையடித்துப் போயிருக்கிறார்கள். இதில் பெரிய பெரிய தலைகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அரசின் தலையீடற்ற சுதந்திரப் பொருளாதாரத்தில் தான் இதுபோன்ற மோசடிகளுக்கும் இடமில்லை; விலையும் போட்டா போட்டி காரணமாக நியாயமான அளவில் இருக்கும். மான்யங்களையும், அது தொடர்பான மோசடிகளையும், எல்லா நஷ்டங்களையும் கடைசியில் வரி செலுத்தும் குடிமகனே தாங்குகிறான் என்பதை மறவாதீர்கள்.

O **லவ்லி பாலகிருஷ்ணன், மங்களக்குடி.**

? **வசதியற்ற கோயில்களைக் கவனிக்க,**

O **வ. ஆறுமுகராஜன், சென்னை.**

? **தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை பெண்களே ஆசிரியராகப் பணிபுரிய அரசு ஆணை பற்றி?**

! ஆண்களுக்கு மட்டுமல்ல; பெண்களுக்கும் இழைக்கப்படும் அநீதி. அவர்களுக்குச் சம உரிமை தரப்பட வேண்டுமே தவிர, இட ஒதுக்கீடு அல்ல. இப்படியே போனால் எல்லா ஆண்களுமே பிற்படுத்தப்பட்டவர்களாகி விடுவார்கள்!

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஐ. எஸ். வாசு,
286, அரசடி தெரு,
மாடம்பிள்ளை தர்மம்,
ராஜகிருஷ்ணாபுரம் (அஞ்சல்)
நெல்லை - 627 114.

நேற்றுவரை நந்தவனம்

19

மீராவின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்தபடி, தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள் கீர்த்தியின் தாய். முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாவிட்டாலும், மூக்கு மட்டும் துடித்தது.

''இது தப்பா, சரியான்னு எனக்குத் தெரியலை. உங்க பிள்ளையோட ஆத்மாவுக்கு நான் செய்யற துரோகம்னு மட்டும் தெரியறது...''

''சிச்சி... அசடு... துரோகமாவது? போறவன் போய்ச் சேர்ந்துட்டான். அதுக்காக இருக்கறவ நாக்கைப் பிடுங்கிக்க முடியுமா? இப்ப இதே ஆக்ஸிடென்ட்டுல நீ போய், கீர்த்தி பிழைச்சிருந்தான்னா - அவனை ஆயுசு மட்டும் ஒத்தையாவே நிற்க வைப்போமா நாங்க? அவனுக்கு இஷ்டமோ இல்லையோ சடசடன்னு மாத்து மாலையை எடுத்துக் கையில கொடுக்க மாட்டோமோ... ஆம்பிளைக்கு என்ன தர்மமோ அதுவேதான் பொண்களுக்கும்.''

''இல்லே... இதைப் பத்தி உங்க அபிப்பிராயத்தை நான் கேட்கறதே - குழம்பிக் கிடக்கற மனசுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்திக்கறதுக்குத்தான்.. உங்களைக் கேட்கறது மானசீகமா உங்க பிள்ளையைக் கேட்கற மாதிரி. என் முடிவு உங்க மனசுல கொஞ்சம் ரணத்தை உண்டுபடுத்தும்னு எனக்குத் தெரியும்.. ஆனா... வேற வழியில்லே...''

அந்த அம்மாள் - மீராவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''ஏண்டீ, இந்த வயசுல எனக்கு ஒரு பொண்ணு இருந்து - அவளுக்கு இப்படியொரு கொடுமை நேர்ந்துடுத்துன்னா - வீட்டுல உட்கார வச்சு - அவ மெழுகா உருகறதைப் பார்த்துண்டிருப்பேனா...நீ தங்கமான குழந்தை. இந்த வீட்டு மனுஷாளுக்குத்தான் கொடுத்து வைக்கலை. சரி. உங்க அம்மாவுக்குத் தெரியுமா.. லெட்டர் எழுதினியா?''

''இன்னும் இல்லே.''

மீரா, குனிந்த தலைநிமிராமல் பதிலளித்தாள். சித்தி, சற்று முன்பு தேங்காய் துருவி விட்டு, அப்படியே நிறுத்தி வைத்திருந்த அரிவாள்மணையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரிவாள் மணை - தலைகுனிந்து உட்கார்ந்திருக்கும் கல்யாணப் பெண் போல... அதன் உச்சியில் படர்ந்திருந்த தேங்காய் துருவல் - மணப் பெண்ணின் தலையை அலங்கரிக்கும் மல்லிகைப் பூச்சரம் போல..

''அடியே கப்பு... அடுப்பைத் தணிச்சு வை. பீன்ஸ் கறியில தேங்கா போடாம - பெரியப்பாவுக்குக் கொஞ்சம் எடுத்து வச்சுட்டு, மீதியில தேங்காத் துருவலைக் கலந்து, குழந்தைகளுக்குப் பரிமாறு...''

சித்தி, எவளையோ விரட்டினாள்.

அடுத்த ஒரு நிமிஷத்தில் அரிவாள் மணை தன் தலை அலங்காரத்தைக் கலைத்து



விட்டு - மூலையில் முடங்க, அதன் வெறு மையைத் துக்கம் விசாரிக்க வந்தாற் போல சாரி சாரியாய் தேனீக்கள் அந்தப் பக்கம் படையெடுத்தன.

''இப்ப எனக்கு என்ன ஆச்சு? ஆனானப்பட்ட கீர்த்தியைப் பறிகொடுத் துட்டே இந்த மீரா கொஞ்சமும் கலங்காம, அடுத்தவனுக்குக் கழுத்தை நீட்டப் போறா.. எனக்கென்ன,... சாயந்திரமோ, ராத்திரியோ - மறுபடியும் மணக்கோலத்துல உட் கார்ந்திட்டுப் போறேன்...''

அரிவாள் மணை கூடப் பேசுமா...?

அவளது எண்ண ஓட்டம் பற்றிப் புரி யாமல் கீர்த்தியின் தாய் பேசிக் கொண்டே போனாள்:

''நீ கவலையே படாதே! உங்க அம்மா வுக்கு நான் லெட்டர் போடறேன். விஷ யத்தை எத்தனை நாசூக்கா எடுத்துச் சொல்ல முடியுமோ - அப்படிச் சொல்லப் பார்க்க றேன். ஜாதி வித்தியாசம் எல்லாம் பார்க்க வேண்டாம். அவனும் மனுஷன்தான். கட்டி னவளை மனசு கோணாம, கண் கலங்காம வச்சுக்கறவன் எல்லாருமே ஒசந்த ஜாதி தான்...''

மீரா, மெள்ள தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அவளைச் சுற்றி ஏழெட்டு முகங்கள். எல்லா முகங்களிலும் கனிவை யும், பரிவையும் தவிர வேறில்லை.

சித்தப்பா, கரகரத்த குரலில் சொன் னார் :

''ஆனா, இது விஷயம் எதுவுமே பட்டண்ணா காதுல விழப்படாது மன்னீ... அவராலே இதையெல்லாம் தாங்கவே



அனுராதா ரமணன்

முடியாது.. இத்தனை நாளாகியும் அவராலே - கீர்த்தி போனதையே மறக்க முடியலே.. அப்பப்போ, 'மெட்ராஸ்லேயிருந்து லெட்டர் வந்ததா... கீர்த்தி சௌக்கிய மா'ன்னு கேட்கறதும், 'ஏண்டா கீர்த்தி வந்திருக்கானா.. அவனோட பர்ஃப்யூம் வாசனை அடிக்கறதே'ங்கறதும்... சுத்தியிருக் கறவங்க எல்லாரையும் பைத்தியமாக்கற மாதிரின்னா இருக்கு?''

கீர்த்தியின் தாய் தழுதழுத்த குரலில் சொன்னாள்:

''ஆமாம்மா. அவருக்கு இது பத்தி எது வுமே தெரிய வேண்டாம். தாங்க மாட்டார். அப்புறம்... இதோபாரு, உனக்குச்சீதனமாக் கொடுத்த வெள்ளிப் பாத்திரம், குத்து விளக்கு.. இதெல்லாம் கூட எங்க கிட்டத் தான் இருக்கு. எப்ப எடுத்துண்டு போற தாயிருந்தாலும் சொல்லு... இல்லே, உன் கல்யாணத்துக்கு என்னைக் கூப்பிடுவே இல்லையா.. கூப்பிடறது என்ன, நாங்க தானே வந்து நடத்தித் தரப் போறோம்? அப்ப, சபையில கொண்டு வந்து வைக் கிறோம்.''

மீரா, மெதுவாக அங்கிருந்து விடைபெற்றாள். பள்ளிக்கூடம் கிளம்பிய குழந்தைகள் அனைவரும், புறப்பட மன சில்லாமல், உள்ளே வந்து மீராவின் புடை வைத் தலைப்பை 'வெடுக்'கென இழுத்து விட்டு ஓடினார்கள்...

கீர்த்தியின் தாய்க்கும் அவளை அனுப்ப மனசே இல்லைதான். ஆனாலும், நாகு வருவதற்குள் அவளை அனுப்பி விடுவது தான் நல்லது என்று அவள் நினைத்தாள்.

''நாகு வந்தா 'காச் மூச்'சுனு கத்துவான். அவன் குரலை அடக்கவே முடியாது. அவன் வர்றதுக்குள்ளே நீ கிளம்பு குழந்தை...''

''நான் இந்தச் சம்பவத்துக்கும் அவ ருக்கும் கூட ஏதாவது தொடர்பு இருக்கு மோன்னு சந்தேகப்பட்டேன்..''

மீராவின் வார்த்தைகளைக் கேட்டு, கீர்த்தியின் தாய், ஈரத்தில் கனத்த இமை களை ஒரு தரம் அழுந்த மூடித் திறந்து தலையை அசைத்தாள்.

''அவன் இந்த மாதிரியெல்லாம் செய் யக்கூடியவன்தான். ஆனா, டைம்பாம், வெடிகுண்டு விவகாரமெல்லாம் அவ னுக்குத் தெரியாது. கோபம் வந்தா - ஒண்ணு அரிவாளைத் தூக்கிட்டு கிளம்பிடுவான். இல்லைன்னா லங்காபுரிக்கு நெருப்பு வச்ச ஆஞ்சநேயர் மாதிரி, தீப்பந்தத்தை எடுத் துட்டுக் கிளம்பிடுவான்... அவன் கோபம்



''உங்க சர்வரைக் கொஞ்சம் கண்டிச்சு வைங்க!''

''ஏன் ஸார்?''

''என்ன இருக்குன்னு கேட்டதுக்கு ஐந்து கிலோ அரிசி, இரண்டு கிலோ உளுந்து ஊற வெச்சு ரெடியா இருக்குங்கிறார்!''

- வேதபுரி எஸ். இரமேஷ்

நிமிஷமாச் சரியாயிடும்.''

''......''

''இனிமே, இந்த விபத்துக்கு யார் காரணம், என்ன, ஏதுன்னு தேடிட்டு அலையாதே! தேடறதுனால என்ன பெரீசா கிடைச்சிடப் போறது? எதுவுமில்லே.. விட்டுடு. எல்லாருக்கும் மேல கடவுள்னு ஒருத்தர் இருக்கார். அவர் பார்த்துப்பார்..''

மீரா புறப்பட்ட பொழுது, அந்த அம்மாள் வெற்றிலைப் பாக்குத் தட்டில் - ஒரு ரவிக்கைத் துணியை வைத்து அவளிடம் கொடுத்தாள்.

''எடுத்துக்கோ குழந்தை...''

''நான்... எனக்கு...''

''இங்கே பாரு.. நீ எல்லாரையும் போலத்தான். பத்து நாள், உன் சினேகிதியோட வீட்டுல போய்த் தங்கினதா நினைச்சுக்கோ. உனக்கு வெத்தலைப் பாக்கோட ரவிக்கைத் துணி வச்சு கொடுக்கறப்ப - சொன்னா நம்ப மாட்டே - என் கீர்த்தி, என்னோட முதுகுக்குப் பின்னாலே வந்து நின்னு, ரெண்டு கையாலேயும் என்னைக் கட்டிப் பி டி ச் சி ண் டு, 'ரொம்ப தாங்க்ஸ்'மான்னு சொல்ற மாதிரி இருக்கு... நீ வாங்கிக்கோ சொல்றேன்...''

மீரா பொலபொலவென அழுதே விட்டாள்.

அவளுடன் வந்த கூட்டம் - கோடு கிழித்து நிறுத்தினாற் போல - பின் கட்டு வாசலுடனேயே நிற்க - கீர்த்தியின் தாய் மட்டும் - தன் குஞ்சைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லும் தாய்க் கோழி போல மீராவை ஒரு கையால் அணைத்தபடி பம்மி, பதுங்கி வாசலுக்கு வந்தாள்.

வாசற்படியை மீரா தாண்டியிருக்க மாட்டாள். அவளது முதுகுக்குப் பின்னாலிருந்து அடித் தொண்டையில் ஒரு குரல் ஒலித்தது.

''அம்மா மீரா...''

''......''

''உன்னைத்தானேம்மா மீரா... எனக்குத்தான் கண் தெரியலே. உனக்குக் கூடவா காது கேட்கலை?''

மீரா, படபடக்கும் நெஞ்சை ஒரு கையால் அமுக்கியபடி அப்படியே நின்றாள்.

கீர்த்தியின் தாய் - வியர்வை வெள்ளத்தில் குளித்தே விட்டாள்.

அத்தனை அசந்தர்ப்பமான நேரத்திலும் - தன்னால் முடிந்த வரையில் சமாளிக்கப் பார்த்தாள் அவள்.

''உங்களுக்கென்ன ஆச்சு? எதிர் வீட்டுப் பஞ்சாமி பொண்ணைப் பார்த்து... ராமா... இவரை ஏண்டாப்பா இப்படிச் சோதிக்கறே?''

''நாம செஞ்ச பாவத்துக்கு ராமனை எதுக்குடீ இழுக்கறே... மீரா, இங்கே வா...''

மீரா, சப்தநாடியும் ஒடுங்கி, மெள்ள அடியெடுத்து வைத்து, அவரது அருகில் போய் நின்றாள்.

படுத்திருந்தவர் தம்பியின் உதவியுடன் நிதானமாய் எழுந்து சுவரில் சாய்ந்தார்.

''கிட்ட வா. எனக்குக் கண்ணு அத்தனை



''எங்க பெண்ணுக்குப் போட்ட இருபது பவுன் நகையையும் அடகு வெச்சுட்டீங்களாமே! இது நியாயமா மாப்பிள்ளை!''

''அப்படி ஒண்ணும் நாட்ல நடக்காத காரியத்தை நான் செய்யலையே மாமா!''

- ஞா. ஞானமுத்து

போதாது. எங்கே கையைக் கொடு...''

கீர்த்தியின் தாய், புடைவைத் தலைப்பால் வாய் பொத்திக் கண்ணீர் வழிய நின்றாள்.

''மீரா, எனக்குப் பார்வைதான் கோளாறு.. காது துல்லியமாக் கேட்கும்.

அவர் சற்று நிறுத்தி, பழுதடைந்த கண்களை நன்றாகத் துடைத்து விட்டுக் கொண்டார் :

''நீ உள்ளே வர்றச்சே - பஞ்சாமி பொண்ணுன்னு உன் மாமியார் சொல்லி, உன்னை, என் கண்ணுலே இருந்து மறைக்கப் பார்த்தா... சரிதான்.. ஆனா, கூடத்துல மாட்டியிருக்கற கீர்த்தியோட போட்டோவைப் பார்த்துட்டே நடந்து, தடுமாறி, தடுக்கி விழப் பார்த்தியே குழந்தை... கவனிக்காத அளவுக்கு முட்டாளா நான்...''

''........''

''மருதாணி பறிக்க வந்தவ, ரெண்டாங்கட்டு ஜனங்க கிட்ட மட்டும் பேசிட்டுப்

போனா எப்படிம்மா? உம்? நீ எந்த எண்ணத் தோட மறுபடி இந்த வீட்டுக்குள்ளே வந் திருந்தாலும் சரி. இந்தக் கிழவன்கிட்டயும் ஆசீர்வாதம் வாங்கிட்டுப் போ.. என்ன.. ஏதாவது பேசேன்.. உன் குரலையாவது கேட் கறேன்..''

மீரா, அதற்கு மேல் தாங்க மாட்டா தவளாய் முகத்தை மூடிக் கொண்டு அழு தாள்.

''உங்ககிட்டச் சொன்னா உடம்புக்கு ஏதாவது ஆகிடப் போறதுன்னு மன்னிதான் அண்ணா...''

- சித்தப்பா தயங்கியபடி சொன்னார்.

''எனக்கென்னடா... இன்னும் எத் தனை நாளைக்கு வயசாகி, மக்கிப் போன இந்த உடம்பைத் தூக்கிண்டு அலையறது? அலுத்துப் போச்சுடா. மன்னி கிடக்கா. மீரா, உனக்குக் கல்யாணமாச்சுன்னா - எனக்குப் புதுச் சட்டை என்ன.. புது உடம்பே கிடைக் கும்...''

அவர், மீராவின் தலையைக் கோதிய படியே சொன்னார்.

''குழந்தைகள் சாப்பாட்டை முடிச் சிட்டு, ஸ்கூலுக்குக் கிளம்பறதுக்கு முன் னாலே - அங்கேயும், இங்கேயுமா கூடிக் கூடிப் பேசிட்டிருந்தாங்க... புது மன்னி கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஒரு கோஷ்டி.. கூடாதுன்னு ஒரு கோஷ்டி.. நான், கிட்ட கூப்பிட்டு விசாரிச்சப்ப அத்தனையும் பறந்துடுத்து...''

மீரா, அவரது பாதங்களில் பணிந்து எழுந்திருந்த அதே நேரத்தில் -

குமரனின் மைத்துனன் ரவி, நிர்மலா விடம் அழுத்தமான குரலில் கூறிக் கொண்டி ருந்தான்.

''அந்த மீராவைத் தனியே வரவழைச்சு, கன்னத்துல நாலு அறை வச்சா, உண்மைய ஒத்துக்காமலா போயிடுவா?''

(தொடரும்)

''நாட்டு நிலவரத்தைக் கண்ட றியத் திருடனாக மாறுவேடம் போட் டுக் கொண்டு போனது தப்பாப் போச்சு மந்திரியாரே!''

''ஏன் மன்னா?''

''காவலாளிகள் மாமூல் கேட்டு நச்சரித்து விட்டனர்!''

- குடந்தை எல். ராம்பிரபு



கல்லூரி மாணவர்
கட்டுரைப் போட்டி

லட்சியக் கணவர்

ரூ. 50 முதல் பரிசுக் கட்டுரை

எனக்கு வரப் போகும் கணவர் ஏகப் பட்ட தன்னம்பிக்கையும், என் மீது மாறாத அன்பும் உள்ளவராக இருக்க வேண்டும். தனக்கிருக்கும் நெடுநாளைய பழக்கங்களையும் (சிகரெட், வெற்றிலை போன்றன) தேவைப்பட்டால் அடியோடு நிறுத்தி விடும் நெஞ்சத் துணிவு உள்ளவராக விளங்க வேண்டும். பிற பெண்களை மதிப்பவராக, அதாவது; ''இன்னிக்குக் குள்ளமா, நல்ல சிவப்பா, அழகா ஒருத்தி உன்னைத் தேடிண்டு வந்திருந்தா'' என்று கூறாமல், ''இன்னிக்கு உன் தோழி சாந்தி வந்திருந்தாங்க'' என்று கூறுபவராக இருக்க வேண்டும்.

என் சமையலில் ஏதேனும் குறையிருந்தால் ''என்னடி வாயில் வைக்க சகிக்கலை'' என்று கூறாமல், ''கொஞ்சம் உப்பு ஜாஸ்தியாயிடுத்தில்லே? அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்'' என்று கூறுபவரையே எதிர் பார்க்கிறேன். என்றைக்காவது நான், என் புது மானேஜர் என்னைக் கடிந்து கொண்டதற்காக வருந்தி அழும் போது, ''தப்பு செய்தா திட்டத்தான் செய்வாங்க'' என்று கூறாமல், ''அவர் உன்னை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. உன் திறமை தெரிந்த பிறகு அவர் உன்னை எப்படி நடத்தப் போகிறார் பார்'' என்று எனக்கு ஆதரவளிப்பவராக அவர் விளங்குவது நல்லது.

ஏதாவது சோகக் கதை படித்து விட்டு நான் ரொம்பத் துக்கப்பட்டுப் போகும் போது, ''வெட்கமாயில்லே! போயும் போயும் ஒரு கதை புக் படிச்சுட்டு இப்படி அழுவாங்களா?'' என்று கேலி பண்ணாமல் ''வாழ்க்கைல கஷ்டங்கள் சகஜம். புக் தானே! மறந்திடு'' என்று என் உணர்ச்சிகளை மதிப்பவராகவும்; தினமும் வீட்டுக்கு வரும் போது அர்ச்சனா ஸ்வீட் வாங்கி வரா விட்டாலும், நான் எப்போதாவது கேட்கும் ரோஜாப் பூவோ கண்ணாடி வளையல்களையோ 'ஸில்லி' என்று கருதாமல், மறக்காமல் வாங்கி வருபவராகவும் என் கணவரைப் பற்றிக் கனவு காண்கிறேன்.

எனக்கு மனவேதனை அளிப்பதாக இருந்தாலும் எப்போதும் என்னிடம் உண்மையே பேசுபவராகவும்; எந்தச் சூழ்நிலையிலும் அவர் மீது எனக்கிருக்கும் அன்பைக் கொஞ்சம் கூட சந்தேகிக்காதவராகவும்; என்னை மதித்துத் தமது பிரச்னைகளை என்னிடம் மனம் திறந்து சொல்லி என் யோசனைக்கு முக்கியத்துவம் அளிப்பவராகவும்; எனக்கிருக்கும் சிற்சில திறமைகளில் அவருக்கு ஆற்றல் இல்லாவிட்டாலும் ஆர்வம் உள்ளவராகவும் என் இல்லத்தரசரைக் கற்பனை செய்து பார்க்கிறேன்.

மொத்தத்தில், இந்த உலகிலேயே அவருடைய முழு அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவளாக என்னை (மட்டுமே) வைத்திருப்பவராக அவர் விளங்க வேண்டும்.

இத்தகையவர், என்னை விடப் பதினைந்து வயது மூத்தவராக இருந்தாலும், தோற்றப் பொலிவு இல்லாதவராக இருந்தாலும், உயர்ந்த படிப்பு படிக்காதவராக இருந்தாலும், கொஞ்சமே சம்பளம் வாங்குபவராக இருந்தாலும் அவரையே என் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய கணவராக நான் தேர்ந்தெடுப்பேன்.

- அ. சுதா,
பி.எஸ்.ஸி., கணிதவியல்,
வைணவா மகளிர் கல்லூரி,
குரோம்பேட்டை,
சென்னை - 600 044.

உணர்வுகளை மதிக்கட்டும்

எந்த ஒரு பெண்ணும் தனக்கு அமையப் போகும் கணவன் படித்தவராக, அழகுள்ளவராக இருக்க வேண்டும் என்றுதான் முதலில் கருதுவாள். என்னைப் பொறுத்த வரை என்னுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பவராக இருக்க வேண்டும். 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற குறிக்கோளை உடையவள் நான். அதற்கேற்ப நடந்து கொள்ள அவர் எனக்கு முழுச் சுதந்திரம் தர வேண்டும். எந்த ஒரு சிறு நிகழ்ச்சியாக இருந்தாலும் எனது கருத்துக்களையும் பரிசீலனை செய்து, சரியானவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

என்னுடன் கருத்து மாறுபட்டாலும் மாறுபடாது போனாலும் அவற்றுக்கான காரணங்களைத் தெளிவுபடக் கூற வேண்டும். மனசுக்குள் புதைப்பது என்பது சுத்தமாக இருக்கக் கூடாது.

படிக்காதவர் என்றபோதிலும் என்னைப் போன்ற சில பெண்கள் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிப்பார்கள். 'என் கணவர் இவ்வளவு படித்திருக்கிறார்' என்று பெருமையாகக் கூறும் பெண்க


ளிடையே 'என் மனைவி இவ்வளவு படித்திருக்கிறாள்' என்று அதே அளவு பெருமிதத்துடன் கூறும் ஆண் மகனை நான் எதிர்பார்க்கிறேன்.

இதுவரை தன் அம்மாவின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்தது போல் மனைவியையும் நடத்துபவராக இருக்க வேண்டும். மாமியார் மருமகள் பிரச்னைகளுக்கு இடமிருக்கக் கூடவே கூடாது. அம்மாவுக்கு அதிக மதிப்புக் கொடுப்பவராக இருப்பினும், மனைவியின் உணர்வுகளையும் மதிப்பவராக இருக்க வேண்டும்.


வரதட்சணை நிச்சயம் கொடுக்கவே மாட்டேன். நிபந்தனைகள் என்ற பேச்சிற்கே இடமில்லை. தவறு இருப்பின் தட்டிக் கேட்கத் தயங்க மாட்டேன்; அவரும் தயங்கக் கூடாது.

- இ. சாந்து உஸ்மானி,
எம்.ஃபில் - பொருளாதாரம்,
பாரதி தாசன் பல்கலைக் கழகம்,
திருச்சி - 24.





இலக்கியக் காவலரும் இலக்கியக் காதலரும்



"கல்கி" அவர்களுக்குப் பிறகு இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய மீ. ப. சோமு அவர்களுக்குக் கல்கி பொன் விழா ஆண்டில், அவரது இலக்கியப் பணிக்காக ராஜாசர் முத்தையா செட்டியார் நினைவுப் பரிசாக ரூ 50,000 வழங்கப்பட்டதில் பெருமிதம் அடைந்து, நமது மகிழ்ச்சியைக் கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

மீ. ப. சோமு, இசைக் குடும்பத்தில் பிறந்து இசைத் துறையிலேயே சென்றிருக்க வேண்டியவர். அவரை இலக்கியத்தின்பால் திசை திருப்பியவர் ரசிகமணி டி. கே. சி. சோமுவின் இலக்கியப் பணிக்கு உரமிட்டு நீர் வார்த்தவர் அமரர் "கல்கி". இந்த இருவரது ஆதரவு பெற்ற சோமுவுக்கு ராஜாஜியின் அறிமுகம் கிடைத்தது வியப்பில்லை. அது ஆழ்ந்த நட்பாக மாறி, இலக்கியக் காதலாக மலர்ந்ததுதான் சிறப்பு. ஏனெனில், ராஜாஜியுடன் நெருங்கிப் பழகவே ஒருவருக்கு ரொம்பத் தகுதிகள் இருக்க வேண்டும். சோமுவோ அணுக்கத் தோழராக மட்டுமின்றி, ராஜாஜியுடன் இணைந்து இலக்கியப் பணியாற்றும் பேறும் பெற்றார்! ராஜாஜி - சோமு என்ற கூட்டுப் பெயரிலேயே கல்கியில் பல தொடர் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

ஆரம்ப காலத்தில் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதி வந்த சோமு, பிறகு சமூக நாவல்களும் சரித்திர நாவல்களும் எழுதிப் பிரபலமடைந்து பல பரிசுகளும் குவித்தார். அகில இந்திய ரேடியோவில் உயர் பதவிகளில் பணியாற்றியதுடன், வானொலித் துறையில் சிறப்புப் பயிற்சி பெற லண்டன் பி.பி. ஸிக்குச் சென்றார். திரும்பி வந்து அவர் கல்கியில் எழுதிய பயண நூல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றது. பின்னர், ராஜாஜியுடன் நெருக்கம் ஏற்பட்ட காலகட்டத்தில், நீதி இலக்கியத்திலும் பக்தி இலக்கியத்திலும் அவர் மனம் திரும்பியது. திருமூலரின் தத்துவங்களை ராஜாஜியுடன் அலசிய அவர், கடைசியில் சித்தர் இலக்கியங்களை ஆய்வு செய்கின்ற முதிர்ச்சி பெற்றார். அவர் மனத்தின் படிப்படியான பரிணாம வளர்ச்சியை இது உணர்த்தும்.

சித்தர் இலக்கியத்தில் மீ. ப. சோமு ஆய்வு நடத்த உதவியது, ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்களும் அண்ணாமலை பல்கலைக் கழகமும். முத்தையா செட்டியாருக்குப் பிறகு அவரது புதல்வர் எம். ஏ. எம். ராமசாமியும் தொடர்ந்து இலக்கியக் காவலராக இப்பணியில் ஈடுபாடு காட்டி, மீ. ப. சோமு வைப் பல விதங்களிலும் ஊக்குவித்தார். பல பாகங்களைக் கொண்ட இந்த நூல், மீ. ப. சோமுவின் இலக்கியப் பணிக்கு மணிமகுடமாக அமைந்துள்ளது.

இசைக் குடும்பத்திலே பிறந்த சோமு வின் மனம் இலக்கியத்தின் பக்கமாகத் திசை திருப்பி விடப்பட்டாலும் இசையையும் அவர் விட்டு வைக்கவில்லை! கச்சேரி செய்யவில்லையே தவிர, இசை நுணுக்கங்களை நன்கு அறிந்தவராகவும் பண் ஆராய்ச்சியில் சிறந்தவராகவும் விளங்கி, தமிழிசைச் சங்கத்தின் இசைப் பேரறிஞர் பட்டத்தையும் பெற்றார்.

சோமுவுக்குப் பரிசளிப்பதற்காக நடந்த விழாவில், நீதிபதி கோகுல கிருஷ்ணனும் அமைச்சர் ராஜாராமும் பங்கேற்று சிறப்பித்தார்கள். அந்த நாளில் சென்னை நகர மேயராக இருந்த முத்தையா செட்டியார் செய்தளித்த அலங்கார நாற்காலியும் பொன்னாபரணமும் தான் இன்றளவும் சென்னை நகர மேயர்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டார் ராஜாராம். (அதாவது தேர்தல் நடந்து மேயர் பதவி உயிர்ப்பிக்கப்பட்டால்!) ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவரான முத்தையா செட்டியார் விருப்பு வெறுப்பின்றி செயலாற்றியவர். 1937-ல் ராஜாஜி அமைச்சரவையின் ஹிந்தி பாடத் திட்டத்தை எதிர்த்தார்; ஆனால் அதே அளவு தீவிரத்துடன் அரசின் ஆலயப் பிரவேச திட்டத்தை ஆ த ரி த் தா ர். ராஜாசர் அண்ணாமலை செட்டியாரும் மகன் முத்தையா செட்டியாரும் ஒரே சமயத்தில் அண்ணாமலை பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களாக் விளங்கினார்கள். மலேசிய அரசு இங்கே ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க இரண்டு கோடி பணம் தருவதாகச் சொன்னபோது, அது குறித்து முத்தையா செட்டியாருடன் விவாதித்தார் ராஜா ராம். "மருத்துவக் கல்லூரி தொடங்கலாம்; ஆனால் அதற்கு மலேசிய அரசிடம் பணம் பெறுவது நம் நாட்டின் கௌரவத்துக்கு உரியதா?" என்று கேட்டு, அந்த நிதி இன்றியே அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கியவர் ராஜாசர் முத்தையா செட்டியார். இப்படிப் பல அரிய தகவல்களை வெளியிட்டார் அமைச்சர் ராஜாராம்.

ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்த நாள் விழா, தமிழ்ச் செல்வத்தையும், அறச் செல்வத்தையும், பண்புச் செல்வத்தையும் வளர்க்கும் விழாவாக விளங்கியது.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

நேற்றுவரை நந்தவனம்



20

தன்னை வெகு சுலபமாய் ஒரு பெண் ஏமாற்றியதை நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை ரவியால்.

மீரா வந்ததும், தன்னிடம் நிர்மலாவின் சிநேகிதி என்று சொன்னதும் குமரனின் தூண்டுதலினால்தான் என்று அவன் நினைத் தான்.

''உனக்குத் தெரியாது நிம்மி. இளவரசு வுக்கு நான் கார்டியனா இருக்கறதுதான் நல்லது. குமரன், குழந்தையோட அப்பாவா இருக்கலாம். ஆனாலும் பிள்ளையை வளர்க்கற உரிமை எங்களுக்குத்தான்னு நான் கோர்ட்லே கேஸ் போட்டிருக்கேன். இதுக்குப் பக்கபலமா நான் குறிப்பிட்டிருக் கறதே பஸ் விபத்தைத்தான். பெண்டாட்டி ஒழிஞ்சா சரின்னு குமரன்தான் பஸ்ஸில குண்டு வச்சிருக்கான்; இதனால தன் அப்பாவைக் கொலை செய்யக் கூட அவன் தயங்கலைன்னு வக்கில் வரிஞ்சு வரிஞ்சு எழுதியிருக்கார். இவன் என்னடான்னா - ஒரு பொண்ணை அனுப்பி என்னைப் பத்தி உளவறியறான்.''

''குமரன்தான் இந்த விபத்துக்குக் கார ணம்னு எப்படி நிரூபிக்க முடியும்?''

''அதுதான் என் வேலை. இவனை உள்ளே வைக்கிறதுதான் என் லட்சியமே!''

ரவியின் இத்தனைக் கோபத்துக்கும் குமரன் ஆளானதெல்லாம் மாஜி எம். எல்.ஏ. தருமராஜனின் அடாவடித்தனமான

அனுராதா ரமணன்

நடவடிக்கையினால்தான்.

ஆயிரம்தான் தந்தைக்கும் மகனுக்கு மிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் - குமரன், வெளிப்படையாகத் தன் தந்தையை விட்டுக் கொடுத்ததே இல்லை.

நிர்மலாவின் விஷயத்தில் ரவி எத்தனையோ முறை தன் அக்கா தெய்வா வின் மூலமாகக் குமரனை எச்சரித்தும் அவன் கண்டுகொள்ளவே இல்லை.

''இதப் பாரு... எங்க அப்பாவோட அந்தரங்கங்களைப் பத்தி, நான் இது வரைக்கும் கவலைப்பட்டதே இல்லே. அவர் எப்படி வேணுமானாலும் இருக்க லாம். ஆனாலும் எனக்கு அப்பாவாயிட்ட ஒரே காரணத்துனாலேயே நான் அவரை மதிக்கிறேன். என் காது வரைக்கும் எந்த விஷயத்தையும் கொண்டு வராதே!''

''இப்படிப்பட்ட மானங்கெட்ட குடும் பம்னு தெரிஞ்சிருந்தா கழுத்தை நீட்டி யிருக்கவே மாட்டேன்!''

''நாக்கை அடக்கு. என் குடும்பத்தைப் பத்தி மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசி னாலும், இந்த வீட்டுல கொலை விழும்...''

''தெரிஞ்சும், தெரியாமலுமா - உங்க அப்பா எத்தனையோ கொலைகளைச் செஞ்சிருக்காரு. நீங்க அவர் பெத்த பிள்ளை தானே.. உங்க பங்குக்குச் செய்யுங்க... முடிஞ்சா - என் கழுத்தை நெரிச்சு, உங்க கொலைகார வாழ்க்கைக்குப் பிள்ளையார் சுழி போடுங்க!''

தெய்வாவின் மூலமாகக் குமரனை எச்சரிப்பதில் தோல்வியுற்ற ரவி ராஜேஸ்வரி அம்மாளிடம் பாய்ந்தான்.

''ஏம்மா, உங்க வீட்டுக்காரருக்கு நீங்க ளாவது புத்தி சொல்லக் கூடாதா? அந்தப் பொண்ணு வயசென்ன - இவர் வயசென்ன? ஊரே சிரிக்கிறது...''

''நீ ஏன் அந்தத் தெரு பக்கம் போனே.. அதைச் சொல்லு முதல்லே!''

மதில் மேல் போன பூனை - இடமும் போகாமல், வலமும் போகாமல், மேலே விழுந்து பிறாண்டினாற் போல் ராஜேஸ்வரி பேச, ரவி மறுபடி ஏமாற்றமடைந்தான்.

அப்பொழுதுதான் பால் நழுவி, பழத்தில் விழுந்தது போல ரவிக்கு, தரும ராஜனைப் பழிவாங்க நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது.

நிர்மலா, ரவியுடன் சேர்ந்து வாழத் துடித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பெற்ற தாய்க்கோ, தருமராஜனின் பணத் தின் மீது கண்...

தருமராஜன் அந்த வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் தடபுடலாக உபசாரங்கள் நடக்கும். நிர்மலா பூ வைத்துச் சிங்காரித்து, பலகாரமும், காப்பியும் ஏந்தி, சோகமாய், உணர்வற்ற ஜடம் போல வருவாள். எந்த வொரு சமயத்திலும் அவர், தன்னைத் தொட அவள் அனுமதித்ததே இல்லை.

''ஏய்... என்னா பொண்ணு நீ... எத்தனை நகை வாங்கிப் போட்டாலும், தொட்டுப் பார்க்கக் கூடாதுங்கறே?''

''உங்களுக்கு நகையத் தொட்டுப் பார்க்கணும்னா கழட்டித் தர்றேன். வாங்கிப் பாருங்க. என்னைத் தொடணும்னா என் கழுத்துல மஞ்சக் கயிறு கட்டியாகணும்...''

''சர்தான் போடீ... என்னமோ சினிமா டயலாக் பேசறே.இந்த வீடு என்னோடது.. நீ கட்டியிருக்கற புடவையிலேயிருந்து - இப்ப கொண்டாந்து கொடுத்தியே காப்பி, பலகாரம்... முச்சூடும் என்னோடதுதான்.. எல்லாத்துலேயும் ரப்பர் ஸ்டாம்ப் குத்தியிருக்கேன்டீ... உன்னால இல் லைன்னு நிரூபிக்க முடியுமா?''

நிர்மலா, இதை ரவியிடம் சொன்ன போது - அவன் கொதித்துப் போய் விட் டான்.

''நிம்மி, நீ எனக்குச் சொந்தமானவ. நான் என்ன சொன்னாலும் கேட்பே இல்லே?''

''இதுலே என்ன சந்தேகம்?''

''அப்ப சரி. இந்த நிமிஷமே நாம ரெண்டு பேரும் மானசீகமா கல்யாணம் கட்டிட்டோம். என் குழந்தைய நீ சீக்கிரமே சுமக்கப் போறே.''

''சுமந்து?''

''அந்தக் கிழவனைச் சந்தியில இழுத்து நிறுத்தி, நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி கேட்கப் போறே.. ஏன்யா, நீதான் பத்திர மெழுதி, ரப்பர் ஸ்டாம்ப் குத்தி, கையெ ழுத்து கூட போட்டிருக்கியே... புடைவை யும், செருப்பும் கூட உன்னுதுதான்கறே.. இப்ப வயித்துல வளர்றதும் உன்னுதுதான்., அதும் பேருல சொத்து வேண்டாம். ஆனா, ஊரறிய அது உன் குழந்தைன்னு ஒத்துக் கன்னு சொல்லு. என்ன சொல்றான்னு பார்ப்போம்!''

முதலில் நிர்மலா தயங்கினாள். தன் வயிற்றில் வளரப் போகும் சிசுவை - பிரச்னைக்குள்ளாக்க அவள் விரும்பவே இல்லை. ஆனால், ரவியை விடவும், தரும ராஜனைப் பழிவாங்க அவளுள் ஏகப்பட்ட ரணங்கள் இருந்தன.

மேலும் அவன், கையடித்துச் சத்தியம் செய்து தந்தான். ''கண்டிப்பா உன்னைக் கைவிட மாட்டேன். தருமராஜனை பீஸ்

பீஸ்ஸாக் கிழிச்சுப் போடறதுதான் என் நோக்கமே தவிர - உன்னை அவமானப் படுத்தறதில்லே. அந்தாளு அவமானம் தாள மாட்டாம தூக்குப் போட்டுச் சாவட்டும்.''

நிர்மலா துணிந்து விட்டாள். கட்சியில் வலுவான தலைவராக இருந்த தரும ராஜனை எதிர்க் கட்சியினர் அசிங்கமாய் ஏசிப் பேசி, சுவரொட்டிகள் ஒட்ட வேண் டும். நாலு பேர் - அதைப் பார்த்துக் காறி உமிழ வேண்டும்.

அவளுள் எரிந்த நெருப்பின் பிரதி பலிப்புத்தான் தொலைபேசியில் ராஜேஸ்வரி அம்மாளுடன் பேசியது...

ராஜேஸ்வரி அம்மாள் 'ஓ'வென அழுது அரற்றினாள். தர்மராஜன் இதை எதிர்பார்க் கவே இல்லை.

நிர்மலாவைப் பின்னலைப் பிடித்து இழுத்து, நடுக்கூடத்தில் போட்டு மிரட்டி னார்.

நிர்மலாவின் தாய், மகள் அடிபடுவது தாங்க மாட்டாதவளாய்க் குறுக்கே விழுந்து தடுத்தாள்.

''என்சாமீ... தர்மதொரை... உங்களைத் தவிர நான் ஒரு ஈ காக்காயக் கூட என் வீட்டு வாசப்படிய மிதிக்க விட்டதில்லையே. டபரா தம்ளர்லேயிருந்து பல்லு குத்தற குச்சி வரைக்கும் என்னுது என்னுதும்பீங்களே... ராசா.. இப்ப இப்பிடி எம் மவளைத் துணி துவைக்கற மாதிரி துவைக்கிறீங்களே. அடுக்குமா... ஆ...ஆ...''

''சனியனே, சப்தம் போட்டு ஊரைக் கூட்டாதே. உம் மக எனக்கு வேணும்னே துரோகம் செஞ்சிட்டா.. எதிர்க்கட்சிக்காரன் இவளை விலை கொடுத்து வாங்கிட்டான்.

பொன்விழா ஆண்டு



பொன் நகைப் பரிசுத் திட்டம்-3

காது திருகுகிறவர் சாது அல்ல!

அவர் இவர் காதைத் திருக, இவர் இவளின் காதைத் திருக.....

காது திருகுவதுடன் விஷமத் தனமான டயலாகும் இருந்தால்தானே ரசிக்கும்?

எங்கே, கற்பனையைத் தட்டி விட்டுத் தபால் கார்டில் மட்டுமே எழு துங்கள் பார்க்கலாம்!

''காது திருகினால்.....'' என்று தலைப்பிட்டு எழுதப்படும் சிறந்த ஜோக்குக்குப் பரிசு, பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை!

பிரசுரமாகும் இதர ஜோக்குகளுக்கு ஆறுதல் பரிசு.

முடிவு தேதி : 2.9.91

ஜோக்குகளை, ''ஆசிரியர் கல்கி, சென்னை - 32'' என்ற விலாசத்துக்கே அனுப்ப வேண்டும்.

50 கல்கி

பாலு ஜுவல்லர்ஸ்

நீயும் அதுக்கு உடந்தையா இருந்திட்டு, இப்ப ஒப்பாரி வைக்கிறியா... எத்தனை லட்சம் கொடுத்தான்?''

''லட்சமா... ஐயோ, ஐயோ... புகையிலைக்குப் பணம் வேணுமின்னா கூட என் ராசா, நான் உங்களைத்தானே கேட்பேன்...''

தர்மராஜன் மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தார்.

நிர்மலாவைத் துரத்தி விட்டால் - அந்தக் கணமே எதிரிகள் - இவளைத் தலைவிரி கோலமாய் நிற்க வைத்து போட்டோ எடுத்து, தெருத் தெருவாய் ஒட்டி விடுவார்கள்.'

பிள்ளையைப் பெற்றுக் கொள்ளும் வரையில் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க முடியாது..

எவனுடைய குழந்தைக்கோ எம். எல். ஏ. தர்மராஜன் தகப்பனாவதாவது... அசிங்கம்!

அவர், நிர்மலாவிடம் உறுமினார்.

''பேசாம இதைக் கலைச்சிடு... அப்பத்தான் நீ உசிரோட இருக்க முடியும்..''

''முடியாது!''

அவள் ஒரு பக்கம் பிடிவாதம் பிடிக்க - தர்மராஜன் நேரே வீட்டுக்கு வந்து மருமகள் தெய்வநாயகியிடம் கொஞ்சம் அதட்டலாகவே சொன்னார்.

''அந்தப் பொண்ணுக்கும் உன் தம்பிக்கும் சினேகமிருக்குதுன்னு ஊருல பேசிக்கிறாங்க. அது எந்த அளவுக்கு உண்மைன்னு எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரைக்கும், என் பாதுகாப்புல இருக்கற பொண்ணு பேரு கெட்டுடக் கூடாது. பேசாம, எங்கூடக் கிளம்பு. அவ வீட்டுக்குப் போய், அங்கேயே வேலையைக் கச்சிதமா முடிச்சிட்டு வந்துடலாம்!''

''மன்னிக்கணும். இது மாதிரி சிசுவைக் கொலை செய்யறதுக்காக நான் டாக்டருக்குப் படிக்கலே. மேலும் அவ வயித்துல இருக்கறது என் மைத்துனனோ, இல்லே மருமகனோ.. எதுவா இருந்தாலும் அதை என் கையாலே கொல்ல மாட்டேன்!''

''என்னடீ சொன்னே... யார்கிட்டப் பேசறேன்னு ஞாபகமிருக்கா?''

''சரிதான் போடா... மாமனாரா இருந்தாலும் மரியாதை கொடுத்தாத்தான் மரியாதை கிடைக்கும்..''

தர்மராஜன், ஒரே தாவலில் முன்னேறி, மருமகளின் கன்னத்தில் ஓங்கி அறைய, ராஜேஸ்வரி பிரமை பிடித்தவளாய் அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அந்தக் கணமே தெய்வா, கணவனிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள்.

குழந்தை இளவரசு, பாட்டியின் இடுப்பில் வீற்றிருந்தது. அதையும் போகிற போக்கில், ஒரு ரோஜாப் பூவைப் பறிப்பது போலப் பறித்துக் கொண்டு போய் விட்டாள்.

தர்மராஜன் மனைவியைப் பார்த்து உறுமினார் :

''என்னடீ... பார்த்துட்டு நிற்கறே?''

''த்தூ... நீயெல்லாம் ஒரு மனுஷன். ஒனக்கு ஒரு பெண்டாட்டி பத்தாம - தெருவுக்கு ஒருத்தி...''

இதற்குப் பின், ரவி - குமரனுக்கும், தர்மராஜனுக்கும் நினைத்த போதெல்லாம் போன் செய்து மிரட்டுவது சகஜமாகிப் போனது. போதாக்குறைக்கு இப்பொழுது குமரனுக்கும் மீராவுக்கும் தொடர்பு இருப்பதாகக் கையும் மெய்யுமாய்த் துப்புக் கிடைத்து விட்டது அவனுக்கு..

தன் சொந்தச் செலவில், கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் பெரிசு பெரிசாய்ச் சுவரொட்டிகளைத் தயாரித்து விட்டான் அவன்..

விடிகாலை ஆறு மணிக்கே, போஸ்டரில் ஒன்றிரண்டைக் கையில் தூக்கிக் கொண்டு ஆட்டோ டிரைவர் ஞானம் - குமரனின் வீட்டுக் காலிங்பெல்லை அமுத்தினான்.

ராஜேஸ்வரி அம்மாள் - முதல் நாள் மீராவுடன் பேசிய நிறைவில் - சற்று தெளிவான முகத்துடன் கதவைத் திறந்தாள்.

'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமலா?'

'பெண்டாட்டிக்குக் குண்டு... புதுச் சிட்டு மீராவுக்குத் திண்டு!'

'கள்ளக் காதலியை வீட்டில் வைத்திருப்பவனுக்கா உங்கள் வாக்கு?'

ராஜேஸ்வரியின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வை...

''என்னடா இது... ஒவ்வொண்ணா கிளம்பறது...?''

''அந்த ரவி செய்யற வேலைம்மா இது.. இந்தப் போஸ்டர்லே ரெண்டை எடுத்து, மீராம்மாவோட அப்பா, அம்மாவுக்கும் தபால்ல அனுப்பியிருக்காங்களாம். சாயந்திரம் பத்திரிகையில வேற சுடச் சுடச் செய்தி வருதுன்னு ரவியோட ஆளுங்க சொன்னாங்க!''

ராஜேஸ்வரியின் பின்னாலேயே வந்த மீரா, இதைக் கேட்டு விக்கித்து நின்றாள்.

(தொடரும்)



போராடும் பெண்மணிகள்

இனிய சௌம்யா வரதன்,

இது கணேஷ். உங்களைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் யார்? என்ன? எவ்விதம்? யாவும் நானறிவேன். என்னைப் பற்றி முழுவதும் அறிய விரும்பினால் சொல்லத் தயாராய் இருக்கிறேன்.

இது கேலியில்லை. திமிர் இல்லை. வெகுநாள் யோசித்து எழுதுகிறேன்.

மறுப்பதாயின் இக்கடிதத்தைக் கிழித்து விடலாம். வழக்கம் போல் பெட்டிகேஷ் சப்மிட் செய்துவிட்டு வணக்கம் சொல்லி விட்டுப் போய் விடலாம்.

அன்புடன்,
கணேசன்.

பி.கு: உனக்குப் பெண்ணா கிடைக்க வில்லை? என்னைப் போய்... எதற்கு என்கிற ஆச்சர்யம் உங்களுக்கு வந்தால், சௌம்யா நீங்கள் ஒரு முட்டாள்.

சௌம்யா கடிதத்தை இரண்டு முறை படித்தாள். திரும்பி கணேசனைப் பார்த்தாள்.

''நாப்பத்தியெட்டு மணி நேரம் ஓவர் டைம் ஒரே டிபார்ட்மெண்ட்லே நாலு பேருக்குக் கொடுக்கறது தப்பு சார். ஒண்ணு மேன் பவர் இன்க்ரீஸ் பண்ணுங்க. அப்படி இல்லையா? வொர்க் லோட் குறைங்க. ரெண்டும் பண்ணாத மூணு மாசமா ஓவர் டைம்... ஓவர்டைம்னு... தப்பான லாஜிக் இது'' கணேசன் தீவிரமாய் விவாதம் செய்து கொண்டிருந்தான்.

எதிரே இருப்பவர் முணுமுணுப்பாய் ஏதோ சொல்ல...

''தட்ஸ் இட். ஒர்க்கர்ஸ் கார்னர் பண்றாங்க உங்களை. இதை நான்தான் பண்ண முடியும். இப்படி ஓவர்டைம்லதான் முடியும்கறாங்க ஈஸிட் ட்ரூ? நான் நம்பணுமா?''

மறுபடியும் எதிராளி எழுந்து தயங்கிப் போக, பெட்டி கேஷ் ஆயிரத்து நானூறு ரூபாயோடு கணேசன் அருகில் போனாள்.

''யெஸ்?''

''மணி அஞ்சு பத்து.''

''குட். என்ன பேலன்ஸ்? எவ்வளவு எடுத்தீங்க மார்னிங்?'' நாலாயிரத்து தொள்ளாயிரத்தில் மீதியும், செலவழித்த காசும் மடமடவென்று சோதனை செய்யப்பட்டது.

''இது என்ன வவுச்சர்?''

''ஆட்டோ.''

''யாருது?''

''ஸ்டேஷனரி டிபார்ட்மெண்ட்.''

''எதுக்கு?''

''கலெக்டிங் கார்பன், பாண்ட்ஷீட், டிபார்ட்மெண்ட் ஹெட் சிக்னேச்சர் இருக்கு.''

''இது?''

''டெம்போ பில்.''

''எதுக்கு?''

''ப்ராட்வே டு நுங்கம்பாக்கம் ஃபார் கலெக்டிங் ஸ்டேஷனரிஸ்.''

''ஏதோ தப்பு தெரியலை?''

''தெரிஞ்சுது. இதுலேயும் டிபார்ட்மெண்ட் ஹெட் சிக்னேச்சர் இருக்கு.''

''ஒரே நாள் ஆட்டோல ஒரு ஸ்டேஷனரி. டெம்போல ஒரு ஸடேஷனரியா?''


''வெவ்வேற இடமா இருக்கலாம்?''

''கேட்டீங்களா?''

''இல்லை.''

''கேட்கணும்.''

பாலகுமாரன்



''எப்படி சார்? ஆதரைஸ்ட் சிக்னேச்சர் இருக்கு. கொடுக்கத்தானே வேணும்?''

''மிஸஸ் சௌம்யா, இது அகௌண்டஸ் டிபார்ட்மெண்ட். இது யாரை வேணா எப்ப வேணா, எப்படி வேணா கேள்வி கேட்கும். இந்தக் கம்பெனி ஓனரைக் கூட இத்தனை பெட்ரோல் தேவையான்னு கேட்கும். இவங்க ஆஃப்டர் ஆல் ஹெட் ஆஃப் த டிபார்ட்மெண்ட்ஸ்... ஏன் கேட்கக் கூடாது? உட்காருங்க.'' போனை எடுத்தான்.

''ஹலோ. நான் அகௌண்டன்ட் கணேசன் பேசறேன். அது என்ன ஆட்டோல ஸ்டேஷனரி?''

பத்து நிமிடத்தில் கக்க வைத்து விட்டான். குடைந்து எடுத்து விட்டான்.

''கார்பன், பாண்ட் பேப்பர், ஜெம் கிளிப், பதினாறு பதினாறு கேஸ். அதே வேன்ல நான் வரணுமா? டெம்போலயா? நான் ஆட்டோலதான் வருவேன். அதுக்குப் போட்ட வவுச்சர்.''

''பர்ச்சேஸ் வேலைய நீ எப்படிச் செய்யலாம்?''

''பர்ச்சேஸ் போகலை. நான் போனேன்.''

''ஏன்?''

''அவங்களைக் கேளுங்க.''

''நான் போய் வாங்கிட்டு வந்தா நொட்டை நொள்ளை சொல்றாரு. அதான் நீயே போய் வாங்கிக்கன்னு அனுப்பினேன்.''

''இந்த சிஸ்டமே தப்பு. ஸ்டேஷனரிய A வேணுமா? B வேணுமான்னு கேள். நீ போ வாங்கறதுக்கு.''

''அதெப்படி A ன்னு பெரட்டில போட்டிருக்கும். B யை உள்ள வச்சு அனுப்பிடுவான்'' ஸ்டேஷனரி குதித்தது.

''அது செக் பண்ணி வாங்கறது பர்ச்சேஸ் வேலை. தப்பா இருந்தா ரிஜெக்ட் பண்ணி அனுப்பறது ஸ்டேஷனரி வேலை.''

''அப்படி அனுப்பிக் காசு செலவாவுதேன்னு நான் போனேன்.''

''நோ. அப்படிக் காசு செலவானாலும் பரவாயில்லை. இப்படிச் செலவாகக் கூடாது. இனி என்ன காரணம் கொண்டும் ஸ்டேஷனரி டிபார்டுமெண்ட் வெளியே போகக் கூடாது. நெக்ஸ்ட் மண்டே மீட்டிங்ல இது தெளிவாயிடும்.''

முப்பது வயசா...? முப்பத்தியொன்றா? பேச்சு சரளம். புத்தி கூர்மை. கணக்கில் நேர்மை. திடம் தெளிவு. நிதானம், கண்டிப்பு. காரணம் தேடல். பளபளவென்று மின்னிற்று.

''ஓகே. நீங்க போலாம். பேலன்ஸ் கேஷ் எத்தனை?''

''ஆயிரத்து நானூறு. எண்ணிக்கலாம் சார்.''

''வேணாம். கேஷ் பாக்ஸை உள்ளே வச்சுருங்க.'' சாவியை எடுத்துக் கொடுத்தான்.

பெரிய இரும்பு பீரோவைத் திறந்து கேஷ் பாக்ஸை வைத்தாள். பூட்டினாள். சாவியை நீட்டினாள்.

''மிஸஸ் சௌம்யா!''

''யெஸ் சார்.''

''லெட்டர் கிடைச்சுதா?''

''யெஸ் சார்.''

''கோபமா?''

''இல்லை சார்.''

''அப்போ?''

மெல்ல நடந்து தன் ஸீட்டுக்குப் போய் டிராயரில் வைத்திருந்த கடிதம் எடுத்து இரண்டாய்க் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டாள்.

கம்பெனி மாலை மணி ஒலித்தது.


''நான் வரேன் சார்.'' அவனை நோக்கித் திரும்பினாள்.

அவன் உறைந்து போயிருந்தான். பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு மெல்ல ஆபீஸ் விட்டு வெளியேறினாள்.

'சரி... நீ கெட்டிக்காரன். நல்லவன். சமர்த்து... அழகன்... அறிவாளி...

சில பெண்களுக்குக் குழந்தை உண்டாகியிருக்கும் பொழுது, பாதங்களில் நீர் கோர்த்துக் கொண்டு, தொல்லை கொடுப்பதுண்டு. இதற்கு எந்தவிதமான செலவுமின்றி கைகொடுக்க, புழக்கடையில் மதமதவென்று வளர்ந்திருக்கும் குப்பைமேனி இலைகளைப் பறித்து, நன்கு அலம்பி வாயில் போட்டுக் கொண்டு மென்று சாப்பிட்டு வாருங்கள். வீக்கமாவது ஒண்ணாவது!

- திருமதி. தேவனாதன்.



எனக்கென்ன? நீ அக்கௌண்டண்ட். நான் கேஷியர். அவ்வளவுதான். எனக்கும் முப்பது வயசு. பத்து வயசு போனால் நாப்பது. நாப்பது போனால் எல்லாம் போயிற்று. எதற்கு இடையே விஷப்பரிட்சை? ஊர் வாயில் விழும் வேதனை? பொல்லாப்பு?'

''சௌம்யா கல்யாணம் பண்ணிண்டுட்டாளாம்.''

''ரெண்டாவதா?''

''ரெண்டா, மூணா தெரியலை. நேத்து கல்யாணம்.''

''அடி மகா பாவி.''

''கலிகாலம்.''

'அவ புள்ளை?''

''இருக்கான்.''

''அவளோடயா?''

''வேறெங்கே?''

''புள்ளை மூஞ்சியப் பார்த்தாவது தேமேன்னு இருக்கக் கூடாதோ?''

''இருக்கலாம். இருக்க முடியலை போலிருக்கு.'' இருக்க வல்லினமாய்ப் பேசப்படும்.

''அவனுக்கும் ரெண்டாவதா?''

''இல்லை, ஃபர்ஸ்ட்.''

''யாருடி அது?''

''எவனோ?''

''தெரியுமோர்ன்னோ அவ விடோன்னு?''

''விடோ என்ன விடோ? இதெல்லாம் இப்ப பேச்சே இல்லை. இது கலிகாலம்.''

''கூசாதோ?''

''கூசலை.''

''வ்வே. எனக்குக் குமட்டறது.''

''நீங்க வேற. அவ வேற.''

''பொம்மனாட்டிதானே?''

''இது கலிகாலம். அவ வேலைக்குப் போறா. கேஷியர். நாலாயிரம் சம்பளம். சொந்த வீடு. ஒரே புள்ளை. பத்து வயசு. பிக்கல் பிடுங்கல் இல்லை. ஆட்டோல போறா... வர்றா.''

''இனி கார்ல போவாளோ?''

''போகலாம்.''

''அந்தப் பத்து வயசுப் புள்ளைய நினைச்சா எனக்குத் தாங்கலைடியம்மா. எப்பவும் அம்மா பின்னாடியே நின்னுண்டிருக்கும்.''

''அப்படி வளர்த்துருக்கா. கிழிச்ச கோடு தாண்டாது...''

''இவ தாண்டிட்டாளேடி.''

''இப்பல்லாம் சகஜம்.''

''எப்பவும் சகஜம்தான். அரசல் புரசலா நடக்கறதுண்டு அங்கங்கே. அப்படி ஒழிஞ்சுருக்கப்படாதோ... இது என்ன கல்யாணக் கூத்து... தாலி கட்டினானா?''

''ரிஜிஸ்டர் மேரேஜ்... தாலியும் கட்டியிருக்கலாம். யார் பார்த்தா?''

''கூப்புடலையா?''

''கூப்புடற கல்யாணமா? நியூஸ் வந்தது.''

''நாலு பேர் மூஞ்சில முழிக்க வேண்டாம்?''

''எதுக்கு முழிக்கணும்? அவ காசு; அவ வீடு. இப்ப ஒரு ஆள்.''

''நிறைய காசோ?''


''இருக்கு கணிசமா.''

''எப்படி?''

''எல். ஐ. சில நாலு லட்சம். ஏற்கெனவே வீடு இருக்கு. எனக்கு ஏதாவது கொடுடின்னு கேட்டாளாம் மாமியார்.''

''யாரோட மாமியார்?''

''சௌம்யாவோட மாமியார். எல். ஐ. சில எனக்கு இல்லையான்னு கேட்டா



தினசரி புழக்கத்தில் இருக்கும் பல எவர்சில்வர் பாத்திரங்கள் நாளடைவில் பளபளப்பு மங்கிக் காட்சியளிக்கும். இவற்றை வாரத்துக்கு ஒருமுறை விபூதியைக் கொண்டு நன்கு தேய்த்துப் (ஈரமில்லாமல் தான்) பாருங்கள். வெள்ளிப் பாத்திரங்கள் போல் அவை மின்னுவதைப் பார்க்கலாம்.

- ரேவதி ராஜாமணி.

ளாம். எள்முனைகூடக் கிடையாதுன்னுட்டா இவ.''

''எப்படி?''

''பாலிஸி அவ பேர்ல இருக்கு.''

''புள்ளை செத்தா அம்மாவுக்குப் பாத்தியதை உண்டே.''

''உண்டு. அந்த பாத்தியதைலதான் கேட்டா மாமியார். உனக்கு ஆம்படையான் இன்னும் உசிரோடதானே இருக்கான். சாகலையே. செத்தா தர்றேன்னாளாம். இவ.''

''ஐயோ...''

''நான் கொடுத்த நகையாவது கொடுன்னு கேட்டாளாம் மாமியார்.''

''அதையாவது கொடுத்தாளா?''

''நான் நல்லா இருந்தாத் திருப்பிக் கொடுத்துடுவேன். அறுத்துப் போயிட்

டேன். தர்றதுக்கு இல்லேன்னுட்டா.''

''என்னடி இது?''

''இன்னமும் வீடு புள்ளை பேர்ல இருக்கு. அதுல பங்கு கேட்டா மாமியார். தரலை.''

''ஏனாம்...?''

''எங்க கல்யாணத்துக்குப் பிறகு கட்டின வீடு. உனக்கு உரிமை இல்லேன்னுட்டா.''

''என்ன ஆங்காரம்... பாவமில்லையா இது?''

''சௌம்யா பாயிண்ட் வேற. இனி எனக்கு என்ன பாதுகாப்பு? எத்தனை இருந்தாப் போதும் எனக்கு? என் புருஷனைத் திருப்பிக் கொடுக்கட்டும் கடவுள். இத்தனையும் சப்ஜாடா யார் கேட்டாலும் தர்றேன். புருஷன் இல்லைன்னு ஆன பிறகு எல்லாம் எனக்கு வேணும். என் புள்ளைக்கு வேணும்.''

''சரியாத்தான் படறது.''

''இல்லை. சரியில்லை. மாமியார் என்ன சொல்றான்னா, 'இந்தக் கேஷியர் வேலையே என் புள்ளையாலதானே கிடைச்சுது? அவன் செத்துப் போய், அதுக்கு இரக்கப்பட்டு அவன் கம்பெனி உனக்குக் கொடுத்த வேலைதானே இது? அவன் வீடு, அவனாலே வந்த வேலை, அவன் போட்ட நகை, தவிர எல். ஐ. சி. காசும் எடுத்துக்கறியே? கொஞ்சமாவது எனக்குக் கொடேன்'ங்கிறா.''

''கொடுக்கலாம்தான்.''

''தரலை. உனக்குப் புருஷன் இருக்கான். உன் புருஷனுக்குப் பென்ஷன் வருது. வீடு வாசல் இருக்கு. குடித்தன வாடகை வருது. இன்னும் என்ன காசு? சோத்துக்கு இல்லைன்னா பங்கு வைக்கலாம். வெறும கொடு, கொடுன்னா... உனக்குப் புருஷன் செக்யூரிடி. எனக்கு இனிமே காசுதானே செக்யூரிடி? ஏன் உனக்கு என் துக்கம் புரியலைன்னு கேட்டாளாம்.''

''எப்படி செத்தானாம் சௌம்யா ஆம்படையான்?''

''வரதனா? ஹார்ட் அட்டாக்.''

''சின்ன வயசுதானேடி?''

''ஆமாம்.''

''எப்படி, கெட்ட பழக்கமா?''

''அதெல்லாமில்லை. பிறவிக் கோளாறு. மறைச்சு வச்சுக் கல்யாணம் பண்ணிட்டா. ஏதோ நாலு வருஷம் தாங்கித்து.''

''ஐயோ... நிஜமாவா?''

''சௌம்யா அப்படிச் சொல்றா. சந்தேகப்படறா. அந்தக் கோவம்தான் மாமியார், மாட்டுப் பொண் சண்டையா...''

''இப்ப என்ன ஆகும்?''

''எது?''

''கல்யாணம்னு தெரிஞ்சா?''

''மாமியாரோட சங்காத்தமே இல்லையே பங்கு தர மாட்டேன்னதும் என் மூஞ்சில யே முழிக்காதே. நீ நல்லா இருக்க மாட்டே. சந்தில நிப்பே... சிரிப்பாச் சிரிக்கப் போறே, பாருன்னு சாபம் விட்டாளாம் மாமியார்.''

''இது கலிகாலம். பத்தினி சாபம் பலிக்குமா? பலிக்காது. சௌம்யா நல்லாத்தானே இருக்கா?''

''என்னவோ ஒரே குழப்பமா இருக்கு. யார் நல்லவா, யார் கெட்டவான்னு தெரியலை. எல்லாம் சரின்னு தோண்றது. தப்புன்னும் படறது. புரியலைடிம்மா. நான் கிளம்பறேன்.''

''சரி.''

''ஒண்ணு கேட்கணும். வரதன் சௌம்யாவை எப்படி வச்சுண்டிருந்தான்?''

''தலைல. அவன் வளர்த்து விட்டுத்தான் இப்படி உசந்துட்டா. ஒண்ணும் தெரியாத வந்த பொண்ணா இவ? 'இதைப் படி. அதைக் கத்துக்கோ. இதைப் பார். அதைத் தெரிஞ்சுக்கோ'ன்னு தாங்கு, தாங்குன்னு தாங்கித் தடேர்னு போட்டுட்டு போயிட்டான்.''

''பாவம்... பாவம்...''

''யாரு?''

''எல்லாரும்தான்.''

சௌம்யா மனசுக்குள்ளேயே யாரோ இரண்டு பெண்கள் அவள் வீடு வரை பேசி, வம்பளந்து கலைந்து போனார்கள்.

படியில் பிள்ளை உட்கார்ந்து காமிக்ஸ் படித்துக் கொண்டிருந்தான். சௌம்யாவைப் பார்த்து எழுந்தான். சிரித்தான். 'அம்மா' என்று கட்டிக் கொண்டான்.

சௌம்யா அவன் தலையைக் கோதினாள்.

(தொடரும்)

லண்டனைச் சேர்ந்த மார்கரெட் ஐவ்ஸ் என்ற பெண் கார் விபத்தில் நீண்ட மயக்க நிலையில் இருந்தாள். அவளுடைய கணவன் மார்கரெட்டின் ஒன்பது மாத மகனின் குரலை டேப் ரிக்கார்டர் செய்து நினைவிழந்த மனைவியின் அருகில் ஒலிபரப்பியதும் மார்க்கரெட் முழு நினைவு பெற்றாளாம்.

– கனகா கெங்கை முத்து.





சிறந்த 100% உயர்தரத்திற்கு இந்த பெயர் ஒன்றே போதுமானது

நவீன கேதான் தொழிற்சாலைகளில் உயர்ரக மூல பொருட்களையும் புதுமையான தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஒவ்வொரு கேதான் மின் விசிறியும், அது தொழிற்சாலைக்கு வெளியே அனுப்பப் படுவதற்கு முன்பு, ஒரு முறைக்கு இருமுறையாக பரிசோதிக்கப்படுகிறது. ஒவ்வொரு கேதான் மின்விசிறியும் பழுதில்லாமல் செயலாற்றி கேதான் பெயரை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக.

"அது கேதானாக இருந்தால்—பெயர் ஒன்றே போதுமானது".

என்று மக்கள் சொல்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.



கேதான் — பெயர் ஒன்றே போதுமானது

கேதான் ஃபேன்ஸ் (இந்தியா) லிமிடெட், கேதான் டிப்ரெவாலா எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட், கேதான் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்.

ராடும் 6

பெண்மணிகள்

சௌம்யா பிறந்து வளர்ந்தது ஸ்ரீரங்கம். படித்தது கிழக்கு ரங்கா பாட சாலை. அப்பாவுக்கு ஆசிரியர் உத்தி யோகம். அம்மா வீட்டுத் தலைவி. வைண வம் ஒவ்வொரு ரத்த செல்லிலும் ததும்பி நின்ற குடும்பம்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் நெருப்புப் பிடித்து மூலவர் சிலை தகதகக்க எரியும் போது அப்பா தெருவில் ரங்கா



ரங்கா என்று அலறி ஓடியதையும், பிராண ஹத்திக்கு முயற்சித்ததையும் ஸ்ரீரங்கம் இன்னும் நினைவில் வைத்திருக்கிறது.

''ஊர்ல கெட்டது நடக்கறதால ரங்க னுக்குப் பிடிக்காம போயிடுத்து. அவன் கோவம்தான் நெருப்பா வந்தது. யார் என்ன வேணா செய்யட்டும். நம்ம வீடு ஒரு இஞ்ச் அந்தண்டை நடக்கக் கூடாது. ஒரு தப்பு செய்யப்படாது. ஒரு ஏகாதசி உபவாசம் தவறப் படாது. தப்பித்து.... கொலை காரனா மாறிடுவேன்.''

சினிமாவோ, சீட்டாட்டமோ, கெட்ட பேச்சோ, ஏன் கெட்ட சிந்தனையோ கூட இல்லாமல் அக் குடும்பம் வளர்ந்தது சௌம்யா அந்தச் சூழலில் பிறந்தாள், வளர்ந்தாள். எச்சல், பத்து, மடி, விலக்கு எல்லாம் அவள் தலையில் திணிக்கப் பட்டது. ஆண்களோடு பேசினால் காத றுந்து போகும் என்று பயந்தாள். வயதுக்கு வந்த பிறகு கொல்லைப்புற ஓலைத் தடுப்பில் யார் கண்ணிலும் படாது மூன்று நாள் தனித்து இருக்கப் பழகினாள்.

படிப்பில் சுட்டி. திருச்சி பெண்கள் கல்லூரியில் சேர்ந்து பட்டப் படிப்பு முடித்த கையோடு வரதனைக் கைப்பிடித்தாள். சௌம்யாவுக்காக ஏழை வாத்தியார் வீட்டில் சம்பந்தம் பண்ண வந்தவர்கள் இரண்டு மூன்று பிடி உயரம் வைரத்தோடு மின்னுகிற உயரம். சரிப்படுமா? நான் யாருக்கும், எந்தக் கெடுதலும் செய்யலை. என் பொண் யாருக்கும் நான் வரன் தேடலை. ரங்கனே கொண்டு வரான். ரங்கனே கல்யாணம் நடத்தறான். என் குழந் தைகள் நன்னா இருக்கும். அப்பாவின் நம் பிக்கை இது.

சௌம்யா அதே நம்பிக்கையில் புக்ககம் போனாள். சென்னைக்கு ரயில் ஏறினாள். அப்பாவைப் பிரியும் துக்கத்தை விட ரங்க னைப் பிரியும் துக்கம் ஸ்ரீரங்கத்தைப் பிரி யும் துக்கம் அதிகமிருந்தது.

முதல் வகுப்புக் கூபேயில் புருஷனோடு பயணப் பட்டபோது ஜன்னலருகே காத்தி ருந்து ஸ்ரீரங்க கோபுரத்து மெர்க்குரி வேப்பர் தெரிந்ததும் கன்னத்தில் போட்டுக் கொண்டாள். ரங்கா, ரங்கா என்று முணு முணுத்தாள்.

''ஸ்ரீரங்கத்துக்காராளுக்கே கொஞ்சம் ஸ்வாமி பைத்தியம் ஜாஸ்தி... இல்லை?'' அவன் கேட்க அவள் வெடுக்கென்று திரும் பினாள்.

''ஏன் உங்களுக்கு இல்லையோ?''

''பக்தி உண்டு. பைத்தியமில்லை.''

''இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?''

''கடவுள் எங்கும் உள்ளவன். என்னுள் ளும் உள்ளவன். என்னை நான் வருத்திக் கொள்ளாமல் இருப்பதே கடவுள் வணக்கம்.''

''உங்க இஷ்டத்துக்கு இருக்கறத்துக்குப் பேர் கடவுள் வணக்கமா?''

''என் இஷ்டத்திற்கும், என் இஷ்டத்தால் எவருக்கும் கஷ்டம் வராது இருக்கவும் தெரிந்தால் போதும்.''

''அப்போ... பூஜை வேண்டாமா?''

''அதுவே பூஜை.''

''அப்போ திருவாய்மொழி சொல்ல வேண்டாமா?''

''எல்லா உயிர்களிடத்தும் அன்போடு இருப்பதே திருவாய்மொழி.''

''மடி... ஆச்சாரம்?''


''மனசு சுத்தமெனில் மற்றது வீண்.''

கூபேயில் பாடம் ஆரம்பமாயிற்று.

''இப்படி ஓடற ட்ரெயின்ல மடில உட்கார வச்சுண்டு.. இது சரியா? விழுப்பில்லையா?''

''என் வலது தொடை உனக்கு உட்கார உரியது. பெருமாள் அழைக்க பிராட்டி மறுப்பாளா?''

''ட்ரெயின்ல கூபேன்னு இப்படி ஒரு இடம் இருக்குன்னே எனக்கு இதுவரை தெரியாது.''



பாலகுமாரன்

''இனி நிறைய தெரிஞ்சுக்கலாம். தெரிஞ்சுக்கணும்னு நீ ஆசைப்பட்டா போதும் நான் சொல்லித் தரேன்.''

அவன் பட்டணத்துத் தந்திரன். எட்டு வயசில் வெகுளி அழித்து கண்சிமிட்டக் கற்றவன். நிறைய புத்தகங்கள் படித்தவன். இலக்கியம் தெரிந்தவன. வைணவம் மட்டுமின்றி சமணமும், பௌத்தமும் புரிந்தவன். அவன் வீடு அப்படி. ஆங்கிலம்தான் அங்கு வழக்கு மொழி. இந்தியன் எக்ஸ்பிரஸ், ஹிண்டு இரண்டும் வாங்குகிற வீடு. அப்பாவுக்காக ஹிண்டு. அவனுக்காக எக்ஸ்பிரஸ்.

இந்திராகாந்தி எமர்ஜென்ஸி சரி, தவறு என்று அப்பனும் பிள்ளையும் காரசாரமாய் அடித்துக் கொண்டார்கள்.

அதே சமயம் இந்திராகாந்தியை நடக்க வைத்து அழைத்துப் போனதை வெறுத்தார்கள்.

ஆயிரம் கருத்து வேறுபாடு இருப்பினும் அப்பாவுக்கும், பிள்ளைக்கும் நல்ல உறவு இருந்தது. பாசப் பிணைப்பு இருந்தது.

''என்னப்பா இது... முதுகுல திட்டுத் திட்டா கருப்பா...''

''கூடத்துல தரைல படுத்துக்கறார். அழுக்கு. தேச்சு குளிக்கறதில்லை.''

''கை எட்டினாத்தானே. உன்னைக் கூப்பிட்டா வெட்கப்படறே..'' அப்பா அம்மாவைப் பார்த்து கண் சிமிட்ட,

பிள்ளை அப்பாவுக்கு முதுகு தேய்த்து குளிப்பாட்டியது. சோப்பு குழப்பி, பிரஷ்ஷால் முதுகு தேய்த்து அழுக்கு நீக்கியது. குளிக்கும்போதே குடையும், செருப்பும், கொடாதே தாமோதரனை நான்... என்கிற பாசுரம் அலசிற்று.



மோர்க் குழம்பு ஒரு பொங்கு வந்தவுடன் இறக்கி வைத்து உப்புப் போட்டால், நீர்த்துப் போகாது.

- பார்வதி.

எந்த மதத்திலியாவது அப்பா, பிள்ளை உறவு சொல்லியிருக்கா... பாசுரமா, பாட்டா? ஹிந்து மதத்துல குடும்பம் என்பது ரொம்ப உயர்வு. ''ஆடி அமுது செய். அப்பனும் உண்டிலன், உன்னோட உண்பான்.'' சீக்கிரம் குளிச்சுட்டு வா. அப்பா சாப்பிடலை. உனக்காக காத்துண்டிருக்கான்னு ஒரு பாசுரம். அடடா... ''சௌம்யா இந்தப் பாசுரம் மனப்பாடமா உனக்கு?'' சௌம்யா பத்தும் சொன்னாள்.

இடுப்பில் துண்டும், முதுகில் சோப்புமாய் மாமனார் காது குளிரக் கேட்டார்.

பிரபந்தம் அந்தக் குடும்பத்திற்கு வேதமும் இல்லை. வேடிக்கையும் இல்லை. அது கலைப் படைப்பு. மனித ஆற்றலின் வெளிப்பாடு. எண்ணங்களின் கடைசலில் வந்த வெண்ணை. நவநீதம் உண்ண உடல் குளிரும். மனசு குளிரும். அது உறவுகளின் மேன்மை சொல்ல வந்த தமிழ்.

''கொங்கை கிளர்ந்து குதூகலித்து என் ஆவியைக் குலஞ் செய்யும் நங்கைமீர் நீ அவனை வரக்கூவுவாயாகில், நான் அவனை செய்வன காணே.''

''பொம்மனாட்டி தாண்டா இந்த வரி எழுத முடியும். ஆம்பளையால இது யோசிக்க முடியுமா?''

முதன் முறையாய் பாசுரங்களுக்கு கலை அர்த்தம், வாழ்க்கை அர்த்தம் அவள் கேட்டாள்.

அவள் தளிகையில் வீடு இறங்கியது. ஓடி, ஓடி செய்த சிஷ்ருஷையில் மகிழ்ந்தது. மாமி நடுநிலையாள். ஆசாரம் இல்லாமலும் இல்லை. எல்லாவற்றிலும் பார் என்கிற கண்டிப்பும் இல்லை. முடிந்த அளவு செய் என்கிற நிதானம். வாழ்க் கையை அனுபவி என்கிற பாடபேதம்.

''இன்னிக்கு ஏகாதசி விரதம் மாமி.''

''என்னால முடியாதும்மா. நீ வேணா எடுத்துக்கோ. பால் கூட வாங்கு.''

''எதுக்கு?''

''கூட ரெண்டு வேளை காப்பியோ, பாலோ சாப்பிட வேண்டாமா?''

''நான் பச்சத் தண்ணி கூடக் குடிக்க மாட்டேன்.''

வீடு அவள் விரதத்துக்குப் பயந்தது.

''வயத்துல குழந்தையை வச்சுண்டு என்னடி அட்டூழியம் இது.'' மாமி அன்பாய் கண்டித்தாள். அந்த கண்டிப்பில் விரதம் தளர்ந்தது. பால் பாதகமில்லை என்று பேசப்பட்டது.

''எங்கியாவது வெளிய வாசல்ல கூட்டிண்டு போடா.''

''பாலசந்தர் படம் வந்திருக்கு போகலாமா?''

படம் சௌம்யாவுக்கு மிரட்சியாய்

இருந்தது. இதழோடு இதழ் பொருத்தி முத்தமிடும் இங்கிலீஷ் படமும் போனாள். ஒரு வருடத்தில் அவள் வாழ்க்கை திசை மாறியது. யாரும் அவளைத் திரும்பு என்று சொல்லவில்லை. கட்டாயப்படுத்தவில்லை. இடத்துக்குத் தக்கபடி அவள் மாறிப் போனாள்.

''மாமா, ஒரு விஷயம்?''

''என்னம்மா? உட்காரு.''

''ஐயோ உங்க எதிரிலேயா?''

''சௌம்யா, மரியாதை மனசுல இருந்தா போறும். மாமனார்ன்னு மரியாதை வேண்டாம். மனுஷன்னு மரியாதை போதும்.''

''எப்படி அது?''

''மாமனார் என்பது ஒரு நிலை. யோக்கியதை அல்ல. தாய் என்பதும் தந்தை என்பதும் ஒரு நிலை. யோக்கியதை அல்ல. என் யோக்கியதை, என் படிப்பு,என் சிந்தை என் செயல்... அதை மதி போதும். என்ன வேண்டும்?''

''ஸ்ரீரங்கம் போகணும்.''

''முட்டாள். முட்டாள்.''

''தப்பா இருந்தா மன்னிச்சுக்கோங்க.''

''உன்னையில்லைம்மா. என்னைச் சொன்னேன். டேய்... நான்தான் வயசானவன். புத்தியில்லை... உனக்காவது தெரிய வேண்டாம்?'' பிள்ளையை விளித்து, மனைவியை அழைத்து, ''என்ன விளையாடறேளா? வாயும் வயிறுமா இருக்கறவக்கிட்டே என்ன வேணும், ஏது வேணும்னு கேட்க மாட்டேளா?'' கொண்டு போய் விட்டுட்டு வாடா. ஐ'ஆம் ஸாரி சௌம்யா, ஸோ ஸாரி.''

''ட்ரெயின்ல டிக்கெட் கிடைக்கலப்பா.''

''ப்ளேன்ல போடா.''

ஸ்ரீரங்கம் வாத்தியார் தலைமுறையில் முதன் முதலாய் விமானம் ஏறியவள் சௌம்யாதான்.

''ஏன்னா, கோவில்... கோவில் தெரியறது ரங்கா... ரங்கா...'' கன்னத்தில் போட்டுக் கொண்டு ஒரே ஒரு பாசுரம் சொன்ன நேரத்தில் திருச்சியில் தரை தொட்டது. டாக்ஸியில் ஸ்ரீரங்கம் வந்தாள்.

''மெட்ராஸ்லேர்ந்து ப்ளேன்ல வரியா? திருச்சிலேர்ந்து டாக்ஸில வரியா? ஏண்டி செலவு இல்லையோ? இத்தனை புடைவையா? இது நகபாலீஷ். இது என்ன? பாலீஷ் எடுக்கறதா? கெம்பு கல்லு செட்டு இப்ப வாங்கினதா? மாமியார் வாங்கிக் கொடுத்ததா?''

நன்னாயிருக்கியாடி? கேட்கவில்லை. அதான் தெரிகிறதே.

வீட்டில் இறக்கி விட்டு லோக்கல் லேடி டாக்டரிடம் அவள் உடல் நலனை ஒப்படைத்து விட்டுத்தான் போனான்.

''எதுக்கு டாக்டர்... நாங்க கவனிச்சுக்க மாட்டோமா?''

''டாக்டர் கவனிப்பு இருந்தா இன்னும் நல்லது. நான் வரட்டுமா?''

''லக்கிடி நீ.''

''மடி, ஆசாரம் போனதுக்கா?''

''இத்தனை அன்பா இருக்கறவா, ஆசாரம் இல்லாம இருந்தா என்ன?''

''கெட்டப் பழக்கம் ஏதாவது உண்டா?''

''காப்பி குடிக்கிறா, தோணின போதெல்லாம்.''

''ஒழியறது போ. நீயும் பழகிண்டுட்டியா?''

''நான் ரெண்டு வேளை குடிப்பேன்.''

காப்பி குடிக்காமல் பைத்தியம் பிடித்துவிட்டது. கேட்டு வாங்கி, போடச் சொல்லி பட்டணத்து அனாச்சாரம் பிறந்த வீட்டில் நுழைந்தது.

நடுவே நாலு முறை வந்து போனான். தனியே அவளோடு கட்டிப் பிடித்து உறங்கினான்.

பிள்ளை பிறந்தது கேட்டு சகலரும் வந்தார்கள். அத்தனை சௌகர்யமில்லையே. திருச்சில வெய்யில் தகிக்கறதே.. அந்த மாதமே கூட்டிக் கொண்டு போனார்கள்.

''ரொம்ப வீக்கா இருக்கு உன் உடம்பு. அஞ்சு மாசம் ஆச்சு... பால் போறாது போலருக்கு. கொஞ்சம் நான்வெஜ் சூப் சாப்பிடறியா?''

''நான்வெஜ் சூப்பா?''

''சிக்கன் சூப்... மட்டன் சூப்.''



எந்த சீசனிலும் கிடைக்கும், வெங்காயம், வெள்ளைப் பூண்டை மட்டமாக எடை போட வேண்டாம். இவைகள் முதல்தரமான கிருமி நாசினிகள். மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற முதல்தரமான 'டானிக்' ஆகும். சொறி, சிரங்கு, யானைக்கால், சைனஸ், டான்ஸில், இரத்த அழுத்தம், இருமல், ஆஸ்த்துமா, ஜுரம், காமாலை போன்றவற்றிற்குக் கைகொடுக்கும் செலவில்லாத மருந்தாகும்.

- திருமதி. தேவனாதன்.

''அப்பாவுக்குத் தெரிஞ்சா வெட்டிப் போட்டுருவார்.''

''உன்னை வெட்டறதுக்கு இனி ஆள் நான்தான். உங்கப்பா இல்லை.''

சொல்லும் விஷமாயிற்று. விஷக்கடி வேளையாயிற்று.

குழந்தை பிறந்த இரண்டாவது வருடம் நெஞ்சு வலிக்கிறதென்று ஆபீஸில் சொல்லி கார் வரவழைக்கு முன் பிராணன் போயிற்று.

அவள் வெட்டுப்பட்டது அவனால். அவன் இழப்பால்.

இப்படி சாவு வருமா? எப்படி அது?

''உங்களுக்குத் தெரியாதா மேடம். அவருக்கு என்லார்ஜ்ட் ஹார்ட்.''

''என்ன?''

''என்லார்ஜ்ட் ஹார்ட். பத்து வயசிலேர்ந்து நான்தான் ட்ரீட்மென்ட் பண்றேன்.''

''நான் வந்து எதுவும் இல்லையே...''

''வியாதியில்லை. பிறப்பு. இதோட எழுபது வயசு வரைக்கும் வாழ்ந்தவர் உண்டு. இருபதிலேயே போனவரும் உண்டு.''

இது முப்பதில் போய் விட்டது.

சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டது.

நடந்த கால்கள் நொந்தவோ
நடந்து ஞாலமேனவாய்
கிடந்த மெய் குலுங்கவோ
விலங்குமால் வரை சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்
கரைக் குடந்தையுங்
கிடந்தவாறு எழுந்திருந்து
பேசுவாழி கேசனே...

பேசாமலேயே போய் விட்டான்.

சௌம்யா இருண்டு போனாள்.

கோபமானாள்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது.

அன்புள்ள மாமனும், மாமியும் வெறுப்பானார்கள்.

அவளுடைய வீடு வந்து அலறியது.

அவனை எரியூட்டி விட்டு 'வந்துடு எங்களோட' என்றது.

அவள் மறுத்து விட்டாள்.

பிள்ளை ஸ்ரீரங்கத்தில் வளருவதை விட சென்னை சௌகர்யம்.

''எங்கேடி இருப்பே?''

''தனியா. நீ இரு என் கூட. அப்பாவை, ஓய்வு பெற்ற அந்த ஆசிரியரைத் தன் துணைக்கு வைத்துக் கொண்டாள். பாதியில் நின்ற வீட்டை முழுக்க முடித்தாள். ஆரவாரமில்லாது குடி போனாள்.

''இந்த வீடு வேண்டாமடி, ராசியில்லை.''

''இதுதான் என் வீடு.''

''ஏன்?''

''அவர் ஆசைப்பட்டு கட்டின இடம். இதுதான் என் சமாதி. இங்கதான் நான் சாவேன்.''

''என்னடி வீட்டை சமாதின்ற?''

''ஸாரி... தாஜ்மஹால்.''

''என்ன பண்ணப் போற?''

அவன் அலுவலகத்துக்குப் போனாள். கணக்கு செட்டில் செய்து கடைசி நாள் சம்பளம் வரை பார்த்துக் கொடுத்தார்கள். வாங்கும் போது அழுதாள். அலுவலகம் உறைந்தது.

''உங்களுக்குத் தேவையானா ஒரு வேலை போட்டுத் தர்றோம். லைட் வொர்க்... டெஸ்பாட்ச் மாதிரி...''

யோசித்தாள்.

சரி என்றாள்.

இதுவும் அவன் புழுங்கிய இடம். வீடு தாஜ்மஹால் எனில் இது அவன் போர்க்களம். அவன் உயிர் விட்ட இடம்.

அவன் டேபிள் நாற்காலி எடுத்துக் கொண்டாள். டெஸ்பாட்சில் தொடங்கி படிப்படியாய் கேஷியரானாள்.

பிள்ளை ஐந்தாவது வகுப்பு வந்தான்.

வேலைக்குப் போய் வீடும் கவனித்து... ஆச்சாரமா... அப்படியெனில்? பாசுரமா? ஏது நேரம்? ஸ்ரீரங்கமா எந்தப் பக்கம்?

இடி இடித்து மின்னல் வெட்டி மழை பொழிந்து வெள்ளம் வந்தது. காட்டாறு மண் அரித்து திசை மாறிற்று.

பள்ளம் மேடாயிற்று. மேடு பள்ளமாயிற்று. இது இயற்கை. சீற்றமுள்ள இயற்கை. ஆறு திசை மாறும் போது அறிவான பெண் மாறக் கூடாதா. சௌம்யா மாறினாள்.

(தொடரும்)

பெருங்காயத்தை வெறும் வாணலியில் பொரித்து, உப்புடன் பொடி செய்து வைக்கவும். மேன்மேலும் ஏப்பம் வந்து கொண்டு இருந்தால் ஒரு சிட்டிகை வாயில் போட்டு வெந்நீர் குடிக்க, வயிறு சமனமடையும்.


– பார்வதி.



மாஜிக் என்றாலே நமக்குப் பிரமிப்பு! மாஜிக் நிபுணர்களிடையே, போட்டி என்றால் கேட்கவே வேண்டாம்! அதிலும் உலகமகா மாஜிக் நிபுணர்களிடையே நடக்கும் போட்டியில் நம்மில் ஒருவனான பதின்மூன்று வயதுச் சிறுவன் சக்கைப் போடு போட்டுச்சிறப்புப் பரிசும் பெற்றான் என்றால்......!

பதினெட்டாவது அகில உலக மாஜிக் நிபுணர்கள் போட்டி, ஜூலை 8 முதல் 13 வரை ஸ்விட்சர்லாந்தில் நடந்தது. போட்டியை நடத்திய மாஜிக் நிபுணர்களின் சங்கங்களுக்கான கூட்டமைப்புத்தான், இப்படி நம் நாட்டுச் சிறுவனைக் கௌரவித்திருக்கிறது!

சிறுவன் பெயர் தேஜஸ்வி. அப்பாவின் பெயர் சங்கர் என்பதால், இவனை 'ஜூனி



உலக மாஜிக் நிபுணர்களை அசத்திய ஜூனியர்!

யர் சங்கர்' என்றே குறிப்பிடுகிறார்கள். உடுப்பியில் கிறிஸ்டியன் ஹைஸ்கூலில் 8 ஆம் வகுப்பில் படிக்கிறான். அப்பாவும், அம்மாவும் கூட மாஜிக் நிபுணர்கள்தாம்!

ஜூனியர் சங்கர் மூன்று வயதாயிருக்கும்போதே அசத்திய அசத்தலில் அதிர்ந்து போய், அமெரிக்க மாஜிக் நிபுணர்கள் சங்கம் 'உலகின் குட்டி மாஜிக் நிபுணன்' என்ற பட்டத்தைக் கொடுத்திருக்கிறது.

நியூயார்க்கிலுள்ள மன்ஹாட்டனில் இந்த மூன்று வயதுப் பையனின் நிகழ்ச்சிக்கு 50,000 பேர் வந்திருந்தார்கள். பிறகு, நாலாவது வயதில் ஒருமுறை கையைக் காலைக் கட்டி, பெட்டிக்குள் அடைத்து சீல் வைத்து விட, பத்தாவது செகண்டுக்குள், கட்டுக்கள் எதுவுமே இன்றி அரங்கத்திலிருந்து வெளிப்பட்டு 'ஹௌடினி ஆஃப் இந்தியா' என்ற பட்டத்தைத் தட்டிச் சென்றவன் தேஜஸ்வி.

நியூயார்க் இந்தியன் அசோசியேஷனில் முதல் மாஜிக் ஷோவை நடத்தியவன், இப்போது லூசன், ஜெனீவா, ஜூரிச் ஆகிய இடங்களில் நிகழ்த்திய பிறகு, மொத்த எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிட்டது!

இவன் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இந்த வருடம் வெளியாகிறது - ஒன்பதே வருடத்தில் 1000 நிகழ்ச்சிகள் வழங்கியதற்காக! அதிலும் இந்தப் பதின்மூன்று வயதுக்குள்!

ஜப்பான் டீவியிலும், ஜூனியர் சங்கர் மேஜிக் ஷோ நடத்தியிருக்கிறான். ''இப்போது செப்டம்பர் முதல் வாரத்தில் லண்டன், ஹாலந்து டீவி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அழைப்பு விடுத்திருக்கிறார்கள். போகப் போகிறேன்!'' என்கிறான் சந்தோஷமாக. 1994 வரை இப்போதே அயல் நாடுகளில் புக்கிங் ஆகியிருக்கிறது சங்கருக்கு!

''என்னுடைய பாணி மேற்கத்திய - கிழக்கத்திய பாணிகள் இரண்டும் சேர்ந்தது!'' என்கிறார் புரொபசர் சங்கர். பையனும் டிட்டோ.

மாஜிக்கில் இனி இவன் வாங்க ஏதாவது அவார்டு இருக்கிறதா என்றே தெரியவில்லை - அவ்வளவு நீளப்பட்டியல். பெரும் பகுதி வெளிநாடுகளில் வாங்கியது!

''எல்லாம் சரிதான், விலைவாசி குறைய ஏதாவது மாஜிக் இருக்கிறதா?'' என்று கேட்டால், ''ஓ! நாலாந்தர அரசியல்வாதிகளை மாயமாய் மறைந்து போகச்செய்கிற மந்திரக் கோல், வோட்டு வடிவில் மக்களிடம்தானே இருக்கிறது!'' என்று பதில் சொல்கிறான் இந்தக் குட்டி மந்திரவாதி. தேஜஸ்வி என்ற பெயர் பொருத்தமாகத்தான் இருக்கிறது!

- சித்தார்த்

நேற்றுவரை நந்தவனம்

சோபாவின் ஒரு மூலையில், சாய்த்து வைத்த பொட்டலம் போல உட்கார்ந்திருக்கும் அப்பாவை, வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் மீரா.

'ஓ'வென அழுது தீர்த்தால் தேவலை போல, துக்கம், தொண்டையை அடைத்தது அவளுக்கு..

ராஜேஸ்வரி அம்மாள், பரபரவென ஓடிப் போய் காப்பியைக் கலந்து கொண்டு வந்து, அவர் எதிரில் வைத்தாள்.

''முதல்ல காப்பியைக் குடிங்க.. அப்புறம் பேசலாம்...''

அவர், அந்த அம்மாளை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துத் தலையசைத்தார்.

குமரன், அவரது எதிர் சோபாவில்... இடது கை ரேகைகளை வலக் கை விரலால் அழுந்தத் தேய்த்து விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

இளவரசு மட்டும்தான் இந்தச் சூழ்நிலையிலிருந்து மாறுபட்டவனாய் மீராவின் முதுகில் உப்பு மூட்டையாய்த் தொங்கினான்.

''வா.. விளையாடப் போகலாம்.''

''ஷ்... இரு...''

மீரா, ரகசியமாய் அவன் காதில் கிசுகிசுத்தாள்.

''காப்பி குடிங்க... பல் விளக்கணும்னா... மீரா, அ ழை ச் சி ட் டு ப் போயேன்.''

அவர், ராஜேஸ்வரிக்குப் பதிலளிக்கும் பாவனையில் தலையசைத்தார்.

''ஸ்டேஷன்லேயே காப்பி குடிச்சிட்டேன்.. இன்னிக்குக்காலையில ஒரு வேளை காப்பி. ராத்திரி ஒரு தம்ளர் பால்தான் குடிப்பேம்மா. நடுவுல சுத்த விரதம். ஒவ்வொரு சனிக்கிழமையும் இப்படித்தான்...''

அனுராதா ரமணன்

''சனிக்கிழமை நான் கூட விரதம் இருக்கறது உண்டுங்க. ஆனா, ஒரு பொழுதுதான். வயசான காலத்துல முழுப் பட்டினி கிடந்தா உடம்பு வாய்வு கொண்டுடும்னு சொல்லுவாங்க...''

ராஜேஸ்வரி மிக யதார்த்தமாய்ப் பேசினாள்.

இப்பொழுது மீராவின் அப்பா மெல்லியதாய் - மூன்றாம் பிறைக் கீற்று போலச் சிரித்தார்.

''இனிமே இந்த உடம்புல என்ன வந்தா என்ன.. நான் சனிக்கிழமை, வெள்ளிக்கிழமை விரதமெல்லாம் சுத்த ஹம்பக்னு ஒரு காலத்துல சொல்லிச் சிரிச்சிருக்கேன்.



என் பொண்ணுக்கு ஆக்ஸிடென்ட்டுல ரெண்டு பாதமும் கருகினப்ப வேண்டிட்டேன். 'சனிக்கிழமை தோறும் முழுப் பட்டினி கிடக்கறதா...' இப்ப கால் சரி யாயிடுத்து.. ஏன் இறக்கை கூட முளைச் சிடுத்து.. அதுக்காக என் விரதத்தை விட முடியுமா...''

மீராவினுள் அப்பாவின் ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டிச் செருகலாய்...

அவள், குழந்தையை இறக்கி விட்டு, மௌனமாய்க் காப்பி தம்ளரைக் கொண்டு போய் உள்ளே வைத்தாள்.

சற்று நேரம் சமையலறையிலேயே நின்றால், வெளியே உருவாகியுள்ள பனி மூட்டம் கலையாதா என்று நினைத்தாள்.

'கண்டிப்பாய்ப் போஸ்டர் கிடைத்துத் தான் அப்பா புறப்பட்டு வந்திருக்க வேண்டும்..'

'ஐயோ, அம்மா என்ன பாடுபட்டிருப் பாள்?'

மீராவுக்கு, தான் தஞ்சாவூர் ஸ்டேஷனை விட்டு ஊருக்குள் வரும் போது பார்த்த குமரனின் புகைப்படத்துடன் கூடிய வண்ணச் சுவரொட்டிகள்தான் நினைவுக்கு வந்தன.

இப்போதும் - ஸ்டேஷனை ஒட்டியுள்ள சுவரில் சுவரொட்டிகள் இருக்கும்...

அப்பாவின் தலையைக் குனிய வைப்ப தாய், உடம்பைக் குன்றச் செய்வதாய்...

அவள் மெதுவாய்க் கூடத்தை எட்டிப் பார்த்தாள்.

குமரன் ஏதோ அதிகாரிக்குப் பயந்த குமாஸ்தா போல, பணிவாய் பேசிக் கொண் டிருந்தான்.

மீராவின் தந்தை - அவனது முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''நடந்து போன விபத்துக்குக் காரணம் யாருன்னு தேடி அலையறதை விட, இனிமே எப்படி வாழறதுன்னு கொஞ்சம் யோசிக்கலாம்னு நான்தான் மீராகிட்ட.... உங்க டாட்டரும் அத்தனை சுலபத்துல ஒத்துக்கலை. ரெண்டு நாள் முன்னாலே, மிஸ்டர் கீர்த்தியோட அம்மா, அப்பாவைப் போய்ப் பார்த்துட்டு வந்தாப்பல... அவங் களும் மீராவோட எதிர்காலத்தைப் பத்தி ஒரு நல்ல முடிவாத்தான் இந்தக் கல்யா ணத்தை...

''இந்த போஸ்டர்ஸைப் பத்தி நீங்க ஒண்ணும் மனசைப் போட்டுக் குழப்பிக்க வேண்டாம் சார். மீராவை நான் கல்யாணம் செஞ்சுக்கறதுன்னு தீர்மானிச்சாச்சு. அப்பு றம், யார் என்ன சொன்னா என்ன...

''மேலும், அரசியல்தான் வாழ்க்கை யின்னு ஆன பின்னே, இதுக்கெல்லாம் பயந்திட்டிருக்க முடியாது. எப்பவும் எதிரெதிர்க் கட்சிக்காரங்க கண்ணுல





''பத்திரிகைச் சுதந்திரம்னா என்னங்க?''

''என் அனுமதியில்லாமலேயே எங்க வீட்டுக்கு வர்ற பத்திரிகையை நீங்க படிக்க எடுத்துட்டுப் போயிட றீங்களே. அதுதான்!''

- ஞா. ஞானமுத்து.

எண்ணைய விட்டுட்டு - எவன் மேல என்ன குத்தத்தைச் சுமத்தலாம்னு பார்த்துட்டே இருப்பாங்க...

''கடைசியா... ஒண்ணே ஒண்ணை மட்டும் சொல்ல விரும்பறேன். நானும், மீராவும் அமைதியான முறையில வாழ விரும்பறோம். என் குழந்தை இளவரசு - செத்துப் போன தன் அம்மாவுக்கு அடுத்த படியா மீரா கிட்டத்தான் உசிரையே வச்சி ருக்கான். யோசிச்சுப் பாருங்க... வாழ்க்கை யில எத்தனையோ விஷயங்கள் மறுபடி மறுபடி நடக்கறது.. செடியில ஒரு கிளைய வெட்டினா இன்னொரு பக்கம் துளிர்க் கிறது... இவன்தான் வெட்டிட்டானே யின்னு புலம்பிட்டு மண்ணோட மடியற தில்லே.. மனுஷங்க செய்யற அத்தனை அடாவடித்தனத்தையும் பார்த்திட்டிருக்கற சூரியன் - சாயந்திரம் மலையில விழுந்தா லும் மறுநாள் அஸ்தமிக்கிறதில்லையா... மனுஷங்க மட்டும் எதுக்காக ஒரு தடவை பாதிக்கப்பட்டா - அப்புறம் வாழ்க்கையே இல்லையின்னு நினைக்கணும்? இது என்னோட சுபாவம்... மீராவைச் சந்திக்கற வரைக்கும் நானும் - என்னைத் தனிமரமாத் தான் நினைச்சிட்டிருந்தேன். இப்பத்தான் புரியுது - இன்னொரு தனிமரத்தையும் நம்ம கூட சேர்த்துட்டாத் தோப்பாயிட லாம்னு...''

குமரன் இவ்வளவு பேசியதே அதிகம். மீராவுக்கே வியப்பாக இருந்தது.

என்றைக்குமே குமரன், இத்தனை வார்த்தைகளை விரயம் செய்ததில்லை. நறுக்காக நாலு வார்த்தை பேசி விட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்து கொண்டே இருப் பான்.

'இன்று இவ்வளவு பேச்சும் நமக் காகவா?'

மீராவின் நெஞ்சு ஒருமுறை ஏறியிறங் கியது.

குமரன், இளவரசுவைத் தூக்கிக் கொண்டு எழுந்தான்.

''சார்... முதல்லே அலுப்புத் தீரக் குளிங்க. எனக்கு சாமி நம்பிக்கை கிடை யாது. ஆனா, அதுக்காக மத்தவங்க நம்பிக் கையக் கேலி செய்ய மாட்டேன். மீராவோட நன்மைக்காகச் சனிக்கிழமை விரதமிருக் கறதாச் சொன்னீங்க. இன்னிக்கு நீங்க எடுக்கப் போற முடிவும் மீராவோட நன்மையக் கருதித்தான்.. உங்க முடிவு நல்ல முடிவா இருக்கணும்னு நானும் கூட விரதமிருக்கப் போறேன். எங்க கல்யாணம் நல்லபடியா நடந்தா ஆயுசு முழுக்க ஒவ் வொரு சனியும் முழுப் பட்டினிதான். இதை நான் சந்தோஷமாக் கொண்டாடுவேன்..''

அவன், தன் அறைக்குள் நுழைய, மீரா வின் தந்தை, மகளைத் தேடி, சுற்று முற்றும் பார்த்தார்.

மீரா, குறிப்புணர்ந்து அவரெதிரில் வந்து நின்றாள்.

''உன் கூட கொஞ்சம் தனியாப் பேச ணும் மீரா...''

''மாடிக்குப் போகலாமா?''

''இங்கே வேண்டாம்.. வெளில எங்கே யாவது...''

''பிரகதீஸ்வரர் கோவிலுக்குப் போக லாமா...''

''உம்...''

அடுத்த அரை மணி நேரத்தில் ஞானத் தின் ஆட்டோவில் பெரிய கோவிலை நோக்கிச் சென்றார்கள்.

மீராவின் அப்பா, மகளின் மடியில் தலை சாய்த்துக் கட்டை விரலைச் சூப்பிக் கொண்டிருந்த இளவரசுவையே ஒரு வினாடி இமைக்காமல் பார்த்தார்.

''பையன் பசை போட்டாப்பல ஒட்டிட் டிருக்கானே...''

மீரா புன்னகை செய்தாள். அவளது விரல்கள் அவளையுமறியாமலே குழந்தை யின் வெல்வெட் போன்ற தலை முடியை வருடிக் கொடுக்க -

பிரகதீஸ்வரர் கோவிலில், சமீபத்தில் தனக்குப் பழக்கமான - பிராகாரத்தில் நிழ லான இடம் தேடி உட்கார்ந்தாள் மீரா.

உள்ளே நுழையும்போதே, இளவரசு வுக்கு ஒரு பொம்மை முகமூடியை வாங்கி மாட்டி விட்டிருந்தாள்.

சிறுவன், அதிலேயே லயித்து விட்டி ருந்தான்.

''சொல்லுங்க அப்பா.''

''இந்த முடிவுக்கு ஏன் வந்தே மீரா?''

''எந்த முடிவுக்கு?''

''நம்ம ஜாதியில்லேங்கறதுக்காக நான் சொல்லலை. நான் அதையெல்லாம் பாராட்டறவன் இல்லேங்கறதும் உனக்குத் தெரியும். போயும் போயும் ஒரு அரசியல்

வாதி... பெரிய படிப்போ, ஸ்திரமான உத்தியோகமோ கிடையாது. இவன்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் அடியும், உதையும்தான். உனக்கு வேற நல்ல இடமே கிடைக்காதுன்னு தீர்மானம் செஞ்சிட்டியா?''

''அ ர சி ய ல் வா தி ங் க ளி லே யும் மனுஷங்க இருக்காங்க... அவங்களுக்கும் குடும்பம், குழந்தைங்கன்னு உண்டு...''

''இது நீயா ஆசைப்பட்டுத் தேர்ந்தெடுத்த முடிவான்னு எனக்குத் தெரியணும் மீரா. உங்கம்மா அங்கே புலம்பிட்டே இருக்கா. அவன், உனக்கு ஆஸ்பத்திரியில செஞ்ச உதவிக்கு பிரதியுபகாரமாத்தான் இந்த தியாகத்தைச் செய்யத் துணிஞ்சிட்டேயின்னு...''

மீரா இடைமறித்தாள்.

''தியாகமா.. அவர்கிட்ட என்ன இல்லேயின்னு நீங்க இப்படிப் பேசறீங்க... இல்லே, ஒசத்தியா நினைச்சுக்கற மாதிரி என்கிட்டத்தான் என்ன இருக்கு?''

''நிச்சயமாப் படிப்பு இருக்கு. கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவங்கற பெருமை இருக்கு. இந்த அளவு பணமில்லையின்னாலும் - நாம ஒண்ணும் அடுத்த வேளை சோத்துக்கு லாட்டரி அடிக்கலே...''

மீரா - பிரும்மாண்டமாய் உயர்ந்து, கம்பீரமாய் அமர்ந்துள்ள நந்தியையே பார்த்தாள்.

''அப்பா... இந்தக் கோவிலையே எடுத்துக்குங்க.. தமிழ்நாட்டுல பார்க்க வேண்டிய ஒன்று... வெளிநாட்டுக்காரங்க எல்லாம் இந்தக் கோவிலோட அருமை தெரிஞ்சு, தேடி வந்து பார்க்கறாங்க. நாம, தமிழ்நாட்டுலேயே இருக்கோம். எத்தனை பேர் இங்கே பூஜை செய்ய வர்றாங்கன்னு விரல் விட்டு எண்ணிடலாம். இங்கே வர்ற கும்பலை விட - டவுன்லே இருக்கற ஒரு பிள்ளையார் கோவிலுக்கு கும்பல் ஜாஸ்தி.. இதனால இங்கே சாமி இல்லேயின்னு சொல்லிட முடியுமா? இல்லே - இந்தச் சாமிக்குத்தான் சக்தியில்லேன்னு சொல்லிட முடியுமா... இது ஒரு அழகு... தன்னந்தனிமையில நிமிர்ந்து நிக்கற அழகு...

''குமரனையும் நான் அப்படித்தான் நினைக்கிறேன். படிப்புக்கும், மணவாழ்க்கைக்கும் சம்பந்தமிருக்கறதா எனக்குத் தெரியலே.. அவருக்கு வேகமா இங்கிலீஷ் பேசவராது. ஒத்துக்கறேன். ஆனா - சரளமாத் தமிழ் பேசுவார். மனசுல இருக்கற எண்ணத்தை வெளிப்படுத்தத் தாய்மொழி போதும்.. இன்னும் சொல்லப் போனா இங்கிலீஷ்லே, 'ஐ லவ் யூ'--ன்னு சொல்ற ஆம்பிளைய விட, தமிழ்லே, 'உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு'ன்னு சொல்றவன் எவ்வளவோ உசத்தியின்னு நான் நினைக்கிறேன்...

''அடி உதை - அரசியலே அவர் வந்த வழியா இருக்கலாம். அது அவருக்கும் வெளியுலகுக்கும் இருக்கற விவகாரம்.. பெண்டாட்டிய அடிச்சு, அறைக்குள்ள பூட்டிட்டு, வெளியில அஞ்சு நட்சத்திர ஹோட்டல்லே - உமன்ஸ் லிபரேஷன் பத்திப் பேசறவனை விட இவர் பெரிய உத்தமர் இல்லையா...''

அப்பா, மேல் துண்டை உதறித் தோள் மீது போட்டபடி எழுந்தார்.

''நீ இவ்வளவு தீர்மானமா இருக்கறப்ப நான் வேற என்ன சொல்ல முடியும்...''

இளவரசு, முகமூடியை மாட்டிக் கொண்டு ஓடி வந்து, மீராவின் முன் குதித்து - 'ஹோ'வெனக் கூச்சலிட - மீரா, பயந்தாற் போல நடித்தாள்.

''அச்சோ, பயமா இருக்கே!''

''ஐயய்யே... நான்தான்..''

சிறுவன் முகமூடியைக் கழற்றி விட்டுச் சிரித்தான்.

''முகமூடியைப் பார்த்து பயப்படறது மாதிரி - சிலரோட முகமூடியக் கழட்டிட்டா - ஒரிஜினல் முகம் நம்மைத் திடுக்கிட வைக்கலாம் மீரா. அழகான முகமூடிக்குள்ள இருக்கற முகம் - ராட்சசத்தனமா இருந்துட்டா... பார்த்து நடந்துக்க. உனக்கு நான் என்ன சொல்றதுக்கு இருக்கு?''

மீராவின் பதிலுக்குக் கூட காத்திராமல் அவர் நடக்க ஆரம்பித்தார்.

(தொடரும்)

''உடம்பு புண்படும்படியா ரெண்டு அடி அடிச்சிடலாம்; ஆனா மனசு புண்படும்படி ஒரு வார்த்தை கூட யாரையும் பேசக் கூடாதுன்னு என் மருமகளுக்கு 'அட்வைஸ்' செய்தது தப்பாப் போச்சு...''

''ஏன்... என்னாச்சு?''

''என் உடம்பெல்லாம் புண்ணாக்கிட்டாளே!''

- செங்குன்றம் ஜெமால்.



இவ்விடம் கின்னஸ் சாதனைகள் உடைக்கப்படும்

காட்சி - 1

(விடியற்காலையிலிருந்தே நடிகை பார்கவியின் பங்களா அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருக்கிறது. பார்-அட்-லா முதல் பொமரேனியன் வரை ஒரே பரபரப்புடன் காணப்படுகின்றனர். ஹாலில் நடிகை பார்கவி கோபத்துடன் சட்டியில் விழுந்த விட்டில் பூச்சி மாதிரி அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கிறாள்)

பார்கவி : (கோபம் கொப்புளிக்க) என்ன திமிர் அந்த ஆளுக்கு? சும்மாவிடப் போவதில்லை அவனை. கோர்ட்டுக்கு தரதரன்னு இழுத்து வரப் போறேன். நான் மான நஷ்ட ஈடாக் கேக்கப் போற காம்ப்பன்சேஷன் தொகையைக் கேட்டு, அவன் அல்சேஷன் மாதிரி நாக்கைத் தொங்கப் போட்டுக்கணும், இல்லே என்னைப் பத்திக் காட்டுத்தனமா எழுதின அவனோட விரல்கள் காலமெல்லாம் கம்பி எண்ணியே தேஞ்சு போகணும்.

(ஒரு காகிதக் கட்டுடன் அடுத்த அறையிலிருந்து வருகிறார் வக்கீல் வஜ்ரவேலு)

வ.வஜ்ர : நீங்க ஒண்ணுக்கும் ஓர்ரி பண்ணிக்க வேணாம் மேடம். ஏகப்பட்ட செக்ஷன்ல இழுத்துப் போட்டிருக்கேன் அவனை. ஒண்ணுல திமிறினாலும் அடுத்ததுல அகப்பட்டுக்குவான்.

பார்கவி : (சலிப்புடன்) ஆமா, போன வருஷம் இப்படித்தான் என்னைப் பத்தி அபாண்டமாக் கிசுகிசு செய்தியைப் போட்ட சினிரசம் ஆசிரியரை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்னு சபதம் போட்டீங்க. கடைசியில் துண்டு இருக்கா துணி இருக்கான்னு தப்பிச்சதே தம்பிரான் புண்ணியம்னு ஓடிவந்து நின்னீங்க. அதை இன்னும் நான் மறக்கலே, ஞாபகம் வெச்சுக்குங்க.

வ.வஜ்ர : (சமாளித்துக் கொண்டு) அது.... வந்து... அந்தக்கேஸில... பௌண்டேஷனே ஒரு கிசுகிசு... அதனாலே பிசுபிசுத்திருச்சு. ஆனால் இந்த கேஸ் இருக்கே - அசல் காங்க்ரீட். மேலே வந்து எவன் மோதினாலும் அவனுக்கு முட்டி பேந்துடும்.

பார் : எப்படியோ இந்த ஒரு கேசு, பின்னாடி ஒன்பதாக் குட்டி போடாம இருந்தாச் சரி. அந்தப் பழைய கேஸில் ரொம்பத்தான் பெரிய மேதை மாதிரி பாவ்லா காட்டி, அந்த எடிட்டருக்கே பாயிண்டுகளை எடுத்துக் குடுத்து, அதை வச்சு அந்த ஆளு நம்ம மேலேயே எதிர்க் கேஸ் போட்டு ஜெயிச்சதை இன்னும் நான் மறக்கலே.

வ.வஜ்ர : (பல்லைக் கடித்துக் கொண்டு - தனக்குள்) இதையெல்லாம் மறக்காமல் ஞாபகம் வச்சிட்டிரு. டைரக்டர் ஆயிரம் தடவை தலையில் அடிச்சுச் சொல்லிக் கொடுத்தாலும் முக்கால் வசனத்தை முழுங்கிட்டுக் கால் வசனத்தைக் கடைவாயில் வச்சுட்டு, காமிராவுக்கு முன்னாடி கோட்டை விடு....

(டெலிஃபோன் ஒலிக்கிறது. ரிசீவரை எடுக்கிறாள் நடிகை பார்கவி)

பார் : ஹலோ.... (ஒரு நிமிடம் கேட்டிருந்துவிட்டு, கோபத்தால் முகம் சிவக்க 'டொக்' கென்று ரிசீவரை வைக்கிறாள். பிறகு முகத்தில் கோப ஜ்வாலை எரிய) என்ன அகங்காரம்.




என்னதான் கையில் படங்கள் இல்லையென்றாலும் இந்த நிலைக்கு நான் வந்திருப்பது ரொம்பவும் வருத்தம் தருதாம் இவளுக்கு. என்ன ஒரு கிண்டல்.... நக்கல். நாளைக்கு இவளைப் பத்தியும் ஒரு கிசுகிசு வராமலா போய் விடும். அப்போ விசாரிக்கிறேன் இவளை.

(ஹாலை ஒட்டியுள்ள அறையின் கதவோரமாக நின்று இங்கு நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறான் சமையல்காரன். அவனுக்குப் பின்புறமாய் வந்து அவனுடைய காதில் கிசுகிசுக்கிறான் தோட்டக்காரன்)

தோ. காரன் : (கிசுகிசுப்பான் குரலில்) என்ன விஷயம்? அம்மா ஏன் இப்படிச் சத்தம் போடறாங்க?

சமையல்காரன் : (எரிச்சலாக) சை. என்ன வீடய்யா இது? எல்லாமே கிசுகிசுப்புதானா? என்னாலும் பதிலுக்கு உங்கிட்டே கிசுகிசுக்க முடியாது. சத்தமா, விவரமாச் சொல்றேன். தோட்டப்பக்கம் போலாம். வா.

(தோட்டக்காரனை இழுத்துக் கொண்டு போகிறான்)



காட்சி - 2

(தோட்டத்தில்)

சமையல்காரன் : பு ரி ஞ் சு தா ய் யா இப்போ?

தோ. காரன் : ஓஹோ விவகாரம் அப்படிப் போகுதா? அந்தச் சினிமா நிருபர் அம்மாவைப் பேட்டிகாண திடீர்னு வீட்டுக்குள் நுழைஞ்சப்போ, அம்மா நாய்க்குட்டி ராணியை வவுத்துல தட்டிக் குடுத்துட்டு இருந்தாங்களா?

சமையல் : இப்போ உன் முதுகைத்தான் நான் தட்டப் போறேன். உன் காது இருக்கிற கதிக்கு கிசுகிசுப்பு வேற கேக்குது உனக்கு. மறுபடியும் சொல்றேன். நல்லாக் கேட்டுக்கோ. அந்த நிருபர் உள்ளே நுழைஞ்சப்போ அம்மா ஒரு ஆணியை செவுத்துலே அடிச்சிட்டிருந்தாங்க புரிஞ்சுதா?

தோ. காரன் : புரியுது. புரியுது. (யோசித்தபடி) ஆனா.... செவுத்துலே ஆணியை அடிக்கறதுலே என்ன தப்புன்னு தான் புரியலே.

சமையல் : நீயும், நானும் அடிச்சிருந்தாத் தப்பில்லே. எவனும் சட்டை பண்ணியிருக்கவே மாட்டான். ஆனா, சினிமா உலகில் இன்னும் கொடிகட்டிப் பறக்கிறதா நெனச்சிட்டிருக்கிற ஒரு நடிகையைப் பத்தி அப்படி ஒரு செய்தி பத்திரிகையில் வெளிவந்தா அர்த்தம் எப்படிப் போகும் தெரியுமா? நடிகைக்குக் கைவசம் படம் இல்லை...... மார்க்கெட் அவுட்....

தோ. காரன் : அடப்பாவமே, பத்திரிகையிலும் போட்டுட்டானா?

சமையல் : அந்தச் செய்தியை அப்படியே போட்டிருந்தாலும் விஷயம் இந்த அளவுக்கு முத்தல் கேஸ் ஆகியிருக்காது. ஆணிக்கு பதிலா, செவுத்திலே அம்மா சாணி தட்டிட்டிருந்தாங்கன்னு போட்டுட்டான்.

தோ. காரன் : (தடால் என்று எழுந்து நின்று) அடப்பாவிகளா! என்னய்யா அக்கிரமம் இது?

சமையல் : (தோட்டக்காரனை இழுத்து உட்காரவைத்து) உட்காரய்யா, என்னமோ நியாயம் கேக்கப் போற ஆம்பள கண்ணகி மாதிரி எந்திரிச்சிட்டே. மிச்சத்தையும் கேளு. பத்திரிகையில் அந்தச் செய்தி வந்ததும் போன் மேலே போனு. ஆளுக்கு ஆளு ஏம்மா போயும் போயும் இந்த வறட்டி பிசினஸை செலக்ட் பண்ணினீங்கன்னு துக்கம் விசாரிக்கறதும், வெண்டைப் பிஞ்சு மாதிரியான உங்க அழகான விரல்களுக்காகவே அந்தப் படத்தை அம்பது தடவை பார்த்தேன். கடைசியில் சாணி தட்டவா அது

ஜீனா

சரணாகதி ஆச்சுன்னு உருகி உருகி ரசிகர் கடிதங்கள் வந்து குவியறதும்...

தோ. காரன் : (இடைமறித்து) அப்படிச் சொல்லு. இப்போ அம்மா அந்த நிருபர் மேலே கேஸ் போடப்போறாங்க. அதானே விஷயம்? ஆனா இந்த வஜ்ரவேலு அவ்வளவு ஸ்ட்ராங்கான வக்கிலா எனக்குத் தோணலேப்பா.

சமையல் : ஸ்ட்ராங்காவது, லைட்டாவது. முதல்லே அந்த ஆள் ஒரு வக்கிலான்னே எனக்குச் சந்தேகமாயிருக்கு. போலி டாக்டர், போலி இன்ஸ்பெக்டர்னு அடிக்கடி பேப்பர்ல வருதே அதுமாதிரி இவர் போலி வக்கிலோன்னு தோணுது.

தோ. காரன் : அதோ நம்ம பங்களா வாட்ச்மேன். அந்த ஆளு கிட்டே வஜ்ரவேலுவைப் பத்திக் கேட்டுப் பாக்கலாமா?

சமையல் : சும்மா இருய்யா. இது வரைக்கும் தூக்கத்திலே நடக்கற வியாதியைத் தான் கேள்விப் பட்டிருக்கிறோம். நம்ம வாட்ச்மேனுக்கோ தூக்கத்திலேயே படிக்கிற வியாதி. ஒரு புஸ்தகத்திலே தலையை நுழைச்சிட்டான்னா, ஒரு யானைக் கூட்டமே வீட்டுக்குள்ளே நுழைஞ்சாலும் கண்டுக்க மாட்டான். நாம போலாம் வா.

காட்சி – 3

(கோர்ட் நிரம்பி வழிகிறது. பார்வையாளர் வரிசையில் நடிகை பார்கவி அமர்ந்திருக்கிறாள். 'கசமுசா' பத்திரிகையின் ஆசிரியர் குற்றவாளிக் கூண்டில் உற்சாகமாக ஏறி நிற்கிறார். அவரை விசாரிப்பதற்காக நெருங்குகிறார் வக்கில் வஜ்ரவேலு.)

வ.வஜ்ர : நீர்தானே 'கசமுசா' பத்திரிகையின் ஆசிரியர்?

ஆசிரியர் : ஏழு தடவை என் ஆபீசுக்கு வந்து ஓஸியில் டிபனும், காப்பியும் சாப்பிட்டுவிட்டு இப்படி ஒரு கேள்வியைக் கேட்கலாமா?

(கோர்ட்டில் 'குபீ'ரெனச் சிரிப்பலை எழுகிறது)

மாஜிஸ்திரேட் : (மேஜையைத் தட்டி) ஆர்டர்... ஆர்டர்....

வ.வஜ்ர : (நிலைதடுமாறி) ஓஸியில் என்ற வார்த்தையை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன், கனம் கோர்ட்டார் அவர்களே!

ஆசிரி : (இடைமறித்து) வேண்டுமானால் 'என் காசில்' என்று சொல்லி விடட்டுமா?

(மறுபடியும் பலத்த சிரிப்பு)

மாஜிஸ் : ஆர்டர்.... ஆர்டர்...

(மரச் சுத்தியால் மேஜையைப் பலமாகத் தட்டுகிறார்)

வ.வஜ்ர : (படபடப்போடு) இது மாஜிஸ்திரேட் கோர்ட். மெரீனா பீச் அல்ல. மேலும் நீர் இங்கு என் கட்சிக்காரர் நடிகை பார்கவியின் எதிரொலி என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மாஜிஸ் : (வியப்புடன்) எதிரொலியா?

(எதிர்த்தரப்பு வக்கில் எழுந்து நிற்கிறார் - உற்சாகமாய்)

எ. வக்கில் : நண்பர் வஜ்ரவேலு அவர்கள் எதிராளி என்று சொல்ல நினைத்திருக்கிறார். அவருடைய வழக்கமான பதற்றத்தில் வேறுவிதமாக எதிரொலித்து விட்டார் என்று நினைக்கிறேன்.

(நமுட்டுச் சிரிப்புடன் அமர்கிறார் எதிர்த்தரப்பு வக்கில். மறுபடியும் கோர்ட்டில் சிரிப்பு அலைமோதுகிறது. பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருக்கும் நடிகை பார்கவி தலைமேல் கை வைத்துக் கொள்கிறாள்.)

மாஜிஸ் : ஆர்டர்... ஆர்டர்... *(தனக்குள் - மகா எரிச்சலுடன்)* மேஜையைத் தட்டிக் கொண்டே இருப்பதுதான் என்னோட ஒரே வேலைன்னு நினைச்சுட்டானுங்களா? (சப்தமாக) இந்த வழக்குக்குச் சம்பந்தப்பட்ட கேள்விகளை மட்டுமே கேட்க வேண்டும். அனாவசியமாக கோர்ட்டின் நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

வ.வஜ்ர : (ஆசிரியரை நோக்கி) இப்போது ஒழுங்காகப் பதில் சொல்லும், நீர்தானே 'கசமுசா' பத்திரிகையின் ஆசிரியர்?

ஆசிரி : ஆமாம்.

(வெற்றிப் புன்னகையுடன், பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருக்கும் பார்கவியைப் பார்க்கிறார் வஜ்ரவேலு)

பார்கவி : (பல்லைக் கடித்துக் கொண்டு) பெயரைக் கேட்டு முடிச்சதே பெரிய சாதனை போல் பார்க்கிறதைப் பாரு. ம்ஹூஹூம். இந்த கேஸூம் உருப்படப் போறதில்லே.

வ.வஜ்ர : (மறுபடியும் ஆசிரியர் பக்கம் திரும்பி) கடைசியில் நீர்தான் கசமுசா பத்திரிகையின் ஆசிரியர் என்பதை ஒப்புக் கொண்டீர், இல்லையா?

ஆசிரி : இந்த ஒரு கேள்வியை வெச்சே இன்னைக்குப் பூரா ஓட்டிடலாம்னு முடிவு பண்ணிட்டீங்களா?

(மீண்டும் பார்வையாளர் வரிசையில் பலத்த சிரிப்பு)

மாஜிஸ் : (கோபத்துடன் மேஜையைத் தட்டி) விசாரணையை நாளைக்குத் தள்ளி

வைக்கிறேன். கோர்ட் கலையலாம்.

காட்சி - 4

(தோட்டத்தில் சமையல்காரனும், தோட்டக்காரனும் அரட்டை அடித்துக் கொண்டு இருக்கின்றனர். வாட்ச்மேன் ஏதோ கத்திக் கொண்டு ஓடிவருகிறான்)

சமையல் : என்னய்யா இது, ஒரே ஆச்சரியமா இருக்கு. புஸ்தகப் புழு வாட்ச்மேன் பேசறதே அபூர்வம். இப்படிக் கத்திட்டு வர்ரான். எதையாச்சும் பார்த்து பயந்திருப்பானா?

வாட்ச்மேன் : (அருகில் வந்து - மூச்சிரைக்க) ரெகார்டுகளை உடைச்சுத் தள்ளிட்டாங்க... கன்னா பின்னான்னு... கணக்கு வழக்கே இல்லாமல்...

தோ. காரன் : அடடே, கிராமபோன் ரெகார்டுகளா? யார் உடைச்சது?

வாட்ச் : அதில்லே. இது கின்னஸ் ரெகார்டு. உலக சாதனை.

சமையல் : எங்கேயோ, யாரோ உடைச்சிருந்தா உனக்கும் எனக்கும் என்ன ஆச்சு? ஏன் இந்தக் கத்துக் கத்தறே?

வாட்ச் : எங்கேயோ, யாரோ உடைக்கலே. இங்கே - இதே பங்களாவில் - கின்னஸ் சாதனைகளை முறியடிச்சிருக்காங்கங்கறது என்னோட கணிப்பு.

சமையல் : உன்னோட கணிப்பா?

வாட்ச் : ஆமா, கவனமாக் கேளுங்க. சாதனை நெம்பர் ஒன் : ஒரே ஒரு கேள்வியை வச்சு ஒரு நாள் முழுக்க கோர்ட்டில் வாதாடின ஒரே வக்கீல்....

சமையல் : நம்ம வஜ்ரவேலு?

வாட்ச் : கரெக்ட். சாதனை நெம்பர் டூ : ஒரே நாளில் மிக அதிகமான தடவை கோர்ட்டில் சிரிப்பு அலைகளில் தத்தளித்துப் போன பார்வையாளர்கள்.

சமையல் : நேத்தைக்கு நம்ம கேஸைப் பார்க்க வந்தவங்க?

வாட்ச் : அதிகரெக்ட். சாதனை நெம்பர் த்ரீ : ஒரு ஜலதரங்கக் கச்சேரி மாதிரி கோர்ட்டில் நாள் முழுக்க மேஜையைத் தட்டிட்டு இருந்த ஒரே மாஜிஸ்திரேட்....

சமையல் : அதுவும் நம்ம மாஜிஸ்திரேட்தானா?

வாட்ச் : நிச்சயமா அவரேதான். கடைசியா, சாதனை நெம்பர் ஃபோர் : உலகிலேயே மிக அதிகமான வேகத்தில் போட்ட கேஸை முப்பத்தாறு மணி நேரத்துக்குள்ளே வாபஸ் வாங்கின ஒரே நடிகை...

சமையல் : (குறுக்கிட்டு) என்னது, கேஸை வாபஸ் வாங்கிட்டாங்களா?



வைதேகி கல்யாணம்

வழக்கம் போல ஒரு பெருந்தனக் காரரின் மகளுக்கும், ஓர் ஏழையின் மக னுக்கும் காதல்...

வழக்கம் போல அந்தப் பெருந்தனக் காரருக்கும் ஒரு பெண்ணுக்கும் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த தொடர்பின் விளைவாகப் பிறந்த ஒரு குழந்தை...

வழக்கம் போல அவளைப் பகிரங்க மாக மனைவியாக ஏற்றுக் கொள்ள அவர் மறுப்பு...

வழக்கம் போல மகளின் காதலைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பெருந்தனக் காரர் அவளுக்கும் இன்னொரு இளைஞ னுக்கும் ஏற்பாடு செய்யும் திருமணம்...

வழக்கம் போல கிளைமாக்ஸ்...

நல்லவேளை, வழக்கம் போல அம்மன் கோயில் நாட்டியம் இல்லை!

இந்த 'வழக்கம் போல...' கதையைக் கூட இப்படித்தான் கொண்டு செல்ல வேண்டும் என்று முன்னதாகவே நிர்ண யித்துக் கொள்ளாத காரணத்தால் கதை யோட்டத்தில் தடுமாற்றம்.

ஒரு கதாநாயகனுக்குரிய அத்தனை பளுவையும் துணிச்சலாகச் சுமக்க முன் வந்திருப்பவர் ராமார்ஜுன். தன் சகோதரி யின் கணவரைப் போல் அல்லாமல் நடிக்க முயற்சி செய்திருக்கிறார்.

கதாநாயகி உத்ராவைக் காதல் காட்சி களில் பார்க்கும் போது பாவமாக இருக் கிறது.

வழக்கம் போல தேவாவின் இசை - இனிமை!

– சி. ஆர். கே.

வாட்ச் : மடமடன்னு ஏழெட்டுப் படங்கள் புக் ஆயிடுச்சு. இனி உருப்படியாப் படப்பிடிப்பைக் கவனிப்பாங்களா, உருப் படாத கேஸை கவனிப்பாங்களா?

சமையல் : என்ன உளர்றே? சினிமா மார்க்கெட்டே குளோஸ். இனி காய்கறி மார்க்கெட்டுக்குப் போனாக் கூட என்னை யார் கண்டுக்கப் போறாங்கன்னு புலம் பிட்டு இருந்தாங்க. எங்கேயிருந்து வந்து குதிச்சது இத்தனை படங்கள்?

வாட்ச் : எல்லாத்துக்கும் மூலாதாரம் பரபரப்பான பப்ளிசிடிதான். இந்த பப்ளி சிடி எப்படி வந்ததுன்னு கேக்கறீங்களா? எல்லாம் இந்தச் சாணி தட்டின கேஸின் உபயம்தான்!

50

பரிசு ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/-
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/-
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-

முடிவு தேதி : அக்டோபர் 31, 1991

O இதற்கடுத்த ஒன்பது மாதங்களில் நாவல்களின் பரிசிலனை முடிந்து, கல்கி பொன் விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.

O நடுவர் குழு நாவல்களைப் பரிசிலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

O கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

O ஒவ்வொரு வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 - 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.

O கடிதப் போக்குவரத்து கிடையாது.

O சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெற போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

O அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன் விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

பெண்மைக் கனல்

பக்கத்து வீட்டுக்கு எழுத்தாளர் 'சீலன்' குடி வந்த போது பூமாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அவளுடைய அபிமான எழுத்தாளர்! முழுப் பெயர் எஸ். ஏ. குணசீலனாம். அதைச் 'சீலன்' என்று சுருக்கி - ஒரு சின்னக் கிரணம் போதுமே சூரியனைக் குறிக்க என்பது போல் - மேற்கோள் குறிகளால் அணிசெய்து புனை பெயர் சூடியிருக்கிறார்.

சீலன், குணசீலன் - எப்படிச் சொன்னா லும் தகும். அவருக்கு வயது சுமார் நாற்ப துக்குள்தான் இருக்கும். எனினும் 'அவர்' என்று சொல்லத் தோன்றுகிற நற்பண்பு, இலக்கியத் திறமை, உருவத்திலும் அமைதி யும் கம்பீரமும் பொருந்தியவர். மனைவி ஜயா அவருக்கு ஏற்ற ஜோடிதான். நட்பு நிறைந்த பார்வை, மாறாத புன்சிரிப்பு.

அவர்கள் வந்து இரண்டு மாதங்களுக் குள் பூமா நன்றாகப் பழகி ஒன்றி விட்டாள். சீலன் தம்பதியின் உறவினர்களைப் பற்றிக் கூட விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தாள். ஜயாவின் மனிதர்களெல்லாம் வட இந்தியா வில் இருக்கிறார்களாம். சீலனின் பெற்றோர் உயிரோடு இல்லை. ஒரே ஒரு தங்கை - தாரிணி - திருமணமாகிக் கணவனோடு பெங்களூரில் வசிக்கிறாளாம். ஒருமுறை அவள் சென்னைக்கு வந்திருந்த போது, பூமா அவளைச் சீலனின் வீட்டில் பார்த்திருக் கிறாள். ஐந்தரை அடிக்குக் குறையாத உயரம். அறிவுத் தீட்சண்ய முகம். வெட வெடவென்ற ஒல்லியான உடல். அந்த உடலை அப்படியே பின்பக்கமாய் இழுத் துத் தள்ளி விடுமோ என்று நினைக்க வைப்பதாய் முதுகில் புரளும் கனமான, நீண்ட சாட்டைப் பின்னல்.

பூமாவின் கணவன் சுரேஷ் அவ்வப் போது ''பக்கத்து வீட்டு ஆசாமி தன்னைப் பெரிய மன்மதன்னு நினைச்சுக்கிட்டுக் கிருதா வச்சிருக்காரோ?'' ''என்னமோ நீதான் மெச்சிக்கிறியே தவிர அப்படி ஒண்ணும் அவர் பேச்சில் புத்திசாலித் தனத்தைக் காணோமே!'' என்பது போல் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பான்.

பூமாவுக்குச் சிரிப்பு வரும். புத்திசாலி இல்லையாம்! சீலனின் எழுத்து எதை யாவது படித்திருந்தாலல்லவா அந்த அறிவின் வீச்சு புரியும்!

அவளுக்குப் புரிந்திருந்தது. விஷய ஞானம், கொள்கை உறுதி, தென்றலாய்க் குளிர்ந்து சாட்டையாய் வீறும் நடை, உணர் வுகளை உட்புகுந்து படம்பிடிக்கும் சூட்சு மம், உயிருள்ள கதாபாத்திரங்கள், அதிலும் பெண் பாத்திரங்களை மதிப்புடனும் புரிந்து கொள்ளலுடனும் படைக்கும் பாங்கு.

ஆணாதிக்கக் கொடுமைகளுக்குப் பலி யாகும் பெண், அதை எதிர்க்கும் அவள் புரட்சி விழிப்பு, போராட்டங்கள், சில சமய வெற்றிகள் சில சமயத் தோல்விகள், தோல்வியிலும் தலைநிமிரும் அவளுடைய தன்மான உணர்வு - புதுமைப் பெண்ணின் வெவ்வேறு முகங்கள். அவை அனைத்தும் உண்டு அவர் எழுத்தில். பெண்ணின் சுதந்தி ரத்தை உணர்விக்கும் பணியில் பல பெண் எழுத்தாளர்களுக்கும் ஒரு படி மேலாகவே முன்னணியில் நின்றார் சீலன்.

பூமாவுக்குக் கதை படிப்பதில் எப்போ துமே ஆர்வமுண்டு. சிறுமிப் பருவத்தில் வெறும் கதைக்காகப் படித்து வந்தவளுக்கு விவரம் தெரியும் வயதாக ஆக, பெண்ணுக்கு நியாயம் வழங்கப்படும் கதைகளைப் படிக்க நேர்கையில் தனிப்பட்ட திருப்தி தோன்றலா யிற்று. தன்னுள் ஒரு பெண்ணியல்வாதி ஒளிந்திருப்பதை அவள் ஆச்சரியத்தோடு உணர்ந்தாள். ஒருவேளை ஒவ்வொரு பெண்ணினுள்ளும் ஒரு பெண்ணியல்வாதி இருப்பதாய் இருக்கலாம். மனித குலத்தின் ஒட்டுமொத்த ஆழ் பிரக்ஞையில் சில ஆதி நினைவுகள் பதுங்கியிருப்பதாய் மனத் தத்துவக்காரர்கள் சொல்வது போல், பெண்ணினத்தின் அடி மன ஆழங்களில் குகை மனிதன் பெண்ணின் தலைமுடி பற்றி இழுத்துப் போவது போல் ஒரு பிம்பம் பதுங்கியிருக்கலாம்...

இந்தச் 'சீலன்' பெண்ணினத்துக்காகப் பேசுபவர். அவர் எழுத்து வெளியாகும் சஞ்சிகை ஒன்று விடாமல் வாங்கிப் படிப் பது பூமாவுக்கு வழக்கமாயிற்று.

''என்ன, சீலன் கதை படிச்சிட்டிருக்கி யாக்கும்? எழுந்து போய் எனக்குக் காப்பி கொண்டா'' என்பான் சுரேஷ்.

பத்திரிகைக்கு மேலிருந்து இரு கண்கள் அவனை ஊடுருவும். ''இப்போ அரை மணி முந்தித்தானே குடிச்சீங்க?''

ஆர். சூடாமணி

''ஏன், லீவு நாளில் இன்னொரு டோஸ் காப்பி நான் குடிக்கக் கூடாதா? எழுந்திருக்க மனசில்லையாக்கும் சிலன் கதையை விட்டுட்டு?''

''நீங்கதானே காப்பியைக் குறைக்கப் போறதாய்ச் சொன்னீங்க?''

''ஆமாம், அப்போ சொன்னேன். இப்போ வேணுங்கறேன். என் இஷ்டம். உன் சிலன் மட்டும் காப்பி குடிக்காமத்தான் கதை எழுதறாரா?''

'' 'என்' சிலன் என்ன? அவர் எனக்கு மாமனா சித்தப்பனா? அவர் ஒரு எழுத்தாளர், நான் அவர் எழுத்தின் விசிறி. அவ்வளவுதான்.''

''ஸாரி டியர், கோச்சுக்காதே. எனக்குத் தாகம் தாங்க முடியலே. உடனே போய்க் கொஞ்சம் காப்பி கலந்து கொண்டாயேன், ப்ளீஸ்!'' என்று அவன் புன்னகை செய்வான்.

அவள் பத்திரிகையை மூடி மேஜை மேல் வைத்து விட்டு எழுந்திருப்பாள். ஒரு சமயம் அப்படி அவள் எழுந்து அறையை விட்டு முழுவதுமாய் மறைவதற்குள்ளாகவே அவன் பத்திரிகையை எடுத்து ஆத்திரமாய்த் தரையில் அடித்து விட்டெறிவது தெரிந்தது.

பொறாமைக்குப் பல முகங்கள் உண்டா? இது சிரித்து 'டியர்' சொல்லும் பொறாமை... குகை மனிதன் ஆடையையும் அரங்கையும் மட்டும்தான் மாற்றியிருக்கிறான் போலும்.

அன்று அவளுக்கு ஒரு பெரிய ஆச்சரியம்.

தபால்காரன் புது ஆளாய் இருக்க வேண்டும். அவர்களுக்கு வந்த கடிதங்களோடு சிலன் பெயரிட்ட ஒரு நீள உறையையும் சேர்த்துப் போட்டு விட்டுப் போய் விட்டான். எல்லாவற்றையும் பொறுக்கி எடுத்த பூமா, அந்த உறையைப் பார்த்துத் திகைத்தாள்.

சரியாய் ஒட்டப்படாத உறை. கீழே விழுந்த உலுக்கலால் பாதிக்கு மேல் திறந்திருந்தது. உள்ளேயிருந்து வெள்ளைத் தாள்கள் தெரிந்தன. ஏதேனும் கையெழுத்துப் பிரதியா? ஒருகணம் வியப்பு எழுந்தது. பத்திரிகைகள் சிலன் எழுத்தைக் கூடத் திருப்பி அனுப்புமா என்ன?

பிறகுதான் அனுப்புநர் பகு



திியைக் கவனித்தாள். எஸ். ஏ. தாரிணி, ராஜாஜி நகர், பெங்களூர்.

சீலன் தங்கையா? எஸ். ஏ. என்று அவருடைய முதலெழுத்துக்களேதான். கல்யாணத்துக்குப் பிறகும் பெயர்ப் பாணியை மாற்றிக் கொள்ளவில்லை போலிருக்கிறது. பரவாயில்லை, தனித்துவம் உள்ளவள் தான்.

ஓர் உத்வேகத்தில் பூமா உறையை மெல்ல முழுவதுமாய்த் திறந்து தாள்களை வெளியே எடுத்தாள்.

சிறுகதை போல் இருந்தது. ''பெண்மைக் கனல்'' என்று தலைப்பு. பத்துப் பக்கங்கள்.

பூமா கதையைப் படித்தாள்.

சிறிது நேரம் என்ன நினைப்பதென்றே தெரியவில்லை. தாரிணியும் கதை எழுதுவாள் என்பது புதுச் செய்தி. குடும்பத்திலேயே இலக்கிய ரத்தம் ஓடுகிறாப் போல் இருக்கிறது. கதை ஆழமாக, ஆற்றல் வாய்ந்ததாகத்தான் இருந்தது. அந்த ஒல்லிப் பெண்ணுக்குள் இத்தனை வலிமை இருக்கிறதென்று யாரும் ஊகிக்க முடியாது. ஆனால், ஏன் சகோதரனின் பாணியையே பின்பற்றுகிறாள்? அவருடையதே நடை, உத்தி, பார்வை... என்னதான் அண்ணன் ஓர் உந்துசக்தியாய் இருந்தாலும் இப்படி அச்சாக நகல் எடுப்பதில் என்ன சிறப்பு இருக்கிறது? சுயத்தன்மை இல்லாத கலை, படைப்பாளிக்கு என்ன பெருமை சேர்க்க முடியும்?

உறையைக் கவனமாய் ஒட்டிப் பக்கத்து வீட்டின் வெளி 'கேட்'டில் பொருத்தியிருந்த கடிதப் பெட்டிக்குள் போட்டு விட்டு வந்தாள். அடுத்து வந்த நாட்களில் அக் கதையைப் பற்றிச் சீலனிடமோ ஜயாவிடமோ பேச நினைத்த எழுச்சியை அடக்கிக் கொண்டாள். தாரிணி சமீபத்தில் தான் கதை எழுதத் தொடங்கியிருக்கலாம். அண்ணனின் விமர்சனத்துக்காகத் தன் கதையை அனுப்பியிருக்கலாம். மூன்றாம் மனுஷியான தான் அதைப் பற்றித் தெரிந்ததாய்க் காட்டிக் கொள்வது நாகரிகமல்ல.

நான்கு வாரங்களில் தான் ரசிக்கும் இலக்கியப் பத்திரிகையை ஆவலாய்ப் பிரித்துப் புரட்டிய போது அதிர்ந்து போனாள்.

சிறுகதை : ''பெண்மைக் கனல்''.

எழுதியவர் : ''சீலன்''.

அவசரமாய்ப் படித்தாள். அதே கதை.

அவள் அபிமான எழுத்தாளர்...! தங்கையின் படைப்பைத் திருடி.... சீ சீ!... ஆனால்... அதுதானா உண்மை? பின்னே? இதற்கு என்ன அர்த்தம்? அர்த்தங்களின் பின்னே அர்த்தங்களாய் ஒரு குழப்பம்...

மண்டை வெடித்து விடும் போல் இருந்தது. இனியும் பொறுக்க முடியாது என்றான போது, மாலையில் அடுத்த வீட்டுக்குச் சென்றாள். நல்ல வேளை, சுரேஷ் அன்று மாலை ஒரு நண்பனைப் பார்த்து விட்டு இரவு எட்டு மணிக்குத்தான் வீடு திரும்பப் போவதாய்ச் சொல்லியிருந்தான். இல்லாவிட்டால் அவனுக்கு டிபன் காப்பி கொடுக்காமல் எங்கேயும் - குறிப்பாய் சீலன் வீட்டுக்கு - போய் விட முடியாது.

சீலன் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியிருந்தார். அவரும் ஜயாவும் ஹாலில்தான் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய ஏழு வயதுப் பையன் பக்கத்து அறையில் வீட்டுப் பாடம் செய்து கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் சீலன் எழுந்து நின்று ''வாங்க'' என்று அழைத்து அவள் உட்கார்ந்த பின் மீண்டும் உட்கார்ந்து கொண்டார்.

மேஜை மேல் அந்தப் பத்திரிகை இருந்தது. பூமா மௌனமாக அதை எடுத்துச் சுருட்டுவதும் பிரிப்பதுமாக இருந்தாள். உடனடியாய் எதுவும் பேச முடியவில்லை. அவர் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் இயலவில்லை.

கடைசியில் அவரே ''என்ன, கதையைப் படிச்சீங்களா?'' என்றார்.

''ம்.''

''அதைப் பத்திப் பேசத்தான் வந்திருக்கீங்க போல் இருக்கு?''

அவள் மௌனமாய் இருந்தாள்.

''ஏன், கதை பிடிக்கலையா?'' என்று இப்போது ஜயா கேட்டாள்.

''இந்தக் கதை...'' வெடுக்கென்று தலை நிமிர்ந்த பூமா, சீலனை நேராகப் பார்த்தாள். தீவிரமான தொனியில் சொற்கள் வேகமாய் வெளிவந்தன:

''நாலு வாரத்துக்கு முந்தி உங்களுக்கு வந்த இந்தக் கதையின் கையெழுத்துப் பிரதியை உறையோடு தபால்காரர் முதல்ல தவறுதலாய் எங்க வீட்ல கொண்டு வந்து போட்டுட்டார். நான்தான் அப்புறம் உங்க லெட்டர் பாக்ஸில் போட்டேன் - கதையைப் படிச்ச பிறகு.''

அறையில் நிசப்தம் சூழ்ந்தது. அவர் அலண்டு போய் ஏதேனும் விளக்கம் சொல்ல முற்படுவார் என்று எதிர்பார்த்த பூமா அந்த மௌனத்தால் ஆத்திரமடைந்து ''இதென்ன இப்படி ஒரு காரியம் செய்துட்டீங்க மிஸ்டர் குணசீலன்?'' என்றாள்.

''எப்படி ஒரு காரியம்?''

''உங்க தங்கை கதையை... என்னதான் அவங்க இப்பத்தான் எழுதத் தொடங்கறாங்கன்னாக் கூட... இப்படி உபயோகப்

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 20

" 'நேற்று வரை நந்தவனம்' தொடர்கதையில் இப்படி ஒரு தவறு செய்து விட்டீர்களே?" என்று சிலர் கடிதம் எழுதுகிறார்கள். இந்தக் கூப்பனில் அல்லவா எழுதி பத்திரப்படுத்த வேண்டும்? வாரா வாரம் அந்தத் தொடரில் நாங்கள் வேண்டுமென்றே செய்து வரும் ஒரு தவறைக் கண்டு பிடித்துக் கூப்பனில் எழுதி, சேகரித்துக் கதை முடியும் வாரம் 5-10 வரி விமர்சனத்துடன் அனுப்பி வைத்தால், மிக அதிகமான தவறுகளைச் சரியாகக் கண்டு பிடித்தவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஒருவருக்கு மேல் மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக் காட்டி இருந்தால் குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஆறுதல் பரிசுகளும் உண்டு. இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட......

தவறு : திருத்தம் :

_______________ _______________

படுத்திக்கலாமா? உங்களுக்கு அழகா இது? உங்க திறமை என்ன, இலக்கிய உலகத்தில் உங்க இடம் என்ன..."

"அவள் திறமை, இலக்கிய உலகத்தில் அவள் இடம்."

பூமா புரியாமல் பார்த்தாள்.

"நீங்க ஓர் உண்மையான இலக்கிய ரசிகை மிஸஸ் சுரேஷ். இந்த விஷயத்தை இவ்வளவு தீவிரமாய் நீங்க ஃபீல் பண்றதால் உண்மையை உங்ககிட்ட சொல்றேன். மன சோட வச்சிக்குங்க. தாரிணியின் இந்த ஒரு கதை மட்டுமே என் பெயரில் வரல்லே. என் பெயரில் வரும் எல்லாக் கதைகளுமே அவள் எழுதறதுதான்."

பூமா உறைந்து போனாள் சில கணங்கள். அறையின் நிசப்தத்தில் அடுத்த அறையில் பாடம் எழுதும் பையன் பக்கத்தைத் திருப்பும் ஒலி தெளிவாய்க் கேட்டது.

"ஆனா... ஏன்? இதென்ன, ஜார்ஜ் எலியட் காலமா? ப்ரான்ட்டே சகோதரிகள் மாதிரி ஆண்பாற் பெயர்கள் வச்சுக்க வேண்டிய நிர்ப்பந்தமா? பெண்கள் கதை எழுதறது சகஜமாய்ட்ட இந்த நாளில்.. இன்னும் சொல்லப் போனா ஆண்களே பெண் பெயரில் கதை எழுதற இந்த நாளில்..."

"நம்ம இந்தியச்சமுதாயத்தில் ஆண்கள் மனம் எந்த அளவுக்கு விரிவு அடைஞ் சிருக்கு மிஸஸ் சுரேஷ்? கணவனோடு அவன் வீட்டில் குடித்தனம் நடத்தற ஒரு பெண், ஆணாதிக்கத்தை எதிர்த்தும் பெண்ணின் புரட்சியை வலியுறுத்தியும் கதை எழுதிட்டு, அப்புறம் அந்த வீட்டில் தொடர்ந்து வாழ்ந்துட முடியுமா?"

அவள் பதிலற்றுப் போனாள்.

"தாரிணியின் புருஷன் ஒரு கொடுமைக் காரன். ஆனா அவனைப் பிரிஞ்சு வருகிற துணிவு அவளுக்கு இல்லை. அதுக்காக ஆயுசுக்கும் சித்திரவதையை வாய் திறக் காமலே பொறுத்துக்கிட்டுப் போனா நெஞ்சு வெடிச்சுடாதா? ஆகவேதான் அவள் தன் உணர்ச்சிகளையும் ஆவேசங்களையும் எழுத்தில் கொட்டறா. அதையெல்லாம் என் பெயரில் பிரசுரத்துக்கு அனுப்ப முடியு மான்னு அவள் கேட்ட போது என் தங்கைக்குச் செய்யும் உதவியாய் நினைச்சு ஒத்துக்கிட்டேன். இப்போ அவளுக்கு ஒரு வடிகால் கிடைக்குது. நாலு பேர்கிட்டே மனசு திறந்து பேசற மாதிரி ஓர் உணர்ச்சி கிடைக்குது. கதைகளுக்குச் சன்மானம் வரப்போ நான் வாங்கிப் பிறகு அவள் கிட்டே சேர்த்துடறேன். இந்தக் கதைகளை நான் எழுதறதாய் நினைச்சே அவள் புருஷன் அவளை ஏசறானாம், 'உன் அண்ணன் என்னைத்தான் மனசில் வச்சுக்கிட்டு இந்த மாதிரி எழுதறானா' அப்படின்னு. இதெல் லாம் அவளே எழுதறாள்னு தெரிஞ்சா என்னதான் செய்வானோ!"

பூமா வெகுநேரம் தலைநிமிரவில்லை. ஆண் மன விரிவு... அது இவ்வளவு அரிய பொருளா? இதன் ஒரு லேசான முகத்தைத் தன் வீட்டிலேயே கண்டிருக்கிறாள் என்றா லும்...

நல்ல வேளை, எல்லா ஆண்களும் ஒரே மாதிரியாக இல்லை. இருள் வானில் இடை இடையே நட்சத்திரமும் இருக்கிறது - மானிடப் பண்புகளும் மனைவியிடம் நேசமும் சகோதரியிடம் அனுதாபமுமாய் வாழும் இந்தச் சிலரைப் போல்.

பாவம், தாரிணி. எதிர்ப்பைக் கூட மூடி மறைத்துச் செய்ய வேண்டிய பரிதாபம். அந்த உயரம், ஒல்லி உடம்பு, இடுப்புக்கும் கீழே தொங்கும் பின்னல் ஜடை... பற்றி இழுக்க வாகான நீண்ட முடி என்று அசம்பாவிதமாக ஓர் எண்ணம் அவளுள் மின்னி மறைந்தது.

சிவராசன் அதி புத்திசாலியா?



★ அதிபுத்திசாலி?

● த. செல்லபாண்டி, சென்னை - 30.


? குமுதம், தராசு வாரப் பத்திரிகைகள் தாக்கப்பட்டது பற்றி...?

! சகிப்புத் தன்மை குறைந்து கொண்டே வருவதை எடுத்துக் காட்டுகிறது. அவதூறு எழுதப்படக் கூடாதுதான். ஆனால் கருத்து விமர்சனத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையைக் காண்கிறோம். சுதந்திர ஜனநாயக நாட்டில் இது விசனத்துக்குரியது. பத்திரிகைகள் அத்துமீறி நடந்தால் பிரஸ் கவுன்ஸில் இருக்கிறது; நீதிமன்றமும் இருக்கிறது. போதாக்குறைக்கு மாற்றுக் கருத்தை எடுத்துரைக்கக் கட்சிப் பத்திரிகைகளும் உள்ளன. ஆக, குண்டாந்தடியும் கத்தி - துப்பாக்கியும் எதற்கு?


● எம். செல்லையா, சாத்தூர்.

? சித்தாரா - ரகுமான் பிரச்னை எப்போது ஓயும்?

! குறிப்பிட்ட பத்திரிகைகள் 'போதும்'



★ வல்லவனுக்கு வல்லவன்!



★ ...பிரமாத எச்சரிக்கை!

என்று நினைக்கும் போது!

● திருமதி. நெ. மணிமேகலை, வேங்கை வாசல்.

? கடவுளின் முகவரி என்ன?

! இதென்ன, ஆட்டைத் தோளில் போட்டுக் கொண்டு ஊர் முழுக்க அலைந்த கதையாக...? ''மே/பா. நமது உள்ளம்'' என்பதே முகவரி.

● ப. விஜயபாலன், சென்னை.

? எட்டாவது திருமணம் செய்து கொண்டிருக்கிறாராமே, டெய்லர்?

! பெயருக்கேற்ப பழசை 'கட்' பண்ணி விட்டு புதுசு புதுசாய்த் தைத்துக் கொள்கிறார். ஒன்பது, பத்துக்கெல்லாம் கூட இன்னும் அவகாசம் இருக்கிறது!

● கு. கே. சீனிவாசன், வைப்பூர்.

? எம். பி. ஏ., எம். பி. பி. எஸ். போன்று படித்து விட்டுச் சினிமாவில் நுழைபவர்கள் பற்றி?

! அதுதாண்டா சினிமா!

● முஸ்தபா கமால், தக்கோலம்.

? ஒரு சின்ன ஓட்டை பெரிய கப்பலையே கவிழ்க்கும் - உதாரணம்?

! இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் இம்பால் அருகே விழுந்து நொறுங்கி, 69 பேரைப் பலிவாங்கியதே, அதைவிடவா? பொதுவாக, உலகின் பல இடங்களிலும் விமான விபத்துக்கள் நிகழவே செய்கின்றன; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் விமானப் பராமரிப்புப் போதாத காரணத்தாலும் பைலட்டுகளுக்குப் போதிய அளவு பயிற்சி அளிக்கப்படாததாலும் விபத்துக்கள் அதிகம் நிகழ்வது நம் நாட்டில்தான். விமானத்தில் ஏறி வானில் மிதக்க, மிதப்புடன் போகக் கூடாது என்பதிலும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.


● ஆர். முரளி, சென்னை - 15.

? அண்மையில் நீங்கள் விரும்பி ரசித்த ஸ்டண்ட் ஒன்றைக் கூறுங்களேன்?

! கார்பசேவ் கவிழ்க்கப்பட்டது குறித்து நமது பிரதமர் பிரமாதமான எச்சரிக்கை ஒன்று விடுத்தாரே, அதுதான்! என்ன சொன்னார் கேளுங்கள்: ''கார்பசேவ் பதவி நீக்கம், பரபரப்பாகப் பல மாறுதல்களைக் கொண்டு வரும் தலைவர்கள் எல்லோருக்குமே ஓர் எச்சரிக்கை!'' என்றார். அப்புறம் என்ன நினைத்துக் கொண்டாரோ - தம்மையே எண்ணிப் பார்த்தாரோ என்னவோ - ''மாறுதல்கள் செய்யாமல் சும்மா இருப்பவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை!'' என்று ஒரு போடு போட்டார். குழப்பத்திலிருந்து நான் இன்னும் மீளவில்லை. நீங்கள்?



★ எட்டாவது திருமணம்



★ பழிவாங்கப்படுகிறாரா?

● **எல். ஆர். விஜயகுமார், சென்னை.**

? *சிவராசன் அதிபுத்திசாலியா?*

! நிச்சயமாக. இல்லாமலா அவனைப் பிடிக்கத் தொண்ணூறு நாட்கள் ஆகியிருக்கின்றன! ராஜீவை அவன் கொன்றது மகா கொடூரம் என்றாலும், அதை அவன் எத்தனை ரகசியத் திட்டங்கள் போட்டு, எவ்வளவு அறிவாற்றலுடன், சாமர்த்தியமாக நிறைவேற்றியிருக்கிறான் என்று பார்த்தால் மரியாதை ஏற்படவே செய்யும். இதைத்தான் ஆங்கிலத்தில், "Give the Devil its due" என்பர். ஆனால் 'வல்லவனுக்கு வல்லவன் உண்டு' என்பதற்கேற்பவும் 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதற்கேற்பவும் சிவராசனை ஒழிக்க ஒரு கார்த்திகேயன் வந்தார். ராஜீவின் பிறந்த நாள் தாண்டாமல் அந்த தினத்திலேயே சிவராசனுக்கு ஒரு முடிவு ஏற்பட்டது விந்தையான ஓர் அம்சம். கார்த்திகேயனுடன் ஒத்துழைத்த அனைவருக்கும் வாழ்த்துச் சொல்லும் போது, 'சிவராசனை உயிரோடு பிடிக்கவில்லையே' என்று குறை கூறுகிறவர்களைக் குறை கூறவும் வேண்டியிருக்கிறது. இவர்கள் புலிகளைப் பற்றிச் சரியாக அறியாதவர்களாகத்தான் இருக்க முடியும். புலிகளை அறிந்தவர்கள், சிவராசன் - சுபா உயிருடன் பிடிபடுவார்கள் என்று எப்போதுமே நம்பியது இல்லை.

● **ஆர். ஸ்ரீதரன், குடந்தை.**

? *நக்கீரன் ஆசிரியர், பதிப்பாளர்களை தமிழக அரசு கைது செய்தது பற்றி...?*

! தவறான அணுகுமுறை. டெலிஃபோன் ஒட்டுக் கேட்பது பற்றி முதல்வரைச் சம்பந்தப்படுத்தி அப் பத்திரிகை எழுதியது குற்றமே என்றாலும் ஒரு மறுப்புக் கடிதம் எழுதி, மறு இதழில் பிரசுரிக்குமாறும் வருத்தம் தெரிவிக்குமாறும் கேட்டிருக்கலாம். அதுவே போதிய அளவு தலைகுனிவாகும்; எச்சரிக்கையாகவும் விளங்கும். அதை விட்டு விட்டுக் கைது செய்து, சிறையில் அடைத்து, அரசை எதிர்த்துப் போஸ்டர் ஒட்ட வழி வகுத்து... பத்திரிகைக்குத் தமிழக அரசு ஏகப்பட்ட இலவச பப்ளிசிடி வழங்கியது.

● **ஐ. எஸ். வாசு, மாடம்பிள்ளைதர்மம்.**

? *நாகராஜன் பழிவாங்கப்படுகிறாரா? அல்லது தண்டனைக்கு உரியவர்தானா?*

! தராசு பத்திரிகைக் காரியாலயத்தில் நடந்த படுகொலையில் அவருக்குச் சம்பந்தம் இருப்பதாக வாக்குமூலங்கள் தங்களிடம் இருப்பதாக போலீஸ் கூறுகிறது. வாக்குமூலங்கள் போதாது. சாட்சியங்கள் தேவை. தாம் நிரபராதி என்று கூறும் நாகராஜன், போலீஸில் சரணடைந்ததில் புத்திசாலி. இனி போலீஸ் எப்படி வழக்கை நடத்துகிறது என்பதை வைத்தும் நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகிறது என்பதைப் பொருத்தும்தான் நாகராஜன் குற்றவாளியா அல்லது பழிவாங்கப்பட்டாரா என்பதை நிர்ணயிக்க முடியும்.

● **எஸ். வி. ரவிகணேஷ், கும்பகோணம்.**

? *பத்திரிகைக்குத் தேவைப்படும் காகிதத்தை இந்தியாவில் தயாரிக்கிறார்களா? வெளிநாட்டிலிருந்து வருகிறதா? விளக்கம் தேவை.*


! வெளிநாட்டிலிருந்துதான் முழுதும் வந்து கொண்டிருந்தது. சமீபத்தில்தான் உள்நாட்டிலும் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தக் காகித ஆலைகளில் சில, பத்திரிகைக் காகிதக் கூழை மட்டும் இறக்குமதி செய்து, இங்கு காகிதமாக உருமாற்றுகின்றன. பெரிய பத்திரிகைகள் பெருமளவுக்கு உள்நாட்டுக் காகிதத்தையே பயன்படுத்த வேண்டும் என்ற அரசு ஆணை உள்ளது. விலை உயர்வில் இரண்டுமே ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்றன!

● **ஆர். அய்யா குட்டி, நெல்லை.**


? *பொன் விழா ஆண்டு மலரை 128 பக்கங்கள் அச்சிட்டதில் கல்கிக்கு ஒன்றும் நஷ்டம் வரவில்லையா?*

! விளம்பரங்கள் கைகொடுத்தன.

★ பிரச்னை...



★ ...ஓயுமா?



★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
பி. அ. முஸ்தபா கமால்,
140, மசூதி தெரு,
தக்கோலம் - 631 151.


போராளிகள் வசம் பிணைக் கைதிகள்

சொன்னது: மோகன்தாஸ்
எழுதியவர்: மௌஷ்மி
படம்: செல்லம்





கமாண்டோ இன்ஸ்பெக்டருடன் ஆலோசனை...
நம்மிடம் உள்ள போராளிகள் பற்றிய தகவல்கள் அடங்கிய ஃபைல்கள்...
விடுதலை கோரப்படும் போராளிகள் பட்டியல் இது...
இரவெல்லாம் ஃபைல்களை அலசியதில்...
இவர்கள் ஈ.பி.ஆர்.எல். எஃப். குழுவினர் தான்... விவரம் இதோ இருக்கிறது
சென்னையில் ஈ.பி.ஆர். எல்.எஃப் முக்கியஸ்தர்கள் யார் இருக்கிறார்கள்? கண்டு பிடியுங்கள்.
எஸ், ஸார்!
இரு தினங்களுக்குப் பிறகு...
சுரேஷ் என்ற இளைஞனை விசாரித்ததில் ஒரு ஃபோன் நம்பர் கிடைத்தது...
ஃபோன் நெம்பரை வைத்து விலாசம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
அந்த விலாசத்துக்கு விரைந்தனர்


வீட்டைப் போலீஸ் சூழ்ந்து கொள்ள, கதவைத் தட்டி...
யாரு?
ஹேண்ட்ஸ் அப், டக்ளஸ்!
வீட்டைச் சோதித்த போது...
டக்ளஸ் தேவானந்தா, பத்மநாபா, வரதராஜ பெருமாள்... குட்...
என்ன வேணும்
அவர்கள் டி.ஐ.பியிடம் கொண்டு வரப்பட...
உங்க ஆளுங்க யாழ்ப்பாணத்தில் அலன் தம்பதியைக் கடத்தியிருக்காங்க...
எங்களுக்கு ஒன்றும் தெரியாது...
நீங்க உதவலேன்னா, ஆலன் தம்பதிக்கு நேரும் கதிதான் உங்களுக்கும்! ஜாக்கிரதை! தங்கம் கிடையாது; போராளிகளை விடுவிக்கவும் முடியாது! என்ன சொல்றீங்க?
அவர்கள் ஒத்துழைக்கத் தீர்மானித்து...
ஹல்லோ... யாழ்ப்பாணமா...
இரண்டு நோயாளிகளையும் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்துடுங்க!
மறுநாள் அமெரிக்க தூதரக அதிகாரி...
ஆலன் தம்பதி விடுவிக்கப்பட்டு விட்டனர். தேங்க்யூ மோகன்தாஸ்
யூ ஆர் வெல்கம்!



பரிசு

ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/-
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/-
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-

முடிவு தேதி : அக்டோபர் 31, 1991

O இதற்கடுத்த ஒன்பது மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து, கல்கி பொன் விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பித்ழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.

O நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

O கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

O ஒவ்வொரு வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 - 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.

O கடிதப் போக்குவரத்து கிடையாது.

O சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெற போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

O அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன் விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

நேற்றுவரை நந்தவனம்

22

"அப்பா என்ன சொன்னார் மீரா?'' - குமரன் அவளது தோளில் உறங்கும் மகனை, மெள்ள வாங்கிப் படுக்கையில் கிடத்தியபடியே கேட்டான்.

பதில் சொல்ல வாய் திறந்தவள், அறை வாசற் பக்கம் நிழலாடக் கண்டு, திரும்பிப் பார்த்தாள்.

ராஜேஸ்வரி அம்மாள்தான். பெரிய தம்ளரில் ஐஸ் மோர் கொண்டு வந்து மீராவிடம் நீட்டினாள். அவளது முகத்திலும், மீரா என்ன சொல்லப் போகிறாளோ என்கிற பதற்றம் தெரிந்தது.

அப்பா சொன்னதை எல்லாம் சொல்லி, அவர்கள் மனம் தளர்வதை மீரா விரும்பவில்லை.

''என்ன சொல்வார்.. உன்னிஷ்டம். உனக்குத் தெரியாததான்னு சொன்னார். அம்மாதான் பாவம்.. அந்தப் போஸ்டர் விவகாரத்துனாலே கொஞ்சம் பயந்து போயிருக்கா..''

குமரன், ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தபடியே சொன்னான்.

''அதுக்காக உண்மையிலேயே நான் ரொம்பவும் வருத்தப்படறேன் மீரா. ஒரு மனுஷன் பொது வாழ்க்கையில ஈடுபட ஆரம்பிச்சவுடனே அவன் வீட்டு நாய்க் குட்டியப் பத்திக் கூட விமர்சிக்கற உலகம் இது. அதுவும் தரக்குறைவாத்தான் பேசும். அரசியல்வாதிங்கன்னாலே கொலை, கொள்ளைக்கு அஞ்சாதவங்க; பொம்பிளை சகவாசத்துல சீரழிஞ்சவங்கன்னுதான் ஜனங்க சான்றிதழ் தயார் பண்ணி வச்சிருக்காங்க. ஆனா, அவங்களைச் சொல்லியும் குத்தமில்லே. பல அரசியல்வாதிங்க அப்படித்தான் இருக்காங்க. உங்க அம்மா, அப்பாவோட தயக்கம் புரியுது.. இதுவே மறுமணமா - நீ ஒரு டாக்டரையோ, இன்ஜினீயரையோ கல்யாணம் பண்ணிக்கிட்டா உலகம் இவ்வளவு பேசாது..''

மீரா சிரித்தாள்.

''போஸ்டர் என்ன பிரமாதம்... நம்மைப் பத்தி டீ.வி.யில வேணுமானாலும் தொடர்ந்து விளம்பரப்படுத்தட்டுமே.. நான் ரெடி. எங்கம்மாவுக்கு இந்தக் குடும்பத்தைப் பத்தி இன்னும் தெரியாதில்லையா... அதான் இப்படி. போகப் போகச் சரியாயிடும்..''

குமரன், அவளைத் தன் தாய் பார்க்காத போது திரும்பிப் பார்த்தான்.

முகத்தில் கோடி சூரியப் பிரகாசமாய்ப் புன்னகை. ராஜேஸ்வரி, நாசூக்காய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

என்னவோ, 'சட்'டென வயது குறைந்து விட்டது போலத் தோன்றியது ராஜேஸ்வரிக்கு.

மறுபடியும் இந்த வீட்டில் சந்தோஷம் துளிர் விட்டிருப்பதே நம்ப முடியாத விஷயமாய் இருந்தது.

உடனே பூஜையறைக்குப் போய், ஒரு ரூபாய்க் காசை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து வைத்தாள்.

''இந்தக் கல்யாணம் நல்லபடியா முடியட்டும் தாயே... உனக்குச் சந்தனக் காப்புச் சாத்தறேன்.''

''இந்தக் கல்யாணம் நடந்திடுமா என்ன.. அதையும்தான் பார்த்துடறேன். இன்னொருத்தி மட்டும் எங்க அக்கா இருந்த இடத்துல வந்து உட்காரட்டும். உன் மருமகனை, கிழிச்சு, இதோ, இங்கே மாட்டியிருக்கற எங்க அக்கா போட்டோவுக்கு மாலையாப் போடுவேன்.''

ரவி, வானத்துக்கும் ஆகாசத்துக்குமாய்க் குதித்தான்.

''அவன் எத்தனை பேரை வேணுமானாலும் கல்யாணம் பண்ணிக்கட்டும். ஆனா, என் பேரன் இளவரசு என்கிட்ட வந்தாகணும். ஆமா.. இப்பவே சொல்லிட்டேன். மாற்றாந் தாய்க் கொடுமை என் குழந்தைக்கு ஏற்படக் கூடாது. என்னங்க, இடிச்சு வச்ச புளி மாதிரி உட்கார்ந்திருக்கீங்களே!''

ரவியின் தந்தை, கன்னத்தில் கை யூன்றியபடி, மகனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்குத் தெரியும், பிள்ளை எதற்காக இப்படிக் குதிக்கிறானென்று..

எல்லாமே பணம் பண்ணுகிற வேலை. மற்றபடி அக்காள் மகனைத் தன்னிடம்

அனுராதா ரமணன்

இருத்தி வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்கிற அக்கறையெல்லாம் எதுவுமில்லை.

போதாக்குறைக்கு ரவி எடுத்திருக்கிற பிஸினஸ் எதுவுமே சரியாக இல்லை. எங்கே... வியாபாரத்தைக் கவனிப்பதை விடவும், காதலியைக் கவனிப்பதற்குத் தானே நேரம் சரியாக இருக்கிறது?

நிர்மலா - தர்மராஜனின் தொடர்பு ஏற்படுவதற்கு முன் நிறையச் சிரமப்பட்டி ருக்கிறாள். வீட்டு வாடகைக்கும், மளிகைக் கும் கூடப் பணமில்லாமல் அம்மாவும், பெண்ணும் அலைபாய்ந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் ரவிதான் அவர் களுக்குக் கண்கண்ட தெய்வம்.

இவ்னும், கொஞ்சம் கூட அலுத்துக் கொள்ளாமல் கைப் பணத்தை எல்லாம் கொடுத்திருக்கிறான். கையில் பணமில்லாத போது - அக்கா தெய்வநாயகியிடம் கேட்டு வாங்கிக் கொடுப்பான். சில சமயங்களில் வீட்டிலிருந்தே நகைகளைத் திருடியும் கொடுத்திருக்கிறான்.

இளவரசுவுக்குத் தான் பாதுகாப்பாள னாக ஆனால், சொத்துக்கள் இருபது வருஷத்துக்குக் குறையாமல் தன்னிடமே இருக்கும் என்றும் நம்பினான்.

ரவியின் எண்ணத்தில் மண்ணை





ஜோசியர் : ''உங்க காதலுக்கு எதிர்ப்பே இருக்காது. நீங்க தைரியமாக் கல்யாணம் செஞ்சிக்கலாம்...''

''இதை அப்படியே உங்க பொண்ணு கிட்டே சொல்லுங்க மாமா! அவதான் ரொம்பவும் பயப்படறா...''

- செங்குன்றம் ரமேஷ்ராம்.

அள்ளிப் போடுவது போல், குமரன், சட்டப்படி குழந்தை தன்னிடம்தான் இருக்க வேண்டும் என்பதை நிரூபித்து விட்டான்.

அன்றே அவனும் அவள் தாயும் புலம்பினார்கள்; பெற்றவர் கேட்டுக் கொண்டு தெய்வமே என உட்கார்ந்திருந்தார்.

இப்பொழுதும் அப்படியே என்றால்...

ரவி கொதித்துப் போய் விட்டான்.

''அப்பா... உங்க வரையில் பிள்ளை கிட்ட ஒரு பைசாக் கொடுக்கக் கூடாது; அவன் நடுத் தெருவுல நின்னாக் கூடப் பரவாயில்லே. பொண்ணுக்குத்தான் சகல முன்னு சொன்னீங்க. பொறுத்துக்கிட்டேன். அட, வேற யாருக்குப் போறது. நம்ம அக்காவுக்குத்தானேயின்னு 'கம்'முனு இருந்தேன். இப்ப அக்காவும் போயாச்சு. அக்கா குழந்தையையும் அங்கே - அவன் கிட்டேயே அனுப்பி வச்சாச்சு. இப்ப, அவன் ரெண்டாவதா ஒருத்தியக் கல்யாணம் பண்ணிட்டு வரப் போறான். உங்க பொண்ணோட நகை, நர்ஸிங் ஹோம், சொத்தெல்லாம் அவன் அனுபவிக்கப் போறான். திருப்தியா?''

பெரியவர் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார்.

ரவியைப் பெற்றவள் மனம் குமுறிக் கேட்டாள்.

''கேட்கிறானில்லே? பதில் சொல்லுங்களேன்..''

அவர், 'விருட்'டெனத் தலை நிமிர்ந்தார். முகத்தில் அலாதியான தெளிவு.

''நான் தீர்மானிச்சிட்டேன். என் பிள்ளைய நம்பி, குழந்தையையும், சொத்தையும் விடறதை விட, என் மருமகனை நம்பிக் கொடுக்கறது எவ்வளவோ மேல்!''

''என்னது?''

''ஆமா... தெருத் தெருவா இவன் போஸ்டர் அடிச்சு ஒட்டின போட்டோவை நானும்தான் பார்த்தேன். அன்னிக்கு இவனைத் தேடி வந்ததே, அந்தப் பொண்ணு தானே இது? அப்பவே நினைச்சேன். பொண்ணைப் பார்த்தா - ரொம்பவும் தங்கமானவளா இருக்காளே, நம்ம வீட்டுப் பையனைத் தேடி எங்கே வந்தாள்னு யோசிச்சேன்.. இனம், இனத்தோடதான் சேர்ந்திருக்கு.. பேஷ்...''

ரவி, முன் நெற்றியில் புரண்டு விழுந்த கேசச் சுருளைப் புறங்கையால் ஒதுக்கி விட்டுக் கொண்டு, அம்மாவின் கெஞ்சலையும் புறக்கணித்து விட்டு, 'விருட்'டெனக் கிளம்பினான்.

இம்முறை நேரே அவன், குமரனின் எதிர்க்கட்சி ஆளான சகாதேவனிடம் போய் ஆலோசனை கேட்டான்.

''என்ன.. தஞ்சாவூருக்கு மட்டும் அம்பதாயிரம் போஸ்டர் போட்டிருக்கேன் சார்... அந்தப் பய, இனிமே முக்காடு போட்டுட்டுத்தான் ஓட்டு கேட்கப் போகணும்..''

ரவிக்கு அவன் பேச்சு, எரிச்சலை உண்டுபண்ணியது..

''யோவ், அவன் எலக்‌ஷன்லே ஜெயிச்சா என்ன.. தோத்தா என்னய்யா? என்னைப் பொறுத்தவரைக்கும் அந்த மனுஷனை இல்லாமப் பண்ணிட்டாக் கூடப் பரவாயில்லே. போஸ்டர் போட்டு நோ யூஸ். எந்தப் பொண்ணைப் பத்தி வதந்தி கிளப்பி விட்டோமோ, அந்தப் பொண்ணையே கட்டிக்கப் போறான். முகூர்த்தம் வர்ற மாசம் பத்தாம் தேதி.. கல்யாணத்துக்குக் கட்சித் தலைவர் வர்றாராம்..''

''அந்தச் சமயம் கறுப்புக் கொடி காட்டிடலாம் ரவி சார். நீங்க சும்மா இருங்க..''

''உருப்படியா யோசனை ஏதாவது சொல்லுப்பா.''

ரவி, உள்ளபடிக்கே நொந்து போய் விட்டான்.

சகாதேவனிடமெல்லாம் பேச்சு வைத்துக் கொள்ள வேண்டியுள்ளதை நினைத்தால் அவனுக்கே வெட்கமாகத்தான் இருந்தது. என்ன செய்வது... பணத்துக்கு ஆசைப்பட்டால், எல்லா வேஷமும் போடத்தானே வேண்டியிருக்கிறது?

சகாதேவன் ஒரு சிட்டிகை பொடியை எடுத்து, அகன்ற மூக்கில் கிட்டித்துக் கொண்டு, யோசனையில் ஆழ்ந்தான்.

''சார், இப்படிச் செய்யலாமா?''

''எப்படி?''

''காதைக் கொண்டாங்க இப்படி...''

அவன், ரவியின் காதில் ஏதோ கிசுகிசுத்தான். ரவியின் முகம், ஒரு கணம் வெளிறியது.

''இதுக்கு நிர்மலா ஒத்துக்கணுமே...''

''அட, அது என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? ஏற்கெனவே, தர்மராஜன் விஷயத்துல சிக்கிக்கிட்ட பொண்ணு தானே?''

''இருந்தாலும் நான் கல்யாணம் செஞ்சுக்கப் போற பொண்ணாச்சே...''

சகாதேவன், ரவியைத் தரையில் கிடக்

கும் புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தான்.

''சார், உங்க பர்ஸனல் மேட்டர்லே தலையிடறேனேயின்னு நினைக்காதீங்க. என் மனசுல பட்டதைச் சொல்றேன். உங்களுக்கு என்ன சார் குறை? அழகில்லையா, படிப்பில்லையா, இல்லே பணம்தான் இல்லையா? நீங்க சரியின்னு சொன்னா, வெள்ளரிப் பிஞ்சு கணக்காப் பொண்ணுங்களை வச்சிக்கிட்டு, அப்பன்காரங்க கியூ வரிசையில நிற்க மாட்டாங்களா...''

''நிற்பாங்க சகா... ஆனா, நிர்மலாவைக் கட்டிக்கறதுதான் என் லட்சியம்..''

''வெளியில சொல்லாதீங்க சார்.. கேட்கறவங்க வெறுமனே கூடச் சிரிக்க மாட்டாங்க... ஒரு கோடீஸ்வரியக் கல்யாணம் செஞ்சுக்கறது லட்சியம்னு சொல்லுங்க. ஒத்துக்கறேன். இதைப் போயி... தர்மராஜன் விவகாரத்துல சிரிபட்டதுக்கு அப்புறம் இதுகிட்ட என்ன இருக்கு...''

''........''

''நிசம்மாலுமே அந்தப் பொண்ணுக்கு உங்க மேல பிரியம் இருந்துச்சுன்னா நான் இப்பச் சொல்லியிருக்கற விஷயத்தைக் கச்சிதமா முடிக்கச் சொல்லுங்க சார். நானும் அப்பலேயிருந்து பார்க்கறேன். நீங்கதான் அந்தப் பொண்ணுக்காக உருகறீங்களே தவிர, அந்தப் பக்கம் ஒரு பிள்ளைய மட்டும் பெத்து வச்சிட்டுக் 'கம்'முனு இருந்தாப்பல ஆயிடுச்சா.. இப்ப நாம போட்டிருக்கற திட்டத்தை - நிர்மலா முடிச்சுத் தரட்டும்.. தாலியக் கட்டுங்க...''

ரவிக்கு நிர்மலாவின் மீது ஆசைதான். எந்த நிலையிலும் அவளை மணக்க அவன் தயாராக இருக்கிறான்தான். ஆனால், அதை விடவும் முக்கியம் - குமரனின் விஷயம்..

இரண்டு நாட்களுக்கு முன்பே, அவன் - குமரனுக்குப் போன் செய்து கேட்டு விட்டான்.

''குழந்தைய எங்க அம்மா பார்க்கணும்கறாங்க. கொண்டு வந்து விடு..''

''ஸாரி. அவங்களுக்கு வேணுமானா, என் வீட்டுக்கு வந்து பேரனைப் பார்த்திட்டுப் போகச் சொல்லு..''

''பிள்ளையக் காட்டிச் சொத்தை அனுபவிக்கப் பார்க்கறியே.. நீ நல்லா இருப்பியா? எங்க அக்கா உன்னைப் பழி வாங்காம விட மாட்டா. புதுசா வரப் போறவளோட நீ எத்தனை நாள் வாழ்ந்துடறேயின்னு நானும் பார்த்துடறேன்.''

''பாரு.. நல்லாப் பாரு. உன் வீட்டுக்கு என் குழந்தைய அனுப்பினா, சொத்துக்காகக் குழந்தையையே நீ கொன்றாலும் ஆச்சர்யமில்லை..''

வார்த்தைகள் தடித்துப் போய், ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டி விட்டுத்தான் மறு வேலை என்பது போலச் சபதமும் போட்டார்கள்...

சகாதேவனின் யோசனையைச் செயல்படுத்த, அவன் நிர்மலாவை அழைத்து வைத்துப் பேசினான்.

''நிம்மி... இந்தக் குமரனை ஒழிச்சுக் கட்ட ஒரே வழிதான் இருக்கு. அதுக்கு நீதான் உதவணும்....''

அவள், ஒன்றும் புரியாமல் ரவியை ஏறிட்டுப் பார்த்தாள்.

(தொடரும்)

குவிஸ் டைம்

காவிரியைப் பற்றிய இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

1. காவிரியின் மொத்த நீளம் எவ்வளவு?

2. காவிரிக்கு எட்டு உபநதிகள் உண்டு. அவை எவை?

3. முதன் முதலாய்க் காவிரி நீர்ப் பங்கீடு சம்பந்தமாய்ப் போடப்பட்ட ஒப்பந்தம் யார் யாருக்கிடையே, எப்போது கையெழுத்தானது?

4. 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் மூலம் காவிரியில் கட்டப்பட்ட இரு பெரும் அணைகள் எவை?

5. தமிழ்நாடு, காவிரிப் பிரச்னையை நடுவர் மன்றத்துக்கு விட வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது எந்த வருடம்?



6. 1990 ஜூன் 2-ஆம் தேதி அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்துக்குத் தலைவர் யார்?

7. இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் நடுவர் மன்றத் தீர்ப்பு என்ன?

(விடை தெரியாதவர்கள் பக்கங்களைப் புரட்டுங்கள்)

ஆண்மை

தம்புசாமி படுப்பது குடிசைத் திண்ணையில்தான் எப்போதும். கட்டுக் கடங்காத காற்று மழை திண்ணையை நனைத்தால்தான் எழுந்து உள்ளே போவான்.

இப்போது திடீரென்று காட்டுக் கொல்லைகளில் யானைக் கூட்டம் திரிகிறது என்று பரவியிருக்கிற பீதிக்காக படுக்கையை மாற்றச் சொன்னால் அவனுக்கு என்னவோ மாதிரி இருந்தது.

முதலில் அந்த யோசனையைச் சொன்னது வள்ளி அல்ல. கட்டிய கணவன் எந்த யோசனையைக் கேட்டுக் கொள்வான், கேட்க மாட்டான் என்று திருமணமான ஒரே வருஷத்தில் புரிந்து கொண்டவள் வள்ளி.

சொன்னவன் சொக்கப்பன்.

''ஆனைக் கூட்டம் ராவோட ராவா அம்பிலியப்பன் கம்பங் கொல்லையை சுத்தமா மேஞ்சிட்டுது தம்புசாமி.''

அந்தக் கம்பங்கொல்லை ஊஞ்சால மரத்துக் காணாற்றின் ஓரம் இருந்தது. தம்புசாமி நிலத்திலிருந்து இரண்டு கல் தொலைவு.

வடக்கயிற்றைத் திரித்துக் கொண்டே தம்புசாமி கேட்டான்.

''முந்தா நாள்தானே!''

''ஆமா, யாரு சொன்னது?''

''கேள்விப்பட்டேன்.''

''அப்போ நாராயணவரத்து பெத்தபவுவை ஆம்பளை யானை மெரிச்சிட்டது தெரியுமா?''

''அதுவும் சொன்னாங்க.''

''தெரிஞ்சிக்கிட்டேவா ராத்திரியிலே திண்ணை மேல படுத்திருக்கே?''

''என்ன பண்ணணுங்கறே?''

''உசுரு மேலே பயமிருந்தா உள்ளே போய்ப் படு. ஒனக்காக இல்லே ஒம் பொண்டாட்டிக்காக.''

''கதவைத் தாப்பாள் போட்டுட்டா ஆனைக்கு இந்த அளிஞ்சிமரத்துக் கதவு பெரிய இரும்பு கேட் ஆயிடுமா?''

சொக்கப்பன் துண்டை உதறித் தோளில் போட்டு எழுந்தான்.

''நீ ஒரு விதண்டாவாதம் புடிச்சவன். உன்கிட்டே வந்து சொன்னேன் பாரு.''

பிரி திரித்த கயிற்றை லாவி எடுத்து, மரத்தில் கட்டி முறுக்க எழுந்தான் தம்புசாமி.

உயிருக்கு மரியாதை மரண பீதியா? புரியவில்லை. இந்தக் காற்று. நிலா வெளிச்சம். இரவுகளில் குள்ள நரியும் ஆந்தையும் போடும் ஓலம். மண்ணும் பயிரும் விடுவிக்கும் வாசனை. மரங்களின் சங்கீதம். இத்தனை அனுபவம் திண்ணையில்.

வெட்டிப் போட்ட கட்டைத் துண்டு ஒன்று வெட்டவெளியில் எப்படி இன்னும் இயற்கைக்குச் சொந்மோ அந்த மாதிரி இயற்கைக்கு அருகில் மூடுமறைவின்றிப் படுத்திருக்கிற சொந்தம் சொக்கப்பனுக்குப் புரியவில்லை. அது வெறும் சுகம் இல்லை. மேலே. எதற்கும் மேலே.

பயந்து பயந்து கதவைத் தாள் போட்டு மூடிப் பதுங்கி ஒதுங்கி இருந்தால் மரணத்துக்குத் தப்பித்து விட முடியுமா?

சொன்னால் விதண்டாவாதம். சொல்வதில்லை. தாயின் வயிற்றிலிருந்து வந்து விழுந்ததுமே மண்ணுக்கு உரிமை. அதாவது மண் மேல் நிகழப் போகிற மரணத்துக்கு உரிமை. பயந்து பயந்து தப்பித்து விட முடியுமா?

''மோடாமோடியாப் பேசாதே, மரியாதையாஎழுந்து போய் வூட்டுக்குள்ளேபடு.''

இரண்டு மூன்று பேர் சொல்லி விட்டார்கள்.

''ராக்கப்பன் கொல்லையிலே ராத்திரி கன்னங்கரேல்னு நகுந்ததாம். எருமை பூந்துட்டதுண்ணு மூங்கில் தடி எடுத்துட்டு ஓடியிருக்கான். பார்த்தா திடுதிடுண்ணு எளுந்து நிக்குதாம் ஆம்பளை யானை.''

மரங்கள் உராயப்பட்ட கதை. குடிசைச் சுவர் யானைத் தொடை தேய்த்து மண் சிறாய்ப்புண்ட கதை. மனக்கிலி ஜோடிக்கிறதா, நிஜமாய் நடக்கிறதா என்று இனம் பிரிக்க முடியாதவாறு காட்டுக் கொல்லை வாசிகளிடையே இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாகக் கதைகள் பறந்தன.

கானாற்றின் போக்கிடம் எங்கும் பரவிய கதைகள். தம்புசாமியின் மனசை ஒன்றே ஒன்றுதான் மிகவும் தைத்தது.

கூட்டத்தைச் சேர்ந்த பெண் யானையை எவனோ ரயில்வே கேட் அருகே சுட்டு வீழ்த்தி விட்டது.

தம்புசாமிக்குச் சொல்லப்பட்ட எல்லாக் கதைகளிலும் தவறாது அங்கம் வகித்தது ஓர் ஆண் யானை. அநேகமாக

ஜெயவன்

அதுதான் கொலையுண்ட பெண் யானையின் இணையாக இருக்க வேண்டும்.

அது தாங்காத வேதனையுற்றிருக்க வேண்டும். எங்கெங்கோ விரட்டியடிக்கப்பட்டு, தீனியும் தண்ணீரும் தேடி மண்ணில் வந்து விழுந்த நாள் முதல் மலை மலைகளாக, வனவனங்களாக தன் விதியைத் தேடிக் கொண்டு அது நடத்தும் யாத்திரையில் இப்போது அது சுமக்கும் சோகம் மிகவும் கனமாகத்தான் இருக்க வேண்டும்.

கூட்டம் என்றுதான் சொல்கிறார்கள். சிறு கூட்டம். ஆறேழு உரு இருக்குமாம். இரண்டு குட்டிகள்.

எங்கிருந்து வந்தன? எங்கே போகின்றன? யாருக்கும் தெரியாது. சமீபத்தில்தான் கூட்டத்தின் முக்கிய உறுப்பினர் சுடப்பட்டிருக்கிறது. முக்கியமான இழப்பு.

ஆண் யானைக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று புரிந்து கொள்ள முடிந்தது. அதன் வெறுமை, அதற்கு நேர்ந்துள்ள விவரிக்க முடியாத் தனிமை புரிந்தது.

அது எதை வேண்டுமானாலும் செய்யும். எவரை வேண்டுமானாலும் மிதித்துத் துவைத்து சர்வ நாசமாக்கி விடும். அந்தத் தனிமைக்கும் வெறுமைக்கும் பழக்கப்பட்டுத் தன் விதியின் போக்கைப் புரிந்து கொண்டு சாந்தமாகிற வரை அதன் சினம் தணியாது.

வள்ளியிடம் அதைப் பற்றிப் பேசினான்.

''அந்த ஆனை ரொம்பக் கலங்கிட்டிருக்கும் வள்ளி.''


அவள் துவைத்து வந்த புடைவையை உதறிக் காயப் போட்டுக் கொண்டே கேட்டுக் கொண்டாள்.

''பொம்பளை போய்ட்டு ஆம்பளை தனியா நிக்கப்படாது வள்ளி.''

''யார் போயும் யாரும் நிக்கக் கூடாது.'' ஆண் பெண் என்று பெயர் சொல்லாமல் பொதுவாய்ச் சொன்னாள் அவள்.

''இல்லே, பொம்பளை கதை வேற. இந்த ஆனையையே எடுத்துக்க. ஆண் போய் பெண் யானை மிஞ்சினதுன்னு வச்சுக்க. அது இவ்வளவு துக்கப்படாது. குட்டிங்க இருக்கு. கூட்டம் இருக்குன்னு சட்டுன்னு சாந்தமாயிட்டிருக்கும்.''

அவன் யானையை மட்டும் சொல்லவில்லை. அவளுக்குப் புரிந்தது. அவள் மீது



வைத்திருக்கும் காதலும், பந்தமும் இதைக் கூடவா அவளுக்கு விளக்காது?

''ஆம்பளைக்கு ஆம்பளை மனசுதான் புரியும். மத்தது புரியாது.''

வள்ளி விவாதிக்கிறவள் அல்ல. அவளுக்கு விவாதங்களில் நம்பிக்கை இல்லை. குறிப்பாகத் தன் கணவனிடம் மறுக்க வேண்டியதை மறைக்காமல் மறுத்து நிறுத்தி விட்டு, அவள் அனுசரிக்கும் மௌனம், சம்பந்தப்பட்டவர் மனசில் பெரிய விவாதங்களைக் கிளப்பி விடும்.

''அதே மாதிரி பொம்பளைக்கும் பொம்பளை மனசுதான் புரியும்'' என்று எரிச்சலோடு சொன்னான் தம்புசாமி.

''அப்படித்தான் வச்சிக்கயேன்! நீ ஆனை திரியற காட்டிலே குடிசைத் திண்ணை மேலே படுத்துக்கிணு கிறது, எனக்கு எவ்ளோ காப்ராவா கீதுண்ணு ஒனக்குத் தெரியப் போறதில்லே.''

அக்கம் பக்கம் முழுக்க அஞ்சி நடுங்கும் விஷயத்தில் அவன் காட்டும் அசிரத்தையை இப்படித்தான் அவளால் வெளிப்படுத்த முடிந்தது.

''சரி சரி.. துணியைக் காயப் போட்டுச் சீக்கிரமா வா. பெட்டியிலேர்ந்து வேஷ்டி சர்ட் எடுத்துக் குடுக்கணும்.''

''எங்கே போகப் போறே?''

''வேட்டைக்காரக் கவுண்டர்கிட்டே''

''எதுக்கு?''

''அவரு நாட்டுத் துப்பாக்கி வச்சிருக்காரு. கொஞ்ச நாளைக்கு எரவல் கேட்டு வாங்கிட்டு வரணும்னு.''

''ஆனையைச் சுட்டுறப் போறியா?''

''அட ஆர்றா இவ. ஒண்ணொண்ணையும் இவகிட்ட புட்டுப் புட்டு வெக்கணும் போல கீது!'' என்று அலுத்து விட்டு நடந்தான்.

துப்பாக்கி யானையைச் சுடுவதற்காக இல்லை. வேட்டைக்காரக் கவுண்டரோடு அவன் வேட்டைக்குத் துணையாக எத்தனையோ நாள் போயிருக்கிறான். வள்ளி கழுத்தில் தாலி கட்டும் முன்பு.

திருமணத்திற்குப் பின் அவனுக்குள் என்னென்னவோ நேர்ந்து விட்டது. அவள் பேதைமையின் பின்னணியில் தெரிந்த அறிவில் எந்தெந்தப் பழக்கங்களிலிருந்தோ அவன் தானாக விலகிக் கொண்டான்.

அவனால் இதற்கு முன் வேட்டையாடப்பட்ட மிருகங்களும் பறவைகளும் பிரிந்து விட்ட இணைகளும் மீண்டும் துப்பாக்கியைத் தொட அவனை விடவில்லை.

அன்று இரவு கவுண்டர் துப்பாக்கியில் மருந்தைக் கெட்டித்து வைத்து விட்டு அவன் திண்ணையில் படுத்துக் கொண்டான்.

''அப்ப நீ உள்ளே வர மாட்டே?'' வள்ளி கேட்டாள்.

''தாப்பாளைக் கெட்டியாப் போட்டு வையி'' என்று பதிலளித்தான் தம்புசாமி.

திண்ணையில் துண்டை உதறித் தூசு தட்டி விட்டுப் பக்கத்தில் அவன் நாட்டுத் துப்பாக்கியை வைப்பது உள்ளே பாயில் படுத்த வள்ளிக்குக் கேட்டது.

இரவில் ஏதோ ஒரு நேரத்தில், நரி ஊளையும் காட்டுக் கோழி அலப்புவதும் அடங்கிய சமயத்தில், குடிசைக்கு வெகு அருகாமையில் செடி கொடிகள் மிதிபடும் ஓசையும் கிளைகள் முறியும் ஒலியும் கேட்டன. திடுதிடுவென்று பெருநடை நடக்கும் காலடியோசைகள் கேட்டு வள்ளி திடுக்கிட்டு விழித்தாள்.

கதவைத் திறக்க வேண்டுமென்று விளக்கைப் பெரிதாக்கினாள். லாந்தர் வெளிச்சம் குடிசைக் கூரை ஓலைகளில் கசிந்து வெளியே தெரிந்தது.

''வள்ளி'' வெளியே படுத்திருந்த தம்புசாமி குரல் கொடுத்தான்.

''முளிச்சுக்கிட்டுத்தான் இருக்கியா? ஆனை நடமாட்டம் கேக்குதா?''

''கேக்குது. நீ வெளக்கை எறக்கு.''

''கதவைத்திறந்து விடறேன். நீ உள்ளார வந்துடு.''

''மக்கு.. வாய மூடிட்டுப் படுத்திரு. கொரல் குடுத்தே. ஆனை நம்ப பக்கம் திரும்பிடும்.''

''சுடப் போறியா?''

''ஸ்ஸ்ஸ—''

அவன் அதட்டி வாய் மூடு முன் பயங்கரமான பிளிறல் ஓசை கேட்டது. அருகில் பத்தடி தூரத்தில். அந்த ஓசை இருளில் எதையோ துழாவித் துழாவி ஆராய்வது போல் கடந்து போய் எதிர்மலையிலிருந்து எதிரொலி வந்தது.

தம்புசாமி நாட்டுத் துப்பாக்கியை எடுத்தான்.

தற்காப்புக்காக அதை எச்சரித்து விலக்குவதற்காகத்தான் அவன் துப்பாக்கி வாங்கி வந்திருந்தான். அதைத் தோளருகே உயர்த்தும் போது மறு பிளிறல் ஓசை வந்தது.

அருகே நாலடி தூரத்தில் குடிசை ஓரம் நின்ற வேப்பமர நிழலில் இருளோடு இருளாக நின்றது யானை.

இனி சுடுவது மடமை. அதற்கு உயிர் போகும். அல்லது வெறியில் அது தன் மீது பாய்ந்தாலும் பாய்ந்து விடும். குறி தப்பி விட்டால் அதற்கு என்ன கோபம் வரும் என்று சொல்லவே வேண்டாம்.

உயர்த்திய துப்பாக்கியை ஓசையின்றி, அதிக அசைவின்றி அவன் தாழ்த்தினான். திண்ணை ஓரமாக நகர்த்தி ஒதுக்கினான்.

யானை நிற்கிற நிழலுருவம் தெரிந்தது. அது தன்னையே பார்க்கிறதா என்றுதான் தெரியவில்லை.

''நீ உள்ளே வர மாட்டே?'' என்று குடிசைக்குள்ளிருந்து பயத்தோடு வள்ளி கேட்பது காதில் விழுந்தது.

அருள்வாக்கு

கர்மம் செய்கிறவனிடம் பகவான் பிரீதி அடைவானா, பூஜை செய்கிறவனிடம் பிரீதி அடைவானா? ஒரு பிரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் வேலை எதுவும் செய்யாமல், அந்தப் பிரபுவை ஸ்தோத்திரம் செய்து கொண்டே இருக்கிறான். இன்னொருவன் வெகு நேர்த்தியாக வேலை செய்கிறான். என்றாலும் அந்தப் பிரபுவிடம் துளிக் கூட அன்போ, பாசமோ காட்டாமல் வேலையை மட்டும் கவனிக்கிறான். சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு அருகில் நின்று ஸ்தோத்திரம் பண்ணுகிறவன்தான் பிரபுவின் பிரீதிக்குப் பாத்திரமாக முடியும் என்று தோன்றும். பிரபு அசடாக இருந்தால் இப்படியே நடப்பான். ஆனால் அவன் புத்திசாலியாக இருந்தால் கண்ணில் புடாமல் வேலை செய்கிறவனிடமே அதிகப் பிரியத்துடன் இருப்பான். ஈசுவரன் அசட்டுப் பிரபு இல்லை. தன்னை ஸ்தோத்திரம், பூஜை செய்கிறான் என்பதால் மட்டும் ஒருவனுக்கு அவன் அநுக்கிரகம் செய்துவிட மாட்டான். தான் விதித்த கர்மங்களைச் செய்கிறவர்களிடமே அதிக பிரீதி கொள்வான். ஆனாலும் அந்தக் கர்ம மார்க்கக்காரன் மனசில் அன்பே இல்லாமல் 'வெட்டு வெட்டு' என்று வேலை மட்டும் செய்தால், அவன் பகவத் பிரீதியின் ஆனந்தத்தைப் பூரணமாக அநுபவிக்க முடியாது. 'இது பகவான் செய்த லோகம். சர்வலோக ராஜாவான பகவானின் குடிமக்களே ஜனங்கள் அத்தனை பேரும். நாமும் அவனுடைய பிரஜை. எனவே, இவர்களெல்லாம் நம்மைச் சேர்ந்தவர்கள்; நம் சகோதரர்கள். ராஜாவாக இருக்கிறதோடு, அவனே நம் அம்மையும் அப்பனும். நாம் அத்தனை பேரும் அவனுடைய குழந்தைகள்; ஆதலினால் ஒருத்தருக்கொருத்தர் சகோதரர்கள். இத்தனை குழந்தைகளும் இருக்கிற ஜன சமூகக் குடும்பம் ஒற்றுமையாக, சௌஜன்யமாக வாழவேண்டுமென்றே நமக்கு வேத தர்மம் வெவ்வேறு காரியங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. அதை நம்முடைய சொந்த ஆசைகள், லாபங்களை நினைக்காமல் செய்து, பகவானின் குடும்பம் ஒழுங்காக நடக்கச் செய்வதே நம் கடமை' என்ற உணர்ச்சி உண்டானால்தான் நாம் செய்கிற கர்மம் துளிக்கூடக் குறைவு, ஒழுங்கீனம் இல்லாமல் சரியாக இருக்கும். இந்த உணர்ச்சி வருகிறபோது, அதிலேயே ஈசுவர பக்தியும் உட்புகுந்து நிற்கும். இப்படி பக்தி உணர்வோடு கர்மம் செய்தாலே பகவத் கிருபையைப் பூரணமாகக் கிரகிக்க முடியும்.



– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அவன் பதிலளிக்கவில்லை. எந்த ஓசையுமின்றி மெதுவாகக் கால் நீட்டித் திண்ணை மீது முதுகைச் சாய்த்துப் படுத்தான். இதயம் பதைக்கிற பதைப்பே அவனைக் காட்டிக் கொடுத்து விடும் போல் அவ்வளவு பயம் தந்தது.

யானை மெதுவாக நகர்ந்து வருவது தெரிந்தது. திம்திம்மென்று பூமி அதிரும் ஓசை கேட்டது. வேப்பமரத்தின் நிழல் மறைவை விட்டு, தும்பிக்கையை வளைத்துப் பெரிய காதுகளை விசிறி விட்டவாறு தலையை ஆட்டிக் கொண்டே அது நெருங்கி வந்தது. பின்னிலவு ஒளியில் அதன் கண்கள் மின்னுவதைக் கூட தம்புசாமி கவனித்தான்.

அப்புறம் சலனமற்றிருக்க வேண்டும் என்பதற்காகக் கண்களை மூடிக் கொண்டான். பயம் ஒரு முறுக்குக் கயிறு போல் தொண்டையையும் மார்பையும் பின்னி இறுக்குவதை அவன் உணர்ந்தான். அதை மீறி அதன் ஊடே ஒன்றும் நடக்காது என்று நம்பிக்கையின் நடுச்சரடு ஓடிற்று.

யானை குடிசையை நெருங்கிற்று.

அதன் முதுகு பட்டுக் கூரை மூங்கில்கள் கலகலத்தன.

திண்ணையில் அவன் படுத்திருப்பதைக் கண்டு அது நின்றதோ என்னவோ! பாம்போ ஒரு கையோ முகத்தின் மீது ஊர்ந்து போவது போல் ஈரமும் மிருதுவுமான ஒரு தசைப் பகுதி தன் முகத்தைத்

தடவிக் கழுத்து வரை நகர்ந்ததை தம்புசாமி உணர்ந்தான்.

அது துதிக்கை. புரிந்தது. அவன் அசைய வில்லை. பயம் தன் உச்சகட்டத்தை எட்டி விளிம்பு தொட்டு விட்டது. இனி ஒன்று மில்லை.

அந்தத் துதிக்கையால் வாரித் தூக்கி எறியப்பட்டு மிதிபட்டாலும் மிதிபடலாம். அல்லது ஒன்றும் நடக்காமலும் போகலாம்.

மரணம் என்பது என்னவென்று புரிந்து கொள்கிற விளிம்பு வந்து விட்டால் பயம் மாண்டு போகிறது.

அவன் துதிக்கையால் உயர்த்தித் தூக்கப்பட்டுக் கீழே தரையில் வீசப்பட்டு, பெரிய கர்டர் ஒன்று தன் மார்பை மிதிக்கப் போகிற அனுபவத்திற்கு மனசைத் தயார்ப் படுத்தினான்.

யானை நின்று கொண்டே இருந்தது. பின்பு என்ன நினைத்ததோ நகர்ந்தது. கதவருகில் நின்றது. அது கதவை முட்டி யிருக்க வேண்டும். கதவின் கீல்கள் கிறீச் சிட்டுப் பிளந்தன. தாழ்ப்பாள் பிய்த்துக் கொண்ட ஒலி கேட்டது.

உள்ளிருந்து வீல் என்று அலறினாள் வள்ளி.

''அட மூடமே!'' என்று மனசில் சபித்துக் கொண்டே துப்பாக்கியைத் தொட்டான் தம்புசாமி.

மீண்டும் இதயம் வெடித்துப் போவது போல் அது பிளிறியது.

குடிசைக்குள் அது நுழைந்தால் சுட்டு விடுவது என்று தீர்க்கமான முடிவுக்கு வந்தான் தம்புசாமி.

ஆனால் யானை உள்ளே நுழைய வில்லை.

அந்த அலறல் ஓசையைக் கேட்பது போல் அது நின்றது. ஓரிரு நிமிடத்தில் அது அவன் குடிசையைக் கடந்து செல்லும் பெரிய காலடியோசைகள் கேட்டன.

மறுநாள். ''உன் குடிசைக்கு ஆனை வந்துதாமே!'' என்று கேட்டவாறு வந்தான் சொக்கப்பன்.

தச்சனை அழைத்துப் பிய்ந்து போன தாழ்ப்பாள் பூட்டைச் சரிசெய்ய வேண்டு மென்று வெளியே கிளம்பிக் கொண்டி ருந்தான் தம்புசாமி.

''என்னமோ கதவைத் தாப்பாப் போட்டு உள்ளே படுத்துக்கச் சொன்னியே, என்ன ஆயிருக்கு பாரு'' என்று கதவைக் காட்டினான்.

சொக்கப்பன் பிய்ந்து போயிருந்த தாழ்ப்பாளையும் கீலையும் மேலும் கீழும் பார்த்தான்.

''ஆமா வேட்டைக்காரக் கவுண்டர் கிட் டேர்ந்து துப்பாக்கி வாங்கி வச்சிருந்தியே.. அதைச் சுட்டுற வேண்டியதுதானே!''

ஒன்றும் சொல்லாமல் சிரித்தான் தம்பு சாமி.

''என்னா சிரிக்கிறியே?''

இருவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு வள்ளி குறுக்கிட்டாள்.

''சுட்டிருந்தா அது யார் மேலயாவது திரும்பிட்டிருக்கும் அண்ணா!''

''அட, வூட்டை வுட்டு நவுந்து போனப் பறமாவது சுட்டுட்டிருக்கக் கூடாது?''

''இவங்க அப்படியெல்லாம் சுட மாட்டாங்க அண்ணா!'' என்றாள்.

சட்டென்று திரும்பி வள்ளியின் கண் களைச் சந்தித்தான் தம்புசாமி.

அவள் தன்னை எவ்வளவு நுட்பமாக உணர்ந்து வைத்திருக்கிறாள் என்று பாராட் டுவது போலிருந்தது அந்தப் பார்வை.

''எத்தினி பேருக்கு எவ்வளவு காபரா! சுட்டிட்டிருக்கணும்மா.''

வள்ளியோ தம்புசாமியோ ஒன்றும் சொல்லவில்லை.

''இனிமேலயும் கூட திண்ணையிலே தான் படுக்கையா?''


''பளகிப் போச்சு சொக்கா, மாத்திக்க முடியாது. ஆனையச் சுட்டுடணும்ங்கறே.. அது என்ன பண்ணுச்சு எங்களை? பேசாம வுட்டுட்டுப் போயிடுச்சு'' என்றான் தம்பு சாமி.

அவனால் ஒன்றைச் சொக்கப்பனிடம் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை. இணையை இழந்து விட்டு அலைக்கழிந்து செல்லும் அந்த ஆண் யானையின் தவிப்பு தனக்குள் என்ன வேதனையை ஏற்படுத் தியது என்பதுதான் அது! ஒருவேளை யானை, தனக்கு நேர்ந்தது இந்தத் தம்பதிக்கு நேர்ந்து விடக் கூடாது என்று எண்ணித்தான் பேசாமல் திரும்பிப் போய் விட்டதோ என்று கூட எண்ணியது தம்புசாமியின் மனம்!

''தெரியாமல் லஞ்சம் வாங் கிட்டேன் சார்... என்னை மன்னிச் சிடுங்க, ப்ளீஸ்..''

மானேஜர் : ''எனக்குத் தெரியா மல் வாங்கினதுக்காகத்தானே இந்த மெமோவே...!''

- சீர்காழி வி. ரேவதி.





☛ டிக்கெட்டில் படம் ?

நேசமணி பேருந்து டிக்கெட்டில் 'ஜெ' படம்?



☛ ஏற்கத் தக்க கருத்து!

◎ ஆர். எஸ். கண்ணன், சிதம்பரம்.

? வக்கீல் துரைசாமி குடும்பத்தில் மகனுக்கோ மகளுக்கோ, ராஜீவுக்கு நேர்ந்தது போல் நேர்ந்திருப்பின் துரைசாமி கொலையாளிக்கு வாதாட முன்வருவாரா?

! ஜனநாயக நாட்டில் ஒருவன் எப்பேற்பட்ட கொடிய குற்றம் புரிந்திருந்தாலும் அவன் தன் சார்பில் வழக்காட ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறான். அவன் சார்பில் யாரும் வாதாட முன்வராவிட்டால், கோர்ட்டாரே ஒரு வழக்கறிஞரை அவனுக்காக நியமிக்க வேண்டும் என்பது சட்டம். அப்படி வழக்காட வரும் வழக்கறிஞர் தமது ஆற்றலையெல்லாம் திரட்டி அவனுக்காக இயன்ற மட்டில் வாதாட வேண்டியது அவர் கடமை. எனவே ராஜீவ்காந்தி கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் ஒரு வக்கீல் ஆஜராவதிலோ வாதாடுவதிலோ குற்றம் ஏதும் இல்லை. அநீதி ஏதும் நிகழாமல் கவனித்துக் கொள்வது நீதிபதி பொறுப்பு. ஆக, உங்கள் கேள்வி விதண்டாவாதமானது. துரைசாமி குடும்பத்தில் நீங்கள் குறிப்பிடுவது போன்று ஏதும் அசம்பாவிதம் நிகழ்ந்திருந்தால் குற்றவாளி சார்பில் துரைசாமி வாதாட மாட்டார்; ஆனால் அந்தக் குற்றவாளி சார்பில் வேறு ஒரு வக்கீல் வழக்காடுவதைத் துரைசாமியால் தடுக்க முடியாது.

◎ டி. தாழை பிரபு, குடியாத்தம்.

? 'காவிரி நீர்ப் பிரச்னை தீரும் வரை தாடி எடுக்க மாட்டேன்' என்று சிவாஜி கூறியுள்ளாரே?

! இந்தப் பிரச்னையில் அவரால் முடிந்தது அவ்வளவுதான் போலும்!

◎ த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? சமீபத்தில் திகைக்க வைத்த விஷயம்?

! நூறு சதவிகிதக் கல்வியறிவு பெற்ற கோட்டயம் நகரில் ஒரு சேரி கூட இல்லாமல் சுத்தமாக்கிய பி. ஜே. அல்ஃபோன்ஸ், 'பம்பாய் தாராவியைக் கூட இப்படி மாற்ற முடியும்' என்று நம்பிக்கையோடு கூறியிருப்பது.

◎ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? காவிரி நீர்ப் பிரச்னையில் சுமுகமான தீர்வு ஏற்பட பூம்புகாரிலிருந்து தலைக் காவேரி வரை பாத யாத்திரை செல்லப் போவதாக சுப்பிரமணியம் சுவாமி அறிவித்துள்ளாரே?

! அவருக்கு அவ்வப்போது பேப்பரில் பெயர் வந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் தலை வெடித்து விடும்! அதற்காக ஸ்டண்ட் சுவாமி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார். சொல்வது தான் சொல்கிறார், புதுமையாக, தலைகீழாகக் கையால் நடந்து போகப் போவதாகக் கூறியிருக்கலாம்.

◎ டி. பி. உமா, மைசூர்.

? கிருஷ்ணராஜ சாகருக்குக் குண்டு வைப்பதற்காக விடுதலைப் புலிகள் கர்நாடகம் முழுதும் வந்து தங்கியிருப்பது சரியா? இங்கு இருப்பவருக்குத் தமிழர் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. விமோசனம் என்ன?

! விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறவர்கள் சில தமிழர்கள் மட்டும் அல்ல, சில கன்னடிகர்களும் கூட என்று நாளிதழ் செய்திகள் கூறுகின்றன. இதை நன்கு கவனித்தால் இதில் தமிழர் - கன்னடியர் என்ற பிரச்னை எழவில்லை

☛ திரு. வி. க. விருது



☛ ஸ்டண்ட் சுவாமி !



என்பது புரியும். ஒன்று விடுதலைப் புலிகளின் பொய்ப் பிரசாரத்தில் மயங்குகிறார்கள்; அல்லது அவர்கள் அள்ளி வீசும் பணத்துக்கு அடிமையாகிறார்கள்; அவ்வளவே. விமோசனம் என்னவென்றால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போலீஸ் நடவடிக்கைகளை எடுப்பதுடன் அவர்களது பிரசாரத்தை முறியடிக்க அரசு எதிர்ப் பிரசாரம் செய்வதுதான். கூடவே இலங்கைத் தமிழர் பிரச்னை சுமுகமாய்த் தீர, இந்திய அரசு இருதரப்பிலும் தனது செல்வாக்கைச் செலுத்தவும் வேண்டும்.

○ லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்)

? 'ஜெயலலிதாவின் முகத்தை உற்றுப் பார்த்தால் அதிலே எம். ஜி. ஆர். முகத்தைக் காணலாம்' என சபாநாயகர் கூறுகிறாரே?

! பசு மாட்டின் கண்ணிலேயே எம். ஜி. ஆரைப் பார்த்தவர்கள்தானே நாம்! சேடப்பட்டியார் ஜெ.யின் முகத்தில் எம். ஜி. ஆரைக் காண்பதில் வியப்பென்ன!

○ மேஜர் தாசன், ஈரோடு.

? இவ் வருடம் திரு.வி.க. விருது ராஜம் கிருஷ்ணனுக்குக் கிடைத்திருப்பது குறித்து?

! அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்ட போது ''ஊசியும் உணர்வும்'' என்ற தமது சிறுகதைக்காக இங்கு பரிசு பெற்று, அக் கதை உலகளாவிய போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பெண் குரலும் வளைக்கரமும் படைத்த லட்சிய எழுத்தாளர் அவர். பெண்மையைப் போற்றிய திரு.வி.க. பெயரால் வழங்கப்படும் பரிசு, முதல் தடவையாக ஒரு பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது.

○ ப. இராம் முருகன், சிவகங்கை.

? நேசமணி பேருந்துகளின் டிக்கெட்டில் ஜெயலலிதா படம் அச்சிடப்பட்டுள்ளதாமே?

! இது உண்மையானால் வியப்படைவதற்கில்லை. ஜால்ரா தட்டும் அதிகாரிகள் எங்கும் எப்போதும் உண்டு.

○ சிவ. சீனிவாசன், சென்னை.

? சிவராசன் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதன் மர்மம்?

! சயனைட் முறிவு மருந்து ஸி. பி. ஐ. இடம் தயாராக இருக்கும் என்று அனுமானித்தது காரணமாக இருக்கலாம்.


○ சத்ய சூர்யா, திருவெண்ணெய்நல்லூர் *

? India's Rajiv நிகழ்ச்சியைக் கூட விளம்பரங்களின் பின்னணியில் பார்க்க வேண்டியிருக்கிறதே?

! அது கூடப் பரவாயில்லை; பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் கட்சி அரசியல் பின்னணியில் பார்க்க வேண்டியிருப்பதுதான் சங்கடப்படுத்துகிறது. அரசியலில் அவருடன் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களைக் கேவலப்படுத்தித்தான் அவரை உயர்த்த வேண்டுமா என்ன!



☛ துப்பாக்கி ஏன் ?



☛ அவரால் முடிந்தது…

○ ஜெய் சிராஜ், சீர்காழி.

? 'கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது நிரூபணமானால் அப் பகுதியின் சப் இன்ஸ்பெக்டர் வேலை நீக்கம் செய்யப்படுவார்' என்று முதல்வர் அறிவித்துள்ளாரே?

! கிராம அதிகாரிகளையும் இதற்குப் பொறுப்பாக்கி இதே தண்டனை விதிப்பதாகக் கூறியுள்ளார். இவ்வளவு சீரிய சிந்தனையை உலகத் தலைவர் வேறு யாரிடமும் காண முடியாது. இதே அடிப்படையில் குமாஸ்தா தவறு செய்தால் அதிகாரி பதவி நீக்கம் செய்யப்படலாம். அதிகாரி தவறு செய்தால் அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்படலாம். அமைச்சர் தவறு செய்தால் முதல்வர்... ஊஹூம், மூச்!

○ எஸ். நாராயணன், திருப்பாதிரிபுலியூர்.

? பிணைக் கைதியாக இருந்து விடுதலை பெற்ற ஐ. ஓ. ஸி. துரைசாமி, காஷ்மீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்கிறாரே?

! பயங்கரவாதிகளுடன் போராடி வெற்றி பெற முயற்சி செய்வதைவிடப் பேச்சு வார்த்தை மூலம் வெற்றி பெற முயல்வது நல்லது என்ற அவர் கருத்து ஏற்கத்தக்கதே. தோளில் துப்பாக்கியைச் சுமந்தாலும் கரத்தைக் கைகுலுக்க நீட்டிப் பார்ப்பதில் தவறில்லை.

○ வீ. சோழன், செம்போடை.

? யெல்த்சினைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! வயிற்றுக்கு உணவை விட உள்ளத்துக்கு விடுதலை உணர்வு முக்கியம் என்ற சூட்சுமத்தைப் புரிந்து கொண்டவர். அதனால் தான் சதி பண்ணிப் பதவிக்கு வந்தவர்கள், 'கார்பசோவ் ஆட்சியில் பஞ்சம், கஷ்டம், உணவில்லை' என்றெல்லாம் பிரசாரம் பண்ணியும் பயனில்லாது போயிற்று. இந்தப் பிரசாரத்தையும் சதித் திட்டத்தையும் மக்கள் ஆதரவுடன் யெல்த்சினால் முறியடிக்க முடிந்தது.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
(சத்யசூர்யா)
அம்பிகா தாமோதரன்,
1, சன்னதி வீதி,
திருவெண்ணெய்நல்லூர் - 607 203.



அம்சவல்லி இன்னும் வரவில்லை...

பஸ்கள் ஓடவில்லை. டவுன் பஸ், ரூட் பஸ் எதுவுமே...

திடீர்ப் போராட்டமாம்.

பஸ் வராத அந்த பஸ் ஸ்டாப்பில், ஒரு கல்யாணப் பெண்ணின் தந்தை, சின்னஞ் சிறு அரும்புகளுக்குப் பசியாற்ற வேண்டிய தாய் - இப்படி எத்தனையோ அப்பாவி மனிதர்கள் பஸ்ஸுக்காகத் தவம் கிடந்தார்கள்.

தாம் பிறந்த சொந்த மண்ணிலேயே, அகதிகளைப் போல் தவித்துக் கொண்டி ருந்த அப் பரிதாபக் கும்பலில் அம்சவல்லி யும் ஒருத்தி.

இங்குள்ள - டவுனிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பேரு ராட்சி- கார்மண்ட்ஸ் பாக்டரியில் அவ ளுக்குத் தையல் வேலை. ஆறு மணி வரை 'ஓவர் டைம்' பார்த்து விட்டு எப்போதும் போல் பஸ் பிடிக்க வந்தவளுக்கு இப்படி ஓர் எதிர்பாராத அதிர்ச்சி.

அதே சமயம், உரிமை கலந்த ஆத்திர மும் அவளுக்கு உண்டாயிற்று.

காரணம் - அவளது அண்ணன், வேதையன். போக்குவரத்துக் கழகத்தில் கண்டக்டராக இருக்கிறான். அத்துடன், தொழிற்சங்கத்திலும் அவன் ஒரு பிரதிநிதி.

அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். அதனால்தானோ என்னவோ - அப்பாவின் ஸ்தானத்தையும் சேர்த்து அம்சவல்லியிடம் மிகுந்த பாசம் வைத்திருந்தான், வேதையன்.

அத்தனை பிரியத்துக்குரிய தங்கைதான் இப்போது பத்திரமாய் வீடு திரும்ப வழி இல்லாமல் பரிதவித்துக் கொண்டிருந்தாள்.

இவள் மட்டுமா. இப்படி நூற்றுக் கணக்கான தங்கையர்கள் ஸ்டாப்புக்கு ஸ்டாப் நின்று தவித்துக் கொண்டிருந் தார்கள்.

அப்படி என்ன தகராறு?

அன்று மாலை ஐந்து மணி இருக்குமாம். டவுன் - பிரதான பகுதி ஒன்றில், மப்டியில் இருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் டவுன் பஸ் ஏறி இருக்கிறார்கள். கண்டக்டர் அவர் களை டிக்கெட் வாங்கும்படி சொல்ல, அவர்கள், 'நாங்கள் கான்ஸ்டபிள்ஸ். டிக்கெட் வாங்க மாட்டோம்' என்று மறுக்க, வாக்குவாதம் முற்றி வாய்ச் சண்டையாகி விட்டது. முடிவில், 'யூனிபாரத்தில் வந்தால் தான் அச் சலுகை. சிவில் டிரஸ்ஸில் வந்தால் கிடையாது' என்று விடாப்பிடியாய் அவர் களை இறக்கி விட்டு விட்டார், கண்டக்டர்.

கான்ஸ்டபிள்களுக்கு அது கௌரவப் பிரச்னையாகி விட்டது. விளைவு? ஏழெட்டுப் பேர் சேர்ந்து வந்து கண்டக்ட ரையும், டிரைவரையும் நையப் புடைத்து விட்டார்கள்.

அதன் எதிரொலிதான் இந்தப் பஸ் நிறுத்தப் போராட்டம்.

மாவட்டத் தலைநகர் ஆனதால், அதற்குப் பரிகாரம் காண வேண்டிய கடமை யில் கலெக்டரேட் பரபரப்படைந்தது.


பிரதான அதிகாரிகளையும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அவசரமாய்க் கூட்டிச் சமரசம் பேசினார், மாவட்ட கலெக்டர்.

மணி ஒன்பது.

தொலை தூரம் போக வேண்டிய கிராமத்துப் பிரயாணிகள் கடை ஓரங்களில் துண்டை விரித்துப் படுத்துக் கொண் டார்கள். பேண்ட் அணிந்த பேர்வழிகள் லாரி, ஸ்கூட்டர்களில் 'லிப்ட்' கேட்டுச் சிதறிப் போய் இருந்தார்கள். நைப்பாசை யாலோ அல்லது மாற்று வழி புலப் படாமலோ அங்கே மிச்சப்பட்டவர்கள் ஏழெட்டுப் பிரயாணிகள்தாம். அவர்களில் கொட்டை எழுத்தில் வரும் தலைப்புச் செய்தி மாதிரி பளிச்சென்று தெரிந்தாள் அம்சவல்லி. அழகும், இளமையும் அவ ளிடம்தானே இருந்தது.

அதுவே அவளுக்குப் பெரும் அச்சத் தைக் கொடுக்க, தன்னுடன் பணிபுரியும் சகதொழிலாளர்ப் பெண்களின் வீட்டுக்

தமிழினியன்



காவது போக நினைத்தாள், அம்சவல்லி. ஆனால், முகவரி தெரியாதே.

குழப்பம் நிறைந்த சங்கடத்துடன் இடப்பக்கம் திரும்பினாள், அவள். மேலும் ஓர் அதிரடி.

கட்டம் போட்ட சட்டையுடன் ஒரு தடியன். சைக்கிள் கடை வாசலில் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

யார் இவன் ? ஏன், அப்படிப் பார்க்கிறான் ?

ஐந்து நிமிடம் கழிந்தது. மறுபடியும் கவனித்தாள்.

ஊஹூம். அவன் அசையவில்லை. அவனது பார்வை கொக்குக்குக் கண்ணி வைத்தவன் போல் அவளிடமே உறைந்திருந்தது.

'கடவுளே.. இவனிடமிருந்து எப்படியாவது தப்ப வேண்டுமே. யார் உதவிக்கு வருவார்கள். இக்கட்டான இந்த நேரத்தில் யாரைப் போய் உதவி கேட்க முடியும்' தவியாய்த் தவித்தாள், அம்சவல்லி.

அப்போது, ஆட்டோ ஒன்று அவளுக்கு முன்னால் வட்டமடித்து வந்து நின்றது.

''நீங்கள் கார்மண்ட்ஸ் கம்பெனியில் தானே வேலை செய்கிறீர்கள்'' என்று நன்கு தெரிந்தவன் போல் அவளை விசாரித்தான், ஆட்டோவில் இருந்தவன்.

முன்பின் தெரியாத ஒருவனுக்குத் தான் பதில் சொல்லத் தேவை இல்லை என்றுதான் முதலில் நினைத்தாள், அம்சவல்லி. பிறகு என்ன நினைத்தாளோ, ''ஆமாம்'' என்று தலையசைத்தாள்.

''நான் உங்களை ஏழு மணியிலிருந்தே கவ னிக்கிறேன். டவுனில் நடக்கும் பேச்சு வார்த்தை இன்னும் முடியலையாம். அதனால் இனி எந்தப் பஸ்ஸூம் வராது. நீங்கள் டவுனுக்குத்தானே போக வேண்டும்.''

''ம்.''

''நானும் இப்போது டவுனுக்குத்தான் போகிறேன். ஆட்டோ கிடைக்காமல் இப்பத்தான் இந்த ஆள் அகப்பட்டான். இஷ்டமிருந்தால் நீங்களும் இந்த ஆட்டோவில் வரலாம்...''

அம்சவல்லி, ''வேண்டாம்'' என்றாள், வீராப்புடன்.

''வேண்டாம் என்றால் சரி. நான் ஒன்னும் உங்களை வற்புறுத்தப் போவ

குவிஸ் டைம் விடைகள் :

1. சுமார் 800 கி. மீ. தமிழகத்தில் 416 கி.மீ.

2. ஹேமாவதி, ஹரங்கி, லக்ஷ்மண தீர்த்தம், கபினி, ஸ்வர்ணவதி, பவானி, அமராவதி, நொய்யல்.

3. சென்னை அரசாங்கத்துக்கும், மைசூர் தர்பாருக்குமிடையே, 1890-ல் கையெழுத் தானது.

4. மேட்டூர் அணை, கிருஷ்ண ராஜசாகர் அணை.

5. 1970-ல்.

6. நீதிபதி சிட்டதோஷ் முகர்ஜி. பம்பாய் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி.

7. இடைக்கால நிவாரணமாய்க் கர்நாடகம், தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டும்.

தொகுப்பு : மௌலி

தில்லை. ஆனால்... இன்னும் கொஞ்ச நேரத்தில் கடைகளை எல்லாம் மூடிடு வாங்க. ஒண்டியாளா என்ன பண்ணுவீங்க. உங்களுக்கு என்ன பாதுகாப்பு? அதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்...'' மிகவும் பவ்யமாகப் பேசினான், அந்த வாலிபன்.

'வேண்டாம்... போகாதே' என்றுதான் அவளது உள்மனம் எச்சரித்தது.

ஆனால், சூழ்நிலை... அவனது பேச்சை நியாயப்படுத்தியதே! தவிர, அந்தக் கட்டைத் தடியன் வேறு அவளைப் பய முறுத்திக் கொண்டிருந்தான்.

அம்சவல்லிக்கு ஆட்டோவில் ஏறுவதைத் தவிர வேறு வழி இல்லை. மௌனமாய் ஏறி, நனைந்த ஆட்டுக் குட்டி போல் ஓர் ஓரமாய் அமர்ந்து கொண்டாள், அவள்.

ஆட்டோ புறப்பட்டது. ஊர் எல்லையைக் கடந்ததும்,

அவன் திரும்பினான், திருட்டு முழியுடன்.

''உன் பேர் என்ன பொண்ணு.''

அக் கேள்வியிலிருந்த மட்டரகமான தொனி அம்சவல்லியைத் திடுக்கிட வைத்தது.

''அம்... அம்சவல்லி'' என்றாள், தயக்கத்துடன்.

''ஹா... அம்சமான பேரு'' என்று பாராட்டிக் கொண்டே அவளை மேலும் நெருங்கினான், அவன். பெரும் ஆபத்தில் சிக்கிக் கொண்டோம் என்பதை அப்போது தான் உணர்ந்தாள், அம்சவல்லி.

கலெக்டரேட்டின் கான்ஃபரன்ஸ் கூடம் மும்முரமாய் விவாதித்துக் கொண்டிருக்க, தேசப் பிதாவின் பக்கத்திலிருந்த கடிகாரம் பதினொரு முறை அடித்து ஓய்ந்தது.

''அந்த இரண்டு போலீஸ்காரர்களும் யூனிஃபாரத்தில் வந்திருந்தால் பிரச்னையே வந்திருக்காது, சார்'' என்றான், வேதையன்.

''உண்மைதான். ஆனால், சீருடையில் வந்தாலும், சிவில் டிரஸ்ஸில் வந்தாலும் கான்ஸ்டபிள், கான்ஸ்டபிள்தானே'' என்றார் டி.ஐ.ஜி.

''அது கண்டக்டருக்கு எப்படி சார் தெரியும்?''

''சொன்னதை வைத்து நம்பலாமே'' என்றார், கலெக்டர். ''இரவு பகல் பாராமல் நம்மைப் பாதுகாக்கும் அந்த ஊழியர்களை ஐம்பது காசுக்கு நம்பக் கூடாதா. அல்லது நாமேதான் ஐம்பது காசை விட்டுக் கொடுக்கக் கூடாதா?''

''நம்புவது.. விட்டுக் கொடுப்பது எல்லாம் அப்புறம், சார். இப்போது எங்களைத் தாக்கிய அந்தக் கான்ஸ்டபிள்கள் மீது உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அது முடியுமா... முடியாதா'' என்று மேசை மீது ஓங்கி அடித்துக் கேட்டார், சங்கத் தலைவர்.

''நிச்சயம் முடியும். எடுக்கத்தான் போகிறோம். ஆனால்.. நல்லதோ, கெட்டதோ எதுவாயினும் அந்தந்த நிர்வாகத்தின் விதிமுறைகளை ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்க முடியும். அதற்குத்தான் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள் என்று உங்களைக் கேட்கிறோம்'' என்று தணிந்த குரலில் பேசினார், கலெக்டர்.

''என்னப்பா, வேதையா. கலெக்டர் சுத்திச் சுத்தி என்னத்தையோ பேசிக் கொண்டிருக்கிறார். நாமும் அதைக் கேட்டுக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம். பசி, வயிற்றைக் கிள்ளுது. வீட்டுக்குப் போகலாம்பா'' என்றனர் தொழிலாளர்கள்.

''ஆமாம், சார். நாழியாகி விட்டது. நாளைக்குப் பேசுவோம்'' என்று எழுந்தான், வேதையன். அவனைத் தொடர்ந்து எல்லாரும் எழுந்தனர்.

மணி 11.30.

''அம்சவல்லி'' என்று அழைத்த வண்ணம், வீட்டுக்குள் நுழைந்தான், வேதையன்.

''அம்சவல்லி இன்னும் வரலைப்பா!'' அச்சம் நிறைந்த கண்களுடன் மகனை எதிர்கொண்டாள், அவனது தாய்.

''அம்சவல்லி இன்னும் வரலையா... ஏன்?'' பதறினான், அவன்.

''பஸ் ஓடலையாமே.''

அப்போது, வாசலில் ஓர் ஆட்டோ வந்து நின்றது.

''அண்ணா...''

அம்சவல்லியின் குரல். அவள்தான் உள்ளே ஓடி வந்தாள்.

''அம்மா அம்சவல்லி வந்துட்டியாம்மா. நல்லபடியா வந்துட்டியா?'' என்ற பரவசத்துடன் அவளைப் பார்த்தான்.

மறுகணமே திகைத்தான்.

''என்னம்மா, இது. புடைவை கிழிந்திருக்கிறது?''

அம்சவல்லி ஒரு விரக்திச் சிரிப்புடன், நடந்தவற்றை அப்படியே விவரித்தாள்.

''என்னம்மா, இது. எல்லாம் சினிமா போல் இருக்கிறது. யார் அந்த ஆள்? தெய்வம் போல் வந்து உன்னைக் காப்பாற்றிய அந்த தெய்வப்பிறவி எங்கே அம்மா?'' கடைவிழியில் துளித்தக் கண்ணீரைத் துடைத்தபடி கேட்டான், வேதையன்.

''அவர், ஆட்டோவில் இருக்கிறார் அண்ணா. அந்த மிருகத்துடன் சண்டை போட்டதில் காலில் அவருக்குப் பலத்த அடி. அவரால் நடந்து வர முடியாது.''

''வாம்மா, பார்க்கலாம்.''

வாசலுக்கு விரைந்தனர் அண்ணனும், தங்கையும்.

''ஐயா, உங்கள் உதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. என் தங்கையைக் காப்பாற்றிய உங்களை, உயிருள்ள வரை மறக்க மாட்டேன்'' என்று அவன் காலில் விழப் போனான் வேதையன்.

அவனைத் தடுத்து நிறுத்தினான், அவ்வாலிபன்.

''இது என் கடமை, சார். பஸ் ஓடவில்லை என்றால் பொது மக்களுக்குத் திண்டாட்டம். விஷமிகளுக்குக் கொண்டாட்டம். உங்கள் தங்கை தனியே நிற்கிறாள் என்பதை அந்த ராஸ்கல் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டான். ஏழு மணியிலிருந்து வட்டம் போட ஆரம்பித்து விட்டான். ஆனால், அதெல்லாம் இந்தப் பெண்ணுக்குத் தெரியாது.

''அவன் ஆட்டோவில் உங்கள் தங்கையை ஏற்றிக் கொண்டு புறப்பட்டதும் நான் உஷாரானேன். அந்தச் சமயத்தில்... அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். தெரிந்த டிரைவரின் ஆட்டோ கிடைத்தது. எடுத்துக் கொண்டு அவனைத் தொடர்ந்து போனேன். இல்லாவிட்டால் தக்க தருணத்தில் உங்கள் தங்கையை என்னால் காப்பாற்றி இருக்க முடியாது. எப்படியோ என் கடமை முடிந்தது!'' - திருப்தியுடன் புன்னகை செய்தான் அவன். தன் உடம்பை ஒருகணம் பார்த்து விட்டு, ''காலில் ரத்தம் கொட்டிக் கொண்டே இருக்கிறது. வலியும் தாங்க முடியவில்லை. எலும்பு முறிந்திருக்கும் என்று நினைக்கிறேன். உடனே நான் பெரியாஸ்பத்திரிக்குப் போக வேண்டும். வர்றேன்'' என்று விடை பெற்றுக் கொண்டான்.

ஆட்டோ உறுமிக் கொண்டு புறப்பட்டது.

''ஐயா... யார் நீங்கள்? அதைச் சொல்லாமல் போகிறீர்களே'' என்று கத்தினான், வேதையன்.

''நான் ஒரு கான்ஸ்டபிள், சார். மப்டியில் இருக்கிறேன்'' என்று பதிலுக்கு அவனும் கத்திக் கொண்டே போனான்.

''கான்ஸ்டபிளா...'' சுருக்கென்று முள் தைத்ததைப் போல் வாய் பிளந்தான் அவன்.

ஆம். கான்ஸ்டபிள்தான்.

இன்று சாயந்திரம் பஸ் கண்டக்டரை அடித்தவரும் ஒரு கான்ஸ்டபிள். அனாதரவாய் நின்ற ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றியவரும் ஒரு கான்ஸ்டபிள்.

அந்த கான்ஸ்டபிளின் தவறுக்காக ஓடிக் கொண்டிருந்த பஸ்களை நிறுத்தினால், இந்த கான்ஸ்டபிளின் மகத்தான தியாகத்துக்காக பத்து பஸ்களை அதிகம் விடுங்கள் என்று சொல்ல முடியுமா!

''என்ன அண்ணா.., அப்படியே திகைத்து நின்று விட்டாய்'' என்று உசுப்பினாள், அம்சவல்லி.

''சீக்கிரம் கலெக்டரைச் சந்திக்க வேண்டும்'' என்று புன்னகை செய்த அண்ணனை, புதிராய்ப் பார்த்தாள் அம்சவல்லி.

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 21

நேற்று வரை நந்தவனம் தொடர் முடியும் போது ஃபிரிஜ் பரிசைத் தட்டிக் கொண்டு போகப் போவது... யார் கண்டது, நீங்களாகவே இருக்கலாம்! இன்னும் சில அத்தியாயங்களே பாக்கி: கவனமாகப் படிக்கவும். வாரா வாரம் நாங்கள் வேண்டுமென்றே அந்தத் தொடர்கதையில் செய்யும் தவறைக் கண்டுபிடித்து இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்ளவும். கதை முடிந்ததும் 5 - 10 வரி விமர்சனத்துடன் சேகரித்த கூப்பன்கள் அத்தனையையும் அனுப்பவும். மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி கண்டுபிடித்தவருக்கு ஃபிரிஜ் பரிசு எனில், வேறு பலருக்கு ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஒருவருக்கு மேல் மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருந்தால் குலுக்கலில் ஒருவர் தேர்வு. இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட....

தவறு : ____________________

திருத்தம் : ____________________

இதயம்

தொடக்கத்திலேயே சொல்லி விட வேண்டும் - படத்தைக் காப்பாற்றுகிறவர்கள் இருவர் : 1. காமிராக்காரர், 2. இசையமைப்பாளர். முன்னவர் : அப்துல் ரஹ்மான். பின்னவர்: இளையராஜா.

கதாநாயகி : ஹீரா. புதுமுகம். (பெயர்தான் அப்படி. 'சாப்டீங்களா, சாப்டீங்களா?' என்று டீ விளம்பரத்தில் வரும் தமிழ்ப் பெண்தான்.)

அதிகம் வேலையில்லை. முகத்தை மட்டும் திருப்பிப் பார்த்துக் கபடமில்லாமல் கண்களை விரிக்கிறார். வெகுளியாய்ச் சிரிக்கிறார். வசதியாக அதிகம் வசனம் இல்லை. வரவேற்க வேண்டிய அறிமுகம்.

கதாநாயகன் : முரளி. இவருக்கும் அதிகம் வேலையில்லை. காதலிக்கிறார். அந்தக் காதலை வெளியிடத் தயங்குகிறார். அவ்வப்போது கண்ணீர் விடுகிறார்.

அப்படியென்றால் யாருக்குமே வேலை இல்லையா?

ஏன் இல்லை? இருக்கவே இருக்கிறார்கள் புரொபஸர் ஜனகராஜுும் மாணவர் சின்னி ஜெயந்தும். வெளுத்துக் கட்டுகிறார்கள்.

ஓரிரு காட்சிகளில் மனோரமாவும் விஜயகுமாரும். 'ஓல்ட் இஸ் கோல்ட்' என்பது உண்மைதான்.

அவ்வப்போது நாட்டியம் என்கிற பெயரில் (மருத்துவக் கல்லூரி!) மாணவர்கள் ஒரு கோஷ்டியாக இடுப்பையும் கையையும் காலையும் வளைத்து உதறி... சும்மா சொல்லக் கூடாது, நன்றாகவே உடற்பயிற்சி செய்கிறார்கள்.

அது சரி, கதை என்ன?

கதாநாயகன் காதலிக்கிறார். வெளியிடத் தயங்குகிறார்.

அப்புறம்?

காதலிக்கிறார். வெளியிடத் தயங்குகிறார்.

காதலிக்... வெளியிடத்...

காத.... வெளி...

கா.... வெ...

படத்தின் தலைப்புத்தான் கிளைமாக்ஸுும். (தனியாக அதனை நியாயப்படுத்த வேண்டிய சிரமம் இல்லாமல் போனது ஓர் ஆறுதல்.)

''இந்தப் படம் ஓடினாலும் ஓடும்'' என்றார் பக்கத்திலமர்ந்து படம் பார்த்த பாலகுமாரன்.

சொல்ல முடியாது. எழுத்தாளர் வாக்கு... பலித்தாலும் பலித்து விடும்!

- சி. ஆர். கே.



நெஞ்சுவரை நந்தவனம்

23

நிர்மலா, வைத்த கண்ணை எடுக்காமல் ரவியையே பார்த்தாள்.

''என்னங்க, நீங்க என்ன சொல்றீங்கன்னு உங்களுக்கே புரிஞ்சுதான் சொல்றீங்களா?''

''நல்லா யோசிச்சுத்தான் சொல்றேன் நிம்மி. எப்படியும் குமரன், அந்தப் பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கக் கூடாது. பேப்பர்லே எல்லாம் அவன் பேரு சந்தி சிரிக்கணும். எங்கப்பா என்னவோ, மாப்பிள்ளை ரொம்ப உத்தமன்னு நினைச்சிட்டிருக்காரு... அவர் மூஞ்சியில கரிய வாரிப் பூசற மாதிரி - நியூஸ் பேப்பரைக் கொண்டு போய், நான் அவரெதிருல கடாசணும்....''

''அதுக்காக என்னைப் போய்.....''

ரவி, நிர்மலாவின் கரத்தைப் பிடித்து, முத்தமிட்டான். அந்தக் கணத்தில், அவள் காலைப் பிடிக்கவும் அவன் தயாராக இருந்தான்.

''உன்னை விட்டா, வேற யாராலேயும் இதைச் செய்ய முடியாது நிம்மி. என் தங்கமில்லே? யோசிச்சுப் பாரு... கிரானைட் தொழிலுக்கு இன்னும் பணம் தேவைப்படுது. இது வரைக்கும், வருஷம் அஞ்சாகியும் ஒத்தைப் பைசாக் கூட லாபமில்லாததாலே, எங்கப்பா இனிமே என் கிட்டக் காசு கேட்காதேயின்னு சொல்லிட்டார். பெருவாரியான சொத்து தெய்வா மேலயும், இளவரசு மேலயும்... கிழவனைக் கொன்னுடலாம்னு கூட சில சமயம் ஆத்திரம் வருது...''

நிர்மலா, விழிகளில் பெருகும் நீரை விரலால் சுண்டியபடி ஆத்திரத்துடன் சொன்னாள்.

''முதல்லே அதைச் செய்யுங்க....''

ரவி, அதிர்ந்து போய், ''என்னது?'' என்றான்.

''நிஜத்தைத்தான் நானும் சொல்றேன். என்னை இப்படி மானக்கேடான விஷயத்தைச் செய்யச் சொல்றதை விட, உங்களை நம்பாத உங்க அப்பாவைக் கொன்னுட்டு, நீங்க ஜெயிலுக்குப் போகலாம்....''

''ஏய், விளையாடறியா?

ரவியின் கேள்வி, நிர்மலாவை மேலும் விசும்பச் செய்ய, அவள் வாய் விட்டு அழுதாள்.

''பணத்துக்காக இன்னது செய்யறது தான்னு ஒரு கேள்வி முறை இல்லையா? அப்ப என்னடான்னா, தர்மராஜனை நடுத் தெருவுல நிறுத்தணும்னு, உங்களுக்குப் பொறந்த பிள்ளைய, அவருக்குப் பொறந்ததாப் பொய் சொல்லச் சொன்னீங்க..... இந்த விஷயம் ஒரு பத்திரிகை விடாம நாறி, என்னைப் பகல் நேரத்துல வெளியில தலை காட்டவே விடாம செஞ்சிடுத்து... குழந்தைக்கு உடம்பு சரியில்லையின்னு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போனா - 'அதோ போறா பார்டா, அவதான் தர்மராஜனோட கீப்... ரெண்டு மாசம் முந்தி பத்திரிகைகள்லே பத்தி பத்தியா வந்திருந்ததே... அது, இவதான்'னு என் காது படப் பேசறாங்க... நாண்டுக்கிட்டுச் சாகலாம் போல இருக்கு...''

''அதையெல்லாம் காதுலேயே போட்டுக்காதேயின்னு நான் எத்தனை தடவை சொல்லியிருக்கேன் நிம்மி... யார், என்ன சொன்னாலும், ஒரு நாள் உன்னை, ஊரறிய மாலையிடப் போறவன் நான்தான். நானே, இதைப் பத்தியெல்லாம் கவலைப்படாதப்ப, உனக்கென்னங்கறேன்...''

அந்த ஒரு கணத்தில் நிர்மலாவிற்கு வாழ்க்கை மீதிருந்த நம்பிக்கையே விட்டுப் போயிற்று.

எத்தனை அன்பாக இருந்தவன்?

'உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும் நிம்மி.... எனக்குச் சோறு தண்ணீர் வேண்டாம்' என்று வசனம் பேசியவன் -

இன்றைக்கு வந்து, திடீரெனப் புதுசாய் ஒரு குண்டைப் போடுகிறானே....

இவள் போய், போலீஸ் ஸ்டேஷனில் கதறிக் கொண்டு புகார் கொடுக்க வேண்டுமாம்...

யார் மீது?

குமரன் மீது....

என்னவென்று....

''அய்யா, மகராஜன் தர்மராஜன் இருந்த வரைக்கும் ஏதோ எனக்கும், அவர் மூலமா

அனுராதா ரமணன்

எனக்குப் பொறந்த குழந்தைக்கும் படியளந்திட்டிருந்தார். இப்ப, சாப்பாட்டுக்கே திண்டாட்டம். நான், இந்தக் கஷ்டம் தாங்காம தர்மராஜன் சம்சாரத்துக்கும், அவங்க பிள்ளை குமரனுக்கும் தினமும் போன் செஞ்சிட்டேயிருக்கேன். இது நாள் வரைக்கும் எதுவும் செய்யலை... இப்பத்தான் சித்த முந்தி குமரன் வந்தார். நான், அவர் காலைப் பிடிச்சிட்டு அழுதேன்; குழந்தைக்காவது ஏதாவது வழி செய்யுங்



கன்னு சொன்னேன். அவர், முதல்லே உதவி செய்யறதாச் சொன்னாரு. அடுத்த நிமிஷமே, எதிர்பாராத விதமா, என் கிட்ட முறைதவறி நடந்துக்க முயற்சி செய்தாரு. நான் அழுதேன். கதறினேன். அவர் இஷ்டத்துக்கு நான் சம்மதிக்கலையின்னு, என்னையும், அவரோட அப்பா, பெண்டாட்டிய அனுப்பி வச்ச மாதிரியே, பரலோகத்துக்கு அனுப்பிடுவேன்னு மிரட்டினார்.... என்னைக் காப்பாத்த யாரு

மில்லே. நான் நாதியத்த பாவியாப் போயிட்டேனே... இந்த உலகத்தை இனிமே நான் எப்படித் தலை நிமிர்ந்து பார்ப்பேன்....''

நிர்மலா, இரு செவிகளையும் இறுகப் பொத்தியபடி, ஆவேசமாய் 'முடியாது' என்கிற பாவனையில் தலையசைத்தாள்.

ரவியோ, ஏற்கெனவே சகாதேவன் முடுக்கி விட்ட வேகத்துடன், இவளது பிடிவாதத்தினால் எழுந்த ஆத்திரமும் சேர்ந்து கொள்ள, பற்களைக் கடித்தான்.

''முடியாதுன்னா என்ன அர்த்தம்?''

''நான் மறுபடியும் சேற்றை வாரிப் பூசிக்க முடியாதுன்னு அர்த்தம். ஏங்க், உங்களுக்கு யார் இந்த யோசனையைச் சொன்னாங்களோ தெரியாது. உங்களுக்கு என் கிட்ட இது பத்திப் பேச எப்படி மனசு வந்தது?''

''இவ, பெரிய பதிவிரதை. நான் கேட்டதுதான் தப்பாப் போச்சு?''

வார்த்தைகள், வாயை விட்டுக் குதித்து



"இந்த போலீஸ்காரர் என்னைத் துரத்திப் பிடிச்சதாச் சொன்னது அப்பட்டமான பொய் எசமான்."

நீதிபதி : எப்படிச் சொல்றே?"

"வேணும்னா நான் ஓடறேன்; அவரால என்னைத் துரத்திப் பிடிக்க முடியுதான்னு பாருங்க!"

– சீர்காழி வி. ரேவதி.



"நேற்று ராத்திரி உங்ககிட்டே வந்து ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறதாக் கனவு கண்டேன்."

"கன்ஸல்ட்டிங் பீஸ் கொடுத்துட்டுப் போனீங்களா?"

– திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.



காதலி : "எனக்குக் கல்யாணம் நடக்கப் போகிற விஷயம் உங்களுக்கு முன்னாடியே தெரியுமா... எப்படி?"

காதலன் : "பெரிய கண்டத்திலேயிருந்து நான் தப்பிச்சிடுவேன்னு ஜோசியர் சொன்னாரே..."

– செங்குன்றம் ரமேஷ்ராம்.

விட்ட மறு கணமே, அவன் தன் தவறை உணர்ந்தான்.

ஆனாலும், என்னவோ ஓர் அசட்டுப் பிடிவாதம், தனக்காக இவள் இது கூட செய்யக்கூடாதா என்கிற வேகம்... அவனை அழுத்தமாய் அமர வைக்க -

அவள் சீறி வெடித்தாள்.

''இந்தப் பாரு, நான் பதிவிரதையா இல்லையான்னு உன் கிட்ட நிரூபிக்கணும்னு அவசியமில்லே. எழுந்து போ வெளியே....''

''வாட்?''

''வெளில போடா நாயேங்கறேன். போயும், போயும் உனக்காக - உன் குழந்தைய வயித்துல சுமந்து, நான் நடத்தை கெட்டவங்கிற பட்டம் வாங்கிக் கட்டிட்டேன் இல்லே? அதுக்கே - ஏழேழு பிறவி எடுத்தாலும் பாவம் தீராது. உன் கூட நான் இன்னமும் பேசிட்டிருக்கறதே அவமானம்.''

அவள், குழந்தையை மார்புடன் அணைத்தபடி உள்ளே சென்று விட்டாள்.

இவன் செய்வதறியாமல் திகைத்து நின்றான்.

சகாதேவன் சொன்னதென்ன.... இங்கே நடந்ததென்ன...

நம் யோசனைக்கு நிர்மலா மசியா விட்டால் - அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று மறுத்து விட வேண்டும்.

பிறகு அவள் கெஞ்சுவாள்; அழுவாள்; காலைப் பிடித்துக் கொண்டு மன்றாடுவாள். கடைசியில் தன் திட்டத்திற்குச் சம்மதிப்பாள்.

இதுதானே அவன் எண்ணம்.... இப்படி எல்லாமே தலை கீழாக மாறி விட்டதே....

இதே சமயத்தில், ராஜேஸ்வரி - மீராவையும் இளவரசுவையும் அழைத்துக் கொண்டு நகைக் கடைக்குச் சென்றாள்.

குமரன்தான் காரை ஓட்டினான்.

வெகு நாட்களுக்குப் பிறகு, அவன் - வண்டியை வெளியில் எடுத்திருக்கிறான்.

தர்மராஜன் இருந்த போது, அனேகமாய்க் குமரன்தான் அவருக்குச் சாரதி. அவனில்லா விட்டால்தான் டிரைவர்.

சில சமயங்களில், மகனுக்குத் தெரியாத இடங்களுக்குப் போக வேண்டியிருந்தால் மாத்திரம் டிரைவர்.

குமரன், தன் வரையில் மோட்டார் சைக்கிளே போதுமென்பவன்.

ராஜேஸ்வரி எப்போதுமே ஞானத்தின் ஆட்டோவில்தான். அவளுக்கு அதுதான் சரிப்பட்டு வரும்.

இன்றைக்குத்தான் வெகு நாட்களுக்குப் பிறகு - குடும்பமே காரில்.

ராஜேஸ்வரியின் உப்பிய கன்னங்களில் சிறு குழந்தை போல சந்தோஷம்....

''மீரா, உனக்கு இஷ்டப்பட்ட புடைவைங்களை எடுத்துக்க. கூச்சமே வேண்டாம். ஆனா ஒரு கண்டிஷன்.. கூறைச் சேலை மாத்திரம் நான்தான் எடுப்பேன்.''

''பட்டுப் புடைவையின்னா - அம்மாவுக்குத் தகடு மாதிரி கனமா இருக்கணும்...''

குமரன் ஒரு கையால் ஸ்டீயரிங்கைப் பிடித்தபடி, ஓரக் கண்ணால் மீராவைப் பார்த்துச் சிரித்தான்.

''அவன் அப்படித்தான் சொல்லுவான் மீரா. பட்டுப் புடைவையின்னா - கொடுக்கற காசுக்கு ஒரு நாலு விரற்கடை அளவாவது ஜரிகை போட்டிருக்கணுமா வேண்டாமா. இவன் ஒரு தடவை, பம்பாய்க்குப் போயிட்டு வந்தப்ப - சூரத் பட்டுன்னு ஒண்ணை வாங்கிட்டு வந்தான் பாரு. உடம்பு முழுக்கப் பித்தளை ஜரிகையும், பாசி மணியும் வச்சுத் தச்சு....விலை என்ன தெரியுமோ, நாலாயிரத்துச் சொச்சம்...அப்படியே வச்சிருக்கேன்...''

ராஜேஸ்வரி, நொடிக் கொரு தரம், தன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் மீராவைத் திரும்பிப் பார்த்தாள். முகத்தில் பெருமிதம் சுடர் விட்டது.

தெய்வநாயகியை, குமரனுக்கு மணம் பேசி முடித்த போது கூட, ராஜேஸ்வரி மகிழ்ச்சியோடு கல்யாணக் காரியங்களில் ஈடுபட்டவள்தான். ஆனாலும், உள்ளூர ஒரு குறை இருந்தது; பயம் இருந்தது.

கூறைச் சேலை வாங்க, தெய்வாவை அழைத்துக் கொண்டு கடைத்தெருவுக்குப் போக ராஜேஸ்வரி மிகவும் ஆசைப் பட்டாள்.

ஆனால் தெய்வாதான் வரவில்லை.

'எனக்குப் பட்டுப்புடைவையின்னாலே பிடிக்காது. என் தொழிலுக்கு, அதெல்லாம் சரிபட்டும் வராது. ஏதோ ஒண்ணை நீங்களே பார்த்து எடுங்க.'

அவள், தன் தாயிடம் சொல்லி அனுப்பிவிட்டாள்.

ராஜேஸ்வரி எந்தப் புடைவையைத் தேர்ந்தெடுத்தாலும், தெய்வாவின் தாய் ஆயிரம் குறை கூறினாள்.

'அய்யே... இத்தனை ஜரிகை போட்டு யார் கட்டுவாங்க...'

'கலர் அடிக்க வர்றாப்பில இல்லே? ஆஸ்பத்திரிக்கு என் மக, பூப் போட்ட வெள்ளைப்புடைவையத்தான் கட்டுவா....'

'ஆனாலும் கனமுங்க. என் மக, ஒரு செயின் போட்டாலே உறுத்துது, உறுத்துதுன்னு புலம்புவா...'

ராஜேஸ்வரி, பல்லைக் கடித்துக் கொண்டு கடைசியில் அந்த அம்மாளின் விருப்பப்படியே இரண்டு புடைவைகளை எடுத்தாள்.

தெய்வாவிடம் காட்டிய போது, அந்த முகத்தில் கடுகளவு மலர்ச்சி கூட இல்லை.

கல்யாணக் கூறைச் சேலையைப் பார்க்கும் ஒரு பெண்ணின் முகம் எத்தனை விதமான உணர்ச்சிகளைக் கொட்டும்?

இவளோ, சலவைக்குப் போய் வந்த துணிகளைப் பார்ப்பது போல, நுனி விரலால் சற்றுப் புரட்டிப் பார்த்து விட்டு எழுந்து விட்டாள்.

அது மட்டுமில்லை. கல்யாணம் முடியும் வரையில் ராஜேஸ்வரியின் ஒவ்வொரு விருப்பத்துக்கும், அவள் தன் கணவனிடமோ, சம்பந்தி அம்மாளிடமோ சிபாரிசு தேடிப் போக வேண்டியிருந்தது.

'ஏங்க, நம்ம குடும்ப வழக்கப்படி ஊஞ்சல், நலங்கு எல்லாம் உண்டா.... அந்தப் பொண்ணு இதுக்கெல்லாம் சம்மதிக்குமா....'

'ஏய், பட்டிக்காடு மாதிரி, அங்கே போய் இப்படி எதுவும் பேசி வைக்காதே. அது படிச்ச பொண்ணு. கண்டபடி இங்கிலீஸ்லே திட்டிடப் போகுது....'

'தாலி கட்டின உடனே சாமிமலைக்கு, மாலையும் கழுத்துமா....'

'நீங்க வேற... இன்னும் அந்தக் காலத்துலேயே இருக்கீங்களே சம்பந்தியம்மா? என் பொண்ணுக்கு, ஒரு விரற்கடைப் பூவைத் தலையில வச்சிட்டு, வெளியில வரவே பிடிக்காது... நீங்க என்னடான்னா, மாலையும் கழுத்துமா சுவாமி மலைக்குக் கூப்பிட நீங்க. அவ காதுல விழுந்திச்சின்னா - கல்யாணத்தையே நிப்பாட்டுன்னு கூச்சல் போடுவா.....'

ராஜேஸ்வரி, தனது விருப்பங்களை எல்லாம் மனசுக்குள் இறுக மூடி வைத்திருந்தாள்.

இப்பொழுது மீராவின் மூலமாகத்தான் ஒவ்வொன்றாய் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

பாவம் ராஜேஸ்வரி.

இரவு வீடு திரும்புகையில் தனது ஆசைகளை எல்லாம் சின்னா பின்னப் படுத்தக் கூடிய கடிதம் ஒன்று காத்திருக்கப் போவதை அப்போது அவள் உணரவில்லை....

(தொடரும்)



''வார்த்தைக்கு வார்த்தை 'செய்யும் தொழிலே தெய்வம்'னு சொல்றாரே, யார் அது?''


''தெரியாதா...? அவர்தான் 'சிலைத் திருட்டு சிங்காரம்'!''

- சீர்காழி. வி. ரேவதி.

நர்ஸ் டிரெயினிங் முடித்தவுடன் எனக்கு ஒரு நர்ஸிங் ஹோமில் வேலை கிடைத்தது.

பேஷண்டுகளை கவனிப்பது தவிர இங்கு என்கொயரி அட்டண்ட் பண்ணுவது, டெலிஃபோன் அட்டண்ட் பண்ணுவது போன்ற வேலைகளையும் நான் கவனிக்க வேண்டியிருந்தது.

நேரிலும், தொலைபேசியிலும் விசாரிப்பவர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள்.



"How is the patient now?"

"Did he sleep well last night?"

என்று, பேஷண்டுகளின் உடல்நலம் பற்றி அவர்களது உறவினர்கள் என்னிடம் கவலையுடன் விசாரிக்கும் போது, அவர்களுக்கு ஆறுதலாக நாலு வார்த்தைகள் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும்.

எப்பாடுபட்டாவது இந்த இங்கிலீஷைக் கற்றுக் கொண்டு மற்றவர்களைப் போல சரளமாகப் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் பல புத்தகங்களை வாங்கிப் படித்தேன். ஆனால் பயனேதும் ஏற்படவில்லை.

இத்தருணத்தில் விவேகானந்தா கல்வி நிலையம் பற்றி கேள்விப்பட்டு, இக்கல்வி நிலையம் நடத்தும் தபால் முறை ஆங்கிலப் பயிற்சியில் சேர்ந்தேன் அடிப்படையிலிருந்து ஆங்கில இலக்கணத்தைப் புரியும் வகையில் சொல்லிக் கொடுத்து, நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எப்படிப் பேச வேண்டும் என்பதை பல எளிய உதாரணங்கள் மூலம் தெளிவாக விளக்கி, தயக்கமின்றி சரளமாகப் பேச பக்கத்திற்குப் பக்கம் பயிற்சி முறைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்கள்.

எப்படி மறக்க முடியும்?

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது சரளமாக ஆங்கிலத்தில் பேச முடிகிறது.

தொடர்ந்து நான்கு வார்த்தைகள் கூடப் பேசத் தயங்கிக் கொண்டிருந்த எனக்கு மிகச் சரளமாக ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளித்த விவேகானந்தா கல்வி நிலையத்தை என்னால் எப்படி மறக்க முடியும்?

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலப் பயிற்சி பெறலாம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு.

நீங்கள் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண் 4986
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை — 600 017.

NAGA

இரண்டாவது முகம்

கதவைத் தட்டினான் சிதம்பரம்.

ஆசிரியரின் மனைவிதான் கதவைத் திறந்தாள்.

சிதம்பரத்தைக் கேள்விக்குறியோடு நோக்கினாள்.

''வாத்தியார் ஐயாவைப் பார்க்கணும்'' என்றதும் கதவை அகலத் திறந்தாள்.

''இப்படி உட்காருங்க. அவர் குளிச்சிட்டிருக்காரு'' என்று வெராந்தாவிலிருந்த கூடை நாற்காலியைக் காட்டி விட்டு உள்ளே சென்று விட்டாள்.

சிதம்பரம் சுற்றுமுற்றும் பார்த்தான்.

'வாய்மையே வெல்லும்' என்றபடி காந்திஜி சிரித்துக் கொண்டிருந்தார் சுவரில்.

எளிமையாக இருந்தாலும் பளிச்சென்று இருந்தது வீடு.

இருக்கும் இடம், சூழலைப் பொறுத்து மனிதரின் குணநலன் மாறும் என்பது உண்மைதான் என்று சொல்லிக் கொண்டான்.

ஆசிரியர் தசரதன் என்றாலே ஒரு மதிப்பு, மரியாதை ஊருக்குள் உண்டு. எவ்வளவுக்கு எவ்வளவு மாணவர்களின் படிப்பில் கண்டிப்பாக நடந்து கொள்வாரோ அத்தனைக்கு அத்தனை பரிவாகவும் இருக்கும் அவர் பேச்சு.



போட்டிக் கதை - 3

அதிர்ந்து பேச மாட்டார். ஆனாலும் அவர் குரலில் ஓர் ஆகர்ஷணசக்தி இருக்கும்.

நெற்றியில் பட்டையான விபூதியும், வெள்ளைவெளேர்கதராடையுமாக உள்ளேயிருந்து வந்த ஆசிரியரைக் கண்டு எழுந்து நின்றான் சிதம்பரம்.

''உட்காருப்பா சிதம்பரம். எப்படியிருக்கே? காப்பி சாப்பிடறியா?''

''பரவாயில்லை சார்.''

''ம், சொல்லு. என்ன விஷயம்?''

''அண்ணன் அனுப்பிச்சாரு.''

''அட, துபாயிலேயிருந்து ரங்கன் வந்திருக்கானா? எப்ப வந்தான்?''

''என் அண்ணன் வரலே ஐயா. நம்ம அண்ணன் அனுப்பிச்சாரு.''

''என்னப்பா, 'அண்ணன்' உறவைப் பொதுவுடமையாக்கிட்டே'' என்றார் குறுநகையுடன்.

''கிண்டல் பண்ணாதீங்க ஐயா. நம்ம எம். எல். ஏ. அண்ணன்தான் அனுப்பிச்சாரு.''

''ஓகோ! அவர் பையன் விஷயமாத் தானே...''

''ஆமாங்க. நீங்கதான் குறுக்கே நிற்கறீங்களாம். நம்ம கணக்கு வாத்தியார் சொன்னாரு. வகுப்பு ஆசிரியரான உங்களை மீறி அண்ணன் பையனை பாஸ் போட முடியலியாம்.''

''என் குணம்தான் உனக்குத் தெரியுமே சிதம்பரம்!'' என்றார் குரலில் திடீர்க் கடுமையுடன்.

''ஊருக்கே தெரியுமே ஐயா. இருந்தாலும் இந்த விஷயத்துல நீங்க கொஞ்சம் வளைஞ்சு கொடுத்தீங்கன்னா உங்களுக்கும் நல்லது. அண்ணன் பையனுக்கும் நல்லது.''

''சிதம்பரம், எதுக்காகவும், யாருக்காகவும் என் குணத்தை மாத்திக்க முடியாது. நான் இப்படிச் செய்யறது எம். எல். ஏ.

கிருஷ்ணா



பையனோட நல்லதுக்குத்தான்னு யோசிச்சுப் பார்த்தால் புரியும். இந்த ஒரு வருஷம் நான் வேணும்னா அவனுக்குத் தினசரி மாலை வேளையில டியூஷன் எடுக்கறேன். அடுத்த வருஷம் நல்ல மதிப்பெண்களோட பாஸ் பண்ணட்டுமே!''

''உங்க பிடிவாதத்துக்குத் தலைமையாசிரியர் கூடப் பயப்படறதுனாலதான்...''

''புரியுதுல்ல. நேர்மைக்கும், நியாயத்துக்கும் எல்லோரும் பணிஞ்சுதானே ஆகணும்.''

''ஐயா, இந்த விஷயத்துல உங்க பிடிவாதத்தைத் தளர்த்திக்கிட்டீங்கன்னா எம்.எல்.ஏ. மூலமா பல சௌகரியங்களை நீங்க அனுபவிக்கலாம்.''

''இதோ பாருப்பா. இப்பவே நான் சௌகரியமாகவும், சந்தோஷமாகவும்தான் இருக்கேன். வேற ஏதாவது பேசலாம்னாப் பேசு. இல்லை...'' என்று அவர் இழுக்கவும் எழுந்து வெளியேறினான் சிதம்பரம்.

''டேய், மூலைக்கடை பொன்னுசாமி நம்ம ஆளுகிட்ட தகராறு பண்றானாமே...''

''ஆமாண்ணே! சாராய வியாபாரம் அமோகமா நடக்குது. ஆனாலும் நமக்குத் தர வேண்டிய மாமூலைத் தர மறுக்கறான். அந்தக் கடை நீங்க அவனுக்குப் போட்ட பிச்சைங்கறதையே மறந்துட்டுப் பேசறான்'' என்றதும் தன் கட்டை மீசையை ஒரு விரலால் தடவியபடி யோசித்தார் தங்கராசு, எம். எல். ஏ.

''அவனை நம்ம ஆளுங்களை விட்டு கவனிக்கச் சொல்லுடா...'' என்றதும் அவசரமாகக் கிளம்பினான் எடுபிடி ஆள்.

''அந்தப் பொன்னுசாமி இன்னும் பத்தே நிமிஷத்துல என் கால்ல வந்து விழுந்து கதறணும்...'' என்று உறுமியபடி குறுக்கும், நெடுக்குமாய் நடந்தார்.

''அண்ணே....''

''யாருடா? சிதம்பரமா? போன விஷயம் என்னாச்சு?'' என்றதும் மிடறு விழுங்கினான்.

''என்னடா பேய் முழி முழிக்கற? வாத்தியாரைப் பார்த்தியா?''

''பார்த்தேன். விஷயத்தையும் எடுத்துச் சொன்னேன் அண்ணே. ஆனால் அவரு மசிய மாட்டேங்கறாரு.''

''அந்த ஆளு கர்வம் பிடிச்ச ஆசாமின்னு நான்தான் சொன்னேனே...'' என்று ஒத்துப் பாடினார் கூட வந்த கணக்கு வாத்தியார் சோமு.

வரும் மே மாதம் இப்போது உள்ள தலைமையாசிரியர் ஓய்வு பெறுகிறார். அடுத்த சீனியர் தசரதன். அவரை ஓவர் டேக் செய்ய இது அருமையான சந்தர்ப்பம் என்ற எண்ணத்துடன் எம். எல். ஏக்கு மேலும் தூபம் போட்டார் சோமு.

''இந்த விஷயத்துல வளைஞ்சு கொடுத்தால் என் மூலமாக் கிடைக்கும் அனுகூலங்களை எடுத்துச் சொன்னியாடா?''

சொன்னேண்ணே. இப்பவே மகிழ்ச்சியாத்தான் இருக்காராம்.''

''அப்படியா சொன்னாரு. இந்தக் காலத்துல இப்படிக் கூட ஒரு ஆளா?'' என்றபடி யோசித்தார் எம். எல். ஏ.

''டேய், காரை எடுத்துட்டுப் போய் கையோட அவரைக் கூட்டிட்டு வா'' என்று சிதம்பரத்துக்கு ஆணையிட்டார்.

''என்னங்க, எனக்குப் பயமாயிருக்கு. அந்த எம். எல். ஏ. அடிதடி, கொள்ளைக்கெல்லாம் அஞ்சாதவர்னு ஊரே சொல்

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 22

நேற்று வரை நந்தவனம் தொடர் முடியும் போது ஃபிரிஜ் பரிசைத் தட்டிக் கொண்டு போகப் போவது... யார் கண்டது, நீங்களாகவே இருக்கலாம்! இன்னும் சில அத்தியாயங்களே பாக்கி. கவனமாகப் படிக்கவும். வாரா வாரம் நாங்கள் வேண்டுமென்றே அந்தத் தொடர்கதையில் செய்யும் தவறைக் கண்டுபிடித்து இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்ளவும். கதை முடிந்ததும் 5 - 10 வரி விமர்சனத்துடன் சேகரித்த கூப்பன்கள் அத்தனையையும் அனுப்பவும். மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி கண்டுபிடித்தவருக்கு ஃபிரிஜ் பரிசு எனில், வேறு பலருக்கு ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஒருவருக்கு மேல் மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருந்தால் குலுக்கலில் ஒருவர் தேர்வு. இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட....

தவறு : ____________ திருத்தம் : ____________

லுது.''

''பயப்படாதே காமாட்சி. நியாயம் நம்ம பக்கம் இருக்கு. கடவுள் நம்மை நிச்சயம் கைவிட மாட்டார்.''

''நீங்க ஆயிரம் சமாதானம் சொன்னாலும் மனசு கேட்க மாட்டேங்குதுங்க....'' என்றவளை முதுகில் தட்டி ஆறுதல்படுத்தினார் தசரதன்.

''கவலைப்படாதே. நான் போயிட்டுச் சீக்கிரமே வந்துடறேன்'' என்றபடி கிளம்பினார்.

''**வா**ங்க சார். இப்படி உட்காருங்க!'' என்று எதிரிலிருந்த சோபாவைக் காட்டினார் எம். எல். ஏ.

உட்கார்ந்தபடி சுற்றிலும் நோட்டமிட்டார் தசரதன். பணத்தின் செழுமை ஒவ்வோர் இடத்திலும் தெரிந்தது.

குடியினால் சிவந்த கண்ணும், பெருத்த உடலுமாய் இருந்த எம். எல். ஏ. வை நோக்கினார்.

''ஏதோ வரச் சொன்னீங்களாம்...''

''ஆமாம். நம்ம பையன் விஷயமாத்தான்'' என்று உடனே விஷயத்துக்கு வந்தார் எம். எல். ஏ.

''மன்னிக்கணும். தகுதியில்லாத உங்க பையனை பாஸ் போட்டு அவன் திருந்தவே முடியாதபடி பண்றதுக்கு என் மனசு இடம் கொடுக்கலே. என் மாணவன் தன்னோட திறமைகளை உணர்ந்து, அறிவாளியா உயரணும்னுதான் ஆசைப்படறேன். தன் அப்பாவோட செல்வாக்கினால் எதையும் சாதிக்க முடியுங்கற தவறான எண்ணம் அவன் மனசுல இப்பவே அரும்பிடுச்சுன்னா அவனுக்குன்னு ஒரு முகம் இல்லாமப் போயிடும். தன்னோட சொந்தக் காலில் நிற்கற தைரியமும் போயிடும்...'' என்று உறுதியான குரலில் சொன்னவரை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தார் எம்.எல்.ஏ.

''உங்க பெயர், படிப்பு, சர்வீஸ் விவரங்களை ஒரு பேப்பரில் எழுதிக் கொடுக்க முடியுமா?'' என்று எம். எல். ஏ. கேட்கவும் புரியாமல் பார்த்தார் தசரதன்.

''எதுக்கு?''

''உங்களைப் பற்றிப் பெரிய இடத்துல சிபாரிசு பண்ணி ப்ரமோஷன் வாங்கிக் கொடுக்கறதுக்கு...'' என்று நக்கலாக வந்த சோமுவின் வார்த்தைகளைச் சட்டை செய்யாமல் எம். எல். ஏ.வை கேள்விக்குறியோடு பார்த்தார் தசரதன்.


''சோமு சொல்றது சரிதான் மிஸ்டர் தசரதன். உங்க பெயரை 'நல்லாசிரியர்' விருதுக்குச் சிபாரிசு பண்ணத்தான் விவரங்கள் கேட்டேன்...'' என்று எம்.எல்.ஏ. பணிவோடு சொல்லவும் நம்ப முடியாமல் பார்த்தனர் அனைவரும்.

''உங்க ஆச்சரியமும், அதிர்ச்சியும் எனக்குப் புரியுது. நானும் மனுஷன்தான். எனக்கும் இதயம்னு ஒண்ணு இருக்கு. என்னோட வாழ்க்கை பார்க்கறதுக்குத்தான் படாடோபமா இருக்கு. ஆனால் நித்ய கண்டம் பூரணாயுசுதான். எவன் நம்பளை எந்த நேரத்துல கவிழ்ப்பானோ, சுத்தி உள்ள பயலுக காலை வாரிடுவாங்களோ, அரசியல் எதிரிகள் என்னையும், என் குடும்பத்தையும் ஏதாவது பண்ணிடுவாங்களோன்னு நினைச்சு, நிம்மதி இல்லாம அல்லாடறேன். என் அதட்டல், உருட்டல் எல்லாம் வெளிவேஷம்தான். உள்ளுக்குள்ளே, உங்களை மாதிரி மனச்சாட்சிக்கு பயந்து, நிம்மதியா, சந்தோஷமா வாழறவங்களைக் கண்டு பொறாமைப்படறேன். ஆனால் சகதியிலே சுகம் கண்ட எருமை மாடு மாதிரி இதை விட்டு வெளியே வரவும் முடியலே...'' என்று கம்மிய குரலில் சொன்னவரை அனுதாபத்துடன் நோக்கினார் தசரதன்.

''என் பையனாவது இந்தச் சேறும், ச க தி யு மா ன வாழ்க்கையிலேயிருந்து வெளிப்பட்டு உங்களை மாதிரி நல்லவனா, நிம்மதியான வாழ்க்கையை அனுபவிக்கும்படி அவனை உருவாக்குவீங்களா வாத்தியாரய்யா...'' என்று இறைஞ்சியவரை அணுகிக் கையைப் பிடித்துக் கொண்டார்.

நாணயத்திற்கு இரு பக்கம் இருப்பது போல ஒவ்வொருவருக்கும் இரண்டு முகங்கள் உண்டு என்பதைப் புரிந்து கொண்டார் தசரதன்.

''கவலைப்படாதீங்க. இனிமே அவன் என் பையன் மாதிரி...'' என்று ஆறுதல் சொல்லி விட்டுக் கம்பீரமாக நடந்து வெளியேறிய தசரதனை மரியாதையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் அனைவரும்.



டைரக்டர் (நடிகையிடம்) : ''இது சினிமாக் கல்யாணம்தான் மேடம்... இதுல கூட விவாகரத்து சீன் வேணும்னு நீங்க அடம்பிடிக்கிறது நல்லா இல்லே!''

- சீர்காழி வி. ரேவதி.

வீட்டோடு மாப்பிள்ளை

ராமலிங்கத்துக்குக் கையும் ஓட வில்லை. காலும் ஓடவில்லை. பிரபல தொழில் அதிபர் தயாளன் படகுக் காரைத் தன் சின்னஞ்சிறு வீட்டின் முன் நிறுத்தி இறங்குவதைப் பார்த்துத் திடுக்கிட்டார் ராம லிங்கம்.

''வாங்கோ... வாங்கோ... ஏது? இந்த ஏழை வீட்டைத் தேடி...'' பரபரப்புடன், இருந்த ஒரே இரும்பு நாற்காலியைப் பிரித்துப் போட்டு விட்டுக் கை கட்டி நின்றார்.

''எல்லாம் உங்க பிள்ளை பி.ஈ. பரீட்சை யிலே ஸ்டேட் பர்ஸ்ட் வந்ததைப் பாராட் டத்தான் நேரிலேயே வந்தேன்'' என்று புன்னகையுடன் கூறிய தயாளன், நாற்காலி யில் அமர்ந்தார்.

ராமலிங்கத்துக்குப் பெருமையாக இருந்தது. ''அதான் நேத்து காலேஜ்லே நடந்த பாராட்டு விழாவிலே தியாகுவை வாய் நிறையப் பாராட்டிப் பரிசும் கொடுத் தீங்களே... அதுக்குள்ளேயா மறந்துடு வோம்?''

லட்சுமி கொண்டு வந்து வைத்த காப்பி யைப் பருகியபடி ராமலிங்கத்தைப் பார்த் தார் தயாளன்.

''உண்மைதான். தியாகுவோட திறமை யைப் பாராட்டறதோடு வேறு சில முக்கிய விஷயங்களும் பேச வேண்டியிருந்தது. அதான் நேரிலேயே பேச வந்திருக்கேன்.''

ராமலிங்கம் கேள்விக்குறியுடன் பார்த் தார்.

தயாளன் தொடர்ந்தார். ''என்னோட தொழில் நிறுவனங்களோட, புதுசா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் ஒண்ணு ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். அதுக்குத் தகுதியான ஆள் தியாகுதான்னு நேத்தே முடிவு பண்ணிட் டேன்.''

ராமலிங்கத்துக்கு வானில் மிதப்பது போல் இருந்தது.

''பெயருக்கேத்தபடி தயாளன்தான் நீங்க.''

தயாளன் குறுக்கிட் டார். ''சொல்ல வேண்டி யது எல்லாத்தையும் சொல் லிடறேன். அப்புறம் உங்க முடிவைச் சொல்லுங்க. எனக்கு நிறைய தொழில் நிறுவனங்கள் இருக்கு. சரியா நிர்வகிக்கத் தகுந்த ஆள் இல்லை. நான் ஒரு ஹார்ட் பேஷண்ட். என் மனைவி போய் ரொம்ப வருஷம் ஆச்சு. எனக்கிருக் கிற சொந்தம் எல்லாம் என் ஒரே பெண் கல்பனாதான். எம். ஏ. முடிச்சிருக்கா. தாய்க்குத் தாயா என்னைக் கவனிக்கிறது பூரா கல்பனாதான். அவளைப் பிரிஞ்சு ஒரு வினாடி கூட என்னாலே உயிர் வாழ முடியாது. அதனாலே... உங்க பிள்ளை தியாகுவுக்கு என் பெண்ணைக் கல்யாணம் பண்ணி, தியாகுவை வீட்டோட வெச்சிக் கிட்டா என் பிரச்னைகள் தீரும். தியாகு என் தொழில் நிறுவனங்களை நல்லா நிர்வாகம் பண்ணுவான் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. இருக்கப் போற கொஞ்ச நாட்களை யும் நான் நிம்மதியாக் கழிப்பேன். தியாகுவுக்கும் நல்ல பிரகாசமான எதிர் காலம் கிடைக்கும். எனக்குப் பிறகு எல் லாமே கல்பனாவுக்கும் தியாகுவுக்கும் தானே!'' - தயாளன் ஆவலுடன் ராமலிங்கத் தைப் பார்த்தார்.

''ஆகக்கூடி என் பிள்ளையை விலை பேச வந்திருக்கீங்க. இல்லையா?'' - ராம லிங்கம் இறுகிய முகத்துடன் கேட்டார்.

தயாளன் பதறினார். ''நோ... நோ... அப்படி சீப்பா எடை போட வரலை. எனக்குத் தியாகுவோட நேர்மை, திறமை யிலே நிறைய நம்பிக்கை இருக்கு. அத னாலே உரிமையோட கேட்கறேன்.''

ராமலிங்கம் தீர்மானமாகக் கூறினார். ''மிஸ்டர் தயாளன்! உங்ககிட்டே பணம் காசு ஏராளமா இருக்கலாம். ஆனா எனக் கிருக்கறது ஒரே பிள்ளை. பிரகாசமான எதிர்காலம், ஆடம்பர வாழ்க்கைன்னு ஆசை காட்டி என் பிள்ளையை என்கிட்டேயிருந்து பிரிச்சு, உங்களோட சேர்த்துக்க ஆசைப்பட றீங்க. இதுக்கு நான் சம்மதிக்கவே மாட் டேன்.''

''அவசரமில்லை. நீங்க யோசிச்சு...''

பானுமதி ராஜகோபால

''இதிலே யோசிக்க என்ன இருக்கு? பணத்துக்காக என் பிள்ளையைப் பலியிட நான் தயாரில்லே.''

தயாளன் முகம் வாட, தளர் நடையுடன் போய்க் காரில் ஏறிக் கொண்டார்.

கார் கிளம்பும் வரை காத்திருந்த லட்சுமி ஓடி வந்து ராமலிங்கத்தைப் பிலுபிலு வெனப் பிடித்துக் கொண்டாள்.

''உங்களுக்குக் கொஞ்சமாவது யோசனை இருக்கா? எப்படிப்பட்ட சான்ஸ் வந்தது தியாகுவுக்கு. நிமிஷமா வெட்டி விட்டுட்டீங்களே. அதுவும் பாவம், அவர் ஹார்ட் பேஷண்ட், ஒரே பொண்ணுன்னு வேறே சொல்றார். யோசிச்சு, தியாகுவைக் கலந்திண்டு சொல்றேன்னாவது சொல்லி யிருக்கலாமில்லையா? ஒரேயடியா முடியா துன்னு முகத்திலே அடிச்ச மாதிரி பேசிட் டீங்களே?''

''நீ போடி உள்ளே.'' ராமலிங்கம் உறுமி னார்.

''என் பிள்ளை என் வீட்டிலேருந்துதான் வேலைக்குப் போய் வருவான். என் மருமகள்தான் இந்த வீட்டுக்குள்ளே வரணுமே தவிர, என் பிள்ளையை மருமகனா அந்த வீட்டுக்கு அனுப்ப நான் ஒண்ணும் வெட்கம் கெட்டவன் இல்லை. தெரிஞ்சுக்கோ.''

தியாகுவுக்கு இந்த விவரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. அவனும் வேலை தேட ஆரம்பித்தான். ஸ்டேட் பர்ஸ்ட்டாக இருந்தும் வேலை அத்தனை சுலபமாகக் கிடைக்கவில்லை. அப்படி இப்படி அலைந்து யார் காலில் எல்லாமோ விழுந்து அம்பத்தூரில் சுமாராக ஒரு வேலை படிந் தது. அதை விடச் சுமாராக ஒரு பெண் ஜாதக மும் வந்தது. பெண்ணும் வேலை பார்க் கிறாள் என்கிற ஒரே பிளஸ் பாயிண்ட்டுக் காக அந்தப் பெண் சுமதியையே தியாகு வுக்குக் கல்யாணம் செய்து வைத்தார்கள்.

ராமலிங்கத்தின் லட்சியப்படி சுமதி மருமகளாகக் காலடி எடுத்து வைத்தாள்.

தியாகு சுமதி இருவருமே காலை எட்டு மணிக்கெல்லாம் கிளம்பி விட வேண்டும். தியாகுவுக்கு அம்பத்தூர் போக வேண்டும். சுமதிக்குப் பெரம்பூர். இரவு இருவரும் திரும்ப ஏழு அல்லது எட்டு ஆகி விடும்.

லட்சுமி மாங்கு மாங்கென்று உழைத் தாள். ராமலிங்கம் ரிடையர்டு ஆசாமி. அவரைப் பற்றிக் கவலையில்லை. தியாகு வுக்கும் சுமதிக்கும் காலை ஏழரைக்குள் சாப்பாடு, கைக்கு டிபன் இரண்டும் ரெடியாக வேண்டும். பகலெல்லாம் அவர்கள் அறையில் கிடக்கும் அலங் கோலங்களைச் சரி செய்ய வேண்டும். இரவு உணவு அவர்கள் வருவதற்குள் ரெடியாக வேண்டும். வந்து கை, கால் அலம்பிச் சாப் பிட்டு விட்டு டயர்டாக இருக்கிறது என்று



இருவரும் படுக்கை அறைக்குப் போய் விடு வார்கள். அப்புறம் காலையில்தான் வெளியே வருவார்கள்.

லட்சுமிக்கு மூச்சு முட்டியது. ஒரு நாளைப் போல் ஓய்வில்லாமல்

உழைக்க உடம்பு இடம் கொடுக்கவில்லை. தனிமையில் ராமலிங்கத்திடம் குத்திக் காட்டினாள்.

''அருமையான சான்ஸ் வந்தது. அதை உதறி விட்டு இப்படி என்னை வேலைக்காரி போல ராப்பகலா உழைக்க வைக்க றீங்களே...'' என்று அழுதாள்.

ராமலிங்கத்துக்கும் கொஞ்சம் உறுத்தலாக இருந்தது. ஒரு நாள் தியாகுவைக் கூப்பிட்டுப் பேசினார்.

''உங்கம்மா பாவம் வயசான காலத்திலே இப்படி ஓயாம வேலை செய்ய முடியலைப்பா. திடீர்னு படுத்துட்டாள்னா என்ன செய்யறது?''

தியாகு பொறுமையுடன் கேட்டான். ''எனக்கும் தெரியறது அப்பா. நாங்க ரெண்டு பேருமே வேலைக்குப் போறதாலே அம்மா விடிகாலம்பறவே எழுந்து பரக்கப் பரக்க எல்லா வேலையும் செய்யறதைப் பார்த்தாப் பாவமா இருக்கு. ராத்திரி நாங்க ஆபீஸிலேருந்து திரும்பவும் ரொம்ப நேரமாயிடறது. எந்த ஒத்தாசையும் செய்ய முடியலே. கூடிய சீக்கிரம் ஏதாவது ஏற்பாடு பண்ணிடலாம் அப்பா. கவலைப்படாதீங்க'' என்று அப்பாவுக்கு ஆறுதல் சொன்னான்.

ராமலிங்கத்துக்கு நிம்மதியாக இருந்தது.

மறுநாள் காலையில் கிளம்பிப் போன மகனும், மருமகளும் மத்தியானமே ஒரு டெம்போவுடன் திரும்பி வந்தார்கள்.

''எதுக்குடா இது?'' என்று திகைத்தார் ராமலிங்கம்.

''சுமதியோட அம்மா, அப்பா அவ அண்ணா வீட்டிலே இருந்தாங்க இல்லையா? அங்கே சரிப்படாமே பெரம்பூருக்கே திரும்பிட்டாங்க. சுமதிதான் யோசனை சொன்னா. அதன்படி நாங்க ரெண்டு பேருமே என் மாமனார் வீட்டோட போயிடறதா இருக்கோம். அவளுக்கும் ஆபீஸ் பெரம்பூரிலேயே. எனக்கும் அங்கேயிருந்து அம்பத்தூர் கிட்டக்கத்தான். பாவம் அவ அப்பா வயசானவர். நோயாளி வேற... நாங்க அவங்களோட இருந்தா அவங்களுக்கும் ஆறுதலா இருக்கும். இனிமே நீங்க ரெண்டு பேர்தானே? அம்மாவுக்கும் முன்னே மாதிரி வேலைச் சுமை இருக்காது...''

தியாகு பதிலுக்குக் காத்திராமல் மடமடவெனத் தனக்குச் சீராக வந்த சாமான்களோடு, சுமதியும் அவனும் லோன் போட்டு வாங்கிய டீ.வி., பிரிட்ஜ், மிக்ஸி ஆகியவைகளையும் டெம்போவில் ஏற்றிக் கொண்டான்.

ராமலிங்கம் திக்பிரமையுடன் பார்த்துக் கொண்டே நின்றார். பின்னால் வந்து நின்ற லட்சுமியின் பார்வை அவர் முதுகைத் துளைப்பது போல் உணர்ந்து தலைகுனிந்தார்.



அழகன்

ஒருவனை மூன்று பெண்கள் காதலிக்கிறார்கள். அவர்களில் இருவரை ஒதுக்கி விட்டு, ஒருத்தியை மட்டும் விரும்பி மணந்து கொள்கிறான் அவன்.

இப்படியொரு 'தம்மாத்தூண்டு' கதையை வைத்துக் கொண்டு, அதில் அழுகை - ஆர்ப்பாட்டம் - செண்டிமெண்ட் - மெலோ டிராமா என்று செயற்கையான சமாசாரங்களுக்கெல்லாம் இடமளிக்காமல், சின்னச் சின்னத் திருப்பங்களுடன் நொடிக்கொரு சிரிப்பலையைத் தோற்றுவித்துப் பதினைந்து ரீல்களும் போன சுருக்குத் தெரியாமல் ஒரு விறுவிறுப்பான படத்தை எழுதி இயக்க முடியுமா?

முடிந்திருக்கிறது, இயக்குனர் கே. பாலசந்தரால்.

மம்முட்டியிடம் புதைந்து கிடக்கும் ஆற்றலை முற்றிலும் புரிந்து கொண்டு அதனை அப்படியே சாறு பிழிந்து கொடுத்திருப்பதும் -

பானுப்ரியாவின் விழிகளுக்கு மட்டுமின்றி அவருடைய நாட்டியத் திறனுக்கும் மடை திறந்து வழி விட்டு (அதுவும் அவர் ஆக்ரோஷமாக, வெறும் லயத்தை மட்டுமே பின்னணியாகக் கொண்டு, கிட்டத்தட்ட ஒரு ருத்ர தாண்டவ ரூபிணியாக ஆடிக் கொண்டே மூச்சு வாங்கத் தம் உள்ளத்துக் கொந்தளிப்பை மம்முட்டியிடம் வெளியிடும் இடத்தில்) பளிச்சிடச் செய்திருப்பதும் -

பண்பட்ட நடிப்புக்குரியவரான கீதாவின் விழிச் சுழற்சியையும் உதட்டுச் சுழிப்பையும் கொண்டே அவருடைய நெஞ்சத்து வேதனையைக் கோயில் வாயிலில் துல்லியமாக வெளிப்படுத்த வைத்திருப்பதும் -

துடிப்பும் துள்ளலும் அட்டகாசப் பேச்சுமாக அடுத்தவர் பலவீனத்தைச் சர்வ லகுவாகப் பயன் படுத்திக் கொண்டு, வெற்றி காண விழையும் கல்லூரி மாணவியாக டீன் ஏஜ் மதுபாலாவை அறிமுகப் படுத்தியிருப்பதும் -

இயக்குனரின் ப்ளஸ் பாயிண்டுகள் என்றால்,

மிதக்க வைக்கும் இசையை அளித்துள்ள இளைஞர் மரகதமணியைப் புதிய இசையமைப்பாளராக அறிமுகம் செய்திருப்பது தயாரிப்பாளரின் ப்ளஸ் பாயிண்ட்.

சின்னச் சின்ன நிகழ்ச்சிகள். அவற்றில் ஒரு தேர்ந்த பொற்கொல்லரின் கை வண்ணத்துடன் செய்யப்பட்டுள்ள சின்னச் சின்ன நகாசுகள்.

அதுதான் கே. பாலசந்தர்.

- சி. ஆர். கே.

பிறந்த நாள் புடைவை

புவனா முதலில் புடைவையின் வர்ணத்தைப் பார்க்கவில்லை. மருதாணி கலரில் சின்னச் சின்ன சிவப்புப் பூக்களுடன் அழகாக இருந்தது. பச்சையின் அத்தனை வகை ரகமும் அவளுக்குப் பிடிக்கும். பாசிப் பச்சை, கிளிப் பச்சை, ராமர் பச்சை, தளிர்ப் பச்சை, இலைப் பச்சை. குறிப்பாக இந்த மருதாணிப் பச்சை. தொட்டால் துவண்டு விழும் கொடியைப் போன்ற மென்மை. இவ்வளவு மென்மையாக அவளிடம் ஒரு புடைவை கூட இல்லை. அம்மா அத்தனை கஷ்டத்திலும் வீட்டிலிருக்கும் மூன்று பெண்களுக்கும் சேர்த்து சீட்டுப் போடுவாள். பத்துப் பத்து ரூபாயாக அவள் முப்பது ரூபாய்க்கு அல்லாடும் பொழுது, பரிதாபமாக இருக்கும். நூற்றி இருபது ரூபாய்ப் புடைவையில் நேர்த்தியும் இருக்காது. கெட்டித் துணியில் காடி வண்ணமாகவே புடைவை அமையும். மிட்டாய் ரோஸ்; தீப் பிழம்பு ஆரஞ்சு; அடிக்க வரும் ஊதா. இந்த மாதிரிதான் அமையும். இரண்டு மாதத்தில் நிறம் வெளுத்து விடும். நான்கு மாதத்தில் ஓரம் சுருண்டு கொள்ளும். ஒவ்வொரு வருஷமும் இந்த முறையாவது நல்ல புடைவை வாங்க வேண்டும் என்று வரும். அம்மாவால் முப்பது ரூபாய்க்கு மேல் சேர்க்க முடியவில்லை.

புவனா விலையைப் பார்த்தாள். முந்நூற்றி முப்பது என்று கார்டு தொங்கியது.

''என்ன சுதாகர் இது?''

''புடைவை.''

''எதுக்கு?''

''உன் பிறந்த நாளுக்கு.''

''என் பிறந்த நாள் எனக்கு நினைவில்லை.''

''எனக்கு நினைவிருக்கு. உன் அப்ளிகேஷன் மூலமா.''

''அறிவு வேணாம் உங்களுக்கு?''

கிட்டத்தட்ட இந்தக் கேள்வியுடன் சுதாகர் கிளம்பி விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். புவனாவின் கையிலிருந்த புடைவையைப் பிடுங்கி எறிந்தான்.

சத்தியப்பிரியன்

அது கடற்கரை மணலில் குவியலாக விழுந்தது.

''உன்னை லவ் பண்றேன் பாரு, கண்டிப்பா எனக்கு அறிவு கிடையாது.'' சுதாகர் மணலில் கிடந்த சைக்கிளை நிமிர்த்தினான். வேஷ்டியில் ஒட்டிக் கொண்டிருந்த மணலை உதறினான்.

''கோச்சுட்டுப் போனா போங்க சுதாகர். என் வீட்டு நிலையைச் சொல்லி எல்லாரிடமும் என்னால் பிச்சை எடுக்க முடியாது.''

''எல்லார் மாதிரியும்தான் நானுமா?''

''அதுதான் வருத்தம். என்னைத் தெரியும். எங்க வீட்டைப் பத்தித் தெரியும். நாலு பொண்ணுங்க எங்கம்மாவுக்கு. அப்பன் சரியில்லை. அக்கா மாசா மாசம் கொண்டு வரும் அறுநூறு ரூபாயிலும், எனக்கு உங்க இன்ஸ்டிட்யூட் கொடுக்கும் முந்நூறு ரூபாயிலும்தான் வீட்டில் இருக்கும் ஏழு பேர் வயித்தைக் கழுவணும். வாடகைக்குக் கொடுப்பமா? தங்கச்சி, தம்பிங்க படிப்புச் செலவுக்குக் கொடுப்பமா? பாலுக்குக் கொடுப்பமா? மாச சாமானுக்குக் கொடுப்பமா? எதுக்குன்னு ஆவும் தொள்ளாயிரம் ரூபாய்? இங்கே, அங்கேன்னு ஊரு பூராக் கடன். இந்த லட்சணத்தில் முந்நூறு ரூபாய்ப் புடைவையைச் சுத்திட்டுப் போயி நின்னா நல்லாவா இருக்கும்? நெருப்பை அள்ளிச் சுத்திட்டாப்பல இருக்காது? இந்தப் புடைவை என்னை என் கூடப் பொறந்ததுங்க கிட்டேயிருந்து ஒதுக்கி வெச்சிடுங்க. வேண்டாம்.''

புவனா தான் அழக் கூடாது என்னும் பிடிவாதம் தளர, முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டு, கேவ ஆரம்பித்தாள்.

சுதாகர் மீண்டும் சைக்கிளைக் கீழே போட்டு விட்டு அவளருகில் வந்தான்.

''தா புவனா! அழாதே! உனக்கு மருதாணிக் கலர் பிடிக்குமேன்னுதான் புடைவை வாங்கினேன். புடைவை வாங்கறப்போ எனக்கு உன் ஞாபகம்தான் வந்தது. உன் வீட்டு ஞாபகம் வரலை.''

''வரணும் சுதாகர், கண்டிப்பா ஞாபகம் வரணும். என்னைக் காதலிப்பது பெரிசில்லை. என் வீட்டு மனுஷங்களையும்

நேசிக்கணும். தனி மனிதப் போற்றுதலாய்க் காதல் மாறிடக் கூடாது. சுற்றம் தழுவுதல் இருந்தாத்தான் அது நிஜக் காதல்.''

''அப்பொ இந்தப் பு டை வை வேணுமா, வேண்டாமா?''

''எனக்கு இந்தப் புடைவையும் வேணும், என் வீட்டு ம னு ஷ ா ளு ம் வேணும்.''

''நான் வேண்டாமா?''

''நான் புடைவைன்னது உ ங் க ளை - உங்க காதலை.''

'தன்யனானேன் ஸ்வாமி' கருடாழ்வார் மாதிரி காலை ஊன்றிக் கொண்டு கூப்பிய படி கரங்களைத் தலைக்கு மேல் குவித்து நடித்துக் காட்ட, புவனா வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஒண்ணு புடைவை. இல்லாட்டி உன் வீடு. புடைவை வேணான்னாக் கொடுத்துடு. ரெண்டு நாள் அவமானமா இருக்கும். மொத மொதல்லா நாம காதலிக்கிற பொண்ணுக்குப் புடைவை எடுத்துக் கொடுத்தாச் சனியன் மூஞ்சில திருப்பி அடிச்சிடுச்சு பாருன்னு வெறுப்பா இருக்கும். அப்புறம் சரியாப் போய்டும்.''

''ஒண்ணு பண்ணலாம். புடைவையை என் வீட்டுக்கு எடுத்துட்டுப் போறேன். என் பெட்டிக்கு அடியில் ஒளிச்சு வெச்சிருக்கேன். நமக்குன்னு கல்யாணம் பண்ணிக்க ஒரு காலம் வராமலா போயிடும்? அப்பக் கட்டிக்கறேன்.''

''ந ா ப் ப து வயசுக்கப்புறம் எனக்கெதுக்கு ஷிஃபான் புடைவைன்னு கேக்க மாட்டியா?''

''இந்தக் கி ண் ட ல் த ா ன் வேணாங்கறது.''

''அப்ப இந்தப் புடைவைக்கு ஒரு பதில் சொல்லு.''

''ஏன் சுதாகர், என் குடும்பத்தை ஒரு மாதிரி பொருளாதாரப் பிடியிலிருந்து தளர்த்திக் கொண்டு வர இன்னும் பத்துப் பதினஞ்சு வருஷமானாக் கூட எனக்காக நீங்க வெயிட் பண்ணுவீங்களா?''

''பைத்தியம்! அ ப் ப டி யெ ல் லா ம் ஆகாது.''

''ஆயிடுச்சுன்னா?''

''கண்டிப்பா வெயிட் பண்றேன். போதுமா?''

புவனா அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். தன்னிச்சையாக அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.





வந்தவர் : ''பையன் வரலாறு புத்தகத்தைச் சாமி படத்துக்கு முன்னால் வச்சு ஏன் கும்பிடறான்?''

பையனின் தந்தை: ''வேறொண்ணுமில்லை; வரலாறு படைக்கிறானாம்; அவ்வளவுதான்.''

- பி. கே. பாலசுப்பிரமணியன்.

''ஏய்! புவனா! என்ன இது?''

புவனா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ச்சீ! நான் ஒரு பைத்தியம். வந்தமா ரெண்டு வார்த்தை சிரிச்சுப் பேசினமான்னு கிடையாது. எப்ப உங்களைப் பார்த்தாலும் என் வீட்டைப் பத்தி ஒரு பஞ்சப் பாட்டுப் பாடாம விடறதில்லை.''

''நான் நேசிப்பது உன்னை மட்டுமில்லை புவனா! உன் உணர்வுகளை; உன் எண்ணங்களை; உன் மனசை.''

புவனா புடைவையை மணலிலிருந்து எடுத்தாள். மணல் போக உதறினாள். சுருட்டிக் காகித உறைக்குள் வைத்தாள்.

''என்ன பண்ணப் போறே இந்தப் புடைவையை?''

''என் பிறந்த நாள் என்னிக்கு?''

''இன்னும் நாலு நாள் கழிச்சு. வியாழக்கிழமை.''

''நான் இன்ஸ்டிட்யூட்டுக்கு இந்தப் புடைவையை எடுத்துட்டு வர்றேன். டைனிங் ரூமிக்குள்ளே போய்ப் புடைவையை மாத்திக்கறேன். கோவிலுக்குப் போய்ட்டு இன்ஸ்டிட்யூட்டில் புதுப் புடைவையை உருவிட்டுப் பழசு கட்டிட்டு வீட்டுக்கு கிளம்பிடுவேன், சரியா?''

''பொம்பளைங்க பயங்கரமான ஆளுங்கப்பா.''

''அது தெரிஞ்சுக்கிட்டுக் காதலிக்கற ஆம்பளைங்களை என்னன்னு சொல்றது?''

கண்ணகி சிலை வரை தொடர்ந்து சுதாகர் வர, புவனா அவனிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

இந்த நிலை என்று மாறும் என்று புரியவில்லை. மூத்தவள் கோகிலாவுக்கு வயது இருபத்தைந்து ஆகிறது. ஐந்து வருஷமாக சூப்பர் மார்க்கெட் ஒன்றில் விற்

பனைப் பெண்ணாக வேலைக்குப் போ
வருகிறாள். இரவு எட்டரை மணிக்
வேலை முடித்து வரும் அவளுடைய பன்
ரெண்டு மணி நேர வேலைக்கு அறுநூ
ரூபாய் சம்பளம். அதன் பிறகு இருபத்
மூன்று வயதில் புவனா. +2, ஷார்
ஷாண்ட்; டைப்பிங் முடித்து விட்டு நல்
வேலைக்கு அலைகிறாள். இவள் படித்
இன்ஸ்டிட்யூட்டில் இன்ஸ்ட்ரக்டரா
வேலை. சுதாகர்தான் பதினைந்து டை
ரைட்டர்களை வாங்கிப் போட்டு இன்
டிட்யூட் நடத்துகிறான். சம்பளம் மாத
முந்நூறு ரூபாய்; போனஸ் சுதாகரின் காதல்
மூன்றாவது காவேரி. பி. எஸ்ஸி. கடைசி
வருஷம். அடுத்தவன் பாலமுருகன். பாலி
டெக்னிக் படிக்கிறான். டிப்ளமா முடித்
விட்டு பார்ட்-டைம் என்ஜினியர் ஆகி விடு
வேன் என்கிறான். கடைசிப் பெண் சாந்தி
ஒன்பதாவது படிக்கிறாள்.

மாறும். இந்த நிலை கண்டிப்பாக
மாறும். நாளை எனக்கே ஒரு நல்ல அரச
உத்தியோகம் கிடைக்கலாம். பாலமுருகன்
என்ஜினியரிங் முடித்து விட்டுக் கை
நிறையச் சம்பாதிக்கலாம்.

'கலங்காதிரு மனமே!' என்று கண்ண
தாசனை ஜெபித்துக் கொண்டே வீட்டுக்குள்
நுழைந்தாள்.

உள்ளே கூடத்தில் கோலம் போடப்
பட்டிருந்தது. கோலத்தின் மீது பலகை.
பலகையின் மீது சாந்தி தலைகுனிந்தபடி
உட்கார்ந்திருந்தாள். அழுததற்கு அடை
யாளமாய்க் கண்கள் வீங்கியிருந்தன.

''என்னம்மா?'' சந்தேகத்துடன் அம்
மாவை விசாரித்தாள்.

''சாந்தி பெரிசாயிட்டா.''

''அதை ஏன் மூஞ்சியைத் தொங்கப்
போட்டுட்டுச் சொல்றே?'' என்றவள் சாந்தி
அருகில் போனாள். அவள் முகம் தொட்டு
நிமிர்த்தினாள்.

''ஏய் சாந்தி! தா என்னைப் பாரு. நீ
படிக்கிற பொண்ணு. இது பயப்படற விஷய
மில்லை. சிரி.''

''அவ எங்க சிரிப்பா? கையில் காசில்
லாதப்ப பெரிசாயி நிக்கறயேன்னு அம்மா
சொல்லிட்டே இருக்கு...'' என்றாள்
காவேரி.

''காசில்லைன்னா பெரிசாவக்
கூடாதா?'' என்றாள் புவனா.

''நல்லாக் கேளு'' என்றாள் கோகிலா.

புவனா பெரியவள் ஆனதற்குத் தா
மாமா சாட்டின் பாவாடையும், ஃபுல்
வாயில் தாவணியும் வாங்கிக் கொடுத்தார்
அந்தச் சமயம் அப்பாவுக்கு அத்தனை வரு
மானமும் இல்லை. புவனா ரொம்ப நாட்கள்
வரை அந்தத் தாவணியையும், பாவாடை

யையும் வைத்திருந்தாள். இப்பொழுது ரெண்டு அக்காமார்கள் சம்பாதித்தும் புதுசுக்கு வழியில்லை பாரேன் என்று குழந்தை நினைத்து விட்டால்?

''காவேரியோட பழைய த ா வ ணி, பாவாடையைப் போட்டுக்கட்டும்,'' என்றாள் அம்மா.

''பாவாடை ஜாக்கெட் வேண்ணாப் பழசா இருக்கட்டும். தாவணி மட்டுமாவது புதுசு வேணும்'' என்றாள் கோகிலா.

மற்ற சகோதரிகளும் அதைத்தான் வலியுறுத்தினார்கள்.

''நல்ல தாவணிக்கு நூறு ரூபாய் ஆவும்'' என்று அம்மா சீறினாள்.

''ஆவட்டும்.''

''வீட்டில் ப ண ம் காய்ச்சிமரமா இருக்கு?''

புவனா தோள் பையிலிருந்து உறையை எடுத்தாள். புடைவையை வெளியில் எடுத்தாள். ஷிஃபான் புடைவை. அவளுக்குப் பிடித்த மருதாணி நிறப் புடைவை.

''ஏதுடி புடைவை இது?'' கோகிலாவும், காவேரியும் கேட்டார்கள்.

''புடைவைக் கடையில் சீட்டு கட்டியிருந்தேன்.'' பொய் சொல்லி விட்டு புடைவையைப் பிரித்து ''கோகிலா இந்தப் பக்கம் புடி. காவேரி நீ அந்தப் பக்கம் புடி.''

புவனா கத்தரிக்கோலை எடுத்துக் கொண்டு வந்தாள். ஒரு நிமிஷம் வியாழக்கிழமையும், சுதாகரும் நினைவில் வந்தனர். சுதாகர் மிகவும் ஏமாந்து போவான். ஏமாற்றம் கோபமாக மாறலாம். தன் முதல் பரிசு நிராகரிக்கப்பட்டதால் ஏற்படும் கோபம். என்ன செய்வது? ஒரு நிமிட சலனம்தான். பிறகு சர்ர்ரென்று புடைவையைக் கிழித்தாள். புடைவையின் ஜாக்கெட் பகுதியை வெட்டி, காவேரி, சாந்திக்கு ஜாக்கெட் தைக்க டைலரிடம் எடுத்துக் கொண்டு போனாள். கோகிலா விலைகுறைவாக சாந்திக்கு சீட்டித் துணியில் பாவாடை எடுத்துக் கொண்டு வந்தாள். நான்காம் நாள் சாந்தியை மஞ்சள் நீராட்டி, புது ஆடைகளை உடுத்திக் கொள்ளச் சொன்னார்கள். தாவணி ரொம்ப நல்லா இருக்குக்கா என்று சாந்தி அதன் வழுவழுப்பைத் தொட்டுத் தொட்டு மகிழ்ந்து போனாள்.

நான்கு நாட்கள் கழித்து இன்ஸ்டிட்யூட் போகவே பயமாக இருந்தது புவனாவுக்கு. வேறு வழியில்லாமல் கிளம்பினாள். சுதாகரைப் பார்க்கச் சங்கடமாக இருந்தது. அவன் கறுப்பு நிற முழுக்கை சட்டை, அவளுக்குப் பிடித்த க்ரீம் கலர் பேண்ட்டுடன் தயார் நிலையில் இருந்தான். ஷேவ் பண்ணிக் கொண்டிருந்தான். பவுடர் பூசிக் கொண்டிருந்தான். புடைவை இல்லை என்பது தெரிந்தால் வள் என்று விழுவானா? உனக்குப் பெரிய குட்பை புவனா என்று சொல்லி விடுவானா?

''சுதாகர்! கொ ஞ் ச ம் உள்ளே வாங்க....''

சுதாகர் அவள் பின்னால் டைனிங் ரூமுக்குள் போனான்.

''என்ன புவனா?'' ஏன் மூணு நாளா வரலை?''

''என் கடைசித் தங்கை பெரிய பொண்ணாயிட்டா.''

''குட்! எனக்கு ஸ்வீட் எங்கே?''

புவனா தலையைக் குனிந்து கொண்டாள்.

''தாவணி வாங்கக் கூட காசில்லை.''

''என்னிடம் வந்து கேட்டிருக்க வேண்டியதுதானே?''

புவனா பதில் பேசவில்லை.

''தன்மானம் தடுக்கும். ஏற்கெனவே முந்நூறு ரூபாய் வரைக்கும் கடன் வாங்கியாச்சே... இவனிடம் திருப்பியும் போய் நிற்கணுமேங்கற தன்மானம். அதனால வரலை. மக்கு! நான்தான் புதுப் புடைவை எடுத்துக் கொடுத்து விட்டேன் இல்லே? அதைக் கிழிச்சுத் தாவணியாக்க எவ்வளவு நேரம் ஆகும்?''

புவனாவின் உடம்பு ஆடத் தொடங்கியது. புரிந்து கொள்ளுதல் என்பது ஏதோ ஒரு கணத்தில்தான் காதலில் நிகழும். அதுவே அந்தக் காதலின் இறுக்க முடிச்சாகும்.

''இண்டர்வியூ நடக்கும் போது, எம்.டி. க்கு திடீர்னு உடம்பு சரியில்லேன்னு இண்டர்வியூவை மறு நாளுக்கு ஒத்தி வச்சுட்டாங்களாமே!''

''ஆமாம். அவர் எதிர்பார்த்த ஆள் அன்றைக்கு இண்டர்வியூவிற்கு வர லேங்கறது அப்பத்தான் அவருக்குத் தெரிய வந்தது!''

- விஜயம்.





நேற்றுவரை நந்தவனம்

24

வருகிற வெள்ளிக் கிழமை முகூர்த்தம். இன்னும் சரியாய் ஏழே நாட்கள்.

உற்சாக மி கு தி யி ல் ராஜேஸ்வரி, எல்லாச் சடங்குகளையும் செய்ய வேண்டும் என்று பறந்தாலும், குமரன், தாயின் மனம் புண்படாதவாறு அடக்கிக் கொண்டுதான் இருந்தான்.

''அம்மா, நலங்கு, ஊஞ்சல், மாலையும் கழுத்துமா சுவாமிமலைக்குப் போறது... எல்லாத்தையும் செய்யறோம். ஆனா, கூட்டம் அதிகமாக் கூட்டாதே. ரொம்ப நெருக்க மானவங்களும், உறவுக்காரங்களும் போதும். கல்யாண மண்டபம் கச்சேரி இதெல்லாம் வேண்டாம்....''

பட்டுப் புடைவைகளை வ ா ங் கி க் கொண்டு திரும்பும் போதே அவன் சொல்லி விட்டான்.

ராஜேஸ்வரி, மீராவின் க ர த் தை த க் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

''அம்மாடி... உன் வீட்டு மனுஷங்க, சினேகிதிங்க யார் யாருக்குப் பத்திரிகை அனுப்பணுமோ - ஒரு லிஸ்ட் போடு...''

''சரி...''

''புடைவைக்கு மாட்ச்சா வாங்கின ரவிக்கைத் துணிங்களை எல்லாம் சீக்கிரமாத் தைக்கக் கொடு. ஏண்டா குமரு, நம்ம ஊருல ஃபாஷனா ர வி க் கை தைக்கிறவன் யாருடா?''

''ம்... என்னைப் போய்க் கேளு...''

''இவன் ஒரு சாமியார். அப்பா அப்படியே மதனகாமராஜன். பிள்ளை - ரிஷிய சிருங்கன்.. இதுவே, உங்க அப்பான்னா, 'டக்'குனு சொல்லுவாரு.''

காரே சிரிப்பில் குலுங்கியது. புரிந்ததோ. இல்லையோ - இளவரசுவும் சேர்ந்து சிரித்தான்.

''மீரா... பிடிக்கறதோ பிடிக்கலையோ. என் நகைங்களை எல்லாம் அன்னிக்கு நீ போட்டுட்டுத்தான் ஆகணும். மாட்டேன்னு சொல்லிடாதே. அப்படியே ந கை யு ம், நட்டுமா - கூறைச் சேலையோட நிறைஞ்ச மனுஷியா - என் மகன் பக்கத்துல நின்னு ஒரு போட்டோ பிடிக்கணும். அதைப் பெரிசா ஃபிரேம் போட்டு, ஹால்லே மாட்டணும். ஆமா.....''

மீராவுக்குக் கண்கள் கலங்கின. துக்கம் நெஞ்சுக்குள் முள் பந்தாய் இம்சித்தது.

'இப்படி பாசத்தைக் கொட்டுகிற மனுஷிக்கு, நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்...'

வீட்டில் கூட, குமரனை தனியே சந்தித்துப் பேசிய போது சொன்னாள்:

''உங்க அம்மா, நம்ம கல்யாணத்தைச் சுத்தி, ஏகப்பட்ட கனவுகளை வளர்த்திட்டிருக்காப்பல இருக்கு...''

''ஆமா. அவளுக்கு இந்த உலகத்துல இருக்கற ஒரே லட்சியம், பிடிப்பு - நான் தான். தினமும் செத்துப் போன புருஷனையும், மருமகளையும் நினைச்சு அழுதிட்டிருந்தவளுக்கு - இது எதிர்பாராத திருப்பம்...!''

மீரா புன்னகை செய்தாள்.

அவன், அவளுக்கு மட்டும் கேட்கும் தொனியில் சொன்னான்:

''எங்கம்மாவுக்கு இன்னமும் பழைய நாளைய ஆசையெல்லாம் உண்டு மீரா.... நிறைய நகை, பட்டுப் புடைவை, மஞ்சள் பூசிக் குளியல், நெத்தி நிறைஞ்ச குங்குமம், செவ்வாயும் வெள்ளியும் தவறாம எண்ணெய் ஸ்நானம்... இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்கு இதையெல்லாம் ஏத்துக்கக் கஷ்டமாத்தான் இருக்கும். கொஞ்ச நாளைக்குச் சகிச்சுக்க... மெள்ள மெள்ள அம்மாவோட சுபாவத்தை மாத்திடலாம்...''

மீரா புன்னகையுடன் தலையசைத்தாள்.

அனுராதா ரமணன்

''இத்தனை வயசுக்கு மேல உங்கம்மா எதுக்காகத்தன்னை மாத்திக்கணும்? அவங்க இப்படியே இருக்கட்டும். அதான் எனக்குப் பிடிச்சிருக்கு. இன்னும் பார்க்கப் போனா - உங்களை நான் கல்யாணம் செஞ்சுக்கச் சம்மதிச்சதே, உங்க அம்மாவை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கறதாலேதான்....''

அவள், கண் சிமிட்டிச் சிரிக்க, குமரன் குறும்பாய் அவளைப் பார்த்தான்.

''ஓஹோ... இத்தனை நாள் இது எனக்குத் தெரியாமல் போச்சே....'' ''பேசாம, எங்க அம்மா கூடவே இரு தாயே.... நானும் இப்படியே இருக்கேன்னு சொல்லியிருப்பேனே. மறுபடியும் கல்யாணம்; பெண்டாட்டி; அவளோட கோபதாபம்; பெருமூச்சு; அழுகை; சண்டை; சமாதானம்; தோப்புக்கரணம்.. எல்லாம் வேண்டாம் பாரு.....''

''கரெக்ட். நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனா ஊர் உலகம் எல்லாம் இருக்கு பாருங்க... உங்களை மாதிரி ரெண்டுங்கெட்டான் இருக்கற வீட்டுல, என்னை மாதிரி சின்னப் பொண்ணு தங்கியிருந்தா - வாயில வந்தபடி பேசுமே!''

''நான் ரெண்டுங்கெட்டானா?''

குமரன் பொய்க் கோபம் காட்டி, அவளை அடிப்பதற்காகக் கையை ஓங்குவது போல பாவனை செய்ய - மீரா, 'சட்'டென அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

இத்தனை நாட்களும் சூழ்ந்திருந்த குழப்பமெல்லாம் விலகி, மனசு குளிர்ச்சியாக இருந்தது அவளுக்கு.

இந்த வீடு.... இதில் தினமும் அவளுக்காகக் காத்திருக்கும் வேலைகள், ராஜேஸ்வரியின் அன்பான அரவணைப்பு.....

ராஜேஸ்வரியின் நினைவு வந்ததுமே - மீரா, அவள் இரவு படுக்கப் போகும் முன் சாப்பிடும் மாத்திரைகளை எடுத்துக் கொண்டு போனாள்.

இரண்டு நாட்களாய் அளவுக்கு மீறிய அலைச்சலில் ராஜேஸ்வரி கொஞ்சம் வாடினாற் போலக் காணப்பட்டாள்.

ரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதாக டாக்டர் கூறியிருந்தார்.



''நீங்க அளவுக்கு மீறி உணர்ச்சி வசப்படறீங்க போல இருக்கு. கொஞ்சம் நிதானப்படுத்திக்கணும். ராத்திரி ஒம்பது மணிக்கெல்லாம் படுக்கப் போயிடணும்....''

மீராவிடம், டாக்டர் சில மாத்திரைகளைக் கொடுத்து வேளை தவறாமல் கொடுக்கச் சொல்லியிருந்தார். போகிற போக்கில் அந்த அம்மாளை ஓர் அதட்டல் போட்டுவிட்டுச் சென்றார்.

''இத்தனை நாளும் உங்களுக்கு பிளட் பிரஷர் ஏறியிருந்ததுன்னா அதுக்குக் காரணம் இருக்கு. இப்ப என்னம்மா? அதான் கல்யாணத்துக்கு முன்னாலேயே - மருமகளை வீட்டோட கொண்டு வந்து வச்சுட்டீங்களே....''



வங்கி மானேஜர் : ''பசு மாட்டுக்கு லோன் வாங்க வந்தப்ப 'தினமும் ஒழுங்காக் கட்டறேன்'னு சொல்லிட்டு, காலணாக் கட்டாமல் வெச்சுட்டீங்களே...?''

''நான் கட்டறேன்னு சொன்னது மாட்டைத்தான் எசமான்...!''

- சீர்காழி வி. ரேவதி.

மீரா, ராஜேஸ்வரியின் அறைக்குள் நுழைந்த போது, அவள், தனது இரும்பு பீரோவைத் திறந்து வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நகைப் பெட்டியாய் எடுத்து வெளியில் கட்டிலின் மீது கடை பரப்பிக் கொண்டிருந்தாள்.

''என்ன நீங்க... இன்னும் படுக்கலையா.... சரியாப்போச்சு... இதையெல்லாம் சரிபார்க்க - இப்பத்தான் நேரம் பார்த்தீங்களா?''

ராஜேஸ்வரி புன்னகை செய்தாள்.

''இந்தா... இந்த நகையெல்லாத்தையும் எடுத்துப் பாரு... வளையல்களை மட்டும் இன்னொரு தரம் பாலீஷ் போடலாமான்னு பார்க்கறேன்....''

''ஆகட்டும். நீங்க இன்னும் மாத்திரையே போடல்லே. ஒம்பது மணிக்கு மாத்திரை போட்டுட்டு, அப்புறம் ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் தூக்கம் வராம தவிப்பீங்க....''

ராஜேஸ்வரி, ஓர் ஆசிரியைக்குக் கீழ்ப்படியும் ஆசிரியை போல, அவள் தந்த மாத்திரைகளை வாங்கி, வாயில் போட்டுக் கொண்டாள்.

மீரா, அவள் முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

''அழுதீங்களா என்ன?''

அவள் திடுக்கிட்டு, அவசரமாய்ப் பதிலளித்தாள்.

''இல்லையே....''

''பின்னே... கண் ரெண்டும் சிவந்திருக்கு... முகமெல்லாம் உப்பியிருக்கு....''

ராஜேஸ்வரி, பெருமூச்சு விட்டாள்.

''என்னதான் பொல்லாத மனுசரா இருந்தாலும் இது மாதிரி சமயங்களிலே அவர் நினைப்பு வராம இருக்குமா மீரா? அதோடு தெய்வானை நினைச்சிட்டேன். பாவி மக. இருந்தவரைக்கும் எதையுமே அனுபவிக்கலே.''

மீரா, அவள் தோளைத் தொட்டுத் தன் பக்கம் திருப்பி அணைத்துக் கொண்டாள்.

''எதையாவது நினைச்சு, மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க....''

''இல்லேம்மா....''

''என்ன இல்லே? நீங்க இப்படி இருந்தா, நானும் எதையாவது நினைச்சிட்டு மூலையில போய் உட்கார்ந்திடுவேன். சரியா....''

அவள், மிரட்டுகிற பாவனையில் சுண்டு விரலை உயர்த்த, ராஜேஸ்வரி பதறிப் போய் விட்டாள்.

''அம்மாடீ... அதெல்லாம் வேண்டாம்.''

''வேண்டாம்னா படுங்க... அட, இந்த வளையல் ஜோரா இருக்கே....''

மீரா, ராஜேஸ்வரியின் கவனத்தைத் திருப்பும் நோக்கத்தில் ஏதோ ஒரு வெல்வெட் பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு, போலியாய் வியக்க -

ராஜேஸ்வரி, அத்தனை பெட்டிகளையும் ஒட்டு மொத்தமாய்த் தூக்கி, அவள் கையிலேயே வைத்தாள்.

''நிதானமா ஒவ்வொண்ணாப் போட்டுப் பாரு....''

மீராவின் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறை....

அவள், நகர்ந்ததும் மெத்தையில் அப்படியே சுருண்டு படுத்தாள் ராஜேஸ்வரி.

இரண்டு நாட்களாய் ரத்தக் கொதிப்பு

ஏறித்தான் இருக்கிறது. அதற்குக் காரணம் அவளறியாததல்ல.

புடைவைக் கடைக்குப் போய் வந்த அன்றிரவே ஆட்டோ டிரைவர் ஞானம், வாசலிலேயே இவளுக்காகக் காத்திருந்து, அந்தக் கடித உறையை ரகசியமாய் எடுத்துக் கொடுத்தான்.

''என்ன ஞானம்?''

''அந்தப் பொண்ணு நி ர் ம ல ா கொடுக்கச் சொல்லி, கொடுத்திட்டுப் போச்சுங்க....''

''வீட்டுக்கா வந்தா?''

''ஆமா....''

அந்தக் கணத்தில் கடிதத்தை வாங்கி மறைத்து விட்டு, சகஜமாய் வளைய வர வேண்டிய சந்தர்ப்பம்.

தனிமையில், பரபரப்புடன் பிரித்துப் படித்தாள்.

''மதிப்பிற்குரிய ராஜேஸ்வரி அம்மாளுக்கு,

வணக்கம். தங்களின் உத்தரவை மீறி, உங்களுடன் தொடர்பு கொள்ளவோ, கடிதமெழுதவோ முயற்சி செய்ய மாட்டேன் என்று நான் அளித்துள்ள சத்தியத்தை முதலும், கடைசியுமாய் நான் மீற வேண்டியிருக்கிறது. நிர்ப்பந்தம். வேறு வழியில்லை... என்னை மன்னித்து விடுங்கள்.

நிற்க - நம்மிருவருக்கும் ஒரேயொரு விரோதிதான் இருந்தார் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போதோ இன்னொருவர் கிளம்பியிருக்கிறார், ரவி என்கிற பெயரிலே. இக்கடிதத்தைப் படித்து விட்டுத் தயவு செய்து கிழித்துப் போடுங்கள். இல்லையெனில் - உங்கள் நிம்மதி பறிபோய் விடும்.....

அம்மா, நாமிருவரும் சே ர் ந் து செய்த.....''

இதற்கு மேல் இளவரசு படிக்க விடவில்லை.... ''பாட்டீ'' என்று ஓடிவந்து அவள் தலைப்பைப் பிடித்துக் கொண்டு ஆடினான்.

தாற்காலிகப் பாதுகாப்பாகக் கடிதத்தை - எட்டாய் மடித்து பீரோவில்தான் வைத்தாள்.

இப்பொழுது வைத்த இடம் நினைவுக்கு வரவில்லை.

பீரோவையே தலை குப்புறக் கவிழ்த்தாயிற்று...

கடிதம் எங்கே போயிற்று....

இரண்டு நாட்களாக இதுவே புழுக்குடைச்சலாய்... யோசிக்க யோசிக்கத் தலையை வலித்தது...

''இந்தப் பொண்ணு எதுக்காக இதையெல்லாம் லெட்டர்லே எழுதி வச்சுது.''

ராஜேஸ்வரி தவியாய்த் த வி த் து க் கொண்டிருந்த அதே நேரத்தில் -

மீரா, நகைப் பெட்டிகளை மெள்ள அடுக்கிவைக்க - அந்தக் கடிதம் - எட்டாக மடிக்கப்பட்ட கடிதம் அவள் காலடியில் விழுந்தது.

அவள் குனிந்து எடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

(அடுத்த இதழில் நிறைவுறும்)



நிருபர் : ''உங்க படம் அலுமினியம் ஜுபிலி கொண்டாடும்...''

தயாரிப்பாளர் : ''என்ன சொல்றீங்க?''

நிருபர் : ''ஒரு வாரம் ஓடும்னு சொல்ல வந்தேன்...''

- வி. கி. குமார்.

'' 'தாயின் தந்தை' என்று படம் எடுத்து ஏகப்பட்ட நஷ்டமாயிடுச்சு அவருக்கு!''

''அப்புறம் எப்படிப் பணக்காரரானார்?''

''அதே படத்தை மீண்டும் 'ஆத்தாவின் தாத்தா' என்று பெயர் மாற்றி ரிலீஸ் பண்ணினார்; செம வசூல்!''

- குடந்தை எல். ராம்பிரபு.



அமீனாவின் அவலம்; அன்றாட வியாபாரம்!

பத்ருடீனும் ஸபீராபேகமும் ஆகஸ்ட் 10-ம் தேதி ஹைதராபாத் விமான நிலையத்தில் தங்கள் பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் 'டாடா' காண்பித்துத் திரும்பிய போது, இன்னும் இரண்டு மணி நேரத்தில் ஒரு பெரும் சூறாவளி அடிக்கப் போகிறது என எதிர்பார்க்கவே இல்லை. விமானத்தில் அந்தப் பத்து வயது முஸ்லீம் சிறுமி அமீனா அழுது கொண்டே இருந்தாள். அவளது அருகில் இருந்த அறுபது வயது அராபியன் அவளைச் சமாதானப்படுத்தத் தொடும் பொழுதெல்லாம் அமீனா கூக்குரலிட்டாள்.

விமானப் பணிப்பெண் அம்ருதா அலுவாலியாவுக்கு அமீனாவைப் பார்த்தவுடனேயே ஓர் இரக்க உணர்ச்சி ஏற்பட்டது. அம்ருதாஅவளை அழைத்து விசாரித்தாள்.

''என் பெயர் அமீனா. என் தந்தை ஹைதராபாத்தில் ஆட்டோ ஓட்டிப் பிழைப்பவர். ஆகஸ்ட் 8-ம் தேதி இரவு எனக்கும் ஷேக்கிற்கும் கல்யாணம் நடந்தது. அவன் பெயர் கூட எனக்குத் தெரியாது. எந்தவூர் என்பதும் தெரியாது. என் மூத்த சகோதரியை வேண்டாம் என்று சொல்லி, என்னைக் கல்யாணம் செய்து கொண்டான். நான் அவனுடன் போக விரும்பவில்லை..........'' என்று தேம்பியபடியே தனது அழுகைக்கான காரணத்தை அமீனா கூறினாள்.

இந்த பரிதாபக் கதை விமானப் பயணிகளிடமும் இரக்கத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. ஆறாயிரம் ரூபாயை அவள் தந்தைக்குக் கொடுத்து 'மைனர்' அமீனாவை 'விலை'க்கு வாங்கி இருக்கிறான், சவூதி அரேபியன் யாஹ்யா அல்ஸிங் என்பது தெரிந்தவுடன், பாலம் விமான நிலையத்துடன் விமானம் செலுத்தும் குழு தொடர்பு கொண்டு போலீசை வரவழைத்தது.


யாஹ்யா முறைப்படி மணம் நடைபெற்ற நிக்காஹ் நாமா பத்திரத்தைக் காண்பித்தான். அதில் அவள் வயது 32 என இருந்தது. யாஹ்யாவை டெல்லி போலீஸ் கைது செய்தது. அமீனாவை நாரீ நிகேதனில் தங்கச் செய்து, வைத்தியப் பரிசோதனைக்கும் அனுப்பியது. மறுநாள் பத்திரிகைச் செய்தி வந்த போது அமீனா சம்பவம் பிரபலமாகி விட்டது.

சவூதி, குவெய்த், பஹ்ரான், ஓமன் முதலிய வளைகுடா நாடுகளிலிருந்து வயோதிக அராபியர்கள் ஹைதராபாத்திற்கு



✦ அமீனா

✦ கிழமாப்பிள்ளை யாஹ்யா



✦ விமானப் பணிப்பெண் அம்ருதா



கடந்த மூன்று மாதங்களாக ராஜீவ் காந்தி கொலை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பரபரப்புடன் வெளியாகின்றன. அவற்றை மிக ஆர்வமுடன் படித்திருப்பீர்களே! எங்கே இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

குவிஸ் டைம்

1. ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய 'தனு' பயன்படுத்திய வெடிகுண்டுக்கு என்ன பெயர்?

2. தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் முதன் முதலாய்க் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலியின் பெயர் என்ன?

3. ''சிறப்புப் புலனாய்வுக் குழுவினர், கொலையைப் பற்றி விசாரிக்க யாழ்ப்பாணம் சென்றனர்'' - சரியா? தவறா?

4. கொலையாளி பற்றித் துப்புக் கொடுப்பவர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகை எவ்வளவு? பின்னர் அது எவ்வளவுக்கு உயர்த்தப்பட்டது?

5. சி.பி.ஐ., ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக உதவி கோரிய அயல்நாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் எவை எவை?

6. வேதாரண்யத்தைச் சேர்ந்த சண்முகத்தின் மரணம், ஏன் சர்ச்சைக்குரியதானது?

7. சிவராசனுக்குப் போலி டிரைவிங் லைசென்ஸ் எடுத்துக் கொடுத்தாகக் கருதப்படும் போராளி யார்?


8. பேரறிவாளனின் பங்கு என்ன என்று சந்தேகிக்கப்படுகிறது?

9. சிவராசனின் உண்மைப் பெயர் என்ன? சொந்த ஊர் எது?

10. ராஜீவ் காந்தி கொலையில் தொடர்புள்ள காயத்ரி, ஷாலினி ஆகியோர் யார்?

11. ராஜீவ் கொலை தொடர்பாக டெல்லியில் கைதான இருவர் யார்?

12. இது யாருடைய படம்? →



தொகுப்பு : மௌலி

குவிஸ் டைம் விடைகள் :

1. ஆர். டி. எக்ஸ். வெடிகுண்டு.

2. சங்கர்

3. தவறு. அவர்கள் போனது கொழும்புவுக்கு.

4. முதலில் அறிவிக்கப்பட்டது ஐந்து லட்சம். பின்னர் பதினைந்து லட்சமாக அதிகரிக்கப்பட்டது. (சிவராசனுக்கு 10 லட்சம், சுபாவுக்கு 5 லட்சம்)

5. இண்டர் போல், தி நார்கோடிக்ஸ் கண்ட்ரோல் பீரோ, ராயல் கனடியன் போலீஸ், ஸ்காட்லாண்டு யார்டு.

6. வேதாரண்யம் பயணியர் விடுதியில், சாப்பிட்டு விட்டுக் கை கழுவச் சென்ற போது, சுவரேறிக் குதித்துத் தப்பித்த சண்முகம், மறுநாள் காலை மரத்தில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். ஆனால் தற்கொலை செய்து கொண்டால் உண்டாகும் அறிகுறிகள் இல்லை. தொங்கிய நிலையில், கால்கள் தரையை யொட்டியவாறு இருந்தன. போலீஸ் - ஸி.பி.ஐ. காவலில் இருந்தார். எப்படி தப்பிக்க விடப்பட்டார்? நடு இரவில் சண்முகத்துக்குக் கயிறு எவ்வாறு கிடைத்தது? இவையெல்லாம் சண்முகத்தின் மரணத்தைச் சர்ச்சைக்குள்ளாக்கி விட்டன.

7. ராபர்ட் பயஸ்.

8. வெடிகுண்டு தயாரித்ததும், சிவராசனுக்காக வி.ஹெச். எப். ரேடியோ தொடர்புக் கருவிகள் அமைத்துத் தந்ததும்.

9. ராஜா அருமைநாயகம். யாழ்ப்பாணத்தில் உள்ள சாவகச் சேரி கிராமம்.

10. தனுவின் உண்மைப் பெயர்தான் காயத்ரி. சுபாவின் நிஜப் பெயர் ஷாலினி.

11. கனகசபாபதி, ஆதிரை

12. புகைப்படக்காரர் ஹரிபாபு.

கல்யாணச் சாப்பாடு

தமாஷ்வாலா

வாரத்தில் ஒரு முறையாவது நிம்மதியாகச் சயனித்து நேரங்கழித்து எழுந்திருக்கலாமென்றால், வேண்டுமென்றே எனக்கு வேண்டாத பாட்டை டு-இன்-ஒன்னில் போட்டு பாத்ரூமிற்குள் அடைக்கலம் புகுந்து கொண்டாள் என் பாரியாள்.

எரிச்சலும், ஆத்திரமும் பண்ருட்டியைப் பார்த்த தாமரைக் கனியாய் வெடிக்க, பட்டென்று டு-இன்-ஒன்னின் மண்டையில் அடித்து, மீண்டும் இன்பக்கனா எதிர்பார்த்துப் படுக்கையில் சுருண்டு பயனில்லை. சில நிமிட ஆர்யபட்டா சந்தோஷம்தான். பாத்ரூமிலிருந்து ஏவுகணை, மனைவி ரூபத்தில் வந்து என்னை மறுபடி தாக்கியது.

''என்னங்க. நீங்க எத்தனை மணி வேண்டுமானாலும் தூங்குங்க. நான் வேண்டாங்கலை. என்ன சமைக்கட்டும்னு சொல்லிட்டுப் படுங்க.''

''ஏன் இப்படி என் உசிரை வாங்கறே? நீ என்ன சமைச்சா எனக்கென்ன? நா என்னவோ இங்கே சாப்பிடப் போறதில்லே. இன்னிக்கு ஐயாவுக்கு அமர்க்களமான கல்யாணச் சாப்பாடு. பத்ரி தெரியுமில்லே. அவன் அப்பாவுக்கு சஷ்டியப்தபூர்த்தி. இன்னிக்கு சாப்பாடு உபயம் பத்ரி. என்னைத் தொந்தரவு பண்ணாதே'' என்று கூறித் தூங்கியவன்தான். மீண்டும் எழுந்த போது மணி ஒன்பதை நெருங்கியிருந்தது. மனைவிக்காக நான் குரல் கொடுக்க, வீட்டு வேலைக்காரி முனியம்மா முன்வந்து நின்றாள்.

''அம்மா எங்கே?''

''ஐயா, வூட்ல சோறு தின்னப் போவலையாம். அம்மா அவுக வூட்டுக்குப் போயி...''

சே! நாம இலேசாகக் கோடி காட்டினால் போதுமே? துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டாவாகப் போயிடறாங்க பிறந்த வீட்டுக்கு. தூங்கி எழுந்தவுடன் முனியம்மா கொடுத்த முதல் சேதி எரிச்சலை ஏற்படுத்த அவள் மீது பாய்ந்தேன்.

''சரி. நீ எதுக்கு நிக்கறே? வீட்டுக்குப் போக வேண்டியதுதானே.''

''நீ சரியா வூட்டப் பூட்டாம போயிடுவியாம். நீ போனதுக்கப்பால என்னைய செக் பண்ணிட்டு போவச் சொல்லிச்சு அம்மா.''

சே! நாம சம்பளம் கொடுக்கிற வேலைக்காரிக்கு இருக்கிற மதிப்பு எனக்கில்லையே என்று நொந்து கொண்டே காப்பிக்காகச் சமையலறைக்குள் நுழைய யத்தனிக்கையில், ''சாமி உள்ளாற போவாத. அங்கே ஒண்ணுமில்ல. நீ பாட்டுக்குக் காப்பி போடறேன்று 'காஸ்'ஸைத் தொறந்து கலாட்டா பண்ணாதே!''

''என்னம்மா உன் மனசுல நினைச்சிக்கிட்டிருக்கே? இந்த வீட்ல நீதான் எஜமானியா?''

''அய்யய்யோ! ஐயா பெரிய்ய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. அம்மா என்னாண்ட சொல்லச் சொன்னாங்க. அம்புட்டுத்தான்.''

இனி பேசிப் பிரயோஜனமில்லை என்று தீர்மானித்து பத்ரி வீட்டுக் கல்யாணத்திற்குக் கிளம்பத் தயாரானேன். பஸ்ஸுக்காகக் காத்திருக்க, 'அகோர பசி' எனக்கு இடம் கொடுக்காததால் ஆட்டோ பிடித்துச் சென்றேன்.

சத்திரத்தின் வாயிலில், ஆட்டோவிலிருந்து நான் இறங்கியதுதான் தாமதம், ஒரு வெற்றிலை குதப்பிய மனுஷன் கல்யாணத்திற்கென்றே பிரத்யேகமாக உபயோகப்படுத்தப்படும் ஜிப்பா சகிதமாக, 'அடடே, வாடா மௌலி'' என்று என் கைத்தலம் பற்றினார். பற்றிய என் கையை விடாமல், ''என்னைத் தெரியறதா?'' என்றார்.

''உங்களைத் தெரியாமலா,'' என்று நழுவப் பார்த்தேன். மனுஷன் என்னை விடுவதாயில்லை.

''நான் யார்னு சொல்லு!''

''நீங்கதானே...'' - முழித்தேன்.

''என்ன முழிக்கற? இன்னும் அந்தத் திருட்டு முழி மாறவே இல்லே...''

இப்போது இருக்கிற பசியில் இந்தக் கிழவனிடமிருந்து தப்பித்தால் போதுமென்று, என் தோல்வியை ஒப்புக் கொள்ள முடிவு செய்தேன்.

''சாரி மாமா! எனக்கு ஞாபகத்துக்கு வரலே.''

''அப்படிச் சொல்லிட்டா விட்டுடுவேன்னு நினைக்கிறியா? யாருன்னு யோசிச்சுப் பாரு. பத்து நிமிஷம் டயம் கொடுக்கறேன்.''

''ஒரு நிமிஷம்,'' என்று கையை விடுவித்துக் கொண்டு அவரிடமிருந்து தப்பினேன்.

உள்ளே சென்று, நான் வந்ததற்கு அத்தாட்சியாக மொய்ப் பணமான பத்து ரூபாயைப் பத்ரி வீட்டாரிடம் கொடுத்துவிட்டு, உடன் நாம் வந்த சாப்பாட்டு வேலையை முடித்துக் கொண்டால் நன்றாக இருக்காது என்று மரியாதை நிமித்தம் காலியாக இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தேன்.

சுற்றம் சூழ இருந்தவர்கள் பந்தி போட ஆரம்பித்ததை எனக்கு உணர்த்த, நான் ரிலே ரேஸ் கணக்காக, ஓடினேன். பெரிய அளவிலான 'மியூசிகல் சேர்' விளையாட்டு, சாப்பாட்டிற்காக இடம் பிடிக்க நடந்து கொண்டிருக்க, ஒரு காலியான நாற்காலி என் கண்ணில் பட, ஓரே தாவாகத் தாவி நாற்காலி முன் நின்றேன்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டு வெற்றிப் பெருமிதத்தோடு சட்டைக் காலரைத் தூக்கி விட்டு உட்கார்ந்தபோது, ''அய்யோ'', என்ற அலறல்.

என்ன அநியாயம்! நான் உட்காரு




வதற்குள் ஒரு பகாசுரன் புகுந்து விட்டான். எல்லாம் சனியன் நான் நின்றிருந்த நொடிப் பொழுதில் நடந்து விட்டது. ஒரு கணம் என்னையறியாது அவன் மடி மீது தவழ்ந்து விட்டேனாம்!

முதல் பந்தியில் விட்ட இடத்தை இரண்டாவது பந்தியிலாவது பிடித்து விட வேண்டும் என்று தீர்மானித்தவனாய்க் கடன் வசூல் பண்ணக் காத்திருக்கும் ஈட்டிக் காரன் போல் பகாசுரன் பின்னாலேயே நின் றிருந்தேன். இம்முறை துரதிர்ஷ்டம் பத்ரி யின் மாமா மூலமாக எனக்கு வந்தது. பந்தியைக் கவனிக்க வந்தவர் சும்மா இல்லா மல், "என்ன மௌலி பந்தியைக் கவனிக் கிறீங்களா? வெரி குட். இனி பந்தியை நான் கவனித்துக் கொள்கிறேன். உரிமையா உன்னிடம்தான் நான் கேட்டுக் கொள்ள முடி யும். அவசரமா நூறு நுனி இலை தேவை. போய் வாங்கிட்டு வந்துடேன்," என்று செல்லமாக முதுகில் தட்டி அனுப்பினார்.

"பாவி! என்னுடைய வயிற்றில் அடித்து விட்டு, முதுகில் என்ன அன்புத் தட்டு வாழ் கிறது" - முனகிக் கொண்டே சென்றேன். காய்ந்த வயிறு, சோர்ந்த முகத்துடன் நுனி இலைக்காக நாயாய் அலைந்து, இலை யுடன் திரும்பிய போது பலர் தாம்பூலப் பையுடன் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அடுத்த பந்திக்கு ஆயத்தமான நிலை யில் பலர் நின்று கொண்டிருக்க, நான் வாங்கி வந்த நுனி இலையைப் பத்ரியின் மாமாவிடம் ஒப்படைத்து விட்டுத் திரும் பிய போது...

அய்யகோ! ஓர் இடம் கூடக் காலி இல்லை. போதாக்குறைக்கு உட்கார்ந்திருந் தவர்கள் ஏதோ பெரிதாகச் சாதித்த மாதிரி வெற்றிக் களிப்புடன் இருந்தது என்னை நிலைகுலையச் செய்தது. தோல்வியில் துவண்ட வேதாளமாய் மீண்டும் காத் திருந்தேன் - அடுத்த பந்தி எதிர்நோக்கி.



"காதல் வசனங்களை அருமையா எழுதறீங்களே, எப்படி?"
"கொஞ்ச நாள் மெரீனா பீச்சுல சுண்டல் வித்துக்கிட்டிருந்த போது கிடைச்ச அனுபவம்தான்!"
- புனிதவல்லி இளங்கோ.

கடைசியில் அதிர்ஷ்டம் எனக்குக் கதவைத் திறந்த போதுதான், அந்தக் கொடுமை நிகழ்ந்தது. எனக்குப் போடப் பட்ட லட்டுவை நான் வாயில் போட்டுக் கொள்ளும் தருணத்தில், "ஒரு நிமிஷம்" என்ற குரல் வந்த திசையை நோக்கினேன்.

அரக்க பறக்க ஓடி வந்தான் பத்ரி "மௌலி! சீக்கிரம் எழுந்திரு," என்றான்.

ஒன்றும் புரியாது நான் எழுந்து நகர, பத்ரி அன்பொழுக, "வாங்க சார். உங்க ளுக்காகவே இவன் இடம் பிடித்து வைத் திருக்கிறான்," என்று தன் உயரதிகாரியை உட்கார வைத்தான்.

பின் என்னைத் தனியே அழைத்துச் சென்று, "உனக்குத் தெரியுமில்ல... இப்ப உட்கார வைத்தேனே, அவர்தான் என் னோட பாஸ். சாதாரணமா எந்தக் கல்யா ணங்களிலும் அவர் சாப்பிடவே மாட்டார்."

"அப்படியா?"

"என்ன! விட்டேத்தியாப் பேசறே? சாப்பிட உட்கார்ந்தவனை எழுப்பிட் டேன்னு கோபமா?"

"சே.. சே... அதெல்லாம் ஒன்று மில்லை."

"அதானே பார்த்தேன். நீயே சொல்லு. உரிமையா உன்னை எழுப்பறாப்ல வேற யாரையாவது எழுப்ப முடியுமா? உன்னை விருந்தாளியா நினைச்சிருந்தா விஷயமே வேறே. நீ நம்ம வீட்டு மனுஷங்கள்ல ஒருத்தன். என்ன, நான் சொல்றது சரி தானே?"

"ஆமாம்! ஆமாம்!" - வேறு வழி யில்லாது தலையாட்டினேன்.

பத்ரி இத்தோடு என்னை விடுவதாக இல்லை. மௌலி! தயவு செய்து அவசரப் பட்டு அடுத்த பந்தியில உட்கார்ந்து விடாதே. நம்ம வீட்டு மனுஷங்கள் எல்லா ரும் கடைசிப் பந்திலதான் சாப்பிடப் போறோம். அப்ப நீதான் எனக்குக் கம்பெனி கொடுக்கணும்" என்று போகிற போக்கில் பெரிய குண்டாகப் போட்டு விட்டுப் போனான்.

'இனி பொறுப்பதற்கில்லை' - இனியும் நான் காத்திருந்தால் 'பட்டினிக் கவிஞனாக' மாறி "வயிறு பொறுக்குதில்லையே" என்று பாட ஆரம்பித்து விடுவேன்.

யாருக்கும் தெரியாமல் சத்திரத்தை விட்டு வெளிவந்து தெருக் கோடியில் இருக்கும் சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந் தேன்.

சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டுவது என்பது ஒரு குழந்தையின் விளையாட்டு <u>அல்ல</u>

அறிமுகப்படுத்துகிறோம்

ஜீவன் க்ருஹ

உங்கள் வீட்டுக் கடன் முழுமையாக உள்ளடங்கும் ஒரு கச்சிதமான திட்டம்

தேர்ந்தெடுக்க இரு திட்டங்கள் – டபுள் கவர் மற்றும் ட்ரிபிள் கவர் ★

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் வீட்டுக் கடன் தொகையின் ஒரு பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கிற்கு ஈடான அடிப்படைத் தொகைக்கு ஒரு காப்பீடு எடுக்க வேண்டும். உங்களுடைய சமப்படுத்தப்பட்ட மாதாந்திரத் தவணை, கடன் தொகை, வட்டி மற்றும் ப்ரீமியம் தொகையைத் திருப்பி அளிப்பதை ஈடு செய்யும் வண்ணம் இருக்க வேண்டும்.

முதிர்வடைந்ததும், காப்பீட்டிலிருந்து பெறப்படும் தொகை வீட்டுக் கடன் கணக்கில் மிஞ்சியுள்ள தொகையைக் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

மாதாந்திர செலவு மிகவும் குறைவானது. கடன் அமலில் இருக்கும் சமயத்தில் நிகழும் இறப்பிற்கு பூரண பாதுகாப்பு உண்டு.

மேற்கொண்டு விவரங்களுக்கு ஏதாவது ஒரு எல்ஐசி ஏஜண்ட் அல்லது அருகாமையிலுள்ள எல்ஐசி அல்லது எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., அலுவலகத்தை அணுகவும்.

★ எங்களிடமிருந்து வீட்டுக் கடன் பெற்றதும் அல்லது எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டில் வீட்டுக் கடன் கணக்கு வைத்துள்ளவர்களுக்கு ட்ரிபிள் கவர் வசதி கிடைக்கும்.



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பரிவர்த்தனை

வேந்தன்

அப்பா, தபால்காரன் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படித்துக் கொண்டே உள்ளே வந்தார்.

''என்னங்க... யார்கிட்டேயிருந்து லெட்டர் வந்திருக்கு?'' அம்மா ஆவலுடன் கேட்டாள்.

''சுந்தரராமன்னு ஒரு வரனைச் சொன்னாரே தரகர்; அவங்க இன்னைக்கிச் சாயந்திரம் குடும்பத்தோட பெண் பார்க்க வர்றாங்களாம்.''

''ரெண்டு நாள் முன்னாடியே வந்து சேருகிற மாதிரி லெட்டர் எழுதியிருக்கக் கூடாதா?''

அம்மா அலுத்துக் கொண்டாள்.

''அவங்க என்னவோ சரியாத்தான் போட்டிருக்காங்க. நம்ம பழைய அட்ரஸ்ல போய் ரெண்டு நாள் சுத்தியிருக்கு. அதனால தான் லேட். இங்க பார்,பையன் போட்டோவுடன் அவனப்பத்தின விவரங்களையும் எழுதியனுப்பியிருக்காங்க.''

மனம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், வேலைகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

''பையன் அப்படியொண்ணும் அழகில்ல... என்னங்க இது; பையன் ஏதோ ஒரு சாதாரண பிரைவேட் கம்பெனில வேலை செய்யறான் போலிருக்கே? ''

''ம்...ம்....சம்பளம் கூட ஆயிரத்து எண்ணூறுதான் வாங்கறான்னு எழுதியிருக்காங்க பார்.'' அப்பா சுவாரஸ்யமின்றிக் கூறினார்.

''இந்த இடம் வேணாங்க.''

அம்மா நறுக்கென்று தன் விருப்பமின்மையைத் தெரிவித்தாள்.

''வர்றவங்கள எப்படி வேணாம்னு சொல்றது? வந்து பெண்ணப் பார்த்துட்டுப் போகட்டும். பிறகு லெட்டர் எழுதி வேணாம்னு சொல்லிடலாம்.''

அப்பா கடிதத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டுபோய் மேஜையின் மேல் போட்டு விட்டு வெளியில் புறப்பட்டுச் சென்றார்.

'உத்ரா உன்ன வெள்ளிக்கிழமை பெண் பார்க்க வர்றாங்களாம். பையனப் பார்; சும்மா ராஜா மாதிரி இருக்கான். கோட்டும், சூட்டும், டையுமா. படிப்பு என்ன தெரியுமா? பி.காம். பேங்க்ல வேலை. சம்பளம் மாசம் இரண்டாயிரம்!' என்று, இதற்கு முந்தைய வரன் ரமேஷ் கடிதம் எழுதியிருந்தபோது, பெருமிதத்துடன் கூறிய அம்மா; இந்த வரனைப் பற்றி எதுவும் கூறவில்லை.

'பையன் அப்படியொன்றும் அழகில்லை....' என்று அம்மா கூறியது என் ஆர்வத்தைக் குறைத்திருந்தாலும், இந்த வரன்மேல் ஓர் அனுதாபம் ஏற்பட்டிருந்தது.

மேஜையின் மேல் பார்த்தேன். மின்விசிறி கடிதத்தை மேஜை விளிம்பிற்குக் கொண்டு வந்து நிறுத்திக் கீழே தள்ளி விடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது.

பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

'ஆண் மகனே! நீ ஒரு அரசாங்க வேலைக்குச் சென்றிருக்கக் கூடாதா? அப்படிச் சென்றிருந்தால் எங்கள் வீட்டு மேஜையின் மேல் உன் கடிதம் இப்படி அனாதையாக இருக்கத் தேவையில்லையே!' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு; மின்விசிறியை நிறுத்துவது போல் கடிதத்தை எடுத்துக் கொண்டேன்.

என் அறையில் சென்று அமர்ந்தேன். கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். அளவோடு வெட்டி எடுத்தாற் போன்ற சிக்கனமான வார்த்தைகள். கடிதத்தின் கடைசியில் 'பின்குறிப்பு' என்பதற்கு நேராக -

'வரதட்சணை எந்த முறையிலும் எங்களுக்குத் தேவையில்லை. அதனால் வரதட்சணை என்று ஆரம்பித்துப் புனிதமான நிகழ்ச்சியை அநாகரிகப்படுத்த வேண்டாம். பெண் பார்க்கும் நிகழ்ச்சி மிக எளிமையாய் இருந்தால் நல்லது....' - என்று எழுதியிருந்தார்கள்.

கடிதத்தின் கீழே பிள்ளையின் அப்பா 'நரசிம்மன்' என்று கையெழுத்திட்டிருந்த விதம் கடிதத்தின் கையெழுத்துக்களோடு ஒத்துப் போகவில்லை.ஆகவே கடிதத்தைச் சுந்தரராமன்தான் எழுதியிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.

கடிதத்தோடு இணைக்கப் பட்டிருந்த பிள்ளையின் விவரங்களைப் பார்த்தேன். ஒரு மூலையில் கறுப்பு வெள்ளைப் புகைப்

படம். அம்மா சொன்னது பொய். சுந்தர ராமன் பார்ப்பதற்கு அழகாகத்தானிருந்தார்.

எளிமையான தோற்றம். உதட்டில் எள்ளளவும் சிரிப்பில்லை. மிகவும் கண்டிப்பானவர் என்று தோன்றியது. ஆழமான பார்வை செயல் வீரத்தைக் காட்டியது.

விவரங்களைப் படித்தேன். பெயர், சுந்தரராமன். எம்.காம். படித்துவிட்டு இப்போது ஏ.சி.எஸ் பகுதி நேரப் படிப்பாகப் படித்துக் கொண்டிருக்கிறார். ராஜா எண்டர் பிரைஸஸில் அக்கவுண்டன்ட் வேலை.

எளிமையான தோற்றம், உணர்வுகளை வெளியில் காட்டிக் கொள்ளாத முகபாவம். எனக்கு மிகவும் பிடித்த ஆண்மகனுக்கு இருக்க வேண்டிய குண நலன்கள்.

இவற்றிற்கு மேலாக வரதட்சணை பேச்சை எடுப்பதே அநாகரிகம் என்று கருதும் பண்பட்ட அறிவு. எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

கல்லூரி நாட்களை நினைத்துப் பார்த்தேன். அசோக மரத்தடியில் தோழிகள் அனைவரும் சேர்ந்து வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து கொள்ள மாட்டோம் என்று எடுத்துக் கொண்ட சபதங்கள். 'பெற்றோர் வற்புறுத்தினால் என்ன செய்வாய்?' என்று எழுப்பப்பட்ட வினாக்களுக்கு 'எதிர்த்துப் போராடுவேன்' என்று நெஞ்சை உயர்த்திச் சொன்ன பதில்கள்.

பாதிப்பேருக்கு மேல் சபதத்தைத் தூக்கி யெறிந்து விட்டுப் புகுந்த வீட்டின் சுக போகங்களை நினைத்து வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து கொண்டார்கள் - நடைமுறை வாதிகள்.

சிலர் பெற்றோரை ஆரம்பத்தில் எதிர்த்தார்கள். முடிவில் தோற்றுப் போனார்கள். இதுவரை யாரும் வெற்றி பெறவில்லை.

அப்படியென்றால் கொள்கைகளும், தத்துவங்களும் பேசுவதற்கு மட்டும்



தானா? அவற்றை வாழ்க்கையில் கடைப் பிடிக்க முடியாதா? கண்டிப்பாகக் கடைப் பிடிக்க முடியும். ஒன்றைப் பெற ஒன்றை இழக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்கு அபிரிமிதமான தைரியம் வேண்டும். அந்த தைரியம் எனக்கிருக்கிறது.

மனத்தில் மீண்டும் உறுதி மொழி புதுப் பிக்கப்பட்டது.

மாலை நெருங்கியது.

''ஏம்மா சாயந்திரம் பெண் பார்க்க வர்றாங்கன்னு சொன்னீங்க; இன்னும் எதுவுமே செய்யல?''

அம்மாவிடம் கேட்டேன்.

''வேணாம்னு முடிவு செஞ்சதுக்காக எதுக்கு எல்லாத்தையும் செய்து வைக்கணும். அப்பா ஸ்வீட்டும், பிஸ்கட்டும் கடைலேர்ந்து வாங்கிட்டு வந்திருக்கார். அதோட காப்பி கொடுத்தாப்போதும்.''

அம்மா அலட்சியமாகக் கூறினாள்.

''நீ கூட பட்டுப் பொடவ எதையும் கட்டிக்க வேண்டாம். சாதாரணமா ஒரு பாலியெஸ்டர் பொடவையோடு வந்து நின்னாப் போதும். என்ன புரிஞ்சுதா?''

நான் எதிர்த்து எதையும் பேச விரும்பவில்லை. காரணம் எளிமையாக இருந்தால் தான் சுந்தரராமனுக்குப் பிடிக்கும் என்ற என் ஊகம்தான். அப்படியிருந்தும் அம்மாவின் மேல் கோபம். ஓர் அரசாங்க வேலையில்லை என்ற ஒரே காரணத்தினால் ஒரு மனிதனுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை எவ்வளவு தூரம் குறைத்து விடுகிறார்கள்!

வெளியே ஆட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்டது. ரமேஷ் வந்தபோது ஒரு பெரிய பட்டாளத்தை வரவேற்க விழுந்தடித்துக் கொண்டு தெருவிற்கு ஓடிய அப்பா; இப்போது அலட்சியமாக ஹாலில் நின்று கொண்டிருந்தார்.

சுந்தரராமன், அவருடைய அப்பா, அம்மா மூவரும் உள்ளே வந்தனர்.

''நான்தான் நரசிம்மன். இவன் என்னோட ஒரே பிள்ளை சுந்தரராமன். இவதான் என்னோட மனைவி வரலட்சுமி....'' என்று நரசிம்மன் அறிமுகப்படுத்த, அனைவரும் கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவித்தனர்.

புது கௌரவம் வந்துவிட்டாற் போன்று; அப்பா தலையை மட்டும் அசைத்து ஏற்றுக் கொண்டு இருக்கையைக் காண்பித்தார்.

சிறிது நேரத்தில் அப்பா குரல் கொடுத்தார்.

''கற்பகம் பெண்ணைக் கூட்டிக்கிட்டுவா.''

தண்ணீர்த் தம்ளர்களை எடுத்துக் கொண்டு சென்றேன். முதலில் பிள்ளையின் அம்மாவிற்கு, அப்பாவிற்கு, கடைசியில் சுந்தரராமனுக்கு....

நேருக்கு நேர் பார்த்துக் கொண்டோம். புகைப்படத்தில் பார்த்த தோற்றத்தில் எவ்வித மாற்றமுமில்லை. திருபதியுடன் திரும்பி நடந்தேன்.

''சுந்தரராமனுக்கு பெண்ணைப் புடிச்சிருக்காம். முக்கியமா பெண்ணோட எளிமை ரொம்பவும் புடிச்சிருக்காம். உங்க பெண்ணுக்கும், உங்களுக்கும் சம்மதம்னா கல்யாணத்த வச்சுக்கறதில எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.''

நரசிம்மன் தங்களின் சம்மதத்தைத் தெரிவிக்க; அப்பா அம்மாவைப் பார்த்துவிட்டு ஆரம்பித்தார்.

''உங்க கூட சம்பந்தம் வச்சுக்கறதில எந்த வித ஆட்சேபணையும் எங்களுக்கில்லை. இருந்தாலும் இந்த வீடு மாத்தற அவசரத்தில் நாங்க ஜாதகமே பார்க்கலை. அதனால எங்களுக்குத் தெரிஞ்ச ஜோசியர் கிட்ட ஜாதகம் பார்த்துவிட்டு உங்களுக்கு கல்யாணத்துக்கு நாள் குறிச்சி லெட்டர் போடறோம்....'' என்று அப்பா உண்மையென்று முத்திரையிடப்பட்ட பொய்யைக் கூறினார்.

உண்மையில்; சுந்தரராமன் ஜாதகம் கைக்குக் கிடைத்தவுடன் ஜாதகப் பொருத்தம் பார்த்துவிட்டுப் பொருத்தம் மிகவும் நன்றாக இருக்கிறது என்று கூறியவர் அப்பா தான்.

''ரொம்ப நல்லது. முடிஞ்சவரைக்கும் சீக்கிரமா ஜாதகம் பார்த்து லெட்டர் போடுங்க. அப்ப நாங்க, புறப்படட்டுங்களா?''

''கொஞ்சம் இருங்க. ஸ்வீட்டும், காப்பியும் சாப்பிட்டுப் போங்க,'' என்று அம்மா அவர்களைப் போலியாய் உபசரிக்க -

''ஆமாம். அதுவும் சரிதான். வந்ததுக்குத் தண்ணீர் மட்டும் சாப்டுட்டுப் போனா நல்லாயிருக்காது....'' என்று வெள்ளை மனத்துடன் ஏற்றுக் கொண்ட நரசிம்மன் மீண்டும் அமர்ந்தார்.

சிறிது நேரத்தில் வந்தவர்கள் புறப்பட்டுப் போனதும் பேச்சை ஆரம்பித்தேன்.

''அம்மா எனக்கு சுந்தரராமனை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''என்ன?.... அவன் வேலை செய்யறது ஒரு தனியார் கம்பெனில. நாளைக்கே

ஜென்ம நட்சத்திரம்

மறக்க முடியாத இருவர் : பேபி விசித்ரா, இந்திராதேவி. முன்னது படம் முழுவதும் பளிச். பின்னவர் உச்சகட்டத்தில் அச்சா!


செய்வதெல்லாம் செய்து விட்டுத் திருஷ்டிப் பரிகாரமாக இயக்குனர் இணைத்திருப்பது: சிரிப்புக்குச்சம்பந்தமேயில்லாத

தர்ஜுமா செய்வது ஒரு தனிக் கலை. அதுவும் விதேசிக் கலாசாரத்தையும் நம்பிக் கைகளையும் அஸ்திவாரமாகக் கொண்ட ஓர் ஆங்கிலப் படத்தை அங்கங்கே தேவைப் படும் நுணுக்கமான மாற்றங்களைச் செய்து, சேர்க்க வேண்டியதைச் சேர்த்து, நீக்க வேண்டியதை நீக்குவதற்குத் தனித் துணிச்சலும் தகுதியும் தேவை. இயக்குனர் 'தக்காளி' சீனிவாசனுக்கு அது நிறையவே இருக்கிறது.

நம்பக்கூடிய வகையில் அவர் அமைத்துள்ள திரைக் கதையில் மூலப்படமான 'ஓமனி'ல் காணப் பட்ட அத்தனை நல்ல அம்சங் களையும் திகில்களையும் இணைத் திருப்பது நயம். குறிப்பாக, இடுகாட்டில் தடயம் தேடிச் செல் லும் கட்டம். காமிரா வும் நாய்களும் அட்டகாசம்.

இவை எல்லாவற்றையும் விட இயக் குனருடைய து ணி ச் ச லை ப் பளிச்சென்று எடுத்துக்காட்டுவது : பாட்டே இல்லாமல் படம் எடுத்திருப்பது.

பரபரப்பையும் விறுவிறுப்பையும் கூட்டுகிற மூன்று அம்சங்கள் : இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ள சம்பவங்கள் + அவை படமாக்கப்பட்டுள்ள விதம் + அவற்றுக் கான பின்னணி இசையும் இதர ஒலிகளும்.



நகைச்சுவைக் காட்சிகள். விவேக், லூஸ் மோகன், சுந்தரி பங்கு பெறும் அந்த அபத்த மான நகைச்சுவை 'டிராக்'குக்குப் பொறுப்பு விவேக் என்று டைட்டில்கள் கூறுகின்றன.

படத்துக்கும் லாபமில்லை. விவேக்குக் கும் பெருமையில்லை.

- சி. ஆர். கே.

இழுத்து மூடினாங்கனா நீங்க இரண்டு பேரும் சாப்பாட்டுக்கு இங்கேதான் வந்து நிக்கணும்....'' அம்மா படபடவென்று பேசி முடித்தாள்.

''ஏம்மா இதுக்கு முன்னாடி வந்தவர் கவர்மெண்ட்லதான வேலை செய்யறாரு?''

''ஆமாம்.''

''பிறகு ஏன் நீங்க கல்யாணம் முடிக் கலை?''

''வரதட்சணை ஏகமாக் கேட்டாங்க. இருபத்தஞ்சாயிரத்துக்கு எங்க போறது? ஏதோ பத்தோ, பதினஞ்சோன்னாப் பரவா யில்ல. அதனால முடியாதென்று சொல் விட்டுப் போய்ட்டாங்க.''

''அதுதாம்மா காரணம். நாம கவர்ன் மெண்ட்ல வேலை செய்யறவங்க மட்டும் தான் ஒசத்தின்னு நினைக்கும் போது அவங் களும் வரதட்சணை அதிகமாக் கொடுக்கற வங்கள ஒசத்தின்னு நினைக்கிறாங்க. இங்க இரண்டுபேருமே மனிதனுக்கும் அவனோட குணத்துக்கும் கொடுக்கிற மதிப்பைவிட பணத்துக்குத்தான் அதிகம் கொடுக்க றோம்.''

''இதெல்லாம் பேசறதுக்கு நல்லாத்தா னிருக்கும். ஆனா நடைமுறையில் அதெல் லாம் பார்த்தா வாழமுடியாது.''

''முடியறதும் முடியாததும் நம்ம மனசில இருக்கும்மா. கம்பெனியை இழுத்து மூடிட்டா கண்டிப்பா வீட்ல கஷ்ட மிருக்கும். அதனால வாழ்க்கையே அஸ்த மிச்சுப் போயிடாது. கஷ்டம்ங்கறது வாழ்க் கையில எல்லா நிலையிலேயும் எல்லோ ருக்கும் உண்டு. அதனால கஷ்டத்த நினைச்சுப் பயந்து ஒரு நல்ல வரனை விடற துக்கு எனக்கு விருப்பமில்லேம்மா....'' என்று திட்டவட்டமாகக் கூறிமுடித்தேன்.

அம்மாவும், அப்பாவும் மௌனமாக நின்றனர்.

அம்மா வந்தாள்

தமயந்தி

குழந்தைக்கு நாலு மாதமான போது தான் பிரச்னை உருவாயிற்று. மகேஸ்வரிக்கு விடுமுறை முடிகிற சமயம். இனி லீவில்லை. யார் குழந்தையைப் பார்ப்பது? முரளி ஒரு மாசம், இரண்டு மாசம் லீவு போடலாம். பிறகு? அம்மாவை ஊரிலிருந்து அழைத்து வரலாம். வருவாளா? சொல்ல முடியாது. 'என்னைக் கேட்டா கல்யாணம் பண்ணினே? இப்ப மட்டும் நான் தேவையா?' என்று பதில் வந்தாலும் வரும். ஆனாலும் எழுதுவது தவறில்லை. முரளியை எழுதிப் போடச் சொல்ல வேண்டும். பதில் வரும் வரை லீவை தள்ளிப் போட வேண்டும்.

முரளி நிறைய வருத்தப்பட்டான். குழந்தை எப்படி வளரப் போகிறதோ என்கிற கவலை சதா பளிச்சிட்டது. முகம் கூட லேசாகக் கறுத்தது. அடிக்கடி தொட்டில் பக்கமாய் நின்று உற்றுப் பார்த்தான்.

''பயமாருக்கா முரளி?''

''ம்...?''

''ஏன்?''

''தெரியலை மகி. எல்லாரையும் எதிர்த்திட்டு சிம்பிளா ரெஜிஸ்திரார் ஆபீஸ்ல சங்கர், விஸ்வநாதன் சாட்சியோட கையெழுத்துப் போட்டப்போ கூட இப்படி பயமா இல்லை. பளிச்சுனு கண்ணு முன்னால இருட்டா இல்லை. இப்ப பயமாருக்கு மகி, என் பிள்ளை எப்படி வளரப் போகுதோன்னு பயமாயிருக்கு.''

''அம்மாவுக்கு எழுதிப் போடுவோமா?''

''வருவாளா?''

''தெரியலை முரளி. பேசாம க்ரெஷ்ல சேர்த்திடுவோமா?''

''பயமாயிருக்கு மகி. எப்படிப்பட்ட ஆயா, என்ன மாதிரி க்ரெஷ்னு தோணும். பிள்ளைக்கு ஒழுங்கா பாலைக் கொடுத்தாளோன்னு சந்தேகம் வரும். உடனே க்ரெஷுக்கு போகத் தோணும். அங்கேயும் காலூன்ற முடியாம இங்கேயும் தத்தளிக்காம இருக்க முடியாம... நரகம் மகி.''

''வீட்டோட ஆயா வச்சுப்போமா? சுஜாதா அப்படித்தான் வச்சிட்டிருக்கா. நல்லாப் பார்த்துக்கிறாளாம்.''

''அதுக்கு க்ரெஷ்லேயே விடலாமே. நம்மாள் ஒருத்தர் பார்க்கணும் மகி.''

மகி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். முதல் மாதம் நாள் தள்ளிப் போன போது சந்தோஷப்பட்ட முரளி இவனில்லை. அந்த க்ஷணம், நிமிஷம், சத்தியமாய் இந்த பயம் வேரூன்றவில்லை. முரளி சொல்கிற மாதிரி பளிச்சென்று கண்முன் இருள் இல்லை. முழுக்க முழுக்க வெளிச்சம் அப்போது. பிள்ளை உண்டாகியிருக்கிறேன் என்று அம்மாவுக்கு எழுதிப் போட்டுப் பதில் வராமல் போகும் போது கூட இருட்டு இல்லை.

''நா வேலையை விட்டுடவா முரளி? முடியுமா? ஆயிரம் ரூபாய் வாடகை போக, ஒருத்தர் சம்பளத்துல குழந்தையை வளர்க்க முடியுமா முரளி?''

''அம்மாவைக் கூப்பிட்டு எழுதேன்.''

''நான் எழுதினா வருவாளா? நீங்க எழுதுங்க. மருமகன் எழுதியிருக்காரேன்னு ஒரு வேளை வரலாம்.''

''பேரப் பிள்ளையைப் பார்க்க எப்படியும் ஆசையிருக்கும் மகி.''

''தெரிலை முரளி. எழுதுவோம். அதில தப்பில்லை. காரியத்துக்குக் கூப்பிடுறான்னு நினைப்பா. எங்கம்மாவைப் பத்தி எனக்குத் தெரியும் முரளி. கல்யாணத்துக்கப்புறம் ரூபாய் அனுப்பியிருந்தேன்னா வருவா.. நான் அனுப்பலை பாருங்க. சந்தேகம் தான்.''

''அனுப்பியிருக்கலாம் மகி நீ?''

''நான் கல்யாணம் பண்ணின பிறகு, என் குடும்பம்னு தோணுது முரளி. நமக்கே சரியாயிருக்கு. ஏன் சின்னவன் வேலை பார்க்கிறானேன்னு தோணுது. திரும்பத்

திரும்ப எங்கிட்டேயே எதிர்பார்த்தா எப்படி?''

''விடு. லெட்டர் எ ழு த் வ ா, வேணாமா?''

''எழுதுங்க.''

அம்மாவுக்கு முரளி கடிதம் போட்ட அடுத்த வாரம் பதில் வந்தது - 'நெல்லையில் வருகிறேன். யாராவது ஒருத்தர் வந்து கூட்டிச் செல்லவும்.'

அம்மா எதைப் பற்றியும் கேட்காதது ஆச்சரியமாயிருந்தது. கல்யாணம் பற்றி, ரூபாய் அனுப்பாதது பற்றி எதுவுமே கேட்கவில்லை. முரளியைப் பார்த்தால் புடைவைத் தலைப்பால் தோளை அவசரமாக மூடிக் கொண்டாள். குழந்தையைப் பத்தியமாய்ப் பார்த்துக் கொண்டாள்.

முரளி நிறையச் சந்தோஷப்பட்டான். அம்மாவுக்கென்று சரிகை இழை போட்ட ப ரு த் தி ப் புடைவை வாங்கி வந்தான். அம்மா தயக்கமாய் ''இதெல்லாம் எதுக்கு?'' என்று வாங்கிக் கொண்டாள்.

மகேஸ்வரி ஆ பீ ஸ் போய்வரச் சௌகர்யமாய் இருந்தது. சமையல் முதற்கொண்டு அம்மா பார்த்துக் கொண்டாள்.

முரளிக்கு நம்பிக்கை உண்டானது. ப ழை ய மாதிரி சந்தோஷம் உருவாயிற்று. அம்மாவுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் நன்றி சொன்னான். அம்மா வெறுமனே சிரித்து நகர்ந்து விடுவாள்.

திடீரென்று மூன்று மாதம் கழித்து, அம்மா சமையலறையில் வைத்து சின்னக் குரலில் வெகு சாதாரணமாகக் கேட்டாள்.

''அவருக்குச் சொந்தக்காரங்க உண்டா?''


''தூரத்து மாமா ஒருத்தர் தஞ்சாவூர்ல இருக்கார். ஏம்மா?''

''இல்ல... அம்மா, அப்பா.''

''ரெண்டு பேரும் இறந்து போயிட்டா.''

''அப்ப யார் வளர்த்தது?''

''ஹோம்ல. அதான் தன் பிள்ளை க்ரெஷ்ல வளரக் கூடாதுன்னு ஏகப்பட்ட பிடிவாதம்.''



''ம்.''

அம்மா நிமிர்ந்து மகியைத் திரும்பிப் பார்த்தாள்.

''அவர் பிராமிணா மகி?''

''ம்... தெரியாது உனக்கு?''

''இல்ல... அன்னைக்குச் சட்டையைக் கழட்டினப்ப பூணூல் பார்த்தேன். கல்யாணத்துக்கப்புறம் நம்ம மதத்துக்கு மாறியிருப்பார்னு நினைச்சேன்.''

''இல்லம்மா. அது தப்புனு ரெண்டு பேருக்கும் தோணிச்சு. அவர் அவராவும் நான் நானாகவுமே இருந்திட்டுப் போறோம்னு முடிவு பண்ணியாச்சு.''

''அப்படின்னா...?''

அம்மா இழுத்தாள். என்ன சொல்லப் போகிறாள்?

''அப்படின்னா?''

''குழந்தை என்ன மதம் மகி?''

சட். அம்மா விஸ்வரூபமெடுத்து விட்டாள். அமைதியாகவே இருந்து குண்டு வீசுகிறாள். இது ஆரம்பம். இனி போர் தொடரும். ஒருவேளை நேரிடையாக. இல்லை-மறைமுகமாக. குழந்தைக்கு என்ன மதம்? பிறக்கும் போது ஜாதியும் மதமும் கூடவே பிறக்கிறதா?

மகி குழப்பமாய்ப் பார்த்தாள்.

முரளிக்கு வித்தியாசமாய்த் தோன்றியது. மகியின் அமைதியும் யோசனையும் அவளுக்குப் பொருந்தாததாய்த் தெரிந்தது. ஒன்றுமே பேசாமல் எதிர்ப்பக்கம் திரும்பிக் கொண்டு மகி படுப்பது புதுசு.

''மகி..''

''ம்...?''

''என்னாச்சும்மா?''

''ம்ஹூம். ஒண்ணுமில்லையே.''

''திரும்பு.''

''டயர்டா இருக்கு முரளி.''

''திரும்பு சொல்றேன்.''

மகி யோசனையாய்த் திரும்பினாள். முகம் வியர்த்துக் கண்களில் கலக்கம் தெரிந்தது. கழுத்து ஓரம் வியர்த்துப் பிசுபிசுப்பாயிருந்தது.

''என்ன விஷயம் மகி?''

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே.''

''என்ன மகி?''

''யோசிச்சுத்தான் சொல்றேன் முரளி. வேலையை விட்டுடலாம்னு...''

''விட்டுடலாம்னு...''

''சீரியஸா சொல்றேன் முரளி. வேலையை விட்டுட்டுக் குழந்தையைப் பார்த்துக்கறேன். கஷ்டம்தான். ஒருத்தர் சம்பளம் கஷ்டம்தான். நம்ம தேவைகளைக் குறைச்சிப்போம். மாசம் ரெண்டு தடவை சினிமாப் போறதை ஒரு தடவை ஆக்குவோம். பீச்சுக்குப் போவோம்... நிறைய ஸாக்ரிபைஸ் பண்ணினால் முடியும்னு தோணுது முரளி.''

''ஏன் மகி? இப்பத்தான் அம்மா இருக்காளே? நீயும் வேலை பார்த்தாக் குழந்தையை வசதியாய் வளர்க்கலாமே!''

''வசதியா வளர்க்கலாம் முரளி. ஆனா நாம கட்டின கோட்டைல ராஜாவா உலா வர்ற மாதிரி அவனை வளர்க்கணும்னு ஆசைப்படுறேன்.''

''புரியலை மகி..''

''அம்மா இன்னைக்கு, கல்யாணத்துக்கப்புறம் நீங்க மதம் மாறலையான்னு கேட்டா. அப்படின்னா குழந்தை என்ன மதம்னு கேட்டா.''

''ஓ காட்!''

முரளி சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 24

ஃபிரிஜ் பரிசு பெறுவதற்கு இதுவே கடைசி கூப்பன். 'நேற்றுவரை நந்தவனம்' தொடர் கதையில் இந்த வாரம் நாங்கள் வேண்டுமென்றே செய்துள்ள தவறைக் கண்டு பிடித்து, திருத்தத்தையும் கீழே எழுதுங்கள். இதே போல் இதுவரை தவறுகளைக் கண்டு பிடித்துத் திருத்தங்களையும் எழுதி, நீங்கள் பத்திரப்படுத்தியுள்ள இதர கூப்பன்களையும் இதனுடன் இணைத்துக் கதை பற்றி 5-10 வரி விமர்சனத்துடன், உங்கள் விலாசத்தையும் மறவாமல் குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்புங்கள். 24 கூப்பன்களையும் அனுப்ப வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சேகரித்துள்ளவரை அனுப்பலாம். ஆனால் மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி பட்டியலிட்டுத் திருத்தியுள்ளவருக்குத்தான் ஃபிரிஜ் பரிசு. மிக அதிகத் தவறுகளைப் பலர் கண்டு பிடித்துத் திருத்தியிருந்தால் குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஆறுதல் பரிசுகளும் உண்டு. கூப்பன்கள் கிடைக்கக் கடைசித் தேதி 10.10.91. உறை மீது ''ஃபிரிஜ் பரிசுத் திட்டம்'' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

இந்த வாரம் நாங்கள் வேண்டுமென்றே செய்த......

தவறு :

திருத்தம் :

கல்கி - ஸ்ரீராம் சிட்ஸ் இணைந்து நடத்திய 'கைகொடுத்த கடன் தொகை' போட்டியில் ஐம்பது ஆறுதல் பரிசுகளை வென்றவர்கள் : (ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்ரீபெட் கிப்ட் பேக்)

1. இரா. விஜயா, சி1/8, ஹவுசிங்யூனிட், நாகப்பட்டினம்; 2. எம். ஸ்டீபன்சன், 81, 'பி' பிளாக், சாம்பியன் ரீஃப், தங்கவயல் - 563 117. கர்நாடகம்; 3. கே. சீத்தாராமன், தொலைபேசி நிலையம், முசிறி, திருச்சி - 621 211; 4. ஜெ. கற்பகவல்லி, 151, கலை மதி வீதி, மேட்டுத் தெரு, பெத்தானியாபுரம், மதுரை - 625 016; 5. காஞ்சனா சதாசிவம், ஃப்ளாட் நெ. 9, இந்தியன் பாங்க் ஹவுஸ், டாக்டர். ஆர். பி. தெரு, முலன் (மேற்கு), பம்பாய் - 400 080; 6. ராதிகா சுந்தரேசன், ஃப்ளாட் எண் 27, பாரதி காலனி, டவுன் ஸ்டேஷன் ரோடு, மயிலாடுதுறை - 609 001; 7. எஸ். எம். நேசர், 187, அந்தோனியார் தெரு, கே. பாரைப்பட்டி, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல் - 624002; 8. கே. ஜெயபிரகாஷ், E/50, தும்பா ஹவுஸிங் காலனி, பல்லித்துரா அஞ்சல், திரு வனந்தபுரம் - 695 586; 9. என். சி. ரமேஷ், 4/104, சாஸ்திரி நகர், ஜாகிர் அம்மாபாளையம், சேலம் - 636 302; 10. இரா. சிவமூர்த்தி, 84, அயல்நாயுடு வீதி, பீளமேடு, கோவை - 641 004; 11. எம். அருள், 307, காகத்தியா அபார்ட்மெண்ட்ஸ், இரண்டாவது தெரு, ஹப்ஷிகுடா, ஹைதராபாத் - 500 007; 12. எஸ். மீனாட்ஷி, 17/A, பஜனை கோயில் இரண்டாவது சந்து, சூளைமேடு, சென்னை - 600 094; 13. அ. லிங்கராஜ் கண்ணன், பென்னர் (இந்தியா) லிமிடெட், 3, மதுரை-மேலக்கால் ரோடு, மதுரை - 625 016; 14. ஜி சோலைமலை, 18, கண்ணகி தெரு, திருவள்ளுவர் நகர், அரும்பாக்கம், சென்னை - 106; 15. டி. தியாகராஜன், 4, பாரிஜாதம்மாள் தெரு, சான்றோர் பாளையம், அரும்பாக்கம், சென்னை - 106; 16. வி. விசாலாக்ஷி, 1, காசி விஸ்வநாதன் காலனி இரண்டாவது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33; 17. சி. ராஜம்மாள், 292, 41வது தெரு, 8வது செக்டர், கே. கே. நகர், சென்னை - 600 078; 18. மீனாட்சி வைத்தியநாதன், 134/13, அன்னை அடுக்ககம், காமராஜர் நகர், பாடிகுப்பம் சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600 040; 19. சரோஜா சீனிவாசன், 21, டிக்கென்சன் ரோடு, 'லக்ஷ்மி நிவாஸ்' பெங்களூர் - 42; 20. ஸாஜிதா, பிளாக்: 36/4 பழைய ஹவுஸிங் யூனிட், திருச்சி ரோடு, தஞ்சாவூர்; 21. முதுமொழி கு. கதிரேசன், ஆய்வு மாணவர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், மெரினா, சென்னை - 600 005; 22. டி.ஏ. கோபால், 1/196, ஏசியாட் காலனி, மேற்கு அண்ணா நகர், சென்னை - 101; 23. பானுகாஜா, 75, சூரப்பமுதலித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005; 24. ஜெ. ரமேஷ், 9, குணபால இராமசாமி தெரு, அரிசிப்பாளையம், சேலம் - 636 009; 25. கே. கிருஷ்ணன், 29, ஆறாவது வீதி, லட்சுமிபுரம், பீளமேடு அஞ்சல், கோவை - 4; 26. லால்குடி கிருஷ்ணமூர்த்தி, 74/D கடலூர் ரோடு, பண்ருட்டி - 607 106; 27. இரா. மோகன்தாஸ், 41, ரெயில் நகர், காட்டாங்குளத்தூர் அஞ்சல், செங்கல்பட்டு - 603 203; 28. இரா. கிருஷ்ணன், மே/பா. கு. பத்மநாபன், 69/B, மாதா கோயில் வீதி, புதுச்சேரி - 605 001; 29. பாலு, 8, ஸ்டேட் பாங்க் காலனி, கும்பகோணம் - 1; 30. கீதா பிரேம்குமார், 4-B, 4-வது குறுக்குத் தெரு, பெசண்ட் நகர், சென்னை - 90; 31. எம். இராஜாமணி, E-4, யூகோ ஹவுஸ், 1/1, அலிபூர் அவின்யூ, கல்கத்தா - 700 027; 32. எல். மாறன், 96, வன்னியர் வீதி, மேல்பட்டி - 635 805; 33. எஸ். கமலா, 11/1, இரண்டாவது குறுக்குத் தெரு, ஏழாவது மெயின் ரோடு, ஸ்ரீநிவாச நகர், திருச்சி - 17; 34. அ. ஆல்பெர்ட், 6-24D, ஹைகிரவுண்ட், கன்னியாகுமரி - 629 702; 35. ஆர். கணேஷ், 66, ஆஞ்சநேயர் கோவில் தெரு, பூந்தமல்லி, சென்னை - 600 056; 36. எம். கனகம்மாள், க/பெ.ஜ. மாரியப்பன், 11, மூர்த்தி நாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002; 37. எஸ். விஜயலெஷ்மி, 22, வியாசராஜா நகர், ஸ்ரீரங்கம் - 620 006; 38. ப. அங்கயற்கண்ணி, C/o. ப. விஜயலட்சுமி, எச்.ஐ.ஜி - 26, 80 அடி ரோடு, அண்ணா நகர், மதுரை - 2; 39. வி. சாரதா, 124, ஈ.வெ.ரா. நகர், திருவானைக் கோயில், திருச்சி - 5; 40. ஆர். ராஜம், 81, Dr. அன்சாரி தெரு, பொள்ளாச்சி - 642 001; 41. கே. சரவணன், சிவசக்தி டெக்ஸ்டைல், 3-c, பிருந்தா தெரு, ஈரோடு - 638 001; 42. ஏ. ஜோசப் ராஜன், 3/47, ஃபாத்திமா தெரு, இருதயகுளம், விக்ரம சிங்கபுரம், அம்பாசமுத்திரம் - 627 425; 43. கே. இராஜன், உதவியாளர், மத்திய அலுவலகம், டி. என். ஈ. பி., குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி - 643 219; 44. எஸ்.பி. செல்வம், 328-C, என்.ஜி.ஓ. காலனி, திண்டுக்கல் - 624 009; 45. இரா. குமார், 1/44, நெடுஞ்சாலை, இலாசுப்பேட்டை அஞ்சல், புதுச்சேரி - 605 008; 46. பி.வி. சந்திரகாசன், ராதிகா ஸ்டூடியோ அண்டு வீடியோ, 6/167-B, பொள்ளாச்சிப் பாதை, பெதப்பம்பட்டி - 638 205; 47. ஆர். விஜய லக்ஷ்மி, 43/664, சுப்ரமணிய சிவா தெரு, இராஜாஜி புரம், திருவள்ளூர் - 602 001; 48. பி. தட்சிணா மூர்த்தி, L-123, ''பெரியார் வடிவு'' (மாடியில்), பெரியார் நகர், ஈரோடு; 49. ஆர். அனுஷா, D/o. ஆர் ராமதாஸ், 24-40-16, கிழக்கு ஆனந்த்பாக் மல்காஜ்கிரி, ஹைதராபாத் - 500 047; 50. எஸ். ஜெயலட்சுமி அம்மாள், 50, வேலூர் வீட்டு வசதி வாரியம், அண்ணா நகர், கடலூர் - 607 001.

''நிஜமாச் சொல்றியா?''

''ம். அம்மாகிட்ட குழந்தை வளர்றது தப்புன்னு அந்த நிமிஷம் தீர்மானிச்சிட்டேன். நாளைக்கு நம்ம பிள்ளை கேட்கும் - 'நீ வேற மதம், அப்பா வேற மதமாம்மா?'ன்னு. நமக்குள்ளேயே பிளவு கூட வரலாம் முரளி. பணம் முக்கியமில்லை. காசு முக்கியமில்லை. சந்தோஷம் பெரிசு முரளி. எப்பவும் உள்ள ஸ்நேகம் அவசியம். நாம கட்டின கோட்டையை நாமே சிதைய விடக் கூடாது.''

''இப்ப என்ன சொல்றே?''

''நாளைக்கு அம்மாவை ஊருக்கு அனுப்பிச்சிடலாம். எனக்கு வேற வழி தெரியலை முரளி.''

முரளி யோசனையாய்த் திரும்பிப் படுத்துக் கொண்டான். மகி சொல்வதும் நிஜம்தான். நாளை காலை அம்மாவை பஸ் ஏற்றி விடலாம். கிளம்பும் முன் அவளுக்கென்று இன்னொரு சரிகை இழை போட்ட பருத்திப் புடைவை வாங்க வேண்டும்.

ஜன்னல் வழியாய் இருளைக் கிழித்துக் கொண்டு வெளிச்சமாய் நிலா தெரிந்தது. நடுவில் கோட்டை மாதிரி உருவம் தோன்றிற்று. அது நிலாக் கோட்டையாக இருக்க வேண்டும்.

நீங்கள் கேட்டவை

● ச. தயாளன், மதுரை.

? "மாபெரும் வெற்றி பெற்ற 'சின்னத்தம்பி,' 'ப்ரெட்டி வுமன்' என்ற ஆங்கிலப் படத்தின் அப்பட்ட காப்பி" என்று சண்டே வார இதழ் புட்டுப் புட்டு வைத்துவிட்டதே?

! இருந்து விட்டுப் போகட்டுமே! அப்பட்ட காப்பி அடித்தும் மாபெரும் தோல்வி அடைவதைவிட, அப்பட்ட காப்பி, மாபெரும் வெற்றி அடைவது சிறப்பல்லவா! ப்ரெட்டி வுமன், 'கேக்' என்றால் சின்னத்தம்பி புட்டு!

● லீலா இராம், தக்கலை.


? சர்வதேச நிதி அமைப்பு இந்தியாவுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கடன் அளிப்பது பற்றி?

! இதைப் பெறுவதற்காகத்தானே பொருளாதார - தொழில் - வர்த்தகக் கொள்கைகளில் பல மாற்றங்களை அரசு கொணர்ந்தது. அப்படி அவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்ட பிறகும் கிடைக்காவிட்டால் எப்படி? போகட்டும். உலகிலேயே மிக அதிகமான கடன் வாங்கிய நாடு என்ற பெருமையுடன் அந்தக் கடனைச் சிறப்பாகப் பயன்படுத்தி வெற்றிகண்ட நாடு என்ற பெருமையும் சேர வேண்டும். அதற்கேற்ற கொள்கைகளையும் செயல் திட்டத்தையும் அரசு வகுக்கட்டும்.

● முஸ்தபா கமால், தக்கோலம்.

? சமீபத்தில் தங்களுக்கு ஆத்திரமூட்டிய சம்பவம்?

! மகாராஷ்டிர கிராமம் ஒன்றில் மழைக்கு ஆஞ்சநேயர் கோயிலில் ஒதுங்கிய அரிஜன இளைஞனைக் கோயிலின் புனிதம் கெட்டுவிட்டது என்று கல்லால் அடித்துக் கொன்றார்களாம். இதைவிட ஆத்திரமூட்டிய சம்பவம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.


☛ மறுத்துவிட்டாரே!


☛ அப்பட்ட காப்பி!

● கே. ஆர். விஜயா, கோவை.

? மௌலானா பற்றி ஜின்னா என்ன கூறினார் என்றுதானே டி. வி. யில் ஒளிபரப்பானது? அது எப்படி மௌலானாவை டி. வி. அவமதித்ததாகும்?

! 'ஜின்னாதான், அபுல்கலாம் ஆசாத்தை அவமதித்தார் என்றால், டி. வி. யும் அதை ஒளிபரப்ப வேண்டுமா?' என்பதுதான் சர்ச்சை. அமைச்சர் வருத்தம் தெரிவித்ததால் இந்தச் சர்ச்சை அடங்கிப் போய் விட்டது என்றாலும், தேவையற்ற சர்ச்சையைக் கிளப்பியதன் விளைவு, மௌலானா பற்றி விரும்பத்தகாத பல உண்மை நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் பட்டியலிடப்படுகின்றன!

● ராஜேஷ் குமார், தஞ்சை

? 'பட்ஜெட்' - எங்கே அழகாக இரண்டே தமிழ் வார்த்தைகளால் அலங்கரியுங்கள், பார்ப்போம்!

! வருடாந்திர தண்டனை!

● சி. சண்முகம், சீர்காழி

? எம்.ஏ. பாட நூலில் அப்துல் ரகுமானின் 'சுட்டு விரல்' என்ற கவிதையை அகற்றும்படி தமிழக அரசு அறிவித்துள்ளது பற்றி...?

! தமிழீழ விடுதலை பற்றிச் சொல்கிறது என்பதால் தடை செய்து விட்டார்கள். சரியான நடவடிக்கை.

● ம. செந்தில் நாதன், மதுரை

? 'மாநிலங்களுக்குச் சுயாட்சி தராவிட்டால் புரட்சி வெடிக்கும்' என மீண்டும் எச்சரித்துள்ளாரே, பிஜு பட் நாயக்?

! சொற்கள் கடுமை என்றாலும் கருத்துக்கள் கவனத்துக்குரியன.

● பி. சண்முக சுந்தரம், திருநெல்வேலி.

? தங்களை அழித்துக் கொண்டு

100 அரிசன எம்.பிக்களைச் சந்திக்க ஜனாதிபதி மறுத்துவிட்டாரே?

''அற்புத சக்தியை என்னமாய்த் தான்....'' என்று இழுத்தேன்.

''சொல்ல முடியும்?'' என்றார் முசிரி.

''சொல்ல முடியாதுதான்'' என்றேன் நான்.

ஸ்ரீ முசிரி சுப்பிரமண்ய ஐயர் வாயிலிருந்து சாதாரணமாகவே வார்த்தைகள் கொஞ்சம் நிதானமாய்த்தான் கிளம்பும். அன்றைய தினம் பக்தி பரவசத்தினால் வார்த்தைகள் இலேசில் கிளம்ப மறுத்துவிட்டன. என்ஜின் வைத்து வெளியே இழுக்க வேண்டியதான நிலைமையே ஏற்பட்டுவிட்டது.

மேற்படி சம்பவம் சென்ற வருஷம் மயிலாப்பூரில் தியாகராஜ உற்சவக் கச்சேரிகள் நடந்த காலத்தில் ஒரு நாள் நடந்தது. ஆச்சரியம் என்னவென்றால், இதே மாதிரி இன்னும் பல நாட்கள், கச்சேரி நடப்பதற்கு அரை மணி முன்பு வரையில் மழை கொட்டு கொட்டென்று கொட்டிவிட்டுப் பளிச்சென்று சொல்லி வைத்தாற் போல் நின்றுவிட்டது. இதற்கு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் மகிமைதான் காரணமென்று வித்வான்கள் மனப் பூர்வமாய் நம்பினார்கள்.

பார்க்கப் போனால் உலகத்தில் முக்கால் வாசிக் காரியங்கள் பக்தியினாலும் நம்பிக்கையினாலுந்தான் நடை பெறுகின்றன. ''பெயராத மலைகூட பக்தியினால் பெயர்ந்து விடும்'' என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். மலையே பெயரும் என்றால், பக்திக்கும் நம்பிக்கைக்கும் மழை கட்டுப்பட்டுத்தான் தீர வேண்டுமல்லவா?

- கர்நாடகம்

'நாரத' கானம்

பிரசித்த விஞ்ஞானியான ஸர் ஸி.வி. ராமன், ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் பாட்டைக் கேட்டு விட்டுச் சொன்னார் :-

''எம்.எஸ். பாடுகிறார் என்று சொல்ல மாட்டேன்; அவரே பாட்டாக உருகி நாத வெள்ளமாகப் பெருகி விடுகிறார்!''



''ஸ்ரீமதி எம். எஸ். ஸின் 'நாரத' கான இசைத் தட்டுக்களைக் கேட்ட போது, ஸர் ஸி. வி. ராமன் சொன்னது எனக்கு நினைவு வந்தது. முக்கியமாக, ''அக்கினி என்று அறியாயோ'' என்னும் ராகமாலிகையில் நாதப் பிரவாகம் பொங்கிப் பொழிகின்றது....

கர்நாடக சங்கீத பாணியிலேயே கவர்ச்சியுள்ள பாட்டுக்கள் தமிழ் டாக்கிகளில் அமைக்கலாமென்பதற்கு இந்த இரண்டு இசைத் தட்டுகளும் உதாரணங்களாயிருக்கின்றன. இவற்றில் உபயோகித்திருக்கும் பின்னணி சங்கீதம் கர்நாடக சங்கீதத்துக்கு உகந்ததாயில்லையென்று மட்டும் சொல்ல வேண்டும்.

போன வழி



பிள்ளை : குதிரைப் பந்தயத்துக்கு அப்பா போய் விட்டாரா, அம்மா?

தாயார் : அவர் குதிரைப் பந்தயத்துக்குப் போனது உனக்கு எப்படிடா தெரிந்தது? நீதான் தூங்கிண்டிருந்தயே?

பிள்ளை : அலமாரியில் நான் வைத்திருந்த முக்கால் ரூபாயைக் காணும், அம்மா!

தடுக்கி விழுந்த பாரதியார்

பாதி சாப்பிட்டுக் கொண்டே இருக்கையில், இலேசாக ஒரு காற்றடித்தது. 'அடாடா!' 'த்ஸ¬த்ஸ¬' 'ஐயைய!' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, அவரவர்களும் தட்டுகளைக் கையில் தூக்கிக் கொண்டார்கள். ஆனால், அதற்குள்ளே வேண்டிய அளவு மண்ணும் புழுதியும் தட்டுகளில் விழுந்து விட்டன!

''பாரதியார் தவறிக் கீழே விழுந்த போது சொன்னதை ஞாபகப் படுத்திக் கொண்டால் போகிறது'' என்றேன்.

பாரதியார் ஒரு நாள் ரயில்வே ஸ்டேஷனில் ரயில் ஏற வந்தார். பின்னோடு, சிநேகிதர்கள் சிலர் வந்திருந்தார்கள். ரயில் ஏறப் போகும் சமயத்தில், கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டார் பாரதியார். சிநேகிதர்கள் பதறிப் போய் அவரை விரைந்து தூக்க முயன்றார்கள்; பாரதியார், ''வேண்டாம்! என்னைத் தூக்காதீர்கள்! இந்தப் புண்ணிய பாரத பூமியின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரள்கிறேன். என்னைப் பெற்று வளர்த்த பூமி; பெரியோர்கள் வாழ்ந்த பூமி!'' என்று சொல்லிப் புரளவும் தொடங்கினார்.

இந்த சம்பவத்தை நான் சொல்லி, ''தேச பக்தி ததும்பித் தானே சிறைக்கு வந்திருக்கிறோம். பின், இந்தப் புண்ணிய பூமியின் மண்ணில் கொஞ்சம் சாப்பிடுவதற்கு ஏன் தயங்க வேண்டும்?'' என்றேன்.

- மூன்று மாதம் கடுங்காவல்

25

நேற்றுவரை நந்தவனம்

விடிந்தால் கல்யாணம்.

''யாரையுமே அழைக்கவில்லை. நம்ம மனுஷங்க மாத்திரம்தான்...'' என்று சொல்லிச் சொல்லியே ஐம்பது, அறுபது பேரைச் சேர்த்து விட்டாள் ராஜேஸ்வரி.

எல்லாரையும் அழைத்து விட்டு, ரத்தக் கொதிப்பு அதிகமாகி, அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

குமரன் பாடுதான் திண்டாட்டமானது.

அம்மா இழுத்து விட்ட கல்யாணக் காரியங்களையும் கவனிக்க வேண்டும். அம்மாவையும் கவனித்துக் கொள்ள வேண்டும். கட்சிப் பணிகளையும் தொடர்ந்து நடத்த வேண்டும்.

என்னதான் மீரா, சகலத்தையும் பார்த்துக் கொண்டாள் என்றாலும் இரண்டு மூன்று நாட்களாக அவளும் சோர்ந்துதான் காணப்பட்டாள்.

''மீரா... என்ன ஆச்சு உனக்கு?''

''உம்... ஒண்ணுமில்லையே!''

மீராவின் பெற்றோர் கூட, தங்களது துக்கத்தை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, இரண்டு நாட்களுக்கு முன்பே வந்து இறங்கி விட்டனர்.

சாப்பாடு, படுக்கை எல்லாம் கீர்த்தியின் வீட்டில். மற்ற பொழுது முழுக்க - இங்கே குமரன் வீட்டில்.

மீராவின் தாயிடம் - கீர்த்தியின் தாய் - சொன்னாள்: ''தாலிக் கூறை அவங்க வாங்கினாலும், தாலி நாம வாங்கறதுதானே முறை?''

''நம்ம வீட்டுக் கல்யாணங்களிலே எப்படியும் ரெண்டு திருமாங்கல்யம் இருக்கும். ஒண்ணு பொறந்த வீட்டுது. இன்னொண்ணு புருஷன் வீட்டுது.. இவங்க வழக்கம் எப்படியின்னு தெரியலையே...''

''எப்படியா இருந்தாலும் சரி. ஒரு மஞ்சக் கிழங்கை கயித்துல கட்டி, கழுத்துல போட்டாலும் சந்தோஷம். ஒவ்வொரு ஜாதியில ஒவ்வொரு விதமாத் தாலி இருக்கலாம். அதைப் பத்திக் கவலையே இல்லே. தாலியக் கட்டறவனும், கட்டிக்கறவளும் தீர்க்கா யுசோட, நிம்மதியா இரு
தாப் போதும்...''

கீர்த்தியின் அம்மா, க
கலங்கக் கூறினாள். தா
உட்காந்து, சீர் முறுக்கும், அ
ரசமும் செய்தாள்.

''பருப்புத் தேங்க
உண்டா?''

''அவங்க சம்பிரதாய
தெரியலே. அதனால என்ன
ஒரு ஜோடி பருப்புத் தேங்கா
நாம செஞ்சு வைக்கறதா
ஒண்ணும் மோசமாயி ட
போறதில்லே. மங்களகரம
இருக்கும்.''

''மறுபடி மறுபடி இந்த
சம்பிரதாயம் சடங்குகள் எதுவுமே வேன்
டாம். நேரே போய், குழந்தை தலையி
ரெண்டு அட்சதையத் தூவி விட்டுப் பேசா
வருவோமா... அதை விட்டுட்டு, திரட்டு
பால், சோமாஸ், பருப்புத் தேங்கான்
என்ன கலாட்டா இது...'' என்று மீராவி
தந்தை ஒரு பக்கம் புலம்ப, கீர்த்தியி
அப்பா, தன் தள்ளாமையையும், கண் தெ
யாத அவஸ்தையையும் ஒருபுறம் ஒதுக்
வைத்து விட்டுத் தம் தம்பிக்குக் கட்டளை
யிட்டுக் கொண்டிருந்தார்.

''அடேய்... காலம்பற பஸ் பிடிச்
நேரே கும்பகோணம் போ...''

''சரிண்ணா...''

''போய் நம்ம உப்பிலிய கையோ
அழைச்சிண்டு வா..''

''....''

''என்னடா முழிக்கறே.. பட்ராச்சா
யார் தெருவுல இருக்காரேடா.. நமக்
வைரம் பார்த்து வாங்கிக் கட்டற உப்பிலி..
அவரை அழைச்சிண்டு வா. விடிகாலமே
போனாத்தான் பிடிக்க முடியும். இல்லை
யின்னா அவர் பாட்டுக்குக் கோவில், கை
கர்யம்னு புறப்பட்டுப் போயிடுவார்...''

''அவர்... எதுக்கு?''

''மீரா வீட்டுல நம்ம கீர்த்திக்கு
போட்ட வைரம் சரியில்லே. அதை நா
பெருமாள் உண்டியல்லே போடச் சொ
லிட்டேன். உப்பிலிக்கு ராசி நிறைய... மா
பிள்ளைப் பிள்ளையாண்டானுக்குத் தோ
மில்லாத வைரமா ஒரு கல்லு... செலக்
செஞ்சு மூக்குத்தி கட்டக் கொடுத்திரு
கேன். ரெடியாயிடுத்துன்னா
கொண்டு வரச் சொல்லு.. அப்படி
கல்யாணத்துக்கும் அழைச்சிட்டு வா..''

கிழவருக்குக் கால் மட்டும் சரியா
இருந்திருந்தால் இத்தனை நேரம் பம்ப
மாய்ச் சுழன்றிருப்பார்.

அனுராதா ரமண

தம்மால் எதுவும் செய்ய முடியாததால் வீட்டில் உள்ளவர்களை எல்லாம் விரட்டிக் கொண்டிருந்தார்.

''இங்கே கூடிக் கூடி உட்கார்ந்து பேசாதீங்கோ. கல்யாண வீட்டுக்குப் போனா தலைக்கு ஒரு காரியத்தை எடுத்துப் போட்டுண்டு செய்யலாம்..''

''அங்கே ஒரு வேலையக் கவனிக்க ஒம்பது ஆள் இருக்காங்க. நாம வேற போய்க் கூட்டம் போட வேண்டாமேன்னு நான்தான் சொன்னேன்...''

- இது கீர்த்தியின் தாய்.

இத்தனைக்கும் நடுவில், மீராவோ - மனசுக்குள் இருப்பதை வெளியே சொல்லவும் முடியாமல், அதைப் புறக்கணிக்கவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

அவள் நினைத்துப் பார்க்கவே இல்லை; தனது தேடலுக்கு விடை தன் அருகிலேயே இருக்குமென்று...

விடிந்தால் கல்யாணம்...

அதற்கு முன்னால் - தன் கடமையைச் செய்வதா வேண்டாமா?

மறைத்து வைத்தால் சட்டப்படி ஒரு குற்றவாளியை மறைத்தது, அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருப்பதற்குச் சமம் என்றாகி விடும்.

காட்டிக் கொடுத்தால்...

ச்சே!

இதை விடவும் பச்சைத் துரோகம் உண்டா? நெஞ்சில் கொஞ்சம் கூட இரக்கமே இல்லாதவள் என்று ஊர் உலகமே தன்னைத் தூற்றாதா?

'ஊரும், உலகமும் கிடக்கட்டும். குமரன் என்ன நினைப்பார்?'

மீராவின் மனசுக்குள் மறுபடியும் மறுபடியும் அந்தக் கடித வரிகள்.

ராஜேஸ்வரியைத் தனியே சந்தித்துப் பேச முடியவில்லை. அவள் படுக்கையைச் சுற்றி எப்பொழுதும் நாலைந்து உறவினர்கள்.

அதே சமயத்தில் - குமரனிடமும் மனம் விட்டுப் பேச இயலவில்லை.

முன் போல - வீட்டில் மூன்றே நபராக இருந்தால் அது சாத்தியம். இந்த நான்கு நாட்களாகவே எப்பொழுதும் வீட்டில் பதினைந்து இருபது பேருக்குக் குறையாமல் இருந்தார்கள். பந்தி பந்தியாய்ச் சாப்பாடு நடந்தவண்ணம் இருந்தது.

இதில் குமரனைத் தனிமையில் சந்தித்துப் பேசுவது என்பது எப்படிச் சாத்தியம்?

மீரா தவித்தாள்..

அன்றிரவு -

இளவரசுவைத் தோளில் சாய்த்துக் கொண்டு, குமரனின் அறை வாசலில் அவள் தயங்கி நின்றாள்.

''உள்ளே வாயேன் மீரா...''

''ம்... இல்லே.. நீங்க கொஞ்சம் வெளில வாங்க... நான் உங்க கூட பேசணும்...''

குமரன், குழந்தையை வாங்கிக் கட்டிலில் கிடத்தி விட்டு அறைக்கு வெளியே வந்தான்.

''அம்மா எப்படியிருக்காங்க?''

''தூங்கறாங்க. உங்ககிட்டே அவசரமா ஒரு விஷயம் பத்திப் பேசணும்.. மொட்டை மாடிக்குப் போகலாம்...''

அவள், அவனது சம்மதத்துக்குக் காத்திராமலேயே 'விடுவிடு'வென மாடிக்குப் போனாள்.



ராஜேஸ்வரியின் அறையை, போகிற போக்கில் எட்டிப் பார்த்தாள் மீரா.

அலுப்பினாலோ அல்லது தூக்க மாத்திரையின் சக்தியினாலோ - அவள், தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்திலும், சோபாக்களிலும் உட்கார்ந்து கொண்டு உறவுக்காரப் பெண் மணிகள் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மீரா, மொட்டை மாடிக்கு வந்து, விளக்கைப் போடாமலேயே அங்கே யாரா வது படுத்திருக்கிறார்களா என்று ஒருமுறை உன்னிப்பாய்ப் பார்த்தாள்.

யாரும் இல்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்ட பிறகு குமரனின் பக்கம் திரும்பினாள்.

விளக்கு இல்லாவிட்டாலும் தெரு விளக்கின் வெளிச்சம் அவர்கள் நின்ற பகுதி யில் லேசாகத் தெரிந்தது.

''சொல்லு மீரா... ஏதாவது பிராப் ளமா?''

''ஒருவிதத்துல பிராப்ளம்தான். ஒரு சிக்கலுக்குத் தீர்வு கண்டுபிடிச்ச அதே நேரத் துல புதுசா ஒரு முடிச்சு விழுந்துடுச்சு..''

''புரியலே...''

''பஸ்ஸிலே வெடிகுண்டு வச்சவங் களைக் கண்டுபிடிச்சிட்டேன்..''

''.....''

குமரன், அவளையே வைத்த கண் வாங் காமல் பார்த்தான்.

''அந்த நிர்மலா உங்க அம்மாவுக்கு எழுதின கடுதாசுல எல்லாமே இருக்கு... அந்த விபத்துக்குக் காரணகர்த்தா...''

''எங்க அம்மாவும், அந்த நிர்மலாவும் தான்.. இது எனக்கு முன்னாலேயே தெரியும் மீரா..''

அவள் அதிர்ந்து நிமிர்ந்தாள்.

''என்ன சொல்றீங்க.. இது பத்தி எப்பத் தெரியும் உங்களுக்கு... ஏன் போலீஸ்லே சொல்லலே? குற்றவாளியைத் தேடி வந்திட்டு, இங்கே - உங்க வாழ்க்கையோட இணையப் போற என்கிட்ட கூட இதைப் பத்தி நீங்க ஏன் இதுவரைக்கும் சொல்லலே? யாராலே என்னோட மணவாழ்க்கை பறிக் கப்பட்டதோ அவங்களாலேயே எனக்குப் புதுத்தாலி...''

மீராவுக்கு ஆத்திரத்தில் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்க, அவளது விழிகள் மட்டும் அந்த அரை வெளிச்சத்தில் கனியும் நெருப்பாய்ப் பிரகாசித்தன.

மொட்டை மாடியில் கைப்பிடிச் சுவ ரில் சாய்ந்திருந்தாலும் அவளது தேகம் மெல் லியதாய் நடுங்கியது.

குமரன், நிதானமாய் இரு கைகளையும் மார்போடு சேர்த்துக் கட்டியபடி சொன் னான் :

''இந்த விபத்து நடந்த மறுநாளே- அம்மா கதறிட்டு விஷயத்தை என்கிட்ட சொல்லிட்டாங்க மீரா. அப்பக் கூட, தான் தான் குற்றவாளியின்னு சொன்னாங்களே தவிர, நிர்மலாவை, அவங்க வாயாலே காட்டிக் கொடுக்கவே இல்லே.. உன்னை மாதிரியே நானும் அப்ப ஆத்திரப் பட்டேன்.. ஆனா... அவங்க இதை வேணும்னு செய்யலே.. நிர்மலாவை மட்டு மில்லே.. இன்னும் நிறையப் பொண்ணுங் களை எங்க அப்பாகிட்டேயிருந்து காப் பாத்த அம்மா இந்த முடிவுக்கு வந்திருக் காங்க. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து வேற வழி தெரியாம...''


அவன், தன் தாய் சொன்னதை அவ ளிடம் விவரித்தான் :

ராஜேஸ்வரி - தன் கழுத்தில் தாலி இல்லாவிட்டாலும் போகிறது; இனிமேல் இந்த மனிதரால் உண்டாகும் அவலங் களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று தீர்மானித்தாள். வீட்டில் வைத்து, இந்த மனிதனுக்கு எதைச் செய்தாலும் போலீஸ் கண்டுபிடித்து விடும். வெளியே வைத்து ஒரு முடிவு கட்ட வேண்டும்.. ஆள் வைத்து அடிப்பது அரசியலில் சகஜம் என்றாலும் ராஜேஸ்வரிக்கு அதற்கெல்லாம் சமர்த்தோ, சாமர்த்தியமோ போதாது.

ஒவ்வொரு முறையும் நிர்மலா தன் கழுத்தில் தாலி கட்ட வேண்டும் என்று தர்ம ராஜனை மிரட்டிய கையோடு, ராஜேஸ்வரி யையும் ரகசியமாய்த் தொடர்பு கொண்டு தனது நிலை பற்றிப் புலம்புவாள்.

'குழந்தை அவருது இல்லேங்கறே. அப்புறமென்ன, விட்டுத் தொலைக்க வேண் டியதுதானே.. பேசாம, அந்த ரவிய அழைச் சிட்டு வா. நானே கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்...'

'அவர், இப்பத் தயாரா இல்லே... உங்



சொன்னார்கள்...

●● ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனப் பொருளாதாரச் சித்தாந் தத்திற்குப் புது விளக்கம் சொன்ன அண்ணா வின் கோட்பாட்டுக்கு இணங்க, உண்மையி லேயே ஏழையைச் சிரிக்க வைக்கும் பணி யில் ஈடுபட்டுள்ளோம்.

- முதல்வர் செல்வி ஜெயலலிதா

●● நடப்பது எந்த ஆட்சி என்று மக்கள் உணர வேண்டும், அல்லது பரப்பப்பட வேண்டும். இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்த மாட் டோம்.

- கலைஞர் மு. கருணாநிதி

●● முதலமைச்சர் பதவி போனதில்

கலைஞருக்கு என்ன நஷ்டம்? ஒரு நஷ்டமும் இல்லை. கலைஞர் மீண்டும் முதலமைச்சர் ஆகி இருந்தால் கூட, தலையில் மிச்சம் மீதி இருக்கிற முடி கூட உதிர்ந்து இருக்கும்.

- க. அன்பழகன்

●● புலிகளைத் தமிழ்நாட்டில் இருந்து புரட்சித் தலைவி விரட்டியதுடன், புலிகளுக்கு ஆதரவாக இருந்த நரிகளையும் விரட்டினார். அதில் இரண்டு நரிகள் தப்பி வந்தன. அந்த நரிகளும் சட்டமன்றத்தில் இருக்காமல் ஓடிவிட்டன.

- நாவலர் நெடுஞ்செழியன்

●● சென்னையில் முன்பு ரேஷன் பொருள்கள் எல்லாம் தனியார் கடைகள் மூலம்தான் விநியோகிக்கப்பட்டன. பெருந்தலைவர் காமராஜரை இந்தக் கடைக்காரர்கள் ஆதரித்தார்கள் என்று நினைத்துத்தான் முன்பு இந்த முறை ரத்து செய்யப்பட்டது.

- பண்ருட்டி ராமச்சந்திரன்



...கேட்டுச் சிரித்தார்கள்

●● நீதிமன்ற உத்தரவை பா. ஜ. க. மீறினால், அயோத்தியில் சத்தியாக்கிரகம் நடத்துவோம்.

- வி. பி. சிங்

●● நரசிம்மராவ் அரசு நிலைத்து நிற்பதே நம்மால்தான். நாணயமிழந்துவிட்ட அந்த அரசு தொடர்ந்து இயங்க நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

- ஜனதாதளத் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்

●● கல்லூரிகளில் மாணவர் பேரவைத் தேர்தல்களால் கலவரம் ஏற்படுவதை அனுமதிக்க முடியாது.

- கல்வி அமைச்சர் ஆர். எம். வீரப்பன்

வீட்டுக்காரரைச் சந்தியில இழுத்திட்டுத் தான் மறு வேலைங்கறாரு...'

நிர்மலாவின் அவதியை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

'பேசாம, இந்த மனுஷனை நாலு துண்டா வெட்டிப் போடேன். உன்னை, என் குலதெய்வமாக் கொண்டாடுவேன்..'

ஆரம்பத்தில் ராஜேஸ்வரி ஏதோ கோபத்தில் சொல்வதாகத்தான் நினைத்தாள் நிர்மலா...

ஆனால் - ராஜேஸ்வரி மனம் விட்டுச் சொல்லிய பின்தான், அத்தனையும் உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள் என்பது புரிந்தது.

'ரொம்பக் கேவலமா நடந்துக்கறாரும்மா. நான் என்னத்தைச் சொல்ல? பணம் காசு சேர்ந்தா நல்லா உடுத்தட்டும்; திங்கட்டும்; நாலு பேருக்குத் தான தருமம் செய்யட்டும். அதை விட்டுட்டு மனசு இப்படி வக்கிரமாப் போக வேண்டாம். ஊருக்கு நல்லது செய்யறதுக்காக இந்த மனுஷனை எல்லாருமாச் சேர்ந்து தேர்ந்தெடுத்தா - இவரு, தனக்கு வேலை செஞ்ச தொண்டன் வீட்டுப் பொண்ணுங்களை எல்லாம் சூறையாடறாரு.. தெருவுல இவர் எதிரே ஒருத்தி தலையக் காட்ட மாட்டேங்கறா. வீட்டுக்கு உறவு முறையின்னு ஒரு பொம்பிளை எட்டிப் பார்க்க மாட்டேங்கறா. பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டவ கிட்டயே உடம்பு கூசற மாதிரி பேசறாரு. வெட்டினாத் தோஷமே இல்லே...'

நிர்மலா, அந்தக் கணத்தில் தனக்கு உதித்த யோசனையைச் சொன்னாள்.

தர்மராஜன் ஊருக்குக் கிளம்புகிற போது, சொல்லிக் கொண்டு போவதற்காக தன் வீட்டிற்கு வருவார். அப்போது அவர் பெட்டியில் சரியாய் அரை மணி நேரத்தில் வெடிக்கிற வெடிகுண்டை வைப்பது...

அப்போது அவர், பஸ் நிலையத்தில் தன் சகாக்களோடு பேசிக் கொண்டிருப்பார். குமரனை, அந்த இடத்தில் இருக்க விடாமல் காலம் கடத்தி அனுப்ப வேண்டிய பொறுப்பு ராஜேஸ்வரியுடையது..

எல்லாம் சரிதான்...

'டைம் பாம்'மை வைக்க வேண்டிய வேலை - ராஜேஸ்வரியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆட்டோ டிரைவர் ஞானத்தினுடையதாகி விட்டது.

தர்மராஜன், அன்று நிர்மலா வீட்டுக்குப் போய் விட்டு, வைத்தியர் தெருவிலுள்ள புது உறவைப் பார்க்கப் போக, ராஜேஸ்வரி அனுப்பிய பெட்டியில், நிர்மலா தன் கிராமத்து வீட்டுக் கிணற்றுக்காக என்று ரவியிடம் சொல்லி எடுத்து வந்த வெடிகுண்டை வைத்து, ஞானத்திடம் கொடுக்க, அவன், அதைச் சரியான நேரத்துக்குப் பொருத்திப் பெட்டியில் வைத்து, தருமராஜனின் புதுச் சின்ன வீட்டில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்.

கருப்பையா என்கிற வேலையாள் பெட்டியைக் கொண்டு தருமராஜனிடம், பஸ் நிலையத்தில் கொடுக்க வேண்டும்.

எப்படியும் தருமராஜன், தன்னுடன் சேர்ந்து ஊரார் சொத்தைக் கொள்ளையடிக்கும் நாலு பேருடன்தான் அங்கு நிற்பார்.

என்றுமே தருமராஜன் தன் பெட்டியை யாரிடமும் தர மாட்டார். உள்ளே பணமும், ஏகப்பட்ட கோப்புகளும் இருக்குமாதலால்



"இந்தக் கதை நீங்க எழுதின துங்கறீங்க! வேற யாரோ எழுதினது போலல்ல பிரசுரமாயிருக்குது!"

"ஹூம்.. அவசரத்தில் கதாசிரியர் பெயரையும் காப்பியடிச்சுத் தொலைச் சுட்டேன் போலிருக்கு!"

- வேதபுரி. எஸ். ரமேஷ்

- நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களிடம் தான் ஒப்படைப்பார்.

கருப்பையா, தர்மராஜனிடம் பெட்டியை ஒப்படைத்து, அதற்குப் பின் குமரன் வரும் வரையில் காத்திருந்து, அவன் வந்த பின் பஸ் புறப்படும் வரையில் பார்த்துக் கொண்டிருந்த ஞானம் குண்டு வெடிக்காத தனால் பரபரத்துப் போய் ஓடி வந்து, ராஜேஸ்வரியிடம் சொல்ல -

அவள், நிர்மலாவை அழைத்துச் சொல்ல - அரை மணி நேரத்துக்கு முள்ளைப் பொருத்தினோமா இல்லை, அதற்கும் மேலா - என்று ஞானம் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாய் யோசிக்க -

இரவு - அந்தச் செய்தி வந்து விட்டது...

இதைச் சொன்ன குமரன், மீராவைக் கூர்ந்து பார்த்தான்.

"சத்தியமா - அம்மாவுக்கு இப்படியெல்லாம் ஆகும்னு தெரியாது. போதாக் குறைக்கு தன் மருமகளுக்கே தான் எமனாயிட்டோமேங்கற குற்ற உணர்ச்சி வேற... ஒவ்வொரு நாளும் தனிமையில கதறுவா... தானே போய் போலீஸ்லே சரணடைஞ்சிடறதாத்தான் சொன்னா.. நான்தான் தடுத்தேன். நீ வந்ததுக்கு அப்புறம்தான் அம்மா, தன் நிலைக்கே வந்தா... தன்னாலே வாழ்க்கையப் பறிகொடுத்த உனக்கும், எனக்கும் புதுசா ஒரு சாம்ராஜ்யத்தைத் தன் கையாலே உருவாக்கித் தரணும்னு..."

"காத்திட்டிருக்கேன் மீரா... பொழுது விடியற வரைக்கும் பொறு..." - குரல் வந்த திசையில் மீராவும், குமரனும் 'விருட்'டெனத் திரும்பிப் பார்த்தார்கள்...

ராஜேஸ்வரி, ரவிவர்மா வரைந்த வயதான சரஸ்வதி மாதிரி - கலைந்த தலையும் - சோர்ந்த பார்வையுமாய்...

"அம்மா..."

ராஜேஸ்வரி, புடைவைத் தலைப்பா முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண் டாள்.

"செஞ்ச குற்றத்துல இருந்து தப்பிக்க எண்ணமே எனக்கு இல்லே மீரா... அந் மனுஷனை நினைச்சேனே தவிர தொடர்ந்து நான் நிம்மதியா வாழணும்னு நினைக்கலே. அவர் மட்டும், என் திட்ட படி அவரைச் சேர்ந்த அந்த நாலஞ் அயோக்கியர்களோடயே போயிருந்தா மறுநாளே நானும் போயிருப்பேன்.. ஆனா விதி, என் மருமகளையும், இன்னு ஒண்ணுமே தெரியாத அப்பாவி ஜனங்களையும் சேர்த்தில்லே பழி வாங்கிடுச்சி.. இதுக்கெல்லாம் ஒரு பிராயச்சித்தம் செய்யுணுமில்லே?

"உனக்கும், குமரனுக்கும் கல்யாண செஞ்சகையோட என் சொத்துல ஒரு பங்கை இந்த பஸ் விபத்துல பலியான குடும்பங்களுக்கு எழுதி வச்சு, நிர்மலா வுக்கும் ஒரு பங்கைத் தரப் போறேன் ஞானத்தை முகூர்த்தம் முடிஞ்ச கையோட போலீஸ்லே போய்க் குற்றத்தை ஒப்பு கிட்டு அப்ரூவரா மாறச் சொல்லியிருக் கேன். எனக்காக ஒரு சல்லிக் காசு கூட வழக்கு, வாதம்னு செலவு பண்ண கூடாது...

"அனுபவமில்லாத தோட்டக்காரன் களையப் பிடுங்கறப்ப பூச்செடிங்களையும் பிடுங்கிட்டான்... அவனுக்குத் தெரியாத காரியத்தைச் செஞ்சதுக்குத் தண்டனை யாக தவறை உணர்ந்து, அவன் மறுபடி யும் பாலைவனத்தைச் சோலையாக்க முன் வந்தா... ஒதுக்கிடக் கூடாது இல்லையா... பொறுத்துக்க... விடியட்டும்..."

மீரா, சரிந்து தரையில் உட்காரப் போன ராஜேஸ்வரியைத் தாங்கிப் பிடித்தாள். அவளையுமறியாமலேயே தாரை தாரை யாய்க் கண்ணீர்..

"நான் சாக மாட்டேன் கண்ணு... பயப் படாதே.. முகூர்த்தம் ஆரம்பிக்க எத்தனை மணி நேரம் இருக்கு..."

"இன்னும் நாலு மணி நேரம்..."

"என்னை அப்படியே தூக்கிட்டுப் போய், ஹால்லே நாற்காலியில உட்கார்த்தி வை குமரு... மீரா, என்னை மன்னிச்சிடு.. மளமளன்னு குளிச்சு, மாலையோட வா... நான் காத்திருக்கேன்..."

குமரன், தன் தாயை - ஒரு தகப்பன் தன் குழந்தையை அள்ளுவது போலக் கைகளில் அள்ளிக் கொண்டு நடக்க, மீரா அவனைப் பின்தொடர்ந்தாள்.

(முற்றும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பா
வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் கு
அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 234154
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

அண்ணி

உமா குமார்

வழிந்த வியர்வையைப் புடைவைத் தலைப்பால் ஒற்றினாள். 'அப்பாடி!' - மனம் தானாக நிம்மதிப் பெருமூச்சு விட்டது. சமையல் ஆகி விட்டது. அரை மணியில் தட்டு போட்டு விடலாம். சமைத்தவற்றை மேடையில் அழகாய் ஒதுக்கி வைத்து விட்டு கேஸில் எண்ணெயை வைத்தாள். இனிமையான கொலுசு சப்தம் வர, திரும்பினாள்.

''நகருங்க அண்ணி நீங்க! நான் அப்பளம் பொரிக்கிறேன்!''

உரிமையோடு வந்து பக்கத்தில் நின்று கொண்டு கை அப்பளத்தைப் பிடுங்கும் கலாவை நிமிர்ந்து பார்க்கிறாள் கல்பனா. கலர் நன்றாகக் கூடி மெருகேறியிருக்க, உடல் பூசினாற்போல் மினுமினுவென்று நன்றாகவே மேடிட்ட வயிரோடு, நிறை மாத கர்ப்பிணியாய்.... கலாக் குட்டியா இவள்? ஒரு மஞ்சள் கயிறு பெண்ணை எத்தனை தூரம் மாற்றி விடுகிறது!

''அண்ணீ! சீக்கிரம் தலைல தண்ணிய ஊத்துங்க! கண்ணு எரியும், கண்ணு எரியும்!''

பலவந்தமாகக் கண்ணை இறுக்கி மூடியபடி குதிப்பாள். தலையில் ஒரு சொம்பு தண்ணி ஊற்றியதுமே பதறியடித்துக் கொண்டு, தட்டுத் தடுமாறி ஓடி வந்து அவள் முழங்காலை சேர்த்துக் கட்டிக் கொண்டு, ''அண்ணி போதும்! அண்ணி போதும்'' என்று அலறுவாள்.

மீதித் தலை சீயக்காயை அலசுவதற்குள் கல்பனா முழுவதுமாய் நனைந்து போய் ஈரம் சொட்ட நிற்பாள் குளித்தாற் போல.

''தோ பாரு! என் புடவையெல்லாம் எப்படி நனைந்து போயிடுச்சு? ம்! பச்சைக் குழந்தை மாதிரி குதியல். உனக்கு எண்ணெயைத் தேய்க்கறதுக்குள்ள, உன் தலைய அலசி முடிக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயுடுது போ! இனிமே குளியலே கிடையாது உனக்கு!'' - இப்படி ஒவ்வொரு தடவையும் அலுத்துக் கொள்வாள் செல்லமாய்க் கடிந்தபடி.

''என்ன அண்ணி அப்படிப் பார்க்கறீங்க?'' - கேட்ட கலாவின் தலையை மெதுவாய்க் கோதுகிறாள் சிரித்தபடியே.



''ஒண்ணுமில்லம்மா. பொழுது விடிஞ்சா வளைகாப்பு போட்டுக்கற பொண்ணு நீனு. இங்கே எதுக்கு வந்தே? ம்! எல்லாம் நான் பார்த்துக்கறேன். போ! முதல்ல. சாயந்தரம் சாப்பிட வேண்டிய மாத்திரையெல்லாம் முழுங்கியாச்சா?''

''அதெல்லாம் அப்பவே சாப்டுட்டேன்

அண்ணி. இப்ப நீங்க நகருங்க! எவ்வளவு வேலை பண்ணுவீங்க?''

''ம்! சரி சரி! நூத்துக் கிழவி மாதிரி பேச வேணா. எண்ணைப் புகையை விட்டு நகரு. தலைய சுத்தும் அப்புறம். போய் உங்க மாமியாரையெல்லாம் கவனி! ஏதாவது வேணுமின்னா அங்கேயிருந்தே குரல் கொடு. ஆயிரம் தடவை இங்கேயும் அங்கேயும் நடக்காதே.'' பேசிக் கொண்டே போனவள் தலையிலடித்துக் கொண்டாள்.

''பாத்தியா! மறந்தே போச்சு. உங்க அண்ணனை உள்ளே வரச் சொல்லு. பூமாலைக்குச் சொல்லணும். அடிக்கடி ஞாபகப் படுத்தலேன்னா மறந்தே போயிடும் அவருக்கு.''

காய்ந்த எண்ணையில் லாவகமாய் அப்பளத்தை முக்கி எடுத்தபடியே விரட்டும் அண்ணியை ஏற இறங்கப் பார்க்




NEW
ViVA
RICH
IN MILK

கிறாள். அதே அண்ணி! விவரம் தெரிந்த வயதிலிருந்து பார்த்துக் கொண்டே வருகிறாள். காதில் சின்ன குடை ஜிமிக்கியும், சலங்கை மெட்டியுமாக சின்னப் பெண்ணாய், புது மணப் பெண்ணாய் அன்று பார்த்த அண்ணி இன்னமும் மனத்தின் ஒரு அடி மூலையில் இருக்கிறாள் பசுமையாய். இருபத்தி இரண்டு வருட காலம் அண்ணியை நிறைய மாற்றாவிட்டாலும் தலைநரையில் கொஞ்சம் மாற்றம் தெரிகிறது. தலை பின்னிக் கொள்வதை விட்டு விட்டு கொண்டை போட்டுக் கொள்கிறாள்! மற்றபடி மற்றபடி... அதே அண்ணி! நாளுக்கு நாள் எத்தனை மாற்றங்கள் வந்தாலும் அதே மாதிரி, அன்று பார்த்த மாதிரி நிரந்தர சிரிப்போடு, அதிர்ந்து பேசத் தெரியாமல், என்னம்மா? என்று கேட்கும் அதே பார்வையோடு துளிக் கூட அன்பு குறையாமல் அண்ணி! - அப்படியே கட்டிக் கொள்ள வேண்டும் போல இருக்கிறது.

''கலா! ஞாபகம்லா எங்கே? என்ணெய்ப் புகைல நின்னுக்கிட்டு. பெத்துப் பொழைச்சு நல்லபடியா உன்னைக் கொண்டு போய் உங்க வீட்டுல ஒப்படைக்கணும்! புரிஞ்சுதா! போ! போ ரெஸ்ட் எடுத்துக்க!''

''போய் அண்ணனை அனுப்பறேன்!'' - வெளியில் வருகிறாள் கலா அண்ணனைக் கண்களால் தேடியபடியே.

''ஏங்க! வளையல்காரன்கிட்ட நல்லா எல்லா சொன்னீங்கல்ல? மணி ஆறாகப் போவுது இன்னும் ஆ ளை யே காணோமே!'' - கல்பனா தவித்தாள்.

''கல்பனா! நீ மத்தது எல்லாம் ரெடி பண்ணிடு. ஆறரைக்குத்தானே வளை காப்பு. ''டாண்ணு'' வந்துடுவான். கவலைப்படாதே நீ! எதுக்கும் நான் போய் ஒரு ரவுண்ட் பார்த்துட்டு வந்துடறேன்!'' - சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

அக்கம் பக்கத்துப் பெண்கள் வந்து, ஹால் நிரம்பியிருக்க டேப்பில் 'காரைக் குறிச்சி' முழங்கிக் கொண்டிருந்தது. ''வளையடுக்கறது புருசன் வீட்டுலதானே பண்ணுவாங்க?'' - ஒரு வாய் கேள்வியை மெதுவாய் மென்று பதில் பெறும் ஆவலோடு காத்திருக்க தலையை நிமிர்த்தினாள் கல்பனா.

''அது ஒண்ணுமில்லை. கலாவுக்கு வீக்கா இருக்கு உடம்பு! கொஞ்சம் ரெஸ்ட்டா இருக்கட்டும்னு அழைச்சுக்கிட்டு வந்தேன். டாக்டர் இப்ப பிரயாணமே கூடாதுங்கறார். அதான் பேசாம நம்ம வீட்லேயே காப்பை வச்சுட்டோம்!'' - விளக்கியபடியே கலாவின் தலையில் பூவை எடுத்துச் செருகினாள். புதுப் பட்டுப் புடவையோடு மலங்க மலங்க விழித்தபடி உட்கார்ந்திருந்தவள் தலையை ஆதரவாய்க் கோதினாள். வளைப் பெட்டியோடு ஒரு அறுபது வயது கிழவர் உள்ளே நுழைய ஏதோ நினைத்துக் கொண்டாற்போல உள்ளே நழுவினாள் கல்பனா சட்டென்று.

இந்த வீட்டில் 'அண்ணி!' என்று ஸ்தானத்தில் அவள் நுழைந்த போது கலாவிற்கு வயது ஐந்து. சட்டையைத் தூக்கித் தூக்கி மூக்கைத் துடைத்தபடியே அவளை விட்டு நகராமல் ஈஷிக் கொண்டு நிற்பாள் தொட்டு தொட்டுப் பார்த்தபடி. வலது காலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்ததுமே மூர்த்தி அவளை அழைத்துக் கொண்டு போன இடம் கட்டில்! மூச்சு விடவே கஷ்டப்பட்டபடி, படுத்த படுக்கையாய்க் கிடந்த மாமியார் அருகே நின்ற போது முதன் முறையாக பயமாக கை, கால்கள் உதறலெடுத்தது. கட்டிலைச் சுற்றி நெட்டையும், குட்டையுமாய் ஆறு பெண்கள்! - மாமியார் மெள்ள எழுந்து இவள் கையைப் பற்றி அழுக்கியபடியே அழுத போது கிறங்கிப் போனாள்.

''தாயீ! ஒவ்வொரு மாமியார் மருமக

ஒருநாள் சிறுகீரை ஆய்ந்து கொண்டிருந்தேன். பிறகு பொடியாக நறுக்கும் போது தவறி என் விரலை வெட்டிக் கொண்டேன். ரத்தம் பெருகியது. அருகில் இருந்த என் பாட்டி உடனே அந்தச் சிறு கீரையைச் சிறிது எடுத்து நன்கு நசுக்கி, அப்படியே காயத்தின் மேல் வைத்து துணியால் சுற்றிக் கட்டி விட்டார். இரண்டு மணி நேரம் கழித்து பாட்டி விரலின் கட்டினை கழற்றி விட்டுத் தண்ணீரில் கழுவினார். என்ன ஆச்சரியம்! என் விரலில் வெட்டிய சிறிய பகுதி கூட விரலுடன் அப்படியே ஒட்டிக் கொண்டது. ரத்தக் கசிவு கூட இல்லை. வலியும் இல்லை. வெட்டுப்பட்ட உணர்வே எனக்கு இல்லை. பாட்டி வைத்தியம் எனக்குச் சமயத்தில் உதவியது. சிறுகீரைக்கு ரத்தப் பெருக்கை கட்டுப்படுத்தும் தன்மை, வலியை மாற்றும் தன்மை இருப்பதை என் பாட்டி மூலம் அறிந்தேன்.

- யசோதா கிருஷ்ணமூர்த்தி.

ளுக்கு என்னென்னவோ கொடுப்பாக. ஆனா நானு உன் தலைல ஒரு பெரிய பந்தத்தையே கட்டப் போறேன் தாயீ! வரீசையா ஆறு பொண்ணுக மலையா. நாளைக்கே எந்தலை கிழே சரிஞ்சா 'அம்மா'ன்னு! அழுதுக்கிட்டிருக்கற இதுகளுக்கு ஒரு ஆறுதலுக்காவது ஒருத்தி துணை வேணுமின்னுதான் இத்தனை அவசரமா இந்தப் பயலுக்குக் கல்யாணத்தைப் பேசினேன். தாயீ! உன் கைல இன்னைக்கி ஒப்படைக்கறேன் இதுகளை. எம் புள்ளைகளை அனாதரவா வுட்டுப் புடாத! மூர்த்தி பயலுக்கும் ஒண்ணுந் தெரியாது. பாவம்! நீனு தாம்மா அனுசரிச்சுக் கொண்டு போவணும். பாரமா நினைச்சு இதுகளை ஒதுக்கிடாம உன் காலடிலயே வச்சுக்க ராசாத்தி. செய்வியா? செய்வியாம்மா!''

கையைப் பிடித்துக் கொண்டு கதறியவளை கண்ணில் நீர்மல்கப் பார்த்தாள். சுற்றிலும் கண்களைச் சுழல விட்டாள். பன்னிரண்டு வயது புனிதா முதல் கடைசி உழக்கு வரை தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது புரிய நெகிழ்ந்து போனாள்.

''நீங்க கவலைப்படாதீங்க மாமி! நான் பாத்துக்கறேன். நீங்களும் சீக்கிரமே நல்லாயிடுவீங்க!'' - ஆறுதலாய் அவளை அணைத்துக் கொண்டாள் குரல் தழுதழுக்க.

இதற்காகவே காத்திருந்தவள் போல் அடுத்த நாலே நாளில் மாமியார் தன் உயிரைத் தியாகம் செய்ய.... சுற்றிலும் கதறியபடி நிற்கும் ஆறு பெண்களோடு கதிகலங்கிப் போனாள் கல்பனா.

''ம்! நல்லவேளை மருமக வீட்டுக்கு வந்திருக்கா! இல்லைன்னா இந்த புள்ளைங்க கதி? பாவம்!''

''அம்மாவுக்கு அம்மாவா அண்ணிக்கி அண்ணியா நீதான் இருக்கணும். என்ன செய்யறது?'' - இப்படி ஒரு குரல்.

''ம்! புள்ளை பெத்து புள்ளை பெத்தே பாடைல போயிட்டாப் பாவி கடைசில! அத்தனையும் அனாதையா இனிமே நிக்கப் போவுது பாரு. ஆயிரமானாலும் இவ வேத்து மனுஷி!''

துக்கம் கேட்பதற்கு என்று வந்தவர்கள் ஆளுக்கால் தாராளமாகவே புத்திமதிகளை வாரி வழங்கினர். இடக்காய் குதறினர். அன்று ஒரு தீர்மானத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்தாள் கல்பனா. மனம் முழுவதும் பூத்திருந்த ஆயிரமாயிரம் கனவுப் பூக்களை அப்படியே பிடுங்கி மூட்டை கட்டி ஒரு ஓரமாய் ஒதுக்கி வைத்து விட்டு புடைவையைத் தூக்கி செருகிக் கொண்டாள்.

நாலு நாட்களாய் குளிக்க மாட்டேன்! என்று அடம்பிடித்தபடி நிற்கும் ஐந்தாவது



என் மைத்துனரின் கல்யாணம் முடிந்த பின் லட்டுப் பருப்புத் தேங்காய் அதிகம் மீந்து விட்டது. லட்டு பூந்தியை ஒருவரும் சீண்டக் கூட இல்லை. எனக்கு வேண்டவே வேண்டாம் என்று ஏளனம் வேறு செயதனர். யோசனை செய்து ஒரு சாதனை புரிந்தேன்!

என் குழந்தைகள் பத்து நண்பர்களோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். பூந்தியில். திக்கான பாலை சுடச்சுட ஊற்றி ஊறவைத்து, நன்றாகக் கடைந்து ஏலக்காய்ப் பொடி செய்து போட்டேன். அருமையான கீர் தயார்! டைமன்ட் கல்கண்டு, திராட்சை, ஏலக்காயுடன் முந்திரியும் சர்க்கரையும் சேர்ந்திருந்ததால் சுவையோ சுவை!

இதே போல் 'மைசூர் பாக்' மீந்து விட்டால் அதை நன்றாகத் தூள் செய்து திக்கான பாலைச் சுடச்சுட ஊற்றி முந்திரி, பச்சைக் கற்பூரம் துளி சேர்த்தால் அருமையான பாயசம்!

- பி. சரோஜ்.

நாத்தனாரை உட்கார வைத்துக் குளிப்பாட்டினாள். இருபத்தி நாலு மணி நேரமும் தலையைச் சொறிந்து கொண்டே நிற்கும் கலாவை இழுத்து உட்கார வைத்து பேன் வாரினாள். பன்னிரண்டு வயதிலேயே 'மத மத'வென்று வளர்ந்து நிற்கும் மூத்தவள் புனிதாவிற்கு உடனே தாவணி போட்டாக வேண்டும்! ஸ்கூல் வேறு போகிறாள். மளமளவென்று பெட்டியைத் திறந்து கொடி கொடியாய்ப் பூப்போட்ட சிவப்பு நிறச் சேலையை எடுத்து புனிதாவை ஒரு பக்கம் பிடிக்கச் சொல்லி இரண்டு பாகமாக வெட்டினாள். புனிதாவை அறைக்குள் அழைத்துச் சென்று அவளுக்கு இடுப்பில் செருகினாள். வெட்கமும், மகிழ்ச்சியும் கலந்த பூரிப்பில் புனிதா அவளைக் கட்டிக் கொண்ட போது கல்பனாவிற்குக் கல்யாணமாகி பத்தே நாள் ஆகியிருந்தது. அன்று ஏற்றுக் கொண்ட இந்தக் கடமை! பொறுப்பு... கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து இன்று கடைக்குட்டி கலாவின் வளையடுக்கல் வரை வந்து விட்டது.

''மாமீ! உங்கப் பொண்ணுங்க யாருக்கும் எந்தக் குறையும் வைக்கலை மாமி. எல்லாருக்கும் நல்ல இடத்துல கல்யாணம் கூட ஆயிடுச்சு'' - மானசீகமாக மாமியாரிடம் பேசினாள்.

''கல்பனா! ஏய்! கல்-ப்பனா, இங்க என்னம்மா பண்றே?''

மூர்த்தியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் கண்ணைத் துடைத்தபடியே.

''ம்! நான்... நானு ஒண்ணுமில்லீங்க. சாம்பார் கொதிக்கிறதான்னு பார்க்க வந்தேன்''

சுதாரித்துச் சிரிப்பவளை ஆழமாய் ஒரு பார்வைப் பார்த்து விட்டு தோளைத் தட்டினான்.

''என்னம்மா நீனு? ம்! அங்கே வளையடுக்கறதுக்குக் கலா அண்ணி எங்கே? அண்ணி எங்கேன்னு தவிக்கறா. நீ என்னமான்னா இங்கே வந்து நின்னுக்கிட்டு. வா!''

பதிலுக்குச் சிரித்தாள் கல்பனா. ''என் கைக்குக் கீழே இருந்த உங்க தங்கச்சி இல்லைங்க கலா. இப்ப ஒருத்தர் வீட்டு மருமக.



சமையல் சோடாவும் சலவைச் சோடாவும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருப்பதால், கவனக் குறைவாக மாற்றிச் சமையலில் உபயோகித்து விட்டுச் சங்கடப்படுகிறவர்களுக்கு: சலவைச் சோடா - ஈரக் கையால் தொட்டால் சூடாக இருக்கும். சமையல் சோடா - ஈரம் பட்டால் பழுப்பு அல்லது வெளிர் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

- சரயு சாருமன் சுந்தர்

ஒரு நல்ல காரியம் அவங்க வீட்லதான் முன்னால நின்னு செய்யணும். துக்கிரி மாதிரி நானா போக முடியும் எதுக்கு எடுத்தாலும்!''

சொன்னவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொள்ள திடுக்கிட்டு நிமிர்ந்தான் மூர்த்தி. ''கல்-ப்-பனா'' -அதிர்ந்து போய் நின்றவனைப் பார்த்து சகஜமாய் சிரிக்க முயன்றாள்.

''அது ஒண்ணுமில்லீங்க. சாம்பிராணி போடணுமாம்! அதான் நெருப்பு எடுக்க ஓடி வந்தேன். நீங்க போங்க இதோ, நான் பின்னாலேயே வரேன்!''

அவளின் உள் பதட்டம் குரலைத் தடுமாற வைக்க அதை மறைக்க நினைத்தாற்போல இடையே சிரித்து மழுப்பிக் கொண்டு நின்ற மனைவியை உற்றுப் பார்த்தான் மூர்த்தி. இத்தனை வருடமாகியு[ம்] இந்தப் பெண் மனதை முழுமையாய் புரிந்து கொள்ளவில்லையோ நான்?

''வாம்மா! சீக்கிரம் வா! மத்ததை அப்[பு]றம் வந்து பார்த்துக்கலாம்!'' - மொட்டை[]யாய் சொல்லி விட்டு மளமளவென்[று] வெளியில் நடந்தான்.

கல்பனாவை தாலி கட்டி அழைத்து[க்] கொண்டு வந்து, நாலாம் நாளே அம்ம[ா]விற்குப் பாடை கட்டும்படியாக வ[...] எத்தனை கலங்கிப் போனான்?

''தோ பாருப்பா! புதுப் பொண்டாட்[டி] தான், இல்லைங்கலை. அதனால அ[...] மயக்கத்துல விழுந்து கூடப் பொறந்த[...]களை மறந்துடாதே! புரியுதா? நல்லதே[ா] கெட்டதோ இனிமே நீதான் அதுகளுக்[கு] எல்லாம். பாவம்!''

தூரத்து மாமா 'நறுக்'கென்று வெளி[...]படையாகவே நாலு பேர் முன்னா[ல] தலையில் குட்டாத குறையாக வார்த்தை[...]களைக் கொட்ட, அன்று அவன் எத்தனை[] தூரம் மனமொடிந்து போனான். சொற்[ப] சம்பளத்தில், கடனோடு ஆறு தங்கைகளின்[] எதிர்காலத்தை எப்படி நான் எதிர்கொள்ள[ப்] போகிறேன்? கூடவே ஒரு பெண்ணிற்கு[த்] தாலி வேறு கட்டியாகி விட்டது. அது வேறு[] சுமை! கண்ணுக்கெட்டிய தூரம் வ[...] வெளிச்சம் என்ற ஒன்றையே கற்பனை[] பண்ணிப் பார்க்க முடியாமல் எதிர்கால[] இருளை நினைத்து நினைத்து மனது[க்]குள்ளே எத்தனை மருகினான். கடைசி[]யில்? சுமையாக நினைத்தவள் முதல்[] முறையாக அருகில் வந்த போது அந்த[க்] குடும்பத்தின் வருங்காலத்தை நிகழ்கால[த்]தோடு ஒப்பிட்டு, கஷ்டங்களைத் தணி[த்து] விட்டு வைத்து அலசி எடுத்துத் தூர வைத்[து] விட்டு தெளிவாய்ப் பேசிய போது[] சிலிர்த்துப் போனான்.

''இங்கே பாருங்க! வீட்ல இப்ப இருக்[்]கற நிலைமைல நாலு பக்கமும் இத்தனை[] கடனோட இப்படியே நாம உழண்டு[க்]கிட்டுக் கிடந்தா என்னைக்கும் நிமிர முடி[]யாதுங்க! அதோட நீங்க செய்ய வேண்டிய[] கடமையும் நிறைய இருக்கு. இப்பலேந்தே[] ஒவ்வொண்ணா யோசிச்சுப் பார்த்து நிதா[]னமா நாம திட்டமிட்டு வாழ்க்கையை[] ஆரம்பிக்கலைன்னா கடைசி வரை ஒரு[] சுமைதாங்கியாவே இருந்திடுவீங்க. எட்டு[] பேர் இருக்கற இந்த வீட்ல நீங்க ஒருத்த[ர்] மட்டும் சம்பாதிச்சா போதாது. நானு[] நிறையப் படிக்கலைதான். ஆனா தைய[ல்] வேலைல்லா நல்லாவே வரும். நீங்[க] எனக்கு மிஷினை, அது பழசா இருந்தா[லும்] கூடப் போதும். ஒண்ணு வாங்கி[ப்] போடுங்க. என்னால முடிஞ்ச வரைக்கு[ம்] உங்களுக்குக் கொஞ்சமாவது துணைய[ா]

வருவேன்!''

தயங்கி, நிறுத்தி பிசிறில்லாமல் பேசிய அவளை ஆச்சரியமாய்ப் பார்த்தான் அன்று இரவு. பேசியதோடு நின்று விடும் ரகம் இல்லை என்று அவள் மறுநாளே நிரூபிக்க ஆச்சரியம் பிரமிப்பாக மாறியது. மாலை ஆபீஸ் விட்டு வந்தவுடனேயே மெள்ள அருகில் வந்த மனைவியை நிமிர்ந்து பார்த்தான்.

''ஏங்க! பக்கத்து வீட்டுக்காரங்க வந்திருந்தாங்க. பேச்சோட பேச்சா தெரிஞ்சது அடுத்த தெருவுல ஒருத்தர் வீட்ல மிஷின் விலைக்குக் கொடுக்கறாங்கன்னு. போய்ப் பார்த்தேன்! விலையும் ரொம்ப அதிகம் இல்லை, அதோட மிஷின் கண்டிஷனும் நல்லா இருக்கு....''

தயங்கித் தயங்கி இழுத்தவளை தயக்கமாகப் பார்த்தான். அம்மா உயிரோடு இருந்த போது மருந்து, கல்யாணம், பிறகு கருமாதி என்று மூலைக்கு மூலை கடனோடு முழிக்கிறேன் என்கிட்ட காசுன்னு வராதே தாயே!'' - இப்படி வெட்டு ஒன்று துண்டு இரண்டாக சொல்லி விடலாமா? - எப்படி? யோசித்துக் கொண்டிருந்தவனை நிமிர்ந்து நேருக்கு நேர் பார்த்தாள்.

''எனக்கு உங்க நிலைமைப் புரியாம இல்லைங்க. கல்யாணத்தில பல பேர் மொய்ப் பணம் கொடுத்தாங்க இல்லையா? எங்க ஆத்தா கூட போனா செலவுக்கு வச்சுக்கன்னு கொஞ்சம் பணம் கொடுத்தது. எல்லாத்தையும் சேர்த்தா மிஷின் வாங்கற அளவுத் தேறிடும் பணம்! உங்ககிட்டே ஒரு வார்த்தைக் கேட்டுக்கிட்டு அடியெடுத்து வைப்போம்னு நினைச்சேன். வாங்கிட்டு வரட்டுமா!''

குனிந்து காலடியில் உட்கார்ந்து தரையைச் சுரண்டியபடியே அவள் கேட்க கனத்துப் போனான் மூர்த்தி.

''வறுமை என்ற அந்த ஒரு சுகத்தைத் தவிர நான் உனக்கு எதுவும் தர முடியாதம்மா!'' - மனம் தன்க்குள் அழ அவள் கைகளை எடுத்துக் கோர்த்து மெள்ள அழுத்தினான். ''நீ எது செய்தாலும் அதுக்கு நானு துணை இருப்பேம்மா'' கலங்கினான். அவள் முகத்தில் தெரிந்த பிரகாசம் மனத்திற்கு லேசாக நிம்மதியைத் தந்தது.

அதன் பின்? எப்போது பார்த்தாலும் கல்பனா மிஷினில் உட்கார்ந்திருப்பாள் இல்லை துணியை வெட்டிக் கொண்டிருப்பாள். புனிதாவும் பட்டனும் நூலுமாக துணைக்கு.

''ஆமா! வாசல்ல ஒரு போர்ட் மாட்டிடவா? உன்னைய நம்பி யாரு இத்தனை துணியை கொண்டு வந்து இங்கே கொடுத்



தருமபுரி மாவட்டத்தில் +2 தேர்வில் பி. ஸ்வரூபா முதலாவதாகத் தேறியுள்ளார். பிஸிக்ஸ், மேத்ஸ், கம்ப்யூட்டர் சயின்ஸ் மூன்றிலும் 200 மதிப்பெண்களைப் பெற்ற இவர், பிஸிக்ஸில் மாநிலத்திலேயே மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஸ்வரூபா எஸ்எஸ்எல்சி படிக்கும் போதும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதலாவது வந்திருக்கிறார். இவர் மாநிலத்தில் முதலாவதாக வரவேண்டுமென்று இவருடைய பெற்றோர்கள், தாத்தா ஆகியோர் ஊக்குவித்தனர். இவர் இந்த அளவிற்கு முன்னேறியதற்கு ஆசிரியர்களின் பங்கு பெரிதும் உண்டு.

- நாகரத்தினம்.

தது?'' - கேலி செய்வான் அவள் வெட்கப் படுவதை ரசித்தபடியே.

''இது மட்டுமில்லே அண்ணே. இதெல்லாம் என்ன? அக்கம் பக்கத்து கிராக்கி. பக்கத்துத் தெரு பெரிய டெய்லர் கடைலேர்ந்து துணி வரப் போவுது அண்ணிக்கு. அண்ணி பார்த்துப் பேசிட்டு வந்திச்சு. இனிமே அங்கக் குவிஞ்சு கிடக்கிற துணில பாதியை நம்ம வீட்லதான் தைக்கப் போவுது அண்ணி!'' - புனிதா பீற்றிக் கொண்டாள்.

விடியற்காலையே எழுந்து, குளித்து அவசர அவசரமாய் டிபனையும், சமையலையும் முடித்து அனைவரையும் ஸ்கூலுக்கு அனுப்பி விட்டு நேராகப் போய் மிஷினில் உட்கார்ந்து விடுவாள். முதல் நாள் தயாராக வெட்டி வைத்திருக்கும் துணிகளோடு. அதன்பின் வேலை நடப்பு தென்னவோ வாயால்தான். கண் நாலா பக்கமும் சுற்றிக் கொண்டிருக்க மிஷினாய் கை தன் வேலையை விடாமல் செய்து கொண்டிருக்கும். ''மீனா! அடுப்பு பக்கத்துல காப்பி இருக்கு. அண்ணனுக்கு ஊத்தி கொண்டு வாம்மா!'' - ''ரேணு! உன் பள்ளிப் பாடம்லாம் எழுதியாச்சா? கொண்டா ஸ்லேட்டை இங்கே!'' - இப்படி ஒரு அதட்டல் பிறக்கும். ''கலாக்குட்டி! ஓடு வாசல்ல யார் வந்திருக்கிறது பாரு!''- ''புனிதா! இங்க வாம்மா! நாலு ப்ளவுஸ் இருக்குப் பாரு! இந்தா! மாலதி வீட்ல கொடுத்துட்டுப் பணம் வாங்கிட்டு வா!''

உட்கார்ந்த இடத்திலேயே அனைவரையும் விரட்டியபடி மிஷினோடு மிஷினாய் இயங்கிக் கொண்டிருப்பவளை

ஆச்சரியமாய், அதிசயமாய்ப் பார்ப்பான். இவளுள் இத்தனை சக்தியா? - என்று பிரமித்துப் போன நாட்கள் எத்தனையோ! மூலைக்கு மூலை நின்று அரித்தெடுத்த கடன்காரர்கள் ஒவ்வொருவராய்க் குறைந்து போக தங்கைகளின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் குவிந்து நிற்க மானசீகமாய் வணங்க ஆரம்பித்தான் அவளை! தான் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்காததைத் தோளோடு தோள் நின்று உழைத்து ஒரே வருடத்தில் குடும்பத்தைத் தட்டி நிமிர்த்திய அந்தக் கைகளை எடுத்து மெல்ல முத்தமிட்டான் ஓர் இரவு. அன்று அவள் சொன்ன செய்தி அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் கூடவே கவலையும் வந்தது. மேலே அவள் பேசிய பேச்சில் ஆழ்ந்து போய் அவளைப் பார்த்து ஆயிரமாவது தடவையாகப் பிரமித்து இறுக்கி அணைத்துக் கொண்டான் கண்ணில் நீரோடு. அந்த இரவு கல்பனா அவன் மனத்தில் எங்கோ உயர்ந்து போய் இமாலயமாய்த் தெரிந்தாள்.

''உஷ்! தட்டுல உட்கார்ந்து என்ன சொப்பனம் வேண்டிக் கிடக்கு? இலையைப் பார்த்து நல்லாச் சாப்பிடுங்க'' - கல்பனா குசுகுசுவென்று காதில் ஓத, திடுக்கிட்டுச் சுய நினைவிற்கு வந்தான். நிமிர்ந்து அவளைப் பார்ப்பதற்குள் அடுத்தடுத்த தட்டில் பாயசத்தை ஊற்றியபடியே அவள் போய்க் கொண்டிருக்க, குனிந்து மௌனமாய்ச் சாப்பிட ஆரம்பித்தான்.

''உங்க அண்ணி எங்கம்மா?'' - ஊருக்குப் போனவர்களை வழியனுப்பிவிட்டு வந்து நிற்கும் அண்ணனைப் பார்த்துச் சிரித்தாள் கலா. ''இங்கேதான் அண்ணே மாடிமேல இருக்காங்க! தலைவலிக்குதுன்னாங்க அண்ணே பாவம்!'' - மெல்ல மாடியேறினான்.

கைசுவற்றில் சாய்ந்தபடி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள் கல்பனா.

''கல்பனா!'' மூர்த்தியின் குரல் கேட்டுத் திரும்பினாள். ''ம்! எல்லோரும் போயிட்டாங்களா, வீடே வெறிச்சோடிப் போச்சுங்க. கலாவும் படுத்துட்டா. தனியா உள்ளாரயே கிடப்பானேன்னு இங்கே வந்தேங்க'' - படபடவென்று பொரிந்து தள்ளியவளைக் கண் சிமிட்டாமல் பார்த்தபடியே இருந்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீங்க!''

''இல்லே! நான் இன்னும் உன்னைப் புரிஞ்சுக்கறது பாக்கியிருக்குன்னு நினைக்கிறேன்!''

கலகலவென்று சிரித்தாள். ''அப்பாடி! கல்யாணமாகி இருபத்திரண்டு வருஷம் கழித்து இந்த நினைப்பு வந்துருக்கு.. ரொம்ப சீக்கிரம்தான்''

பதிலுக்கு அவனும் சிரித்தான். ஆனாலும் மனம் நம்ப மறுத்தது. இல்லை! இவள் மனத்தில் ஏதோ இருக்கிறது. அன்று பேச்சிலும், கண்ணிலும் இருந்த வைராக்கியம் நாளாக நாளாகத் தேய்ந்து விட்டதோ?

அன்று இரவு எத்தனைத் தெளிவாய்ப் பேசினாள். வெட்டிப் போட்ட துணிகளைக் கட்டி அடுக்கிவிட்டுப் படுக்கையில் வந்து விழுந்தவளை ஆச்சரியமாய்ப் பார்த்தான் மூர்த்தி. முகத்தில் அன்று ஏகப்பட்ட குழப்பம்! அவளே சொல்லட்டுமென்று காத்திருந்தவன் அவள் தயங்கித் தயங்கிச் சொன்னதைக் கேட்டவுடன் மௌனமாகிப் போனான். முதலில் குழந்தையென்றவுடன் பூத்துப் போன மனசுபின்னாலேயே, 'இப்போது அவசியமா?' என்ற கேள்வியைப் பளிச்சென்று எடுத்துப் போடக் குழம்பினான். அவளின் தயக்கம் புரிய அப்படியே மேலே வெறித்தபடி மல்லாந்து படுத்தான். தன் குழந்தை உருவாகியிருக்கும் செய்தியைக் கூடச் சந்தோஷமாக ஆரவாரித்து, குதித்துக் கொண்டாடிக் குதூகலிக்க முடியாமல் கைகட்ட வைத்திருக்கும் வறுமையின்

மாவடு தீர்ந்தபின் அதன் தண்ணீரை வீணாக்காமல், உபயோகிக்கும் முறைகள் பற்றிப் போட்டிருந்தீர்கள். இன்னும் சில டிப்ஸ்:

1. மணத்தக்காளியை வாங்கி தண்ணீரில் போட்டுச் சுத்தப்படுத்தியபின், மூன்று நாட்கள் மாவடுத் தண்ணீரில் ஊறவைத்து காய வைக்கவும். தண்ணீர் வற்றும் வரை இவ்வாறு நன்றாகக் காய வைத்து பாட்டிலில் எடுத்து வைக்கவும். தேவையான போது வறுத்துச் சாதத்தில் பிசைந்து சாப்பிட்டால் செமை ருசி. உடம்புக்கும் நல்லது. ரசம், தயிர் சாதத்திற்குத் தொட்டுக் கொள்ளலாம்.



2. வேப்பம் பூவைக் காயவைத்து, மாவடுத் தண்ணீரில் ஊறவைத்து, வெயிலில் வைத்து நன்றாகக் காய்ந்தவுடன் பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். வயிற்றுப் பொருமலினால் (மழைக் காலத்தில் கஷ்டப்படும் போது, வேப்பம் பூவை வறுத்து சாதத்துடன் பிசைந்து சாப்பிட வயிற்றுப் பொருமல் பித்தம் இவை பறந்து விடும்.

- பி. சரோஜ்.

து வெறுப்பாக வந்தது.

இதைக் கல்பனாவிடம் சொன்னால் ப்படி எடுத்துக் கொள்வாள்? எழுந்து உட் ார்ந்து தன்னையே பார்க்கும் கல்பனா வ, "என்னம்மா!" என்றான்.

"நான் ஒண்ணு சொன்னால் தப்பா டுத்துக்க மாட்டீங்களே?" - தெளிவாய் ிழுந்த வார்த்தைகளைக் காதில் வாங்கிக் காண்டு தலையாட்டினான்.

"வந்து... நானு போய் நாளைக்கி ாக்டரைப் பார்த்து..."

"பார்த்து?" - என்ன சொல்ல வரு றாள்?

"நான் நல்லா யோசித்துத்தாங்க இந்த முடிவைப் பண்ணியிருக்கேன். இப்பதான் காஞ்ச கொஞ்சமாக் கடனை அடைச்சி ருக்கோம். இன்னும் வீட்டு பேர்ல இருக் கிற கடனை வேற அடைச்சாகணும், இல் லையா?"

அவள் கேட்க மௌனமாய்த் தலை யாட்டினான்.

"ஏற்கெனவே ஆறு குழந்தைகளை வச்சுக்கிட்டு முழி பிதுங்கிக்கிட்டிருக்கிற இந்தக் குடும்பத்துக்கு இப்ப இன்னொரு குழந்தைக்கு அவசியமே இல்லைங்க!"

"கல்பனா"

"ஆமாங்க! நான் நல்லா யோசனை பண்ணிதான் இந்த முடிவுக்கு வந்திருக் கேன். 'அண்ணி! அண்ணி!'ன்னு சுத்தி வர்ற இந்தப் புள்ளைகளுக்கு நாலு எழுத்துச் சொல்லிக் கொடுக்கணும். முடிஞ்ச வரைக் கும் நல்லா படிங்கடின்னு காலேஜ்லாம் அனுப்பணும். அதோட மட்டும் நம்ம கடமை முடிஞ்சுடாதுங்க. பன்னிரண்டு வயசுல தாவணி மாட்டிக்கிட்டு ஒரு நாளைக்குப் பத்து தடவை கண்ணாடி பார்க் கிற புனிதாவுக்கு நாம இப்பவுலேந்தே கொஞ்சம் கொஞ்சமா சேர்க்க ஆரம்பிச்சா தான் வயசுப் புள்ளையைக் கட்டி கொடுக்க லாம். அதோட போச்சா? பின்னாலயே வரி சையா பானு, சீதா, மீனு, ரேணு எல் லோரும் மலையா நிப்பாங்க. இந்த நிலை மைல நாம இன்னும் சுமையை ஏத்திக் கிட்டே போனா தாங்க முடியாதுங்க. முதுகு எலும்பு முறிஞ்சு போயிடும். அதுக் காக இப்ப நாம இந்த சுமையை இறக் கிடறதுதான் நல்லது."

அவளிடம் இருந்து வந்து விழுந்த வார்த்தை அவனைச் சட்டென்று எழுந்து உட்கார வைத்தது. "கல்பனா! உனக்கு இதுல துளி கூட வருத்தமில்லையா?" - சிரித்தாள்.

"வருத்தமா? எதுக்குங்க கவலைப் படணும்? மாறா நானு கவலைப்பட்டது



தக்காளிப் பழம் விலை மிகவும் ஏறி இருக்கும் சீசனில் இல்லத் தரசிகளுக்கு ஓர் யோசனை. வீட்டில் தக்காளி கெச்சப் அல்லது சாஸ் ஏதாவது ஒன்றிருக் கிறதா?

ரசம் தயாரிக்கும் போது அது கொதிக்கத் தொடங்கும் முன்பு இந்தத் தக்காளி சாஸ் அல்லது கெச்சப்பிலிருந்து இரண்டு முதல் நான்கு மேஜைக் கரண்டிகள் விட வும். கொத்துமல்லியைப் பொடி யாக நறுக்கிப் போட்டுக் கொதித்த பின் இறக்கிப் பாருங்கள். அடடா! அது போன்ற ரசம் இதுவரை நான் சா ப் பி ட் ட தி ல் லை என்று அனைவரையும் சொல்ல வைக் கும் வண்ணம் இருக்கும்.

- ஆர். ரேவதி.

உங்க பர்மிஷன் கிடைக்கணுமேன்னுதான். குழந்தையே வேண்டாம்னு சொல்லலீங்க. இப்ப வேணாம்னு சொல்றேன். கொஞ்சம் இந்தக் கஷ்டங்கள்லாம் குறைஞ்சப்புறம் கொஞ்சமாவது இந்தக் குடும்பம் தலை நிமிர்ந்த அப்புறம் நாம அதைப் பத்தி யோசிக்கலாம். இல்லையா?"

முதுகை வருடினான். "நானும் நீ விஷ யத்தைச் சொன்னவுடனேயே இதையே தான் நினைச்சேன். உன் இஷ்டப்படி செய்ம்மா!"

அவள் சொன்னபடியே 'இதோ வரு கிறேன்!' என்று சொல்லிவிட்டுக் காலையி லேயே டாக்டரைப் போய்ப் பார்த்து விட்டுக் களைத்துப் போய்த் திரும்பி வந் தாள் சிரிப்பு மாறாமல். அதன்பின்? அதன் பிறகு அவள் திட்டமிட்டது போலவே எல் லாம் நடந்தது. கடன் ஒழிந்தது.

"நாளைக்கே நம்ம பொண்ணைப் பார்க்கன்னு யாராவது வந்து நின்னா, கொஞ்சமாவது வீடு பார்க்கும்படியா இருக்க வேணாமா?"

"ஆமா! நம்ம வீட்ல இருக்கிற பீரோ வையும், கட்டிலையுமா பார்க்க வர் றாங்க!"

"நீங்க சும்மா இருங்க. உங்களுக்கு என்ன தெரியும்? பிறந்த வீட்டை வச்சுத் தான் புகுந்த வீட்டுக்குள்ள நுழையற பொண்ணுக்கு மரியாதையே நடக்கும்"

அவனை ஒரே வார்த்தையில் அடக்கி விட்டு வீட்டில் சாமான்களை வாங்கிப் போட ஆரம்பித்தாள். அவள் சொல்லியது போலவே கலாவைத் தவிர மற்ற ஐந்து பேரும் படிப்படியாய் வளர்ந்து மலை

போல் ஒருசேர நிற்க ம லை த் து ப் போனான். இரண்டிரண்டு பேராய் ஸ்கூலி லிருந்து வெளிவந்து காலேஜிற்குள் நுழைய இன்னும் பொறுப்பு அதிகமானது. கொஞ்சம் அலை ஓயட்டும் என்று இருவ ருமே நினைத்திருக்க... சாகர அலையும் சம்சார அலையும் என்று ஓயும்?

அவன் ஆபீஸிலும், அவள் மிஷினிலும் தேய்ந்து ஒருவாறாக வந்த மாப்பிள்ளையை விட வேண்டாமென்று புனிதாவை மண முடித்து அனுப்பிவிட்டு அவசரமாய்க் கடனையடைத்து நிமிர்வதற்குள் இரண்டா மவள் பானு நகத்தைக் கடித்தபடியே கண்ணாடி முன் நிற்க ஆரம்பித்திருந்தாள். பின் வரிசையாய் பானு, சீதாவையும் செய் வதைச் செய்து புகுந்த வீட்டுக்கு அனுப்பி விட்டு 'அப்பாடி' என்று உட்கார்ந்த போது இருவருமே களைத்திருந்தனர்.

கால ஓட்டத்தில் முதுமையின் முதல் எழுத்து கொஞ்சம் வந்து ஒட்டிக் கொண்டி ருந்தது. ''ம்! நமக்கு எதுக்கு இனிமே குழந்தை?'' என்று நினைக்குமளவிற்கு இரு வருமே பக்குவப்பட்டுப் போயிருந் தனர். பெரியவளுக்கு இரண்டாவது டெலிவரி, பானுவின் முதல் குழந்தைக்குப் பிறந்த நாள், நாலாமவளின் கல்யாணச் செலவை எப்படியெல்லாம் சிக்கனமாகச் செய்வது? - இப்படி இதுவே சிந்தனையாய், பிரச்னை யாய், மூளையில் அடுக்கடுக்காய்ப் பதிந்து போனது.

எல்லாவற்றையும் முடித்து, கடைக் குட்டி கலாவின் கல்யாணமும் ஜாம் ஜாமென்று நடத்தி அனுப்பிவிட்டு எத் தனை அழுதாள்?

''என்னங்க? பயங்கரமான யோசனையா இருக்கு?'' நிமிர்ந்து பார்த்தான். கையோடு கை கோர்த்துக் கொண்டு எத் தனைக் கரடு முர டான பாதைகளைக் கடக்க வைத் திருக்கிறாள் என்னை! காலையி லிருந்து முகம் தொங்கிப் போய்ச் சுரத் தின்றி நிற்கும் மனைவியின் அருகே போனான். ''என்னம்மா! என்ன ப்ராப்ளம் உனக்கு? என்கிட்டச் சொல்லக் கூடாதா?'' - தவித்தவனைத் தயக் கத்தோடு பார்த்தாள். எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது?



முதல் நாள் யதேச்சையாகக் கேட்க நேர்ந்த அந்தப் பேச்சையா?

''நாளைக்கி கலா பக்கத்துல போயி நீ உட்கார்ந்துக்க. அவ அண்ணிக்காரி வந்து உட்கார்ந்து தொலைச்சுடப் போறா!'' - இது கலாவின் மாமியார் குரல். ''ஆமாம்மா. நான் அப்பவே நினைச்சேன். அவ பார்வையே சரியில்லை. கலாவையே உத்து உத்துப் பார்த்துக்கிட்டுச் சுத்திச் சுத்தி வந்துக்கிட்டிருக்கா!'' - இது அவளின் நாத்தனார்.

''ஆமாமா! கல்யாணமாகி இத்தனை வருஷமாச்சு. வயிறு தொறக்கலை. அந்த மலடிப் போயி முன்னால உட்கார்ந்து வளையெடுத்து அடுக்கினால் என்ன கதியாகும்? ஜாக்கிரதையாப் பார்த்துக்க.''

குசுகுசுத்த மாமியாரின் குரல் ஸ்பஷ்டமாய்க் காதில் விழ, எச்சிலைக் கூட்டி விழுங்கினாள் கல்பனா. என்ன மனிதர்கள்?

''நான் வளர்த்த பெண்! நான் பொறாமையில் அவளை உத்து உத்துப் பார்க்கறேனாம். எனக்கு ஒவ்வொரு தடவையும் மனசு ஒடிஞ்சு போயிடுதுங்க. புனிதாவுக்கு வளைகாப்புக்கு அவங்க வீட்டுக்குப் போனப்ப - பைத்தியம் மாதிரி பச்சைக்கு அப்புறம் சிவப்புன்னு வளையலைக் கையில எடுத்தேன். அவ மாமியார் நாசூக்கா, ''புனிதா! எங்க வீட்ல பெரியவங்கதான் வளை தொட்டுக் கொடுக்கற பழக்கம். ஏன்னா பெத்துப் போட்டுத் தொட்டில் போட்டவங்க வளை தொட்டுப் போட்டா ராசின்னாங்க. அன்னைக்கித்தாங்க என்னைப் பத்தி எனக்குப் புரிஞ்சது. அன்னைலேர்ந்து நானே விலகிடறேன். இதே மாதிரி சமயங்கள்ல நிக்கறதே இல்லை பக்கத்துல கூட. ஆனா அப்பவும் எந்த நாக்கும் என்னை விடறதில்லை. மலடி! மலடி!'ன்னு குத்திக் குதறிட்டுச் சிரிக்கிறாங்க. நீங்களே சொல்லுங்க! நான் மலடியா? இந்தக் குடும்பத்துக்காக நமக்குன்னு குழந்தையே வேண்டாம்னு ஆசையெல்லாம் அடக்கிக்கிட்டு உருவானதையும் அழிச்சுக்கிட்டு நாயாக் கிடந்தேனே! சொல்லுங்க! மலடியா நான்? நான் வளர்த்த பொண்ணுகிட்ட என்னை நெருங்க விடாம ஏன் இப்படிப் பண்றாங்க இவங்க? சொல்லுங்க!'' - தோளில் சரிந்து உடைந்து போய் அழுதவள் தலையைக் கோதினான். அதிர்ந்து கூட பேசத் தெரியாதவள், இத்தனைக் கடுமையான வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டு சப்தமில்லாமல் உள்ளுக்குள்ளேயே நொறுங்கிப் போயிருக்கிறாள். அழுது ஓயட்டுமென்று பேசாமல் மௌனமாய் அவளை அணைத்தபடி நின்றான் மூர்த்தி.



ஒரு மாதம் விருட்டென்று ஒவ்வொரு நாளாய் உதிர்த்து விட்டு ஓட அன்றும் பம்பரமாய்ச் சுற்றிக் கொண்டிருந்தாள் கல்பனா இந்த வயதிலும். தெருப் பெண்களும், உறவுப் பெண்களும் கூடியிருந்தனர். அதோடு கல்பனாவிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சி! கலாவிற்குப் பிள்ளை பிறந்து அதைப் பார்ப்பதற்காக மற்ற ஐந்து பெண்களும் ஒன்றாய் வந்து இறங்கியிருந்தனர். சரம் சரமாய்ப் பூக்களைத் தொங்கவிட்டுத் தொட்டில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

''ம்! நேரமாச்சு! ராகு காலம் போயாச்சு. குழந்தையைத் தொட்டில்லப் போடுங்க - தாராளமா!'' -

மூர்த்தி கடிகாரத்தைப் பார்த்தபடியே அறிவிக்க கலாவின் மாமியார் தன் உறவுக்காரப் பெண்ணைத் தட்டி எழுப்பினாள். ''பங்கஜம் போ! மூத்தவ. பத்து தொட்டில் போட்டவ. உன் ராசியான கையாலேயே புள்ளைய வாங்கித் தொட்டில்ல போடு!'' -

அந்தப் பங்கஜம் எழ கலா மெள்ளத் தலையை நிமிர்த்தினாள். எல்லோரும் இருந்தனர். ஒருத்தியைத் தவிர. வழக்கம் போலத் தானாக நழுவியிருப்பாள்!

''பானுக்கா! அண்ணி எங்கே?''

''அண்ணியா? இங்கேதானே நின்னாங்க. உள்ளே போய்ட்டாங்களோ என்னவோ? கூப்டவா?'' - தலையாட்டி

னாள். ஒரு நிமிடத்திற்குப் பின் ஈரக்கையைத் துடைத்தபடியே வந்து நின்ற அண்ணியை அருகே அழைத்தாள்.

''என்ன வேணும்!'' - பரபரத்தபடி அருகே வந்த அண்ணியை நன்றாக உற்றுப் பார்த்தாள் ஒரு வினாடி.

''அண்ணி! உங்க கையால என் புள்ளையை எடுத்துத் தொட்டில்ல போடுங்க அண்ணி!'' -

அடிபட்டாற் போல நிமிர்ந்தாள் கல்பனா. ''க்க - கலா!'' தடுமாறியவளின் அருகே மெள்ள எழுந்து போனாள்.

''அண்ணி! நீங்களும், அண்ணனும் மாடில பேசிக்கிட்டிருந்ததை ஒரு நாள் நான் கேட்டேன். தப்புதான் அண்ணி! ஆனா? எங்களுக்காக நீங்க எவ்வளவு தூரம் ஓடாத் தேஞ்சிங்கங்கிறதைத்தான் நாங்க கண்ணாலப் பார்த்தோம், புரிஞ்சுக்கிட்டோம். ஆனா எங்களுக்காக நீங்க குழந்தையைக் கூட...'' மேலே தொடர்ந்து பேச விடாமல் அவள் வாயைப் பொத்தினாள் கல்பனாதலையாட்டியபடியே. பொத்திய கையை விலக்கினாள்.

''இல்லண்ணி! ஊர்ல இருக்கறவங்க ஆயிரம் சொல்லட்டும். அக்காவுக்கெ லாம் வேணா பெத்தவ முகம் ஞாபக இருக்கலாம். எனக்கு அதுகூட ஞாபக இல்லை அண்ணி! எங்களைப் பெறா வளர்த்து, எங்களோட சேர்ந்து சிரித்து அழுது எங்களுக்காகவே உழைச்சு தேய்ஞ் போயிருக்கிற இந்தக் கை எவ்வள ராசின்னு எனக்குத் தெரியும் அண்ண எங்களுக்கு எல்லாமே நீங்களும், அண்ண னும்தான். எங்களை வளர்த்த இந்தக் கை தான் என் பையனையும் தொட்டிலி போடணும். அக்கா! பானுக்கா! ரேணுக்கா எதுக்கு எல்லோரும் பார்த்துட்டுச் சும்ம நிக்கிறீங்க? சொல்லுங்கக்கா எல்லாரும் உறவுக்கு அண்ணியா இருந்தாலும் இவங் நம்ம ஆறு பேத்தையும் எப்படி வளர் தாங்க? புனிதாக்கா! நீங்களாவது சொ லுங்கக்கா!''-

கேவிக் கேவி அழுத கலாவை அருகே போய் ரேணு அணைத்துக் கொள்ள, பெ யவள் புனிதா கீழே குனிந்து வெள்ளை துணியில் பூப்போலக் கிடந்த குழந்தையை அள்ளி எடுத்து அண்ணியிடம் நீட்டுகிறாள் தாரை தாரையாகக் கண்ணீரைக் கொட்டி படியே வெலவெலத்துப் போய் நிற்கு அண்ணியின் கண்ணீரை ஒற்றி எடுக்கிறாள் பானு.

''அண்ணி! கலா சொல்றது நூத்துக்கு நூறு உண்மை. உங்களை அம்மாவோட ஒ பிட்டுச் சொன்னா அது கூட தப்பு அண்ணி ஏன்னா? அம்மாங்கற ஸ்தானத்தோட எல்லைக் கோட்டையும் தாண் எங்கேயோ ரொம்ப உயரப் போயிட்டீங் நீங்க. குழந்தைய வாங்கிக்கங்க!''


கைகள் நடுங்க அந்தப் பூவை அள் நெஞ்சோடு இழுத்து அணைத்துக் கொண் உதடுகள் நடுங்க முத்தமிடுகிறாள் மெ மையாய். உடைத்துக் கொண்டு வரும் அழு கையைச் சிரிப்பால் பூசி மெழுகியபடியே தன் பெண்களைப் பார்க்கிறாள் நீர் திவலைகளோடு.

''வாங்கண்ணி!''

ஆறு பெண்கள் புடைசூழக் கையில் குழந்தையோடு கல்பனா தொட்டிலை நோக்கிப் போக, மூர்த்தி வழிந்து ஓடும் ஆனந்தக் கண்ணீரை நிறுத்த முடியாமல் 'குப்'பென்று சந்தோஷக் காற்றில் இதயம் நிரம்பிப் போக அப்படியே கண்களை மூடிச் சுவற்றில் சாய்ந்து நிற்கிறான். அந்த பத்து நாள் சிசு மெள்ள நிதானமாய் இமை களைத் திறந்து, கை, கால்களைச் சோம்ப லோடு உதறி, மேலே கிடந்த துணியை தள்ளிவிட்டு, குஷியில் சின்னக் குமிழ் வாய் திறந்து சிரிக்கிறது தொட்டிலில்.

எனக்குத் திடீரென வாயிலும், உதட்டிலும், நாக்கிலும், சிறு புண்கள் வந்து மிகவும் அவதிப்பட்டேன். அந்த மாதிரி வரும் சமயத்தில் நான் மணத்தக்காளிக் கீரையைப் பச்சையாக மென்று சாப்பிட்டு விடுவேன். நல்ல குணம் தெரியும். ஆனால் அன்று மணத்தக்காளி கீரை என் தோட்டத்தில் கிடைக்காததால் என்ன செய்யலாம் என யோசனை செய்த போது துளசிச் செடி என் கண்ணில் பட்டது. துளசியும் மருந்துச் செடியாக பயன்படுவது எனக்குத் தெரியுமாதலால் உடனே கொஞ்சம் துளசி இலைகளைப் பறித்து அப்படியே மென்று, சாறு உதட்டில் நன்கு படும்படி சாப்பிட்டு விட்டேன். அன்று சாயந்திரமே எனக்கு நிவாரணம் கிடைத்தது. புண்களும் மாறத் தொடங்கின. எரிச்சலும் தக்கவகையில் நன்கு குணம் தெரிந்தது. வாய்ப் புண்களுக்கு மாத்திரை சாப்பிடுவதை விட இந்த முறை எனக்கு மிகவும் நல்ல முறையாகவும், சிக்கன முறையாகவும் படுகிறது.

- யசோதா கிருஷ்ணமூர்த்தி.




அந்த 'டெவில்'கள் முழுமையாகத் தோண்டி முடிப்பதற்குள் நாம் அந்த நெருப்பை அணைத்து விடுவோம்...
.. நாம் இருவரும் சேர்ந்து போராடுவோம், அனீட்டா!
யூ ஆர் சிம்ப்ளி க்ரேட், ரமா!
மறுநாள் விடிந்ததும் ரமா, தன் அம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டு அனீட்டாவுடன் அவள் வீட்டுக்குப் புறப்பட்டாள்–
தொடரும்

நான் நெடு நாளைய ம. மலர் வாசகி. பெண்களுக்கு ஏற்படும் 'மனச் சிதைவு' நோயைப் பற்றியும் அதற்கான காரணங்களை யும், உதாரணங்கள் மூலம் விளக்கும் கட்டுரைகளையும் வெளி யிடுகிறீர்கள். மிகவும் வரவேற்கத்தக்க செயல். ஒரு மன நோயா ளிக் கணவனுடன் இருபத்தைந்து நீண்ட வருடங்களைக் கழித்து வருவதால் என் அனுபவங்களையும் அவைகளின் மூலமாக நான் அறிந்து கொண்டவைகளையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொண் டால் மன நோயாளிக் கணவனை உடைய சகோதரிகளுக்கு உபயோகமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தச் சகோதரிகள் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள்!

மனநோய் பற்றிய ஓர் அனுபவம்

முதலில் என் கணவரைப்பற்றி... மிகுந்த பயந்த குணம். சராசரிக்கும் குறை வான புத்தி கூர்மை. உலகத்தைப் பற்றி அதில் உள்ள சூது வாதுகளைப் பற்றி ஒன்றுமே தெரியாத அப்பாவி. பதினான்கு வயது வரை குக்கிராமத்தில் உள்ள பாட்டி யிடம் வளர்ந்ததால் வெளி உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்போ அக்க றையோ இருக்கவில்லை. பிறகு சென்னை யில் உள்ள பெற்றோரிடம் வந்து சேர்ந்தார்.

கூடப் பிறந்த சகோதர சகோதரிகள் ஆறு பேர். அவர்கள் பெற்றோரிடமே வளர்ந்து வந்தனர். இவர் மூத்தவர். அவர்கள் மிகவும் அப்பாவியான இவரைத் தங்களில் ஒருவனாக ஏற்காமல் ஏசிப் பேசி வெறுத்து ஒதுக்கினர். தாயாரோ துர்வாச ரின் பெண் அவதாரம். பொறுமை, சாந்தம் போன்ற குணங்களின் அர்த்தமே தெரியா தவர். திடீரென்று கிராமத்திலிருந்து சென்னை வந்தவுடன் அந்தச் சூழ்நிலையில் சிறிது கூட ஒன்ற முடியாமல் ஏற்பட்ட திண்டாட்டம், சகோதர சகோதரிகளின் இடைவிடாத கேலி, குத்தல் பேச்சு, முகம் கொடுத்துப் பேசாத தகப்பனார், ''அசட்டுப் பிள்ளையைக் கண்டால் அம்மாவுக்கும் பிடிக்காது'' என்ற பழமொழிப்படி.

''என்ன பாவம் செஞ்சேனோ, இப்படி



மண்டுகமா, மூளையே இல்லாம ஒரு பிள்ளை பொறந்திருக்கானே''

என்று அக்கினிக் கங்குகளாக வார்த்தைகளை அள்ளிக் கொட்டி வெறுக்கும் தாய், இவைகளின் விளைவாக ஏற்பட்ட மன அழுத்தம் முப்பது வயதில் மன நோயாக வெளிப்பட்டது.

சிறு வயது முதல் அன்புக்கு ஏங்கி அதுகிடைக்காமல் மற்றவர்களின் ஏச்சுப் பேச்சால் வெறுப்புற்று வெளிப்படையாக அவர்களை எதிர்க்கத் துணிவில்லாமல் இருந்த என் கணவர் இந்த நோய் வந்த பின் வெளிப்படையாக எல்லோரையும் எதிர்க்க ஆரம்பித்து விட்டார். இதற்குள் திருமணமாகி ஐந்து ஆண்டுகள் முடிந்து விட்டன.

இந்த நோய் வந்த பின்புஎன் கணவரை பெற்றோர் மேலும் அதிகமாக வெறுக்க ஆரம்பித்து விட்டனர். என் பிறந்த வீட்டிலும் தகப்பனார் கிடையாது. எந்த வித உதவியும் கிடைக்க முடியாத நிலைமை. இவ்வியாதியைப் பற்றி அவ்வளவாக விழிப்புணர்வு ஏற்படாத காலத்திலேயே யாருடைய ஆதரவும் இல்லாத நிலையில் எல்லோருமே எங்களை வெறுத்து ஒதுக்கிய நிலையில் எப்படியும் வாழ்ந்தே காட்டுவது என்று முடிவு செய்தேன். ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டேன். மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை. கணவருக்கு என்னுடைய முழு நேர கவனிப்பும் தேவை என்பதை உணர்ந்து குடும்பக் கட்டுப்பாடு அவ்வளவு தீவிரமாக இல்லாத காலத்திலேயே ஒரு பெண்ணே போதும் என்று முடிவு செய்தேன்.

படிப்பிலும் என் கணவர் மிகவும் பின் தங்கியவராக இருந்ததால், திருச்சியில் ஒரு பொதுத்துறை நிறுவனத்தில் சாதாரண வேலையில் இருந்தார். மிகவும் குறைந்த சம்பளம். சென்னையில் அந்தச் சமயம் மிகப் பிரபலமாக இருந்த ஒரு மனநல மருத்துவரிடம் ஆறு மாதங்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டு திருச்சி சென்று



விட்டேன். பிறகு வாரம் ஒரு முறை, மாதம் இரு முறை, மாதம் ஒரு முறை இவ்வாறு தவறாமல் கணவரைக் கூட்டிக் கொண்டு சிகிச்சைக்கு சென்னை வருவேன். ஒரு வேளை கூட தவறாமல் மருந்துகள் தருவேன். சிகிச்சைக்கு சென்னை வர ஏற்படும் செலவு, மருந்துகளின் விலையோ கேட்டாலே தலையைச் சுற்றும், மாதத்தில் பதினைந்து நாட்கள்தான் வேலைக்குச் செல்ல முடியும். ஆதலால் பாதிச் சம்பளம்தான் கிடைக்கும்.. இவைகளின் விளைவாக ஏற்பட்ட பணப்பிரச்னை பூதாகாரமாக பயமுறுத்தியது.

கணவரை தனியாக விட்டுவிட்டு வீட்டிற்கு வெளியே போய் சம்பாதிக்க முடியாது என்பதால் வீட்டிலேயே தையல் மிஷின் வாங்கித் துணிகள் தைத்துக் கொடுத்தும் ஹிந்தி ட்யூஷன் எடுத்தும், வீட்டைச் சுற்றி இருந்த நிலத்தில் காய்கறிகள் சவுக்கு முதலியவை பயிர் செய்து விற்றும் ஓரளவு பணத்தேவையை பூர்த்தி செய்ய கற்றுக் கொண்டேன்.

இவர்கள் அன்புக்கு ஏங்குகிறவர்கள். ஆகையால் இயன்ற வரை என் கணவர் மேல் அன்பைப் பொழிந்து, ''நீங்களும் எல்லோரையும் போல் சராசரியான மனிதர் தான். உடலுக்கு வியாதி வருவது போல் மனதுக்கும் வருகிறது'' என்று ஊக்கம் கொடுத்து, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்குக் கூட்டிச் சென்று இந்த நோயின் கோரப்பிடியிலிருந்து ஓரளவு (இந்த நோய் பூரணமாக குணமாவதில்லை. ஒரு கட்டத்திற்கு மேல், மருத்துவர்களுக்கே இந்நோய் சவாலாக உள்ளது) மீட்டு விட்டேன். நாலே வரியில் எழுதி விட்டேனே தவிர இந்த நிலையை நான் அடைய சந்திக்க நேர்ந்த பிரச்னைகள் ஏராளம்.

இவரிடம் அன்பு காட்டுமாறு இவருடைய பெற்றோர், சகோதரிகளை நான் கேட்டுக் கொண்டதற்குப் பலன் நானும் அவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டேன்.


''உன்னைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு உன் துரதிருஷ்டத்தினால் தான் உன் புருஷன் பைத்தியம் பிடிச்சு அலையறான். இஷ்டமிருந்தால் இரு, இல்லாட்டா டைவர்ஸ் பண்ணிட்டு வெளியே போ. என் பிள்ளையிடம் நான் எப்படி நடந்துக்கணுன்னு நேத்திக்கி வந்த நீ எனக்கு ட்யூஷன் எடுக்கறயா'' என மாமியார் சீறுவார்.

சென்னை மனநல மருத்துவரிடம் 12 வருடங்கள் சிகிச்சை. பிறகு அந்த மருத்துவர் 'இது குணமாகாத கேஸ்' என்று கூறி விட்டார். பிறகு பெங்களூரில் ஒரு பிரபல மனநல மருத்துவ ஆஸ்பத்திரியில் மூன்று மாதங்கள் சிகிச்சை பெற்றார், உடன்



பிறந்தவர்கள் ஆறு பேர் இருந்தும் சுய நினைவே இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருந்த இவரைத் தன்னந் தனியாகக் கூட்டிச் சென்றேன். ஆஸ்பத்திரியில் சேர்ந்த உடனேயே யாருக்கும் தெரியாமல் இவர் ஆஸ்பத்திரியை விட்டு ஓடிப் போய்விட, என் அநாதரவான நிலைமையைக் கண்டு தலைமை மருத்துவர் நம்பிக்கையான ஒருவரை என்னுடன் அனுப்பினார். பெங்களூர் பூராவும் சுற்றி அலைந்து தேடி ஒரு வழியாய் கண்டு பிடித்தோம்.

பகல் பூராவும் கணவருடன் ஆஸ்பத்திரி வாசம். இரவில் அந்த மருத்துவமனையில் பெண்களைத் தங்க அனுமதிப்பதில்லை ஆகையால் ஒரு நண்பர் வீட்டில் தங்குவேன். அங்கு மருத்துவர்கள் என் கணவரைப் பரிசோதித்துவிட்டு இவருடைய தாயாரை அழைத்து வருமாறு கூறினார்கள். ஆனால் அவர்கள் வர மறுத்து விட்டார்கள். ஆகவே மருத்துவர்கள் ''நோயாளியின் தாயார் வராமல் சிகிச்சை அளிப்பது கஷ்டம். அவருடைய தாயாருடன் நோயாளியை 'குடும்ப மனநல மருத்துவ மையத்தில்' வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். ஆகையால் நீ இனி மேல் இங்கு இருக்கத் தேவை இல்லை'' என்று கூறி விட்டனர்.



சென்ற இதழ் படித்தோம்...

கேஸரோலில் தயிர் உறைவிடச் சொல்லி ஒரு சகோதரி எழுதி இருந்தார்கள். இட்லி, தோசைக்கு அரைத்து 'கேஸரோலில்' வைத்தால் ஐந்து மணி நேரத்தில் இட்லி, தோசை வார்க்கும் பக்குவத்திற்கு மாவு புளித்து விடும். காலை அரைத்து மாலை இட்லி, தோசை செய்து விடலாம்.

– கமலா.

பிறகு சென்னையிலேயே மற்றொரு மனநல மருத்துவரிடம் சிகிச்சை... இதற்குள் இவ்வியாதிக்காக நீண்ட நாட்களாக இவர் எடுத்துக் கொண்ட மருந்துகள் இவர் சிறுநீரகத்தைப் பாதித்து விட்டன. இந்த இடத்தில் இவ்வியாதிக்காக எடுத்துக் கொள்ளும் மருந்துகளைப் பற்றி ஒரு வார்த்தை. தலை சுற்றல், மயக்கம், கை கால் நடுக்கம், வாய் திறந்தே இருத்தல்,

உடம்பை ஒரு இடத்தில் நிலைத்து வைத்து உட்கார முடியாமல் இருத்தல், சிறுநீரகப் பாதிப்பு போன்ற துணை விளைவுகள் ஏற்படும். ஆனால் மருந்துகளையும் நிறுத்த முடியாது. உண்மையில் இவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள்.

வெளி உலகில் என் கணவரின் செய்கையினால் நான் சந்திக்க நேர்ந்த பிரச்னைகளும் அவமானங்களும் ஏராளம். மன நோயாளிகளை குடும்பத்தினர் வெறுத்து ஒதுக்குவதற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால் எந்த நிலையிலும் நான் மன உறுதியை கை விடாமல் எல்லாப் பிரச்னைகளையும் தைரியமாய் எதிர் கொண்டேன். ''அவளா, அடேயப்பா. எமகாதின்னா. சரியான அல்லிராஜ்யம் நடத்தறா,'' என்கிற விமரிசனங்களையும் பொறுத்துக் கொண்டேன். என் ஒரே பெண்ணையும் என் சொந்த முயற்சியால் பட்டப்படிப்பு படிக்க வைத்து மாப்பிள்ளை தேடி திருமணமும் செய்து தந்து விட்டேன். இந்த ஐம்பத்தைந்து வயதில் என் பொறுப்புக்கள் முடிந்து, என் கணவரையும் ஐந்து வருடங்களுக்கு முன்பே கட்டாய ஓய்வு பெறச் சொல்லி, இன்று ஓரளவு குணமான கணவருடன் என் வாழ் நாளை விச்ராந்தியாய் கழிக்கிறேன்.

ஆகவே சகோதரிகளே, கணவருக்கு மனச்சிதைவு நோய் வந்துவிட்டால் பயப்படாதீர்கள். கலங்காதீர்கள். எந்த சந்தர்ப்பத்திலும் மன உறுதியைக் கைவிடாதீர்கள். வாழ்க்கை என்ற நாடகத்தில் கணவருடைய பாகத்தையும் சேர்த்து நீங்கள் நடிக்க வேண்டும். உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களுடைய ஆதரவற்ற நிலையை உணர்ந்து அதில் ஆதாயம் தேடத்தான் பார்ப்பார்கள். நிறைய பிரச்னைகளைச் சந்திக்க வேண்டி வரும். இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளுங்கள். மனக்கலக்கமுற்றிருக்கும் பலஹீனமான தருணத்தில் கூட தப்பித்தவறி, அக்கம்பக்கம் இருப்பவர்கள், சினேகிதர்கள் யாரிடமும் கணவரின் இந்த வியாதியைப் பற்றிக் கூறி ஆறுதல் தேட முற்படாதீர்கள். இவ்வியாதி உள்ளவர்களை சமூகத்தில் ஏளனமாகத்தான் நினைக்கிறார்கள். மற்றவர்கள் உங்கள் கணவரை கேலியாகவோ, குத்தலாகவோ பேசி நோயை அதிகப்படுத்தக் கூடும்.

இவர்களின் மூளைத்திறனுக்கு ஏற்றவாறு ஏதாவது ஒரு வேலை செய்யும்படி மனைவிதான் தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும். மனைவிக்கு இமாலயப் பொறுமை வேண்டும்.

இருபத்திநான்கு மணி நேரமும் உடன் இருப்பதால் கணவரிடம் கோப்படாமல் அன்பாகப் பேசி, அவருடைய பேச்சு, நடை உடை பாவனை மூலம் பிரச்னையின் ஆணி வேர் எங்கிருக்கிறது என்று மனைவியால் நன்கு புரிந்து கொள்ள முடியும் குடும்பப் பிரச்னையாக இருந்தால் (90% அவ்வாறுதான் உள்ளது) குடும்பத்தாருடன் கலந்து பேசி கூடுமானவரை பிரச்னையைத் தீர்க்க முடியுமா என்று முயற்சி செய்யுங்கள். இந்த முயற்சியில் குடும்பத்தினரின் விரோதம் கண்டிப்பாக உங்களுக்குக் கிட்டும்.

நான் நிறைய மன நோயாளிகளின் மனைவிகளுடன் நெருங்கிப் பேசி இருக்கிறேன். எல்லோருமே ஒரு முகமாக

> இட்லிக்கு மாவு அரைத்தவுடன் 4 ஸ்பூன் ''சோயா'' மாவு கலந்து வைத்து மறுநாள் இட்லி வார்க்கும் போது, தனி சத்து அதிகம் இருப்பதுடன், மலர்ந்தாற் போல் இருக்கும். 1 கிலோ அரிசி போட்டு அரைத்த மாவிற்கு உளுத்தம் மாவையும் கலந்த பின் 4 ஸ்பூன் சோயா மாவு. இப்போதுதான் ''சக்தி சோயா மாவு'' கிடைக்கிறதே.
>
> - எம். இந்திராணி.
>
> 

குடும்பத்தினர் ஒத்துழைக்க மறுப்பதாகவும், இவர்களை குடும்பத்திலிருந்தே ஒதுக்கி வைப்பதாகவும்தான் கூறுகின்றனர். மன நல மருத்துவர்கள் குடும்பத்தாரை வரவழைத்து (அநேகம் பேர் மருத்துவரைப் பார்க்க மறுத்து விடுகின்றனர் என்கிற கசப்பான உண்மையையும் இங்கே கூறித்தான் ஆக வேண்டும்) அவர்களுடன், அவர்களுக்குப் புரியும் விதத்தில் பேசி பிரச்னையைத் தீர்க்க முற்பட்டாலும் கூட அவர்கள் மருத்துவர் எதிரில் ''ஆஹா, நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படியே நடக்கறோம். எப்படியாவது அவனுக்கும் உடம்பு குணமாகி அவனும் எல்லோரையும் போல ஒரு மனுஷனா நடமாடினாப் போறும். எங்களுக்கு வேறென்ன வேண்டும்'' என்று துக்கம் தொண்டை அடைக்க வலுவில் வரவழைத்துக் கொண்ட அளவுக்கு மீறிய சோகமுகத்துடன் தேனாகப் பேசி, பாகாக உருகி விட்டு, வீட்டிற்கு வந்தவுடன் 'பழைய

குருடி கதவைத்திறடி' கதைதான்.

மேலும் ஸ்கிஸோஃப்ரீனியா (Schizo-pherenia) என்ற இந்த வியாதி ஆண் பெண் இரு பாலாரையும் பருவம் எய்தும் சமயத்தில் பாதித்தாலும் முப்பது வயதுக்கு மேல்தான் வெளிப்படையாகத் தெரிவதால், அதற்குள் திருமணமும் அநேகமாக, முடிந்து விடும். ஆதலால், ''இத்தனை நாளா அவன் நல்லாத்தான் இருந்தான். உன்னைக் கல்யாணம் பண்ணின்டப்புறம் தான் நீதான் அவனை இப்படி ஆக்கிட்டே'' என்கிற பழியையும் மனைவிதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இம்மாதிரி ஏச்சுப் பேச்சுக்களை மனதில் ஒரு பக்கமாய் போட்டு அமுத்தி மூடி வைத்து விட்டு, தூசி போல் உதறிவிட்டு அர்ஜுனன் கண் புறாவாய் கணவரின் மன ஆரோக்கியம் மட்டுமே உங்கள் கண்ணுக்குத் தெரிய வேண்டும்.

சொந்தக் குழந்தைகளிடம் கூட இந்த நோயாளிகள் முழு அளவில் பாசத்தை வெளிப்படுத்துவதில்லை என்று மருத்துவர் கூறி உள்ளார். ஆனால் நடைமுறையில், என் அநுபவத்தில் அவ்வாறு இல்லை. தன்னிடம் உண்மையான அன்பும், பரிவும், பாசமும் உள்ளவர்களிடம் இவர்கள் பாசத்தைப் பொழிந்து அவர்களுக்கு அடிமையாகவே ஆகி விடுகிறார்கள் என்பது நான் தெரிந்து கொண்ட உண்மை. என் கணவர், தன் ஒரே பெண், பேரனிடம் அன்பைப் பொழிகிறார். ஆகையால் குறை கு ழந்தைகளிடம்தான் உள்ளது. தாயார்தான் இந்த வியாதியின் தன்மையைப் பற்றி குழந்தைகளிடம் கூறி அவர்கள் தங்கள் தகப்பனாரிடம் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் வெளியூரில் இருந்தால் இவர்களை சிகிச்சைக்குக் கூட்டிச் செல்வது பிரும்மப் ப்ரயத்தனம்தான். கிட்டத்தட்ட 10 வருடங்கள் நானே மன நோயாளி மாதிரி நடித்து (கணவருக்குக் கொஞ்சம் கூட சந்தேகமே ஏற்படாத வகையில்தான்) 'எனக்கு மனநல மருத்துவரின் சிகிச்சை தேவை' என்று கூறி சென்னை கூட்டி வருவேன். மருத்துவரும் எனக்கு சிகிச்சை தருவது போல் ஒத்துழைத்து என் கணவரைப் பரிசோதித்து விடுவார். மருந்துகள் கூட இவருக்கு உள்ள சிறு நீரகப் பிரச்னைக்கு தருவதாகக் கூறி கொடுத்தோம்.

உறவினர்களும் நண்பர்களும் கொஞ்சம் கூட இங்கிதமே இல்லாமல் ''உனக்கு இப்பொழுது உடம்பு தேவலையா?'' என்று கேட்பார்கள். இவர்கள் இம்மாதிரி கேள்வியை விரும்புவதே இல்லை. ஆகையால் கூடுமானவரை இம்மாதிரியானவர்களை நாங்கள் சந்திப்பதே கிடையாது. தயவு தாட்சணியமே இல்லாமல் புறக்கணித்து விடுகிறேன். இதன் விளைவாக ''அவ எங்கே மனுஷாளை மதிக்கறா. தலை கழுத்திலேயே நிக்காம துள்ளறா'' என்ற மற்றவர்களின் விமரிசனத்திற்கும் ஆளாகி விட்டேன்.

மேலும் காதில் கேட்கும் குரல், ஓயாத மனக்குழப்பம், தூக்கமின்மை இவற்றால் தற்கொலை முயற்சியில் இந்நோயாளிகள் ஈடுபடுகிறார்கள். என் கணவரே சமுத்திரத்தில் விழப்போய் தக்க சமயத்தில் காப்பாற்றப்பட்டு விட்டார், ஆகையால் மனைவி, கணவரை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும் விழிப்புடன் கண்காணித்துக் கொண்டே இருப்பது மிக மிக அவசியம்.

இவ்வளவு தூரம் தைரியமாய் செயல்பட்டாலும், என் கணவரின் நோயால் நான் மிகவும் மனக்கலக்கமுற்ற சமயங்களும் உண்டு என்பது நிஜம்தான். அம்மாதிரி தருணத்தில் அன்னை தெரசாவை நினைத்துக் கொள்வேன். அதுதான் எனக்கு டானிக். ஒரு நாள் போவது ஒரு யுகம் போவது போல் இருந்த நிலையில் இருபத்தைந்து நீண்ட வருடங்களை கழித்து விட்டதை எண்ணும் பொழுது எனக்கே மலைப்பாக இருக்கிறது.

- சாவித்ரி.

ஒரு பாக்கெட் ப்ரெட்டை, சில நிமிடங்களுக்கு இரண்டு, மூன்றாகச் சற்றுத் தண்ணீரில் ஊற வைத்து உடனே எடுத்து மிக்ஸியில் பச்சை மிளகாய், இஞ்சி உப்பு சேர்த்து சிறிது நீர் விட்டு அரைக்கவும். இதில் சிறிதாக அரிந்த வெங்காயம், தக்காளி சேர்த்து தோசை வார்ப்பது போல் மாவை ஊற்றி, எண்ணெய் விட்டுத் திருப்பிப் போட்டு, சூடாகப் பரிமாறவும். தேங்காய் சட்னியுடன் சாப்பிட அருமையாக இருக்கும்.

- எஸ். மஞ்சுளா.



மாதம் ஒரு பொருளைத்
தெரிந்து கொள்ளலாமே!

காப்பி

காப்பி. தென்னக மக்களின் - குறிப்பாகத் தமிழக மக்களின் - தேவ பானம் அது. இங்கு பலருக்கும் ''ஒருநாள் முழுவதும் மூச்சு விடாமல் இருப்பாயா?'' என்ற கேள்வியும், ''ஒருநாள் முழுவதும் காப்பி குடிக்காமலிருப்பாயா?'' என்ற கேள்வியும் ஒரே அர்த்தம் தருபவைதான்.

நாட்டையே உலுக்கும் பிரச்னைகளால் சகஜ வாழ்க்கை பாதிக்கப்படும் போதெல்லாம் சென்னை போன்ற நகர மக்களின் மனதில் ஒரு மூலையில் ''காலையிலேயே பால் வரலியே. சாயந்திரமும் வரலேன்னா காப்பிக்கு என்ன செய்வது?'' என்ற கேள்வி தோன்றுவது உண்மை.

வைதீகர்கள் கூட ஆச்சாரத்துடன் இருக்க வேண்டிய வேளைகளிலும் ''காப்பிக்கு தோஷமில்லை'' என்ற புது வேதத்தைச் சொல்லி இன்பம் பொங்கத் தங்கள் தொண்டைக்குள் காப்பியை இறக்கிக் கொள்கிறார்கள் என்றால் காப்பியின் பெருமையை விளக்க வேறென்ன சொல்ல?

இத்தனை மகத்துவம் வாய்ந்த காப்பியைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள வெற்றிகரமான காப்பிப் பொடி வியாபார நிறுவனங்களில் ஒன்றான 'லியோ காப்பி'யின் அதிபர் திரு. பி. ஆர். கே. பி. ஸ்ரீனிவாசனை சந்தித்தோம்.

''மதுரையிலுள்ள பட்டிவீரன்பட்டியைச் சேர்ந்த என் தகப்பனாரால் இருபது ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது எங்கள் நிறுவனம்'' என்று தங்கள் நிறுவனத்தின் பழம்பெருமையைக் குறிப்பிட்ட அவர் காப்பியைப் பற்றிய நமது பல கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

காப்பியைப் பொறுத்தவரை அந்தப் பயிரை விளைவிப்பவர்கள் தங்கள் முழு விளைச்சலையும் அரசுக்குச் சொந்தமான 'காப்பி போர்'டுக்கு மட்டுமே விற்க முடியும். இந்தியாவில் இப்படி நேரடியாக விற்க முடியாத ஒரே பொருள் காப்பி மட்டும்தான்!

இரண்டாம் உலகப் போரின் போது காப்பி ஏற்றுமதி மிகவும் சரிந்தது. ஏற்றுமதி மார்க்கெட்டை நிலைநிறுத்த அப்போது துவங்கப்பட்டதுதான் காப்பி போர்ட்.

காப்பி ஒரு வருடாந்திர விளைச்சல் பொருள். நவம்பர், டிசம்பரில்தான் காப்பி விளையும். நம் நாட்டில் தென்னிந்தியாவில்தான் காப்பி விளைகிறது. கர்நாடகத்தில் அதிக அளவிலும், கேரளா, தமிழ்நாடு மாநிலங்களில் சற்றுக் குறைந்த அளவிலும் காப்பி விளைகிறது. கர்நாடகத்தில் தென் கூர்க், சிக்மகளூர், ஹாசன் போன்ற இடங்களிலும், தமிழ்நாட்டில் கீழ்ப் பழனி மலை, சேர்வராயன் குன்றுகள், நீலகிரி மலையின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் காப்பி பயிராக்கப்படுகிறது.

இந்தியாவில் ஒரு வருடத்தில் தயாராகும் காப்பிக் கொட்டையின் எடை சுமார் 175 டன்கள். அதில் 60,000 டன்கள் உள்நாட்டுத் தேவையைச் சந்திக்க, மீதி ஐரோப்பா, ரஷ்யா, ஜப்பான் போன்றவற்றிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாட்டிற்குத் தேவைப்படும் 60,000 டன்களில் தமிழ் நாட்டிற்கு மட்டுமே 45,000 டன்கள் தேவைப்படுகிறது.

காப்பிப் பழத்திலிருந்து பல்பர் கருவியின் மூலம் கொட்டையின் வெளித் தோல்கள் நீக்கப்படுகின்றன. பிறகு பதனப்படுத்தப்பட்டு (இதைக் 'க்யூரிங்' என்கிறார்கள்) அனுப்பப்படுகின்றன. இப்போது காப்பிக் கொட்டைகள் ரெடி.

இப்படிப்பட்ட காப்பிக் கொட்டைகளை காப்பி போர்ட் மூன்று விதங்களில் மார்க்கெட்டிங் செய்கிறது. உள்நாட்டில் விற்க ஏலம், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய ஏலம், நேரடி ஏற்றுமதி ஆகியவையே அவை.

காப்பிக் கொட்டையின் முக்கிய இரண்டு வகைகள் அராபிகா மற்றும் ரொபஸ்டா. அராபிகாவின் வகைகள்தான் பீபரி, ஏ, பி, ஸி போன்றவை. பொதுவாக கூர்கில் அராபிகா வகை அதிகமாகவும், கேரளாவில் ரொபஸ்டா வகை அதிகமாகவும் விளைகின்றன. ரொபஸ்டா வகை காப்பிக் கொட்டை அதிக உறுதியானதாக

வும், பழுப்பு வண்ணம் கொண்டதாகவும் இருக்கும்.,

இவற்றில் அராபிகாவுக்குத்தான் உள் நாட்டில் அதிக விலை; இந்த வகைதான் ஏற்றுமதியும் அதிக அளவில் ஆகிறது.

''எங்கள் நிறுவனத்தில் பெரும்பாலும் அராபிக் வகை காப்பிக் கொட்டைகளைத் தான் பயன்படுத்துகிறோம். தவிர எங்கள் காப்பிப் பொடி சுத்தமானது - அதாவது சிக்கிரி கலக்காதது'' என்கிறார் ஸ்ரீனி வாசன்.

சிக்கிரி என்பது மரவள்ளிக்கிழங்கு போல் தோற்றமளிக்கும் ஒரு பயிரின் பொடி. இது உடலுக்குக் கெடுதலானதா இல்லையா என்பதைப் பற்றி ஆராய்ச்சி யாளர்கள் இருவேறு கருத்துக்களைக் கூறி வருகிறார்கள். அதிகபட்சம் 49% வரை சிக்கி ரியைக் காப்பிப் பொடியில் கலக்க சட்டம் இடமளிக்கிறது. சிக்கிரி கலப்பதால் காப்பிப் பொடியின் விலை சற்றுக் குறை வதுடன், காப்பி சற்று அதிக ஸ்ட்ராங் கானதாகக் காட்சியளிக்கிறது.

''ஆனால் சிக்கிரி கலப்பதால் வேறொரு கவலைப்படத்தக்க விளைவு ஏற் பட்டு வருகிறது. தேவைப்படும் காப்பிப் பொடியின் அளவு - சிக்கிரிக் கலப்பால் - குறைந்து வருகிறது. போதாக்குறைக்கு காப்பி உற்பத்தி அதிகமாகிக் கொண்டு வரும் அளவுக்கு அதன் தேவைப்படும் அளவு அதிகமாகவில்லை. இதனால் காப்பித் தொழில் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.''

சர்வதேச அளவில் அதிகம் பயன் படுத்தப்படும் வர்த்தகப் பொருள்களில் காப்பி, டீ, சர்க்கரை, பருத்தி ஆகியவை முக்கியமானவை. உலகின் மொத்த காப்பி உற்பத்தியில் சுமார் 3%தான் இந்தியாவின் பங்கு. பிரேஸில், தென் அமெரிக்கா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள்தான் காப்பி உற்பத்தியில் பெரும் பங்கு வகிக் கின்றன.

''காப்பிப் பொடி விற்பனையில் எங்களை முன்னோடிகள் என்று சொல்ல லாம். பழங்காலத்தில் மளிகைக் கடை களில் காப்பி வில்லைகள் என்று விற்ப துண்டு. அவற்றைக் கொதிநீரில் போட்டு டீயைப் போல கலக்க வேண்டும். நாங்கள் வறுத்த காப்பிக் கொட்டையைத் தயாராக வைத்திருப்போம். மக்கள் எந்த வகைக் கொட்டையைத் தேர்ந்தெடுத்து அரைத்துத் தரச் சொல்கிறார்களோ அவற்றை அரைத் துத் தருகிறோம்.

சமீபத்தில் நாங்கள் ஜெர்மனியிலிருந்து ''மால்கோனிக் இன்ஸ்டன்ட் க்ரைண்டர்'' எனப்படும் 26 இயந்திரங்களை வாங்கி எங்கள் கடைகளில் அவற்றை நிறுவியுள் ளோம். சுமார் முப்பதே நொடிகளில் ஒரு கிலோ காப்பிக் கொட்டையை இந்த இயந் திரம் அரைத்து விடுகிறது. (முன்பெல்லாம் இதற்குப் பதினைந்து நிமிடங்கள் ஆகு மாம்). இப்படிப்பட்ட இயந்திரங்களை நம் நாட்டில் முதலில் பயன்படுத்துவது நாங்கள்தான். காப்பிப் பொடியின் வாச னையைப் பாதுகாக்கவும் இந்த இயந்திரம் உதவுகிறது'' என்ற ஸ்ரீனிவாசனிடம் ''அதி கம் காப்பி குடிப்பது உடலுக்குக் கெடு தல்தானே?'' என்று கேட்டோம்.

''குளிர் பானங்களை விட காப்பி ஒன்றும் உடலுக்குக் கெடுதல் செய்வ தில்லை. தவிர சில மேலை நாட்டினரைப் போல் நாம் ஒன்றும் 'ப்ளாக் காப்பி' சாப் பிடுவதில்லையே. பாதிக்குப் பாதி பால் கலந்துதானே குடிக்கிறோம்'' என்ற சாமர்த் தியமான பதில் வருகிறது. பொதுவாக





காப்பிப் பொடி விற்பனை கோடைக் காலத்தை விட மழைக் காலத்தில் பத்து சத வீதம் அதிகமாக இருக்குமாம்.

காப்பிப் பொடியில் புளியங்கொட்டை யையும் வறுத்துக் கலந்து விடுவதாகச் சிலர் சொல்வது பற்றிக் கேட்டோம். ''சாதாரண மாக மக்கள் எதிரிலேயே காப்பிக் கொட் டையை அரைத்துக் கொடுப்பதால் கலப் படம் என்ற பேச்சுக்கே இடமில்லை. காப்பியில் கலப்படமென்று செய்பவர்கள் சிக்கிரியின் அளவை அதிகமாகச் சேர்ப்ப துண்டு. மற்றபடி வேறெந்தவிதக் கலப்பட மும் காப்பிப் பொடி வியாபாரத்தில் இல்லையென்றே எனக்குத் தோன்று கிறது'' என்றார்.

பாலிபேக் எனப்படும் காற்றுப் புகாத பாலிதீன் உறைகளுக்குள் காப்பிப் பொடி யை விற்கவும் தற்போது ஏற்பாடுகள் செய்கிறார்களாம்.



விருந்தினர் வந்திருக்கும் சமயத்தில் குளிர்பானம் கொடுக்க, ஃப்ரீஸரில் இருந்து ஐஸ் டிரேயை எடுத்தாலும், ஐஸை அதனின்று உடனே எடுக்க முடியாது. ஐஸ் டிரேயைக் குழாய்த் தண்ணீரில் காட்டுங்கள். ஒரு நிமிடத்தில் ஐஸ் கட்டி வந்து விடும். இனி, உருகும் கட்டியை எடுக்க வெயிலைத் தேடிச் செல்லவோ, அல்லது எடுக்க நேரமாகுமே என்ற கவலையோ வேண்டாம்.

- ஐ.எஸ். லட்சுமி.

இன்ஸ்டன்ட் காப்பித் தூள் தயாரிப்பாளர்களும் உற்சாகமாகத்தான் இருக்கிறார்கள்.

1988-ல், 'கோல்ட் கஃபே' என்ற 'சுத்தமான' காப்பிப் பொடியையும், 1989-ல் சிக்கிரி கலந்த 'இன்டானா இன்ஸ்டன்ட்' காப்பிப் பொடியையும் மார்க்கெட் செய்யத் துவங்கிய இன்டானா ஹவுஸ் நிறுவனத்தினர் இன்ஸ்டன்ட் காப்பிப் பொடி மார்க்கெட்டில் தாங்கள் 10 சதவீதத்தைக் கைப்பற்றி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இந் நிறுவனத்தின் துணை ஜெனரல் மேனேஜரான திரு. என். கே. ஆனந்த் ''இன்ஸ்டன்ட் காப்பியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. கையாளச் சுலபமானது. நேரத்தை மிச்சப்படுத்துகிறது ஆகிய காரணங்களோடு ஃபில்டர் காப்பிக்கு ஒப்பான சுவையை அளிப்பதில் எங்களைப் போன்ற இன்ஸ்டன்ட் காப்பிப் பொடி தயாரிப்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளதும் ஒரு முக்கிய காரணம்'' என்றார்.

இதைக் கேட்டதும் ஏதோ ஃபில்டர் காப்பி விற்பனையோடு இன்ஸ்டன்ட் காப்பிப் பொடியும் சமமான போட்டியில் இறங்கியுள்ளதாக நினைக்க வேண்டாம். காப்பிப் பொடி மார்க்கெட்டில் சுமார் 80% பங்கு இன்னமும் ஃபில்டர் காப்பிப் பொடியினுடையதுதான்.

''இருக்கலாம். ஆனால் சில வருடங்களுக்கு முன் இந்த விகிதாச்சாரம் 85:15 என்று இருந்தது. காப்பி மார்க்கெட் என்பது மிகப் பரந்தது. ஃபில்டர் காப்பி அருந்துபவர்களில் ஒரு சதவிகிதத்தினர் இன்ஸ்டன்ட் காப்பி அருந்துபவர்களாக மாறினால் கூட அது எங்கள் வியாபாரத்திற்குப் பெரும் ஆதாயம் தான்'' என்கிறார் ஆனந்த்.

காப்பித் தூளில் சிக்கிரி பொடி

தலைமைச் செயலகக் கட்டிடத்தில் இயங்கும் 'இந்திய காப்பி வாரியத்தின்' காஃபி பார்லர், காஃபியின் சுவைக்குப் பெயர் பெற்றது. இதன் விற்பனை அதிகாரி திரு. ராமசாமி கூறுகிறார் :

''காப்பிக் கொட்டைகளில் ப்ளேண்டேஷன் பீபரி, உருண்டை வடிவத்தில் இருக்கும். ப்ளேண்டேஷன் ரொபஸ்டா உருண்டை வடிவத்திலும், தட்டை வடிவத்திலும் இருக்கும். பல சமயங்களில் ரொபஸ்டாவை பீபரி என்று சொல்லி வாங்கி விட வாய்ப்புண்டு. ஏனெனில் பீபரியையோ, ரொபஸ்டாவையோ வறுத்து விட்டால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. பச்சையாக இருக்கும் போதுதான் வேறுபாடு தெரியும். பீபரி பச்சை வண்ணத்திலும், ரொபஸ்டா ப்ரௌன் வண்ணத்திலும் இருக்கும். வறுத்து விட்டால் இரண்டும் ஒரே வண்ணத்திற்கு வந்து விடும். எனவே பீபரியையே வாங்க வேண்டும் என்று நினைப்பவர்கள் வறுப்பதற்கு முன்பே 'செலக்ட்' செய்து பிறகு வறுத்து அரைத்துக் கொடுக்கச் சொல்ல வேண்டும்.

அதே போல பீபரி டிகாக்ஷன் 'திக்'காக இருக்காது. ஆனால் நல்ல ஃப்ளேவர் இருக்கும். ரொபாஸ்டோவிலே 'திக்'கான டிகாக்ஷன் கசப்புச் சுவையுடன் கிடைக்கும். அவரவர் டேஸ்ட்டுக்குத் தகுந்தாற்போல தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

எங்களுடைய நிறுவனத்தில் 'கப் டேஸ்ட்டர்' என்றே ஒருவர் இருப்பார். அவர் காப்பியின் சுவையை வைத்தே இது பீபரியா, ரொபஸ்டாவா, 'ஏ'யா, 'பி'யா எனக் கண்டுபிடித்து விடுவார்.''

நினைவிருக்கட்டும், வைட்டமின் மற்றும் மினரல் பற்றுக்குறையால் உங்கள் குழந்தை அவதிப்படாமலிருக்க, ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு தேவை.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்களுக்குத் தெரியுமா, சமச்சீராக உள்ள வைட்டமின்களும், மினரல்களும் ஊட்டச்சத்துகளை உறிஞ்ச உதவுகின்றன என்பது? போஷாக்குப் பற்றாக்குறையினால் குழந்தை அவதிப்படாமலிருக்க இது வகை செய்கிறது.

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். இந்த வைட்டமின்களையும் மினரல்களையும், போஷாக்குச் சத்துகள் சமச்சீராக உள்ள உணவின் மூலம் பெறுவதுதான் சிறந்த வழி என்பார். அந்த உணவில், புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகளும் சரியான விகிதத்தில் இருக்கவேண்டும். ஒவ்வொரு வேளை உணவிலும். ஒவ்வொரு நாளும்!

வழக்கமான உணவுகள் மூலம் இந்த எல்லா சத்துக்களையும் தருவது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

ஸெரிலாக். குழந்தைகளுக்கு நான்கு மாதம் முதல் வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போது முதல் தரக்கூடியது, ஊட்டச்சத்துக்களைச் சமச்சீராகக் கொண்ட திட உணவான ஸெரிலாக்.

ஸெரிலாக் ஏ, டி, சி, பி காம்ப்ளெக்ஸ் மற்றும் ஈ வைட்டமின்களால் செறிவூட்டப்பட்டிருக்கிறது. மேலும், இதில் புரோட்டீன், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துக்களும் உள்ளன–அனைத்தும் சரியான விகிதத்தில், குழந்தைகள் மிகவும் விரும்பும் சுவையுடன்!

ஆகவே போஷாக்குச் சத்துகளைச் சமச்சீராகக் கொண்ட ஸெரிலாக் அனுகூலத்தை உங்கள் குழந்தைக்கு அளிக்கத் துவங்குங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் வீட்-ஆப்பிள், வீட்-ஆரஞ்சு, மற்றும் வீட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலங்களை அளியுங்கள்.


பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம் ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்

எழுதுங்கள்: ஸெரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -21, புது தில்லி–110029

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக்.

கலப்பது உடலுக்குக் கெடுதல் என் கருத்தை அடியோடு மறுக்கிறார் இவ ''துணிகளில் சிலருக்குத் தூய பருத் பிடிக்கும்; சிலருக்கு பாலியெஸ்ட மிக்ஸ் பிடிக்கும். அதைப் போலத்தா சிலருக்குச் 'சுத்தமான' காப்பி பிடி கும்; சிலருக்குச் சிக்கிரி கலந்த காப் பிடிக்கும். இது சுவையைப் பொருத் விஷயம் மட்டுமே.'' இவர்களத தயாரிப்புகளில் 'சுத்தமான' கோல் கஃபேயை விட (30%) சிக்கிரி கலந் இன்டானா காப்பிக்குத்தான் அதி டிமாண்டாம்.

காப்பிப் பொடியில் - உறையி குறிப்பிடப்பட்டுள்ள சிக்கிரி அளவை தவிர - எந்தவிதக் கலப்படத்தையு பெரிய நிறுவனங்கள் செய்வதில்லை என்று அழுத்தமாக நம்புகிறார் ஆனந் ''விலையை வேண்டுமானால் நாங்க அதிகப்படுத்துவோமே தவிர கல படம் செய்து எங்கள் பெயரைக் கெடு துக் கொள்ள மாட்டோம்.''

விலை என்றதும் வேறு ஒரு வி யம் நினைவுக்கு வந்தது. என்ன இரு தாலும் இன்ஸ்டன்ட் காப்பியின் விலை ஃபில்டர் காப்பியின் விலையை விட அதிகம்தானே?

''ஒரு கிலோ ஃபில்டர் காப்பி பொடியில் எத்தனை கப் காப்பி கலக்க முடிகிறது என்பதை உறுதி செய் கொள்ளுங்கள். பிறகு அவ்வளவு க காப்பி கலக்க எவ்வளவு இன்ஸ்டன் காப்பிப் பொடி தேவைப்படுகிற என்பதைக் கணக்கிடுங்கள். உங்க கருத்து தவறானது என்பதை உணர்ந் கொள்வீர்கள்''என்று லேசான சவா குரலில் பதிலளித்தவர் ''கூடவே நேரம் வேலை ஆகியவை மிச்சமாவதையு மனதில் குறித்துக் கொள்ளுங்கள்'' எ றார்.

''வாழையடி வாழையாக ந மக்கள் ஃபில்டர் காப்பிக்குப் பழக்க பட்டுப் போய் விட்டார்கள் என்பத உண்மைதான். ஆனாலும் காலத்தி கேற்ப மக்களும் கொஞ்சம் கொஞ் மாக இந்த விஷயத்தில் மாறி வருகி றனர். மாதம் ஐந்நூறு ரூபாய் வரும னம் மட்டுமே உள்ள குடும்பங்களி கூட இன்ஸ்டன்ட் காப்பி வாங்குவ சகஜமாகி வருகிறது. இன்ஸ்டன் காப்பி என்பது ஒரு ஆடம்பரம் என் எண்ணத்திலிருந்து ஒரு தேவை என் எண்ணம் வலுப்பெற்று வருகிறது என்ற அவரது குரலில் நம்பிக்கை தெரி தது.

– ஜி. எஸ். எஸ்

பால் பாதுகாப்பானதா

சில உணவு வகைகளைப் பற்றி, அவ்வப்போது நிபுணர்கள் சொல்வதைக் கேட்டால் நாம் அவைகளைச் சாப்பிடவே மாட்டோம். சில ஆண்டுகளுக்கு முன்பு, நாம் சாப்பிடும் ஒவ்வொரு வகையான ஆகாரமும் ஆபத்து நிறைந்ததாகக் கருதப்பட்டது. ஆண்டாண்டு கால மாக, உடலுக்கு நன்மை தருவதாகக் கருதப்பட்டு உட்கொள்ளப்பட்ட ஆகாரங்களைக் கூட உணவு நிபுணர்கள் சந்தேகித்துள்ளனர். உண்மை எது? நாம் அன்றாடம் உட்கொள்ளும் ஆகாரங்கள் எந்த அள வுக்கு நன்மை பயக்கக்கூடியது? எந்த அளவுக்குத் தீமை செய்யக்கூடியது? இவைகளால் ஏற்படக்கூடிய அபாயம் என்ன என்று தெரிந்து கொள்ள, படியுங்கள் இக் கட்டுரையை.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
பால்	ஏடு நீக்கப்பட்ட பாலை உபயோகிக்கவும். இதில் கொழுப்புச் சத்து மிக மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. எனவே அபாயமற்றது. பாலில் கால்சியம் அதிகமாக உள்ளதால் எலும்புகளை உறுதியாக வைத்துக் கொள்ள உதவுகிறது.	அதிக ஏடு உள்ள பால் மிக அதிகக் கொழுப்புச் சத்தைக் கொண்டுள்ளதால், மிக ஆபத்தானது. எனவே இப் பாலை அதிகமாகக் குடிக்கும் போது, இருதய நோய்கள், பக்கவாதம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கிறது. ஒவ்வாத் தன்மை (Allergy) ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

அறிவுரை : எனவே நீங்கள் அன்றாடம் பாலைக் குடிக்கும் பழக்கமுடையவராக அல்லது பல ஆகாரங்கள் தயாரிப்பில் பாலைப் பயன்படுத்துபவராக இருந்தால், பால் ஏடு நீக்கப்பட்டதா என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
2. வெண்ணெய்	நமக்கு வெண்ணையே தேவையில்லை. இதில் மிகக் குறைந்த அளவே 'ஏ' வைட்டமினும் 'டி' வைட்டமினும் உள்ளன. இந்த வைட்டமின்களை வேறு ஆகாரத்திலிருந்து பெற முடியும். எனவே, வெண்ணெயைப் போன்றே, ஆனால் பாதுகாப்பான முறையில் செயல்படுகிற மலிவான குறைந்த கொழுப்புச் சத்துள்ள வையை உண்டு நன்மையடையுங்கள்.	இருதய நோய்கள் ஏற்படக் காரணமாக இருக்கிறது. இரத்த ஓட்டம் சம்பந்தமான தொந்தரவுகளும் உண்டாகலாம்.



அறிவுரை : எப்போதாவது மட்டுமே வெண்ணெய் உபயோகியுங்கள்.

்ண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
3. பால்கட்டி	மிகக் கெட்டியான பால் கட்டி வைட்டமின்கள், தாதுக்கள், புரோட்டீன்கள் ஆகியவற்றை அபரிமிதமாக உடையது.	மிகக் கெட்டியான பால்கட்டியில் மிக அதிகக் கொழுப்புள்ளதால் இருதயத்திற்குக் கெடுதி விளையும் பலவிதமான தொற்றுகள் ஏற்படலாம்.

அறிவுரை : குறைந்த கலோரிகள், குறைந்த கொழுப்புச் சத்துள்ள மென்மையான பால்கட்டிகளை உபயோகிக்கவும்.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
4. யோகர்ட் :	இயற்கையான இனிப்புச் சேர்க்கப்படாத தயிர், மிக அதிகமான புரோட்டீன் சத்துள்ளது. ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. பலவிதமான தொற்றுகளைத் தடுக்கவும் உதவுகிறது.	இனிப்புச் சேர்க்கப்பட்ட யோகர்ட், அதிகக் கொழுப்புள்ளதாலும், கலோரிகளையுடையதாலும் தீமை ஏற்படுத்தக் கூடியது.

அறிவுரை : இயற்கையான, இனிப்புச் சேர்க்கப்படாத தயிர் மிகச்சிறந்த உணவாகும். எனவே இதை ஆகாரத்தில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும்.


NEW
ViVA
RICH
IN MILK

பவர்

்ரீம் பால், 8 முக்கிய விட்டமின்கள், மால்ட் மற்றும் புரோட்டீனிலிருந்து ஊட்டமளிக்கும் சக்தி.



இங்கே ஒரு புதிய தலைமுறை. அதன் கனவுகளோ பல வகை. அந்த கனவுகள் நனவாக இன்றைய குழந்தைகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். முனைந்து செயலபட வேண்டும். நன்றாக ஓடியாடி விளையாட வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் குழந்தைகளைப் போல சிறப்பாக செயலாற்றும் வகையில் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட ஆரோக்கிய பானம் – புதிய விவா.

்ரீம் பாலில் இருந்து பவர்

பாலில் இருந்து உங்களுக்கு கிடைக்கும் எல்லா நலன்களும் விவாவிலிருந்து உங்களுக்கு கிடைக்கிறது. பால் செறிந்த விவா உங்கள் குழந்தையின் பற்கள் மற்றும் எலும்புகளின் நன்மைக்கும், முழுமையான ஊட்டத்திற்கும் தேவையான கால்ஷியம் மற்றும் பால் புரோட்டீன் அளிக்கிறது.

8 முக்கிய விட்டமின்களில் இருந்து பவர்

விட்டமின்கள் A, B_1, B_2, B_{12}, C, D, ஃபாலிக் அமிலம், நியாஸின் ஆகியவை நிறைந்து, வலிமை பெற்றது புதிய விவா. எனவே நோய் மற்றும் களைப்பை எதிர்த்துப் போராடும் சக்தியும் முழுமையான ஆரோக்கியமும் உங்கள் குழந்தைக்கு அளிக்கிறது புதிய விவா.

மால்ட் மற்றும் புரோட்டீனிலிருந்து பவர்

ஆரோக்கியம் அளிக்கும் பார்லி மால்ட், கோதுமை மால்ட் மற்றும் புரோட்டீன் நிறைந்தது விவா. இதனால் உங்கள் குழந்தைக்கு கிடைப்பது 8 கூடுதல் தெம்பு, சிறந்த ஆரோக்கியம்.

ஒரு சுவையான பானத்திலே உங்கள் குழந்தையின் நாளைய நல்வாழ்வுக்கு சக்தி அளியுங்கள். இன்றே விவா கொடுக்க தொடங்குங்கள்.



புதிய

ViVA®

ரு புதிய தலைமுறைக்கு அளிக்கிறது உகந்த சக்தி.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
சர்க்கரை	உடனடியாக சக்தியைக் கொடுக்க வல்லது. இயற்கையாக உண்டாகும் சர்க்கரையில் எடுத்துக்காட்டாக தேன் - வைட்டமின்களும் தாதுக்களும் உள்ளன. சர்க்கரை இல்லாமல் காப்பி, டீ குடிக்க முடியாவிட்டால் செயற்கையான இனிப்பூட்டிகளை உபயோகிக்கவும்.	மிக அதிகமான கலோரிகள் உள்ளது. ஆனால் நன்மை எதுவும் ஏற்படுத்துவதில்லை. நாம் தேவையான அளவை விட மிக அதிகமான சர்க்கரையைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். டின்களில் அடைக்கப்பட்டு வரும் ஆகாரங்களில் எல்லாம் சர்க்கரை சேர்க்கப்படுகிறது. மிக அதிகமான சர்க்கரையால், பற்கள் சிதைகின்றன. அதிகமான சர்க்கரையைப் பயன்படுத்துவதற்கும், குடலிலும் மார்பகங்களிலும் ஏற்படும் புற்று நோய்க்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

அறிவுரை : உணவிலிருந்து சர்க்கரையைக் குறைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். உணவுப் பண்டங்களை வாங்குமுன்னர், அவைகளில் என்னென்ன பொருள்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை லேபிளிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். கூடியவரையில் இனிப்பூட்டப்படாத தயாரிப்புக்களையே வாங்கவும். இனிப்பூட்டப்படாத பழரசத்தையே குடிக்கவும். ஏனென்றால் பழங்களில் இயற்கையாகவே சர்க்கரை அடங்கியுள்ளது.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
உருளைக் கிழங்கு	வைட்டமின்களும், நார்ச்சத்தும் நிறைந்தவை. கார்போஹைடிரேட் சத்து நிறைந்தது. வேகவைக்கும் போது தோலுடனேயே வேகவைத்து பின்பு தோலுரிக்கவும். அப்போதுதான் வைட்டமின்கள், மற்றச் சத்துக்கள் சிதையாமல் இருக்கும்.	உருளைக் கிழங்கு நன்மை பயக்கக்கூடியதே. ஆனால் எண்ணெயில் வறுத்தெடுக்கப்படும் போது மிக ஆரோக்கியமான ஒரு உணவு ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கும் பண்டமாக மாறுகிறது.

அறிவுரை : உருளைக் கிழங்கை, வறுத்துத்தான் சாப்பிட வேண்டுமென்றால் உருளைக் கிழங்கைச் சீவி, மிகவும் இலேசாக எண்ணெய் தடவி, "Bake' செய்யவும்.



தலைக்குச் சீயக்காய்த் தூள் மட்டும் தேய்த்தால் முடி வறட்சியாக இருக்கும். கஞ்சியுடன் தேய்த்தால் பட்டு போல் மிருதுவாக இருக்கும். சிறிது அரிசி மாவுடன் திட்டமாகத் தண்ணீர் ஊற்றிக் கலந்து அடுப்பில் இரண்டு கொதி விட்டால் கஞ்சி ரெடி!

- ஆர். கல்யாணி.

தற்போது வரும் நவீன எண்ணெய் கேனை நடுவில் வெட்டி விட்டால் கீழ்ப் பாகம் குவளையைப் போலவும், மேல் பாகம் புனல் போலவும் பயன்படும்.

- கல்யாணி.



பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
பிரெட்	புரோட்டீன்கள், வைட்டமின்கள் நிறைந்தவை.	வெண்மையாக இருக்கும் ரொட்டித் துண்டு ருசியே இல்லாமலிருக்கும். எனவே அதன் மீது வெண்ணெய் தடவி அதை ருசியுள்ளதாக ஆக்க வேண்டும். வெண்ணெய் வயதானவர்க்கு அத்தனை நன்மை பயக்கக்கூடியது அல்ல. மேலும் வெள்ளை பிரட்டில் நார்ச்சத்து மிகவும் குறைவு.

அறிவுரை : வெள்ளை பிரட்டை விட, பிரௌன் பிரட் நல்லது. சப்பாத்தி மிகச் சிறந்தது.

பண்டத்தின் பெயர்		தீமை
உப்பு	தற்போது தயாரிப்புகள் லேபிள் மேலேயே தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் பொருளின் பெயர்களை அச்சிட்டு விடுவதால், எந்தத் தயாரிப்பில் உப்பு கலந்துள்ளது என்று எளிதில் தெரிந்து கொள்ள முடியும். ரெடி உணவுகளில் சேர்க்கப்படும் உப்பின் அளவைத் தெரிந்து கொள்ள இதோ ஒரு எளிய முறை. லேபிள் மீது வரிசையில் உப்பு எங்கு குறிக்கப்பட்டுள்ளது என்று கவனியுங்கள். உப்பின் பெயர் எத்தனை மேலே இருக்கிறதோ அந்தத் தயாரிப்பில் அதிக அளவு உப்பு சேர்க்கப்படுகிறது.	உங்களுக்கு மிக அதிக இரத்த அழுத்தம் இருந்தாலும், உங்கள் முன்னோர்களுக்கு அதிக இரத்த அழுத்தம் இருந்திருந்தாலும் உப்பைக் குறையுங்கள். மாதவிலக்குக்கு முன் பலவிதமான உபத்திரவங்களுக்கு ஆளாகும் பெண்கள் உப்பைக் குறைத்தால் நல்லது.

அறிவுரை : உப்பில்லாத ஆகாரம் ருசியில்லாமல் இருந்தால், மணமூட்ட, பூண்டு, எலுமிச்சை ரசம், அல்லது வினிகர் உபயோகியுங்கள்.



தீபாவளி, பொங்கல், பிறந்தநாள், புது வருடப் பிறப்பு ஆகிய தினங்களில் கடைகளில் விற்கும் கிரீட்டிங்ஸ் கார்டுக்குப் பதிலாக நம் வீட்டுக் குழந்தைகளிடம் போஸ்ட் கார்டை வாங்கிக் கொடுத்து அவர்கள் இஷ்டப்படி டிராயிங் வரையச் சொல்லி அனுப்பினால் செலவும் கம்மி, குழந்தைகளுக்கும் குதூகலம், பெறுபவர்களுக்கும் சந்தோஷம்!

- ஆர். கல்யாணி.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
முட்டை	புரோட்டீன் சத்து அதிகம். விரிசலான முட்டையையும், பச்சை முட்டையையும் நீக்கினால் தொற்று ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்கலாம். முட்டையிலுள்ள சத்துக்கள் மற்றப் பொருள்களிலும் உள்ளது. வேறு பண்டங்களிலிருந்து பெற முடியாத சத்துக்கள் முட்டையில் இல்லை. அதனால் முட்டை சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்ற அவசியமில்லை.	முட்டையில் கொலஸ்ட்ரால் சத்து மிக அதிகமாக இருப்பதால் இருதயத்திற்கு மிக அபாயமானது. முட்டையால் 'சால்மோனல்லா' எனும் தொற்று ஏற்படுவதாகக் கருதப்படுகிறது.

அறிவுரை : பெரியவர்கள் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முட்டைகள் மட்டுமே உட்கொள்ள வேண்டும். இதற்கு அதிகமானால் கொலஸ்ட்ரால் பிரச்னை ஏற்படும். முட்டையில் புரோட்டீன் சத்து மிகுந்துள்ளதால் குழந்தைகளுக்கு முட்டை மிகவும் சிறந்தது. முட்டையை அவித்துக் கொடுக்கவும். அவிக்காத முட்டை குழந்தைகளுக்குப் பிரச்னை ஏற்படுத்தும்.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
ஆட்டிறைச்சி மாட்டிறைச்சி இவை இரண்டும் "Red meat' என்று குறிக்கப் படுகின்றன.	புரோட்டீனும், இரும்புச் சத்தும் உள்ளன.	கொழுப்பு மிக அதிகமாக உள்ளதால் இருதய சம்பந்தமான நோய்கள், புற்றுநோய் போன்ற அபாயம் ஏற்படுகிறது. மேலும் மிக உயர் இரத்த அழுத்தம், அஜீரணம், மூலம் (Piles) சிறுநீரகக் கற்கள், பட்சவாதம், மலச்சிக்கல், நீரிழிவு போன்ற அபாயங்களும் ஏற்படலாம் என்று டாக்டர்கள் கருதுகின்றனர்.

அறிவுரை : வாரத்தில் ஒருமுறை அல்லது இருமுறை மட்டுமே இறைச்சி சாப்பிடும் பழக்கத்தைக் கொள்ளுங்கள். வெள்ளை இறைச்சி (White Meat) என்று அழைக்கப்படும் சிக்கன் போன்றவையிலும் புரோட்டீன் சத்து மிகுந்துள்ளது. இவ்வகை இறைச்சியில் தோல் பகுதியை ஒட்டியே அதிகக் கொழுப்புச்சத்து இருக்கிறது என்பதால் தோல் பகுதியை அறவே நீக்குவது நல்லது என்று கருதப்படுகிறது.

பண்டத்தின் பெயர்	நன்மை	தீமை
காப்பி	சாப்பிட்டவுடனே உடலைச்சுறுசுறுப்பாக்கும் மலிவான பானம். சோம்பலாக இருக்கும் போது ஒரு கப் காப்பி குடித்தவுடன், சோம்பல் பறந்து விடும். ஆஸ்துமா நோயாளிகளுக்குத் தற்காலிகமான குணம் கொடுக்கக் கூடியது.	ஒரு நாளைக்கு 3 அல்லது 4 கப்புகளுக்கு மேல் காப்பி குடிப்பது இருதயத்தை மிகவும் அதிகமாகத் துடிக்கச் செய்து இரத்த அழுத்தத்தை அதிகரிக்கிறது. காப்பி விழிப்புணர்வையும் ஏற்படுத்தும். சோர்வையும் உண்டாக்கும். தலைவலி, சிடுசிடுப்பு ஏற்படும்.

அறிவுரை : எச்சரிக்கையுடன் உபயோகிக்கவும். காப்பி மிகவும் சக்திவாய்ந்த பானம். கொலஸ்ட்ரால் மட்டத்திற்கும் காப்பி குடிக்கும் பழக்கத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளதாகக் கூறப்படுகிறது.

- ராஜி.

தோட்டத்து மூலிகை!

தோட்டத்தில் அந்தச் செடி ரொம்ப நாளாகக் கண்ணை உறுத்திக் கொண்டிருந்தது. அதைப் பிடுங்கி எறிந்துவிட்டுக் கொத்துமல்லி அல்லது தக்காளி போடலாமென்றிருந்தேன். அண்மையில் பெய்த மழையில் நன்கு தழைத்து வளர்ந்து ஊதா நிறப் பூக்கள் வந்துவிட்டன. செடியில் முட்கள் வேறு. அன்று மாலை நேரத்தில் வயதான பெண்மணி ஒருவர் வந்து, "தூதுவளை செடி இருக்கிறதா இங்கே?" என்றார்.



"ஏதோ குப்பைச் செடிகள் உள்ளன. பாருங்களேன்" என்றேன்.

நான் வெட்ட நினைத்த செடியைப் பார்த்து மகிழ்ந்தார். அதுதான் தூதுவளையாம். "இந்த இலைகளின் சாறைத் தேனுடன் சாப்பிட்டால் சளிக்கட்டு நீங்கும். மார்ச் சளிக்கு உபயோகிக்கும்படி எங்கள் குடும்ப டாக்டரே கூறினார். இலைகளை ஒரு சொட்டு நெய்யில் வதக்கித் துவையலாகச் செய்து சாப்பிடலாம். இதில் வரும் காய்களைக் கூட வறுத்துச் சாப்பிடலாம்" என்று அதன் அருமை பெருமைகளைப் பட்டியல் போட்டார்.

இப்போது அந்தச் செடி சஞ்சிவியாகி விட்டது! அக்கம்பக்கத்தார் அதன் இலைகளுக்காக வருகின்றனர்.

- கிருஷ்ணவேணி ரங்கனாதன்.

மேஷ ராசி:

அசுவனி, பரணி, கிருத்திகை - *1* ஆம் பாதம்.

குருவும், செவ்வாயும் எண்ணியதை எடுத்துக் கொடுத்து முடிக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆனால் சூரியனும், சுக்கிரனும் மாத ஆரம்பத்தில் பெற வேண் டியவற்றைத் தடுத்து நிறுத்திக் கெடுக்கும் நிலையில் உதவுகிறார்கள். எனினும் மாதத்



செப்டம்பர் '91

ந்த மாதம் எப்படி?

தின் பிற்பகுதியில் நல்லதொரு நிலை உருவாகும். உங்கள் ஆற்றலைப் புரிந்து கொண்டு, மற்றவர்கள் உங்களைப் பாராட் டுவார்கள். சுப நிகழ்ச்சிகளை நடத்தவோ, அல்லது அவற்றில் கலந்து மகிழும் சூழ் நிலையிலோ இருக்கிறீர்கள். கலைத் துறை யில் பாராட்டைப் பெற முடியும். வேலைக் காக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப் பவர்களுக்கு வெற்றி உண்டு. தந்தையின் உடல் நிலை பாதிக்கப்படலாம். அது கண் சம்பந்தமாகவும் ஏற்படலாம். அல்லது வயிற்று உபாதையாகக் கூட இருக்கலாம். என்றோ உங்களுக்கு ஆசிரியராக இருந்த ஒருவரை அது கல்வித் துறையாகவும் இருக்கலாம், அல்லது கலைத் துறையாக வும் இருக்கலாம். இந்த மாதத்தின் பிற் பகுதியில் திடீரென சந்திப்பீர்கள், அவரது ஆசி உங்களுக்கு எல்லா விதத்திலும் எதிர்காலத்தில் உதவும். *14, 15* தேதிகள் உத வாத நாட்கள் ஆகும். ஆறுதலை முரு னைப் பணியுங்கள். நல்லதொரு மாறுதலை எதிர்பார்க்கலாம்.

ரிஷப ராசி :

கிருத்திகை *2, 3, 4* - ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் *1, 2* - ஆ பாதங்கள்.

புதன், சுக்கிரன் ஆகிய இருவரும் அனு கூல நிலையில் உள்ளனர். மற்ற கிரகா களால் மனத்தில் நிம்மதியின்மை ஏற்பட லாம். கடன் தொல்லையும் அபரிமிதமால செலவும் ஏற்பட்டுப் பொருளாதார நிலை தடுமாற்றத்தில் இருக்கும். புதன் அருளால் எதிர்பார்த்த வேலை கிடைக்கும். சுக்கிர னால் குடும்பத்தில் ஓரளவு மகிழ்ச்சி உண்டு. சகோதரர்களுடன் மனஸ்தாபம் ஏற் படலாம். சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம், திருமணம் ஒன்று நிச்ச யிக்கப்படலாம். சனிஸ்வரனால் வீணான வம்பு ஒன்றில் மாட்டிக் கொண்டு முழிப் பீர்கள். எனவே எதிலும் சற்று ஒதுங்கி இருப்பது நன்று. உஷ்ண சம்பந்தமான உடல்நலக் கோளாறு ஏற்படலாம். *16, 17, 18* தேதிகளில் கவனமுடன் இருக்க வேண்டும். வக்கிர சனி அஷ்டமத்தில் இருப்பதால் வகையாக வம்பில் மாட்டிக் கொள்ள வாய்ப்பு உண்டு.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் *3, 4* - ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் *1, 2, 3* - ஆம் பாதங்கள்.

இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் மாதம். மாதத்தின் முதல் இரண்டு வாரங் களில் ஒருசிலருக்கு அரசாங்க சம்பந்தமான உதவியுண்டு. பதவியாகவும் இருக்கலாம் அல்லது எதிர்பார்த்த வியாபார உரிமை யாகவும் இருக்கலாம். பின்பகுதியில் நகை வாங்க அல்லது மீட்க வேண்டிய யோகம் உண்டு. நடிகர்களுக்கு நல்ல நிலை உரு

விப்ரோ

பேபி ஸா:ப்ட்

சோப்

ரூ. 10/-
வரிகள் உட்பட
75 கிராம்



லனோலின் அடங்கியது

பச்சிளங் குழந்தையின் தளிர்மேனியை சரிவர பராமரிக்க அதன் சருமத்தைப் போன்றே மென்மையான சோப் அவசியமாகும். விப்ரோ பேபி ஸாஃப்ட் சோப். தூய்மையான உட்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள விப்ரோ பேபி ஸாஃப்டிலே சரியான பி.எச். பேலன்ஸ் உள்ளது. அதாவது தூய்மையான உட்பொருட்கள் சரியான விகிதத்திலே கொண்டது. அதனால் தான் இதிலே குழந்தையின் சருமத்திற்கு கேடு ஏற்படுத்தும் உட்பொருளே கிடையாது. அத்துடன் சருமத்தின் மென்மைக்காக உலகெங்கும் உபயோகிக்கப்படும் லனோலினும் இதிலே உள்ளது. தவிர பேபி ஸாஃப்டின் சுத்தமான தரத்தை நீடிக்கச் செய்ய அதை தமது பிரத்தியேக மேற்பார்வையில் தயாரிக்கின்றனர் விப்ரோ. அநேக சிறப்புக்கள் அடங்கிய விப்ரோ பேபி ஸாஃப்ட் சோப் இப்போது உங்கள் குழந்தைக்கென கிடைக்கிறது சரியான விலையிலே. தூய்மையை நிலைநாட்ட எவ்வளவு விலை தேவையோ அந்த விலையிலே. ஏனெனில் விலையை அதிகரிப்பதால் தூய்மை அதிகரிக்காது என விப்ரோ நம்புகின்றனர்.

இது உங்கள் பச்சிளங் குழந்தையையும் அதன் தளிர்போன்ற மென்மையான சருமத்தையும் பொருத்த விஷயமாகும்."



காரணம், தாய்ப்பாசமும், தூய்மையும் உங்கள் குழந்தையின் பிறப்புரிமை.

சம்!
யை சரிவரப்
க 'Bundle of Joy'
கப்புத்தகத்தை
ாகப் பெற இமமுகவரிககு
ப:
கன்ஸ்யுமர் பிராடக்ட்ஸ்.

கடன் முதலாகியது

கண் விழித்ததும் கடியாரத்தைப் பார்த்தேன். மணி நாலேகால். நாலரைக்கு அலாரம் அடிக்கும் முன்பாகவே விழிப்பு வந்து விட்டது. அதுவும் நல்லதுதான். அலாரம் அடித்து எல்லோருடைய தூக்கத் தையும் கலைக்க வேண்டாம். அலாரம் பட்டனை அழுத்தி விட்டு படுக்கையை விட்டு எழுந்தேன்.

வருடம் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களுமே தண்ணீர் பிரச்சினைதான். அதி லும் 'சம்மரில்' கொஞ்சம் கூடவே. நால ரைக்கே எழுந்து தண்ணீர் பிடித்தால் தான் உண்டு. காலையில் இரண்டு மணி நேரம் தான் வரும். அதிலும் பக்கத்து வீட்டுக்காரர் எழுந்து அவர் வீட்டுக் குழாயைத் திறந்து விட்டாலோ நம் வீட்டுக் குழாயில் தண்ணீர் சொட்டத் துவங்கி விடும். ஆகையால் அவர் எழுந்து வருவதற்குள் நான் தண்ணீர் பிடித்து விட வேண்டும். அதுவும் இப்ப வீடு நிறைய விருந்தாளிகள். எத்தனை தண்ணீர் பிடித்தாலும் பற்றாது. 'அடாது தண்ணீர் பிரச்னை இருந்தாலும் விடாது விருந்தாளிகள் வரப்படும்/வரவேற்கப் படும்!

வந்தாள். வரும்போதே உடம்பெல் லாம் 'சுகர்' வியாதி. இங்கு வந்ததும் அதிகம் ஆயிடுத்து. டாக்டரிடம் காண்பித்த தில் அவர் சாங்கோ பாங்கமாக வைத்தியம் பார்க்கத் தொடங்கிவிட்டார். ''வைத்தியத் தைப் பாதியில் நிறுத்த வேண்டாம். அம்மா வுக்கு நாக்பூரில் மொழிப் பிரச்னை வேறு. டாக்டரிடம் தனக்கு என்ன வியாதி என்று கூட சொல்லத் தெரியலை. இங்கேயே இருந்து குண மாக்கிண்டு வரட்டும்'' என்று சொல்லி நாத்தனார் பிள்ளையும் மாட்டுப்பெண் ணும் கிளம்பிச் சென்று விட்டனர். விளை யாட்டுப் போல இரண் டாவது மாதம் முடியப் போகிறது. இன் னும் குணம் தெரியலை.

எட்டாக்கையிலிருந்து அக்கா வந்தி ருக்கா என்று திருச்சி, திருவனந்தபுரம், திரு வண்ணாமலை நாத்தனார்கள் எல்லோ ரும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். திண்டி வனம் நாத்தனார் மட்டும் தன் பெண் பிள்ளையுடன் இன்னும் இருக்காள்.

நின்றவாறே காப்பியைக் குடித்து முடித்தேன். பால்காரன் வருகிற நேரமாச்சு. அதிகப்படி பால் இரண்டு லிட்டர் கேட்

தண்ணீரை டிரம்களில் நிரப்பிவிட்டு, வாசல் தெளித்துக் கோலமிட்டு, குளித்து, ஸ்வாமி விளக்கு ஏற்றிப் பால் காய்ச்சி காப்பி போட்டு 'அப்பாடா உட்காரு வோம்' என்று காப்பிக் கோப்பையுடன் கூடத்திற்கு வந்தேன்.

உட்கார இடம் இல்லை. கூடம் முழு வதும் படுக்கைகள். கூடத்தின் ஓரத்தில் மாமியார் கட்டில் அதன் கீழே இரண்டு நாத்தனார், அவர் பெண், பிள்ளை, என் பெண் என்று வரிசையாக ஐந்து பேர் படுத்து இருந்தார்கள். படுக்கை அறையில் என் கணவரும் பிள்ளையும். வாசல் பக்கத்து ரூமில் செருப்புகள் இறைந்து கிடந்தன. அந்த ரூம் அதற்குத்தான் லாயக்கு என்று சொல்லிக் கொண்டாலும் சில சமயம் அங்கும் படுக்கைகள் விரிக்கப் படும்.

இந்த மாதம் பள்ளிக்கூட விடுமுறை மாதம். ஆகையால் ஏகப்பட்ட விருந்தாளி கள். ஏகப்பட்ட செலவு வேறு.

எனது நாக்பூர் நாத்தனார் தன் பிள்ளை யின் எல்டிசி டூரில் சென்ற மாதம் இங்கு

டால் ஒரு லிட்டர் தான் கொடுக்கிறான். இன்றைக்கு என்ன செய்யப் போகிறானோ. வெயில் காலத்தில் தண்ணீருக்குத் தான் பிரச்னை என்றால் பாலுக்கும் பிரச்னையாக இருக்கு. பணத்தை எடுத்துக் கொண்டு வாச லுக்கு விரைந்தேன்.

பால்காரன் பின்னாடியே தம்பியும் படி யேறிக் கொண்டு இருந்தான்.

''வா, வா, என்ன திடீர் விஜயம்?''

பாலை வாங்கிக் கொண்டு தம்பியுடன் உள்ளே நுழைந்தேன். எதிரே காலண்டரில் பளிச் சென்று தேதி கண்ணில் பட்டது.

''அட, இன்று உன் பிறந்த நாள் இல்லையா, பிறந்த நாள் வாழ்த்துக்கள்.''

''நீ, எப்படி இத்தனை பிஸி லைஃபி லும் இந்த பிறந்த நாட்களையெல்லாம் நினைவு வைத்துக் கொள்கிறாய்?'' தம்பி அதிசயத்துப் போனான்.

குந்தளா



''அதுதான் பாசம். என் கிரீடிங்க்ஸ் கிடைச்சுதா?''

''கிடைத்து இருக்கலாம். நான் ஊரை விட்டுக் கிளம்பி நான்கு நாட்கள் ஆகி விட்டன. மதுரைக்குப் போய் அங்கிருந்து இங்கு வருகிறேன்.''

''என்ன பிறந்த நாளும் அதுவுமா வீட்டில் இல்லாமல் வெளியூர்ப் பயணம். உமா கோபிக்க மாட்டாளா?''

''என்ன செய்வது, ஆபீஸ் காரியம், பிறந்த நாளும் திருமண நாளும் கொண்டாடிக் கொண்டு இருந்தால் நடக்குமா? அவசரமா ஒரு ஆபீஸ் வேலை. அதான் வந்தேன். இந்த பிறந்த நாளை உன்னுடன் கொண்டாடினால் போச்சு. ஆனால் நான் இன்று இரவே ஊருக்குக் கிளம்புகிறேன். உன் வீடும் 'ஹவுஸ் புல்'லா இருக்கு.''

''அது கிடக்கட்டும். நீ பல் தேய்ச்சுட்டுவா, காப்பி தரேன்.''

கூடத்தில் இடம் இல்லாததால் சமைய லறையிலேயே நின்று கொண்டு காப்பியைக் குடித்தான்.

தம்பி அப்ப, அப்ப டூரில் வருவான், போவான். ஊர் நிறைய உறவினர்கள் இருந்தாலும் இங்குதான் வருவான், தங்குவான். அதில் எனக்கும் ஒரு பெருமைதான். சமயம் கிடைத்தால் எல்லா உறவினர்களையும் போய் பார்த்துவிட்டு வருவான். அவசர வேலை என்று ஓரிரண்டு நாட்கள் வருப் போது அவர்களைப் பார்க்காமலே கூட போய் விடுவான்.

''இன்று இரவே ஊருக்குக் கிளம்ப கிறேன் என்கிறாயே, இந்த முறை ஜெய்யூவைப் பார்த்துவிட்டுப் போ.''

''ஏன், அவளுக்கு என்ன, நல்லா தானே இருக்காள்?''

''இல்லை, காஸ்ட்ரோ என்டிரிடிஸ் வந்து பத்து நாட்கள் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருந்து இப்பத்தான் டிஸ் சார்ஜ் ஆகி இரண்டு நாட்கள் ஆகின்றன.

> சர்க்கரை சில சமயங்களில் நீர்த்தாற் போல் கொச, கொச வென்றிருக்கும். இங்கு உறிஞ்சும் 'பிளாட்டிங்' பேப் பரை சிறிதளவு எடுத்து, சர்க்கரையில் போட்டு, காற்றோட்டமாக வையுங் கள். சர்க்கரை பழையபடி நன்றாக ஆகி விடும்.
>
> – கமலா.

இங்கு வந்து போகிற விஷயம் எப்படியும் அவ காதுவரை போகும். நீ பார்க்காமப் போனா, உடம்பு சரியில்லாத போது கூட தங்கையைப் பார்க்காம போயிட்டானே என்று அவங்க வீட்டு மனுஷாளும் நினைத்துக் கொள்வார்கள். அவளும் தப்பா புரிஞ்சுப்பாள்.''

''சரி, சாயந்திரமா போய் பார்க்கிறேன். பேப்பர் வந்தாச்சா?''

''வாசப்பக்கத்து ரூமில் வீசி எறிந்து இருப்பான், போய்ப் பார்.'' தம்பி பேப்பர் பார்க்க வாசரூமிற்குப் போய் விட்டான். அதற்குள் வீட்டில் எல்லோரும் எழுந்து விடவே நான் சமையலறைக் காரியங்களில் மூழ்கிப் போனேன். எட்டரைக்குள் சமையலை முடித்து, உடை மாற்றிக் கொண்டு ஆபீஸிற்குக் கிளம்ப வேண்டும். இன்றைய சமையலில் எக்ஸ்ட்ரா அயிட்டமாக பாயசம் வைக்க வேண்டும். தம்பியின் பிறந்த நாள் ஆச்சே.

ஒரு தம்ளரில் பாயசத்தை எடுத்துக் கொண்டு தம்பியைத் தேடினேன். பெட் ரூமில் ஏதோ ஆபீஸ் பேப்பர்களைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''இந்தா பிறந்தநாள் ஸ்வீட், எட்டரைக்கு நான் கிளம்பி விடுவேன். மாலையில் பார்க்கலாம்.''

''தாங்க்யூ'' என்று தம்ளரை வாங்கிக் கொண்டவன் ''ஒரு நிமிடம் '' என்றான்.

''என்ன?''

''ஒரு இருநூறு ரூபாய் கடனாகத்தர முடியுமா! ஊருக்குப் போனதும் அனுப்பி விடுகிறேன். மதுரையெல்லாம் சுற்றி விட்டு வருவதால் என்னிடம் பணம் அளவாகத்தான் இருக்கு. ஜெய்யூவைப் பார்க்கச் சொல்லுகிறாய். வெறும் கையா எப்படிப் பார்க்கிறது, மருந்துச் செலவிற்குக் கொஞ்சமாவது பணம் தர வேண்டாமா?''

''பணமா, இந்த மாதம் பயங்கரச் செலவு'' என்று இழுத்தேன்.

கைவசம் இருப்பதே இருநூறு ரூபாய். ஏற்கனவே இந்த மாதம் மூன்று முறை பாங்க் சென்று பணம் எடுத்தாகிவிட்டது. இவனுக்கு இருநூறு ரூபாய் கடன் தரணும் என்றால் மறுபடி பாங்கிலிருந்து பணம் எடுக்கணும். பிறந்த நாளும் அதுவுமா வந்து இருக்கான். கையில் இருக்கும் இருநூறு ரூபாயில் ஐம்பது ரூபாய்க்கு ஒரு சின்ன பர்ஸ் வாங்கி பர்த்டே பிரசண்ட் செய்து விட்டு மிகுந்த ரூபாயில் மாதக் கடைசி நான்கு நாட்களை ஓட்டிவிடலாம் என்று பார்த்தால் இவன் கடன் கேட்கிறானே. இவனை எப்படிச் சமாளிப்பது? மெல்ல என் செலவுப் பட்டியலை விளக்கினேன்.

''நாக்பூர் நாத்தனார் பிள்ளையோட

வந்துவிட்டு இங்கு வைத்தியத்திற்கு உட்கார்ந்துட்டாள். அப்ப அப்ப கொஞ்சம் மருந்து செலவு எங்க தலையிலும் விழறது. அவளைப் பார்க்க என்று மற்ற நான்கு நாத்தனார்களும் பட்டாளமாக வந்தார்கள். பிறந்தகம் வந்துவிட்டுப் போற பெண்களை வெறுமே அனுப்பமுடியுமா! எல்லோருக்கும் புடைவை எடுத்துக் கொடுத்தேன். என் கூட மாமியார் இருக் காளே அதனால பெண்களுக்குச் செய்யாம அனுப்ப முடியாது.''

''என்ன புடைவை எடுத்துக் கொடுத்தாய்?''

''கார்டன் தான். அதுக்குக் குறைவாக நான் கட்டுவது இல்லையே. அவாளுக்கு மட்டும் எப்படி கம்மியாக எடுக்கிறது! ஆயிரத்து ஐநூறு ரூபாய் 'ஃபட்'.''

நாத்தனார் பிள்ளை இன்ட்ர்வ்யூக்கு வந்தான். அவனுக்கு ஒரு ஷர்ட் துணி எடுத்துக் கொடுத்தேன். அவன் சாமர்த்தியத்தைக் கேட்டுக்கோ. ஷர்ட் வாங்கிக் கொடுத்த பிறகு, ''மாமி ஊருக்குத் திரும்பிப் போகப் பணம் போதாது, நூறு ரூபாய் வேண்டியிருக்கும்' என்கிறான். ஷர்ட் வாங்குவதற்கு முன்னாடியே இதைச் சொல்லி இருந்தால் பணத்துடன் நிறுத்திக் கொண்டிருப்பேன் இல்லையா.

இந்தப்பக்கம் தான் இவ்வளவு செலவு என்றால் நம்ம வீட்டுப் பக்கம் ஜெய்யூ படுத்துக் கொண்டு விட்டாள். ஆஸ்பத்திரியில் போய் அவளைப் பார்த்துவிட்டு அவளுக்கும் இருநூறு ரூபாய் கொடுத்துவிட்டு வந்தேன். 'சம்பாதிக்கிற அக்கா வந்து பார்த்தாளே, என்ன கொடுத்தா?' என்று அவ மாமியார் அவளைப் பிடுங்குவாள். இந்த மாதம் செலவு விழி பிதுங்கிவிட்டது.

''உனக்கு எப்பவுமே தாராள மனசு. யார் வந்தாலும் எதையாவது வாங்கிக் கொடுத்துண்டுதான் இருப்பாய். வெறும் கையா அனுப்ப உனக்கு மனசு வராது. ஏதோ பகவான் கிருபையில் உனக்குப் பணம் காசு கொஞ்சம் தாராளமாகவே வரது. இறைச்ச கிணறு ஊறும்னு சொல்லுவார்கள். அதுபோல நீ இறைக்கிறே. ஊறுகிறது.

நானே வரும்போது பயந்து கொண்டுதான் வந்தேன். பிறந்த நாளும் அதுவுமா போய் நிக்கறமே, இவ பாட்டுக்கு பாண்ட் ஷர்ட் எடுக்கிறேன்னு தாம் தூம்னு குதிக்கப் போறாளே என்று. இந்த மாதம் உனக்கு இருக்கிற செலவில எனக்கு பர்த்டே பிரசண்ட் என்று எதுவும் வாங்கிடாதே, சொல்லிட்டேன்.''


''பெரிசா ஒண்ணும் வாங்குவதாக இல்லை. சின்னதாக ஒரு டோக்கன் பிரசண்ட்.''

''உன் டோக்கன் பிரசண்ட் எல்லாம் எனக்குத் தெரியுமே. பாண்ட் ஷர்ட்டுக்குப் பதிலாக வேஷ்டி ஷர்ட் எடுக்கிறேன் என்பாய். அதுவே முன்னூறு ரூபாய் ஓடிவிடும். நீ பிரசண்ட் பண்ணித்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தால், நான் சொல்றேன் கேளு. பேசாம நூறு, இருநூறு பணமாகக் கொடுத்துடு. புரிஞ் சுதா?''

'சரிதான், இவனும் சளைத்தவன் இல்லை' என்று மனத்தில் எண்ணிக் கொண்டு ''நேரமாகிறது, சாயங்காலம் பார்க்கலாம்'' என அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன்.

அவன் கடனாக இருநூறு ரூபாய் கேட்க அதை இல்லை என்று நேரடியாகச் சொல்லத் தெரியாமல், சுற்றி வளைத்து என் செலவுப் பட்டியலை ஒப்புவித்தால், அவன் அதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு தன்னுடைய பிறந்த நாள் பரிசுக்கு அடி போட்டுவிட்டான். நான் ஐம்பது ரூபாயில் முடிக்க நினைத்த பரிசு எனது புத்திசாலித்தனத்தால் இப்போது நூறு, இருநூறுக்குப் போய்விட்டது.

ஆக மொத்தம் அவன் கடன் கேட்ட இருநூறு ரூபாய் பணம் இப்ப அவனுக்குப் பரிசாக அளிக்கப்படுகிறது. அவன் என்னிடம் கடன் வைத்துக் கொள்ளாமல் இந்தப் பணத்தை வாங்கி ஜெய்யூவிற்கு கொடுத்து விட்டுப் போய் விடுவான். நான்....?



அரை டிக்கெட்டுகளின் கேள்விகள் என்றுமே ஒரிஜினலானவை, அவற்றுக்குப் பதில் சொல்வது கடினம் என்பதற்கு மற்றொரு உதாரணம். ஒரு இராமாயணப் பிரவசனத்தில் பாகவதர், இராமனைப் பிரிய வேண்டியிருந்ததால் தசரதர் துடித்து இறந்ததை உருக்கமாக வர்ணித்தார். ஒரு சிறுவன் கேட்ட கேள்வி. ''பேசாமல் தசரதனும் காட் டுக்குப் போய் இராமனுடன் தங்கியிருக்க வேண்டியதுதானே? ஏன் பிரிவாற்றாமை தாங்காமல் உயிர் விட வேண்டும்?''

அப் பிரபல பாகவதருக்கு இதற்குப் பொருத்தமான பதில் சொல்ல இயலவில்லை.



சில புதுமையான

வீடுகளில் நாமே சிறிய பார்ட்டிகள் கொடுக்கிறோம். திரும்பத் திரும்ப கலந்த சாதம், பூரி, தோசை தானா.... அதைத் தாண்டி கொஞ்சம் மாடர்னாகத் தயாரிக்கலாமே!

சமையற்கலை வல்லுநர்கள் மூன்று பேரை ஆளுக்கு இரண்டு 'டிஷ்'கள் செய்யச் சொல்லி 'பார்ட்டி' போல ஏற்பாடு செய்ய நினைத்தோம்.

சொன்னவுடன் உற்சாகமாக ஒத்துழை
முன்வந்த மூவர் - ஸ்ரீலக்ஷ்மி மோகன்ரா
உம்மி அப்துல்லா, சுஜாதா பிரகாஷ்.

ஸ்ரீலக்ஷ்மி இந்தத் துறையில் 16 வ
அனுபவம் பெற்றவர். எஸ்.சி.எஸ். கே
தாரி அகாடமியில் 'சி' லெவல் சமையற்க
வகுப்புகள், வீட்டிலும் வெளியிலும் ச
யற்கலை வகுப்புகள், கிளப்புக
டெமான்ஸ்டிரேஷன் - என்று இவர் அ
பவம் நீளுகிறது. இந்தியன் வெஜிடேரி
காங்கிரஸ், கோதுமை அஸோசியே





நடத்திய செமினார்கள் போன்ற வற்றில் பல பரிசுகள் இவர் திறமைக்குச் சான்று.

உம்மி அப்துல்லா 'மலபார் மாப்பிள்ளைச் சமையல்' 'எமிக்யூர் சமையல்' என்று இரு புத்தகங்கள் ஆங்கிலத்தில் எழுதி அவற்றை மலையாளத்தில் மொழி பெயர்த்தவர். அடையார் கேடரிங் கல்லூரியில் பேகிங், ஐஸ் செய்தல், உணவுப் பொருட்கள் பாதுகாப்பு போன்ற துறை களில் டிப்ளமா பெற்றவர். 50 பேர் கொண்ட விருந்துகள், ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் விருந்துகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து பழக்கம் உள்ளவர்.

சுஜாதா பிரகாஷ் மனையியலில் பட்டம் பெற்று, சமையல் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றவர். சமையல் செய்முறை விளக்கங்கள், காய்கறிகளில் அழகான வடிவங்கள் அமைப்பது, போன்றவைகளில் ஈடுபட்டுள்ளவர்.

சரி, அறிமுகம் போதுமா இனி சமை

பார்ட்டி உணவுகள்





★ லக்ஷ்மி



★ சுஜாதா



★ உம்மி

யல் குறிப்புகளுக்கு வருவோமா?

சீஸி ரைஸ் - (ஸ்ரீலக்ஷ்மி)

தேவையான பொருட்கள் :
புலவு அரிசி - 1 கப்
பால் - 1 கப்
தண்ணீர் - 1 கப்
பொடியாக அரிந்த சிறிய
வெங்காயம் - ¼ கப்
அரிந்த பூண்டு - சில துண்டுகள்
அரிந்த கொத்துமல்லி
- 1 டேபிள் ஸ்பூன்
அரிந்த புதினா இலை
- 1 டேபிள் ஸ்பூன்
சீஸ் - 50 கிராம்
வெண்ணெய் - 50 கிராம்
உப்பு - ருசிக்குத் தகுந்த அளவு

செய்முறை :

பாலுடன் நீர் சேர்த்துக் கொதிக்க விடவும். களைந்த அரிசி, வெங்காயம், பூண்டு, கொத்துமல்லி, புதினா, உப்பு இவற்றைச் சேர்த்துச் சிறிது நேரம் கொதிக்க விடவும். அரிசி பாதி வெந்ததும், துருவிய சீஸில் பாதி, வெண்ணெய், இவற்றைச் சேர்க்கவும். கலவை நன்றாகச் சேரும் வரை சமைக்கவும். கடைசியில் மீதியுள்ள துருவிய சீஸையும், கொத்துமல்லித் தழையையும் தூவி அலங்கரிக்கவும்.

வெஜிடபிள் சுப்ரீம்
- (உம்மி அப்துல்லா)

தேவையான பொருட்கள் :
வேகவைத்த Spaghetti/சாதம் - 1 கப்
பெரிய உருளைக்கிழங்கு - 1
கேரட் - 2
காலி ஃப்ளவர் - சிறியது 1
குடைமிளகாய் - 1
Fresh cream – ½ கப் (தேவையானால்)
சீஸ் - 100 கிராம்
சீஸ்லிங் பிஸ்கட் பொடி செய்தது
- 4 டேபிள் ஸ்பூன்
ரொட்டித் துகள்கள் - 2 டேபிள் ஸ்பூன்
உப்பு, மிளகுத்தூள்
- ருசிக்கு ஏற்றாற் போல

செய்முறை :

வெள்ளை ஸாஸ் தயாரிக்க : வெண்ணெய் 50 கிராம், மைதா 50 கிராம். பால் ½ லிட்டர். உப்பு, மிளகுத் தூள்.

வெண்ணெயை உருக வைத்து மாவைச்

சேர்த்து நன்றாகக் கிளறவும். மிதமான தீயில் சில செகண்டுகள் வெந்த பிறகு அடுப்பிலிருந்து எடுத்து பாலைச் சேர்த்துக் கிளறவும். மறுபடியும் அடுப்பில் வைத்து சற்றுக் கெட்டியாகும் வரைக் காய்ச்சவும்.

காய்கறிகளை நீள வாட்டத்தில் நறுக்கி வேக வைக்கவும். (குடைமிளகாயைத் தவிர) வெள்ளை ஸாஸில் க்ரீமைக் கலக்க வும். உப்பு, மிளகுத்தூள், துருவிய சீஸில் பாதியைச் சேர்க்கவும். காய்கறிகள், ஸ்பா கட்டி அல்லது சாதத்தைச் சேர்க்கவும். Baking dish ஒன்றின் உட்புறத்தில் எண் ணெய் தடவி இந்தக் கலவையை அதில் சேர்க்கவும். மேலே பொடி செய்த பிஸ்கட், ரொட்டித் துகள்கள், மீதி துருவிய சீஸ் இவற்றைச் சேர்த்து வெண்ணெயும் பொட்டுப் பொட்டாக வைத்து, கலவை கோல்டன் பிரவுன் நிறத்துக்கு வரும்வரை 'bake' செய்யவும்.

சிக்கன் விண்டாலூ

- (உம்மி அப்துல்லா)

தேவையான் பொருட்கள் :

கோழி - 1 கிலோ
பெரிய, காய்ந்த மிளகாய் - 8
சீரகம் - ¾ டேபிள் ஸ்பூன்
மஞ்சள் பொடி - ½ டேபிள் ஸ்பூன்
பூண்டு - 6 பற்கள்
இஞ்சி - 4'' துண்டு
கடுகு - 1 டேபிள் ஸ்பூன்
மிளகு - 5 -7
வினிகர் - ⅓ கப்
வெந்த முட்டைகள் - 4 (தேவையானால்)
பாதி வெந்த உருளைக்கிழங்கு - 4
அரிந்த வெங்காயம் - 2
பச்சை மிளகாய் வகிர்ந்து - 6
பட்டை - 2'' துண்டு
கிராம்பு - 6
நெய்/எண்ணெய் - 4 டேபிள் ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

மிளகாய், சீரகம், மஞ்சள் பொடி, பூண்டு, இஞ்சி, கடுகு, மிளகு இவற்றை வினிகருடன் சேர்த்து அரைத்துக் கொள்ள வும். எண்ணெயை அடுப்பில் வைத்துக் காய்ந்தவுடன் வெங்காயத்தை வதக்கிக் கொண்டு துண்டாக்கிய கோழிக்கறியை அரைத்த விழுதுடன் சேர்க்கவும். சற்று நேரம் வதங்கியவுடன் பச்சை மிளகாய், பட்டை, கிராம்பு, உப்பு சேர்க்கவும். கறி நன்கு வதங்கியவுடன் 2 கப் நீர் சேர்த்து பாத்திரத்தை மூடி மிதமான தீயில் வேக வைக்கவும். கறி அனேகமாக வெந்த பின், நறுக்கிய உருளைக்கிழங்கு, முட்டை சேர்த்து நன்கு சமைக்கவும். தேவை யானால் இன்னும் கொஞ்சம் நீர் சேர்த்துக் கொள்ளலாம்.





பனீர் மஞ்சூரியன்
- (ஸ்ரீலக்ஷ்மி)

தேவையான பொருட்கள் :
பனீர் - 200 கிராம்
எண்ணெய் - வதக்குவதற்கு
ஸ்பிரிங் ஆனியன் - 2 டேபிள் ஸ்பூன்
மாவிற்கு :
சோள மாவு - ¾ கப்
உப்பு - தேவையான அளவு
மிளகுத்தூள் - ஒரு சிட்டிகை
தேவையான தண்ணீர்
ஸாஸ் :
அரிந்த பச்சை மிளகாய்
- 1½ டேபிள் ஸ்பூன்
உரித்த, நறுக்கிய பூண்டு
- 1½ டேபிள் ஸ்பூன்
வினிகர் - 1½ டேபிள் ஸ்பூன்
அஜினோமோடோ - ½ டீஸ்பூன்
வெஜிடபிள் ஸ்டாக் - 1½ கப்
(காய்கறிகளை வேகவைத்த நீர்)
உப்பு - தேவையான அளவு
மிளகுத்தூள் -
சோயா ஸாஸ் - 1 டீஸ்பூன்
1 டீஸ்பூன் சோள மாவு +
1 டேபிள் ஸ்பூன் நீர்

செய்முறை :

பனீரை ஒரு அங்குலத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். சோள மாவு, உப்பு, மிளகுத்தூள் சேர்த்த விழுதில் முக்கி எடுத்து சூடான எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

3 டேபிள் ஸ்பூன் எண்ணெயில் பூண்டு, பச்சை மிளகாய் 5 செகண்டுகள் வதக்கிக் கொண்டு, தீயைத் தணித்து சோயா ஸாஸ், வினிகர், உப்பு, அஜினோமோடோ, மிளகுத்தூள், வெஜிடபிள் ஸ்டாக் இவற்றைச் சேர்க்கவும். அது கொதிக்க ஆரம்பித்ததும் சோள மாவுக் கலவையைச் சேர்க்கவும். அது கொதித்ததும் பொரித்த பனீர்த் துண்டுகளைச் சேர்த்து ஒரு நிமிடம் கிளறவும். அடுப்பிலிருந்து எடுத்து மேலே ஸ்பிரிங் ஆனியன், கொத்துமல்லித்தழை தூவிச் சூடாகப் பரிமாறவும்.

பறவைக்கூடு புட்டிங்
(முட்டையில்லாமல்)
- (சுஜாதா பிரகாஷ்)

தேவையான பொருட்கள் :
காய்ச்சிய பால் - 350 மி.லிட்டர்
சர்க்கரை - 8 டேபிள் ஸ்பூன்
சோள மாவு - 4 டேபிள் ஸ்பூன்
வனிலா எஸ்ஸென்ஸ் - சில துளிகள்
கோகோ தூள் - 2 டேபிள் ஸ்பூன்
அலங்காரத்திற்கு :

சேமியா - ½ கப்
நெய் - 1 டீஸ்பூன்
பொடித்த சர்க்கரை - மேலே தூவ

செய்முறை :

சிறிது பாலைச் சோள மாவுடன் சேர்த்துக் குழைத்துக் கொள்ளவும். கோகோ தூளுடன் பாலைச் சேர்த்து குழைவாக்கிக் கொள்ளவும். மீதிப் பாலுடன் சர்க்கரையைச் சேர்த்துக் கொதிக்க வைத்து அடுப்பிலிருந்து எடுத்து எஸென்ஸ் சேர்க்கவும். அதில் மூன்றில் ஒரு பங்கை எடுத்து முட்டை வடிவ 'கேஸ்'களில் வைத்து குளிர்ப்பதனப் பெட்டியில் குளிர வைக்கவும். மீதியில் கோகோ விழுதைக் கலந்து கொதிக்க வைக்கவும். சிறிது நேரம் மிதமான தீயில் கைவிடாமல் கிளறவும். ஆழம் குறைவான பாத்திரத்தில் (வட்டமாக இருந்தால் நல்லது) கலவையைச் சேர்க்கவும். சேமியாவை நெய்யில் பொன்னிறமாக வறுக்கவும். வெண் கலவையை முட்டைக் கேஸ்களிலிருந்து மெதுவாக நடுவில் கவிழ்த்தவும். பறவைக் கூடு போல வறுத்த சேமியாவைச் சுற்றி அடுக்கவும். பொடித்த சர்க்கரையை மேலே தூவி, குளிர வைத்துப் பரிமாறவும்.

தயிர் சாண்ட்விச் - (சுஜாதா பிரகாஷ்

தேவையான பொருட்கள் :
ரொட்டி - பெரியது ஒன்று
தயிர் - 500 மி.லிட்டர்
சட்னிக்கு - கொத்துமல்லித் தழை - 1/4 கப்
வறுத்த உளுத்தம் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்
துருவிய தேங்காய் - ¼ கப்
பச்சை மிளகாய் - 3 (அ) 4
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

சட்னிக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் சேர்த்து சிறிது நீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். ரொட்டியை சாண்ட்விச்சுக்கு ஏற்றாற்போல வெட்டிக் கொள்ளவும். நடுவில் சட்னியை வைத்து சாண்ட்விச் செய்து கொள்ளவும். தயிரில் சிறிது உப்புப் போட்டு அடித்து சாண்ட் விச்கள் மேல் விடவும். சிறிது மிளகாய்த் தூள், கொத்துமல்லித்தழை அலங்கார மாகத் தூவவும்.

இப்போது ஒரு நவீன பார்ட்டி கொடுக்க ரெடியாகி விட்டோம்!

- நிர்மலா சக்கரவர்த்தி

படங்கள் : ரமணன்

